புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்]   1941-ம் ௵ டிஸம்பர் ௴ 6௳   [ந. 73.

பிரஸங்கம் LXXIII.

## நடப்பு சம்பவங்கள்—ஒரு விமர்சனம்.

[விகாம் ஸ்டேட் சம்பந்தில் பி. பி. ஸி. யில் பேசியது.]

இந்த யுத்தத்தில் பலவிதமான அம்சங்களைப்பற்றி நாம் நினைக்கலாம். இருந்தாலும், முக்கியமாக ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்காக நாம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி எவ்விதம் நடந்துவருகிறது என்பதைத்தான் கவனிக்கவேண்டும்.

யுத்த சம்பந்தமாக அரசாங்கத்தார் தங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் பொதுமக்களுக்கும் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. யுத்தத்தைப் பற்றி நவம்பர் 12௳ காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி வியக்தமாகச் சில வார்த்தைகள் சொல்லியுள்ளார் அதை கவனிப்போம்.

அவர் சொன்னதாவது "ஹிட்லர் மௌனம் சாதித்துவருவதைப் பற்றி நான் ஒரு மாதத்திற்கு முன் சொன்னேன். அவ்விதம் நான் சொன்ன வார்த்தைகளே ஹிட்லரைப் பேசும்படி தூண்டியிருக்கின்றன. அப்படி ஹிட்லர் பேசும்போது மாஸ்கோ இன்னும் சில நாட்களில் தங்கள் வசமாகிவிடுமென்று ஜெர்மன் மக்களுக்கு அறிவித்தான். இந்தப் பொய் சமாசாரத்தை சொல்வதைக் காட்டிலும் ஹிட்லர் மௌனமாக இருப்பதே மேலானதாகக் காணப்பட்டது."

மற்றொரு தடவை ஹிட்லர் பேசியதில் தாறுமாறாக விஷயங்கள் இருந்ததால் இது பலவிதமாகப் பிரசுரிக்கப்பட்டது. டாக்டர் கோயபல்ஸுக்குக்கூட இதன் கருத்து சரியாக விளங்கவில்லை.

டாக்டர் கோயபல்ஸும் சரியாக மனதிற்கு வாங்கிக்கொள்ளாமல் பல விஷயங்களைப் பிரசுரித்து ஜெர்மன் மக்களைத் திருப்தி செய்யப் பார்த்தான். ஆனால் அவர்களுக்கு இது அதிக கலக்கத்தைத்தான் உண்டுபண்ணின.

பெரும்தன்மையுள்ள சில ஜெர்மானியர் லண்டனில் ஒரு பத்திரிகை நடத்துகின்றனர். இவர்கள் கோயபல்ஸின் நடவடிக்கைகளைச் சரியாகக் கவனித்து

வருகின்றனர். சில நாட்களுக்கு முன் அப்பத்திரிகையில் பின்வருமாறு பிரசுரிக்கப்பட்டிருந்தது:—"சென்ற ஜுலை மாதம் முதற்கொண்டு கோயபல்ஸ் செய்து வரும் பிரசாரத்தை கவனித்தால் ஏதோ மௌனமாக இருந்து அதிருப்தி கொண்டவர்களைத் திருப்திசெய்து வருகிறதாகத் தெரிகிறது." அவர்கள் ஜெர்மானியர்தான் அவர்களுக்கு யுத்தத்தில் அலுப்பும், அரசாங்கத்தின் முறைகளில் சந்தேகமும், தாத்காலிகமாகப் பெற்றுவரும் வெற்றிகளில் ஆதரவில்லாத தன்மையும் "எப்பொழுது இந்தப் பாழும் யுத்தம் முடியப்போகிறது" என்ற பெரும் பிரச்னையும் உண்டாகியிருக்கிறது என்று தெரியவரும்.

ஆகவே ஜெர்மன் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்று அறிந்து சமீபத்தில் டாக்டர் கோயபல்ஸ், இந்த யுத்தம் எப்பொழுது முடியுமென்று கேட்பதைவிட எப்படி முடியுமென்றுதான் கேட்கவேண்டுமென்று சொன்னான். ஜனங்களுக்குள்ள அதிருப்தியைப் போக்கும் நோக்கத்துடன்தான் ஹிட்லர் மியூனிச்சில் பேசும்போது "ஜெர்மனி ஒருநாளும் எதிரி வசமாகாது என்ற ஒரு விஷயத்தைத் தவிர பாக்கியெல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம்" என்றான். அதாவது ஜெர்மனி எதிரி வசமாகாமல் இருப்பதற்காக யுத்தத்தை இன்னும் நீடித்து நடத்துவது உசிதமென்று ஜெர்மானியர்கள் நினைக்கவேண்டுமென்று ஹிட்லர் எண்ணுகிறான் போலும்.

இதற்கு முன், ஜெர்மன் சைனியங்கள் பிரமாதமான பலம் பெற்று வெற்றிகள் அடைந்து வந்ததாக ஹிட்லர் சொன்னத்திற்கு மாறாக இப்படிச் சொல்லுவதால் இப்பொழுது வெற்றிகிடைக்கவில்லை என்றும், அதனால் ஜெர்மன் மக்கள் மனம் தளர்ந்து போகாமல் தைரியப்படுத்தவே ஹிட்லர் சொல்லிவருகிறான் என்றும் தெரிகிறது. இது எப்படியானாலும் நமக்கு உத்ஸாகத்தை அளிக்கிறது. நாமும் ருஷ்யர்களும் தைரியமாக நின்று சண்டைசெய்து ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது என்று இதிலிருந்து காணப்படுகிறது.

69404

ஆர்க் ராயல் என்ற பிரிடிஷ் கப்பலை எதிரி மூழ்கடித்ததைத் தவிர மற்ற அம்சங்கள் திருப்தியாக இருக்கின்றன. இக்கப்பலை இதற்கு முன்னமேயே மூழ்கடித்ததாக பொய்யான பிரசாரத்தை எதிரி செய்துவந்தான்.

கடலில் பிரிடிஷ் கப்பல்கள் மூழ்குவது குறைந்துவிட்டது என்று காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி சொன்னது ஒரு சின்ன விஷயமாகாது. மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மாதம் ஒன்றுக்கு 5,00,000 டன் பிரிடிஷ் கப்பல்கள் மூழ்கின. ஜுலை, ஆகஸ்டு, ஸெப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 1,80,000-டன் வீதம்தான் மூழ்கின. கப்பல்கள் குறைவாக மூழ்குவதைத் தவிர சில முக்கிய விஷயங்களையும் கவனிக்கவேண்டும்.

ஹிட்லருக்கு அடுத்தபடியாக இருந்த ஹெஸ் இங்கிலாந்திற்கு வந்து சொன்ன சில விஷயங்களையும் மிஸ்டர் சர்ச்சில் பிரசித்தம் செய்தார். இங்கிலாந்தைப் படையெடுப்பதைக் காட்டிலும், பட்டினிபோட்டு மடியவைப்பதே ஹிட்லரின் நோக்கமென்று ஹெஸ் சொன்னான். பட்டினிபோட்டு மடியவைக்கமுடியாததால், படையெடுத்துப் பார்ப்பான் என்று மிஸ்டர் சர்ச்சில் அபிப்பிராயப் பட்டார். அதற்குத் தகுந்த தைரியமும், முஸ்தீப்பும் இருந்தால்தான் எதிரி படையெடுக்கமுடியும்.

எனவே பிரிடனை ஹிட்லர் படையெடுக்கப்பார்ப்பான் என்பதில் எனக்கும் சந்தேகமில்லை. ஆனால் ருஷ்யாவில் ஜெர்மன் சைனியங்கள் இந்த மாரி காலத்தில் கெடுதி அடையாமலும், ருஷ்யப் போர்முனையில் ஸ்திரமானாலும் தான் படையெடுப்பது சாத்தியமாகும்.

JL
V2:194:19(ஆM) M,N39
N42



சமீபத்தில் ருஷ்யப் போர்முனையிலிருந்து கிடைத்த ஜெர்மன் அறிக்கைகளைப் பார்த்தால், ருஷ்யர்களும் வீண் பெருமை அடித்துக்கொள்ளாமல் ஜெர்மானியருடன் சண்டைசெய்கிறார்கள் என்று தெரிகிறது. இந்த அறிக்கைகளை ஜெர்மன் வீரர்களே ஒலிபரப்புகிறார்கள். இதில் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் கொடுக்கும் அறிக்கைகள் சேர்க்கப்படவில்லை. இதனால் பிரிடன் மேல் படையெடுப்பு சுலபமாகச் செய்யமுடியாது என்று தெரிகிறது. ஏனென்றால், ருஷ்யாவில் ஜெர்மனிக்குச் சிரமம் ஏற்படும்.

முன் சொன்ன அறிக்கைகளில் ருஷ்யாவில் சேற்றிலும், குளிரிலும் சண்டை செய்யும்போது நேரும் கஷ்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாரணமாக குளிரில் நேரும் அவஸ்தைகளை ஒருவன் சொல்லுகிறான். "மூன்று மணிகளுக்கு மேல் எங்களால் தூங்கமுடியவில்லை. பிறகு சண்டைக்குப்போனால் ஒரே குளிராக இருக்கிறது. எங்கள் சட்டைகளைத் துளைத்துக்கொண்டு குளிர் சரீரத்தைத் தாக்குகிறது".

ருஷ்யாவின் அதிகக் குளிர் இன்னும் ஆரம்ப நிலையில் தான் இருக்கிறது. வரவர இன்னும் சிரமம் ஏற்படும். இவ்விதமாகவந்த ஜெர்மன் கம்பியில்லாத் தந்திமூலம் வரும் அறிக்கைகளைப் படிக்கும் சமயத்தில், ருஷ்யாவை நெபோலியன் படையெடுத்து 1812-ம் வருஷம் நவம்பர் 25-ல் பெரிஸினா நதியைத் தாண்டும்போது பட்ட கஷ்டங்களைப்பற்றி கிப்ளிங் என்ற ஆங்கிலக் கவி "ஸெயிண்டு ஹெலினாவின் தாலாட்டு" (St. Helena Lullaby) என்ற பாட்டில் எழுதிய வாக்கியங்கள் நினைப்புக்கு வருகின்றன.

"அதாவது, பெரிஸினா நதியின் பனிப்பாங்கான பிரதேசத்திற்கும், நெபோலியன் அடைபட்டிருந்த ஸெயிண்டு ஹெலினா தீவிற்கும் எவ்வளவோ தூரம் இருக்கிறது. பெரிஸினா நதியைத் தாண்டும்போது குளிரால் எவ்வளவோ கஷ்டங்கள் நெபோலியனுக்கு நேர்ந்தன. ருஷ்ய யுத்தம் வேண்டாம் என்று சொன்ன உபதேசத்தைக் கேளாததால்தான் இக்கஷ்டங்கள் நேர்ந்தன. ஆகவே வெற்றியுடன் முன்னேற முடியாதபோனால் பின்வாங்கத்தான்வேண்டும்."

நமக்குத் தெரிந்தவரையில் பிரமாதமான வெற்றி எதுவும் ஹிட்லருக்குக் கிடைத்தாகத் தெரியவில்லை. இருந்தாலும் வந்தது வரட்டுமென்று நினைத்து மாஸ்கோவை நோக்கிப்போகிறான். அதிக தூரம் போகமுடியாமல்போனால் திரும்பவேண்டிவரும். அப்பொழுதுதான் ருஷ்ய யுத்தம் வேண்டாமென்று சொன்ன சில ஜெர்மன் வீரர்களின் வார்த்தை பலித்ததுபோலாகும். ஏனென்றால் அவர்கள் வார்த்தைகளை மீறி ஹிட்லர் ருஷ்ய யுத்தத்தை ஆரம்பித்தான். நெபோலியனுக்கு நேர்ந்த கதிதான் இவனும் அடைவான்.

ருஷ்யாவில் முன்னேற முடியாமலும், இங்கிலாந்தைப் படையெடுக்கத் தயாராக இல்லாமலும் இருந்தால் ஹிட்லர் லிபியாவிலிருந்து எகிப்தைத் தாக்குவான். இதாலியில் பெரும் ஜெர்மன் சைனியத்தை ஸ்தாபித்து, அதைப் புதிப்பித்துக் கொண்டேவருகிறான். நேபிள்ஸிலிருந்தும், மற்ற துறைமுகங்களிலிருந்தும் துணைக் கப்பல்களுடன் லிபியாவிற்குச் சாமான்களை எகிப்தைத் தாக்கும் நோக்கத்துடன் அனுப்பிவருகிறான்.

இவைகளைத் தடுக்க நேபிள்ஸையும், ஸிஸிலியிலிருக்கும் இதாலி, ஜெர்மனிக்குச் சொந்தமான துறைமுகங்களையும் பிரிடிஷ் விமானங்கள் கடுமையாகத் தாக்கிவருகின்றன. இதாலி-ஜெர்மன் துணைக்கப்பல்களும் அதிகம் தாக்கப்பட்டுவருவதால் இதனால் ஹிட்லரின் முயற்சிகளுக்கு அதிகத் தடை ஏற்படுகிறது. [ஆசின்லக்கின் கீழ் நேசதேசப்படை லிபியாவில் தாக்கும் விவரம் கிடைத்திருக்கிறது. பத்திராதிபர்.]

ஒரு நாள் இதாலிக்குச் சொந்தமான 10 கப்பல்களும், 3 நாசகாரிகளும் மூழ்கடிக்கப்பட்டன. பிரிடிஷ் கப்பல்களுக்கோ, பிரயாணிகளுக்கோ சேதம்

ஏற்படவில்லை. இது ஒரு திருப்திகரமான விஷயம். பாதி அளவுள்ள பிரிடிஷ் சஞ்சாரிகளை அமுக்காமல் தாங்களாக மூழ்கிய இரண்டு சஞ்சாரிகளைப் பார்த்தால் இந்த யுத்தத்தை நடத்த இதாலிய மாலுமிகளுக்குப் பிரியமில்லை என்று தெரிகிறது.

ஆகையால், காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி சொன்ன வார்த்தைகள் மிகவும் சரியானவை என்று தெரிகிறது. அவர் "முன் சொன்னதிலிருந்து, ஸூயஸை மே மாதத்திற்குள்ளாகவே பிடித்துவிடுவதாக ஜெர்மானியரும், இதாலியரும் தற்புகழ்ச்சி செய்தது பலிக்கவில்லையென்றும், டிஸம்பர் மாதத்திற்குள்ளும் பிடிக்கமுடியாதென்றும் நினைக்க ஹேது இருக்கிறது" என்றார். [லிபியா யுத்தத்தாலும் இவ் அபிப்பிராயம் சரியென்று தெரியும். பத்திராதிபர்.]

பெரும்பாலும் யுத்தத்தைப்பற்றிச் சொல்லும் ஜோஸியங்கள் எல்லாம் மாறக்கூடும். இருந்தாலும் நாம் சொன்னவைகள் அவ்வளவு வித்தியாஸப்படவில்லை. உதாரணமாக சென்ற வஸந்த காலத்தில் கிரீட்டை ஜெர்மானியர் தாக்கி நேசதேசப்படைகளை அதைவிட்டு விரட்டியபோது, பிரிடிஷ் படைகளும், சாம்ராஜ்ஜியப்படைகளும் எதிர்த்து நின்றதால், சமீபக்கிழக்கு, தூரக்கிழக்கு நாடுகளில் ஹிட்லர் போட்ட திட்டங்கள் மாறிவிட்டன. இதுபோல மற்ற இடங்களிலும் மாறலாம்.

துருக்கியின் பிரதான நகரமான அங்காராவிலிருந்துவந்த செய்தியிலிருந்தும் முன் சொன்ன அபிப்பிராயம் சரியென்று தெரியும். கிரீஸ், லிபியா, அபிஸீனியா முதலிய இடங்களில் இதாலியர்கள் அடைந்த தோல்விகளால் இதாலியரும், ஜெர்மானியரும் மத்தியக்கிழக்கு நாடுகளை ஜயிக்கப் போட்ட திட்டங்கள் எல்லாம் நின்றுவிட்டன. ருஷ்யாவும், ஜெர்மனியின் ஆட்டவாட்டங்களுக்கு இணங்காததால், துருக்கி மூலம் எகிப்தைப் படையெடுக்க முடியாமல் போயிற்று. ருஷ்யாவையும் உடனே தாக்கும்படி ஹிட்லருக்கு வந்தது.

இந்த முடிவிற்கு ஹிட்லர் ஒரு வருஷத்திற்குமுன் வந்தான். ருஷ்யாவைப் படையெடுக்குமுன் கிரீஸையும் கிரீட்டையும் ஜயிக்க விரும்பினான். கிரீஸை 2, 3 வாரங்களுக்குள் ஜயித்துவிடலாமென்று நினைத்தான். ஆனால் ஸிமோவிச்சின் கீழ் இருந்த யூகோஸ்லாவியர்களும், கிரீக், பிரிடிஷ் படைகளும் ஜெர்மானியரைத் தடுத்து அதிகச்சேதம் விளைவித்தனர்.

ஆகவே ருஷ்யாவை மே மாதத்தில் படையெடுக்க முடியாமல் ஜூன் 22-ல்தான் முடிந்தது. இவ்விதம் எதிரி போட்டகால திட்டத்தைத் தடுப்பது ருஷ்ய யுத்தத்தைச் சாதகமாகவோ பாதகமாகவோ முடிக்க எவ்வளவு தூரம் காரணமாகும் என்று ஒருவரும் இப்பொழுது சொல்லமுடியாது. ஆனால் ருஷ்ய அணிவகுப்புகளை ஹிட்லர் முறியடிக்க முடியாமல் போவதால் யுத்தத்தின் முடிவானவெற்றியை அவன் அடையமாட்டான் என்றே சொல்லலாம்.

சென்ற வருஷத்தில் பிரிடன் தோற்றுவிடுமோ என்ற பயம் இருந்தது. இந்த பயம் அமெரிக்காவிற்கும் இருந்தது. அப்படி பிரிடன் தோற்றுப் போயிருந்தால் ஒன்றும் பிரமாதமாக இருக்காது. ஆனால் இப்பொழுது ஜெர்மனி தோற்றுப்போனால் ஒரேபாடாக ஜெர்மனி அழிந்துவிடும். சென்ற வருஷத்தில் பிரிடன் தனியே இருந்தும், மற்ற நாடுகளைத் தன் உதவிக்கு வரும்படி மிரட்டி வற்புறுத்தவில்லை. அவர்களாகவே வந்தார்கள். ஆனால் ஹிட்லர் மற்றநாடுகளை பலாத்காரம் செய்து ஏதோ வெற்றி கிடைப்பதாயும், அதில் பங்கெடுத்துக் கொள்ளலாமென்றும் ஆசைகாட்டினான். ஆகவே அவனைத்தான் தோல்வி அதிகம் பாதிக்க நேரிடும்.

ஏனென்றால் ஹிட்லர் அடையும் வெற்றியைப் பங்கிட்டுகொள்ளும் ஆசையுள்ளவர்கள், தோல்வியை அடைய விரும்பமாட்டார்கள். மேலும் ஹிட்லர் தோற்றுவருகிறான் என்று தெரிந்ததும் யூகோஸ்லாவியர்களைப்போல எல்லா



நாட்டினரும் ஒன்று சேர்ந்து இவனை எதிர்ப்பார்கள். [விகாம் ஸ்டீட் எதிர்பார்த்தவிதமாக "ஸெர்பியர்கள் எதிர்க்கின்றனர்" என்று கெய்ரோ அறிக்கைகள் மூலம் தெரிகிறது. பத்திராதிபர்].

இம்மாதிரியான சமயம் எப்பொழுது ஏற்படும் என்று சொல்லமுடியாது. தனக்குத் தோல்வியின் ஆரம்பம் ஏற்பட்டாலே கௌரவமும், அதிகாரமும் குலைந்துபோகுமென்று தெரிந்து, அந்நிலை வராமலிருக்க ஹிட்லர் முடிந்தவரை பார்ப்பான்.

ஜப்பானில்தான் ஹிட்லர் செய்த ஏற்பாடுகள் பலிக்கவில்லை. மற்ற நாடுகளில் பலித்ததாகவே சொல்லலாம். ஜப்பானிய பிரதம மந்திரி டோஜோ, ஜப்பான் அதிக கஷ்ட நிலையிலிருக்கிறதாக சொல்லுகிறான். இருந்தாலும் கஷ்ட நிலையை நிவர்த்தித்துக் கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் நமக்குத் தெரியும். பத்து வருஷங்களுக்குமுன் மஞ்சூரியாவை படையெடுத்தது முதல் இரண்டு கஷ்டங்களுக்கு இடையில் இருந்து தப்பான முறையைக் கையாண்டேவருகிறது. அதாவது கிரேட் பிரிடன், அமெரிக்கா இவைகளுக்கு விரோதமாக சண்டை செய்வதும், சைனா, கிழக்கு ஆசியா இவைகளை ஜயிக்காமல் பஸிபிக்கில் ஆதிக்கம் அடையப்பார்ப்பதும் ஆகிய இரண்டு கஷ்ட வழிகள் அதற்கு இருக்கின்றன.

அமெரிக்காவிற்கு ஜப்பானிலிருந்து மிஸ்ட்டர் குருஸூ மூலம் ஒரு தூது கோஷ்டி போயிருக்கிறது. இவர்கள், மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்ன மொழிகளைக் கவனிப்பது நலம். ஜப்பானுடன் அமெரிக்கா சண்டை ஆரம்பித்தால் பிரிடனும் அமெரிக்காவுடன் சேர்ந்துகொள்ளும் என்றுதான் பிரதம மந்திரி சொன்னார்.

மேலும் அமெரிக்காவுடன் பிரிடன் சேர்ந்து கடல்களில் சஞ்சரிப்பதால் பெரும் கப்பல்களை, இந்து மஹா சமுத்திரம் பஸிபிக் சமுத்திரம் முதலிய இடங்களில் அனுப்பமுடியும் என்று பிரதம மந்திரி சொன்னதையும் ஜப்பானிய அரசாங்கம் தெரிந்துகொண்டுதான் இருக்கவேண்டும்.

இவ்விதமெல்லாம் பேசும்போது பிரதம மந்திரி "பெரும் தன்மை" என்ற பதத்தைப் பிரயோகிக்கிறார். இது சந்தர்பத்திற்கேற்றதாகையால் நமக்குத் திருப்தியையும் ஜப்பானுக்குக் கவலையையும் செய்யும். இப்பதத்தை முக்கியமாக அமெரிக்காவின் அரசியல் முறைகளைப்பற்றி பேசும்போதுதான் உபயோகிக்கிறார். ஜனாதிபதியும் அமெரிக்க சபையும் சேர்ந்து குத்தகைக் கடன் மசோதாவை நிறைவேற்றியபோது "அமெரிக்க ஜனநாயகம் கேவலம் பணத்தாசை பிடித்ததல்ல" என்று சொல்லி "இம்மசோதா சரித்திரத்திலேயே ஒரு பெரும் தன்மையுள்ள சட்டமாகக் கருதப்படும்" என்று பிரிடன் பேரில் அமெரிக்காவிற்குள்ள உபகார சிந்தனையைப் பாராட்டினார்.

மறுபடி நடுநிலைச் சட்டத்தை அமெரிக்கா திருத்தி நிறைவேற்றி வியாபாரக் கப்பல்களிலும் ஆயுதம் ஏற்றி யுத்தப் பிரதேசத்திற்கு நேரே சென்று நேசதேசங்களுக்கு சாமான் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டவுடன் அப்பெருந்தன்மை கொஞ்சம் முன் அடைந்ததாகவே பிரதம மந்திரி சொன்னார்.

ஆகவே, "பெருந் தன்மை" என்ற பதம் குத்தகைக் கடன் மசோதா, அமெரிக்க அரசியல் முறை ஸ்வதந்திரத்தை நோக்கி புரியப்படும் இந்த யுத்தம் இவைகளை விவரித்ததாகும். [இந்தியாவின் ஒற்றுமையாமையைப்பற்றி இப்பதத்தை எவ்வாறு உபயோகிக்க முடியும். பத்திராதிபர்.]

ஸ்வதந்திரத்தை அடைய முயற்சி செய்து யுத்தம் புரியும் ஜனங்கள், மனித வர்க்கத்தின் சரித்திரத்திலேயே பெரும் புகழை அடைவதாக நினைத்துக் கொள்ளலாம். அமெரிக்காவிற்குள்ள இப்புகழைத்தான் பிரதம மந்திரி அங்கீகரித்துப் போற்றுகிறார். ஏனென்றால் அந்நாடு தானாக ஸ்வதந்திரத்திற்காகப் பாடுபடும் ஜனங்களுக்கு உதவி செய்வதெனத் தீர்மானித்திருக்கிறது.

# வாரயுத்தச் செய்திகள்.

## 28—11—41-லிருந்து 4—12—41-வரை.

**லிபியா யுத்தம்—ஒரு பெரும் மாறுதல்.**—இக்காலத்தில் தெய்வீக சக்தியால் காரியங்களைச் செய்யமுடியாது. இருந்தாலும் லிபியா யுத்தத்திற்கு ஆறுவாரங்களுக்கு முன்பாக பிரிடிஷ் கப்பற்படை டொப்ருக்கில் செய்துவந்த தற்காப்பு முறையைப் பார்த்தால் ஏதோ மனுஷ்ய யத்தனத்தில் நடந்ததுபோலச் சொல்லமுடியாது. சைனியங்கள் தற்காப்பு சாதனங்கள் முதலியதைப் பூராவாக மாற்றி, பாலைவனச் சண்டைக்காக அச்சுநாட்டுச் சைனியம் தயாராக இருக்கும்போதே இவர்கள் செய்தது ஒரு ஆச்சரியம்தான். டொப்ருக்கில் ஏற்கனவே இருந்த ராணுவப்படைகள் பெரும்பாலும் ஆஸ்திரேலியர்கள். சென்ற 7-மாதங்களாக அவர்கள் உஷ்ணத்தையும், முற்றுகையின் கொடுமையையும் வீரத்துடன் பொருத்துவந்திருக்கிறார்கள். இந்தப் போர்வீரர்களுக்கு ஓய்வு கொடுத்து புதிய தாக்குதலுக்கு வேறுபடைகளைத் தயாரிக்க வேண்டுமென்று இந்த மாறுதல் உண்டாக்கப்பட்டது. புதிய ராணுவப்படையில் பெரும்பாலும் பிரிடிஷ் துருப்புகள். சிலர் போலாந்து தேசத்தினரும், சிலர் ஸெக்கர்களும், அலெக்ஸாண்டிரியாவிலிருந்து கடல்மார்க்கமாய், பிரிடிஷ் கப்பற்படையின் உதவியைக்கொண்டு இங்குவந்து இதில் சேர்ந்திருக்கின்றன.

**டொப்ருக்கின் விடுதலை.**—டொப்ருக்கிலிருந்த ராணுவப்படையும், முன்னேறி வந்த முதன்மையான பிரிடிஷ் படைகளும் இப்பொழுது சந்தித்துக்கொண்டிருக்கின்றன. முதல் சந்திப்பு சென்ற புதன்கிழமையில் ஏற்பட்டது. அதன் பயனாக டொப்ருக்கைப் பாதுகாப்பவர்கள் சென்ற 6-நாட்களாக இடைவிடாமல் அநேகம் தடவை ஆகாய எதிர்ப்புகளும், மற்ற நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பிறகு அவர்கள் ஒன்று சேர்ந்து இன்னும் ஆறு மைல் விஸ்தீர்ணத்திலுள்ள எல்ஹமிடி என்ற நகரத்தைப் பிடித்துக்கொண்டார்கள். ஆனால் எதிரிகள் முரட்டுத்தனமாகத் தாக்கி எல்ஹமிடாவையும், ஸிடி ரெஸெக்கையும் திரும்பக் கைப்பற்றிக் கொண்டார்கள். இன்னும் எல் டுடா பிரிடிஷார் வசமே இருந்து வருகிறது. இருந்தபோதிலும் எதிரிகள் டொப்ருக் வெளிப் பிராகாரத்திற்குள் தாத்காலிகமாக நுழையமுடிந்தது. இருந்தாலும் அவர்கள் ஒன்றுசேர்ந்து ஸோலூம்—ஸிடி ஓமர்—ஸிடி ரெஸெக் இவ்விடங்களடங்கிய முக்கோணப் போர்முனையில் யுத்தத்தில் இறங்கினார்கள். அவர்களில் முக்கியமாக டாங்கிப்படைகளும்; காலாட்படைகளும்தான். இந்தப்போரில் இதாலியப் போலோக்னா படைப்பகுதி ஜெர்மன் பான்ஸர் பகுதியுடன் சேரும் தருவாயில், பிரிடிஷ் துருப்புகள் எதிரிகளை முறியடித்துவிட்டன. 21-வது ஜெர்மன் பான்ஸர் பகுதி தளகர்த்தர் வான் ரோவன் ஸ்டீர் யுத்தத்தில் கைதியாகப் பிடிபட்டார். முக்கோண வட்டத்தில் படைகள் சென்றது இப்பொழுது நான்கு முனைகளை சம்பந்தப்படுத்திக்கொண்டு யுத்தம் நடக்கிறது. அதாவது டொப்ருக், ஸோலூம், ஸிடி ஓமர், பீர் எல் கோபி என்ற இடங்கள் இதில் அச்சு நாட்டுப் படைகள் டொப்ருக்கிற்குத் தெற்கிலும், மற்ற பாகங்களில் ஸாம்ராஜ்யப் படைகளும் நின்று சண்டை செய்கின்றன. லிபியா கடற்கரையில் எதிரி பிரிக்கப்பட்டான். எதிரியின் வசம் 40,000-பேர் அடங்கிய சைனியம் இருக்கிறது. ஆகையால் பெரும் சண்டை நேரலாம்.

**ஸப்ளைகள்** எல்லா வகைகளிலும் எதிரிகளுக்குக் குறைந்துவருகின்றன என்று எல்லோருக்கும் தெரிந்ததுதான். கடல் மார்க்கமாகத் துருப்புகள், சாமான்கள் இவைகளைக் கொண்டுவர எதிரிகள் பெரும் முயற்சி எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதற்கு முன் எதிரிக்கு ட்ரிபோலி, பெங்காஸி வழியாக வரும் ஸப்ளைக்



கப்பல்கள் அடிக்கடி மூழ்கடிக்கப்பட்டு வருவதால் கிரீஸ் கடற்கரைக்கு அருகாமையில் எதிரி, துணைக்கப்பல்களின் உதவியைக்கொண்டு சாமான்களை எடுத்துவர எத்தனிக்கிறான். ஏராளமாகப் புதிய ஆஸ்திரிய தேசத்துருப்புகள் ஸலோனிக்காவில் வந்திருக்கிறார்கள். அவர்கள் முதன் முதலில் கிரீட்டுக்கு கப்பலில் ஏற்றி அனுப்பப்படுவார்கள். அங்கிருந்து லுப்ட்வாபியால் துணைபுரியப்பட்டு லிபியாவுக்கு போய்ச்சேர்க்கப்படுவார்கள். ஆனால் பிரிடிஷ் கப்பற்படையும், பிரிடிஷ் விமானப்படையும் எதிரியின் முயற்சியை இடைவிடாது தடுத்துவருகின்றன. கடைசி சில நாட்கள் நீங்கலாக நவம்பர் மாதத்தில் மட்டில் 41 விரோதிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அக்டோபர் மாதத்தில் 27 கப்பல்கள் சேதமடைந்தன. இந்தப் புதிய தாக்குதல் ஆரம்பமுதல் 7 இதாலியக் கப்பல்களும், ஒரு சஞ்சாரியும், இன்னும் ஒரு நீர்மூழ்கிக் கப்பலும் மத்தியதரைக்கடலில் மாத்திரம் மூழ்கடிக்கப்பட்டன. சுமார் சில நாட்களுக்கு முன் ஒரு பிரிடிஷ் க்ரூயிஸர் படைப்பகுதி ஸிரெனைகாவுக்கும், கிரீட்டுக்கும் இடையில் 1,400 மைல் விஸ்தீர்ணமுள்ளதும் எதிரிகளினால் விமானங்களிலிருந்து வெடிகுண்டுகள் போட்டுத்தாக்க ஏதுகரமாகவும் இருக்கிற கடல் மார்க்கமாக வெகுதூரம் சென்று, வழியில்கண்ட இரண்டு வியாபாரக் கப்பல்களையும் மூழ்கடித்துவிட்டு, சேதமன்னியில் திரும்பி வந்துவிட்டது.

**பிரிடிஷ் விமானப்படையின் பலம்** லிபியாவில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. எதிரி தன் பக்கத்தில் விமானப்படை பலத்தை அதிகரிக்கச் செய்ய பிரயத்தனப்பட்ட போதிலும் பிரிடிஷ் விமானப்படைக்குச் சமானமாகவில்லை. எதிரி தன் பலத்தை போர் அரங்கத்திற்கு முன் பக்கத்தில் அதிகமாகச் சேகரிப்பதில்லை. தன் படைக்குப் பின் பக்கம்தான் எதிரி தன் பலத்தைச் சேர்த்து வருகிறான். இவற்றிலிருந்து தனக்கு ஸப்ளை வரவேண்டியதைக் குறித்தும், பின் வாங்குவதைக் குறித்தும் எதிரி சிந்தித்து வருவதாகத் தெரிகிறது. விமானப் போரில் அச்சுநாடுகளுக்கு மூன்று பங்கும் நேசதேசத்தாருக்கு ஒரு பங்குமாக நஷ்டம் நேர்ந்திருக்கிறது. இந்த முதல் 6 நாட்களில் எதிரிக்கு நஷ்டம் தரையில் 68 விமானங்களும், ஆகாயச் சண்டையில் 51 விமானங்களும் சேதம் நேர்ந்திருக்கிறது. அவைகளில் தரையில் 30 விமானங்களும் ஆகாயத்தில் 40 விமானங்களும் ஜெர்மனிக்கு நஷ்டம்.

**டோமாஹாக்குகள்.**—அமெரிக்க விமானங்களில் டோமாஹாக் என்ற ஒருவகை விமானங்கள் இருக்கின்றன. அவைகளைக் குறிப்பிட்ட இடம் வந்து சேர்வதற்கு முன்னமேயே அழித்து விடுவதாகவும், அல்லது மூழ்கடித்து விடுவதாகவும் ஜெர்மானியர்கள் சொல்லிவந்தார்கள். மேலும் அவைகள் பயிற்சிக்காக உபயோகப்படுத்தக்கூடுமே ஒழிய ஜெர்மன் விமானங்களுடன் போர் செய்யத் தகுதியற்றவை என்று ஜெர்மானியர்கள் இளப்பமாகச் சொல்லி வந்தார்கள். ஆனால் அவைகளோ இந்தப் போரில் அபாரமான வேலையில் ஈடுபட்டு பிரசித்தி அடைந்துவருகின்றன.

டாங்கி யுத்தம் மும்மரமாக நடக்கும்பொழுது இந்த விமானங்கள் தரைமட்டம் வரையில் பாய்ந்து, கவசம் பூண்ட வண்டிகளுக்குள் வெடிகுண்டுகளைப் போட்டுவிடுகின்றன. இவ்விதம் வெடிகுண்டுகளைப் பிரயோகிப்பது முதன் முதலில் ருஷ்யர்களால் கிழக்குப்போர்முனையில் ஆரம்பிக்கப்பட்டு எதிரிகளுக்கு பெருத்த சேதத்தை விளைவித்தது. இப்பொழுது லிபியாவில் டோமாஹாக் விமானங்கள் இம்மாதிரி செய்துவருகின்றன.

**ஜெர்மானியர்களின் பின்வாங்குதல்.**—ரோஸ்டவ்வை திரும்பக் கைப்பற்றியதும் வான்கிளீஸ்டின் படை டாகன்ராக் (Taganrog) கைத் தாண்டி, மாரியோபோல் பக்கம் ஒழுங்குஹீனமாகப் பின்வாங்கியதில் ஜெர்மானியர்களுக்குப் பெருத்த சேதம், ஏற்பட்டது. ரோஸ்டவ்தான் முதன்முதலில் முக்கியமான ஸ்தானம். அதை எதிரிகள் கைவிட்டுவிடும்படி நேர்ந்துவிட்டது. அவர்களுடைய நாஜி படைப்பகுதிகள் அழிக்கப்பட்டுவிட்டன.

சொல்லமுடியாத ஆக்கிரோஷத்தினுல் எதிரி தான் ஓடிவந்ததை, தானே விட்டுவிட்டு வந்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறுன். அங்கு ரோஸ்டவிலுள்ள பொதுமக்கள் ஸர்வதேச சட்டத்திற்குப் புறம்பாக நடந்துகொண்டிருப்பதாக அவன் புகார் செய்கிறுன். (ஏதோ அவன் மனுஷத்தன்மையாக நடந்து கொண்டது போலவும், மனிதர்கள் ஏற்படுத்திய சட்டத்தின்படி நடந்துகொண்டதைப் போலவும் சொல்லுகிறுன்.) வார்ஸாவில் நடந்ததைக் காட்டிலும் இன்னும் கெடுதியாக விமானத் தாக்குதல்களை ரோஸ்டவ்வில் நடத்தப்போவதாக மிரட்டுகிறுன். அது எப்படியிருந்த போதிலும், இப்போதுள்ள நடப்பு யாதெனில் ஜயமடைந்து வரும் டிமோஷன்கோவின் படைகள் அவனை பின்னே துரத்திச் செல்லுகின்றன. புதிய மாறுதல் ஏற்படுத்திக்கொள்ள எதிரிகளுக்குச் சிறிது அவகாசம்கூட கொடுக்கப்படுவதில்லை. இப்படியே முன்னேற்றம் இருந்து வந்தால் நீஸ்டருக்கும், அஸாவ்கடலுக்கும் நாஸிகள் துரத்தப்பட்டுவிடுவார்கள். மாஸ்கோ, லெனின்கிராட், ஸெபாஸ்டபூல் இந்த மூன்று நகரங்களைச் சுற்றிலும் போடப்பட்டிருக்கும் முற்றுகையை எடுத்துவிடும்படி நேரிடும். சென்ற சில மாதங்களாக ஜெர்மானியர்கள் செய்துவந்த பிரயத்தனங்கள் பூராவும் மாறிவிடும்.

மாஸ்கோவைக் கைப்பற்றப் போடும் சண்டையின் வேகம் குறையாமல் இருந்து வருகிறது. சமீபத்தில் வெளிவந்த செய்தியிலிருந்து க்ளினில் ஒருவித மாறுதலும் ஏற்படவில்லை. வாலோகலாம்ஸ்கில் சற்று எதிரி முன்னேறியிருக்கிறுன். மொஜேயிஸ்க், மலோயாரோஸ்லாவட்ஸ், ஸ்டாலினேகோர்ஸ்க், பெலெளஸ் இடங்களில் எதிரி தாக்கப்பட்டு விரட்டப்பட்டான். டுலாவில் ருஷ்யச் சேனை முன்னேறியிருக்கிறது. கலினின் பிரதேசத்தில் இருபடைகளுக்கும் பெரும் சண்டை நிகழ்கிறது. ஆனுல் மலோயாரோஸ்லாவட்ஸ் இவ்விடங்களில் சற்று முன்னேறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. 39 ஜெர்மன் பகுதிகளைச் சேகரித்துக் கடுமையாக பிரயத்தனங்கள் செய்தபோதிலும், மாஸ்கோவானது எதிரியை வஞ்சகமாக உள்ளுக்கிழுப்பதும், ஏமாற்றுவதுமாக இருக்கிறது. ஜெர்மானியர்களின் முன்னேற்றம் நத்தை ஊறுவதுபோல்தான் இருக்கிறது. மேலும் ருஷ்யர்கள் பரிகாசம் செய்வதற்குத் தக்கபடி, மாஸ்கோவைக் கைப்பற்ற போர் செய்வதில், எவ்வளவு ஜெர்மானியர்கள் இறக்கிறுர்களோ, அவர்களைப் புதைப்பதற்கு வேண்டிய அளவு பிரதேசத்தை மட்டும்தான் கைப்பற்றப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ரோம் ரேடியோவில் ஜெர்மனியின் தோல்வியைப்பற்றி குறைவாகக் கூறப்படுகிறது. மாரிகாலத்தில் நகரத்திற்கு வெளியே ஜெர்மானியர்கள் தங்கியிருப்பதற்குத் திட்டம் போட்டிருப்பதால் அவர்கள் மாஸ்கோவைக் கைப்பற்ற அவசரப்படவில்லையாம். ஆனுல் இந்தத் திட்டங்களோ மூடத்தனமான திட்டங்கள். ஏனெனில் பிடிக்கப்படும் ஜெர்மன் கைதிகள் ஸ்திரீகள் போட்டுக்கொள்ளும் ரவிக்கைகளையும், துண்டுகளையுமே அணிந்திருக்கிறுர்கள்.

லெனின்கிராட்டில் டிக்வின் நகரத்தை காலிசெய்துவிட்டதாக ருஷ்யர்கள் ஒப்புக்கொள்ளுகிறுர்கள். ஆனுல் ஜெர்மானியர்கள் ருஷ்யாவின் உட்புறத்திலிருந்து அந்த நகரத்திற்கு ஸப்ளைகள் வருவதைத் தடுக்க முடியவில்லை என்று ஒப்புக்கொள்ளுகிறுர்கள். பின்லாந்துக்காரர்கள் ஹாங்கா (Hangoe)வைக் கைப்பற்றிவிட்டதாகச் சொல்லுவதற்கு ஆதாரமில்லை. பால்க்ளாவாவை கைப்பற்றிவிட்டதாக ஜெர்மானியர்கள் பெருமையடித்துக்கொள்ளுவது இன்னும் ஊர்ஜிதப்படவில்லை. ஆனுல் ஸெபாஸ்டபூலில் நெருக்கடி அதிகரிப்பதாகச் சொல்லப்படுகிறது.

ருஷ்யப் போர்முனையில் வடக்குப்பகுதியில் பிரிடிஷ் விமானப்படையின் ஆதிக்கம் அதிகம். மாஸ்கோ பகுதியிலும் பிரிடிஷ் விமானங்கள் மகத்தான போர் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. பிரிடிஷார் செய்துவரும் உதவியை ஸ்டாலின்



நேரில் பாராட்டியிருக்கிறுர். நவம்பர் மாதம் 29-ம் தேதி பீவர்புருக் பிரபுவுக்கு அவர் அனுப்பிய தந்தி "விமானங்களையும், டாங்கிகளையும் அனுப்பியதற்கு நான் நன்றி பாராட்டுகிறேன். போர்முன்னணியில் பிரிடனில் தயாரிக்கப்படும் விமானங்களும், டாங்கிகளும் ஏற்கனவே போரில் ஈடுபட்டிருக்கின்றன. பிரிடனில் தயாரிக்கப்பட்டுள்ள டாங்கிகளைப்பற்றி ருஷ்ய தளகர்த்தர்கள் அனுப்பும் செய்திகள் மிகவும் சாதகமாய் இருக்கின்றன. ஹரிக்கேன் விமானங்கள் மிகவும் புகழப்படுகின்றன. உங்களால் எவ்வளவு ஹரிக்கேன் விமானங்கள் அனுப்பக் கூடுமோ அவ்வளவு விமானங்களை அனுப்பும்படி நாங்கள் விரும்புகிறேம்" என்று சொல்லியிருக்கிறுர்.

## தூரக்கிழக்கு.

வீண் ஆடம்பரமும், ஜம்பப்பேச்சும் ஜப்பானியர்களுக்கு வழக்கமாகிவிட்டது. கிழக்கு பாகங்களில் வேடர்கள் காட்டில் வலைகள் வீசி பெருந்தீக்கள் மூட்டியும், டமாரம் அடித்தும் பெருங்கூக்குரலிட்டு பக்ஷி ஜாதிகளையும் மிருகங்களையும் கலைத்து, ஒன்றுசேர்ந்து ஓடி வலைகளில் சிக்கும்படி செய்ய எத்தனிப்பார்களோ, அதைப்போலவே இப்பொழுது ஜப்பானியர்களின் வெறும் டம்பமான வார்த்தைகள் காணப்படுகின்றன என்று 'டைம்ஸ்' பத்திரிகையில் வெகு நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. அதன் எண்ணங்கள் மிகவும் கெடுதலானவை. தன்னுடைய கப்பல் தளங்களை பலப்படுத்தி, யுத்தத்திற்குவேண்டிய முக்கியமாக எண்ணெய், ரப்பர் இன்னும் இதர பொருள்களைச் சேகரித்து வைத்துக்கொள்ள ஜப்பானுக்கு அவகாசம் வேண்டியிருக்கிறது. அதுவரையிலும் அது அக்கம்பக்கத்தார்களுடன் சண்டைக்கிழுக்காமல் சமாதானமாக இருக்கப் பிரயத்தனப்படுகிறது. மேலும் அது, அச்சுநாடுகள் ருஷ்யாவிலும், லிபியாவிலும் எவ்விதம் போர் செய்கிறுர்களென்றும், ஜயம் யார் பக்கம் ஏற்படும் என்றும், வெகு கூர்மையாகக் கவனித்துவருகிறது. ஆனுல் இவ்விரு போர்முனைகளிலும் தற்சமயம் தனக்குச் சிநேகமாயுள்ள அச்சுநாடுகள் பின்வாங்குவதில் அவர்களுக்குச் சாதகமாக ஒரு உதவியும் ஜப்பான் செய்ய முன்வரமாட்டாது என்று தெரிகிறது.

இதற்கிடையில் அது பிரெஞ்சு இந்தோ-சைனுவில்தான் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்திற்குப் புறம்பாக ஏராளமாகத் துருப்புகளை வைத்திருக்கிறது. இதேசமயத்தில் ஜப்பான் க்ருஸின் தலைமையின்கீழ் ஒரு தூதுகோஷ்டியை அனுப்பி யுனைடெட் ஸ்டேஸ் மந்திரிகளுடன் சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்க ஏற்பாடுசெய்கிறது. ஆனுல் சமாதானப் பேச்சுகளுக்கு நேர் விரோதமாக தாய்லாந்து, பர்மா ரஸ்தா, வ்ளாடிவாஸ்டாக் முதலிய இடங்களை ஒரே சமயத்திலோ அல்லது ஒன்றன்பின் ஒன்றுகவோ திடீரென்று தாக்க ஜப்பான் எத்தனிப்பதாக வதந்தி உலாவுகிறது. மஞ்சுகோவிற்குக் கிழக்கு எல்லைப்புறத்தில் சென்ற திங்கட்கிழமை ஒரு சிறு சண்டை ஏற்பட்டதாகவும், அதில் இரண்டு ஸோவியத் துருப்புகள் கொல்லப்பட்டனர் என்றும் இஸின்கிங்கிலிருந்து ஒரு அறிக்கை வெளிவந்திருக்கிறது.

இவ்விதம் ஜப்பான் செய்துவரும் அட்டூழியத்தை இனி பிரெஸிடெண்டு ரூஸ்வெல்ட் பொருத்துக்கொள்ளமாட்டார் என்று நன்றாகத் தெரிகிறது. சமீபத்தில் ஜப்பான் இந்தோ-சைனுவை ஆக்கிரமித்ததையும், தாய்லாந்தை தாக்கியதையும் கண்டித்து அவைகளுக்கு ஜவாப்பு சொல்லும்படி அமெரிக்க கவர்ன்மெண்டார் ஜப்பானுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஜனுதிபதியும் இதில் ஈடுபட்டிருக்கிறுர்.

இவ்விதம் ஒருவித முடிவன்றியில் பல கூட்டங்கள் கூடிக் கலைந்தாலும், ஜப்பான் இப்பொழுது நேசதேசங்களுக்குத் திடீரென்று யாதொரு இடைஞ்சலும்

விளைவிப்பது முடியாத காரியம்தான் "பிரின்ஸ் ஆப்வேல்ஸ்" என்ற கப்பல் தலைமையின்கீழ் பிரிடிஷ் கப்பற்படை சமீபத்தில் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்திருக்கிறது. ஹாங்காங்கில் துருப்புகள் ஜாக்கிரதையாக இருக்கும்படி அடிக்கடி எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள். ஆஸ்திரேலியாவில் இப்பொழுதுள்ள ஆபத்துக்களைத் தடுக்க முடிவான ஏற்பாடுகள் செய்வதற்காக ஒரு விசேஷ சபை சமீபத்தில் கூடியிருக்கிறது. மேலும் பஸிபிக் சமுத்திரத்தில் ஹாவாயிலிருந்து ஆஸ்திரேலியா வரையிலும் 5,000-மைல் விஸ்தீரணத்திலுள்ள எல்லா தீவுகளையும், கப்பல் தளங்களையும் தகுதியான முறையில் பலப்படுத்த அமெரிக்கா, பிரிடன், ஸ்வதந்திர பிரான்ஸ் இவைகள் ஏற்பாடு செய்வதாக நமக்குச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

**இதாலியின் கிழக்கு ஆபிரிக்க சாம்ராஜ்யம் குலைந்தது.**—நவம்பர் 27௳ வியாழக்கிழமை இதாலியத் தலைவனான ஜெனரல் வாஸியிடமிருந்து அபிஸீனியாவிலுள்ள கோண்டாரை பிரிடிஷ் படைகள் பிடிங்கிவிட்டன. அச்சமயத்தில 11,500 இதாலியரும் 12,400 உள்நாட்டுத் துருப்புகளும் பிடிபட்டனர். இதோடு இதாலிக்குச் சொந்தமான எல்லாப் பிரதேசமும் நேசதேசங்கள் வசமாகிவிட்டது. முஸோலினி இருமாப்புக்கொண்டிருந்த இதாலிய சாம்ராஜ்யம் அழிந்தது.

**ஸிட்னி என்ற கப்பல் நாசமாயிற்று.**—ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான ஸிட்னி என்ற கடல் சஞ்சாரி ஆஸ்திரேலியாவுக்கு 300 மைல் மேற்கே கார்னர் வானுக்கும் மேற்கில் மூழ்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதில் இருந்த 42 அதிகாரிகளும் 603 பிரயாணிகளும் இருக்குமிடம் தெரியவில்லை. ஜெர்மனிக்குச் சொந்தமான 'ந. 41' என்ற ஜெர்மன் கப்பலுடன் சண்டையில் ஈடுபட்டிருந்தபோது ஸிட்னி கப்பலும் 'ந. 41-ம்' மூழ்கின.

**ராணுவத்திற்கு ஆள் சேகரம் செய்வது.**—செவ்வாய்க்கிழமை காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதன்படி இங்கிலாந்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள் ராணுவத்தில் சேர்ந்து வெற்றியடைவதற்கான ஏற்பாடு செய்யவேண்டும். இத்தீர்மானத்தைக் கொண்டுவரும்பொழுது அவர் சில விஷயங்களைப்பற்றிச் சொன்னார். அதாவது இங்கிலாந்தை நேரே படையெடுக்க எதிரி முயற்சிப்பான் என்றும் விமானங்கள் மூலம் சென்ற வருஷம் செய்த மாதிரி படையெடுப்பான் என்றும் சொன்னார். ஆகையால் இந்த இரண்டு ஆபத்துக்களுக்கும் உட்படாமல் இருக்க சரியானபடி தற்காப்பு செய்துகொள்ளவேண்டுமென்றார். இதைத் தவிர வெளிநாடுகளில் போடும் சண்டைகளுக்கும் உதவி அனுப்பவேண்டியிருக்கிறது. இதற்காக விமானங்களும் கப்பல்களும் 1942-43-ல் அதிகம் தேவையாக இருக்கும். ஜெர்மன் படையெடுப்பால் ருஷ்யாவில் யுத்த சாமான்கள் செய்ய முடியாததால் அதற்கும் உதவி போகவேண்டியிருக்கிறது.

சர்ச்சில் சொல்லும் விதமாக எல்லா பிரிடிஷ் மக்களும் தேசசேவையில் தயக்கமன்னியில் ஈடுபட்டிருக்கின்றனர். இருந்தாலும் இப்புதிய சட்டப்படி இவ்வித ஒற்றுமை ஸ்தாபிப்பதே நோக்கமாகும். வேலைக்கு வராமலிருப்பவர்களைக் கூப்பிடாமல் ஏற்கனவே வந்திருப்பவர்களைத் தீவிரமாக யுத்த சாமான் உற்பத்தியில் ஈடுபடும்படி செய்கிறது. யுத்த முனைக்கு அருகில் போகும்படிக்கும் தியாக புத்தியுடன் பரிசிரமம் அடைவதேதான் இதன் நோக்கம்.

மேலும் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் யுத்த முயற்சியில் ஈடுபடும்படிக்கும் இம்மசோதா தூண்டுகிறது. 16 முதல் 50 வயதுவரையிலிருப்பவர்கள் முன்வரவேண்டும்.

இச்சட்டப்படி 23,28,000 புருஷர்களும், 16,20,000 ஸ்திரீகளும் உபரியாகச் சேருகிறார்கள்.



**துருக்கி நேசதேசங்களுடன் சேர்ந்தது தானு?**—குத்தகைக்கடன் மசோதாப்படிக்கு துருக்கிக்கு சாமான்கள் கொடுப்பதாக அமெரிக்காவிலிருந்து விசேஷ செய்திகள் கிடைத்திருக்கின்றன. துருக்கியைத் தற்காப்பு செய்வது அமெரிக்காவின் தற்காப்பிற்கு முக்கியமானது என்று ஜனாதிபதி அறிவித்தார். துருக்கியும் இதற்கு முன் இம்மாதிரி உதவி அடைந்ததாகத் தெரியவில்லை. சாமர்த்தியம் வாய்ந்த ரூஸ்வெல்ட்டு இவ்விதம் செய்யத் தீர்மானித்ததிலிருந்து துருக்கி நேசதேசங்களுடன் சமயம் வந்தபோது சேர்ந்துகொள்ளும் என்ற உறுதி உண்டாக்கி இருக்கவேண்டும்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 24—11—41. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| | பகலில்.— விரோதிக் கப்பல்கள்— டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | ... | 1 விமானம். | 1 விமானம்; அநேகம் சேதமாயின |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya). | | | |
| | விரோதி டாங்கிகள் கூட்டம், மோட்டார் வண்டிகள், கவசம்பூண்ட வண்டிகள், கூடாரங்கள், சாமான், வெடி மருந்து கிட்டங்கிகள்.—லிபியா (Libya) வில். | ... | ... | ... |
| | விரோதி மோட்டார் போக்குவரத்து.—எலாடெமு (El Adam)க்கு மேற்கில். | ... | ... | ... |
| | விமானப் போர்கள்.—ஜாலோ (Jalo) பிரதேசம். | ... | ... | 1 விமானம்; அநேகம் சேதமாயின |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | தீக்கள் கிளம்பின. | ... | ... |
| | விமான நிலயங்கள்.–பெர்க்கா (Berka), பெனிணு (Benina). | ... | ... | 2 விமானங்கள். |
| | விமானச் சண்டைகள்.—மத்தியதரைக் கடல் (Mediterranean) மத்தியில். | ... | ... | 1 விமானம். |
| | அபிஸீனியா (Abyssinia). | | | |
| | ஒரு முகாம், ஒரு கோட்டை.—கோண்டார் (Gondar). | ... | ... | ... |
| | விரோதி ஸ்தானங்கள்.—கோண்டார் (Gondar) அஸோஸோ (Azozo) பிரதேசம். | ... | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **24—11—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டைகள், விமான நிலையங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | ... | 2 விமானங்கள். | 5 விமானங்கள். |

**25—11—41.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—விரோதி விமானம்— கலே (Calais)க்கருகாமையில் மார்க் (Marck) விமான தளம். | ... | ... | ... |
| | விரோதி விமான நிலயம்.—மோர்லே (Morlai). | ... | நஷ்டமில்லை. | ... |
| | இரவில்.—கப்பல் துறைகள்-ப்ரெஸ்ட் (Brest), செர்பர்க் (Cherbourg). | ... | நஷ்டமில்லை. | ... |
| | வேவுபார்த்தல்.—வடகடல் முழுவதிலும். | ... | 1 விமானம். | ... |

**லிபியா (Libya).**

| | | | | |
|---|---|---|---|---|
| | விமான உதவி.—தரையில் நடக்கும் சண்டைகளுக்கு. | ... | | |
| | விரோதி டாங்கிகள், மோட்டார் போக்குவரத்து.—ஷெபர்ஸன் (Sheferzen), ஸிடி ஓமார் (Sidi Omar) ஜில்லாக்கள். | தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | விமானச் சண்டைகள்.—ஸிடி ரேஸெக்—(Sidi Rezegh), ஸிடி ஓமார் (Sidi Omar) பிரதேசங்கள். | 10 விமானங்கள்; ஒரு எண்ணெய்க் கப்பல் தீப் பற்றியது. | ... | 2 விமானங்கள். |
| | விமான நிலயம்.—அகேடாபியா (Agedabia). | | | |
| | ஒரு எண்ணெய்க் கப்பல், இன்னும் அநேக வண்டிகள்.—பார்ஸி (Barce)க்கு தென்புறமுள்ள ரோடில். | | | |
| | கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi) துறைமுகம். | ... | 5 விமானங்கள். | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **25—11—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| | | | | |
|---|---|---|---|---|
| | காலாட்படை, பீரங்கிப்படை, விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | ... | 5 விமானங்கள். | 33 விமானங்கள். |

**26—11—41.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—விரோதி வேவுபார்க்கும் கப்பல்கள் படகுகள்—டோவர் (Dover) ஜலசந்தி. | ... | ... | ... |
| | இரவில்.—எம்டன் (Emden) துறைமுகம். | ... | ... | ... |
| | இதர லக்ஷியங்கள்.—ஜெர்மனி (Germany)க்கு வடமேற்கில். | ... | ... | ... |
| | கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்டு (Ostend). | ... | 1 விமானம். | ... |

**லிபியா (Libya).**

| | | | | |
|---|---|---|---|---|
| | விரோதி டாங்கிகள், கவசம் பூண்ட மோட்டார் வண்டிகள், மோட்டார் போக்குவரத்து, லிபியா (Libya) யுத்தரங்கம். | ... | ... | ... |
| | டாங்கிகள், துருப்புகள் வெடிமருந்து ஏற்றிச் செல்லும் மோட்டார் வண்டிகள்.—எலாடெம் (El Adem) ஸிடி, ஓமார் (Sidi Omar). | ... | ... | ... |
| | டாங்கிகள், மோட்டார் லாரிகள்.—டிரிக்—காபூஸோ (Trigh-Capuzzo) ரஸ்தா, எட்டோ (El Duda) ஜில்லா. | ... | ... | ... |
| | மோட்டார் போக்குவரத்து.—ஸர்டி (Sirte) குடாக்கடல்கரை ரஸ்தாவில். | ... | ... | ... |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் பூராவும். | ... | 4 விமானங்கள். | 19 விமானங்கள். |

27—11—41. (வியாழக்கிழமை).

### ஜெர்மனியும் ஜெர்மனி, ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| பகலில்.—சாமான் கப்பல்—ஹேக் (Hague) அருகாமையில். | மூழ்கடிக்கப் பட்டது. | ... | ... |
| விரோதித் துணைக் கப்பல்.—நார்மண்டி (Normandy) கடற்கரைக்கருகாமையில். | சாமான் கப்பல், விமான எதிர்ப்பு பீரங்கிகள் உள்ள கப்பல்கள் மூழ்கடிக் கப்பட்டன. | ... | ... |
| விமானச் சண்டைகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ... | ... | 2 பைடர் விமானங்கள். |
| தரையிலுள்ள விமானங்கள்.—பெர்க் (Berck)கிலுள்ள விமான நிலயம், கப்பல்கள்.—பொலாயின் (Boulogne). | ... | 3 பைடர் விமானங்கள். | ... |
| இரவில்.-இருப்புப் பாதைகள், தொழிற் சாலைகள் உள்ள ஜில்லாக்கள்.—டஸ்ஸெல்டார்ப் (Dusseldorf). | ... | ... | |
| கப்பல் துறைகள்.—ஆஸ்டெண்டு (Ostend). | ... | ... | ... |
| விமான நிலயங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம். | ... | ... | ... |

### லிபியா (Libya).

| லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| மோட்டார் வண்டிகள் நிற்குமிடங்கள், கிட்டங்கிகள்.—டிரிக்—காபுஸோ (Trigh-Capuzzo)—காஸரெல்யாரிட் (Gasr El Aryid) எலாடெம் (El Adem) ஆக்ரோமா (Acroma) ஜில்லாக்கள். | பலத்த சேதம். | ... | ... |
| டாங்கிகள், மோட்டார்கள், தரையில் உள்ள விமானங்கள்.—எல்கஸாலா (El Gazala). | தீக்கள் கிளம்பின. | ... | 2 விமானங்கள் அழிக்கப் பட்டன. |
| சைனிய இருப்பிடங்கள், விரோதித் துருப்புகள், மோட்டார் போக்குவரத்துகள்.—மெல்லாஹா (Mellaha) விமான நிலயத்திற்கருகாமையில். | ... | ... | ... |
| மோட்டார் லாரிகள்.—எலாடெம் (El Adem). | ... | ... | 1 பைடர் விமானம். |



27—11—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

### லிபியா (Libya)—தொடர்ச்சி.

| லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமான நிலயம்.—அகெடாபியா (Agedabia). | ... | ... | ... 1 விமானம். |
| விமானச் சண்டைகள்.-ஆகிலா (Augila) | ... | ... | |
| விமானமிறங்குமிடம்.—டெர்னு (Derna). | விரோதி விமானம் சேதமாயிற்று. | ... | ... |
| விரோதி மோட்டார் போக்குவரத்து.—ஸிடி ஓமாரு (Sidi Omar)க் கருகாமையில். | ... | ... | ... |
| விரோதி வண்டிகள்.—பார்டியா (Bardia). | தீ மூட்டப் பட்டது. | ... | ... |

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

| லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| நீராவிக் கப்பல்.—நாசகாரியால் துணை புரியப்பட்டது, மத்தியதரைக்கடலின் மத்தியில். | இரண்டும் மூழ்கடிக்கப் பட்டன. | | |

### அபிஸீனியா (Abyssinia).

| லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விரோதி ஸ்தானங்கள்.—அஸோஸோ (Azozo), அம்பாஸோ (Ambazzo), கோண்டார் (Gondar), மால்டிபா (Maldiba) பிரதேசங்கள். | | 4 விமானங்கள். | |

### இதாலி (Italy).

| லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| யுத்த தளவாட தொழிற்சாலை, இடிகுண்டு படகுகள் உற்பத்தி செய்யப் படும் தொழிற்சாலை, தொழிற்சாலை ஸ்தாபனங்கள், எண்ணெய்க் கிணறுகள், ரயில்வே ஸ்டேஷன்.—நேபிள்ஸ் (Naples). | தீக்கள் மூட்டப்பட்டன; பலத்த சேதமேற் பட்டன. | ... | ... |

### ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயத்திலுள்ள விமானம்.—யுத்தரங்கம் முழுவதிலும். | ... | 13 விமானங்கள். | 39 விமானங்கள். |
| ஜெர்மன் போக்குவரத்துகள்.—ஜெர்மன் சைனியத்திற்குப் பின்புறத்தில். | ... | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **28—11—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விரோதி சாமான் கப்பல்கள்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக்கருகாமையில். | எண்ணெய்க் கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. இன்னும் 2 கப்பல்கள் சேதமாயின. | ... | ... |
| | விரோதிக் கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | ... | நஷ்டமில்லை. | ... |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | ஒரு பெரிய வியாபாரக் கப்பல்.—மத்தியரைக்கடலின் (Mediterranean) மத்திய பாகத்தில். | கப்பல் 5 தடவைகள் தாக்கப் பட்டது. | ... | ... |
| | **லிபியா (Libya).** | | | |
| | மோட்டார் போக்குவரத்துகள்.—மார்டுபா (Martuba), டிரிக்-காபுஸோ (Trigh-Capuzzo), பார்டியா-டொப்ருக் (Bardia-Tobruck), எல்குப்பி-பேடியா (Elgubbi-Fadia), ரஸ்தாக்கள், பார்ஸ் (Barce), எல் கஸாலா (El Gazala) பிரதேசங்கள். | தீக்களும், வெடிகளும் கிளம்பின; மிகவும் பலத்த சேதம். | | |
| | விமான நிலயத்திலுள்ள விமானம்.—கஸாலா (Gazala) | ... | ... | 1 விமானம்; அநேகம் சேதமாயின. |
| | அலைதாங்கிகள், கப்பல்கள், சாமான் சேமிக்குமிடங்கள்.—பெங்காஸி (Benghazi). | 2 கப்பல்கள் நேராகத் தாக்கப்பட்டன. | ... | ... |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானம்.—காஸ்டெல் பெனிடோ (Castel Benito). | அநேக விமானங்கள் அழிக்கப் பட்டன; தீக்கள் கிளம்பின. | 7 விமானங்கள். | ... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், காலாட் படை, பீரங்கிப்படை.—கிழக்குப் போர்முனை பூராவும். | ... | 11 விமானங்கள். | 60 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **29—11—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலிலும், இரவிலும் ஐரோப்பா பூராவிலும் விமான நடமாட்டங்களுக்கு தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | ... | ... | ... |
| | **லிபியா (Libya).** | | | |
| | மோட்டார் படைகள் எலாடெம் (El Adem) ஸிடி ரெஸக் (Sidi Rezegh) பிரதேசங்கள். | மிகவும் பலத்த சேதம். | ... | ... |
| | வெடிமருந்து கிடங்குகள், முகாம்கள், எலாடெம் (El Adem). | தீக்கள் கிளம்பின. | ... | ... |
| | விமானச் சண்டைகள்.—போர் அரங்கில். | ... | ... | 150 விமானங்கள். |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **25—11—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—அநேக இடங்கள்—தென் மேற்கு இங்கிலாந்து (England). | வீடுகள் சேதமாயின; சிலர் கொல்லப்பட்டனர். | 1 விமானம். | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 3 விமானங்கள், | |
| **26—11—41.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி(England)ன் வட கிழக்குக் கடற்கரை | ஒருவருக்கும் காயமில்லை. | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 2 விமானங்கள் | .. |
| | போக்குவரத்து.—ருஷ்ய சைனியங்களுக்குப் பின்னால், | ... | ... | .. |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 27—11—41. (வியாழக்கிழமை) | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | இரவில்.—சில இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia) இங்கிலாந்தின் (England)ன் தென்கிழக்கு. | ... | ... | ... |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 15விமானங்கள். | ... |
| 28—11—41. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | இரவில்.—அங்கும், இங்கும் சில இடங்கள்—மேற்கு இங்கிலாந்து (England), தெற்கு வேல்ஸ் (Wales). | சொற்பச்சேதம் சிலர் கொல்லப் பட்டனர். | 1 விமானம். | ... |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | 19 விமானங்கள். |
| | லெனின்கிராடு (Leningrad). | ... | ... | ... |
| 29—11—41. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | வட ஐயர்லாந்து (Northern Ireland). | | | |
| | சொற்ப விரோதி விமான நடமாட்டம்.—வடக்கு ஐயர்லாந்து (Northern Ireland). | ... | ... | ... |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| 30—11—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—தென் மேற்கு இங்கிலாந்து (England). | ... | ... | ... |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | விரட்டப் பட்டன. | ... | ... |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow). | .. | ... | ... |



# யுத்தக் குறிப்புகள்.

**லிபியா யுத்தத்தை உள்ளபடி கவனிக்கவும்.**

"எதிரியை மற்றொரிடத்தில் தரையில் எதிர்க்கவே" லிபியா யுத்தம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் பொதுஜனங்கள் மேற்கே ஒரு போர்முனை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னதிற்காகச் செய்யப் படவில்லை. ஏனென்றால் அதெல்லாம் வீணாகச் சொல்லப்படும் வார்த்தைகளாகும். மேலும் இந்த லிபியா யுத்தத்திற்காக சாவதானமாயும் ஜாக்கிரதையாயும் பலமாதங்களாகத் தயார் செய்யப்பட்டது. ருஷ்யாவுக்கு சாமான் உதவி அனுப்பியதால் கொஞ்சம் யுத்த முயற்சி தாமதமாகச் செய்யப்பட்டது. நேச தேசங்கள் நடத்திவரும் யுத்த தந்திரத்தில் இதுவும் ஒரு முறையாகவே கருதி அதற்கான பிரயத்தனம் எடுத்துக்கொள்ளப்பட்டது. முதல் இரண்டு வாரங்களில் எதிரியுடன் வெற்றிகரமாக சண்டை செய்யப்பட்டது. இருந்தாலும் நவம்பர் 20உ மிஸ்டர் சர்ச்சில் சொல்லியபடி "எதிரியின் கவசஸ்தானமான டாங்கிகள் பிளக்கப்பட்டாலும், விமானங்கள் வீழ்ந்தாலும் காலாட்படையும், பீரங்கிப்படையும்.........தானாகவே வசமாகும்." இதுதான் மிகவும் சரியானது! ஏனென்றால் வட ஆபிரிக்காவிலுள்ள எதிரி டாங்கி பலம் பூரா நமது வசமாகிவருகிறது.

இவ்விதமாக வட ஆபிரிக்காவில் எதிரியைத் தொலைத்து எகிப்துக்கும், மற்ற மத்தியக்கிழக்கு நாடுகளுக்கும் உள்ள அச்சுநாட்டு பயத்தை நிவர்த்திப்பதோடு இன்னும் சில பெரும் விஷயங்களையும் கவனிக்கவேண்டும்.

1. யுத்தம் ஆரம்பித்து இரண்டு வருஷங்களுக்குப் பிறகு வெற்றியுடன் கூடிவரும் எதிரி பலாத்காரமாக எதிர்க்கப்பட்டிருக்கிறான். அப்படி, தாக்கப்பட்ட இடமான ஸிரேனிகா யுத்தப் பிரதேசத்திலேயே ஒரு முக்கிய ஸ்தானமாகும்.

2. இவ்விதம் தனியே நேசதேசங்கள் எதிரியைத் தாக்கியதிலிருந்து அவர்களுக்குச் சாமான்கள் வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது என்று சொல்லலாம். மாஸ்கோவிலும் லிபியாவிலும் பிரிடிஷ் டாங்கிகள் ஏராளமாக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன. மேலும் அமெரிக்காவிலிருந்து டாங்கிகளும் விமானங்களும் பிரிடிஷ் படைகளுடன் கலந்து வருகின்றன. இதனால் அமெரிக்கா உதவவில்லை என்று செய்த ஜெர்மன் பொய்ப் பிரசாரம் ருஜுவாகிவிட்டது.

3. (பி. பி. ஸி.யில்) ஸிரில் லாகின் கடைசியான அம்சத்தை நன்றாகத் துலக்குகிறார். அதாவது "பஸிபிக்கில் அமைதிக் குறைவு ஏற்பட்டுவரும் தருணத்தில் வட ஆபிரிக்காவில் முன்னேறித் தாக்கத் தீர்மானித்ததிலிருந்து நேசதேசங்கள் எல்லாவித சந்தர்ப்பங்களுக்கும் லாயக்காகத் தயார் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது."

முதல் தடவை லிபியாவில் செய்த சண்டையால் இதாலிய சைனியம் முறிக்கப்பட்டு, எகிப்து காப்பாற்றப்பட்டு, இதாலி வட ஆபிரிக்காவில் பிடித்ததாகச் சொன்ன சாம்ராஜ்ய நாடுகள் திரும்பப் பிடிக்கப்பட்டன.

இரண்டாம் தடவையாக இப்பொழுது செய்த லிபியா யுத்தத்தால் மத்திய தரைக்கடல் ஆதிக்கம் பூராவாக நேசதேசத்தினர் வசம் வந்துவிட்டது. இதை இதாலியரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அதோடு மேற்கு ஆபிரிக்காவிற்கும், அச்சுநாடுகள் பிடித்து ஆக்கிரமித்துக்கொண்ட தென்ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆறுதலை அளிக்கும் யுத்தமாகவே இது ஆகும்.

**டோப்ருக் புராணம்.** டொப்ருக்கில் தயார் செய்யப்பட்ட ஒரு சினிமாப்படம் கிடைத்திருக்கிறது. அதில் எதிரிகள் குண்டுகள் வீசிய பெரும் மணல்பாங்கான இடங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிகள் இரவும் பகலும் குண்டுகளை வீசுவதும், பழுதடைந்த எதிரி மோட்டார் லாரிகளைப் பழுது பார்க்கும் இடத்திற்கு இழுத்துச் செல்லுவதும், பீரங்கிகளேற்றிய டாங்கிகள் தோன்றி மறைவதும், பாலங்களுக்கு அடியில் வெய்யிலில் அடிபட்டு, அழுக்கடைந்த மனிதர்கள் பாதி வஸ்திரம் அணிந்து ஒளிந்திருந்து வெளியே வருவது; முதலியவையெல்லாம் இருந்தது. இனிமேல் இக்கஷ்டங்களில்லாமல் சுந்தர புருஷர்களாக ஆகிவிடுவார்கள். இதில் அநேகமாக ஆஸ்திரேலியர்கள் தான் அதிகம்.

பாதி உப்பு ஜலம், சாதாரணமான ஆகாரம், குறைவான சௌகரியங்கள், பொறுக்கமுடியாத வெய்யில், இடைவிடாத பீரங்கி சப்தம், திடீரென்று மாறும் சீதோஷ்ண நிலை, பாய்ந்து தாக்கும் விமான எதிர்ப்புகள், எதிரிகளின் டாங்கிகளின் தொந்தரவு; மொத்தமாக 1914-15 பிளாண்டர்ஸில் இருந்த பயம், தூசி, கலக்கம் முதலியதை எல்லாம் ஏழுமாத காலமாக இவர்கள் அனுபவித்தனர். இப்பொழுது இவர்களுக்கு ஓய்வு ஏற்படும்.

ஐந்து மாதங்களுக்குமுன் ஜெர்மன் ஒலிபரப்பில் "சிறு கப்பல்கள்கூட டொப்ருக்கை அணுகிச்செல்ல முடியாதபடி ஒரு கோட்டைபோல் இருக்கிறது" என்று சொல்லப்பட்டது. அப்படியானால் அதற்குக் காரணம் ஜெனரல் மோர்ட்ஷீட்டின்கீழ் இருந்த சைனியம் வெகு தீரமாக எதிர்த்து நின்றதுதான்.

வி வி வி வி வி

**கேவலமான விஷி.** லிபியாவில் யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு நாடுகளையும் யுத்தத்தில் ஈடுபடுத்தவேண்டித்தான் இருக்கும். ஏனென்றால் லிபியாவிலிருந்து விரட்டப்பட்டால் அச்சுநாட்டுப் படைகள் டூனிஸ், அல்ஜீரியா, மொராக்கோ முதலிய இடங்களிலுள்ள தளங்களைத்தான் உபயோகிக்க நேரும். ஓரான், அல்ஜியர்ஸ், பிஸர்டா முதலிய இடங்களிலிருந்து ஜிப்ரால்டருக்குக் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள பிரிடிஷ் போக்குவரவைத் தடுக்கலாம். இவ்விதம் வடமேற்கு ஆபிரிக்காவிலிருந்து டாக்கர் வரையிலும் அட்லாண்டிற்கும், மத்தியதரைக் கடலுக்கும் இடையில் ஒரே தடை ஏற்படும்.

ஆகையால் விஷி அரசாங்கம் முக்கியமாகச் சம்மதிக்கும். மேலும் விஷி அரசாங்கத்தில் ஜெர்மன் ஆதிக்கம் இருப்பதை வேகாண்டு விலகியதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். பிரெஞ்சுக் கப்பற்படை அச்சுநாடுகளுடன் சேர்ந்தால் அமெரிக்கத் துறைமுகங்களிலுள்ள பிரெஞ்சுக் கப்பல்களைப்பற்றி உடனே நடவடிக்கை எடுக்கப்படுமென்று அமெரிக்கா சமீபத்தில் அறிவித்ததும் ஒரு முக்கிய விஷயம்தான்.

ஆகையால் விஷி அரசாங்கம் என்னசெய்யக்கூடுமென்று ஆலோசிக்க வேண்டியதுதான். விஷி அரசாங்கம் என்னசெய்தாலும் செய்யட்டும் என்று நினைத்துத்தான் பிரிடிஷ் அரசாங்கம் இந்த யுத்தத்தை ஆரம்பித்திருக்கிறது. அச்சுநாடுகளுடன் சேருவதைத் தவிர வேறுவிதமாக விஷி அரசாங்கம் செய்யாது. சென்ற வருஷம் சில பிரெஞ்சுக் கப்பல் வியாபாரிகள் அமெரிக்கக் காவல் கப்பல்களின் வசமாகாமல் தாங்களாகக் கப்பல்களை மூழ்கடித்துக்கொண்டதால் இப்பொழுதும் நேசநாடுகளுக்கு விரோதமாகவேதான் இருக்கும்.



**கொள்ளைந் தொழிலால் ஜெர்மனி அடைந்த பலன்.** டார்லானின் முட்டாள்தனத்தினால் நாஸிகளுக்குப் பணிந்துகிடக்கும் ஆபிரிக்கப் பிரெஞ்சு நாடுகளிலிருந்து நாஸிகள் அடைந்த லாபங்களை ஒன்றுசேர்த்துப் பார்ப்போம்.

1. பிரெஞ்சு நாடுகளில் ஜெர்மானியர் அதிகம் உட்புகுந்தால் பிரான்ஸும் ஜெர்மனியும் செய்துகொண்ட சமாதானத் திட்டங்கள் அதிகமாக வற்புறுத்தப்படுமென்றுசொன்ன வேகாண்டு பதவியிழந்ததால் ஜெர்மனியின் நோக்கம் கை கூடியதாகவே சொல்லலாம். பிடேன் தனது சிநேகிதனை விட்டுவிட்டான். இருந்தாலும், 4,000 முதல் 5,000 ஜெர்மானியர்கள் வான் கிரௌஸ் என்பவன்கீழ் உட்புகுந்து டாக்கர், காஸபிளாங்கா, மெர்ஸ் எல் கபீர் என்ற இடங்களைப் பலப்படுத்தி வருகின்றனர். இவ்விதம் உட்புகும் ஜெர்மானியர்கள் தங்களைச் சமாதான தூது கோஷ்டி என்று சொல்லிக்கொள்ளுகின்றனர்.

2. நியூஸ்க்ரானிகிள் பத்திரிகையின் நிருபர் நவம்பர் 8உ, மொராக்கோவில் உள்ள தூதுகோஷ்டியைப் படையெடுக்கவந்த சைனியமாகவே கருதலாம் என்றார்.

3. வான் நியூரத் என்பவனின் மகன் டூனிஸ்ஸில் நாஸி தூதராக வந்து ஓரான், பிஸர்டா என்ற இடங்களைப் பார்வையிட்டுவருகிறான்.

4. வட ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சு சைனியம் எவ்வளவு பெரிதாயிருந்தாலும், மனப்பான்மை எப்படியிருந்தாலும் நாஸி முன்னேற்றத்தைத் தடுப்பதற்குப் போதுமான பலம் கிடையாது. ஏனென்றால் அதற்குச் சாமான்கள், ஆகாரம் கிடைப்பதில்லை.

5. 'ஒற்றுழைப்பது' என்று நாஸிகள் சொன்னால் அந்நாட்டை அடியோடு ஒழிப்பது என்றுதான் அவர்கள் கருத்து. ஆகவே பிரெஞ்சுக்காரர்களுக்கு நாஸிகள் உபகாரம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கவேமுடியாது. மூர் ஜாதியாரை தனியே போகும்படி தூண்டுவதும், மொராக்கோவில் ஸ்பெயின் தேசத்தினருக்கும் பாத்தியம் இருப்பதாகச் சொல்லச் சொல்லுவது எல்லாம் தான் ஜெர்மானியர் பிரெஞ்சுக்காரர்களுக்குச் செய்யும் உதவி.

எது எப்படியானாலும் நாஸிகளுடன்தான் விஷி அரசாங்கம் சேருமென்று எதிர்பார்க்கலாம். ஏனென்றால் விஷி அரசாங்கத்தில் இப்பொழுது இருக்கிறவர்களெல்லாம் ஹிட்லர் சொல்லுவதற்கு ஆமாம்சாமி போடுகிறவர்களாதலால், அவன் வெற்றியடைவதற்காக இவர்களுடைய வரும்கால க்ஷேமத்தை எல்லாம் தியாகம் செய்கிறார்கள். இவ்வருஷ மார்ச்சு மாதத்திலேயே கவுண்டு டி பிரினன் பஹிரங்கமாகச் சொன்னான்: "இங்கிலாந்து தோற்றுப்போனதாக நாம் கருதினால்...ஆபிரிக்காவில் ஒரு ஒற்றுமையை ஸ்தாபிக்கவேண்டும். பிரிடிஷ் அதிகாரம் குன்றும் சமயத்தில் நமது நன்மையை முன்னிட்டு, ஜெர்மனி வெற்றி அடைவதைத் தெரிந்துகொண்டு நாம் நாடுகளுடன் சிநேகம் கொள்ளவேண்டும்."

லிபியாவில் பிரிடிஷ் வெற்றி அடைவதால், விஷி அரசாங்கம் என்ன செய்தாலும், நமக்கு உத்ஸாகத்தை அளிக்கக்கூடிய சில அம்சங்கள் இருக்கின்றன.

1, ஆபிரிக்காவில் பூமத்தியரேகைக்குச் சமீபத்திலுள்ள பிரெஞ்சு நாடுகளான (காபன், நடுகாங்கோ, உபங்கி-ஷாரி, சாத் பிரதேசம்,) மற்றும் சில பிரதேசங்களிலுள்ள ஸ்வதந்திர பிரெஞ்சு அரசாங்கம், நேசநாடுகளுக்கு இடையிலுள்ள ஒரு வெளியை அடைத்து பந்தோபஸ்து செய்துவிட்டது. இது பிரிடிஷ்காரர்களுக்கு ஒரு சாதகமான அம்சம்.

2. இப்படிச் செய்ததால் ஸூடானின் மேற்குப் பக்கம் காபந்தாக இருக்கிறது. மேலும் லிபியாவிலுள்ள இதாலிய (?) பிரதேசங்களைச் ஸ்வதந்திர பிரெஞ்சு நாடுகள்—முக்கியமாக சர்த் என்ற மனிதர்கள் தாக்கவும் முடியும்.

3. டாக்கர் துறைமுகத்தைப்பற்றி அமெரிக்கா வெகுநாளாகக் கவனித்து வருகிறது. ஸ்வதந்திர பிரெஞ்சுத் துறைமுகங்கள் வழியாகவும், செங்கடலுக்கும் அட்லாண்டிற்குக்கும் இடையிலுள்ள விமான மார்க்கங்கள் வழியாகவும் சாமான்கள் அமெரிக்காவிலிருந்து தடைபடாமல் வந்துசேருகின்றன.

4. ஸ்வதந்திர பிரெஞ்சுத் தலைவனான டி காலின் படைகளுக்குக் குத்தகைக் கடன் மசோதாப்படி அமெரிக்காவிலிருந்து சாமான்கள் வருகின்றன. பிரிட்டனும், இவர்களுக்குச் சொந்தமான நாடுகளைக் காபந்து செய்வதற்கான ஏற்பாடுகளையும் நாணய மாற்றுதலையும் ஏற்படுத்திக்கொண்டு, கோகோ, பஞ்சு, தோல் முதலிய சாமான்களை வாங்கிக்கொள்ளுகிறது.

மேலும் ஜெர்மனியுடன், விஷி படிந்து நடந்துகொண்டால், விஷிக்கு அனுப்பிவரும் உணவுப்பொருள்களையும், அரசியல் சம்பந்தத்தையும் ரத்துசெய்து விடுவதாக அமெரிக்கா சொல்லிவிட்டது.

வி வி வி வி வி

**தற்புகழ்ச்சி பலிக்கவில்லை.** "மாரிகாலம் வருவதற்கு முன்னமேயே எதிரி கடுமையாக அடிக்கப்பட்டு தொலைந்து விடுவான்" என்று அக்டோபர் ஆரம்பத்திலேயே ஹிட்லர் சொல்லி ருஷ்யர்களின்மேல் ஒரு எதிர்ப்பைத் துவக்கினன்.

ஆனல் பூரா மாரிகாலம் நெருங்கிவிட்டது. மாஸ்கோ தைரியமாக எதிர்த்து நிற்கிறது. இம்மாரிகாலத்தில் ஜெர்மானியருக்கு ருஷ்யாவில் தங்கும் இடமோ, ஒய்வோ கிடைக்காது, என்று லாஸோஸ்கி சொல்லிவிட்டான். லெனின் கிராட்டிலும், ரோஸ்டவ்விலும் ருஷ்யர்களுக்கு வெற்றிகிடைக்க ஆரம்பித்து விட்டது. ஆகவே ருஷ்யச் சேனையைக் கடுமையாக அடிக்கமுடியாமல் மாஸ்கோவைச் சுற்றிள்ள ருஷ்ய ஜீவ நாடிகளைப் பிளந்து ருஷ்யச் சேனையை சூழ்ந்துகொள்ள ஜெர்மானியர்கள் யத்தனிக்கின்றனர். இப்படிச் செய்து பால்டிக், காகஸஸ்ஸிலிருந்துவரும் பிரிடிஷ், அமெரிக்க ஸப்ளை வழிகளையும் தடுக்க உத்தேசம். இப்பிரதேசத்தில் பலமான சண்டை நேர்ந்தாலும், டானட்ஸ் பிரதேசத்தில் டிமோஷன்கோ முக்கிய வெற்றியடைந்திருக்கிறன்.

மாஸ்கோவைச் சுற்றியுள்ள ருஷ்யச் சைனியங்கள் பலமாகத் தாக்கப் படுகின்றன. இருந்தாலும் ஜூகோவ் என்பவனின் படைகள் டிக்வினிலிருந்து ஜெர்மானியரை வெளியேறும்படி செய்துவிட்டன. லோவிலும் எதிரிக்கு இடைஞ்சல் பலமாக இருக்கிறது. ஆகையால் "மாரிகாலம் வருவதற்குள் ருஷ்யர்களை மடியவைப்பதாக" ஜெர்மானியர் சொன்னது பலிக்காததோடு, ஜெர்மன் சைனியங்களுக்குத் தங்குவதற்கு இடமில்லாமல் வெளிப்பிரதேசங்களில் பனியில் அவஸ்தைப்படவேண்டியிருக்கிறது. குளிர் தாங்கக்கூடிய உடைகளும் உணவும் ஸப்ளை செய்யாதபோனல் அச்சுநாட்டுத் திட்டங்களெல்லாம் பயன் படாமல் போய்விடும்.

இப்படிச் சொல்லுவதால் அதிகத் திருப்திகரமான நிலை நமக்கு வந்து விட்டதாக நினைக்க முடியாத போனலும், மாஸ்கோவையும் அதைக் காப்பாற்றி வரும் ருஷ்யச் சைனியங்களையும் எதிரிகள் தொலைக்க முடியவில்லை. மேலும் அதிகக்கெடுதி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள ஜெர்மானியர் பெரும் பாடுபட வேண்டும் என்று சொல்லலாம்.



**சில கணக்குகள்.** ருஷ்ய யுத்தம் ஆரம்பிக்கு முன் ஜெர்மனியும், ஜெர்மனிக்கு வசமான நாடுகளும் சேர்ந்து வருஷம் ஒன்றுக்கு 1,25,00,000 டன் எண்ணெயும், அதற்குப் பதிலான சாமானும் உபயோகித்து வந்தன.

ருஷ்ய யுத்தத்தால், இதற்கு உபரியாக மாதம் ஒன்றுக்கு 4,00,000 டன் வீதம் ஆவதாகச் சொல்லப்படுகிறது. ஜூன் 20-ம் தேதிக்குப் பிறகு இதுவரை 25 லக்ஷம் டன் வரை உபயோகிக்க வேண்டியிருக்கிறது.

மேலும் ஜெர்மனிக்குச் சொந்தமாக 50,00,00 டன் வரையில் தான் இருந்தது. 60,00,000 டன்னுக்கு மேல் இருந்திருக்க முடியாது. இதில் பாதி செலவழிந்திருக்கும்.

மீதியிருப்பதில் போக்குவரவுக்காகவும், ஐரோப்பா பூராவுக்குமுள்ள டெப்போக்களிலும் எண்ணெய் இருக்குமாதலால் உபரித் தேவைகளுக்கு ஜெர்மனி வசம் மிகவும் கொஞ்சமாகத்தானிருக்கும்.

காகஸஸ்ஸிலுள்ள ருஷ்யச் சாமான்களையும், போக்குவரவையும் கெடுத்து விடுவதாக ஜெர்மனி பிரசித்தப்படுத்தியதிலிருந்து எண்ணெயை அடைய, பயன் படாத போனலும் ஜெர்மானியர் முன்னேறுவதாகத் தெரிகிறது. ஆனல் எண்ணெய் கிடைக்காது.

வி வி வி வி வி

**உள்ளூர் வர்த்தமானம்.** 1. எதிர் பார்த்ததிற்கு மேலாகவே "வி" டயரிகள் விற்பனையாகின்றன. இதுவரை மூன்று தடவை அச்சிடப்பட்டன. இவ்வாரத்தில் பெஷாவர், பம்பாய், ஹைதராபாத், காபூல், தூத்துக்குடி முதலிய தூர தேசங்களிலிருந்து ஆர்டர்கள் வந்திருக்கின்றன.

2. இதைப்பற்றி ஈ-தர்பார் அவர்கள் அட்மின்ஸ்டிரேஷன் ரிபோர்ட்டிலும், காலேஜ் பத்திரிகையில் அதன் பத்திராதிபரும் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். இந்நிலையம் இவர்களுக்கு வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

---

## மேற்குப் பக்கத்திலிருந்து படையெடுக்கும் பிரச்னை.

## இந்திய ரேடியோவில் சம்பாஷணைமுறையில் பிரான்ஸிஸ் வாட்ஸன் பேசியது.

ரேடியோக்காரன்.—ஜெர்மனி கிழக்குப் பக்கத்தில் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் பொழுது மேற்குப் பக்கத்திலிருந்து ஜெர்மனிபேரில் படையெடுக்கும் யோசனை எப்படியிருக்கும் என்று நினைக்கிறாய்.

பி. வா.—அது வெகு திறமையான யோசனைதான்.

அசரீரி.—நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனல் சிலர் அது முடியாத காரியம் என்று எண்ணுகிறார்கள்.

பி. வா.—அது வேறுவிஷயம். நாம் இதை மெதுவாகவும், தெளிவாகவும் ஆராய்ந்து பார்ப்போம். இந்த யோசனையை திறமையானது என்றுதான் சொன்னேன்; முற்றிலும் சரியென்று சொல்லவில்லை. சற்று நிதானித்துப் பார். நான் என்னசொல்லுகிறேன் என்பது தெரியும். உதாரணமாக தேதிப் படத்தைப் பார்.

அசரீரி.—நவம்பர் மாதம் 14-ம் தேதி.

பி. வா.—ஆமாம், நவம்பர் மாதம் 14-ம் தேதி, 1941-ம் வருஷம். 1940-ம் வருஷம் நவம்பர் 14-ம் தேதியில் ஜெர்மன் பாம்பர் விமானங்கள்அடங்கிய பெரிய படைஒன்று கவெண்டிரியைத் தாக்கியது. ஒருவருஷத்திற்குமுன் இங்கிலாந்திலுள்ள அந்த நகரத்தை அவர்கள் என்னபாடுபடுத்தினார்கள் என்று உனக்கே தெரியும். ஆனால், அவர்கள் சொன்னதைக்காட்டிலும், செய்தது குறைவுதான். ஆனால், அவர்கள் கொஞ்சம் செய்ததை நினைத்தாலேயே துயரம் ஏற்படக்கூடியதாகயிருக்கிறது.

அசரீரி.—ஆமாம், உலகத்தார் எல்லோரும் கவெண்டிரியைப்பற்றி கேட்டிருக்கிறார்கள். ஆனால், எதற்காக நீ அதைச்சொல்லுகிறாய்.

பி. வா.—நல்லது சென்றவருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் என்ன நடந்தது என்று பார்ப்போம். பிரான்ஸ், சண்டையில் தோல்வியடைந்தது. இதாலியோ ஜெர்மன் திறப்பில் சேர்ந்துவிட்டது. பிரிடன் மோசமான நிலைமையில் இருப்பதை ஜப்பான் கவனித்துக்கொண்டிருந்தது. அமெரிக்கா ஆவலும், அனுதாபமும் காட்டினதே தவிர, வேறொரு உதவியும்செய்ய முன்வரவில்லை. இங்கிலாந்தின்பேரில் படையெடுக்கச் சேகரித்த ஜெர்மன்படைகள் இங்கிலீஷ் கால்வாய் தளங்களில் யுத்தத்தை நடத்த தயங்கிக்கொண்டிருந்தன. ஜெர்மன் விமானப்படை பிரிடிஷ் நகரங்களிலும், துறைமுகங்களிலும், வெடிகுண்டுகளை வருஷித்துவந்தன. பிரிடிஷ் சைனியம் ஆயுதங்களையும், முஸ்தீப்புகளையும் விட்டுவிட்டு டங்கர்க்கிலிருந்து சமாளித்துக்கொண்டு பிரிடனுக்கு வந்துசேர்ந்தது. கப்பற்படையோ செய்யவேண்டிய வேலைகள் மிகவும் அதிகம். ஆபிரிக்காவில் கிரேஸியானி, எகிப்தையும் முஸோலினியின் சாம்ராஜ்யத்தில் சேர்க்க எல்லா ஏற்பாட்டையும் செய்துவிட்டான். அதனால்தான் இந்த ஒரு வருஷம் கிரமித்தாவது ஜெர்மனியின்பேரில் படையெடுக்கும்படிக்கும், அந்த ஊரிலேயே போய் அவர்களை அழிக்கும்படிக்கும் பிரிடனை ஜனங்கள் கேட்டுவருகிறார்கள். இது ஒரு பெரிய காரியமல்லவா?

அசரீரி.—ஆம் அது................................சம்பவிக்குமானால் மிகவும் அற்புதமாகத்தான் இருக்கும். ஒரு வருஷத்திற்கு முந்தி நான் அதைரியம் அடைந்திருந்தேன். இப்பொழுது அநேகர்கள் பிரிடன் தோற்காதென்றும், தோற்கடிக்கப்படமாட்டாதென்றும் நம்புகிறார்கள். ஆனால் அதுமாத்திரம் போதாது. மேற்குப்பக்கம் படையெடுத்தால் வெகு நன்மையாக இருக்கும் என்று சொல்லுகிறேன். ஆனால், இப்பொழுது ருஷ்யர்கள் யுத்தம் புரிகிறது எப்படியிருக்கிறது. பிரிடிஷார் ஜெர்மனிபேரில் சண்டையைத் துவக்குவதைவிட ருஷ்யர்கள் சண்டையிடுவதுதான் வெகு அற்புதமாயிருக்கிறது.

பி. வா.—இந்நாட்களில் ஒரு விஷயத்தைச் சொல்லுகிறதாயிருந்தால் அதிகமான வார்த்தைகளையே உச்சரிக்கிறோம். மற்றொரு சமயத்தில் சர்ச்சில் சொன்ன வாக்கியத்தையே இங்குசொல்லுவோம். இப்பொழுதுதான் அவர்களுக்கு வெகு நல்ல சமயம்.

அசரீரி.—அவர்களுக்கும் உதவி செய்யவேண்டியதுதான். எல்லா ஜனங்களுக்கும் அவ்வித உணர்ச்சியே உண்டாகிறது. அழகான வார்த்தைகளைப்பேசினால் மட்டில் அவர்களைக் காப்பாற்ற முடியாது.

பி. வா.—அவர்களுக்கும் உதவிசெய்யப்படவில்லைபோல் எதைக்கொண்டு சொல்லுகிறாய்?

அசரீரி.—ஓஹோ! டாங்கிகள் வகையரா ருஷ்யர்களுக்குக் கிடைத்துவருகிறது எனக்குத் தெரியும். ஆனால், அவைகள் அவர்களுக்குப் போய்ச்சேருகிறது, மிகவும் சிக்கலான விஷயமாயிற்றே! இந்த யுத்தத்தில் ருஷ்யா வெற்றிபெற டாங்கிகளும் ஸப்ளைகளும் அவ்வளவு துரிதமாகவா ருஷ்யாவிற்குப் போய்ச்சேருகின்றன?



பி. வா.—அவர்கள் ஜெர்மனியை எதிர்த்துச்செல்ல முயற்சித்தால் எவ்வளவு சீக்கிரத்தில் டாங்கிகள் அவர்களுக்குப்பின் செல்லக்கூடுமோ அவ்வளவு துரிதத்தில் டாங்கிகள் ருஷ்யாவிற்கு வந்துசேருகின்றன.

அசரீரி.—ஆம் அதுவும் உண்மைதான்............................ஆனால், ருஷ்யாவை ஜெர்மானியர்கள் கடுமையாகத் தாக்குவதைத் தவிர்க்க எதிரிகளை மற்றொரு பக்கத்திலிருந்து தாக்கி அவர்களுடைய பலத்தைப் பிரித்து வேறொரு பக்கத்தில் கவனத்தைச் செலுத்தும்படி செய்தாலேயே, ருஷ்யாவிற்கு உதவி செய்தமாதிரிதான் என்று நான் கருதுகிறேன்.

பி. வா.—இப்பொழுது வேறொரு பக்கத்திலிருந்து எதிரிகளை பிரிடிஷ் விமானப் படைகள் தாக்கிவருகின்றன.

அசரீரி.—பிரிடிஷ் விமானப்படை எதிரிகளைத் தாக்கிவருவதில் எதிரிகளின் எதிர்ப்பில் மாறுதல் அடைந்ததாக ஒன்றும் தெரியவில்லையே!

பி. வா.—உனக்கு மட்டில்தான் அவ்வித மாறுதல் தெரியவில்லை. ஏனென்றால் நீ டெல்ஹியில் ரொம்ப சௌகரியமாக அக்கம் பக்கம் நடக்கிறதைக்கூட கவனியாமல் இருக்கிறாய். நீ மட்டில் ஜெர்மனியிலிருந்தால் அல்லது மேற்கு ஐரோப்பாவில் ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசத்தில் எதிரியின் நிர்பந்தத்தின் பேரில் வேலைசெய்துகொண்டிருந்தால் நான் சொன்னதை நீ ஒப்புக்கொண்டுதான் இருப்பாய். மேலும் ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவிலும் பதினாயிரம் டன் நிறையுள்ள வெடிகுண்டுகள் இந்த மூன்று மாதங்களுக்குள் விழுந்திருக்கின்றனவென்று நீ தெரிந்துகொண்டிருப்பாய். இந்த விஷயத்தை கோயபல்ஸும் அறிந்திருக்கிறான். அந்த விஷயம் பிரபலமாய் எல்லோருக்கும் தெரிந்தபடியால், கடைசியாக அவன் அதை ஒப்புக்கொண்டுவிட்டான்.

அசரீரி.—இந்த விஷயம் ருஷ்யர்களுக்குத் தெரியுமா?

பி. வா.—பிரிடிஷ் விமானப்படை எதிரிகள் ஊரில் வெடிகுண்டு போடுவதை நிறுத்திவிட்டால், எதிரிகள் முழு பலத்துடன் ருஷ்யர்களைத் தாக்க ஆரம்பித்துவிடுவார்கள். தாக்குதல்கள் கடுமையானதும், ருஷ்யர்கள் இதுவரை பிரிடன் தங்களுக்கு உதவி செய்துவந்ததை இப்பொழுதுதான் நிறுத்திவிட்டது என்று தெரிந்துகொள்ளுவார்கள். எதிரிக்குச் சொந்தமான அரை வரிசை விமானங்களை பிரிடிஷ் விமானப்படை ருஷ்யாவிற்கு வெகு தூலையில் மேற்கு பாகத்தில் தாக்கிற்று. இவ்விஷயம் வெகு ரகசியமாக வைத்துக்கொள்ளப்பட்டு, சமீபத்தில் சில வாரங்களுக்கு முன் ருஷ்யாவில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அசரீரி.—எதிரியின் நிலைமை இப்பொழுது கெட்டுவருகிறதே! இன்னும் இதைவிட விபரீதங்கள் ஏற்படுமோ? நீங்கள் சொல்லுகிறபடி பிரிடிஷ் விமானப்படை எதிரிகளைத் தாக்குவது மட்டில் போராது. ஜெர்மனியை பிரிடிஷ், நேசதேசத் தரைப்படைகள் தாக்கினால் ருஷ்யாவில் இருக்கும் எதிரித் துருப்புகள் பூராவோ அல்லது ஒரு பகுதியோ திரும்ப ஜெர்மனிக்கு பின்வாங்க வேண்டிவரும். அவ்வித நிலைமை ஏற்படவேண்டுமென்றுதான் சில நாட்களுக்கு முன் ஸ்டாலின் ருஷ்யர்கள் முன்னிலையில் பேசியிருக்கிறார். அவ்வித படையெடுப்பு வரவேண்டுமென்றுதான் நாம் எதிர்பார்க்கிறோம்.

பி. வா.—நமக்கு எல்லோருக்கும் அது நல்லதாகத்தான் தோன்றுகிறது. இப்பொழுது அப்படி நேர்ந்தால் ஹிட்லர் அதை லக்ஷியம் செய்யமாட்டார் என்று எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் அதைப்பற்றி பின்பு சொல்லுகிறேன். கடைசி வரையில், பிரிடிஷார் ருஷ்யர்களுக்கு உதவி

செய்வார்களென்றும், அமெரிக்கர்களும் அவர்கள் நோக்கப்படி உதவிகள் செய்வார்களென்றும், ஸ்டாலின் தன் மக்களுக்கு எடுத்துக்காட்டினது வாஸ்தவம்தான். எதிரியைத் திருப்ப மற்றொரு போர்முனை ஏற்படுத்தினால்,—சாதாரணமாக...தவறு என்றுகூட சொல்லலாம்—அங்கு என்ன நேரிடும் என்பதை ஸ்டாலின் விஸ்தரித்தார். மற்றொரு போர்முனை ஏற்படுத்த வேண்டியது எப்பொழுது என்றாவது எங்கே என்றாவது அவர் சொல்லவில்லை. ஹிட்லருடைய பலமான கோட்டைக்குக் காபந்தாக அநேக பலமான கதவுகள் இருக்கலாம். ஒரு நாள் ஏதாவது ஒன்று உடைக்கப்பட்டு உள்ளேபோக வழியேற்படும். ஸ்டாலினையாவது, சர்ச்சிலையாவது மற்றொரு போர்முனை எப்பொழுது ஏற்படுத்துவது, எந்த இடத்தில் ஏற்படுத்துவது என்ற விஷயங்களை முன்னமையே தெரிவித்து விடுவார் என்று நீ எதிர்பார்த்தாயா?

அசரீரி.—இல்லை. எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால் ஸ்டாலின் சொன்னதிலிருந்து பிரிடிஷார் இங்கிலீஷ் கால்வாயைத்தாண்டி, ஜெர்மன் பிரதேசத்தில் போய்த் தாக்குவார்கள் என்பதை ஸ்டாலின் விரும்பியதாக நான் நினைத்தேன்.

பி. வா.—அதை அவர் எண்ணியிருக்கலாம்; எண்ணாமலும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் அவர் சொன்னதை ஜெர்மனியில் மிகவும் கூர்மையாக கவனித்துக் கேட்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனெனில் கொஞ்ச காலத்திற்கு முன்னமேயே ஹிட்லர் ருஷ்யாவில் தான் போய் இருக்க வேண்டுமென்று எண்ணியிருந்த இடத்திலிருந்து ஸ்டாலின் பேசினார். ஆனால் ஸ்டாலின் சொன்ன வேறு விஷயங்களை உனக்கு நான் ஞாபகமூட்டுகிறேன். மாஸ்கோ மகா நாட்டில் ருஷ்யத் தலைவர் பேசுவதைக் கேட்க ஆவல்கொண்டு அநேக பிரக்யாதி பெற்றவர்கள் வெகுதூரம் பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், வெகு துரிதமாகச் சென்றார்கள். அவர்களிடம் ஸ்டாலின் ருஷ்யாவிற்கு என்ன தேவை என்றும், எப்படி அதற்கு நல்ல உதவி கொடுக்கக்கூடுமென்றும் தெரிவித்தார். அவர்களுக்குத் தெளிவாகவும், விஸ்தாரமாகவும் எந்த வகையில், எவ்வளவு உதவி வேண்டுமென்பதையும் சொன்னார். அவர் கேட்ட பொருள்களோ சொல்பமல்ல. அதற்கு பதில் ருஷ்யாவின் தேவைகளை அமெரிக்காவும், பிரிடனும் கொடுத்து உதவக்கூடும், என்று சொல்லப்பட்டது. அதே மாதிரியாகவே பெருத்த முயற்சியுடன் யுத்த தளவாடங்கள், உணவுப் பொருள்களை ருஷ்யாவிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஆனால் சைனியங்களை எதிரிகளுடன் சண்டைசெய்ய அபாயகரமான இடங்களுக்கு அனுப்பவதென்றால் மிகவும் சிரமம் ஏற்படும். சேதமும் அதிகமாக ஏற்படும். ருஷ்யர்கள் விரும்புவதைப்போல் சாமான்களை அனுப்புவதென்றால் அதிலும் பிரயாசை, பரித்தியாகம், அபாயம் நேரிடக்கூடும். பலவாறான இடையூறுகளைச் சமாளித்துக்கொண்டு ருஷ்யாவிற்குச் சாமான்களைக் கொண்டுபோய் சேர்ப்பதற்குள் கடுமையான போரில் ஏற்படக்கூடிய சிரமம் இதிலும் ஏற்பட்டுவிடும்.

அசரீரி.—நல்லது. நீர் சொல்லுவது ஒரு புதிய வழிதான். ஆனால் ருஷ்யாவை, மெதுவாகப் பலப்படுத்துவதைக் காட்டிலும், சீக்கிரத்தில் ஜெர்மனியின் பலத்தைக் குறைத்துவைப்பதுதான் பயன்தரக்கூடியது.

பி. வா.—ஆமாம், அவ்விதம் ஜெர்மனியின் பலத்தைக் குறைக்க நீயே ஒரு வழி சொல்லுவாய்.

அசரீரி.—மறுபக்கத்திலிருந்து ஜெர்மனியைத் தாக்குவதைத்தான் குறிக்கிறேன். அப்பொழுது ஒரே சமயத்தில் இரண்டு போர்முனைகளில் ஜெர்மன் படைகள் சண்டையிடும்படி ஒரு சந்தர்ப்பம் வாய்க்கும். பிறகு ஒரே போர்முனையில்



அவர்கள் ஒன்று சேர்ந்து பலமாய் இருப்பதைக் காட்டிலும், இரண்டு போர்முனைகளிலும் அவர்கள் பிரிந்து நிற்பதால் பலஹீனமாகத்தான் இருப்பார்கள். இதுதான் என்னுடைய நோக்கம். இது ஒன்றும் பிரமாதமில்லையே. சாதாரணக் கணக்கு மாதிரிதானே இருக்கிறது.

பி. வா.—நல்லது. நாம் கணக்குப் போட்டுப் பார்ப்போம். முதன் முதலாக வட ஆபிரிக்காவிலுள்ள துருப்புகளை மேற்கு ஐரோப்பாவுக்குக் கொண்டு போக நேரிட்டால் மத்தியக்கிழக்கிலும், இந்தியாவிலும், எதிரி பிரவேசிக்க இடமுண்டாகிவிடும். அம்மாதிரி நிலைமை ஏற்படுவதற்கு நீ விரும்ப மாட்டாய் என்று நான் நம்புகிறேன்.

அசரீரி.—நான் அதைச் செய்யச் சொல்லவில்லை. ஆனால் இங்கிலாந்திலுள்ள துருப்புகளுக்கு என்னவேலை? அவர்கள் ஜயிக்க முடியாமல் இருப்பதாகவும், ஆயுத முஸ்தீப்புடன் இருப்பதாகவும் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். அவர்கள் தேகப்பயிற்சி, தற்காப்புக்கு வேண்டிய அப்பியாசங்கள் இவைகளை பழகிக்கொள்ளும்பொழுது பிடிக்கப்பட்ட போட்டோ படங்களையும் பார்த்திருக்கிறோம். இப்பொழுது அவர்கள் நேரில்போய் சண்டையிடுவதற்கு நல்ல சந்தர்ப்பம் என்று நான் நினைக்கிறேன்.

பி. வா.—நல்லது. எனக்கு அவகாசம் இருந்தால் இந்த சமயத்தில் அவர்கள் பிரிடனில்தான் இருக்கவேண்டுமென்று உனக்கு நம்பிக்கை வரும்படி நான் சொல்லக்கூடும். ஆனால் அதைக் குறித்து பேசாமல் விட்டுவிடுவோம். கக்ஷி ரீதியாக அச்சுநாடுகளின் எதிரிப் படைகளுக்கு மத்திய தேசமாக இருக்கும் பிரிடனைப் பாதுகாத்துவரும் முன்னணித் துருப்புகளை வெளியூருக்குக் கொண்டுபோகப்படுவதாக வைத்துக்கொள்ளுவோம். ஐரோப்பா கண்டத்திற்கு அவர்களை அனுப்புவதனால் இங்கிலாந்துக்கு ஏற்படும் அபாயத்தையும் தள்ளிவிடுவோம். அங்குள்ள ராணுவ பலம் எவ்வளவு என்று நமக்குத் தெரியாது. ஆனால் அதன் பூரா விவரம் தெரிந்த படைத் தலைவர் ஸ்டீபன் கிங் ஹால் (Stephen King Hall) என்பவர் சொன்னதிலிருந்து 15 படைப் பகுதிகள்தான் பிரிடனிலிருந்து அனுப்பக்கூடும் என்று தெரிகிறது. அந்தப்படைகளும் மிகவும் ஸ்வல்பம்தான்.

அசரீரி.—ரொம்ப நல்லது. இன்னும் மேலே சொல்லுங்கள்.

பி. வா.—ருஷ்யாவிலிருந்து ஜெர்மன் துருப்புகளை வரவழைத்துவிடவேண்டியது என்பதுதானே உன் நோக்கம்? ருஷ்யப் போரில் ஈடுபட்டிருக்கும் ஏராளமான ஜெர்மானியர்களின் தொகை எவ்வளவு என்று உனக்குத் தெரியுமா? அதிலிருந்து எவ்வளவு பேரைத்தான் வேறு பக்கம் கவனத்தைச் செலுத்தும்படி செய்யக்கூடும் என்று நீ நினைக்கிறாய்?

அசரீரி.—ஓஹோ. அந்தக் கணக்கை என்னால் போடமுடியாது.

பி. வா.—போனால் போகிறது. நீ கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை ஆதரித்தே ஒரு பிரிடிஷ் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. கிழக்குப் போர்முனையில் ஈடுபட்டிருக்கும் படைகளில் 30 ஜெர்மன் பகுதிகளைத் திருப்பிவிட்டால் அங்குள்ள எதிரியின் பலம் குறையும். அடுத்தபடியாக நாம் ஒரு விஷயத்தை கவனியாமல் இருந்துவிட்டோம். மேற்கு ஐரோப்பாவில் நீ சொல்லும் விதமாக படையெடுப்பு ஏற்பட்டால், அதை எதிர்பார்த்து அதைத் தடுக்க ஜெர்மனி எவ்வளவு துருப்புகளை அங்கு நிறுத்தி வைத்திருக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாய்? இதைப்பற்றி சிந்திக்க ஹிட்லருக்கு ஏராளமாக அவகாசம் ஏற்பட்டிருந்தது. டிஸம்பர் மாத ஆரம்பத்திலிருந்தே பிரிடனைத் தாக்க உத்தரவு கொடுப்பதைவிட ஜெர்மனியைப் பாதுகாப்பதைக் குறித்து வெளிப்படையாக ஹிட்லர் பேச ஆரம்பித்துவிட்டான்.

அசரீரி.—ஜெர்மன் துருப்புகள் எவ்வளவு அங்கு வைக்கப்பட்டிருக்கிறது?

பி. வா.—ஜெர்மன் ராணுவ இலாகா போட்டிருக்கும் எல்லா திட்டங்களையும், நான் உனக்குச் சொல்லமுடியாது. நமக்குக் கிடைக்கக்கூடிய ருஜுவிலிருந்து அங்கு உள்ள படைப் பகுதிகள் 20 முதல் 25 வரை இருக்கலாம். கணக்கு ரீதியாக ருஷ்யப் போர்முனையிலிருந்து 30 படைப் பகுதிகள் இங்கு வந்தால், அப்பொழுது எதிரிகளின் பலம் 55 படைப் பகுதிகளாகிவிடும். இவற்றில் உள்ளவர்கள் பூராவும் நன்றாய் தயாரிக்கப்பட்ட, பயிற்சிபெற்ற வீரர்கள் தங்கள் சொந்த ஊரிலிருந்துகொண்டு படையெடுத்துவரும் 15 பகுதிகள் அடங்கிய பிரிடிஷ் துருப்புகளை எதிர்க்க நேரிட்டால் என்னவாகும் என்று நீயே தெரிந்துகொள். மேலும் இதற்குள் பல தடவைகளில் பிரிடிஷ் துருப்புகள் எதிரிகளைத் தாக்கியிருக்கின்றன. மறுபடியும் அவ்விதம் சந்தர்ப்பம் நேரிட்டால் பிரிடிஷ் மறுபடியும் எதிர்ப்பார்கள். ஆனால் அவர்களை நேராக ஜெர்மனியை படையெடுத்துவரும்படி சொல்லுவது பெரிய இடைஞ்சலைக் குறிக்காதா? நான் ஏற்கனவே சொன்ன பிரகாரம் அது பெரிய யோசனை தான். ஆனால் அவ்விதம் செய்வது சரிதானா என்றுதான் கேட்கிறேன்.

அசரீரி.—சரிதான். என் யோசனை ஆதாரமற்றவையாகவும், பயமாகவும்தான் தோன்றுகிறது.

பி. வா.—பயமா? நாம் இன்னும் யுத்தம் ஆரம்பிக்கவேயில்லை. கப்பற்படையின் உதவியைக்கொண்டு முஸ்தீப்புடன்கூடிய துருப்புகளை எதிரியின் பிரதேசத்தில் இறக்குவதற்கு நாம் இன்னும் ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. அங்கு நம் துருப்புகள் போய்ச் சேர்ந்துவிட்டால் ஓயாமல் குண்டுகள்விழும் என்பது நிச்சயம். மேலும், இப்பொழுது பிரிடனுக்கு ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படை வரவில்லை என்று நாம் எண்ணினாலும், அது இன்னும் பூராவாக அழிந்துவிடவில்லை என்று நாம் சொல்லவேண்டும். முக்கியமாக ஒரு விஷயம். இப்பொழுது ஜெர்மனியைத் தாக்கும்படி பிரிடனைத் தூண்டுகிறவர்கள்தான் ஏற்கனவேயே கிரீஸிலும், கிரீட்டிலும் பிரிடிஷார் செய்தது முட்டாள்தனம் என்று கண்டனம் செய்தவர்கள். அதனால்தான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியிருக்கிறது.

அசரீரி.—ஒரு நிமிஷம். எனக்கு வேறொரு விஷயம் தோன்றுகிறது. பிரிடிஷ் படைகள் எதிரிகளின் தேசம் போய் சேருவதைச் சொன்னாய். ஆனால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் உள்ளவர்கள் பிரிடனுக்கு எதிரிகளாகக் காணப்படவில்லையே! மேலும் அவர்களில் 100க்கு 90 பேர் பிரிடிஷார் வெற்றியடையவேண்டுமென்றே பலவழிகளிலும் வேலைசெய்து வருகிறதாகச் சொல்லப்படுகிறதே! அதனால் அந்த ஜனங்கள் எல்லாம், பிரிடிஷ் துருப்புகள் அங்கு இறங்கியவுடன் வெளிப்படையாகவே சிநேகிதர்களாக வந்து சேர்ந்துவிடுவார்கள். பிறகு ஜெர்மானியர்கள் தாங்கள் எதிரி தேசத்தில் இருந்துகொண்டு சண்டையிட நேரிடும் என்று நான் நினைக்கிறேன்.

பி. வா.—சிறிது நேரத்திற்கு முன் நல்ல முஸ்தீப்புடன் கூடிய பிரிடிஷ் படைகள் ஜெர்மனியை எதிர்ப்பது தான் நல்ல யோசனை என்று, சொன்னாய். இப்பொழுது ஐரோப்பிய நாடுகளிலுள்ளவர்களிடம் இருந்த ஆயுதங்களை எதிரி கைவசப்படுத்திக் கொண்டுவிட்டான் அவர்களுக்கு யுத்தப்பயிற்சியும் கொடுக்கப்படுவதில்லை. இந்நிலைமையில் அவர்கள் எவ்விதம் எதிரிகளை எதிர்க்கமுடியும்? மேலும் அந்நாடுகளிலுள்ள படைகள்யாவும் ஜெர்மனியை எதிர்த்து யுத்தம் செய்ய முடியாத நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். எதிரிகளின் தந்திரத்தினால் அவர்களின் பலம் குறைக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி கலப்பையைக் கொண்ட குடியானவனும், கோடாலியை வைத்திருக்கும் தொழிலாளியும், அல்லது குடையை வைத்திருக்கும் குமாஸ்தாவுமா



ஜெர்மன் யந்திரப்படையை எதிர்த்து நிற்கக்கூடும்? சரி ஹிட்லர் என்று நீ நினைத்துக்கொள். அதில் குற்றமாக நான் ஒன்றும் சொல்லவில்லை. 20 ஜெர்மன் படைப்பகுதிகள் அந்த தேசங்களில் உன் ஆதிக்கத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அச்சைனியங்களைச் சுற்றி ஜெர்மன் ரகசிய போலீஸாரும் போர்வீரர்களைப்பற்றி குறிப்புகளடங்கிய சீட்டுகளுடனும், கைத்துப்பாக்கிகளுடனும் அங்கு வேலை செய்து வரும்பொழுது, பிரிடிஷ்படைகள் அங்கு இறங்குவதைப் பார்த்திருந்த போலீஸ் உடனே சைகை செய்ய மாட்டார்களா? அப்பொழுது உன்னுடைய துருப்புகள் உஜாராகிவிடும் அல்லவா? நீ அப்பொழுது என்ன செய்வாய்? எதிர்த்து வரும் படைகளுக்கு விருந்தளிப்பாயா அல்லது அவர்களைச் சுட்டு வீழ்த்துவாயா என்பதை நீயே கூறு.

அசரீரி.—சரி. நீ இப்பொழுது என்னைத் திக்குமுக்காடச் செய்கிறாய்.

பி. வா.—ஆனால் எதிரி ஆக்கிரமித்த நாடுகளில் மிகவும் தைரியமானவர்கள் ஒன்று சேர்ந்து அடுத்துக் கெடுக்கும் உபாயத்தைக் கொண்டு ஜெர்மன் யந்திரத்தையும் ஓடவிடாமல் பலவாறான இடையூறுகளை விளைவித்தால் எதிரிக்கு ஒரு சமயம் திகைப்பு உண்டாகலாம். அதனால் பிரிடிஷ் படையெடுப்பு பலத்தை இரண்டு மடங்கு அதிகரிக்கவும் செய்யலாம். ஆக்கிரமிக்கப்பட்ட எல்லா ஐரோப்பிய நாடுகளில் அடுத்துக் கெடுக்கும் உபாயம் இப்பொழுது கையாளப்பட்டுதான் வருகிறது. அதன் பயனாக எங்கு சென்றாலும் ஹிட்லருக்கு நஷ்டம் நேர்ந்துவருகிறது. ஜெர்மனிக்கு வெளியேயுள்ளவர்கள் அவனை விரும்பவில்லை என்பது வாஸ்தவம்தான். ஜெர்மனியிலேயே சிலர் அவன் பேரில் பிரியம் காட்டவில்லை. இவ்விதமான அறிகுறிகள் அதிகரித்து வருகிறது. இவைகளைக் கொண்டு ஜெர்மனியின் அழிவை முடிவுகட்டலாம். இப்பொழுதும்கூட ஜெர்மனியின் யுத்த வேகம் குறைந்துகொண்டே வருகிறது. அதன் பலம் பலவழிகளிலும் சிதறி விட்டது. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஜெர்மனிக்கு எதிரிடையாக வேலைசெய்து, அந்நாட்டிற்கு பெரிய ராணுவத் தோல்வி ஏற்படுத்தும்பொழுதுதான் பூரா ஜெர்மனியும் அழிந்துவிட நேரிடும்.

அசரீரி.—பிறகு இவ்விதம் ஏற்பட கொஞ்ச காலம் செல்லும்போல் இருக்கிறதே?

பி. வா.—ஆம். காலத்தைப் பொருத்தது மாத்திரமல்ல. நாம் அந்த அவகாசத்தை எவ்விதம் பயன்படுத்திக்கொள்ளுகிறோம் என்பதையும் குறித்திருக்கிறது. அந்தக் காலத்திற்காக நாம் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அந்தக் காலம் அதிசீக்கிரம் வருவதற்கு நாம் மும்மரமாக வேலை செய்ய வேண்டும். நம்முடைய சிறு சம்பாஷணையை முடித்து அவரவர் வேலைக்குப் போவதற்குமுன், இதுவரை முக்கியமான விஷயங்களைப்பற்றி அருமையான குறிப்புகளை வெளியிட்டிருக்கும் என் நண்பன் A. P. ஹெர்பர்ட் சொன்ன ஒரு சிறு குறிப்பை மட்டில் இங்கு சொல்லுகிறேன். பிரிடிஷ் மந்திரி ஒருவர் பிரான்ஸின் பேரில் படையெடுக்க நான் விரும்பவில்லை என்று சொன்னதற்கு, ஏன் ஜனங்கள் அவர் பேரில் கோபம் கொள்ளவேண்டுமென்பது தான் தனக்குப் புரியவில்லை என்றார். வருஷக் கணக்காக ஹிட்லரும் பிரான்ஸை தான் படையெடுக்கப் போவதில்லை என்றுதான் சொல்லிவந்தார்.

ஆகையால் மேலே சொல்லியவிதமாக ஹிட்லருக்கு எப்பொழுது, எங்கே, நாம் தாக்கப் போகிறோம் என்று ஏன் சொல்லவேண்டும்? திடீரென்று அவன் செய்ததைப்போல் எப்பொழுது வேணுமானாலும் செய்யலாம்.

# பாம்பர் விமானப்படையின் விருத்தாந்தம்.

[ஐந்தாம் பகுதி.]

## கோட்டை விமானங்கள் செய்த வேலை.

## யுத்த ஆரம்ப காலங்களில் துண்டுக் கடுதாசிகளைப் போட்ட பொழுது பெற்ற அனுபவம்.

## ப்ரெஸ்ட் துறைமுகத்திலிருந்த எதிரி யுத்தக் கப்பல்கள் தாக்கப்பட்டன.

பாம்பர் விமானங்களில் கோட்டை விமானங்கள் என்பது ஒருவகை. இவை அதிக உயரத்தில் வெகு வேகமாகப் பறந்து அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும். இவைகள் பறக்கும் இடத்திற்கு அருகிலேயே எதிரி பைடர் விமானங்கள் சஞ்சரித்தாலும் இவைகளை மறுகித் தாக்கமுடியாது.

இந்தக் கோட்டை விமானங்களைக் கொண்டு புதிய தந்திரங்களையெல்லாம் கையாள முடியும். இவைகளில் ஸ்பெர்ரி பாம்ஸைட் (Sperry Bomb-sight) என்று ஒரு கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு நுட்பமாக லக்ஷியங்களைக் கண்டுபிடித்துவிடலாம். இது மிகவும் சிருங்கலையான கருவியானதால் இதை உபயோகிக்க விசேஷ பயிற்சி பெறவேண்டும்.

இவ்விமானங்களிலுள்ள யந்திரங்கள் அதிக சக்தியுள்ளவையாதலால் அதிக உயரத்தில் பறக்கமுடியும். அந்த உயரத்தில் சாதாரணமாக பிராண வாயுவில்லாமல், மனிதன் ஆறு நிமிஷங்களில் மயக்கமாகி, முப்பது நிமிஷங்களில் இறந்துவிடுவான். இதில் அமைக்கப்பட்டுள்ள யந்திர சக்தியால் பல ஆயிரம் அடிகள் உயரப் பறந்தாலும் கெடுதி ஏற்படுவதில்லை. இதுவரை விமானங்கள் அந்த உயரம் பறந்ததே கிடையாது.

இந்த உயரத்தில் பனி அதிகமானதாலும், சீதோஷ்ண நிலை-30 டிகிரியானதாலும் விமானத்தின் ஜன்னல்களில் மூடுபனி படிந்துவிடும். புதிதான அமெரிக்க தந்திரங்களால் இம்மாதிரி இவ்விமானங்களுக்கு ஏற்படாமல் செய்யப்பட்டிருக்கிறது.

கோட்டை விமானத்தில் 2 விமான ஓட்டிகளும், ஒரு மாலுமியும், ஒரு கம்பி இல்லாத் தந்தியை கவனிப்பவன் ஒருவனும், பீரங்கிக்காரன் ஒருவனும், இரண்டு விமான பீரங்கிக்காரர்களும் ஆக ஏழுபேர்கள் உண்டு. மின்சார சக்தியால் சூடான ஆடைகளை இவர்கள் அணிந்துகொள்ளுவார்கள். உயரம் அதிகமாகப் போகப்போக இவைகளை அணிவார்கள். இவர்கள் வசத்தில் தனிப் போத்தல்களில் பிராண வாயு அடைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மனிதனுடைய சரீரத்திற்கும் மனதிற்கும் ஆகாயத்தில் இப்பாகங்களில் கெடுதியும் பயமும் ஏற்படுமாகையால் முன்னாடியாக விசேஷ பரீக்ஷைகள் செய்து அதில் தேர்ந்தவர்கள்தான் கோட்டை விமானங்களில் சஞ்சரிக்க அனுப்பப்படுவார்கள். அவர்களுடைய சரீரம் குளிரால் சிரமமடைந்து பேச்சு வார்த்தையில்லாமல் போய்விடும். அதனால் பீதி ஏற்பட்டு தப்ப முடியுமோ முடியாதோ என்ற எண்ணம் தோன்றும். இதற்காக சரீர திடமும் மனோவலிவும் இருக்கிறவர்கள்தான் லாயக்காக ஆவார்கள்.

யுத்தத்தின் ஆரம்ப காலங்களில் எதிரி நாடுகளில் துண்டுக் கடுதாசிகள் போட்டபொழுது செய்த விமானப்படையெடுப்பினால் அதிகமான அனுபவம் அடையப்பட்டது. அதாவது எந்த எந்த இடங்கள் விமானத் தாக்குதலுக்கு லக்ஷியங்களாக ஆகலாம் என்பதும், அங்குள்ள விமான நிலயங்களும், தொழிற்சாலை லக்ஷியங்களும், மின்சார நிலயங்களும், ரஸ்தாக்களும், இருப்புப்பாதைகளும் முன்னதாகவே கண்டுகொள்ளப்பட்டன. இது ஒரு முதலாவதான சாதகம்.



இரண்டாவதாக விமான சஞ்சாரிகளைப் பழக்குவதற்கு ஒரு பெரும் சாதகமாக இருந்தது. இரவு நேரங்களிலும், எல்லாவித சீதோஷ்ண நிலைகளிலும், ஆறு முதல் பனிரெண்டு மணி சாவகாசம் ஆகாயத்தில் சஞ்சரிக்கக்கூடிய அனுபவம் இவர்களால் அடையப்பட்டது. துண்டுக் கடுதாசிப் படையெடுப்புகளே அதிக அனுபவத்தையும் விடாமுயற்சியையும் உண்டுபண்ணின.

குண்டுகள் வீசும்பொழுது செய்யக்கூடிய விமானப்படையெடுப்புகளைக் காட்டிலும் துண்டுக் கடுதாசிகள் போடும் சமயத்தில் செய்யும் படையெடுப்புகள் அதிக தைரியமாக செய்யப்படவேண்டும். விட்லி விமானங்கள் இதற்கு மிக லாயக்கானவை. அவைகள் பல தீரமான செயல்கள் செய்திருக்கின்றன. ஒரு சமயம் ஒரு விட்லி விமானத்தில் பிராண வாயு அடைக்கப்பட்டிருக்கும் கருவி பழுதுபட்டு கொஞ்சம் கொஞ்சமாக பிராண வாயு வெளியே போய்க்கொண்டே இருந்தது. "அதனால் விமான மாலுமியும், கம்பியில்லாத் தந்தி ஆளும் சில நிமிஷங்களுக்கு ஒருதடவை விமானத்தினுள் மூர்ச்சையாக கிடக்க வேண்டிவந்தது. விமான அறையிலுள்ள உஷ்ணமும் குறைவாக இருந்ததால் இவர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கமுடியவில்லை. மாலுமியும் அதிகாரியும் தலையை முட்டிக்கொண்டு எப்படியாவது பனித் தொந்தரவு இல்லாமல் இருக்குமா என்று பார்க்க முயற்சித்தார்கள்".

இதுபோல் பலமான முயற்சிகள் எடுத்துக்கொண்டு பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் சென்று ப்ரெஸ்ட் துறைமுகத்திலிருந்த ஜெர்மன் யுத்தக் கப்பல்களான **ஷார்ன் ஹார்ஸ்ட், நீஸ்நௌ** தாக்கப்பட்டன. 1941 மார்ச்சு 30–31 முதல் தடவையாக, இரண்டு கப்பல்களும் தாக்கப்பட்டு, **நீஸ்நௌ** மாத்திரம் ஏப்ரல் மாதத்தில் மூன்று தடவையும் மறுபடி ஜுலையிலும் தாக்கப்பட்டு அதிலிருந்த 128 பேர்கள் நாசமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

எல்லாவிதமான உயரங்களிலிருந்தும் இக்கப்பல்கள் தாக்கப்பட்டன. உதாரணமாக ஏப்ரல் 4–5 இரவில் பிரிடிஷ் விமானம் 1,000 அடி உயரத்திலிருந்து 1,900 பவுண்டு குண்டு ஒன்றை **நீஸ்நௌ** கப்பல்பேரில் போட்டது. அச்சமயத்தில் எதிரி ஆராய்ச்சி வெளிச்சமும், பீரங்கி குண்டுகளும் போட்டு இதைத்தடுக்க முயன்றான். இதுபோலவே **ஷார்ன் ஹாஸ்டும்** இரண்டு மூன்று தடவை தாக்கப்பட்டதோடு, துறைமுகத்திலிருக்கும்போது டார்பிடோவாலும் தாக்கப்பட்டு சேதமடைந்தது. இவ்விதம் பிரிடிஷ் கடற்கரைக் காவல் விமானம் ஒன்றால் செய்யப்பட்டது. ஆனால் அது மறுபடி திரும்பி வரவில்லை.

ஜுலை 1–2 இரவில் **பிரின்ஸ் யூஜென்** என்ற கப்பலும் தாக்கப்பட்டு 40, 50-பேர்கள் இறந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. இக்கப்பல்களையெல்லாம் மறுபடி பழுதுபார்த்து உபயோகிக்க முடியாது.

ப்ரெஸ்ட் துறைமுகம் சென்று தாக்குவது ஒரு சிரம சாத்தியமான காரியம். இதை ஜெர்மானியர் கைப்பற்றியதும் முதல் விமானத் தாக்குதல்கள் நேராமல் பந்தோபஸ்து செய்துவந்தனர். எதிரியின் விமான எதிர்ப்பு பீரங்கிகளும், பலூன்களும் தடை செய்தன. ஆராய்ச்சி விளக்குகளும் போடப்பட்டிருந்தன. நமது பாம்பர்களைத் தடை செய்ய எதிரி காவல் விமானங்களும் முயற்சித்தன. லக்ஷியங்களுக்கு மேல் கருப்பு விரிப்புகளும் விரிக்கப்பட்டன. இருந்தாலும் இவையெல்லாம் பயன்படாமல் நமது விமானங்கள் பலமாக லக்ஷியத்தைத் தாக்கிவந்தன.

ஜுலை 10-ம் தேதிவரை 69 தடவை ப்ரெஸ்ட் தாக்கப்பட்டது. **ஷார்ன் ஹார்ஸ்ட், நீஸ்நௌ, பிரின்ஸ் யூஜென்** முதலிய கப்பல்கள் தாக்கப்பட்டது. எப்படியிருந்தபோதிலும் ஒரு விஷயம் வியக்தமாகப் புலப்பட்டது. இக்கப்பல்களை எதிரி உபயோகிக்க முடியவில்லை. **நீஸ்நௌ, ஷார்ன் ஹார்ஸ்ட்** என்ற கப்பல்கள் துறைமுகத்திலேயே இருக்கவேண்டியிருந்ததால் **பிஸ்மார்க்** என்ற கப்பலை எதிரி உபயோகிக்கவேண்டிவந்தது. அதுவும் மூழ்கிவிட்டது. இதற்கெல்லாம் நமது பாம்பர் விமானங்களின் தைரியமான படையெடுப்புகள்தான் காரணமாயிருந்தன.

## பைடர்-பாம்பர் விமானங்களை அதிகமாக உபயோகிப்பதின் பயன்.

## நேரே குறிவைத்து தாக்குதலின் உபயோகம்.

## விமான ஓட்டிகளுக்கு ஏற்படக்கூடிய அபாயங்கள்.

*ஆலிவர் ஸ்டுவர்ட் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது:—*

விமானப் போரைப்பற்றி எழுதிய ருஷ்ய விமர்சகர் இந்தப் போரில் ஒரே ஒரு புதிய தந்திரம் இருப்பதாகக் கூறினர். அதாவது ஜெர்மானியர்கள் மெஷர் ஷிமிட், 110 என்று சொல்லக்கூடிய பைடர்-பாம்பர்களை ஏராளமாக உபயோகிப்பதுதான்.

இதைப்பற்றிக் கேட்பதற்கு எல்லோருக்கும் ஒரு ஆவல் ஏற்படும். இதை ஒரு புது மாதிரியான விமானம் என்றே சொல்லலாம். பிரிடனில் இம்மாதிரி விமானத்தை பைடர்-பாம்பர் விமானம் என்று சொல்வதுண்டு. பைடர் விமானங்களைக்கொண்டு வெடிகுண்டு போடுவதற்கு உபயோகிப்பதில் புதிய காரியம் ஒன்றுமில்லை. 1914 முதல் 1918 வரை நடந்த போரில் கடைசியில் 'பைடர்' விமானங்களே சிறிய வெடிகுண்டுகளைத் தூக்கிச்சென்றன. இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் நம் வசம் ஹாக்கர், ஹரிக்கேன், பைடர், பாம்பர் என்ற வகுப்புகளைச் சேர்ந்த விமானங்கள் இருக்கின்றன.

சமீபத்தில் பிரிடிஷார் ஹரிக்கேன் விமானத்தைக்கொண்டு எதிரி ஆக்கிரமித்த பிரான்ஸின் பேரில் படையெடுக்க நேர்ந்தது. இதன் இருபக்கங்களிலும் 'ஸ்பிட்பையர்' வகுப்பைச் சேர்ந்த விமானங்கள் அதிக உயரத்தில் பறந்து, காவந்து செய்துகொண்டு இந்த ஹரிக்கேன் விமானத்தைப் போருக்கு நடத்திச் சென்றன. அங்கு ஒரு லக்ஷியம் தோன்றிற்று. அது எதிரிகளுக்குச் சொந்தமான ஒரு வெடிமருந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலை. அதன் பேரில் இவ்விமானம் வெடிகுண்டுகளைப் போட்டு சேதத்தை விளைவித்த விஷயம் சமீபத்தில் வெளிவந்திருக்கிறது.

இந்த 'ஹரிக்கேன்' வகுப்பைச் சேர்ந்த விமானங்கள் கொஞ்சம் தாமதித்து வெடிக்கக்கூடிய வெடிகுண்டுகளைக் கொண்டு சென்றன. அவைகள் ரொம்ப சமீபத்தில் கீழே பறந்து வந்து வெடிகுண்டுகளைப் போட்டவுன் அவைகளிலிருந்து சிதறும் நெருப்புப் பொரிகள் அவ்விமானங்களில் பிடிக்காமலிருக்க கொஞ்சம் தாமதத்தின் பேரில் வெடிக்கக்கூடிய குண்டுகளையே சுமந்து சென்றன.

பாம்பர் வகுப்பைச் சேர்ந்த 'ப்ளன்ஹீம்' விமானம் சுமந்து செல்லக்கூடிய அவ்வளவு கனமுள்ள வெடிகுண்டுகளை ஒரு 'ஹரிக்கேன்' விமானம் தூக்கிச் செல்லமுடியாது. இதற்காகத்தான் 'ஹரிக்கேன்' விமானிகள் வெடிகுண்டுகளின் கனத்திற்கு ஈடுசெய்ய குறைந்த கனமுள்ள குண்டுகளைக்கொண்டு லக்ஷியங்களின் பேரில் நேரே குறிவைத்துத் தாக்கி அதே சேதத்தை விளைவித்தார்கள்.

இவ் 'ஹரிக்கேன்' விமானங்களை பின்பக்கமிருந்து எதிரி விமானங்கள் தாக்காமல், அவைகளுக்கு மேலே "ஸ்பிட்பையர்" விமானங்கள் பாதுகாத்து வந்ததால் இவைகள் தாக்கவேண்டிய லக்ஷியங்களான தொழிற்சாலைகளின் கூரை வரை கீழே பறந்து வந்து வெடிகுண்டுகளைப் போட்டுவந்தன. மேலேயுள்ள 'ஸ்பிட்பையர்' விமான ஓட்டிகள் 'ஹரிக்கேன்' விமானங்களை எதிரி விமானங்கள் தாக்காமல் கூர்மையாக கவனித்துவந்தார்கள். அவர்களில் சிலர் கீழே என்ன நடக்கிறது என்பதையும், லக்ஷியத்தின் பேரில் குறி சரியாக வைக்கப்பட்டிருப்பதை ஊர்ஜிதப்படுத்தியும் வந்தார்கள். ஒரு வெடிகுண்டை லக்ஷியத்தின் பேரில் குறிதவருமல் போடவேண்டுமென்றல் லக்ஷியத்திற்குக் கொஞ்ச



அடி உயரத்தில விமானம் தாழப்பறந்து வந்து வெடி வீசினல்தான் சாத்தியமாகும்.

இம்மாதிரி தாக்குதலில் விமான ஓட்டிகளுக்கு பெரும் கஷ்டம் உண்டாகும் விமானிகள் சாமான்கள் ஏற்றிச் செல்லும் விமானங்களில் இரண்டு யந்திரங்கள் அமைக்கப்பட்டிருப்பது போலவே, பிரயாணிகள் ஏறிச்செல்லும் விமானங்களிலும் இரண்டுயந்திரங்கள் அவசியம் இருக்க வேண்டுமென்றும், ஒரு என்ஜின் வேலை செய்யாமல் பழுதாய்போனலும், அது கீழே விழுந்து விடாமல் ஆகாயத்தில் செல்வதற்கு ஹேதுவாக மற்றொரு என்ஜின் காப்பாற்ற உதவும் என்றும் சொல்லி வருவது நமக்குத்தெரியும்.

இந்த 'ஹரிக்கேன்' விமான ஓட்டிகள் ஒரு யந்திரமுள்ள விமானங்களில் சென்றனர். மேலும் அவர்கள் எதிரிகள் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களின் மேல் சென்றார்கள். அதலால் அவர்களுக்கு அபாயம் அதிகம் இருந்திருக்கும்.

இத்துடன் அவர்கள் அதிக உயரத்திலிருந்து தரைக்கு சில அடிகள் உயரம் வரை கீழே பாய்ந்தார்கள். எதிரி பீரங்கிகளும், எதிரி விமானங்களும் தாக்கக்கூடிய அபாயத்தை விட, குறைந்த உயரத்தில் பறப்பதில்தான் அபாயம் அதிகம். வெகு சாமர்த்தியத்துடன் மிகவும் தைரியமாகத் தாழப்பறப்பது சாமானிய மனிதர்களால் முடியாது. நல்ல தேர்ந்த உத்தியோகஸ்தர்களும், பயிற்சிபெற்ற விமானிகளும்தான் இக்காரியத்தை சாதிக்க முடியும். அவர்கள் அவ்விதம் ஆபத்தை கவனியாமல் தைரியமாக தாழப்பறந்து லக்ஷியத்திற்கு மேல் வெடி வீசி சேதத்தை விளைவித்தது ஒரு பெரிய வீரச்செயல் என்றே சொல்லவேண்டும். அவர்கள் உபயோகித்த விமானத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பிரிடிஷ் விமானப்படைக்கு பக்க உதவியாக இருப்பது 'ஹரிக்கேன்' விமானம்தான், அது 'பைடர்' விமானம் செய்யக்கூடிய ஒவ்வொரு வேலையையும், 'பைடர்' விமானங்கள் சாதாரணமாகச் செய்ய முடியாத அவ்வளவு வேலைகளையும் செய்து முடிக்கிறது.

அது உயரமும் பறக்கும், தாழவும் பறக்கும், பகலிலும் பறக்கும், இரவிலும் பறக்கும். அதில் எட்டு யந்திரத் துப்பாக்கிகளும் இருக்கும்; அல்லது 4 பெரிய யந்திர பீரங்கிகளும் இருக்கும். அது யுத்தரங்கம் முழுவதிலும் எங்கு பார்த்தாலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. பிரான்ஸ், வடஆபிரிக்கா, கிரீஸ், ருஷ்யா, இன்னும் சென்ற வருஷத்தில் பிரிடன் பேரில் நடந்த சண்டைகளிலும் 'ஹரிக்கேன்' விமானம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

'ஹரிக்கேன்' தான் 'பைடர்' விமானத்தைக் காட்டிலும் எல்லா விதத்திலும் மிகவும் உபயோகமுள்ளதாய் இருக்கும். அதை வெகுவேகமாய்ச் செல்லக்கூடிய 'பாம்பர்' விமானமாகச் செய்யப்பட்டதில் அதற்குப் பிரக்யாதி அதிகமாய் விட்டது.

உண்மையில் அதை 'பைடர்-பாம்பர்' என்று சொல்லுவதைக் காட்டிலும் 'அதிக வேகமுள்ள பாம்பர்' என்று சொல்வதே சிலாக்கியம். ஏனென்றால் 'பைடர்—பாம்பர்' என்று சொன்னால் அந்த வார்த்தைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றன. ஆகாய யுத்தத்தில் 'பைடர்-பாம்பர்' என்ற விமானமே கிடையாது. இருந்தாலும் அம்மாதிரி சொல்வதுதான் உபயோகமாயிருக்கிறது.

'பைடர்' விமானத்தில் வேகம், உயர எழும்பும் சக்தி, அதிக நேரம் ஓட்டி செல்லவசதி ஏற்படவேண்டியதற்காக அதிக கனத்தை சுமக்க வேண்டியிராமல் செய்யப்பட்டிருக்கிறது. 'பாம்பர்' விமானத்திலோ வேகத்தைக் குறைத்துப்

உயர எழும்பும் சக்தியைக் குறைத்தும், அதிகநேரம் பறக்கும் சக்தியைக் குறைத்தும், அதிக கனமுள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்ல லாயக்காக செய்யப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தினிசுகளிலும், அவைகளின் போக்குப்படி அதிக சக்தியடையும்படி செய்ய முடியாது.

'பைடர்' விமானத்தில் வேகத்தை அதிகப்படுத்துவதற்காக, அதிக நேரம் பறக்கக்கூடியதில் $1\frac{1}{2}$ மணி அவகாசத்தை குறைக்க முடியாது. ஆனால் அதில் பீரங்கிகள், வெடிமருந்து இவைகள் வேறே கொண்டு செல்லவேண்டும். அவைகளைக்கூட, ஜெர்மானியர்கள் '109 மெஷர் ஷிமிட்' விமானம் கொண்டு செல்லும் சுமையை குறைத்தபடி, இதிலும் ஏற்பாடு செய்யலாம். 'பைடர்' விமானத்தில் வேகம், உயரப்பறந்து செல்லும் சக்தி, அதிகநேரம் பறக்கக்கூடிய சக்தி இவற்றுடன் சுமையும் கொண்டு செல்வதால் இதை பாம்பர் விமானத்திற்கு ஏறக்குறைய சமமாகச்சொல்லலாம்.

இதே மாதிரி பெரிய வெடிகுண்டு சுமைகளைத் தூக்கிச் செல்வதற்காக பகலில் செல்லும் பாம்பர் விமானம் வேகத்தை குறைத்துவிட முடியாது. அதற்குக் காரணம் என்னவென்றால் வேகம் இருந்தால்தான் அது தப்பக்கூடும். 'பைடர்-பாம்பர்' என்ற விமானம் 'பைடர்' விமானம் 'பாம்பர்' இவைகளின் இயல்புகளை ஒன்று சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிறது. 'பைடர்-பாம்பர்' கிட்டத்தட்ட 'பைடர்' மாதிரியாகவே இருக்கும், ஏனெனில் அதில் வெடிகுண்டு சுமை குறைவு, வேகம் அதிகமாகவேயிருக்கிறது. மேலும் அதிகம் வேகமிருந்து, குறைந்த கனமுள்ள வெடிகுண்டுகளைக்கொண்டு அவ்விமானத்திலிருந்து சில லக்ஷியங்களை நேராகத்தாக்கக்கூடும். ஆனால் குறைந்த வேகத்தில் ஏராளமான வெடிகுண்டுகளை போடுவதைக் காட்டிலும் மேற்சொல்லியதே சிலாக்கியம்.

ஆனால் அதிகம் வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்வதில் 'பாம்பர்' விமானத்தை போல் 'ஹரிக்கேன்' விமானம் அவ்வளவு திறமையாக இருக்காது. ஆனால் 'பாம்பர்' போகக்கூடாத இடங்களில் ஹரிக்கேன் போகக்கூடும். பாம்பர் திரும்பி வரமுடியாத சந்தர்ப்பங்களில் 'ஹரிக்கேனாய்' இருந்தால் வெகு எளிதில் சமாளித்து வரக்கூடும்.

ஆகையால் வேகம் வேண்டும், வேண்டும் என்று நாம் அடிக்கடி கூறி வருகிறோம். பைடர்களுக்கு அதிகவேகம் ஏற்படும்படி செய்யவேண்டும். இது எங்கும் சொல்லப்பட்டுவருகிறது. ஆனால் பாம்பர் விமானங்களுக்கும் பகல் காலங்களில் தாக்குதல்கள் இருந்தால், அதிக வேகத்துடன் இருக்கவேண்டும். அவ்விதம் செய்வதற்கு அவைகள் ஏற்றிச்செல்லும் வெடிகுண்டு கனத்தைக் குறைக்கவேண்டும். அதிக வேகமாயும் வெடிகுண்டுகளையும் சுமந்து செல்லக்கூடிய 'ஹரிக்கேன் ஹைஸ்பீடு பாம்பர்' விமானம் எல்லோருக்கும் திருப்தியைக் கொடுக்கிறது. வரும் காலத்தில் இதன் வியாஜமாக இன்னும் அதிக வேகமுள்ள பாம்பர் விமானங்கள் தயாரிக்கப்படும்.

ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசத்திலும் பிரிடிஷ் விமானப் படை ஒரு இரவில் தாக்கியதில் அதற்கு நேர்ந்த சேதத்தைக் குறித்து இங்கு சொல்லுகிறேன். அதில் அநேக பிரிடிஷ் விமானங்கள் சேதமாயின. இது வரை 37 விமானங்கள் காணவில்லை. இம்மாதிரி சேதத்தை முன்னிட்டு பிரிடிஷ் விமானப்படையைப்பற்றி கெடுதலான அபிப்பிராயம் கொள்ளுவதுமுண்டு. ஆனால் எதிரியைத் தாக்கி எதிரிகளுக்கு இதைவிட பலத்த சேதத்தை விளைவிப்பதற்கு ஈடுபட்டால், இப்பொழுது பிரிடிஷ் விமானப்படைக்கு நேர்ந்த ஸ்வல்பச்சேதம் போல் உண்டாவது சகஜம்தான்.

பிரிடிஷ் விமானப்படை பாதுகாப்பில் மட்டில் இருந்தால் அதற்கு ஏற்படும் சேதத்தைக் காட்டிலும், அதிகச்சேதம் எதிரிகளுக்கு உண்டாக்கும். சென்ற



வருஷத்தில் பிரிடன் பேரில் நடந்த யுத்தத்தில் அவைகளுக்கு நேர்ந்த நஷ்டத்தைக் காட்டிலும், இம்மாதிரி செய்தால் அதற்கு அதிகச்சேதம் ஏற்படாது.

பாதுகாப்பை விட வேறு அலுவல்களும் பிரிடிஷ் விமானப்படைக்கு உண்டு. எதிரியின் பேரில் இடைவிடாது வெடிகளை போட்டு வரவேண்டியிருக்கிறது. அதுவும் சீதோஷ்ண நிலை கெட்டியிருக்கும் பொழுது செய்யவேண்டி இருக்கிறது.

சீதோஷ்ண ஸ்திதி எவ்வளவு கெடுதலாக இருந்தபோதிலும், எதிரிகள் நாட்டை இடைவிடாது தாக்கிவருவதின் பொருட்டு, அபாயம் வந்தாலும் வரட்டும் என்று தலைவர்களும் விமானிகளும் சண்டைக்குப் புறப்படுகிறார்கள்.

பிரிடிஷ் விமானப்படையிலுள்ளோர்களுக்கும், மற்றோர்களுக்கும், இந்த சந்தர்ப்பங்களில் பெரிய நஷ்டம் நேரிடும் என்று தெரியும். இந்த நஷ்டங்கள் எதிர் பார்த்ததுதான். பெரிய சேதம ஏற்படுவதைத் தவிர்க்க பிரிடிஷ் விமானப் படை விரும்புகிறது. ஆனால் கிழக்கில் ருஷ்யர்கள், வெகு அற்புதமாக சண்டை செய்யும் பொழுது இந்தப் பக்கத்தில் தங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை கவனியாமல் எதிரிகளுக்கு இடையூறுகள் விளைவிக்க பிரிடிஷ் விமானப்படை முயன்று வருகிறது.

---

# மிஸ்ட்டர் சர்ச்சில் தயாரித்த லாப நஷ்ட ஜாபிதாவை ஒரு துருக்கியர் பரிசிலனை செய்தார்.

(அஹமெட் எமின்யால்மான் என்பவர் எழுதியது).

"வாடன்," இஸ்தான்புல் பத்திரிகையிலிருந்து, 2—10—41.

பிரிடிஷ் பிரதம மந்திரி சமீபத்தில் பேசிய பேச்சிலிருந்து பின்வரும் கால, தில் நன்மை ஏற்படும் என்ற ஆசையுள்ளவரா அல்லது அவர் நைராசிய நோக்கம் உள்ளவரா என்ற பிரச்னை ஏற்பட்டது.

அவர் பேசிவருகையில் அவர் எதிர்காலத்தைப்பற்றி நன்மை கிடைக்( மென்று சிலாகிக்கும் சுபாவம் தனக்குக் கிடையாது என்று அவர் வழக்கப்ப சொல்லிவருவதுண்டு. ஆனால் இப்பொழுது அவர் பேசிய பேச்சிலிருந்து ஒவ்வொரு விஷயமும் பிரிடனுக்கு இனிமேல் ஏற்படக்கூடிய சாதகத்தைப் பற்றியேதான் என்று வெளியாகிறது.

மிஸ்ட்டர் சர்ச்சில் தயாரித்த லாப நஷ்ட ஜாபிதாவை இங்கு எடுத்துச் சொல்லுவோம்.

**பிரிடனுக்குச் சாதகமான விஷயங்கள்.**—ஜெர்மன் ஆகாயப்படை வரவர பல மிழந்து கொண்டுவருகிறது. இது மிகவும் முக்கியமான விஷயம்.

சென்ற மூன்று மாதங்களில் வியாபாரக் கப்பல்களின் நஷ்டம் அதற்கு முன் மூன்று மாதங்களில் ஏற்பட்ட நஷ்டத்தைவிட மூன்றில் இரண்டுபங்கு குறைந்து விட்டது. இவ்விதம் நஷ்டத்தில் குறைவு ஏற்பட்டதினால் உணவுப்பொருட் களின் ஸப்ளை அதிகரித்துவிட்டது. அதனால் தொழிலாளிகளுக்கு முன்னைவிட அதிகமாக உணவுப்பொருள்கள் கிடைக்கின்றன. சென்ற வருஷத்தைவிட இப் பொழுது சாமான்கள் அதிகமாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதனா கிரிஸ்துமஸ் பண்டிகையில் விழாக்கள் கொண்டாட பிரிடிஷ் மக்களுக்குச் சந்தர்

ம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் புதிது புதிதாகக் கப்பல்களைக் ட்ட ஆரம்பித்து வருவதால் இப்பொழுது ஏற்பட்ட ஸ்வல்ப கப்பல்களின் ஷ்டத்தை வெகு எளிதில் ஈடுசெய்ய முடியும்.

மேலும் போக்குவரத்தில் யுத்தப்பொருள்கள் ரொம்பவும் கொஞ்சமாக சேதம் ஏற்படுகிறது. சென்ற வருஷத்தில் இங்கிலாந்துக்கு ஒத்தாசையாக ஒரு நாடுமில்லை. ஆனால் இப்பொழுதோ இரண்டு பெரிய வலிவான தேசங்கள் அதற்குச் சிநேகமாயிருக்கின்றன. பர்ஸியா தேசமும் இங்கிலாந்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராயிருக்கிறது.

ஜெர்மனியோ இனிமேல் பரித்தியாகம் செய்யக்கூடாத அளவில் அவ்வளவு நஷ்டமடைந்திருக்கிறது.

இங்கிலாந்தின் தரைப்படை இப்பொழுது மிகவும் ஜாஸ்தியாக அதிகரித்து இருக்கிறது. பிரிடிஷ் தேச சரித்திரத்தில் இந்த மாதிரி தரைப்படையின் எண்ணிக்கை அதிகரித்ததே கிடையாது. இப்பொழுது அதன் உதவியைக் கொண்டே இங்கிலாந்தில் ஏற்படும் எவ்வித படையெடுப்பையும் தவிர்க்கக்கூடும் என்று சொல்லலாம். ருஷ்யச் சைனியங்களுக்கு ஒத்தாசையாக ஐரோப்பா கண்டத்தில் பிரிடிஷ் தரைப்படை வந்திறங்கவும் கூடும்.

மேலும் ருஷ்யர்கள், சீனர்கள் இவர்களின் மனோதைரியம் எடுத்துரைக்க இயலாது.

**பிரிடிஷாருக்குள்ள பாதகங்கள்.**—விமான எதிர்ப்புகளை விட, மற்ற எல்லா தாக்குதல்களிலும் ஜெர்மனியே முதன் முதலாகத் தாக்கி வருகிறது. தரைப் படையில் முந்திக்கொண்டு தாக்கக்கூடிய சக்தி இன்னும் கிரேட் பிரிடனுக்கு ஏற்படவில்லை.

மாரிகாலம் நேசதேசங்களுக்கு அனுகூலம் என்று கணக்கிடமுடியாது. ஏனென்றால் மாரிகாலத்திலும்கூட ருஷ்யாவின் பேரில் ஜெர்மனி செய்துவரும் பலாத்காரப் போர் நீடித்து நிற்கும்போல் இருக்கிறது. மேலும் ஜெர்மன் படைகளால் புதுமாதிரித் தாக்குதல் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இந்த மாரி காலத்தில் நீர்மூழ்கிக் கப்பல் யுத்தத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டிய எல்லா வித முயற்சியையும் ஜெர்மனி எடுத்துக்கொள்ளக்கூடும்.

மேலும் பிரிடன்மேல் எதிரிகள் படையெடுக்கலாம். ஆனால் பிரிடிஷ் தீவுகளின் பேரில் எதிரிகள் படையெடுக்கக்கூடிய அபாயம் வெகு நாட்களுக்குப் பிறகுதான் ஏற்படக்கூடும் என்று சொல்வதற்கில்லை.

---

## தூரக்கிழக்கு நிலைமையை ஸ்வாதீனப்படுத்துவது.

## ஜப்பான் எதிரிகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தாக்குவதா? அல்லது அவர்களைச் சேர்ந்தாற்போல் ஒரே சமயத்தில் தாக்குவதா? என்ற பிரச்னை.

## யுத்தத்தில் சைனாவையும் நேசதேசமாக பாவிப்பது.

‘எகனாமிஸ்ட்’ என்ற பத்திரிகையிலிருந்து.

தூரக்கிழக்கின் நிலையைப் பார்த்தால் யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள் இருக்கிறதாகத் தெரிகிறது. ஏனென்றால் ஜப்பான் கொண்டிருக்கும் பொது க்ஷேம பிராந்தியக் கொள்கையை யுத்தம் ஏற்படாமல் ஸ்தாபிக்க முடியாது. 1937-ம் வருஷத்தில் ஜப்பான் இக்கொள்கையைக்கொண்டு சைனாவில் வியாபிக்க



எத்தனிக்கையில் சைனா யுத்தம்செய்து தடைசெய்தது. ஜப்பானின் பொது க்ஷேம பிராந்தியம் என்பது, ருஷ்யாவின் கடற்கரைப் பிராந்தியங்களையும், ஸைபீரியாவின் மேற்கு பாகமும். மஞ்சூரியா, சைனா, மங்கோலியா பூராவும்; இந்தோ-சைனா, தாய்லாந்து, மலேயா தீபகற்பமும், பிலிப்பைன் தீவுகள், நெதர்லாந்து இந்தியத் தீவுகள், இன்னும் கூடுமானால் ஆஸ்திரேலியாவுக்கருகிலுள்ள ஆசிய நாடுகள் இவைகளின் ஆதிக்கத்தை ஜப்பான் பெறுவதுதான். இவ்விதம் கொஞ்சம் கொஞ்சமாக வெற்றிபெற முயற்சிக்கும்போது எல்லா தூரக்கிழக்கு நாடுகளுடனும் ஜப்பான் யுத்தம் புரியவேண்டிவரும்.

ஜப்பானுக்கு தெற்குப் பக்கத்தில் அநேக பெரிய வல்லரசுகள் ஆதிக்கம் பெற்றிருக்கின்றன. அதாவது பிரிடிஷார், அமெரிக்கர்கள், பிரெஞ்சுக்காரர்கள், நெதர்லாந்துக்காரர்கள் இவர்கள் அங்கு முகான்மையாக இருக்கின்றனர். சைனாவிலோ தளகர்த்தர் ஷியாங்கெய் ஷெக் நல்ல தற்காப்புப் படையுடன் உறுமிக் கொண்டிருக்கிறார். வடக்கில் ருஷ்யா ஸைபீரியத் துருப்புகளை வைத்திருக்கிறது.

இதற்கு முன் ஜப்பானியத் துருப்புகள் வெவ்வேறு முனைகளில் யுத்தம் புரிந்து பலிக்கவில்லை என்று அறிந்து கொண்டிருக்கின்றன. நெதர்லாந்து தோற்கடிக்கப்பட்டு, பிரான்ஸ் விழுந்ததும், ஜப்பானியர்களுக்கு தெற்கு நோக்கி வியாபிக்க ஊக்கம் உண்டாயிற்று. முதன் முதலில் இந்தோ-சைனாவில் ஜப்பான் முன்னேறிற்று. அது தாய்லாந்து எல்லைப்புறத்திற்கு வந்ததும் அதற்குப் பெரிய இடையூறுகள் ஏற்பட்டுவிட்டன. தாய்லாந்தை ஜப்பான் தாக்கினால், பிரிடனைத் தாக்கினது மாதிரிதான் என்று பிரிடன் உடனே எச்சரிக்கை விடுத்தது. யுனைடெட் ஸ்டேட்ஸிலும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலும் உள்ள ஜப்பானுக்குச் சேர வேண்டிய தொகைகளை பட்டுவாடா செய்யாமல் ஆங்காங்கு நிறுத்திவைக்கப் பட்டது. ஜப்பான் தெற்கு நோக்கி முன்னேற எத்தனித்தால் அமெரிக்கா ஜப்பானுடன் சண்டைசெய்தாவது அதன் முன்னேற்றத்தைத் தடுத்துவிடும் என்பது நிச்சயம்.

சைனாவிலுள்ள ஹனாயிலும், ஷான்ஸியிலும் சென்ற சில வாரங்களாக ஜப்பான் மறுபடியும் படையெடுத்து அந்தப்பகுதி என்ன நிலைமையில் இருக்கிறதென்று பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷ நடவடிக்கையிலிருந்து தாக்குதல்களினாலாவது, களைக்க வைத்தாலாவது சைனாவில் ஜப்பானுக்குப் பூர்ண வெற்றி கிடைக்காது என்று தெரியவந்தது.

வடமேற்கில் 1937-ம் வருஷத்தில் நோமன்ஹானில் ருஷ்யர்களை ஜப்பானியர் எதிர்த்ததிலிருந்து ருஷ்யப் போர்முனையில் தலையிடாமலிருப்பதே நல்லது என்று ஜப்பானியர் எண்ணியிருந்தார்கள். ஆனால் ஹிட்லரின் தாக்குதல்களினாலும் ருஷ்யர்கள் மேற்கே பின் வாங்குவதினாலும் ஜப்பானியர்களின் ஆசை அதிகரித்திருக்கிறது. சென்ற சில வாரங்களாக மஞ்சூரியாவிலிருக்கும் படைகளை ஜப்பானியர் அதிகரிக்கச் செய்திருக்கிறார்கள். அங்கு சிலர் 22 பகுதிகள் இருப்பதாகவும் மற்றவர்கள் 35 பகுதிகள் இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். மஞ்சூரியாவிலிருந்து மங்கோலியாவுக்கு ராணுவப்படை செல்ல சீனர்களைக் கட்டாயப் செய்து ரஸ்தாக்கள் போடப்பட்டுவருகின்றன. இதே சமயத்தில் அமெரிக்காவிலிருந்து யுத்த ஸப்ளைகள் வ்ளாடிவாஸ்டாக் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தவுடன், ஜப்பானியர்கள் ருஷ்யாவையும், அமெரிக்காவையும் மிரட்டியும் ஆக்ஷேபனையும் செய்திருக்கிறார்கள். இதிலிருந்து இப்பொழுது ருஷ்யாவின் பலம் குன்றியிருப்பதாக ஜப்பான் எண்ணியிருக்கிறதுபோல் தெரிகிறது. மேலும் ஜப்பானியர்கள் ருஷ்யாவில் ஆக்கிரமித்து சிலபாகங்களை எடுத்துக் கொள்ளலாமா என்ற பிரச்னையும் அவர்களுக்கு இருந்துவருகிறது.

ஜப்பானியர்கள் சீனர்களைச் சோர்வடையச் செய்வதில்மட்டில் ஈடுபட்டு சீனர்களிடம் பொருளாதாரம் பூராவையும் தங்கள் ஆதிக்கத்துக்குக் கொண்

வந்து, அயல்நாட்டு வர்த்தகம் பூராவும் அவர்களே வியாபித்துக்கொண்டால், மற்ற தூரக்கிழக்கில் ஆதிக்கம்பெற்ற வல்லரசுகள் அட்லாண்டிக் சமுத்திரத்தில் நடக்கும் யுத்தங்களில் கவனம் செலுத்த நேரிடும். அப்பொழுது ஜப்பான் தன் நோக்கப்படி தன் சாம்ராஜ்யத்தை அபிவிருத்தி செய்ய இடம் ஏற்படும் என்பது நிச்சயம். தூரக்கிழக்கிலுள்ள ஆதிக்கங்களின் தற்காப்பு பலஹீனமாய் இருப்பதாக எண்ணிக்கொண்டு, ஜப்பான் இந்த நிலைமைக்கு வந்துவிட்டதால் முடிவில் அது தோல்வியடையும் என்பது நிச்சயம். ஒரே சமயத்தில் ஒவ்வொரு வல்லரசையும், ஜப்பான் மிரட்டுவதில் எல்லா வல்லரசுகளும் தங்களையே மிரட்டுவதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் தூரக்கிழக்கில் தற்காப்புக்காக எல்லா வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து ஜப்பான் முன்னேறுவதைத் தடுக்க திட்டம் ஒன்று ஏற்பாடாகி வருகிறது.

பொருளாதாரத்திலோ, ஜப்பானுடைய திரவியம் அந்தந்த தேசங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும் பிரிடன், அமெரிக்கா, டச்சு அரசாங்கம் இவைகள் ஜப்பானின் வர்த்தகத்தையும், கப்பல் போக்குவரத்தையும் குறைத்து விட்டன. ராணுவத்திலோ மலேயா, ஹாங்காங் பிலிப்பையின் தீவுகளுக்கும் ஏராளமாக உதவிப்படைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. தாய்லாந்து தற்காப்புக்காக தயாராக இருப்பதும், தாய்லாந்துக்கும் மலேயாவுக்கும் நடுவிலுள்ள எல்லையில் பிரிடன் உதவிப்படைகளை தயாரில் வைத்திருப்பதும், தரை மார்க்கமாக ஜப்பானியர்கள் சிங்கப்பூருக்கு வருவதைத் தடுக்கவேண்டியதற்காகத்தான்.

ஆனால் கடல் மார்க்கத்தில் ஜப்பானியர் வரமுடியாதபடி இங்கிலீஷ் கப்பற் படையும், அமெரிக்கக் கப்பற்படையும்தான் முக்கியமாக தடுக்கவேண்டும். தெற்குக் கடல்களில் பாதுகாப்பு பயன்தரக் கூடியதாக இருக்கவேண்டுமானால், இரண்டு கப்பற்படைகளும் எங்கெங்கு முதலில் சென்று தாக்கவேண்டுமோ, ஆங்காங்கு வேற்றுமையன்னியில் கப்பல்களையும், கப்பல் தளங்களையும் சேர்த்து ஒற்றுமையுடன் உபயோகப்படுத்தவேண்டும். மேலும் குத்தகைக் கடன் உதவி சைனாவுக்கும் அன்வயிக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. சுங்கிங்கில் அமெரிக்க ராணுவ தூதுகோஷ்டி வந்து சேர்ந்திருக்கிறது. பர்மா ரஸ்தா நன்றாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றை எல்லாம் பார்க்க, தூரக்கிழக்கில் சைனாவையும் நேசதேசமாக அங்கீகரிக்கப்பட்டு வருவது தெரியவரும்.

தெற்குக் கடல்களில் சண்டைநேர சம்பாவிதமில்லை. ஏனெனில் தாய்லாந்து எல்லைப்புறம் வரையில் ஒரு வரையறவு இருப்பதை ஜப்பான் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தற்சமயம் வடக்கே வ்ளாடிவாஸ்டாக் பக்கத்தில் பலஹீனமாய் இருக்கிறது. ஆதலால் ஜப்பான் அதை அடுத்தபடியாகத் தாக்க முயலலாம். ஜப்பானியர்களுக்கு தங்களுக்கு எதிராக தூரக்கிழக்குப் பாதுகாப்பு திட்டம் ஒன்று ஏற்பட்டுவருவது நன்றாகத் தெரியும். ஜப்பானியர்களும் ஜெர்மானியர்களைப்போல தங்களைச் சூழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால் பிரிடிஷாரும், நேசதேசத்தார்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கே இவ்விதம் ஒன்று சேர்ந்ததாகச் சொல்லிக் கொள்ளுவார்கள். இவ்விதம் சூழப்பட்டதினால் ஜப்பான் சண்டைக்குக் கிளம்பும் என்பது நிச்சயம். ஆனால் அது சமாதானப் பேச்சைப் பேசி வருவதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆகையால் ஜப்பான் சண்டையிடுமா அல்லது சமாதானத்திற்கு வருமா என்பதைப்பற்றி ஆராயவேண்டியதில்லை. ஆனால் இப்பொழுது அதைச் சூழ்ந்திருக்கும் எல்லா வல்லரசுகளுடன் ஒரே சமயத்தில் யுத்தம் செய்யுமா, அல்லது அவைகளை ஒன்றன்பின் ஒன்றாக தாக்குமா என்பதைத்தான் ஆராயவேண்டும். ஜப்பானியர்களுக்கு ஓர் அளவுவரை சைனாவிலும் மற்றோர் அளவுவரை ஸைபீரியாவிலும், இன்னும் மற்றோர் அளவுவரை மலேயாவிலும் யுத்தம் இருந்தால் தான் நல்லது. மேலும் இந்நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தாக்க எத்தனிக்கிறார்கள்.



தூரக்கிழக்குப் பாதுகாப்பு திட்டம் அமெரிக்கா, பிரிடிஷ், சைனா, டச்சு, இந்த நான்கு வல்லரசுகளின் ராணுவப் படைகளும், ருஷ்யத் துருப்புகளும் சேர்ந்து தடுத்தால், ஜப்பானியர்கள் எந்த இடத்தில் தாக்கினாலும் முற்றிலும் முறியடிக்கப்பட்டு மேலே செல்லவிடாமல் தடுக்கப்படுவார்கள். ஒருவித முடிவும் இல்லாமலும், அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் நடந்துவரும் சமாதனப் பேச்சுகளிலிருந்து அமெரிக்கா என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமென்று சொல்லக்கூடாமலிருக்கும், வரையிலும் அதேமாதிரி ருஷ்யாவின் பேரில் ஜப்பானியர்கள் செய்துவரும் ஆக்கிரமிப்பு இங்கிலாந்தையும், அமெரிக்காவையும் எந்த விதமாக நடக்கத் தூண்டுகிறது என்பது நிச்சயமில்லாமல் இருக்கும் வரையிலும், தூரக்கிழக்குத் தற்காப்பில் மத்திய நாடான சைனாவை ஒரு வல்லரசாக அங்கீகரிக்கப்படாமல் இருக்கும் வரையிலும், ஜப்பான் மேற்சொல்லிய நான்கு வல்லரசுகளை பயமுறுத்தி, தனக்கு இஷ்டமான எதிரியுடன் யுத்தம் புரிந்து, தாக்காலியமாக சமீபத்திலுள்ள ஏதாவது ஒரு நாட்டைக் கைப்பற்றவும் கூடும். நேசதேசத்தார்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஜாப்பானிய யுத்தம் சம்பவித்தால் அதைத் தடுக்க முயற்சி செய்யாதவரை தூரக்கிழக்கில் அமைதி ஏற்படாது என்பது நிச்சயம்.

---

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

---

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

## நவம்பர் 15—22, 1941.

### சரியான பிரட்டு.

“இந்தியாவிலிருக்கும் பிரிடிஷ் தற்காப்புப் படை உத்தியோகஸ்தர்கள் மூன்று பெரிய ரயில்வே தொழிற்சாலைகளைக் கைப்பற்றிக் கொண்டதாகவும், அங்குள்ள தொழிலாளிகளைக் கொண்டு பிரிடனுக்காக யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்திருப்பதாகவும் டெல்ஹியிலிருந்து சமாசாரம் வெளி வந்திருக்கிறது. இவ்விதம் 13,000 இந்தியத் தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். இவ்விதம் தொழிற்சாலைகளைக் கைப்பற்றிக்கொண்டதிலிருந்து இந்தியர்கள் சுயமாகவே பிரிடனுக்காக வேலைசெய்ய முன் வரவில்லை என்றும், பிரிடிஷாரின் தூண்டுதலின் பேரில்தான் அவர்கள் வேலை செய்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.”

(ஹிந்துஸ்தானியில் வந்த ஜெர்மன் சமாசாரம் நவம்பர் 17, 1941.)

சுவேச்சா பூர்வமாய் 13,000 இந்தியத் தொழிலாளிகள் யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யவும், இன்னும் ஆயிரக் கணக்கான பேர்கள் ரயில்வே ராணுவ ஸ்தலங்களில் பழகிக்கொள்ளவும் முன் வந்திருக்கிறார்கள் என்று போக்குவரத்து இலாகா மெம்பர் ஸர் ஆண்ட்ரூ க்ளோ இங்கிலாந்திலிருக்கும் இந்திய ரயில்வே பிரதிநிதிகளிடம் வெளியிட்டார். இந்தத் தொழிலாளிகளைத்தான் வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று ஜெர்மன் பிரசார மந்திரி கோயபல்ஸ் இளப்பமாகக் கூறினார். ரயில்வே அதிகாரிகள் மூன்று பெரிய தொழிற்சாலைகளை அவைகளில் பிரிடனுக்காக யுத்தப் பொருள்கள் உற்பத்தி செய்ய இனமாக விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நோக்கம் நாஸிகளுக்குத் தெரிந்திருக்க முடியாது.

## கோதுமையும், பருத்தியும்.

“மத்தியக் கிழக்கிற்கு இந்திய அதிகாரிகள் கோதுமை ஏற்றுமதி செய்வதைக் குறைத்தும், கோதுமையின் விலை அதிகமாக உயருவதைத் தடுக்க யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்று அவர்கள் பேரில் அங்குள்ள பிரிடிஷ் ராணுவ இலாகா அதிகாரிகள் கோபித்துக் கொள்ளுகிறார்கள். அதனால் இப்பொழுது இந்தியாவில் விளையும் எல்லா கோதுமையையும் கைப்பற்றிக்கொள்ளுவதாக பிரிடிஷார் பயமுறுத்துகிறார்கள்.”

(ஆங்கிலத்தில் வந்த ஜெர்மன் செய்தி, நவம்பர் 19, 1941.)

லண்டனிலிருக்கும் பிரிடிஷ் அரசாங்கத்தின் சார்பில் இந்திய அரசாங்கம் கட்டுப்பட்டதல்ல என்று ஒரு கற்பனையைக் கட்டிவிட கோயபல்ஸ் இதற்கு முன் சொல்லிவந்த பிரசாரங்களுக்கு எதிரிடையாக இப்பொழுது சொல்லத் துணிந்தார்.

கோதுமை இந்தியாவிலிருந்து அதிகம் ஏற்றுமதி செய்வதில் சேமித்து வைத்திருக்கும் தானியம் சுதாவாகக் குறையாமலும், அதனால் கோதுமையின் விலை அதிகரிக்காமலும் செய்ய இம்மாதிரி ஏற்றுமதியைக் குறைக்க வேண்டியிருந்தது.

மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு கோதுமை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாவதைவிட, அதிகமாகவே ஆஸ்திரேலியாவிலிருந்தும், வட அமெரிக்காவிலிருந்தும் வருகிறது.

“எகிப்து கவர்ன்மெண்டார் பருத்தியின் விலையைக் குறைத்துவிட்டதாக “போப்லோ டி ரோமோ பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் பிரிடனுக்குச் சொந்தமான எகிப்திலுள்ள பருத்தியை, பிரிடிஷார் எடுத்துவர முடியாமல் போனதுதான் என்று சொல்லப்படுகிறது.”

(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம், நவம்பர் 19, 1941).

சாதாரணமாக ஜனங்களின் தேவைக்குத் தகுந்தபடி விளைபொருள்களை உற்பத்தி செய்வது சகஜம்தான். ஐரோப்பிய நாடுகள் யாவும் அச்சுநாடுகளின் ஆதிக்கத்தில் வந்துவிட்டபடியால் எகிப்து தேசத்திலிருந்து அங்கு பருத்தி ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. யுத்தத்தினால்தான் எகிப்திற்கு வியாபார நஷ்டம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக 1941-1942-ம் வருஷத்தில் விளையக்கூடிய 2,50,00,000 பவுன் விலையுள்ள பருத்தியையும், 4,60,00,000 புஷல் கோதுமையையும் ஸப்ளை செய்ய பிரிடன் எகிப்தைக் கேட்டிருக்கிறது. இவைகளை பிரிடன் அமெரிக்காவிடமிருந்து குத்தகைக் கடன் மசோதாப்படி வாங்கிக் கொள்ளமுடியும். அதனால் அதற்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு இவ்வித முயற்சியை பிரிடன் எடுத்துக் கொண்டது.

## அச்சுநாட்டுப் புளுகுகளில் மாறாட்டங்கள்.

(இது ஒரு புளுகு).

“இந்தியாவைப் படையெடுக்கும் எண்ணம் இவ்வுலகத்திலுள்ள எந்த நாட்டிற்கும் உதிக்காது”

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, நவம்பர் 21, 1941.)

(அது ஒரு புளுகு).

“இந்தியாவிலிருந்து பிரிடிஷாரை வெளிக்கடத்தும் நோக்கத்தைக் கொண்டு அதை ஜெர்மனி படையெடுக்கும்.

(ஆங்கிலத்தில் இதாலிய சமாசாரம், நவம்பர் 11, 1941.)



“ஸிரெனைகாவிலுள்ள பிரிடிஷ் துருப்புகள் அச்சுநாட்டுப்படைகளை திடீரென்று தாக்கியதாக, பிரிடிஷ் பிரசாரகர்கள் வதந்தியைக் கிளப்புகிறார்கள். உண்மையில் அச்சுநாடுகளுக்கு திகைப்புண்டாகும்படி திடீரென்று தாக்குதலே கிடையாது.”

(ஆங்கிலத்தில் இதாலிய சமாசாரம், நவம்பர் 21, 1941.)

“ஸிரெனைகாவில் ஜெர்மன் துருப்புகள் பிரிடிஷ் எதிர்ப்புகளைத் தடுத்து விட்டன. மேலும், மேலும் எதிர்ப்பதற்கு முடியாமல் மழைவந்து தடுத்துவிட்டதென்று ஜெர்மன் ரேடியோ அறிவித்தது.”

(ஜெர்மனிக் கடங்கிய விஷி ஸர்க்கார் ஒலிபரப்பியது, நவம்பர் 20, 1941.)

“உங்கள் அரசாங்கம் ஏதாவது செய்வதுபோல் பாசாங்கு செய்யவேண்டும், ஆனால் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.”

(இங்கிலாந்திற்கு ஜெர்மனியிலிருந்து ஆங்கிலத்தில் வெளிவந்த செய்தி, நவம்பர் 19, 1941.)

“புதிதாக ஏற்படும் தாக்குதல்கள் பிரிடனுக்கு அனுகூலமாயிருக்கும் என்று யாவரும் எண்ணக்கூடும். அவ்விதம் தாக்குதல்கள் வெகு எளிதென்று நாம் கருதக்கூடாது.”

(பாரசீகத்திலும், அராபிலும் வெளிவந்த ஜெர்மன் சமாசாரம், நவம்பர் 21, 1941.)

### இவ்வாரத்தின் யோசனை.

“மனித வர்க்கத்தின் நன்மையை உத்தேசித்து யுத்தக் கைதிகளைக் கொலை செய்வதை சரியென்று நினைக்கவேண்டும்.”

(ஆங்கிலத்தில் வந்த ஜெர்மன் சமாசாரம், நவம்பர் 7, 41.)

## கபடமான பேச்சு.

### அரபிய உலத்துக்கு அச்சுநாடுகள் விடுவிக்கும் பிரசாரம்.

இதாலி, யுத்தம் தொடங்கும்முன் ஒலிபரப்பின் மூலம் அராபியர்களுக்கு இடையே குழப்பம் உண்டுபண்ணி வந்தது. ஜெர்மனியிலுள்ள யூதர்களை நாஸிகள் கொடுமையாக நடத்தி, ஜெர்மன் யுத்தம் ஆரம்பிக்குமுன் பாலஸ்தீனம் பிரச்னையில் அருவெருப்பு ஏற்படும்படி செய்துவந்தது. இந்த நாஸியின் கொள்கையினால் வருஷத்திற்கு 4,000 யூதர்கள் பாலஸ்தீனத்திற்குப் போய்க் கொண்டிருந்ததில், இப்பொழுது நாலு வருஷத்திற்குள் 62,000 பேர்கள் போயிருக்கிறார்கள்.

யுத்தத்தில் அச்சுநாடுகள் இஸ்லாம் மதத்தை நிலைநிறுத்தப்போவதுபோல் பாசாங்கு செய்து பிரசாரம் செய்கிறார்கள். அவர்கள், படைகளோ ஏற்கனவே ஸ்வதந்திரமாயிருந்த 12 தேசத்தார்களை அடிமையாக வைத்திருக்கின்றனர். அவருடைய ரகசியப் போலீஸோ மதத்தை தலைகாட்டவிடாமல் செய்து வருகிறார்கள்.

ஜனங்களுக்குள் பிளவு உண்டாக்கினால் ஆதிக்கம் பெறலாம். அதிகார தோரணையில் வெளிவந்த அச்சுநாடுகளின் பிரகடனங்களை வாசித்துப் பார்த்து அவர்களின் முறையை தெரிந்துகொள்ளுங்கள். பொய்சொல்லுகிற வாயில் இருந்தே ஒன்றுக்கொன்று விரோதமாக இரண்டு கதைகள் வருகின்றன.

"சென்ற சில நாட்களாக ஜெருஸலத்தில் எமீர் அப்துல்லா பிரிடிஷ் மேல்அதிகாரியுடன் அநேகம்தடவை பேசினாதாகப் பிரஸ்தாபிக்கிறது.

"ட்ரான்ஸ் ஜோர்டன், பாலஸ்தீனம் ஸிரியா இவைகளை ஒன்றுசேர்த்து எமீர் அப்துல்லாவின் கீழ் ஒரு அரசாங்கம் ஸ்தாபிப்பதைக் குறித்து விவாதிப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த அரசாங்கத்தில் யூதர்கள் சிறுகக்ஷியினராகி விடுவார்கள். இந்த பிரஸ்தாபத்திலிருந்து பயம் உண்டாகிறது. ஸிரியர்கள் அப்துல்லாவை தங்கள் அரசனாக ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை."

(அராபி பாஷையில் இதாலிய செய்தி, நவம்பர் 17, 1941.)

"பிரிடன் மறுபடியும் அராபியர்களுக்கு வாக்குறுதிகள் செய்ய ஆரம்பித்திருக்கிறது. யுத்தத்திற்குப் பிறகு ஸிரியாவும் சேர்ந்து அராபியர்கள் எல்லோரும் ஒரு தேசீய ஸமஸ்தானத்திற்குள் இருக்கும்படி ஏற்பாடு ஆகுமென்று எமீர் அப்துல்லாவைக் கொண்டு அராபியர்களுக்குப் பிரசாரம் செய்யும்படி மிஸ்ட்டர் ஈடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

(ஆங்கிலத்தில் இதாலிய செய்தி, 10—3—41.)

"அராபியர்கள் மகாநாடு ஒன்று கூட்ட லார்டு லிட்டில்டன் பிரயத்தனப்படுகிறார். ட்ரான்ஸ் ஜோர்டன் எமீருக்கு "அராபியர்களின் அரசன்" என்ற பட்டம் கிடைக்கப்போகிறது. பாக்கி நாஸாஷிடிக்கு பாலஸ்தீனம், நியூரிஸெட் இராக்கும் கிடைக்கப் போகிறது."

(அராபியில் வந்த இதாலிய சமாசாரம், நவம்பர் 13, 41.)

"ட்ரான்ஸ் ஜோர்டன், பாலஸ்தீனம், ஸிரியா இவைகளைச் சேர்த்து ஒரு யூதர் ஸமஸ்தானம் ஸ்தாபிக்க பிரிடன் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதைக்குறித்து யூதர்களின் தலைவர்களுக்கும் பிரிடிஷ் ராஜ தந்திரிகளுக்கும் சம்பாஷணை நடந்தது. உண்மையை மறைக்க பிரிடன் அராபியர்களுக்கு தாங்கள் ஒன்று சேர்க்கக் கோருவது ஒரு பெரிய அராபிய ஸமஸ்தானம் என்று சொல்லி வருகிறது."

(அராபியிலும், பாரசிகத்திலும் ஜெர்மன் செய்தி, நவம்பர் 3, 1941.)

"யூதர்களின் மனக்கோட்டைப்படி அவர்களின் அரசாங்கம் ஏற்பட பாலஸ்தீனம், ட்ரான்ஸ் ஜோர்டன் இவற்றிலிருந்து அராபியர்களை வெளிக்கடத்தி விடவேண்டுமென்று நியூயார்க்கிலிருந்து இஸ்ரேல் ஸீவ் சொன்னார். பிரிடிஷ் அரசாங்கத்தாரின் ஆதரவன்னியில் அவர் இப்படிச் சொல்வார் என்பதை நம்புவதற்கில்லை."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம், 18—11—41.)

"முந்தி பிரசார மந்திரி ராஷீத் ஆலி அபாஸ் என்பவர் அராபியர்கள் தங்களுக்குள் ஒரு ஐக்கிய பத்தியத்தை ஏற்படுத்திக்கொள்ள விரும்புவதாகவும், ஆனால் பிரிடிஷார் அதை அடியோடு கெடுத்து வருவதாயும் நான் சந்தித்துப் பேசுகையில் சொன்னார். முடிவில் அச்சுநாடுகளின் வெற்றி பிரிடிஷாருக்கு கேடு விளைவிக்கும். முஸ்லீம்கள் அப்பொழுது ஸ்வதந்திரம் அடைவார்கள்."

(ஹிந்துஸ்தானியில் இதாலிய சமாசாரம், நவம்பர் 19, 41.)

---



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 73—(5-வது பிரிவு).

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| டிஸம்பர் ... | 6, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 7, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | வடகாடு ... | ,, | 6.30 |
| | 8, திங்கட்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | வெள்ளனூர் ... | மாலை | 6.00 |
| | | புத்தாம்பூர் ... | ,, | 6.30 |
| | 9, செவ்வாய்க்கிழமை | திருவரங்குளம் ... | ,, | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 10, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | சேரி பள்ளிக்கூடம் ... | ,, | 10.15 |
| | | புலியூர் ... | மாலை | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |
| | 11, வியாழக்கிழமை .. | பள்ளிவாசல் ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 12, வெள்ளிக்கிழமை... | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | —கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 74—(1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 13, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 14, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| 15, திங்கட்கிழமை ... | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| 16, செவ்வாய்க்கிழமை. | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | பெரம்பூர் ... | ,, | 6.30 |
| 17, புதன்கிழமை ... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| 18, வியாழக்கிழமை ... | அரிமளம் ... | ,, | 6.00 |
| | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| 19, வெள்ளிக்கிழமை... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | நல்லூர் ... | ,, | 6.30 |

# ஒவ்வொருவரும்

யுத்தத்தில் நேசதேசங்களின் வெற்றியை
விரும்புகிறார்கள்

மேலும்

# ஒவ்வொருவரும்

நல்ல பாகெட் டயரியையும்
விரும்புகிறார்கள்

ஆகவே ஒவ்வொருவரும் வெற்றி சின்னத்தோடு
பிரசுரிக்கப்படும்

**1942-ம் வருஷத்திய 'வி' டயரி புஸ்தகத்தை**
வாங்கவேண்டும்

**இது குறிப்புப் புஸ்தகமுமாகும்**

விலை :—ரூ. 1—4—0, 1—8—0, 2—0—0.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் ஆபீஸிலும்,
ஸ்டேட் பிரஸிலும் கிடைக்கும்.

---

**நிகர் லாபம் பூராவும் யுத்த நிதியைச் சேரும்.**

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—6-12-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான
# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் டிஸம்பர் மீ 13உ [ந. 74

பிரஸங்கம் LXXIV.

## இங்கிலீஷ் மக்களின் மனோபாவம்.

ஜெர்மனியின் ராணுவம் பலமுள்ளதாகக் காணப்படுகிறதே தவிர, உண்மையில் ஹிட்லர் அடிபட்டுத்தான் வருகிறான். இனியும் முடிவான தோல்வி அவனுக்குக் கிடைக்குமென்றே நாம் சொல்லலாம். இதற்கெல்லாம், பிரிடிஷாரின் தைரியம்தான் காரணமாக இருந்துவருகிறது. இத்தைரியத்தினால் இவர்கள் எதிரிக்கு எளிதில் பிடிகொடுக்காமலும், அந்தரங்க வன்மையைத் தெளிவாகக் காட்டாமலும் இருந்துவருகிறார்கள். இவ்விதமாக 1914-ம் வருஷ யுத்தத்திலும் இருந்ததால்தான் ஜெர்மானியர் தோல்வியுற்றனர். இப்பொழுதும் அதேமாதிரி நின்று மனிதனுக்கு அத்யாவசியமான கொள்கைகளைக் காப்பாற்ற ஜெர்மனியுடன் போராடுகிறார்கள். ஜெர்மானியரின் முஸ்தீப்பு பூர்ணமாகக் காணப்படலாம் ஆனால் அவர்களின் மனது, சமூகம் முதலியவை யந்திரம்போல் நடத்தப்படுவதால் ஜீவனற்றதாகவே இருக்கிறது. ஆகவே தைரியத்தினால் பிரிடிஷார் நிலைத்து வருகின்றனர். போர்போன் அரசர்கள் தோல்வியடைந்தும் அதைத்தெரிந்துக் கொள்ளாமல் மேலும் மேலும் சென்று அழிந்தமாதிரி, ஜெர்மானியரும் பிரிடிஷாரின் உணர்ச்சியால் சென்ற யுத்தத்தில் தோற்றதையும், இப்பொழுது அடைந்து வரும் கெடுதிகளையும் அறிந்துகொள்ளாமல் அழியப் போகிறார்கள்.

17—6—40-ல் பிரான்ஸ் குலைந்தது. 28—5—40-ல் டங்கர்க்கைவிட்டு இங்கிலீஷ் சைனியம் காலி செய்தது. மனித வர்க்கத்திற்கே, அச்சமயம், தீங்கும், பயமும் ஏற்படும்போல் காணப்பட்டது. பிரான்ஸில் வெற்றியடைந்த ஜெர்மன் சைனியம் இங்கிலாந்திற்கு வருவதற்கு ஒருவித தடையும் இருந்ததாகக் காணப்படவில்லை. அப்பொழுது ஐரோப்பா பூரா ஹிட்லர் வசமாகிவிட்டது. ஆபிரிக்கா, ஆசியா முதலிய கண்டங்களிலும் சில பிரதேசங்களைப் பிடித்து விடுவான்போலும் இருந்தது. அதனால் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளெல்லாம் "பழுத்த பழங்கள் மடியில் விழுவதுபோல்" சுலபமாகவே ஹிட்லர் வசம் ஆகும்போலிருந்தது. அமெரிக்காவும் அச்சமயத்தில் யுத்தத்திற்குத் தயாரில்லாததால் ஹிட்லர் வசம் ஆகிவிடும்போலும் காணப்பட்டது. இவ்விதமாக நாஜிக் கொள்கை உலகங்களை ஆக்கிரமிக்க ஒருவித தடையும் இருந்ததாகத் தெரியவில்லை.

இம்மாதிரி நாஸிகள் ஆதிக்கமடைவார்களோ என்று யாவரும் பயந்தனர். 20-வது நூற்றாண்டின் மத்தியில் இதிஹாஸங்களில் சொல்லியமாதிரியான பயம் விளையுமா என்றும், பல நாட்களாக உலகங்களைச் சீர்திருத்தம் செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் இவ்வளவு கேவலமான முடிவிற்கா வரவேண்டுமென்றும் பயந்தனர். ஸர்வதேசச் சங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, அதிகார ஆசைகொண்ட ஜெர்மனியின் வசப்பட்டு மறுபடி காட்டுமிராண்டிகளாக ஆகிவிடுவார்களோ என்றும் நினைக்கப்பட்டது. மனித நாகரீகத்தின் முதல்தரமான பிரயோஜனங்களும், கலைகளும், சுகமான வாழ்க்கையும், தேசங்களுக்குள் பரஸ்பரமுள்ள சிநேகமும், இவைகளைக் காட்டிலும் மேலான ஸ்வதந்திரமும், ஸர்வதேச ஒற்றுமையும் உலகைவிட்டே ஒழிந்துவிடுமோ என்றும் யாவரும் எண்ணினார்கள்.

இவ்விதமெல்லாம் நினைத்ததற்கு பல காரணங்களும் இருந்தன. பிரிடிஷ் உதவிப்படை இங்கிலாந்து வந்து சேர்ந்தது. அதிலும் நல்ல தேர்ச்சியுள்ள பாகம் அழிந்துவிட்டது. அதை மறுபடி பலப்படுத்த இங்கிலாந்திலும் போதுமான படை இல்லை. ஏற்கனவே வெற்றியுடன்கூடிய ஜெர்மன் சைனியம், ஆக்கிரமித்த நாடுகளிலிருந்தும் சேகரம் செய்துகொண்டு பிரிடனைவிட அதிகமான சைனிய பலம் கொண்டிருந்தது. பிரான்ஸ் பூரா ஜெர்மனி வசமானதால் இங்கிலாந்திற்கு வர இறுதியில் 20-மைல் அகலமுள்ள கடல்தான் இருந்தது. இதை பிரிடிஷ் கப்பற்படையைக் கொண்டுதான் காபந்து செய்யவேண்டியிருந்தது. விமான பலமும் ஜெர்மனிக்கு அதிகமென்று கருதப்பட்டதால், ஜெர்மன் விமானங்களும் தடையில்லாமல் எங்கும் சஞ்சரிக்குமென்று யாவரும் நினைத்தனர். சுருக்கமாக, பிரான்ஸ் விழுந்தமாதிரி இங்கிலாந்தும் ஜெர்மனியின் வசமாகிவிடுமென்று உலகமே நினைத்தது. முன் சொன்ன பலகாரணங்கள் இருந்ததால், அப்படி இங்கிலாந்து எதிரி வசமாகியிருந்தாலும் ஒரு ஆச்சரியமாக இருந்திருக்காது.

ஆனால் தெய்வீகமாக ஒரு மாறுதல் நேர்ந்தது. மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் பிரதம மந்திரியாகி காமன்ஸ் சபையில் முன்வந்து பிரிடிஷ் மக்கள் ஒரு நாளும் எதிரி வசமாகமாட்டார்கள் என்று கம்பீரமாக அறிவித்தார். இங்கிலாந்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் கடல், தரை, விமான மூலமாக எதிரியை எதிர்த்துப் போர்புரிவார்கள் என்றார். தேவையானால் இங்கிலாந்திற்கு வெளியிலே சென்றும் சண்டை செய்யப்படுமென்றார். இவ்விதம் இவர் சொன்ன தைரியமளிக்கும் வார்த்தைகள் மனிதர்களின் ஆசைகளைத் தூண்டின. தேசமே ஒன்றுபட்டு இவர் சொன்ன வார்த்தைகளின்படி நடக்கத் தீர்மானித்துவிட்டது. ஆகவே இவை பிரதம மந்திரி ஒருவர் சார்பாக சொல்லப்பட்ட வார்த்தைகளல்லவென்று தெரியவந்தது. ஆனால் எதிரி மும்முரமாக எதிர்த்து வந்ததால் பிரிடிஷ்காரர்களுக்குச் சில சிரமம் ஏற்பட்டது.

பிரிடனைப் பிடிக்க யுத்தம் என்று சொல்லக்கூடியதாக பலமாதங்கள் பிரிடன் பேரில் விமானப் படையெடுப்புகள் நடந்தன. இங்கிலாந்தின் உயர்நிலைகளிலெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக லுப்ட்வாபி விமானப்படையின் அணிவகுப்புகள் தாக்குதல்கள் செய்தன. லண்டன், கவண்டிரி, பிரிஸ்டல், ஸௌத்தாம்டன், லிவர்பூல், மறுபடி லண்டன் இதுமுதலான செழிப்பான கிராமங்களும், ஜனநெருக்கமுள்ள தொழிற்சாலை ஸ்தலங்களும், கப்பல் தளங்களும் கெடுதி அடைந்தன. மனிதர்களுக்கும் சாமான்களுக்கும் நேர்ந்தசேதம் அதிகம்; ஆகவே, அது ஒரு கண்டமான சமயம்போலவே காணப்பட்டது. ஆனால் அந்த பயங்கர சமயங்களை இங்கிலாந்து மிகவும் அமைதியாகவே தாண்டிவிட்டது. இவ்விதம் இங்கிலாந்து தப்பியதிலிருந்து இரண்டு விஷயங்கள் முக்கியமாகப் புலப்பட்டன. ஒன்று பிரிடிஷ் விமானப்படையின் பலம். இது இப்பொழுது வலுப்பெற்றிருந்தபோதிலும் அக்காலங்களில் மிகவும் ஆரம்ப நிலையிலிருந்தும் யுத்தத்தை மும்முரமாக நடத்திற்று. இதற்கு உதவியளிக்க பிரிடிஷ் தொழிற்சாலை ஆட்கள் வாரம்



70-மணி நேரம் வேலைசெய்து வந்தனர். இப்படை அதிகபலம் கொண்ட எதிரியுடன் சண்டைசெய்ய வேண்டிவந்தது என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் தைரியம், அமைதி முதலியவைகளைக்கொண்டு பிரிடிஷ் விமானிகள் விமான ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டனர். இப்பொழுது மேலும் வெற்றிகரமாக இருந்து ஐரோப்பாவிலும் படையெடுத்து எதிரிக்கு கலக்கத்தைச் செய்கின்றனர். இரண்டாவதாக இங்கிலாந்தே புதிதாக உண்டாயிற்று என்று சொல்லும்படியாக காணப்பட்டது. ஜெர்மானியருக்கு வேத புஸ்தகம்போலுள்ள மெயின் காம்பில் ஹிட்லர், இங்கிலீஷ், பிரெஞ்சு, போர்ச்சுகீஸ், டச்சு முதலிய சாம்ராஜ்யங்களெல்லாம் வாழ முடியாது; ஜெர்மனி, இதாலி, ஜப்பான் முதலியோர் முன்வந்து எல்லா நாடுகளையும் கைப்பற்றிவிடுவார்களென்று எழுதியிருக்கிறான். இதை ஒத்து பிரெஞ்சு சாம்ராஜ்யமும் அழிந்தது. ஆகவே பிரிடிஷ் ராஜ்யமும் அழியுமென்று நினைத்தனர். மேலும் ரிப்பன்டிராப் என்பவன் பிரிடிஷ் மக்களுடன் பல நாட்கள் வசித்துவந்ததால் அவர்களைப்பற்றி அவன் சொல்லும் அபிப்பிராயம் சரியாக இருக்குமென்று நினைத்தனர். அவன் பிரிடிஷ் மக்களுக்கு யுத்தத்தில் வெறுப்பு இருக்கிறதாயும், சண்டைக்குத்தயாராயில்லை என்றும், அப்படி பலாத்காரமாக சண்டைவந்தால் முதலாளிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் யுத்தம் நேருமென்றும் சொன்னான். ஏனென்றால் முதலாளிகள் யுத்தத்தில் லாபமடையப் பார்ப்பார்கள். தொழிலாளிகள் விமானப் படையெடுப்பு காலங்களில் வீடுவாசல்களைவிட்டு ஓடும்படி நேரும். ஆகவே இருவருக்கும் சண்டை நேரலாமாகையால் பிரிடிஷ் மக்கள் மனம் தளர்ந்து எதிரியுடன் சாமாதானம் செய்துகொள்ளுவார்கள். அதனால் இப்பொழுது இருக்கும் சாம்ராஜ்யத்திற்கு அதிபதி என்ற கௌரவநிலை இங்கிலாந்திற்கு அழிந்து ஒரு மூலையில் ஒருவரும் கவனியாது கிடக்குமென்றும் சொன்னான். பிரெஞ்சுக்காரர்களைப்பற்றி ரிப்பன்டிராப் சொன்னது பலித்தது. ஆனால் பிரிடன் அந்த யுத்தத்தில் தலைதூக்கி நின்றதால் இங்கிலாந்தைப்பற்றி அவன் சொன்னது சுத்தமாகத் தவறிவிட்டது!

ஜனநாயகத்தைக் கண்டாலே ஜெர்மனியில் அரசியல் நிபுணர்களுக்கு அதிக வெறுப்பு. அதிலும் பிரிடனிலிருக்கும் ஜனநாயகம் அவர்களுக்கு அதிக வெறுப்பை உண்டாக்கியது. கடும் யுத்தகாலத்தில் ஜனநாயக ஆட்சி நடைபெறாதென்றும், அதிகமான முஸ்தீப்பிற்கு இடம் கொடுக்காதென்றும், அதற்காக கடும் ஆட்சி ஏற்பட்டால்தான் ஒற்றுமை, முதலியவை ஸ்தாபிக்க முடியுமென்றும்; ஜனநாயகத்திற்கும், கொடுமை ஆட்சிக்கும் யுத்தம் நேர்ந்தால் ஜனநாயகம் வீழ்ந்துவிடுமென்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இந்த யுத்தம் ஆரம்பித்து சில மாதங்கள் கிரமித்துப்பார்த்தால் முன் சொன்ன கொள்கைகளெல்லாம் பிசகு என்றே காணப்பட்டது. ஜனநாயகமே மிஞ்சுமா, மிஞ்சாதா என்ற பரீக்ஷையில் இங்கிலாந்து தப்பித்துக்கொண்டதால் ஜனநாயகத்திற்கு ஒருவித பயம் இல்லை என்று நிர்தாரணம் செய்யப்பட்டது.

இவ்விதமான ஜனநாயகத்தை ஸ்தாபிக்கச்செய்த முயற்சியால் இங்கிலாந்து உயிர் தப்பி எழுந்தது. அரசியல் வியவகாரங்களில் இங்கிலீஷ்காரர்கள் குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் தான். இருந்தாலும் பலவிதமாக ஸ்தாபனங்களை அமைப்பதைக் காட்டிலும், ஸ்தாபனங்கள் சரியாக வேலை செய்வதைத்தான் பிரிடிஷ் மக்கள் முக்கியமாக கவனிப்பார்கள். இதற்கு உதாரணமாக ஒன்று சொல்லுவோம். பிரான்ஸ் விழுந்ததிற்கு முன்பு சர்ச்சில் பிரெஞ்சு மக்களுக்குச் செய்த ஒரு பிரஸ்தாபம் மிகவும் முக்கியமானது. இருநாடுகளையும் ஒன்றாகப் பாவித்துக்கொண்டு சண்டையை நடத்துவோம் என்றார். இது ஒரு பெரும் தோரணையான வார்த்தையானாலும் பிரெஞ்சுக்காரர்கள் இதை அங்கீகரிக்காமல் தன் இஷ்டப்படி நடந்துகொண்டு அவமானத்திற்கு உள்ளானார்கள். பிரதம மந்திரி சொன்னது சாத்தியமா என்று கேட்கலாம். ஆனால் அவர் சொன்னதிலிருந்து பிரிடிஷ் மக்களின் கம்பீரமான மனப்பான்மை வெளியாகிறது. அரசியல் அங்கங்களில் நடக்கக்கூடாத எத்தனையோ விஷயங்கள் இருக்கலாப்

அரசியல் முன்னேற்றத்திலும் தாமதம் ஏற்படலாம். ஆனால் இதை எல்லாம் கவனியாது பிரிடிஷ் மக்கள் தங்களுக்குள்ள ஸ்வதந்திரங்களைப் பிரெஞ்சு மக்களுக்கும் கொடுப்பதாகச் சொன்னதுதான் பெரிய விஷயம்.

தற்கால யுத்த நெருக்கடியில் பிரிடிஷ் பார்லிமெண்ட் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தால், பிரிடிஷார் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் என்றும், ஜனநாயகத்திற்கே பலம் இயல்பானது என்றும் சொல்லலாம். 1940-ம் வருஷம் பூராவும் ஜெர்மானியர்கள் பார்லிமெண்டு நடக்குமிடத்தை வெடிகுண்டுகளினால் அழித்துவிட எத்தனித்தார்கள். அப்பொழுது வேறு எந்த பார்லிமெண்டும் பயந்துகொண்டு மறைவிடம் தேடியோ அல்லது ரகசியமாக சபை கூடியோ, அல்லது சபையைக் கலைத்துவிட்டோ அல்லது அதன் அதிகாரங்களைத் தனிப்பட்ட சில நபர்களுக்கு அல்லது ஒரு சிறு சபையினிடத்தில் ஒப்புவித்தோ ஆகிய இவைகளில் ஏதாவது ஒன்றைக் கட்டாயம் செய்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இங்கிலீஷ் பார்லிமெண்டு அவ்விதம் ஒன்றும் செய்யவில்லை. சிற்சில சமயங்கள் போக அது தொடர்ந்து வேலைகளை நடத்திவந்தது, சபையில் மெம்பர்கள் யாதொரு உண்மையையும் மறைத்துச் சொல்லவில்லை. அல்லது பொய்யை நேராடிச் சொல்லாமல் மறைவாகவும் சொல்லவுமில்லை. அங்கு தோல்விகள், கப்பல்கள், விமானங்கள், மனிதர்கள், யுத்தப்பொருள்கள் முதலியவைகள் நஷ்டம். இவையெல்லாம் பாரபக்ஷமின்றி சொல்லப்படுகின்றன. ருஷ்யாவில் நடக்கும் விஷயங்களை இதேமாதிரியாக ஒன்றையும் ஒளியாமல் ஹிட்லர் 'ரீச்ஸ்டாக்' சபையிலும், முஸோலினி, ரோமாபுரியிலும் சொல்லத் துணிவார்களா? அப்படி அவர்கள் சொன்னால் அடுத்த நிமிஷமே ஜனங்களால் நிராகரிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு மாறாக இங்கிலாந்து பிரதம மந்திரி பார்லிமெண்டில் தன் பிரகடனத்தை அவர் பின்வருமாறு பேசிமுடித்தார். "நான் உங்களை ரத்தம், கண்ணீர், வேர்வை சிந்தும்படி தூண்டுகிறேன்." இருந்தாலும் பிரிடிஷ் மக்கள் அவருடைய பிரகடனத்தை மெச்சி அவர் சொல்வதை ஒப்புக்கொண்டிருக்கிர்கள்.

மேலும் செல்வந்தர்கள் நிறைந்திருக்கும் இந்த தேசசபை அதிக லாபம் அபேக்ஷிப்பதைத் தடுத்து சட்டங்கள் போட்டிருக்கின்றன. எங்கும் போரிடும் யுத்த வீரர்களின் சம்பளவிகிதத்தை உயர்த்தி இருக்கிறது. அவர்களின் குடும்பங்களுக்கு ஒத்தாசை செய்கிறது. பணக்காரன், ஏழை, ஆண், பெண் இவர்களில் வித்தியாசமன்னியில் யுத்தத்தில் சேர்கிறார்கள். மின்சாரசக்தி உற்பத்தி, போக்குவரத்து, சுரங்கம் வெட்டுதல், கப்பல் போக்குவரவு துறைமுகங்கள், ஸர்க்கார் இலாகாக்கள் உண்டாக்குவது முதலிய அலுவல்களைத் தானே செய்கிறது. மேலும் தேசத்தில் பொதுமக்களின் வீடுகள் வெடிகுண்டுகளால் சேதமடைந்தால் ஜனங்களின் நிதியில் அவைகள் மறுபடியும் கட்டப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் யார் செலவு செய்கிறார்கள்? இங்கிலீஷ் மக்களே! இந்த உலகத்திலேயே அதிகமான வரிகள் போட்டிருப்பது இங்கிலாந்தில்தான். பார்லிமெண்டில் லாபத்தில் ஒருபவுனுக்கு 19 ஷில்லிங் வரி விதிக்கலாம் என்று பிரேரேபித்தபொழுது ஒருநபர் "ஏன், பூரா லாபத்தையும் எடுத்து கொள்ளலாமே! ஏன் ஒரு ஷில்லிங்கை விட்டு வைக்கவேண்டும்" என்றார். அதை அவர் விஷயமாகச் சொன்னதல்ல. இதைவிட மேலான சமஉரிமை (Communism) இல்லையென்றே சொல்லலாம்.

முன் காலத்தில் இங்கிலாந்து அரசனும், செல்வந்தர்களும் ஜனங்களால் விரும்பத்தகாதவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது அப்படியில்லை. அநேக வருஷங்களாக ஜனங்களின் கிளர்ச்சியினால் அநேக மாறுபாடுகள் ஏற்பட்டு மேற்சொல்லிய இரண்டும் மற்ற நாடுகளில் போய்விட்டன. அதனால் இப்பொழுதுள்ள அரசாங்கம் ஜனங்களால் புகழப்பட்டு கௌரவிக்கப்படுகிறது. மேலும் மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தி, மஹாராணி இவர்கள் இங்கிலாந்தில்



எதிரிகள் அடிக்கடி வெடிகுண்டுகள் போடும் சமயங்களில் அதற்குப் பயந்து வெளியூருக்குப்போக முற்றிலும் மறுத்து விட்டார்கள். அவர்கள் ஜனங்களிடம் யாதொரு வித்தியாசம் பாராட்டாமல், அவர்களுடன் சேர்ந்து எங்கு சென்றாலும் ஜனங்களுக்கு உத்ஸாகத்தையும், ஆதரவையும் அளித்து வந்தார்கள். மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியும், மஹாராணியும் யாதொரு துணையன்னியிலும் பாதுகாப்பன்னியிலும் வெடிகுண்டு விழுந்த இடங்களில் முதன் முதலில் போய் பார்த்தார்கள். அநேகர்கள் உயிர்களை இழந்தாலும் யாராவது புகார் செய்ய வேண்டுமே! ஒரு ஏழ்மையான ஸ்திரீ, வீடும் இழந்து, புருஷனும் கொல்லப்பட்டு, துக்கமடைந்த சமயத்தில் சமாதானமாக அவர்களுடன் பேசினாள். "ஜெர்மனியர்கள் மீண்டும், மீண்டும் வரட்டும்; நாமும் பொறுத்திருப்போம். கடைசியில் அவர்களை விழுங்கி விடுவோம்" என்றாள். சக்கிரவர்த்தியும், மஹாராணியும் பிரிடிஷார் ராஜ விசுவாசத்துடன் இருப்பவர்கள் போலவே அவர்களும் இருக்கிறார்கள்.

மற்றபடியாக விமானப் போருக்குப் பாதுகாப்புகளும், பூமியின் அடியிலுள்ள இருப்புப்பாதைகளும், ஜனங்கள் ஒன்று சேர்ந்து போஜனம் செய்யுமிடங்களும் ஜனங்களாலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு பிரபுவும், சாதாரண மனிதனும், செல்வந்தரும், கூலியாளும் யாதொரு வித்தியாசமன்னியில் சுகதுக்கங்களைப் பாராட்டுகிறார்கள். உணவு, தின்பண்டங்கள், தேயிலை, புகையிலை, சிகரெட்டுகள், உடை யாவும் பங்கிடப்படுகிறது. வகுப்பு உயர்வு தாழ்வு வித்தியாசங்கள் கவனிக்கப் படுவதில்லை. இப்பொழுது பிரிடிஷ் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து சிநேகப் பான்மையுடனும் புது உணர்ச்சியுடனும், ஒரே உறுதியுடன் இருந்து வருகிறார்கள். அழகிய சிற்றரசர்களுடைய கோட்டைகளும், பங்களாக்களும், இன்னும் செல்வந்தர்களுடைய வீடுகளுக்கும் இப்பொழுது தொழிற்சாலைகள் இருக்குமிடங்கள் எதிரிகளின் வெடிகுண்டுகளால் அழிக்கப்பட்டதால் அங்குள்ள குழந்தைகளும், காயமடைந்தவர்களும், வீடில்லாமல் தவிப்பவர்களும் வந்திருக்கின்றனர். மேற்சொல்லிய வீடுகளில் சாதாரண காலங்களில் சாமானிய ஜனங்கள் உள்ளே நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் அவ்வீடுகளுக்கு அநேக உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீகள் பிளாரன்ஸ் நைடிங்கேல் மாதிரி, அங்கு சென்று அவர்களுக்கு வேண்டிய உதவி செய்தும், வைத்திய உதவி செய்தும் வருகிறார்கள்.

எவ்விதம் பிரிடிஷ் மக்களுக்குள் உயர்வு, தாழ்வு, பணக்காரன், ஏழை, என்ற வித்தியாசம் அடியோடு போய்விட்டதோ, அதேமாதிரி அரசியல் வகுப்புகளில் உள்ள வித்தியாசங்களும் ஒழிந்தன. எவ்வளவு திடமனதுடன் இருந்தாலும் அரசாங்க நிர்வாஹிகளுக்கு தொழிலாளி கக்ஷியின் ஆதரவு இல்லாமல் இருக்க முடியாது. இப்பொழுது எங்கும் ஒரே தொழிலாளி கக்ஷிதான் பிரதானமாய் இருக்கிறது. மெஜாரிடி கக்ஷியிலிருந்து மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட்ட அரசாங்கம் போய் கூட்டுக் கக்ஷியிலிருந்து பொருக்கப்பட்டு மந்திரிகள் நடத்தும் அரசாங்கம் வந்து, அதிலும் தொழிலாளி கக்ஷியில் உள்ள மந்திரிகளும் சேர்ந்துஅரசாங்கம் நடத்துகிறார்கள். லேபர் கக்ஷியினர், தேசம் இப்பொழுது ஒன்று சேர்ந்திருக்கிறது என்றும், கான்ஸெர்வெடிவ் (Conservative) லிபரல் (Liberal) கக்ஷிகளைப்போலவேயும் காட்டிலும் யுத்தத்தில் ஜயமடைய வேண்டிய நோக்கத்துடனே நடந்து வருவதாயும் சொல்லிவருகிறார்கள். இதாலியிலும், ஜெர்மனியிலும் வேலை நிறுத்தங்கள் குற்றமாகக் கருதப்படும். ஒரு சமயம் முஸோலினி, கிளர்ச்சியை உண்டாக்கினவர்கள் சிலரைக் கொன்றுவிட்டார். அதன் பயனாக நாடெங்கும் ஒரே சமயத்தில் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் இங்கிலாந்தில் வேலை நிறுத்தங்களே இப்பொழுது தானாகவே நின்றுவிட்டன. ஸ்வல்ப மணிகள் வேலை செய்வது, உபரிச் சம்பள திட்டங்கள், விடுமுறை நாட்கள் இவைகள் இப்பொழுது கிடையாது. எல்லா தொழிலாளிகளின் சம்மதத்தின் பேரில்தான் இவ்வுரிமைகள் தாத்காலியமாக எடுத்துவிடப்பட்டன. மேலும்

இப்பொழுது சாமான்கள் உற்பத்தி செய்வது போராது என்று அதிருப்தியடைகிறார்கள். ஏராளமாக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். அதனால் அவர்களுக்கு யந்திரங்களை விட்டு கொஞ்ச நேரம் கூட இளைப்பாறுவதற்கு அவகாசமில்லை. அவர்களில் அநேகர் தாங்களாகச் சோர்வடைந்து கீழே விழும்வரை வேலை செய்கின்றனர். டொரதி தாம்ஸன் அமெரிக்காவில் புத்தகம் எழுதுகிறவள். ஒரு தொழிற்சாலை மானேஜர் சொன்னதை அவள் அப்படியே எழுதியிருக்கிறாள்: "நமது தேசத்திலுள்ள ஆண் மக்கள் அச்சு நாடுகளுடன் நேருக்கு நேரே சண்டையிடுவதுபோல் இருக்கிறது." ஆகவே பிரதம மந்திரியும் "இப்பொழுது பிரிடனின் விமான பலம், அச்சு நாடுகளின் விமான பலத்துக்குச் சமானாக இருப்பதாக" ரொம்ப கம்பீரமாகச் சொன்னார்.

மனித ஸ்வபாவத்தில் ஒரு குணமென்னவென்றால், மிருகத்தன்மையான வழிகளால் வெற்றி அடைந்தாலும் அதையாவரும் தயவுடன் உதவ நினைப்பார்கள். தோல்வி ஏற்படும் காலத்தில் பிறரின் அனுதாபம் ஏற்படுவது மிகவும் துர்லபம். ஆனால் பிரிடன் ஆபத்துக்குள்ளாகி வந்தகாலத்தில் அதற்குப் பல இடங்களிலிருந்து அனுதாபம் காட்டப்பட்டது. கடுமையான ஜெர்மன் படையெடுப்புகள் ஏற்பட்ட காலத்தில் பிரிடனைப்பற்றி பலவாறான கதைகள் அமெரிக்கா முதலிய நாடுகளில் பரவின. பிரான்ஸ் விழுந்தது போலவே எதிரியின் கொடுமை தாங்காமல் பிரிடனும் முறிந்துவிடுமென்று நினைக்கப்பட்டது. பிரிடிஷ் மக்கள் தைரியமாக நின்று கலங்காமல் சண்டைசெய்கிறார்கள் என்று பிரிடிஷ் பத்திரிகைகளும் பி. பி. ஸி. யிலும் சொல்லுவதை எல்லாம் வீண் பிரசாரம் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து ராஜீய நிபுணர்களும், பத்திரிகைக்காரர்களும், வியாபாரிகளும், வித்வான்களும், ஸ்திரீகளும் புருஷர்களும் கும்பல் கும்பலாக பிரிடனை நேரில் வந்துபார்த்த பிறகுதான் யாவருக்கும் உண்மை புலப்பட்டது. அப்பொழுதுதான் கொஞ்சமும் கலங்காமல் ஒரு தேசம் அலக்ஷியமாக எதிரியுடன் சண்டை செய்யலாமென்று தெரியவந்தது. அமெரிக்கப் பொது ஜன அபிப்பிராயமும் பிரிடனின் சார்பாகத் திரும்பியது. ஆங்கில-பிரெஞ்சு ஒற்றுமை குலைந்தாலும், அமெரிக்காவுடன் சேர்ந்து புதிதான சாம்ராஜ்யங்களை ஸ்தாபிக்க முடியுமென்று தெரிந்தது.

இதற்குக் காரணம் அவர்களின் தைரியமும் வீரத்தனமும்தான். இந்த இரு நாடுகளும் சேர்ந்ததிலிருந்து, உலகத்திற்கே ஒருநல்ல அமைப்பு ஏற்படக்கூடுமென்று சொல்லலாம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 5—12—41-லிருந்து 11—12—41-வரை.

**பஸிபிக்கில் யுத்தம்.**—தூரக்கிழக்கில் யுத்தம் பரவிவிட்டது. பல மாதங்களாக ஏற்பாடாகிக்கொண்டிருந்த யுத்தப்புயல் அடித்துவிட்டது. இதனால் ஆசியாவும், அமெரிக்காக்கண்டங்களும் ஈடுபடும்படி ஆகிவிட்டது. ஆகவே உலகம் பூரா. தரை, கடல் எல்லாம் யுத்தகளமாகிவிட்டது. மனிதவர்க்கமே ஈடுபடுகிறதும் இனி இந்த யுத்தம் இன்னும் சில நாட்கள் நீடித்து நடக்கும்போலிருந்தாலுநி வெளிச்சம் இருளை வெல்லுவதுபோல நேச தேசங்கள் இறுதியான வெற்றி பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதனால் உலகிலேயே ஸ்வதந்திரமும், நல்லெண்ணமும் ஸ்தாபிதமாகும்.



**ஜப்பானின் விச்வாஸ காதகத்தொழில்.**—பஸிபிக்கில் யுத்தத்தை பரவச்செய்ததிற்குக்காரணம் ஜப்பானும் அதன் யுத்த வெறிபிடித்தவர்களும்தான். கொஞ்சமும் ஸர்வதேச முறைகளுக்குட்படாமல், துரோகம், கொடுமை முதலிய குணங்களைக்கையாண்டு ஜப்பான் அமெரிக்காவுடன் சமாதானப்பேச்சு வார்த்தைகளைச் செய்துகொண்டே யுத்தத்தைத்தொடங்கியது. ஜப்பானிய சக்ரவர்த்திக்கு ஜனாதிபதி ரூஸ்வெல்டு அனாவசியமான யுத்தம்வேண்டாம் என்று எழுதியும் பயன்படவில்லை. அச்சுநாட்டுக்கொரே முறைகளில் கைதேர்ந்த ஜப்பானிய சைனியமும், கப்பற்படையும், பிரிடன் அமெரிக்காவிற்குச் சொந்தமான பஸிபிக் தீவுகளைத்தாக்கிற்று. தாய்லாந்தையும் தாக்கிற்று.

**தூரக்கிழக்குத் தாக்குதல்கள்.**—திடீரென்று பாய்ந்தால் யாவருக்கும் முதலில் வெற்றி கிடைக்கும்போல்தானிருக்கும். அதுபோல ஜப்பானுக்கு ஆரம்ப வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. ஷாங்கை பிடிபட்டிருக்கிறது. ஹாங்காங், பினாங, வடபோர்னியோ, டான்ஜாங், டடாங் (ஜோஹோரி), சிங்கப்பூர் முதலியவை தாக்கப்பட்டிருக்கின்றன. சிங்கப்பூரில் இரண்டுதடவை தாக்கியதோடு கடுகுப் புகையான கொடிய புகையை உபயோகித்திருக்கிறது. இவைகளைவிட வருத்தமானசெய்தி கிடைத்திருக்கிறது. ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ் என்ற 2-பிரிடிஷ் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. கொடபாஹரு என்ற இடத்தில் எதிரி நுழைய முயற்சிப்பதை பிரிடிஷ்படைகள் தடுக்கின்றன. கிழக்கு மலேயாவில் குவான்டன் என்ற இடத்திலும் எதிரி பிரவேசிக்க முயலுகிறான்.

பட்டானி என்ற இடத்தில் தாய்லாந்தில் புகுந்து பாங்காக் என்ற பிரதான நகரத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறான். சிறிதுநேரம் தடுத்து பிறகு ஜப்பானியரை உள்ளேவர, தாய் அரசாங்கத்தார் அனுமதித்திருக்கின்றனர்.

அமெரிக்கர்களுக்குச் சொந்தமான குவாம், ஒஹு, பேர்ல் துறைமுகம், ஹவாய், மணிலா, லூஸான், அபாரி, வேக்தீவு, நௌரு முதலிய எல்லாத்தீவுகளும் தாக்கப்பட்டன. இவ்விதமாக அமெரிக்கர்களுக்குச் சொந்தமான பிலிப்பைன் தீவுகளையும் பஸிபிக்கின் மத்தியிலுள்ளவைகளையும் பிடிக்கப்பார்க்கிறான். அமெரிக்க, பிரிடிஷ் கப்பற்படைகளைப் பிரிக்கவும் நினைக்கிறான்.

8-உ கலிபோர்னியாவிற்கு அருகில் இரண்டு எதிரி விமானக் கூட்டங்கள் பறந்தன. அலூஷியன் தீவுகளின்பேரிலும் பறந்தன.

இவ்விதம் ஜப்பான் ஜெர்மனியின் ஒற்றுமையின்பேரில் முன்னேறிவருகிறதென்று நேச தேசங்களுக்கும் தெரிந்ததுதான். இவ்விதமாகச்செய்தால் ஐரோப்பாவிற்கும், ஆபிரிக்காவிற்கும் அமெரிக்காவால் உதவிசெய்யமுடியாமல் போகுமென்று எதிரி நினைக்கிறான். ஆனால், அதிகமாகச் சாமான் உற்பத்தி செய்யப்படுவதால் எதிரி நினைப்பது பிசகாகிவிடும்.

7-ம் தேதி பிரிடன், அமெரிக்கா, ஸாம்ராஜ்யநாடுகள், சைனா, எகிப்து, சுதந்திர பிரான்ஸ், பெல்ஜியம், டச்சுநாடுகள், கிரீஸ், கூபா, கோஸ்டாரீகா முதலிய நாடுகளெல்லாம் ஜப்பான்பேரில் யுத்தம் தொடங்கிவிட்டன.

இவ்விதமாக இந்தியாவிற்கும் யுத்தம் வந்துவிட்டது. அஸ்ஸாம்பேரில் சனிக்கிழமை ஜப்பானிய விமானங்கள் பறந்ததாயும் சொல்லப்படுகிறது.

**லிபியா யுத்தம்.**—சென்ற வாரத்தின் கடைசி மூன்று தினங்களில் நேச தேசத் துருப்புகள் சோம்பலாகத்திரியவில்லை. இச்சமயத்திலும் எதிரிகளுடைய 41-விமானங்களும், 30-டாங்கிகளும், 2-பாட்டரிகளும், 5-விமான எதிர்ப்பு பீரங்கிகளும், 700-கைதிகளும், 150-யந்திர வண்டிகளும், 50-யுத்த சாமான் லாரிகளும் 45,000-காலன் பெட்ரோலும், 10,000-காலன் எண்ணெயும் கைப்பற்றப்பட்டன.

ஸிடிரெஸக், எல்டோர், எல் எடம் திரும்பப் பிடிக்கப்பட்டன. டொப்ருக் மறுபடி பிடிபட்டது. டொப்ருக்கின் கிழக்கிலுள்ள பாகம் துளைக்கப்பட்டது. எல் எடம், எல்கோபி, ஸொலூம், பார்டியா முதலிய 100-மைல் நீளமுள்ள இடத்தில் எதிரி தத்தளிக்கிருன். ரோமல் நேரே சண்டை ஏற்படாமல் தப்பிக்கப் பார்க்கிருன்.

**ருஷ்யா.**—ரோஸ்டவைப் பிடித்தபிறகு ருஷ்யர்கள் மேலும் 6,000 சதுர மைலுள்ள பல கிராமங்களடங்கின பிரதேசத்தைப் பிடித்தனர். அஸாவ், கூபிஷெலை நோக்கி ஓடும் வான்க்ளீஸ்டின் சேனை பிரிக்கப்பட்டு டாகன்ராக்கில் தாக்கப்படுகிறது. மியூஸ் நதியை நோக்கி ஜெர்மானியர் ஓடுகின்றனர். ருஷ்யர்கள் டானட்ஸ் பிரதேசத்தில் மாட்லயல்லையும் பிடித்து ரோஸ்டவ்—டாகன்ராக்கிற்கு 70 மைல் வடக்கே புதிதாக எதிரியைத் எதிர்த்திருக்கின்றனர். ஜெனரல் ஷ்வெல்டர் என்றவனின்கீழ் ஜெர்மன் சைனியம் டான் பிரதேசத்தில் சண்டைசெய்ய முயன்றது பலிக்கவில்லை.

மாஸ்கோவைச்சுற்றி பனி 9 அங்குல கனமிருக்கிறது. சீதோஷ்ணமும்—20 டிகிரியாக இருக்கிறது. எதிரி பனி காலத்தில் தங்க இடம் தேடுவதைத் தடுத்து ருஷ்யர்கள் சண்டை செய்கின்றனர்.

லெனின்கிராட்டையும் வாலோகோடாவையும் சேர்க்கிற ரயில்வே ஜங்ஷனை ருஷ்யர் பிடித்தனர்.

**மற்ருெரு அதிக்கிரமம். பிடேன்-கோயரிங் ஒப்பந்தம்.**—வேகாண்டை சில வாரங்களுக்குமுன் வேலையிலிருந்து விலக்கியது விஷியின் அதிகாரம் குலைந்ததால் தான் என்று இப்பொழுது நன்ருகத்தெரிகிறது.

பிடேனுக்கும் கோயரிங்கிற்கும் டிஸம்பர் 1-ல ஸெயிண்டு பிளாரண்டைன் வெர்ஜிகோனி என்ற இடத்தில் விஷிக்குச் சொந்தமான வட ஆபிரிக்காவிலுள்ள விமான தளங்களை உபயோகித்துக்கொள்ள ஜெர்மனி அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பதிலாக விஷி பொறுத்துக்கொள்ளவேண்டிய செலவைக் குறைத்துக்கொள்வதோடு பிரெஞ்சுக் கைதிகளை விடுவிப்பதாகவும் ஜெர்மனி ஒப்புக்கொண்டிருக்கிறது. இவ்வொப்பந்தத்தின் பயனுக மேற்கு ஆபிரிக்காவில் உள்ள பிரெஞ்சு ஸ்தலத்தை பிரெஞ்சு-ஸ்பெயின் பிரதேசமென்றும் சொல்லப்படுமாம். ஆனல் ஜெர்மானியர் உள்ளே புகுவார்கள் என்று நமக்குத்தெரியும். ஆனல் பிரெஞ்சு கப்பற்படை உதவாத காரணம் தெரியவில்லை. தேசத்தை விட்டுக்கொடுத்தாலும் கப்பற்படையை கொடுக்க விஷிக்கு இஷ்டமில்லை. ஆகவே ஜெர்மன் துருப்புகளை ஸ்பெயின் மூலமாயும், மொராக்கோ மூலமாயும் தான் ஆபிரிக்காவினுள் அனுப்பமுடியும். சமீபத்தில் ஸினர் ஸுனர் பெர்லினுக்குச் சென்ற சமயத்தில் இதற்கு இணங்கும்படி செய்யப்பட்டிருப்பான்.

பிஸார்டி, கஸெளபா, ஓரன், அல்ஜியர்ஸ், போனு, கஸாபிளாங்கா, டாகர் பிரதேசங்கள் முதலியவைகளை ஜெர்மனி கப்பற்தளமாயும், விமானதளமாயும் உபயோகித்துக்கொள்ளலாம். ஆனல் லிபியாவுக்கு அருகில் இருப்பதால் கஸெளபா, பிஸார்டி இடங்களுக்கு ஸிஸிலி ஸார்டீனியா வழி வரமுடியாது. ஓரானுக்கு வரலாம். கஸாபிளாங்கா, டாகரிலிருந்து அமெரிக்காவை பயமுறுத்த எண்ணமிருக்கலாம்.

இதிலிருந்து விஷி அரசாங்கம் கேவல நிலைக்கு வந்துவிட்டதென்றும், ஏற்கனவே தனக்கு இருக்கும் பாதைகளில் தடைஏற்படுவதால் சைனியம் அனுப்ப ஜெர்மனியால் முடியவில்லையென்றும் தெரிகிறது. மேலும், வட ஆபிரிக்காவில் பிரிடிஷார் பலமாக சண்டை செய்வதால் ருஷ்யாவிலிருந்து சைனியங்களைக் கொண்டுவரும்படி எதிரிக்கு நேர்ந்திருக்கிறது.



**ஒரு தீர்மதமான யுத்தம்.**—ஜெர்மனிக்கு ஸாதகமாக பின்லாந்து, ஹங்கேரி ருமேனியாவும் இருப்பதைத் தடுக்க முயற்சி செய்யவேண்டியதுதான். ருஷ்யாவுடன் பிரிடன் சேர்ந்திருப்பதால் இவர்களுடன் நேசம் கொண்டாட முடியாது. பின்லாந்திற்கு மாத்திரம் கொஞ்சம் தயவு காட்டி ருஷ்யாவிலிருந்து அகலும்படி எச்சரிக்கை அனுப்பப்பட்டது. கரேலியாவை விடுவிக்க பின்லாந்து சண்டை செய்கிறதாம். மற்ற நாடுகள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆகவே இந்நாடுகளோடு சண்டைசெய்வதாக பிரிடன் சொல்லிவிட்டது. மற்ற நாடுகளுக்கு இடைஞ்சலில்லாத போதிலும் ஆர்கேஞ்சலில் நமக்குத் தடை செய்யும்போது பின்லாந்து பலமாகத் தாக்கப்படும்.

**ருஷ்யு-போலாந்து** உடன்படிக்கை டிஸம்பர் 4-ல் உண்டாகி அதன் பயனுக ஜெர்மனியை எதிர்த்துப் போராடவும், தகராறுகளை யுத்தத்திற்குப் பிறகு தீர்மானித்துக்கொள்வதாயும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

**மூன்ருவது போர் முனை.**—ஜெர்மானியரை கொரில்லா படை மூலம் தாக்குவதென்று கெய்ரோவிலிருந்து யுகோஸ்லாவியா அரசாங்கம் அறிவித்தது. பாஸ்னியா, மான்டினீக்ரோ இடங்களில் ஜெர்மானியர் பலமாகத் தாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—11—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | இரவு.—கப்பல் கட்டுமிடங்கள், கப்பல் துறைகள்—ஹாம்பர்க் (Hamburg). | ... | ... | ... |
| | கப்பல் தளம்.—எம்டன் (Emden). | | ... | ... |
| | துறைகள்.—பிரமெர்ஹேவன் (Bremerhaven), வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmshaven), கீல் (Kiel), லுபெக் (Lubeck). | ... | ... | ... |
| | சுரங்கங்கள் போடுவது.—விரோதிக் கடல்களில். | ... | ... | ... |
| | கப்பல்கள்.—டச்சுக் கடற்கரைக்கருகில் | ஒரு எண்ணெய்க் கப்பலும், மற்றும் பல கப்பல்களும் தாக்கப்பட்டன. | 20 பாம்பர்கள். | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—11—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விமானச் சண்டைகள்.—லிபியாவில் (Libya). | ... | ... | ... |
| | விமானமிறங்குமிடம்.—மார்டுபா (Martuba). | ... | ... | ... |
| | யுத்தசாமான்கள் இருக்குமிடம், கூடாரங்கள், வண்டிகள்.—மார்டுபாவிற்கு அருகிலுள்ள ரஸ்தாவில் (Martuba) | ... | ... | ... |
| | விரோதி மோட்டார் போக்குவரவு.—ஸிடிரெஸெக், எல்டூடா, பிரதேசங்கள் (Sidi Rezech, and El Duda). | ... | ... | ... |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகளும், நிலயத்திலுள்ள விமானங்களும்.--போர் அரங்கம் பூராவும். | ... | 17 விமானங்கள். | 59 விமானங்கள். |
| **1—12—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | இரவு.—கப்பல் கட்டுமிடங்கள்—கிறிஸ்டியன்ஸண்டு (Christiansund). | ... | ... | ... |
| | ஒரு ஸ்பிளை கப்பல்—கிறிஸ்டியன்ஸண்டு, துறைமுகத்தில் (Christiansund). | தாக்குண்டது. | நஷ்டமில்லை. | ... |
| | **லிபியா (Libya).** | | | |
| | லக்ஷியங்கள்—பெங்காஸி (Benghazi), டெர்ளு (Derna). | ... | ... | ... |
| | மோட்டார் போக்குவரவு—டெர்ளு-ஸிரென் ரஸ்தா (Derna-Cyrene Road), பார்ஸி (Barce). | பல வண்டிகள் சேதமாயின. | ... | .... |
| | ஜன சஞ்சாரம்—டோல்மெட்டா (Tolmetta), பார்ஸி (Barce), டெர்ளு (Derna) ரஸ்தாக்கள். | ... | ... | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | ஒரே விரோதி எண்ணெய்க்கப்பல்—நாசகாரியுடன் சென்றது. மத்தியதரைக்கடலின் மத்தியில். | நேரே தாக்கப்பட்டு மூழ்கியது. | 5 விமானங்கள். | ... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | காலாட்படை, பீரங்கிப்படை, விமானச் சண்டைகள், நிலயத்திலிருக்கும் விமானங்கள்—போர் அரங்கம் பூராவும். | ... | 4 விமானங்கள். | 12 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **2—12—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | இரவு.—விரோதிக் கப்பல்கள்—நார்வே கடற்கரைக் கருகில் (Norway). | ... | ... | ... |
| | லக்ஷியங்களும், விமான நிலயங்களும்.—ஆக்கிரமித்த பிரான்ஸ், (France). | ... | ... | ... |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி மோட்டார் போக்கு வரவு.—எல் கோபி, எல் ஏடம் (El Gobi), (El Adem) பிரதேசத்திலுள்ள ரஸ்தாக்கள். | ... | ... | ... |
| | விமானங்கள் இறங்குமிடம்.—ஏஜிடாபியா (Agedabia). | ... | ... | ... |
| | ஸப்ளைக்கிடங்குகள், கட்டடங்கள்.—பார்டியா (Bardia). | ... | ... | ... |
| | 5 விரோதி எண்ணெய் டாங்கிகள் மோட்டார் லாரிகள், மற்ற வண்டிகள், ஸிர்டி (Sirte) பிரதேசம். | ... | ... | ... |
| | விரோதி டாங்கிகளும், கவசம் அணிந்த வண்டிகளும்.—ஸிடி ரெஸெக் (Sidi Rezech) பிரதேசம். | ... | ... | 1 விமானம். |
| | விமானச் சண்டைகள்.—போர் அரங்கத்தின் பேரில். | ... | | 8 விமானங்கள் பல சேதமாயின. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள் நிலயத்திலிருந்த பல விமானங்கள்.—போர்முனை பூராவும். | ... | 17 விமானங்கள். | 55 விமானங்கள். |
| | விரோதிப் போக்குவரவு சாதனங்கள்.—ஜெர்மன் அணிகளுக்குப் பின்னால். | ... | ... | ... |
| **3—12—41.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகல்.—விரோதி ஸப்ளைக் கப்பல் நார்வே கடற்கரைக் கருகில் (Norway). | தி மூண்டது. | ... | ... |
| | இரவு.—தகவலில்லை. | ... | ... | ... |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப்படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **3—12—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| லிபியா (Libya). | | | |
| மோட்டார் போக்குவரவும் விரோதி ஸ்தானங்களும்.—கபூஸோ, எல் ஏடம் ரஸ்தா, (Capuzzo—El Adam), ஸிடி அஸிஸ் (Sidi Aziz) பிரதேசங்கள்). | ... | ... | ... |
| விமான நிலயத்திலிருந்த விமானங்கள், விரோதிக் கப்பல்கள்.—பார்ஸி (Barce). | பல விமானங்கள் சேதமாயின. | ... | ... |
| லக்ஷியங்கள்.—எல் ஏடம் (El Adem) பிரதேசம். | பெரும் தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| ருஷ்ய விமானங்களால். | | | |
| கிழக்குப் போர்முனை. | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயத்திலிருந்த விமானங்கள்.—போர் அரங்கம் பூராவும். | ... | 1 விமானம். | 5 விமானங்கள். |
| **4—12—41.** (வியாழக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| பகல்.—ஒரு விரோதி ஸப்ளைக் கப்பல்—நார்வே கடற்கரைக்கு அருகில் (Norway) | தீ மூட்டப்பட்டது. | ... | ... |
| ஒரு கம்பியில்லாத்தந்தி நிலயம்.—நார்வே (Norway) | ... | ... | ... |
| லிபியா (Libya). | | | |
| எதிரி மோட்டார் வண்டிகளும், சைனியங்களும்.—ஸிடி ரெஸக் (Sidi Rezech). | பல்வண்டிகள் சேதமாயின. | ... | ... |
| விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசம். | ... | ... | ... |
| பெட்ரோல் கப்பல்கள்.—கடற்கரை ஸிர்டி (Sirte) | தீ மூண்டன. | ... | ... |
| கட்டடங்களும், மோட்டார் போக்குவரவும் எல் ஏடம் (El Adem) பிரதேசம் | ... | ... | ... |
| வண்டிகளைச் சேகரம் செய்யும் இடம், ரயில்வண்டிகள் நிற்குமிடம், 24 பெட்ரோல் டாங்கியுள்ள ரயில்வண்டி.—ஸிஸிலி (Sicily), ஸான்ஜியோவனி (Sangiovanni) | பல தீக்கள் மூண்டன! | ... | 4 விமானங்கள். |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **4—12—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| ருஷ்ய விமானங்களால். | | | |
| கிழக்குப் போர்முனை. | | | |
| விமானச் சண்டைகள், நிலயங்களிலுள்ள விமானங்கள், விரோதிப்படைகள்.—போர்முனை பூராவும். | ... | 13 விமானங்கள். | 35 விமானங்கள். |
| பின்வாங்கும் எதிரிப்படைகள், ரோஸ்டவ்.—பிரதேசம் (Rostov) | ... | ... | ... |
| **5—12—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| பகல்.—யந்திரவண்டி—டச்சுக்கடற்கரைக்கு அருகில் '(Dutch). | நேரே தாக்கப்பட்டது. | ... | ... |
| இரவு.—விரோதிக் கப்பல்கள், டச்சு, நார்வே, பிரெஞ்சு கடற்கரை (Dutch, Norway, French.) | ... .. | ... | ... |
| ஒரு ஸப்ளை கப்பல்.—பிஸ்கே குடா (Biscay.) | ...... | ... | ... |
| லிபியா (Libya). | | | |
| விமானச் சண்டைகள்.—போர் அரங்கம் முழுவதும். | ... | ... | 21 விமானங்கள். |
| மோட்டார் போக்குவரவு.—துருப்புகளின் நிலை கபுஸோ ரஸ்தா (Capuzzo). | பல லாரிகள் சேதமாயின; அதிகம் பேர் இறந்தனர். பெட்ரோல் லாரிகள் தீ மூட்டப்பட்டன. | ... | ... |
| விமானச் சண்டை.—மத்தியதரைக் கடல் (Mediterranean). | ...... | ... | 1 விமானம். |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | 6 விமானங்கள். | ... |
| இதாலி (Italy). | | | |
| தளவாடசாலை, டார்பிடோ தொழிற்சாலை, விமானம் கட்டுமிடம், வண்டிகளை ஒழுங்கு படுத்துமிடம்.—நேபிள்ஸ் (Naples). | வெடிகளும் தீக்களும் மூட்டப்பட்டன. அதிகம் சேதமாக்கப்பட்டது. | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **5—12—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | கிழக்குப் போர்முனை. | | | |
| | விமானச் சண்டைகள், நிலயத்திலிருக்கும் விமானங்கள்.—போர் அரங்கம் பூரா. | ...... | 4 விமானங்கள். | 14 விமானங்கள். |
| **6—12—41.** (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| | பகல்.—விரோதிக்கப்பல்கள் கடற்கரைக்கு அருகில் (Norway). | நார்வே 2 கப்பல்கள் தாக்கப் பட்டன. | ... | ... |
| | 3 தொழிற்சாலைகள்,—வட பிரான்ஸ் (France). | தீ மூண்டன. | நஷ்டமில்லை. | ... |
| | லிபியா (Libya). | | | |
| | விரோதி யந்திர மோட்டார்கள், டாங்கிகள், டாங்கிகளை சுமந்து செல்லும் வண்டிகள்—எல் ஏடம் (El Adem) பிரதேசம். | மிகவும் அதிகச்சேதம். | ... | ... |
| | ஒரு பெரும் கட்டடம்—எல் ஏடம் (El Adem). | ... | ... | ... |
| | விரோதி மோட்டார் போக்குவரவு—டெர்ன-டோப்ருக் ரஸ்தா (Derna-Tobruk). | ... | ... | ... |
| | விமான நிலயம், நிலயத்திலுள்ள விமானங்கள்—ஜெடாபயா (Jedabaya). | ... | 12 விமானங்கள். | ... |
| | விரோதி மோட்டார் போக்கு வரவு—மரௌவா-பாய்டியா ரஸ்தா (Maraua-Faidia). | ... | ... | ... |
| | இதாலி (Italy). | | | |
| | யுத்த தளவாட சாலை, கப்பல் கட்டும் இடங்கள்—நேபிள்ஸ் (Naples). | ... | ... | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | கிழக்குப் போர்முனை. | | | |
| | விமானச் சண்டைகள், நிலயங்களில் உள்ள விமானங்கள்—போர்முனை பூராவும். | ... | 7 விமானங்கள். | 31 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **7—12—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| | பகலில் நடந்த சண்டையைப்பற்றி தகவலில்லை. | | | |
| | இரவு.—ஏஷன் (Achen). | ... | ... | ... |
| | லிபியா (Libya). | | | |
| | விரோதி கவசமணிந்த மோட்டார் படைகள்—எல் ஏடம் (El Adem), அக்ரோமா (Acroma), பிரதேசங்கள். | ... | ... | ... |
| | மோட்டார் போக்கு வரவு—அக்ரோமா—எல் கஸாலா ரஸ்தா (Acroma-El Gazala). | ... | ... | ... |
| | டெர்ன (Derna), பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| | விமான நிலயம்—காஸ்டல் பெனிடோ (Castel Benito). | தீக்கள் மூட்டப் பட்டன. | ... | ... |
| | விமானச் சண்டைகள்—லிபியா (Libya) | ... | ... | 6 விமானங்கள் |
| | இதாலி (Italy). | | | |
| | கப்பல் கட்டுமிடங்கள்—நேபிள்ஸ் (Naples). | ... | ... | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | கிழக்குப் போர்முனை. | | | |
| | விமானச் சண்டைகள், நிலயங்களில் உள்ள விமானங்கள், காலாட்படை—போர்முனை பூராவும். | ... | 11 விமானங்கள். | 44 விமானங்கள் |
| | பின்வாங்கும் எதிரி சைனியங்கள்—ரோஸ்டவ் பிரதேசம் (Rostov). | ... | ... | ... |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|
| **1—12—41.** (திங்கட்கிழமை). | | | |
| பிரிடன் (Britain). | | | |
| இரவு.—சில இடங்கள்—தென்மேற்கு இங்கிலாந்து (England). | சிறிது சேதம், சிலர் கொல்லப் பட்டனர். | ... | ... |
| ருஷ்யா (Russia). | | | |
| மாஸ்கோ—(Moscow). | ... | 4 விமானங்கள். | ... |
| **2—12—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| பிரிடன் (Britain). | | | |
| இரவு.—தென்மேற்கு இங்கிலாந்து (England). | சிறிது சேதம். | ... | ... |
| ருஷ்யா (Russia). | | | |
| மாஸ்கோ (Moscow). | ... | 13 விமானங்கள். | ... |
| **3—12—41.** (புதன்கிழமை). | | | |
| பிரிடன் (Britain). | | | |
| இரவிலும் பகலிலும்.—நடந்த சண்டைகளுக்குத் தகவலில்லை. | ... | ... | ... |
| ருஷ்யா (Russia). | | | |
| மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| **4—12—41.** (வியாழக்கிழமை) | | | |
| பிரிடன் (Britain). | | | |
| தகவலில்லை. | ... | ... | ... |
| ருஷ்யா (Russia). | | | |
| மாஸ்கோ (Moscow). | ... | 21 விமானங்கள். | ... |
| ருஷ்யப் போக்குவரவு. | | | |
| ருஷ்யச் சேனைகளுக்குப் பின்புறமாக. | ... | ... | ... |
| மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| மால்டா (Malta). | விரட்டப்பட்டது. சேதமில்லை. | ... | ... |
| **5—12—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| இரவு பகல் சண்டைகளுக்குத் தகவலில்லை. | ... | ... | ... |
| ருஷ்யா (Russia). | | | |
| மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |



| தேதி. லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், ருஷ்ய விமான நஷ்டம். |
|---|---|---|---|
| **6—12—41.** (சனிக்கிழமை). | | | |
| பிரிடன் (Britain). | | | |
| தகவலில்லை. | ... | ... | ... |
| ருஷ்யா (Russia). | | | |
| மாஸ்கோ (Moscow.) | ... | 3 விமானங்கள். | ... |
| **7—12—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| பிரிடன் (Britain). | | | |
| இரவு.—கடற்கரை ஜில்லாக்கள்—கிழக்கு, தென்மேற்கு இங்கிலாந்து (England). | சொற்ப சேதம்; சிலருக்குக் காயம். | ... | ... |
| ருஷ்யா (Russia). | | | |
| மாஸ்கோ (Moscow). | ... | 5 விமானங்கள். | ... |
| ஜப்பானிய விமானங்களால். தூரக்கிழக்கு (Far East). | | | |
| ஹவாய் (Hawaii). | ... | ... | ... |
| மணிலா (Manila), பிலிப்பைன்ஸ் (Philippines.) | ... | ... | ... |
| சிங்கப்பூர் (Singapore). | ... | ... | ... |
| **8—12—41.** (திங்கட்கிழமை)— | | | |
| பிரிடன் (Britain). | | | |
| தகவலில்லை. | ... | ... | ... |
| ருஷ்யா (Russia). | | | |
| மாஸ்கோ (Moscow). | ... | ... | ... |
| ஜப்பானிய விமானங்களால். தூரக்கிழக்கு (Far East). | | | |
| ஹாங்காங் (Hongkong), பினங் (Penang) ஹானேலூலு, (Honolulu), மணிலா (Manila). | ... | ... | ... |

---

## யுத்தக் குறிப்புகள்.

---

**ஜப்பானிய யுத்தம் ஆரம்பமாகி விட்டது.**

பயத்தை விளைவிக்கக்கூடிய எச்சரிக்கைகளும் ஏற்பாடுகளும், சூசனைகளும் செய்துகொண்டிருக்கும் போதே ஞாயிற்றுக்கிழமை விமானமூலமாக அமெரிக்கா, பிரிடிஷ் சாம்ராஜ்யம் முதலிய நாடுகளை ஜப்பான் தாக்கியது. இதனால் ஒரு பரபரப்பு, முக்கியமாக இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி பரபரப்பு முன்பு ஜெர்மனி போலாந்தையும், ருஷ்யாவையும்

படையெடுத்தகாலங்களில் உண்டாகியது. ஜப்பானிலுள்ள ராணுவத்தலைவர்களும் அச்சுநாட்டுக் கக்ஷிக்கு இணங்கினவர்களும் ரகசிய சூழ்ச்சிகளால் ஜனநாயகங்களின் மனதில் சந்தேகம், உதாசீனம், வெறுப்பு முதலியவைகளை உண்டுபண்ணி யுத்தவெறிகொண்டு திரிகின்றனர். இதுபோலவே ஆசியாவின் தென்கிழக்கிலுள்ள சிறு நடுநிலைவகிக்கும் நாடுகளின் மனதிலும் இவ்வித எண்ணங்கள் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன. ஜப்பான் யுத்தத்தை ஆரம்பித்ததிலிருந்து அங்குள்ள நாடுகள் ஒன்றுசேர்ந்து, மனச்சாக்ஷிக்கு விரோதமாயும், அகங்காரமாயும், கொடுமையாயும் நடந்துகொள்ளும் ஜப்பானைக்கண்டிக்க ஒரு தருணம் வாய்த்திருக்கிறது. மேலும் ஜப்பான் நாஸிக்கொள்கைகளைக் கைக்கொள்ளும் எண்ணத்தினால் ஒருகுற்றமும் அறியாமல் சமாதானத்தில் ஈடுபட்ட ஜனங்களைப்பாடுபடுத்த நினைத்திருக்கிறது. இது இனி அடக்கப்படும்.

ஜப்பானிய பிரதிநிதிகள் அமெரிக்காவில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் போதே யுத்தத்தை ஜப்பான் தொடங்கியது நாஸிகளின் முறைகளுக்கும், நாஸிகளுக்கு சிஷ்யனாக இருப்பதற்கும் ஒத்ததுதான் இருக்கிறது. கடைசியாக அமெரிக்கா அனுப்பிய கடிதத்திற்கு பதில் அனுப்பியதில் ஜப்பானியர் பகிரங்கமாகக்கண்டுள்ள விஷயங்களின் மதிப்பைப்பற்றி மிஸ்டர் கார்டல் ஹல் கோபமாக வியாக்யானம் செய்திருக்கிறார். கொஞ்சமும் கண்யமில்லாமல் ஜப்பான் நடந்துகொண்டிருக்கிறதாக ஹல் சொல்லியிருக்கிறார்.

கடைசியாக யுத்தம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி திருப்திகரமாக ஒன்றும் சொல்லமுடியாது. ஆனால், எதிரிகள் இரண்டாம் தடவை ஒருபெரும் பிழைசெய்திருக்கின்றனர் என்று மாத்திரம் சொல்லலாம். முதல் பிழை ஹிட்லர் ருஷ்யாவை எதிர்த்ததுதான். இந்த இரண்டாம் பிழையை ஜப்பான் தற்போது செய்திருக்கிறது. இப்பொழுது உலகின் எல்லாபாகங்களிலும் யுத்தம் நடந்துவருகிறது. இப்படி எல்லாம் செய்தாலும் அச்சு நாட்டினர் மனிதவர்க்கத்தையே கைப்பற்றமுடியாது.

வி வி வி வி வி வி வி வி வி வி

**ஜெர்மன் பான்ஸர் படை பிடிபட்டது.**

ஸிரேனைகா பிரதேசத்தில் கடும்யுத்தம் நடக்கிறது. இதில் காலாட்படைகள்தான் முக்கியமாகக் கலந்துகொண்டிருக்கின்றன. நேசதேச சைனியங்கள் கொஞ்சம் மெதுவாக முன்னேறினாலும் மிஸ்டர் சர்ச்சில் சொல்லும் விதமாக "எதிரியின் யந்திரப்படைகளை முறிப்பது" தான் முக்கிய நோக்கமாக இருந்துவருகிறது.

உண்மையில் நாம் போட்டதிட்டப்படி சண்டை நடக்கிறது. இப்பொழுது நான்காம் தடவையாக எதிர்ப்பு செய்யப்படுகிறது.

முதல் தடவை செய்யப்பட்ட எதிர்ப்பில், எதிரி ஸோலூம், ஹால்பயா பாகத்திற்கு இடையில் இருக்கும் போது நேரே அவனைத்தாக்காமல் உள்நாட்டில் சென்று அவனைச் சூழ்ந்துகொள்ளப்பட்டது. இது வெற்றிகரமாக ஆகி, தினம் 50 மைல்வீதம் முன்சென்று எதிரி திடீரென்று தாக்கப்பட்டான்.

இரண்டாம் தடவை நம்மால் செய்யப்பட்ட எதிர்ப்பில் முன்சொன்னவிதமாக சூழப்பட்ட எதிரி பலமாகச் சண்டை செய்தான். டாங்கிகளையும் சிப்பாய்களையும் இழந்தான். தரையிலிருக்கும்போதே எதிரிவிமானங்கள் தாக்கப்பட்டன. சாமான் வைக்குமிடங்களும் சைனியங்களும் பிரிடிஷ் விமானங்களால் நாசமாக்கப்பட்டன. இப்படி முன்சென்று ஸிடிஓமரும் பார்டியாவும் துண்டிக்கப்பட்டன. கிழக்கிலும் ஸிட்ராகுடாவரையில் செல்லப்பட்டது. ஸிடிரெஸக்கும் தாக்கப்பட்டது.



மூன்றும் தடவை நாம் படையெடுத்து அரங்கத்தில் வைத்திருந்த ஜெர்மன் லுப்ட்வாபி விமானங்களும், சைனியங்களும் தாக்கப்பட்டன. 15,000 பேர் கைதி செய்யப்பட்டனர். டாங்கிகளையும் இழந்தனர். எதிரி சைனியம் ஐந்து விதமாகப்பிரிக்கப்பட்டு ஒன்றை ஒன்று சேரவிடாமல் செய்யப்பட்டது. பிறகு சீதோஷ்ண நிலையின் மாறுதலால் சண்டையே இல்லாமலிருந்து மறுபடி நாம் செய்த எதிர்ப்பு மிகக்கடுமையாக இருந்ததால் எதிரி தப்பித்துக்கொள்ள பெரும் முயற்சி செய்யவேண்டி இருந்தது. இனிமேலும் பெரும் யுத்தம் நேரும். நிச்சயமாக எதிரி ஓடநேரும். எதிரியின் பான்ஸர் படைகளும் அழிந்துவிடும்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**ஒரு விசித்ரமான மகாநாடு.**

ருஷ்யாவிற்கு விரோதமாக பெர்லினில் கூடிய கூட்டம் வெறும் வீண் ஆடம்பரமாகவே முடிந்தது. ஐரோப்பியநாடுகள் சேர்ந்து புதுதிட்டத்தை அங்கீகாரம் செய்ய வீயன்னாவில் கூடவிருந்த கூட்டத்திற்கு பதிலாக ஹிட்லரின் பாடம் படிக்க சக்தியற்ற குழந்தைகள், பள்ளிக்கூடத்தில் கூடுவது போல இவர்கள் பெர்லினில் கூடினார்கள். ஆனால் இவர்களும் கோயபல்ஸ் சொல்லிக்கொடுத்தபடிதான் திரும்பிப் பாடத்தை ஒப்பிக்க நேர்ந்தது.

இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெரிந்தன. முதலாவதாக ஐரோப்பிய நாடுகளுக்குப் புதுத்திட்டம் என்ற பாடம் ரிப்பன்டிராப் என்ற தலைமை உபாத்தியாயரால் வியாக்யானம் செய்து கற்றுக்கொடுக்கப்பட்டது. இந்தக் கருணை வாய்ந்த உபதேசகரின் அபிப்பிராயப்படி புதுதிட்டம் என்றால் ராமராஜ்யத்திற்குச் சமமாகுமாம், ஏனென்றால் "ஜெர்மானியர் வசமுள்ள டாங்கிகளும் விமானங்களும் சேர்ந்து எல்லாநாடுகளிலும் கலகமேற் படாமல் பாதுகாத்துக்கொள்ளுமாம்"!!! விசேஷமான குறிப்புகளை பள்ளிக்கூடப்பையன்கள் குறித்துக்கொள்ளுவது போல், அங்கு கூடிய ஐரோப்பிய நாடுகள் இரண்டு ஜெர்மன் ஒலிபரப்புகளையும் குறித்துக்கொள்ள வேண்டியது தான்.

அதாவது :—"மனிதவர்க்கத்தின் க்ஷேமத்தின் பொருட்டு கைதிகளைக்கொலை செய்வது யுக்தமாகும்".

"ஜெர்மானியர் மற்றநாடுகளுடன் சிநேகபாவத்தை விரும்புவதால் மற்ற நாடுகள் சுயேச்சையாக இருக்கமுடியாது".

இந்த குறிப்புகளுடன், சர்ச்சில் காமன்ஸ்சபையில் செய்த பிரசங்கத்திலுள்ள ஒரு அம்சத்தையும் இவர்கள் சேர்த்துகொள்ளலாம். இது வருங்காலத்திற்கு மிகவும் உபயோகமாக இருக்கும். ஏனென்றால் சர்ச்சில் சொன்னதிற்கும், இவர்கள் கற்றுக்கொண்ட பாடத்திற்கும் சில வித்தியாசம் இருக்கிறது. சர்ச்சில் சொன்னதாவது :—"கவர்ன்மெண்டிற்கு விரோதமாக அபிப்பிராயம் சொல்லுகிறவர்களை அரசாங்கத்தார் தாக்கி ரப்பர் தடிகளால் அடிப்பதுமில்லை, ஜெயில்களில் அடைப்பதுமில்லை, வேறுவிதமாகத் தொந்தரவு செய்வதுமில்லை." இவ்விதம் சொல்லுகிறவரை நாஸிகள் ராக்ஷஸத்தனமாக கொலைத்தொழிலில் ஈடுபட்டவன் என்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**வெளித்தோற்றத்தை சரிபடுத்துவது.**

ஒரு பள்ளிக்கூடத்தைபற்றி பெற்றோர் அபிப்பிராயத்தை வெளிவிடுவதுபோல் ரிப்பன்டிராப்பிடம் ஹிட்லரின் புது திட்டப் பாடத்தை கற்றுக்கொள்ளச் சென்றது சரிதான் என்று புகழ்ந்து அந்தந்த நாடுகள் நற்செய்திகள் அனுப்பியிருக்கின்றன.

டென்மார்க் :—" அந்த மகாநாட்டிற்குபோவது அனுகூலமென்று நினைத்து அரசாங்கத்தினர் அழைப்பை அங்கீகரித்தனர்" (கோபன்ஹேகன் ரேடியோ).

ஸ்பெயின் :—" பிரிடனுக்கும் ருஷ்யாவிற்கும் உள்ள ஒற்றுமையை முறிக்க இந்த மகாநாட்டில் கையெழுத்தான ஒப்பந்தம் சரியான ஏற்பாடாகும்"

(ஸ்பெயின் ரேடியோ).

ஜப்பான் :—" ஜப்பான் இவ்வொப்பந்தத்தில் சேராமலிருந்தாலும், எந்த நாடுகளுடனும் ஜப்பானுக்கு விரோதம் கிடையாது."

(ஜப்பானிய சமாசாரப் பத்திரிகை).

பின்லாந்து :—" இவ்வொப்பந்தத்தால் பின்லாந்திற்கும் இதரநாடுகளுக்கும் உள்ள சம்பந்தம் மாறவில்லை."

இவ்விதமாக வந்த செய்திகளில் பூராவாக பிரியம் இல்லாதபோனாலும் ரிப்பன்டிராப்பிற்கு அதிக சந்தோஷம்தான். இதைப்போலவேதான் அச்சு நாட்டினர் கொடுக்கும் கணக்கு விவரங்களும் சரியாக இல்லாமல் பெரும்படியாக இருக்கிறது.

இவ்வொப்பந்தம் 40,00,00,000 ஜனங்களின் சார்பாக ஏற்பட்டதாக ஹங்கேரிய ரேடியோ கூறுகிறது.

500,000,000 பேருக்கு மேலாகவே இருக்குமென்று ஜெர்மன் ஒலிபரப்பில் சொல்லப்படுகிறது. இதைவிட அதிகமாயும் இருக்குமாம். ஆகவே 750,000,000 பேர் என்றே நாம் வைத்துக்கொள்ளலாம். இப்படி அதிகபடுத்திக்கொண்டே போவார்கள்.

இதாலிய ரேடியோ எவ்வளவு பூஜ்யங்களைச் சேர்த்துச்சொல்லிற்று என்று தெரியவில்லை. சைனாவிலுள்ள 300,000,000 பேர்களையும் சேர்த்துக்கொண்டிருக்கலாம்.

இவ்விதம் வந்துவிட்டுப்போன ஐரோப்பிய நாடுகளுக்கு வெகுமதிகளும் கொடுக்கப்படும். அமெரிக்காவை ஜப்பான் ஜயித்தாலும். ருஷ்யா, ஸைபீரியா நாடுகளை ஜெர்மனி பிடித்தாலும், பிரிடனைப் பட்டினிபோட்டே சாகடித்து பிறகு தான் வெகுமதிகள் கொடுக்க சாத்தியமாகும். இப்படியெல்லாம் நடத்தப்படும் ஐரோப்பிய நாடுகளுக்கு என்ன சந்தோஷம் ஏற்படுமென்று தெரியவில்லை. இவர்கள் வருங்காலத்தில் க்ஷேமத்தை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது உடுக்க வஸ்திரமில்லாமலும். தின்பதற்கு ஆகாரமில்லாமலும் மாரி காலத்தில் அவஸ்தைப்படும்படியெல்லாம் நேர்ந்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி வி வி வி

**விமானப் படையெடுப்பு.** இரண்டு மாதகாலமாகக் கடுமையாக ஜெர்மன் தொழிற்சாலைகளை பிரிடிஷ் விமானங்கள் தாக்கிவந்த திட்டம் நின்றுவிட்டது என்று சிலர் எண்ணுகின்றனர். இதைப் பற்றி காமன்ஸ்சபையிலும் சிலர் முணுமுணுக்கின்றனர். ஆனால் சீதோஷ்ண நிலை சாதகமாகும்போது ஜெர்மனி, இதாலி இரண்டையும் முன்பைவிட கடுமையாயும், அடிக்கடியும் தாக்குவதாகப் பிரதம மந்திரியும் மற்றவர்களும் அறிவித்தனர்.

ஸெப்டம்பர் 3உ முதல் நவம்பர் 27உ வரை 38 படையெடுப்புகள்தான் செய்யப்பட்டிருக்கின்றன. இக்குறைவை ஒரு பெரும் கெடுதியாக சர்ச்சில் நினைக்கவில்லை. இதில் பெர்லின், ஜினோவா, டூரின்பேரில் 18 படையெடுப்புகள்



செய்யப்பட்டன. பிரின்டிஸி, நேபிள்ஸ், இதாலியின்கோடி முதலிய நாடுகளில் செய்த படையெடுப்புகளே போதுமானதென்றும் பிரதம மந்திரி நினைக்கவில்லை. இவைகளை மத்தியக்கிழக்கிலிருந்து கன்னிங்ஹாம் ஏற்பாடுசெய்தார்.

இவ்விதமாகக் குறைந்த படையெடுப்புகள் செய்யப்பட்டதிலிருந்தே சீதோஷ்ணநிலை சரியாக இல்லையென்று தெரிந்துகொள்ளலாம். ரூர், ரைன்லாந்து முதலிய நாடுகளில் பனி மிகக் கடுமையாகவே இருக்கிறது! விமானத் தற்காப்புகள் சரியாக ஜெர்மனியில் செய்யப்பட்டிருப்பதாலும், அவைகளைப் பனி கவர்ந்து விடுவதாலும் கண்டுபிடிக்க பெரும் வெளிச்சங்களைப் போட வேண்டியிருக்கிறது. இவ்விதமான கஷ்டங்களில் விமானங்களையும் மனிதர்களையும் அனுப்புவது சுத்தப் பைத்தியக்காரத்தனமாகும். ஆகவே வட கடலிலும், இங்கிலீஷ் கால்வாயிலும் எதிரிக் கப்பல்களைத் தாக்குவதும், பெட்ஸாமோவிலிருந்து பியாரிட்ஸ் வரையிலுள்ள கடற்கரை ஓரமாக சஞ்சரிப்பதும், கடல் சுரங்கங்களைப் போடுவதும், துணைக் கப்பல்களை அனுப்புவதும்தான் சரியென்று அவ்விதமே செய்யப்படுகிறது.

ஜெர்மானியரும் சீதோஷ்ணநிலையைக் கட்டுப்படுத்தமுடியாது. டிஸம்பர் 7உ விமான மந்திரி சொன்னதாவது :—" பாம்பர் விமானமென்பதை சரியானபடி உபயோகித்தால் எதிரிக்குப் பலவித இடைஞ்சலை உண்டாக்கும். ஆதலால் சரியானபடிக்கும் அதிகமாயும் உபயோகிப்பதெனத் தீர்மானித்திருக்கிறோம். ஜெர்மனியின் ராணுவம் அவஸ்தைப்படுகிறது..............ஜெர்மன் கப்பல்களையும். யுத்தத் தொழிற்சாலைகளையும், போக்குவரவையும் ஜெர்மானியரின் மனோபாவத்தையும் முறிக்கத் தீர்மானித்திருப்பதால் ஐரோப்பாவில் சைனியங்களை இறக்குவதற்கு முன் ஏற்பாடாகவே கருதலாம். சென்ற யுத்தத்தில் பிரான்ஸில் நம்படைகள் புகுந்து ஜெர்மனியைத் தோற்கடித்தன. இப்பொழுது ஜெர்மனியிலே சென்று தாக்கப்படும். இதை ஜெர்மானியரும் அறிந்திருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**உடைப்புகள்.** இவ்வாரத்தில் வேறு விசேஷங்களைக் கொடுக்க முடியவில்லை. தென் இந்திய ரயில்வேயில் பல பாகங்களில் மழையால் உடைப்புகள் நேர்ந்து போக்குவரவு இன்னும் சரியாக சீர்படுத்தப்படவில்லையாதலால் தகவல்கள் சரியாகக்கிடைக்கவில்லை. பகவத் கிருபையால் இனிமேல் கிடைப்பவைகளைச் சேகரித்துத்தருகிறோம்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**மற்றச்செய்திகள்.** இந்தப் பகுதியை எழுதியபிறகு அனேக சம்பவங்கள் நேரிட்டிருக்கின்றன. பஸிபிக் மகா சமுத்திரத்தின் தன்மைமாறி, அது உக்கிரோஷம் செய்கிறது. நமக்கு பெரிய இரண்டு சண்டைக் கப்பல்களின் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் இவற்றிற்குப் பதிலான கப்பல்களைக் கட்டிவிடுவதாக எடின்பரோவிலுள்ளவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். சந்தேகமன்னியில் அமெரிக்கர்களை சரியானபடி ஜப்பானியர்கள் வளைத்து விட்டார்கள். பஸிபிக் சமுத்திரத்தில் மால்டாவுக்கு ஸமானமான பேர்ல் தீவிலுள்ள அமெரிக்கர்கள் மத்தியதரைக் கடல் அரணிலுள்ளவர்கள் தைரியமாய்ச் சண்டை செய்திருப்பதுபோல அவ்வளவு வலுவாகச் சண்டை செய்யவில்லை. நிலைமை பயங்கரமாக இருக்கிறது. ஆகிலும் திடீரென்று தாக்குவதென்பது முன்போக்காகச் சண்டை செய்கிறவருக்குச் சாதகமாகத்தானிருக்கும். இப்பகுதியில் முதல் பாராவில் வெளியிட்டிருக்கும் மாதிரியாகவே ஜப்பான் இந்த யுத்தத்தில் கலந்துகொண்டது அச்சுநாடுகள் செய்த இரண்டாவது பெரிய தவறுதல். இது அவர்களுக்கு அதிக நஷ்டம் விளைவிக்கக் கூடியது.

இதாலியானது வீரம் பொருந்திய ஜப்பானியர்கள் கக்ஷியில் சண்டை செய்வதில் பெருமை பாராட்டுகிறது என்பது விந்தையானது. பெருமை பாராட்டுவதற்கு இதாலிக்கு ஒரு ஷேஷ்யமும் இல்லையென்பது ஸ்பஷ்டமானது. ஆனாலும், ஹிட்லர் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து ஜெர்மனி அம்மாதிரி பீத்துக்கொள்ளவில்லையென்பது கவனார்கமுள்ளது. அதில் ஜப்பானின் செய்கையைப் புகழும்படிக்காவது, அல்லது அதற்காக நன்றிபாராட்டக் கூடியதாகவாவது ஒருவிஷயமும் காணப்படவில்லை. ஜெர்மானியர்களும், விசேஷமாக ஹிட்லரும் தங்களுடைய பேச்சுக்களை விழுங்கிவிடுவதில் சாமர்த்தியம் பொருந்தியவர்கள். ஆகிலும் மெயின்காம்பில் சொலலப்பட்டிருக்கும் மதசம்பந்தமான கொள்கைகளை ஒரே மூச்சில் விழுங்கிவிடமுடியாது.

---

# பாம்பர் விமானப்படையின் விருத்தாந்தம்.

[கடைசிப் பகுதி.]

## விமானப்படைத் தலைவன் அதிகாரம் செலுத்தும் விதம்.

## படையெப்புகளுக்குப் போவதற்கு முன் விமானிகளுக்குக் கொடுக்கும் பயிற்சி.

## பிரிடிஷ் விமானப் படையெடுப்புகள் வரவர அதிகமாகச் செய்யப்படுகின்றன.

பாம்பர் விமானப்படையிருக்கும் பிரதான ஸ்தலத்தில் விமானப்படைத் தலைமை அதிகாரியின் ஆபீஸ் இருக்கிறது. அங்கிருந்துகொண்டுதான் விமானப் படையெடுப்புகளைப்பற்றிய அதிகாரத்தைச் செலுத்துவான். இது பசும்புல் நிறைந்த இடத்தில் ஸிமெண்டு காங்கிரீட்களால் காபந்துசெய்யப்பட்டிருக்கும். காலை 9-மணிக்கு இந்த இடத்திற்கு அவன் வருவான்.

இந்த இடம் நாலு பக்கங்களிலும் விஸ்தீர்ணமானது. சூரியன் பிரகாசித்தாலும் மழை பெய்தாலும் இந்த அறைக்குள் வெளிச்சம் இருந்துகொண்டேயிருக்கும். காற்று வசதி உண்டு. கீழே தரையில் ரப்பர் பரப்பப்பட்டிருக்கிறது. உள்ளே செல்ல ஒரே பாதைதான். இங்கே செல்ல மாடிப்படியிருக்கிறது. இந்த இடங்களில் காவல்காரர்கள் இருப்பதால் உத்தரவன்னியில் உள்ளே பிரவேசிக்க ஒருவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உள்ளே போகும் பாதைக்கு எதிர் சுவற்றில் மூன்று கரும்பலகைகள் 30′ × 10′ விஸ்தீர்ணத்தில் இருக்கின்றன. இதைப் பார்த்தவுடனே எந்தந்த இடங்களில் எவ்வளவு விமானங்கள் இருக்கின்றனவென்றும், ஒவ்வொன்றும் செய்துவரும் செயல்களும், மீதியுள்ள விமானங்களின் எண்ணிக்கையும் தலைமை அதிகாரிக்கு உடனேயே தெரியும்.

தனது ஆஸனத்தில் அமர்ந்ததும், முதல் நாள் இரவில் கிடைத்த அறிக்கைகளைப் படித்து ஆங்காங்குள்ள நிலைமைகளைச் சீக்கிரத்தில் தெரிந்துகொள்ளுவான். இவ்வித அறிக்கைகள், தனி விமானக்கூட்டங்கள் அதிகாரிகளிடமிருந்து வரும்.

இனிமேல் தாக்கப்படவேண்டிய லக்ஷியத்தின் விவரம் இவனுக்குத் தெரியும். ஏனென்றால் அவ்வித லக்ஷியத்தை யுத்த மந்திரிகள் தீர்மானித்து இவனுக்குத் தெரியக் கொடுத்திருப்பார்கள். இவர்கள் செய்த தீர்மானத்தின்படி விமான இலாகா நடந்துகொள்ளும். விமானத்தலைமை அதிகாரியும் தனக்கு கிடைத்துள்ள விவரங்களின்படி தான் நடந்துகொள்ள வேண்டும்.

லக்ஷியத்தின் நிலை தெரிந்தபிறகு அதைத் தாக்குவதற்கான விமானங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். தன் வசமுள்ள விமானங்களின் பலத்தின்படி இவன் விமானங்களை அனுப்புவான்.



பிறகு தனி விமானக்கூட்டத்தின் அதிகாரியுடன் இரவு காலங்களில் தாக்கக்கூடிய லக்ஷியத்திற்குச் செல்லவேண்டிய விமானங்களைப்பற்றி சர்ச்சை செய்யப்படும். ஏனென்றால் குறுகிய இரவில் ஒரு லக்ஷியத்தில் பல விமானங்கள் சேர்ந்து தாக்க முடியாதாகையால் இதைப்பற்றி முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

விமானிகள் தங்குமிடத்தைக் கவனிப்போம். அன்றிரவு விமானமேறி செல்லவேண்டியவர்களுக்கு, முன்னமேயே ஒரு எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கும். அப்படி செல்வதற்குமுன் ஒரு அறையில் இவர்கள் வந்து சேர்ந்திருப்பார்கள். இவர்கள் இருக்கும் அறையில் ஒரு மேடையும் அதில் ஒரு கரும்பலகையும் இருக்கும். அவ்விதமான பல அறைகளில் பின்வருமாறு ஒரு நோட்டீஸ் இருக்கும். "நீங்கள் செய்துவரும் படையெடுப்புகளைபற்றி உண்மைகளைச் சொல்லாமலிருப்பதே மேலானது. அதனால் உங்களை முட்டாள் என்று அழைத்தாலும் பாதகமில்லை. ஆனால் கண்டதெல்லாம் சொல்லிவருவது தவறாகும்."

அப்பொழுதுதான் தாக்கவேண்டிய லக்ஷியங்களுக்குத் தக்கவாறான பயிற்சி அளிக்கப்படும். உதாரணமாக எண்ணெய்ப் பிரதேசத்தைத் தாக்கும்போது அவர்கள் செய்யவேண்டியது பின்வருமாறு தனி விமானக்கூட்டத்தின் அதிகாரி சொல்லுகிறார்:—"இன்றிரவு ஜெல்ஸென்கிர்சென் என்ற இடத்திலுள்ள கலப்பு எண்ணெய் தயாரிக்கும் யந்திரங்கள் உள்ள ஸ்தலத்தை தாக்கவேண்டும். ஜெர்மனியில் இரண்டு விதமான எண்ணெய் தயாரிக்கும் யந்திரங்கள் இருக்கின்றன. எண்ணெயை சுத்தப்படுத்தி மசகு எண்ணெய் பிரிப்பது ஒன்று; கலப்பு எண்ணெய் தயாரிப்பது மற்றொன்று. பிரகிருதமாயுள்ள லக்ஷியத்தில் நிலக்கரியிலிருந்து பெட்ரோல் எடுக்கக்கூடிய இரண்டு கருவிகள் இருக்கின்றன. படத்தில் B என்று குறிக்கப்பட்டுள்ள இடத்தில் (hydrogen) ஜலவாயு உண்டாக்கக்கூடிய யந்திரம் இருக்கிறது. இதில் இக்காற்றை அடைக்கக்கூடிய அறையில் பெரும் குண்டு விழுந்தால் நிச்சயம் வெடிக்கும். இதனால் அங்கே வேலை செய்துகொண்டிருக்கும் யந்திரங்களுக்கு சேதம் ஏற்படும். இந்த இடத்தில் குண்டுகள் போட ஏற்பாடு செய்யுங்கள்."

இதற்குப் பின்னர் விமானங்களுக்கு பிரத்யேகமான தலைவன் மற்ற விமானிகளுடன், லக்ஷியங்களை நோக்கி போகக்கூடிய மார்க்கம் முதலியவைகளைப்பற்றி கலந்து பேசிக்கொள்ளுவான். உடனே ஆகாரம் செய்துகொண்டு பறப்பதற்கு லாயக்கான ஆடைகளை அணிந்துகொள்வார்கள்.

மேலே பறக்க உத்தரவு பெற்றவுடன், விமான ஓட்டி தன் யந்திரங்களை திறப்பான். மேலே ஆயிரம் அடிகள சென்றவுடன் லக்ஷியம் இருக்கும் திசையை நோக்கி விமானங்கள் செல்லும். காற்று சாதகமாக இருந்தால் புறப்பட்டவுடனேயே லக்ஷியம் இருக்கும் திசையைநோக்கிச் செல்லமுடியும். இல்லாவிட்டால் விமான நிலயத்தைச் சுற்றிக்கொண்டு செல்லவேண்டியிருக்கும். கடலைக் கடக்கும்போது குண்டுகள் தயாராக வைக்கப்பட்டிருக்கும்.

இவ்விதம் ஜெர்மனியை நோக்கிப்போகும் விமானங்கள் டச்சுக் கடற்கரையைக் கடந்துசெல்லும். அங்கே மேகக்கூட்டத்தின் வழியே போக நேர்ந்தால் நக்ஷத்திரங்களின் வெளிச்சத்தாலும், வேறுவிதமான வெளிச்சங்களைக் கொண்டும் செல்லுவார்கள். சாதாரணமாக இருந்தால் ஹாலந்தின் எல்லையில் உள்ள வாய்கால்களின் அடையாளங்களைக் கொண்டும் செல்லுவார்கள்.

லக்ஷியங்களுக்கு அருகில் சென்றவுடனே விமானங்களில் வெளிச்சம் அதிகமாகக் காணப்படும்.

ஆனால் வெளிச்சங்கள் பலவிதமாகத் தோன்றும். ஒரு சமயத்தில் மிருகங்களின் சிவந்த கண்கள் போலவும், குண்டுகள் வெடிக்கும்போது பிரகாசமான நெருப்புபோலவும் காணப்படும். இச்சமயத்தில், அதாவது குண்டுகளைப்போடப் போகும் தருணத்தில் விமானிகள் தயாராக இருப்பார்கள்.

அச்சமயத்தில் விமான மாலுமி தலைவனைப்பார்த்து "எல்லாம் சரியாக இருக்கிறது, திரும்பிப்பார்" என்பான். இதற்குள் தலைவன், லக்ஷியத்தை நேரே தாக்குவதா, பாய்ந்து தாக்குவதா என்பதைத் தீர்மானித்திருப்பான். பாய்ந்து தாக்குவதால் கீழே செய்யப்பட்டிருக்கும் தற்காப்புகள் எல்லாம் கலைந்துவிடும். விமானங்கள் வருவதைக் கண்டுபிடிக்க வைத்திருக்கும் கருவிகளும் சரியாக வேலை செய்யாது. அப்பொழுது விமான ஓட்டி, மேலே போகும்போது ஒவ்வொரு 200 அடி உயரத்தையும் தெரிவிப்பான்.

மாலுமி இச்சமயத்தில் குண்டுகளின் ஆராய்ச்சி கருவி (bomb-sight) மூலம் கவனமாகப் பார்த்துக்கொண்டிருப்பான். அவனுக்கருகில் பலவிசைகள் இருக்கும். இவைகளைக்கொண்டு குண்டுகள் போடவேண்டிய மாதிரியை யோசிப்பான். இக்குண்டுகள் ஒரே கூட்டமாகவோ அல்லது ஒன்றன்பின் ஒன்றாகவோ போடப்படும். ஆராய்ச்சிக் கருவி, விமானவேகம், காற்றின் வேகம் முதலியவைகளுக்குத் தக்கவாறு குண்டுகள் சரியாகவே அமைந்துகொள்ளும். அதனால் எப்பொழுது வேண்டுமானாலும் குண்டுகள் போடமுடியும்.

குண்டுகள் போடப்பட்டவுடன் "குண்டுகள் சென்றுவிட்டன" என்று மாலுமி அறிவித்துவிடுவான்.

இம்மாதிரியாக பாம்பர் விமானப்படை ஜூலை 1941 வரை செய்துவந்த செயல்கள் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இத்துடன் ஒரு காலவரை குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, படையெடுப்புகள் நிறுத்தப்படவில்லை. இதைப் போல ஸ்டார்லிங், மான்செஸ்டர், ஹாலிபாக்ஸ், கோட்டை விமானங்கள், முதலியவைகளின் செயல்களை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறோம். இப்படையெடுப்புகளால் நிச்சயமாக எதிரி தோற்றுப்போவான் என்று சொல்லலாம். எதிரியின் நாடுகளும் நாசமாகும்.

இப்படி ஏற்படுமென்று நிச்சயமாகவே சொல்லலாம். இவ்விதம் செய்வதைத் தான் பிரிடிஷ் விமானப்படை வெகுநாளாக திட்டம்செய்து வந்திருக்கிறது. லுப்ட்வாபி என்ற ஜெர்மன் விமானப்படையின் எண்ணிக்கையை அடையப் பார்ப்பது பிரயோஜனமில்லை என்று விடப்பட்டது.

எண்ணிக்கையைக் காட்டிலும் குணம்தான் பெரிது. இதை உத்தேசித்து வெகு நாளாக விமானப்படை தயாரிக்கப்பட்டது. எதிரியும் இம்மாதிரி விமானங்களின் செய்கைகளுக்குப் பிரதி செய்யமுடியவில்லை. மேலும் பிரிடன், அமெரிக்கா இவைகளின் தொழிற்சாலைகள் மும்மரமாக வேலைசெய்து, கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா முதலிய இடங்களிலிருந்து விமானிகளும் வந்தால் விமான ஆதிக்கத்தை நிச்சயமாக அடைந்து நாம் வெற்றிபெற முடியும்.

எதிரி நாடுகளில் படையெடுப்புகள் விடாமல் செய்யப்படுகின்றன. ஜூன் 22-ல் உலகங்களுக்கு பிரதம மந்திரி ஒலிபரப்பியதில் "இரவும் பகலும் விடாமல் ஜெர்மனிமேல் குண்டுகள் அதிகமாகவே போடப்படும்" என்றார். இது வீண் வார்த்தையால் பயமுறுத்தச் சொன்னதாக நினைக்கக்கூடாது. ஏனென்றால் கார்யாம்சையிலும் செய்யப்படுகிறது. இவர் சொன்னதைத்தான் பாம்பர் விமானப்படை காரியத்தில் செய்துகாட்டுகிறது. ஜெர்மானியர் செய்யும் சண்டை இடம், பொருள்களைக் கவனியாது தயவு, எல்லையில்லாமல் நடந்துவருகிறது. ஆனால் இப்படிச் செய்வது தவறு என்று பின்னாடிதான் அவர்களுக்குத் தெரிய வரும். பாம்பர் விமானப்படையும் ஓய்வு ஒழிவு இல்லாமல் தாக்கிவரும். ஓய்வு இல்லாமல் செய்வதாலும், பலமாக செய்வதாலும் எதிரிக்கு மிகுந்த ஆபத்து விளையும்.



# பிரிடன் பேசுகிறது.

## வெர்னன் பார்ட்லெட் மறைத்துச் சொல்பவரல்ல.

பி. பி. ஸி. யில் ஒலிபரப்பியது.

"தற்கால நிகழ்ச்சியைப் பற்றி நான் போன தடவை பேசியதற்குப் பிறபட்டு வெளியூருக்குப் பிரயாணம் செய்ய நேரிட்டது. மாஸ்கோவிற்கு பிரிடிஷ் துருப்புகள் முதன் முதலில் யுத்தத்திற்கு பிரயாணமானதும் நானும் அவர்களுடன் கூடப்புறப்பட்டேன். மொத்தத்தில் நாங்கள் 15,000 மைல் தூரம் வரை விமானத்திலேயே சென்றோம். நடுவழியிலுள்ள ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்திற்குச் சொந்தமான ஏராளமான காடுகளுக்கு உயரத்தான் பறந்து சென்றோம். அவ்விடங்களில் வைக்கப்பட்டிருக்கும் ருஷ்யத் துருப்புகளுக்கு நடுவில் தங்கித், தங்கிச் செல்லாமல் ஒரேயடியாகப் பறக்கும் விமானங்களை எதிரி விமானங்கள் என்று கருதி, அவைகளைச் சுட்டுவீழ்த்தும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் நடுவில் சில இடங்களில் இறங்கி மோட்டாரிலும், ரயிலிலும், கப்பல் தளகர்த்தர் ஏறிச் செல்லும் படகிலும், பெரிய க்ரூயிஸர் கப்பலிலும், நாசகாரியிலும், கண்ணியெடுக்கும் படகிலும், தெப்பக்கட்டையிலும் செல்லவேண்டியிருந்தது. இந்தப் பிரயாணத்தில் நடந்த சம்பவத்தில் ஒன்றை இங்கு குறிப்பிடுகிறேன். நான் பீவர்புருக் தூதுகோஷ்டியுடன் ஊருக்குத் திரும்பி வந்தேன் அந்த சமயத்தில் நாங்கள் வந்த சிறிய பிரிடிஷ் கப்பலிலிருந்து க்ரூயிஸருக்கு மாற வேண்டியிருந்தது. தரையில் மாறுவதை ஒத்து இங்கும் இருக்கும் என்று நினைத்திருந்தேன். ஒரு கப்பல் மற்றொரு கப்பல் பக்கம் வரும்படி செய்து அவை இரண்டையும் ஒன்றாகக் கயிறுகளைக்கொண்டு கட்டி, பிறகு மரப் பலகைகள் வழியாக பிரயாணிகள் இறங்கி வரலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் நான் நினைத்ததற்கு மாறாக எங்களை ஏற்றிச் சென்ற கப்பல் மாலுமிகள் வெகு சிரமம் எடுத்துக்கொண்டார்கள் என்று க்ரூயிஸரிலுள்ள உத்தியோகஸ்தர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் கப்பலிலிருந்து வெளியே வருவதற்குள் ஐந்தாறு தடவைகள் எங்கள் கப்பல் க்ரூயிஸரை நெருங்கி வந்தது. ஒவ்வொரு தடவையிலும் எங்கள் கப்பல் தலைவர் வெகு ஜாக்கிரதையாக அடுத்தாற்போல் இருக்கும் க்ரூயிஸர் பக்கம் மெதுவாக நெருங்கிச் செல்லுங்கள் என்றும், அவ்விதம் செல்வதற்கு வேண்டிய உபாயங்களையும் மாலுமிகளிடம் உறத்துப் பேசும் கருவியைக்கொண்டு பேசினார். தலைவரின் உத்தரவுப்படி ஒவ்வொரு மாலுமியும் வெகு ஜாக்கிரதையுடன் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இருந்தாலும் ஒவ்வொரு தடவையிலும் க்ரூயிஸரின் மேல் மோதி பலமான சப்தத்தை உண்டாக்கிற்று. கப்பலுக்கு எங்கு சேதத்தை விளைவித்துவிட்டோமோ என்று பயந்து மாலுமிகள் தங்கள் கை விரல்களை முறுக்கிக்கொண்டார்கள். இதற்குள் தலைவர் "என்னப்பா, கப்பல் மோதுண்டதால் கெடுதல் ஏற்பட்டு, பழுது பார்ப்பதற்கு ஊருக்கு அனுப்பவேண்டியதுபோல் இருக்கிறதே"! என்று சொன்னார். பிறகு இவ்விதம் மிகவும் சிரமப்பட்டு எங்கள் கப்பலை எதிர்த்தாற்போலிருந்த க்ரூயிஸர் பக்கம் ஒன்றுசேர்த்து இரண்டு கப்பலையும் ஒன்றாகக் கயறுகளைக் கொண்டு கட்டப்பட்டது பிரும்மபிரயத்தனமாய் விட்டது. க்ரூயிஸர் கப்பலிலிருந்து மரப்படி ஒன்று நாங்கள் ஏறியிருந்த கப்பலுக்கு வைக்கப்பட்டு அதன் வழியாக நாங்கள் ஒவ்வொருவராக போக வேண்டியிருந்தது. ஆனால் அந்த மரப்படி ஒன்று அல்லது இரண்டு வினாடி கூட எங்கள் கப்பலில் அடித்தட்டில் நிலைக்காமல் நகர்ந்து, நகர்ந்து போய் விட்டது. மரப்படி அடித்தட்டில் தங்கும் அவ்வளவு ஸ்வல்ப அவகாசத்திற்குள் நாங்கள் வெகு துரிதத்

துடன் ஒருவர்பின் ஒருவராக இறங்கிச் செல்லவேண்டியிருந்தது. அங்கு, எங்கு கண்டாலும் ஒரே இருட்டு. மின்சார விளக்குகள் சில வினாடிகள் நேரம் மட்டில்தான் போடப்பட்டன. அதிக நேரம்வரை வெளிச்சமிருந்தால் உயரச் செல்லும் ஜெர்மன் விமானம் ஏதாவது ஒன்று கவனிக்க அவகாசம் ஏற்படுமென்று பயந்துதான் வெளிச்சத்தை மிகவும் சிக்கனமாக உபயோகப்படுத்தப்பட்டது. இருளடைந்த கடலில் இரண்டு கப்பல்களும் சமுத்திரத்தில் அலைகளின் வேகத்தால் அங்குமிங்கும் அசைந்து பிரிந்தபொழுது எனக்கு மிக்க பயங்கரமாயிருந்தது. இவ்வித பயங்கரத் தோற்றம் நான் இதுவரை கண்டதே இல்லை. ராத்திரி காலத்தில் இந்த மாதிரியான அகண்ட சமுத்திரத்தில் ஒருவரும் சமுத்திர ஸ்நானத்திற்கு முன்வரமாட்டார்கள். அங்கு இருந்தால் இன்னும் அபாயம் நேரிடுமோ என்று பயந்து எங்களை இறக்கிவிட்ட அடுத்த நிமிஷமே எங்கள் க்ரூயிஸர் மற்ற கப்பலுக்கு இடைஞ்சல் விளைவியா வண்ணம் அப்பால் விலகிக்கொண்டது. அந்தக் கப்பலிலிருந்த ஜனங்கள் தங்கள் இருப்பிடத்திற்குப் போனார்களோ என்னமோ எனக்குத் தெரியாது. பெரும்பாலாகப் பார்த்தால் அவர்கள் போக இஷ்டமில்லாமல் இருப்பது நல்லது. என் சொந்த அபிப்பிராயத்தைக் கேட்டால் அவர்கள் போவதே நல்லது. ஏனெனில் மற்றொரு விஷயத்தில் அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. இந்த க்ரூயிஸரிலிருந்து ஏதாவது ரொட்டி கிடைக்குமோ என்று ஆவலாக இருந்தார்கள். இந்த சமுத்திரத்தில் பாதுகாப்பு அளித்து வரும் மற்றும் சிறு கப்பல்களிலிருக்கும் சிப்பந்திகள் போலவே இவர்களும் அவர்கள் கப்பலிலிருக்கும் சமயல்காரன், சிறிய அடுப்பில் சுடும் ரொட்டியைப் புசிக்கவேண்டி இருந்தது.

ருஷ்யாவுக்கு யுத்தப் பொருள்களை அனுப்புவதைப் பற்றி, ஜனங்கள் என்னிடம் ரொம்ப வாசாலமாகச் சொல்லும்பொழுதெல்லாம் அன்றிரவு நடந்த சம்பவம் என் கண்முன் அடிக்கடி தோன்றும். வாயால் பேசுவதற் [illegible]ப சாதுர்யமாகத்தான் இருக்கும்; ஆனால் கிரியாம்சையிலோ வெகு துர்லபமாக இருக்கும். ஆர்க்கேஞ்சல் துறைமுகத்தில் அநேகமைல் விஸ்தீர்ணத்தில் அடுக்கப்பட்டிருக்கும் மரங்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்ய லாயக்கான துறைகள் ஏராளமாக இருக்கின்றன. இவ்வுலகத்தில் மரங்களை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்ய லாயக்கான பெரிய துறைமுகம் இது தான். மரங்களை கப்பலில் ஏற்றவோ அல்லது கப்பலிலிருந்து இறக்கவோ அவைகளைத் தூக்கும் யந்திர உபகரணங்களைக் கொண்டு தானிய மூட்டைகளை ஏற்றி அடைவதுபோல் சாத்தியமாகும். ஆனால் கனமான டாங்கிகளையும், இன்னும் இதர யுத்த தளவாடங்களையும் கரையில் இறக்குவது மிகவும் சிரமமான காரியம். மரங்கள் ஏற்றுமதி பூராவும் ருஷ்யாவின் வட பாகத்தில்தான். ஆனால் ஆர்க்கேஞ்சல் துறைமுகத்திலிருந்து தென்பக்கத்திலிருக்கும் ருஷ்யப் போர்முனைக்கு போக்குவரத்து வசதிகள் அதிகம் கிடையாது. அங்கு அநேக மாதங்கள் வரை தொடர்ந்தாற்போல் ஒரே இருட்டுக் காலம். மேலும் வெள்ளைக் கடலு(White Sea)டன் கால்வாயைத் திறந்து வைப்பதற்குள் பனிக் கட்டிகளை உடைத்து வெகு சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த விஷயங்கள் சாதாரணமாக பகுத்தறிவுள்ள எந்த ஜெர்மானியனும் தேசப் படத்தைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.

இப்பொழுது ஜப்பான் யுத்தத்தில் இறங்கத் துணிந்தால், வ்ளாடிவாஸ்டாக் துறைமுகத்தை ஜப்பான் கப்பற்படை முற்றுகை போடமுடியும். அது தான் பஸிபிக் சமுத்திரத்தில் ருஷ்யாவின் பெரிய துறைமுகம். அதைச் சுற்றிலும் அநேக குறுகிய கால்வாய்கள் (Channel) செல்லுகின்றன. அதனால் அங்கு போக்குவரத்து சாதனங்கள் அதிகம் கிடையாது. மேலும் பர்ஸியன் குடாக் கடலிலுள்ள பந்தர்-ஷா-பூரிலிருந்து காஸ்பியன் கடலிலிருக்கும் பந்தாஷாவுக்கு ஒரே ஒரு இருப்புப் பாதைதான் போடப்பட்டிருக்கிறது. இரு பக்கங்களிலும் வரும் ரயில் தொடர்கள் மாறிச் செல்வதற்கு



ங்குமிங்கும் சில இடங்கள் தான் ற்பட்டிருக்கின்றன. அங்குள்ள ருப்புப் பாதைகளின் அளவும், நம் ட்டிலுள்ள தண்டவாளங்களின் ளவும் ஒரே மாதிரியல்ல. அங்கு யில் வண்டிகளும் மிகவும் கொஞ்சம் ான். இவ்வித இடையூறுகள் அங்கு ருப்பதை, எல்லாரும் ஞாபகத்தில் வத்திருக்க வேண்டும், ஆனால் இவ் தம் நான் வற்புறுத்திச் சொல்வதில் ங்குள்ளவர்களை திகிலடையச் செய்ய வண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல. வர்புருக் பிரபு மாஸ்கோ நகரத்திற்கு ந்ததுமுதல், பிரிடிஷ் அரசாங்கம் ருஷ்யாவுக்கு யுத்தப் பொருள்களை அனுப்புவதற்கு கொண்ட தீர்மானத்தில் நான் சிறிதளவும் சந்தேகப்படவில்லை. சென்ற வருஷத்திற்கு முந்தி ஹிட்லர் பிரிடனைப் படையெடுக்கத் யாராயிருந்தான் என்று எதிர் பார்க்கப்பட்டதை சமீபக்கிழக்குப் பிரேதசங்களுக்கு பொருள்கள் அனுப்புவதாக ஜப்பான் செய்துகொண்ட முடிவுக்கு தை ஒப்பிடலாம். மேற்கு ஐரோப்பாவுக்கு படையெடுப்பு சைனியம் அனுப்புவதில் சௌகரியம் ஏற்படுமென்று பிரதம மந்திரிக்கு தோன்றினால், ஒரு வருஷத்திற்கு முந்தியே அம்மாதிரி முடிவுக்கு வந்த பிரதம மந்திரி இப்பொழுது படை அனுப்பத் தயங்கமாட்டார். எனக்கு ராணுவ தந்திரங்களில் பரிச்சியம் கிடையாது. சென்ற வருஷத்தில் ஒரு தடவை டங்கர்க் என்னுமிடத்திலிருந்து பிரிடிஷ் துருப்புகள் பின்வாங்கும்படி நேரிட்ட பொழுது நம்மளிடம் பூராவும் தேற்சி பெற்றதும், நல்ல முஸ்தீப்புடன் கூடியதுமான ஒரு படைப் பகுதியும் கிடையாது என்று சமீபத்தில், ஒரு மாதத்திற்கு முன் மிஸ்ட்டர் எம்டன் காமன்ஸ் சபையில் பிரஸ்தாபித்தார். அவ்விஷயம் எனக்கு அடிக்கடி ஞாபகத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. ஆனால் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் மேற்கு ஐரோப்பாவில் யுத்தத்தைத்தொடங்காமலிருப்பதைப் பற்றி, சமீபத்தில் சில நாட்களுக்கு முன் யுனைடெட் ஸ்டேட்ஸில் மந்திரி சபை மெம்பர் குறை கூறினதாகத் தெரிகிறது. இங்கும் அதேவிதமாகப் புக...

புகார் செய்தவர்கள், ருஷ்யா சண்டையில் இறங்கும் வரையில் மேற்கு ஐரோப்பாவிற்கு படையெடுப்புப்படை அனுப்புவதற்கு வேண்டிய யுத்த தளவாடங்கள் செய்வதற்கு ஒருவித உதவியும் செய்யவில்லை. இருந்த போதிலும் நாம் இப்பொழுது எந்த விதத்திலாவது ஹிட்லருக்கு உபத்திரவங்களை அதிகரிக்கச்செய்ய நம்மால் முடியும். இதற்கு முன்னும் இடைஞ்சல்கள் பல செய்யப்பட்டிருக்கின்றன. பொதுவாக ஜனங்களுடைய மனப்பான்மையைப்போலவே, ஹிட்லரும் எதிரிகளையும் அவர்களுடைய பலத்தையும் குறைவாக மதிக்கிறான். நமது தேசம் ஜனநாயகம் அல்ல, இருந்தாலும் சென்ற வருஷத்தில் நம்மளில் மிகவும் சாமானிய ஜனங்கள் எதிரிகளிடம் தோல்வியுற்று அவர்களுக்கு அடிமையாக வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று உறுதிகொண்டிருக்கிறார்கள். இந்த வருஷம், பொதுவுடமை நிலைமையை ஆதரிக்கும் அரசாங்கமான ருஷ்யா, ஹிட்லர் முதல்தடவை தாக்கியவுடன் விழுந்துவிடாது என்று அவன் நம்ப ஆரம்பித்துவிட்டான். மேலும் நான் மாஸ்கோ நகரத்தையும், அதற்கு மேற்கேயுள்ள அடர்ந்த காட்டையும் நான் பார்வையிட்டது முதற்கொண்டு அந்நகரம் குறிப்பிட்ட காலத்திற்குள் பிடிபடாது என்றும், அதனால் ஜெர்மானியர் மாரிகாலத்தை அங்கு வெகு சுகமாக கழிக்கலாம் என்று எண்ணியிருந்தது வீணாகும் என்றும். தெரிந்துகொண்டேன். மேலும் படையெடுக்கும் சைனியங்கள் ஸ்மாலென்ஸ்க்கு அல்லது அதற்கு அப்புறமும் பின்வாங்க நேரிட்டால் ஜெர்மன் கௌரவம் அடியோடு போய் விடும் என்பது திண்ணம்.

உண்மையில் இன்னும் தெற்கே ஜெர்மன் மிகவும் தீவிரமாகவும் இன்னும் அதிக முக்கியமான இடங்களிலும் முன்னேறி வருவதாக காணப்படுகிறது. கிரிமியாவில் எதி முன்னேறி வருவதைப் பார்க்க அவ களுக்கு அனுகூலமாகத் தெரிகிறது. மேலும் ரோஸ்டவுக்குக் குறுக் வழியாகச் சேர்வதற்கு கருங்கடலி

கிழக்குக்கரை ஆரம்பத்திற்கும் இப்பொழுது ஜெர்மன் சைனியம் இருக்குமிடத்துக்கும் நடுவில் குறுகலாக தண்ணீர் மறித்திருக்கிறது. ஆனால் அந்த தண்ணீரைக் கடப்பதும் மிகவும் சிரமம். கிரிமியாவிலிருந்து ருஷ்யாவின் கோடியிலிருக்கும் இடத்திற்கு மூன்று மைல்தான். அந்த நிலம் நூறு கெஜம் அகலத்திற்கு மேல் இல்லை. அதன் இரு பக்கங்களிலுமுள்ள கடல் வெகுதூரம்வரை கொஞ்சமும் ஆழமில்லாமல் இருக்கிறது. ஆனால் ஆஸாவ் கடலில் ஆரம்பத்திலேயே அதிக ஆழமுள்ளதாக இருக்கிறது. ஏனென்றால் அதில் அடிக்கடி மீன் பிடிப்பதற்காக துருவாறப்படுகிறது. ஆகையால் ஆழமில்லாமலிருக்கும் தண்ணீரில் செல்லக்கூடிய படகுகள்தான் அங்கு செல்லக்கூடும். அதிக சேதமன்னியிலும், தாமதமில்லாமலும் ஆழமில்லா சமுத்திரம் வழியாக பூரா சைனியத்தையும் கொண்டுபோவதைப்பற்றி இங்குள்ள நிபுணர்கள் சந்தேகப்படுகிறார்கள்.

உங்களில் பலர் ஆதியில் மேற்கு நாடுகளிலிருந்து குடியேறி இருக்கிறீர்கள். ஏனென்றால் தேவன், ஸாமர்ஸெட், கார்ன்வால், டார்ஸெட் இவ்விடங்களிலிருந்து அநேகர் அயல் நாடுகளில் போய் வசிக்கிறார்கள். கொஞ்ச நாட்களுக்குமுன் நான் பிரிஸ்டலைச் சுற்றி நடந்துகொண்டிருந்தேன். அவ்வூரில்தான் என்னுடைய வாலிப நாட்கள் பூராவையும் கழித்தேன். உங்களில் சிலரும் அதேமாதிரியாகவே அங்கே இருந்திருக்கலாம். நான் சிறு பையனாக இருந்தபொழுது பிரிஸ்டலில் இருந்தேன். 'நான் இருந்த வீடு என்ன, கிருஸ்துமஸ் பண்டிகை வேடிக்கைப் பார்க்கப் போயிருந்த நாடகக் கொட்டகை என்ன, நான் தின்பண்டங்கள் வாங்கின கடைகள் இருந்த தெருவென்ன இவையெல்லாம் அழிக்கப்பட்டு விட்டன. பார்க் ரெஸிடெண்டியல் ரோடில் மோட்டார் வண்டிகள் வைத்திருக்கும் அநேக செல்வந்தர்கள் வசித்து வந்தார்கள். இப்பொழுது அவர்கள் வீடுகளை விட்டுவிட்டு போய் விட்டதால் அங்கு பெரிய மனுஷ்யர்களின் தோற்றமே காணவில்லை. அந்த இடங்களில் பிரக்யாதி பெற்ற கடைகளே வந்திருக்கின்றன. கடைகள் ஏற்கனவே இருந்த இடங்களில் வெடிகுண்டுகள் போடப்பட்டதினால் இங்கு வந்து தொழில் நடத்தப்படுகிறது. அங்கு சங்கீதகச்சேரிகள், நாடகங்கள், பொது விஷயமாக பிரசங்கங்கள் இன்னும் யுத்தத்திற்கு பிற்பட்டு நகர சீர்திருத்தமும் உலக அமைப்பும் பற்றிய பிரசங்கங்களும் இவைகளுக்கான துண்டு பிரசுரங்கள் ஏராளமாகப் போடப்பட்டன. நான் இதுவரை பார்த்துவந்த நகரங்களில் இவ்விதம் கிடையாது. இன்னும் மேல் நாட்டைப் பற்றி மற்றொரு அபிப்பிராயமும் உண்டு. யுத்தத்தின் பொருட்டு தேசத்தினர் நிதி சேமித்துக் கொடுப்பதற்காக ஏற்பட்டிருக்கும் சங்கத்தின் ஆதரவின் கீழ் 6,000 ஜனங்கள் வசிக்கும் ஒரு சிறிய ஊரில் நான் பேசிக்கொண்டிருந்தேன். அந்த ஊர்தான் ஆஷ்காட். ஆஷ்காட் கிராமம் ஒரு சிறு குன்றின் மேல் இருக்கிறது. அதிலிருந்து பார்த்தால் முன்னொரு காலத்தில் ரொட்டிகளை எரித்ததற்காக ஆல்பர்ட் அரசன் புகழடைந்த சமவெளி தெரியக்கூடும். இந்த சம:வெளியில்தான் 17-வது நூற்றாண்டில் ஸெட்ஜ்மூர் என்ற இடத்தில் மான்மத் சிற்றரசன் தோற்கடிக்கப்பட்டான். இங்கு ஜனங்களுக்குச் சாப்பாட்டுச் செலவு ரொம்ப அதிகம். வரிகள் ஏராளம். சாதாரண நகரவாசிகளை பலவித வகையில் பொருளுதவி கேட்கப்படுகிறது. கொஞ்சம், கொஞ்சம் பணம் விருத்தி செய்யக்கூடியவர்கள், தங்கள் மீதத்தைக்கொண்டு யுத்தக் கடன் பத்திரங்கள் வாங்குகிறார்கள். நான் 'யுத்தக் கப்பல் வாரத்தில்' ஆஷ்காட்டில் இருந்தேன். 'யுத்தக்கப்பல் வாரம்' என்றால் கடல் ஆதிக்கத்தை அதிகரிக்க பணம் வசூலிப்பதுதான். அங்குள்ள 600 ஜனங்கள் 3,000 பவுன் வசூலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நேற்றையதினம் 6,000 வசூலித்ததாக சொன்னார்கள். அதாவது ஒரு ஆளுக்கு 10 பவுன் வீதம் ஆகிறது. ஆனால் இது ஒன்றும் பிரமாதமில்லை. தேசம் பூராவும் நடப்பதுபோல் இதுவும் ஒரு உதாரணம். சாதாரண ஜனங்களுக்கு இம்மாதிரி வசூலிப்பதில் தங்களுக்கு



வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதை வெளிக்காட்டுகிறார்கள். சென்ற இரண்டு வருஷங்களுக்கு இம்மாதிரி தன்னிச்சையாக 100 கோடி பவுன் வசூலாகி இருக்கிறது, ஒருக்கால் உங்களுக்கு வியப்பை உண்டாக்காமல் இருக்கலாம். ஆனால் வருமான வரி கொடுக்கவேண்டுமே என்று அஞ்சி இருக்கும் எங்களுக்கு இது மிகவும் வியப்பாகத்தான் இருக்கிறது.

---

## 'பர்மா ரஸ்தாவில்' செல்லும் மூடுவண்டிகள்.

## சைனாவிற்குக் குத்தகைக் கடன் மசோதாப்படி ஏராளமாக யுத்தப்பொருள்கள் வருகின்றன.

## மோட்டார் லாரிகள் போக்குவரத்தில் கஷ்டமும்; என்ஜினைய் ஸப்ளையும்.

## இடையூறுகள் எவ்வாறு தவிர்க்கப்பட்டன?

ரெங்கூனிலிருந்து 'மேயில்' பத்திரிகையில் ஒரு விசேஷ நிருபர் எழுதியது.

யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்கள், வெடி மருந்துகள், இன்னும் மற்ற உணவுப்பொருள்கள் குத்தகைக்கடன் மசோதாப்படி, விரோதி நாடுகளை எதிர்த்துப் போராடும் சைனாவுக்கு அனுப்பப்படுகின்றன. அவைகள் லாஷியோவிலிருந்து சுங்கிங்வரை, 1,400 மைல் தூரமுள்ள பர்மா ரஸ்தாவின் வழியாக, அமெரிக்க "மூடுவண்டிகளில்" ஏராளமாக ஏற்றிக்கொண்டு வரப்படுகின்றன.

அமெரிக்கா தாங்கள் கட்டிய கப்பல்களில் யுத்த சாமான்களை ஏற்றி ரெங்கூனிலுள்ள அநேக கப்பல் துறைகளில் சேர்த்துவருகிறது. அவைகள் ஜப்பானை எதிர்த்துப் போர்புரியும் சைனாவுக்கு அத்தியாவசியமானது. இறக்குமதியான பொருள்களை சீனர்கள் மோட்டார் லாரிகளில் ஏற்றி பர்மா ரஸ்தா வழியாக ஓட்டிச்செல்லுகிறார்கள். அக்காட்சி பார்ப்பதற்கு மிகவும் பகட்டாய் இருக்கிறது.

அமெரிக்கா ஏராளமாக யுத்தப் பொருள்களை அடிக்கடி அனுப்பி வருவதினால் பர்மா ரஸ்தாவில் சாமான் ஏற்றிச்செல்லும் மோட்டார் லாரிகளின் படை வரவர அதிகரிக்கிறது. அங்கு இடைவிடாது பறந்து செல்லும் லாரிகளைக் கணக்கிட முடியாது.'

சுங்கிங்கிலிருந்து ஆரம்பித்து பர்மா ரஸ்தா வழியாகச் செல்லும் சாமான் வண்டிகள் 8,099 என்று சமீபத்தில் விளம்பரமாயிற்று. அவைகளில் சீனத் துருப்புகளை ஏற்றிச் செல்ல 4,448 வண்டிகளும், சைனா அரசாங்கத்திற்காக யுத்தப் பொருள்களை ஏற்றிச் செல்ல 2,121 வண்டிகளும், இன்னும் வியாபாரப் பொருள்கள் ஏற்றிச் செல்ல 1,530 வண்டிகளும் இருந்தன.

சமீபத்தில் மேற்சொல்லிய எண்ணிக்கையைப் பற்றிய சமாசாரம் வெளி வந்ததும், அப்பொழுதே மோட்டார் வண்டிகளில் மூன்றில் ஒருபங்கு பழுதுபட்டோ, சேதமாகியோ விட்டன என்று பிரஸ்தாபிக்கப்பட்டது. ஏனென்றால் அந்த ரஸ்தா வெகுதூரம். அதிலும் மலைப்பாங்கான இடங்கள் வழியாக அதிக கனமான பாரத்தை ஏற்றி செல்லும் மோட்டார் வண்டிகள் அடிக்கடி வருவதால், எவ்வளவு புதிதாகவும், நூதனமாகவும் செய்யப்பட்டவைகளுக்குக்கூட பழுது ஏற்பட்டுவிடும் என்பது நிச்சயம். இந்த வருஷ முடிவில் இன்னும் சாமான் ஏற்றிச் செல்ல 2,000 வண்டிகள் தயாராகிவிடும்.

## இதன் காரணமாக அநேக பழுது பார்க்கும் தொழிற் சாலைகள்.

மேலே சொல்லிய பிரகாரம் வண்டிகளுக்குப் பழுது பார்க்க வேண்டிய அவசிய மேற்படுவதால், அந்த ரஸ்தாவில் ஆங்காங்கு பழுது பார்க்கும் இடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வெகு துரிதமாகவும், யாதொரு இடைஞ்சலன்னியிலும், சாமான் மோட்டார் படை செல்லவேண்டிய முயற்சிகளை எடுத்துவரப்படுகின்றன.

இவ்விதம் சாமான்களை ஏற்றிச்செல்ல ஏராளமாக வண்டிகள் அதிகரித்திருக்கின்றன. குன்மிங் என்ற இடத்திலும் அல்லது சுங்கிங் என்ற இடத்திலும் ஏராளமாக பொருள்கள் இறக்குமதியாகின்றன. அதிலிருந்து ஜுலை மாதத்தில் 3,200 டன் நிறையுள்ள குத்தகைக் கடன் சாமான்கள் ரெங்கூனிலிருந்தும் லாஷியோவிலிருந்தும் குன்மிங்குக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. ஆகஸ்டு மாதத்தில் 6,563 டன்களும், ஸெப்டம்பர் மாதத்தில் 11,206 டன்களும் வந்திருக்கின்றன.

மேற்சொல்லிய யுத்தப்பொருள்கள் சைனாவுக்கு அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டு ரெங்கூனிலும் லாஷியோ ரயில்வே ஜங்ஷனிலும், ஐராவதி நதியின் வடக்குத் துறைமுகமான பாமோவிலும், குவிந்திருக்கின்றன.

இவைகளில் பெரும்பாலும் வியாபார நிமித்தம் வந்த சாமான்கள். அவைகளை பர்மா ரஸ்தா வழியாக ஏற்றியனுப்ப ஏற்பட்டிருக்கும் விதிகளின்படி யுத்தப் பொருள்களை முதலில் அனுப்பவேண்டுமாம்.

ஏற்கனவே சொல்லியிருக்கிற பிரகாரம், சாமான் வண்டிகளை அதிவேகமாகவும், அதிகச் சேதமன்னியில் போய்ச் சேர்ப்பது மிகவும் கஷ்டம். ஏனென்றால் அவைகள் அடிக்கடி செங்குத்தான ஏற்ற இறக்கங்கள் வழியாகவும் வளைந்து, வளைந்து அதிக தூரம் செல்கின்ற பர்மா ரஸ்தா வழியாகவும் செல்ல வேண்டியிருக்கிறது. மேலும் ரஸ்தாக்கள் சமமாக இல்லாமல் இருப்பதும், வெடிகுண்டுகளால் தகர்க்கப்பட்ட பாலங்களும், அவைகளுக்குப் பக்கத்தில் வெடிகுண்டுகள் பாழ் செய்த பள்ளத்தாக்குகளும், போக்குவரத்துகளுக்கு பெரிய இடையூறுகள். மேலும் விமானச்சண்டை எச்சரிக்கைகளும் அநேகம் இருக்கின்றன. இவ்வித இடையூறுகள் இருந்த போதிலும் அவைகள் சைனாவுக்கு வந்து சேர்ந்துவிடும். ஏனென்றால் பர்மா ரஸ்தாவைத் தடுக்காமலும், பிளவு ஏற்படுத்தாமலும் ஜப்பானின் "புதிய சட்டத்திற்கு" உட்படாமலும் செய்ய சுங்கிங் கவர்ன்மெண்டார் முயற்சிகள் எடுத்துக்கொள்ள தீர்மானம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## சைனாவின் போக்குவரத்து சாதனங்கள்.

சைனாவுக்கு செல்லும் போக்குவரத்து ரஸ்தாவைக் செம்மையாக வைத்துக் கொண்டால்தான் மேற்சொல்லிய விதம் சாமான்கள் போய்ச்சேரும். முக்கியமாக ரோடு சீர்திருத்தம் செய்ய தார் எண்ணெய்யும், ஸிமெண்டும் தேவை. இன்னும் மோட்டாரை நடத்திச் செல்ல பெட்ரோல் முதலிய பலவித எண்ணெய்கள், தேய்ந்த சாமான்களைப் புதுப்பிக்க புதிய சாமான்கள், ரிபேர் செய்வதற்கு ஆயுதங்கள் தேவை. இவைகளை எல்லாம்விட யந்திர வேலைக்காரர்கள் மிக்க அவசியம்.

மேற்சொல்லியவைகள் சைனா யுத்தம் புரிவதற்கு அவசியமானவை. அவைகளும் வெகு துரிதத்தில் அனுப்பப்படவேண்டும். மேலும், மேலும் சாமான் ஏற்றும் வண்டிகள் தேவை. ஏனென்றால் ரஸ்தா சமதரையாக இல்லாமல் மேடுபள்ளமாக இருப்பதால் உலகத்தில் பிரசித்த பெற்ற, அதிக கனம் ஏற்றிச் செல்லும் வண்டிகளும், நாலு மாதத்திற்கு ஒரு தடவையாவது பூராவும் பழுது பார்க்க நேரிடும்.



அடுத்த் முக்கிய பிரச்னை எண்ணெய் ஸப்ளை. பர்மாவிலுள்ள லாஷியோ என்னுமிடத்தில் இருந்து சைனாவின் வடமேற்கிலுள்ள யுத்தப்பிரதேசங்களுக்கு ஒரு டன் யுத்த பொருள்களைக்கொண்டு செல்ல ஐந்து டன்கள் பெட்ரோல் செலவாகிறது. அவ்விதமானால் பர்மா ரஸ்தாவில் இப்பொழுது யுத்தப்பொருள்களை ஏற்றிச்செல்லும் ஏராளமான வண்டிகளை நடத்த எவ்வளவு டன் பெட்ரோல் தேவையாயிருக்குமென்று கணக்கிட்டுச் சொல்லக்கூடும்.

இதே மாதிரியாக அதே ரஸ்தா வழியாக ஏராளமான சாமான்கள் யுனைடெட் ஸ்டேட்ஸிற்கும், இன்னும் இதர இடங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் ஏற்றுமதி ஆகின்றன. அவைகளில் உற்பத்தி செய்யப்பட்ட யுத்த தளவாடங்களைக்கொண்டுதான் சைனா எதிரிகளுடன் நீடித்துச் சண்டை செய்ய இடமுண்டு. ஏற்றுமதிகளில் முக்கியமானது துங் (Tung) எண்ணெய். மாதாமாதம் அதன் ஏற்றுமதி ஏராளமாக அதிகரித்து வருகிறது. இன்னும் அநேக பொருள்கள் யூனானிலுள்ள புதிய அல்லது புதுப்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து வருகின்றன.

சைனாவில் அநேக பாகங்களிலிருந்த கைத்தொழில்கள் இப்பொழுது ஜப்பான் வசம் வந்துவிட்டன. மேலும் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு, யூனான் பிரதேசத்திலேயே தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்ததும், புதிய சுரங்கங்கள் வெட்டப்பட்டதும், துங் (Tung) எண்ணெய், கொய்னா, குடம் இவைகள் எடுக்கப்படும் மரங்களை அநேகம் உற்பத்தி செய்ததும், விவசாயத்தில் புதிய முறைகளை அனுஷ்டித்து ஏராளமாக விளைபொருள்களை உற்பத்தி செய்ததும் முக்கிய காரணங்கள்.

யூனான் பிரதேசம் பெரிதாக இருந்தாலும் அதன் ஜனத்தொகை ஸ்வல்பமாக இருப்பதினால் இவ்வித முன்னேற்றங்களுக்கு இடைஞ்சல் ஏற்பட்டது. ஆதியில் இந்த மாகாணத்தின் ஜனத்தொகை (1.20,00,000). இந்த ஜனங்களுக்குப் போதுமான நெல்கூட அங்கு விளைவிப்பது மிகவும் துர்லபமாய் விட்டது.

பிற்பட்டு இந்நிலை மெதுவாக மாறுதலடைய ஆரம்பித்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் போக்குவரத்து சாதனங்களின் அபிவிருத்திதான். சைனா இப்பொழுது புதிய ரஸ்தாக்களை ஏற்படுத்தியும்; ஏற்படுத்திக்கொண்டும் இருக்கிறது. நவீன அமெரிக்க "மூடுவண்டிகளினால்" ஏராளமான சாமான்கள் ஏற்றிச்செல்ல வசதிகள் அதிகம் ஏற்பட்டுவிட்டதினால் முன்னைவிட அங்குள்ள நிலை அதிகம் அபிவிருத்தியடைந்திருக்கிறது.

---

## 'உணவைப் பகிர்ந்துகொண்டால்' அழிவுநேரிடும்.

## பிரான்ஸில் ஜெர்மன் அரசாக்ஷியின் குணதோஷங்கள்.

## மத சம்பந்தமாகவும், ராஜீய வியவகாரங்களுக்காகவும் நிர்ப்பந்தம்.

## உழைப்பது பிரெஞ்சுக்காரர்கள், பயனடைவது ஜெர்மானியர்கள்.

கூடிக் கலந்து உணவைப் பகிர்ந்துகொள்ளுவது என்ற கொள்கையை பிரெஞ்சுக்காரர்கள் வெறுக்கிறார்கள். அதன் பயனாக இந்த மாரிகாலத்தில் பஞ்சம் ஏற்பட்டுவிடும்போல் இருக்கிறது என்று 'யார்க் ஷயர் போஸ்டு' பத்திரிகைக்கு பாரிஸிலிருக்கும் மாஜி நிருபர் நவம்பர் மாதம் 18-ம் தேதி எழுதினார். உணவு திட்டம் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுக்கும்படி கடுமையாக ஏற்பட்டிருப்பதில் ஜெர்மானியர்களுக்குக் கொடுத்துவருவதைக் காட்டிலும் மூன்றில் ஒரு பங்கு குறைவு.

மத சம்பந்தமாகவும், ராஜீய வியவகாரங்களுக்காகவும் இடைவிடாது ஜெர்மானியர்கள் நிர்ப்பந்தம் செய்து வருவதும், ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் சாதாரண உடை தரித்துக்கொண்டு அடிக்கடி மேல்பார்த்து வருவதும், பிரெஞ்சு பொதுமக்களின் மனப்பான்மையை மாறுதலடையச் செய்திருக்கிறது. பொது ஸ்தலங்களில் ஆண், பெண்கள் ஜெர்மன் ஏஜெண்டுகளாக இருந்துகொண்டு, அங்கு உள்ள பொதுமக்களிடம் கலகம்செய்து, அங்குள்ளவர்களை ஜெர்மானியர்கள் கைதிசெய்து விடும்படியாக வேண்டிய இடைஞ்சல்கள் செய்துவருகிறார்கள். லோரைனிலிருந்து 300 பாதிரிகளை வெளியே துரத்திவிட்டார்கள். இதனால் ஜெர்மன் அரசாங்கமுறையை கண்டனம் செய்து அங்கு எதிர்ப்பு அதிகம் ஏற்பட்டிருக்கிறது. அதன் பயனாக ஒன்று அல்லது இரண்டு பாதிரிகளே விசாலமான பிரதேசத்தில் ஓய்வில்லாமல் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. பெண் பாதிரிகளை அங்கிருந்து துரத்திவிட்டு, அவர்களை ஜெர்மனியில்போய் கல்வி கற்றுக் கொடுக்கும்படி ஜெர்மன் ரகசியப் போலீஸ் நிர்ப்பந்திக்கிறது. ஜனங்கள் கூட்டங் கூடாமல் பல விதத்திலும் தடுக்கப்படுகிறார்கள். உணவு திட்டச் சீட்டுகள் ஞாயிற்றுக்கிழமைதான் வழங்கப்படுகிறது. ஆண்களுக்கு சிறு வேலைகள் கொடுத்து நெருங்கவிடாமல் செய்யப்பட்டிருக்கிறது. மிகவும் காட்டுப்புறமாக இருக்கும் இடங்களில்கூட ஸினிமாக் கொட்டகைகள் போடப்பட்டு அங்கு படங்கள் காண்பிக்கப்பட்டு குழந்தைகள்கூட போய் பார்க்கும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் ஜனங்களை ஞாயிற்றுக்கிழமை வீட்டில் தங்காமல் வெளியேபோய் வரவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

சமீபத்தில் டியூலூக்கு அருகில் மாதா கோவிலின் கதவு பூட்டப்பட்டு, சவகோஷ்டி உள்ளே நுழையவிடாமல் போலீஸார் தடுத்தார்கள். அவர்கள் குடியானவர்களாக இருந்ததால் கக்ஷி செய்யாமல் வெளியே போய்விட்டார்கள். ஆனால் அவர்கள் மறுபடியும் கோடாலிகளுடன் திரும்பிவந்து கதவை உடைத்து விட்டார்கள். இதே மாதிரியாகவே சேடாஸாலின்ஸில் மாதா கோவில் கதவைப் பூட்டி பூஜையில்லாமல் ஜெர்மன் ரகசியப் போலீஸ் தடுக்க முயன்றது. அங்கு பூஜை செய்யும் பாதிரியை எவ்வளவு பயமுறுத்தியும் அவர் பவ்யப்படுவதாகத் தோன்றவில்லை. ஆனால்அவர் புறக்கதவு வழியாக உள்ளே நுழைந்து வாசல் கதவை திறந்துவிட்டு மாதா கோவில் மணியை அடித்து, பொதுமக்கள் கூடியவுடன் அவர்கள் முன்னிலையில் பிரார்த்தனை செய்ய பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தார் "இது என் மாதா கோவில். சர்வ வல்லமையுள்ள கடவுள், என் எஜமானன் அத்யக்ஷ குரு இவர்கள் நீங்களாக நான்தான் இங்கு அதிகாரி" என்று உறத்து கூறினார்.

உணவு தேவையென்று அடிக்கடி கேட்டுவரப்படுகிறது. ஜெர்மனிக்கு அனுப்பப்படாமலபோனால், உணவுப்பொருள்கள் ஸ்பெயினுக்கு இரும்பு கட்டிகளுக்கும், மற்ற உலோகங்களுக்கும் பதிலாக அனுப்பப்படுகிறது. தேய்ந்த செருப்புகளைக் கூட பழுது பார்ப்பது கிடையாது. அங்கு நிலக்கரி ஸப்ளையும் இல்லை. விழுந்த மரங்களையும் காடுகளிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் சேகரிக்கக்கூடாது. அவற்றை ஜெர்மானியர்களுக்காக வைத்துவிடவேண்டுமாம். ஒரே வீட்டில் இருப்பவர்கள் அங்கு விறகு அதிகம் கிடைக்காததினால் ஒரு அறையில் சாயங்கால வேளையில் கூடி குளிர்காயவேண்டியிருக்கிறது.

சில தினங்களிலும் சில நேரங்களில் சில வகை உணவுப்பொருள்களை விற்கக் கூடாதென்று நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. நான்கு வாரங்களுக்கு ஒரு முறை 1 பவுண்டு சர்க்கரை, 4 பவுண்டு உருளைக்கிழங்கு, 2 பவுண்டு இறைச்சி, 1 பவுண்டுக்குக் குறைவாக அரிசி இவைகளை ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கு கிடைக்கும் சிறு மீன்கள் தவிர பாக்கியை எல்லாம் ஜெர்மானியர்கள் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். வேட்டைப் பொருள்களில் அங்குள்ள சிற்றுண்டிச்சாலைகளில் அணிலும், காகங்களும்தான் பட்சி உணவாகக்



கொடுக்கப்படுகிறது. வழக்கமாக பிரெஞ்சுக்காரர்கள் குடித்துவரும் சாராயம் 5 நாட்களுக்கு 2 பயிண்டுகளைத்தான் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் உணவு திட்டங்கள் ஏட்டில்தான் கண்டிருக்கின்றன. ஆனால் அநேக மாதங்களுக்கு இறைச்சியும், உருளைக்கிழங்கும் வாங்கமுடியாது. ஆரோக்கியத்திற்கு வேண்டிய உஷ்ணத்தின் அளவு தினசரி 2,400 கலோரி வேண்டும். ஆனால் குறைவு உணவு திட்டத்தில் 1,100 கலோரிதான் கொடுக்கப்படுகிறது. நவம்பர் மாதம் 17-ம் தேதியிலேயே இறப்பவர்களின் கணக்கு பாரிஸில் 21 சதவிகிதம் அதிகரித்து விட்டதில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

உடை கிடைப்பது மிகவும் துர்லபம். தீர விசாரித்து அதன்பேரில்தான் உடை வாங்குவதற்கு சீட்டு கொடுக்கப்படுகிறது. இரண்டு பழைய உடுப்புகளைக் கொடுத்து அனுமதிச் சீட்டு கொடுத்த மேல்தான் ஒரு புதிய உடுப்பு வாங்கலாம் என்று சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

---

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

---

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

## நவம்பர் 22—29, 1941.

### ஜெர்மன் அரசாக்ஷி.

"இதுவரை ஐரோப்பாவில் பொதுவான லக்ஷியத்திற்காக முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதே கிடையாது. பெர்லினில் கூடின கூட்டத்தை சமாதானத்திற்காக என்று நினைத்துக் கொண்டு, ஜனநாயக அரசியல் நிபுணர்கள் ஐரோப்பா ஒன்று சேர்ந்திருப்பதை நேரே எதிர்க்க தைரியம் கொள்ளவில்லை."

(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, 25 நவம்பர் 41.)

"டாங்கி பலமும், விமான பலமும் இருப்பதால் மற்றநாடுகளில் கலகமே ஏற்பட முடியாது" என்று ரிப்பன்டிராப் உலகங்களுக்கு அறிவிக்கிறான். துருக்கிய உலுஸ் என்ற பத்திரிகை "பெர்லினில் கூடிய கூட்டத்தை ஐரோப்பிய நாடுகளின் கூட்டம் என்று சொல்ல முடியாது........................ ருஷ்யாவிற்கு எதிரில் சண்டை செய்யும் நாடு பிரிடனுக்கு எதிரில் சண்டை செய்யும் சிரமத்தை ஒப்புக் கொள்ளத்தயாராக இல்லை" என்று சொல்லுகிறது.

பலவாராகப் பிரிந்து கிடக்கும் ஐரோப்பிய நாடுகளை, இன்னும் 30 வருஷங்களுக்கு யுத்தம் நடக்குமென்று ரிப்பன்டிராப் பயமுறுத்துகிறான். ஆனால் 200,000 க்ரோஷியர்களையும், 82,000 போலிஷ்காரர்களையும் கொலை செய்ததால், விளைந்த கெடுதிகளை எதிர்க்க இவனுக்கும் தைரியம் இல்லை.

" பயிற்சிக்கும், சமூகத்திற்கும் விளைந்த தீங்குகளை டேனிஷ் அரசாங்கம் அறிந்துகொண்டதாக டேனிஷ் வெளிநாட்டு மந்திரி அறிவித்தான். ஆகவே ஜெர்மனியுடன் சேர்ந்து ஒப்பந்தம் செய்துகொள்ள நினைத்தது."
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, 26 நவம்பர் 41.)

ஜெர்மனி டென்மார்க்கில் புகுந்த பிறகு முதல் 4-மாதங்களில் டென்மார்க்கிற்கு 400 லக்ஷம் பவுன் நஷ்டமாயிற்று. இதை அவ்வரசாங்கம் 'கடன் பட்டதாக' சொல்லிவிட்டது. வியாபார மந்திரி இவ்விதம் சீருங்கலையாக இருப்பதாக உபன்யாசம் செய்ததால் வேலை இழந்தான். ஜனங்களின் மனப்பான்மையைப்பற்றி நாஸி பீட்ரிலான் டேட் என்ற டேனிஷ் பத்திரிகை எழுதுகிறது:—

" படித்தவர்களும் யாவரும் சேர்ந்து பிரிடன் ஜயிக்கவேண்டுமென்று நினைப்பது ஏன் என்று யாவருக்கும் தெரிந்ததுதான்."

" ஜெர்மனியிலிருந்து 75,000-டன் கோதுமை பின்லாந்திற்கு அனுப்பப்படும். ஏற்கனவேயே 50,000-டன் கோதுமை அனுப்பப் பட்டிருக்கிறது."
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, 22 நவம்பர் 41.)

எங்கே இருந்து யாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்பதை சரியாகச் சொல்லவில்லை. வாங்ஸ்ரெக்ட் என்ற பத்திரிகை ஸெப்டம்பர் 24, 1940-ல் எழுதியபடி, ஆக்கிரமித்த பிரான்ஸிலிருந்து 800,000-டன் கோதுமை எடுத்துச் செல்லப்பட்டது. போலந்தைப்பற்றி அனுதாபமாக ஜெர்மனி அமெரிக்காவிற்கு செய்தி அனுப்பும் சமயத்தில் 1940-ல் வார்தகு என்ற போலந்தின் ஒரு ஜில்லாவிலிருந்து 700,000-டன் கோதுமை ஜெர்மனிக்கு வந்ததாகச் சொல்லப்பட்டது. பின்லாந்து ஏன் பட்டினி கிடக்கவேண்டியிருக்கிறதோ?

## மத்தியக் கிழக்கிலுள்ள பயம்.

" இராக் கவர்ன்மெண்டிற்கு பிரிடிஷ் அரசாங்கம் ஏராளமான வரி விதித்திருக்கிறது. ஆகவே சிறு நாடுகளின் சுதந்திரத்தை இங்கிலாந்து காப்பாற்றவே இல்லை. பிரிடனின் சுயநலத்திற்காகவே இராக்கை இங்கிலாந்து ஆக்கிரமித்திருக்கிறது."
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, 22 நவம்பர் 41).

இராக்கில் பிரிடிஷ் அரசாங்கம் நடந்துகொள்ளும் கௌரவமான முறையை ஜெர்மனி அறிய முடியாது. 1932-ல் இராக்கின் சுதந்திரத்தை அங்கீகரித்து ஸர்வ தேசச் சங்கத்தில் அதற்கு தனி ஸ்தானம் உண்டாக்கியது. இராக்கின் அரசாங்கத்தையும், சைனியத்தையும் ஒழுங்கு படுத்தி விவசாயம் திட்டப்படுத்தப்பட்டது. எண்ணெய் உற்பத்தி விருத்திசெய்யப்பட்டது. ரஷீத் ஆலி தேசத்தை விட்டு ஓடியதும், சமாதானம் உண்டாக்கப்பட்டது. போக்குவரவை விருத்தி செய்ததும் ஏராள பணமும், ஜனங்களுக்கு வேலையும் இராக்கில் உண்டாயின.



" ஆப்கானிஸ்தானத்திலிருந்து 165 ஜெர்மானியர் இஸ்தான்புல்லுக்கு வந்து சேர்ந்தனர். பெஷாவரில் இவர்களின் சாமான்களைப் பலாத்காரமாக பிரிடிஷார் பிடுங்கிக் கொண்டனர்."
(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, 26 நவம்பர் 41.)

இவர்கள் ஜெர்மனிக்கு பாடம் செய்த உணவு, கம்பளி முதலியவைகளை எடுத்துச்சென்றனர். இது கூடாதென்றும் அவர்களுக்குச் சொந்தமான 60-டன் பெரும்பளுவை மாத்திரம் எடுத்துச்சொல்லவும் அனுமதிக்கப் பட்டனர்.

## அமெரிக்காவைப் பற்றிய கதை.

"டச்சு கயானாவிற்கு அமெரிக்கப் படை அனுப்பப்படும்.........ஆகவே அமெரிக்காவும் தேசாக்கிரமண ஆசை கொண்டு திரிகிறது. இதை ரூஸ்வெல்டு மறைக்க முடியாது."
(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, 25 நவம்பர் 41.)

பிரெஞ்சு கயானாவிலிருந்தும், தென் அமெரிக்காவில் மற்ற நாடுகளிலும் உள்ள தொந்தரவை அடக்க டச்சு பிரதம மந்திரி ஜெர்பிராண்டி அமெரிக்காவின் உதவியைக் கோரினான். அந்த தேசத்திலுள்ள அலுமினியச் சுரங்கங்களை காபந்து செய்யவே அவ்விதம் கோரப்பட்டது. பிரஸீலும் இதற்கு உதவி செய்தது.

## 1940—41-க்குள் ருஷ்யா பேரில் வெறுப்பும், பிரியமும்'

'" ருஷ்யாவைத் தோற்கடிக்காத வரையில் நமக்கு சுகமில்லை என்று யாவருடைய அபிப்பிராயத்தையும் நான் சொல்லுகிறேன்."
(25 நவம்பர் 41ல் ரிப்பண்டிராப் சொன்னது.)

" சீக்கிரத்தில் ருஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் சண்டை நேருமென்று இங்கிலீஷ்காரர்கள் நினைப்பது பிசகு.'
(டெர் ஆங்கிரீப், 26 ஆகஸ்டு 40.)

## பயந்த தோற்றம்: சில்லரை விஷமம்.

ஜெர்மனியின் உள்நாட்டுக் கலகமும், ருஷ்யர்களின் எதிர்ப்பும், லிபியாவில் பிரிடிஷார் முன்னேறியதும் சேர்ந்து கோயபல்ஸின் ஜெர்மன் பிரசாரங்களை மங்கும்படி செய்தன. இனிமேல் தடபுடலான பிரசாரங்கள் செய்து ஏமாற்ற முடியாது. அவன் வார்த்தைகள் அடங்கி, சாக்குப் போக்கு சொல்லி வருகின்றான். முன்போல யூதர்களைத்தாக்கி வருகிறான்.

## ருஷ்யா.

"டான், மாஸ்கோ பிரதேசத்தை அடைந்தவுடனே ஜெர்மன் சைனியம் மேலும் சண்டை செய்யலாம், அல்லது அங்கேயே பெரும் கோட்டைகளைக்கட்டி பத்திரம் செய்யலாம். பயத்தினால் ஸ்டாலின் எதிர்த்து நிற்கிறான். அக்டோபர் 3-ல் கிழக்கு யுத்தம் முடிந்ததாக ஹிட்லர் சொன்னது ஸ்டாலினை சரண் அடையும்படி செய்யவோ வசப்படுத்தவோ எண்ணமில்லை. இதைவிட மேலான நோக்கமிருப்பதாகவே கருதவேண்டும்".

(ஜெர்மன் செய்தியை இதாலிய ரேடியோ சொல்லிற்று, நவம்பர் 41.)

## லிபியா.

" லிபிய யுத்தத்தைப்பற்றி இவ்வளவு சீக்கிரத்தில் ஒன்றும் சொல்ல முடியாது."

(இங்கிலாந்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு, 21 நவம்பர் 41.)

"ஸ்டாலினை உத்ஸாகப்படுத்தவும், ஜப்பானை ஏமாற்றவும், துருக்கியைத் திருப்தி செய்யவும், ரூஸ்வெல்டிற்கு உதவவும், விஷியை ஜெர்மனியை விட்டுப் பிரிக்கவும், டிகாலுக்கு உதவவும்......இம்மாதிரியாக சர்ச்சில் சொல்லுவதெல்லாம் ராணுவ அபிப்பிராயப்படி தவறுகும்."

(இங்கிலீஷில் இதாலிய செய்தி, 22 நவம்பர் 41.)

"ஐந்து மாதகாலமாக பிரிடிஷ் படைகள் தயார்செய்து கொண்டிருந்ததாக சர்ச்சில் சொன்னதிலிருந்து இந்த யுத்தத்தின் முக்கியத்வம் தெரியவரும்."

(இங்கிலீஷில் இதாலிய செய்தி, 22 நவம்பர், 41.)

## யூதர்கள்.

"பிரிடிஷ்காரர்களும், ருஷ்யர்களும் தாங்கள் தோற்றுப்போனதை ஒப்புக்கொள்ளாததற்கு யூதர்கள்தான் காரணம்."

"இந்த யுத்தத்தில் ஜெர்மன் வீரர்கள் மடிவது யூதர்களுக்கு லாபம்தான்."

"ஒன்றும் அறியாமல் ஜெர்மானியர் இருக்கும்போது யுத்தத்தைத்தான் யூதர்கள் விரும்புகின்றனர்."

"யூதர்களின் தூண்டுதலால்தான் இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது."

"இங்கிலீஷ்காரர்களுக்கும் யூதர்களுக்குமுள்ள சம்பந்தத்தை காந்தியும் ஒத்துப்பேசுகிருர்."

(கோயபல்ஸின் பேச்சு ஒலிபரப்பப்பட்டது, 14 நவம்பர் 41.)

### பிரிடனுக்கு சாதகமாக கோயபல்ஸ்.

"இந்தியாவில் சுகாதாரம், நவீனமான சௌகர்யங்கள், முன்னேற்றம் முதலியன கிடையாது. இவைகளை கிரேட்பிரிடன்தான் கொடுக்கவேண்டும். மேல்நாட்டு நாகரீகத்தை இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவிற்குக் கொடுக்கிருர்கள்.'

(இங்கிலாந்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு, 5 நவம்பர் 41.)

### இந்தியாவிற்கு சாதகமாக கோயபல்ஸ்.

"பிரிடனுக்கு சாமான்களோ, மனிதர்களோ, கொடுத்து உதவாமல் இந்தியா இருந்தால் அச்சுநாடுகளுக்கு பெரும் உதவியாக இருக்கும்,"

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, 26 நவம்பர் 41.)

---



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 74—(1-வது பிரிவு).

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| 1941— | | | | | |
| டிஸம்பர் | ...13, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 14, ஞாயிற்றுக்கிழமை | பூவரசகுடி | ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் | ... | ,, | 6.30 |
| | 15, திங்கட்கிழமை ... | பெருங்களூர் | ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 16, செவ்வாய்க்கிழமை | மலம்பட்டி | ... | ,, | 6.00 |
| | | பெரம்பூர் | ... | ,, | 6.30 |
| | 17, புதன்கிழமை ... | ஒடையாளிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... | ,, | 6.30 |
| | 18, வியாழக்கிழமை ... | அரிமளம் | ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 19, வெள்ளிக்கிழமை... | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | | நல்லூர் | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 75—(2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 20, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 21, ஞாயிற்றுக்கிழமை | குடுமியாமலை | ... | ,, | 6.00 |
| | பரம்பூர் | ... | ,, | 6.30 |
| 22, திங்கட்கிழமை ... | வெங்களூர் | ... | ,, | 6.00 |
| | கோனுபட்டு | ... | ,, | 6.30 |
| 23, செவ்வாய்க்கிழமை | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | ராங்கியம் | ... | ,, | 6.30 |

ஒவ்வொருவரும்

யுத்தத்தில் நேசதேசங்களின் வெற்றியை
விரும்புகிறார்கள்

மேலும்

ஒவ்வொருவரும்

நல்ல பாகெட் டயரியையும்
விரும்புகிறார்கள்

ஆகவே ஒவ்வொருவரும் வெற்றி சின்னத்தோடு
பிரசுரிக்கப்படும்

1942-ம் வருஷத்திய 'வி' டயரி புஸ்தகத்தை
வாங்கவேண்டும்

இது குறிப்புப் புஸ்தகமுமாகும்

விலை :—ரூ. 1—4—0, 1—8—0, 2—0—0.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் ஆபீஸிலும்,
ஸ்டேட் பிரஸிலும் கிடைக்கும்.

---

நிகர் லாபம் பூராவும் யுத்த நிதியைச் சேரும்.

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—14-12-41.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ டிஸம்பர் ௴ 20௳ [ந. 75

பிரஸங்கம் LXXV.

## நாஸிகளின் புது திட்டம்.

எட்வேர்டு பெனெஷ் எழுதியது.

---

ஹிட்லர் மெயின்காம்ப் என்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறான். அப்புஸ்தகத்திலிருந்து நாஸிகளைப்பற்றி பல விஷயங்கள் நமக்குத் தெரிவதில், நாஸிக் கக்ஷி முதலில் ஜெர்மனியில் உண்டாகவில்லையென்றும் ஆஸ்திரியாவில்தான் பிறந்ததென்றும் ஹிட்லர் சொல்லியிருக்கிறான். அக்காலத்தில் ஆஸ்திரியாவில் ஹாப்ஸ்பர்க் என்ற வம்சத்தினர் அரசுபுரிந்து வந்தனர். இவர்களுக்குட்பட்டு பொஹிமியா இருந்தது. இதற்கு இப்பொழுது ஸெக்கோஸ்லாவாகியா என்று பெயர். இக்கக்ஷி ஆஸ்திரியாவிலும், ஸெக்கோஸ்லாவாகியாவிலும் உண்டானதாகச் சொல்லலாம். இவ்விதம் எங்கள் ஊரில் உண்டானதாக ஒப்புக்கொள்ளுவது கேவலமாக இருக்கிறது. இருந்தாலும் ஜெர்மானியரின் தூண்டுதலால் ஸெக்கோஸ்லாவாகியாவின் எல்லையில் உண்டாயிற்று என்று சொல்லலாம். இந்த பொஹிமியாவில் அதிக்ரமத்தைக் கொண்டாடும் தீவிர தேசிய வாதிகளாக சில ஜெர்மானியர் இருந்தனர். மேற்சொன்ன ஹாப்ஸ்பர்க் சாம்ராஜ்யத்தில், ஜெர்மானியருக்கு அடுத்தபடியாக எல்லாவிதப் பயிற்சி, தேசிய உணர்ச்சி, ராஜீயப் பழக்கம் முதலியவை ஸெக்கர்களிடம்தானிருந்தன. இவர்களைக்கண்டு வரவர முன்னேற்றம் அடைந்துவந்த ஜெர்மானியருக்கு வெறுப்பு ஏற்பட்டுவந்தது.

ஆஸ்திரியாவிலுள்ள ஹாப்ஸ்பர்க் அரசாங்கம் ஸெக்கர்களை ஆக்கிரமிக்க நினைத்த போதெல்லாம் பொஹிமியாவிலிருந்த ஜெர்மானியரின் உதவியையும் நாடிற்று. பொஹிமியாவிலிருந்த ஜெர்மானியருக்கு ஜெர்மன் நாடுகளை ஒன்று சேர்க்க வேண்டுமென்ற நோக்கம் இருந்தது. இந்த ஜெர்மானியருக்கு எதிராக ஸெக்கர்கள், யூகோஸ்லாவியர்கள், போலிஷ்காரர்கள் ஒன்றுபட்டு பலமடைவார்களானால் அவர்களைத் தடுக்கவேண்டி பெர்லினிலுள்ள ஜெர்மானியருடன் சேர்ந்து ஹாப்ஸ்பர்க் சாம்ராஜ்யத்தைத் தொலைக்க ஏற்பாடு செய்யப்படுமென்றும் பயமுறுத்தினார்கள்.

பொஹிமிய ஜெர்மானியர் ஜார்ஜ் ஷோனெரெர் என்பவன்கீழ் ஒன்றுசேர்ந்து ஜெர்மன் நாடுகளை ஒற்றுமைப்படுத்த முயற்சித்தனர். இவன் ஆஸ்திரிய அரசாங்க சபையின் உபதலைவனாக இருந்தவன். பெரும் குடியற்காரன். யோக்கியதை இல்லாதவன். முஸ்லீம்களையும், யூதர்களையும் (Semitic) வெறுத்தான். ஆரம்பத்தில் இவனுக்கு உதவியாக மூன்று பேர்களே இருந்தனர். ஆனால் இவனது பேச்சுத் திறமையால் ஒரு விபரீதமான செல்வாக்கு உண்டாயிற்று. ஆஸ்திரியா முதலிய நாடுகளிலுள்ள ஜெர்மானியரை எல்லாம் ஒன்று சேர்க்கும் எண்ணத்தை முதலில் உண்டுபண்ணியது இவன்தான். ஹிட்லரும் ஆஸ்திரியன்தான். இவன் எழுதிய மெயின் காம்ப் புஸ்தகத்திலும் ஷோனெரெரைப் பற்றி புகழ்ச்சியாக எழுதியிருக்கிறான். வியன்னாவில் (ஆஸ்திரியாவில்) தனது பால்யத்தைக் கழித்த சமயத்தில் ஜெர்மன் நாடுகளை ஒன்றுசேர்க்கும் எண்ணத்தையும் தீவிர தேசிய உணர்ச்சியையும், யூதர்களின் பகைமையையும் விருத்திசெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவைத்தான். அதற்காக ஷோனெரெருடனும் அவன் சிநேகிதர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டான். அப்பொழுது ஆஸ்திரியாவிலிருந்த் ஹாப்ஸ்பர்க் அரசர்களை வெறுத்தான். ஏனென்றால் அங்கிருந்த செக்கர்கள், யூகோஸ்லாவியர்கள், போலிஷ்காரர்கள் இவர்களை ஜெர்மானியராக்காமல் இருந்தது, ஒருபெரும் தவறுதலாக ஹிட்லர் கருதினான்.

பிரகிருதம் கார்யாம்சையில் நடத்திக்கொண்டுவரும் கொள்கையை மெயின் காம்ப் புஸ்தகத்தில் ஹிட்லர் விஸ்தாரமாக எடுத்துக்காட்டியிருக்கிறான். மத்திய ஐரோப்பிய நாடுகளையும், பால்கன் நாடுகளையும், ஜெர்மனி ஆக்கிரமித்துக்கொள்ளுவதற்கும், பிரான்ஸைத் தோற்கடிப்பதற்குமான அவசியம் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக பொய், கொடூரம், கொலை, யுத்தம் முதலியவைகளை ஜெர்மானியர் கைக்கொள்ளுவார்கள். ரகசியமான ஜெர்மன் தந்திரங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இம்முறைகளால் கொஞ்சம் கொஞ்சமாக நாடுகளை ஆக்கிரமித்துக்கொண்டு, ஒவ்வொரு எதிரியையும் அடக்கி, மற்ற நாடுகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மறுத்து, கடைசியாக வெர்ஸயில்ஸ் ஒப்பந்தத்தையும் தள்ளிவிட வேண்டுமென்றும் அப்புஸ்தகத்தில் காணப்பட்டிருக்கிறது. ராஜ்ய தந்திரத்திற்கு பலாத்காரம் மிகவும் அவசியமென்று ஹிட்லரின் கருத்து. அபாண்டமாயும், ஒரேவிதமாயும் பொய் சொல்லி வந்தால் ஜனங்களுக்கு நம்பிக்கை கொடுக்குமென்றும், பயந்து சொல்லும் சிறு பொய்கள் பலிக்காதென்றும், ஹிட்லர் சொன்னான். ஜனங்கள் கேட்பதையெல்லாம் கொடுப்பதாக வாக்களித்து கொடுக்காமல் இருப்பது குற்றமில்லையாம். ஆனால் ஜெர்மன் மக்களுக்கும், ஜெர்மன் அரசாங்கத்திற்குச் சாதகமாக இருப்பவர்களுக்கு எல்லாவித கடைமைகளும் பூர்த்தி செய்யப்படுவதாக இப்படி பல்வாராகச் சொல்லியிருக்கிறான்.

1924-ல் நான் இப்புஸ்தகத்தை படித்தது முதற்கொண்டு, ஹிட்லரின் அபிப்பிராயங்களின் அந்தரங்கக் கருத்து எனக்குத் தெரியுமாதலால் இவைகளில் ஒருவித நம்பிக்கையும் உண்டாகவில்லை. அவன் கக்ஷியின் செல்வாக்கு அதிகரித்தது எனக்குத் தெரியும். முதலில் 11 பிரதிநிதிகளிருந்து 108-க்கு அதிகரித்தது. 10 வருஷங்களுக்குமுன் தலைமையதிகாரியாக (Chancellor) ஹிட்லர் வந்ததும் ஜெர்மனியிலேயே ஒரு பெரும் குழப்பமும், அழிவு உண்டாக்கக்கூடிய புரட்சியும் ஏற்படுமென்று எதிர்பார்த்தேன். ஜெர்மனியிலேயே உண்மையான ஜனநாயகக் கொள்கைகொண்ட பலர் இருந்தாலும், அவ்விதப் பொதுஜனங்களுக்கு அரசியல் அனுபவமும், நிச்சிதா புத்தியும் இல்லாததால் ஹிட்லரின் கக்ஷியை நிராகரிக்கப்போதுமான தைரியம் இல்லை. ஆகவே ஹிட்லர் வலுப்பெற்றே வந்தான்.

நான் ஜனநாயகத்தை நம்பினவன். துரோகம், பலாத்காரம் முதலியவைகளைக் கையாண்டுவந்த ஹிட்லருடன் உறவு கொண்டாடியதுமில்லை. உடன்படிக்கைகள் செய்துகொண்டதுமில்லை. ஆகவே 1935-ம் வருஷம் முதலே எங்கள் ஊரைச் சண்டைக்குத் தயார்செய்துகொண்டே வந்தேன். 1939-ம் வருஷ செப்டம்பரில் அதிக நெருக்கடி ஏற்பட்ட சமயத்திலும் போருக்குத் தயார்தான். ஆனால் மற்ற ஐரோப்பிய நாடுகள் தயாராக இல்லாததால், மியூனிச் உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டு எனது ராஜ்யம் பிடிபட்டது. இருந்தாலும் அதோடு நிற்காமல் பிறகு போலந்து படையெடுக்கப்பட்டு இரண்டாவது மஹா யுத்தம் நடந்துவருகிறது.



ஆகவே அரசியல் சம்பந்தமாக ஹிட்லர் கொண்ட அபிப்பிராயங்களைப் பார்த்தால் ஏற்கனவே இருக்கும் ஸ்தாபனங்களைக் கெடுப்பதுதான் முக்கிய குறியாகக் காணப்படுகிறது. இந்நோக்கத்துடன் 1918-ல் ஜெர்மனி அடைந்த தோல்வியை மாற்றவும், வெர்ஸயில்ஸ் சமாதானத்தை அழிக்கவும், ஜெர்மன் நாடுகளை ஒன்று சேர்த்து தனது பலத்தை ஸ்தாபிக்கவும், யுத்தத்தை மறுபடி துவக்கவும் ஹிட்லர் எண்ணினான். இவ்விதம் செய்வதற்கு ராஜவம்சத்தினரையும், செல்வந்தர்களையும், அதிகார வர்கத்தினரையும் அவன் உதவிக்கு நாடவில்லை. பொதுஜனங்களின் உதவியையே நாடினான். ஐரோப்பா பூராவும் ஜெர்மன் ஜாதியினர் ஆதிக்கம் பெற்று ஆளமுடியுமென்று எடுத்துக் காட்டினான். மற்றவர்களைக் காட்டிலும் ஜெர்மானியருக்கு ஒரு உயர்ந்த நிலை இருப்பதாயும் ஐரோப்பாவில் இவர்கள் ஆதிக்கம் அடையலாமென்றும் ஆசை காட்டினான். ஆகவே முன்பு பிஸ்மார்க் என்பவன் ஜெர்மனியின் முன்னேற்றத்தை ஸ்தாபிக்க முயன்றது போலவே ஹிட்லரும் பிரயத்தனப்பட்டான். ஆனால் பிஸ்மார்க், தத்வஞானிகள், ராஜதந்திரிகள், பிரபுக்கள், வீரர்களிடம் அதிகாரத்தை ஸ்தாபித்ததுபோக ஹிட்லர் சாதாரண ஜனங்களிடம் அதிகாரத்தைக் கொடுத்து அவர்களிடம் யாவரும் அடங்கியிருக்கும் நிலையை உண்டுபண்ணினான்.

அதனால் பிஸ்மார்க் இயக்கத்தைவிட இது அபாயகரமாயிற்று. ஏனென்றால் ஜனசமூகத்தில் மேல், நடு வகுப்பினரை நிராகரித்து பொதுமக்களை அணைத்துக்கொண்டு தனது கொள்கைகளை ஏற்படுத்தலாமென்று நினைத்தான். இவன் சொல்வதையெல்லாம் நம்பி லக்ஷக்கணக்கான பேர்கள் இவனைப் பின்பற்றினர். இருந்தாலும் இதில் ஒருவிசேஷம். ஜனநாயக ஆட்சியை ஹிட்லர் முற்றிலும் வெறுத்தான். ஸ்வதந்திரம், ஸௌஜன்யம், முதலிய சிந்தனைகள் இருந்தால் மற்ற நாடுகளை பலாத்காரமாக ஆக்கிரமித்துக்கொள்ள முடியாதென்றே ஹிட்லரின் அபிப்பிராயம். ஆஸ்திரியாவில் இவன் இருக்கும்போது யூதர்களின் துவேஷத்தை வளர்த்துவந்தான். யூதர்கள் புத்தி கூர்மையுள்ளவர்களென்றும், பயந்தவர்கள் என்றும், தெரிந்தும், அவர்களில் சிலர் வியாபாரம், தொழிற்சாலை முதலியவைகளை நடத்துவதால் ஜெர்மானியரின் ஏகாதிபத்தியத்திற்குத் தடை செய்வார்கள் என்று எண்ணினான். ஹிட்லரின் அபிப்பிராயப்படி உள்நாட்டு வியவகாரம், சமூக அமைப்பு, பொருளாதாரம், முதலியவைகளுக்குத் திட்டங்களைத் தயாரித்துக் கொடுத்து டாக்டர் ஷாட் என்பவனும் மற்றும் சிலரும் இருந்தனர்.

ஹிட்லர் ஐரோப்பாவில் ஸ்தாபிப்பதாகச் சொல்லும் புதுதிட்டம் என்ன என்பதை இப்பொழுது கவனிப்போம். ஐரோப்பா முழுவதிலும் ஜெர்மன் ஆதிக்கம் ஸ்தாபிக்கப்படும். மற்ற தேசத்தினர் யாவரும் ஜெர்மன் அதிகாரத்திற்கு உட்படிந்து நடக்கவேண்டும். ஜெர்மன் அரசாட்சிக்கு அடங்கியிருக்கும் நாடுகள் ஜெர்மனிக்குச் செய்யும் உதவியின் தரத்தைப் பொருத்து வகுக்கப்படும். பிரெஞ்சு மக்களுக்கு அதிக முன்னேற்றமில்லாததால் வருங்காலத்தில் அதற்குப் பிரத்தியேகமான கௌரவம் கிடைக்காது என்று நாஸிகளது அபிப்பிராயம். ஆனால் பிரான்ஸ், ஜெர்மனியின் வசமாகி பிரெஞ்சு குடியேற்ற நாடுகளையும் ஒப்புவித்தால் கௌரவம் பாராட்டப்படுமாம். இதாலி, ஜெர்மனியின் கக்ஷியிலிருந்து மற்றநாடுகளுடன் சண்டை போடுவதால் ஜெர்மனிக்கு அடுத்தபடியான கௌரவம் கொடுக்கப்படுமாம். சிறிய நாடுகளுக்குள் ஹங்கேரிக்கு ஒரு விசேஷ நிலை

உண்டு. யூக்ரேனிலிருந்து ருஷ்ய அரசாங்கத்தை விரட்டி ஆசியாவோடு சேர்க்கப்படும். இவ்விதமான புது திட்டத்தை எதிர்த்துப் போராடும் ஸெக்கோஸ்லாவாகியா, போலந்து, ருமேனியா, யூகோஸ்லாவியா, தோற்கடிக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்படும். இப்படிச் செய்வதால் ஜெர்மனி ஒரு பெரும் தொழில் பெருத்த நாடாகும். கடல் ஸ்வதந்திரம், புதிதாக குடியேற்ற நாடுகள் அதன் வசமாகும். இதர நாடுகள் விவசாயம்தான் செய்யலாம். அவைகளுக்குள்ள ஸ்வதந்திரம் குறைக்கப்படும். ஏனென்றால் ஜெர்மனிக்குத் தேவையான சாமான்களை உண்டு பண்ணி ஜெர்மனியின் பொருளாதாரத்தைப் பூர்த்தி செய்வதைத் தவிர வேறு அலுவல்கள் இருக்கக்கூடாது. ஆனால் அந்த நாடுகளுக்குத் தேவையான பொருளாதாரம், இதர பயிற்சி முதலியவைகளுக்கு ஜெர்மனியை எதிர்பார்க்க வேண்டும். தொழிற்சாலைகள் நடத்தும் அபிப்பிராயம் இருந்தால் ஜெர்மனியில் உள்ள ஸ்தாபனங்களுடன் பிணைக்கப்பட்டோ, ஜெர்மானியரின் மேல்பார்வையிலோ நடத்தவேண்டும்.

யூக்ரேன், மத்தியதரைக்கடல், ஆபிரிக்கா, மத்தியக்கிழக்கு, தூரக்கிழக்கு முதலிய இடங்களில் புதிதாக ஜெர்மனி வசமாகும் குடியேற்ற நாடுகளிலிருந்து விளைவுபொருள்களையும், முக்கியமாக பெட்ரோலையும் ஜெர்மனி எடுத்துக் கொள்ளும். ஆசியாவின் கிழக்கில் ஜப்பான் முதன்மையாக இருந்து எல்லா வியவகாரங்களையும் தீர்க்கும். கிரேட் பிரிட்டன் ஜெர்மனி 'சொல்படி அடங்கி நடந்து கொண்டால் அதன் சாம்ராஜ்யத்தின் பெரும்பாகம் பிரிடன் வசமே ஒப்பிவிக்கப்படும். ஜெர்மனியை எதிர்த்தால் கிரேட் பிரிடன் தனியே ஒதுக்கப்பட்டு அதன் சாம்ராஜ்யமும் அழிக்கப்படும்.

ஜெர்மனியிலும் ஜெர்மனிக்கு அடங்கிய நாடுகளிலும் 'புதுதிட்டப்படி' ஜனநாயகத்திலுள்ள பத்திரிகை ஸ்வதந்திரம், சுயேச்சையாக அபிப்பிராயங்களை வெளியிடுவது, சொந்த மதஸ்தாபனங்களை வைத்துக்கொள்ளுவது, சாஸ்திரியமாக விமர்சனம் செய்வது முதலியவை எல்லாம் தடுக்கப்படும். பாஸிஸ்ட் (Fasist) கக்ஷித்தலைவர்களுக்குத்தான் ஸர்வ அதிகாரமும் உண்டு. அவர்களது கட்டளைப்படிதான் யாவரும் நடந்து கொள்ளவேண்டும். இவ்வதிகாரிகளுக்கு விரோதமானவர்கள் ஒழிக்கப்படுவார்கள். அல்லது அடக்கப்படலாம். இவ்விதமாக இத்தலைவர்களை எதிர்த்துப் போராடும் பயிற்சி, படிப்பு, கலை, இதர சாஸ்திரங்களெல்லாம் ஒழிக்கப்படும். ஆகவே இதுவரை எத்தனையோ நன்மைகள் மறைந்து கிடப்பதுபோல பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து உண்டான தேசீய உணர்ச்சியும், பிரிடிஷ்காரர்களால் விருத்தி செய்யப்பட்ட ஜன உரிமைகளும், அமெரிக்கப் புரட்சியின் கொள்கைகளும் பாழாகவேண்டியதுதான்.

இந்தவிதமாக ஜன சமூகத்திற்கு அரசியல் ஸ்வதந்திரம் பிடுங்கப்பட்டால் பொருளாதாரத்திலும் அடிப்படையான சில மாறுதல்கள் வரத்தான்வரும். தனியே சாமான் உற்பத்தியில் ஈடுபடும் காலம்போய் எல்லாம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படும். தனியாக லாபம் சம்பாதிக்க முடியாது. அவ்விதம் சம்பாதிக்கும் லாபத்தை, அரசாங்கத்தை நடத்தும் பாஸிஸ்ட் கக்ஷிக்கு உதவி செய்யும் பொதுமக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். அதிகாரம் பணக்காரரிடமிருந்து, முக்கியமாக யூதர்களின் செல்வாக்குப் போய், புதிதான நாஸிக் கக்ஷிக்கு வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் வித்தியாசம் இல்லை. அரசாங்கத்திற்குத் தெய்வீக சக்தியிருக்கிறதாக பாவிக்கப்படும். அரசாங்கம் கடவுள்தான். கடவுளுக்குச் சமமான சக்தி இதர ஜனங்களுக்கு இல்லாதது போல் அரசாங்கத்தை எதிர்த்து நிற்க ஜனங்களுக்கு ஒரு ஸ்வதந்திரமும் கிடையாது. ஜனங்களுக்குத் தேவையானவைகளை கக்ஷித்தலைவர்கள் நிர்த்தாரணம் செய்வார்கள். அரசாங்கம் கேட்கும் பொருள்களை ஜனங்கள் ஆக்ஷேபிக்காமல் உடனே கொடுக்கவேண்டும். இம்மாதிரியான அதிகாரத்தை செலுத்தப் போதுமான தற்காப்பு இருக்கவேண்டுமாதலால், யுத்தம் நின்ற பிறகும், ரானுவம்,



ரகசியப் போலீஸ் முதலியவை வைத்துக்கொள்ளப்படும். இவைகளைக்கொண்டு தரை, ஆகாயம் முதலியவைகளில் காபந்து செய்யப்படும்.

18-வது, 19-வது நூற்றாண்டுகளில் அரசர்கள், மேல்ஜாதி பிரபுக்கள் முதலியவைகளால் உண்டான அட்டூழியங்களைக் காட்டிலும் இன்னும் அதிகக் கொடுமையாக இப்பொழுது நாஸிகளின் செயல்கள் காணப்படுகின்றன. உதாரணமாக ஜனங்களுக்கு உண்டாகும் பயிற்சி, சாஸ்திரியகலை, விமானப் போக்குவரவு, ரேடியோ எல்லாம் கொடுங்கோல் செலுத்தும் நாஸிகளுக்குட்பட்டுதான் இருக்க வேண்டும்.

மேலும் இக்கொடிய அரசாக்ஷியில் சாணக்கிய தந்திரத்தில் சொல்லியபடி எல்லாம் மும்மரமாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. யுத்தத்தை இவர்களாக ஆரம்பித்து இங்கிலாந்து, அமெரிக்கா பேரில் பழி சாற்றப்படுகிறது. சிறு நாடுகளை சண்டையில் அழித்து, இங்கிலாந்துதான் இந்நாடுகள் அழிந்ததிற்குக் காரணம் என்று பிரசாரம் நடத்துகின்றனர். ஆங்காங்குள்ள சிறு வகுப்பினர் நாசமாக்கப்படுகின்றனர். இவ்விதம் நாசமாவதற்கு, அவர்கள் ஜெர்மானியர் குடியேற வேண்டிய ஸ்தலத்தில்வந்து வசித்ததுதான் காரணமென்று குற்றம்கூறப்படுகிறது. சில தேசங்களின் நடுநிலைச் சட்டத்தை அழித்துவிடுகின்றனர். இதற்குக் காரணம் இங்கிலாந்தை அவ்விதம் செய்யவிடாமல் தாங்கள் முந்திக்கொண்டு அவ்விதம் செய்வதாகச் சொல்லுகின்றனர். தங்கள் நாட்டில் லஞ்சம் வாங்கும் இழிவான பழக்கம் இருந்தபோதிலும் ஜெர்மனியில் ஏற்கனவேயிருந்த ஜனநாயக ஆட்சியால் தான் இது ஏற்பட்டது என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆக்கிரமித்த நாடுகளில் சென்று, கொள்ளை வழிப்பறி முதலியவைகளால் பொருளாதாரப் பஞ்சம் விளைவித்து, பிரிடிஷார் போட்டுள்ள முற்றுகையின் பயன் என்று பிரசித்தப் படுத்துகின்றனர். ஆகவே ஜனாதிபதி ரூஸ்வெல்டு இப்புது திட்டத்தைப்பற்றி இது புதிதுமில்லை, திட்டமுமில்லை என்று இழிவாகப் பேசியது ஆச்சரியமில்லை.

ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆக்கிரமித்துக்கொண்டு கொள்ளையடிக்கப் பார்க்கும்போது ஒழுங்காக ஒன்றும் செய்யமுடியாது. இதனால் புதிய தகராறுகளும், சண்டைகளும், கலகங்களும், விரோதமும் தான் உண்டாகும். இவ்விதமாக ஐரோப்பா பூராவும் பலவித கஷ்டங்கள் ஏற்படும். எங்கே நியாயம், சத்தியம், பஹிரங்கமான அபிப்பிராயம், ஸௌஜன்யம் இல்லையோ அங்கே அமைதியே ஏற்படாது. சமூகம், பொருளாதாரம், நடத்தை முதலியவைகளில் தகராறு ஏற்பட்டு முடிவில் பெரும் ஆபத்துத்தான் விளையும். ஆகவே நாஸிகளின் 'புதுதிட்டம்' அபாவம், சூன்யவாதம், கொரோம், அழிவு முதலியவைகளையே ஸ்தாபிக்க முயற்சிக்கிறது. இம்மாதிரி திட்டத்துடன் ஆரம்பமான அரசாக்ஷிகளெல்லாம் அழிந்தது யாவருக்கும் தெரிந்ததுதான். உதாரணமாக ரோம், பைஸான்ஷியன் சாம்ராஜ்யங்கள் அழிந்தன. ஐரோப்பாவில் வேறு ஜாதியினர் படையெடுத்த காலத்தில் புராதன சாம்ராஜ்யங்கள் அழிந்தன. 30 வருஷ யுத்தம் முடிந்ததும் ஐரோப்பாவே குலைந்தது. ஆகவே நாஸிகளின் புது திட்டமும் அவ்விதம்தான். இருந்தாலும் ஐரோப்பாவில் 'புது திட்டம் நடக்குமா என்று பார்ப்போம்.

நாஸி கொள்கைகளுக்கும் ஜனநாயக ஆட்சிக்கும் ஒரு நாளும் சமாதானம் ஏற்படாது. அப்படி ஏற்பட்டாலும் தாத்காலிகமாக ஒரு சுகம் ஏற்படுமே தவிர முடிவான அமைதி ஏற்படாது. முடிவான சுகம் உண்டாகவேண்டுமானால் பாஸிஸ்ட் இயக்கமும், தலைவர்கள் யாவரும் உடனே அழியவேண்டும். ஜனநாயகங்கள் யுத்தத்தில் ஜயிப்பதோடு அதன் தத்துவம் மனிதர்களின் மனதிலும் படவேண்டும். முக்கியமாக ஜெர்மனியின் அரசியல், சமூகம் இவை இரண்டிலும் அடியோடு மாறுதலை ஸ்தாபிக்கவேண்டும். இதற்கு எவ்வளவு காலம் பிடித்தாலும் பாதகமில்லை. அவ்விதம் செய்தால் ஜெர்மனியே புதிதாக ஆகி மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் சிநேகபாவத்துடன் இருக்கும்.

இதுவரை ஜெர்மனி ஆக்கிரமித்துக்கொண்ட நாடுகள், ஆஸ்திரியா உள்பட யாவும் விடுவிக்கப்படும். சிறு நாடுகள் பெரிய நாடுகளுடன் செக்கோஸ்லாவாகியாவையும், போலந்தையும் ஒன்று சேர்க்க நினைப்பதுபோல், ஒரே அரசாங்கத்திற்கு உட்பட்டோ, அல்லது தனி அரசாங்கமாக இருந்து ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டோ பிணைக்கப்படும். இதுபோலவே வட ஐரோப்பாவில் பால்கன் நாடுகளுக்குள்ளும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்படுத்தப்படும். இவ்விதம் செய்வதால் அந்தந்த நாடுகளில் வசிக்கும் ஜனங்களுக்குள் நல்ல பொருளாதார நிலைகள் எளிதில் அபிவிருத்தியடையும். இதனால் பகைவரின் பயமில்லாமலும் பரஸ்பரம் உபகாரமாயும் இருக்கமுடியும்.

சென்ற யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்டதைவிட பலமாக சிறு வகுப்பாரின் விஷயம் நிர்ணயிக்கப்படவேண்டும். ஒரு தேசத்திலுள்ள சிறுவகுப்பாரை சொந்த நாடுகளுக்கு அனுப்புவது ஒருவழிதான். இவ்விதம் 1922-ம் வருஷ யுத்தத்திற்குப் பிறகு கிரீஸும், துருக்கியும் ஒரு ஏற்பாடு செய்துகொண்டன. அப்படிச் செய்யாவிட்டால் பெரும் கொலைகள் ஏற்படுகின்றன. இத்திட்டத்தை யாவரும் தீர ஆலோசித்து ஒப்புக்கொண்டால் எல்லாவித சௌகரியங்களும் உதவியும் உண்டுபண்ணி சமாதானமாகவே இருக்கச்செய்யலாம்.

இந்த யுத்தம் முடிந்தவுடனேயே எல்லா ஐரோப்பாவும் ஒன்று சேர்ந்துவிடாது. ஏனென்றால் இந்த யுத்தமே நம்பிக்கையில்லாத தன்மை, துரோகம் முதலிய காரணங்களால் உண்டானதால் சமாதானம், நம்பிக்கை, தயவு முதலியவை உடனே ஏற்படாது. சிறு நாடுகளையெல்லாம் இப்பொழுது ஒன்று சேர்த்தால் கொஞ்சகாலம் கிரமித்து ஐரோப்பாவை ஒன்று சேர்க்கும் நிலை ஏற்படலாம். அவ்விதம் ஏற்படுவதற்கு முகவுரையாக நாடுகளுக்குள் பரஸ்பரம் நிஜமானதும், நியாயமானதுமான சமத்துவ புத்தி ஏற்படவேண்டும். தனி நாடுகளுக்குள்ளும், ஒற்றுமையுள்ள நாடுகளுக்குள்ளும் சமமான பொருளாதாரத் திட்டங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். யாவருக்கும் உள்ள ஐக்கியத்தால் சத்துரு பயம் நீங்கி இனி 50 வருஷங்களுக்கு யுத்த பயமில்லாமலுமிருக்கவேண்டும். இதற்கிடையே ஐரோப்பிய ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் நிலைநாட்ட ஒரு சர்வதேசச் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டால், அதன்மூலம் தனிப்பிரதேசங்களுக்குத் தக்கவாறு வேறு சங்கங்களை அமைத்து முடிவில் ஐரோப்பாவையே ஒன்று சேர்க்க உதவியாக இருக்கும். இப்பொழுது (கக்ஷி ஆளுகையை ஒழித்து ஸர்வாதிகாரம் பெற்றவர்களான) நாஸிகளுடனும், இதாலியருடனும் ஜனநாயகங்கள் யுத்தம் செய்கின்றன. இவர்களைப்போல் ஸர்வாதிகாரம்பெற்ற ருஷ்யர்களையும் இதற்கு முன் எதிர்த்தன. இவ்விதமான கக்ஷிகளின் பயம் இல்லாமல் திடசித்தமாக இருந்து பொதுஜனங்களின் சௌகரியங்களையும், பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் ஜனநாயகங்கள் தாங்களாகவே முன்னால் செய்துகொண்டால் சமூகப் புரட்சிகள் இல்லாமல் உண்மையான வாழ்க்கை ஏற்படும். சுருங்கச் சொல்லில் அரசாங்கத்தில் ஜனநாயக ஆட்சி தேவையானால் சமூகத்திலும், பொருளாதாரத்திலும் ஜனநாயகம் இருக்கவேண்டும்.

இம்மாதிரி நாம் செய்யவேண்டியதாகச் சொல்லும் மாறுதல்கள் சில நாடுகளின் அமைப்பிற்குப் பாதகமாக இருக்கலாம். ஆனால் ஜனநாயகம் கெட்டுவிடாது. பொருளாதாரம், சமூக அமைப்பு முதலியவைகளில் செய்யும் மாறுதல்களிலும் பிரஜைகளின் ஸ்வதந்திரம் கெடாது. ஆனால் யுத்தம் நின்ற பிறகு முன் காலத்தில் வழங்கப்பட்ட முழு சுயேச்சை உண்டாகாதபோனாலும், மனிதனுக்கு மத விஷயமாயும் பொருள் விஷயமாயும் அடிப்படையான ஸ்வதந்திரமும், கௌரவமும் மறுக்கப்படமாட்டா. அவனுக்குள்ள ஸ்வதந்திரத்தை யாரும் தடைசெய்ய முடியாது.

இவ்விதம் அமைக்கப்படும் உலகத்தில் குடியேற்ற நாடுகள், உள்நாட்டு வியாபாரம், விளைவுபொருள்களைப் பங்கிடுவது முதலிய பிரச்னைகள் குறுக்கிட



லாம். ஆனால் இவ்வியவகாரங்களில் பலம்பெற்ற தனி நபர்கள், பணக்காரர்கள் முதலியோரைக் காட்டிலும் அந்தந்த அரசாங்கத்திற்கு இந்த அதிகாரம் ஏற்படுவதுதான் உசிதம். மேலும் அரசாங்கத்தார் இஷ்டப்படி விட்டுவிட்டால் யுத்தத்திற்குப் பிறகு இதர தேசங்களின் வியாபாரத்தைக் கெடுக்காமல் எல்லா நாடுகளுக்கும் சாமான்கள் கிடைக்குமாறு ஏற்பாடு செய்வார்கள்.

ஆகவே இதெல்லாம் எப்படி இருந்தபோதிலும் இப்பொழுது இந்த யுத்தத்தை ஜயிப்பது நமது முதல் கடமையாகும். அதற்கு எவ்வளவு காலம் பிடித்தாலும் பாதகமில்லை. நாஸிகளுக்கு உட்படாமல் இருக்கவேண்டும். மேலும் அரைகுறையாகவும் ஒரு சமாதானம் செய்துகொள்ளக் கூடாது. அப்படி ஏற்பட்டால் பிறகு இதைவிட கடுமையான யுத்தம் நேர்ந்துவிடும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 12—12—41-லிருந்து 18—12—41-வரை.

ருஷ்யா.—ருஷ்யப் போர்முனையிலிருந்து மிகவும் திருப்திகரமான செய்திகள் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. உறைபனியுள்ள வடக்குப் பாகத்திலிருந்து அஸாவ் கடல் வரையிலும் வியாபித்திருந்த எதிரிச் சைனியங்கள் ருஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டு சின்னாபின்னமாக ஓடுகின்றன. மாஸ்கோவை எதிரிகள் முற்றுகையிட்டது பலிக்கவில்லை. இம்முனையிலிருந்த வான் பக் என்ற ஜெர்மன் ராணுவ அதிகாரி அவமானத்துடன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். ஸோவியத் அரசாங்கம் மறுபடி மாஸ்கோவிற்கே வருமென்றும் பிரஸ்தாபப்படுகிறது. மாஸ்கோவிற்கு 20 மைல் தூரம் வரை முன்சென்றிருந்த எதிரி ஒவ்வொரு இடத்திலிருந்தும் துரத்தப்பட்டான். உதாரணமாக எல்ட்ஸ், ஸ்டாலினோகோர்ஸ்க், கிளின், டுலா, கலினின் இடங்களெல்லாம் ருஷ்யர் வசமாயின. யத்தனம் பலிக்காததால் கிராமங்களையெல்லாம் எதிரி கொளுத்துகிறான். ருஷ்யர் முன்னேறிவருவதைத் தடுக்க ரஸ்தாக்களில் சுரங்க வெடிகளைப் பாவுகிறான். தோல்வியை அங்கீகாரம் செய்ய இஷ்டமில்லாமல் மாரி காலத்திற்கு இடம் தேடிப் போவதாக மாத்திரம் சாக்குச் சொல்லுகிறான். எப்படியானாலும் ருஷ்யாவில் மாரிகாலத்தில் எதிரி நிற்க முடியாது.

லிபியா.—வெற்றிகரமாக நேசதேசச் சைனியங்கள் எதிரியைச் சூழ்ந்துகொண்டுவருகின்றன. டொப்ருக் பிரதேசம் விடுவிக்கப்பட்டது. ஸோலூமைச் சுற்றி ஏதோ சில்லரைச் சண்டைகளே நடந்துவருகின்றன. பீர்ஹாகீம், அக்ரோமா, கிர்பா, கஸாலா பிடிபட்டன. டெர்னாவிலும் சென்று விட்டனர். எதிரி இங்குமங்கும் துரத்தப்பட்டு மேற்கு நோக்கி ஓடி டிமிமி, டிரை எல் ஆப்ட் பிரதேசங்களுக்கு இடையில் அகப்பட்டுக்கொண்டான். கஸாலா, கெஸாலாவிற்கு மேற்கே 30 மைல்கள், ஆலம்ஹமிஸா என்ற மூன்று இடங்களில்தான் சண்டை நடக்கிறது. கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்தில் நேசதேசப்படைகள் ஸ்திரமாக சண்டை செய்து முன்னேறின.

லிபியாவிலுள்ள எதிரிக்கு வரும் சாமான் கப்பல்களும் ஏராளமாக அமுக்கப்படுகின்றன. சென்ற வாரத்தில் ஜெர்மனிக்குச் சொந்தமான ஒரு ஸப்ளைக் கப்பலும், பாய்மரக் கப்பலும், பிரயாணிக் கப்பலும் (12,000 டன்) நாசகாரியும், இ. படகும் இடிகுண்டுப் படகும், நீர்மூழ்கியும் மூழ்கடிக்கப்பட்டன. இவ்வித நஷ்டங்களால் லிபியாவிற்குத் தேவையான உதவி அனுப்ப முடியாததோடு மத்தியதரைக்கடலைக் கடந்துசெல்லவும் முடியவில்லை. எதிரி மீறிவந்தால் அவனுக்கு பாதி நஷ்டமாகப்போய்விடுகிறது.

## தூரக்கிழக்கு.

**சண்டையின் போக்கு.**—6,500 மைல் விஸ்தீர்ணத்திற்கு ஜப்பானியர் சண்டையைப் பரப்பியிருக்கின்றனர். அமெரிக்கக் கப்பற்படையை சேதப்படுத்த பேர்ல் துறைமுகத்தையும், குவாம், மணிலாவை விமான தளங்களைப் பிடிக்கவும், ஹாங்காங்கைப் பிடித்து பிரிடிஷாரின் உதவிவரமுடியாமல் செய்யவும், மலேயாவைப் பிடித்து சிங்கப்பூரைத் தாக்கவும் இம்மாதிரி கேந்திரமாயுள்ள இடங்களை ஜப்பான் தாக்கிவருகிறது.

**பேர்ல் துறைமுகம்.**—இங்கிருந்த ஒரு பழைய சண்டைக் கப்பல் உள்பட ஆறு அமெரிக்கக் கப்பல்களும், ஜப்பானியருக்கு 3 நீர்மூழ்கிகளும் 41 விமானங்களும் சேதமாயின.

**குவாம்.**—எதிரி வசமாயிற்று.

**லூஸானில்.**—எதிரி புகுந்தாலும் பிலிப்பைன்ஸ் நிலை பாதகமாக இல்லை. மீரி (பிரிடிஷ் போர்னியோவிலுள்ளது) லூபாங் ஜப்பானியர் வசப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

**ஹாங்காங், மலேயாவில்** முக்கிய சண்டை நடக்கிறது.

ஹாங்காங்கிற்கு எதிரில் சைனாவிலிருக்கும் கௌலூனை பிரிடிஷார் காலி செய்தனர். ஹாங்காங்கை ஜப்பானியர் முற்றுகையிட்டிருக்கின்றனர். ஹாங்காங்கை சரண்படுத்தும்படி. பிரிடிஷ் கவர்னருக்குச் சொன்னதை மறுத்து அப்படி எதிரிகளிடம் வசமாகும் நிலைவரவில்லை என்று வீரத்தனமாக ஜப்பானுக்குச்சொல்லி இது சம்பந்தமாக வீண்பேச்சுவார்த்தை நடத்தமுடியாதென்றும் எச்சரிக்கை செய்தான். காண்டன், ஹாங்காங் இருப்புப்பாதையின் மூலமாக சீனர்களும் கௌலூனின் பக்கங்களிலிருந்து ஜப்பானியரைத் தாக்கிவருகின்றனர்.

**மலேயாவில்** முன்னேறியதற்கு ஜப்பானுக்குச் சில ஆரம்ப வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. பிரின்ஸ்-ஆப்-வேல்ஸ், ரிபல்ஸ் என்ற இரண்டு பிரிடிஷ் கப்பல்கள் இல்லாததால் ஸயாம்குடா திறக்கப்பட்டது. ஆகவே கோடபாரு என்ற இடத்தில் ஜப்பானியர் உட்புகுர முடிந்தது. ஸயாமும் எதிரி வசப்பட்டதால் தாய்லாந்து வழியாக எதிரி சைனியங்கள் எளிதாகப்போக முடிகிறது. கிரா ஜலசந்தியில் பிளந்துகொண்டு பர்மாவிலுள்ள விக்டோரியா முனையையும் பிடித்துவிட்டனர். கேடா என்னுமிடத்தில் பெரும் சண்டை நடக்கிறது. இதை எதிரி பிடித்துக்கொண்டால் பினாங்கிற்கு ஆபத்துவரும்.

**போர்ச்சுகீஸ்காரருக்குச் சொந்தமான டிமோரை** ஜப்பானியர்கள் வியாபித்துக்கொள்ளுவதற்கு முன்னமேயே ஆஸ்திரேலிய, டச்சுப்படைகள் வியாபித்துக் கொண்டார்கள்.

**பொய் பித்தலாட்டங்கள்.**—ரெங்கூனை பலமாகத் தாக்கி அந்தமான் தீவுகளையும் ஜப்பானியர் பிடித்ததாகச் சொல்லுவது மிகவும் தவறு. அடுத்தபடியாக பர்மா கவர்னர் எதிரிகளைத் தாக்குவதற்கு பர்மா அரசாங்கம் தயார்செய்து வருவதாக உறுதி கூறினர். அதிலிருந்து மலேயாவிலுள்ள ஜப்பானியத் துருப்புகளுக்கு பின்புறத்திலிருந்து சப்ளைகள் வரமுடியாதபடி தடையேற்பட்டுவிடும். மேலும் தூரக்கிழக்கு வியவகாரங்கள் பூராவும் தெரிந்த தளகர்த்தர் வேவலும் பர்மா அரசாங்கம் இவ்விதம் உறுதி சொல்லுவதினால் உண்மையில் யாதொரு பயமும் ஏற்படக் காரணமில்லை என்று சொல்லுகிறார்கள். அதினால் பொய் வதந்திகளைக் கிளப்பி மற்றவர்களை பயப்படும்படி செய்வது பெரிய முட்டாள் தனம். அது ராஜவிச்வாஸத்திற்கும் குறைவு ஏற்படும்படி செய்யும்.



**ஜப்பானியரின் துரோகம்.**-ஜப்பானுடன் சமீபத்தில் நடத்திய பேச்சுவார்த்தைகளைப்பற்றி அமெரிக்க சபைக்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தெரியப்படுத்தியபோது, தனக்கு பஸிபிக்கில் வீண் யுத்தம் நடத்தும் அபிப்பிராயமில்லையென்றும், சமாதானம் ஏற்பட்டால்பல ஆயிரம் மைல்கள் கடந்து ஜப்பானிய பிரதம மந்திரியைப் போய் சந்திக்கத் தயாராகயிருந்ததாயும் சொன்னார். ஆனால் நியாயம், ஸ்வதந்திரம் முதலியவைகளைப்பற்றி ஜப்பானிடம் பேசியபோது, ஜப்பான் தனது நாட்டில் 70 லக்ஷம் பேர் அடங்கிய மேன்மையான ஜாதியினர் இருப்பதாக எல்லாம் பேச ஆரம்பித்தது. ஜப்பானது ஐவேஜிகளைத் தடைசெய்யக்கூடாதென்றும் சொல்லிற்று. கள்ளத்தனமாக இந்தோ-சைனாவில் ஜப்பான் சைனியங்களைப்பற்றி கேட்டபோது அமெரிக்கருக்குச் சொந்தமான பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்க ஆரம்பித்துவிட்டது.

**இரண்டு ஸ்வதந்திரங்கள்.**—அமெரிக்கரின் ஸ்வதந்திரச் சட்டத்தின் வருஷாந்திர தினமான டிஸம்பர் 15-ல் ஜனாதிபதி பேசியபோது மனிதனின் ஸ்வதந்திரம், மனதின் ஸ்வதந்திரம் என்ற இரண்டையும் அச்சுநாடுகள் ஒழிக்க நினைப்பதாகச் சொன்னார். ஹிட்லருக்கும் அவன் கூட்டாளிகளுக்கும் "சுயேச்சையாகச் சொந்த அதிகாரம் செலுத்தும் மனிதர்களையே தெரியாது. ஒன்றும் அறியாத பொது மக்களைத்தான் மனிதர்கள் என்று ஹிட்லர் நினைக்கிறான். உலகத்தையே அமைக்கப்போகும் கொடுமை திட்டத்தின்படி மனிதர்கள் வெறும் தாஸிக்குச் சமானமாம். நாம் நினைக்கும்படியான அரசாங்கமே ஹிட்லருக்குத் தெரியாது. மனிதர்களின் அபிப்பிராயத்தை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் ஏற்பட்டதாக அவன் நினைக்கவில்லை. ஆனால் கொடுங்கோல் அரசாங்கம்தான் சரியானதாம்.

கோவில்கள் இருப்பது கொடுமை என்று அவைகளை முடிந்தவரை ஒழிப்பானாம். நாஸிக்கோவில் என்பது முழுதேசத்திற்கும் ஒன்றுதான்.

**அதிகக் கொடூரம்.**—தன்னிஷ்டப்படி நினைப்பது, பேசுவது, தொழுவது கூடாது. இவையெல்லாம் பயத்தை விளைவிக்குமாம். ஆகவே இந்த யுத்தத்தால் சுயமரியாதையுள்ள ஜனங்களை அடக்கி ராக்ஷஸத்தனம், கொடுங்கோல், இவைகளை முன்கொண்டுவந்து, நேசதேசங்கள் ஸ்தாபிக்கும் சத்தியம் ஆத்மதுஷ்டி, முதலியவைகளை ஒழிக்கப் பார்க்கிறார்கள்" என்று ரூஸ்வெல்ட் தெரியப்படுத்தினார்.

**ஸெயின்டு டெனிஷ்.**—பிரெஞ்சுக் கொடிகளுடன், பிரான்ஸுக்குச் சாமான் ஏற்றிச் சென்ற ஸெயின்டு டெனிஷ் என்ற கப்பல் டிஸம்பர் 9-ம் தேதி பலீரிக் தீவுகளுக்கு அருகில் கவுக்கப்பட்டது. இதை பிரிடிஷ் நீர்மூழ்கி தாக்கியது என்று பிரெஞ்சுக்காரர்கள் சொல்லுகின்றனர். உண்மையில் அங்க பிரிடிஷ் நீர்மூழ்கியே கிடையாது. ஆனால் அங்கே ஜெர்மன் யூ படகுகள் தானிருந்து நார்வே, பிரிடிஷ், ஸ்பானிஷ் கப்பல்களைத் தாக்கிவருகின்றன. ஆகவே ஸெயின்டு டெனிஷும் ஜெர்மன் நீர்மூழ்கியால் தான் தாக்கப்பட்டிருக்கவேண்டும். இவ்விதம் பிரான்ஸ், ஸ்பெயினுக்கும், பிரிடனுக்கும் சண்டையை மூட்ட நினைக்கிறது. சமீபத்தில் கிடைத்த ரேடியோ செய்தியிலிருந்து பிரிடன் பேரில் சொன்ன குற்றத்தை விஷி வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டது என்று தெரிகிறது.

**ஒப்பந்தங்கள்.**—இதாலி, ஜெர்மனி, ஜப்பான் இந்த மூன்று நாடுகளுக்குள்ளும்; ஜப்பானுக்கும் பிரெஞ்சு இந்தோ-சைனாவிற்கும்; ஜப்பானுக்கும், தாய்லாந்திற்கும் ராணுவ ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கின்றன.

**யுத்தம்.**—இவ்வாரத்தில் ஜெர்மனி, இதாலி, ருமேனியா, போலந்து, டோமிகன், இராக், சேர்ந்து அமெரிக்கா பேரிலும், அமெரிக்கா, ஸான் ஸால்வடார் முன் சொன்ன நாடுகள் பேரிலும் சண்டை தொடுத்திருக்கின்றன. ஹங்கேரி,

ருமேனியாவுடன் அருக்கி ராஜீய சம்பந்தத்தை முறித்துவிட்டது. விஷியும், அருக்கியும் ஜப்பானுடன் நடுநிலை வகிக்கின்றன.

**இனி வேலைநிறுத்தம் இல்லை.**—பஸிபிக்கில் யுத்தம் ஆரம்பமானவுடன் அமெரிக்காவில் எல்லாவிதத் தொழிற்சாலைகளும் ஒற்றுமையாக இருந்து எதிரியைத் தோற்கடிக்கும் நோக்கத்துடன் வேலை செய்கின்றன. அமெரிக்க தொழிலாளி சங்கத்தின் பிரஸிடெண்டான மிஸ்டர் வில்லியம் க்ரீன், அமெரிக்கத் தொழிற்சாலைக்கூட்டத்தின் தலைவனான மிஸ்ட்டர் பிலிப் மற்றே, மிஸ்ட்டர் ஜான் லூயி இவர்கள் சேர்ந்து ஒத்தாசை செய்வதாகச் சொல்லியிருக்கின்றனர்.

**பலிகள்.**—நூறு யூதர்கள் கலகக்காரர்கள் என்று சொல்லப்பட்டு ஜெர்மானியரால் கொல்லப்படுவார்கள். ஆக்கிரமித்த பிரான்ஸை வியாபித்துக்கொண்ட ஜெர்மானியத் துருப்புகளுக்கு விரோதமாக நடந்த பிரான்ஸிலிருக்கும் யூதர்களுக்கு பதினாயிரம் லக்ஷம் பவுன் அபராதம் விதிக்கப்படும். இவ்விதம் செய்வதை விஷி அரசாங்கத்தாரே தடுத்துச் சொல்லுகின்றனர்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**8—12—41.** (திங்கட்கிழமை).

பிரிடிஷ் விமானங்களால்.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | ... | 10 விமானங்கள். | 5 விமானங்கள். |
| | விமான நிலயங்கள், தொழிற்சாலைகள் ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | ... | ... | ... |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

லிபியா (Libya).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| | மோட்டார் போக்குவரத்து, இன்னும் இதர லக்ஷியங்கள்.—எலாடம் (El Adem), ஆக்ரோமா (Acroma) பிரதேசங்கள். | அநேக வண்டிகள் சேதமாயின. தீக்கள் மூட்டப்பட்டன. | ... | ... |
| | விமானமிறங்கும் இடம்.—விமான நிலயத்திலுள்ள விமானங்கள்—டெர்னு (Derna). | ... | ... | 8 விமானங்கள். |
| | சாமான் ஸ்டோர்கள்.—பார்டியா (Bardia). | ... | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**—12—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| | போக்குவரத்துகள்.—பார்ஸ் (Barce)-லிலிருந்து டெர்னு (Derna)வுக்கும், ஜடாபாயா (Jeda Baya)விலிருந்து—எல் அகீலா (El Agheila)விற்கும், மார்டுயா (Mardua)விலிருந்து—பேடியா (Faidia)விற்கும் போகும் ரஸ்தாக்களில். | அநேக லாரிகளும், வண்டிகளும் அழிக்கப் பட்டன. | ... | ... |
| | விமானச் சண்டைகள்—யுத்தப் பிரதேசத்தில். | ... | ... | 2 விமானங்கள். |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 3 விமானங்கள். | 6 விமானங்கள். |

**—12—41.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடிஷ் விமானங்களால்.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| | பகலில் ஒரு பெரிய விரோதி சாமான் கப்பல்—டச்சு (Dutch)க் கடற்கரைக்கு அருகாமையில். | நேராகத் தாக்கப்பட்டு தீப்பற்றியது. | ... | ... |
| | மற்றொரு கப்பல்.—நார்விஜியன் (Norwegian)-கடற்கரைக் கருகாமையில். | ... | ... | ... |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | ... | ... | ... |
| | ஒரு தொழிற்சாலை.—வட பிரான்ஸ் (France). | ... | 1 விமானம். | ... |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

லிபியா (Libya).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| | விமானம் நிலயம், விமான நிலயத்திலிருக்கும் விமானம்—டெர்னு (Derna). | ... | ... | 2 விமானங்கள். |
| | தரையிலுள்ள விமானங்கள்—எல்டிமிமி (El Tmimi). | அநேக விமானங்கள் சேதமாயின. | ... | ... |
| | விமானச் சண்டைகள்.—லிபியா (Libya). | ... | ... | 5 விமானங்கள். |
| | விமானமிறங்கும் இடம்.—எல் அகீலா (El Agheila). | ... | ... | ... |
| | போக்குவரத்துகள்.—எல் அகீலா (El Agheila)விலிருந்து—ஜாடாபாயா (Jada Baya)விற்குச் செல்லும் ரஸ்தாவில். | ... | 11 விமானங்கள். | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—12—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—*யுத்த அரங்கம் முழுவதிலும்.* | ... | ... | ... |
| | **பிரிடிஷ், அமெரிக்கா விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | விரோதி சாமான், துருப்பு ஏற்றிச் செல்லும் கப்பல்கள்.—*தாய்லாந்து கடற்கரைக்கு அருகாமையில்* | ... | ... | ... |
| 10—12—41. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | *தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.* | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | படகுகள், கப்பல்துறை, இருப்புப்பாதை கப்பல்கள்.—*பெங்காஸி* (Benghazi) *துறைமுகம்.* | ... | ... | ... |
| | கவசம்பூண்ட வண்டிகள், யந்திரப் படைகள்.—*லிபியா* (Libya). | ... | ... | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச்சண்டைகள், விமான நிலங்களிலுள்ள விமானங்கள்.—*யுத்த அரங்கம் முழுவதிலும்.* | ... | 2 விமானங்கள். | 10 விமானங்கள். |
| | **அமெரிக்க பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | ஜப்பான் துருப்புகள்.-*தாய்லாந்து* (Thailand), *எல்லைப்புறத்திலுள்ள இடங்கள்* | ... | ... | ... |
| 11—12—41. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—கப்பல் துறை-*எம்டனு*(Emden)*க்கருகாமையில்.* | ... | ... | ... |
| | விமான நிலயம்.-*ஹாலந்து* (Holland). | ... | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—12—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.** | | | |
| | ஒரு எண்ணெய்க் கப்பல்.—*எம்ஸ் நதி* (Ems) *முகத்துவாரத்தில்.* | ... | ... | ... |
| | ரயில்வே ஜங்ஷன்.—*வில்ஹெல்ம்ஷேவன்.* | ... | ... | ... |
| | இரண்டு விமான நிலயங்கள்.—*ஹாலந்து* (Holland). | ... | ... | ... |
| | சாமான் சப்ளை செய்யும் கப்பல்.—*நார்விஜியன்* (Norwegian) *கடற்கரைக்கருகாமையில்.* | ... | நஷ்டமில்லை. | ... |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி போக்குவரத்துகள், மோட்டார் வண்டிகள்.—*யுத்த அரங்கத்தில்.* | ... | ... | ... |
| | விமானச் சண்டைகள்.-*லிபியா* (Libya)*வுக்கு அருகாமையில்.* | அநேக விமானங்கள் சேதமாயின. | ... | 7 விமானங்கள். |
| | விரோதி போக்குவரத்துகள்.—*செம்மினிஸ்* (Chemminess), *எல் அகிலா* (El Agheila) *ரஸ்தா.* | பலத்த சேதம். | ... | ... |
| | ரஸ்தாவில் போக்குவரத்துகள்.—*டிமிமி* (Tmimi)*யிலிருந்து—ஸைரீனு* (Cyrene)க்கு. | ... | ... | ... |
| | விமான நிலயம்.—*மார்டுபா* (Martuba). | ... | ... | 1 விமானம். |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | கப்பல்கள்.—*கடேனியா* (Catania) *துறைமுகம்.* | 2 கப்பல்கள் தாக்கப்பட்டன. | ... | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—*யுத்த அரங்கம் முழுவதிலும்.* | ... | ... | 11 விமானங்கள். |
| | **அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | லார்டு நார்த் (Lord North) தீவு, தரையிலுள்ள விமானங்கள்.—*டோபி* (Tobi). | ... | ... | ... |
| | ஒரு தீவு.—*நியூகினியா* (New Guinea)*வுக்கு வடக்கே.* | ... | ... | ... |
| | **பஸிபிக் (Pacific).** | | | |
| | ஒரு ஜப்பானிய சிறு கப்பல்.-*நாயாமாரு* (Nayamaru) *பஸிபிக்கில்.* | மூழ்கடிக்கப்பட்டது. | 1 விமானம். | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—12—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடிஷ் விமானங்களால். | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—எண்ணெய் சுத்திசெய்யுமிடம்—எம்மரிச் (Emmerich). | | | |
| | ஒரு தொழிற்சாலை.—ப்ரமெனு (Bremen)க்கு அருகாமையில். | | | |
| | லக்ஷியங்கள்.—கலே (Calais) நியூ போர்ட் (Nieu Port) பிரதேசங்கள். | | 1 பைடர் விமானம். | ... |
| | இரவில்.—கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest), டங்கர்க் (Dunkirk). | | | |
| | எண்ணெய் சுத்திசெய்யுமிடங்கள்.—ஸெயிண்டு நாஸேர் (St. Nazaire)-க்கு அருகாமையில். | தீப்பிடித்தன. | ... | ... |
| | ஒரு பெரிய சாமான் கப்பல்.—டெக்ஸல் (Texel) தீவுக்கு அருகாமையில். | | | |
| | விரோதி விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | ... | 1 விமானம். | ... |
| | **கிரீட் (Crete).** | | | |
| | விமான நிலயம்.—மாலீமி (Maleme) ... | பெட்ரோல் கிடங்கு தீப் பற்றியது. | ... | ... |
| | **கிரீஸ் (Greece).** | | | |
| | லக்ஷியங்கள்.—காரின்த் (Corinth) குடாவிலிருக்கும் பாட்ராஸி (Patras)ல். | ... | ... | ... |
| | விமான நிலயம்.—ஆரக்ஸாஸ் (Araxos). | ... | ... | ... |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி மோட்டார் வண்டிகள், துருப்புகள்.—கஸாலா (Gazala)வுக்கும் பர் ஹாகிமு (Bir Hakim)க்கும் மேற்கே துருப்புள்ள ரஸ்தாக்களிலும், வழிகளிலும், டிமிமி (Tmimi)க்கு வடக்கிலும், மேற்கிலுமுள்ள ரஸ்தாக்கள். | வண்டிகள் சேதமடைந்தன; துருப்புகளில் அநேகர் கொல்லப்பட்டனர். | ... | ... |
| | விரோதிக்குச் சொந்தமான லாரிகள்.—ஜடாபாயா (Jadabaya)விலிருந்து எல் அகீலா (El Agheila)விற்குச் செல்லும் ரஸ்தா. | ... | ... | ... |
| | விமான நிலயம்.—காஸ்டெல் பெனிடோ (Castel Benito). | ... | ... | ... |
| | விமானமிறங்குமிடம்.—டெர்ணு (Derna). | ... | ... | ... |
| | விரோதி மோட்டார் கூட்டங்கள்.—டெர்ணு (Derna) பிரதேசத்தில். | ... | ... | ... |
| | விமானச் சண்டைகள்.—லிபியா ... | ... | ... | 4 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **2—12—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | விரோதி கப்பற்படைப் பதிகள்.—மத்தியதரைக் கடல் (Mediterranean). | ... | ... | ... |
| | ருஷ்ய விமானங்களால். | | | |
| | கிழக்குப் போர்முனை. | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 2 விமானங்கள். | 7 விமானங்கள். |
| | அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | ஜப்பானியத் துருப்புகள்.—எல்லா போர்முனைகளிலும். | | ... | ... |
| **13—12—41.** (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடிஷ் விமானங்களால். | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்** | | | |
| | பகலில்.—தொழிற்சாலை, சாமான் ரயில் வண்டி, பீரங்கி ஸ்தானம்—வட-பிரான்ஸ் (France). | ... | ... | ... |
| | எண்ணெய் சுத்திசெய்யுமிடங்கள்.—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | ... | நஷ்டமில்லை. | ... |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | ... | ... | ... |
| | **லிபியா (Libya).** | | | |
| | விமானச் சண்டைகள்.—லிபியா (Libya). | ... | ... | 18 விமானங்கள். |
| | மோட்டார், வண்டிகள், போக்குவரத்துகள்—பெம்பா (Bemba) விலிருந்து டெர்ணு (Derna) வுக்குச் செல்லும் ரஸ்தா. | ... | ... | ... |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்—டெர்ணு (Derna). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன; அநேக விமானங்கள் சேதமாயின. | ... | ... |
| | கப்பல்கள், படகுகள்—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | கப்பல்கள்—நவாரினோ (Navarino) மெதோனி (Methoni), ஆர்கோஸ்டோலி (Argostoli). | ... | 16 விமானங்கள். | 1 விமானம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **13—12—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | விமானச்சண்டைகள்—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 4 விமானங்கள். | 15 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு (Far East).** | | | |
| | தரைப்படைகளுக்கு உதவி—மலேயா (Malaya). | ... | ... | ... |
| **14—12—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விமானப்போர்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ... | ... | 1 விமானம். |
| | **லிபியா (Libya).** | | | |
| | விமானச் சண்டைகள்.—டிமிமி (Tmimi). | ... | ... | 5 விமானங்கள். |
| | மோட்டார் போக்குவரத்து.—எல்அகீலா (El Agheila) ரஸ்தாவில். | ... | ... | |
| | கப்பல்கள், துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ... | ... | ... |
| | விமான நிலயம்.—டெர்ன (Derna). | ... | ... | ... |
| | மோட்டார் வண்டிகள், இன்னும் இதர வண்டிகள்.—கடற்கரைப் பாதைகளில். | ... | 5 விமானங்கள். | ... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | ... | 7 விமானங்கள். | 24 விமானங்கள். |
| | பின்வாங்கும் எதிரித் துருப்புகள்.—மாஸ்கோ (Moscow) போர்முனையைச் சுற்றிலும். | ... | ... | ... |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | ஜப்பானிய துருப்புகள்.—மலேயா (Malaya), தாய்லாந்து (Thailand) எல்லைப் புறத்தில். | ... | ... | ... |
| | **தாய்லாந்து (Thailand).** | | | |
| | ஸிங்கோரா (Singora). | ... | ... | ... |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **9—12—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மன் விமானங்களால்.** | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | பகலில்.—இங்கிலாந்தில் வடகிழக்குக் கரை. | ... | 1 பாம்பர் விமானம். | ... |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | ... | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | சேதமில்லை. | ... | ... |
| | **ஜப்பானிய விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | **மலேயா (Malaya).** | | | |
| | பட்டர்வொர்த் (Butterworth). | ... | 1 விமானம் | ... |
| | **பிலிபைன் தீவுகள் (Philippines).** | | | |
| | மணிலா (Manila). | ... | ... | ... |
| | லூஸான் (Luzon). | ... | ... | ... |
| **10—12—41.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மன் விமானங்களால்.** | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | ... | ... | ... |
| | **ஜப்பானிய விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | **பிலிப்பைன் தீவுகள் (Philippines).** | | | |
| | மணிலா (Manila). | ... | ... | ... |
| | லூஸான் (Luzon). | ... | ... | ... |
| | **மலேயா (Malaya).** | | | |
| | விமான நிலயங்கள்—வட மலேயா (Malaya). | ... | ... | ... |
| **11—12—41.** (வியாழக்கிழமை) | | | | |
| | **ஜெர்மன் விமானங்களால்.** | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்கள். | ஒருவரும் கொல்லப்படவில்லை. சொற்ப சேதம். | ... | ... |
| | **ஜப்பானிய விமானங்கள்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | ஹாங்காங் (Hongkong). | ... | ... | ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—12—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மன் விமானங்களால்.** | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | இரவில்.—கடற்கரை ஜில்லாக்கள்— இங்கிலாந்து (England). | சேதமில்லை. | ... | ... |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ... | 5 விமானங்கள். | ... |
| | **ஜப்பானிய விமானங்களால்.** | | | |
| | **பிலிப்பைன் தீவுகள் (Philippines).** | | | |
| | டோவா (Dova)—மிண்டானோ தீவில் (Mindanno). | ... | ... | ... |
| | **மலேயா (Malaya).** | | | |
| | பெனங் (Penang). | சேதமில்லை. | ... | ... |
| **13—12—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மன் விமானங்களால்.** | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ஜப்பானிய விமானங்களால்.** | | | |
| | **பிலிப்பைன் தீவுகள் (Phillipines.)** | | | |
| | விமான நிலயங்கள்.—ஸீபு (Cebu), க்ளார்க் பீல்டு (Clarkfield). | ...... | ... | ... |
| | மணிலா (Manila) ... | ...... | ... | ... |
| | **மலேயா (Malaya).** | | | |
| | பிரிடிஷ் விமான நிலயங்கள்.—வட மலேயா (Malaya). | ...... | ... | ... |
| **14—12—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain).** | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **ஜப்பானிய விமானங்களால்.** | | | |
| | **மலேயா (Malaya).** | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—மலேயா (Malaya). | ...... | ... | ... |
| | ஸிங்கப்பூர் (Singapore) ... | ... | ... | ... |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **15—12—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மன் விமானங்களால்.** | | | |
| | **பிரிடன் Britain.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | ...... | 6 விமானங்கள். | ... |
| | **ஜப்பானிய விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | விக்டோரியா பிரதேசம் (Victoria). | ...... | ... | ... |
| | ஹாங்காங் (Hongkong). | ...... | ... | ... |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**மன்னியுங்கள்.** கிறிஸ்துமஸ் காலத்தில் இந்த அறிக்கை பிரசுரிப்பவர்களுக்கு விடுமுறை வேண்டியிருக்கிறது. ஆகயால் டிஸம்பர் மாதம் 27-ம் தேதி அறிக்கை இல்லாமலிருப்பதற்கு சந்தாதார்களும், வாசிப்பவர்களும் தயவு செய்து மன்னிக்கவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**தூரக்கிழக்கு.** நிலைமை மேன்மையாக இல்லாமல் போனாலும் சென்ற வாரத்தில் நாம் எழுதியதற்குக் குறைவாகப் போய்விடவில்லை. A. B. C. D. போர்முனையில் திடீரென்று தாக்குதலினால் உண்டான பீதி குறைந்து ஐக்கியபத்தியம் ஏற்பட்டுவருகிறது. வெகுதூரம் படைகளும், யுத்தப்பொருள்களும் கொண்டுவர வேண்டியிருக்கிறது. மேலும் கைத்தொழில் திட்டத்திலும், ராணுவ இடங்களைத்தந்திரமாக பொருக்கி எடுப்பதிலும் அநேக ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. ஜப்பான் திடீரென்று யுத்தத்தில் பிரவேசித்ததில் சாதாரணமாக இந்தவித மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இந்த எதிரிக்கு நல்ல பயன்தரக்கூடிய பலம் உண்டாக அவகாசம் பிடிக்கும். ஆனால் இந்தப் புதிய விரோதியின் பலத்தையாவது, அவன் எவ்வளவுகாலம் தொந்தரவு செய்துவருவான் என்பதையாவது பிரிடனிலாவது, அமெரிக்காவிலாவது குறைத்து மதிப்பிடமாட்டார்கள். ஆனால் ஜப்பான் நடவடிக்கைகளை தொந்தரவு கொடுக்கக்கூடியது என்று சொல்லுவதுதான் சரியாக இருக்கும். 'டைம்ஸ்' பத்திரிகையில் சொல்லியிருக்கிறபடி ஹிட்லர் ஆக்ஷியின் கீழுள்ள ஜெர்மனிதான் உண்மையில் பயம் விளைவிக்கிறது. ஐரோப்பாவில் ஜெர்மனி யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டால் ஜப்பான் தனிமையாக அந்த இடத்தில் விரோத பாவம் கொண்டுவிடாது.

இந்தியாவில் நமக்கும், பர்மாவில் நமக்குள்ள பற்றுதலுக்கும், கிழக்குப் போர்முனையிலிருந்து ஏற்படும் பீதி அதிகத் தொந்தரவை கொடுக்கிறது. ஆனால் இதுவோ உலகயுத்தம். நாகரீகத்துக்கும், அயோக்கியத்தனத்திற்கும் ஏற்பட்டிருக்கும் கொடிய யுத்தம். நமக்கு ஏற்படும் அபாயங்களும் அசௌகரியங்களும் இடைநடுவில் ஏற்படக்கூடியவைதான். நாம் செய்யவேண்டியது என்னவென்றால் எல்லாவற்றையும் பெரிதாகவே மதித்து உஜாராக இருந்து ஹிட்லரின் கொடுமை எங்கெங்கு தோன்றுகிறதோ அதை அழிக்க உடனே பிரயத்தனப்படவேண்டும். நிரந்தரமாக வெற்றிகிடைக்க பெரியவர்களிடம் நம்பிக்கைவைக்க வேண்டும்.

வி வி வி வி வி வி வி

**சில கணக்குகள்.** பொதுப்படையாகச் சொல்லுவதைவிட புள்ளி விவரங்களைச் சொல்லுவது நலம் என்று நினைக்கிறவர்களின் கவனத்துக்காக நமக்குச் சமீபத்தில் கிடைத்திருக்கும் தகவல்களைக்கொண்டு தூரக்கிழக்கில் உபய தரப்பார்களின் கடற்படை பலத்தை இங்கு பிரசுரம் செய்கிறோம்.

| உபயோகத்திலுள்ளவை. | | பஸிபிக் சமுத்திரத்திலுள்ள அமெரிக்கக் கடற்படை. | ஜப்பானியருடைய கடற்படை. |
|---|---|---|---|
| சண்டைக் கப்பல்கள் | ... | 12 | 10 ஹருனவைத் தவிர. |
| விமானம் தாங்கிகள் | ... | 4 | 8 |
| கடல், ஆகாயம் இரண்டிலும் செல்லக்கூடிய விமானம் தாங்கிகள் | ... | 1 | ... |
| சஞ்சாரிகள் | ... | 30 | 40 |
| நாசகாரிகள் | ... | 120 | 140 |
| நீர்மூழ்கிகள் | ... | 50 (அதமபக்ஷம்) | 80 (அதமபக்ஷம்) |
| உதவிக் கப்பல்கள் | ... | அநேகம். | ?? |

அடுத்த வருஷம் மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதத்தில் தயார் செய்து கொண்டு தான் ஜப்பான் யுத்தத்தில் இறங்குமென்று சிலர் அபிப்பிராயப்பட்டிருந்த போதிலும், ஜப்பானிடம் இன்னும் மூன்று அல்லது நான்கு சிறிய சண்டைக் கப்பல்கள் (Pocket battle-ships) இருக்கக்கூடும். பிரின்ஸ் ஆப் வேல்ஸும் ரிபல்ஸும் நஷ்டமான பிறகும் பஸிபிக் மகா சமுத்திரத்தில் நேச நாடுகளின் கடற்படையின் பலமானது ஜப்பானுடைய பலத்துக்கு சமமாயிருக்கிறதென்று அதிகார வர்க்கத்தார் அறிவிக்கிறார்கள். இதினின்றும், பிரிடனும் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளும், வேறு இடங்களுக்கு அவைகள் அனுப்பப்படவேண்டியவைகள் விர, சுமாராக விமானம் தாங்கிகள் அடங்கிய (6) பெரிய கப்பல்கள் 12 சஞ்சாரிகள் 20—25 நாசகாரிகள், குறைந்த பக்ஷம் 20—25 நீர்மூழ்கிகள் இவைகளை அனுப்பியிருக்கின்றன.

## 2. சமீபத்தில் கட்டிமுடிக்கப்படுபவை.

ஜப்பானியர்கள் கப்பல்கள் கட்டுவதற்காகப் போட்டிருக்கும் திட்டத்தை வெளியிடவில்லை. ஆகிலும் இவ்விஷயத்தில் அமெரிக்கா செய்திருக்கும் ஏற்பாடு மட்டும் ஜப்பானியர்களின் ஏற்பாட்டுக்கு அதிகமாயிருக்கிறது.

இங்கு பிரிடனும் அமெரிக்காவும் செய்திருக்கும் திட்டத்தைக் கூறுவோம். ஆகிலும் குறிப்பிட்டு இவைகளை எப்பொழுது அவர்கள் கட்டிமுடிப்பார்களென்று சொல்லுவதற்கு சாத்தியமில்லை.



| அமெரிக்கா. | | கட்டிமுடிக்கும் காலம். | பிரிடன். (1939) | | கட்டிமுடிக்கும் காலம். | |
|---|---|---|---|---|---|---|
| சண்டைக்கப்பல்கள் | 15 | ? | இவைகளுக்கு | 9 | 1941 | 5 * † |
| விமானம் தாங்கிகள் | 11 | ? | நான்கு வருஷ | 4 | 1941 | 2 |
| சஞ்சாரிகள் | 34 | ? | திட்டம். | 8 | 1942 | 4 |
| நாசகாரிகள் | 192 | ? | | ? | | |
| நீர்மூழ்கிகள் | 73 | ? | | ? | | |

குறிப்பு:– பிரிடன் இரண்டு வருஷமாக யுத்தம் நடத்திவருவதால், அது எவ்வகைப்பட்டது என்றும், எவ்வளவு யுத்தக் கப்பல்கள் நிர்மாணித்து வருகிறதென்றும், எவ்வளவு கட்டி முடித்து விட்டதென்றும் சொல்வது முடியாத காரியம்.

உற்பத்திகளைச் சீக்கிரத்தில் அதிகப்படுத்த தீவிரமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதால், ஜப்பான் சிறிய சண்டைக் கப்பல்களைக் (Pocket-battle ships) கட்டி முடிப்பதற்குள், நாம் கப்பல்களை குறிப்பிட்ட காலவரைக்குள்ளாகவே சீக்கிரமாகவே கட்டி முடித்துவிடக்கூடுமென்பதையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**சேதமடைந்தவர்களின் ஜாபிதாவும் பேர் விவரங்களும். ஜெர்மன் பொய்கள்.** நவம்பர் மாதம் 26-ம் தேதியில் அடியில்கண்டவைகள் ஒலிபரப்பப்பட்டவை. "பிரிடனுக்குப் பொருளும் ஆட்களும் இந்தியா கொடுத்து உதவாமல் இருந்தால் அதுவே அச்சு நாடுகளுக்குச் செய்த பேருதவியாகும்". நிச்சந்தேகமாக இதாலியர்களும் (சமீப காலத்தில் ரோமல் தலைமையின் கீழுள்ள ஜெர்மானியர்களும்) இந்திய சிப்பாய்களுக்கு இத்தகைய புகழைக்கொடுக்கிறார்கள். ஆனால் இந்த சமாசாரமோ பிரசாரத்தின் ஒருபாகம். அதாவது கிரீஸிலும், கிரீட்டிலும் நடந்த போருக்குப் பிறகு நாளதுவரை இந்தியத் துருப்புகளும், குடியேற்ற நாடுகளும்தான் இத்தகைய கொடிய யுத்தத்திற்கு ஆளாகவேண்டியிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

இத்தகைய பொய் பிரசாரத்தைப்பற்றி உடனே சிந்திப்போம். கிரீஸிலும், கிரீட்டிலும் இந்தியத் துருப்புகளை ஏராளமாக பரித்தியாகம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுவது முற்றிலும் பொய். கிரீஸிலாவது, கிரீட்டிலாவது நடந்த போரில் இந்தியத் துருப்புகள் சேரவேயில்லை.

எல்லாப் போர்முனைகளிலும் யுத்த ஆரம்ப முதல் ஈடுபட்டிருந்த பிரிடிஷ் துருப்புகள் ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, தென் ஆபிரிக்கா இந்த மூன்று தேசங்களின் மொத்தத் துருப்புகளைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகம்.

லிபியா போர்முனையில் இப்பொழுது ஈடுபட்டிருக்கும் துருப்புகளில் 100-க்கு 70 பேர்கள் பிரிடிஷ் துருப்புகள். நேருக்கு நேரே சண்டையிடும் மோட்டார் படைகள் பூராவும் பிரிடனிலிருந்து வந்தவர்கள்.

ஜெர்மானியர்கள், தங்கள் இஷ்டப்படிச் சொல்லிவரும் சேதமடைந்தவர்களின் எண்ணிக்கை பிசகு. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் இறந்தவர்களின் பந்துக்களுக்கு அறிவித்து பிறகு அவர்களின் எண்ணிக்கையைப் பிசகில்லாமல் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. ஜெர்மானியர்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையைப் பிரசுரிப்பதில் ஒழுங்கீனமாகவும் விவரமன்னியிலும் இருக்கும். தினசரி இருபத்தைந்து இறந்தவர்களின் பேர்களுக்கு மேல் எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்கக்கூடாது.

* உபயோகத்திலிருந்து வருபவை.

† இதில் பிரின்ஸ் ஆப் வேல்ஸும் ஒன்று.

நிற்க பிரிடிஷார் கடும் போர்களில் ஈடுபடுவதில்லை என்று ஜெர்மானியர்கள் அவதூறு சொல்லிவருகிறார்கள். ஆனால் சென்ற அக்டோபர் 18-ம் தேதியில் கிராப்ட் பிரபு ஸர்க்கார் ரீதியாக கணக்குகள் தயாரித்து பார்லிமெண்ட் முன் சமர்ப்பித்தார். அதிலிருந்து உண்மை வெளியாகிறது. (இந்த எண்கள் இப்பால் அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகளின் விகிதம் தான் கவனிக்கவேண்டிய பாகம்).

எல்லாப் போர்முனைகளிலும் கைதிகளைச் சேர்த்து இறந்தவர்கள் :—

| | | | |
|---|---|---|---|
| பிரிடிஷ்காரர்கள் | ... | ... | 1,00,000 |
| இந்தியர்கள் | ... | ... | 7,000 |
| ஆஸ்திரேலியர்கள் | ... | ... | 13,000 |
| நியூஸிலாந்துக்காரர்கள் | | ... | 6,000 |
| தென் ஆபிரிக்கர்கள் | ... | ... | 600 |

வி வி வி வி வி வி வி

**விஷி ஸர்க்காருக்கு வெகுமதி.** அற்பலாபத்திற்காக தேச உரிமையை விட்டுக் கொடுப்பதா? சமீபத்தில் பிடேன்—டார்லான், கோயரிங் இம்மூன்று பேர்களும் கூடிப்பேசி பின்வரும் முடிவுக்கு வந்தார்கள். அதன்படி ஜெர்மனி விஷி ஸர்க்காரிடம் கப்பல், விமான தளங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அதற்குப் பதிலாக (a) பிரான்ஸில் ஜெர்மானியர்களை வைத்துக் கொள்வதில் ஏற்படும் செலவில் கொஞ்சம் மட்டுப்படுத்தப்படும்; (b) ஜெர்மனியிலிருக்கும் 10,000 பிரெஞ்சு யுத்தக் கைதிகள் விடுதலையடைவார்கள். இந்த ஒப்பந்தம் பார்த்த மாத்திரத்தில் பார பக்ஷமாயிருக்கிறதென்று வெகு எளிதில் சொல்லிவிடலாம். ஏனென்றால் (a) முதல் ஐட்டம் சம்பந்தமாக ஜெர்மானியர்கள் வசம் அநேகமாக பிரெஞ்சு அரசாங்கத்தின் பூரா வருமானமும், கைத்தொழிலும், விவசாயமும் இருக்கின்றன. (b) இரண்டாவது ஐட்டம் சம்பந்தமாக, சென்ற யுத்தத்தில் ஈடுபட்டிருந்த வயது முதிர்ந்த 10,000 பேர்களை விடுதலை செய்யப்படுவார்கள் என்று செய்கான் (Saigon) ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது. பிரெஞ்சு இளைஞர்கள் ஜெர்மனிக்காக யுத்தப் பொருள்களைத் தயாரிக்க வைத்துக்கொள்ளப்பட்டனர்). இதிலிருந்து பிரான்ஸை விஷி ஸர்க்கார் துரோகம் செய்தது வெளிவருகிறது.

வி வி வி வி வி வி வி

**இன்னும் எதிர்பாராத சம்பவங்கள்.** மேற்சொல்லிய கூட்டத்தில் இரண்டு, ஒரு அபூர்வமான விஷயங்கள் நாம் தெரிந்து கொள்ளலாம். முதலாவதாக பிரெஞ்சுக் கடற்படை முற்றிலும் ஏதோ காரணத்தைக் கொண்டு ஜெர்மானியர்களிடம் ஒப்புவிக்கப்படவில்லை. இரண்டாவதாகப் பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்கா ஜெர்மானியர்கள் வசமிருந்து வருகிறது. அமெரிக்கா பிரான்ஸுடனாவது, ஜெர்மனியுடனாவது யுத்தம் தொடங்காமல் இருக்கும்பொழுதே பிரெஞ்சு ஆபிரிக்காவை ஜெர்மானியர்கள் அதிகாரம் செலுத்த வேண்டியது அவசியம் போல் சாக்குப் போக்கு சொல்லப்படுகிறது. பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்காவில் ஜெர்மன் யுத்த தளவாடங்களும், ராணுவ பலமும், சேகரித்து வைத்துக்கொண்டு, பிரான்ஸுக்கும், ஸ்பெயினுக்கும் தற்காப்புக்காக அவ்வாறு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படவேண்டுமாம்.

அமெரிக்கா யுத்தத்தில் பிரவேசிப்பதை உண்மையில் கோயரிங்குக்கு பயம் ஏற்படுகிறதா? அது காரணத்திற்காக ஒரு காலத்தில் ஜெர்மனியின் திட்டத்திலிருந்த இரண்டு இடங்களிலிருந்து அமெரிக்கா யுத்தத்தில பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு ஜெர்மானியர்கள் பின்வாங்குகிறார்களா? இப்பொழுது ஜப்பான் வேண்டுமென்றே அமெரிக்காவைச் சண்டைக்கு இழுத்திருப்பதில் இந்த சதியோசனைக்காரர்களின் மனதில் இப்பொழுது என்னென்ன தோன்றுகிறதோ?



பிரிடன், பிரான்ஸ், இவைகள் சம்பந்தப்பட்டமட்டில் கஸாபிளாங்கா, ஓரல் பிஸர்ட்டா இவைகள் முற்றுகை போடப்பட்டு விரோதி நாட்டில் வைத்துக் கொள்வது முடியாத காரியம் தான். மேலும் மொராக்கோ, அல்ஜீரியா துறைமுகங்களை அச்சுநாட்டு கப்பற் தளங்களென்றும், அவைகள் அபாயகரமானவை என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டு, பிரிடிஷ் விமானப்படை அவைகளின் பேரில் அடிக்கடி குண்டுகளை வீசுவதில் பிரெஞ்சுக்காரர்கள் பிரிடனைக் குறைகூறுவதற்கு இடமில்லை. பிஸர்ட்டாவானது ஸார்டீனியாவுக்கும், ஸிஸிலிக்கும் சமதூரத்தில் இருக்கிறது. வட ஆபிரிக்காவில் சமுத்திரக்கரையோரத்தில் அது முக்கியமான ஸ்தானத்தில் இருக்கிறது. ஆகையால் இனிமேல் அதை அமைதியாக விட்டுவைக்கக்கூடாது.

வி வி வி வி வி வி வி

**கோயபல்ஸ், ஐயோ! பரிதாபம்.** நாம் இதுவரையில் ஜெர்மானியரின் வியாக்யானத்தை கேட்டதில்லை. 1,500 மைல் போர்முனையிலும் பொதுவாக எங்கே பார்த்தாலும் ருஷ்யர்கள் வெற்றிகரமாகத் திரும்பத் தாக்கி வருவதினால் ஜெர்மானியர்கள் பின்வாங்குவது என்ன காரணத்தை முன்னிட்டு என்பதற்கு ஜெர்மன் உத்தியோக முறையில் யாதொரு சமாதானமும் சொல்லப்படவில்லை. முன்னே அவர்களுக்கு வெற்றிகிடைத்த சமயம் சொல்லிவந்த சமாதானங்களைப்போல் இப்பொழுதும் இருந்தால் அவர்கள் ஏதாவது சூழ்ச்சி செய்துகொண்டிருக்கவேண்டும். பின் வாங்குவதானது ஆதியில் ரோஸ்டவ்வில் ஆரம்பித்தது. முதன் முதலில் டிமோஷன்கோவின் சைனியங்கள் முறியடிக்கப்பட்டதினால் புதிதாக சைனியங்களைச் சேகரிக்கும்பொழுது, ருஷ்யர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டு ஏராளமாக நஷ்டமடைந்திருக்கின்றனர் என்று ஜெர்மன் பத்திரிகைகளில் வெளிவந்தன. கொஞ்ச காலத்திற்குப் பிறகு ருஷ்யர்கள் ஜெர்மன் துருப்புகளுக்குப் பின்பக்கமிருந்து பொதுமக்களை சண்டையிடும்படி தூண்டிவிட்டதாகச் சொல்லிக்கொண்டு ரோஸ்டவ் மத்தியிலிருந்து ஜெர்மானியர்கள் வெளியேறினார்கள். ருஷ்யர்கள் அம்மாதிரி செய்ததை ஜெர்மானியர்கள் வெறுத்தார்களாம். வார்ஸாவில் நடந்ததைக் காட்டிலும் ரோஸ்டவ்வில் கேடு விளைவிப்பதாகச் சொன்னார்கள். ஆனபோதிலும் மறுநாள் திட்டப்படி ரோஸ்டவ்வை காலி செய்துவிட்டார்கள்.

டிஸம்பர் மாதம் இரண்டாம் தேதி ருஷ்யர்கள் தங்களுக்கு நேரிட்ட நஷ்டத்தையும் கவனியாது நாஸிகளை பலமாகத் திருப்பித் தாக்கிவந்தனர். இந்தத் தடவை ஜெர்மானியர்களின் தோல்வியைப்பற்றி குறிக்கப்படவில்லை. ஆனால் லெனின்கிராட்டுக்குப் பக்கத்திலும், ரோஸ்டவ்விலும் ஜெர்மானியர்கள் தற்காப்பு செய்துவருவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இன்னென்ன விஷயங்கள் என்று குறிப்பிடாமல் பொதுவாக சமாசாரம் வெளியிட்டதும் ஜெர்மானியர்கள் மாஸ்கோ பக்கம் சரியாகவே இருந்துவருகிறதென்று எண்ணும்படியாயிற்று. ஏனென்றால் மாஸ்கோ போர்முனைதான் மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டது. இரண்டு, ஒரு வாரம் சென்றும் தலைநகர் இன்னும் ஹிட்லர் போட்ட திட்டப்படி எதிரிவசமாகவில்லை. அவ்வித ஏமாற்றத்தை மறைக்க, கோயபல்ஸ் தெற்குப் போர்முனையைப்பற்றி தன் ஜனங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல ஆரம்பித்துவிட்டான். அங்கு டிமோஷன்கோவின் முன்னேறி வருவதில் தாத்காலியமாக தடையேற்பட்டதையும், ஸெபாஸ்டபூல் எதிரி வசமானதையும் பற்றிச் சொல்லி அவர்களை உத்ஸாகப்படுத்தவேண்டியிருந்தது.

ஆனால், இப்பொழுது ருஷ்யர்கள் வெற்றிகரமாக அங்குள்ள 53 முக்கிய ஜெர்மன் பகுதிகளை முறியடித்து நாலா திக்குகளிலும் சிதறி ஓடும்படி செய்திருப்பதைப்பற்றி, அந்தக் குட்டையான பிரசாரப் புளுகன் என்ன சொல்லப்போகிறான்? "நம்முடைய துருப்புகள் மாரிகாலத்திற்குறிய ஏற்பாடுகளைச் செய்து

கொண்டும், பூமிக்கு அடியில் ஆழமான பள்ளங்கள் தோண்டிக்கொண்டும் தற்காப்பு செய்துகொள்ளுகிறார்கள். மேலும் வசந்த காலத்திற்குள் யுத்தத்திற்குத் தயார்செய்து வருகிறார்கள்." அவர்கள் தோண்டுவதில் எதிரிகளைப் புதைத்து விட ருஷ்யப்படைகளும் வேண்டிய உதவி செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**லிபியா** வில் நேசதேசத்தார்களின் தாக்குதல் ஒரு பக்கக் காக்ஷி மாதிரி இருக்கிறதென்றும், அல்லது ஸ்டாலின் இரண்டாவது போர்முனை ஏற்படுத்த வேண்டுமென்ற பிரகடனத்தில் அமைதியாகக் கேட்டுக்கொண்டபடி அச்சு நாடுகளின் கவனத்தை மாற்ற வேண்டியதற்காக இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறதென்றும், சிலர்கள் இன்னும் அபிப்பிராயம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அந்தப் போர்முனையில் ஈடுபட்டிருக்கும் படைப் பகுதிகளின் எண்ணிக்கையைத் தெரியக் கொடுக்காமல் இருந்துவரப்பட்டிருக்கிறது. ஆனால் இருதிறப்பிலும் எவ்வளவு துருப்புகள் இருக்கலாம் என்று நமக்கு முதலில் தோன்றிற்றோ, அதைக்காட்டிலும் ஏராளமாக இருப்பதாக இப்பொழுது வெளியாகிறது. விவரம் தெரியாதவர்களுக்கு நமதுபடை தளகர்த்தர் ரோமலின்படையைச் சூழ்ந்து கொண்டதாகவும் சீக்கிரத்தில் அழிந்துவிடக்கூடுமென்றும் சொல்லிவரப்பட்டிருக்கையில் இப்பால் ஒருவித முடிவு வருவதற்கு முன் நீண்ட காலம் துயர்ந்து மேற்குப் புறத்தில் சண்டை நடத்தவேண்டுமென்று எதிர் பார்ப்பதாய் இருந்தால் அது ஏமாற்றத்தைக் கொடுக்கத்தான் செய்யும். நடப்பு என்னவென்றால் போர் பிரும்மாண்டமாக நடந்துவருகிறது. அச்சு நாடுகளின் துருப்புகள் சமுத்திரத்தில் ஒரு பக்கமும் மறு பக்கத்தில் பிரிடிஷ் துருப்புகள், அச்சு நாடுகளின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கும் பிரெஞ்சு, வட ஆபிரிக்காவிற்குச் போயும் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. பிரெஞ்சு, வட ஆபிரிக்காவோ மேற்கே அநேக ஆயிர மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. நேசதேசத் துருப்புகள் தெற்கேயிருந்து வடக்கே ஸர்டி குடாக்கடலுக்கு ஒரே பாய்ச்சலில் பாய்ந்து மற்ற அச்சு நாடுகளின் துருப்புகள் வந்து சேரவிடாமல் பிரித்துவிட முயலுகின்றன.

மறுபடியும் நாம் நீண்டகால யுத்தத்தை எதிர்பார்க்கவேண்டும். அப்படி கவனித்தால் முடிவில் நமக்கு வெற்றி உண்டென்பதில் சந்தேகமில்லை. இப்படி நாம் நிச்சயமாகச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால் எகிப்து எல்லைப் புறத்திலிருந்து நூறு மைல்கள் முன்னேறி இருக்கும் பிரிடிஷ் தளங்களிலிருந்து டாங்கிகளும் காலாட்படைகளும், யந்திர சாதனப்படைகளும் நமக்கு வரக்கூடும் அப்படி வந்துகொண்டும் இருக்கின்றன. அச்சு நாடுகளின் படைகளுக்கோ கடற்கரை ஓரமாயுள்ள ஒரே ஒரு சப்ளை வழியைத்தான் நம்பவேண்டியிருக்கிறது. அவர்கள் முன்னேறியிருந்த எல்லா தளங்களும் அவர்கள் செல்லக்கூடிய மார்க்கங்களும் கப்பற்படையினால் முற்றுகை போடக்கூடியதாகவும், மேன்மையான பிரிடிஷ் விமானப்படைக்கு லக்ஷியங்களாகவும் இருக்கின்றன.

வி வி வி வி வி வி வி வி வி வி

**இதாலியில் விளைந்த பயன்கள்.** எட்டாம்படை நடத்திய போரினால் இதாலிக்கு உண்டாயிருக்கும் பயம் அதற்குத் தெரியாமலில்லை. தேசம் பூராவிலும் பீதியும், தடுமாற்றமும் ஏற்பட்டிருக்கிறது. சம்பவங்களைக் கூர்மையாக இதாலிய ஜனங்கள் கவனித்து வருவதாக நம்பிக்கையான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. ருஷ்யாவில் ஜெர்மனி அகப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிலைமையில் பிரிடிஷாருக்கு வெற்றி கிடைத்தால் இதாலியில் பாஸிஸ்டு (Fasist) அரசாங்கத்திற்கு பெருங்கேடு விளையும்



ஸ்வீடன் தினசரிப் பத்திரிகையின் ரோம் நிருபர், "பிரிடிஷாரின் தாக்குதல் அபாயத்தை விளைவிக்கிறதென்றும், விஷி அரசாங்கத்தின் நிலைமை முக்கியமாக இருப்பதாகவும், ரோமில் பிரான்ஸிலிருந்து வந்திருக்கும் சமாதான தூதுகோஷ்டி இதாலிய அரசாங்கத்துடன் நீண்ட காலம் சம்பாஷணை வைத்துக்கொண்டிருக்கிறதென்றும், டுனிஸ் பத்திரமாக இல்லாமல் போனால் லிபியா பாதுகாக்கப்படமாட்டாதென்றும்" சொல்லியிருக்கிறார்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியில் நேர்ந்தவைகள்.** இந்த நிலைமையிலிருந்து முஸோலினிக்கு விரோதமாக தேசக்குழப்பம் ஏற்பட்டுவிடுமென்று சொல்லுவதற்கில்லை. ஆனால் இதாலியில் பீதி அதிகரித்தால் ஹிட்லர் இதாலியைத் தன் வைவசம் வைத்துக்கொள்வதற்காக ஏராளமாக ஜெர்மன் படைகளை மற்ற இடங்களிலிருந்து மாற்றி அனுப்பவேண்டியிருக்கும். ஏற்கனவே நடந்தவைகளைக் கவனித்தால் இதாலி எந்த நிலைமையில் இருக்கிறதென்று தெரிகிறது. ஸிஸிலித் தீவில் பிரிடிஷார் தாக்கினால் அங்குள்ள போலீஸாரும், பொது ஸ்தாபன உத்தியோகஸ்தர்களும் இதாலிக்கு விரோதமாக நடப்பார்களோ என்று பயந்து அவர்களைத் தாய் நாட்டிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. மேலும் நம்முடைய விமானத் தாக்குதல்களிலிருந்தும் இதாலி விமான பாதுகாப்பு தவறினதிலிருந்தும், அச்சு நாடுகளின் துருப்புகள், லிபியாவுக்குச் சென்ற சப்ளைகள் இவைகளை நேசதேசத்தார்கள் அழித்ததைத் தடுக்காமலிருந்ததும் ஆகிய இவைகளினால் தான் இதாலிய விமானப்படையின் தலைவரும், விமான இலாகா உதவிக்காரியதரிசியுமான தளகர்த்தர் பிரிகோலோ என்பவர், தன் பதவியை இழக்கும்படி நேரிட்டது.

ஒரு தடவை ஸ்பெயினைப் பார்த்து நெபோலியன் தன் உடம்பில் "புரையோடின புண்" என்றான். அதுபோல் மற்றொரு தீபகற்பமான இதாலி ஹிட்லரின் பொருளாதாரங்களை உருஞ்சிவிடும்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**வந்தனங்கள்.** நமது பத்திரிகை படிப்போர்களுக்கெல்லாம் கிறிஸ்துமஸ் பண்டிகை சந்தோஷகரமாக நடக்கும்படிக்கும், புது வருஷம் சுபத்தைக் கொடுக்கும்படிக்கும் கடவுளைப் பிரார்த்திக்கிறோம். எப்பொழுதும் உங்களுக்கு சந்தோஷமே இருக்கவேண்டும். சென்ற வருஷத்தையும், அதற்கு முந்திய வருஷத்தையும் காட்டிலும் இப்பொழுது அதிக சந்தோஷமடையத் தகுந்த காரணமிருக்கிறது. இப்பொழுது நம்முடன் மிக்க பலமான இரண்டு நேசதேசத்தார்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்தினரையும் தனித்தனியே ஒப்பிட்டுப் பார்த்தாலும் மனுஷ பலத்திலும் பொருளாதாரங்களிலும், நியாயமான முறையிலும், ஜெர்மானியரைக் காட்டிலும் மேன்மையானவர்கள். ஆகையால் ருஷ்யாவாவது, அமெரிக்காவாவது ஹிட்லருக்கு வெகு எளிதில் ருசிகரமான உணவாகிவிட மாட்டாது.

---

# ஜப்பான் தாக்குதல்கள்.

டாக்டர் பர்ஸிவல் ஸ்பியர்
என்பவரால் டெல்ஹியிலிருந்து டிஸம்பர் 8, 1941-ல் ஒலிபரப்பட்டது.

ஜப்பான் ஏன் திடீரென்று பிரிடன் பேரிலும், அமெரிக்கா பேரிலும் எதிர்க்கலானது? அமெரிக்காவுடன் மட்டில் சண்டை செய்யாமல் இதுவரை

இருந்துவர முயற்சி செய்யவில்லையா? இதுகாலம்வரை இவ்விருதேசங்களையும் தனித்தனியாக விட்டுவைக்க எத்தனிக்கவில்லையா? மற்றொன்றுக்கு இடைஞ்சலன்னியிலும், கோபத்தை மூட்டாமலும் ஒரு தேசத்திற்குச் சொந்தமான இடங்களில் பிரவேசிக்க எத்தனிக்கவில்லையா? அப்படிக்கிருக்க ஜப்பான் ஏன் இப்பொழுது அதிகாரம் கொண்டிருக்கிறது? அல்லது இந்த இரண்டு ஜனநாயகங்களிலும் பலக்குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று ஜப்பான் ரகசியமாகத் தெரிந்துகொண்டதா? அப்படிக்கில்லாமல் ஏன் ஜப்பான் தாய்லாந்தை மட்டில் எதிர்த்து, அமெரிக்காவின் கோபத்தை சம்பாதிக்காமலிருக்கமுடியாதா? மேற்சொல்லிய இரண்டு காரணங்களும் உண்மையல்ல என்று நான் நினைக்கிறேன். ஜப்பானியர்கள் எல்லாவிதத்திலும் ரொம்ப சாமர்த்தியசாலிகள்தான். பிரிட்டனையாவது, அமெரிக்காவையாவது பழிக்கக்கூடாதென்று ஜப்பானியர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்கையில் பார்வைக்கு முன்னுக்குப் பின்னாக நடப்பதாகத் தோன்றக்கூடிய இந்த நடவடிக்கையின் தத்துவம்தான் என்ன.

ஜப்பானுக்கு வெகுநாளாகவே எந்தப் பக்கம் பாய்வதென்று தெரியாமலே தவித்தது. வாரங்கள் செல்லச் செல்ல அப்பிரச்னை அதிகமாக அதை வாதிக்க ஆரம்பித்தது. அதாவது சென்ற 10 வருஷங்களாக அது சைனாவுடன் எதிர்த்துப் போராடிவந்த கொள்கையை இழந்து A. B. C. D. அமெரிக்கா, பிரிட்டன், சைனா, டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகள் இவைகளுக்குப் பவ்யப்படவேண்டும், அல்லது மேற்சொல்லிய நான்கு தேசங்களும் ஒன்று சேர்ந்து நன்றாய் பலப்படுத்திக்கொள்வதற்குள் அவைகளைத் தடுக்க முயலவேண்டும். இக்காரியத்தை சாதிப்பதில் ஜப்பான் ஒரு வருஷமாக மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டும் முடியவில்லை. இவ்விரண்டு ஜனநாயகங்களையும் ஒன்று சேரவிடாமல் செய்து அருகாமையிலுள்ள பலக்குறைவான இடங்களில் வியாபித்துக்கொள்ள எத்தனித்தது. கொஞ்ச காலம்வரையில் வெளிநாடுகள் ஜப்பானை சும்மா விட்டுவிட்டன; வரவர அதன் கொள்கை தோல்வியடைய நேர்ந்தது. கடைசியாக சமீபத்தில் நாலு பக்கங்களிலும் எதிர்ப்பு ஜாஸ்தியாகி வந்துவிட்டது.

பிராதனமாக ஜப்பானுடைய பூராக் கொள்கையும் எஜமானத்வம் (புஷிடோ), இப்பொழுது அதற்கு சுகிர்தத்தை சமமாக பங்கிட்டுக்கொள்ளுகிறது என்று மருவி வழங்கிவரப்படுகிறது. 'புஷிடோ' என்ற கொள்கை என்னவென்றால் ஜப்பான் இவ்வுலகத்தில் அதற்குக் கிடைக்கக்கூடிய இடங்களையும் அல்லது எம்தெந்த நாடுகளில் அது அக்கிரமமாக ஆக்கிரமிக்கக் கூடுமோ அந்நாடுகளையும் ஆளுவதற்காக தனக்குக் கடவுள் ஆக்ஞை இருக்கிறதாகச் சொல்லிக்கொள்ளுகிறது. பொது க்ஷேம பிராந்தியம் என்பது அக்கம் பக்கத்தார்களை அடிமையாக்குவதே என்று ஜப்பானில் புராதனமாக வழங்கிவரப்படும் ஒரு பதம். மற்ற பெரிய அரசாங்கங்கள் வெவ்வேறு இடங்களில் கவனத்தைச் செலுத்திவரும்பொழுதே தென்கிழக்கு ஆசியாவை ஜப்பான் தன் பொது க்ஷேம பிராந்தியமாக ஆக்கிக் கொண்டு, அதைக் கொள்ளையிட மனப்பால் குடித்துவருகிறது.

## குள்ளநரிகளுக்குள் பெரிய குள்ளநரி.

ஜப்பானுடைய கொள்கை எப்பொழுதும் நுழை நரியாக சாதித்துக்கொள்ள எத்தனப்படுமே ஒழிய பலத்தால் ஒன்றையும் சாதிக்கமுடியாது. மேலும் மற்றவர்கள் திரும்பி வேறு வழியாகப்போக எத்தனித்தவுடன்தான் ஜப்பான் முன்னேற பிரயத்தனப்படும். 'இதனால் அதை, தூரக்கிழக்கு இதாலி' என்று சொல்லுவது வழக்கம். அது ஜெர்மனியால் வளர்க்கப்பட்ட நரி மட்டுமல்ல; பொதுப்படையாக உலகத்திற்கே குள்ளநரிதான். அதன் விருத்தாந்தம் பின்வருமாறு:—
1894-ம் வருஷத்தில் அது முதன் முதலில் சைனாவை எதிர்த்தது. பின்பு பார்மோஸா என்ற இடத்தை பிடித்துக்கொண்டது. கோரியா என்ற இடத்தை



பாதுகாப்பதாகச் சொல்லி அதை 1910-ம் வருஷத்தில் தன் சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டது. 1904-ம் வருஷத்தில் அது ருஷ்யாவை எதிர்த்தது. ஏனெனில் ஜப்பானுக்கு எது தேவையோ அதை ருஷ்யா கைப்பற்ற முயன்றதினால்தான் முதல் உலக யுத்தத்தில் பிரிட்டனுடன் சிநேகிதமாகயிருந்து ஸிங்டோவைக் கைப்பற்றிக்கொண்டது. பிறகு சைனாவை 21 விஷயங்கள் கேட்டது. ஸெக்கோஸ்லாவாகியா எப்படி ஜெர்மனிக்கு வசப்பட்டதோ அம்மாதிரியே சைனாவையும் ஜப்பான் வசப்படுத்த முயன்றது. வாஷிங்டன் மகாநாட்டை ஜப்பான் அக்கிரமமாக கைப்பற்றின நாடுகளில் சிலவற்றை விட்டுக்கொடுக்கவேண்டியதாயிற்று. அதற்காக பிரிட்டன் பேரிலும், அமெரிக்கா பேரிலும் ஜப்பான் கருவைத்திருந்தது. 1931-ம் வருஷத்தில ஏற்பட்ட பெரிய பஞ்சத்தில் மஞ்சுகோவைக் கைப்பற்றிக்கொண்டது. ஜெர்மனி அதிகாரத்தில் ஓங்கினவுடன் 1937-ம் வருஷத்தில் சைனாவைத் தாக்கியது. யுத்த ஆரம்பமுதல் ஹிட்லரின் அயோக்கியத்தனத்திற்குச் சமமாக ஜப்பானுடைய கொள்கையும் இருந்துவந்திருக்கிறது. பிரான்ஸ் தோல்வியடைந்தவுடன், இந்தோ-சைனாவில் தளங்களைக் கைப்பற்றிக்கொண்டுவிட்டது. அப்பொழுது இன்னும் சில நாடுகளைக்கூட கைப்பற்றிக்கொண்டிருக்கலாம்! இந்த அரிய சந்தர்ப்பத்தை கைதவறவிட்டோமேயென்று இப்பொழுது தன்னைத்தானே நொந்துகொண்டிருக்கிறது. அதுமுதல் வரவர பிடிவாதமாக எதிர்த்துவர ஆரம்பித்திருக்கிறது. இந்த வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஜப்பான் பிரட்டினவுடனே பிரிட்டனும், அமெரிக்காவும் அதற்குத் தகுந்தாற்போல் தயாராகிவிட்டன. டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளில் ஜப்பானிய தூதர்களுக்கு இடம் கொடுக்காமல் பொருளாதார முற்றுகை போட்டுத்தான் தீருவோம் என்று உறுதியாக இருந்துவிட்டன. இந்தோ-சைனாவில் இழந்த நிலங்களைக் கைப்பற்ற தாய்லாந்து ஜப்பானிய உதவியை நாடிற்று. ஆனால் தங்கள் தேசத்தில் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்குத் திடமாக மறுதளித்தது. சிங்கப்பூரில் பலம் வரவர அதிகரித்தது. பிலிப்பைன் தீவுகள் தாங்களாகவே சண்டைக்குத் தயாராகிவிட்டன. ருஷ்ய யுத்தத்தில் ஜப்பானுக்கு மற்றொரு சந்தர்ப்பம் வாய்த்தது. அதை முன்னிட்டு ஜப்பான் தெற்கு இந்தோ-சைனாவில் புகுந்துவிட்டது. பொருளாதார முற்றுகையை வியாஜம் வைத்து சிறு பையன் கடைக்காரன் கையிலிருந்து டிபழத்தை பிடுங்கிக்கொண்டு அவன் கையில் அகப்படாமல் எப்படி ஓடுவானோ அப்படி நடக்க ஆரம்பித்துவிட்டது. அது முதல் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் பரஸ்பர விரோதம் ஏற்படும்படி செய்ய முயன்றது. முதலில் கோனாய் பேச்சுக்களும் பிற்பட்டு குருஸு தூது சென்றதும் அதற்காகத்தான். கடைசியாக மூன்று மாதகாலங்களுக்கு ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என்ற ஒப்பந்தம் செய்ய ஜப்பான் அமெரிக்காவுடன் கூறினது, அதன் முடிவான பிரயத்னம். ஆனால் சர்ச்சில் கில்ட் ஹாலில் இதை நம்பக்கூடாதென்று பேசியிருக்கிறார்.

## கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டது.

இதே சமயத்தில் அநேக கேள்விகள் கிளம்புகின்றன. ஜப்பானியத் துருப்புகள் ஏன் தெற்கே தாக்கவேண்டும்? அப்படித் தெற்கே தாக்க அவர்களுக்கு அவசியம் நேரிட்டு விட்டது A. B. C. D. படைகள் ஒன்று சேர்ந்தவுடன் அவர்களுக்கு முக்கியமான வஸ்துக்கள் ரப்பர், எண்ணெய் இவைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. மேலும் அவர்களிடமும் நெல்லும் குறைந்து விட்டது. ஜப்பான் இந்த நால்வகைப்படைகள் சூழ்ந்திருப்பதைத் தாக்கி அதற்குத் தப்ப வேண்டும். அல்லது பொருளாதார முற்றுகையினால் ஜப்பான் நிர்மூலமாகப் போக நேரிடும். இந்தோ-சைனாவாவது, தாய்லாந்தாவது, ஸைபீரியாவாவது ஜப்பானுக்குவேண்டிய தேவைப் பொருள்களைக் கொடுத்து திருப்தி செய்ய முடியாது. ஆகையால் அது வெறுப்பாகவே டச்சுக் கிழக்கிந்திய தீவுகளையும், மலேயாவையும் தாக்க நேரிட்டிருக்கிறது.

இதைப் பார்க்கையில் மற்றொரு கேள்வி பிறக்கிறது. இதாலியர்கள் ஸைபீரியாவில் ருஷ்ய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஜெர்மனிக்கு ஏன் ஒத்தாசை செய்யவில்லை? அதற்குப் பதில் உலக யுத்தத்தில் ஜப்பான் பெரும்பாலும் ஜெர்மனி பக்கத்தில் இருந்தபோதிலும், நாஸிகள் சொற்படி நடக்க விருப்பமில்லை என்று தீர்மானித்திருப்பதாக நான் நம்புகிறேன். 1940-ம் வருஷத்தில் இதாலி மாறுபாடாக நடந்ததுபோல் ஜப்பானுடைய நிலைமை இருக்கிறது. ஜெர்மனி ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட சிறிது காலத்திற்குள்ளாகவே ஜெர்மனி ருஷ்யாவைத் தாக்கும் பொழுது ஜெர்மானியர்களுடன்தான் ஜப்பானியர்கள் கலந்து யோசனை செய்யவில்லை. ஜப்பானியர்கள் இதை இதாலிக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்ட சம்பந்தம் போல் உணர்ந்தார்கள். பிரின்ஸ் கோனுய் ஹிட்லர் மாதிரி நடந்துகொண்டார். ஆனால் மத்ஸுவோகாகூட முஸோலினி மாதிரி வேஷம் போட இஷ்டப்படவில்லை. அடுத்தபடியாக ருஷ்யப்படையெடுப்பு ஜெர்மானியர்கள் சொல்லி வந்தபடி பூர்த்தியடையவில்லை. இன்னும் பூர்த்தியடைந்ததாகத் தெரியவில்லை. நாலு மாதம் காத்திருந்து அக்டோபர் மாதத்தில் மாஸ்கோ ஜெர்மனியின் கைவசமாய்விடும் என்று ஹிட்லர் பேசியதில் நம்பிக்கை வைத்து, ஜப்பானியர்கள் அரசாங்க நிர்வாகத்தை மாற்றியமைத்தார்கள். மறுபடியும் அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் இதற்கு மூலகாரணம் ஸைபீரியாவைத் தாக்கினால் ஜெர்மனிக்கு உதவி செய்ததாகமட்டில் ஆகும். ஆனால் தெற்கே தாக்கினாலோ ஒன்றை மட்டில் உதவி செய்ததாக ஆகும்.

அமெரிக்கா தனியாக இருக்குமென்று நம்பிக்கை கொண்டு ஜப்பான் தாய்லாந்தை தாக்கியதோடு ஏன் நிற்கவில்லை? ஏனெனில் அமெரிக்கா தனியாக நிற்காத பக்ஷத்தில் அதன் கதி அதோ கதி என்று அதற்குத் தெரியும். ஜப்பான் தாய்லாந்தில் அகப்பட்டுக்கொண்டால், சாவகாசமாக அமெரிக்கா பின்வருபவைகளைக் குறுக்கிட்டு, பொருளாதார முற்றுகையிட்டு ஜப்பானை அடியோடு அழித்துவிடக்கூடும்.

## மித்திர பேதம்.

அமெரிக்காவும், பிரிடனும் ஒன்று சேர்ந்து போரிடத் தெரிந்துகொண்டும், பொருளாதார முற்றுகை வரவர அதிகரித்து வருவதைத் தவிர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டும், ஜப்பான் முதலில் தாக்கத் தீர்மானித்தது. அதன் முக்கியமான இரண்டு எதிரிகளுக்கு நடுவே புகுந்து அவர்களை ஒன்றுசேரவிடாமல் பிரித்து விடுவதும்; தாத்காலியமாக திடீரென்று தாக்கி அவர்களை அழித்து பெரிய யுத்த அரங்கத்திலுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொள்ளுவதும் அதன் தந்திரங்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. முதலில் அதன் தந்திரத்தைக் கவனிப்போம். ஜப்பான் போட்டிருக்கும் திட்டம் ஏற்கனவே நமக்குத் தெரியும். ஹாவாயில் பேர்ல் (Pearl) துறைமுகத்தில் முக்கியமாக அமெரிக்கர்கள் தங்கி இருக்கின்றனர். அமெரிக்க எல்லைப்புறமான பிலிப்பைன் தேசங்களின் உள்ள படைகளை மணிலாவிலுள்ள கோட்டைகளுக்குள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஹாவாயிலிருந்து பிலிப்பைன் தீவுகள் 5,600 மைல்கள் தூரம். நடுவில் கூவம் (Guam) வேக் தீவுகள் இருக்கின்றன, பிரிடிஷ் படை பலமோ சிங்கப்பூரில் இருக்கிறது. அதற்கு எல்லைப்புறத்தில் 1,440 மைல் தூரத்தில் ஹாங்காங் இருக்கிறது. ஜப்பான் போர் நடவடிக்கை எப்படியென்றால் ஹாவாயில் இருக்கும் கப்பற்படையை முதலில் அழித்துவிடவேண்டும். கூவம், வேக்குத் தீவுகள் இவைகளைப் பிடித்துக்கொண்டு, ஹாவாய், பிலிப்பைன் தேசங்களுக்குக் கடல் மார்க்கமாவது அல்லது விமான மார்க்கமாவது இல்லாமல் தடுத்துவிடவேண்டியது. அமெரிக்கா மீண்டும் புத்துயிர் பெருவதற்குள் பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றிவிடலாம். அதற்குப் பிறகு அமெரிக்கக் கப்பற்படை ஜப்பானில் இருந்து 3,380 மைல்களுக்கு அப்பாலுள்ள ஹாவாய் என்ற இடத்திலேயே இருக்கவேண்டி நேரிடும். அங்கிருந்துகொண்டு ஜப்பான் ஆதிக்கத்திலுள்ள



கடல்களில் கடற்போருக்கோ, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கோ தூரக்கிழக்கில் பிரிடனுக்கு, உதவி செய்ய முடியாமலும், வசதியில்லாமலும் போய்விடும். மலேயாவிலும், தாய்லாந்திலும் ஒரே சமயத்தில் தாக்க வேண்டும் என்பது ஜப்பானியரின் திட்டத்தில் சேர்ந்ததுதான். அமெரிக்கா தன் பலத்தை ஒன்று சேர்ப்பதற்கு முன்னமேயோ, அல்லது பயன் தரக்கூடிய விதமாக பலப்படுத்துவதற்கு முன்னமேயோ முக்கியமான இடங்களைக் கைப்பற்ற இம்மாதிரி பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. வட மலேயாவிலும், தாய்லாந்திலும் ஒரே சமயத்தில் தாக்கினது, பிரிடன் தாய்லாந்திற்கு உதவி செய்யாமல் தடுக்க வேண்டியதற்காகத்தான். அடுத்தபடியாக தாய்லாந்து எல்லைப்புறத்தில் கிரா (Kra) தீபகற்பத்திலிருந்த பிரிடிஷாரை பின்னால் துரத்தியும், அதனால் தாய்லாந்தைத் தனிப்படுத்தி தன் சாவகாசம்போல் எடுத்துக்கொள்ள ஜப்பான் எதிர்பார்த்தது.

திடீரென்று தாக்கும் தந்திரம் ஜப்பானியர்களுக்கு அலாதியாக உண்டு. 1904-ம் வருஷத்தில் ருஷ்யர்களை அம்மாதிரி தாக்கினார்கள்: 1931, 1937-ம் வருஷத்திலும் சீனர்களை இம்மாதிரி தாக்கினார்கள். இவ்விதம் திடீரென்று தாக்குவதே பலஹீனத்தின் அறிகுறி. ஏனெனில் எதிரியின் பலம் ஒன்று சேர்ந்து எதிர்த்தால் அந்த பலத்தை சமாளிக்க முடியாதென்று தோன்றினால்தான் இம்மாதிரி திடீரென்று தாக்கவேண்டியிருக்கிறது. ஆனால் ஜப்பான் பலத்தை 1904-ம் வருஷத்தில் ருஷ்யர்கள் எண்ணின மாதிரி குறைவாக மதிப்பிடக்கூடாது. அவர்களுக்கு நேர்த்தியான கப்பற்படை இருக்கிறது. பெரிய பயிற்சி பெற்ற தரைப்படை ஒன்றும் இருக்கிறது. அதன் ஆகாய விமான பலம் எவ்வளவு என்பது நமக்குத்தெரியாது.

## ஒன்றுக்கும் அஞ்சாத மனிதர்கள்.

அவர்கள் திடீரென்று தாக்கும்முறையைக் கையாளுவதால் அடுத்த சில நாட்களுக்குச் சம்பவங்கள் துரிதமாக நடப்பதாய்த் தோன்றும். இந்த திடுக்கிட்ட தாக்குதல் பலிக்காமல்போனால் ஜப்பானியர்களின் நிலைமை பரிதாபகரமாக இருக்கும். பொருளாதார முற்றுகையும், அமெரிக்காவின் வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கும் பலமும், தானாகவே தாக்குதலை நிவர்த்தித்துவிடும். ஆனால் இந்த திடீரென்ற தாக்குதல் தவறிப்போனால் ஜப்பானியர் அழிந்துவிடுவாரென்று எதிர் பார்ப்பது தவறு. ஆனால் ஜப்பான் அரசாங்க நிர்வாகிகள் ஒன்றுக்கும் அஞ்சாதவர்கள். இம்மாதிரி போராட்டத்திற்கு ஈடுபட்டபிறகு தங்களாவது தங்கள் அரசாங்கமாவது அழியும்வரை போரிடுவார்கள். A. B. C. D. படைக்கு பலம் அதிகம். ஜப்பானியர்களுக்கு அவைகளைப்போல் பலம் இல்லை. அதனால் நமக்கு வெற்றிகிடைக்குமென்று நம்பியிருக்கலாம். ஆனால் இப்படி திடீரென்று தாக்குதலுக்கும், கடும்போருக்கும் நாம் தயாராக இருக்கவேண்டியதுதான்.

ஜப்பான் நடவடிக்கையில் நீதி முறையைப்பற்றி நான் ஒன்றுமே சொல்லவில்லை. ஏனெனில் அதில் கொஞ்சமும் நீதியில்லை. இதைக்காட்டிலும் கேவலமானதும், முன்யோஜனையின் பேரிலும், அயோக்யத்தனமான ஆக்கிரமிப்பு வேறொன்றும் இல்லை. மிஸ்ட்டர் கார்டல் ஹல், அமெரிக்க மந்திரி உலக ராஜீய போக்கில் கைதேர்ந்தவர். அவர் நவீன அட்ப்பிராயங்கொண்டவர்களில் ஒருவர். உலகத்தாரைக் குறித்து ராஜீய ஞானமுள்ளவரில் பிரக்யாதி பெற்றவர். அமெரிக்காவுக்கு ஜப்பான் கடைசியாக எழுதிய கடிதத்தை அவர் பின்வருமாறு விவரிக்கிறார்: "அந்தக் கடிதத்தில் கேவலமான பொய்களும், பிரட்டுகளும், ஏராளமாய் இருந்தன" இன்றுவரை ஒரு அரசாங்கம்கூட அம்மாதிரி பொய் சொல்லும் என்று எதிர் பார்க்கமுடியாது.

# ஜப்பான் நேசதேசங்களுக்கு உதவிய விதம்.

[பத்து வாரங்களுக்கு முன், பிரசித்தமான ஒரு பிரிடிஷ் பத்திரிகை நிருபர் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து யுத்தத்தைப்பற்றி அமெரிக்கர்களுக்கு உள்ள அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்.

இப்பொழுது அமெரிக்கா யுத்தத்திலும் ஈடுபட்டு வெற்றியடையும்வரை சண்டை செய்யத் தீர்மானித்திருக்கிறது. ஜப்பானியர் செய்த சூழ்ச்சிகளின் காரணமாக அமெரிக்கா பூர்ண முஸ்தீப்புடன் யுத்தத்தில் இறங்கியதால் ஜப்பான் அவ்விதம் நடந்துகொண்டது ஒரு பெரும் பிழை என்றும் தெரியவரும். இவ்வியாசத்தை நியூ ஸ்டேட்ஸ்மென் அண்டு நேஷன் பத்திரிகையில் H. N. ஹேயில்ஸ் போர்டு ஸெப்டம்பர் மாதத்தில் பிரசுரித்தார். பத்திராதிபர்].

கதிரவன் முழுப்பிரகாசத்துடன் காணப்பட்டான். கடல் அலை அடங்கியிருந்தது. அயர்லாந்தின் கடற்கரையிலிருந்து இவ்விதமான காக்ஷியைக் கண்டிருக்கவே மாட்டார்கள். அமைதியான கடலில் நான்கு மைல் விஸ்தீர்ணத்திற்குத் துணைக் கப்பல்கள், கம்பீரமாக அணி வகுக்கப்பட்டு, நான்கு பக்கங்களிலும் நாசகாரிகளால் காபந்து செய்யப்பட்டு, சிறிது நேரத்திற்கு ஒரு தடவை விமானங்களால் காவல் புரியப்பட்டு வந்துகொண்டிருந்தன. இக்கூட்டத்தில் சாமான் கப்பல்களும், மீன் பிடிக்கும் கப்பல்களும், எண்ணெய் டாங்கிகளும், பனிரெண்டு சமவரிசைகளாக வந்தன. சர்ச்சில் ரூஸ்வெல்டுடன் பேசித் திரும்பி வந்தபோது பார்த்த கப்பல் கூட்டத்தைக் காட்டிலும் இது பெரிது. இவ்விதம் அமெரிக்காவில் நியூ யார்க்கிலிருந்து பல வாரங்களாக வந்துகொண்டிருந்ததில் ஒருவித தடையும் நேரவில்லை. இதுதான் ராணுவ நிலையின் ஒரு ரகசியம். இக்கப்பல்களில் அமெரிக்காவில் தயாரான பல லக்ஷக்கணக்கான டன் எடையுள்ள சாமான்கள் ஏற்றப்பட்டிருந்தது. விமானங்களும் உணவுப்பொருள்களும் இருந்தன. எங்கள் உதவிக்குக்கூட வந்துகொண்டிருந்த நாசகாரியும் அமெரிக்கர்களால் கொடுக்கப்பட்டதுதான். இவ்வளவு பத்திரமாக வந்துகொண்டிருந்ததால் ஐஸ்லாந்து வந்து சேரும்வரை இஷ்டப்படி தூங்கும்படிக்கும் அனுமதிக்கப்பட்டோம். ஏனென்றால் அதுவரை அமெரிக்கக் கப்பற்படை துணைக்கு வந்தது.

இம்மாதிரியான நிலைகளில் அமெரிக்காவிற்குச் சென்று திரும்பி வருகிறவர்களுக்குத்தான், பிரிடன் இருந்து வருவதற்கும், வெற்றியடைவதற்கும் அமெரிக்கா செய்து வரும் உதவி என்னவென்று தெரியும். அவர்கள் உதவி இல்லாவிட்டால் நாங்கள் இம்மாதிரி தனி வழி வந்திருக்கமுடியாது. ஐஸ்லாந்தை அமெரிக்கா வியாபித்துக்கொண்டதும் இனிமேலும் கொஞ்சம் கொஞ்சமாக யுத்தத்தில் பூர்த்தியாக ஈடுபடுமென்று யாவரும் நினைத்தனர்.

அமெரிக்காவில் நான் இருந்து சுற்றிப்பார்த்த சமயத்தில் இம்மாதிரி எதிர்பார்ப்பது மிகவும் சரியென்றே தோன்றிற்று. கட்டாய ராணுவ மசோதா அமெரிக்க சபையில் தோற்றுப்போனதுபற்றி ஒருவித கெடுதியும் ஏற்படவில்லை. ஏனென்றால் சிறிது காலம் கழித்து பிரமாத மாறுதல்கள் நிகழ்ந்தன. பிரதான தளகர்த்தர் அமெரிக்க சபைக்கு சில குறிப்புகளை அனுப்பினார். அதில் முதலாவதாக, ராணுவ சேவைக்கு புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களை மற்ற நாடுகளுக்கும் அனுப்பவேண்டுமென்றும், இரண்டாவதாக, இவர்களின் சேவையை யுத்தம் முடியும்வரை வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் சொன்னார். இவ்விதம் இவர் கோரியது ஜனங்களுக்கு அதிருப்தியை உண்டாக்கியது. அரசாங்கத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. வீலர் என்றவருக்கு முறைகளை மீறி சிலர் பூதி மருக்கள் அனுப்பினார்கள். சிலர் தூண்டுக் கடுதாசிகள் அச்சிட்டுத்



தெருக்களில் பறக்கவிட்டனர். ஜனங்களுக்கு மறுபடி ஹாலந்து, பெல்ஜியம் சகதிகளில் நின்று சண்டை செய்யவேண்டி வருமோ என்றுதான் பயம் இருந்தது இவைகளையெல்லாம் அறிந்து உடனே ஜனாதிபதி ராணுவத் தலைவர் கோரிய அம்சங்களையும் நிராகரித்துவிட்டார்.

எல்லையில்லாத காலவரையை 18-மாதங்களுக்கு ராணுவ சேவை போதுமென்று அதிக சிரமப்பட்டு ஜனாதிபதி நிர்த்தாரணம் செய்தார். இது சட்டமாகவும் ஆகிவிட்டது.

மேலும் அரசாங்கத்தினர் யுத்த பயம் நெருங்கி வருகிறது என்று சொல்லுவதை அமெரிக்கா ஜனங்கள் நம்பவில்லை. மனதில் பட்டாலும்கூட ஏற்பட்டுள்ள சௌகரியங்களைக் குறைத்துக்கொண்டு ஜனங்கள் யுத்தத்திற்குத் தாங்களாக தயார் செய்யவில்லை. கஷ்டம் நெருங்கி வந்தால்தான் யாருக்கும் படும். உதாரணமாக பெட்ரோலை உல்லாஸப் பிரயாணங்களுக்கு உபயோகிக்கக்கூடாதென்று ஞாயிற்றுக்கிழமைகளில் பெட்ரோல் வியாபாரம் கூடாதென்று மிஸ்டர் லியான் ஹெண்டர்ஸன் செய்தான். ஆனால் ஜனங்கள் முந்தியைக் காட்டிலும் அதிகமாகவே செலவு செய்து வந்தனர். இன்னும் சிரமப்பட்டுப் பார்க்கிறான். இப்பொழுதுதான் பாதி குறைந்திருக்கிறது. பொதுமக்கள் மோட்டார் உபயோகத்தை பாதி குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஜனங்கள் தங்கள் சுயநலத்தைக் குறைத்துக்கொண்டால்தான் நாட்டிற்கு க்ஷேமம் ஏற்படும்.

ருஷ்ய யுத்தம் ஆரம்பமானதும் சில அமெரிக்கப் பொதுமக்கள் யுத்தத்தைப் பற்றி கொஞ்சம்கூட கவலை எடுத்துக்கொள்ளவில்லை. முன்பு ஜனாதிபதியாயிருந்த ஹூவரும் அமெரிக்கர்களுக்கும் யுத்தத்திற்கும் சம்பந்தமில்லை என்றான். இருந்தாலும் ருஷ்யர்களிடம் ஏராளமாக மனிதர்கள் இருப்பதால் யுத்த சாமான்கள் அனுப்பினால் போதுமென்று யாவரும் நினைத்தனர். தோட்டி முதல் தொண்டைமான் வரை அமெரிக்காவில் இவ் அபிப்பிராயத்தை அனுசரித்தனர். அமெரிக்க உதவிப்படையொன்றை ஐரோப்பாவிற்கு அனுப்பி மற்றொரு போர் முனையை ஜெர்மனிக்கு எதிராக திறக்கவேண்டுமென்று சொன்ன அமெரிக்க சிப்பாய்களையும் கண்டு பேசினேன். யாவரும் ஒரே முகமாக ஹிட்லரைத் தோற்கடிக்க விமான பலம் அடைந்து முற்றுகையைப் பலப்படுத்தி சரியான பிரசாரம் செய்தால் போதுமென்று சொல்லுகின்றனர். நான் கண்டுபேசியவர்கள் யாவரும் அதிக செல்வாக்குள்ளவர்கள்.

ஆகவே, நான் தெரிந்துகொண்ட மட்டில் கப்பல் சண்டை விமானச்சண்டைகளில் அமெரிக்கா ஈடுபடத் தயாராக இருக்கிறது. துணைக்கப்பல்களை அனுப்ப எப்பொழுதும் தயாராகத் தானிருக்கிறது. பிடேனும் ஹிட்லரும் சேர்ந்து விஷமம் செய்தால் டாகர் வரையிலும் அமெரிக்கக் கப்பல்கள் வரும். ஐரோப்பாவிற்கு ஒரு அமெரிக்கச் சைனியத்தைத் அனுப்ப சந்தர்ப்பம் இல்லை என்று சொல்லலாம். அவ்விதம் அனுப்புவதானால் அமெரிக்கப் பொதுமக்களுக்குள்ள அபிப்பிராயங்களைப் பூராவாக மாற்றவேண்டும். ஜனாதிபதி ஏதாவது பிரயத்னம் எடுத்துக்கொண்டிருக்கிறாரா என்று கேட்கலாம். குத்தகைக் கடன் மசோதாப்படி மற்ற நாடுகளுக்கு அனுப்பவேண்டிய சாமான்களை எவ்வளவு ஜாக்கிரதையாக அனுப்ப முடியுமோ அப்படி அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாத்திரம் அவர் அடிக்கடி வற்புறுத்தியிருக்கிறார். யுத்தத்தில் நேரே ஈடுபடாத போனாலும் பிரிடனுக்குப் போதுமான உதவி செய்வதற்கான முயற்சியை அவர் எடுத்துக்கொண்டிருக்கிறார்.

இனி பிரிடன் செய்யவேண்டியதை கவனிப்போம். ஐரோப்பாவில் போர் முனையை ஏற்படுத்தாமல் பிரிடன் வெற்றிபெற முடியுமா என்று கேட்கலாம். ஆனால் அவ்விதம் செய்வதற்கான பலம் பிரிடனிடம் இருக்கிறதா என்று உடனே

கேட்கப்படும். அப்படி பலமும் அமெரிக்க உதவி இல்லாமலேயே ஏற்படுமா என்றும் கேட்கவேண்டியதுதான். இவைகளுக்கு பதில் அளிக்கும் காலத்தில் அமெரிக்காவிலிருந்து மனித உதவி வேண்டியதில்லை என்று பிரிடிஷ் அரசாங்கத்தினர் சொல்லுகின்றனர். பிரகிருத நிலையில் சாமான்கள் வந்தால் போதுமானது. மனித உதவி ஒருக்கால் அடுத்து வரும் வசந்த காலத்தில் வேண்டியிருக்கும். அமெரிக்க யந்திரப் பகுதிகளும் தேவையாகலாம். அப்பொழுது பார்த்துக்கொள்ளுவோம். இன்னும் இம்மாதிரியான யந்திரப்படைகளை அதிகரித்து அனுப்ப வேண்டிய சந்தர்ப்பம் அமெரிக்காவில் ஏற்படவில்லை. எல்லாம் அமைதியாகவே காணப்படுகிறது. வேண்டும்போது அதையும் செய்து அனுப்புவார்கள்.

---

## எப்பொழுதும் ஸ்திரமான விருப்பமுள்ளவர்.

ஜெர்மானியர்களுடன் சமாதானம் செய்துகொண்டால், ஜெர்மனி ருஷ்ய ராணுவ பலத்தை அதிகரிக்கச் செய்து, நிலைநிறுத்தி, உலகத்தை மீண்டும் அடிமையாக்க நூதனமாக முயற்சிகள் எடுத்துக்கொள்ளும். அதனால் ஒருவிதமான நிபந்தனையன்னியில் ஆஸ்திரிய தேசத்தினர்களையும்—ஜெர்மானியர்களையும் கீழ்ப்படியும்படிசெய்யவேண்டியது மெத்த அவசியம். ஜெர்மானியர்கள் முழங்காலிட்டு சமாதானத்தை கேழ்க்கும்படி பலவந்தம் செய்யப்படும்வரை யுத்தம் தொடர்ந்தே நடக்கவேண்டும். பின் ஐம்பது வருஷங்களுக்கு உலகத்தார்களுக்கு யாதொரு கெடுதியும் உண்டாக்காதபடி முற்றிலும் ஜெர்மனியை முறியடிக்கவேண்டும்.

போப்போலோ-டி-இதாலிய பத்திரிகையில், பெனிடோ முஸோலினி ஏப்ரல் 1, 1915-ல் எழுதியது.

---

## வட ஆபிரிக்காவிற்குச் செல்லும் விரோதிகளின் போக்குவரத்து வழிகளை எவ்விதம் பிரிடிஷ் கப்பற்படை அழிக்கிறது.

## இராக்காலங்களில் யுத்தம்செய்ய உயர்தர பயிற்சி யளிப்பது.

## பிரிடிஷ் விமானப் படையுடன் சமயோஜித சேர்க்கை.

(டாப்ரெயில் என்பவரால்.)

நாம் இப்பொழுது புதுதினுசு எதிர்ப்பைக் கையாளுகிறோம். லிபியாவில் அச்சுநாட்டு சைனியங்களுக்கு உதவிப் படைகளும், உணவுப் பொருள்களும் கொண்டுசெல்லும் கப்பல்களுடன் பிரிடிஷ் கப்பற்படை ரொம்ப பலமாகச் சண்டையிடுகிறது. முன்னொருகாலத்தில் அச்சுநாடுகள் எகிப்தை ஆக்கிரமித்து பிரிடிஷ் கப்பற்படையை அலெக்ஸாண்டிரியாவிலிருந்தும், கிழக்கு மத்தியதரைக் கடல் பிரதேசத்திலிருந்து பின்வாங்கும்படி செய்யவும், மத்தியக் கிழக்கிலுள்ள நம் சைனியங்களுக்கு ஆபத்து ஏற்படும்படி செய்யவும் யத்தனித்தன. ஆனால் இப்பொழுதோ அவைகளின் மனக்கோட்டை எல்லாம் ஒரு சொப்பனம்போல் மறைந்துவிட்டது.

லிபியாவில் துருப்புகளும் உணவுப் பொருள்களும் ஸ்வல்பம். அங்குள்ள துருப்புகளுக்கு உணவு அளிக்கவேண்டும்; மேலும் அங்கு சேதம் ஏற்படும் படைகளுக்கு புதிதாக துருப்புகள் சேர்க்கவேண்டும்.



பீரங்கிகளுக்கு வெடிமருந்து தேவை. சாமான் ஏற்றிச்செல்லும் யந்திர வண்டிகளின் போக்குவரத்துக்கும் கவசம்பூண்ட மோட்டார் வண்டிகளுக்கும் எண்ணெய் அதிகம் தேவை. அதே மாதிரியாகவே எண்ணெய் ஆகாய விமானங்களுக்கும் தேவை. இதாலிக்கும் ஸிஸிலிக்கும் இடையிலுள்ள கடல் மார்க்கத்திலும் ட்ரிபோலி, பெங்காஸி என்ற இடங்களிலும் அங்குள்ள சைனியங்களுக்குத் தேவையான பொருள்களை, இடைவழியில் யாதொரு இடையூறுகள் இல்லாமல் இருந்தாலும்கூட விமானங்கள் மட்டில் சதாகாலமும் ஏற்றிச்செல்லமுடியாது.

அநேக மாதங்களாக விரோதிகளின் போக்குவரத்து பாதைகளை நீர்மூழ்கிக் கப்பல்களும், விமானங்களும் இடைவிடாது இடையூறுகள் விளைவித்து வந்தன. நவம்பர்-மீ ஆரம்பத்தில் கப்பற்படை தளகர்த்தர் ஸர் ஆண்ட்ரு கன்னிங்ஹாம் என்பவர், லிபியாவிலிருக்கும் அச்சுநாட்டு சைனியங்களுக்கு சாமான்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்களில் 100-க்கு 50-கப்பல்கள் வீதம் கப்பல்களை மூழ்கடித்தோ, சேதமாக்கியோ வந்திருப்பதாகச் சொன்னார். பிரிடிஷ் கப்பற்படை அக்டோபர் 31-ம் தேதியுடன் முடிவுபெறும் மூன்று மாதங்களுக்குள் 86 எதிரிக் கப்பல்களை, மூழ்கடித்தும் இன்னும் 61 கப்பல்களை சேதமாக்கியும் வந்திருப்பதாக ஸர்க்கார் பூர்வமான அறிக்கைகளிலிருந்து வெளியாகிறது.

மேற்சொல்லியபடி அச்சுநாடுகளுக்கு ஏராளமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் நவம்பர் மாதம் 9-ம் தேதியிலும், 11-ம் தேதியிலும் கப்பல் தளகர்த்தர் இரண்டு சமாசாரங்கள் அனுப்பி இருக்கிறார். பிரிடிஷ் கப்பற்படைத் தலைவர் அக்னியூவின் கீழ் இரண்டு பிரிடிஷ் சஞ்சாரிகளும், இரண்டு நாசகாரிகளும் சேர்ந்து எதிரியின் பத்து சாமான் கப்பல்களை முற்றிலும் அழித்துவிட்டன என்று முதல் செய்தி தெரிவிக்கிறது. மேலும், அதே சமயத்தில் மூன்று இதாலிய நாசகாரிகள் மூழ்கடிக்கப்பட்டு, இன்னும் இரண்டு சேதமாகியும் விட்டன. மேற்சொல்லிய எதிரிக் கப்பல்களுக்கு காவல் புரிந்த இரண்டு பெரிய இதாலிய சஞ்சாரிகள் தூரத்தில் இருந்தபடியால் அங்கிருந்து இச்சண்டையில் அவை கலந்துகொள்ள முடியவில்லை.

நவம்பர் மாதம் 11-ம் தேதியில் வெளிவந்த மற்றொரு அறிக்கையில் பிரிடிஷ் நீர்மூழ்கிக்கப்பல்கள், துருப்புகளை ஏற்றியோ அல்லது சாமான்களை ஏற்றியோ சென்ற 4 எதிரி கப்பல்களையும், இன்னும் அங்கு இரண்டு கப்பல்களையும் மூழ்கடித்தும், இவைகளுக்கு காவல்புரிய பீரங்கிகளை ஏற்றிச்சென்ற இரண்டு சஞ்சாரிகளை சேதமாக்கியும் விட்டன என்று கண்டிக்கிறது.

இதாலிய யுத்தக் கப்பல்களிலும், வியாபாரக் கப்பல்களிலும் நாஸிகள் மாலுமிகளாக வேலைசெய்து அதைரியமடைந்த இதாலியர்களுக்கு தைரியமூட்டிவருகிறார்கள். இருந்தாலும் மத்தியதரைக்கடலில் பிரிடிஷார் ஆதிக்கம் பெற்றிருப்பதால் நாஸிகள் அங்கிருப்பதற்கு வெகு சிரமப்படுகிறார்கள். உண்மையில் அங்கு பிரிடிஷ் கப்பற்படை தோன்றியவுடன், இதாலியக் கப்பல்கள் அவசர அவசரமாக பத்திரமான இருப்பிடத்தைநோக்கிச் செல்லுகின்றன. மேலும் இரண்டு சிறிய சஞ்சாரிகள், இரண்டு நாசகாரிகள், இவைகளடங்கிய ஒரு சிறிய பிரிடிஷ் கப்பற்படை இரவில் சமுத்திரத்தில் எதிரியின் கப்பற்படைத் தளத்திற்கும் விமான நிலயங்களுக்கும் 200-மைல் அருகாமையில் வெகு துணிகரமாகச்சென்று எதிரியின் துணைக்கப்பலையும் இன்னும் காவல் புரியும் அநேக நாசகாரிகளையும் அழித்துவிட்டது. ஆனால் இந்தச் சம்பவத்தில் பிரிடிஷ் கப்பற்படைக்கு ஒருவித சேதமும் ஏற்படவில்லை.

இராக் காலங்களில் சண்டைசெய்வதில் வெற்றி எந்தப்பக்கம் என்று நிச்சயமாய் சொல்லமுடியாது. ஏனென்றால் அப்பொழுது இரு கப்பற்படைகளும் அதிகமாக நெருங்கி, கடுமையாக சண்டையிடும்பொழுது, அநேக எதிர்பாராத சம்பவங்கள் ஏற்படலாம். இந்தச் சண்டையில் தலைவர் அக்னியூவின் படை செலுத்தும் திறமையும், இரவில் சண்டை செய்ய பிரிடிஷ் கப்பற்படையின் அனுபவமும் எல்லோருக்கும் தெரியவந்தது.

மேலும் இந்தப்போரில் பிரிடிஷ் கப்பற்படையும், பிரிடிஷ் விமானப்படையும் ஒத்துமையாக சரியான சமயத்தில் வெற்றிகரமாக சண்டைசெய்தன. பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த மேரிலாந்து என்றவிமானம் மத்தியதரைக்கடலில் எதிரி துணைக்கப்பல் இருப்பதை பகல் காலத்தில் பார்த்துவிட்டு உடனே தகவல் கொடுத்துவிட்டது. உண்மையில் கடல் ஆதிக்கம் என்றால் என்னவென்றும், மத்தியதரைக்கடல் இதாலியரின் உபயோகத்துக்குமட்டும் இதாலிய ஏரியைப் போல் உபயோகிக்கமுடியாதென்றும், அது உணர்ந்துவிட்டது. அது ஏற்கனவே அபிஸீனியா, எரிட்ரியா, இதாலிய ஸோமாலிலாந்து, இவைகளை இழந்துவிட்டது. இப்பொழுது லிபியாவில் அச்சுநாடுகளின் சைனியங்கள் திக்குமுக்காடுகின்றன. ஏனென்றால் அவைகளுக்கு வரும் ஸப்ளைகள் அடிக்கடி தடைபட்டு விடுகின்றன.

---

## பிரிடனின் தலைவர்கள் போரில் ஈடுபட்டிருக்கிறார்கள்.
## எல்லோரையும் திடுக்கிடச்செய்யும் துருப்புகள்.
## அரசாங்க உத்திரவன்னியிலேயே போரிடக்கூடிய சைனியம்.
## பார்டியாவில் எதிரியின் ஏமாற்றம்.

ஈவினிங் ஸ்டாண்டர்ட் பத்திரிகையில் பிரிடனின் நூதனமாகவும், ரகசியமாக நடத்தக்கூடிய படையையும், அது நடத்தும் போரைப்பற்றியும் முதன் முதலாக மிஸ்டர் எவலின்வாகா எழுதியிருக்கிறார்.

எங்களுடைய சைனியம் புது மாதிரியானது. சுமார் அது ஒரு வருஷமாகத்தான் இருந்துவருகிறது. நாங்கள் ரகசியமாக அப்படையில் சேர்க்கப்பட்டோம். அவ்விஷயம் வெளியில் பிரஸ்தாபப்படாமல் வெகு ரகசியமாய் வைக்கப்பட்டிருந்தது. எப்படியோ எங்களைப்பற்றி தெரிந்து கொள்ள ஜனங்களுக்கு ஆவல் ஏற்பட்டது.

மத்தியக்கிழக்கில் ஒரு வருஷம் பூராவும் சண்டை நடந்த பிறகு நாங்கள் செய்த காரியங்களைப்பற்றி இங்கு சொல்லக்கூடும். அவைகளைப்பற்றி பலர் பலவாராக பேசிவந்தார்கள். உண்மையில் நாங்கள் அடைந்த வெற்றியைக் காட்டிலும் அதிகமாகவே காணப்பட்டது. ஏனென்றால் அங்கு புதிய மனிதர்களைச் சேர்த்து, நல்ல பயிற்சி அளித்து, புதிய ராணுவப் பகுதி ஒன்று தயாரிப்பதற்குள் எங்களுக்குள்ள சிரமங்கள் அநேகம். அப்பகுதி பிரிடிஷ் சைனியத்திற்கு நல்ல பக்க பலமாக இருக்கும்.

### 1940-ம் வருஷம் ஜூலையில் தயாரிக்கப்பட்டது.

இந்தப்பகுதி 1940-ம் வருஷம் ஜூலையில் ஏற்பாடாயிற்று. டங்கர்க் போருக்கும், பிரிடனில் விமானச் சண்டை ஏற்பட்டதற்கும் இடையிலுள்ள நாட்களில் இங்கிலாந்தின் நிலைமையைப்பற்றி சற்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். சரியாக பயிற்சி பெறாத பட்டாளங்கள் முதல் வகுப்புப் படையாக அணிவகுக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ள பழைய சைனியத்திற்குப் புதிதாக ஆட்களைச் சேர்த்தும், புதிய ஆயுதங்கள் வழங்கப்பட்டும் வருகிறது. உள்நாட்டு பாதுகாப்புப்படை சற்றும் பயிற்சியடையாதவர்கள். அவர்களுக்கு முஸ்தீப்புகளும் மிகவும் குறைவு. ஒவ்வொரு நாளும் யுத்தம் நேரிடுமோ என்று எதிர் பார்க்கப்பட்டது. போலந்து, நார்வே, பிரான்ஸ், இந்த தேசங்களுக்குப் பெரிய முக்கிய வியாபார ஸ்தலங்களிலிருந்து போக்குவரத்துத் தடை ஏற்பட்டு, அவைகளுக்குப் பெருத்த அபாயத்தை விளைவித்தது நமக்குத் தெரிந்த விஷயமே.

பெரிய துருப்புகள் சண்டையிட முடியாதபடி செய்யப்பட்ட சமயங்களில், சுதாவாகவே பெரிய யந்திர சாதனங்கள் இல்லாமல் ஆங்காங்கு சிறு கூட்டங்களாக இருந்து, சண்டை செய்யக்கூடிய துருப்புகள்தான் இப்பொழுது அவசியம்.

அப்படிச் சிறு கூட்டங்கள் தாங்களாகவே தாக்குதல்கள் செய்தும் இங்கிலாந்துக்கும், ஐரோப்பா கண்டத்திற்கும் ஏற்படக்கூடிய எதிரியின் போக்குவரத்துகளைத் தடை செய்யவும் கூடும்.



### தேர்ந்தெடுத்த மனிதர்கள்.

தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தான் முதன் முதலில் எல்லோரும் எத்தனித்தார்கள். நல்ல பயிற்சி பெற்ற அனுபவம் வாய்ந்தவர்கள் மட்டில் தான் பொறுக்கி எடுக்கப்பட்டார்கள். முதலில் தளகர்த்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பெரும்பாலும் அவர்கள் இளைஞர்களாக இருந்த பொழுது தனியாக சில சைனியங்களை நடத்தி வந்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்களே தங்கள் இஷ்டப்படி புதிய படைகளை நிர்மாணிக்கும்படி ஏற்பாடாகியிருக்கிறது.

மத்தியக் கிழக்கிலுள்ள படைக்கு தளகர்த்தராக வந்தவர் எல்லோரையும் விட அதிகத் திறமை வாய்ந்தவர். அவர் தலைமையின் கீழ் நானுமிருந்தேன். அவர் முதலில் கல்லூரியில் பிரக்யாதியாய் பயிற்சியடைந்து, பிற்பட்டு குதிரைப்படையில் சேர்ந்து தேர்ச்சியடைந்து, பிறகு பின்லாந்து சாதாரணக் கப்பலில் உலகம் பூராவும் சுற்றி மனவுறுதியும், திடசித்தமும் பெற்றிருக்கிறார்.

### தேவைக்கு மேல் உபரி வாலண்டியர்கள்.

அங்குள்ள சைனியத்தில் உத்தியோகஸ்தர்களும், போர் வீரர்களும் மிகவும் கஷ்டமான வேலைகளில் ஈடுபட வாலண்டியர்களாகச் சேர்ந்து கொள்ளலாம் என்று உத்தரவு பிரப்பிக்கப்பட்டது. தேவைக்கு மேல் உபரியாகவே போர் வீரர்கள் முன் வந்தனர். எங்கள் பல துருப்புகளின் தலைவர்கள் பட்டாளம் இருக்குமிடங்களில் பார்வையிட்டு ஒவ்வொருவரைப் பற்றியும் தஸ்தவேஜைப் பார்த்தும், அவரவர் பழைய உத்தியோகஸ்தர்களைக் கேட்டுத்தெரிந்தும் வந்தார்கள். நல்ல தேகபலமும், கஷ்டங்களைப் பொறுக்கும் தன்மையும், யுத்தம் செய்வதில் ஊக்கமும், ஆயுதங்களின் சூக்ஷமங்களின் ஞானமும், துணிந்து ஒரு காரியத்தில் இறங்கும் தைரியமும் இருக்கக்கூடியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் எங்கள் படைப்பகுதியில் புதிதாகப் பொறுக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏனென்றால் அதில் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் நல்ல பேர் வாய்ந்த பட்டாளங்களிலிருந்து வந்தவர்கள். அதன் உத்தியோகஸ்தர்களோ உள்நாட்டுப் பாதுகாப்புப் படையிலுள்ள உத்தியோகஸ்தர்களிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்டவர்கள். அநேகமாக அவர்கள் பணக்காரர்கள். யுத்தத்தில் அதிக உத்ஸாகமுள்ளவர்கள். அதற்குத் தகுந்தார்போல் சுருசுருப்பும், நல்ல அனுபவம் வாய்ந்த அவ்வளவு போர் வீரர்கள் அதில் சேர்ந்திருந்தார்கள்.

### முதலில் தோன்றும் அபிப்பிராயங்கள்.

நான் ராணுவத்தில் சேர்ந்த பொழுது என் மனதிற்குத்தோன்றினவைகள் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. அந்தத் தலைவர் அது சமயம் ஸ்காத்லாந்தில் விசித்துவந்தார். உத்தியோகஸ்தர்கள் ஹோட்டலில் சாப்பாடு வைத்துக்கொண்டிருந்தார்கள். பிரிடிஷ் கப்பற்படைகள் உணவு அருந்திவந்ததில் தான் எனக்கு பழக்கம். அந்த சாப்பாட்டிற்குச் சாயங்காலம் 6 மணிக்கு முன் போவதாய் இருந்தால் அது பெருத்த அவமானமாய்த் தோன்றும். வேலை இல்லாதவர்கள்கூட வேலை இருப்பது போல் பாசாங்கு செய்யவேண்டும்.

ஒரு சிறிய படைத்தலைவன் ராணுவ உடைதரித்திருந்தான். அவன் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான் அவன் ராணுவச்சிலுவை பதக்கம் போட்டிருந்தான். பிறகு அவனைப் பார்க்கையில் அவன் எங்கு சென்றாலும் அவனுடைய துருப்புகளும் அவன் பின்னே போகிறார்கள் என்று தெரிய வந்தது.

எங்களுடைய உத்தியோகஸ்தர்களில் ஜெல்லிகோ கீஸ், பீட்டி, சர்ச்சில் என்பவர்களின் பிதாக்கள் சென்ற யுத்தத்தில் பிரக்யாதி பெற்றவர்கள். அவர்களைப் போலவே இப்பொழுது அவர்கள் மகன்களும் யுத்தத்தில் திறமையைக் காட்டி தங்கள் பெற்றோர்களின் சாமர்த்தியத்தைப் புகழடையச்செய்வார்கள் என்று தோன்றிற்று. 1914-ம் வருஷத்தில் எழுதிய கடிதங்களையும் கவிகளையும் படிக்கும்பொழுது ஏற்படும் உணர்ச்சி இதிலும் தோன்றிற்று. சாதாரணமாக பட்டாளத்தில் ரொம்ப ஒழுங்குடன் இருப்பதுபோல்

அல்லாமல், சற்று குறைவாகவே நாங்கள் இருந்தோம். தினசரி பட்டாளங்களில் துருப்புகள் சிறிய தவறுதல்கள் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அதற்காக சிறிய தண்டனையும் அடைந்து வந்தார்கள். எங்கள் பகுதியில் அவ்விதம் ஒன்றுமில்லை. அவ்விதம் யாரேனும் விஷமியாய்யிருந்தால் அவன் முந்தியிருந்த சைனியத்திற்கே மாற்றப்பட்டு விடுவான்.

## சாப்பாட்டுப்படி மட்டில்.

நாங்கள் எல்லோரும் சம்பளமில்லாமல் வேலை செய்கிறவர்கள். போர் வீரர்கள் எடுத்துக்கொள்ளும் உபரி முயற்சிகளை நாங்கள் சந்தோஷத்துடன் எடுத்துக்கொள்ளுகிறோம். செலவு திட்டம் அதிகப்படாமலிருக்க யுத்தத்தில் ஈடுபடாதவர் ஒருவரும் எங்களுடன் இல்லை. சாப்பிடுவதற்கும் தங்குவதற்கும் கடற்கரையில் ஒரு இடமும், உணவு செலவு மட்டில் எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. கிராமாந்திரங்களில் வசிக்கவும், ஆகாரத்திற்கு வேட்டையாடி வேட்டைப் பொருள்களை உபயோகித்துக் கொள்ளவும் துருப்புகளுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டன. ஏதாவது ஒரு விசேஷமான வேலை செய்யவேண்டியிருந்தால எங்களில் சிலர் பொறுக்கி எடுத்தனுப்பப்படுவார்கள். அதேவிதவாக டொப்ருக்குக்கும், ஸிரியாவுக்கும் எங்களில் ஒரு பகுதி சென்றிருக்கிறது. மற்றொன்று கடற்படையுடன் வேவு பார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. நாங்கள் எங்கள் வேலைகளைத் திறமையுடன் செய்ததற்காகப் பரிசாகப் பதக்கங்கள் பெற்றிருக்கிறோம். இடையூறுகள் சிற்சில சமயங்களில் ஏற்பட்டு எங்களில் சிலர் இறந்துமிருக்கின்றனர். ஒரு சிறிய நடவடிக்கையின் விவரம் இதன் கீழ் கண்டிருக்கிறது. அதில் கொலையோ ரத்தம் சிந்துதலோ இல்லை. அது நன்றாகத் திட்டம்போடப்பட்டு எதற்காக இம்மாதிரி விசேஷச் செய்கைகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதோ அதற்குத் தகுந்தபடி செய்து முடித்தோம்.

## பார்டியாவில் படையெடுப்பு.

ஸோலுமுக்கும், டொப்ருக்குக்கும் இடையிலுள்ள எதிரி படைகளுக்குப் பின்னால் பார்டியா இருக்கிறது. அது ஒரு சிறிய பட்டணம். அதுவும் ஒரு துறைமுகம் தான். அதன் வழியாக காபுஸோவுக்கு ரஸ்தா மூலமாக ஸப்ளைகளும், துருப்புகளும் செல்லவேண்டும். அநகு பலகாரணங்களை முன்னிட்டு படையெடுப்பு வேண்டுமென்று G. H. I. விரும்பினார். விரோதிகள் அப்பட்டணத்திலுள்ள கோட்டையை முற்றுகை போட்டுக் கொண்டிருக்கின்றனரா? அல்லது அதற்கு வெளியே ஸ்வல்ப தூரத்தில் தங்கியிருக்கின்றனரா? (அதாவது இன்னும் அதை மேலும் வெடிகுண்டுகளால் தாக்குவதால் ஏதாவது பிரயோஜனம் உண்டா? கடற்கரைப் பாதுகாப்பிற்காக பீரங்கிகள் அங்கு அமைக்கப்பட்டிருக்கின்றனவா? அல்லது அங்கிருந்து வெளியூர்களுக்கு அனுப்புவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றனவா?) என்று இவைகளைப்பற்றிய தகவல்கள் தெரிந்து கொள்ள ஆவல்படுகிறார்கள்.

தகவல்களைவிட இன்னும் முக்கிய விஷயம் எதிரிகளின் யந்திர சாதனப் படைகளை பின்வாங்கும்படி செய்வதே. பின்புறம் தாக்குலை எதிரிகளை உணரும்படி செய்து போக்குவரத்துக்கு இடையூறன்னியில் அவர்கள் தங்கள் முன்னணித் துருப்புகளை பின்வாங்கும்படி செய்யவேண்டும். முடிந்தால் பின்புறமாகத் தாக்குதல்கள் அதிகமிருப்பதால் அவைகளைத் தடுக்க பார்டியாவுக்கு யந்திரப் படைகளை எதிரி அனுப்பும்படி செய்யவேண்டும். இந்தப்படைகளை எதிரி வேறு அவசிமான இடத்திற்கு அனுப்ப எண்ணியிருந்தான். இவைகளைத்தவிர ரஸ்தாக்கள் பாலங்கள் சாமான் கிடங்குகள் இவைகளுக்குச் சேதத்தை விளைவிப்பது நல்லது.

## தனிமையில் ஒரு தலைமைப் பகுதி.

இந்த வேலையைச் செய்ய ஒரு தலைமைப் பகுதி தனிப்படுத்தப்பட்டது. குறைந்த பக்ஷம் இரண்டு பட்டாளங்களாவது காத்துக்கொண்டிருக்குமென்று நாங்கள் எதிர்பார்த்தோம். கடற்கரையிலிருந்து செங்குத்தான முனையின் பாறைகளில் பார்டியா இருக்கிறது. வாரிகள் பாறைகளை அறுத்துக்



கொண்டுவந்து மண்மேடிட்ட நான்கு இடங்களில்தான் இறங்க வசதிஉண்டு. இந்த இடங்களில் ஒரே காலத்தில் இறங்க வேண்டும் ஒவ்வொரு துருப்புக்கும் தனிப்பட்ட வேலை உண்டு. கப்பலை விட்ட நிமிஷம்முதல் திரும்பி வருகிறவரையில் அவர்களுக்கு வேறு உத்தரவுகள் இடுவதற்கு வழியில்லை. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வேலை உண்டு. ஒருவர் அதிகரித்து வரும் படைகளைத் தாக்குவதற்காக நிற்க வேண்டும். ஒவ்வொரு சமுத்திரக் கரைக்கும் ஒவ்வொருவர் தேவை. பாலத்தை உடைப்பதற்கு ஒருவர். ரோடு பாலத்தை அழிப்பதற்கு ஒருவர். இப்படியாக பலபேர். இடையூறு எது ஏற்பட்டாலும் அதை அந்தந்தத் துருப்பு சமாளித்துக் கொள்ளவேண்டும்.

நாங்கள் சமுத்திரத்தில் போய்ச் சேரும்வரை இந்த உத்தரவுகள் ரகசியமாக வைத்துக்கொள்ளப்பட்டன. நல்ல வேளையாய் ஒருநாள் பயணம் தான் பிடித்தது. அதற்குள் தேசப் படங்களையும், புகைப் படங்களையும், எழுத்து மூலமாயுள்ள உத்தரவுகளையும் கொடுப்பதற்கும், அவற்றை துருப்புத் தலைவர்கள் முற்றிலும் உணர்ந்து தங்கள் ஆட்களுக்குத் தெளிவாய், துப்புறவாய் தெரிவிக்கவும் அவகாசம் இருந்தது. கப்பலில் பின்புறம் பாதுகாப்புக்காக தங்கவைக்கப்பட்ட ஆறு துர்அதிர்ஷ்டகாரப் பயல்களைத் தவிர பாக்கிப்பேருக்கு நல்லதுதான். அவர்கள் கரையில்வந்து பார்ப்பதற்கு இடையிடையே அனுமதி கேட்டார்கள். ஏதாவது ஒரு சாக்குச் சொல்லி அவர்களுக்கு அனுமதி கொடுத்தேன். இருட்டினபிறகு படகுகளில் ஏறுவதற்குள் சற்று தூங்கலாம் என்று யோசனை கிளம்பியது. ஆனால் ஒவ்வொருவரும் குதூஹலத்தால் கத்திகளைத் தீட்டுவதும், பூட்ஸுகளைப் பதனிடுவதும். யுத்த முஸ்தீப்புகளைத் தயார்செய்துகொள்ளுவதுமாகக் காலங் கழித்தார்கள்.

## இருட்டில் கரையேறினோம்.

என்ன புல் பூண்டோ, இருட்டில் தெரியாத இடத்தில் இறங்குவது கூச்சமான வேலை. மத்தியதரைக்கடலில் அநேகமாக /கார் இருளாக இருக்காது. ஆனால் அன்று நக்ஷத்திரம்கூட இல்லை. காவல் ஸ்தம்பமும் கண்ணுக்குத் தெரியவில்லை. கடலுக்கும் கருமேகத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை. கப்பல் நிற்பதற்குள் நாங்கள் படகில் பிடித்துக்கொண்டோம். இஞ்ஜின் சப்தம் கேட்டது. அதைக் கேட்டு படகில் ஏறினோம். மூன்று வரிசைகளில் அந்தப் படகின் பள்ளத்தில் உட்கார்ந்தோம். மூன்று வரிசைக்காரர்களும் சேர்ந்தார்போல் துடுப்புத் துலாவலாம். அரை நிமிஷம்தான் இருக்கும் ஒரு படகு போய்ச்சேருவதற்கு. அதில் முப்பது பேர்கள் ஏறியிருந்தோம்.

படகுகளைத் தாழ்த்தி ஒரே வரிசையாகக் கரைக்கு விட்டோம். பக்கத்தில் எல்லாம் ஆயுதங்கள் நாட்டப்பட்டிருந்தன. நிமிறக்கூட இடமில்லை. என் இடது பக்கத்திலிருந்தவனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அவன் தலையைமட்டில் என்பக்கம் சற்று திருப்பலாம். மற்றபடி தேகத்தை அசைக்க முடியாது. அங்குள்ள பலரும் உறங்கிவிட்டனர். எங்களில் சிலருக்கு உத்ஸாகம் ஏற்படவில்லை. விழித்துக் கொண்டிருந்த சிலர் சில்லரை உபத்திரவங்களைப் பொறுத்துக் கொண்டு கரையில்போய் கால்களை நீட்டிக் கொள்ளலாம் என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

## கரை சேரத் தயார்.

கரை வந்துவிட்டது என்று ஓரங்களிலிருந்து சப்தம் கேட்டது. படகின் அடி மணலில் பதிந்தது. நங்கூறம் தரையில் இறங்கினது. முழங்கால்மட்டத் தண்ணீரில் இறங்கி செங்குத்தான கரையில் ஏறினோம். என் அருகில் இருவர் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து, நனைந்து, மனதிற்குள் வைதுகொண்டு வந்தார்கள். கரையில் ஒரே நிமிஷம். அதற்குள் வகுப்புத் தலைவர்கள் தங்கள் ஆட்களைச் சேகரித்தார்கள். அங்கு பேச்சு மூச்சில்லை. நேராடி குறித்த இலக்குகளுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

எதிரே ஒரு செங்குத்தான கரை தோன்றிற்று. அந்த இடத்திற்கும் கருமேகத்திற்கும் வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை. படகுகளில் ஏறி

எதிர்த்த கரையில் வந்த நேரம், நாங்கள் இறங்கின நேரம், இவற்றைக் கவனித்துக், குறித்துக்கொண்டிருந்தேன். படகுகள் கரையில் மோதுவதும், எல்லோரும் இறங்குவதும், இஞ்ஜின்கள் பின்பக்கம் போவதும், இறங்கின மனிதர்கள் முன்பக்கம் போவதுமாய் எல்லாம் ஒரு சில நிமிஷங்களே. அவர்களுடன் அங்குள்ள மற்ற அதிகாரிகளும் பின்பற்றினர்.

### டாங்கிகளை அமுக்கும் குழி.

எதிரே ஒரு தடை; அது என்ன? முன்னால் அடிவைத்துப் பார்த்தேன். டாங்கிகளின் எதிர்ப்புக் குழியில் ஆழமான சேரும், சகதியும்; அதில் மூன்று வரிசை ஜனங்கள் கடந்து செல்லவேண்டியிருந்தது. இதை ஆகாயத்திலிருந்து புகைப்படம் எடுத்தபோது காணப்படவில்லை. அவ்விடத்தில் பள்ளமிருக்க நியாயமில்லை என்றாலும், ஏதோ ஒன்று இருந்துவிட்டது. எங்களுக்கு அதனால் இருபது நிமிஷம் அலக்கழிவு. மனிதர்கள் பகலில் தோன்றினபடி போவதுபோல் இப்பொழுது போகமுடியாது. கை கோர்த்துக்கொண்டுதான் போகவேண்டும். கடைசி மனிதன் வரும்வரையில் முன்னால் போனவன் காத்திருக்க வேண்டும்.

ஒரு சேற்றுக்குழியில் அகப்பட்டுக் கொண்டோம். அங்கிருந்து மேலே ஏறினோம். ஏற்கனவே ஸ்பெக்ட்ராஸ்கோப் (Spectroscope) என்ற பிரகாசமானியில் எங்களுக்கு அனுபவம் இருந்ததால் அங்கு செய்யப்பட்டிருக்கும் தந்திரமெல்லாம் பிரதேசத்தைச் செங்குத்தாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறதென்று கண்டுகொண்டோம். எங்கள் வழி செங்குத்தானது. கற்களும் தரையோடு பதியாமல் அசையக்கூடியவைகளாக இருந்தன. கப்பி ரோடுகளிலும், அருவிகள் ஓடும் பாறைகளிலும்கூட கிரேப் ரப்பர் பூட்ஸுகளைத் தரித்துக் கொண்டு சந்தடியில்லாமல் இரவில் போக எங்களுக்குப் பழக்கமுண்டு. ஆனால் இப்போது மனிதர் ஏறும் சப்தம் காதைத்துளைத்தது. கற்கள் பனிப்பாறைகளுடன் சேர்ந்து நழுவி விழும் சப்தமும், தடார் தடாரென்று கேட்டது.

### தலைமேலே குண்டுகளின் ரீங்காரம்.

திடீரென்று மூன்று வேட்டுகள் கேட்டன. குண்டுகள் தலைமேலே ரீங்காரம் செய்தன. எங்கள் வரிசை அரை நொடி நின்றது. அதன்மேல் தொடர்ந்து நடந்தது. அந்த இடையில் நான் நினைத்தேன், "நம்மை பைசல் செய்துவிடுவார்கள். கரையில் ஏறவிட்டு, சரியான இடத்தில் பாறையில் பிடித்துக்கொண்டார்கள். தந்திரமாய் வந்தோமென்று நினைத்தோமே, நல்ல முட்டாள்கள்."

கொஞ்சம் தாண்டினதும் குண்டுகளைக் காணோம். "இங்கு ஒரே ஒரு பாராக்காரன். அவன் காவல் சேனையைச் சேகரிக்கப் போயிருக்கிறான். அவர்கள் வருவதற்குள் நாம் உச்சிக்கு ஏறிவிடலாம்" என்று நான் நினைத்தேன்.

என்ன கடும்பழக்கமிருந்தாலும் ஏறுவதில் எங்கள் பாச்சா பலிக்கவில்லை. நாங்கள் காலத்தைக் கணக்கிட்டது தவறிப்போய்விட்டது. இப்பொழுது பிற்பகல் ஒரு மணிக்கு கால்மணி நேரம் இருந்தது. இரண்டே காலுக்கெல்லாம் படகிற்குத் திரும்பவேண்டும். அதனால் அங்கு தாமதிக்க வழியில்லை. முன்னால் போனவர்கள் பட்டணத்தைக் கிட்டிவிட்டார்கள். ஆனால் அவர்களுடைய சப்தம் கொஞ்சமேனும் கேட்கவில்லை. அந்த இடம் காலியாக இருந்ததென்று அப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். அங்கு இருந்ததாகப் போக்குவரத்துப் பகுதிகளின் கூட்டத்தின் சமீபத்தில் நடவடிக்கையைப் பார்வையிடும்பொருட்டு ஒரு கம்பம் நாட்டப்பட்டிருந்தது. முன்னால் ஏற்கனவே இதாலியரின் கொத்தளமாயிருந்த இடத்தில் மற்றொரு துருப்பு சென்றுகொண்டிருந்தது. கீழே இறங்கின மற்ற துருப்புகளெல்லாம் நகரத்திற்குள் சென்றுகொண்டிருந்தன.

### அவர்கள் வேலையைச் செய்துகொண்டிருந்தார்கள்.

அரைமணி நேரம் நிச்சப்தமாயிருந்தது. வெவ்வேறு பகுதிகளும் தங்கள் தங்கள் லக்ஷியத்தை நோக்கி வெடிகுண்டுகள் வீச தயாரித்துக்கொண்டிருந்தார்கள் என்பது நமக்குத் தெரியம்.



தடீரென்று எல்லா திசைகளிலிருந்து சப்தம் வந்தது. எந்த இடத்திலிருந்து வந்தது என்று எங்களால் குறிப்பிடமுடிந்தது. "அதுதான் குன்றின்மேலுள்ள கடற்கரைப் பாதுகாப்பு பீரங்கி. அதுதான் ரஸ்தாவிலுள்ள பாலம்."

இதே சமயத்தில் அரை மைல் தூரத்திற்கப்பால் கொத்தளங்களிலிருந்து செந்நிறமான தீ கிளம்பியது. புதிய மோட்டார் டையர்கள் இருக்கும் கிடங்குகளைக் கண்டு கொண்டுவிட்டார்கள்—இது பாலைவனத்தில் கிடைக்கக்கூடாத சாமான். அது பிரகாசமாய் இருந்தது. அப்படிக்கிருந்தும், அங்கு எதிரி யிருப்பதாக அடையாளம் தெரியவில்லை.

கடைசியாக பிரதானமன ரஸ்தாவின் வழியாக வெளிச்சமில்லாமல் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வேவு பார்ப்பவர்கள் வந்தார்கள். அருகிலுள்ளவர்கள் யாவரும் அவர்களை கைத்துப்பாக்கியால் சுட்டார்கள். ஆனால் அவர்கள் எப்படியோ தப்பி ஓடி விட்டார்கள். அவர்கள் தப்பினது உண்மையில் அதிர்ஷ்ட வசம்தான். ஏனெனில் அவர்கள் மூலம் நாம் அங்கு இறங்குவது எதிரிக்குத் தெரிந்து விட்டது. நாமும் எதிரி கண்டு கொள்ள வேண்டும் என்பதேயே விரும்பினோம். எதிரிகள் தூரத்திலிருந்து தீயைப் பார்த்து, வெடி குண்டுகளின் சப்தத்தைமட்டில் கேட்டால், நாம் ஆகாய எதிர்ப்புச் செய்வதாக எண்ணிவிடுவார்கள். ஆனால் இப்பொழுது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இந்நகரத்தை எதிரி பலமாகக் கைப்பற்றிருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள். உடனேயே நமக்கு பெரிய வெற்றிக் கிடைக்க சாதகமாயிருந்தது. மேல் அதிகாரிகள் எதை விரும்புனார்களோ, அப்படியே அவர்கள் செய்தார்கள். பலத்த டாங்கிப் படை ஒன்றை அனுப்பித்தார்கள்.

### ஒன்றை முயன்றோம், மற்றொன்று முடிந்தது.

நமது வேலை முடிந்தவுடன் கடற்கரைக்குச் சென்றோம். எதிரியின் பண்டகசாலையின் வெளிச்சம் வெளியில் பிரகாசித்தது. தீக்கள் ஆகாயமளவு வியாபித்தது.

சமுத்திரத்தில் தூரத்திலிருந்த படகுகள் இப்பொழுது கடற்கரைக்கு வந்தன. காற்றுக்கிளம்பியது, அலைகள் பலமாக கூழாங்கல் குவியல்கள் மண்மேடுகள் மீது மோத ஆரம்பித்தன. மாலுமிகளுக்கு அலைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. கரையை நோக்கிச்சென்ற ஒரு படகின் துடுப்புத் திரிகணி நங்கூரத்தில் உடைபட்டு மணலில் மேல் சிதறி விழும்படி நேர்ந்தது. பெட்ரோல் ஏற்றிச்செல்லும் படகை கையினால் எறியப்படும் வெடிகுண்டினால் அழிக்கப்பட்டது. அந்த சிறு குடாக் கடல் பூராவும் பெட்ரோல் எரிந்தது. அந்த வெளிச்சத்தில் மேலே இருந்த எந்த எதிரியும் எங்களைப்பார்ப்பது வெகு சுலபம்.

ஆனால் எதிரிகள் ஒருவரும் அங்கு வரவில்லை. ஆனால் இந்த படகுகளைச் செலுத்துவதில் ஏதாவது ஒரு சிரமம் ஏற்படும்படி சமுத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. படகுகளின் அடிபாகம் தட்டையாகவும் சரியான அமைப்பு இல்லாமலும் இருந்தது. என் படகு அங்கு மிங்கும் அசையமுடியாமல் அகப்பட்டுக் கொண்டுவிட்டது. அரைமணி நேரம் கடலில் நாங்கள் மிதந்தோம். மற்றபடகுகள் மீண்டும் கப்பலுக்குப் போய்ச் சேர்ந்து விட்டன. இருவர்கள் கம்பியை துப்பாக்கியில் சொருகும் கத்தியால் அறுத்து விட்டார்கள். பிறகு படகு நகர்ந்து கப்பல் பக்கம் வந்தது. ஒரு படகு மாத்திரம் வந்து சேரவில்லை. ஆனால் அது மறுநாள் டொப்ருக்குக்கு வந்து சேர்ந்துவிட்டது.

நாங்கள் திரும்பி கப்பலுக்கு வரும்பொழுது எதிரி வேவுபார்க்கும் விமானங்களிலிருந்து நகரத்தின் மேல் வெடிகுண்டுகள் வீசியதைப் பார்த்தோம். ஒரு நிமிஷமும் தவறாமல் போட்டதிட்டப்படி நடத்திவிட்டோம். ஆனால் இந்த வெற்றியில் ஒரு குறைவு மட்டும் இருந்தது. அது என்ன வென்றால் ஒரு படகில் சென்றவர்களை இழக்க நேரிட்டது. அவர்கள் தானாகவே படகுகள் கார்த்துக்கொண்டிருத கடற்கரைப் பக்கம் போய்விட்டார்கள். ஆனால் நாங்கள் எங்கள் லக்ஷியங்களைப் பூராவையும் பார்த்துத் தாக்கிவிட்டோம்.

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

### நவம்பர் 29—டிஸம்பர் 6, 1941.

### மௌனம் ஸர்வார்த்த சாதகம்.

"லிபியா யுத்தத்தைப்பற்றி விரிவான அறிக்கையை விடுவிக்க நான் விரும்பவில்லை" என்று லார்டு ஹாஹா ஜெர்மனியில் டிஸம்பர் 1-ல பேசினான்.

இதற்கு இரண்டு நாள் கிரமித்து வால்ட் மிட்லர் "பிரகிருத நிலை" என்பதைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

உடனே எல்லா ஜெர்மன் ஒலிபரப்பு நிலயங்கள் அரை மணி நேரம் வேலை செய்யாமல் மௌனம் சாதித்துவிட்டன.

### பழைய புளுகு; புதுத்தோற்றம்.

"வடக்கு ஆபிரிக்காவில் நேர்ந்த சேதத்தைப்பற்றி இந்தியர் மிகக்கவலை கொள்ளுகின்றனர். இந்தியர்கள் பயங்கரமான போர்முனையில் வைக்கப் பட்டனராம். பல இந்தியர் கைதிகளாக்கப்பட்டனர். யுத்தம் ஆரம்பமானவுடனே இந்தியரைக்கொண்டு, ஜெர்மன், இதாலி சைனியங்களை தடுக்கப்பார்ப்பதால் இந்தியர் அதிகம் சேதப்படுகின்றனர்." (ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, நவம்பர் 30.)

"வட ஆபிரிக்காவில் மற்ற போர்க்களங்களிலும் பல தேசத்தினரைக் கொண்டு பிரிடிஷ்காரர்கள் சண்டை செய்கின்றனர். கிரீஸில்.........இந்தியர்கள் பிரிடனுக்காக சண்டை செய்தனர். அடிக்கடி.........இந்தியர்கள் பிரிடிஷ்காரர்களுக்காக உயிர் கொடுத்திருக்கின்றனர்." (இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, டிஸம்பர் 5).

இந்தியர்களுக்கு ஜெர்மானியர் கொடுத்துள்ள மரியாதை ஒப்புக்கொள்ளப்படும். முன்னணியில் இந்தியர் சண்டை செய்வது ஒரு பெரும் விஷயம்தான். பிரிடிஷ்காரர்களுடன் சேர்ந்து இந்தியர்கள் எதிரிகளுடன் சண்டை செய்வதைப்பற்றி குவிண்டன் ரேனல்ட்ஸ் என்ற அமெரிக்கர் சொல்லியுள்ளார்.

ஆனால் அச்சுநாட்டினர் செய்யும் திருத்ருமப் பிரசாரத்திற்கு இடமில்லை.

லிபியாவில் 70 சதவிகிதம் இங்கிலீஷ்காரர்கள்தான் இருந்து சண்டை செய்வதாக மிஸ்ட்டர் பிரன்டன் பிராக்கன் என்ற சமாசார மந்திரி நவம்பர் 29-ல் சொன்னார். டாங்கி யுத்தத்தில் ஈடுபடுவதெல்லாம் இங்கிலீஷ்காரர்கள் தான்.

இருந்தாலும் சாம்ராஜ்யம் மொத்தத்தில் நேர்ந்த நஷ்டத்தை அக்டோபர் 18-ல் லார்டு கிராப்ட் என்பவர் சொல்லியுள்ளார். பிரிடிஷ்காரர்கள் 1,00,000, இந்தியர் 7,000, இதரர் 20,000 பேர்கள். லிபியா யுத்தத்தில் இன்னும் அதிகப்பட்டிருக்கும். ஆனால் பிரிடனும் மற்ற நாடுகளும் சேர்ந்து தான் சண்டை செய்கின்றனர்.

கிரீஸில் இந்தியரே ஈடுபடவில்லை.



### மத்தியக்கிழக்கில் மனஸ்தாபமும், உண்மையும்.

"இவ்வருஷத்தில் மெக்காவுக்கு ஜாஸ்தியான யாத்ரீகர்கள் போகவில்லை." (ஜெர்மன் பாஷையில் ஜெர்மன் செய்தி, டிஸம்பர் 2, 1941).

"இவ்வருஷம் மெக்காவுக்கு ஜாஸ்தியான யாத்ரீகர்கள் போகவில்லை." (ஹிந்துஸ்தானியில் இதாலிய செய்தி, டிஸம்பர் 2, 1941.)

11,500 ஹாஜி யாத்ரிகர்களுக்குப் போகவர வசதி இந்தியாவிலிருந்தே கொடுக்கப்பட்டது. முன் இரண்டு வருஷங்களைவிட இவ்வெண்ணிக்கை அதிகம். 3 பிரயாணக் கப்பல்கள் பத்திரமாக ஹெட்ஸாவில் வந்து சேர்ந்தன. பாலஸ்தீனத்திலிருந்தும் முன் வருஷங்களைவிட அதிகமான பேர்கள் வருகிறதாகத் தெரிகிறது. இதைப் பற்றி தப்பான அபிப்பிராயத்தை ஜெர்மானியர் தங்கள் சொந்த பாஷையில் உள்நாட்டினருக்கு மாத்திரம் சொன்னது சாமர்த்தியம்தான். ஆனால் இதாலியர் சும்பத்தனமாக ஹிந்துஸ்தான் பாஷையில் சொன்னார்கள். புளுகு வெட்டவெளிச்சமாயிற்று.

"இரானிலுள்ள ஏராளமான கோதுமையை பிரிடிஷார் பிடுங்கிக்கொண்டார்கள். இதனால் அவ்வூரில் அதிக அமைதிக்குறைவு ஏற்பட்டிருக்கிறது. இவ்விதமாக பிரிடிஷார் எங்கே சென்றாலும் அந்த நாடுகளுக்குப் பஞ்சம் தான்." (இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, டிஸம்பர் 3, 1941.)

இரானிலிருந்து எடுத்தது என்று சொல்வதிற்குப் பதிலாக, ருஷ்யாவிலிருந்தும் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலிருந்தும் இரானுக்குத்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. இவ்விதம் வந்தது 30 முதல் 40 டன்களிருக்கும். அங்கிருக்கும் ஷாவும் 1,25,000 பவுன் நன்கொடை அளித்து ஏழைகளுக்குக் கொடுக்கும்படி செய்திருக்கிறார். கோதுமை சாகுபடியை விருத்தி செய்யவும் ஏற்பாடாகி இருக்கிறது.

"இரண்டு மாதங்களுக்கு முன் இருந்த அரசாங்க காலத்தில் கோதுமை குறைவாக இருந்தது. இப்பொழுது கோதுமை அதிகமாக இருக்கிறது என்ற விஷயத்தை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை" என்று டிஸம்பர் 6-ல் இரான் பிரதம மந்திரி சொன்னார்.

## பிரஸீலைப் பற்றிய விஷயம்.

| | |
|---|---|
| "பரஸலுககு ஜெர்மானியரிடமிருந்து பயமே கிடையாது." (இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, டிஸம்பர் 2, 1941.) | "பிரஸீலில் ஒரு புது ஜெர்மனியை ஸ்தாபிப்போம்." ("ஹிட்லர் பேச்சு" 69-71 பக்கங்கள்.) |

## ரோஸ்டவ் அதிர்ச்சிகள்.

ரோஸ்டவ்வைப்பற்றி கோயபல்ஸின் பிரசாரமெல்லாம் மங்கிவிட்டது. ்வகு உத்ஸாகமாக வெகு நாளைக்கு முன்பே ரோஸ்டவ் பிடிபட்டதாக சொன்னான். ஆனால் இப்பொழுது பான்ஸர் படைகள் பின்வாங்குவதையும் வேறுவிதத்தால் மறைக்கப் பார்க்கிறான்.

நவம்பர் 22-ல் ரோஸ்டவ்வைப் பிடித்ததாக ஜெர்மானியர் சொன்னார்கள். அதற்கு 2 நாள் முன்னதாகவே அமெரிக்கர்களிடம் "இனி ருஷ்யர் எதிர்ப்பு பயன்படாது. ருஷ்ய அதிகாரிகளும் அக்கரையுடன் இருக்கமாட்டார்கள்" என்றும் சொன்னார்கள்.

நவம்பர் கடைசியில் ஜெர்மன் உள்நாட்டு ரேடியோவும் "ரோஸ்டவ் ஜெர்மானியர் வசமிருக்கிறது. இதனால் காகஸஸ்ஸுக்கும், மற்ற ருஷ்யப் பிரதேசத்திற்கும் ஒரு தடைதான்" என்று சொல்லிற்று. உண்மையில் நவம்பர் 19-ல் ஜெர்மன் உள்நாட்டு ரேடியோவும் தற்புகழ்ச்சியுடன் "ஆக்கிரமித்த ருஷ்யாவில் உள்நாட்டு அரசாங்கத்தை ஜெர்மனி ஆங்காங்கு ஸ்தாபிப்பதாக சொல்லுவதெல்லாம் எதிரிகள் செய்யும் வீண் பிரசாரம்தான். அங்கெல்லாம் சண்டைகள் இன்னும் நடக்கின்றன" என்றும் சொல்லிக்கொண்டது.

ரோஸ்டவ்விலிருந்து பின்வாங்கியதும் டாக்டர் கோயபல்ஸ், இன்னுய தாருமாருகப்பேச ஆரம்பித்தான். ஜெர்மன் அரசாங்க அறிக்கையை டிஸம்பர் 1ல ரேடியோவில் சொன்னார்கள்: "ஒழுங்கில்லாமல் ஜெர்மன் சைனியங்களுக்குப்பின் தாக்கும் ருஷ்யர்கள்பேரில் பழிக்குப்பழி வாங்கவேண்டியதுதான். ரோஸ்டவ்விலிருந்து சைனியம் பின்வாங்கியது."

அதே சமயத்தில் மற்ற நாடுகளுக்கும் ஜெர்மனி ஒரு எச்சரிக்கை செய்தது. "ரோஸ்டவ்வைப் பிடித்ததாக ருஷ்யர்கள் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் இது ஒரு பெரும் விஷயமாகாது."

ஜெர்மன் சைனியங்களைப் பின்னால் தாக்கும் அப்பட்டணத்திலுள்ளோரைப் பழிவாங்கவேண்டியதுதான். அங்கு சென்று அதிகாரத்தை ஸ்தாபித்த சைனியத்தை அவர்கள் பின்புறமாகத் தாக்குகின்றனர். இப்பட்டணத்திலிருந்து கொண்டு சமீபக்கிழக்கு நாடுகளைத் தாக்க பிரிடிஷாருக்கு உதவுவதாக ருஷ்யர்கள்



நினைப்பது தவறாகும்." (இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, டிஸம்பர் 3, 1941). பலவிதமாக ஜெர்மானியர் சொல்லுவதில் பூர்த்தியாக ஒரு அம்சமும் காணப்படவில்லை.

## 1940-ல் ஜெர்மன் பிரசாரத்தின் ஆசைகள்.

### இங்கிலாந்து.

"பிரிடிஷ் கப்பற்படை வடகடலில் காணப்படவில்லை, மத்தியதரைக் கடலில் சக்தியற்றதாக இருக்கிறது. தூரக்கிழக்கில் இல்லவேயில்லை, அட்லாண்டிக்கைவிட்டு விரட்டப்பட்டது." (ஜெர்மன் ஒலிபரப்பு, டிஸம்பர் 2, 1940).

"1941 மார்ச்சு, ஏப்ரலில் உணவு ஸப்ளைகள் கொண்டுவர பிரிடனுக்கு கப்பல்களே இருக்காது." (ஜெர்மன் உள்நாட்டு ரேடியோ, நவம்பர் 30, 1940.)

"பிரிடன், அமெரிக்காவின் உதவியை நாடுவது, ஜலத்தில் மூழ்கிறவன் வைக்கோலைப் பிடித்துத் தப்ப நினைப்பது போலாகும்." (அமெரிக்காவிற்கு ஜீஸன் ஒலிபரப்பு, நவம்பர் 30, 1940).

"இங்கிலாந்தின் அதிர்ஷ்டம் கணக்காக முடிவடைந்தது." (ஸெக்கோஸ்லாவாகியாவிற்கு ஜெர்மன் செய்தி, நவம்பர் 30, 1940.)

"1940-ம் வருஷம் உலக சரித்திரத்திலேயே ஒரு முக்கிய வருஷம். அதன் முடிவு வெற்றியைக் கொடுக்கிறது." (ஜீஸன் ஒலிபரப்பு, டிஸம்பர் 6, 1940.)

## 1941-ல் ஜெர்மன் பிரசாரத்தின் மறைவு.

### ஜெர்மனி.

"கம்பளி வியாபாரம் தடுக்கப்பட்டது. எல்லாம் சைனிய உதவிக்காக உபயோகிக்கப்படுகிறது." (ஜெர்மன் உள்நாட்டு ரேடியோ, நவம்பர் 1941).

"போலிச்சரக்குகளின் குணங்களை ஐரோப்பா கவனிக்கவேண்டும். தன் நாட்டில் உண்டாகும் பொருள்களைக்கொண்டுதான் அந்தந்த நாடு ஜீவிக்க வேண்டும். (பெல்ஜியத்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு, நவம்பர் 28, 1941.)

"நாகரீகத்தைப் பாதுகாக்க மாத்திரம் ருஷ்ய யுத்தம் ஆரம்பிக்கப்படவில்லை. ஐரோப்பிய நாடுகளுக்கு விளைபொருள்களைச் சம்பாதித்துக்கொடுக்கவும்தான்." (பெல்ஜியத்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு, அக்டோபர் 27, 1941).

"மரப் புகையைக்கொண்டு ஓட்ட முடிந்தால்தான் லாரிகள் செய்ய முடியும்." (ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு, நவம்பர் 12, 1941).

"..........ஸ்லோவாகியாவின் சுரங்கங்களில் நிலக்கரி உற்பத்தி 3½ சத விகிதம்தான் அதிகப்பட்டிருக்கிறது." (நெதர்லாந்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு, நவம்பர் 28, 1941).

"ஐரோப்பாவிற்குத் தேவையான விளைபொருள்களையும், உணவையும் ஆபிரிக்காவே ஸப்ளை செய்யும்." (நாஜிக்குட்பட்ட பாரிஸ் ரேடியோ, ஜுலை 1941).

---



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

## பிரஸங்கம் 75-ன் திருத்தப்பட்டவும், கிறிஸ்துமஸ் விசேஷ நிகழ்ச்சி முறையும்.

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| 1941— | | | | |
| டிஸம்பர் ... | 20, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை 6.30 |
| | | கொன்னையூர் | ... | ,, 6.00 |
| | 21, ஞாயிற்றுக்கிழமை | ராயவரம் | ... | காலை 10.00 |
| | | பொன்னமராவதி | ... | மாலை 6.00 |
| | 22, திங்கட்கிழமை ... | பனையப்பட்டி | ... | காலை 10.00 |
| | | வேந்தம்பட்டி | ... | மாலை 6.00 |
| | 23, செவ்வாய்க்கிழமை | கோனுபட்டு | ... | ,, 6.00 |
| | 26, வெள்ளிக்கிழமை... | குழிபிறை | ... | ,, 6.00 |
| | 27, சனிக்கிழமை ... | விராச்சிலை | ... | ,, 6.00 |
| | 28, ஞாயிற்றுக்கிழமை | மேல வேகுபட்டி | ... | ,, 6.00 |
| | 29, திங்கட்கிழமை .. | நச்சாந்துபட்டி | ... | ,, 6.00 |
| | 30, செவ்வாய்க்கிழமை | அரிமளம் | ... | ,, 6.00 |
| | 31, புதன்கிழமை ... | ராமச்சந்திரபுரம். | ... | ,, 6.00 |
| 1942— | | | | |
| ஜனவரி ... | 2, வெள்ளிக்கிழமை... | ராங்கியம் | ... | ,, 6.00 |

## டவுன் பிரஸங்கங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1941— | | | | |
| டிஸம்பர் ... | 23, செவ்வாய்க்கிழமை. | புதுக்கோட்டை. சாந்தார்கோவில் ஸ்வாமி சன்னதி. | | மாலை 5.00 |
| | 26, வெள்ளிக்கிழமை... | முனிசிபல் ஆபீஸ் | ... | ,, 5.00 |
| | 27, சனிக்கிழமை ... | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | ,, 5.00 |
| | 28, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் | ... | ,, 5.00 |
| | 29, திங்கட்கிழமை ... | சேரி | ... | ,, 5.00 |

# ஒவ்வொருவரும்

யுத்தத்தில் நேசதேசங்களின் வெற்றியை

விரும்புகிறார்கள்

மேலும்

# ஒவ்வொருவரும்

நல்ல பாகெட் டயரியையும்

விரும்புகிறார்கள்

ஆகவே ஒவ்வொருவரும் வெற்றி சின்னத்தோடு பிரசுரிக்கப்படும்

**1942-ம் 'வி' டயரி**

வருஷத்திய புஸ்தகத்தை

வாங்கவேண்டும்

இது குறிப்புப் புஸ்தகமுமாகும்

விலை :—ரூ. 1—4—0, 1—8—0, 2—0—0.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் ஆபீஸிலும், ஸ்டேட் பிரஸிலும் கிடைக்கும்.

---

நிகர் லாபம் பூராவும் யுத்த நிதியைச் சேரும்.


Sri Brihadamba State Press, Pudukkottai 3,000—20 [illegible] 41


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஜனவரி ௴ 3௳ [ந. 76


பிரஸங்கம் LXXVI.

## காலத்தின் கோலம்.

---

சமீபத்தில் ஒரு பிரசித்திபெற்ற பாதிரியார் தனது ஜனங்களுக்கு, கிறிஸ்து பிறந்த தினக்கொண்டாட்ட சந்தர்பத்திலும், புது வருஷ ஆரம்பத்தை முன்னிட்டும் சந்தோஷமான வாழ்த்துக்களைச் செய்தார். அவர் அப்படி செய்தபொழுது பொதுவாக எப்பொழுதும் சொல்லுவதுபோல் முடிந்தவரை சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. பிரகிருத நிலையில் கிறிஸ்து பிறந்த தினம்தான் ஒரு மகிழ்ச்சியளிக்கும் தினமென்றாவது அபிப்பிராயப்படவில்லை. ஆனால் தற்போதய நிலையே உத்ஸாகத்தை அளிக்கிறதாக இருக்கிறதென்று தெரிவித்தார். இவ்விதம் சொல்லுவது வீண் ஏமாற்றமாகாது. அவர் மிகவும் அனுபவம் வாய்ந்து ஜனங்களுக்கு கவர்ச்சி உண்டுபண்ணக்கூடிய பாதிரியார். மேலும் உலக வியவகாரங்களிலும் முகான்மையானவர். நாம் முந்திய அறிக்கையில் சொல்லியபடி முன் இரண்டு வருஷங்களைக் காட்டிலும், இந்த வருஷம் அதிக திருப்தி உண்டுபண்ணக்கூடியதாயும், உறுதிப்பாடு ஏற்படக்கூடியதாயும் இருக்கிறதாகவே அவர் கருதியிருக்கிறார். ஆனால் அடுத்து வரும் வருஷ முடிவில் அதிகமான அமைதி ஏற்படலாமென்றும் தெரிவித்திருக்கிறார். அப்படி சமாதானம் ஏற்பட்டால் நிச்சயமாக ஜெர்மனி வெற்றிபெற்று முகான்மையாக இருந்து சமாதான திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர முடியாது.

அவர் இவ்வித முடிவுக்கு வந்ததிற்கு மூலகாரணங்களை விசாரிப்பதில் பிரயோஜனமில்லை. அவர் சொன்னது பூராவும் தவறாக இருக்கலாம். ஆனால் முடிவான வெற்றியடைவதற்கு, முன் இரண்டு வருஷங்களில் இருந்த சந்தர்பத்தைக் காட்டிலும், இப்பொழுது அதிகமான உறுதியளிக்கக்கூடியதாக இருப்பதால் அவர் சொல்லும் உத்தேசம் சரியென்றே வைத்துக்கொள்ளலாம். எப்பொழுதும் நாம் நினைத்தபடி மற்றொருவனும் நினைத்து இரண்டு அபிப்பிராயங்களும் நடப்புக்கு சரியாக இருந்தால் அதுதானே கெட்டிக்காரத் தனத்திற்கு ஒரு அடையாளம். ஆகவே இப்பாதிரியாரையும் கெட்டிக்காரர் என்றே வைத்துக் கொள்ளலாம்.

உதாரணமாக, அக்கரைச்சீமைகளான மலேயா, பர்மா நாடுகளிலிருந்து வரும் தகவல்களை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் புதுக்கோட்டை ஸமஸ்தான வாஸிகளுக்கு, நிலை திருப்திகரமாக இருக்கிறதென்று சொல்லுவத கான காரணங்களை பரிசீலனை செய்வோம். தெற்கு சீனக்கடலிலும், அங்குள்ள தீவுகளிலும் ஜப்பானியப் படைகள் பிரவேசித்து விமான தளங்களை ஆக்கி மித்துக்கொண்டு, அமெரிக்கர்களுக்குச் சொந்தமான நாடுகளில், சி பிடிக்கப்பட்டு, ஹாங்காங் எதிரி வசமாகி, சிங்கப்பூர், ரெங்கூனில் குண்டு வீச்சு அதிகம் ஏற்பட்டிருப்பதாக எல்லாம் தகவல் வருகிறதென்பது உண்மைதான்.

ஆனாலும் இந்நிலையில் நமக்கு தைரியமளிக்கும் அம்சங்களைப் பார்ப்போம் இப்பொழுது வெற்றிகரமாக ஆதிக்கமடைந்துவரும் ஜப்பானையும், ஜப்பானுக்கு உபதேசமளித்துவரும் ஜெர்மனி, 1940-ம் வருஷம் மே மாதத்தில் உலகங்களை யெல்லாம் ஆக்கிரமிக்கக்கூடிய நிலையிலிருந்ததையும் ஒப்பிட்டுப் பார்ப்போம் அச்சமயத்தில் டங்கர்க்கை நாம் காலிசெய்து, பிரான்ஸும் எதிரிவசமான தா பிரமாதமான பலம் பெற்ற ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்திலிருந்து 21 மைலுக்கு அப்பாலுள்ள பிரான்ஸில் தளங்களை ஸ்தாபித்துக்கொண்டு பின்னால் ஜெர்மன் படைகளுக்கு போக்குவரவுகளை ஸ்தாபித்துக்கொண்டு மேலும் மேலும் வந்ததாலும் பிரிடனே ஜெர்மனி வசமாகிவிடுமென்று காணப்பட்டது ஆனால் அப்படி ஒன்றும் நேரவில்லை. பிரிடன் முடிவான வெற்றியடைவதற் காகவே அதிலிருந்தெல்லாம் தப்பிவிட்டது.

ஜப்பானுடைய கப்பற் தளங்களுக்கும் விமான தளங்களுக்கும் சிங்கப்பூர் டச்சுக்கிழக்கு இந்தியத் தீவுகள் முதலியவைகளுக்கும் 3,000 மைல் தூரம் இருக்கிறதை ஜப்பான் உணர வேண்டும். மேலும் இதற்கப்பால் இந்தியாவிற்கு வருவதானாலும் 800 மைல் கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாக அடர்ந்த காடுகளைக் கடக்கவும் நேரிடும்.

ஜப்பானைக் காட்டிலும் அதிக பலம் பெற்ற ஜெர்மனி அச்சமயம் பிரசார மூலம் பிரிடனில் பயத்தை விளைவித்து, உலகத்தாருக்கும், தான் பிரிடனைப் பிடித்து விட்டதாகக் காண்பிக்க பெரும் முயற்சி செய்தது.

அச்சமயத்தில் மிஸ்ட்டர் சர்ச்சில் 1940-ம்ஹு ஜுன் மாதம் கூறிய அரிய சொற்கள்யாவரையும் தைரியப்படுத்தின: "ஏமாற்றமடையாத மனதுடன், வரும் ஆபத்துக்களைக் கவனிக்கும்பொழுது, சாவதானமாகவும் முயற்சியுடனும் இருந்தால் போதுமென்றுதான் கருதுகிறேன். கவலைப்பட்டு பயந்து சிதறிப் போவதற்கான சந்தர்பமே இல்லை" என்றுதான் அவர் கூறினர். பர்மியர்களை யும், இந்தியர்களையும் ஜப்பான்; ஜெர்மன் பிரசாரங்கள் பயமுறுத்திவரும் இச்சம யத்தில் சர்ச்சில் சொன்னபடி நடந்துகொள்ளுவதுதான் உசிதம். ' முக்கியமாக அக்கரைச் சீமைகளில் வியாபாரம் நடத்திவரும் இச்சமஸ்தான வாசிகளுக் கிடையே ஏற்படும் பீதியை நீக்கி தைரியமளிக்க இச்சமஸ்தானத்தில் இன்னும் அதிகமான சாவதானமும் முயற்சியும் ஏற்படவேண்டும்! வேறொரு இடத்தில் பெரும் பூகம்பம் ஏற்பட்டு அதனால் ஏற்படும் பெரும் கெடுதிகளைக் கவனியாது எப்படி தனக்கு ஏற்பட்டிருக்கும் பல் வலியைத்தான் ஒருவன் அதிகம் கவனிப் பானோ அதைப்போல் ருஷ்ய—ஜெர்மன் யுத்தம் பிரமாதமாக நடக்கும்போது, ஜப்பானிய சண்டை இந்தியாவிற்கு அருகில் நடப்பதால் நமக்கு அது பெரிதாகக் காணப்படுகிறது. ஆகவே இந்த பஸிபிக் சண்டையை மாத்திரம் கவனிக்காமல் மற்ற பாகங்களிலும் எப்படி சண்டை நடந்துவருகிறதென்பதை கவனிப்பதுதான் சாவதானமாகும்.

மேலும் யுத்தம் ஆரம்பித்ததுமுதல் இப்பொழுது நாம் சந்தோஷமாயும் தைரியமாயும் இருப்பதற்கு உண்மையாகவே சில காரணங்கள் இருக்கின்றன. நேசதேசங்கள் சிற்சில சமயங்களில் சில தவறுதல்கள் செய்து அதனால் சில



கெடுதிகளும் நேர்ந்திருக்கலாம். ஆனால் அவைகளால் அதிக மாறுபாடுகள் ஏற்பட்டு விடவில்லை. எதிரிகள் செய்த பிழைகளால் அவர்களுக்குத்தான் கெடுதிகள் விளைந்திருக்கின்றன. உதாரணமாக 1939-ம் வருஷத்தில் ஜனநாயக நாடுகள் யுத்தத்திற்குத் தயாராயில்லாதபொழுது அச்சுநாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந் திருந்தால் என்னநேர்ந்திருக்கும் என்று யோசித்துப்பாருங்கள். இப்பொழுது நேசநாடுகளான அமெரிக்கா, பிரிடன், சைனு, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் எல்லாம் ஒற்றுமையுடன் இருந்துவருகின்றன. ஸர்வ தேச சட்டங்களை மீறிக் கொண்டு கொள்ளையடிக்கும் நாடுகளாக ஆகவில்லை. மேலும் ஸ்காண்டிநேவியா, மத்திய ஐரோப்பா, பிரான்ஸ், யாவும் ஜெர்மனி வசமான சமயத்திலும், ருஷ்யா வுடன் உடன்படிக்கை செய்துகொண்டு சண்டையில்லாதபொழுதும், அமெரிக் காவில் தேர்தல் சண்டைகளும், தனிப்பட்ட கக்ஷியினரின் ஆதிக்கம் இருந்த சமயத்திலும் ஜெர்மனி, இதாலி, ஜப்பான் மூன்றும் ஒன்றுசேர்ந்து பிரிடன் படையெடுப்பைத் துவக்கியிருந்தால் அதிகத்தீங்கு விளைந்திருக்கும். ஸ்பெயின், மத்தியதரைக்கடலில் இதாலி பலம் பெற்றிருக்கும். யுத்த ஸந்நத்தமாயில்லாத சிங்கப்பூரை ஜப்பான் பிடித்து பஸிபிக்கின் மேற்கே ஜப்பான் ஆதிக்கம் பெற்றிருக் கும். ஜனநாயகமே அழிந்திருக்கும்.

ஆனால் அப்படியெல்லாம் நேரவில்லை. 1940 வருஷத்தில் கோடைகால ஆரம்பத் தில் ஹிட்லர் பிரான்ஸின்மேல் ஒரு ஆசையால் அதைப்பிடித்துக்கொண்டு பிரிடன் படையெடுப்பை பின்னடி பார்த்துக்கொள்ளுவோம் என்றான். அந்த சமயத்தில் பிரிடன் தயாரில்லை என்பது உண்மைதான். பிறகு ஏற்பட்ட மூன்றுமாத அவகாசத்தில் அதிகமான முஸ்தீப்பு தயாரித்துக்கொள்ள பிரிடனுக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பிரிடிஷ் விமானப்படை புதுவிதமாக பலப்படுத்தப்பட்டது. உடனே ஹிட்லர் மிகக்கடுமையானதும், தனக்கு சேதம் விளைவித்ததுமான ருஷ்ய யுத்தத்தை ஹிட்லர் ஆரம்பித்தான். இதற்குள்ளாக ஹிட்லர் நடத்திவந்த அட்லாண்டிக் யுத்தமும் அவனுக்கு பாதகமாகிவிட்டது. இதாலிக்குச் சொந்த மான பெரும் கப்பற்படையும் அழிக்கப்பட்டு இதன் சாம்ராஜ்யமும் பிரிடன் வசமாகிவிட்டது. இதுவும் ஹிட்லருக்கு பாதகம்தான். இப்பொழுது ஜப்பான் சண்டை துவக்கிவிட்டது. இதுவரை இரண்டு வருஷகாலமாக சண்டையில் ஈடுபடுத்தாமல் வைத்திருந்த அமெரிக்காவை அச்சுநாடுகளுக்கு எதிராக சண்டை செய்யும்படி செய்தாய்விட்டது. இது நேச நாடுகளுக்கு ஒரு பெரிய அனுகூலம்.

ஆகையால்தான் நாம் தைரியமாக இருக்கவேண்டுமென்கிறோம். நீங்களும் சுருசுருப்பாக இருந்து அக்கம் பக்கங்களில் தைரியத்தை போதிக்கவேண்டும். உலகின் ஐந்தில் நாலு பங்கு அச்சு நாடுகளுக்கு எதிராக இருப்பதால் பயமும் கவலையும் நமக்குவேண்டியதில்லை. யுத்தம் இன்னும் நீடித்து நடக்கலாம். தியாகங் களும் அதிகம் செய்யவேண்டியிருக்கலாம். ஆனால் நமக்கு முடிவான வெற்றி என்பது மாத்திரம் நிச்சயம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 19—12—41-லிருந்து 31—12—41-வரை.

**1942.**—நமது வாசகர்களுக்கு புது வருஷம் சந்தோஷத்தை அளிக்க வேண்டுமென்று நினைக்கிறோம். இவ்வருஷத்தில் நாஸிக்கொள்கையின் கெட்ட வலுவு ஒழிக்கப்பட்டு முடிவான வெற்றி கிடைக்கவேண்டுமென்றும் பிரார்த் திக்கிறோம். இது வீண் எண்ணமில்லை. நிச்சயமான நம்பிக்கைதான். நடந்த விஷயங்களைப் பரிசீலனை செய்தே நாம் இந்த விதம் சொல்லுகிறோம். 1940-ல் பிரான்ஸ் விழுந்ததும் நாம் தனியே இருந்தோம். மேலும் மேலும் வெற்றி

பெற்று வந்த எதிரியை எதிர்பதற்குத் தயாரான பலமும் இல்லை. இருந்தாலும் பிரிடிஷ் மக்களின் மனோவலிவாலும் வீரர்களின் தீரச்செயல்களாலும் பிரிடன் மேரில் எதிரி செய்த படையெடுப்பு பலிக்காமல் நமக்கு வெற்றி வருவதற்கான சின்னங்கள் காணப்பட்டன. இங்கிலீஷ் கால்வாய்க்கு எதிரில் அலரிக்கொண்டு எதிரி ஓடிவிட்டான். இதுதான் யுத்தத்தின் போக்கை மாற்றியது.

1941-ம் வருஷம் முன்வருஷத்தைவிட அதிக நம்பிக்கையை உண்டுபண்ணிற்று. ஜனவரி மாதத்தில் லிபியா ஜயிக்கப்பட்டு, இதாலி கடலிலும் விமானங்களிலும் அவமானமடைந்தது. பிப்ரவரியில் கிரீஸிலும் லிபியாவிலும் ஜெர்மனி குறுக்கு எதிர்ப்புகளைச் செய்தது. மே மாதத்தில் அபிஸீனியா ஜயிக்கப்பட்டு இதாலிய சாம்ராஜ்யம் அழிந்தது. இராக், ஸிரியா நாடுகளில் அமைதி ஸ்தாபிக்கப்பட்டது. ஜூனில் ருஷ்யாவும் நேசநாடுகளுடன் சேர்ந்தது. ஆகஸ்டில் அட்லாண்டிக் சாஸனமும், இரான் ஆக்கிரமணமும் ஏற்பட்டன. நவம்பரில் மறுபடி லிபியா யுத்தம் ஆரம்பமாகி இப்பொழுது வெற்றிகரமாக முடிவடைந்திருகிறது. டிஸம்பரில் அமெரிக்கா யுத்தத்தில் சேர்ந்தது.

ஆகவே 1941-ம் வருஷம் நேசநாடுகளுக்கு மேன்மை வலுப் பெற்றேயிருந்தது. நாம் இனி தனியாக இல்லை. ருஷ்யாவின் இருப்பு பலத்துடனும், அமெரிக்காவின் ஏராளத்தொழில் உதவியுடனும் இருக்கிறோம். மற்ற நாடுகளின் உதவியும் இருக்கிறது. அந்தரங்கமான வெற்றியென்பது கிடைத்துவிட்டது. இனி இவ்வுலகம் நாஸிகள்தான் பலமானவர்கள் என்று நினைக்காது. எங்கும் இதாலி துரத்தப்பட்டது. 1000 மைல் நீளமுள்ள ருஷ்யப் போர்முனையிலும் லிபியா யுத்தத்திலும் ஜெர்மனி உதை வாங்கி வருகிறது. அட்லாண்டிக் யுத்தம் சாதகமாகிவிட்டது. மத்தியதரைக்கடலில் அச்சு நாட்டு ஸப்ளைகளும் சைனியங்களும் மூழ்கடிக்கப்படுகின்றன. நார்வேக் கடற்கரையிலும் பிரிடிஷ் சைனியம் இறங்குகின்றன. ஜெர்மனியின் உயிர் நிலை ஸ்தானங்களை பிரிடிஷ் விமானப்படை தாக்கி வருகின்றன. இவை யாவும் ஒரு சாதகம் தான். இதை எல்லாம் ஆலோசித்துத்தான் ஹெர் ஹெஸ் ஓடி ஸ்காத்லாந்தில் இறங்கினான்.

மேலும் 1942-ல் நமக்கு வெற்றிகிடைக்குமென்பதற்கு சந்தேகமே இல்லை. முடிவான வெற்றி பெறுவதற்கு கொஞ்சம் சிரமமேற்படலாமே தவிர வெற்றி நிச்சயம். பிரதம மந்திரி சொல்லும் விதமாக காரியத்தில் நன்கு ஈடுபடுவோம், கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் சரியாகவே எதிர்பார்ப்போம். தைரியமாயும் நம்பிக்கையுடனும் இருப்போம்.

**ருஷ்யா.**—ருஷ்யப் போர்முனையில் ஜெர்மனி பின்வாங்கி ஓடுவதற்கு அவர்கள் சொல்லும் காரணம் பல்பமானவை. "சைனியங்களை ஒருங்குபடுத்துவதாகவோ மாரிகாலத்திற்காக சைனியங்களைத் திடீரென்று பின்வாங்குவதாகவோ அவர்கள் சொல்லுவது பொய். ருஷ்ய எதிர்ப்பு பொறுக்கமாட்டாமல் ஓடுகிறார்கள். கார்கவ், ரூஸா, டரூஸா, கலினின், வாலகலம்ஸ்க், பட்கோட்ஷ், க்ருஜினே, ரோபில்னு, வால்கால், யைலெவ், நாரோபோமின்ஸ்க், ஓஸ்கயே, கலூகா, லிக்வின், விஸோகினிஷி, நோவோஸில், டிமி, கொர்ச், பியோடோஸியா ஒன்றன்பின் ஒன்றாக பிடிபட்டு எதிரி பனிப்பாங்கான பொட்டல்வெளிகளுக்குத் துரத்தப்பட்டான். லெனின்கிராட், மாஸ்கோ இப்பொழுது முற்றுகையிலில்லை. கெர்ச்சை ருஷ்யர் பிடித்தனர். தாங்களாகவே நாஸிகள் கெர்ச்சை விட்டுவிட்டு செல்லவில்லை. காகஸஸ்ஸின் முகத்துவாரத்தில் இருக்கும் இந்நகரை தாங்களாக ஒருநாளும் விட்டுச்செல்லமாட்டார்கள்.

ருஷ்யாவில் நாஸிகள் அடைந்துவரும் தோல்விகளை ஹிட்லர் மூட ஏற்பாடு செய்கிறான். முஸோலினி செய்வதுபோல ஹிட்லரும் தளகர்த்தர்களை மாற்றி



வருகிறான். பிராஷிட்ஷ், பாக், ருண்ட்ஸ்டெட் யாவரும் மாற்றப்பட்டனர். தானாக தலைமை வகித்து ஜெர்மன் மக்களுக்கு திருப்தியளிக்கப் பார்க்கிறான். சாதாரண ஆளான இவன் ஒருநாளும் பிரயோஜனப்படமாட்டான். சரித்திரத்திலேயே இரண்டாம் தடவையாக மாஸ்கோ குளிர் தாங்கமாட்டாமல் பின்வாங்கி ஓடும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. முன்பு நெபோலியன் மாஸ்கோவரை சென்றான். இவன் மாஸ்கோவையே சேர்ந்தபாடில்லை. ருஷ்யக் குளிரும் பூராவாக வந்தபாடில்லை. ஆனால் முன் நெபோலியன் ஸெயிண்ட் ஹெலினாவில் அடைபட்டமாதிரி இப்பொழுது ஹிட்லரின் கதி மாத்திரம் பாக்கிசொல்ல வேண்டியதாக இருக்கிறது.

அது எப்படியானாலும் ஜெர்மானியருக்கு மாரிகாலத்தில் ஓய்வு ஏற்படவில்லை. இனியும் வஸந்த காலத்திலும் நேராது. கிழக்குப் போர்முனையில் ருஷ்யர்கள் பலம் பெற்றிருப்பதாக இப்பொழுதே கோயபல்ஸ் பிரசாரம் நடத்தி வருகிறான். இப்பொழுதுதான் இதைக் கண்டுபிடித்திருக்கிறான். பிரிடனும், அமெரிக்காவும் இருந்து உதவியும் செய்துவருகின்றன.

**லிபியா.**—ஜெனரல் ஸ்மட்ஸ் சொல்லும்விதமாக பெங்காஸியைப் பிடித்து "கிருஸ்துமஸ் கொண்டாட்ட பரிசுகளை" ஆச்சின்லக் கொடுத்திருக்கிறார். இந்த வெற்றியுடன் 1941-ம் வருஷம் முடிவடைந்தது. இவ்வாரத்தில் ஸிரினு, அகாலா, டெர்னு, மெஷாலி, அபோலோமியா, பெனினு. பர்கா ஒவ்வொன்றாக பிடிபட்டு பெங்காஸியும் வசமாகி ஸிரெனைகா பூரா பிரிடிஷ் ஆதிக்கத்திற்கு உட்பட்டுவிட்டது. ஜெடபாயாவிற்கு வடக்கே அடைபட்டுள்ள இதாலிய சைனியம் ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை. ரோமலின் கீழ் உள்ள அச்சுநாட்டு சைனியம் ஜெடபாயா மலைகளுக்கும், கடலுக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதைக் கழட்டிக்கொண்டு போகவும்முடியாது. சண்டை செய்யவும் முடியாது.

**தூரக்கிழக்கு.**—இந்த பாகத்தில் திடீரென்று எதிரி தாக்குதல் இன்னும் தணியவில்லை. 16 நாட்கள் மும்மரமாக எதிர்த்து நின்று ஹாங்காங் கௌரவநிலையில் எதிரி வசமாகிவிட்டது. ஆகாரம் தண்ணீர் குறைந்ததால் தான் மேலும் எதிர்த்து நிற்க முடியவில்லை. **மலேயாவில்** பினுங்கும் ஈபோவும் காலி செய்யப்பட்டன. சிங்கப்பூரில் ராணுவச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. குவான்டன் பிரதேசத்தில் எதிரி அதிகமாகத் தாக்கிவருகிறான். ரெங்கூனும் விமானமூலம் தாக்கப்பட்டது.

**பிலிப்பைன்ஸில்** வடக்கு, தெற்கு, லிங்கயம், மின்டானோ, ஆண்டிமோனன் பாகங்களில் எதிரி ஏராளமாக இறங்கி இருக்கிறான். மணிலாவும் தற்காப்பு இல்லாத நகரமான பிறகும் காட்டுமிராண்டித்தனமாக எதிரிகளால் விமானப் படையெடுப்பு செய்யப்பட்டது. லிங்கயத்திலிருந்து அமெரிக்கப் படைகள் மணிலாவிற்கு 35 மைல் தூரத்திலுள்ள ஸான் பாப்லோ என்ற இடத்திற்குப் போயிருக்கின்றன.

வேக் தீவுகளிலும் எதிரி பிரவேசித்திருக்கிறான். டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளில் ஸெண்டா என்ற இடம் தாக்கப்பட்டு மேடன் (ஸுமத்ரா) விமானப் மூலம் தாக்கப்பட்டு கூசிங் (ஸராவாக்)கிலும் எதிரி பிரவேசித்திருக்கிறான் கலிபோர்னியா, அலாஸ்காவிற்கு சமீபத்தில் ஜப்பானியக் கப்பல்கள் காணப்பட்டன. (சைனாவிலுள்ள) வட ஹூனனிலும் ஜப்பானியர் தாக்கிச் செல்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நேசதேசப் படைகளும் சும்மாயில்லை. ஸுங்கிரி படானி என்ற எதிரி விமான தளம் பிரிடிஷ் விமானங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டது. கௌலூன் முனையில் சீனப் படைகள் எதிரிமேல் குறுக்கு எதிர்ப்பு செய்கின்றன. டச்சு கப்பற்படை மிகவும் சாதகமான உதவி செய்து, ஒரு சஞ்சாரி, 2 நாசகாரிகள்

ஒரு எண்ணெய் டாங்கி, 4 துருப்பேற்றிய கப்பல்கள், 3 சிறு கப்பல்கள், 4 ஸப்ளைக் கப்பல்கள், 1 கப்பல் ஆக 16 ஜப்பானிய கப்பல்களை அமுக்கியிருக்கின்றன. அமெரிக்க உதவி துரிதமாக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி ரூஸ்வெல்டு பிலிப்பைன்ஸ் வாசிகளுக்கு கீழ்க் கண்ட தேர்தலான மொழிகளை அனுப்பியிருக்கிறார்:—

"பிலிப்பைன்ஸ் வாசிகளின் ஸ்வதந்திரம் திரும்ப ஸ்தாபிக்கப்பட்டு காப்பாற்றப்படும். அமெரிக்காவின் மனித உதவி, சாமான் உதவி பூராவும் சித்தமாக இருக்கிறது. அமெரிக்கா, பிரிடன், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், சீன ஜனநாயகம் யாவும் ஜப்பானைத் தோற்கடிக்க ஏற்பாடு செய்துவருகின்றன.

மற்ற வேலைகளோடு பர்மா தற்காப்பையும் ஜெனரல் வேவல் எடுத்துக் கொண்டிருக்கிறார். தூரக் கிழக்கு அதிகாரத்தை ஸர் ராபர்ட் புரூக் பாபம், ஸர் ஹென்ரி ராயல்ஸ் பௌமல் இடமிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறார். சிங்கப்பூரின் தலைமை மந்திரியாக மிஸ்டர் டப்கூபர் நியமிக்கப்பட்டிருக்கிறார். சுங்கிங்கில் ஜெனரல் வேவல் மூன்று நாட்கள் ஜெனரல் சயாங்கைஷெக், அமெரிக்க விமானப்படை தலைவருடன் கூடிப்பேசினார்.

**போர்ச்சுகீஸ் டிமோர்.**—இதற்கு முன் ஐஸ்லாந்தை அமெரிக்கர் ஆக்கிரமித்த மாதிரி ராணுவ நிலையை முன்னிட்டு டிமோரை இங்கிலீஷ்காரர்கள் வியாபித்துக் கொண்டிருக்கின்றனர். இது பஸிபிக்கில் பாதி டச்சுக்காரர்களுக்கும், பாதி போர்ச்சுகீஸ்காரர்களுக்கும் சொந்தமானது. மிகவும் அபாய நிலையிலிருக்கிறது. அதன் பிரதான நகரமான டெலியில் ஒரு நல்ல துறைமுகமும் விமான தளமும் இருக்கிறது. அக்டோபரில் ஜப்பானுடன் போர்ச்சுகல் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு ஜப்பானுடைய விமானப் போக்குவரவை பாலனி (ஜப்பானுக்கு உட்பட்டது) லிருந்து டெலிக்கு அனுமதித்தது. இப்படிச் செய்தது ஆஸ்திரேலியாவிற்கும், டச்சுக் கிழக்கிந்தியத்தீவுகளுக்கும் ஆபத்தானதால் இதை வியாபிப்பதென பிரிடிஷ் அரசாங்கம் தீர்மானித்தது. போர்ச்சுகல் எதிர்க்கவில்லை.

**சிறு விஷயத்திற்கு பெரு அமளி.**—பிரகிருதத்தில் ஆங்கில அமெரிக்க நடவடிக்கை ஜெர்மனியுடன் ஒத்துழைக்காமல் செய்துவருகிறது. இந்த நோக்கத்துடன் மார்டின் கூவிலுள்ள அரசாங்கத்திற்கு சம அந்தஸ்து கொடுப்பதாக அமெரிக்கா சொல்லிவிட்டது. இதற்குள் ஸ்வதந்திர பிரெஞ்சு கப்பல் தளகர்த்தர் மியூஸ்லியர், அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் தெரியாமல் ஸெயிண்ட். பெர்ரே, மிகோலன் தீவுகளில் துருப்புகளை இறக்கியிருக்கிறான். இவை நியூ பவுந்துலாந்திற்கு அருகில் இருக்கின்றன. இவைகளின் கவர்னர் பிடிபட்டார். இதில் 98 சதவிகிதம் ஸ்வதந்திர பிரெஞ்சு அரசாக்ஷியை விரும்பியதாகச் சொல்லப்படுகிறது. விஷி இதை கண்டித்துப் பேசியிருக்கிறது. இந்த இரண்டு தீவுகளும் முக்கிய நிலையிலிருப்பதால் ஜெர்மன் கைகளில் விழுந்தால் மோசமாகிவிடும். இதுவரை ஸெயிண்டு பெர்ரேயிலிருந்து எதிரிக்கு சீதோஷ்ண நிலைகள் அதிகரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

**துணிகரமான படையெடுப்பு.**—டிஸம்பர் 27உ நார்வே தீவுகளான வயாக்ஸோ மயோலாவில் பலமான பிரிடிஷ் விமானப் படையெடுப்பு செய்யப்பட்டது. இவை இரண்டு டிராண்ஜென், பெர்ஜென் என்ற இரண்டிற்கு இடையிலிருக்கின்றன. ஜெர்மனியிலிருந்து வட ருஷ்யாவிலுள்ள நாஸிப் படைகளுக்கு உதவி அனுப்ப சாதகமாக இருந்தன. மயோலாய் என்பது பெரும் மீன் பிடிக்கும் ஸ்தலம். எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை இருக்கிறது. விமானம், தரை, கடல் படைகள் ஒன்று சேர்ந்து தாக்கி பாம்பர் படை போட்ட குண்டுப் புகையிடையில் காலைவேளையில் துருப்புகள் இறங்கின. இங்கேயிருந்த 200 நாஸித் துருப்புகளடங்கிய பூரா ராணுவமும் பிடிபட்டது. தொழிற்சாலை பாகமும் கடற்கரை பீரங்கிகளும் பிளக்கப்பட்டன. 5 வியாபாரக் கப்பல்களும், 2 மீன்



பிடிக்கும் கப்பல்களும், ஒரு ஸ்டீம்போட்டும் ஆக 8 கப்பல்கள் பிடிக்கப்பட்டன. 95 ஜெர்மானியரும் நாஸிகளுக்கு உதவிய 9 பேர்களும் கைதி செய்யப்பட்டனர். சில நார்வேக்காரர்கள் பிரிடிஷ் படையிலும் சேர்ந்துகொண்டனர்.

**யுத்தத்தை நடத்த மேலான சபை.**—அமெரிக்காவிற்கும் ருஷ்யாவிற்கும் 5,000 மைலிருந்தாலும் ஒன்று சேர்ந்து யுத்தத்தை நடத்த பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றன. மற்ற நேசநாடுகளும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. வாஷிங்டனில் மேலும் கூடும். மிஸ்டர் சர்ச்சில் அமெரிக்கா சென்றிருக்கிறார். மிஸ்டர் ஈடன் ருஷ்யா சென்றார். இவர்களுக்கு உதவியாக சிலர் சென்றனர். அமெரிக்காவில் மிஸ்டர் சர்ச்சில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டின் விருந்தாளியாக இருந்து அமெரிக்க சபையின் முன்னும் பேசினார். கனடாவிலும் சென்று சபை முன் பேசினார். பிறகு திரும்பி வாஷிங்டன் வருவார்.

ருஷ்யாவில் ஸ்டாலின் மாலடோவுடன் மிஸ்டர் ஈடன் பேச்சு வார்த்தை நடத்தினார். சீனப்பிரதிநிதிகளுடனும் இரான் துருக்கி மந்திரிகளிடனும் பேசினார். சென்ற காரியம் திருப்திகரமாக இருக்கிறதாக நினைத்து லண்டன் திரும்பினார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**15—12—41.** (திங்கட்கிழமை).

பிரிடிஷ் விமானங்களால்.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

இரவில்.—ஆஸ்டெண்டு (Ostend), ப்ரேஸ்ட் (Brest).

விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France).

விரோதி விமான நிலயங்கள்—ஆக்கிரமித்த நாடுகளில்.

இதாலி (ITALY)

கப்பற்படை தளம் — டாரெண்டோ (Taranto).

இதாலிய லிபியா (Libya

எதிர்ப்பும் வேவுபார்ப்பதும்—கஸாலா (Gazala), டிமிமி (Tmimi), காடல் அஹ்மார் (Gaddel Ahmar), பிரதேசங்களில்.

மோட்டார் போக்குவரத்து—கெமினிஸ் எல் அகீலா (Chemines-El Aghiela) ரோடு.

படகுகள்—பெங்காஸி (Benghazi). - நஷ்டமில்லை.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **15—12—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலிருந்தும் விமானங்கள் — யுத்த அரங்கம் முழுவதிலும். | | 4 விமானங்கள். | 16 விமானங்கள் |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு.** | | | |
| | வேவு பார்ப்பது-யுத்தப் பிரதேசங்கள் முழுவதிலும. | | | |
| **16—12—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—கப்பற் படைதளம்—வில்ஹெல்ம்ஷேவன் (Willhelmshaven). | கப்பல் துறைகள் எரிக்கப் பட்டன. | | |
| | ப்ரெமன் (Bremen) இன்னும் இதர பட்டணங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | கப்பல் துறைகள்-ஆஸ்டெண்டு (Ostend) டங்கர்க் (Dunkirk), ப்ரெஸ்ட் (Brest). | | | |
| | விமான நிலயங்கள் — ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | வேடிகண்ணிகள் வீசுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | 1 விமானம். | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விமானச் சண்டை—டிமிமி (Tmimi), கஸாலா (Gazala) பிரதேசத்தில். | விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன. | | 1 விமானம். |
| | மோட்டார் போக்குவரத்து—ஜடபாயா (Jadabaya) வுக்குத் தெற்கேயுள்ள ரஸ்தாவில். லக்ஷியங்கள்—பெனினு (Benina). அங்குமிங்கும் விரோதி ஸ்தானங்கள்—பார்டியா (Bardia). தொழிற்சாலைகள், மோட்டார்கள்—பார்டியா (Bardia). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—12—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இதாலி (Italy).** விரோதிக்குச் சொந்தமான கப்பற் படை ஸ்தானங்கள்—டாரெண்டோ (Taranto) துறைமுகத்தில். | | 3 விமானங்கள். | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமான எதிர்ப்புகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்-யுத்தரங்கம் முழுவதிலும். | | நஷ்டமில்லை | 7 விமானங்கள். |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு. பிலிப்பைன் தீவுகள் (Philippines).** | | | |
| | ஜப்பானிய கப்பல்கள் — லெகாஸ்பி (Legaspi)க்கருகாமையில். | 1 கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. | | |
| **17—12—41.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—கப்பற் படைதளம்-ப்ரெஸ்ட் (Brest). | ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் தாக்கப்பட்டன. | | |
| | இரவில்.—கப்பற் படைதளம், ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்-ப்ரெஸ்ட் (Brest). | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | எதிரிகள் மோட்டார் போக்குவரத்து—லிபியா (Libya). | | | |
| | விமானமிறங்குமிடம்—பார்ஸ் (Barce). | | | 15 விமானங்கள் சேதமாயின. |
| | எதிரிகளுக்கு பெட்ரோல் கொண்டு செல்லும் வண்டிகள்—ஸுயாரா (Zuara) பிரதேசத்தில். | பெட்ரோல் ஏற்றிச் செல்லுபவை அநேகம் தகர்க்கப் பட்டன. | | |
| | எதிரிகளின் மோட்டார் போக்குவரத்து-எல் அகிலா (El Aghiela) விலிருந்து டிமிமி (Tmimi) வரை செல்லும் ரஸ்தாவில். | | 7 விமானங்கள். | |
| | விமானச் சண்டைகள்-லிபியா (Libya). | | | 2 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **17—12—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இதாலி (Italy).** | | | |
| | கப்பற்படையின் தலைமை ஸ்தானம், ரயில்வே ஸ்டேஷன் — பிரிண்டிஸி (Brindisi). | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | விமான நிலயங்கள் —கடேனியா (Catania), ஜெர்பினி (Gerbini). | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்தரங்கம் முழுவதிலும். | | 1 விமானம். | 7 விமானங்கள். |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு.** | | | |
| | ஜப்பானிய ஸ்தாபனங்கள்—கிரீன்விச் (Greenwich) தீவில். | | | |
| | வேவு பார்த்தல்.—மேற்குப் பஸிபிக் (Pacific) கடற்கரை ஓரத்தில். | | | |
| **18—12—41.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | ரஸ்தாவில் போக்குவரத்துகள் மோட்டார் படைகள்.—மெகல்லி (Mechelli)-க்கு மேற்கே. | அநேகர் கொல்லப்பட்டனர்; அநேக வண்டிகள் சேதமாயின. | | |
| | விமானமிறங்கும் இடங்கள்.—ஸிரெனைகா (Cyrenaica). | அநேக விமானங்கள் சேதமாயின. | | |
| | விமான நிலயம்.—பெனினா (Benina) பெர்க்கா (Berka). | | | |
| | துறைமுகம் கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **18—12—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | ஒரு நாசகாரியால் துணை புரியப்பட்ட எதிரியின் எண்ணைக்கப்பல்.—மத்திய தரைக் கடலின் (Mediterranean)ன் நடு பாகத்தில். | எண்ணைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது; தீக்களும், வெடிகளும் கிளம்பின. | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 3 விமானங்கள். | 5 விமானங்கள். |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு. தாய்லாந்து (Thailand).** | | | |
| | விரோதி விமானங்கள்.—ஸிங்கோரா (Singora). | அநேக விமானங்கள் நாசமாக்கப்பட்டன. | | |
| **19—12—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலிலும், இரவிலும் நடந்த சம்பவங்களைப்பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | பின்வாங்கும் எதிரிப் படைப் பகுதிகள்.—ஆல்பைடியா (Alfaidia) விலிருந்து பார்ஸ் (Barce) வரை செல்லும் ரஸ்தாவிலும், மெகல்லி (Mechelli)-க்கு மேற்கேயுள்ள பிரதேசத்திலும். | | 4 விமானங்கள் (for all Libya entries, bracketed) | |
| | லாரிகள், சாமான் வண்டிகள், பீரங்கிகள், கவசம் பூண்ட மோட்டார் வண்டிகள், டாங்கிகள்.—போராங்கத்தில். | | | |
| | விமான நிலயம்.—பெனினா (Benina). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **19—12—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | | |
| **20—12—41.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலிலும், இரவிலும், நடந்த சம்பவங்களுக்கு யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | பின் வாங்கும் மோட்டார் படைப் பகுதிகள்.—பார்ஸ் (Barce), டோக்ரா (Tokra), எலாபிர் (Elabir) பிரதேசங்களில். | | | |
| | விமான நிலயம், விமான நிலயத்திலுள்ள விமானங்கள்.—பார்ஸ் (Barce). | பூமியிலிருக்கும் விமானங்கள் சேதமாயின. | | 3 விமானங்கள். |
| | ரயில்வே ஸ்டேஷன்.—ஸுயாரா (Zuara). | | | |
| | போக்குவரத்து மோட்டார்களுக்காகப் போடப்பட்ட கட்டடம்.—ஆர்ட்டீஸியான் (Artersian) கோட்டையில். | | | |
| | எதிரிகளுக்கு எண்ணெய்கொண்டு செல்லும் வண்டிகள் மற்ற போக்குவரத்துகள்.—ஜெடபாயா (Jadabaya) | | | 1 விமானம். |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | பின்வாங்கும் விரோதிப் படைப்பகுதிகள்.—ருஷ்யப் போர்முனை எங்கும். | | | |
| | **பிரிடிஷ் அமெரிக்க விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | வேக் (Wake) தீவு. | | | |
| | ஹாங்காங் (Hongkong). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **21—12—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.— லக்ஷியங்கள்.—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | 1 பாம்பர் விமானம். | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி யந்திர சாதன போக்குவரத்து.—ஸர்டி (Sirte), வளைகுடாக் கரையோரம் செல்லும் ரஸ்தாக்களில். | | | |
| | விரோதி துருப்புகள், லாரிகள்.—ஜெடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | | |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தப் பிரதேசமுழுவதிலும். | | | 6 விமானங்கள். இன்னும் அநேகம் சேதமாயின. |
| | விமானச் சண்டைகள்.—யுத்தரங்கத்தில். | | | 10 விமானங்கள். |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமா[illegible]—போர்முனை எங்கும். | | | 4 விமானங்கள். |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | ஜப்பானிய துருப்புகளை ஏற்றிச்செல்லும் கப்பல்கள்.—ஸரவாக்கு (Saravak)க்கு அருகாமையில். | | | |
| **22—12—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.—கப்பற்படை தளம்—வில்ஹெல்ம் ஷேவன் (Wilhelm shaven). | | நஷ்டமில்லை. | |
| | வேவுபார்த்தல்.—ஆக்கிரமித்த நாடுகளில். | | 1 விமானம். | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் எற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**22—12—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

லிபியா (Libya).

விமான நிலயம்.—காஸ்டெல் பெனிடோ (Castel Benito).

மோட்டார் போக்குவரத்து.—ட்ரிப்போலி (Tripoli)யில் சிதறுண்ட பிரதேசத்தில்.

விரோதி யந்திரப்படைகள்.— யுத்தப் பிராந்தியத்தில் பெங்காஸியைச் (Benghazi) சுற்றிலும்.

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும்.

அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.

தூரக் கிழக்கு.

பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.

விரோதித் துருப்புகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள்.—டேவா (Davao)வுக்கு அருகாமையில்.

மலேயா (Malaya).

வேவுபார்த்தல்.—வட மலேயா (Malaya)வில்.

தாய்லாந்து (Thailand).

விமான நிலயம்.—ஸுங்கே படானி (Sungei Patani).

**23—12—41.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடிஷ் விமானங்களால்.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

லிபியா (Libya).

விமான நிலயம்.— ஆர்பிலேனோரன் (Arephilaenorun).

விமானமிறங்குமிடம்.—எல் அகிலா (El Agheila).



| தேதி. லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் எற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|

**23—12—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

லிபியா (Libya)—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| துருப்புகள், சாமான்கள் ஏற்றிச் செல்லும் மோட்டார் வண்டிகள்.—ஸர்டி-மிஸுராடா (Sirte-Misurata) ரஸ்தாவிலும், எல் அகிலா (El Agheila) வுக்கு மேற்கிலும். | எண்ணெய் ஏற்றிச் செல்லும் வண்டிகளும், லாரிகளும் சேதமடைந்தன. | | |
| யந்திரப்படைப் பகுதிகள்.—ஜெடபாயா (Jadabaya). | | 1 விமானம். | |

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும்.

பிரிடிஷ், அமெரிக்கா விமானங்களால்.

தூரக்கிழக்கு.

பிலிப்பைன்ஸ் (Philippines).

ஜப்பானியத் துருப்புகளின் ஸ்தானங்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).

மலேயா (Malaya).

ஜப்பானியத் துருப்புகள்.—மலேயா (Malaya)வுக்கு வட கிழக்கு.

**24—12—41.** (புதன்கிழமை).

பிரிடிஷ் விமானங்களால்.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

லிபியா (Libya).

| | | | |
|---|---|---|---|
| விரோதி மோட்டார் துணை வண்டிகள்.—ட்ரிபோலிடானியா (Tripolitania)வுக்குள் மேற்குபக்கமாக பின்வாங்குகின்றன. விமான நிலயங்கள்.—எல் அகிலா (El-Aghiela), நொபீலியா (Nofilia). | அநேக வண்டிகள் சேதமாயின. | | 1 விமானம்; 2 விமானங்கள். |
| கப்பல் துறைகள்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| சைனிய வாஸஸ்தலங்கள், மோட்டார் வண்டிகள், தோட்டங்கள், யுத்தத்தளவாடங்கள் சேமிக்குமிடங்கள்.—மிஸுராடா (Misurata). | தீக்கள் கிளம்பின. | 3 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**24—12—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி.

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 11 விமானங்கள். | 24 விமானங்கள். |

பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால்.

தூரக்கிழக்கு.

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| ஜப்பானிய கப்பல்கள்.—குச்சிங் (Kuching)குக்கு அருகாமையில். | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| வேவு பார்த்தல்.—மலேயா (Malaya)வுக்கு வட மேற்கிலும், வட கிழக்கிலும். | | | |

**25—12—41.** (வியாழக்கிழமை).

பிரிடிஷ் விமானங்களால்.

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

லிபியா (Libya).

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விரோதி மோட்டார் கூட்டங்கள், கவசம் பூண்ட ஆயுதமேற்றிய வண்டிகள், பீரங்கிகள்.—ஜெடபாயா (Jadabaya)வுக்குத் தென்மேற்கில். | | | |
| லக்ஷியங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |

ருஷ்ய விமானகளால்.

கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள்,—யுத்தரங்கம் முழுவதிலும் | | | |
| பின் வாங்கும் விரோதித் துருப்புகள்.—யுத்தப் பிரதேசம் எங்கும். | | | |

**26—12—41.** (வெள்ளிக்கிழமை).—

பிரிடிஷ் விமானங்களால்.

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**6—12—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

(லிபியா Libya).

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விரோதி மோட்டார் படைப் பகுதிகள்.- ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | பலத்த சேதமடைந்தன. | 1 விமானம். (for the four entries bracketed) | |
| இரண்டு வியாபாரக் கப்பல்கள்.—ஸுயாரா (zuara) துறைமுகத்தில் [ட்ரிபோலிடானியா(Tripolitania).] | 1 கப்பல் தகர்க்கப்பட்டது. | | |
| துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | பெருந்திக்கள் கிளம்பின. | | |
| விரோதிகளின் போக்குவரத்துகள்.—ட்ரிபோலி (Tripoli)யிலிருந்து ஹோம்ஸ் (Homs) பக்கமாக. | | | |

ருஷ்ய விமானங்களால்

கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விமானச் சண்டைகள்.—போர்முனை எங்கும். | | | |

பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால்.

தூரக்கிழக்கு.

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| விரோதி போக்குவரத்து, துருப்புகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள்.—குச்சிங் (Kuching)குக்கு அருகாமையில் [ஸரவாக் (Sarawak) ]. | | | |

**27—12—41.** (சனிக்கிழமை).

பிரிடிஷ் விமானங்களால்.

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| இரவில்.—தொழிற்சாலைப் பிரதேசங்கள்—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf). | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. | 7 பாம்பர் விமானங் (for the six entries bracketed) | |
| விமான நிலயம்.—ஸொயஸ்டர்பர்க்(Soesterberg). | | | |
| கப்பற் படைத்தளம்.—ப்ரெஸ்ட்(Brest). | | | |
| கப்பல் துறைகள்.—பொலோன் (Boulogne). | | | |
| வெடி கண்ணிகள் பாவுதல்.—விரோதிகளின் சமுத்திரங்களில். | | | |
| விமான நிலயம்.—ஸோலா (Sola), [நார்வே (Norway) ]. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—12—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | லிபியா (Libya) | | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்து.—ஜடபாயா—எல் அகிலா (Jadabaya-El Aghilea) ரஸ்தாவில். | அநேக லாரிகள் சேதமடைந்தன. | | |
| | கப்பற்துறைகள்.—காஸ்டெல்லோ (Castello) ரயில்வே ஸ்டேஷன். | | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | பெரும் வெடிகள் கிளம்பின. | | |
| | விரோதி மோட்டார் வண்டிகள்.—மார்ஸெட் மார்கான் (Marset Marcan)க்கு தெற்கு, ஸுயாரா (Zuara). | | 1 விமானம். | |
| | நஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 3 விமானங்கள். | 8 விமானங்கள். |
| | பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு. | | | |
| | ஒரு சிறிய ஜப்பானிய க்ருயிஸர்.—மினஹாஸா (Minahasa)வுக்கு அருகாமையில் [ஸெலிபஸ் (Celebes)]. | தீப்பற்றியது. | | |
| | தாய்லாந்து (Thailand). | | | |
| | ஜப்பானிய விமான நிலயம்—ஸுங்கி படானி (Sungei Patani). | | | 10 விமானங்கள். |
| 8—12—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மன் ஆக்கிமித்திருக்கும் ஐரோப்பாவும். | | | |
| | இரவில்.—கப்பற்படை தளம்—வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmshaven) எம்டன் (Emden). | | | |
| | தொழிற்சாலைகள்.—உள்ள ஜில்லாக்கள் ரைன்லாந்து (Rhineland). | | | |
| | கப்பற் துறைகள்.-டன்கர்க் (Dunkirk). | | | |
| | விரோதி விமான நிலயங்கள்.-ஹாலந்து (Holland). | | | |
| | கப்பல்கள்.—டச்சு (Dukh)க் கடற்கரைக்கருகாமையில். | | | |
| | விரோதி ஆக்கிரமித்த விமான நிலயங்களும், இதர லக்ஷியங்களும்.-ஆக்கிரமித்த பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | | |
| | அணி வகுக்கும் இடங்கள்.—பெதூன் (Bethune). | | 7 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 28—12—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | லிபியா (Libya). | | | |
| | பார்டியா (Bardia). | | | |
| | கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli)க்கு அருகில். | | | |
| | விமானச் சண்டைகள்.—கஸாலா (Gazala). | | | 2 விமானங்கள். |
| | மோட்டார் போக்குவரத்து.-மெல்லாஹா (Mellaha) பிராந்தியத்தில். | | | |
| | முக்கிய கப்பற்துறை.-ட்ரிபோலி (Tripoli). | | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்தும், பீரங்கி ஸ்தானங்களும்.—ஹால்பாயா (Halfaya) கணவாயில். | | | |
| | ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை. | | | |
| | விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 6 விமானங்கள். | 28 விமானங்கள். |
| | பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு. | | | |
| | தாய்லாந்து (Thailand). | | | |
| | விமானநிலயம்.—ஸுங்கி படானி (Sungei Patani). | | | |
| | வேவுபார்த்தல்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 16—12—41. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். பிரிடன் (Britain). | | | |
| | இரவில்—இரண்டு இடங்கள்—தென் மேற்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—12—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | அமெரிக்கத் துருப்புகள்—தீவுகளில் | | 4 விமானங்கள். | |
| **17—12—41.** (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல், ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | பெனங் (Penang). | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | அமெரிக்க ஸ்தானங்கள்—லூஸான் (Luzon), அபாரி (Aparri) பிரதேசங்களில். | | | |
| **18—12—41.** (வியாழக்கிழமை) | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow) | | 3 விமானங்கள். | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | ஹாங்காங் (Hongkong). | | | |
| **19—12—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | மணிலா (Manila). | | | |
| | ஐலோயிலோ (Iloilo) நகரம்—லூஸானு (Luzon)க்குத் தெற்கேயுள்ள பானே (Panay) தீவில். | | | |
| | வேக் (Wake) தீவு. | | | |
| | அநேக இடங்கள்—வேக் (Wake) தீவு. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிட்டிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **20—12—41.** (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | கடற்கரை ஜில்லாக்கள்—இங்கிலாந்தி (England)ன் வடமேற்கில். | சொற்பச் சேதம், ஒருவர் காயப் பட்டார். | | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | போர்னியோ (Borneo). | | | |
| | நேசதேசத்தார்களின் ஸ்தானங்கள்—வடக்கு போர்னியோ (Borneo). | | | |
| | போன்டியானக்—(Pontianak), போர்னியோ (Borneo)வுக்கு மேற்கேயுள்ள நெதர்லாந்து (Netherland). | | | |
| | ஹாங்காங் (Hongkong). | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| **—12—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | மலேயா (Malaya) | | | |
| | கோலாலம்பூர் (Kulalumpur). | | 2 விமானங்கள். | 1 விமானம். |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | லூஸான் (Luzon), ஸீபு (Cebu) மின்டானோ (Mindanao) தீவுகள். | | | |
| **—12—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | 1 [illegible] விமானம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—12—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் கடற்கரைப் பிரதேசங்களில் மிங்கும் சில இடங்கள். | சில வீடுகள் அங்கும் சேதமாயின; சிலர் கொல்லப் பட்டனர். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta) | ... | 1 பைடர் விமானம். | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | காலி செய்யப்பட்ட ஸ்தலம்.—மனிலா (Manila). | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | கோலாலம்பூர் (Kulalumpur) | ... | 2 விமானங்கள். | |
| **24—12—41.** (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta) | ... | 3 விமானங்கள். | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | மனிலா (Manila). | | | |
| **25—12—41.** (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரை. | சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமில்லை. | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | வடகிழக்கு மலேயா (Malaya)வில் பிரிடிஷ் ஸ்தானங்களின்மேல் வெடி குண்டுகள் போடப்பட்டன. | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **26—12—41.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | மனிலா (Manila). | | | |
| **27—12—41.** (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta) | ... | 1 விமானம். | |
| | அட்லாண்டிக் (Atlantic)சமுத்திரம். | | | |
| | ஒரு பிரிடிஷ் துணைக்கப்பல்.—அட்லாண்டிக் (Atlantic) சமுத்திரத்தில். | | 1 பாம்பர் விமானம். | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | விமான நிலயம்.—போர்னியோ (Borneo). | பொதுமக்களில் ஒருவருக்குக் காயம். | | |
| **28—12—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கரை. | விமானங்கள் விரட்டப் பட்டன. | | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow) | ... | 4 விமானங்கள். | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | ஈபோ (Ipoh). | | | |
| **29—12—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | பிரிடன் (Britain). | | | |
| | இரவில்.—அநேக இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்கில். | சொற்பச் சேதம். | 3 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் தேசம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—12—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ஜப்பானிய விமானங்களால். | | | |
| | தூரக்கிழக்கு. | | | |
| | ஸுமத்திரா (Sumatra). | | | |
| | மேடான் (Medan). | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | துறைமுகம் —ஸ்வெட்டன்ஹாம் (Swettenham). | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | மனிலா (Manila). | | | |
| | ஜெர்மன் விமானங்களால். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta) | ... | 28, 29-ம் தேதிகளில் 12 விமானங்கள்; அநேகம் பழுதுபட்டன. | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ஒரு சகாப்த முடிவு.** ஜப்பான் யுத்தத்திற்காக ஆரம்பம்செய்து பத்து வருஷங்களாகின்றன. 1931-ம் வருஷத்தில் முக்டன் சம்பவத்தை ஜப்பான் நடத்தியபோதே இப்பொழுது கொளுந்துவிட்டெரியும் யுத்த நெருப்பு ஆரம்பமாயிற்று. இந்த யுத்தம் உலகம் பூரா பரவி நடந்துவருவதையும் நாஸிகளின் தன்மையையும் கவனித்தால் ஆக்கிரமண ஆசையுள்ள நாடுகளின் துணிச்சல் செய்கைகளால்தான் இவ்விதம் நடக்கிறதென்று தெரியவரும். ஸர்வ தேசங்களையும் கொள்ளையடிக்கும் கூட்டத்தாரான அச்சுநாடுகளுக்கு எதிராக சமாதானத்தையே கோரும் சிறு நாடுகளின் பலத்தையும் நோக்கத்தையும் முதலாவதாக ஜப்பான்தான் கண்டுபிடித்தது. இதுவரை ஜப்பான் ஆறு கொள்ளைத்தொழிலைப் புரிந்தும் இன்னும் அதற்கு தண்டனை விதிக்கப்படவில்லை. சமீபகாலம்வரை யுத்தம் தொடங்குவதாகச் சொல்லாமலே யுத்தம் நடத்திவருகிறது. ஜெர்மனி, இதாலி, ஜப்பான் முதலிய நாடுகளில் கடந்த பத்து வருஷங்களாக நடந்துவரும் அரசியல் மாறுதல்களை கவனிக்கும்போது ஜனநாயகங்கள் முன்பு ஒற்றுமையாக இல்லாமல் இருந்ததால் தான் அச்சுநாட்டுக் கொள்ளைக்காரர்களுக்கு கொஞ்சம் சாதகமாக இருந்தது.

கடைசியாக சரித்திரத்தில் சிற்சில மாறுதல்களால் ஜனநாயகங்கள் ஒன்று சேர்ந்துவிட்டன. இனி அச்சுநாடுகள் தந்திரமான நன்மைகளை அடைய முடியாது. அச்சுநாட்டு ஜனங்களை அதிகமான தியாகம் செய்யச் சொல்லி



அப்படி கிடைத்த சாமான்களை இனி அவர்கள் அதிகமாக உதவிசெய்துகொள்ளவும் முடியாது. நேசநாடுகளின் செய்கை எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கிறது. அவர்கள் செய்யும் முயற்சி மிகவும் ஜாஸ்தியாக இருப்பதால் முடிவான வெற்றி நேசநாடுகளுக்கு கிடைக்கும். ஆதலால் புதுவருஷ ஆரம்பத்தில், ஹிட்லர் உலகத்தை ஆக்கிரமிப்பானோ என்ற பயம் மறைந்து வருகிறது.

வி வி வி வி வி வி வி வி வி வி

**ஆசின்லக் கிருஸ்துமஸ் சந்தர்ப்பத்தில் உலகத்திற்குக் கொடுத்த வெகுமானம்.** லிபியா யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் யுத்த நிருபர்கள் கொடுத்த அதிக உத்ஸாகத்தை அளிக்கக்கூடிய தகவல்கள்போல ஆபிரிக்க அரசாங்க அறிக்கைகள் இல்லை. உண்மை நடப்புகளுக்கு அனுகுணமாகவேதானிருக்கின்றன. பெங்காஸியைப் பிடித்தவுடனே "ஸிரெனைகா நம்வசம் இருக்கிறதென்றும், அச்சுநாட்டுப் படைகள் பின்னால் கால் வாங்கி ஓடுகின்றன" என்றும் சொல்லுவது உண்மையாதலால் வட ஆபிரிக்காவில் நேசப்படைகள் வெற்றியடைந்து வருகின்றன என்று நிச்சயமாக நம்பலாம்.

ஆனால் ஓர் இடத்தில்மாத்திரம் எதிரி பின்வாங்கி ஓடுவது போதாது. எதிரியின் முழுபலத்தையும் முறியடிக்கவேண்டும். ட்ரிபோலியை நோக்கி ஓடும் ரோமலின் யந்திரப்படைக்கும் ஸிர்டி குடாவை நோக்கிவரும் பிரிடிஷ் சைனியங்களுக்கும் ஏற்படக்கூடிய சண்டையை யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்னும் கொஞ்சநாட்களுக்குள் ஜெடபாயா யுத்தம் நமக்கு வெற்றிகரமாக முடிந்து மேலும் சில லக்ஷியங்களை பிரிடிஷ் சைனியம் கைப்பற்றி லிபியா யுத்தமே முடிவடையலாம்.

வி வி வி வி வி வி வி

**ஜீன காலத்திய ஆச்சரியமுள்ள மனிதர்கள்.** ஜப்பானியச் சண்டை துவக்கிய நாளில் ரேமண்ட் கிராம் ஸ்விங் என்ற அமெரிக்கர் அமெரிக்க ஜனங்களின் மனப்பான்மையைப் பற்றி ஒலிபரப்பினார். பல வருஷங்களாக ஜப்பானியரிடமிருந்து உண்டாகக்கூடிய பயம்தான் அமெரிக்கர்களுக்கு முக்கிய விஷயமாக இருந்திருக்கிறது. ஆகவே ஜப்பான் யுத்தத்தைத் தொடங்கியதை அமெரிக்க ராணுவ இலாகாக்காரர்கள் கண்டு ஆச்சரியப்பட்டதாகச் சொல்வது தவறுகலாம். இருந்தாலும் ஜப்பானியர் மிகவும் பயங்கரமானவர்கள் என்று எல்லா அமெரிக்கர்களுக்கும் தெரியும். சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவிற்கு பயம் வராது என்றும் சண்டையோ, சமாதானமோ அமெரிக்கர்களின் கையில்தானிருப்பதாகவும் நினைத்திருந்தனர்.

இப்பொழுது அமெரிக்காவிற்குச் சொந்தமான நாடுகள் தாக்கப்பட்டு யுத்தமும் துணிச்சலாக எதிரிகளால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அவமானத்தைப் பொறுத்துக்கொள்ளாமல் கோபங்கொண்டு அமெரிக்கர்கள் யாவரும் சரியாக யுத்த முஸ்தீப்பு செய்யத் தீர்மானித்துவிட்டனர். தனிப்பட்ட கக்ஷியைச் சார்ந்த வீலர், லிண்ட்பர்க் உள்பட ஒரேவிதமாக யுத்தம் செய்யவேண்டுமென்ற அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியர் செய்த செய்கைகள்.** திடீரென்று ஜப்பானியர் பாய்ந்ததால் கொஞ்சம் ஆரம்பவெற்றிகள் கிடைத்திருக்கலாம். முழுபலத்துடன் அமெரிக்காவிற்கு முன்னேறித்தாக்க கொஞ்சம் நாள்

பிடிக்கலாம். இருந்தாலும் இதுவரை ஜப்பானியர் தாக்கிவரும் அமெரிக்காவின் பலத்தை கவனிப்போம்.

1. அமெரிக்கக் கப்பற்படையில் 17 சண்டைக்கப்பல்களுடன், விமானம் ஏற்றிச்செல்லக்கூடிய 7 கப்பல்களும், 37 சஞ்சாரிகளும், 171 நாசகாரிகளும், 111 நீர்மூழ்கிகளும், இருந்தன. 15 யுத்தக் கப்பல்களும், விமானமேற்றிச் செல்லக்கூடிய 11 கப்பல்களும், 54 சஞ்சாரிகளும், 192 நாசகாரிகளும், 73 நீர்மூழ்கிகளும் கட்டப்பட்டுவருகின்றன.

ஏற்கனவே பெரிதான இப்படைக்கு சில சேர்க்கப்பட்டிருக்கிறன. மீதியுள்ளவைகளை ஜனாதிபதி சர்வ அதிகாரங்களையும் ஏற்றுக்கொண்டு சீக்கிரத்தில் செய்துமுடிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

2. ஹாவாயில் அடைந்த நஷ்டங்களை அமெரிக்கா ஈடுசெய்து வேறு அதிகாரிகளை நியமித்து பூராவாக எதிரியை எதிர்த்து சண்டை செய்ய தீர்மானித்து விட்டது.

3. எல்லாபாகங்களிலிருந்தும் அமெரிக்கச் சைனியம் அழைக்கப்பட்டிருக்கிறது. 18 முதல் 65 வயது வரையிலுள்ளோரை யுத்தத்திற்குப் பதிவு செய்திருக்கிறது. 20 முதல் 44 வரையிலுள்ளோர் ராணுவ சேவைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

4. பிரசரக்கட்டுப்பாடு உள்பட 7,00,00,00,000 டாலர் பொருமானமுள்ள சொத்தும், தொழிற்சாலையும், எண்ணெய் தளங்களும் ஜனாதிபதியின் பூரா அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறது.

5. நேசநாடுகளுக்கு ஏராளமாகச் செய்யும் (சுமார் 2,400) விமானங்களைத்தவிர மாதம் 1,000 விமானங்கள் வீதம் உபரியாகச்செய்யப்படும்.

6. அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் 90 கப்பல்கள் மிதக்க விடப்படும்.

7. இப்பொழுது மாதம் 800 வீதம் செய்யப்படும் டாங்கிகள் 4,800 வீதம் செய்யப்படும்.

8. தனிப்பட்ட கக்ஷி இருக்கிற இடம் தெரியவில்லை. மர்ரே, லூயி என்பவர்கள் யுத்த முயற்சியை பூரா செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி முதல் தனிப்பட்ட கக்ஷி, தொழிற்சாலை முதலாளிகள், வேலையாட்கள் வரை யுத்த முயற்சி செய்யத் தீர்மானித்துவிட்டனர். இவ்விதம் அமெரிக்கா முன் வந்திருப்பதால் ஜப்பான் வேலை ஒன்றும் நிச்சயம் பலிக்காமல் போகும்.

வி வி வி வி வி வி வி

**ஹிட்லர் தோல்வி அடைகிறான்.** ருஷ்யர்கள் எதிர்த்து வருவது ஹிட்லருக்கு பெரும் பிரச்னைகளை உண்டாக்கியிருக்கிறது, இதுவரை வெற்றியுடன் இருந்த ஜெர்மன் சைனியம் தட்டுத்தடுமாறி நின்றுவிட்டது. மேலும் பின்னேக்கியும் போக நேர்ந்திருக்கிறது. ருஷ்யர்களுக்கு பின்புறத்திலிருந்து பிரிடிஷ், அமெரிக்க ஸப்ளைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. வசந்தகாலத்தில், கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் சென்று ருஷ்யாவை ஜயித்தபிறகு அங்குள்ள ஏராளமான விளைபொருள்களை எடுக்கலாமென்று ஹிட்லர் நினைத்ததெல்லாம் போக ஜெர்மன் சைனியங்களே அழிக்கப்பட்டு வருகின்றன. ருஷ்ய யுத்தமே ஹிட்லருக்கு ஒரு பெரும் பிரச்னையாக



இருக்கிறது. எப்படி அதிலிருந்து மீளுவது என்று ஆலோசித்து வருகிறான். மேலும் லிபியா யுத்தமும் அச்சு நாடுகளுக்கு பாதகமாகி வருகிறது.

இதற்காக இரண்டு ஏற்பாடுகள் செய்கிறான் என்று தெரிகிறது. ஒன்று எல்லா விமானப்படையையும், யந்திரப்படையையும் ஆபிரிக்காவிற்கு அனுப்பி வெற்றியடையப் பார்க்கலாம். பஸிபிக்கில் ஜப்பானைக்கொண்டு பிரிடனையும் அமெரிக்காவையும் தற்காப்பு செய்துகொள்ளும்படி செய்து ருஷ்யாவிற்கு உதவிபோகாமல் செய்வது இரண்டாவது. காகஸஸ், வ்ளாடிவாஸ்டக் மூலம் ருஷ்யாவிற்கு உதவிபோகாதபோனால் 1942 வசந்த காலத்திலும் கோடையிலும் மறுபடி பெரும் ருஷ்ய எண்ணெய் பிரதேசங்களை ஜெர்மனி தாக்கலாம். எப்படியானாலும் எண்ணெய் ஸப்ளை பெற ஏற்பாடு செய்யாதபோனால் ஹிட்லர் பாடு திண்டாட்டம் என்பதை ஜெர்மனி பூராவும் அறிந்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**பெரும் தூதாட்டம்.** ஹிட்லர் ஜப்பானை யுத்தத்தில் ஈடுபடுத்தியதினால் அமெரிக்கா பூரா ஒன்று சேர்ந்து யுத்தம் செய்யத் தீர்மானித்துவிட்டது. பஸிபிக்கில் யுத்தம் பரவியதால் நேசநாடுகளுக்கு இன்னும் அதிக பளுவுதான். இருந்தாலும் அமெரிக்கா, பிரிடன், சைனா, டச்சுக் கிழக்கிந்திய அரசாங்கம் யாவும் ஒன்று சேர்ந்து பளுவை லேசாக்க ஏற்பாடு செய்துவருகின்றன. இவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து செய்யக்கூடிய முஸ்தீப்பு, ஸப்ளை ஏற்பாடுகளைத்தான் மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ருஸ்வெல்டும் தீர்மானித்திருக்கின்றனர். ஜயிக்க முடியாதது என்று இதுவரை நினைக்கப்பட்டிருந்த ஜெர்மன் சைனியம் தோற்று வருகிறது என்பதைத் தெரிந்துகொண்டு மேலும் மேலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வி வி வி வி வி வி வி வி வி வி

**வெறும் ஆள் முட்டைகள்.**
**ஜெர்மன் ராணுவத் தலைவர்கள்.** ருஷ்யாவிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு ஹிட்லர் தலைமை வகித்துப் பேசிய பேச்சைப்பற்றி மேஜர் லூயி ஹேஸ்டிங்ஸ் என்பவர் ஒலிபரப்பியதை இங்கே கொடுக்கிறோம்.

“அக்டோபர் 2௳ பெர்லினுக்கு ஹிட்லர் திரும்பி யுத்தத்தை முடிக்க வேண்டுமென்று சொன்ன சமயத்தில் ஏதோ மனோவிகாரத்துடன் பேசியதாகவே காணப்பட்டது. அச்சமயத்தில் ஹிட்லருக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் அபிப்பிராயபேதம் இருந்ததாகக் காணப்பட்டது. இருந்தாலும் ஹிட்லருக்கு பயந்து யாவரும் அவஸ்தைப்பட்டனர்”.

இந்த அபிப்பிராயத்திற்கு தகுந்தாற் போல் இப்பொழுது வான் பிராஷிட்ஸ், வான் கீடல், வான் பாக், யாவரும் அவமதிக்கப்பட்டனர். இவர்கள் பயந்த சந்தர்பங்களில் வெறும் ஆளான ஹிட்லர் முன் செல்ல நினைக்கிறான். இந்த விஷயம் ஜெர்மன் மக்களுக்கு ஒருக்காலும் திருப்தியை அளிக்காது.

வி வி வி வி வி வி வி

**இதாலியில் எதுரோலிகள்.** “லிபியா யுத்தத்தில் பிரிடிஷார் ஜயித்தாலும் யுத்தத்தை அதிகம் பாதிக்காது” என்று ஜெர்மானியர் தைரியம் சொன்னாலும் இதாலியருக்கு நம்பிக்கை கொடுக்கவில்லை. இதாலியின் தென்பாகத்தில் அவசர நிலை இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜியார்னேல் டி இதாலியாஎன்ற பத்திரிக்கையில் வாயாடியான காட்யா இதாலியரின் மனப்பான்மையை விளக்கிக் காட்டியிருக்கிறான். “லிபியா என்றால் மத்திய தரைக்கடல்தான். எதிரியை இங்கே வரவொட்டாமல் செய்ய நாம் வெற்றியடையவேண்டும்”. இது எவ்வளவு தூரம் சாத்தியமாகப் போகிறதோ தெரியவில்லை ?!

# பிரிடன், அமெரிக்கா, ஜப்பான் கப்பற்படைகள்.

"டெயிலி டெலிகிராப்" பத்திரிகையின் கப்பற்படை நிருபர் எழுதியது.

தூரக் கிழக்கில் நேசதேசக் கப்பற்படைக்கு பெரும் நஷ்டம் விளைந்திருப்பதைப்பற்றி கவலைப்படுவது பிரயோஜனமில்லை. இதற்குமுன் பிரிடிஷ் கப்பற்படைக்கு இதுமாதிரியான ஆபத்துகள் விளைந்தும் இருக்கின்றன. பிரகிருதத்தில் கப்பல் இலாகா மந்திரி, நிலையை சமாளிக்கக்கூடிய திட்டங்களைச் செய்து அமெரிக்கக் கப்பற்படைக்குத் தகுந்தாற்போலும் நடந்துகொள்ளுவதுதான் உசிதமாகும். அதற்காகத் தற்போதுள்ள பலத்தை ஒன்றுசேர்த்து யுத்தத்தில் ஈடுபடும்படி, செய்வதுதான் உசிதம்.

போனதுபோக பிரிடன் வசம் 14 போர்க்கப்பல்கள் இருக்கின்றன. அமெரிக்கா வசம் ஆக்லோஹாமா என்றதைத் தவிர 16 பெரும் கப்பல்கள் இருக்கின்றன. ஜப்பான் வசம் 10 தான் இருக்கின்றன. சண்டைக் கப்பல்களில் சில பிரிடிஷ் கப்பல்கள் மத்தியதரைக்கடலில் இதாலியரின் படையைத் தடுத்துக்கொண்டிருக்கின்றன. மற்றும் சில அட்லாண்டிக்கில் மீதியிருக்கும் ஜெர்மன் ஷர்பிட்ஸ், நீஸ்னௌ, ஷார்ன்ஹார்ஸ்டு கப்பல்களை தடுத்துக் கொண்டிருக்கின்றன. மற்றும் சில பழுதுபார்க்கப்படும் நிலைமையிலிருக்கின்றன. இவைகளையெல்லாம் தவிர தூரக்கிழக்கு யுத்தத்திற்கும் அனுப்படவேண்டும்.

## பஸிபிக்கிலுள்ள அமெரிக்கக் கப்பற்படை.

ஜப்பானிய டார்பிடோ விமானங்களால் தாக்கப்படுவதற்குமுன் பேர்ல் ஹார்பரில் இருந்த அமெரிக்காவின் 12 சண்டைக் கப்பல்கள் இருந்தன. அட்லாண்டிக்கில் 17 கப்பல்கள் இருக்கின்றன. அதில் வாஷிங்டன், நார்த் கரோலினு என்ற இரண்டு புது கப்பல்களும் சேர்ந்திருக்கின்றன. ஒவ்வொன்றும் 35,000 டன் உள்ளவை. இவைகளையும் பனமா கால்வாய்வழியே பஸிபிக்கிற்கு அனுப்பி, ஜப்பானிய தாக்குதல்களால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்துவிடலாம். இப்படி அனுப்புவது வெகுதூரம்பிடிக்கலாம். பனமாவிலிருந்து மணிலா 8,000 மைல் தூரத்திலிருக்கிறது. அதற்குள் ஜப்பான் கொஞ்சம் முண்டிப்பார்க்கும்.

மணிலா, காவைட் இடங்களில் அமெரிக்காவின் கப்பற்படை 2 சஞ்சாரிகளும் 12 நாசகாரிகளும், 2 ஸ்லூப் கப்பல்களும் 18 நீர்மூழ்கிகளும், ஒரு கடல் விமானமும், மற்றும் சில சிறுதினுசுகளும் இருக்கின்றன. இவைகளை ஜப்பானிய கப்பற்படை சீக்கிரத்தில் ஆக்கிரமித்துக்கொண்டு பிலிப்பைன்ஸை படையெடுக்கலாம். டச்சுக் கிழக்கிந்தியக் கப்பற்படையில் 3 சஞ்சாரிகளும், 7 நாசகாரிகளும், 12 நீர்மூழ்கிகளும் மற்றும் பலவித உதவி சண்டைக் கப்பல்கள் இருப்பதால் இவைகளும் ஜப்பானுடன் எதிர்த்துப் போராடமுடியாது. கொஞ்சம் எதிரிக்குத் தடைமாத்திரம் செய்யலாம்.

## யுத்தம் நீடிக்கிறது.

இதையெல்லாம் யோசிக்கும்போது நாம் முடிவான வெற்றியடையும்வரை இந்த யுத்தம் நீடிக்கப்படும். ஆங்கில-அமெரிக்கக் கப்பற்படையின் பெரும் சாதகங்களையும், தரையில் ருஷ்யரின் சாமர்த்தியத்தையும் நாம் கொண்டிருப்பதால் வெற்றி நமக்குக் கிடைப்பதென்பது நிச்சயம். இதனால்தான் ஜப்பானியர் முழுப்போடாகச் சண்டை செய்து ஆரம்பத்திலேயே கடகடவென்று வெற்றியடைய பார்க்கின்றனர்.



மேலும் பிரிடிஷ் கப்பற்படைக்கு பல சண்டைக் கப்பல்கள் புதிதாகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன, இதில் இரண்டு பூர்த்தி அடைந்திருக்கின்றன. ஆன்ஸன், ஹோவி, என்று 35,000 டன் உள்ளவை. ஐந்தாம் கிங் ஜார்ஜ், பிரின்ஸ் ஆப்வேல்ஸ், டியூக் ஆப் யார்க் என்ற கப்பல் போன்றவை.

அமெரிக்கக் கப்பற்படையில் 15 சண்டைக் கப்பல்கள் கட்டிக்கொண்டிருக்கின்றனர். இந்தியானு, மெஸாசுஸெட்ஸ், சௌத்டகோடா என்ற மூன்று கப்பல்கள் ஏற்கனவேயே சண்டைக்காக அனுப்பப்பட்டன. அலபாமா என்ற கப்பல், அடுத்த மாதம் மிதக்கவிடப்படும். மற்றும் இரண்டு கப்பல்கள் அடுத்தவருஷத்திற்குள் முடிவடையும்.

## ஜப்பானிய உதவிப்படைகள்.

ஜப்பானுக்கு எவ்விதமான உதவி கிடைக்கிறதென்று கவனிப்போம். யுத்த ஆரம்பத்தில் ஜப்பான் வசம் பத்து யுத்தக் கப்பல்கள்தான் இருந்தன. இவைகளில் முந்திய யுத்த சமயத்தில் கட்டப்பட்டவை இரண்டு. 1911–12-ல் கட்டப்பட்டவை நான்கு. இவை யாவற்றையும் ஒருக்கால் புதுப்பித்திருக்கலாம். 45,000 டன் எடையுள்ள நான்கு அல்லது ஐந்து யுத்தக் கப்பல்கள் 1937—39-ல் 16 அங்குல பீரங்கிகளுடன் கட்ட ஏற்பாடு செய்ததாகவும் சாமான்கள் குறைவால் முடிவடையாததாகவும் சொல்லப்படுகிறது. இரண்டு மூன்று கப்பல்கள் சிறு சண்டைக்கப்பல்கள் என்று சொல்லப்பட்டு இன்னும் பூராவாக முடிவடையவில்லை.

## விமானம் சுமக்கும் கப்பல்களை கவனிப்பது.

முக்கியமாக ஜப்பான் விமானம் சுமக்கும் சண்டைக் கப்பல்களைக் கட்டுவதிலேயே கவனம் செலுத்தியதாகத் தெரிகிறது. 26,900 டன் உள்ள அக்கி, காகா என்ற இரண்டு கப்பல்கள் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கின. 17,000 டன் எடையுள்ள ஸ்யோகது, ஜூயகது என்ற இரண்டு இவ்வருஷம் கட்டி முடிக்கப்பட்டன. ஸோரியு, ஹிர்யு, ஹிர்யூஜ்யோ ஹோஸ்யோ என்பவை 7,000 முதல் 11,000 டன்வரையிலும் கனம் உள்ளவை. ஆக 8 கப்பல்கள்.

பிலிப்பைன்ஸை ஜப்பானியர் பிடித்தாலும் அதிக ஜன நெருக்கமுள்ள டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளை எளிதில் பிடிக்க முடியாது. அங்குள்ள எண்ணெய், ரப்பர், தகரம் மற்றும் தேவையான சாமான்களையும் கண்வைத்துக் கொள்ளையடிக்கமுடியாது.

---

# கொஞ்சம் பிரயாசை.

## ருஷ்யப் போக்குவரத்துக்கு பிரிடிஷ் ரயில்வே செய்த உதவி.

## இரானுக்காக என்ஜின்களும் மற்ற வண்டிகளும் அனுப்பப்பட்டன.

## 37 நிமிஷங்களுக்கு ஒருதரம் ஒரு புதிய ரயில்வண்டி தயாராகிறது.

## இரானில் போக்குவரத்து பிரச்னைகளைப் பரிசோதிக்க பல நிபுணர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு ரயில்வே என்ஜினியர் எழுதியது.

இரான் வழியாக யுத்தப்பொருள்கள் ருஷ்யச் சைனியங்களுக்கு அதிகதுரிதத்தில் போய்சேருவதற்கு என்ஜின்களும், ரயில் வண்டிகளும் பிரிடிஷ் இருப்புப்பாதைகளிலிருந்து கடல் மார்க்கமாக அனுப்பப்பட்டிருக்கின்றன. இரான் வழியாக

ஸப்ளைகள் அனுப்பக்கூடுமென்று தெரிந்தவுடன் ரயில் வேலைக்காரர்கள் ஆகாய விமானங்கள் மூலமாக என்ன தேவை என்பதை நேரில் போய்த் தெரிந்து கொண்டார்கள். அவர்கள் செய்த ரிப்போர்ட்டுகள் அங்கீகரிக்கப்பட்டு, தேவையான பொருள்களைச் சேகரித்துக் கப்பல் மார்க்கமாக அனுப்பப்பட்டன. உலகத்தில் பல இடங்களிலிருந்தும் கப்பல்களில் வந்துகொண்டிருக்கும் ஸப்ளைகளை ஏற்றிச்செல்ல இரான் இருப்புப்பாதைகளுக்கு உதவியாக ரயில் சாமான்களும் தயாரிக்கப்பட்டன.

### விசேஷமாகச் செய்யப்பட்ட என்ஜின்கள்.

பிரிட்டனில் செய்யப்பட்டதும் அவசியமான உருப்புகளுடனும் 142 என்ஜின்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டன. அவற்றில் சிலது இப்பொழுது உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. கடலைத்தாண்டி அனுப்புவதற்கு முன்னால் எண்ணெயால் ஓட்டக்கூடிய கருவிகளும் அவைகளுக்கு அமைக்கப்பட்டன. இந்த என்ஜின்களைத் தயாரிக்க என்ஜின் தொழிற்சாலைகளில் ஸ்திரீகள் உதவி செய்தார்கள். இப்பொழுது என்ஜின்கள் குறைந்து போனதை எல்லா ரயில்வே கம்பெனிக்காரர்களும் பங்கிட்டுக் கொண்டனர்.

மேலும் 12 டன் நிறையுள்ள ஆயிரம் ரயில் வண்டிகள் வெகு சீக்கிரத்தில் செய்து முடிக்கப்பட்டன. வண்டிக்கு வேண்டிய மரப்பலகைகள் ஒரு ரயில்வே கம்பெனியால் கொடுக்கப்பட்டது. அதே கம்பெனி வேலைக்குத் தேவையான சில இரும்பு சாமான்களையும் ஸப்ளை செய்தது. மற்றொரு ரயில்வேக் கம்பெனி வண்டிகளுக்கு வேண்டிய உருப்புகளும், மரமும் ஸப்ளை செய்தது. இவற்றைச் சேகரித்து நடத்தும் தொழிற்சாலைகளில் அல்லும், பகலும், வேலைக்காரர்களை மாற்றி மாற்றி வேலை செய்யச் செய்து, ஒரு வண்டிக்குத் தேவையான 1,800 உருப்புகளும் சேர்த்துக் கோர்க்கப்பட்டன. அம்மாதிரி 37 நிமிஷத்துக்கு ஒரு வண்டி வீதம் வேலைக்கு ஆர்டர் கொடுத்த ஒரு பக்ஷத்துக்குள் ஐம்பது வண்டிகளுக்கு உள்ள சாமான்களை அவைகள் போய்ச் சேருமிடத்தில் தனித்தனி சாமான்களை ஒன்றாகச் சேர்த்து அமைத்துக் கொள்ள தயார்செய்து அனுப்பப்பட்டன.

### மெச்சத்தகுந்த வேலை.

சமாதான காலத்தில் பனிரெண்டு மாதங்களில் செய்யக்கூடிய வேலையை பத்து வாரங்களில் ரயில்வே தொழிற்சாலைகளிலுள்ள ஆண்களும், பெண்களும் செய்து முடிக்கிறார்கள்.

பல நிபுணர்கள், ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்ட வேலையை மேல் பார்ப்பதற்காகவும், வேலையை அவசியமானால் அதிகரிக்கச் செய்வதற்காகவும், கடற்கரைக்கப்பால் தங்கியிருக்கிறார்கள். இரானில் ரயில் மூலமாகவும், ரஸ்தாக்கள் மூலமாகவும் யுத்தக்கருவிகள், வெடிமருந்துகள், யுத்தப் பொருள்கள் இவைகளை டன்கள் கணக்காக கிழக்குப் போர்முனைக்கு உச்சியான மலைகள் மூலம் கஷ்ட, நஷ்டங்கள் இல்லாமல் கொண்டு செல்வதற்கு வேண்டிய வசதிகள் நிபுண இலாகாவால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இரானிலுள்ள இருப்புப்பாதை கணவாய்கள் மூலமும், செங்குத்தாய்ச் சென்றுகொண்டிருந்த போதிலும் அவற்றை எவ்வளவு தூரம் பயன் படுத்தக்கூடுமோ அவ்வளவு வரை உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. மேலும் புதிய இருப்புப்பாதைகள் போடப்பட்டு வருகின்றன. மாற்றுப்பாதைகள் வழியாக போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய பெருத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### இந்தியா செய்த உதவி.

சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகள் முழுமனதுடன் உதவி செய்கின்றன. பலுஜிஸ்தானத்திலும், இராக்கிலும் உள்ள இருப்புப்பாதைகளுக்கு உதவியாக



இந்தியாவிலிருந்து ரயில் வண்டிகளும், ரயில் வேலைக்காரர்களும் அனுப்பப்பட்டிருக்கின்றனர். ஆஸ்திரேலியாவிலிருந்து பத்து லக்ஷம் பவுன் மதிப்புள்ள ரயில் என்ஜின்களும், வண்டிகளும் அனுப்பப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. கெனியா—யுகோண்டா இருப்புப்பாதைகள், துறைமுகங்கள் இவைகளின் பொது மானேஜரும், கனடாவில் பிறந்தவரும், போக்குவரத்துப் பிரச்னையில் நிபுணரும், கிழக்கு ஆபிரிக்கப் படையெடுப்பில் இரான் போக்குவரத்துக்கு டைரக்டராகவும் இருந்து உதவிசெய்த ஸர் காட்பிரே ரோட்ஸ் என்பவரை வேலைக்கு நியமித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

---

## ஸிடி ஓமாரில் இந்தியப் பகுதியைக்கொண்டு ரோமலின் டாங்கிகள் எவ்வாறு முறியடிக்கப்பட்டன.

## விமானத் தாக்குதலைக் குறித்து பத்திராதிபரின் அனுபவம்.

பிரசித்தி பெற்ற அமெரிக்க பத்திராதிபர் க்வின்டின் ரெய்னால்ட்ஸ் பி. பி. ஸி. யில் பேசியது :—

இந்தியப்படைப் பகுதியுடன் ஒரு வாரம் தங்கியிருந்தேன். அந்தப்போர் முனையிலிருந்து இப்பொழுதுதான் திரும்பிவந்தேன். ஒரு வாரத்துக்கு முன் ஐந்து நாட்களாக அந்தப்படைப் பகுதி பெரிய போரில் ஈடுபட்டிருந்தது. அந்தப்போர் நடந்த ஸிடி ஓமார் நகரம் தேசப்படத்தில் பார்த்தால் ஒரு புள்ளிமாதிரி இருக்கும். ஆனால் லிபியா படையெடுப்பில் அது பிரதானமான இடம்.

ஒரு வாரமாக இந்தியர்கள், முக்கியமாக அந்தப்பகுதியின் தெற்குப் பிரதேசப் பகுதி, ஸிடி ஓமாரில் தளகர்த்தர் ரோமல் தாக்குதலைச் சமாளித்து வந்தது.

தாக்குதல் தரை மார்க்கமாயும், ஆகாய மார்க்கமாயும் நடந்தது. இந்த பாலைவனத்தில் ஒரு சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள பீடபூமியில் ஆயிரக் கணக்கான வெடிகுண்டுகள் போடப்பட்டன. தரை மார்க்கமும், ஆகாய மார்க்கமும் எந்தந்த விதமாகத் தாக்கக்கூடுமோ அந்த மாதிரி தாக்கியும் கூட, பாதைகளே இல்லாத பாலைவனத்தில் ஸிடி ஓமார் நகரம் நிலைத்து நிற்கிறது. அந்த நகரத்திலுள்ள தெற்குப் பிராந்தியப்படை (ராணுவ தந்திரத்தை முன்னிட்டு அதன் பெயரை இங்கு சொல்லக்கூடாது) தற்காப்பு முறையில் இல்லாமல் நாலா பக்கங்களிலும் இதாலிய பீரங்கிப்படை, ஜெர்மன் டாங்கிப்படை, காலாட்படை இவைகளை ஒரு வாரத்திற்குள் ஒழித்து விடலாமென்ற நம்பிக்கையுடன் தாக்கி வருகிறது.

இந்த ராணுவ நடவடிக்கையைப் பற்றி எதிரிகளை அப்புறப்படுத்திய பிறகுதான் பூராவாக எழுதமுடியும். இரண்டு நாள் பூராவும் 60 பவுண்டு எடையுள்ள வெடிகுண்டுகள் சுமார் 1,000-க்கு மேலேயே இதாலிய பீரங்கிகளிலிருந்து ஸிடி ஓமாரின் பேரில் பொழிந்த பிறகு ஜெர்மன் டாங்கிகள் எங்களை எதிர்த்துவந்தன.

ஐம்பது ஜெர்மன் டாங்கிகள் அந்நகரத்தை நோக்கி வருவதாகக் கேட்டபொழுது கோபத்துடன் புன்சிறிப்பு செய்து ஜெர்மானியர்களை "வழக்கம் போல் தாக்கித் தொடர்ந்து செல்லுங்கள்" என்று இந்தியப் பகுதியைப் பார்த்து கட்டளையிட்டார்.

நாங்கள் சுற்றிலும் பாலைவனம் சூழ்ந்து நடுவில் ஒரு சதுரமைல் விஸ்தீர்ணமுள்ளதும், போக்குவரத்து சாதனமில்லாததுமான இடத்தில் தனிமையாக இருந்துவிட்டோம். உணவும் குறைவு. ஆனால் உத்தியோகஸ்தர்களாவது போர்வீரர்களாவது தற்காப்பு சண்டை செய்யவேண்டுமென்ற எண்ணமே இல்லை. இந்தப் பிரிடிஷ் பாலைவனப் படையோ எதிரியைத் தாக்கும் படையானதால் தற்காப்பு வழிகளைப் பற்றியே நினைக்கவில்லை.

நவம்பர் 25-ம் தேதி, செவ்வாய்க்கிழமை மத்தியானம் டாங்கி பீரங்கி வெடி சப்தம் கேட்டது. தாக்குதல் ஆரம்பித்ததாக எங்களுக்குத் தெரியவந்தது. ஒரு மணிக்குள் ஏழு ஜெர்மன் டாங்கிகள் அழிக்கப்பட்டதாகச் செய்திவந்தது. பிறகு ஜெர்மன் டாங்கிச் சண்டை புதிய தந்திரத்தை ஒத்து டாங்கிகள் ஒன்றன் பின் ஒன்றாக ஒரே வரிசையில் வந்தது கண்ணுக்குத் தென்பட்டது.

அவைகள் ஐம்பது இருக்காது. இருபத்திமூன்று டாங்கிகள் தான் வந்தன. ஏழு டாங்கிகள் புகைந்துகொண்டு பின் தங்கிவிட்டன. அவைகள் அதிவேகமாக வந்தன. அவைகளில் IV என்ற குறிபோடப்பட்டிருந்தது.

7,000 கெஜத்திற்கப்பாலிருந்து, ஒவ்வொன்றும் 75 பவுண்டு கனமுள்ள வெடிகுண்டுகளைக்கொண்டு டாங்கிகள் சுட ஆரம்பித்தன. அவைகள் எங்களை நோக்கிவந்தன. இருந்தபோதிலும் இந்தியப் படைப் பகுதிக்கு உதவியாயிருந்த பிரிடிஷ் பீரங்கிப்படை அவைகளை எதிர்த்து நின்றன

பிறகு கட்டளையிடப்பட்டது. பீரங்கிகளிலிருந்து குண்டுகள் கிளம்பின.

லாரிகளின் மேல்தட்டில் இருந்துகொண்டு பீரங்கிப்படைக்கும் டாங்கிப் படைக்கும் நடக்கும் சண்டையை கவனித்துக்கொண்டிருந்தோம். எங்கள் தலைக்கு மேல் வெடிகுண்டுகள் பறந்து சென்று 130 கெஜத்துக்குள் பூமியில் போய் விழுந்துகொண்டிருந்தாலும் ஒரு மைலுக்குள் நடக்கும் சண்டையைப் பார்த்துக்கொண்டு இருந்தோம்.

டாங்கிகளுக்கு முன்னால் வெடிகுண்டுகள் விழுந்து பாலைவனத்தில் உள்ள புழுதியைக் கிளப்பிவிட்டன. சூரிய பிரகாசத்தில் அந்தக் காக்ஷி ஸ்வர்ண மயமாக இருந்தது. வெடிகுண்டுகள் இன்னும் சமீபத்தில் வெடிக்க ஆரம்பித்தன. டாங்கிகள் புழுதியிலும், டாங்கி பீரங்கிகளிலிருந்து வரும் புகையிலும் மறைந்துவிட்டன.

அந்தப் போரரங்கத்தில் திடீரென்று காற்றடித்தது. ஆகாயம் சுத்தமாயிருந்ததால் இந்த சம்பவம் தெரியவந்தது.

அப்பொழுது மூன்று டாங்கிகள் நெருப்புப் பற்றிக்கொண்டு, அவைகளிலிருந்து புகை கிளம்பி வருவதையும் டாங்கிகள் ஒரு பக்கம் சாய்வதையும் பார்த்தோம்.

என்கூட இருந்த தெற்குப் பிராந்திய வீரர்கள் ஆரவாரம் செய்தார்கள். இரண்டு பேர்களுக்கும் நடந்த யுத்தம் மும்முரமாக இருந்தது.

பெரிய டாங்கிகளில் இரண்டு நேராகத் தாக்கப்பட்டன. மற்றவை தங்களால் பார்க்கமுடியாத கொசுக்களால் கடிக்கப்பட்ட மனிதர்கள் மாதிரி சிதறி ஓடின.

ஒரு மணிக்குள் நாங்கள் பார்க்கும்பொழுது எட்டு அழிக்கப்பட்டன. காலையில் அழிக்கப்பட்டதையும் சேர்த்து பதினைந்து சேதம். மற்றும் இரண்டு நகரமுடியாமல் சேதம் அடைந்தன.

முடிவில் பாக்கியுள்ள டாங்கிகள் தத்தித் தத்தி ஓடின. ஆனால் பீரங்கிகளோ அவற்றைப் பின்தொடர்ந்தன.

பிற்பட்டு நாங்கள் இருக்கும் இடத்தைச் சுற்றி சுரங்க வெடிகள் வைத்திருப்பதை எடுத்து இந்திய ஸாப்பர்கள் ஊர்ந்து சென்று இராக் காலங்களில் ஜெர்மானியர்கள் வந்து சேதமடைந்த டாங்கிகளைப் பழுது பார்த்துக்கொண்டு போய் விடாமல் அழித்துவிட்டார்கள்.

அன்றிரவு டப்பிகளில் அடைக்கப்பட்ட மாட்டு இறைச்சிகூட எங்களுக்கு ருசியாக இருந்தது. அன்றிரவு எதுவும் ருசியாய் இருந்திருக்கும்.

பொதுவாக ஜெர்மன் டாங்கிப் படைக்குத் தலைமை வகிப்பவர்களில் ரோமல் தான் மேன்மையானவர். பிரிடிஷ் பீரங்கிப்படை எங்கள் ஆரவாரத்தின் பலத்தினால் இந்த டாங்கிப் படையைத் தோற்கடித்துவிட்டது.

வேவுகாரர்கள் இரவில் வெளியே சென்றார்கள். தெற்குப் பிரதேசப் படையைச் சேர்ந்த காக்கி உடையை உடுத்தியிருந்தவர்களுடன் பல வர்ண உடைகளைத் தரித்த சிக்கியர்களும், கருமை நிறமுள்ள தாடியுடனும், வெள்ளைத் தலைப்பாவுடனும் பாலைவனத்தில் இருக்கும்பொழுது யுத்தத்தை எதிர்பார்த்திருக்கும் ஜயிக்க



முடியாத இரண்டு கூட்டங்களாகக் காணப்பட்டார்கள்.

கைதிகளைக் கைப்பற்றுவதும் எதிரி காவலாளிகள் வெளியே வந்தால், அவர்களைச் சுற்றிக்கொண்டுவருவதும் தான் அவர்களின் வேலை. சில வாரங்களுக்கு முன் ஆழமில்லாமல் வெட்டியிருந்த அகிழ்களில் குளிருக்காக இராக் காலங்களில் சுற்றி மடக்கிக்கொண்டு தூங்கினோம்.

நாங்கள் எழுந்திருந்தது ஒரு விநோதமானது. 26-ம் தேதி காலை 4-40 மணிக்கு விமான என்ஜின் சப்தம் கேட்டது.

அவை நம்முடையதா அல்லது எதிரியுடையதா என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டு எழுந்திருந்தோம். சீக்கிரத்தில் எங்கள் சந்தேகம் தெளிந்தது. இருட்டு மறைய வெளிச்சம் போடப்பட்டது. இன்னும் இரண்டு ஆகாய விமானங்கள் அவற்றைப் பின் தொடர்ந்தன.

எங்களுடைய நூற்றுக்கணக்கான லாரிகளும் பீரங்கிகளும் பாலைவனத்தில் பிரகாசமாகத் தெரிந்தன. மேல் இருந்து பார்க்கும்பொழுது அந்த அகழ்களின் நிழல் வெள்ளைக் காகிதத்தில் கறுப்புப் புள்ளிகள்போல் தோன்றியது.

ஜெர்மன் விமானங்களின் சப்தம் அதிகரித்து அந்த விமானம் மணிக்கு 500 மைல் வீதம் தரையை நோக்கிப் பாய்ந்தது.

பிறகு யந்திர பீரங்கியினாலும், கை பீரங்கியினாலும் எதிரிகள் சுட்டார்கள். எங்கள் காது அடைத்துப் போகும்படியாக சப்தம் உண்டாயிற்று. 50 அடி உயரத்துக்குள்ளாக, வந்து எதிரிகள் வெடிகுண்டைப்போட்டார்கள்.

ஒரு க்ஷண நேரம் எங்கும் பிரதி பலிக்கும் சப்தம் கேட்டது. எங்கள் அகிழ் மேல் மணலும், பாறைக்கற்களும் வந்து விழுந்தன. குண்டுகளின் சப்தமும், பாறைகள் தகர்ந்து ஒன்றோடொன்று மோதும் சப்தமும் எங்கள் நினைவை இழக்கச்செய்தது.

விமானம் உயர சென்றது. அப்பொழுது தான் நாங்கள் உயிரோடிருப்பதாக உணர்ந்தோம்.

மறுபடியும் எதிரிகள் வெளிச்சம் அடித்தார்கள். நாங்கள் மறுபடியும் மூன்றடி ஆழமுள்ள அகிழ்களின் அடியில் பதுங்கிக்கொண்டோம். அப்பொழுது தனியாயில்லாமல் ஐந்து விமானங்கள் வந்தன.

நாற்பது நிமிஷம் அவர்கள் வெறிகொண்டு தாக்கினார்கள். எங்களுக்கு எப்பொழுதும் திகிலுண்டாகும்படி செய்துவிட்டது. நான் இருந்த பத்தடி நீளமுள்ள அகிழிக்கு அப்பால் 30 அடியிலிருந்த ஒரு லாரி தீப் பற்றிக்கொண்டது. அதை அவர்கள் லக்ஷியமாகக் கருதினார்கள் போலும்.

மறுபடியும், மறுபடியும் அவர்கள் பாய்ந்தார்கள். ஒவ்வொரு தடவையும் முந்தியைக் காட்டிலும் கொடியதாக இருந்தது. முடிவாக கிழக்கு திசையில் வைடூரியத்தின் சாயல் போன்ற லேசான நீலவானம் தோன்றிற்று. பிறகு அது பச்சை நிறமாக மாறிவிட்டது.

பொழுது விடிந்தது, அந்த ஜெர்மன் விமானங்கள் நூறு பவுண்டு வெடிகுண்டுகளை வீசிவிட்டுப்போய்விட்டன. அதை விட்டு நகரமுடியாமல் சோர்வடைந்தும், எங்களுக்கும் காயம் பட்டிருக்கிறதா, இல்லையா என்று தெரியக்கூட இல்லாமல் மயக்கமடைந்தும் சிறிது காலம் அங்கேயே இருந்தோம்.

வெளிச்சம் வர, வர அதிகரித்தது, ரண சிகிச்சைக்குக்கொண்டு செல்லுகிற மோட்டார் ஓட்டிகள், "யாருக்காவது காயம் உண்டா?" என்று கேட்டுக்கொண்டு தோன்றினார்கள். அடுத்த அகிழியிலிருந்த தெற்குப் பிரதேசப் படையைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் "அந்த ஆபாசமான இடைஞ்சல்காரன்கள் காலை டீ அருந்துவதற்கு காலதாமதம் செய்துவிட்டார்கள்" என்று கூவினான்.

நிச்சப்தநிலை கலைந்தது. நாங்கள் அகிழ்களைவிட்டு எழுந்திருந்தோம். துணிகளின் பேரில் அழுக்குப் படிந்திருந்ததைப் பார்த்தும், மேலே விழுந்த கற்களினால் காயங்களைப் பார்த்தும் எங்

களுக்கு சிறிப்புத் தாங்கவில்லை. அப்படி ஒன்றும் மோசம் ஏற்படவில்லை என்று சொல்லிக்கொண்டோம்.

இத்தகைய கொடிய, ஊக்கமான படையைத்தான் பிரிடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. சென்ற நான்கு நாட்களாக நான் இருந்த படையின் சிறு பகுதி ஸிடி ஒமாருக்கு அருகில் ஆயிரம் பேர்களைக் கைதிசெய்தும், 18 டாங்கிகளை அழித்துமிருக்கிறது. ஸிடி ஒமாரைத் தாக்கினதில் ஏற்பட்ட டாங்கி நஷ்டத்தைத் தவிர இந்தப் படைக்கு வேறு நஷ்டமில்லை.

ஆனால் ஒரு விதத்தில் அந்தப் பீடபூமியில் எங்களைச் சுற்றி முற்றுகை போட்டிருந்தார்கள். 26-ம் தேதியிலும் வெடிகுண்டுகள் போடப்பட்டன. நாங்கள் ஸிடி ஒமாரை விட்டுப் போகவில்லை. எங்களுக்கு இருபக்கங்களிலும், ஒன்றிரண்டு இதாலிய பீரங்கிகள் பலமாகப் பதிக்கப்பட்டு இருந்தன. ஜெர்மானியர்களின் கூட்டங்கள் டாங்கிகளுடனும், கவசம் பூண்ட மோட்டார் வண்டிகளுடனும் அந்தப் பாலைவனத்தில் நாலாபக்கங்களிலும் அலைந்து திரிந்துகொண்டிருந்தார்கள்.

26-ம் தேதி காலை தளகர்த்தரைப் பார்த்து "நிலைமை எப்படி இருக்கிறதென்று கேட்டேன்." அதற்கு அவர் "மிருகத்தின் தலையைப் பெட்டியில் அடக்கியாய்விட்டது. வாலினால் மட்டும் அடித்துவருகிறது" என்றார். இந்த நாலு நாள் தீவிரமான யுத்தத்தை தெரியப்படுத்த விரும்பினேன். ஆனால் தந்தி ஆபீஸ் 400 மைலுக்கப்பால் கெய்ரோவில் தானிருக்கிறது.

அன்றிரவு செய்திகளுடன் ஒரு அதிகாரியை அனுப்பப்போவதாகத் தலைமை அதிகாரி சொன்னார். அவருடன் நான் போவதற்கு சம்மதமிருந்தால் போகலாம் என்று அனுமதித்தார். நான் போனேன்.

இரவு வரும்வரை காத்திருந்தோம். பிறகு திசைக் கருவிகளை எடுத்துக் கொண்டோம். அந்த பாலைவனத்தில் ரஸ்தாக்களோ, கை காட்டி மரங்களோ கிடையாது. சமுத்திரத்தில் போவது போல் திசைக் கருவிகளின் உதவியால்தான் போகவேண்டும்.

சுரங்க வெடிகள் வைத்திருந்த இடத்தில் ஜாக்கிரதையாக ஊர்ந்து சென்றோம். அநேக மணிகள் பிரயாணத்துக்குப் பிறகு நாங்கள் ராணுவத் தலைமை முகாமை நோக்கிச் சென்றோம். இராக் காலங்களில் திடீரென்று எதிர்க்காமலிருப்பதற்கு அடிக்கடி வெளிச்சங்கள் ஜெர்மானியர்கள் போட்டுக்கொண்டிருந்தார்கள். வெளிச்சம் குறைவாகிறவரையில் மறைந்து இருந்து பிற்பட்டு அவர்களைத் தாண்டிச்சென்றோம்.

சில சமயம் எங்களுக்கு முன்னால் இரண்டு வெளிச்சங்கள் அடிக்கப்பட்டன. அப்பொழுது மூச்சை அடக்கிக் கொண்டு சப்தம் காட்டாமல் அந்த வெளிச்சங்களுக்கு நடுவில் பிரயாணம் செய்தோம். ஆனால் எங்கள் மோட்டார் சப்தம் அந்த நிச்சப்தமான பாலைவனத்தில் வெகுதூரம் கேட்குமென்று எங்களுக்குத்தெரியும்.

ஒரு சமயம் மூன்று ஜெர்மன் டாங்கிகள் எங்களுக்கு முந்தி சென்றன. நாங்கள் அலைவகளைத் தாண்டி தைரியமாகச் சென்றோம். அவர்கள் எங்களை நிறுத்தவில்லை. இரவு பூராவும் பிரயாணம் செய்து முடிவில் 'கெய்ரோவுக்கு வந்துசேர்ந்தோம். எனக்கு ஒரே ஒரு வருத்தம் என்னவென்றால் சில காரணங்களை முன்னிட்டு அந்தப் படைப் . பகுதிகளின் பெயர்களைச் சொல்லக்கூடாமலிருப்பதுதான்.

பண்டைய காலத்துப் படைப் பகுதிகளின் பெயர் மறைவுபடாமல் இருக்குமிடமான வால்ஹல்லாவில் இப்பொழுதும் பிரிடனில் அவர்களுக்கு இணையான நல்ல பலமுள்ள படைகள் இருப்பதாக தெரியப்படுத்தவேண்டி இந்தப் படைப் பகுதிகளின் பெயரை உறக்கக் கத்தவேண்டும் என்ற ஆவல் எனக்கு இருக்கிறது.



# ஒரு வியாபாரியின் நடைமுதல் விமர்சனம்.

அசாதாரணமான நிலைமையில் J. B. பிரீஸ்டிலி என்பவர் பி. பி. ஸி.யில் பேசியதில் ஒரு பாகம்.

அந்நிய நாடுகளில் ரேடியோக் கேட்கிறவர்கள் நம்மிடமிருந்து முக்கியமாக விஷயங்களையே கேட்க விரும்புவதாக இங்கு அடிக்கடி சொல்லப்படுகிறது. அது முற்றிலும் உண்மையானால், நான் பேசியதில் விஷயங்களைப்பற்றிச் சொல்லாமலிருந்ததால் அதைக் கேட்டவர்களுக்கு நன்றாய் இருந்திருக்காது. நான் அபிப்பிராயத்தைப் பற்றியே பேசியிருந்தேன். ஆனால் விஷயங்களைச் சொல்லாமல் அபிப்பிராயத்தை வெளியிட்டதற்காக தங்களிடம் மன்னிப்பு கேட்பதாக நினைக்கக்கூடாது. இந்த யுத்தத்தில் விஷயங்களைக் காட்டிலும் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அவ்வபிப்பிராயம் எதைக் குறித்ததென்றும் தெரியவேண்டியது அவசியம். இருந்தபோதிலும், விஷயங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பினால் ஒரு முறை நான் உங்களுக்கு விஷயங்களைச் சொல்லுவேன்.

## உயிர்ச்சேதம்.

எதைக் குறித்த விஷயம்? நான் சொல்லக்கூடிய விஷயங்கள் நம்முடைய யுத்த முயற்சியைப்பற்றியும், பின்பு நம்முடைய யுத்த கால வாழ்க்கையைப் பற்றிய விஷயங்கள்தான். முதலில் ஆகாயத் தாக்குதலில் நேர்ந்த உயிர்ச் சேதத்தைச் சொல்லுவோம். இந்த வருஷம் ஆகஸ்டு மாதம் முடியும்வரை இறந்தவர்களின் எண்ணிக்கை 42,943 பேர்களும், பெருங்காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 53,482 பேர்களும் ஆக மொத்தம் 96,425 பேர்கள் சேதம் ஏற்பட்டது. அது ஒரு பெரிய நகரத்தின் ஜனத்தொகையாகும். ஆனால் இதில் ஒரு விசேஷமிருக்கிறது. அந்த 96,000 பேர்களில் அரை டஜன் பேர்கள்கூட எனக்கு நேரில் தெரியாது.

## விமான நஷ்டம்.

யுத்தம் ஆரம்பித்த இரண்டு வருஷங்களில் விமான நஷ்டங்களை எண்ணிப் பார்ப்போம். பிரிடிஷ் விமானப் படைக்கு 3,116 விமானங்கள் நஷ்டம். அச்சு நாடுகளுக்கு 8,045 விமானங்கள் நஷ்டம். ஆனால் நிச்சயமாக அழிக்கப்பட்டதாக தெரிந்தவற்றை மட்டில் கணக்கிடப்பட்டிருக்கிறதே தவிர ரொம்ப சேதமடைந்து அவற்றின் நிலயங்களுக்குப் போய்ச் சேராமல் இருந்தவற்றை கணக்கிடவில்லை. கிட்டதட்ட 10,000 விமானங்கள் அச்சுநாடுகளுக்கு நஷ்டமாயிருக்கும். ஆனால் இவற்றில் ருஷ்யப் போர்முனையில் சேதமான 4,000, 5,000 விமானங்கள் சேரவில்லை. 15,000 விமானங்கள் நம்மால் அழிக்கப்பட்டிருக்குமென்று நிச்சயமாகச் சொல்லலாம். இது கோயரிங்குக்கு பிரமிப்பை உண்டாக்கித்தான் இருக்கும்.

## அவசரத்துக்குத் தகுந்தபடி வேலை செய்யக்கூடியவர்கள்.

ஆகாயத் தாக்குதல்களில் விமானங்களின் வேலை இங்கிலாந்திலும், வேல்ஸிலும் முதல் வரிசையில் தங்கியிருக்க 9,500 ஸ்தானங்களும் இன்னும் 10 லக்ஷம் பேர்களிருக்க இரண்டாவது வரிசையில் தங்குமிடங்களில் இடவசதியும் இருக்கின்றன. சமாசாரம் அறிவிக்க சுமாராக ஆயிரம் இடங்கள் இருக்கின்றன. ஆரம்ப சிகிச்சை செய்ய 1,900 சாஸ்வத நிலயங்களும், 994 பகுதிகள் எங்கும் சென்றுகொண்டிருக்கின்றன. 14,000, 15,000 காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் வண்டிகளும் இருக்கின்றன.

## இறந்தவர்களின் எண்ணிக்கை.

சிசு மரணம் 1,000-க்கு 56 பேர்கள்தான். இது 1938-ம் வருஷத்திற்கு முந்தியுள்ள விகிதத்தைக் காட்டிலும் மிகக்குறைவு. பிரசவத்தில் தாய்கள் இறப்பவர்களின் எண்ணிக்கை ஒரு லக்ஷத்திற்கு 261 பேர்கள். இதுதான் எல்லாவற்றிற்கும் குறைவானது. வரவேற்பு இடங்களில் பிரசவ ஆஸ்பத்திரிகள் யுத்த காலத்திற்குப் புதிதாக ஏற்படுத்தியதினால் இவ்வளவு சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரிகளில் 30,000 குழந்தைகள் பிறந்திருக்கின்றன.

## நிர்வாக நிதியும், வரி விதிப்பதும்.

இப்பொழுது நிர்வாக நிதியை எடுத்துக்கொள்ளுவோம். ஒரு நாளைக்கு யுத்தத்தின் பொருட்டு 1,30,00,000 அல்லது 1,40,00,000 பவுன்கள் செலவாகிறதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவருஷத்திற்கு 1,761,000,000 பவுன்தான்வரி வருமானம். கிரேட் பிரிடனிலுள்ள அமெரிக்கா ஸ்தானத்திலிருந்து பிரசுரிக்கப்படும் ஒரு சிறு பத்திரிகையில் யுனைடெட் ஸ்டேட்ஸில் சாதாரண அமெரிக்கன் செலுத்தும் வரி, சாதாரண பிரிடிஷார் செலுத்தும் வரியைக் காட்டிலும் மிகவும் அதிகம் என்று கண்டிருந்ததை நான் படித்தேன். இது கோயபல்ஸ் விட்ட சரடாகத்தான் இருக்கவேண்டும். இந்த முட்டாள் தனமான கதையைக் கேட்டவர்கள் பின்வரும் சில விஷயங்களைப்பற்றி ஆராயவேண்டும்.

இங்கே சில விஷயங்களை ஒப்பிடுவதற்காகக் குறிப்பிடுகிறேன். நமக்கு வருமான வரி ஒரு பவுனுக்கு பத்து ஷில்லிங். அதாவது சரிபாதி. அதிக வருமானத்திற்கு உபரி வரியுண்டு. 2,000 பவுனுக்கு மேல் ஒவ்வொரு 500 பவுனுக்கும் 2 ஷில்லிங் வீதமும், அந்தப்படியே 9 ஷில்லிங் 6 பென்ஸ் வரை அதிகரிக்கும். இது பவுனுக்குப் பத்து ஷில்லிங்குக்குமேல் கணக்கிடவேண்டியது. யுத்தத்திற்கு முன் நான் ஒரு வருஷத்தில் எவ்வளவு தொகை செலவழித்து வந்தேனோ அதேப்படி இப்பொழுதும் செலவழிக்க வேண்டுமானால் ஒரு வருஷத்திற்கு நான் 70,000 பவுன் சம்பாதிக்கவேண்டும். இப்பொழுது அரசாங்கத்தார் எனக்கு விதித்திருக்கும் வரியைச் செலுத்த தினசரி மூன்றில் இரண்டு பங்கு வேலை செய்துவருகிறேன். பாக்கியுள்ள மூன்றில் ஒரு பங்கு பாகம் நம்மை யறியாமல் செலுத்தவேண்டிய வரிக்குச் செல்லாகிவிடுகிறது. ஆடம்பரமான சாமான்கள் வாங்குவதற்கு வாங்குபவர்கள் கொடுக்கவேண்டியது $33\frac{1}{3}$ சதவிகிதம். அவசியமான சாமான்களுக்கு மொத்த மதிப்பிலிருந்து $16\frac{1}{3}$ சதவிகிதம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இன்னும் சுத்திசெய்த பெட்ரோல் எண்ணெய், புகையிலை, சாராயம் இவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் வரியோ அபரிமிதம். இன்னும் உற்பத்தி செய்கிறவர்கள் யுத்தத்திற்குமுன் திட்டத்திற்குமேல் கிடைக்கக்கூடிய லாபத்திற்கும் 100 சத வீதம் வரி கொடுக்கவேண்டும். இவ்விதம் வரி செலுத்துவதில் நாங்கள் சந்தோஷமாயிருக்கிறோமே தவிர முணுமுணுப்பதில்லை. ஆதலால் அமெரிக்கர்கள் பிரிடிஷாரைக் காட்டிலும் அதிகம் வரி கொடுப்பதாக எண்ணிவிடக்கூடாது. இன்னும் நமக்கு ஏற்பட்டிருக்கும் வரி இன்னதென்று அவர்களுக்குத் தெரியாது.

---



## யுத்தம் பிரிடனில் ஜனநாயகத்தை நிலையெடுக்காமல் செய்கிறதா?

## பிரசித்திபெற்ற அமெரிக்கப் பத்திராதிபர், 'இல்லை' என்கிறார்.

## ஒருவித பொதுவுடைமை அடைய மார்க்கம்.

## ஜனங்கள் அவரவர்களின் ஸ்வதந்திர பாத்தியத்துடனே இருக்கக்கூடிய உரிமைகள்.

[பிரசித்தி பெற்ற அமெரிக்க பத்திராதிபரும், ஒலிபரப்பில் பேசுபவருமான டோராதி தாம்ஸன் என்பவர் "டெய்லி மெயில்" பத்திரிகையில் எழுதியது].

"லேடீஸ் ஹோம் ஜர்னல்" பத்திராதிபரின் அனுமதியின்பேரில் பிரசுரித்தது.

பிரிடனில் நான் பார்த்ததில் எது என் மனதில் பதிந்தது என்று கேட்டால் உடனே நான் பதில் சொல்லக்கூடும். பிரிடனில் ஜனநாயகம் அதிகரிக்கிறதே தவிர குறைவுபடவில்லை. ஜனங்கள் நாடுகளை கவனிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கட்டு ஆஸ்தியிலிருந்து நாடுகள் விடுவிக்கப்பட்டன. பிரபுத்வம் இப்பொழுது இல்லை.

இந்த யுத்தத்திற்குப் பிறகு ஸ்வதந்திர தேசத்தார்கள் யுத்தத்தில் ஜயம் பெறுவார்கள் என்று நம்பிக்கைகொண்டு பிற்பாடு சமூக வாழ்க்கை எப்படி அமையுமென்று இங்கிலாந்திற்கு வெளியேயுள்ள தேசங்களில் பலவிதமாகப் பேசப்பட்டுவருகிறது. பெரும்பாலும் இங்கிலாந்து பொதுவுடைமை நாடாக ஆகிவிடும் என்றும் சொல்லப்படுகிறது. ஜோஸப் கனடி என்பவர் "பிரிடனில் இனிமேல் ஜனநாயகம் இருக்காது. தேசீய பொதுவுடைமைக் கொள்கை ஏற்பட்டுவிடும்" என்று யாவருக்கும் சொன்னது நமக்கு ஞாபகம் இருக்கிறது. மற்றும் சிலர் பழைய பள்ளிக்கூட வாசனைதான் மறுபடியும் ஏற்படுமென்று சொல்லுகிறார்கள். இன்னும் சிலர்கள் யுத்தத்திற்குப் பிறகு முற்றிலும் பொதுவுடைமை நாடாக பிரிடன் ஆகிவிடுமென்று சொல்லுகிறார்கள்.

## என்ன சம்பவிக்கிறது.

இனிமேல் என்ன சம்பவிக்குமென்று தெரிந்துகொள்ள இப்பொழுது நடப்பதை கவனிக்கவேண்டும். இப்பொழுது பிரிடனில் நடப்பதைப்பார்க்க ஜனநாயகத்தின் குருவான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மூன்றாவது ஜனாதிபதியான தாமஸ் ஜெபர்ஸன் என்பவரின் உணர்ச்சியைப்போல் பரவிவருகிறது. அது கார்ல் மார்க்ஸ் அல்லது ஹிட்லர் இவர்களின் உணர்ச்சியைக்காட்டிலும் பிரிடனில் அதிகமாகக் காணப்படுகிறது. பிரிடனில் பொதுவுடைமை என்றால் 'வாழ்க்கை இதைக்காட்டிலும் எல்லோருக்கும் நலமாகவும் உற்பத்தி சாதனங்களில் எல்லோருக்கும் சமமாகவும் இருக்கும். உலகத்தார்களுக்கும் அம்மாதிரியாகும். ஆனால் அரசாங்க நிர்வாகமே தொழில், வாழ்க்கை, அபிப்பிராயம் இவற்றைத் திட்டப்படுத்தக்கூடிய பொதுவுடைமை பிரிடனில் ஏற்பட்டு விடுமென்ற சிந்தனையேயில்லை. பழைய வழக்கங்களையும், அபிப்பிராயங்களையும் சலுகைகளையும் மாற்றும்படியாகிவிட்டது. ஜனங்களே உத்ஸாகத்தையும், அதிகாரத்தையும் தாங்களாகவே கைப்பற்றுகிறார்கள்.

## முணுமுணுக்கும் உரிமை.

ஒரு சமயம் காமன்ஸ் சபையில் முணுமுணுக்கும் உரிமையைப் பெறுவதற்கு சண்டையிடப்போவதாக ஹாலிபாக்ஸ் பிரபு அறிவித்தார். அந்த உரிமை கைவிடப்படவில்லை. இப்பொழுது அடிக்கடி பிரச்னைகளுக்கு அரசாங்கம் பதில் சொல்லுவதுபோல் எப்பொழுதும் சொல்லவேண்டியதில்லை. தற்காப்பு சாதனங்

கள் பிரிடனில் தானாகவே உண்டாகி பொதுமக்களாகவே திறமையுடன் செய்யப்பட்டுவருவது வியப்பைத் தருகிறது. பிரான்ஸ் தோற்றவுடன் தேசத்தாருக்கு ஏற்பட்ட நிகரற்ற சம்பவம் ஏற்பட்டபொழுது பிரிடன் படையெடுக்கமுடியாத நிலைமையில் இருந்தது. ஆனால் கவர்ன்மெண்டில் சம்பளம் வாங்காத ஆண், பெண்கள்தான் அந்த நெருக்கடியில் சாதுர்யம், வளைந்துகொடுப்பது, பின்னுக்குப் போகுதல் முதலிய காரியங்களைச் செய்தார்கள். தேவைக்குத் தகுந்தபடி பொது ஜனங்கள் சுதாவாகவே நிர்வாகம் ஏற்படுத்தினபடியால் அரசாங்கத்தாரால் செய்யமுடியாதது இப்பொழுது சாத்தியமாகிவிட்டது.

## தொழிலும் நிர்வாக சமரசமும்.

ஆண் பெண்கள் வேலை செய்வதின் நிபந்தனைகளில் தொழிற்சாலைகளும், வர்த்தக சங்கங்களும் ஏதாவது முடிவுக்கு வரவேண்டியிருந்தால், கப்பல் வேலைக்காரர்களும், தொழிலாளர்கள் சங்கமும் சேர்ந்து ஆலோசனை செய்தமேல்தான் முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கிறது. பிரிடன் தேசச் சரித்திரத்தில் தொழிலாளிகளுக்கும், அரசாங்க நிர்வாகத்துக்கும் உள்ள சம்பந்தம் முந்தியைக் காட்டிலும் அதிகம். யுத்தத்திற்குப் பிறகு பிரிடனிலுள்ள தொழிற்சாலைகள், நிலங்கள், மேச்சல் ஸ்தலங்கள் சுரங்கங்கள், கப்பல்கள் எல்லாமே பிரிடனின் பலத்தையும், சுபீக்ஷத்தையும் பூராவாக அதிகரிக்கச் செய்வதற்கே உபயோகப்படுத்தவேண்டுமென்று பிரிடிஷ் பொதுமக்கள் எண்ணுகிறார்கள். அதாவது முந்தியைக்காட்டிலும் ஆரோக்கியம், சுகாதாரம், ஜனங்கள் வசிப்பதற்கு வசதி இவற்றிற்கு அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

## அதிக ஜனங்கள் இப்பொழுது சந்தோஷமாயிருக்கிறார்கள்.

இப்பொழுதுள்ள நிலைமை ஜனங்கள் சொத்துக்குப் பாத்தியமுள்ளவர்களாக இருப்பதற்காகவாவது, மந்திரி சபைகளைக்கொண்டு நடத்தும் அரசாங்கத்துக்காவது, அல்லது தன்னரசு நாடாகவாவது ஒத்துமையாயிருக்காதென்று ஒருவரும் நம்பவில்லை. யுத்தத்திற்கு முன் பயமடைந்த காலத்தைக்காட்டிலும் இப்பொழுது பிரிடனிலுள்ள ஜனங்கள் யுத்த காலத்தில் சந்தோஷமாயிருக்கிறார்கள். ஏனென்றால் கோடிக்கணக்கான ஜனங்கள் தாங்கள் உபயோகமுள்ளவர்களாக இருப்பதாகவும், தங்கள் உதவியும் தேவையென்றும் பிரிடனும் மற்ற உலகத்திலுள்ள தேசங்களும் வருங்காலத்தில் ஸ்வதந்திரத்துடன் இருப்பதற்கு அவரவர்க்குத்தெரிந்தபடி உதவி செய்வதாக உணர்ந்திருக்கிறார்கள்.

உணர்ச்சியும், நிர்வாகமும், ஒவ்வொருவரையும் தன் சௌகரியத்திற்கும் தேசத்தார்களின் சௌகரியத்திற்கும் வேலை செய்வதற்கு அவகாசம் கொடுத்திருக்கிறது. அதனால் ஒவ்வொருவரும் தங்களுக்கு முடிந்தவற்றைச் செய்வதற்கு சாத்தியமாக இருக்கிறது. இப்படியிருப்பதுதான் உண்மையான ஜனநாயகம்.

## சாதாரண மனிதன் செய்யக்கூடியது.

இந்தக்காலத்து தேச சரித்திரம் எழுதி முடித்தபொழுது தேசத்தார்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியை தவிர்க்க முடியாதபடி சென்ற 20 வருஷத்தில் தேசத் தலைவர்கள் கெடுதலாக நடந்துகொண்டதினால் பிரிடன் அழியக்கூடிய நிலைமையில் வந்துவிட்டது. அது சந்தர்ப்பத்தில் ஜனங்கள் புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் பலமும் அதிகரித்து ரகஸியப் போலீஸாரும், நாஸிப்படைகளும் ஆக்கிரமிக்காமல் காப்பாற்றப்பட்டது என்று சொல்லப்படும். பிரிடனில் ஜனநாயகம் அழிவதாக இருந்தால் பிரிடிஷார் தங்கள் வசம் உள்ள பொருள்களைக்கொண்டு ஹிட்லருடன் சண்டையிடவில்லை என்ற காரணத்தினால் ஏற்படமாட்டாது. பிரிடிஷார் சண்டையில் தோல்வியடைந்து உலகத்தில் உள்ள பெரிய ஜனநாயக தேசமும், மற்றுமுள்ள ஸ்வதந்திர தேசத்தாரும் தேவையான உதவியைச் செய்யாமல் விட்டுவிட்டால்தான் ஜனநாயகம் அழிந்து போகும்.



## [illegible] பயமுறுத்துதல்.

## பெல்கிரேட் பிரஜைகள் பூராவும் கைதியாக்கப்பட்டனர்.

## கொரில்லாப் படைகள் சரண்புகாவிடில் ஜெர்மன் பாய்ச்சல் விமானங்களும், பீரங்கிப் படையும் தாக்கநேரிடும்.

யூகோஸ்லாவியாவில் ஜெர்மன் அட்டூழியங்கள் அளவிடமுடியாது, என்று டெய்லி மெயில்" பத்திரிகையில் G. வார்டு பிரைஸ் என்பவர் எழுதியுள்ளார். பெல்கிரேட் பிரஜைகள் பூராவையும் யுத்தக் கைதிகளாக்கி, கொலைசெய்ய ஜெர்மானியர்கள் எத்தனிப்பதாக, உண்மையான தகவல் கிடைத்திருப்பதாக யூகோஸ்லாவியா மந்திரி, தளகர்த்தர் தூஸன் ஸிமோவிச் சொன்னார். அவ்விதம் யுத்தக் கைதிகள் 3,00,000 பேர்கள் இருக்கும் என்றும் குறிப்பிடுகிறார். டால்மேஷியன் கடற்கரை வரையில் வியாபித்திருக்கும் மலைகளின்மேலிருந்துகொண்டு, தளகர்த்தர் மிகைலோவிச் என்பவரின் தலைமையின்கீழ் யூகோஸ்லாவியத் துருப்புகள், தங்கள் தேசம் ஸ்வதந்திரம் அடையவேண்டி போரிடுகின்றனர். மேற்சொல்லிய விதமாக யுத்தக் கைதிகளை கொலை செய்வதினால் யூகோஸ்லாவியத் துருப்புகள் சரண்புகுந்துவிடலாம் என்று ஜெர்மானியர் நம்பினார்கள்.

"லண்டனிலிருக்கும் யூகோஸ்லாவியாத் அரசாங்கம், பிரிடிஷ் அயல்நாட்டு மந்திரியான மிஸ்டர் ஈடனிடம் நாஸிகள் தயார் செய்துவரும் அட்டூழியங்களைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறது. நாங்களும் வாஷிங்டன், வாடிகன் நகரம் இவைகளிலிருக்கும் எங்கள் பிரதிநிதிகளை நாஸியர்களுடைய அக்கிரமச் செயல்களை நிறுத்துவதைப்பற்றிக் கேட்கும்படி வற்புறுத்தியிருக்கிறோம்.

"மலை முடுக்குகளிலுள்ள யூகோஸ்லாவியாத் துருப்புகள், அங்கு வியாபித்திருக்கும் ஏழு ஜெர்மன் பகுதிகள எதிர்ப்பதை பலமாகத் தடுத்துவருகிறார்கள். இப்பொழுது ஜெர்மானியர்கள் அவர்களைத் தோற்கடிக்கலாம் என்று கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டனர். அதனால் கொள்ளைக்காரர்கள் எவ்விதம் வழிப்போக்கர்களை பலவந்தப்படுத்துவார்களோ அவ்விதம் ஜெர்மானியர்கள் செய்யப் பிரயத்தனப்படுகிறார்கள். யூகோஸ்லாவியாவின் தலைநகருக்குச் செல்லும் ஒவ்வொரு ராஜபாதையிலும் பீரங்கிப் படைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பீரங்கிகள் அந்தந்த ஸ்தானங்களில் நாலா பக்கங்களிலும் வைத்தவுடன் யூகோஸ்லாவியத் துருப்புகள் சரணடையும்படி கேட்கப்படுவார்கள். அதற்கு, அவர்கள் மறுத்துவிட்டால், ஸ்தூக்கா பாய்ச்சல் பாம்பர் விமானங்கள் அந்நகரெங்கும் மேலிருந்து குண்டுகளைப் பொழியும். அங்குள்ள கட்டடங்கள் சென்ற ஏப்ரல் மாதத்தில் விமான எதிர்ப்பால் அழிந்துபோனதுபோக எஞ்சியிருப்பவைகளைக் குறிவைத்து நாலா பக்கங்களிலிருக்கும் பீரங்கிகளிலிருந்து குண்டுகள் புறப்படும். மேலும் தப்பி ஓடுகிறவர்கள் யாவரும் வெட்டி வீழ்த்தப்படுவார்கள்.

"நான்டிஸ், பொர்டாக் என்ற இடங்களில் இரண்டு ஜெர்மன் உத்தியோகஸ்தர்களை கொலை செய்ததற்காக சமீபத்தில் நூறு பிரஞ்சுக்காரர்கள் கொலை செய்யப்பட்டனர். இதைக் கண்டித்து பிரிடனில் ரொம்பவும் கடுமையாகப் பேசப்பட்டிருக்கிறது. சென்ற கோடை காலத்தில் யூகோஸ்லாவியாவில் 12,000 யுத்தக் கைதிகள் கொலை செய்யப்பட்டனர். கிரகுஜீவா (Kragujeva) என்ற பட்டணத்தில் 26 ஜெர்மன் சிப்பாய்களைக் கொன்றுவிட்டதாகச் சொல்லிக்கொண்டு, 2,600 மனிதர்கள் ஸ்திரீகள், குழந்தைகள் ஈவிரக்கமில்லாமல் கொலை செய்யப்பட்டனர். இன்னும் பலிகொடுக்கவேண்டியது பாக்கியிருந்தால் அங்குள்ள சிறு பையன்களையும் சிறு பெண்களையும் பள்ளிக்கூடங்களிலிருந்து கொண்டுவந்து வெளிப்புறத்தில் ஒரு மூலையில் அடையப்போட்டு அவர்கள்மேல் யந்திரபீரங்கிகளைப் பிரயோகித்தார்கள்" என்று தளகர்த்தர் ஸிமோவிட்ச் சொன்னார்.

# பிரிடிஷ் விமானப்படையில் இந்தியர்கள்.

(ஒரு விமான அதிகாரி எழுதியது.)

இங்கிலாந்தில் விமானப்படையில் பல இந்தியர்கள் சேர்ந்திருக்கின்றனர். யுத்தம் ஆரம்பித்ததுமுதல் இங்கிலாந்திலிருந்து திரும்பிவராத 500 இந்திய மாணவர்களில் 100 பேர் சேர்ந்திருக்கின்றனர். மீதியுள்ளோர் இனி சேர்க்கப்படுவார்கள். இந்த 100-ல் 40-பேர்கள் ஆபீஸர்களாக இருந்து விமானிகளாகவும், இஞ்ஜினியர்களாகவும், தகாப்பாசப் போதகர்களாகவும் இருக்கின்றனர். சிலர் உலகிலேயே மிகவேகமாகச்செல்லக்கூடிய விமானிகளாக இருக்கின்றனர்.

விமான சஞ்சாரத்தில் ஏற்படக்கூடிய ஆபத்தும் அபாயமும் நிறைந்த வாழ்க்கை இவர்களுக்குத் திருப்திகரமாக இருக்கிறதாகவே காணப்படுகிறது. இதர கலா பயிற்சிகளை சிறிதுகாலம் நிறுத்திவைத்து கடுமையான வாழ்க்கையில் ஈடுபட்டு, ஜாதி வித்தியாசம் பாராட்டாமல், திட்டமான ஆகாரம் உட்கொண்டு யாவருடன் சிநேகமாக இருக்கின்றனர்.

## கடும்யுத்தத்தில் ஈடுபடுவதில் ஆசை.

இந்திய மாணவர்களுக்கு இதில் அதிகமான ஆசையிருப்பதாகவும், பரிக்ஷைகளில் நன்கு தேறுவதாயும் விமான மேலதிகாரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். யுத்தப்பிரதேசத்திற்குச் செல்லுவதற்கு இங்கிலிஷ் மாணவர்களுக்கு எவ்வளவு ஊக்கமிருக்கிறதோ அவ்வளவு ஊக்கம் இந்தியர்களுக்கும் இருக்கிறது. இரவு நேரம் விமானச்சண்டைகளுக்குத் தேவையான கூர்மையான பார்வையும், தைரியமும் இந்தியர்களிடம் காணப்படுகின்றன. பொதுவாக விமானிகளுக்குத் தேவையான முன்னேறும் தைரியமும் துணிச்சலும் அதிகம் உண்டு. மற்றும் சிலர் படையெடுப்புகளுக்கு லாயக்காக விமானங்களை இந்திய இஞ்ஜினியர்கள் இருந்து ஏற்பாடுசெய்கின்றனர். படையெடுப்புகளில் ஈடுபட்டு புகழ் அடைய முடியாதபோதிலும் விமானங்களை சரியானநிலைமையில் இவர்கள் வைப்பதால்தான் சண்டையில் பழுதான விமானங்களும் விமானிகளும் பத்திரமாகத் திரும்பி வருகின்றன. கெட்டிக்காரர்களான இந்தியர்கள் தரையிலேயே இருந்து இம்மாதிரியான சிலமுக்கிய அலுவல்களைப் பார்க்கின்றனர்.

## விமானப் பயிர்ச்சி பரிக்ஷையில் தேராத பையன்.

ஒருசமயம் விமானிகளுக்கு கொடுக்கப்பட்ட ஆரம்ப பயிர்ச்சியில் ஒரு இந்திய மாணவன் தேரவில்லை. ஆனால் மற்றும் சில மணிநேரம் உபரியாகப்பறப்பதற்கு சந்தர்பம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதிகாரிகளும் இவனது உத்ஸாகத்தைக்கண்டு இவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்தனர். உடனே பரிக்ஷையில் தேறிஸ்பிட் பையர் விமானத்தை ஓட்டிச்செல்லுகிறான்.

மற்றொரு இந்தியன் பாம்பர் படையில் உதவி விமான ஓட்டியாக இருந்து பலதடவைகளில் எதிரி பிரதேசங்களின்மேல் சஞ்சரித்திருக்கிறான்.

வேறு இரண்டு இந்தியப் பையன்கள் சேர்ந்து, ஒரு விமான நிலயத்தில் பயிர்ச்சிபெற்றனர். மூன்று மாதங்கள் கழிந்தவுடனேயே அவர்கள் புகழ் எங்கும் பரவி பரிக்ஷையில் அவர்கள் தேறுவதே பேச்சாக இருந்தது. "யார் இம்மாதம் முதலாவதாக வரப்போகிறார்கள்" என்று இங்கிலீஷ் பையன்களுக்கிடையேயும் பேச்சு நடந்துவந்தது.

பிரிடிஷ் விமானப்படையின் முக்கியத்துவத்தை பிரிடிஷ் மக்கள் உணர்ந்து அதற்குத் தேவையான முஸ்தீப்பைச் செய்துவருகின்றனர். இந்தியப் பையன்களின் க்ஷேமத்தையே அதிகாரிகள் கவனித்துவருகிறார்கள் என்பதை இந்தியப் பெற்றோர் நிச்சயமாக நம்பியிருக்கலாம். அவர்களுக்குக் கொடுக்கும் ஆகாரம்



முதன்மையாக வைக்கப்படுகிறது. காய்கறி உணவு தின்கிறவர்களுக்குத் தக்கவாறு அதேவிதமாகக் கொடுக்கப்படுகிறது. சுருங்கச்சொல்லில் பொதுஜனங்களைக் காட்டிலும் விமானப்படையில் இருப்பவர்களுக்கு நல்ல உணவே கொடுக்கப்படுகிறது.

இந்திய விமானிகள் நீல ஆடைகளை அணிந்து "இந்தியா" என்ற அடையாளத்தை இடதுதோளில் வைத்துக்கொண்டு திடசரீரத்துடன் மற்ற குடியேற்ற நாடுகளில் இருந்துவந்த விமானிகளுக்கு பக்கத்தில் நின்றுகொண்டு கௌரவமாக சண்டைசெய்து வருகின்றனர். முக்கிய சந்தர்பங்களில் அமர்த்தப்படுகிறார்கள். எல்லாமரியாதையும் பெறுகிறார்கள். நேர்த்தியான கிளப்புகளிலும், ஹாஸ்டல்களிலும் இங்கிலாந்து பூராவும், ரஜா காலங்களில் இவர்கள் தங்குவதற்கான வசதி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பிரிடிஷ் விமானப்படையில் இந்தியர்கள் சேர்ந்து யுத்தம்செய்வது மிகவும் நன்மையாக இருக்கும்.

---

# அச்சுநாட்டு ஒலிபரப்புப் பொய்களும் அவைகளுக்கு மறுமொழிகளும்.

---

## இந்தியாவுக்கும், சமீபக்கிழக்கு நாடுகளுக்கும் செய்யும் ஒலிபரப்பின் வியாக்கியானம்.

## *டிஸம்பர் 7—14, 1941.*

### மாறுதலில்லாதது.

"கிழக்கு ஆசியாவில் ஆட்டங்கொடுக்காத நிலைமை ஏற்படவேண்டும் என்றும், உலக அமைதி ஏற்படவேண்டும் என்றும் ஜப்பான் மாறுதலில்லாத கொள்கையைப் பின்பற்றி வருகிறது. எல்லா தேசத்தினருடனும் சிநேக பாவத்துடன் இருக்கவேண்டும் என்ற அதன் தேசீயக் கொள்கையை ஜப்பானிய அயல் நாட்டுக் கொள்கை பூர்த்திசெய்வதேயாகும்."

முக்டென் சம்பவத்திற்குப் பிறகு ஜப்பானியர்கள் மஞ்சூரியாவை ஆக்கிரமித்துக்கொண்டார்கள். அது சுமார் ஒன்பது வருஷமிருக்கும். அது முதல் கொண்டு அங்கு நிலைத்த நிலைமையும் சமாதானக்கொள்கையும் ஆரம்பித்தன. 1937-ம் வருஷத்தில் அதே மாறுதலில்லாத கொள்கையை முன்னிட்டு சைனா தாக்கப்பட்டது. நாலரை வருஷத்திற்கு முன் சைனா சம்பவம் ஆரம்பித்தது முதல் அதன் துறைமுகங்களை இழந்துவிட்டது. அதன் பிரதேசத்தில் பெரும்பான்மையும் இழந்துவிட்டது. கோடிக்கணக்கான சீனர்கள், ஆண்களும், பெண்களும் கொல்லப்பட்டனர். சுங்கிங்கிலுள்ள தேசீய அரசாங்கத்திற்கு எதிரிடையாக தேசத்துரோகி வாங்சிங்வே தலைமையின்கீழ் ஜப்பானியர்களின் அதிகாரத்திற்குட்பட்ட பொம்மை அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தோ-சீனாவில் பிரஞ்சுக்காரர்களுடைய பலஹீனத்தால் அங்குள்ள ராணுவ சாதனங்களைக் கைப்பற்றிக் கொள்ளவும், அதன் வியாபாரத்திற்கு

நெருக்கடி உண்டாக்கவும் முடிந்தது. இப்பொழுது "எல்லா தேசத்தினிடமும் சிநேகம செய்துக்கொள்ளுவதாகச் சொல்லிக்கொண்டு தாய்லாந்தை படையெடுத்து கிரேட் பிரிடன், யுனைடெட் ஸ்டேட்ஸ் இவைகளின் பேரில் திடீர் என்று வஞ்சகமாகத் தாக்கிற்று."

## நீதியின் புது அமைப்பு.

"எங்கள் அரசனுக்கு நற்குணங்கள் இருப்பதால் எங்கள் சாம்ராஜ்யப் படைகள் எங்கு சென்றாலும் அவர்களுக்கு வெற்றிகிடைக்கிறது."

(ஆங்கிலத்தில் ஜப்பானிய செய்தி, டிஸம்பர் 8, 1941.)

## இரண்டுவிதமான புளுகுகள்.

(இது ஒரு புளுகு).

"கிழக்கு ஆசியப் பிராந்தியங்களில் ஜப்பான் தலைமை ஸ்தானம் வகிக்க, போரிட்டுவருகிறது."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் நடமுறை பேச்சு, டிஸம்பர் 7, 1941.)

"கிழக்கு ஆசியாவில் ராஜ்யங்களைப் பிடிப்பதற்கு ஜப்பானுக்கு ஆசையில்லை. பக்கத்து நாடுகள் ஸ்வதந்திரம் வகிக்கவும் தங்கள் இஷ்டப்படி அரசாங்கம் நடத்தவும் ஜப்பான் உதவி செய்வதற்கே நோக்கம் கொண்டிருக்கிறது."

(ரோம் ஒலிபரப்பு, டிஸம்பர் 9, 1941.)

(அது ஒரு புளுகு.)

"சுருங்கச் சொல்லில் ஜப்பான் தான் நிலைத்திருப்பதாகவும் தற்காப்புக்காகவும், இந்த யுத்தத்தை நடத்துகிறது."

(ஆங்கிலத்தில் ஜப்பானிய செய்தி, டிஸம்பர் 10, 1941.)

"கிழக்கு ஆசியாவில் ஜப்பான் போய் வியாபிக்கவேண்டிய பிரதேசத்திற்காகப் போரிடுகிறது."

(அச்சு நாட்டு ஒலிபரப்பு, டிஸம்பர், 1941.)

'பிரிடனையும் யுனைடெட் ஸ்டேட்ஸையும் தாக்க இதுவரை தேசத்தார்கள் பொருத்திருந்தார்கள்."

(ஜப்பானிய ஒலிபரப்பு, டிஸம்பர் 14, 1941.)

## குழப்பச் செய்திகள்.

"இந்த யுத்தத்தின் பழி யுனைடெட் ஸ்டேட்ஸிலிருக்கும் யுத்த வெறி கொண்ட பிராங்கிளின் ரூஸ்வெல்டைச் சார்ந்தது."

(ஆங்கிலத்தில் ஜப்பானியச் செய்தி, டிஸம்பர் 8, 1941.)

"ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸும் சேரும்படி கிரேட் பிரிடன் செய்யும் பிரயத்தனங்கள் உலகத்தார் பூராவுக்கும் தெரியும்."

(ஆங்கிலத்தில் ஜெர்மன் சமாசாரம், டிஸம்பர் 7, 1941.)

"இந்த யுத்தத்திற்கு இங்கிலாந்து தான் பொறுப்பாளி. இங்கிலாந்து தான் வட அமெரிக்கரை சண்டையிடும்படி எப்பொழுதும் தூண்டிக் கொண்டிருந்தது."

(இதாலியிலிருந்து வங்காள பாஷையில் வாரயுத்தக் குறிப்புகள், டிஸம்பர் 11, 1941.)

அமெரிக்க ஜனாதிபதியின் யுத்த வெறியினால் பயனாக கிழக்கு ஆசியாவில் ஜப்பானியர்களுக்கும், அமெரிக்கப் படைகளுக்கும் முதன் முதலாக போர் ஆரம்பித்துவிட்டது. தன் ஜனங்களையும் போரில் ஈடுபடும்படி யுத்த வெறி கொண்ட 1-ந. பேர்வழி, ஜனாதிபதி செய்துவிட்டார்.

(ஜெர்மன் ஒலிபரப்பு டிஸம்பர் 7, 1941.)



## உண்மை வெளியாகிறது.

1941-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 8-ம் தேதி ஹிந்துஸ்தானியில் வெளிவந்த ஜெர்மன் சமாசாரத்தில் இந்த யுத்தத்திற்கு பிரிடிஷ் பிரதம மந்திரியும், அமெரிக்க ஜனாதிபதியும் சேர்ந்து பொறுப்பாளிகள் என்று சொல்லப்பட்டிருந்தது. சென்ற வருஷத்தில் இதாலி உண்மையை வெளியிட்டதை அதிக வேலையால் சோர்வடைந்திருக்கிற கோயபல்ஸ் மறந்து விட்டார் போலும்.

1940-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 2-ம் தேதியில் ரோம் ஒலிபரப்பில் உண்மை வெளியிடப்பட்டது. அதாவது "இதாலியர்கள் நோக்கத்திற்கு சமமாகவே ஜெர்மானியர்களும் 1939-ம் வருஷத்தில் பழிக்குப் பழிவாங்குவதற்காகவே போர் துவக்கினார்கள்." இதாலியர்களும் மத்தியதரைக்கடலில் ஸ்வதந்திரம் அடையவேண்டி இங்கிலாந்தின் பேரிலும் போர் துவக்க வேண்டுமென்பதை விரும்பினார்கள்.

## கிட்டாத வெற்றி.

சென்ற அக்டோபர் மாதத்தில் நிச்சயமாக வெற்றி கிடைக்குமென்று கோயபல்ஸ் நம்பியிருந்தார். ஆனால் எப்பொழுது கிடைக்கும் என்பதைப்பற்றி அவரால் சொல்லக்கூடவில்லை. ரிப்பன்டிராப் 30 வருஷங்களில் கிடைக்கலாம் என்று நவம்பர் மாதத்தில் ஜெர்மானியர்களுக்கு அறிவித்தான்.

சென்ற வருஷம், டிஸம்பர் மாதம் 10-ம் தேதி ரோம் ஒலிபரப்பில் வெற்றி சமீபித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. நாஸி எமானிகளுக்கு 1940-ம் வருஷம் முடிவடைவதற்குள் வெற்றி கிடைத்துவிடும் என்று ஹிட்லர் அறிவித்தான். 1940-ம் வருஷத்தில் பிரிடன் இடங்கொடுக்காமல் இருந்ததால், வெற்றி காலம் 1941-ம் வருஷத்திற்கு நீடிக்கப்பட்டது. ஆனால் இந்த வருஷத்தில் அவன் திட்டங்களில் ருஷ்யா குறுக்கிட்டது. இப்பொழுது ஜயமிருக்குமிடம் கோயபல்ஸின் கழுகு கண்களுக்குக்கூட புலப்படவில்லை.

டிஸம்பர் மாதம் 11-ம் தேதி ஹிட்லர் பேசியதில் சொன்னதாவது. "இந்த யுத்தம் கடைசிவரை போரிட வேண்டித்தான் இருக்குமென்று ஆரம்பத்திலேயிருந்தே வியக்தமாகத்தெரியும். சென்ற ஒரு வருஷத்தில் சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அடுத்த வருஷத்தில் பெரிய முடிவுகள் ஏற்படலாம்" இந்தத்தொனியில் வழக்கத்தைப்போலில்லாமல் எவ்வளவு மாறுதல் இருக்கிறது. இனி ஜயம் கிடைக்குமென்ற நம்பிக்கையில்லை; "முடிவு வரை போரிட வேண்டும்." ஜெர்மனிக்குக் கோரமானமுடிவுதான்!

1942-ம் வருஷத்தில் கூட "பெரிய நிகழ்ச்சிகள்" ஏற்படுமென்று ஹிட்லர் சொல்லுகிறாரே தவிர வெற்றிகிடைக்குமென்று சொல்லவில்லை யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்தத்தில் இறங்கியவுடன் ஹிட்லருக்கும் அவன் கொள்ளைக் கூட்டத்தாருக்கும் தோல்வி கிட்டி விடுமென்று தெரிந்துவிட்டது.

"உள்நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜெர்மானியரும் ஜெர்மனியின் பொது ஸ்தாபன நபர் ஒவ்வொருவரும் இப்பொழுது எல்லாம் போய்விட்டதென்று சொல்லுவார்", என்று ஆடோஸ்ட்ராஸர் சொன்னார். அவர் ஒரு ஜெர்மன் ஆதலால் ஜெர்மானியர்கள் இப்பொழுது எப்படி நினைக்கிறார்கள் என்பது அவருக்குத்தெரியும்.

## உரை பனிதான் அவர்களின் சவங்களில் சுற்றப்படும் துணி

ருஷ்யாவிலுள்ள பொருள்களைக் கைப்பற்ற எவ்வளவு பிரயாசை ஏற்பட்ட தென்பதற்கு ஜெர்மனியிலுள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கமாட்டாது என்று ஹிட்லர் சொன்னார். (ஹிட்லர் பேச்சு, டிஸம்பர் 11, 1941). அவர்களுக்கு

பொய்களையே சொல்லி வந்தால் அவர்களுக்கு விவரம் தெரியாதுதான். ருஷ்ய உரை பனியில் ஜெர்மானியர்களில் இறந்தவர்களும், காயமடைந்தவர்களும் 18,00,000 பேர்களென்றும், ஹிட்லர் சொன்னபடி 7,74,415 பேர்கள் இல்லையென்றும் ஜெர்மானியர்களுக்குத்தெரியுமா?

ஆனால் பொய்களைச் சொல்வதோடுமட்டில் இல்லாமல் ஜெர்மன் துருப்புகள் மாஸ்கோவிலிருந்து பின்னல் துரத்தியடிக்கப்படுகிறார்கள் என்பதையும், ஆபிரிக்காவிலுள்ள ஜெர்மன் படைகள் நொருக்கப்பட்டும், முறியடிக்கப்பட்டும் பின் வாங்குகின்றன என்று ஹிட்லர் ஜெர்மானியருக்குச் சொல்லவில்லை.

### நியாயமான பிரதி பலன்.

"ஒரு நூற்றாண்டு வரை நீடித்திருக்கும் போரை நடத்த நாம் விரும்புகிறோம்". (ஜப்பானிய பொது ஸ்தாபன தலைவர் முஸோலினிக்கு அனுப்பிய செய்தி, டிஸம்பர் 8, 1941.)

"இந்த யுத்தம் அவசியம்தான். அதற்கு பயனில்லாமல் போய்விடாது. ஏனென்றால் ஜப்பானைப்போல் ஆக்கிரமிப்பு, அதிகார ஆசை, பேராசையுள்ள ராணுவ அரசாங்கம் இருக்கும் வரை தூரக்கிழக்கில் அமைதி, சமாதானம் இருக்க முடியாது"
(ஈனிஸபாவிலுள்ள துருக்கி தூதன் யால்சின் சொன்னது.)

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 76—(3-வது பிரிவு).

| 1942— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜனவரி ... | 3, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 4, ஞாயிற்றுக்கிழமை | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | | வடகாடு | ... | ,, | 6.30 |
| | 5, திங்கட்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | கொடும்பாளூர் | ... | மாலை | 6.00 |
| | | விராலிமலை | ... | ,, | 6.30 |
| | 6, செவ்வாய்க்கிழமை | குடுமியாமலை | ... | ,, | 6.00 |
| | | பரம்பூர் | ... | ,, | 6.30 |
| | 7, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் | ... | ,, | 10.15 |
| | | அன்னவாசல் | ... | மாலை | 6.30 |
| | | கீழக்குறிச்சி | ... | ,, | 6.30 |
| | 8, வியாழக்கிழமை ... | மலைக்குடிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | தொலையானூர் | ... | ,, | 6.30 |
| | 9, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் | ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—3-1-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான
# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் ஜனவரி மீ 10உ [ந. 77

பிரஸங்கம் LXXVII.

## விமானப் படையெடுப்பு காலங்களில் தற்காப்பு செய்துகொள்ளுவதைப்பற்றிய கதை.

(பத்திராதிபரின் குறிப்பு:—வாண்டிப் பெரியாரைச் சார்ந்த மிஸ்டர் மைகேல் ஹோர் இவ்வியாசத்தை நமக்கு அனுப்பியிருக்கிறார். இவரின் சகோதரர்தான் "B. E. W. H." என்று இதில் கூறப்பட்டுள்ளவர்.)

### லண்டன் மா நகரை ஹிட்லர் விமானப் படையெடுப்பினால் அழிக்க முயற்சித்தபோது நடந்த ஒரு சம்பவம்.

நாடகப் பாத்திரங்கள்.

| பெயர். | | தொழில். | | வயது. |
|---|---|---|---|---|
| "B. E. W. H." | ... | பாங்கி முதலாளித் தலைவர் | ... | ... |
| ஸார்ஜெண்டு கர்டின் | ... | இரவு காவல்காரன் | ... | 50 |
| லெக்கி | ... | தீ காவல்காரன் | ... | 60 |
| நிக்கர்ஸன் | ... | வாசல் காவல்காரன் | ... | 32 |
| கோலிஸ் | ... | ,, | ... | 37 |
| சீஸ்மான் | ... | பட்லர் | ... | 73 |
| ஸ்டான்போர்டு | ... | காவல்காரன் | ... | 68 |
| கிரிப்பின் | ... | குமாஸ்தா | ... | 38 |
| டாபிடாரிமீட் | ... | வேலைக்காரி | ... | 28 |
| மார்ஜோரிமில்லர் | ... | உள் வேலைக்காரி | ... | 23 |
| ஈடித் கண்டில் | ... | ,, | ... | 44 |
| மாலி மார்கிஸன் | ... | ,, | ... | 28 |
| ப்ளோரா கிரிஸ்டி | ... | ,, | ... | 20 |
| ஐரிஸ் ஹார்னி | ... | சமயல் வேலைக்காரி | ... | 17 |
| மிஸஸ் ஜிப்ஸி | ... | ,, | ... | 40 |
| மிஸஸ் நாக்கர்ஸன் | ... | வாசல் கார்போனின் மனைவி | ... | ... |
| வொர்த் | ... | (ஆசிரியர்) 'மான்செஸ்டர் கார்டியன்.' | | 33 |
| ஹேகன் | ... | ,, | ... | 70 |
| ரட்டர் | ... | ,, | ... | 66 |
| ஸ்டீவ் ஸ்வின்னர்டன் | ... | தீ கவனிப்பவன் | ... | 65 |
| சார்லஸ் லோ | ... | தபால்வேலை | ... | 34 |
| P. C. ருஸ்லின் | ... | போலீஸ்காரன் | ... | ... |

களம்.

## லண்டன் நகரில் பிளீட் தெருவில் ஹோர் அண்டு கோ பாங்கியின் கிளை ஆபீஸ் கட்டடம்.

("கிளாஷன்" என்பது லண்டனிலுள்ள ஒரு காபிகிளப்).

இக்கதைக்கு N. B. E. W. ஹோர் ஆசிரியர் போல்தோன்றும். ஆனால் "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையைச் சேர்ந்த மிஸ்டர் வெர்த் என்பவர்தான் முக்கிய ஆசிரியர். கதை பின்வருமாறு:—

## 1941-ம் வருஷம் மே மாதம், 10-ம் தேதி, சனிக்கிழமை நடந்த விமான எதிர்ப்பு.

மேற்கண்ட தேதியில் நடந்த விமானப் படையெடுப்பைப்போல் கடுமையான சந்தர்ப்பங்களுக்கு தீ அணைப்பதற்காக அதிகப் பணச்செலவு உள்ள சாதனங்கள் தேவையில்லை என்று அனுபவமூலம் தெரியவருகிறது. இருந்தாலும் தீ அணைப்பதற்காக சிலர்களும், கூரையின் மேல் தீ ஏற்படும் ஸ்தலத்தைக் கண்டுபிடிப்பற்கு ஒரு காவல்காரனும் அத்யாவசியம். இதற்காகத் தண்ணீர் வசதி, மற்றும் சிறிய சாதனங்கள் சில முன்னாடியே தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். இதுவரை தங்கள் கட்டடங்களைக் காபந்து செய்து கொள்ள ஏற்பாடு செய்து கொள்ளாவிட்டால் பின்கண்ட சம்பவங்களைத் தெரிந்துகொண்டு அதன் மூலம் காப்பாற்றிக் காபந்து செய்து கொள்ளலாம். சுற்றிலும் தீயினால் விபரீதமான அபாயம் நேரும்பொழுது சிறு கூட்டத்தினர் நெருப்புப் பரவாமல் தடுத்த விதம் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு:

விமானப்படையெடுப்பு எச்சரிக்கை கொடுத்து அரைமணியாவதற்குள்ளாகவே G. ஹோர் அண்டு கோ பாங்கி கட்டடத்தில் அபாயம் வருவதை எதிர்பார்த்து தீ அணைப்பதற்காக இருந்த கூட்டத்தின் தலைவன், தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி வைத்திருந்தார். தீ அணைக்கும் யந்திரம். தண்ணீர் குழாய்கள், டெலிபோன் கம்பிகள் முதலியவைகள் உள்ளும், புறமும் சரியான ஸ்திதியில் இருக்கின்றனவாவென்று பார்த்துக்கொண்டார். டெலிபோன் (Exchange) ஆபீஸ் தாக்கப்பட்டதால் கம்பிகள் மாத்திரம் கொஞ்சம் பழுதுபட்டிருந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் பக்கத்து வீடுகளின் கூரைகளில் சில குண்டுகள் விழுந்தன. உடனே தீ அணைக்கும் கூட்டத்தினர் சேதமேற்படுவதற்கு முன்னமேயே அணைத்து விட்டனர்.

டெம்பிள் சர்ச், ஹோர் அண்டு கோ பாங்கி, மைடர் கட்டடம், ஸார்ஜெண்டு ஹோட்டல் எல்லாம் அடுத்து அடுத்து இருகின்றன. டெம்பிள் சர்ச் கட்டடத்தின் கூரையின்மேல் ஒரு எரி குண்டு விழுந்தது. இது இப்பாங்கியிலிருந்து புலப்பட்டதால் டெலிபோன் மூலம் டெம்பிள் சர்ச்சிலுள்ளோருக்கு இது அறிவிக்கப்பட்டது.

இதற்குள்ளாக ஸார்ஜெண்டு ஹோட்டலிலும், மேற்கு ஹார்டிங் தெருவிலும் தீ கிளம்பி, இப்பாங்கியை நோக்கிப் பரவிக்கொண்டிருந்தது. இவ்விவரம் பாங்கியிலுள்ள தீ பந்தோபஸ்து வேலைக்காரர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு, அவரவர்கள் தங்கள் தங்கள் வேலைகளில் போய் ஈடுபடும்படி எச்சரிக்கை செய்யப்பட்டார்கள்.

அச்சமயத்தில் பாங்கியின் பந்தோபஸ்துக்கு 8 புருஷர்களும், 7 ஸ்திரீகளும் தயாராகயிருந்தனர். அன்றிரவு மேலும் உதவிக்கு அருகாமையிலுள்ள 'மான்செஸ்டர் கார்டியன்' கட்டடத்திலிருந்து தீ வேலைக்காரர்கள் இருவரும், மைடர் கட்டடத்திலிருந்து ஒருவனும், இரண்டு போலீஸ்காரர்களும், வேறு இருவர்களும்



வந்தார்கள். தீ அணைப்பதற்கு, தோட்டங்களில் தண்ணீர் அடிக்க உபயோகப்படும் மூன்று நீண்ட (Hose) ஹோஸ் ரப்பர் குழாய்களும், வேறு ஐந்து கையால் வேலை செய்யும் (Stirrup) குழாய்களும் இருந்தன. நகரத்திற்கு ஜல ஸப்ளை செய்யும் குழாய்கள் உடைந்துவிட்டன. ஆகையால் பாங்கி கட்டடத்திலுள்ள ஆழமான கிணற்றிலிருந்துதான் ஜலத்தை பம்புகளால் உபயோகிக்க வேண்டி வந்தது. இதன் வழியாக மணிக்கு 600 காலன் வீதம்தான் பம்புகளால் கொண்டுவரமுடியும். 1500 காலன் பிடிக்கக்கூடிய தொட்டிகளில் நிரப்பி வைத்துக்கொள்ளமுடியும். கிணற்றிலிருந்து நேராக ஒரு சிறு குழாயின் மூலமாகத்தான் ஜலம் ஏற்ற முடியும். மற்ற குழாய்க்கு வாளிகள் மூலமாக நிரப்ப முடியும்.

தலைவர் கொடுக்கும் விருத்தாந்தத்தின் தொடர்ச்சி:—

"மைடர் கச்சேரி ஆபீஸ் தீப்பிடித்து எரிந்தது எப்படியிருக்கிறதென்று பார்க்க, எங்கள் பாங்கி கட்டடத்தின் மேலேறிப் பார்த்தேன். அப்பொழுது 'மான்செஸ்டர் கார்டியனைச்" சேர்ந்த ஹேகனும், ரட்டரும் வாளிகளில் தண்ணீர் மொண்டு கொட்டிக்கொண்டிருந்தனர்.

"பிறகு பாங்கியின் கிழக்கு பாகத்தில் தீ எப்படி இருக்கிறதென்று கவனிக்கலெக்கி, கிரிப்பின் இவர்களை விட்டுவிட்டு தெற்கே காபந்து செய்யவும் திரும்பினோம். மறுபடியும் நான் கீழே இறங்குவதற்குள், கூரைமேலிருந்த நெருப்பை அங்குள்ள பெண்கள் அணைத்துவிட்டனர். நாங்கள் தெற்குப் பக்கத்தில் தீ அணைப்பதற்குள் கீழ்பாகத்திலுள்ள பயத்தை அங்குள்ளவர்கள் நீக்கி விட்டார்கள்.

"கூரை மேலுள்ள எட்வர்ட், ப்ரட் இவர்களைப் போகச் சொல்லி அவர்களிடத்திற்கு நான் சென்றேன். சிஸ்மானும் ஸ்டான் போர்டும் அவரவர்கள் வேலையை கவனித்தனர். மான்செஸ்டர் கார்டியனைச் சேர்ந்த மிஸ்ட்டர் வெர்த்து எங்களுக்கு உதவி செய்துவந்தார்.

"கீழே நின்ற வாசல் காப்பவர்களிருவரையும் கிட்டங்கிச் சுவற்றிலும், கூடுமானால் மாஸ்டர் வீட்டுச் சுவற்றிலும் நெருப்பு அணுகாமல் தண்ணீர் கொட்டச் சொன்னேன். அது பயன்படவில்லை. இதற்குள்ளாகவே, பூரா கூரையும் நெருப்புப் பிடித்து புகையும், நெருப்புப் பொறிகளும் ஏராளமாகக் கிளம்பின.

"சிறிது நேரத்திற்கெல்லாம் எங்களுக்கு அருகேயுள்ள கட்டடங்கள் எல்லாம் சூடாகிவிட்டதால் நாங்கள் பின்வாங்க நேரிட்டது. டெம்பிள் சர்ச்சின் ஒருசுவரும் கீழே விழுந்தது. மேலே இருந்து கொள்ளிகள் மூன்று நான்கு அடிக்கு ஒன்றாக விழுந்தது போக மூன்று அங்குலத்திற்கு ஒன்றாக நெருங்கி விழுந்தது. மேல் உத்திரத்திலிருக்கும் தீயை அணைக்க ஆவலாக தண்ணீர்க் குழாயை தூக்கிச் சென்ற பொழுது மார்ஜோரி கூரையிலிருந்து நெருப்பில் விழுந்துவிட்டாள். உடனே அவளை நோக்கி நாங்கள் தண்ணீர் குழாய்களை அடித்தோம். ஆனால் குழாயை விட்டு கீழேபோய் தூக்கலாமென்று நினைத்தேன். அதற்கு மனம் வரவில்லை. ஏனெனில் அப்படிச் செய்வதால் கையிலிருந்த சிறு தண்ணீரும் வீணாகி விடுமென்று நினைத்துவிட்டேன், வீட்டிற்குள்ளிருந்த மனிதனும், அவளுடைய மெல்லிய ஸ்வரத்தைக் கேட்டிருக்கமுடியாது. நாங்கள் உறக்கக் கத்தியும் பயன்படவில்லை. கொஞ்சம் தாமதித்திருந்தால் அவளைக் காப்பாற்றியிருக்கவே முடியாது. ஆனால் நல்லவேளையாக வாசல் காப்பவர்கள் அங்கு வந்து அவளைத்தூக்கி போலீஸ்காரர் வசம் ஒப்புவித்தார்கள். அடுத்து சில நிமிஷங்கள் வரை தீயின் வேகம் குறையவுமில்லை. கட்டடங்கள் அதிகமாக சூடேறிக்கொண்டு வந்ததால் நாங்கள் ஜலம் ஊற்றியும் காய்ந்து போனதால் பிரயோஜனப்படவுமில்லை. இதற்குள்ளாக——மாஸ்டர் வீட்டின் பாக்கியிருந்த கூரை எங்கள் பக்கமாக முறிந்தும் விழுந்தது.

"அதே இடத்தில் மறுபடி ஒர் ஆபத்து விளைந்தது. டாப்பின் டாரிமீட் ஒரு தண்ணீர் குழாயை அடித்துக்கொண்டிருக்கும் பொழுது நெருப்பில் விழுந்து விட்டாள். இவளையும் வாசல் காப்பவர்கள் தூக்கிச்சென்று போலீஸ்காரர்கள் வசம் ஒப்புவித்தனர். அங்கே அவளுக்கு பிரதம சிகிச்சை கொடுக்கப்பட்டது.

"பாக்கியுள்ள நாங்கள் எங்கள் வேலையை கவனித்து வந்தோம். எனக்கு உதவி செய்வதற்காக ஸார்ஜெண்டு கர்டினும் வந்தார். சர்ச் கட்டடத்தின் அருகிலுள்ள சுவற்றின் மேல் (Incendex) என்ற தீயணைக்கும் மருந்தைக் கொட்டினார். இரண்டு பேர்கள் நெருப்பில் விழுந்ததினாலேயே அக்னிபகவான் திருப்தியடைந்ததாகக் காணப்பட்டது. நெருப்பும் தணிய ஆரம்பித்ததால் கொஞ்சம் கொஞ்சமாக நாங்கள் இருவரும் நெருங்கிவந்தோம்.

"மேல் கூரைக்குத் தண்ணீர் குழாயை எடுத்து சென்று சர்ச் கட்டடத்திலுள்ள நெருப்பை நான் இரண்டு தடவைகளில் அணைத்தேன். இதன் பிறகு வேறு எங்கேயும் ஆபத்து நேரவில்லை. இருந்தாலும் செய்யவேண்டிய காரியம் பாக்கியிருந்தது. கட்டடத்தின் கோடிக்கு நாங்கள் சுற்றி வந்தோம். நாங்கள் இடைவிடாது தண்ணீரைக்கொட்டியதால் அக்னி விபத்து குறைந்து வந்தது. எட்வர்ட் கையில் தண்ணீர் குழாயைக் கொடுத்துவிட்டு மேல் மாடிக்குப்போய் இதர பாகங்கள் எப்படியிருக்கிறதென்று பார்க்கப்போனேன்.

"மிஸஸ் ஜிப்ஸி டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தாள். லெக்கி, ஹேகன், ரட்டர் இருந்த கூரையாவும் பூரா ஈரமாக்கப்பட்டு, அங்குள்ள நெருப்பு பூராவும் அணைக்கப்பட்டிருந்தது. மைடர் கட்டடத்தையும், அங்கு காவல் புரியும் ஸ்டீவ் ஸ்வின்னர்டன் என்பவரையும் பார்த்தோம். ஸார்ஜெண்டு ஹோட்டல் முழுவதும் எரிந்து கொண்டிருந்தது. அங்கிருந்து காற்று எங்களை நோக்கி அடித்துக்கொண்டிருந்தது. 'மான்செஸ்டர் கார்டியன்' கட்டடத்தின் மேலுள்ள தொட்டிகளில் நெருப்பு அங்கு வராமல் தடுப்பதற்கு தண்ணீர் நிரப்பி வைத்திருந்தோம். நான் திரும்பி வரும்போழுது அங்கிருந்து சர்ச் கட்டடத்தின் சுவர்கள் வெடித்து வந்ததைக் கவனித்தேன். ஆனால் அதனடியில் நாங்கள் இல்லாததால் எங்களுக்கு ஒருபயமும் ஏற்படவில்லை. அடுத்த அரைமணி நேரம் எங்கள் சுற்றுச்சுவரை ஈரமாக்கினோம். இப்படியாக முதலில் ஏற்பட்ட தீயானது அணைக்கப்பட்டு சாதகமாக முடிந்தது.

"காலை 5-மணிக்குப் பிறகு, தீ விபத்தில் நோய்ப்பட்டவர்களைப் பார்க்கச் சென்றேன். இவர்கள் நன்றாகத் தூங்கவேண்டுமென்று ஆஸ்பத்திரிக்கு அனுப்ப (ambulance) வண்டிகளைக்கோரவில்லை.

"பிறகு தாம்ஸனைப் போய் பார்த்தேன். கீழ் பாகத்தில் 'ஏற்படக்கூடிய தீயை அணைக்க உதவி கொடுக்க முடியுமா என்றும் கேட்டேன். தீ அணைக்கும் கூட்டத் தலைவனை அவன் அழைத்து வந்தான். எங்கள் கட்டடத்தில் உள்ள கிணற்றில் ஜலம் குறைவாக இருப்பதாலும் அவன் வசம் 14 பேர்கள் தான் இருப்பதாலும் மேல் உதவி கொடுக்க முடியாதென்று தலைவன் சொல்லிவிட்டான். ஆகையால் நாங்களாகவே செய்துகொண்டிருந்த ஏற்பாடு போதுமானதென்றும் முடிந்தால் ஏதாவது அனுப்புவதாயும் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

"இச்சமயத்தில் மின்சார உதவியும் நின்றுவிட்டது. அதற்காகத் தனி எஞ்ஜினைக்கொண்டு ஜலத்தை குழாய்களில் அனுப்பினேன். ஈடித் கோப்பையில் எல்லாருக்கும் தேத்தண்ணீர் கொடுத்தாள். காலை 5 மணி 52 நிமிஷத்துக்கு படையெடுப்பு நின்றுவிட்டதாக எச்சரிக்கை செய்யப்பட்டது. இது ஆச்சரியத்தை அளித்தது. எங்களுடைய பார்க்லேன் கிளை ஆபிஸிலிருந்து மிஸ்ட்டர் ஹௌலட் டெலிபோனில் பேசினார். நிலைமை மீறிவிட்டதென்றும் நாங்கள் களைத்து விட்டோமென்றும் அறிவித்தேன்.

"கடைசியாக பாடிங்டனிலுள்ள விமானப் படையெடுப்பு தற்காப்புள்ள எங்கள் இடத்தையும் நம்பரையும் அவருக்கு அறிவித்தேன். அங்கிருந்து எங்கள் உதவிக்கு சார்லஸ் லோ என்பவரை வரும்படி ஏற்பாடு செய்தார். சார்லஸ் லோவும் அங்கே இரவு பூராவும் விழித்திருந்திருக்கிறார்.

"உடனே இங்கிருக்கும் யாவரையும் மறுபடி தயாராக இருக்கச் சொல்லிவிட்டு, மைடர் கச்சேரி கட்டட வழியாக கூரைக்குத் தண்ணீர் குழாயை எடுத்துச் சென்றேன். தெற்குப் பக்கத்தில் ஏற்கனவே எரிந்துகொண்டிருக்கும் நெருப்பை அணைப்பதற்கு ஐரிஸ் ஹார்னியை விட்டுவிட்டுச் சென்றேன். மறுபடி தாம்ஸனைப் பார்த்து அவனிடமிருந்து குழாய்களை வாங்கிக்கொண்டேன். ஏற்கனவேயுள்ளதோடு சேர்த்துக்கொண்டேன். இதற்கு தாம்ஸன் மிகவும் உதவிசெய்தார். முக்கியமாக அருகாமையிலுள்ள "கிளாஷன்" காப்பிக் கிளப்பைத் திறந்துவிட்டார். அன்று சாயந்திரம் காயம்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

"இதற்குள்ளாக மைடர் கச்சேரி கட்டடம் பூராவாக நெருப்பு சூழ்ந்து கொண்டு 'கிளாஷன்' வரையிலும் வந்துவிட்டது. தாம்ஸன் லோ இவர்களின் உதவியால் இரண்டு தண்ணீர் குழாய்களைக் கொண்டு பாங்கியின் கூரை வழியாகச் சென்றேன். நெருப்பு அணுகாதபடி செய்தோம்.

"காவல்காரர்களும், கிரிப்பினும் மூன்றாவது குழாயைக்கொண்டு மைடர் கச்சேரி கட்டடத்திற்கு அப்பாலிருந்து கொண்டு ஜலத்தை அடித்தனர். அவர்கள் உபயோகித்து வந்த குழாயில் தண்ணீர் கொண்டுவர ஐந்து பேர்கள் தேவையாயிருந்தது. பாக்கியுள்ளவர்களும், பெண்களும் வாளிகளில் தண்ணீரைக்கொண்டு 'கிளாஷன்' கட்டடத்திலிருந்த நெருப்பை அணைத்து வந்தனர்.

"லோவும், நானும் நெருப்பின் வேகம் தாங்கமாட்டாமல் பின் வாங்கினோம். புகையும் ஜ்வாலையும் எங்களால் தாங்க முடியவில்லை. கூரைகளில் துவாரங்கள் செய்துகொண்டு அதன் வழியே கூரை விழாமலிருக்கிறதா என்று கவனித்து வந்தோம். லோவுக்கும் ஒரு சமயம் அபாயம் நேர்ந்தது. ஏனென்றால் அவன் நின்ற இடம் பாரம் தாங்காது வளைந்துகொண்டு நின்றது. சுவற்றின் கட்டைப் பக்கம் சென்றோம்.

"மறுபடி கிளாஷன்' கட்டடக் கூரைக்கு வந்தோம். இதற்கும் மைடர் கட்டடத்திற்கும் இடையிலுள்ள சிறு கூரையைத் தாண்டிக்க ஏற்பாடு செய்தேன். ஆனால் தீ நெருங்கி வந்தது. பக்கத்திலுள்ள போஸ்டாபீஸ் உள்பட எல்லாக் கட்டடத்தையும் காலி செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று தாம்ஸன் அறிவித்தான். போலீஸ்காரர்கள் அதற்கு உதவிசெய்து கொண்டிருப்பதையும் கவனித்தேன். அப்பொழுது என்னுடன் கூடவந்த இரண்டு நெருப்பு அணைக்கும் இலாகா ஆட்கள் இந்த நெருப்பை அணைப்பது வீண் பிரயாசை என்றும் பனிரெண்டு குழாய்கள் இருந்தால் தான் முடியுமென்று சொன்னார்கள். அதற்கு உதவி செய்யும்படி கேட்டபொழுது அவர்கள் திரும்பப் போகவேண்டியிருப்பதாகவும், இது வீண் பிரயாசை என்று சொல்லிவிட்டார்கள்.

"அப்படியே தான் எங்களுக்கும் காணப்பட்டது. 'கிளாஷன்' கூரையிலிருந்து இருமுறை தீயின் வேகம் தாங்காது நாங்கள் கீழே தள்ளப்பட்டோம். இருந்தாலும் தாம்ஸனின் உதவியினால் மறுபடி பிரயத்தனம் செய்தோம். கிளாஷனிலிருந்து தண்ணீர் குழாய்களை எடுத்துக்கொண்டு ஸ்டீவனிடத்தில் ஒரு குழாயைக் கொடுத்தேன். மற்றவர்கள் மான்செஸ்டர் கார்டியன், கட்டடக்கூரை மேலுள்ள தொட்டியிலிருந்து வாளிகள் மூலமாக ஜலத்தை மொண்டு கொட்டினோம்.

“ஸ்டீவ் என்பவன் கஸபியான்காவைப் போல நாங்கள் உதவி செய்வத குள்ளாகவே தனியாக நின்று புகை, ஜ்வாலைகளுக்கிடையில் ‘கிளாஷன்’ கட்டட கூரையிலிருந்து குழாயால் தண்ணீரை அடித்துக்கொண்டிருந்தான். பிறகு நாங்கள் அவனுக்குக் கையினால் அடிக்கக்கூடிய மூன்று, நான்கு குழாய்கள் மூலம் தண்ணீர் உதவி கொடுத்தோம்.

“இடையிலுள்ள கட்டடத்தையும் இடித்துத்தள்ள நாங்கள் முயற்சித்த போது நெருப்பு அணைக்கப்பட்டதாக ஸ்டீவ் கத்தினான். என்ன நேர்ந்தது என்று பார்த்த பொழுது ஜ்வாலையும், புகையும் காணப்படவில்லை. காற்று வேறு பக்கமாக அடித்து நெருப்பைக் கொண்டுபோய் விட்டது.

“கிளாஷன்’ கட்டடத்தில் நாங்கள் மறுபடியும் நுழைந்தோம். பிறகு சிற நெருப்புகளை அணைத்தோம். நாங்கள் எல்லோரும் பத்திரமாக இருந்தோம்.”

இது தான் நடந்த சம்பவங்கள். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள கூடிய விஷயங்கள் மிகவும் தெளிவானவை. தீ கவனிப்பவன் அஜாக்கிரதையாக இருந்ததாலும், சரியாகப் பயிற்சி பெறாததாலும், போதுமான சாமான்கள் அவன் வசமில்லாததாலும், ஒரு எரிகுண்டு விழுந்து சரித்திரத்தில் முதல் தரமானதும், வேலைப்பாடுள்ளதுமான கட்டடம் பூராவாக நாசமாக்கப்பட்டது ஆனால் நாங்கள் சரியாக பயிற்சி பெற்று, ஜாக்கிரதையாக இருந்து பிரதம சிகிச்சை சாதனக்களைக் கொண்டதால் தீ அணைக்கும் இலாகாகூட அசாத்ய மென்று சொன்ன சமயத்தில் பெருந்தீக்களை அணைத்தோம்.

[மிஸ்ட்டர் ஹோர் கூறிய விதமாக “தீ பிடித்த சமயத்தில் ¼ மைல் விஸ்தீ ணத்திற்குள் குண்டுகள் விழுந்ததை தீ அணைக்கும் கூட்டத்தினர் கவனிக்க வில்லை அவர்கள் வேறு வேலையில் அவ்வளவு மும்மறமாக ஈட்டிருந்தனர்!

நெருப்புப் பொறிகள் கௌரவம் வாய்ந்த மிஸ்ட்டர் சீஸ்மானின் கால்சட்டையில் பற்றிக்கொண்டன. சாவதானமாக ஒரு வேலைக்காரி அதை அணைத்தாள்!”

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 1—1—42-லிருந்து 8—1—42-வரை.

**ருஷ்யப் போர்முனை.**—இவ்வாரத்தில் மூன்று பெரும் வெற்றிகள் நிகழ்ந்திருக்கின்றன:—(1) வால்காவ் நதிவரை ருஷ்யத்துருப்புகள் முன்னேறியிருக்கின்றன (2) கலூகா ருஷ்யர்களால் பிடிக்கப்பட்டது, (3) கெர்ச் தீபகர்ப்பம் ருஷ்யர்களால் வியாபிக்கப்பட்டது. ருஷ்யாவில் ஜெர்மானியர் நிறுத்தியுள்ள சைனிய பாகங்களில் முன்னால் சொன்ன மூன்று பிரதேசங்களும் வடக்கு, மத்தியம், தெற்கு பாகங்களில் முக்கிய இடங்கள் என்று அறியவேண்டும். முதலில் சொல்லப்பட்ட வெற்றியால் எதிரி லெனின்கிராட்டிலிருந்து 70 மைல்களுக்கு அப்பால் துரத்தப்பட்டான். பின்லாந்துகுடாவிற்கு அருகிலுள்ள ஹோக்லாந்து தீவும் பிடிக்கப்பட்டது. இரண்டாவது வெற்றியால் மாஸ்கோவிற்கு முன்னால் எதிரி சேமித்த சைனியம் முறிக்கப்பட்டதோடு ஸ்டாரிட்ஸா, போரேல்ஸ்க், டிம், மோ ஜெயிஸ்க் நகரங்களை ருஷ்யர்கள் பிடிப்பதற்கு சுலபமாயும் ஆயிற்று. மூன்றாவதாக யூபடோரியாவில் ருஷ்யச் சைனியம் புகுந்து ஸெபாஸ்டபூலுக்கு உதவிகொடுக்க முடிந்தது. கிரிமியாவில் படையெடுக்கும் எதிரியை விரட்டவும் முடிந்தது.



**வெள்ளம் திரும்பிவிட்டது.**—மிஸ்ட்டர் அந்தோனி ஈடன் சொல்லும் விதமாக வெள்ளம் திரும்பிவிட்டது. எதிரிக்குத் தகுந்த தந்திரங்களை, ருஷ்யர்கள் கையாண்டு குறுக்கு எதிர்ப்புகள் செய்து எதிரியை முன்னேற வரவிடாமல் தடுத்ததோடு பின் ஓடும்படியும் செய்கிறார்கள். ஸெபாஸ்டபூலிலுள்ளோரும் எதிரியை தாக்குகின்றனர்.

**ஓட்டம்.**—சமீபத்தில் ருஷ்யாவிற்குச் சென்ற மெயிஸ்கி ஜெர்மானியர் ருஷ்யப் போர்முனையில் அழிவதைத் தெரிவித்திருக்கிறார். “போர்முனையில் இருந்தேன். ஜெர்மானியரின் பிரேதங்கள் பனிமேல் கிடப்பதையும் ஜெர்மன் டாங்கிகள், லாரிகள், மற்ற சாமான்களையும் பார்த்தேன். ஜெர்மன் கைதிகள் கேவலமான போலி ஆடைகளை அணிந்துகொண்டு பனியில் அவஸ்தைப்படுவதையும் பார்த்தேன். எதிரிகள் பின்வாங்கி ஓடும் சப்தத்தையும் கேட்டேன்” என்றார்.

**எதிரியின் கதி.**—கிளின் முனையில் சண்டையை கவனித்த மிஸ்ட்டர் ஈடனும் முன்சொன்ன விஷயத்திற்கு ஒரு அத்தாக்ஷி. அவர் சொல்லுவதாவது: “நாஸிச் சைனியம் இளம் பையன்களாக நிரம்பியிருந்தது. சிலர் ராணுவ சேவைக்கு பதிவி செய்யப்படாதவர்களாயும், பனியில் அவஸ்தைப்பட்டு, சாதாரண துணி, செருப்பு முதலியவைகளையும் கொண்டிருந்தனர்.

**பிரிடிஷார் போடும் முற்றுகையின் பயன்.**—“பிரிடிஷ் பொருளாதார யுத்த மந்திரியான டாக்டர் ஹியூ டால்டன் சொல்லும் விதமாக எதிரிகளை மாரிகாலமும், பிரிடிஷ் முற்றுகையும் குலைத்துவருகிறது. பிரிடிஷ் முற்றுகை யில்லாவிட்டால் ஜெர்மானியர் நல்ல வஸ்திரங்களை உடுத்திக்கொண்டிருப்பார்கள். இவ்வளவு அவஸ்தையும் படமாட்டார்கள். வஸ்திரங்களுக்கு பதிலாக ஜெர்மானியர் அணியும் ஆடையும் கேவலமாக இருப்பது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது” என்றார். ஜெர்மானியர் உபயோகிக்கும் ஸோப்புகளில் 25 சதவிகிதம் கொழுப்பும் 75 சதவிகிதம் சுண்ணாம்பும் இருக்கிறது. இப்பொழுது பிரிடிஷ் முற்றுகையால் ஜெர்மானியருக்கு கொழுப்பு கிடைக்காததால் உடம்பையும் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில் ஆக்கிரமித்த ருஷ்யாவில் ஜெர்மானியத் துருப்புகள் செய்து வரும் கொள்ளை, நாசம் முதலியதைப் பற்றியும் மாலடோவ் சொன்னார். அங்கு வஸிப்பவர்கள் நாஸி அதிகாரத்தை மீறுவதற்காக அல்லாமல் இவைகளை ஒரு ராஜ்ய தந்திரமாகவே நாஸிகள் பயின்று வருகின்றனராம். இப்படிச்செய்து ஜனங்களை பயமுறுத்தும்படி ஜெர்மன் அரசாங்கமே அனுமதித்திருக்கிறதாம். கட்டாயத்தொழில் புரிய பொதுமக்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஜெயில்களில் அடைக்கப்படுகிறார்கள். வயது முதலியதை கவனியாது ஆகாரம் தண்ணீர் வசதி கொடுக்காமல் தினம் 20 மணி நேரம் உழைக்கவேண்டியிருக்கிறது. பொதுவான சட்ட திட்டங்களை மீறியும் வேலை செய்யச்சொல்லி கொலையும் செய்யப்படுகிறார்கள்.

**லிபியா.**—சென்ற வாரத்தில் சொன்னதுபோலவே பார்டியா வசப்பட்டுவிட்டது. லிபியா யுத்தத்திலேயே இங்கேதான் கடும் யுத்தம் நடந்தது. ஸோலூம், ஹால்பாயா இடங்களை இதாலியர் விட்டுவிட்டு ஓடி விட்டனர். ஜடபாயாவிலிருந்தும் எதிரி மேற்கே நோக்கி ஓடிவிட்டான். ட்ரிபோலி ஸிஸிலி, நேபிள்ஸ் இவைகளில் விமானப்படை யெடுப்பு செய்யப்பட்டன. தேகநிலையை முன்னிட்டு ஜெர்மன் தலைவன் ரோமல் லிபியாவை விட்டுச்சென்றதாக பிரஸ்தாபம். மழை அதிகமாகப் பெய்து கொண்டிருப்பதால் அங்கே சீதோஷ்ண நிலை பயங்கரமாக இருக்கிறது.

**மால்டா.**—இது பிரதிதினம் எதிரிகளால் விமான மூலம் தாக்கப்படுகிறது. இரண்டு வாரத்தில் சுமார் 100-தடவை தாக்கப்பட்டது. இங்கேயுள்ள பிரிடிஷ்

விமானப்படை இருந்து லிபியாவிற்கு வரும் அச்சுநாட்டு உதவியைத் துண்டிப்பதால் எதிரிகளுக்கு கோபம் வந்திருக்கலாம்.

**தூரக்கிழக்கு.**—இங்கே இவ்வாரத்தில் திருப்திகரமாக மூன்று விஷயங்கள் நடந்திருக்கின்றன. (1) தென் பஸிபிக்கில் வேவலுக்கு ஸர்வாதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (2) சீனத்துருப்புகள் பர்மாவிற்கு உதவிக்கு வந்திருக்கின்றன. (3) மலேயாவிற்கு அதிக உதவி புறப்பட்டுவிட்டதாக வெளனல் உறுதிமொழி கொடுத்திருக்கிறார். இந்தோ-சைனாவிலும் தாய்லாந்திலும் சண்டை துவக்குவதென தீர்மானிக்கப்பட்டது. ஆகவே சிங்கப்பூருக்குக் கொஞ்சம் சாதகமாக இருக்கும்.

**மலேயாவில்** குவான்டனிலிருந்து பிரிடிஷ் துருப்புகள் அகற்றப்பட்டு கௌலா ஸெலாங்கோர் பிரதேசத்தில் ஜப்பானியர் தாக்கப்படுகின்றனர். இது கோலாலம்பூருக்கு வடக்கே இருக்கிறது. ஜப்பானியர் முன்னேற்றத்தின் வேகம் குறைந்திருக்கிறது. பிரிடிஷ், அமெரிக்க விமானங்கள் தாய்லாந்தில் ரஹெங்டாக் பாங்காக் என்னும் இடங்களைத் தாக்கி இருக்கின்றன.

ரெங்கூன், மோல்மீன், சிங்கப்பூர் பிரதேசங்களில் எதிரி விமானத்தாக்குதல்கள் செய்திருக்கிறான். ஏற்கனவே பிடித்த இடங்களில் உணவுப்பொருள்கள் கொள்ளையடிக்கப்படுவதாயும், ஸ்திரீகள் பிடிக்கப்படுவதாயும், கோவில்களையும், கோரிகளையும் குண்டுகளால் தாக்குபடுவதாயும் சொல்லப்படுகிறது.

**பிலிப்பைன்ஸில்** மணிலாவும், அதற்குப் பக்கத்திலுள்ள கப்பற்தளமான கவிடாவும் எதிரிவசமாயின. காரிஜிடார், மாரிவலஸ் என்ற இடங்களையும் தாக்கி வருகிறான். மாக் ஆர்தரின் படைகள் 10 மைல் அகலத்திலிருந்துகொண்டு ஜப்பானியரின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றனர். இவ்விதம் ஜப்பானியரைத் தடுப்பது நேசதேசங்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கும்.

**சைனா.**—ஹூனானின் தலை நகரான சாங்ஷாவை சில நாட்களுக்கு முன்னமேயே பிடித்துவிட்டதாக ஜப்பானியர் சொல்லிக்கொண்டதுபோக நான்கு நாள் கடும்யுத்தத்திற்குப் பிறகு 7,000 மனிதர்களும், 40,000 ஜப்பானியத்துருப்புகளும் சேதமாகித் தோற்றுவிட்டனர். லியோடோ, லின்பாங் நதிக்களுக்கிடையில் எலிகளைச் சாக்கில் அடைப்பதுபோல் அடைபட்டுள்ளனர். இதனால் ஜப்பானியர் காண்டனிலிருந்து மலேயாவிற்குப் போகமுடியாமலும் செய்யப்பட்டனர்.

வடபோர்னியோவிலும், வெஸ்டனிலும் ஜப்பானியர் பிரவேசித்து ஆஸ்திரேலியருக்குச் சொந்தமான ராபௌல், நியூகினி, பெலாவான்டிரி என்ற இடங்களை விமானமூலம் தாக்குவதாகப் பிரஸ்தாபம். ஜப்பானியருக்குச் சொந்தமான கரோலின் தீவுகளிலுள்ள கபிங் அமராங்கியை பிரிடிஷ் விமானங்கள் படையெடுத்திருக்கின்றன.

**பின்லாந்து.**—பின்லாந்தில் சமாதான உணர்ச்சி பரவிவருவதாகப் பிரஸ்தாபம். பீல்ட் மார்ஷல் மானர்ஹீம் பின்லாந்தின் லக்ஷியம் அடையப்பட்டதாகச் சொல்லிவிட்டான். உண்மையில் பின்னர்களால் மேலும் முன்னேறிச் செல்லமுடியவில்லை. ருஷ்யர்கள் பின்லாந்து பிரதேசத்தில் புகுந்துவருகின்றனர். ஜெர்மானியர் பின்பு ஓடுவதும், பின்லாந்திற்குப் பாதகமாகிவிட்டது. ஆனால் இதற்கு முன்பே பின்லாந்து சமாதானத்தைக் கோரியிருந்தால், பிரிடனும், அமெரிக்காவும் உதவியாக இருந்திருக்கும். இப்பொழுதும் ருஷ்யா இந்நாடுகளைக் கலந்துகொண்டுதான் ஏற்பாடுகள் செய்யும்.

**நேசதேசங்களின் ஒப்பந்தம்.**—உலகில் 4-ல் 5 பங்குள்ள 26 நாடுகள் அமெரிக்காவில்கூடி பொதுவான ஒப்பந்தத்தை வெளியிட்டிருக்கின்றனர். இவை யாவும் முடிவான வெற்றிவரை தங்கள் சாமான்களை அச்சு நாடுகளுக்கு விரோதமாக



உபயோகிப்பதென்றும் தனித்தனியே சமாதானம் செய்துகொள்ளுவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதில் பிரிடன், பிரிடிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, ருஷ்யா, சைனா சேர்ந்துகொண்டிருக்கின்றன. இவ்விதம் புது வருஷ ஆரம்பத்தில் வெற்றியை முன்னிட்டு இவர்கள் செய்துகொண்ட ஏற்பாட்டின் முன்னால் அச்சுநாட்டு மூவரசு ஒப்பந்தம் இருக்கிற இடமே தெரியவில்லை.

பொதுவாக நேச நாடுகளுக்கு ஒரு சமாசார சபையும் அமைக்கப்பட்டது.

**லபோடன் தீவுகள்.**—நார்வேக் கடற்கரைக்கு அருகில் இருப்பவைகளை பிரிடிஷ் அதிகாரிகளின் கீழ் நார்வே படைகள் தாக்கின. ஒரு ஜெர்மன் காவல் கப்பல் மூழ்கடிக்கப்பட்டு சில ஜெர்மானியரும், சூழ்ச்சிக்காரர்களும் கைதி செய்யப்பட்டனர். ஜனவரி௴ 6வ மற்றொருதடவை பிரிடிஷ் கப்பல்களும், விமானப்படையும் சேர்ந்து நார்வேயைத் தாக்கின.

**கப்பல்கள்:**—டிஸம்பர் 17—21 தேதிக்குள் விரோதிகள் தாக்கியதால் அட்லாண்டிக்கில் பிரிடிஷ் நாசகாரியான ஸ்டான்லியும், அடாஸிடி என்ற தனிக்கப்பலும், 2 வியாபாரக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. ஆனால் அப்பொழுது சென்ற 30ல் 28 கப்பல்கள் தப்பிவிட்டன. எதிரிக்கு 3 யூ படகுகளும், 2 விமானங்களும் நஷ்டம். ஆனால் பிரிடனுக்கு 600 சத விகிதம் நஷ்டமென்று எதிரிகள் சொல்லுகிறார்கள். அடாஸிடி என்பது ஜெர்மனிக்குச் சொந்தமான ஹனோவர் என்ற வியாபாரக் கப்பல். அது பிடிபட்ட பிறகு வேறு பெயர் வைக்கப்பட்டது.

**அமெரிக்காவின் ஆவேசம்.**—6வ ஜனாதிபதி ரூஸ்வெல்ட், அமெரிக்க சபைக்கு மிஸ்டர் சர்ச்சிலுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளைப்பற்றி அறிவித்தார். இருவரும் சேர்ந்துசெய்த பொதுத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார். யுத்தத்தை முன்னிட்டு அதிக வரி விதித்திருப்பதாயும், அதிகமாக யுத்த சாமான்கள் செய்யப்படுவதாயும், மொத்த வரியில் 50 சதவிகிதம் யுத்தச் செலவிற்கு பிரத்தியேகமாக்கப்பட்டதாயும் சொன்னார். முடிவுவரை யுத்தம் செய்யும் அமெரிக்கத் தீர்மானத்தையும் அறிவித்தார்.

"அடுத்த வருஷம் யுத்தச் செலவு 5,600 கோடி டாலர்கள் பிடிக்கும். ஆகவே யுத்தம் இன்னும் நீடிக்கும் என்று தெரிகிறது.

"எங்கு சென்றாலும் எதிரியைத் துரத்துவோம். நாம் நாட்டைவிட்டு எதிரியைவிரட்டி, அவன் நாட்டிலேயே சென்று தோற்கடிப்போம்.

"அமெரிக்க சாமான்களை யுத்தம் நடத்த சாதகமாயுள்ள இடங்களில் உபயோகிப்போம். முக்கிய இடங்களைக் காப்பாற்ற தற்காப்பும் செய்வோம்.

"எதிரியைத் தாக்கும்போது முன்னேறித் தாக்குவோம். முடிவாகவும் அவனைத் தோற்கடிப்போம்.

"தூரக்கிழக்கில் பல இடங்களில் அமெரிக்க யந்திரப்படைகள் சண்டை செய்யும். ஐக்கிய நாடுகளின் காபந்துக்காக போக்குவரவுகளைக் காப்பாற்றும்.

"பிரிடிஷ் தீவுகளிலும், பல இடங்களில் அமெரிக்கர்களுக்கு தரை, கடல், விமான தளங்கள் ஸ்தாபிக்கப்படும்; அமெரிக்காவும் காப்பாற்றப்படும்.

**நம்பலாம்.**—"இப்பொழுது நமக்கு எதிரிகள் செய்யும் தீங்கைப் பொருட்படுத்தாமல் இருந்து வட்டிக்கு வட்டிபோட்டுத் திருப்பி அவர்களுக்குக் கொடுப்போம். இதை நம்பலாம்.

"எப்போ இந்த யுத்தம் முடியுமென்று சிலர் கேட்கின்றனர். அதற்கு ஒரு பதில்தான்.

"நாம் யாவரும் ஒன்று சேர்ந்து ஒரே தீர்மானமான முயற்சியுடன் தாக்க ஜப்பான், இதாலி, ஜெர்மன் தலைவர்கள் ஒழிந்தால்தான் யுத்தம் நிற்கும்.

"இதைவிட குறைவான லக்ஷியத்திற்கு நாம் இணங்கமாட்டோம்."

**மிக அதிகம்.**—யுத்தகால வரவு செலவு திட்டத்தைப் பற்றி ஜனாதிபதி அமெரிக்க சபை முன் 5,600 கோடி டாலர் தேவை என்றார் (18,620 கோடி ரூபாய்கள்) இதைவிட மாதம் 5,000 டாலர்கள் (15,600 கோடி ரூபாய்கள்) தேவையென்றும் சொன்னார். இது வரை வருஷம் 2,60,000 லக்ஷம் டாலர்கள் தான் கோரப்பட்டது. 1942-க்கு மாத்திரம் 20,000 லக்ஷம் டாலர்கள் (மாதம்) வேண்டுமென்றார். 60,000 விமானங்களும் 45,000 டாங்கிகளும், 20,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளும் 80 லக்ஷம் டன் கப்பல்களும் கட்ட ஏற்பாடாகிவிட்டது. இவ்விதமாக வர வர 1,25,000 விமானங்களும் 75,000 டாங்கிகளும் 35,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளும் 100 லக்ஷம் டன் கப்பல்களும் 1943-ல் கட்டி முடிந்துவிடும். இவ்விதமாக ஜனாதிபதி சொல்லிவிட்டு எதிரியை ஒழிப்பதற்காக எவ்வித பிரயாசையும் எடுத்துக்கொள்ளப்படும் என்றார். "எதிரிகள் உண்டுபண்ணுவதைக் காட்டிலும் அதிகமாக சாமான்கள் பண்ணித்தான் எதிரியைத் தோற்கடிக்க முடியும்" என்றார்.

**ஸ்வதந்திர ருமேனியா.**—ஸ்வதந்திரத்தை விரும்பும் ருமேனியர்கள் முந்திய அரசனான கரோலின் கீழ் ஒன்றுபட்டு நேசதேசங்களுடன் சேர்ந்திருக்கின்றனர். மைகேல் அரசனுக்கு விவாகம் செய்துவைத்து கரோலினிடத்தில் ஜனங்களுக்கு உள்ள பிரீதியைப் போக்கடிக்க முயற்சிக்கும் நாஜிகளைத் தடுக்கவே இவர்கள் இம்மாதிரி செய்திருக்கின்றனர்.

**ஸ்வதந்திர தாய்லாந்தினர்.**—தாய்லாந்திற்குள்ளேயே ஸ்வதந்திரத்தை அபேக்ஷிக்கும் தாய்லாந்தினர் ஒன்றாகச் சேர்ந்து பிரிடனுக்கு உதவிசெய்து ஜப்பானியரைத் தோற்கடிக்க முயற்சிக்கின்றனர்.

**ராஜ்யத்தைத் துறக்கலாம்**—டென்மார்க்கில் யூதர்களுக்கு விரோதமான சட்டங்களை அமுல்படுத்த நாஜிகள் வற்புறுத்துவதாயும் டென்மார்க் மந்திரி சபை அப்படிச்செய்ய மறுத்துவிட்டதாயும் சொல்லப்படுகிறது. ஜெர்மன் அபிப்பிராயத்திற்குச் சாதகமாக மூவரும், பாதகமாக ஆறுபேர்களும் ஓட் செய்தனர். மீண்டும் வற்புறுத்தப்பட்டால் அரசனான கிரிஸ்தியன் ராஜ்யத்தைத் துறப்பதாகச் சொல்லிவிட்டான்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **29—12—41.** (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | இரவில்.— கப்பல்கள் — லாபாலீஸ் (Lapallice). | | 1 பைடர் விமானம். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **—12—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | கட்டடங்கள், துடிசைகள், இதர லக்ஷியங்கள் ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்துகள், விமானமிறங்குமிடம்-ஜடபாயா (Jadabaya) வுக்குத்தெற்கில். | | | |
| | விரோதி ஸ்தானங்கள்—பார்டியா (Bardia) சுற்றளவுக்குள். | | | |
| | விரோதி யந்திரப்படை போக்குவரத்து-ஹோம்ஸி (Homs)லிருந்து மிஸுராடா (Misurata) விற்குச் செல்லும் கடற்கரை ரஸ்தாக்களிலும் ஸுயாரா (Zuara)வுக்கும் ட்ரிபோலிக்கும் இடையேயுள்ள பாதைகளிலும். | மிகவும் பலத்த சேதம். | | |
| | லக்ஷியங்கள்—ஸுயாரா (Zuara). | | 2 விமானங்கள். | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்தரங்கம் முழுவதிலும். | | 3 விமானங்கள். | 8 விமானங்கள். |
| | **பிரிடிஷ் அமெரிக்க, விமானங்களால். தூரக்கிழக்கு.** | | | |
| | வேவு பார்த்தல்—விரோதி நாடும் விரோதி ஆக்கிரமித்த நாடுகளில். | | | |
| **0—12—41.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—கப்பற்தளம்—ப்ரெஸ்ட் (Brest). | | | |
| | இரவில்.—கப்பல்கள்—லாபாலீஸ் (Lapallice). | | நஷ்டமில்லை. | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி மோட்டார்ப் படைகள், கவசம் பூண்ட யந்திரப்படைகள்,-ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | அநேக வண்டிகள் சேதமாயின. | | 1 விமானம். |
| | விரோதித் தற்காப்பு ஸ்தானங்கள்.—பார்டியா (Bardia). | | | |
| | ஒரு விமான நிலயம், சைனிய வாஸஸ்தலங்கள், மோட்டார் வண்டிகள் நிற்குமிடம்,-மிஸுராடா (Misurata). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **30—12—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கிரீஸ் (Greece).** | | | |
| | வெடிமருந்து உற்பத்தி சாலை, நீர்மூழ்கி கப்பற்தளம்.—ஸலாமிஸ் (Salamis). | | | |
| | ரஸாயன தொழிற்சாலைகள், எண்ணெய் சேமித்துவைக்குமிடங்கள்—பிரேயஸ் (Piraeus). | | | |
| | **கிரீட் (Crete).** | | | |
| | விமான நிலயம்— ஹெராக்கிளியான் (Heraklion). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்-மாலிமி (Maleme). | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்-போர்முனை முழுவதிலும். | | | |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு. தாய்லாந்து (Thailand)** | | | |
| | விமான நிலயம்.—ஸுங்கைபடாணி (Sungei Patani). | தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| **31—12—41.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | மோட்டார் படைகள், கவசம் பூண்ட வண்டிகள்.—ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | | |
| | விமானமிறங்கும் இடம்.—ஆரே பிலேயி ஓரம்.-(Arae Philaneorum). | | | |
| | கப்பல் சரக்கு இறக்கும் இடம்.—ராஸ் எல்—ஆலி.—(Ras-El-Aali). | | 2 விமானங்கள். | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 4 விமானங்கள். | 31 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—12—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு. மலேயா (Malaya).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்—பெராக் போர்முனையில். | | | |
| **—1—42.** (வியாழக்கிழமை) | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால். ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலிலும், இரவிலும் நடந்த விமான நடமாட்டங்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி யந்திரப்படைப் பதுக்கள்—ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | | |
| | விமானச் சண்டைகள்—ஜடப்பாயா (Jadabaya) பிரதேசத்தில். | | | 4 விமானங்கள். |
| | விரோதி மோட்டார் படைகளின் கூட்டம்—எல் அகீலா (El Agheila), நொபீலா (Nofila). | மோட்டார்கள் நாசமாக்கப்பட்டன. | | |
| | கப்பல்கள்—ஸர்டி (Sirte) வளைகுடாவில். | 1 கப்பல் நேராகத்தாக்கப்பட்டது. | | |
| | ட்ரிபோலி (Tripoli). | | 2 விமானங்கள். | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச்சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனைமுழுவதிலும். | | 9 விமானங்கள். | 28 விமானங்கள். |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால். தூரக்கிழக்கு. மலேயா (Malaya).** | | | |
| | விரோதி விமான நிலயம்—காங் (கெடா) (Gong, Kedah). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | கப்பல்கள்—தாய்லாந்திற்கு அருகாமையில் | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 2—1—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாயிலும்,(English Channel) பிரெஞ்சு (French)க் கடற்கரையிலும். | | 2 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | இரவில்.—கப்பற் தளம்—ப்ரெஸ்ட் (Brest), ஸெயின்ட் நாஸேர் (St. Nazaire). | | நஷ்டமில்லை. | |
| | வேடிகண்ணிகள் வீசுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விமானச் சண்டைகள்—ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்து—எல் அகிலா (El Agheila)வுக்கும் ஸர்டி (Sirte)க்கும் இடையில் ரஸ்தாவில். | அநேக எண்ணெய் ஏற்றிச் செல்லும் வண்டிகள் நாமாக்கப்பட்டன | | |
| | முக்கிய கப்பல்துறை, மின்சார உற்பத்தி சாலை, கம்பியில்லாத் தந்தி ஸ்தாபனம்—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | 5000 டன் நிறையுள்ள கப்பல்—ட்ரிபோலிடேனியா (Tripolitania)வுக் கருகாமையில். | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | **இதாலி (Italy).** | | | |
| | ரயில்வே ஸ்டேஷன் முக்கிய விமானம் கட்டும் தொழிற்சாலை—நேபிள்ஸ் (Naples). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை எங்கும். | | நஷ்டமில்லை. | 5 விமானங்கள். |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | கேபிங் அமரிங்கி(Kaping Amerangi) [கரோலின் தீவுகள் (Caroline) தீவுகள்.] | | | |
| | **மலேயா (Malaya).** | | | |
| | வேவு பார்த்தல்—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 3—1—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடிஷ் விமானங்களால்.** | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்** | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest). | | | |
| | வேடிகண்ணிகள் வீசுதல்—விரோதிகளின் சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்து—எல் அகிலா (El Agheila)வுக்கும் ஸர்டி (Sirte)க்கும் நடுவில். | அநேக மோட்டார்கள் சேதமாயின. | | |
| | கப்பல் சரக்கு இறக்குமிடம், மோட்டார் போக்குவரத்து—ராஸ்-எல் ஆலி (Ras-El-Aali). | | | |
| | வெடிமருந்துகள் ஸப்ளை ஸ்டோர்ஸ், சைனிய இருப்பிடங்கள் மோட்டார் போக்குவரத்து—பியூரட் எல்ஹாஸன் (Beurat El Hsun). | பலத்த சேதம். | | |
| | **கிரீஸ் (Greece).** | | | |
| | விரோதி நீர்மூழ்கிக் கப்பற்தளம் வெடிமருந்து உற்பத்திசாலைகள், யுத்த தளவாட தொழிற்சாலைகள்—ஸலாமிஸ் (Salamis). | | | |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | | |
| | விமானச்சண்டைகள், விமான நிலயத்திலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 19 விமானங்கள். |
| | **பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால்.** | | | |
| | **தூரக்கிழக்கு.** | | | |
| | விரோதிக் கப்பல்கள்.-மலேயா(Malaya)வின் மேற்குக் கடற்கரை. | | | |
| | **தாய்லாந்து (Thailand).** | | | |
| | விமான நிலயம்—ராகென்டாக் (Raghentak). | | | 7 பைடர் விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம் |
|---|---|---|---|---|

**4—1—42.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடிஷ் விமானங்களால்.

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

பகலில்.—ரயில்வே போக்குவரத்து, இதர லக்ஷியங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). கடை வாசல்கள், ஒரு கால்வாய், ஜெர்மன் துருப்புகள்—வட பிரான்ஸ் (France).

இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

லிபியா (Libya).

விரோதித் தற்காப்பு ஸ்தானங்கள்-ஹலாபாயா (Halafaya) பிரதேசம்.

பீரங்கி ஸ்தானங்கள்—ப்யூரட் எல் ஹூஸன் (Beurat El Hsun).

கிரீஸ் (Greece).

கப்பல் சரக்கு இறக்குமிடம்—ராஸல் ஆலி (Rasil Ali).

| | | | | |
|---|---|---|---|---|
| | மோட்டார் வண்டிகள்—ஸர்டி (Sirte) யிலிருந்து ப்யூரட் எல் ஹூஸன் (Beurat-El Hsun). | | நஷ்டமில்லை. | |

கிரீஸ் (Greece).

நீர்மூழ்கிக் கப்பற்தளம்— ஸாலாமிஸ் (Salamis).

ருஷ்ய விமானங்களால்.

கிழக்குப் போர்முனை.

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டைகள், விமான நிலையங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதும். | | 11 விமானங்கள். | 41 விமானங்கள் |

பிரிடிஷ், அமெரிக்கா விமானங்களால்.

தூரக்கிழக்கு.

தாய்லாந்து (Thailand).

| | | | | |
|---|---|---|---|---|
| | விமான நிலயம்.—தாய்லாந்து (Thailand). | | 3 விமானங்கள். | |

மலேயா (Malaya).

வேவுபார்த்தல்.—ஜப்பானிய ஸ்தானங்களுக்குப் பின்னால்.



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**30—12—41.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மன் விமானங்களால்.

பிரிடன் (Britain).

| | | | | |
|---|---|---|---|---|
| | இரவில்.—ஒரு பட்டணம்—இங்கிலாந்தின் (England) வடகிழக்கு பாகத்தில் | சொற்பச் சேதம்; சிலர் கொல்லப்பட்டனர். | | |

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | | | |
|---|---|---|---|---|
| | மால்டா (Malta) ... | அநேக விமானங்கள் சேதமாயின. | 2 விமானங்கள். | |

ஜப்பானிய விமானங்களால்.

தூரக்கிழக்கு.

பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.

மனிலா (Manila).

மலேயா (Malaya).

| | | | | |
|---|---|---|---|---|
| | சிங்கப்பூர் (Singapore) ... | சொற்பச்சேதம். | | |

**31—12—41.** (புதன்கிழமை).

ஜெர்மன் விமானங்களால்.

பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

மால்டா (Malta).

ஜப்பானிய விமானங்களால்.

தூரக்கிழக்கு.

மலேயா (Malaya).

| | | | | |
|---|---|---|---|---|
| | சிங்கப்பூர் (Singapore) இரண்டுமுறை படையெடுப்பு. | சொற்பச் சேதம். | | |
| | நேச தேசங்களின் போக்குவரத்துகள். மலேயா (Malaya) ... | | 1 விமானம். | |

**1—1—42.** (வியாழக்கிழமை).

ஜெர்மன் விமானங்களால்.

பிரிடன் (Britain).

| | | | | |
|---|---|---|---|---|
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள். இங்கிலாந்தின் (England) தென் கிழக்குக்கடற்கரைக்குச் சமீபத்தில். | சொற்பச்சேதம்; ஒருவர் கொல்லப்பட்டனர். | | |

தேதி. லக்ஷியங்கள். விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். விரோதி விமான நஷ்டம். பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.

**1—1—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

மால்டா (Malta).

ஜப்பானிய விமானங்களால்.

தூரக்கிழக்கு.

மலேயா (Malaya).

பிரிடிஷ் சைனிய போக்குவரத்துகள் போர்முனைக்குப் பின்புறத்தில்.

**2—1—42.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மன் விமானங்களால்.

பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஜப்பானிய விமானங்களால்.

தூரக்கிழக்கு.

மலேயா (Malaya).

சிங்கப்பூர் (Singapore).

பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.

காரிஜிடார் (Corregidor) தீவு ... 3 விமானங்கள்.

ஸுமத்திரா (Sumatra).

துறைமுகம்.—பெலாஅன்டெலி (Belauan Deli).

**3—1—42.** (சனிக்கிழமை).

ஜெர்மன் விமானங்களால்.

பிரிடன் (Britain).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

மால்டா (Malta).

ருஷ்யா (Russia).

மாஸ்கோ (Moscow) 2 விமானங்கள்.

ஜப்பானிய விமானங்களால்.

தூரக்கிழக்கு.

மலேயா (Malaya)

சிங்கப்பூர் (Singapore).



தேதி. லக்ஷியங்கள். விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். விரோதி விமான நஷ்டம். பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம்.

**3—1—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

பர்மா Burma.

விமானச்சண்டை—மோல்மேன் (Moulmein) பிரதேசம் 7 விமானங்கள்.

டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகள்,

விமான நிலயம்—வெளி மாகாணங்களில்.

பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.

காரிஜிடார் (Corrigidor) தீவு மணிலா (Manila) வளைகுடா. 4 விமானங்கள்.

ஒரு பிரதேசம்.—மணிலா (Manila) வுக்கு வடக்கே.

**4—1—42.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மன் விமானங்களால்.

பிரிடன் (Britain).

இரவில்.—ஒரு இடம் இங்கிலாந்தி (England) ன் வடகிழக்கு. சிலர் கொல்லப்பட்டனர்.

ருஷ்யா (Russia).

மாஸ்கோ (Moscow). 12 விமானங்கள்.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

மால்டா (Malta).

ஜப்பானிய விமானங்களால்.

தூரக்கிழக்கு.

பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.

காரிஜிடார் (Corrigidor) தீவு (மணிலா குடாக்கடல்). 4 விமானங்கள்.

மலேயா (Malaya).

சிங்கப்பூர் (Singapore).

சிலான்கார் (Selangor). 1 விமானம்.

**5—1—42.** (திங்கட்கிழமை).

ஜெர்மன் விமானங்களால்.

பிரிடன் (Britain).

பகலில்.—கிராமாந்திரப் பிரதேசம்—இங்கிலாந்தின் (England) தென் கிழக்குக் கடற்கரையில் இரண்டு நகரங்களுக்கு இடையில். 1 விமானம்.

ஐயர்லாந்து (Ireland).

பகலில்.—ஒரு இடம்.—ஐயர்லாந்துக்கு (Ireland) வடக்கில்.

| | | | | |
|---|---|---|---|---|
| தேதி.] | லக்ஷியங்கள். | விமானங்களி லிருந்து குண்டு கள் போடுவதி னால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |

**5—1—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.

ருஷ்யா (Russia).

மாஸ்கோ (Moscow).

மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | |
|---|---|---|
| மால்டா (Malta). | அநேக விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். |

ஜப்பானிய விமானங்களால்.

தூரக்கிழக்கு.

பர்மா (Burma).

ரங்கூன் (Rangoon) பிரதேசம்.

பஸிபிக் (Pacific).

டச்சு நீர்மூழ்கிக்கப்பல்.-நாடுனா (Natuna)க்கு அருகாமையில்.

# யுத்தக் குறிப்புகள்.

**பிரதிக்ஞை.** ஜப்பானியர் வாலைத்தூக்கிக்கொண்டு உத்ஸாகமாக ஓடுகிறார்கள். பிரான்ஸ் என்ன செய்வதென்று தெரியாமல் உழன்று, பல்லைக்காட்டிக்கொண்டிருக்கிறது. துருக்கியை பயமுறுத்தும்படி பல்கேரியாவிற்கு தூபம் போட்டாய்விட்டது. டெலிபோனில் பேச்சுவார்த்தை நடத்தியே ஸ்பெயின், போர்ச்சுகல், வட ஆபிரிக்காவில் இருக்கும் பிரெஞ்சுத் துறைமுகங்கள் இவைகளில் யுத்தம் துவக்கப்படலாம். அட்லாண்டிக் யுத்தம் இன்னும் கடுமையாக்கப்படலாம். இங்கிலாந்தின் மேலும் படையெடுக்கப்படலாம். இவையாவும் ஹிட்லரின் மானசிக திட்டப்படி சாத்தியம் போல் காணப்படும்.

ஆனால் நேசநாடுகளின் பிரகிருத நிலைக்கும், அச்சு நாட்டினரின் சீற்றங்களுக்கும் ஏற்றதாக மிஸ்ட்டர் விக்ஹாம் ஸ்டீட் ஒரு வியாசம் எழுதி அதில் சென்ற யுத்தத்தில் மார்ண் சண்டையில் வெற்றிபெற்ற மார்ஷல் போக் என்ற வீரனின் சொல்லை மேல் கோளாகக் கொடுத்திருக்கிறார். "எனக்கு இடதுபக்கம் உள்ள சைனியம் பின்நோக்கி ஓடுகிறது. வலது பக்கச் சைனியம் தோற்கடிக்கப்பட்டது. நான் இருக்கும் பாகம் மாத்திரம் தனியே சண்டைசெய்ய முடியாது. நிலைமை மேன்மையானதுதான். எதிர்க்கத்தான் போகிறேன் !!" என்று.

அச்சுநாடுகளின் நிலைமை இவ்வளவு மோசமாக இல்லை. அமெரிக்காவில் தலைவர்கள், சேர்ந்து சண்டை செய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் நாம் முன் சொன்ன சொல்லையும் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிலாம். இருந்தாலும் 1942-ம்வருஷ திட்டத்தில் நேசநாடுகள் எதிர்த்து சண்டை செய்வதெனப் பிரதிக்ஞை செய்துகொண்டிருப்பது நன்மைதான்.



**ஹிட்லரும் ருஷ்யாவும்.** மற்ற எல்லாரும் பிசகாக நடக்கும்போது நாம் மாத்திரம் சரியாக நடப்பதால் என்ன பிரயோஜனம்". இது ருஷ்யாவை ஹிட்லர் படையெடுக்காமல் தடுக்கும்போது ஜெர்மன் தளகர்த்தர் பீல்ட் மார்ஷல் வான் பிராஷிட்ஸ்ஸினால் சொல்லப்பட்டது.

இதுவரை தலைமை வகித்த இந்த ஜெர்மன் தளகர்த்தரும் இன்னும் மற்றவர்களும் பதவியிழந்தனர். ராணுவ அனுபவமில்லாத ஹிட்லரே தலைமை வகிக்கிறான். ஆனால் பிரகிருதம் இருக்கும் சந்தர்ப்பத்தில் எதிரிகளின் சைனியத்திற்கு யார் தலைமை வகித்தாலும் சமாளிக்கமுடியாது.

1941-ம் வருஷத்தில் "முடிவான வெற்றியடைந்துவிடலாம் என்று" ஜெர்மன் சைனியங்களுக்கும், மக்களுக்கும் ஹிட்லர் உறுதி கொடுத்தான். ஆனால் அவன் சைனியங்கள் முக்கியமான போர் அரங்கங்களிலிருந்து பின்நோக்கி ஓடுகின்றன.

ஜெர்மானியரின் ஒற்றுமையும் கௌரவமும் கெடாமல் இருக்க மாஸ்கோ ஸெப்டம்பர் மாதத்திற்குள் ஜெர்மன் வசப்படிருக்கவேண்டும். அவ்விதம் நேரவில்லை. அவர்கள் கௌரவம் பாழாகிவிட்டது. அதற்காக 50 ஜெர்மன் சைனியப் பகுதிகளும், இன்னும் டாங்கிகளும் "முடிவாகத் தாக்குவதற்கு" சேமிக்கப்பட்டன. (வான் பிராஷிட்ஸ் நிலைத்து நிற்கச் செய்தது பலிக்கவில்லை !)

வழக்கம்போல் மாஸ்கோவில் ரயில்வண்டிகளும், மோட்டார்களும், இருப்புப் பாதைகளும், ஸினிமா, டிராமாக்கொட்டகைகளும் நடந்துவருகின்றன. எதிரி 100 மைல் தூரத்திற்கு அப்பால் விரட்டப்பட்டதால் அதிக உத்ஸாகமாக ஜனங்கள் இருந்துவருகிறார்கள்.

எதிரிகள், பின்நோக்கிப் போவதற்கு தங்கள் சைனியங்களைப் பலப்படுத்தப் போவதாகச் சொல்லுகின்றனர். ஒருக்கால் அவ்விதம் செய்து வசந்தகாலத்தில் மறுபடி வேகமாகத் தாக்கலாம். ஜப்பானையும் சண்டையில் ஈடுபடுத்தியாய் விட்டது. ஆகவே சைனியங்களை எல்லாம் சேர்த்து ருஷ்யாவில் பின்வாங்கியதை ஈடுசெய்ய வேறே எங்கேயாவது பாய்வார்கள் என்று தோன்றுகிறது.

ஆனால் ஜெர்மானியர் தோற்றுவருவதாகவே ருஷ்யர்கள் கருதுகின்றனர். மேலும் மேலும் ஜெர்மானியரைத் தாக்குகின்றனர். சைனியத்தைப் பலப்படுத்திக் கொள்ளுகின்றனர். மறைந்து தாக்கி ஜெர்மன் போக்குவரவைக் குலைக்கின்றனர். மேலும் மாரிகாலத்தால் அதிக சேதம் விளைந்திருக்கிறது. முடிவான வெற்றி அடைவதற்குப் பதிலாக ஜெர்மன் துருப்புகளுக்கு பின்வாங்க நேர்ந்ததோடு சாமான் ஸப்ளை போதாமல், உடுக்க வஸ்திரம் இல்லாமல், தொத்துநோய் உண்டாகி ஏராள சேதம் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே யுத்தப்பைத்தியம் கொண்ட ஹிட்லர் இவ்விதம் யோசித்திருக்கிறான். "சரி இந்த ஜெர்மன் தளகர்த்தர்கள் பிரயோஜனமில்லை. நான்தான் ஹிட்லர். திட்டமெல்லாம் என்னுடையதுதான். கட்டியக்காரனைபோல கொஞ்சம் தடபுடல் செய்தால் எல்லாம் பலிக்கும். நான் சொல்வதை யாவரும் நம்புவார்கள். அச்சா, நான்தான் சைனியத்திற்கும் தலைவன். என்ன பிரசார மந்திரி கோயபல்ஸ் சொல்லுகிறாய்? நம்மைப்பார்த்த தேவர்கள் சிறிக்கிறார்களா ?! சரிதான். ரகசியப்போலீஸ் தலைவன் வீரசுவர்கத்திலும் ரகசியப் போலீஸ்காரர்களை வைத்திருப்பானே. நம்மைப்பரிகசிப்பவர்களைப் பிடித்துவிடச்சொல்லு !

**அதிசயம் !!**

கூத்தாடியைப்போல் ஹிட்லர், சைனியங்களுக்கு தலைமை வகித்த சமயத்தில் செய்த பிரசங்கத்தில் விபரீதமான சில அம்சங்கள் காணப்படுகின்றன. சண்டையையே தொழிலாக வைத்துள்ள தளகர்த்தர்களை நீக்கிவிட்டுத் தானிருந்துகொண்டு சண்டையை நடத்திவருகிறான் என்பது ஒன்று. இதர சைனியங்களைத் தனியே பிரித்துக் குறிப்பிட்டிருப்பது இரண்டாவது. ஒருக்கால் தன்னையும், ஜெர்மன் மக்களையும் காப்பாற்றி ஜெர்மன் அரசாங்கத்தைத் திருப்திசெய்வதாக வாக்களித்திருப்பதை இது குறிக்கிறது போலும்.

வி வி வி வி வி வி வி

**நட, குண கோளங்களுக்குள் ஐகபத்தியம்.**

1940-ம் வருஷத்தில் மத்தியில் பிரிடனும் இன்னும் சில நாடுகளுக்கும் தனியே நின்று, வந்தது வரட்டுமென்று சண்டை செய்ததைப்போல் அச்சுநாடுகள் இப்பொழுது நிற்கின்றன. ஆனால் பிரிடனுக்குச் சாதகமாக வலுவுள்ள நாடுகள் வந்துவிட்டன. உலகத்தில் நாலில் ஐந்துபங்கு வலுவுள்ள நேசநாடுகளுக்கு எதிராக அச்சுநாடுகள்தான் தனியே நிற்கவேண்டியிருக்கிறது.

இவ்விதம் அமெரிக்காவும் பிரிடனும் ஒன்றுசேர்ந்தது வீண் மனக்கோட்டையாகாது. முன்பு நெபோலியனுக்கு எதிராக நான்கு தடவை, மற்ற நாடுகள் ஒப்பந்தம் செய்துகொண்டதைப்போலவே இதையும் கருதவேண்டும். ரூஸ்வெல்ட், சர்ச்சில், லிட்வினவ், டாக்டர் ஹூஹூஷி, மெக்கென்ஸி கிங், ஆஸ்திரேலிய மந்திரி யாவரும் கலந்து பேசினார்கள். ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மிஸ்டர் கர்டின் கேபிள் மூலம் கலந்துகொண்டார். அதேசமயத்தில் பிரிடிஷ் மந்திரி ஈடனும் ஸ்டாலினோடும் வேவல் சாங்கை ஷெக்குடனும் பேசினார்.

இவைகளின் முடிவும் தெளிவானதுதான். இப்படிக்கலந்து பேசினவர்களுக்குள் பொறாமையோ, சந்தேகமோ, அபிப்பிராயபேதமோ கிடையாது. அமெரிக்க கப்பற்படைகள் பஸிபிக்கில் வேவலின் கீழ் ஒத்துழைக்க சம்மதித்தன. ஆஸ்திரேலியரும் அமெரிக்கரும் ஒரேவிதமான யுத்த தந்திரத்தைக் கையாட ஒப்புக்கொண்டனர். இவ்விதமாக அச்சநாடுகளுக்கு எதிரில் உலகமே உண்மையில் ஒன்று சேர்ந்திருக்கிறதாகவே சொல்லலாம். ரெங்கூன் தற்காப்புக்கு அமெரிக்க பைடர் விமானங்கள் வந்துவிட்டன. காகஸஸ் பிரதேசத்திற்கு இந்தியத் துருப்புகள் சென்று இருக்கின்றன. ஹாங்காங்கின் நிலைக்கு சீனர்கள் அதிக உதவியளித்தனர். ருஷ்யாவிற்கு பிரிடிஷ், அமெரிக்க உதவி குவிகின்றன. ருஷ்யர்களும் ஜெர்மானியரை குழிவெட்டி புதைக்க ஏற்பாடு செய்தே வருகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியர் செய்த மற்றொரு பிழை.**

ஜப்பானின் அதிக்கிரமச் செயல்களுக்கு நேச நாடுகளிடமிருந்து சரியான பிரதிபலன் கிடைக்கும். ஜெர்மனியின் தூண்டுதலால் ஜப்பான் நடந்து கொண்டாலும் அதனுடைய கோமாளி நடத்தையை ஜெர்மனியே அங்கீகரிக்குமோ என்னமோ தெரியவில்லை.

ஏனென்றால் ஜெர்மனியின் அபிப்பிராயப்படி ஜப்பான் நடந்து கொள்ளவில்லை என்று அமெரிக்காவிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. ஹிட்லருக்கு சாதகமாக ருஷ்யாவை எதிர்ப்பதாக ஜப்பான் வாக்களித்திருந்ததாயும் அப்படி செய்யமால் தரை, கடல், விமான மூலமாக எத்தனையோ ஆயிரம் மைல்கள் தெற்கேபோய் சண்டை செய்வது ஜெர்மனிக்கு இஷ்டமில்லையென்று



தெரிகிறது. இனியும் பஸிபிக் சண்டையிலிருந்து கழட்டிக்கொண்டு ஜெர்மனிக்கு சாதகமாகப்போகவும் முடியாது. ஒருக்கால் மஞ்சுகோ எல்லைப்புறத்தில் ருஷ்யர்கள் தன்னை எதிர்க்காமல் பார்த்துக்கொள்ளலாமே தவிர வேறு முடியாது.

வி வி வி வி வி வி வி

**பழைய கதை.**

இதுவரை நடந்த சண்டைகளின் அனுபவங்களிலிருந்தும், சண்டையைப்பற்றிய புஸ்தகங்களிலிருந்தும் உள்நாட்டுப் போக்குவரவு சரியாக இருக்கும் நாடு அவ்விதம் இல்லாத நாடுகளை எளிதில் ஜயிக்க முடியுமென்று தெரியவரும். பலமான சைனியம் அதிகமாக துருப்புகளைச்சேகரம் செய்துகொண்டு பல திக்குகளில் சீக்கிரத்தில் பாய்வதற்கு அது ஒரு சாதகம். இவ்விஷயம் இதுவரை தரைச் சண்டைகளுக்கு சாதகமாக இருந்தது. விமானச்சண்டைகளுக்கும் சாதகமாகலாம்.

ஆகவே தூரக்கிழக்கில் புரியப்படும் சண்டையைப்பற்றி எதிரியின் விமான பலமும், விமானதளங்களின் நிலையும் நமக்கு தெரியாததால் ஒன்றும் ஊர்ஜிதமாகச் சொல்லுவதற்கு இல்லை. இருந்தாலும் நேசநாடுகளுக்கு கொஞ்சம் பாதகமாக இருக்கிறதாகக்காணப்படுகிறது. இந்நிலை கொஞ்சநாள்தானிருக்கும். பிறகு அமெரிக்க, பிரிடிஷ், சைனா, டச்சு விமான பலத்தை அச்சுநாடுகள் எவ்வளவு சேர்ந்தாலும் எதிர்த்து நிற்கமுடியாது போய்விடும். (அடுத்த பாராவைப்பார்க்க) பலவருஷங்களாக ரகசியமாக உள்நாட்டுப் போக்குவரவை பலப்படுத்திவந்ததால் ஜப்பானியர் நம்மைக்காட்டிலும் கொஞ்சம் சீக்கிரமாக வெற்றிபெற்று வரலாம். ஆனால் அது நிலைத்துநிற்காது.

இவ்விஷயத்தை மிஸ்டர் சர்ச்சில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டியிருக்கிறார் "மலேயாவிலும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலும் நவீனமான விமானங்களையும் சைனியத்தையும் ஏன் ஸ்தாபிக்கவில்லை என்று ஜனங்கள் என்னைக் கேட்டால், லிபியா சண்டைக்கு யாவும் உபயோகப்படுத்தப்பட்டு வெற்றி பெற்றதைக் காண்பிப்பேன். லிபியாவிற்கு பூரா அனுப்பாமல் அங்குமிங்கும் பிரித்துவைத்திருந்தால் இரண்டு இடங்களிலும் நாம் தோற்றிருப்போம்." மேலும் ருஷ்யர்களுக்கு உதவியாக பிரிடிஷ், அமெரிக்க டாங்கிகளும் விமானங்களும் அனுப்பப்பட்டன. அப்படி செய்யாமலிருந்தால் ஜெர்மானியர் லெனின்கிராட்டையும் மாஸ்கோவையும் பிடித்திருப்பார்கள்.

வி வி வி வி வி வி வி

**ஹிட்லருக்குள்ள திகில்.**

பல இடங்களில் நடந்தாலும் முழு யுத்தத்தையும் ஒன்றாகவே பாவிக்கவேண்டும். ராணுவ விஷயங்களை எப்பொழுதும் ஒன்றையொன்று ஒப்பிட்டுப் பார்க்கலாமே தவிர ஒரு அம்சத்தை மாத்திரம் தனியே கவனிக்கமுடியாது. உள்நாட்டுப் போக்குவரவு அதிகம் ஏற்படுத்திக்கொண்ட நாட்டிற்கு கொஞ்சம் சாதகமேற்படலாம். முடிவான வெற்றி கிடைக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம். அதிகமான மனுஷ்ய சகாயமும், யுத்ததளவாடங்களைச் செய்யும் சக்தியுமுள்ள தேசம் இவ்விதமில்லாத நாட்டைத் தோற்கடிக்கலாம். காரணம் தர்மமாகவும் இருக்கவேண்டும்.

இந்த விஷயத்தில் நமக்குத் திருப்திதான். அமெரிக்காவில் தயாரித்த விமான சங்கியையை T. W. ரைட் என்பவர் கொடுத்துள்ளார் (1941-ம் வருஷத்திற்கு இவர் கொடுத்தது சரியாகவேயிருந்தது).

1942-ல் அமெரிக்காவிற்கு 39,000 விமானங்களென்றும் 1943-ல் இது 49,000 ஆகுமென்றும் சொன்னான். பிரிடன் இவ்வருஷம் 22,800 விமானங்கள் புதிதாக உபயோகிக்கும். ஆக 1942-ல் சுமார் 62,000 ஆகிறது. (ஆக்கிரமித்த நாடு

களின் தொழிற்சாலைகளுள்பட) ஜெர்மனிக்கு 27,600 தான். முக்கிய சாமான்கள் குறைவானதால் ஜப்பானுக்கு இன்னும் குறைவாகத்தானிருக்கும். இத்துடன் அமெரிக்காவின் எ.ஃகு உற்பத்தி ஜப்பானைவிட 15 மடங்கு ஜாஸ்தி. ஐரோப்பா பூரா ஒன்று சேர்ந்து தயாரிக்கும் யுத்த சாமான்களைவிட அமெரிக்கா ஜாஸ்தி தயாரிக்கிறது.

பிரிட்டனும் அமெரிக்காவும் சமான் உற்பத்தி திட்டத்தையும் யுத்தத்தையும் சேர்ந்தே நடத்துவதால் எதிரிக்கு உள்நாட்டுப் போக்குவரவு இருந்தாலும் பயன்படாது என்பது சொல்லாமலே தெரிந்ததுதான்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**ரெங்கூனிலிருந்து கற்ற பாடம்.** முதல் தடவை ரெங்கூனில் நடந்த விமானப்படையெடுப்பினால் நமது ராணுவத்திற்குச் சேதமில்லை. ஆனால் பொதுஜனங்கள், மறைந்திருக்காமல் வெளியே வேடிக்கைப் பார்க்கச் சென்றதால் கொஞ்சம் சேதப்பட்டனர்.

இரண்டாம் தடவையில் ஜப்பானியர் குஷியாக பொதுஜனங்களின்பேரில் குண்டு வீசலாமென்று நினைத்தது போக 20 விமானங்களை இழந்தனர். விமானங்களுக்கு இரையாகாமல் இவ்விதம் பொதுஜனங்கள் நடந்துகொண்டது ஜப்பானியருக்கு ஆச்சரியம் அளித்தது.

எதிரியின் பைடர் விமானங்கள் 300 மைலுக்குமேல் செல்லாதாகையால் எதிரி பாம்பர் படை தாய்லாந்தின் விமான தளங்களிலிருந்து உதவிப்படையுடன் வந்தது. தாய்லாந்திலிருந்து ரெங்கூன் இருக்கும் தூரத்தைவிட ரெங்கூனிலிருந்து கல்கத்தாவும் மதராஸூம் இரண்டுமடங்கு அதிகமாக இருக்கின்றன.

எதிரி பாம்பர் படை இன்னும் அதிக தூரம் பறக்க முடிந்தாலும் உதவி விமானங்கள் அவ்வளவு தூரம் பறக்கமுடியாது. தனியேசென்றால் அவைகளுக்கு ஆபத்துதான்.

ஆகவே இந்தியாவின் கடற்கரையை நோக்கி இரவு நேரங்களில் எதிரிவந்து பொது ஜனங்களை பயமுறுத்த நினைத்தாலும் விமானச்சண்டை செய்வதானாலும் சமீபத்தில் தளங்களை வைத்துக்கொண்டால்தான் சாத்தியமாகும்.

வி வி வி வி வி வி வி .

**வி ” டயரி** இக்குறிப்பு புஸ்தகம் 3,600 பிரதிகள் விலையாயின என்பது திருப்திகரமான விஷயம். பூராவாக உள்ளூரிலேயே தயாராகி பல இடங்களில் இதைத்தெரிந்து கொண்டு வாங்கியிருக்கின்றனர். இதன் மூலம் 3,000 ரூபாய்கள் யுத்த நிதியைச் சேருகின்றன என்பது மிகவும் திருப்திகரமான விஷயம்.

---

# புது வருஷத்தின் நிலையும் போக்கும்.

---

லண்டனிலிருந்து பி. பி. ஸி.யின் ராணுவ வியாக்யான கர்த்தா மேஜர் லூயி ஹேஸ்டிங்ஸ் ஒலிபரப்பியது.

1941-ம் வருஷத்தில் விசேஷ சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மஹா யுத்தங்கள் நடந்து அதன் பயனாக நாடுகளின் நிலையே மாறிவிட்டது. மேலும் யுத்தத்தில் ஈடுபடாமலிருந்த நாடுகளையும் சேர்த்து கடைசியாக நேசநாடுகள்



ஒருமுகமாக அமைக்கப்பட்டன. இதன் பயனாக யுத்தத்தை முன்னிருந்து நடத்தும் தலைவர்கள் சரித்திரத்திலேயே முக்கியத்வம் பெறக்கூடிய விதமாகப் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர். பிரகிருதம் அமெரிக்காவிலும், ருஷ்யாவிலும், சைனாவிலும் நமது தலைவர்கள் கூடிவருவதைப் பார்த்தாலே 1940-ம் வருஷ முடிவில் இருந்ததைக் காட்டிலும் 1941-ம் வருஷ முடிவில் இருக்கும் சாதகமான நிலை தெரியவரும்.

இப்பொழுது கிழக்கிலும் மேற்கிலும் பெரும் சண்டைகள் நடந்து வருகின்றன; இவைகளிலிருந்து விளையக்கூடிய பலன் அதிகமாக இருக்கலாம். இருந்தாலும் நேசநாடுகள் ஒன்று சேர்ந்து பொதுவான யுத்த திட்டம் செய்துவருவதில் எதிரிகளின் யுத்த முஸ்தீப்பே மறைந்து வருகிறது.

## நேசப்படத்தைப் பார்.

சென்ற வருஷ ஆரம்ப காலத்தை கவனித்தால், பிரிட்டனும் ,மற்ற நாடுகளும் நாஸிகளால் அழிக்கப்படுமென்றும், இந்நாடுகளுக்கு ஜயிப்பதற்கான நம்பிக்கையும் ஆசையும் மங்கி இருந்ததென்றும் யாவருக்கும் தெரியும். இப்பொழுது ருஷ்யா, சைனா, அமெரிக்கா யாவும் பிணைக்கப்பட்டு தைரியமாக முன் நிற்கின்றன.

சென்ற வருஷத்தில் பூரா அழிக்கப்படும் என்று காணப்பட்ட ருஷ்யா அப்படியாகாமல் இப்பொழுது ஜெர்மனியை எதிர்த்து நிற்கிறது. ஜெர்மனிக்கு விரோதமாக அமெரிக்காவும் சேர்ந்துகொண்டது. இதனால் ஆள் பலத்திலும் ஜனத்தொகை சங்கையிலும் நாஸிகளுக்கு பாதகமாகவே காணப்படுகிறது. ஜெர்மனிக்கு கிழக்கே ஐரோப்பிய ருஷ்யா, ஸைபீரியா, இந்தியா, சைனாவும், மேற்கே அமெரிக்கா கனடா, மற்ற நாடுகளும் ஜெர்மனியை எதிர்த்து நிற்கின்றன. பிரதேச பலத்தைத் தவிர நேசநாடுகளுக்கு 1941-ம் வருஷ முடிவில் மேன்மையான யுத்த சாமான்களின் உதவியும் ஏற்பட்டு யுத்த நிலையே சாதகமாக காணப்படுகிறது.

## நான்கு முக்கிய அம்சங்கள்.

அட்லாண்டிக், ருஷ்யப்போர்முனை, மத்தியதரைக்கடல், பஸிபிக் சமுத்திரம் இந்த நான்கு பிரதேசங்களிலும் யுத்த நிலையைக் கவனிப்போம். முதலாவதாக அட்லாண்டிக்கில் நமக்கு சாதகமாகவே இருந்து வருகிறது. இங்கே கப்பல் போக்குவரவு முதலிய ஜீவநாடிகள் சரியாகவே இருக்கின்றன. இரண்டாவதாக ருஷ்யப்போர்முனையில் இதுவரை அதிக தீங்கு விளைவித்த எதிரி கேவல நிலையில் பின் நோக்கி ஓடுகிறான். இதற்குக் காரணம் ருஷ்யர்கள் சிறிதும் கவலைப்படாமல் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டுவருகின்றனர். நாஸிகளின் ஜாலவேலைகளெல்லாம் அழிக்கப்பட்டன. கோயபல்ஸின் கீழ் நடந்துவரும் ஜெர்மன் பிரசாரம் இனி உலகத்தாரை வசப்படுத்த முடியாது. ஜெர்மானியரை எளிதில் தோற்கடிக்கலாம் என்ற எண்ணம்தான் பரவிவருகிறது.

மூன்றாவதாக மத்தியதரைக்கடலிலும் நாஸிகளுக்கு பாதகம்தான் ஏற்பட்டு வருகிறது. ரோமலின் கீழ் இருந்த முதல்தரமான ஜெர்மன் பான்ஸர்படை 300 மைல் பின்னே ஓடிவிட்டது. மீதியுள்ள எதிரி சைனியத்திற்கு ஆபத்து ஏற்பட்டு வருகிறது. பிரிடிஷ், இந்தியர் குடியேற்ற நாட்டு சைனியம், போலீஷ், ஸ்வதந்திர பிரெஞ்சுப் படைகள்தான் சமமான ஆயுதங்களைக்கொண்டு நாஸிகளைத் துரத்தியடிக்கின்றன. இவ்விஷயத்தை யாவரும் அறியவேண்டியதுதான்.

முன் சொன்ன இடங்களில் கடும்யுத்தம் நடந்து வந்ததில் நமக்கு மிகவும் சாதகமாக நிலை இருக்கிறதென்று அறியவேண்டும். அடைந்துவரும் தோல்வியை ஈடுசெய்ய ஜெர்மனி மிகவும் பெரும் சைனியங்களை ஈடுபடுத்தி முண்டிப்

பார்க்கும். புதிதாக பெரும்சண்டை நேருமென்றே சொல்லலாம். இருந்தாலும் த்ரையில் ருஷ்யர்களும் பிரிடிஷ்காரர்களும் நாஸிகளின் ராணுவத்திற்கு பெரும் சேதத்தை விளைவித்திருக்கிறோம்.

## பஸிபிக் யுத்தம்.

இந்த இடத்தில் யுத்தம் வேறுவிதமாக இருக்கிறது. ஜப்பானியருக்கு பெரும் ஆரம்ப வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. தெற்கு சைனாவில் கேந்திரமான ஸ்தானங்களையும் அவர்கள் வசப்படுத்திக்கொண்டதால் சில சாதகங்களும் அவர்களுக்கு வற்பட்டிருக்கின்றன. பிலிப்பைன்ஸிலும் மலேயாவிலும் பலப்படுத்தி வருகின்றனர். மேலும் அவர்கள் வெற்றி பெற்றால் நேசநாடுகள் அவர்களைத் தோற்கடிக்க பெரும் சிரமம் எடுக்கவேண்டிவரும்.

இதற்காக நேசநாடுகள் எடுத்துவரும் முயற்சியைப்பற்றி விவாதிப்பது பயனில்லை. 1941 முடிவில் இந்த இடத்தில்தான் அச்சுநாட்டுக்காரர்கள் கொஞ்சம் வெற்றிபெற்றதாக நினைக்கலாம். இருந்தாலும் ருஷ்யாவும், அமெரிக்காவும், மற்ற ஸ்வதந்திரத்தை விரும்பும் நாடுகளும் ஒன்றுசேர்ந்து ஏராள யுத்த தளவாடங்கள் ஏற்பாடு செய்து அவர்களை முறியடிக்கத் தீர்மானித்து விட்டன.

## பிரதேசத்தை விட்டுக்கொடுத்தாலும் எதிரிக்குக் காலதாமதம் உண்டாக்குவது.

இப்பொழுதுதான் ருஷ்யாவின் உண்மையான பலத்தையும், சேகரம் செய்யக் கூடிய தன்மையையும் உலகத்தினர் கண்டுகொண்டார்கள். ஆறு மாதத்திற்கு முன்பு, மாரிகாலம் வருவதற்கு முன்னமேயே ருஷ்யாவை முறியடிக்க ஹிட்லர் நினைத்தான். அதன் பிறகு புது வருஷத்தில் பிரிடன் பேரில் பாயலாமென்றும் நினைத்தான். இந்த ஆறுமாத காலத்தில் ருஷ்யாவுக்கு அதிக சேதமென்பது உண்மைதான். ஆனால் கௌரவ ஹானியை யோசித்துப் பார்த்தால் ஜெர்மனிக்குத்தான் மிகவும் அதிகம். பிரதேசத்தை விட்டுக்கொடுத்து எதிரியின் கால் திட்டத்தை முறியடிப்பதென்ற ஸ்டாலின் சாமர்த்தியமாகக் கண்டுபிடித்து நடத்தி வருகிறான். இப்படிச் செய்வது மறுபடி நாம் பலப்படுத்திக்கொள்ள சாதகமாக இருந்தது. ஹவாயில் ஜப்பானியர் ஏமாற்றமாக நடந்துகொண்டு தாக்கியதில் பல வருஷங்கள் பிடிப்பது சில மணிகளுக்குள் முடிந்தது. அதாவது அமெரிக்கர்கள் யுத்தத்தில் உடனேயே ஈடுபட்டனர். இவர்கள் ஈடுபட்ட விதம் தான் இதில் கவனிக்கத்தக்கது.

உலகில் அதிக-சாமான் உற்பத்தி செய்யக்கூடிய நாடும், தொழில் அபிவிருத்தி உள்ள நாடும், கல்பனா சக்தி உள்ள நாடும் ஒன்று சேர்ந்து ஹிட்லரின் கொள்கைகளை அடியோடு ஒழிப்பதெனத் தீர்மானித்துவிட்டன. இதற்கான முயற்சியைச் செய்யவும், ஜப்பானியரைத் தோற்கடிப்பதற்கும் தொழிற்சாலைகளில் சாமான்களைச் செய்தும், கப்பல்கள் கட்டியும் வட அமெரிக்கா போக்குவரத்தை நிலைநாட்டிக்கொண்டும் ஏற்பாடு செய்யப்படும். அமெரிக்காவில் ஜப்பானைக் காட்டிலும் 15 மடங்கு அதிகமான எஃகு வேலை செய்யமுடியும். ஐரோப்பா பூராவும் செய்யக்கூடியதைக் காட்டிலும் அதிகமான யுத்த சாமான்கள் செய்யமுடியும். ஆகவே அவர்களுக்கு முன்னால் பஸிபிக்கில் ஜப்பானியர் அடையும் வெற்றி இருக்கிற இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

ஆகவே 1941-ம் வருஷத்தின் முடிவில் நாஸிகளின் பலம் மேற்கே குன்றி வருகிறது. கிழக்கே புதிதாகத் தோன்றிவரும் ஜப்பானியச் சண்டையை வெற்றிகரமாக எதிர்த்து நிற்க ஸ்வதந்திரத்தை விரும்பும் நாடுகள் யாவும் ஒன்று சேர்ந்து எதிர்பாராத விதமாக யுத்த முயற்சி செய்தும் வருகின்றன.



# ஜப்பானின் மனோராஜ்யம்.

## யுனைடெட் ஸ்டேட்ஸைக் கைப்பற்றுவது.

## தளகர்த்தர் ஸேடோ தன் புஸ்தகத்தில் எழுதியிருக்கும் திட்டம்.

## அதை அமுல்படுத்த முயற்சிகள்?

ஜோஸப் கால்மெர் எழுதியது.

ஜப்பான் முன் எச்சரிக்கையன்னியிலேயே சண்டை துவக்கிவிட்டது. அது எப்பொழுதும் கப்பற்கொள்ளையிடும் வழக்கத்தைக் கையாண்டுவருகிறது. என்பதற்கு இது ஒரு அத்தாக்ஷி.

டிஸம்பர் மாதம் 7-ம் தேதியில் ஒரு அமெரிக்கக் கப்பல் ஜப்பானிய நீர்மூழ்கியினால் திடீரென்று தாக்கி அமிழ்த்தப்பட்டது. அவ்விதம் முயற்சிக்கும்பொழுது யுத்தம் ஆரம்பிக்கப்போவதாக ஜப்பான் யாதொரு முன் எச்சரிக்கையும் கொடுக்கவில்லை. இதேமாதிரியாகவேதான் 1894-1895-ம் வருஷத்தில் ஜப்பான் தன் சாம்ராஜ்யத்தை விருத்தி செய்வதற்காக சைனாவுடன் யுத்தம் செய்தபொழுது முன்னதாக எச்சரிக்கவில்லை. 1,200 மனிதர்களை ஏற்றிவந்த கௌஷின் என்ற சீனக் கப்பலை ஜப்பானிய இடிகுண்டுக் கப்பல் தாக்கி மூழ்கடித்தது.

மேலும் 1904-ம் வருஷத்தில் நடந்த ருஷ்ய-ஜப்பானிய யுத்தத்திலும் யாதொரு முன் எச்சரிக்கையன்னியில் மேற்சொல்லியவிதமாக திடீரென்று ருஷ்யக் கப்பற்படையை ஜப்பானியர்கள் தாக்கினார்கள். இதற்கு முன் அவ்விரு நாடுகளுக்கும் விரோதமிருப்பதாகவே அறிவிக்கப்படவில்லை.

1931-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் மஞ்சூரியாவைத் தாக்கியபொழுதும், 1936-ம் வருஷம் ஜூலை மாதம் 7-ல் 'சைனா சம்பவம்' ஏற்பட்டபொழுதும் யுத்தம் ஆரம்பிக்கப்போவதாக ஜப்பான் பிரஸ்தாபிக்கவே இல்லை.

## 20 வருஷங்களாகத் தயாரிப்பு?

இப்பொழுது ஜப்பான் யுனைடெட் ஸ்டேட்ஸை எதிர்த்துவிட்டது. 1922-ம் வருஷத்தில் வாஷிங்டனில் மகாநாடு கூடியதிலிருந்து ஜப்பான் யுத்தத்திற்காகத் தயார் செய்துவந்திருக்கிறது. ஏனென்றால் ஜப்பானிய சாம்ராஜ்ய திட்டங்கள் நிறைவேறாமல் தடைபட்டவுடன் அதன் சைனியமும், கப்பற்படையும் சமயம் எப்பொழுது வாய்க்கும் என்று எதிர்பார்த்திருந்தன.

மேலும் அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தின்பேரில்தான் ஜப்பான் ஸைபீரியாவிலிருந்து பின்வாங்க நேரிட்டது. இத்துடன் நிற்காமல் யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படையில் ஐந்தில் மூன்று பங்குக்கு மேற்படாமல் வைத்துக்கொள்ளுவதாக ஜப்பான் ஒப்பந்தம் செய்துகொள்ளவும் நேரிட்டது. அதேமாதிரியாகவே கிரேட் பிரிடனுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன் பயனாக யுனைடெட் ஸ்டேட்ஸ், கிரேட் பிரிடன் இவ்விரு தேசங்களின் மொத்த கப்பற்படை பலத்தில் பத்தில் மூன்று பங்குதான் ஜப்பான் வசமிருந்தது என்றே சொல்லலாம்.

மேலும் சைனா விஷயங்களில் தலையிடுவதில்லை என்று ஜப்பான் வாக்குறுதி செய்யவேண்டியதாயிற்று. மஞ்சூரியாவை ஜப்பான் தாக்கும் வரையில் அது சைனாவை வம்புக்கு இழுக்கவில்லை.

சர்வதேச சங்கத்திலிருந்து ஜப்பான் விலகிக்கொண்டதாக அப்பொழுது ஜப்பானிய தூதராகச் சென்ற Mr. மத்ஸுவோகா சொன்னதிலிருந்தும், 1936-ம் வருஷத்தில் லண்டனில் கப்பற்படை சம்பந்தமாக பிரிடன், அமெரிக்கா இவைகளுடன் அது செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிராகரித்ததிலிருந்தும், ஜப்பான் தீவிரமாகத் தன் கடற்படையைப் பலப்படுத்த ஆரம்பித்தது. அதன் கப்பற்படை திட்டங்களை மிகவும் ரகசியமாக உலகத்தாருக்குத் தெரியாமல் வைத்துக் கொள்ளப்பட்டாலும், அது அதிதீவிரமாகப் புதிய கப்பல்களைக் கட்டிவந்தது. எப்படியிருந்தாலும் அதன் நோக்கங்கள் ரகசியமானவையே அல்ல. அவைகள யாவருக்கும் தெரிந்தனவே.

## "ஜப்பான் பிரிடனை எதிர்க்கவேண்டும்."

"ஜப்பான் பிரிடனை எதிர்க்கவேண்டும்" என்ற புஸ்தகத்தை ஜப்பானிய உத்தியோகஸ்தரான டோடா இஷிமாரு (Tohda Ishimaru) பிரசுரித்தார். 1927-ம் வருஷத்தில் அப்பொழுது ஜப்பான் சக்ரவர்த்தியிடம் தளகர்த்தர் டாணகா ஜப்பானிய ராஜ்யத்தை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டம்போட்டுக் காண்பித்தவிதமாகவே, ஜப்பான் தெற்கு நோக்கி வியாபிக்கும நோக்கங்களைப் பற்றி அந்தப் புத்தகத்தில் கண்டிருக்கிறது. தாய்லாந்தில் வியாபித்துக்கொண்டு அங்கிருந்து சிங்கப்பூரை எவ்விதம் தாக்கவேண்டும் என்பதைப்பற்றியும் விரிவாக புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அப்புஸ்தகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அச்சிட்டவுடன், ஆங்கிலம்பேசும் நாடுகளில் பெரும்பாலோர் அப்புஸ்தகத்தை வாங்கலாயினர். அதிலிருந்து அப்புஸ்தகம் பிரபலமாக ஆகிவிட்டது.

தளகர்த்தர் கியாகாட்ஸு எழுதிய வேறொரு புஸ்தகம் அவ்வளவு பிரபலமாக இல்லை. "ஜப்பானுக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் சமீபத்தில் யுத்தம் நேரிடும்" என்று வாசிப்பவர்களின் மனதைக் கவரும்படியாக தலையங்கத்தில் எழுதப்பட்டிருந்தாலும், அப்புஸ்தகம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவில்லை.

## தளகர்த்தர் ஸேடோவின் யோசனை.

"அமெரிக்காவுடன் ஜப்பான் யுத்தம் நடத்தவேண்டுமென்றால், முதலெடுப்பில் கேந்தரஸ்தானமாய் விளங்கும் ஹாவாய் தீவுகளைத் தாக்கிக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும்" என்று 1940-ம் வருஷத்தில் வஸந்தகாலத்தில் ஸேடோ பிரசுரித்த புஸ்தகத்தில் கண்டிருக்கிறது. அமெரிக்காவுடன் நடக்கப்போகும் யுத்தத்தில் வெற்றி, தோல்வி என்பது கேந்திர ஸ்தானமான ஹாவாய்த்தீவுகளைக் கைப்பற்றுவதைப் பொருத்திருக்கிறது. ஹாவாய்த் தீவுகளைக் கைப்பற்றி அவைகளிலிருந்துகொண்டு, அமெரிக்கா டோக்கியோவையாவது, ஒஸாகாவையாவது விமான பலத்தின் உதவியைக்கொண்டு வெடிகுண்டுகளால் தாக்குவது வெகு எளிது" என்றும் கண்டிருக்கிறது.

ஹாவாய் தீவுகள் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சுமார் சம தூரத்தில் இருப்பதாகச் சொல்லலாம். ஹாவாயிலிருந்து ஸான் பிரான் ஸிஸ்கோ 2,098 மைல்களும் ஹாவாயிலிருந்து ஜப்பானுக்கு 3,385 மைல்களும் இருக்கின்றன.

## ஹாவாய் தீவுகளின் முக்கியத்வம்.

"ஹாவாய் தீவுகள் அமெரிக்கா வசமிருக்கும்வரை, ஜப்பான் தற்காப்புதான் செய்து கொள்ள வேண்டும். இதற்கு மாறாக ஜப்பான் அத்தீவுகளை கைப்பற்றிக் கொண்டால் அதன் கப்பற்படை அமெரிக்காவை எதிர்த்து யுத்தம் புரியவும், அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையிலுள்ள நகரங்களில் வெடிகுண்டு வீசவும் வசதிகள் ஏற்பட்டுவிடும். அதனால் அமெரிக்காவுடன் யுத்தம் செய்ய எண்ணமிருந்தால் நாம் ஹாவாய் தீவுகளை எச்செலவிலும் கைப்பற்றி ஆக வேண்டும்.



அப்பிரயத்தனத்தில் ஒரு சிறு பாகம் யுத்தக் கப்பல்களை இழக்க நேர்ந்தாலும் பரவாயில்லை," என்று தளகர்த்தர் ஸேடோ எழுதியிருக்கிறார்.

அந்த திட்டத்தை ஒத்தே இப்பொழுது ஜப்பான் யுத்தம் செய்துவருகிறது. ஹாவாய் தீவுகளை 150 ஜப்பானிய விமானங்கள் தாக்கின. இருதிறப்பினும் ஏராளமாக நஷ்டமேற்பட்டது.

## திட்டத்தில் இரண்டாவது அம்சம்.

ஜப்பானியக் கப்பற்படை எந்தெந்த விதமாக எதிர்த்து வருமென்றும், அவ்வெதிர்ப்புகள் வெற்றிகரமாக இருக்குமாவென்றும் இனிமேல்தான் தெரியும். பஸிபிக் சமுத்திரத்திலிருக்கும் அமெரிக்கக் கப்பற்படையை திடீரென்று தாக்குவது முடியாது. அதைப்போலவே அவர் போட்ட திட்டத்தின் இரண்டாவது அம்சம் பஸிபிக் சமுத்திரத்தில் யுத்தத்தை கிளப்பிவிடும். எப்படியென்றால் பனாமா கால்வாயை அழித்து அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து ஸப்ளைகளும் சைனியங்களும், பஸிபிக் சமுத்திரத்திற்கு வரவிடாமல் தடுத்து விடுவது அமெரிக்காவின் பலத்தைக் குறைத்ததாகும். இதனால் அமெரிக்க அரசாங்கத்தாரால் பனாமாவிலுள்ள ஜப்பானியர்களைக் கைதிகளாக்கப்பட்டு, பொய் பிரசாரம், ரகசிய சூழ்ச்சிகள் இவைகளுக்கு இடங்கொடுக்காமல் செய்ய முடிந்தது.

1940-ம் வருஷ ஆரம்பத்தில் அதாவது இந்தப் புஸ்தகத்தைப் பிரசுரித்த பொழுது அமெரிக்க ஐக்கிய நாடுகள் பூராவையும் கைப்பற்றுவதாகவே ஸேடோ மனோராஜ்யம் செய்துவந்தார். நமக்கு அவர் எண்ணுவது சாத்தியமாகாது, வீண் எண்ணந்தான் என்றும் புலப்படும். ஆனால் ஹிட்லருடன் போராடி வருவதில் ஜப்பானின் எண்ணம் ஒருக்கால் நிறைவேறுமோ என்று நமக்குத் தோணலாம். அப்புஸ்தகத்தில் மேற்சொல்லிய திட்டத்தைப் பற்றிக் காணப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வித யுத்தம் ஆறு அல்லது ஏழு வருஷங்கள் நீடிக்குமென்று ஆசிரியரின் அபிப்பிராயம்.

## மற்றொரு தடுமாற்றம்.

தளகர்த்தர் ஸேடோ மற்றொரு முக்கிய விஷயத்தைக் கருதாமல் இருந்து விட்டார். புஸ்தகத்தை எழுதும்பொழுது பிரிடிஷ் கப்பற்படை ஜெர்மனியுடன் பஸிபிக் சமுத்திரத்தில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் என்றும் ஜப்பான் எண்ணியிருந்தது. கிரேட் பிரிடன், சைனா, டச்சு இந்தியத் தீவுகள், மற்ற ஐக்கிய நாடுகள் அமெரிக்காவின் நேசதேசங்கள், அவைகள் ஒன்று சேர்ந்து யுத்தத்தை நடத்துகின்றன. இன்னும் ஒரு சிறு காலத்திற்குள் பஸிபிக் யுத்தத்தில் ருஷ்யாவும் ஈடுபட்டு, வ்ளாடிவாஸ்டாக்கிலிருந்து கொண்டு ருஷ்யர்கள் எரிகுண்டுகளை மரத்தாலும், கடிதாசியாலும் செய்யப்பட்ட ஜப்பானிய கட்டடங்களின் மேல் வீசுவார்கள்.

ஜப்பான் இன்னும் சமாதானப் பேச்சை விடாமல் அமெரிக்காவுடன் பேசி போதுமான அவகாசத்தைப் பெற எத்தனித்தது. அதற்குள் அமெரிக்கா ஜனாதிபதி ரூஸ்வெல்ட், எங்கெங்கே ஜப்பானுக்கு சேரவேண்டிய தொகைகள் இருந்ததோ அவைகளை பட்டுவாடா செய்யாமல் நிறுத்தி வைத்தும், பொருளாதார முற்றுகையை வெற்றிகரமாகப் போட்டும், ஜப்பான் இன்னும் உபரியாகச் சாமான்களைச் சேகரிப்பதற்கு முடியாமல் செய்து விட்டார். இதனால் ஜப்பான் வெளிப்படையாக யுத்தத்தை ஆரம்பித்தது. ஆனால் ரூஸ்வெல்ட் மேற்சொல்லிய விதமாக மறைமுகமாக எதிர்த்து வந்தாரே ஒழிய வெளிப்படையாக சண்டை செய்ய இதுவரை தாமதித்து வந்தார். ஜனநாயக நாடுகளும், ஸர்வாதிகார நாடுகளும் ஒன்று சேருவதற்கே இடமில்லாமல் முற்றிலும் விபாகமாய் விட்டன.

## சமாதானத்தின்பேரில் புதிய மாறுதல்.

## புதிய சைனியம் சேகரிப்பதற்கு பிரிடிஷ் அரசாங்கத்தின் திட்டங்கள்.

## தேசசேவைக்கு ஆண், பெண்களின் பொறுப்பு அதிகரித்திருக்கிறது.

## தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு மனிதர்கள் ஒதுக்கப்படுவதில் புதுமாதிரி.

(பிரிடிஷ் வியாபார ஐக்கிய சங்கத்தைச்சேர்ந்த ஹெர்பர்ட் ட்ரேஸி என்பவரால்):—

பிரிடனில் புதிய சைனியம் ஏராளமாகச் சேர்ப்பதற்கு பிரிடிஷ் அரசாங்கத்தார் திட்டங்கள் போட்டதும், ஜப்பான் அமெரிக்காவின்பேரில் யுத்தம் ஆரம்பித்ததும், அநேகமாய் ஒரே சமயத்தில் ஏற்பட்டது. இவ்வித சந்திப்பு அகஸ்மாத்தாயும் இருக்கலாம். ஜப்பான் படையெடுப்பை எதிர்பார்த்தும் இருக்கலாம். இந்த மகத்தான சம்பவத்திற்கு முன் மூன்று நாட்களாகவே பிரிடிஷ் காமன்ஸ் சபையில் அரசாங்கத்தாரின் சைனியம் சேகரிப்பதின் உத்தேசங்களைப்பற்றி விவாதங்கள் உண்டாயின. அந்த திட்டங்கள் இதுவரையிலும் இல்லாத நூதனமான திட்டங்கள். ஆனால் அவைகளை யாதொரு முணுமுணுப்பில்லாமல் வியாபார ஐக்கிய சங்கங்கள் ஆமோதித்துவிட்டன. இவ்வித திட்டங்கள் போடுவதற்கு வியாபார ஐக்கிய சங்கங்களின் பிரதிநிதிகளே பெரும்பாலும் ஈடுபட்டிருந்தனர். அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய சாதகங்களும் அங்கீகரிக்கப்பட்டன. இவ்வித மாறுதல்கள் மிகவும் திடீரென்று ஏற்பட்டன. ஆனால் அதில் அரசாங்கத்தாருக்கும் தொழிலாளிகளின் கக்ஷிக்கும் ஒருவித இடையூறு இல்லாமல் அம்மாறுதல்கள் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டன.

### மாறுதல்கள் இரண்டுவிதம்.

முதலாவதாக அநேகம் ஆண், பெண் இரு பாலர்களும் தேசியசேவை செய்வதற்கு நிர்பந்தப்படுத்தக்கூடிய பொறுப்பு ரொம்ப அதிகரிக்கச் செய்யப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக ராணுவ சேவைக்குவேண்டிய அவசியத்திற்கு முன்னிட்டு கைத்தொழிலுக்காக தனிப்பட பொறுக்கி வைக்கப்படும் முறையை முற்றிலும் மாற்றப்பட்டிருக்கிறது.

இதுவரை ராணுவ சட்டப்படி 19 வயது முதல் 41 வயது வரையிலும் உள்ள மனிதர்களையே யுத்தத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அநேகமாக இந்த வயதுக்குட்பட்டவர்களை எல்லாம் வேலைக்கு எடுத்துக்கொண்டாய்விட்டது. தேசிய முக்கியமான வேலைகளுக்கு இந்த வயதுக்குட்பட்டவர்களின் கைத்தொழிலில் ஈடுபட்டவர்களை மாத்திரம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் 51 வயது வரையிலும் உள்ள ஆண்களும், 20 முதல் 51 வயது வரையிலுமுள்ள ஸ்திரீகளும் ராணுவத்தில் சேரவேண்டும் என்று மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள். அதிலும் முதன் முதலில் 20 முதல் 41 வயதுள்ள ஸ்திரீகள் கட்டாயம் சேரவேண்டும். யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்வதற்காகமட்டில் ஒரு தனிப்பகுதியை வைத்துக்கொள்ளும் வழக்கம் விட்டுவிடப்பட்டது. ஆண்களிலிருந்தும், பெண்களிலிருந்தும் யுத்த தொழிற்சாலைகளுக்குப் பொறுக்கி எடுக்கப்படுவார்கள்.

### ஸ்திரீகளை யுத்தத்தில் சேர்ப்பது.

ராணுவ சேவைக்கு ஸ்திரீகளைத் தேர்ந்தெடுப்பது இதுவரையிலுமில்லாத நூதனமுறை. பொதுஜனங்கள் இதற்கு மறுப்புச்சொல்லாமல், ஏகமனதாக



ஒப்புக்கொண்டனர். அவ்விதம் ஸ்திரீகளை ராணுவசேவை செய்யக்கட்டாயப்படுத்துவதில் அபாயங்களாவது, கஷ்டங்களாவது நேரிடாவண்ணம் வசதிகள் அளிப்பதாக அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

20 முதல் 30 வயது வரையுள்ள ஸ்திரீகள், கப்பற்படைக்கும், அயல் நாடுகளில் உதவிப்படைக்கும், ஆகாய விமான உதவிப்படைக்கும் அல்லது தேசத் தற்காப்புப்படைக்கும் சேர்க்கப்படுகிறார்கள். மேற்சொல்லிய படைப்பகுதிகளில் அவர்களுடைய இஷ்டப்படி எதிலும் சேரலாம். அல்லது தொழிற்சாலைகளில் ஏதேனும் காலி ஸ்தானங்கள் ஏற்பட்டால் அவைகளுக்கு நியமிக்கப்படுவார்கள். சுதாவாகவே தேசசேவை செய்ய ஆசையிருந்தாலும்கூட கல்யாணமான ஸ்திரீகள் சேர்க்கப்படமாட்டார்கள். அதைப்போலவே 14 வயதுக்குட்பட்ட தனக்குப் பிறந்த குழந்தை அல்லது மாற்றாந்தாயின் குழந்தை அல்லது ஸ்வீகாரக் குழந்தை அல்லது முறை கேடாக பிறந்த குழந்தை எதையேனும் ஒன்றை வைத்திருக்கும் ஸ்திரீ ராணுவத்தில் சேர்க்கப்படமாட்டாள். இவ்விதமாக ராணுவசேவைக்கு முன் வந்திருக்கும் ஸ்திரீகளில் ஒரு பகுதி ஒதுக்கப்படுவார்கள். அதே மாதிரியாகவே தொழிற்சாலைகளில் வேலைசெய்ய முன் வந்திருக்கும் ஸ்திரீகளிலும் ஒரு பகுதி ஒதுக்கப்படுவார்கள்.

### தனிப்பட்ட முறையில் ஒதுக்கிவைப்பது.

ஆண், பெண்களை அவர்கள் வேலைபார்த்து வந்த முறைப்படி ஒதுக்கி வைத்து வந்தது இப்பொழுது நின்றுவிட வேண்டும். முக்கியமான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தங்களை சண்டையில் சேர்ப்பதற்குக் கொடுக்கப்படும் நோட்டீஸ் பயத்தை ஒதுக்கிவைத்துக்கொள்ளும்படி கேட்க வேண்டும். அவர்கள் ஆக்ஷேபனையை ஜில்லா ஆள் சேகரிக்கும் இலாகா தீர்மானிக்கும். ஒதுக்கிவைக்கவேண்டிய வேலைகள் சம்பந்தமாக இப்பொழுது வெவ்வேறு வேலைகளுக்கு தனித்தனியாக ஒதுக்கப்பட்டிருக்கும் முறையை ஒத்து அதிசீக்கிரத்தில் ஏற்கனவே பிரிக்கப்பட்டுள்ள பகுதிகளைத் திருத்தி அமைக்க வேண்டும். எல்லா பேர்களுக்கும் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு வருஷம் வீதம் உயர்த்தவேண்டும். 35 வயதுள்ள மனிதர்களை ஒதுக்கிவைத்தால், ஆறு மாத பயத்தில் 41 வயதுள்ளவர்களை ஒதுக்கும்படி நேரிடும்.

சண்டைக்குத் தேர்ந்தெடுப்பதை ஒத்திவைக்கும்படி கோரும் மனுக்களைப் பரிசீலனைசெய்ய 45 ஆள் சேகரிக்கும் இலாகாக்கள் இருக்கின்றன. அந்த இலாகாவில் ராணுவ இலாகா பிரதிநிதிகளும், ஸப்ளை இலாகா பிரதிநிதிகளும் இருப்பார்கள், அதாவது தொழிற் ஸப்ளை இலாகா அதிகாரி, ராணுவ ஆள் சேகரிக்கும் அதிகாரி, ஆள் சேகரிப்பதை பரிசீலனைசெய்யும் அதிகாரி, பெண்களை சேகரிக்கும் அதிகாரி, ஒரு அக்கிராசனாதிபதி இவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் அரசாங்கத்தாரின் நியமனம். ஒத்திவைக்கக் கோரும் மனுவைத் தள்ளியவுடன் அந்த மனுதாரரை ராணுவ வேலைக்கு மாற்றப்படும் என்பது கட்டாயமில்லை.

### எப்படி மனிதர்கள் பொறுக்கப்படுவார்கள்.

41 வயதுக்கு மேற்பட்ட அதிக நேரம் ஒரு இடத்தில் இருப்பதற்குப் பழக்க வழக்கமுள்ளவர்களை ராணுவ வேலைக்குத் தகுதியுள்ளவர்களென்று எண்ணக் கூடாது. அப்பேர்ப்பட்டவர்களை அரிய சில வேலைகள் அவர்களுக்குத் தெரியுமானால், பொதுமக்கள் செய்யும் வேலையில் காலியிருந்தால் அங்கு மாற்றப்படுவார்கள். இல்லாவிடில் சண்டையில் சேர்ந்து தகுதியுள்ள மனிதர்களையும், சிறுவர்களையும், குறித்த இடத்தில் இருப்பவர்களையும், பொதுமக்களைக் காப்பாற்ற வேலை செய்பவர்களையும் விடுவித்து, சண்டையில் போய்ச் சேருவதற்கு உதவி செய்யவேண்டும். ஸ்திரீகளுக்கும் இதேமாதிரிதான். முதலில் பால்யமாகவும்,

தகுதியுள்ளவரும், தனிப்பட்ட ஸ்திரீகளும், சண்டைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ராணுவப் படைகளிலும், கப்பற்படையிலும் இவைகளில் உள்ளவர்களின் பேர்கள் ஸ்திரீகளாய் இருந்தால் அவர்கள் வீட்டைவிட்டு வெளியே போவதற்கு நிர்ப்பந்தம் ஏற்படும்படியாக கருதப்படமாட்டாது.

இவ்விதம் புதிய ஏற்பாட்டிற்கு முக்கிய காரணம் என்னவென்றால், ஆண், பெண்களுக்கு அவர்களுடைய சொந்தப் பொறுப்பு, வீட்டுப் பற்றுதல், கைத்தொழில் ஞானம் இவற்றிற்குத்தக்கபடி அவரவர்களுக்கு வேலை கொடுக்கப்படும். மனுஷ்ய பலத்திற்கு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் தேசத்தார்களை தங்கள் ஆதிக்கத்தின்கீழ் வைத்திருப்பது ஒரு புதிய மாறுதல். ஆனால் அது சமாதானத்தின்பேரில் ஏற்பட்டது. அது காரணத்தினால்தான் அந்த மாறுதல் அதிக விசேஷமானது.

---

## ஐரோப்பாவிலுள்ள யூதர்களின் நகரங்கள்.

## அங்கு அதிக நெருக்கம்; சாதாரண சௌகரியங்கள்கூட கிடையாது.

## அதிகாரிகள் யூதர்கள்; ஆனால் ஜெர்மனியின் உத்தரவுப்படி நடக்கிறார்கள்.

## பொருளாதார அபிவிருத்தியைத் தடுக்க முறைகள்.

ஒரு போலந்து நிருபர் எழுதுவது:—

நாஸிகள் ஆக்கிரமித்த ஐரோப்பாவில் யூதர்கள் வசிக்கும் நகரங்கள் மூன்று விதப்படும். முதலில் கவர்னர் பிராங்க் (Frank) என்பவர் 1939-ம் வருஷத்தில் வார்ஸா, லோட்ஸ், லப்ளின், கிராகோ என்ற நகரங்களை அங்குள்ள யூதர்களுக்காக மட்டில் தனியாக ஒதுக்கிவைத்தார். அடுத்தபடியாக அங்கு வசிக்கும் யூதர்களுக்கும், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸெக்கோஸ்லாவியா என்ற இடங்களிலிருந்து வெளிக்கடத்தப்பட்ட யூதர்களுக்காகவும் தனியாக லப்ளின் நகரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடைசியாக லவவ் (Lwow), வின்லோ, கௌனஸ், ரிகா, மின்ஸ்க், கிவ், ஒடெஸ்ஸா இன்னும் யூக்ரேன், ஒயிட் ருஷ்யா பிரதேசங்களிலுள்ள மற்ற இடங்களும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டவை.

## வார்ஸா நகரம்—ஒரு உதாரணம்.

வார்ஸாவில் 4,00,000 யூதர்கள் வசிக்கிறார்கள். அதை மற்ற நாடுகளுக்கு ஒரு உதாரணமாக நாஸிகள் கருதுகிறார்கள். யூதர் ஜனத்தொகையில் பெரும்பாலோர் நகரத்தின் வடகிழக்கு பாகத்தில் வசித்துவந்தார்கள். மத்திய பாகத்திலும், மேற்கிலும் இருந்த 1,50,000 யூதர்களை அங்கிருந்து மற்ற யூதர்கள் இருக்கும் ஜில்லாக்களில் மாற்றவேண்டியிருந்தது. ஆனால் அவைகளில் ஜன நெருக்கம் அதிகம். அதனால் உபரியாய் வந்த யூதர்களுக்கு இடவசதிகளாவது, சுகாதார வசதிகளாவது கிடையாது. இருந்தபோதிலும் அவர்களை நாஸிகள் பலாத்காரமாக வெளிக்கடத்திவிட்டனர். அதனால் பதினாயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழக்கவேண்டி நேரிட்டது. அவர்களுடைய சொத்துக்களை நாஸிகள் பறித்துக்கொண்டனர். அவர்களும் மேற்சொல்லிய இடங்களுக்கு வெளியேற்றப்பட்டார்கள். அங்கு அவர்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் அளவிடமுடியாது. ஜனநெருக்கம் முன்னிலும் அதிகமாய்விட்டதால் அநேக குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து ஒரே அறையில் வசிக்கும்படி நேரிட்டது. மேலும் புதிதாய் வந்தவர்களுக்கு பிராசீனமான வசதிகளைக்கூட செய்துகொடுக்க



நாஸிகள் மறுத்துவிட்டனர். இந்நிலைமையில் அங்கு தொத்து நோய்கள் பரவுவது ஆச்சரியமில்லை. மேலும் நாஸிகள் இதை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு, தொத்து நோய்களை மற்ற இடங்களில் பரவ விடாமல் வியாதியஸ்தர்களை இந்த ஜில்லாக்களில் விலக்கி வைத்திருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள்

## வயதின் முதுமையடைந்தவர்களடங்கிய யூதர்கள் சபை.

சமூகவாழ்க்கை நடத்துவதற்காக பெரியோர்களடங்கிய யூதர்கள் சபை ஏற்பட்டிருக்கிறது. அந்த சபை நாஸிகளின் மேல்பார்வையில் இருக்கிறது. அந்நகரத்திலுள்ள ஜனங்கள் நல்ல நடத்தையாய் இருப்பதற்கு அந்த சபைதான் பொறுப்பாளி. அச்சபை வரி வசூல் செய்வது நகர வாஸிகளுக்குப் போடப்படும் சட்டதிட்டங்களுக்கு நேரிடும் செலவை ஈவுப்படி வசூல் செய்வது, பொதுஜன க்ஷேமத்திற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் நிர்வகிப்பது, நாஸிகள் அனுமதிப்பதற்குத் தகுந்தவாறு கல்வி கற்றுக்கொடுப்பது ஆகிய இவ்வித அலுவல்களைச் செய்யவேண்டும். இச்சபை மெம்பர்களுக்கு ஒத்தாசையாக யூதர்களிடமிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட போலீஸ்காரர்கள் அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் யாவரும் நிராயுதபாணிகள். அவர்கள் ஜெர்மன் ரகசியப் போலீஸாருக்கும்(Gestapo) ராணுவத்திற்கும் அடங்கியவர்கள். அவர்கள் இருப்பிடங்கள் கோட்டை சுவர்களுக்கு அருகாமையில் வெளிப்புறத்தில் இருக்கின்றன. நாஸிகள் பார்வையிட்டு கண்டனம் செய்த பிறகு அனுப்பும் செய்திதான் அயல்நாடுகளுக்குத் தெரியவரும். யூதர்கள் விசேஷ கெஜெட் வழக்கமாக போலிஷ் (Polish) பாஷையில் பிரசுரிக்கப்படும். அதில் உத்தியோக முறையில் வரும் விளம்பரங்களும், விவாக விஷயங்களும், மரண சம்பந்தமான விவரங்கள் முதலியவைகள்தான் காணப்பட்டு இருக்கும்.

## கடுமையான உணவு திட்டம்.

உணவும், இன்னும் மற்ற சில்லறை சாமான்களும் யூதர்கள் நகரத்திற்கு மிகவும் குறைவாகவே ஸப்ளை செய்யப்படும். ஜெர்மானியர்களுக்கு அளிக்கப்படும் ஆகாரப் பொருள்களில் கால் பாகம்தான் யூதர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்படும். அவைகளில் பாதிதான் எஞ்சியிருக்கும் யூதர்கள் அல்லாதவர்களுக்கு அளிக்கப்படும். அந்நகரத்தில் உற்பத்திப் பொருள்கள் நாஸி உத்தியோகஸ்தர்களின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கின்றன. அவைகள் பெரும்பாலும் நாஸி ராணுவங்களுக்கோ அல்லது அந்நகரத்திற்கு வெளியேயுள்ள இடங்களுக்கோ அனுப்பப்படும். அந்நகரத்திற்கென்றே புதிய நாணயங்கள் வழங்கப்படுகின்றன. அவை வெளியூர்களில் செலாவணியற்றவை. அந்நகரத்திற்கு அனுப்பப்படும் உணவுப்பொருள்கள், இன்னும் இதர விளைபொருள்கள் இவைகளுக்கு நாஸிகள்தான் விலை மதிப்பிடவேண்டும். அவர்கள் அங்கு கிடைக்கும் விளைபொருள்களின் விலையைக் குறைத்து அந்நகரத்திற்கு அனுப்பப்படும் மிகவும் ஸ்வல்பமான உணவுப்பொருள்களுக்கு அதிக விலைபோட்டு அந்த நகர வாஸிகளை கஷ்டத்திற்குள்ளாக்குவார்கள். வர்த்தகத்தில் பொருள் கொடுத்து பொருள் வாங்குவது ஜெர்மானியர்களின் வர்த்தக முறைபடிதான் இந்நகரத்திற்கும் உலகத்திலுள்ள மற்ற நகரங்களுக்கும் நடந்துவரும் எல்லா வியாபாரங்களுக்கும் இதே முறையில் கையாளப்படுகிறது. ஆதலால் அந்த நகரவாஸிகளுக்கு ஏற்பட்ட விகிதத்தின் விலைக்குமேல் காணக்கூடிய பொருள்கள் உற்பத்திசெய்ய அவர்களுக்கு முடியவில்லை. அந்நகரத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் அதிகப்பட அதிகப்பட, உணவுப்பொருள்களின் விலையோ அல்லது நூதனமாக விதிக்கப்படும் வரிகளோ அதிகரிக்கப்படும். அதன் பயனாக அங்கு கிடைக்கும் எல்லா பொருள்களையும் யாதொரு செலவன்னியில் நாஸிகளின் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். அதனால் அங்குள்ளவர்களின் ஐவேஜி விருத்தியடையவும், அந்நகரப் பொருளாதாரம் முன்னேற்றமடையவும் ஏதுவில்லை. ஏனென்றால் கைத்தொழில்,

பொருளாதாரம் இன்னும் ஒவ்வொரு துறையிலும் யூதர்கள் மெதுவாகத்தான் முயற்சி எடுத்துக்கொள்ளுகிறார்கள். அவ்விதம் முயற்சிக் குறைவினால் வேலை இல்லாத்திண்டாட்டம் ஏற்பட்டு, அங்குள்ள தொழிலாளிகள் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மேலும் நாஸி உத்தியோகஸ்தர்கள், ஏதேனும் அங்கு வேலைத் தாழ்வு ஏற்பட்டால், 'கட்டாய வேலை' திட்டத்தை அங்கு கொண்டுவரப்போவதாகவும் அந்நகர சபையை அடிக்கடி பயமுறுத்துகிறார்கள். அங்கு சிறு பள்ளிக்கூடங்களே மிகவும் குறைவு; அதனால் பெரிய கல்லூரிகளையும், ஸர்வ கலாசாலைகளையும்பற்றிச் சொல்லத் தேவையேயில்லை. ஆனால் பயிற்சி பெற்ற தொழிலாளிகள்மட்டும் ஜெர்மனிக்குவேண்டிய யந்திர சாமான்களைச் செய்வதற்கு கற்றுக்கொடுக்கப்படுகிறார்கள்.' அந்நகரத்திலிருக்கும் யூதர்களல்லாதவர்களை அங்கிருந்து வெளிக்கடத்த வேண்டிய பெரும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதனால் அங்குள்ள யூதர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஒருவித சம்பந்தமும் ஏற்படவே நியாயமில்லை.

## மற்ற நகரங்கள்.

ஐரோப்பாவிலுள்ள இதர நகரங்களும் வார்ஸா நகரத்தை ஒத்தேயிருக்கின்றன. லாட்ஸ் நகரத்தில் 1,50,000-ம் கிராக்கோவில் 50,000-ம், ஜனத்தொகை கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் லப்ளினில் சமீப காலம்வரை 60,000 ஜனங்கள் இருந்தார்கள். இப்பொழுதுதான் ஜெர்மனியிலிருந்து அநேக ஜனங்கள் அனாதரவாக அங்கு அனுப்பப்படுகிறார்கள். லப்ளினில் வஸிப்பவர்கள் பெரும்பாலும் போலிஷ் யூதர்கள். புதிதாக அங்கு அனுப்பப்பட்டிருக்கும் ஜெர்மன் யூதர்களின் பாஷையும், தேர்ச்சியும் பழக்க, வழக்கங்களும், படிப்பும் அலாதி. சாதாரண காலங்களில்கூட அவ்விரு கூட்டங்கள் ஒன்றுசேர நேரிட்டால், அநேக சில்லரைத் தொந்தரவுகள் ஏற்படும். இப் புதிய நகரங்கள் ஜெர்மனி ஆக்கிரமித்த ருஷ்யாவில் இருக்கின்றன. அவைகள் ஜெர்மனி மேல்பார்வையிலும், யூக்ரேன் மேல்பார்வையிலும் இருந்துவருகின்றன. அங்குள்ள வாழ்க்கையைப்பற்றி நமக்கு தகவல் கிடைப்பதே துர்லபம். ஆனால் அங்கு ஏற்கனவேயுள்ள போலிஷ் யூதர்களைக் காட்டிலும் ருஷ்யா, லாத்வியா, லிதுவேனியா இவைகளிலிருந்து அங்கு அனுப்பப்பட்டிருக்கும் யூதர்களின் நிலைமை இன்னும் கேவலமாகத்தான் இருக்கும்.

---

## விமானங்களும் டாங்கிகளும்.

## லிபியா யுத்தத்தின் அனுபவங்கள்.

## எதிரி டாங்கிகளுக்கு விளைந்த ஆபத்து.

## ஜு 87—ஜெர்மன் பாய்ச்சல் விமானங்களின் திறமை பலிக்கவில்லை.

[விமான அதிகாரி L. V. பிரேஸர் எழுதியது.]

லிபியா யுத்தத்தின் பயனாக விமானங்களுக்கும், டாங்கிகளுக்கும் உள்ள வித்தியாசம் மறுமுறையாகத் தெரியவந்தது. பிரதேசத்தின் நிலைமைகள் ஜாஸ்தியாக யுத்தத்தில் மாறுதலைச் செய்தாலும் வேறுசில அம்சங்கள் ஸ்திரமாகக் காணப்படுகின்றன.

முதலாவதாக, சமமான எண்ணிக்கையுள்ள டாங்கிகள் நிலச்சண்டைக்குச் சாதகமாக இருந்தபோதிலும் விமானங்களைக்கொண்டு டாங்கிகளைச் சிதரஅடித்துவிடமுடியும்.



இரண்டாவதாக பிரிடிஷ், அமெரிக்க விமானங்கள் ஜெர்மன் டாங்கிகளைப் பாழாக்கி விடுகின்றன.

கனமான குண்டுகளை வேகமாகச் செல்லும் விமானங்களிலிருந்து போட்டால் டாங்கிகளுக்கு இடைஞ்சல் ஏற்படும். ஆகாயத்திலிருந்து டாங்கிகளை யுத்தம் நடக்கும்போது தாக்குவது விமானிகளுக்கு ஒரு பெரும் கஷ்டமாக இருந்தது. இதற்காக இருசைனியங்களுடைய டாங்கிகளும் மோதிக்கொள்ளுவதற்கு முன்பே எதிரி டாங்கிகளைத் தாக்கவேண்டும்.

ஜெர்மன் ஜெனரலான ரோமெல் டாங்கிகளையும், கவசப் படைகளையும் சன்னத்தப்படுத்திக்கொண்டு யுத்தரங்கத்திற்கு வருவதற்கு முன்பே அவைகள் பலமாகத் தாக்கப்பட்டன. பல சந்தர்ப்பங்களில், எதிரி டாங்கிகள் நேரே தாக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டன. ஆகையால் நேசப் படைகளுக்குள் அவைகள் புகுந்து செல்லமுடியவில்லை.

லிபியாவில் நேசதேசப் படைகள் செல்லும்போது எதிரி டாங்கிகளுக்கு விளைந்த சேதம் காணப்பட்டது. டிமா-கபுஸோ ரஸ்தாவிலும், பாறைகளிலும், மணல் பாதைகளிலும் ஏராளமாக எதிரி டாங்கிகள் கிடந்து எடுக்கப்பட்டன.

ஒரு பிரிடிஷ் விமானப்படை அதிகாரி பின்வருமாறு எழுதுகிறார் :—“நமது பாம்பர் படை மற்றொரு எதிரி டாங்கி வரிசையைத் தாக்கியது. எதிரி பான்ஸர் படையின் முறிந்த சில பாகம் பாலைவன ரஸ்தா பூரா கிடந்தன. யுத்த சாமான்களும் பெட்ரோல் ஏத்திச்சென்ற லாரிகளும் இரும்புப் பாளங்களும் கிடந்தன.”

போலாந்து, பிரான்ஸ் முதலிய இடங்களில் வெற்றிகரமாக ஜெர்மனி உபயோகித்துவந்த ஜு 87—பாய்சல் பாம்பர்கள் லிபியாவில் பிரயோஜனப்படவில்லை. சரியாகக் குறிப்பிடப்பட்ட லக்ஷியங்களில் பாய்ந்து தாக்கக்கூடிய எதிரி பாம்பர் விமானங்கள் யுத்த களத்தில் பயன்படவில்லை. அமெரிக்க, இங்கிலீஷ் விமானங்களுக்குச் சமமாகவும் இல்லை.

மேலும் பாலைவனச் சண்டைக்குப் பிறகு பிரிந்துசெல்லும் எதிரி டாங்கிகளும் தாக்கப்பட்டன. யுத்தம் முடிந்தபிறகு டாங்கிகளை வேகமாக ஒன்றுசேர்க்க முடியாமல் செய்யப்பட்டன.

டாங்கிகளை நேர்முகமாகத் தாக்கமுடியாத காலத்தில் ஸப்ளை லாரிகளும் கவசமணிந்த யந்திர மோட்டார்களும் தாக்கப்பட்டன. இரு சைனியங்களுக்கும் அதிக தூரமான மார்க்கங்கள் வழியே ஸப்ளைகள் வரவேண்டியிருந்ததில் மர்மாரிக்கா யுத்தத்தில் நேசப்படைகள் எதிரிகளுக்கு அதிக சேதத்தை விளைவித்தன.

---

## 41-ம் ந. ஜெர்மன் வெடிகுண்டுக் கப்பலின் முடிவு.

## கப்பல் வியாபாரத்தின் அழிவு.

## விமானத் தாக்குதல்களுக்கும், நீர்மூழ்கிகளின் தாக்குதல்களுக்கும் உதவிப்படை.

## கப்பல்படை பகுதிகூட உபயோகப்படுத்தப்பட்டது.

“மான் செஸ்டர் கார்டியன் பத்திரிகை” கப்பற்படை நிருபர் எழுதியது.

ஆஸ்திரேலிய க்ரூயிஸர் ஸிட்னிக்கும், ஜெர்மன் யுத்தக் கப்பல் கோர்மோ[illegible] (ஸ்டீர் மார்க்)க்கும் பலமான சண்டைகள் நடந்ததாக உத்தியோக முறையில் [illegible]ரம் வெளிவந்தது. இதற்குமுன் கப்பற்படை அதிகாரிகளுக்கு 41-ம் ந.

ஜெர்மன் 'ரெய்டர்' என்றுமட்டும் தெரியவந்ததே தவிர, மேற்சொல்லிய நாமதேயத்தை அவர்கள் கேள்விப்பட்டதே இல்லை. சென்ற யுத்தத்தில் ஜெர்மனிக்கிருந்த பூராக் கப்பல்களைப்போல் இந்த எண் இரண்டுமடங்கு கொண்டது. சென்ற இரண்டு வருஷ யுத்தத்தில் வெளிப்படையாகத் தெரிந்த மட்டில் ஏழு கப்பல்கள் நாசமாக்கப்பட்டும், மற்றும் மூன்று கப்பல்கள் ஓட விடாமல் சேதப்படுத்தப்பட்டுமிருக்கிறது. ஆனால் தந்திரத்தின் காரணமாக பாக்கி சேதமடைந்ததைப்பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை. நம்மால் கைப்பற்றப்பட்டவைகளை உத்தியோக முறையில் ஸப்ளைக் கப்பல்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவை உண்மையில் கப்பல் இலாகா அந்தரங்க ரிகார்டுகளில் வெடிகுண்டு கப்பல்கள் என்றே கணக்கிடப்பட்டிருக்கின்றன.

## 41-ம் ந. கப்பலின் சரிதை.

ஜெர்மன் கப்பற்படை இலாகா, சமுத்திரத்தில் வரும் சாமான் கப்பல்களை அமிழ்த்துவதற்காக 41 கப்பல்களை அனுப்பியிருக்கக்கூடுமானால், அதன் முக்கியத்துவத்தை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். கடல் எதிர்ப்புகளில் 'யூ' படகுகளை அதிகம் ஜெர்மனி அனுப்புவதிலிருந்தும், ஆகாயமார்க்கமாக புது, புது விமானங்களை அனுப்புவதிலிருந்தும், பிரிடனை கடல் மார்க்கத்தாலும், ஆகாய மார்க்கத்தாலும் முற்றுகை போடுவது மிகவும் பிரயாசை, என்று நாஸிக் கப்பற்படை அதிகாரிகள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

பிரிடன் அநேகம் துணைக்கப்பல்களும், வேட்டைக் கப்பல்களும், வேவு பார்க்கும் கப்பல்களும் வைத்திருக்கிறது. இவைகளைப் பிளந்துகொண்டு பிரிடனுக்குச் சாமான்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்களை ஜெர்மனி தாக்கவேண்டும். அதனால் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களை நேர்முகமாகத் தாக்கச் சாத்தியப்படாத போனாலும், பார்சத்திலிருந்து ஜெர்மனி அவைகளைத் தாக்கவேண்டியிருந்தது. வெகுதூரமுள்ள சமுத்திரங்களில் இம்மாதிரி வெடிகுண்டுக் கப்பல்கள் ஆங்காங்கு நடவடிக்கை செய்தால் அங்கு தனிப்பட்ட கப்பலை வேட்டையாடுவதற்காக, இங்கிருந்து பிரிடிஷ் கப்பல்கள் பின்பற்றிப்போய் சோர்வடைந்தும், அநேகமாய்ப் பிரயோஜனப்படாமலும்போய், க்ரூயிஸர்படை பிரிக்கப்பட்டும், வேவுபார்க்கும் கப்பல்களின் பலம் குறைவுபட்டும் போக நேரிடும். நவீன கடல் யுத்தத்தில் இத்தகைய வெடிகுண்டுக் கப்பல்கள் தந்திரமாக நடவடிக்கை செய்வதே அவைகள் செய்யக்கூடிய நஷ்டத்தைக் காட்டிலும் மேலானது.

இத்தகைய வியாபார வெடிகுண்டுக் கப்பல்களுக்கு ஆயுத முஸ்தீப்புச் செய்வது நீண்ட காலத்தை வீணாக்கும். அதிகச் செலவும் நேரிடும். யுத்தத்திற்குச் சில வருஷத்திற்குமுன் ஜெர்மன் வியாபாரக் கப்பல்களிலும், இதலிய வியாபாரக் கப்பல்களிலும் சில தொகுதியை உதவி க்ரூயிஸர் படைக் கப்பல்களாக மாற்றுவதற்குத் தக்கவாறு கட்டப்பட்டது என்பது உண்மை. அப்படியிருந்தபோதிலும் யுத்தம் ஏற்பட்ட பிறகும் அவற்றை யுத்தக் கப்பல்களாக மாற்றுவதற்குச் செய்யவேண்டிய வேலை அநேகம் பாக்கியிருந்தது. மறைவாக வெடிகுண்டு குழாய்களை அமைக்கவும், பீரங்கிகளை வைப்பதற்கு கட்டடம் அமைக்கவும், உயர்த்தவும், தாழ்த்தவும் கூடிய மேடைகளை ஏற்படுத்தி அவற்றின்மேல் பீரங்கிகளை ஏற்றி வைக்கவும், மாருட்டம் செய்வதற்குவேண்டிய புகைப்போக்கிகள், வெவ்வேறு பாய் மரங்கள், வெவ்வேறு பாலங்கள் இவைகளை அமைப்பதற்கும் அவகாசம் பிடிக்கிறது. மாருட்டம் பூர்ணமாக இருப்பதற்கு எந்தெந்த தேசத்தாரைப் போல் வேஷம் போடவேண்டுமோ அதற்காக அநேகவிதமான பிரட்டு அதிகாரச் சீட்டுகளும், தஸ்தாவேஜுகளும் இருக்கவேண்டும். அந்தக் கப்பலில் செல்லுகிறவர்கள் நார்வேக்காரர்களோ, டச்சுக்காரர்களோ, அல்லது வேறு தேசத்தினரோ யார்மாதிரி நடிக்கிறார்களோ அதற்குத் தகுந்தபடி முற்றிலும் அந்தவூர்க்காரர்களைப் போல் நடிக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனும் எது தன் பிறந்தவூர் என்று



சொல்லுகிறானோ அதற்குத் தகுந்தபடி அந்தக் குடும்பச் சரித்திரம் மனப்பாடமாகத் தெரிந்திருக்கவேண்டும். அட்லாண்டிக் சமுத்திரத்தில் இம்மாதிரி செல்லும் கப்பலில் விரோதிகளின் க்ரூயிஸரிலுள்ள அதிகாரிகள் வந்து பரிசோதித்தால் இவ்வளவு வகை ஏமாற்றங்களும், இன்னும் அநேக வித ஏமாற்றங்களும் அவசியம்.

## ஸ்வாரஸ்யமில்லாத நடவடிக்கை.

ஆயுதம் பூண்ட வெடிகுண்டுக் கப்பலின் வேலையோ அநேகமாக முற்றிலும் மந்தமாகவே இருக்கும். கார்மொரான் கப்பல் செய்த வேலையைப்பார்க்க இரண்டு தடவை எதிரிகள்வசம் பிடிபட்டதிலிருந்து, தெரிந்துபோன வழிகளை மறைக்க வேண்டி ஒருவித வேலையும் செய்யாமல் மூன்றுமாத காலத்தை வீணாக்கியது. சில சமயங்களில் பரபரப்பு ஏற்படக்கூடிய சம்பவங்களும் நேரிடுகின்றன. பயமடையக்கூடிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இந்த யுத்தத்தில் அபாயம் வருமென்று தோன்றியவுடன் நமது கப்பற்படையினால் நாசமாக்கப்பட்ட வெடிகுண்டு கப்பல்களில் ஏறிச்சென்ற எல்லோரும் அந்தக் கப்பல்களை விட்டுவிட்டுத் தப்பிப் போய்விட்டார்கள். ராவல்பிண்டி, ஜெர்விஸ்பே இக்கப்பல்களின் முடிவுக்கு சமானமாக ஜெர்மன் உதவிக் கப்பற்படையில் ஒரு நிகழ்ச்சிகூட ஏற்படவில்லை. கார்மொரான் அழிந்துபோகும்பொழுது அதன் எதிரிக்கப்பல் மற்ற கப்பல்களுக்கு நடுவில் தீப்பற்றி எரியும்பொழுதும், திரும்பவும் சேர்ந்து கார்மொரான் கப்பலை பீரங்கிகளால் சுடமுடியாமல் இருந்தபோதிலும்கூட அந்தக் கப்பலிலிருந்து 330 ஜெர்மானியர்கள் அந்தக் கப்பலை விட்டுவிட்டு இந்தக் கதையைச் சொல்ல பிழைத்து வந்துவிட்டார்கள்.

ஆயுதம்பூண்ட வியாபாரக் கப்பல்கள் கடலில் செல்லும் இதர வியாபாரக் கப்பல்களை அழிக்கவேண்டிய படையெடுப்பில் உபயோகமற்றவை என்று ஜெர்மன் அதிகாரிகளுக்கு நன்கு தெரிந்துவிட்டது. அதனால்தான் இவ்வித படையெடுப்பைப் பலப்படுத்தவேண்டி கப்பற்படையின் முக்கிய பகுதிகளை அனுப்பவேண்டி நேரிட்டது. அவ்விதம் செய்ததில் யாதொரு பயனும் அடையாமல் பிஸ்மார்க் சண்டைக் கப்பலையும், கிராஸ்பி என்ற சிறு சண்டைக் கப்பலையும், ஷார்ன்ஹாஸ்ட், நீஸ்னௌ என்ற க்ரூயிஸர்களையும், பிரின்ஸ் யூஜென் என்ற லேசான க்ரூயிஸரையும் ஜெர்மானியர்கள் இழக்க நேரிட்டது. இந்த யுத்தத்தில் ஜெர்மனியின் மிகவும் சொற்பமான கப்பற்படைக்கு இந்த நஷ்டம் பெரும் பாதிப்பைக் கொடுக்கிறது.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

### பிரஸங்கம் 77—(4-வது பிரிவு).

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜனவரி ... | 10, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 11, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி ... | ,, | 6.00 |
| | | ஆதனூர் ... | ,, | 6.30 |
| | 12, திங்கட்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | காரையூர் ... | மாலை | 6.00 |
| | | கீழத்தானியம் ... | ,, | 6.30 |
| | 16, வெள்ளிக்கிழமை... | வடவாளம் ... | ,, | 6.00 |
| | | மழையூர் ... | ,, | 6.30 |

பிரஸங்கம் 78—(5-வது பிரிவு).

1942—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | ... 17, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 18, ஞாயிற்றுக்கிழமை | திருவரங்குளம் | ... | „ | 6.00 |
| | | வம்பன் | ... | „ | 6.30 |
| | 19, திங்கட்கிழமை ... | வெள்ளனூர் | ... | „ | 6.00 |
| | | புத்தாம்பூர் | ... | „ | 6.30 |
| | 20, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | புலியூர் | ... | மாலை | 6.00 |
| | | கண்ணங்குடி | ... | „ | 6.30 |
| | 21, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | „ | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் | ... | „ | 10.15 |
| | | பள்ளிவாசல் | ... | மாலை | 6.00 |
| | | பில்லமங்கலம் | ... | „ | 6.30 |
| | 22, வியாழக்கிழமை ... | குளவாய்ப்பட்டி | ... | „ | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) | ... | „ | 6.30 |
| | 23, வெள்ளிக்கிழமை ... | ஆதனூர் | ... | „ | 6.00 |
| | | அரமனைப்பட்டி | ... | „ | 6.30 |

## புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் கிளை ஸ்தாபனங்கள்.

சரியான யுத்த சமாசாரங்கள் பரவும்பொருட்டு ஸமஸ்தானத்திலுள்ள கிராமங்களில் புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தபட்டு வருகின்றன.

அவைகளுக்கு நோட்டீஸ்கள், தேச படங்கள் இன்னும் இதர படங்கள், ஆங்கிலத்திலும், தமிழிலும் யுத்த சம்பந்தமான பல பிரசுரங்களும் அனுப்பப்படும்.

முதலாவதாக அடியில்கண்ட இடங்களில் கிளை ஆபீஸ்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

1. ராயவரம்.
2. பனையப்பட்டி.
3. காம்பக்குடி.
4. ஆலங்குடி.
5. அன்னவாசல்.
6. கீரனூர்.

பொதுஜனங்கள் அங்குள்ளவைகளைப் பூராவாக உபயோகித்து பிரயோஜனமடைவார்கள் என்று நம்புகிறோம்.

Sri Brihadamba State Press, Pudukkottai, 2,500—10-1-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் 17உ [நெ. 78

பிரஸங்கம் LXXVIII.

## வெளித்தோற்றம்.

### ருஷ்யர்கள் தோல்வியடைவார்கள் என்று எதிர்பார்த்து ஜப்பானில் திட்டங்கள் போடப்பட்டனவா?

### உதவியன்னியில் நீண்டகாலம் யுத்தம் நடத்தமுடியாது.

### ஜெர்மனியைத் தோற்கடிக்க முடியாது என்பது பொய்யாகி விட்டது.

*விக்ஹாம் ஸ்டீட் என்பவர் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது:—*

1898-ம் வருஷத்தைப்போல் 1914-ம் வருஷத்திலும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்து யுத்தம் புரிய ஜெர்மனி போர்ச்சுகீஸ் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்ற நோக்கங்கொண்டது. இந்த ஜெர்மன் நோக்கங்களைத் தெரிந்தோ தெரியாமலோ பிரிடிஷ் மந்திரிகள் கவனியாமல் இருந்ததற்குக் காரணம் ஜெர்மனியுடன் யுத்தம் நேராமல் தடுத்து, அது கேட்கும் கப்பத்தைக் கொடுத்து சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்ற உணர்ச்சியினால்தான்.

ஜப்பானும், ஜெர்மனி எதிர்பார்த்தபடி போர்ச்சுகீஸ் டிமோரைக் கைப்பற்றிக் கொண்டு அதைத் தளமாக வைத்துக்கொண்டு ஆஸ்திரேலியா, பிரிடன், டச்சு கிழக்கிந்தியத் தீவுகள், அமெரிக்கா, ஐக்கிய அரசாங்கம் இவற்றையெல்லாம் தாக்க விரும்பியிருக்கக்கூடும். ஆனால் இந்த சமயத்தில் இந்த திட்டமானது ஆரம்பத்திலேயே கிள்ளி எறியப்பட்டது. போர்ச்சுகல் தேசத்திற்கு, அதன் ஆதிக்கத்திற்கு குறைவில்லை என்றும், யுத்தம் முடிந்தபிறகு அந்த தேசத்திலிருந்து நேசதேசப்படைகள் வாபஸ் வாங்கிக்கொள்ளப்படுமென்றும் உத்தியோக முறையில் உறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

### ஜப்பானியத் தாக்குதல்.

மேற்கு இந்தியத் தீவுகளிலுள்ள மார்டினீக் தீவில் ஸ்வதந்திரப் பிரெஞ்சுக்காரர்களும், அமெரிக்கர்களும் நல்ல சமயத்தில் செய்துகொண்ட ஏற்பாட்டினு

நேரக்கூடிய மற்றொரு அபாயம் தவிர்க்கப்பட்டுவிட்டது. இந்த ஏற்பாட்டின் முடிவைப்பார்த்தால் 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் விஷி-பிரெஞ்சு ஸர்க்கார் ஜெர்மனிக்குக் கீழ்ப்படிந்தபொழுது, ஜெர்மனிக்கு வெற்றி கிடைக்குமென்று எவ்வளவு தூரம் நம்பிக்கை கொண்டிருந்ததோ அதற்கு மாறாக இப்பொழுது குறைவுபட்டிருப்பதற்கு அறிகுறியாக இருக்கிறது.

இது எப்படியிருந்தபோதிலும் மலேயா நாட்டிற்குள்ளும், வெளிப்புறத்திலும், பஸிபிக் சமுத்திரத்திலும், இதுவரை நடத்தியிருக்கும் நடவடிக்கைகள் பிரிடிஷ் பொதுமக்களுக்கு திருப்தி அளித்திருக்கிறது என்பதை நான் சொல்ல முடியாது. ஜப்பானுக்குக் கிடைத்த வெற்றிகள் நமது மக்களுக்கு 1940-ம்வருஷம் மே மாதத்தில் டன்கர்க்கைக் காலிசெய்து வந்தபிறகும், சென்ற வஸந்த காலத்தில் கிரீட்டை இழந்த பிறகும் ஏற்பட்ட உணர்ச்சியைப்போல் இப்பொழுது கோபமும், மன உறுதிப்பாடும் உண்டாகியிருக்கிறது.

நாமும் அமெரிக்க ஐக்கிய அரசாங்கமும், ஜப்பானிய தாக்குதலை எதிர்க்கத் தயாராக இல்லாத சமயம் ஜப்பானியர்கள் தாக்குதலுக்கு முழுவதும் தயாராக இருந்தார்கள். கப்பற்படை, ராணுவப்படை இவைகள் விஷயமாக எனக்குச் சொல்ல சக்தியில்லை. ஆனால் ஜப்பானியர்கள் செய்த ஏற்பாடும், டோக்கியோவில் நீண்டகாலமாக நடந்துவந்த தூண்டுதல்களும் எனக்குக்கொஞ்சம் தெரியுமாதலால் சம்பவங்களுக்கு ஒத்துயிருந்தாலும், இல்லாவிட்டாலும் எனக்குச் சில அபிப்பிராயங்கள் தோன்றியிருக்கின்றன.

முதலாவது ஜப்பானியர்கள் லெனின்கிராட், மாஸ்கோ, ரோஸ்டவ் இந்த நகரங்களை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக்கொண்டு, காகஸஸுக்குத் துரிதமாக முன்னேறிவிடுவார்கள் என்று நம்பிக்கைகொண்டு ஜப்பான் போர் தொடங்கத் தீர்மானித்தது. இவ்வளவு விஸ்தாரமாக நடவடிக்கைசெய்ய ஜப்பான் போட்ட திட்டங்கள் ஒரு இரவில் முடிவிற்கு வந்திருக்கமாட்டா. வெகு ஜாக்கிரதையாக முன்னமையே தயாரிக்கப்பட்டு, புறப்படு என்று சொல்லவேண்டியவரையில் தயாராகவே இருந்திருக்கிறார்கள். ருஷ்யர்கள் தோல்வியடைவார்கள் என்று ஜப்பானியர் எதிர்பார்த்தார்கள் என்பதை நம்பாமல்போனால் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளும், கப்பற்படை அதிகாரிகளும் இவ்வளவு விஸ்தாரமாகத் தாக்குதல்களைப் பரவச் செய்திருப்பார்கள் என்பதற்குக் காரணமில்லை.

## "பெரிய தவறு."

சைனாவில் ஏற்கனவே அவர்களுக்குப் பெரிய யுத்தம் நேர்ந்திருக்கிறது. அதோடு பிரிடனுடனும், அமெரிக்காவுடனும் பெரிய யுத்தங்கள் ஜப்பான் செய்வதாக இருந்தால், ஜெர்மனி ருஷ்யாவை முறியடித்துவிடுமென்றும், பிரிடனையும் அமெரிக்காவையும் அநேக இடங்களில் திடீரென்று தாக்குவதினால் ஜப்பான் அவர்களைத் தோற்கடித்துவிடுமென்றும், எதிர்பாராமல் ஜப்பான் யுத்தத்தில் புகுந்திருக்கும் பக்ஷத்தில் அது பெரிய தவறு என்றும் ஜப்பானியர்களுக்கும் தெரிந்ததுதான். ஆனால் நீண்டகால யுத்தத்தில் ருஷ்யா, பிரிடன், சைனா, அமெரிக்கா இவைகள் ஒன்றுசேர்ந்து சேகரிக்கும் பொருள்கள் இருக்கையில் உதவியில்லாமல் ஜப்பான்மட்டும் தனிமையாக யுத்தத்தில் ஜயம் பெறுவது முடியாது.

சென்ற ஜூன் மாதத்தில் ருஷ்யாவை ஹிட்லர் தாக்கியபொழுது என்ன தவறு செய்தானோ அந்தமாதிரி ஒருபெரிய தவறு இப்பொழுது ஜப்பானியர்களும் செய்ததாக நான் எண்ணுகிறேன்.

அம்மாதிரி நம்பிக்கை கொள்ள என்ன காரணங்கள் இருக்கின்றன? அவை யாவன:—ஜப்பான் பிரச்னையைத் தீர்க்க இந்த சந்தர்ப்பத்தில் ஜெர்மனி அதிகம் உதவிசெய்யமுடியாது. ஜெர்மன் யுத்த அறிக்கைகள்படியே முதன்



முதலாக யஜமானயாகள பனவாங்குகிறார்கள் என்ற வார்த்தை வெளி வருவதிலிருந்தே ஹிட்லரின் பிரச்னையைத் தீர்க்க ஜப்பான் அதற்கு அதிகமாக உதவிசெய்யவில்லை என்று தெரிகிறது.

கொஞ்சம் காலம் சிரமித்தும், அதிக முயற்சியின்பேரிலும், ஜப்பான் கொண்டிருந்த எண்ணங்களுக்கு நேர் மாறுதலாக ஜப்பான் பிரச்னையை நேச தேசத்தார்கள் தீர்க்கக்கூடும். அப்படி அவர்கள் செய்வார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

இதன் மத்தியில் ஹிட்லரின் பிரச்னையைக் கவனிப்போம். அவனுக்கு ருஷ்யாவில் பயங்கரமான உதை கிடைக்கிறது. அது எவ்வளவு கொடியது என்றும், எப்படி முடியுமென்றும் இதற்குள் நம்மால் தீர்மானிக்கமுடியாது. ஆனால், ஜெர்மன் பொதுமக்களுக்கே ஜெர்மனி தோற்கடிக்கப்படமாட்டாது என்பது பொய்யாகிவிட்டதென்று தோன்றுவதும், அவன் சகாக்களுக்கும், கூட்டுக் கொள்ளைக்காரர்களுக்கும் அம்மாதிரி தோன்றுவதும் நாம் நம்புவதற்குத் தகுந்த காரணங்கள்.

## நாஸிகளால் ஏற்படக்கூடிய தாக்குதல்கள்.

இந்தக்கதை முழுவதும் பொய்யாகாமல் செய்வதற்கு ஹிட்லர் ஏதாவது ஒன்று செய்யவேண்டும். ஹிட்லர் மேற்குப்பக்கம் தாக்கலாமென்பதற்கு சமீபத்தில் அறிகுறிகள் தோன்றி அதிகரிக்கின்றன. ருஷ்ய யுத்தத்தை நிலை நிறுத்திக்கொண்டே நீண்டகாலத்துக்குமுன் மேற்குப்பக்கத்தில் போடப்பட்ட திட்டத்தைப் பூர்த்திசெய்ய ஹிட்லர் திரும்பலாம் என்று ஜெர்மன் ஸ்தாபனங்களிலிருந்து செய்திகள் வெளிவருகின்றன. கிரேட் பிரிடனைத் தாக்க இருக்காது. ஆனால், அது பிரிடன்செய்யும், யுத்தப் பிரயத்தனத்தை அழிக்க இருக்கலாம்.

இந்தச் செய்திகளோடு விஷி-பிரெஞ்சு ஸர்க்காரை ஜெர்மனி பலவந்தப் படுத்துவதும், ஸ்பெயினில் ஜெர்மனியின் சதியாலோசனைகளும் நமக்குத்தெரிய வருகின்றன. மேலும் பிரெஞ்சுக் கப்பல்களையும், ஸ்பானிஷ் கப்பல்களையும் மூழ்கடித்தது, பிரிடிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள்தான் என்று பழி சுமத்த ஜெர்மனி பிரயத்தனப்பட்டதும், அந்தக் கப்பல்கள் மூழ்கின இடங்களுக்கு சமீபத்தில் ஒரு பிரிடிஷ் நீர்மூழ்கிக் கப்பலும் இல்லையென்று பிரிடிஷ் கப்பற்படை இலாகா உறுதி சொல்லி அந்தப் பிரயத்தனத்தை மாற்றியதும் நமக்குத் தெரியும்.

இந்த உறுதியை விஷி-பிரெஞ்சு ஸர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்டது. அதற்கு கிரேட் பிரிடன்பேரில் பழி சுமத்தவேண்டி ஜெர்மன் நீர்மூழ்கிகளோ, இதாலிய நீர்மூழ்கிகளோ அந்தக் கப்பல்களை மூழ்கடித்ததாக பிரெஞ்சு ஸர்க்கார் தெரிந்துகொண்டுவிட்டது. போர்ச்சுகல் தேசம் கிடைக்காமல்போனால், ஸ்பெயினைக் கைப்பற்றவும், பிரெஞ்சு வட ஆபிரிக்காவைக் கைப்பற்றவும் ஜெர்மனி செய்த சூழ்ச்சியாக இருக்கும். லிபியாவில் தளகர்த்தர் ரோமலின் நிலைமையைப் பலப்படுத்துவதற்கு இந்த சூழ்ச்சி செய்யப்பட்டதென்று கருதினால் இப்பொழுது அவனுக்கும் நேர்ந்த தோல்வி இந்தப் பிரயத்தனங்களை மாற்றிவிட்டது.

## அறுவெறுப்பு உண்டாக்கக்கூடிய தோல்விகள்.

ரோமல் ட்ரிபோலிடேனியாவுக்குப் பின்வாங்கினாலும் ஸிரெனைகாவை சமாளிக்கமுடியாதென்பதும், முற்றிலும் தோற்கடிக்கப்பட்டதென்பதிலும் சந்தேகமில்லை. ஹிட்லரின் சைனியங்கள் ருஷ்யாவில் சிதறடிக்கப்பட்டும், நசுக்கப்பட்டும்வரும். இந்த சமயத்தில் இந்தத் தோல்வியும் சேர்ந்து ஹிட்லருக்கு பீதியைத்தான் உண்டாக்கும்.

சென்ற மூன்று மாதமாக கோயபல்ஸ் சொல்லிவந்த அறிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அக்டோபர் மாத மத்தியில் ருஷ்யாவின்

இருப்புப் பொருள்களையாவும தங்களுக்கு உபயோகமாகிவிட்டதாகவும், ஸ்டாலின் கடைசி ராணுவ பலமும் சீர்குலையச் செய்யப்பட்டுவிட்டதாகவும் பெருமையாகச் சொன்னார்கள். அக்டோபர் மாதம் 31-ம் தேதி, மாரிகாலத்தில் ராணுவ நடவடிக்கை பெர்லினில் நிறுத்தப்படமாட்டாதென்று கோயபல்ஸ் சொன்னான். ராணுவ நடவடிக்கை என்றால் ஜெர்மன் தாக்குதலைத்தான் அவன் குறித்துச் சொன்னது.

நவம்பர் மாதம் 8-ம் தேதியில் உறைபனி வந்தது ஜெர்மன் துருப்புகளுக்குச் சாதகம். மழையினாலும், சகதியினாலும் யந்திர சாதனங்கள் போக்குவரவு நின்றிருந்தது அதிகரிக்கும் என்று ஜெர்மன் ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்டது. சரியாக ஒரு மாதம் கிரமித்து, டிஸம்பர் மாதம் 8-ம் தேதியில் கிழக்குப் போர் முனை நடவடிக்கைகள், மாரிகால நிலைமையைப் பொறுத்தது என்று ஜெர்மன் இலாகா அறிக்கையில் சொல்லப்பட்டது.

இது சமீபத்தில் ரீச்ஸ்டாகில் ஹிட்லர் பேசியதற்கு மூன்று நாட்கள் முந்தியே கோயபல்ஸ் கிழக்குப் போர்முனை பூராவும் உறைபனி மூடியிருப்பதாகவும் இருதிறப்பார்களும் முந்திப்பிந்தி போகமுடியாதென்றும் கூறினான். பிற்பட்டு போர்முனையைச் சுருக்குவதற்காக ஜெர்மன் துருப்புகள் பின்வாங்குவதாக ராணுவ அறிக்கை வெளியிட்டது.

இவையெல்லாம் ஜெர்மானியர்கள் விடுத்த அறிக்கைகள். ருஷ்யர்கள் சொன்னவைகள் அல்ல. ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் இவை தெரியும். ஹிட்லர் மறுபக்கத்தில் தாக்கவேண்டுமென்று அவர்கள் துரிதப் படுத்துகிறார்கள். ஹிட்லரால் ஆக்கிரமிக்கப்படாத நாடுகளையும் யுத்தத்தில் சேரும்படி தூண்டப்படுவார்கள். இவ்விதம் ஆக்கிரமிக்கப்படாத நாடுகளின் எண்ணிக்கையும் குறையும். ஆனால் ஜெர்மன் பொதுமக்களும், மற்ற நாடுகளும் நிதானித்துப் பார்த்தால் சென்ற மஹா யுத்தத்தில் அமெரிக்கா யுத்தத்தில் பிரவேசித்தவுடன் ஜெர்மனிக்கு ஜயமில்லாமல் போனதும், இப்பொழுது வட அமெரிக்கா கண்டம் 1917-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் இருந்ததைக் காட்டிலும் போர் பலமும், யுத்த முஸ்தீப்பும் அதிகப்பட்டிருப்பதையும் காணலாம்.

## சரியான வழியில் முன்னேற்றம்.

எல்லாவற்றையும் நிதானித்துப் பார்த்தால் நல்ல வழியில்தான் முன்னேறுகிறோம் என்று நான் எண்ணுகிறேன். ஜப்பான் நமக்கும், அமெரிக்காவுக்கும் மலேயா பிராந்தியத்திலும், பஸிபிக் சமுத்திரத்திலும் இன்னும் அதிகத் தோல்விகள் ஏற்படும்படி செய்யலாம். ஆனால் பிற்காலத்தில் அதற்குக் கிடைக்க கூடிய உதை பலமாக இருக்கும்.

அநேகர்கள் எண்ணியபடி லிபியா யுத்தம் துரிதமாக, நமக்கு சாதகமாக முடியாமல் போனாலும், நிச்சயமாக ஜெர்மனிக்கும், ஹிட்லருக்கும் இந்த யுத்தத்தில் சாதகமில்லை. ருஷ்யப் போர்முனையில் நடக்கும் சம்பவங்களைப் பார்க்க அங்கு ஜெர்மன் சைனியத்திற்குப் பெருத்தகேடு ஏற்படும்; இப்பொழுது ஏற்பட்டு வருகிறதும் நிஜமே.

ஜெர்மன் பொதுமக்களுக்கு புதுவருஷ ஆரம்பத்தில் ஹிட்லர் செய்த புகழ்ச்சி அதாவது "1941-ம் வருஷம் நமக்கு பூர்ண வெற்றியைக் கொடுக்கும்" என்று அறிவித்ததைப் பூர்த்திசெய்ய மிகச் சில நாட்கள்தான் இருக்கின்றன. நரம்பு தளர்ச்சியால் ஹிட்லர் இளைப்பாறுகிறான் என்று சொல்லும் வதந்தியை நம்பலாம். ஹிட்லர் செய்த அநாகரீகத்தன்மையால் இப்பொழுது அவனுக்குக் கேடு விளைந்து, பொதுமக்களுக்கு நல்லகாலம் வந்து, ஸ்வதந்திரம் கிடைப்பதை அவனே பார்க்கக்கூடும்.



# வார யுத்தச் செய்திகள்.

## 9—1—42-லிருந்து 16—1—42-வரை.

**ருஷ்யா.**—ஒவ்வொரு நாளும் ருஷ்யர்கள் அடைந்துவரும் வெற்றிச்செய்திகள் கிடைத்துவருகின்றன. காலையில் ரேடியோவைக் கேட்டாலும், பத்திரிகைகளைப் பார்த்தாலும் மனதிற்குத் திருப்திகரமான செய்திகள் அறியப்படுகின்றன. பஸிபிக்கில் ஏதோ தாத்காலிகமான கொஞ்சம் மாறுபாடான தகவல் வந்தாலும் அச்சுநாடுகளுக்கு எதிராகப் புரியப்படும் இந்த யுத்தம் நம்மால் ஜயிக்கப்பட்டு வருகிறதென்றே சொல்லலாம். "மூன்று நாட்களில் 137 இடங்கள் திரும்பப்பிடிக்கப்பட்டன," மொஜெயிஸ்க்கிலிருந்த ஜெர்மன் படைகள் துரத்தப்பட்டன. லெனின்கிராட் முற்றுகை விடப்பட்டது. இவைகளெல்லாம் பெரும் செய்திகள்தான். இவைகளை விடவும் நற்செய்திகள் கிடைத்திருக்கின்றன. ருஷ்யப்படை வரிசை பூராவும் ஜீவனுள்ளதாக ஆகி லெனின்கிராட், மாஸ்கோ, கிரிமியா பாகங்களில் சென்ற வாரத்தில் குறுக்கு எதிர்ப்புகள் செய்ததோடு, ஓரெல், கார்கவ், ஆர்க்டிக் கடல் கரேலியன் பாகங்களிலும் எதிரிகளைத் தாக்குவதாகவும் இவ்வாரத்தில் அறிவிக்கப்படுகிறது. சாதாரண சிப்பாயான ஹிட்லர் ராணுவத் தலைமை வகித்தபின்னர் முதலாவதாக நிச்சயமான தோல்வியை அடைந்துவிட்டான். ஜெர்மன் சைனியத்திற்கே பெரும் தோல்வி பாக்கியாக இருப்பதை இது சூசிக்கிறது. ஜெர்மன் படைகள் பின்நோக்கி ஓடுகின்றன. ஓடும்போது குண்டுகளையும், பீரங்கிகளையும் போட்டுச்செல்லுவதால் அவைகளைக்கொண்டே அடிக்க ருஷ்யர்களுக்கு சாதகமாக இருக்கிறது. மாரிகாலம் சாதகமக இருப்பதாகவோ தனக்கு இடம் கொடுப்பதாகவோ ஹிட்லர் சொல்வது உண்மையான அபிப்பிராயமல்ல. அபாரமான பனியில் தனக்குத் தற்காப்புப் பள்ளங்கள் கட்டிக்கொள்ள முடியவில்லை என்று அவனே சொல்லியிருக்கிறான். காயம்பட்ட மிருகம்போல் கடுமையாகவே ஹிட்லர் இருக்க நினைத்தாலும், நாஜிக் கொள்கை அழிந்துவருவதாகவே அனுபவம் வாய்ந்தவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

வடக்கிலிருந்து தெற்கே பின்வருமாறு நிலைமை இருக்கிறது. ஆர்க்டிக் பிரதேசத்தில் மறுபடி ருஷ்ய எதிர்ப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கரேலியப் பிரதேசத்தில் ருஷ்யர்களின் மும்முறச் சண்டைகளைப் பொருக்காது பின்னிஷ்காரர்கள் சமாதானத்தைக் கோரவேண்டியதாயிற்று. லெனின்கிராட்டில் முற்றுகையில்லை. வால்டாய் மலைகளில் ருஷ்யர்கள் எதிர்த்துவருகின்றனர். இல்மன் ஏரிக்கு அருகிலுள்ள ஸ்டாரா ரூஸா என்ற இடம் காலிசெய்யப்பட்டது

**மாஸ்கோ** பாகத்திலும் வெற்றி மேல் வெற்றி வருகிறது. மெஷோவ்ஸ்க், மோஸால்ஸ்க், வெட்சினியோ ஸெர்பெய்ஸ்க் லியூடினோவோ, டிஜனோவா, கிரவ், கோரோகோவோ, மெடின் ருஷ்யர்வசம் ஆகிவிட்டன. மலேயரோஸ்லாவெட்ஸிலிருந்து கலூகா இருப்புப்பாதை ருஷ்யர் வசம் வந்துவிட்டது. ருஷ்யர் பின்ஸர் படைகள் மொஜெயிஸ்க்கைச் சுற்றிக்கொண்டு ரூஸா, போரோவ்ஸ்க், வரை வந்துவிட்டன. இங்கேதான் ஜெர்மானியர் தற்காப்பு செய்துகொண்டிருந்தனர்.

தென்பாகத்திலும் ஓரெல் ருஷ்யர்களால் சூழ்ந்துகொள்ளப்பட்டது. கிழக்கு யூக்ரேனில் பிரதான நகரமான கார்கவ் வரையிலும் வந்துவிட்டனர்.

**கிரிமியா**விலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாலக்லாவா என்ற பட்டணம் திரும்பப் பிடிபட்டது. எதிர்த்துவரும் ஜெர்மன் படைகளை ஸெபாஸ்டபூலில் உள்ள ருஷ்யப்படை தடுத்து, பெரிகாப் வழியே எதிரிகள் பின்வாங்கி ஓடமுடியாமலும் சேதமாக்கப்பட்டது.

ஜெர்மானியர்களு  க கொடுமையான ருஷ்யர்களும், மாரிகாலமும் சேர்ந்து தொந்தரவு விளைவித்து வருகின்றனர். லாஸோவஸ்கி அறிவிக்கும் விதமாக "ஹிட்லரின் ஜெர்மனியிலுள்ள தளங்கள் போய்க்கொண்டிருக்கின்றன, பசி, எளிமை, மனித நஷ்டம் இவைகளால் ஜெர்மானியரின் ஒற்றுமை கலைந்துவருகின்றன. கடைசியாக ஜெர்மனியிலுள்ள படைகளெல்லாம் யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுகின்றன. 'கொண்டி, கிழம், பால்யம் யாவரும் யுத்தத்தில் ஈடுபடும்படி செய்யப்படுகின்றனர்.' நகரங்களின் ஆக்கிரமிப்புக்காக உள்ள படைகள் யுத்தரங்கத்தில் சண்டை செய்ய மாற்றப்படுகின்றன. ஆக்கிரமித்த பிரான்ஸிலும், பெல்ஜியத்திலுமுள்ள ஜெர்மன் படைகள் இம்மாதிரி சண்டை செய்யப்போக மறுப்பதாயும், அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படுவதாயும், சொல்லப்படுகிறது. தனி ஜெயில்களில் அடைக்கப்படுகிறார்களாம். ஜெர்மனியின் ஆயுத உற்பத்தி முக்கியமாக ஆக்கிரமித்த நாடுகளிலும், பிரான்ஸிலும் குறைந்து வருகிறது. செக்கோஸ்லாவாகியாவில் சாமான்கள் குறைவும், உத்ஸாகக் குறைவும் ஏற்பட்டு ரகசிய சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதாலியில் உணவும், தொழிலும் கிடைக்கவில்லை. எல்லாவிதமான கம்பளி ஆடைகளை, ஸ்திரீகள் அணிவதைக்கூட, கொள்ளையடித்து யுத்தமுனைக்கு அனுப்பப்படுகிறது. சிப்பாய்களுக்காக இருந்த கம்பளி ஆடையைத் திருடியதற்காக ஒரு ஜெர்மானியருக்கு தூக்குதண்டனை விதிக்கப்பட்டது. ஜனவரி ஆரம்பம் முதல் ஜெர்மனியில் சாராயம் கிடைக்கவில்லை. தொழிற்சாலைகளில்தான் தயாரிக்கவேண்டியிருக்கிறது. இவ்விதமாக ஒரு மனிதனின் கொடுமையால் நாஸி ஜெர்மனிக்கு இம்மாதிரியான தீங்கு விளைந்திருக்கிறது. ரோஸ்டவ், டிக்வின், மாஸ்கோ மீது மாரிகாலத்திற்கு முன் படையெடுக்க வேண்டுமென்று ஜெர்மானியர் நினைத்ததிற்கு பதிலாக, ருஷ்யப்படைகளுடன், பிரிடிஷ், அமெரிக்க விமானங்கள்; டாங்கிகள் சேர்ந்து ஜெர்மானியரை பழிவாங்கி வருகின்றன. இவர்களுக்குச் சாதகமாக மாரிகாலமும் ஜெர்மானியரைத் குலைத்துவருகிறது.

லிபியா.—ஸோலூம் நமது வசமாகிவிட்டது. ஹல்பாயாவும் வசமாகும் தருணத்தில் இருக்கிறது. விமான மூலம் சில சில்லரை உதவி ஹல்பாயாவிற்கு வந்தாலும், தண்ணீர் கிடைக்காமல் அவஸ்தைப்படுகிறது.

ஜடபாயாவிலிருந்து பின்வாங்கும் ரோமலின்படைகள் எல் அகிலா வரையில் சென்றுவிட்டன. எல் அகிலாவிற்கு 50மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள மாடா என்னும் இடம்வரை பிரிடிஷ் ஸ்தானங்கள் அமைக்கப்பட்டன.

இதாலியின் தென்பாகத்தில் லுப்ட்வாபி படைகளைச் சேகரம்செய்து, கிரீட்டைத் தாக்கியதுபோல் மால்டாவை விமான மூலம் தாக்க ஹிட்லர் ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது. ஜனவரி 13-ம் தேதி 17 தடவை படையெடுப்பு எச்சரிக்கை செய்யப்பட்டது.

தூரக்கிழக்கு.—பஸிபிக்கிலிருந்து வரும் செய்திகள் மங்கலாகவே இருந்து வருகிறது. ஸ்லிம், பர்னுக் நதிகளுக்கு தென்பாகத்தில் திடமாக எதிர்த்து நின்று நமது படைகள் ஸெராம்பூர் வரையில் பின் வாங்கியிருக்கின்றன. கோலாலம்பூர் காலிசெய்யப்பட்டது. அங்குள்ள சுரங்கங்களைத் தண்ணீர்விட்டு நிரப்பி, சேமித்துவைத்த ரப்பரைக் கொளுத்தியும் ஆய்விட்டது. (மலாக்கா) டெபாங்க் தாக்கப்பட்டது. (மலாக்கா ஜலசந்தி) மூவார் விமானமூலம் படையெடுக்கப்பட்டது. கிளாங், ரங்கூன், மோல்மீன் முதலியவை மறுபடியும் விமானங்கள் மூலமாகப் படையெடுக்கப்பட்டன. சிங்கப்பூர் பயமுறுத்தப்பட்டு அதன்மீது பகலில் 128 விமானங்கள் பறந்து பெரும் படையெடுப்பைச் செய்தன. டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளும் படையெடுக்கப்பட்டன. (டச்சு போர்னியோ) டரகான் பிடிபட்டது. (டச்சு ஸெலிபஸ்) மினஹாஸா படையெடுக்கப்பட்டது. இருந்தாலும் 50 ரகசிய விமான தளங்களிலிருந்துகொண்டு நேசதேசப்படைகள் எதிரிகளைத் தடுத்து வருகின்றன. (டச்சு ஸெலிஸ்) கொரோன்டாலோ,



(மோலுக்கஸ்) டரென்டி ஸெரம்பான், ஸெர்பாங்க் படையெடுக்கப்பட்டன. வியாபிக்கவும்பட்டிருக்கலாம். பிலிப்பைன்ஸில் மாக் ஆர்தரின் படைகள் பின்வாங்கி படான் காரிஜிடார், மணிலா குடா வரை சென்றுவிட்டன. மத்திய பஸிபிக்கில் டியூடிலா(ஸமோவா தீவுகள்) தாக்கப்பட்டும் இம்மாதிரி அதிகமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இங்கிருந்து விரும்பத்தகாத செய்திகள் வந்தபோதிலும் மற்ற பாகங்களிலும் நடக்கும் சண்டையை கவனித்தால் பயப்படுவதற்குக் காரணமேயில்லை. யுத்தத்தை பூரா ஒன்றுகவே கவனிக்கவேண்டும். மேற்கே நமக்கு சாதகமாக இருப்பதால் மற்றோரிடத்தில் கொஞ்சம் பாதகமாகி வருகிறது. இருந்தாலும் கிழக்கைப் பூராவாக விட்டுவிடவில்லை. மிஸ்டர் ஈடன் கொடுத்துள்ள உறுதிமொழியின்படி 1939 முதல் நமது படைகள் பல தடவை புதுப்பிக்கப்பட்டன. இருந்தாலும் போதவில்லை. ஏனென்றால் மேற்கே நடக்கும் யுத்தத்தை பலமாகச் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டு அங்கிருக்கும் சைனியம் பலம் செய்யப்பட்டது. இரண்டு இடங்களிலும் பிரித்து சைனியங்களை அனுப்பியிருந்தால் இரண்டு இடங்களிலும் ஆபத்துக்குள்ளாகி இருக்கும்.

அமெரிக்கர்களின் இதே அபிப்பிராயத்தை கர்னல் நாக்ஸும் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார். 'வடக்கு, தெற்கு அட்லாண்டிக்கிலும், பஸிபிக்கிலும் முக்கிய லைன்களைக் காபந்து செய்வது அமெரிக்கக் கப்பற்படையின் முக்கிய வேலையாகிறது.' பிரிடிஷ் கப்பல் இலாகா மந்திரியும் வியக்தமாக இதைச் சொல்லியுள்ளார்—'ஐரோப்பாவிலுள்ள அச்சுநாடுகளை நாம் கவனியாமல் இருக்கக்கூடாது.' இது உண்மைதான். ஹிட்லர் ஒழிந்தால் மற்ற எதிரிகள் தாங்களாகவே ஒழிந்து விடுவார்கள். ஜப்பானும் போய்விடும். மேற்கேயுள்ள நமது படைகளைக் கிழக்கே அனுப்பி பஸிபிக் சண்டையைப் பிறகு முடித்துவிடலாம்.

இருந்தாலும் இப்பொழுது கிழக்கை விட்டுவிடவில்லை. மேற்கே இரண்டு வருஷங்களுக்கு பின், இப்பொழுது நமக்கு வெற்றி வருவதுபோல் இனிதான் கிழக்கே நமக்கு ஜயம் கிடைக்கும். அதற்காக நேசதேசச் சைனியம் பலம் பெற்று வருவதையும் காணலாம்.

1. மலேயாவில் பிரிடிஷ் படைகள் குறைந்தாலும் கடுமையாக எதிரிகள் தாக்கப்பட்டனர். ஸ்லிம் நதிச் சண்டையில் ஏராளமாக ஜப்பானியர் வந்துகொண்டிருந்தாலும் கணக்கிடமுடியாதபடி கொல்லவும் பட்டனர்.

2. 128 விமானங்களைக்கொண்டு சிங்கப்பூரைப் படையெடுத்தும் 'பயன் படவில்லை.'

3. தாய்லாந்தில் உள்ள ஜப்பானிய விமான தளங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கி வருகின்றன.

4. பிலிப்பைன்ஸில் அமெரிக்கரின் தாக்குதல் பலமடைந்தே வருகிறது. ஒரு நாள் பூரா நடந்த பீரங்கிச் சண்டையில் ஜப்பானியப்படை சிதறி ஓடியதாகவும் சொல்லப்படுகிறது. மின்டானுலோ, டாவாவோ என்ற ஜப்பானியக் கப்பல் தளங்களை அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

5. யுத்தத்திற்குத் தயார்செய்துவந்த டச்சுக்காரர்கள் கப்பல் சண்டைகளில் வெற்றிபெற்று வருகின்றனர். 'தினம் ஒரு ஜப்பானியக் கப்பல்' வீதம் மூழ்கடிப்பதென அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். ஸரவாக் எல்லையில் சண்டை செய்யவும் சீனர்கள் வந்திருக்கின்றனர்.

6. சாங்ஷாவில் சீனர்கள் அடைந்த வெற்றியால் தரை மார்க்கமாக மேற்கே வர முடியாமல் ஜப்பானியர் செய்யப்பட்டனர், பர்மா ரஸ்தாவை [illegible]

7. புதிதாக சைனியங்களை பலப்படுத்த முடியாமலிருந்தால் வேவலை இந்த புதிய ஸ்தானத்தில் நியமித்திருக்கமாட்டார்கள். 'பிழை செய்யாதீர்கள், வெள்ளத்தைத் திருப்பலாம். ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் யுத்தம் வெகு நாள் கழித்து இப்போதுதான் நமக்கு சாதகமாகி வருவதை கவனியுங்கள்' என்று ஜெனரல் பார்னலும் வீணுகச் சொல்லமாட்டார். தூரக்கிழக்கிலுள்ள நமது விமானங்களுக்கு உதவியனுப்பாமல் நாம் இருக்கமாட்டோமென்று "காப்டன் பால்போர், விமான உபமந்திரி முடியாத காரியத்தைச் சொல்லவுமில்லை. ராய்டரின் விசேஷ நிருபரும் மலேயாவிலிருந்து குறிசொல்லுவது போலச் சொல்லியிருப்பதும் பொய்யல்ல யுத்தத்தில் சில நாட்கள்வரை ஒரு அமைதி இருக்கும். ஆனல் ஜப்பானியர் நமது படைகளைச் சந்தித்து பிரமாதச் சண்டை நடக்கும்வரைதான் அவ்விதம் இருக்கும். பிறகு நமக்குத் திருப்திகரமாக யுத்தம் சாதகமாகவிடும்".

**ஒன்பது நாட்டு கூட்டம்.**—ஆக்கிரமித்த நாடுகளில் ஒரு குற்றமும் செய்யாதவர்களைக் கூட்டமாக ஜெர்மானியர் கொலை செய்வதைப்பற்றி மிஸ்டர் சர்ச்சிலும் ஜனதிபதி ரூஸ்வெல்டும் சேர்ந்து சொல்லியிருக்கின்றனர். இனி இக் குற்றங்களையும் யுத்த லக்ஷியமாகக் கருதப்படும்.

இங்லாந்து, அமெரிக்கா, ருஷ்யா, சைனு முதலியோருக்கு முன்பாக 9 ஆக்கிரமித்த நாடுகள் 13-ம் தேதி லண்டனில் ஸெயிண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் கூடினர்கள். இக்கூட்டத்திற்கு ஆக்கிரமித்த நாடுகள் தாங்களாகவே ஆரம்பம் செய்தனர். இக்கூட்டத்தை மிஸ்டர் ஈடன் திறந்துவைத்தார். "ஜெர்மன் புதுத்திட்டம் என்பது வெறும் பேடிஜம் என்றும், ஜெர்மானியர் செய்யும் அடக்கு முறை, கொடுமைகளை மறைக்கவே இப்புது திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர் என்றும் சொன்னர். இக்கூட்டத்தின் முடிவான லக்ஷியப்படி நியாய வழிகளில் பெரும் குற்றம் செய்தவர்களை தண்டிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது ஜெர்மானியர் நாஸிக் கொள்கைகளின்படி, வேண்டுமென்றே கொடுங்கோல், கொலை முதலியவைகளைச் செய்கிறதால் அவர்கள் செய்யும் குற்றம் தற்செயலாக நேர்ந்தவையல்ல. இக்கூட்டத்தில் ஒரு தீர்மானமும் கொண்டுவரப்பட்டது. அதன்படி இதர யுத்த லக்ஷியங்களோடு நியாய வழிகளின்படி கொலைக்குற்றங்களைச் செய்கிறவர்களையும், கொலைசெய்ய உத்தரவு போட்டவர்களையும் தண்டிப்பதென்றும் நிச்சயிக்கப்பட்டது. இது வெறும் அபிப்பிராயமாகாது. இதற்காக நடவடிக்கையே எடுத்துக்கொள்ளப்படும் என்று" டச்சு மந்திரி சொன்னர். இவ்விதம் குற்றத்திற்குக் காரணமானவர்களை தண்டிப்பதோடு நாஸி திட்டமே ஒழிக்கப்படும். ஆனல் இதர ஜாதிகளுக்கோ, இனத்திற்கோ 'பயமில்லை.

1. **அமெரிக்க சமாசாரங்கள்.**—குத்தகைக் கடன் திட்டப்படி இந்தியாவிற்கு உதவியைப் பிரத்யேகப்படுத்தும் பிரச்னையை விசாரிக்க மிஸ்டர் வில்லியம் புல்லெட் என்பவர் ஜனதிபதி ரூஸ்வெல்டினல் அனுப்பப்பட்டிருக்கிருர்.

2. ரயோடிஜெனிரோவில் வியாழக்கிழமை லத்தீன் அமெரிக்க நாடுகள் ஒரு கூட்டம் கூடுகின்றன. இதற்கு பிரஸீலின் தலைவர் அக்கிராசனம் வகிக்கிருர், அச்சு நாடுகளுக்கு விரோதமாக ஒற்றுமையான திட்டத்தை இவர்கள் தீர்மானிப்பார்கள். இவர்களிடமிருக்கும் விளைபொருள்களையும் தளங்களையும் ஸம்மர் வெல்ஸ் என்ற ஐக்கிய நாடுகளின் உதவி காரியதரிசி வசம் ஒப்பிவிக்கப்படும்.

3. வருஷம் 4,00,000 டன் ரப்பர் தயாரிக்க 4,000 லக்ஷம் டாலர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

4. 1940ல் கனடா—ஐக்கிய நாடுகள் சேர்ந்து தற்காப்பு திட்டம் ஏற்படுத்திக்கொண்டது போல மெக்ஸிகோ—ஐக்கிய நாடுகள் ஒரு திட்டம் செய்துகொண்டிருக்கின்றன. மெக்ஸிகோ யுத்த ஆரம்பத்தில் அச்சு நாட்டுக்குச் சார்பாக இருந்தது. இப்போது அவ்வெண்ணம் குறைந்துவிட்டது. ரயோடி ஜெனரோவில கூடும் கூட்டத்தில் அமெரிக்க நாடுகளின் ஒற்றுமைக்கு இந்த திட்டம் சாதகமாக இருக்கும்.



**நாஸிகளை முறியடிக்க ரஸாயன சாஸ்திரிகளின் வேலை.**—பிரிடிஷ் ரஸாயன சாஸ்திரிகளும், இஞ்ஜினியர்களும் கூடி யுத்தத்திற்கு செய்யும் முயற்சியைப்பற்றி சர்ச்சை செய்தனர். பயிற்சி சம்பந்தமான ஸ்வதந்திர ஜெர்மன் சங்கம் இதற்கு ஒத்துழைப்பதென தகவல் கொடுத்திருக்கிறது. பாஸிஸ்ட் கொள்கையை எதிர்க்க அவர்களும் தயாரென்றும் ஒன்றுசேர இஷ்டமென்றும் அறிவித்திருக்கின்றன.

**அரசியல்.**—26 நாடுகள் ஒன்று சேர்ந்து செய்த ஒப்பந்தத்தின் படி வேவலை தென் பஸிபிக்கில் தலைமை வகிக்கும்படி செய்த பிறகு சிங்கப்பூரில் ஒரு பிரிடிஷ் மந்திரி தேவையில்லாததால் டப் கூப்பர் லண்டனுக்கு அழைக்கப்பட்டார்.

இராக், இரானிலுள்ள பிரிடிஷ் படைகள், இந்தியப் படைகள் மத்தியக் கிழக்கில் தலைமை வகிக்கும் ஜெனரல் ஆசின்லக் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தியாவின் எல்லைப்புறத் தற்காப்பு திடமாக்கப்பட்டு கிழக்கிலும், மேற்கிலும் வேவல், ஆசின்லக் வசம் இருக்கிறது.

**பால்கன் ஒற்றுமை.**—கிரீஸ், யூகோஸ்லாவிய அரசர்கள் பரஸ்பரம், அரசியல், பொருளாதாரம், ராணுவம் முதலிய உதவிசெய்துகொள்ளுவதெனத் தீர்மானித்துக்கொண்டார்கள். இவ்விதம் பால்கன் ஒற்றுமை ஸ்தாபிக்கப்படும்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 5—1—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்—கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest), செர்பர்க் (Cherbourg). ஒரு பெரிய விரோதி ஸப்ளைக் கப்பல்—டச்சு (Dutch) பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கு அருகாமையில். | பலத்த சேதம். | நஷ்டமில்லை. | |
| | லிபியா (Libya). | | | |
| | விரோதி ஸ்தானங்கள், பீரங்கி வைக்குமிடங்கள்.—ஹால்பாயா (Halfaya) பிரதேசத்தில். வேவு பார்த்தல்.—ஜெடபாயா (Jadabaya) பிரதேசத்தில். துறைமுகம்.—டொப்ருக் (Tobruck). விமானமிறங்குமிடம்.—பூயாமட் (Buamud). ரஸ்தாக்கள்.—பூராட் எல்ஹாஸன் (Buerat El Hsun). | இன்னும் அநேக விமானங்கள் சேதமாயின. | 3 விமானங்கள். | 1 விமானம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **5—1—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயத்திலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 6 விமானங்கள். | 14 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | வேவுபார்த்தல்.—வடமேற்கு, வடகிழக்கு மலேயா (Malaya). | | | |
| **6—1—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest), செர்பர்க் (Cherbourg). | | | |
| | லக்ஷியங்கள்.—ஜெர்மனிக்கு மேற்கிலும், வடமேற்கிலும். | | | |
| | விரோதித் துணைக் கப்பல்கள்—டச்சு (Dutch)க் கடற்கரைக்கு அருகாமையில், | | 1 விமானம். | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள்—ஹால்பாயா (Halfaya). | | | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள்.—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்தரங்கம் முழுவதிலும். | | 2 விமானங்கள். | 23 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—தாய்லந்து (Thailand)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பாங்காக் (Bangkok). | | | |
| **7—1—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—விரோதிக் கப்பல்கள்—நார்வே (Norway)க் கடற்கரைக்கு அருகாமையில். | வெடிகள் கிளம்பின. | | |
| | இரவில்.—ஜெர்மன் கப்பற்படை தளங்கள்—ப்ரெஸ்ட் (Brest), ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | | நஷ்டமில்லை. | |
| | **லிபியா (Libya)** | | | |
| | பண்டகசாலைகள், வெடிமருந்து கிடங்குகள்.—ராஸ்-எல்-ஆலி (Ras El Ali). மோட்டார் வண்டிகள், கப்பல்கள்—பூராட் எல் ஹாஸன் (Buerat El Hsun). | ஒரு கப்பல் தாக்கப்பட்டு, தீ மூட்டப்பட்டது. | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **'—1—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)—தொடர்ச்சி.** | | | |
| | விரோதி போக்குவரத்துகள்.—எல் அகீலா (El Agheila). | | | |
| | கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | இரண்டு கப்பல்கள்.—மத்தியதரைக் கடல் (Mediterranean) மத்தியில். | இரண்டும் தாக்கப்பட்டன. | | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 4 விமானங்கள். | 11 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—தாய்லந்து (Thailand)—(அமெரிக்கா, பிரிடிஷ் விமானங்களால்)** | | | |
| | பாங்காக் (Bangkok). | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. | | 8 விமானங்கள். |
| | **மலேயா (Malaya).** | | | |
| | ஜப்பானிய விமான நிலயம்.—காங் (Gong) கெடா (Kedah). | | | |
| | மற்றொரு விமான நிலயம்.—குவான்டன் (Kuantan). | | | |
| **8—1—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்** | | | |
| | இரவில்.—கப்பற்படைத் தளம்—ப்ரெஸ்ட் (Brest). | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg). | | 2 விமானங்கள். | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி போக்குவரத்துகள்.—எல் அகீலா (El Agheila)வுக்கு மேற்கில். | | | |
| | போக்குவரத்து சாதனங்கள், கடற்கரை ஓரத்தில் செல்லும் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli)யிலிருந்து ஸர்டி குடா (Gulf of Sirte)க் கடலோரத்திலிருக்கும் சில இடங்கள். | | | |
| | விரோதித் தற்காப்புகள்—ஹால்பாயா (Halfaya) பிரதேசத்தில். | | | |
| | விமானப் போர்.—ஜெடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | 1 விமானம். | 7 விமானங்கள், அநேகம் சேதமாயின. |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 8—1—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 19 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பஸிபிக் சமுத்திரம் (Pacific)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ஒரு விரோதிக் கப்பல்.—அனம்பாஸ் (Anambas) தீவுகளுக்கு வடக்கே. | | | |
| | **மலேயா (Malaya).** | | | |
| | விமான நிலயம்.—இபோ (Ipoh). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| 9—1—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—விமானச் சண்டைகள்—வட பிரான்ஸ் (France). | | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| | இரவில்.—கப்பற்படை தளம்—ப்ரெஸ்ட் (Brest). | | 1 விமானம். | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி யந்திர சாதனங்கள்—எல் அகீலா (El Agheila) பிரதேசத்திலும், ஜடபாயா (Jadabaya)விலிருந்து எல் அகீலா (El Agheila)வுக்குச் செல்லும் ரஸ்தாவிலும். | | | |
| | விமானம் இறங்குமிடம்—காம்பூத் (Gambut). | | | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள்—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், தரையிலுள்ள பண்டகளுக்த ஒத்தாசை—போர்முனை முழுவதிலும். | | 6 விமானங்கள். | 42 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு தாய்லாந்து (Thailand)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்—ஸுங்கிபடானி (SungeiPatani). | | | |
| | கப்பல்கள், ரயில்வே ஜங்ஷன், ராணுவக் கட்டடங்கள்—ஸிங்கோரா (Singora). | | | |
| | **மலேயா (Malaya).** | | | |
| | ஒரு ஜப்பான் ஆக்கிரமித்த விமான நிலயம்— மலேயா (Malaya). | | | |
| | விரோதி வியாபாரக் கப்பல்கள்—குவாண்டன் (Kuantan) முகத்வாரம். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 10—1—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | இரவில்.-விமான நிலயங்கள்-ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium). | | | |
| | ஜெர்மன் கப்பற்படை தளம்-வில்ஹெல்ம்ஷேவன் (Wilhelmshaven), எம்டன் (Emden). | | | |
| | பலமாகத் துணைபுரியப்பட்ட விரோதிக் கப்பல்—டச்சுக் (Dutch) கரைக்கு அருகாமையில். | ஒரு சிறு எண்ணெய்க் கப்பலும், ஸப்ளைக் கப்பலும் நேராகத் தாக்கப்பட்டன. | 6 பாம்பர் விமானங்கள். | |
| | கப்பல் துறைகள்-பொலாயின் (Boulogne). | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி ஸ்தானங்கள், போக்குவரத்துகள்—ஹால்பாயா (Halfaya). | | | |
| | துறைமுகம்—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | பண்டகசாலை வெடிமருந்து கிடங்குகள்—ஸர்டி (Sirte) பூரட் எல் ஹாஸன் (Buerat El Hsun). | தீக்களும், வெடிகளும் கிளம்பின. | 4 விமானங்கள். | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள் தரைப்படைகளுக்த உதவிகொடுத்தன—போர்முனை முழுவதும். | | 2 விமானங்கள். | 11 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | வேவு பார்த்தல்—மலேயா (Malaya)விற்கு வடமேற்கிலும், வடகிழக்கிலும். | | | |
| | **நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள்.** | | | |
| | ஜப்பானிய துருப்புகள் ஏற்றிச்செல்லும் யுத்தக் கப்பல்கள்—டாரக்கனு (Tarakan)க்கு அருகாமையில். | 1 துருப்பு ஏற்றிச் செல்லும் கப்பல் தாக்கப்பட்டது; 1 க்ரூயிஸர் சேதமாயிற்று. | | 3 விமானங்கள். |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.** | | | |
| | ஜப்பானிய யுத்தக் கப்பல்-டாவாவோ (Davao) குடாக்கடலில். | தாக்கப்பட்டது. | | |
| 11—1—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | இரவில்.-ஜெர்மன் கப்பற்படை தளம்-ப்ரெஸ்ட் (Brest). | | நஷ்டமில்லை. | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **11—1—42.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி போக்குவரத்து வண்டிகளின் கூட்டம், பெட்ரோல் கிடங்குகள்—எல் அகிலா (El Agheila)வுக்கு மேற்கே. | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | விமானப் போர்—ஜெடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | 1 விமானம். | |
| | மோட்டார் போக்குவரத்து—பூரட் எல் ஹஸுன் (Buerat El Hsun). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்-ஹோம்ஸ் (Homs). | | | |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், தரையில் உள்ள படைகளுக்கு உதவி கொடுத்தன—போர்முனை முழுவதிலும். | | 3 விமானங்கள். | 12 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **டாரகான் (Tarakan)**—(நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள்). | | | |
| | ஜப்பானிய யுத்தக் கப்பல்கள்—டாரகனுக்கு(Tarakan) அருகாமையில். | | | |
| | **மலேயா (Malaya).** | | | |
| | ஜப்பானிய ஸ்தானங்கள்—கோலாலம்பூரு(Kulalumpur)க்கு அருகாமையில். | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **6—1—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா, (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரெங்கூன் (Rangoon) பிரதேசம் | வெடிகுண்டுகள் விழவில்லை. | | |
| | **நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள்.** | | | |
| | அம்பாயினு (Amboina). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 2 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **7—1—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | **ருஷ்யா (Russia).** | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 2 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.** | | | |
| | கரிஜிடார்(Corregidor)கோட்டைகள். | | | |
| | **பர்மா (Burma).** | | | |
| | மோல்மீன் (Moulmein). | | | |
| | ரேங்கூன் (Rangoon) (விமான எச்சரிக்கை மட்டில்). | | | |
| **8—1—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் தெற்குக் கடற்கரை ஓரத்திலுள்ள இரண்டு இடங்கள். | சொற்பச் சேதம்; ஒருவரும் கொல்லப்படவில்லை. | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta) ... | சேதமில்லை. | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோல்மீன் (Moulmein)க்கு சுற்றியுள்ள இடங்கள். | | | |
| | **மலேயா (Malaya).** | | | |
| | க்ளாங்(Klang), சிங்கப்பூர்(Singapore). | 7 பேர் கொல்லப்பட்டனர். | | |
| **9—1—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரெங்கூன் (Rangoon) ... | மிகவும் சொற்பச் சேதம். | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—1—42. (வெள்ளிக்கிழமை)— தொடர்ச்சி. | | | | |
| | டாரகன் (Tarakan)—(நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள்). | | | |
| | ராணுவ கப்பற்தளங்கள்.— டாரகன் (Tarakan). | | | |
| 10—1—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மூவார் (Muar) துறைமுகம்.— டெபாங் (Tebang) | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | மணிலா (Manila) குடாவிலிருக்கும் கோட்டைகள். | | | |
| | ஸாமாஸ் (Samos) தீவுகள். | | | |
| | கப்பற்தளம்.—டுடுலா (Tutula). | | | |
| 11—1—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தென்மேற்குக் கடற்கரையில். | | 1 பாம்பர் விமானம். | |
| | வேவு பார்த்தல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | | | 1 பைடர் விமானம். |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | பொதுஜனங்கள் சிலர் கொல்லப் பட்டனர். | | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | நேதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (Netherland East Indies). | | | |
| | டாரகன் (Tarakan). | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| 12—1—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டாம்பின் (Tampin), மூவார் (Muar). | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள். | | | |
| | அமெரிக்க ஸ்தானங்கள்.— மணிலா (Manila)வுக்கு வடகிழக்கில். | | | |



# யுத்தக் குறிப்புகள்.

**பெரும் ஒப்பந்தம்.** சரித்திரத்தில் நாடுகளுக்குள் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளுவது சகஜமென்று கேட்டிருக்கிறோம். ஆனால் இப்பொழுது 26 நாடுகள் தங்கள் விளைபொருள்கள் பூராவும் ஒன்றுசேர்த்து இரண்டு மூன்று அச்சு நாடுகளைத் தோற்கடிப்பதெனத் தீர்மானித்து முடிவான வெற்றியடையும்வரை சேர்ந்து உழைப்பதென்று ஏகமனதாக ஒன்றுபட்டு நிற்கின்றன. இந்த 26 நாடுகளில் தனியே ஒருவரும் சமாதானத்தைச் செய்து கொள்ளமாட்டார்கள்.

சென்ற யுத்தத்தில் மூன்று நாடுகள் இம்மாதிரி ஒன்றுசேர்ந்து யுத்தத்தை நடத்தின. அமெரிக்கா பிறகு சேர்ந்துகொண்டது. ஆனால் அச்சமயம் நேசநாடாக இல்லாததால் தனியே சமாதானம் செய்துகொண்டது.

இதுபோல் சுமார் 125 வருஷங்களுக்கு முன் நேசநாடுகள் நெபோலியனுக்கு எதிரில் ஒன்று சேர்ந்து நெபோலியனை அடக்கும் வரை யுத்தம் செய்தன.

இந்தியா இவ்வொப்பந்தத்தில் நேராடி கையொப்பம் இட்டோ, இல்லாமலோ முடிவான வெற்றியடையும்வரை சண்டை செய்வதெனத் தீர்மானித்திருக்கிறது. யுத்தம் நடக்கும் இடங்களின் மத்தியில் இந்தியா இருப்பதுபோல், லக்ஷக்கணக்கான இந்தியர்கள் இந்தியாவின் கிழக்கு, மேற்கு பாகங்களில் காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நேசநாடுகளுக்கு கிழக்கே யுத்த சாமான்செய்யும் இடமாகவும் இந்தியா இருக்கிறது. ஆகவே ராஜீய விஷயங்களில் ஈடுபட்டவர்கள் தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களைத் தள்ளிவைத்து ஜனங்களின் பொது நன்மையை கவனிப்பதுதான் நலம்.

வி வி வி வி வி வி வி

**காலம்.** தற்போது காலத்திற்கு உள்ள முக்கியத்துவத்தைப்போல் எப்பொழுதும் இருந்ததில்லை. இம்மாதிரி நிலை டங்கர்க்கிற்குப் பிறகு ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக மூன்றுமாத காலத்தில் ஹிட்லர் தனக்கு ஒருவித சேதமும் ஏற்படாமல் இருந்து, வரும் வஸந்த காலத்தில் மேல் நோக்கி வெற்றியை அடையப்பார்க்கிறான். ஆனால் அவ்விதம், அவனுக்கு அவகாசம் கொடுக்காமல் ருஷ்ய வீரர்கள் தங்களுடைய பீயாதியை நிலைநிறுத்திக்கொள்ளுவதோடு மாரிகாலத்தின் கொடுமையும் தாங்க மாட்டாமல் ஜெர்மன் சைனியங்கள் பயந்து ஓடுகின்றன. ருஷ்யர்கள் உணவு, வஸ்திரம் முதலியவைகளைப்பெற்று பழிவாங்கும் நோக்கத்துடன் ஜெர்மானியரை விரட்டியடித்து குறுக்கு எதிர்ப்புகள் செய்கின்றனர்.

இதைப்போல் தூரக்கிழக்கிலும் காலம் முக்கியமாகவே காணப்படுகிறது. இங்கே இப்பொழுது வெறும் கப்பற் சண்டைகள் நடந்துவருவதில் நேசநாடுகள் தங்கள் கப்பல் பலத்தைச் சேகரம் செய்து ஜப்பான் அடைந்துவரும் தாத்காலிகமான வெற்றியை அடக்கப்பார்க்கின்றனர். காலத்தை துரிதப்படுத்தவே ஜப்பான் பிரயத்னப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு நாள் எதிரியைத் தடைசெய்தாலும் நமக்கு சாதகமாகும். ஹாங்காங்கில் நம்முடைய படைகள் 16 நாட்கள் எதிர்த்து நின்றதே வெற்றியடைந்ததிற்கு சமமாகும். மலேயாவிலிருந்து நமது படைகள் கழட்டிக்கொண்டு செல்லும்போதே இதே லக்ஷியத்தை வைத்துக்கொண்டு போகின்றன. இதனால் எதிரிக்குச் சேதம் ஏற்படுவதோடு அவன் போட்ட கால திட்டப்படி காரியங்களைச் செய்யவும் முடியவில்லை. பிலிப்பைன்ஸை நோக்கி படையெடுத்துவரும் எதிரிப்படைகளை ஜெனரல்

மெக்கார்த்தர் தடுத்துவருவதும் ஆச்சரியமாக இருக்கிறது. இதனால் வெற்றியடைய முடியுமோ முடியாதோ என்பது வேறு விஷயம். ஆனாலும் நேசதேசங்களுக்குக் காலத்தை அனுகுணமாகச் செய்கிறார்கள் என்பது தெரிகிறது.

வி வி வி வி வி வி வி

**தலைமை அதிகாரம்.** (நிச்சயமாக காங்கிரஸுக்கு இல்லை). இந்தியாவிலோ, யுத்தரங்கத்திலோ நேசதேசப் படைகளுக்கு யார் தலைமை வகிப்பதென்பதைப்பற்றி சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. பிரக்யாதிபெற்ற ஜெனரல் வேவல் பஸிபிக்கின் தென்மேற்கே தலைமை அதிகாரம் வகித்திருக்கிறார். ஸிரேனைகாவிலிருந்து வேவல் இந்தியாவிற்கு வந்ததும் டாக்டர் கோயபல்ஸ் இவரை இங்கிலாந்தின் மட்டமான ராணுவத் தலைவனென்றும் அவரை ரிடையர் செய்யவேண்டுமென்றும் சொன்னான். ஆனால் ஜெனரல் கிடல் என்ற ஜெர்மன் வீரன் சொன்னபடி பிரிடனின் முதல்தரமான தலைவன் வேவல் என்பதை எல்லா நேசநாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

நமக்குத் தலைமை வகிப்பதைப்பற்றி வட ஆபிரிக்காவில் வெற்றியெல்லாம் அடைந்தவுடனே ஆகின்லெக் இந்தியாவிற்கு வரப்போகிறார் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சிங்கப்பூருக்கு மேற்கே ஜப்பானியருடன் சண்டை செய்ய நேர்ந்தால் இந்தியப் படைகளுக்கு சயாங்கை ஷேக் தலைமை வகிக்கலாம். இவரைவிடவேறு சாமார்த்தியம் வாய்ந்தவர் கிடைப்பதரிது. ஏனென்றால் எத்தனையோ பிரிவினையுள்ள சீனர்களை இவர்தான் ஒன்று சேர்த்திருக்கிறார்.

ஆனால் அச்சுநாடுகளில் இம்மாதிரியான முன்னேற்றம் கிடைக்காது. சாதாரண சிப்பாயான ஹிட்லர் ஏற்கனவே பெயர்பெற்ற தளகர்த்தர்களை வேலையைவிட்டு விரட்டுகிறான். ரோமலுக்கு இனி ஒருவேலையும் இருக்காது. பெனிடோ முஸோலினி இருக்கிற இடமே தெரியவில்லை. தனது சைனியங்களையும் உபயோகமற்ற வீரர்களையும் கொண்டு தோற்றுவருகிறான்.

வி வி வி வி வி வி வி

**உலக யுத்தமும், கடலாதிக்கமும்.** பஸிபிக் யுத்தத்தை மாத்திரம் கப்பற் சண்டையென்று சொல்லுவதோடு பிரகிருதம் நடக்கும் யுத்தமே கடலாதிக்கத்தைப் பெறவே யாவராலும் நடத்தப்படுகிறது. ஆனாலும் அட்லான்டிக் யுத்தத்தைப்பற்றி அவ்வளவு ஜாஸ்தியாக ஒன்றும் பிரஸ்தாபம் வரவில்லை. ருஷ்யாவில் ஜெர்மானியர் பின்னேறி ஓடுவதும், ஜப்பானியர் பஸிபிக் தீவுகளில் படையெடுப்பதையும் பிரிடிஷார் முற்றுகையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் முற்றுகை ஒன்றும் இல்லாதது போல்தான் காணப்படும்: மேலும் விமானப்படையும், யந்திரப்படையும் முன்னேறிப்போகும்போது கப்பற்படை மௌனமாக கவனித்துவருவது தெரியாது.

ஆனால் உண்மை அப்படி இல்லை. இவ்வருஷத்தில் வெற்றியை அடைய வேண்டுமானால் கடலாதிக்கம்தான் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் இரண்டு கடல்களிலும், மர்மான்ஸ்கிலிருந்து போர்ட் டார்வின் வரையிலும் உள்ள கடல் பாதைகளில்தான் இந்த யுத்தமே நிகழ்கிறது.

கப்பற்சண்டைகளை சரியே செய்துவந்தால் எதிரிக்கு கடல் மார்க்கங்கள் உபயோகிக்க முடியாது. ஆனால் நடுநிலை நாட்டுக்கப்பல்கள் அவ்வழியே செல்லலாம். யுத்த காலத்தில் கடல் வழியேதான் (1) உணவு, யுத்த சாமான்கள், (2) யந்திரப்படை, அதன் முஸ்திப்பு யுத்தம் செய்யும் நாடுகளின் உதவிக்கு செல்லவேண்டும்.

ஜப்பான் சண்டையிலீடுபடுவதற்குமுன் நேசநாடுகள் திருப்திகரமாக கடல் மார்க்கங்களை உபயோகித்துவந்தன. இதாலியக் கப்பற்படையை உபயோகித்துக்



கொள்ளலாமென்று நினைத்த ஹிட்லர் எண்ணம் பலிக்கவில்லை. அமெரிக்காவின உதவியால் அட்லான்டிக் கடலாதிக்கமும் நம்வசமே இருந்துவருகிறது. ஜெர்மனிக்குச் சொந்தமான நீர்மூழ்கிகளும் கப்பல்களும் பிரெஞ்சுத் துறைமுகங்களிலுள்ள பெரும் கப்பல்களை ஆக்கிரமித்துக்கொண்டால் பலமிழந்தது. ஆனால் இப்பொழுது ஜப்பான் யுத்தத்திலிறங்கியதால் அச்சுநாடுகளுக்குச் சாதகமானால் அமெரிக்கா நேசநாடுகளுக்கு உதவி செய்வதால் ஈடுபடுத்தப்படும்.

இவ்விதம் நாம் போட்டிருக்கும் திட்டமானது, ஜப்பான் மின்னல் வெற்றிகள் அடைந்துவருவதால் கொஞ்சம் தடைபெற்றிருக்கிறது, பேர்ல் துறைமுகம், வேக் தீவுகள், குவாம் தீவு முதலியவைகளை அமெரிக்கர் இழந்தனர். அதைப்போல் பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ் முதலிய கப்பல்களை இழந்ததும் நமக்குக் கொஞ்சம் பாதகம்தான். சிங்கப்பூரிலிருக்கும் பிரிடிஷ் கப்பற்படையோ, ஹவாய் தீவிலுள்ள அமெரிக்கக் கப்பற்படையோ ஜப்பானின் கப்பற்படை தெற்குநோக்கி பிரதேசாக்கிரமணம் செய்வதைத் தடுக்கப் போதுமான பலம் கொண்டதல்ல. ஆனால் சிறிது காலம் தடைசெய்து பார்க்கும். ஜப்பானும் காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ளப் பார்க்கிறது.

வி வி வி வி வி வி வி

**சம்பவங்கள் மீறித்தானிருக்கின்றன. ஆனாலும் சமாளிக்கலாம்.** ஆகவே வெற்றியடையும் வரை நமக்கு அதிக சிரமம் ஏற்படலாம். லக்ஷியம் ஒன்றுதான். கடல்மார்க்கங்களையும் நேசதேசங்கள் காபந்து செய்யவேண்டும். ஆனால் ராணுவங்கள் பல ஆயிரம் மைல்கள் தள்ளி இருக்கின்றன. ஏனென்றால் நிலச்சண்டைகளையும் செய்யவேண்டியிருக்கிறது. அமெரிக்காவில் சமீபத்தில் கூடிய கூட்டத்தில் நிலைமையை எப்படி சமாளிப்பது என்பதைப்பற்றி வெளிப்படையாக நிர்த்தாரணம் செய்யாமலிருந்தாலும், (முக்கியமான தருப்புகள், விமானங்கள், கப்பற்படைகளை வைத்துக்கொண்டு ஜப்பானியரைத் தாக்குவதைப்பற்றி) இதைப்பற்றி தீர்மானம் செய்துகொண்டிருக்கின்றனர். விமான பலத்தைப்பற்றியும் ஆலோசித்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் பிரகிருத நிலை எப்பொழுது மாறும் என்று ஒருவராலும் சொல்லமுடியாது. ஆனால் அமெரிக்கர்களும், பிரிடிஷ்காரர்களும் சொல்லுவதிலிருந்து முடிவான வெற்றியடையப்படுமென்று மாத்திரம் அறிகிறோம். அச்சுநாடுகளின் போக்குவரவிற்கு மத்தியதரைக்கடலும், தென் சீனக்கடலும் தான் இருக்கின்றன. ஆனால் எல்லா கடல்களிலும் நேசநாடுகளான, பிரிடன், ஸ்காண்டிநேவியா, வட ஆபிரிக்கா, ருஷ்யா, சைனா, வடகிழக்கு ஆசியா நாடுகள் தைரியமாகவும் சஞ்சரிக்க முடியும்.

ஆகவே காலம்தான் பிரதானமான விஷயமென்று நாம் முன் சொன்னதை பொறுமையுடன் கவனிக்கவும்!

வி வி வி வி வி வி வி

**கோபமடைந்த வீரன்.** பிலிப்பைன்ஸிலும், டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளிலும் அமெரிக்காவிற்கு நிச்சயமான சில பொருளாதாரம், பிரதேச சம்பந்தம் முதலிய அக்கரைகள் இருக்கின்றன. இவைகளை அமெரிக்க அரசாங்கமும், அமெரிக்க ஜனங்களும் அறிந்தும் இருக்கிறார்கள். இருந்தாலும் அங்கு நேர்ந்த தடைகளைக் கவனிக்க வேண்டாம். தற்போதுள்ள அமெரிக்கர்களைப்பற்றி ரேமண்டு கிராஸ்விங் என்பவர் சமீபத்தில் சொன்னதைக் கவனிப்போம். "பூராவாக சாமான்களின் உற்பத்திக்கு, ஆபத்து நெருங்கிவருவதைத் தெரிந்துகொண்டு தியாகம் செய்வதற்குத் தடையான அம்சங்கள் தற்போது நிவர்த்திக்கப்பட்டன. விஷயங்கள் அதிகமான பயத்தை உண்டு பண்ணவில்லை என்று ஒவ்வொரு அமெரிக்கனும் நினைத்துவருகிறான்."

ஜனவரியீ 6வ ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வழக்கம்போல் சில முக்கிய விஷயங்களைப்பற்றியே சொல்லியிருக்கிறார்.

ஜப்பானியர் திடீர் தாக்குதல்கள் செய்தாலும் அமெரிக்கர்கள் "பிரமித்து விடவில்லை." ருஷ்யாவிற்கும், பிரிடனுக்கும் செய்துவந்த உதவியை நிறுத்தி விட்டு, யாவற்றையும் பஸிபிக் பந்தோபஸ்திற்கு சேகரம் செய்யவேண்டுமென்றும் பயந்துவிடவில்லை. இவ்விதம் அமெரிக்கா செய்துவிடுமென்று ஜப்பானியர் நினைத்தது வீணாகிவிட்டது.

நாஸிகளை அழிப்பதற்காக உலகில் எந்த பாகத்திலும் (பிரிடன் உள்பட) அமெரிக்கப் படைகள் சென்று சண்டை செய்யும்.

தன் பிரதேசங்களைத் திரும்பப் பிடிப்பதோடுமட்டும் அமெரிக்கா நின்று விடாது. நாஸிக் கொள்கையே (ஹிட்லருக்குட்பட்ட, இதாலி, ஜப்பானியர் உள்பட) அழியும் வரை சண்டைசெய்யும்.

உலகமே ஒன்று சேர்ந்து அமெரிக்காவில் தந்திரமான திட்டங்கள்போட்டு அச்சுநாடுகளின் சாமான் உற்பத்தி ஈடுசெய்யப்படும்.

1940-ல் அமெரிக்கத் தற்காப்பிற்காக 10-சதவிகிதம் செலவழித்தது 1941-ல் 15-சதவிகிதமும், இப்பொழுது 50-சதவிகிதமும் செலவு செய்கிறது. 14,00,00,00,000 பவுன்கள் 1942-ல் வரவு செலவு திட்டம்போட்டு உடனேயே செலவழிக்கப்படுகிறது.

மற்றும் சில விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கவனிப்பது நலம். 60,000 விமானங்களும், 45,000 டாங்கிகளும், 80,00,000 டன் கப்பல்களும் கட்டுவதெனத் திட்டம் போடப்பட்டது.

இந்தியர் சைகிள் உபயோகிப்பதுபோல அமெரிக்கர் மோட்டார் உபயோகித்து வந்ததில் ஜனவரி முதல் ஜனங்கள் உபயோகிக்கும் மோட்டார் தொழில் நிறுத்தப்படும்!"

இம்மாதிரியாக 37 நிமிஷம் பேசியபோது 29 தடவை கைதட்டித்தட்டி கோலாஹலமாக வரவேற்கப்பட்டது.

பெரும் நாடான அமெரிக்கா யுத்தத்தில் பூராவாக ஈடுபட்டுவிட்டது. நேச நாடுகளுக்கு எவ்விதமான பயங்கரச் செய்திகள் வந்தாலும், ஆக்கிரமணம் செய்யும் நாடுகள் அழியும் நாள் நெருங்கிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**ராணுவத் திறம்.** ஜப்பானியத் தலைமை அதிகாரிகள் ஜப்பானியர்களுக்குத் திருப்திகரமான விஷயங்களைச் சொல்லிவருகிறார்கள். இதற்குக் காரணமாக அவர்கள் அடைந்துவரும் ஆரம்ப வெற்றிகள் சொல்லப்படுகிறது. தரை, கடல், ஆகாயப்படைகளின் ஒற்றுமையையும் சொல்லப்படுகிறது. ஆனால் அவ்வரசாங்கத்தினருக்கு மிகவும் பயங்கரமான சில பிரச்னைகள் இருக்கின்றன. தென் சைனா, இந்தோ—சைனா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களில் 5 லக்ஷம் துருப்புகளைப் பிரித்துவிட்டிருக்கின்றனர். இவைகளுக்கு ஸப்ளை, முஸ்திப்பு சாமான்கள் அனுப்புவது மிகவும் சிரமம். சைனா, மஞ்சுகோவிலிருக்கும் படைகளையும் அழைத்துக்கொள்ள தைரியம்கொள்ளவில்லை. ஆங்காங்கு பிரிந்து சண்டைசெய்யும் படைகளைப் போஷிப்பது ஜப்பானுக்குத்தான் சிரமம். நேசதேசங்கள் ஒன்றிரண்டு கூட்டத்தினர் சேர்ந்து எதிரிகளை விரட்டியடிப்பது வெகு சுலபம்.



# யுத்த காலத்தில் பிரிடனின் ஆகாராதிகள்.

## யுத்தகாலத்திற்குமுன் இருந்த உணவுதிட்டமும் இப்போது உள்ள திட்டமும் ஐரோப்பா கண்டத்தில் எல்லா ஜாதியரைவிட பிரிடிஷாருக்கு அதிக உணவுதிட்டம்.

**E. A. மான்டேக்** சமீபத்தில் பி. பி. ஸி. யில் ஒலிபரப்பியது.

சமீப காலத்தில் தென் ஆபிரிக்காவிலிருந்து என்னுடைய பழய சிநேகிதன் ஒருவன் பார்சல் அனுப்பிவைத்தான். அதைக்கண்டதும் எங்களுக்கு மிகவும் ஆனந்தத்தைக் கொடுத்தது. அதில் சாக்லெட் இருப்பதைக் கண்டவுடன் என்னுடைய சிறிய பையனுக்கு வந்த சந்தோஷம் சொல்லமுடியாது. ஏனென்றால் இத்தின்பண்டம் இவ்விடத்தில் அகப்படுவது ரொம்பக் கஷ்டம். இத்துடன் டப்பியில் அடைக்கப்பட்ட பழங்களும் இருந்தன. அவைகள் யுத்தத்திற்குப் பிறகு இங்கு கிடைப்பதில்லை. ஆனால், அந்நியநாட்டிலிருந்து ஜனங்கள் வெகு ப்ரீதியுடன் உணவுப்பொருள்கள் வெகுமதிகொடுப்பதை அங்கீகரிப்பதில் சில சமயம் வெட்கம் ஏற்படுகிறது. ஆனால், அவர்கள் அனுப்பும் வெகுமதிக்கு மிகவும் பாராட்டியபோதிலும், எதிரி உங்களை நினைக்கும்படி விரும்பும் மாதிரி நம்மிடம் உணவுப்பொருள்களுக்குக் குறைவில்லை.

இப்பொழுது உணவுப்பொருளின் நிலைமை எப்படியென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நமக்குக் கிடைப்பது குறைவுதான். ஆனால், அநேக வகைகளில் யுத்தத்திற்குமுன் கிடைத்த முக்கியமான உணவுப்பொருள்களில் இப்பொழுது குறைவு இல்லை. அந்தக் கணக்கு விவரம் பின்வருமாறு: ஒவ்வொரு வகையிலும் யுத்தத்திற்குமுன் ஒவ்வொருவருக்கும் கிடைத்த உணவை ஒப்பிட்டுப் பார்ப்போம். யுத்தத்திற்கு முன்னுள்ள சராசரி விகிதம் எல்லாவழியிலும் ஏராளமாகப் பெறக்கூடிய பணக்காரர்களும், சில உணவுபொருள்களில் அதிகம்பெறக்கூடாத ஏழைகளும் பெற்றுவந்ததிலிருந்து கணக்கிடப்பட்டிருக்கிறது. யுத்தத்திற்குமுன் நல்ல நிலைமையிலுள்ள ஜனங்களுக்குக் கிடைத்துவந்த விகிதம் நான் சொல்லுவதைக்காட்டிலும் கூட இருக்கலாம்.

### ஒப்பிடுவது.

எங்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு ஷில்லிங் இரண்டு பென்ஸ் விலையுள்ள இறைச்சி உண்டு. அதற்கு எலும்புள்பட ஒரு பவுண்டுக்குமேல் கொஞ்சம் கூட மாமிசம் வாங்கலாம்.

யுத்தத்திற்குமுன் எலும்பில்லாமல் $1\frac{3}{4}$-பவுண்டு இறைச்சி கிடைத்தது. வெண்ணெய், வெண்ணெய்க்கு பதில் உபயோகிக்கும் வஸ்துக்கள், கொழுப்பு இவை வாரத்திற்கு 10-அவுன்ஸ். அதில் இரண்டு அவுன்ஸுக்குமேல் வெண்ணெய் இருக்காது. இது யுத்தத்திற்குமுன் உள்ளபடிதான். பன்றிவத்தல் பன்றித் தொடை வாரத்திற்கு 4-அவுன்ஸ். யுத்தத்திற்குமுன் அவை $5\frac{1}{2}$-அவுன்ஸ். சர்க்கரை 12-அவுன்ஸ். யுத்தத்திற்குமுன் ஒரு பவுண்டுக்கு கொஞ்சம்கூட. பாலடைக்கட்டி 3-அவுன்ஸ். அதாவது யுத்தத்திற்குமுன் உள்ளதைக்காட்டிலும் அதிகம். விசேஷ வகுப்பு தொழிலாளிகளுக்கு 8-அவுன்ஸ் கிடைக்கிறது.

தேயிலை இரண்டு அவுன்ஸ், யுத்தத்திற்குமுன் 2·6-அவுன்ஸ். முட்டைகள் மாதத்திற்கு 2-முதல் 5-வரை பருவத்திற்குத் தகுந்தபடி. யுத்தத்திற்குமுன் சராசரி 15-முட்டைகள். பழரசக்குழம்பு, மிட்டாய், ஸர்பத், பாகு, தண்டு மாமிசம் இவை நாலு வாரத்திற்கு ஒரு பவுண்டு. யுத்தகாலத்திற்கு முன்னுள்ள திட்டத்திற்கு இது கொஞ்சம்தான் குறைவு. தகரத்தில் அடைத்த உணவுகள் வாரத்திற்கு 4-அவுன்ஸ். யுத்தகாலத்திற்குமுன் எவ்வளவு என்பதற்குக் கணக்கு

தெரியவில்லை. பால் திட்டம் பலவகைப்பட்டது. குழந்தைகளுக்கு யுத்த காலத்திற்கு முன் உள்ள அளவுப்படி, பெரியவர்களுக்கு அதைக்காட்டிலும் மிகவும் குறைவு.

ஆகையால் உணவுதிட்டங்களில் யுத்தகாலத்திற்குமுன் உள்ள அளவுகளுக்கு மிகவும் குறைவானது இறைச்சி, முட்டைகள், பெரியவர்களுக்கு பால் இவைகள் தான். ரொட்டியில் திட்டம் இல்லை. வெங்காயத்தைத் தவிர மற்ற காய்கறிகளில் திட்டம் கிடையாது. இறைச்சி இல்லாததற்கு காய்கறிகளை உபயோகப்படுத்தும்படி எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டமில்லாமல் உணவுகளில் அநேகம் யுத்தகாலத்திற்குமுன் இருந்ததைக் காட்டிலும் மிகவும்குறைவு. உதாரணமாக ஆரெஞ்சு, கொஞ்சம் எலுமிச்சம்பழம் இவற்றைத்தவிர புதிய பழங்களாவது, தகரத்திலடைத்த பழங்களாவது இப்பொழுது இறக்குமதி செய்யப்படவில்லை. ஆரெஞ்சுகளெல்லாம் குழந்தைகளுக்குப்போகிறது. வெங்காயம் கொஞ்சம்தான் இறக்குமதிசெய்யப்படுகிறது. உள்நாட்டில் விளைகிறதும், இறக்குமதியும் சேர்ந்து தலைக்கு ஒரு வருஷத்திற்கு 2-பவுண்டு வீதம் திட்டம் போடப்படுகிறது.

பிஸ்கோத்து, பக்ஷணம், சாக்லெட் இவைகளின் ஸப்ளைகள் ரொம்பவும் குறைந்துவிட்டது. ஏனென்றால் தயாரிப்பவர்களுக்கு சர்க்கரையும், கொழுப்பும் குறைவாகத்தான் கிடைக்கிறது. மீன் திட்டத்திற்குட்படுத்தப்படவில்லை. வேண்டிய அளவு கிடைக்கிறது. ஆயிரக்கணக்கான செம்படவர்கள் கண்ணி அரிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

## பொதுவான தோற்றம்.

மது பானங்களில் சாராய இறக்குமதி மிகவும் குறைவு. விலையும் அதிகம். அவற்றின் விலை நிதானிக்கப்படவில்லை. விஸ்கியும் கிடைப்பது அரிது. அதை பீப்பாய் கணக்காக வாங்கியது போக இப்பொழுது ஒரு சீசா வாங்குவது கடினம். பீர் முந்தியைக் காட்டிலும் கிடைப்பது துர்லபம். ஆனால் விஸ்கியைப்போல் அவ்வளவு சிரமமில்லை.

ஆகையால் பொதுவாகப் பார்க்க உணவு குறைச்சல் இல்லை. ஏராளம்தான். இரண்டு வருஷங்களுக்கு மேலாக ஜெர்மனி பொருளாதார முற்றுகை போட்டும், ஐரோப்பா கண்டத்தில் ஸ்வீடன், போர்ச்சுகல், ஸ்விட்ஸர்லாந்து இவைகளுக்கு அடுத்தபடியாக நமது தேசத்தாருக்கு நல்ல உணவு கிடைக்கிறது. நிச்சயமாக ஜெர்மனியர்கள் இதாலியர்கள் இவர்களைப் பார்க்கிலும் நமக்கும் அதிகம் உணவு கிடைக்கிறது.

இன்னும் நம்முடைய உணவு திட்டத்தைக் குறைத்தாலும்கூட நாம் பொருட்படுத்தாமல் இன்னும் வயிற்றை இறுக்கிப் பிடித்துக் கட்டிக்கொள்ளலாம்.

---

# ஜனநாயகங்களின் யுத்த சாமான்கள் உற்பத்தி ஸ்தலம்.

---

## லத்தீன் அமெரிக்காவின் உற்பத்தி பலம்.

## ஜப்பானுக்கு பதிலாக ஐக்கிய நாடுகள் சாமான்களை வாங்கிக்கொள்ளுகின்றன.

"ஜெர்மானிகஸ்" எழுதியது.

அமெரிக்க நாடுகளுக்குள் பரஸ்பரம் காரியாம்சையில் ஒற்றுமை ஏற்பட்டு வருகிறது.



லத்தீன் அமெரிக்க நாடுகள் யுத்தத்தில் ஈடுபட்ட ஜனநாயகங்களுடன் சேர சம்மதித்திருப்பதை ஜனாதிபதி ரூஸ்வெல்ட் முன் சொன்ன மொழிகளுடன் சந்தோஷமாக அறிவித்தார். இந்த அமெரிக்க நாடுகளின் உற்பத்தி செய்யும் திறமை மிக அதிகம். அது யுத்தத்தால் கொஞ்சமும் கெடுதலடையாததால் ஜனநாயகங்களுக்கு அதிகமான உதவிசெய்ய முடியும். அசாத்தியமாகப் பொருளாதார முன்னேற்றத்தையும், 'தொழிற்சாலை வேலைப்பாட்டையும் காணும்போது லத்தீன் அமெரிக்க நாடுகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுகிறதென்று தெரிகிறது.

## பிரஸிலின் இரும்பு மண்.

யுத்த சாமான்கள் செய்வதற்கு இரும்பு மிக அவசியம். பிரஸிலில்தான் உலகத்திலேயே அதிகமான இரும்பு மண் கிடைக்கிறது. ஷில்லி, வெனிஜூலா நாடுகளிலும் அதிகம் உண்டு. உற்பத்தியும் துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது. 1939-ல் ஷில்லியில் வருஷம் 20,00,000 டன் வீதம் உற்பத்தி செய்யப்பட்டது. உலகத்திற்கு உபயோகப்படும் ஈயத்தில் ஐந்தில் ஒருபாகமும் தாமிரத்தில் ஐந்தில் ஒருபாகமும் லத்தீன் அமெரிக்காவிலிருந்து எடுக்கப்படுகிறது. தகரம் இப்பொழுது முக்கிய ஏற்றுமதிச் சரக்காக இருக்கிறது. பொலிவியாவே 16 சத விகிதம் உண்டு பண்ணுகிறது. இன்னும் இது இரட்டிப்பு மடங்கு ஆகும். கெட்டியான எஃகு சாமான்கள் செய்ய வானடியம், மாலிப்டினம் என்ற உலோகங்களில் முதல் உலோகத்தை பெருவும், மெக்ஸிகோவும் 38 சத விகிதம் உண்டுபண்ணுகின்றன. இரண்டாவது உலோகத்தை 4 லத்தீன் அமெரிக்க நாடுகள் உண்டுபண்ணுகின்றன.

பிரஸிலில் நிக்கல் ஏராளமாக இருப்பதால் தொழிலும் அதிகமாக ஆகும்.

இந்நாடுகளில்தான் நீலாஞ்சனம் (Antimony) அதிகம் கிடைக்கிறது. இதைக் கொண்டுதான் ஈயம் சுத்தி செய்யப்படுகிறது.

இவைகளைத்தவிர வேறே விலையுயர்ந்த உலோகங்களான பிளாட்டினம், மாங்கனிஸியம், பாக்ஸைட், துங்கிஸ்தன் கிடைக்கின்றன.

## இதர சாமான்களும் கிடைக்கின்றன.

இப்பாகங்களில் உலோகங்களைத்தவிர இதர சாமான்களும் முக்கியமாக மாமிசம் ஏற்றுமதி அதிகம்.

யுத்தத்திற்குத் தேவையான கம்பளி லத்தீன் அமெரிக்காவில் அதிகம். 1940-ல் 4,70,00,000 டாலர் மதிப்பிற்கு ஐக்கிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. பருத்தியும் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும் அப்பொழுது ஜெர்மனியில் தோல் கிடைக்காத சமயத்தில் நமக்கு சாதகமாக லத்தீன் அமெரிக்காவிலிருந்து 1940-ல் ஆர்ஜென்டைனாவில் 1,45,00,000 டாலர்கள் பொருமானத்திற்கு ஐக்கிய நாடுகளுக்கு ஸப்ளை செய்யப்பட்டது. இப்பொழுது இன்னும் அதிகம் கொடுக்கப்படும்.

## பெட்ரோல்தான் மிக ஜாஸ்தி.

உலக உற்பத்தியில் 15 சத விகிதம் லத்தீன் அமெரிக்க நாடுகளில் உற்பத்தியாகிறது.

வெனிஜூலாவில் 1940-ல் 2,70,00,000 டன்களுக்கு அதிகமாக அதாவது 9 சத விகிதம் உண்டுபண்ணப்பட்டது. மெக்ஸிகோவின் எண்ணெய் பிரதேசம் மிகப் பெயர் பெற்றவை.

இனிமேல் இந்த சாமான்கள் ஜப்பானுக்குக் கிடைக்காது. யுத்தத்தால் அதற்கு அதிக பாதம் ஏற்பட்டது. இதுவரை லத்தீன் அமெரிக்காவிலிருந்து ஜப்பான் வாங்கி வந்தவைகளை ஐக்கிய நாடுகள் வாங்கிக்கொள்ளும். ஐக்கிய நாடுகளில்தான் ஜனநாயகங்களுக்கு யுத்த சாமான்கள் தயாரிக்கப்படுகின்றன.

## மற்றொரு வியாபார ஸ்தலம்.

ஜப்பான் யுத்தத்திலிறங்கியது முதல் தென் அமெரிக்கச் சாமான்களை ஐக்கிய நாடுகள் வாங்கிக்கொள்ளுகின்றன. ஆகவே தென் அமெரிக்காவை வியாபிப்பதாக ஜப்பான் பயமுறுத்தியது பலிக்காது. மேலும் ஜப்பானிய ஐவேஜிகளையும் ஐக்கிய நாடுகள் ஜூலை மாதத்திலேயே கட்டுப்படுத்திவிட்டன.

ஆகவே தென் அமெரிக்காவில் உண்டுபண்ணப்படும் முக்கிய சாமான்கள் இனி கிழக்கே போகாமல் வட அமெரிக்காவிற்குத்தான் போகும். தென் அமெரிக்காவிற்கு இதனால் அதிக லாபங்கள் கிடைக்கின்றன. ஸ்வதந்திரத்திற்காக லத்தீன் அமெரிக்கா அதிக உதவி புரிகிறது. நாஸிகளின் "புது திட்டத்"தால் ஏற்படும் கெடுதிகள் இனி நிவர்த்திக்கப்படும்.

---

## ஜப்பானை யுத்தத்தில் ஈடுபடும்படி ஜெர்மனி செய்த முயற்சிகள்.

## ஜெர்மன் அரசாங்கத்தாரும் ரகசியப் போலீஸும் செய்த ரகசியமான வேலை.

## ரீசஸ்வர் ஆட்டும் தங்கள் திட்டப்படி எப்படிச் செய்து முடித்தார்கள்.

'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையில் ஜெர்மன் சைனியத்தின் மாஜி உத்தியோகஸ்தர் ஒருவர் எழுதியது:—

யுனைடெட் ஸ்டேட்ஸ் பேரிலும், கிரேட் பிரிடன் பேரிலும் ஜப்பான் யுத்தம் தொடங்கியதைப்பற்றி ஜெர்மன் அரசாங்கமும் தளகர்த்தர் வான்ர்ச்னேவும் அநேக வருஷங்களுக்கு முன் ராணுவ கலாசாலையில் ஏற்கனவே விஸ்தரித்திருக்கிறார்கள். அந்த திட்டத்தை ஜெர்மன் ரீக்ஸ்வெரின் ரகசியமாக வேலை செய்யும் நிபுணர்களும், கெஸ்டாபோ அல்லது ரகசியப்போலீஸின் அயல் நாட்டு இலாகாவும் சேர்ந்து கொண்டு நடத்தி வந்ததைப்பற்றி சில முக்கிய விஷயங்களை அடியில் குறிப்பிடுகிறோம்.

ஜெர்மனியில் அயல் நாட்டு இலாகா மந்திரி பாரன்வான் நியூராத் என்பவரின் கொள்கை, ஜப்பானிய கொள்கைக்கு நேர் விரோதம். ஜப்பானிய சாமான்கள் உலகத்தில் அநேகமாக எல்லா இடங்களிலும் ஏராளமாக அனுப்பப்பட்டு வருகிறதென்றும், அதனால் அதன் வியாபாரம் அதிகம் முன்னேற்ற மடைகிறதென்றும் பழைய ஹாம்பர்ச் வம்சத்தில் தோன்றிய டாக்டர் ஸ்தேலர் என்பவர் தன்னுடைய பெரிய உத்தியோகஸ்தர்களிடம் அடிக்கடி எச்சரிக்கை செய்து இருக்கிறார்.

பழைய அயல்நாட்டுக் கொள்கையை ரிப்பன்டிராப் என்பவர் இப்பொழுது முற்றிலும் மாற்றிவிட்டார். ஜெர்மன் அரசாங்க சபையின் நம்பிக்கையுள்ள ஏஜெண்டான வான்ஆட் என்பவர் ராணுவ சம்பந்தமாக ஜப்பானுக்கு அனுப்பப்பட்டார். அயல்நாட்டு சம்பந்தமான எல்லா விஷயங்களையும், அச்சபையே நேரில் பார்த்து வந்தது.

ரிப்பன்டிராப் உள்பட அச்சபை மெம்பர்கள் வான்ஆட் என்பவருக்கு ஸர்வாதிகாரமும் கொடுத்து அவரை ஜப்பானுக்குத் தூதராக அனுப்ப சம்மதித்திருந்தார்கள். அநேக சந்தர்ப்பங்களில் ஜெர்மன் அரசாங்கத்துக்கும் ரிப்பன்ட்ராப்புக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு விவாதங்கள் உண்டாயின. அந்தந்த சமயங்களில் குழப்பங்களும் ஏற்பட்டன. ஆனால் தூரக்கிழக்கு சம்பந்தமாக அவர்கள் முற்றிலும் ஒத்துமையாக இருந்தார்கள். ஏனென்றால் பஸிபிக் மகா சமுத்திரத்தில் அச்சு நாடுகளின் தலைமை ஸ்தானத்தை ஜப்பான் வகித்துவர வேண்டியிருந்தது.



## சாதாரணமான ராஜீய தந்திர முறை கைவிடப்பட்டது.

ஒரு தூதன் சாதாரண வழிகளிலும், முறைகளிலும் எவ்விதத்தில் நடந்து கொள்ளவேண்டுமோ அந்த முறைப்படி நடந்து கொள்ளுவதற்குத் தளகர்த்தர் வான்ஆட் என்பருக்குச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை. ஏனென்றால் ஜெர்மனிக்கு ஆபத்து காலத்தில் உதவி புரிய ஜப்பானுக்கு அக்கரை கிடையாது.

அதனால் வாட் என்பவர் சாதாரண தந்திரத்தை கை விட்டுவிட்டார். அவர் ஜப்பானிய சைனியம், கப்பற்படை உத்தியோகஸ்தர்களின் குடும்ப வாழ்க்கையைப்பற்றி கண்டறிந்திருக்கிறார். ஜப்பான் உள்நாட்டு விஷயங்களை ரகசியமாக வைத்துக்கொள்ளுவது வழக்கமாயிருந்த படியால் இவருக்கு ஆரம்பத்தில் அங்குள்ள விஷயங்களை எளிதில் தெரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் உஷ்ண ஊற்று இருக்கும் இகாஹ என்ற இடத்தில் அவர் தேவிருந்துகள் அநேகம் கொடுத்தார். இந்த விஷயம் பிரபலமாக எல்லோருக்கும் தெரியும். அதற்காக பல இடங்களிலிருந்து பலர் அங்குவந்து கூடினார்கள். அதிலிருந்து ஆட்டோ என்பவருடன் அநேகர் சிநேகிதர்களாகி விட்டார்கள். அவர்களின் உதவியைக்கொண்டு ஜப்பானிய யுத்த இலாகாவில் இவருக்கு செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது.

## மற்றொரு இடையூறு.

ஜப்பானின் உள்நாட்டு விஷயங்களைக் கண்டுகொள்ளுவது மிகவும் கஷ்டம். ஏனென்றால் ஜெர்மானியர், இதாலியர், பிரிடிஷார், அமெரிக்கர் இவர்களில் யாராய் இருந்தாலும் ஜப்பானியர்கள் சந்தேகப்படுவார்கள். ஜப்பானிய யுத்த இலாகா, உள்நாட்டு இலாகாவிலுள்ளவர்களை ஜெர்மன் தூதருடன் சிநேகப் பான்மையாய் இருக்கும்படி மிகவும் கஷ்டப்பட்டு தூண்டிவந்தது. ஜப்பானிய உள்நாட்டு இலாகாவுடன் ஜெர்மன் தூதர் சிநேக பான்மையுடன் இருந்ததின்மேல்தான் ஜப்பானிய அரசாங்கம் இவரை வரவேற்கத் தொடங்கியது.

ஜப்பானில் நாஸிக்கக்ஷியை ஆதரிக்காத ஜெர்மானியர்கள் இருந்துகொண்டு பிரிடனுக்கும், யுனைடெட் ஸ்டேஸுக்கும் ஜெர்மனிக்கு விரோதமாக ஒத்தாசை செய்வதைத் தடுப்பதற்காகவே, ஜெர்மன் போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்றும், ஜப்பானிய உள்நாட்டு இலாகாவும், அயல்நாட்டு போலீஸ் இலாகாவும் ஒவ்வொரு விஷயத்திலும் இவர் அபிப்பிராயத்தைக்கேட்டு கலந்துகொள்ள வேண்டுமென்றும், ஆட் என்பவர் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டார். அதை ஒத்து பெர்லின் நகரத்து ரகசியப் போலீஸிலுள்ள, ஹேர் பிரான்ஸ் ஹ்யூபர் என்பவர் ஜப்பானிய போலீஸ் இலாகா தலைமை ஆபீஸ் இருக்குமிடத்திற்கு அனுப்பப்பட்டார்.

## தூது கோஷ்டியில் 3,000 பேர்கள்.

அது முதற்கொண்டு ஜெர்மனிக்கும், ஜப்பானுக்கும் அதிக நெருக்கம் ஏற்பட்டது. டோகியோ நகரத்திற்கு சென்ற ஜெர்மன் தூது கோஷ்டியில் 3,000 மெம்பர்கள் இருந்தார்கள். பொறுக்கியெடுத்த 100 ஜெர்மன் விமானிகள், ஜப்பானிலுள்ளோர்களுக்குத் தங்களுடைய அனுபவங்களை எடுத்துச் சொன்னார்கள். யுத்த தளவாட உற்பத்தி இலாகாவிலிருந்து 300 யந்திரப் பயிற்சி பெற்றவர்கள் ஜப்பான யுத்த இலாகாவில் நியமிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு விஷயத்திற்கும் இவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டுத்தான் நடக்கவேண்டும்.

இத்தகைய ஜெர்மானியர்களின் உதவியைக்கொண்டு, ஜப்பானியக் கப்பற்படை உத்தியோகஸ்தர்களிடமும், ராணுவ அதிகாரிகளிடமும் தன் சாமர்த்தியத்தைக் காட்டி அவர்களை முழுவதிலும் தன் வசமாகும்படி வான் ஆட் செய்துகொண்டார். சிநேகித முறையில் ஜப்பானிய அதிகாரிகளை நம்பிக்கை வர செய்ய முடியாமல் போனால், அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தோ, பலவந்தப்படுத்தியோ வான் ஆட் தன் காரியத்தை சாதித்துக்கொள்ளுவார். அந்த சந்தர்ப்பங்களில் அநேக ஜப்பானிய அதிகாரிகள் தற்கொலை செய்துகொண்டுமிருக்கிறார்கள்.

ஜப்பானியர்களின் பொதுஜன அபிப்பிராயம் நாஸிகள் பக்ஷமாகத் திரும்புவதற்கு ஜப்பானிய பிரதம தலைவனுக்கு பிராணாபத்து வரும்படியாக ஒரு போலீஸ் சம்பவம் ஏற்படும்படி செய்யப்பட்டது. யாரோ ஒருவன் ஹிரானுமா பிரபுவை கழுத்தில் சுட்டுவிட்டான். ஆட் என்பவன் இவ்வித எத்தனத்தைத் தடுப்பதற்கு தன்னால் முடிந்ததைச் செய்தான். 1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து ஜெர்மன், இதாலிய உத்தியோகஸ்தர்கள் அங்கு நடக்கும் சங்கதிகளை வெளியே தெரியப்படுத்தி வந்ததற்காக வெளிக் கடத்தப்பட்டார்கள். அவர்கள் ஜப்பானிலேயே வந்து இருந்துகொண்டு அவர்களுடைய அலுவல்களைப் பார்த்து வர முடிந்தது. அன்னியர்களை ஜப்பானில் தங்கக்கூடாதென்று வெறுப்பு உண்டாக்கி வந்த பிரான்ஸ் ஹூபெர் சொல்லுக் கிணங்கி மற்ற அன்னிய தேசத்தார்களை ஜப்பானை விட்டுத்துரத்தும்படி ஆகிவிட்டது.

பாய்ச்சல் விமானத்திலிருந்து வெடிகுண்டு போடக்கூடிய விசேஷ நிபுணர்கள் ஜப்பானிய விமானப்படை இலாகாவுக்கு அனுப்பப்பட்டது யாவருக்கும் தெரிந்த விஷயம். அவர்கள் சொல்லிவந்த புத்திமதிகளை ஜப்பான் கப்பற்படை இலாகாவும், அரசாங்கமும் பெரும்பாலும் பின்பற்றி வந்தன. விமானப்பயிற்சியில் விருப்பமே யில்லாத ஜப்பானியர்களுக்கு இப்பொழுது கரை காணாத ஆவல் ஏற்பட்டுவிட்டது. ரீஸ்னேவும், ஆட்டும் தங்கள் தேசத்தில் பலத்த ஆக்ஷேபனை இருந்த போதிலும், இதாலிக்கும், ஜெர்மனிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை முன்னிட்டு இதாலி அதற்கு ஆக்ஷேபித்தும் கூட அவர்கள் தங்கள் கொள்கைப் படி நடந்து வந்ததை ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஜெர்மன் சைனியம் ஜப்பானியர்களைப் புராதனமாக வெறுத்து வந்தது. ஆனாலும் இந்த நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தந்திரத்தை கையாளவேண்டுமே ஒழிய மனப்பான்மைக்கு இடங்கொடுக்கமுடியாது.

---

## ஜப்பானின் உள்நாட்டு விஷயங்கள்.

## சென்ற யுத்தத்தின் இறுதியில் ஜெர்மனி எந்நிலைமையில் இருந்ததோ அதேமாதிரியாகவே ஜப்பானும் இருக்கிறது. தற்காப்பு வசதிகள் குறைவு.

'டெய்லி மெயில்' பத்திரிகையில் ஆல்பிரட்டவுன்ஸ் எழுதியது:—

[ஆல்பிரட்டவுன்ஸ் அமெரிக்க தேசத்து பத்திராதிபரும், சரித்திரம் எழுதுபவருமாவர். அவர் ஜப்பானில் அநேக வருஷங்கள் தங்கியிருந்து சமீபத்தில் தான் டோகியோவை விட்டு ஸான் பிரான்ஸிஸ்கோவிற்குச் சென்றார். அங்கு சேர்ந்ததும் ஜப்பானைப்பற்றி அடியில்கண்ட வியாசத்தை எழுதியிருக்கிறார்]:—

நான் ஜப்பானை விட்டு வரும்பொழுது அங்குள்ள உள்நாட்டு நிலைமை, க்ஷீணித்து வருவதாக எனக்குத் தெரிந்தது. ஜனநாயகங்களைத் தோற்கடித்து ஜனங்களுக்கு வெகு எளிதில் வெற்றியைக் கொடுத்து அதே சமயத்தில் நாலு வருஷங்களாக சைனாவுடன் நடத்தி வரும் சண்டையை முடித்துவிடுவதா, அல்லது அதன் அதிகாரத்தை சமாதானமாகவோ, அல்லது உள்நாட்டுக் குழப்பத்தினாலேயோ விட்டுவிடுவதா என்ற பலபிரச்னைகள் ஜெர்மன் சைனியத்தை பாதித்து வந்தன.

ஜப்பானில் சாதாரண ஜனங்களின் உணவு திட்டங்கள் அதிகம் குறைவுபட்டுவிட்டது. அதனால் அவர்களின் நிலைமையும், மனப்பான்மையும் அதி சீக்கிரத்தில் கெட்டு விட்டது. ஜப்பானிய கூட்டங்களிலும், இன்னும் அயல் நாடுகளிலும் அங்கு கட்டாயம் ஒரு வருஷத்திற்குள் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லப்பட்டது.



## எதிர் கக்ஷி.

இந்த க்ஷீண நிலைமையை ஒத்து வியாபாரிகள், பிரபுக்கள், அரசியல் நிபுணர்கள், சக்ரவர்த்திக்கு ஆலோசனை கூறுவோர் இவர்கள் சேர்ந்தே மற்றொரு கக்ஷியும் ஏற்பட்டுவிட்டது. அக்கக்ஷியை ஆதரிக்க ஒரு சிறிய சைனியமும், அட்மிரல் நோமுரா தலைமை வகித்த கப்பற்படை ஒன்றும் இருந்தன.

அதனால் இந்த எதிர் கக்ஷியின் பலத்தைக் குறைக்கவேண்டியதற்கும் ஜனங்களுக்குள் உள்நாட்டுக் குழப்பங்களை அடக்குவதற்கும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் கப்பற்படை மெம்பர்களையும், எதிர்கக்ஷியினரையும் சமாதானப் படுத்திவிட்டு, தூரக் கிழக்கிலுள்ள தெற்கு சமுத்திரங்களின் ஆதிக்கத்தை எச்செலவிலும் இந்த மாரிகாலத்திற்குள் பெறுவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். முடிவாக, எப்படியாவது தங்கள் உயிருக்கே ஆபத்து நேரிட்டாலும்கூட, அதைப் பொருட்படுத்தாமல் ஒரு பகிரதப் பிரயத்தனம் செய்து காரியத்தை சாதித்துக் கொள்வதே ஒழிய சக்ரவர்த்தியிடமும், பொதுமக்களிடமும் சரண்புகுவதில்லை என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

## ராணுவ அதிகாரிகளின் முன்னுள்ள பிரச்னைகள்.

ஜப்பானிய சைனியமும், கப்பற்படையும், 1942-ம் வருஷத்திற்குள் ஜனநாயகங்களை ஜயித்து, இன்னும் பல இடங்களிலும் வெற்றிகள் பெற்று ஜப்பானிய பொதுமக்களுக்கு ஆகாரவசதிகளை ஸப்ளை செய்யவேண்டும். இல்லாவிடில் அவர்கள் வருமையால் மிகவும் கஷ்டப்பட்டு, அவர்களுக்குள் ஒற்றுமைக் குறைவும், அங்கு பொருளாதார நெருக்கடியும் அதிசீக்கிரத்தில் ஏற்பட்டு விடும் என்பது நிச்சயம். இவ்வித முடிவுக்குவர கீழே குறிப்பிடும் சில விஷயங்கள் முக்கியமானவை.

சென்ற மகா யுத்தத்தில் ஜெர்மனியின் நிலைமை எப்படியிருந்ததோ அதே விதமாகவே இப்பொழுது ஜப்பான் இருந்துவருகிறது. சென்ற நான்கு வருஷங்களாக சைனாவுடன் யுத்தம் செய்து வந்ததினால் இப்பொழுது ஜப்பானியர்களுக்கு யுத்தத்தில் அதிருப்தியும், களைப்பும் ஏற்பட்டிருக்கிறது. ஜப்பான் சமீபத்தில் யுத்தம் தொடங்குமுன், மேற்சொல்லிய நிலைமை இருந்தது. நான் ஜப்பானை விட்டு வரும்பொழுது, அங்குள்ள அநேக பொதுமக்கள், ஆகார வசதிகள் குறைவுபட்டுவிட்டதைப் பற்றியும், சைனாயுத்தத்தில் ஏற்பட்ட ஏராளமான உயிர் சேதத்தை பற்றி வெளிப்படையாக முறையிட்டதற்காக, கைதியாக்கப் பட்டனர். அந்த சீன யுத்தத்தில் எவ்வளவோ தாய்மார்கள் தங்கள் அருமை செல்வந்தர்களையும், இளம், ஸ்திரீகள் தங்கள் புருஷர்களை இழக்க நேரிட்டது. மேலும், வெண்ணெய், பால், முட்டைகள், காய்கறிகள், இறைச்சி இவைகளின் திட்டங்கள் மிகவும் குறைவு ஏற்பட்டது. அதனால் தேசமெங்கும் பழைய சாப்பாடு' திட்டமான "அரிசி, மீன், கடல் பூண்டு" இவைகளைத்தான் உபயோகப் படுத்த வேண்டுமென்று ஜப்பான் அரசாங்கம் அறிவித்தது.

## அறிக்கைகள் வெளியிடப்படவில்லை.

தேசமெங்கும் வெள்ளாமை க்ஷாமம் ஏற்பட்டதைக் குறித்து ஸர்க்கார் அதிகாரிகள் பத்திரிகையில் வெளியிடாமல் ஆங்காங்கு பத்திரிகை நிருபர்கள் தடை செய்யப்பட்டனர். ஸர்க்கார் பூர்வமாய் இல்லாத உத்தியோகஸ்தர் ஒருவரை ஆகாராதிகள் குறைவு ஏற்பட்டதினால் பயப்படவேண்டியதில்லை என்றும், ஜப்பான் அரசாங்கத்தார் ஏராளமாக ஆகாரப் பொருள்களை சேமித்து வைத்திருப்பதாகவும், விளம்பரப்படுத்தும்படி ஏற்பாடாயிற்று.

உணவுக்குறைவு மாத்திரமல்ல; மற்றபடியாக அமெரிக்க விமானங்களால் தங்கள் நகரங்களில் வெடிகுண்டுகள் போடப்பட்டு சேதம் ஏற்படுமோ என்ற

பயம் அதிகம் இருந்துவருகிறது. ஜப்பான் எங்கும் இரவில் விளக்கணைத்து இருட்டாக்குவதில் ஜப்பானியர்கள் வெற்றிகரமாக நடத்திவந்த போதிலும், டோக்கியோ சுற்றிலும் அநேக கால்வாய்கள் சூழப்பட்டிருப்பதினால், அவைகளின் ஒத்தாசையைக்கொண்டே எதிரி விமானிகள் ஜப்பான் தலை நகரத்திற்குள்ளேயும், சக்ரவர்த்தியின் அரண்மனையிலும் வெடிகுண்டு வீசுவதற்கு முடியும். இங்கிலாந்தும், அமெரிக்காவும் ஆங்காங்குள்ள ஜப்பானுக்குச் சொந்தமான நிதிகளை நிறுத்தி வைக்கும்படி உத்தரவுகள் போட்டவுடன், யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யப் போதுமான யுத்தப் பொருள்கள் ஜப்பானுக்கு வராதில்லாமல் போய் விட்டது. இதனால் அவ்வரசாங்கம் விமான எதிர்ப்பு காலங்களில் தற்காப்பு செய்துகொள்ளுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்யமுடியாமல் போய்விட்டது.

டோக்கியோவில் விமானப்படையெடுப்பு காலங்களில் தற்காப்பு செய்து கொள்ளுவதற்கு பூமிக்கடியில் சில அடிகள் ஆழத்தில் செல்லும் வழிகள் இருக்கின்றன. ஆனால் கனமான வெடிகுண்டுகள் விழுந்தால் அவைகள் தகர்ந்து போகும். விமான எதிர்ப்புகளுக்குப் பயந்து அநேகர் நகரத்திலிருந்து கிராமாந்திரங்களுக்குப் பிரயாணப்படுகிறார்கள். சைனியத்தில் விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஜப்பானில் மிகவும் குறைவு. அங்கிருப்பவைகளும் உயர்தரமானவையல்ல. கடல்களுக்கு அப்புறத்திலும் போர் புரிவதற்கு தகுதியான படைகளைத் தயாரிப்பதற்கு அந்நாட்டிலுள்ள பணங்கள் செலவாயின. ஆனால் உள்நாட்டுத் தற்காப்புக்குப் போதுமான வசதிகளை அதனால் செய்துகொள்ள முடியவில்லை, விமான எதிர்ப்பு பீரங்கிகள் அங்கு குறைவாக இருந்தது மட்டுமல்ல. ஆராய்ச்சி விளக்குகளும் அவ்வளவு பிரகாசமில்லை.

சைனா யுத்தத்தில் ஜப்பான் தன்னுடைய விமானப்படையை பெரும்பாலும் இழந்துவிட்டது. இந்தோசைனா, பார்மோஸா, ஹெய்னான் இந்த ஜன நாயகங்களை எதிர்ப்பதற்கு ஆயிரக்கணக்கான விமானங்கள் உபயோகிக்கப்பட்டன. எஞ்சியிருப்பவைகள் சில நூறுகள்தான். அவைகளின் உதவியைக்கொண்டு ஜப்பானியத் தீவுகளையே தற்காப்பு செய்துகொள்ளுவது மிகவும் கடினம். டோக்கியோ நகரத்திலுள்ள வீடுகளும் அதை ஒத்த முக்கிய பட்டணங்களிலும வீடுகள் மரத்தாலும், கடுதாசினாலும் கட்டப்பட்டவை: அதனால் அவை வெகு எளிதில் எரிகுண்டுகளுக்கு இரையாகிவிடும். அதுமட்டுமல்ல. ஜப்பானிய யுத்த தளவாடங்கள் சிற்சில தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத் தொழிற்சாலைகளின் மேன் கூரைகள் பெரும்பாலும் மரத்தால் கட்டப்பட்டவை. அவைகளும் வெகு எளிதில் தீக்கு இரையாகிவிடும்.

## ஜெர்மனியின் வியப்பும், திகிலும்.

ஜெர்மானிய பொருளாதார, யுத்த திட்டங்கள்போடும் நிபுணர்கள் டோக்கியோ நகரத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் ஜப்பான் வசமுள்ள தற்காப்பு வசதிகளைப்பார்த்தும் அதிக திகிலடைந்து, கைகளை முறுக்கிக் கொண்டார்கள். தற்காப்பு செய்துகொள்ளுவதற்கு திட்டங்கள் போடும்படி சொன்னதில், அவர்கள் கைவசமிருக்கும் சாமான்களுக்கு ஒரு ஜாபிதா கொடுக்கும்படி ஜப்பானியர்களைக் கேட்டார்கள். ஆனால் ஜப்பானிய அரசாங்கம் அங்கு இருப்பவைகள் எவ்வளவு என்றுசொல்ல மறுத்துவிட்டது. உண்மையில் அங்கு சாமான்களே கிடையாது. ஜப்பானிய மின்னல் படையெடுப்பு நிறுத்தப்பட்டவுடனும், நாலாபக்கங்களிலிருந்தும் ஏற்கனவே களைத்துப்போன ஜப்பானியர்களின் பேரில் குண்டு வீசப்பட்டவுடனேயே ஜப்பான் வெகு எளிதில் நொடித்துப் போய்விடும் என்று அங்கிருந்து உண்மையான தகவல்கள் ரகசியமாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. மேலும் அமெரிக்கா சார்பில் இருக்கும் ஒரு ஜப்பானியர் சொல்லும் விதமாக "ஜப்பானில் ராணுவ அதிகாரத்தைத் தொலைப்பதற்கு இது தான் ஒரே வழி."



# ஜப்பானின் பொருளாதார நிலை.

## யுத்தப் பொருள்களின் இருப்பு குறைவுதான்.
## பொருளாதார முற்றுகையால் இறுதியில் தோற்கடிக்கப்படும்.
## தயாரிக்கப்பட்ட ஸப்ளைகளின் தாத்காலிகமான சாதகம்.

டோனல் டயர்மென் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது.

இந்த உலகயுத்தத்தில் ஒரு தேசம் புதிதாக சேர்ந்துகொண்டால், "அதன் பொருளாதார பலம் எப்படி இருக்கிறது" என்று ஒவ்வொரு தடவையிலும் ஒரு கேள்வியைக் கேட்க ஆரம்பிக்கிறோம்.

சில வருஷங்களில் சிறிது அளவுகூட உபயோகமில்லாதபடி, வியாபார உற்பத்தி, ஆயுதம் செய்வதற்கு நேரிடும் செலவு இவைகளுக்குள்ள நமக்குத் தேவையான கணக்கு ஒன்றும் பிரசுரிப்பதில்லை. நமது புத்திகூர்மையைக்கொண்டு ஏறக்குறைய சரியாக இருக்கும்படி ஜோஸியம்தான் சொல்லக்கூடும். ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இவைகளுக்கு இயற்கைப் பொருளாதாரங்கள் என்னவென்று நமக்குத் தெரியும். அவைகளின் வியாபாரம் என்னவென்றும், யுத்தத்திற்குத் தயாராவதற்குமுன் என்னென்ன இறக்குமதிகள் செய்யவேண்டியிருந்ததென்றும் நமக்குத் தெரியும். மேலும் அவர்களுக்கு என்ன கைத்தொழில் என்றும், அவர்கள் ஆள் பலம் எவ்வளவு சேகரிக்கக்கூடும் என்றும், இன்னும் இது போன்ற சிலவை நமக்குத்தெரியும்.

இதாலி, ஜெர்மனி இவைகளைக் காட்டிலும் ஜப்பான் விஷயம் நமக்குத் தெளிவாகத் தெரியும், பிரிட்டனைப்போல ஜப்பானும் ஒரு தீவு. அது வெளியிலிருந்து ஸப்ளைகள் வராமலும், முற்றிலும் நேசதேசத்தார்களிடமிருந்து பிரிந்திருக்கும்படி ஜலத்தால் சூழ்ப்பட்டிருக்கிறது.

ஜெர்மனியும், இதாலியும், ஏதாவது ஒரு வகையில் ஐரோப்பா கண்டம் பூராவிலும் இருக்கும் உற்பத்தி, வியாபாரம் இவற்றிலிருந்து பொருள்கள் அடையக்கூடிய நிலைமையில் இருந்துவருகின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று உதவி செய்துகொண்டு, மற்ற தேசங்களின் கைத்தொழிலையும், விவசாயத்தையும் தங்கள் சாதகத்திற்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றன.

## கடல்மார்க்கம் வரும் ஸப்ளைகள்.

ஜப்பானுக்கு அப்படியில்லை, பெரும்பாலும் ஜப்பான் தன்னைத்தானே நம்ப வேண்டியிருக்கிறது. அச்சு நாடுகள் தன்னுடன் சேர்ந்தாலும், சேராவிட்டாலும் கூட தன்வசம் இருப்பவைகளைக் கொண்டே தயாரித்துக்கொண்டு ஜப்பான் தனிமையில் இருந்துவருகிறது.

ஜப்பான் பலத்தைப்பற்றி இப்பொழுது எந்தவிதம் நாம் ஊகிக்கலாம்? கப்பற்படை யுத்தம் எப்படியிருக்கும் என்பது ஊகிப்பதற்கு மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. ஸப்ளைகள் வரும் மார்க்கம் தடையில்லாமல் இருப்பதற்கு கடல் ஆதிக்கத்தைப் பொருத்து இருக்கிறது. பஸிபிக் மஹா சமுத்திரத்தில் ஆகாய விமானச் சண்டை, கப்பற்படை சண்டை இவைகள் முடிவடைந்து பயன் தெரியும் வரை சைனாவிலும், தெற்குக் கடல்களில் பரவியிருக்கும் தீவுகளிலும் உள்ள விளைபொருள்கள் ஜப்பானுக்குக் கிடைக்குமா என்று சொல்ல முடியாது.

ஆனால் என்ன நடந்திருக்கிறது? யுத்தம் ஆரம்பித்துவிட்டதால் இப்பொழுது அநேக பொருள்கள் ஜப்பானுக்குக் கிடைக்காது. ஏனெனில் அந்தப் பொருள்கள் ஜப்பானுக்கு எதிரியாக இருக்கும் தேசங்களிலிருந்தும் எதிரிகள்

பலம் வியாபித்திருக்கும் சமுத்திரத்தைத் தாண்டி அநேக மைல்கள் தூரத்திலிருந்தும் வரவேண்டும். அமெரிக்கா ஐக்கிய அரசாங்கம், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் அல்லது மெக்ஸிகோ இந்த இடங்களிலிருந்து எண்ணெய் வராது. மலேயா, பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்து சண்டைபோட்டு ஜயித்தாலும் அல்லது வெடிகுண்டுகள் போட்டு அழித்து நாசம் செய்யாமல் போனாலும் இரும்பு உலோகம் கிடைக்காது. ஐக்கிய அரசாங்கம் இந்தியா இவற்றிலிருந்து துருப்பிடித்த இரும்புகள் இரும்புத் துண்டுகள் கிடைக்காது. வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்காவிலிருந்து செம்பு, ஈயம், துத்தநாகம், அலுமினியம், மக்னீஷியம், நிக்கல், எஃகு, கலப்பு உலோகம் இவை கிடைக்கமாட்டாது.

## எண்ணெய் எஃகு ஸப்ளைகள்.

ஜப்பான் கைவசமுள்ள பொருள்களிலிருந்தும் சாதாரணமாக நடந்த வர்த்தகத்திலிருந்தும் எவ்வளவு பொருள்கள் அதற்குத் தேவையென்று நாம் ஊகிக்கக் கூடும். தற்சமயத்தில் எண்ணெய் பிரச்னைதான் முக்கியம். ஜப்பானிலும் சாக்ஹின் தீவிலும் சேர்ந்து ஒரு வருஷத்திற்கு சுமாராக 45,00,000 பீப்பாய்கள் பெட்ரோலியம் உற்பத்தியாகிறது. மேலும் நிலக்கரியிலிருந்தும், சாராயத்திலிருந்தும் தயாரிக்கும் எண்ணெய் 25,00,000 பீப்பாய்கள். ஆக மொத்தத்தில் அங்கு ஒரு வருஷத்திற்கு 70,00,000 பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தியாகிறது.

எஃகு உற்பத்தி எப்படி என்று பார்ப்போம். யுத்தத்திற்கு வேண்டிய கைத்தொழில்களில் எஃகு அடிப்படையான உலோகம்; சென்ற சில வருஷங்களாக ஜப்பானில் எஃகு கைத்தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. இப்பொழுது ஒரு வருஷத்துக்குள் 70,00,000 டன்கள் நிறையுள்ள எஃகு சாமான்கள் உற்பத்தி செய்யப்படுவதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதர நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 70,00,000 டன்கள் ரொம்ப அதிகமல்ல. ஏனென்றால் இவ்வெண்ணிக்கை பிரிடனின் உற்பத்தியில் பாதியும், அமெரிக்காவின உற்பத்தியில் பத்தில் ஒருபங்கும்தான் இருக்கும். ஆனால் ஜப்பானின் எஃகு கைத்தொழிலுக்குச் சாதகமாக உற்பத்தி சாதனமில்லை. ஏனென்றால் எஃகு செய்வதற்கு இரும்புக் கட்டிகளும், துருப்பிடித்த இரும்பும் தேவை. அவை அங்கு கிடையாது. 1939-ம் வருஷத்தில் 70,00,000 டன்கள் எஃகு தயாரிப்பதற்கு இப்பொழுது யுத்தம் செய்யும் நாடுகளிலிருந்து 60,00,000 டன்கள் மேற்சொல்லிய சாமான்கள் இறக்குமதி செய்யவேண்டியிருந்தது.

முடிவாக இரும்பு சம்பந்தமில்லாத உலோகம், லேசான உலோகம், நவீன யுத்தக் கருவிகள், விமானங்கள் உற்பத்தி செய்வதற்குத் தேவையாயிருப்பதால், அவைகளைப்பற்றி சற்று கவனிப்போம். சமாதான காலங்களில் ஜப்பானுக்குத் தேவையான செம்பு உலோகத்தில் பாதிமடங்கு அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தில் இருந்து வந்தது. ஜப்பானுக்குத் தேவையான ஈயத்தில் 12-ல் 11 பாகமும், துத்தநாகத்தில் 5-ல் 4 பாகமும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து வந்து கொண்டிருந்தன. அலுமினியம், உலோகமோ அல்லது விளைபொருளோ, விமான உற்பத்திக்கு வேண்டிய மெக்னீஷியம் அல்லது பாக்ஸைட் (bakzite) என்னும் உலோகம் இவைகள் ஜப்பானில் கிடையவே கிடையாது.

## உணவுப்பொருள் நிலைமை.

ஜப்பானில் உணவு பொருள்கள் போதுமான அளவு இருக்கின்றன. ஆனால் யுத்தத்திற்கு ஆள்கள் சேர்க்கும் முயற்சியில் விவசாயிகளின் எண்ணிக்கை குறைவுபட்டே வரும். இது மட்டிலுமல்ல. நிலங்களை உரப்படுத்த அயல் நாடுகளிலிருந்து உரம் ஜப்பான் இறக்குமதி செய்துவந்தது. இப்பொழுது அது கிடைக்கமாட்டாது. சமீபத்தில் அங்கு நெல் வெள்ளாமை செய்யப்பட்டதில் வருமானம் மிகவும் குறைவுபட்டுவிட்டது. ஆனால் இந்தோ சைனாவிலும்,



ஸயாமிலும், நெல் போதுமானபடி விளைவாகிறது. ஜப்பானிலிருந்து அவை 2,000 மைலுக்கு அப்பால் இருக்கின்றன என்று தெரியும். ஆனால் ஜப்பானின் வர்த்தகப்படை உலகத்தில் எல்லாவற்றிற்கும் பெரிதான 55,00,000 டன்கள் நிறையுள்ள கப்பல்கள் கொண்டது. இந்தோ-சைனா, ஸயாம் இவைகளிலிருந்து நெல், ரப்பர், டின் இவைகளையும், சாகாலின் தீவிலிருந்து எண்ணெயும், சைனா தேசத்தில் உள்நாட்டிலிருந்து உணவுப்பொருள்களும், விளைவு பொருள்களும் வர்த்தகக் கப்பற்படை கொண்டுவர அனுமதிக்கப்படுமா என்பது தான் கேள்வி.

எல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்தால் எவ்வித நிலைமை ஏற்படுகிறது என்று பார்ப்போம். நம்முடைய தீவு சாம்ராஜ்யம்போல், ஜப்பானும் ஒரு தீவு சாம்ராஜ்யம்தான். அது வெளியிலிருந்து வரும் ஸப்ளைகளையே முற்றிலும் நம்பி இருக்கிறது. பொருளாதார முற்றுகைக்கு எளிதில் இடங்கொடுக்கக் கூடியது. அதன் கப்பற்படை, வாத்து மார்க்கங்களில் தடையில்லாமல் வைத்துக்கொண்டாலும்கூட ஜப்பானியர்களுக்குத் தேவையான அநேகம் பொருள்கள் அதற்குக் கிடைக்கமாட்டாது. அவ்வித பொருள்கள் அமெரிக்காவிலிருந்து வரவேண்டியிருக்கிறது. அது ஜப்பானுக்கும் பஸிபிக் சமுத்திரத்திற்கும் மறுபக்கத்தில் வெகு தூலையிலிருக்கிறது.

இப்படிக்கிருக்க பொருளாதார யுத்த இலாகா மந்திரி டாக்டர் டால்டன் என்பவர் பொருளாதார நெருக்கடியால் ஜப்பான் தோற்றுவிடக்கூடும் என்று நாம் எதிர்பார்க்கலாகாது என்று ஏன் எச்சரிக்கை செய்தார்? எண்ணெய், எஃகு இன்னும் மற்றவை ஒரு வருஷத்துக்கும், மேலும் நடக்கக்கூடிய யுத்தத்துக்கும் வேண்டியவை ஜப்பானியர்களிடம் இருப்பதாக ஏன் சொன்னார்? அதற்கு பதில் நமக்குத்தெரியவேண்டும். பொருளாதார ஸப்ளைக் குறைவு என்று வெளிப்படையாக நமக்குத் தெரிந்தபோதிலும், உலகத்தில் பலமான யுத்தக் கருவிகளை ஜெர்மனி எந்தவிதத்தில் சேகரித்துக்கொண்டதோ அதேமாதிரி ஜப்பானும் செய்திருக்கும் என்று நாம் அறியவேண்டும்.

## வெகு வருஷங்களாகத் தயாரிப்பு.

ஜப்பானியர்களும் வெகுவருஷங்களாகத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். 1939-வருஷத்தில் அச்சுநாடுகள் யுத்தத்திற்கு ஆரம்பித்த முதலிலிருந்தே இந்த மாதத்தில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புக்கு ஜப்பானியர்கள் தயாரித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். தனக்குத் தேவையான பொருள்களை ஜப்பான் ஏராளமாக சேகரித்துவைத்திருக்கிறது.. யுத்தகாலத்தில் பொதுமக்கள் உபயோகத்தை எவ்வளவு கடினமாக குறைக்கவேண்டுமோ, அம்மாதிரி சமாதான காலத்திலும் பொதுமக்கள் உபயோகத்தை குறைத்திருக்கிறது. அயல் நாட்டு நாணயப் பொருளை யுத்த தளவாடங்கள் சேகரிப்பதற்கு உபயோகப்படுத்திக் கொண்டதே தவிர பொதுமக்களுக்கு வேண்டிய பொருள்கள் இறக்குமதிசெய்ய உபயோகிக்கவில்லை. சைனாவைக் கொள்ளையடித்திருக்கிறது. சீனப் போர்முனையிலுள்ள அதன் படைகளுக்கு ஸப்ளைகள் இல்லாமல்கூட வைத்திருக்கிறது.

இப்பொழுது இன்னும் அடுத்த சில மாதங்களுக்கு ஜப்பான் தாக்கும் பலம் அதிகமாகத்தான் இருக்கும். இன்றைக்கும், நாளைக்கும் நடக்கும் சண்டைகளில் ஜப்பான் பலமாகவும், அபாயகரமாகவும் தாக்கும். ஆனால் அவ்விதம் நிலைத்து நிற்பதற்கு ஏற்கனவே சொன்ன காரணத்தால் ஜப்பான் வர, வர பலஹீனமாகத்தான் இருக்கும். அதன் பொருளிருப்பு இப்பொழுது நடந்துவரும் சீன யுத்தத்தில் குறைவுபட்டுவருகிறது. ஜப்பானுக்கு வெற்றிகள் கிடைத்தாலும் கூட அதன் பொருளிருப்பை அதிகரிக்க முடியாது. அமெரிக்காவைத் தோற்கடிக்காமல் போனால் ஜப்பான் பலமாக இருக்கமுடியாது. நவீன யுத்த முறையில் ஜப்பான் அமெரிக்காவைத் தோற்கடிக்கவே முடியாது. ஆகையால் ஜப்பான் பலமடைய ஒருநாளும் முடியாது.

## ஜப்பானின் பொதுக்ஷேம திட்டத்தின் பொருளாதார சிக்கல்கள்.

(அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும் எதிராக ஜப்பான் யுத்தம் தொடங்கும்போது ஜப்பான் போட்டுள்ள பொதுக்ஷேம திட்டத்தைப் பற்றியும், பொருளாதார நிலையைப்பற்றியும் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது).

**இறக்குமதி நின்றுவிட்டது.** பொது க்ஷேமம் என்ற திட்டத்தை ஜப்பான் ஸ்தாபிக்க நினைக்கிறது. அதற்காக பலாத்காரமாக தொழில் உற்பத்தியை விருத்திசெய்து, உணவு, யுத்த சாமான்களை அதிகம் உண்டுபண்ண நினைக்கிறது. இதுவரை ஜப்பானுடைய விளைபொருள்களைக்கொண்டு ஏற்றுமதிக்கு லாயக்கான சாமான்களையும் இதர நாடுகளுக்குத் தேவையான சாமான்களையும் செய்வதில் ஈடுபடுத்தியிருந்தது. இப்பொழுது ஏற்றுமதி சாமான்கள் குறையவே, இறக்குமதி சாமான்களான பஞ்சு, எண்ணெய், கம்பளி, தொழிற்சாலை உபகரணங்கள், எஃகு சாமான்கள் முதலியனவும் நின்றுவிட்டன. வெடிமருந்துகள் செய்வதற்குப் போதுமான மருந்து சாமான்கள் ஜப்பான் வசமிருந்தாலும் இவைகளை மாத்திரம்கொண்டு குண்டுகளும், பீரங்கிகளும், டாங்கிகளும் செய்துவிட முடியாது.

**தொழில் திண்டாட்டம்.** ஜப்பானில் 700 லக்ஷம் ஜனங்கள் இருப்பதில் 320 லக்ஷம் பேர்கள் வேலையிலீடுபட்டிருக்கின்றனர். மீதியுள்ளோர் குழந்தைகள், வீட்டுவேலை கவனிப்போர், வயது முதிர்ந்தவர்கள். வேலையிலீடுபட்டதில் கால்பாகம் தொழிற்சாலை வேலை செய்கிறவர்கள். அந்தக் கால்பாகத்தில் 20லக்ஷம் பேர்கள் துணி, பஞ்சு, நெசவுவேலை செய்வது. இப்பொழுது இறக்குமதி குறைந்துவிட்டதால் பஞ்சு, பட்டுத் தொழில் குறைந்துவிட்டது. இத்தொழில் மேன்மையாக இருந்ததால்தான் சென்ற 70 வருஷகாலமாக ஜப்பான் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்து வந்தது.

தொழிற்சாலை வேலையிலீடுபட்டதில் மேலும் கால்பாகம் உலோகம், யந்திரம், யுத்த மருந்து சாமான்கள் தயாரித்து வந்தனர். இதனால் தொழிற்சாலையிலிருந்த 40 லக்ஷம் ஜனங்கள் ஜப்பானுடைய மற்ற தொழில்களில் ஈடுபட சாத்தியமாக இருந்தது. ஆனால் 50 லக்ஷம் வேலைக்காரர்கள், முக்கியமாக கடை, லேவாதேவி, வியாபாரம் செய்யவும் வேண்டியிருந்தது.

இதைத் தவிர மீதியுள்ளோர் (20 லக்ஷம்) ஸர்க்கார் வேலையிலீடுபட்டனர். (10 லக்ஷம்) போக்குவரவு; (10 லக்ஷம்) மீன் பிடிப்பது, சுரங்கவேலை; (9 லக்ஷம்) வீட்டுவேலை; (4 லக்ஷம்) சில்லரைத்தொழில் புரிந்துவந்தனர். இதில் குடியானவர்களைச் சேர்க்கவில்லை.

**உணவும் இதர ஜீவாதாரமும்.** 140 லக்ஷம் ஜப்பானியக் குடியானவர்கள்தான் உணவு சாமான்கள் தயாரிக்கின்றனர். பூரா உணவும் இப்பொழுது இவர்களால் தயாரிக்க முடியவில்லை. இதற்கு லாயக்காக தொழிற்சாலைகளிலும் ஏற்பாடுசெய்ய முடியாது. மேலும் சைனாவிலிருந்து அடைந்த லாபங்களை நிலைநிறுத்துக்கொள்ள நெசவுத்தொழிலில் பிராசீனமாக அடைந்துவந்த தந்திரங்களை விட்டுவிட்டு, தொழிலாளிகள், கடைக்காரர்கள், மற்றுமுள்ளவர்களின் நிலைமையை ஜப்பான் குறைத்துக்கொண்டிருக்கிறது. புதிதாகத் தயாரிக்கப்பட்ட யுத்த தளவாட தொழிற்சாலைகளில் வேலைகளைத் துரிதப்படுத்தி வருகிறது. இவைகளில் அடையும் லாபம் மிகவும் குறைவு. ஆகவே பொது க்ஷேம திட்டத்தின்படி ஜப்பானுக்கு ஒருவித லாபமும் கிடைக்காது. கஷ்டம்தான் நிலைத்திருக்கிறது.

மேலும் மஞ்சூரியாவில் கிடைக்கும் பீன்ஸ், எண்ணெய் முதலியவை ஜெர்மனியில் விலையாகாததாலும், ஜப்பானின் வியாபார ஸ்வதந்திரம் கெடுதலையடைந்ததாலும் பொது க்ஷேமதிட்டம் பலிக்கவில்லை. முக்கியமான பெரில்லா



விதை வியாபாரம் 90 சதவிகிதம் சென்ற வருஷமே குறைந்துவிட்டது. மஞ்சூரியாவின் விருத்திக்குக் காரணமானது ஸோயாபீன்ஸ் தான். இப்பொழுது அதற்கு ஏற்றுமதியேயில்லை.

---

## இப்பொழுது ஜப்பானியப்படையெடுப்பால் சென்னைக்கு ஆபத்தில்லை.

## தேசாபிமானமுள்ளவர்கள் பொறுமையுடன் தங்கள் வேலைகளைச் செய்யவேண்டும்.

## சென்னை வாஸிகளுக்கு கவர்னரின் உறுதிமொழியும் வேண்டுகோளும்.

சென்னை கவர்னர் மேன்மை தங்கிய ஸர் ஆர்தர் ஹோப் ஜனவரி 13-ம்வ ரேடியோவில் செய்த பிரசங்கத்தில் ஜப்பான், எதிரிகளின் சார்பாக யுத்தத்தில் இறங்கி, மலேயாவில் பெற்றிருக்கும் ஆரம்ப வெற்றிகளால் மதராஸுக்கு இதுவரை ஏற்பட்டிருப்பதும் இனி ஏற்படக்கூடியதுமான அபாயத்தின் அளவைப் பற்றிச் சொன்னார்.

"தற்சமயம் கடல், நிலப்படைகளைக்கொண்டு ஜப்பான் இந்தியாமீது தீவிரமாகப படையெடுக்குமென்ற அபாயம் இல்லை என்பதை முதலில் சொல்லுவேன்.

"சிங்கப்பூர் பிரிடிஷார் வசமிருக்கும் வரை படையெடுப்பு பிரச்னையே இல்லை. இப்போது அங்கே போர் புரிந்துவரும் நமது படைகளுக்கு உதவி செய்யவும், தக்கசமயத்தில் ஜப்பானியரை எதிர்த்துத் தாக்கவும் பலத்த படைகள் வந்துகொண்டிருக்கின்றன.

### இப்பொழுது ஜப்பானியப் படையெடுப்பில்லை.

"இரண்டாவதாக ரங்கூனில் சமீபத்தில் நடந்த விமானத்தாக்குதல்களைப் போல் இம்மாகாணத்தின்மீது ஏராளமான ஜப்பானிய விமானத் தாக்குதல்கள் நேரிடுமென்ற நெருங்கிய அபாயம் ஒன்றுமில்லை என்று நிச்சயமாகக் கூறுவேன். ரங்கூன் நகரம் தாய்லாந்தின் எல்லைப்புறத்திலிருந்து சுமார் 120-மைல் தூரத்திலும் தாய்லாந்தின் பிரதான நகரமான பாங்காக்கிலிருந்து 400-மைல் தூரத்திலும் இருக்கிறது. மதராஸோவெனில் தாய்லாந்திலிருந்து 1300-மைலுக்கப்பாலிருப்பதால் ஜப்பானிய வெடிகுண்டு விமானங்கள் அங்கிருந்து எளிதில் வரமுடியாது. அவை மதராஸைத் தாக்க முயற்சித்தால் திரும்பிச்செல்ல முடியாது. ஏனென்றால் அவைகளுக்குப் போதுமான பெட்ரோல் இருக்காது.

"ஆகவே தற்போது மதராஸுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து ஒன்றுதான். ஒரு ஜப்பானியக் கொள்ளைக்கப்பல் வங்காளக்குடாக்கடலில் நழுவிவந்து எம்டன் என்ற கப்பல் சென்ற யுத்தத்தில் செய்ததுபோல சென்னைபேரில் ஒன்றிரண்டு குண்டுகளை வீசலாம். அல்லது ஒன்றிரண்டு விமானங்களை வெடிகுண்டு எறிய அனுப்பலாம், இவ்விதத்தாக்குதல்களில் அபாய அறிவிப்பு சங்கு ஊதியவுடன் பாதுகாப்புள்ள இடங்களை அடைந்தால் நகரவாஸிகளுக்கு ஆபத்து இல்லை என்றே சொல்லலாம்.

"ஆகையால் வீண் கலவரத்திற்குக் காரணமே இல்லை. சென்னை நகரத்தில், வேலை உள்ளவர்கள் நகரத்தைவிட்டுச் செல்லவேண்டிய அவசியமுமில்லை. தேசாபிமானமுள்ள ஒவ்வொரு நகரவாஸியும் நாட்டின் யுத்த முயற்சி தடைபடாமலிருக்கும்பொருட்டு தன்வேலையை அமைதியுடன் நடத்திவருவதுதான் கடமை ஆகும். அரசாங்கத்தினரும் பொதுஜனங்களின் உள்நாட்டுத் தற்காப்புக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள்.

"விமானப்படையெடுப்பு தற்காப்புக் கிளைஸ்தாபனங்களும், தீ அணைப்பதற்கும் பிரதம சிகிச்சைகளுக்கும், காயம்பட்டவர்களை அப்புறப்படுத்தவும், வேண்டிய படைகள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சங்கடமான

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தீங்கிழைக்கும் அயோக்கியர்களை அடக்கவும், கொள்ளை, திருடு முதலியவைகளை அடக்கவும் போலீஸ் பலம் தயாராக இருக்கிறது. எவ்வித நெருக்கடியிலும் உணவு, சுகாதாரம், பாதுகாப்பு முதலிய வசதிகள் திட்டப்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் தரை, கடல் ஆகாயம் மூன்றிலும் தேவையான திட்டங்கள் ராணுவ பாகத்திலும் தயாரிக்கப்பட்டு கடற்கரை பாதுகாக்கப்படுகிறது.

## பொய் வதந்திகளைப் பரவச்செய்ய வேண்டாம்.

"ஆகையினால்தான் பொய் வதந்திகளை நீங்கள் நம்பவும்கூடாது. பரப்பவும் கூடாது என்று சொல்லுகிறேன். சமீபத்தில்கூட மதராஸில் பொறுப்புள்ள சில அந்தஸ்துள்ளவர்கள் நம்பத்தகாத சில புரளிக்கதைகளை வழங்கிவந்தனர். சென்னை ஸர்க்கார் கோயம்புத்தூர் போவதாகவும், ஹை கோர்ட்டு மதுரை சென்றுவிட்டதாகவும், ஐரோப்பிய மாதர்களும் குழந்தைகளும் இரவில் சென்னையைவிட்டு ரயிலேறிச் செல்லுவதாகவும் வதந்திகள் வழங்கிவந்தன. இக்கதைகள் எல்லாம் சுத்தப்பொய்யோடு மட்டுமல்லாமல் தீய எண்ணத்துடன் உண்டாக்கப்பட்டவை. கலவரத்தைச் செய்யும் இக்கதைகளைக் கேட்டவுடன், இவைகளைப் பரப்புகிறவரை எங்கு இக்கதையைக் கேட்டார் என்றும் பொறுப்பு உள்ள பத்திரிகைகளில் ஏன் அவை பிரசுரமாகவில்லை என்றும் கேளுங்கள். பீதியையும் குழப்பத்தையும் உண்டுபண்ணுவதற்காகவே பொய் வதந்திகளை பரப்புகிற எவரையாவது கண்டால் அவர்களைப்பற்றி போலீஸாரிடம் தெரிவியுங்கள்.

"சென்னைக்கு அபாயம் அதிகரிக்கும்படி ஏதாவது சம்பவங்கள் நடந்தால் அவைகள் ஸர்க்கார் அறிக்கைகள் மூலம் முன்னமையே வெளியிடப்படும் என்று நிச்சயம் கூறுகிறேன். அவ்வித அறிக்கைகள் உண்மையானவை என்று நம்பி இருக்கலாம்.

"சென்னையில் ஏதோ கொள்ளை நடக்கிறது என்ற கலவரத்தையம் செவி கொடுத்துக் கேட்கவேண்டாம். அப்படி நடந்தவைகள் உண்மையில் சிலவை தான். அத்தகைய சந்தர்ப்பங்களைத் திடமாக அடக்கிவிட ஸர்க்கார் வசம் போதுமான போலீஸ் பலம் இருக்கிறது.

"மேலும் விலைவாசிகள் ஏறாமலிருக்கவும், சரக்குகளை மறைத்துவைத்து அதிக லாபம் அடிப்பதைத் தடுக்கவும் ஏழை மக்கள் அத்யாவசியமான உணவுப் பொருள்களைக் கூடுமான விலைகொடுத்து வாங்கிக்கொள்ளவும் ஸர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இனியும் எடுத்துக்கொள்ளுவார்கள்.

"மற்றும் காரணமில்லாத ஒரு பயம் பரவிவருகிறது. அதாவது சிப்பாய்கள் வந்தால் நகரத்திலுள்ள பெண்களைத் துன்புறுத்துவார்கள் என்று பயப்படுகிறார்கள். எங்கேயோ நடந்த ஓரிரண்டு சம்பவங்களைக்கொண்டு இந்த பயம் ஏற்பட்டிருக்கிறது. இது சிறிதும் ஆதாரமற்றது. இதைப்பற்றி ராணுவ அதிகாரிகள் மிகக் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள். இதுவரை செய்ததுபோலவே இனியும் குற்றம் இழைப்பவர்கள் ராணுவ அதிகாரிகளால் கடுமையாய் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் நான் உறுதியாகக் கூறுகிறேன்."

## விமானத் தாக்குதல் நேர்ந்தால் பத்திரமான இடம் சென்று அமைதியாய் இருப்பது.

"சமீபத்தில் நமக்கு அபாயம் அதிகமில்லை என்பது உண்மை. இருந்தாலும் விமான எதிர்ப்புப் பாதுகாப்புத் திட்டங்களை நீங்கள் எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டுமென்று ஸ்தல அதிகாரிகளிடமிருந்து தெரிந்துகொள்ளுவது நலம். அவ்விதத் தாக்குதல் நேர்ந்தால் 'பத்திரமான இடம் சென்று அமைதியாய் இருக்கவேண்டுமென்று' நான் சொல்லுவேன். இந்த யோசனையைத் தெரிந்து கொண்டிருந்தால் ரங்கூனில் முதல் படையெடுப்பில் ஏற்பட்ட சேதத்தில் பெரும்பாகம் நேர்ந்திருக்காது. நீங்கள் திடசரீரமும் தேசாபிமானமும் கொண்டிருந்தால் விமானப்படையெடுப்புத் தற்காப்புப்படையில் சேருவது நலம்.



அதனால் ஒருவித பொறுப்பு, பயன், தரக்கூடிய வேலை கிடைப்பதோடு உங்கள் நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காக யுத்தகாலத்தில் முடிந்ததைச் செய்தோம் என்ற திருப்தியையும் அடையலாம்.

"இந்த யுத்தத்தில் நமக்கு வெற்றி கடைசியில் கிடைப்பது என்பது நிச்சயம். அவ்வித வெற்றி வருமுன் உழைப்பும், தியாகமும், போராட்டமும் அதிகமாக இருக்கும். நமக்குள் இருக்கும் வித்தியாஸங்களை மறந்து ஒன்றுபட்டு எவ்வளவுக் கெவ்வளவு உழைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக வெற்றி கிட்டும்.

"நேசதேசங்களின் பலம் ஒருவராலும் வெல்ல முடியாதபடி விருத்தியடைந்தே வருகிறது. இதுவரை உலகம் காணாத பேராபத்தை அடியோடு ஒழித்துவிடும் காலத்தை நிச்சயமாக எதிர்பார்க்கலாம்."

---

## இதாலியில் சமயலுக்குறிய சாமான்கள் வைக்குமிடம் சுருங்குகிறது.

## தேசாபிமானமில்லாத உணவு தயாரிப்பவர்கள்.

## அரசாங்கத்தின் உதவியற்ற நிலைமை.

டெய்லி டெலிகிராப் பத்திரிகையில் ஜியார்நேல்-டி-இதாலியப் பத்திரிகைக்கு முந்திய லண்டன் நிருபராக இருந்த C. M. பிரான்ஸெரோ என்பவர் இதாலி உள்நாட்டில் பாஸிஸ்டு கக்ஷியின் செல்வாக்கு எப்படி குறைவுபடுகிறது என்பதை விவரித்திருக்கிறார் ]

இதாலியில் உள்நாட்டில் பொறுக்கமுடியாத மனோவேதனை இருக்கிறது. இதாலியப் பத்திரிகைகளிலுள்ள வெளியீடுகள், விவாதங்கள், யூகித்துச் செல்லுதல், ஆக்ஷேபனைகள்' இவைகளிலிருந்து இப்பொழுது பொதுமக்களின் உணர்ச்சி எப்படி இருக்கிறதென்று பார்த்துச் சொல்லக்கூடும்.

யுத்தத்திற்கு முன்புகூட மற்ற தேசங்களைக் காட்டிலும் உணவு திட்டம் இதாலியில் மிகவும் குறைவு. ஆகையால் அக்டோபர் மாதத்தில் அதிகார வர்க்கத்தில் சேர்ந்த ரிங்கலெஸ்ஸி என்பவர் இதாலியில் உணவு நிலைமை மிகவும் கெட்டு என்று ஒப்புக்கொண்டபொழுது, நிச்சயம் உணவு திட்டம் மிகவும் குறைவுதான்.

### ஏழு அவுன்ஸ் ரொட்டி.

ஒரு நாளைக்கு ஏழு அவுன்ஸ் ரொட்டி ; தொழிலாளிகளுக்கு $10\frac{1}{2}$ அவுன்ஸ் ரொட்டி ;, குறைந்தபக்ஷம் தேவையான வஸ்துவின் திட்டம் இது. இந்த ஏழு அவுன்ஸ் ரொட்டியும் கேவலமான தன்மையுள்ளது. சோளமும், உருளைக் கிழங்கும் அதில் அதிகம். பத்திரிகைகளில் வரும் சமாசாரங்களிலிருந்து அநேக இடங்களில் ரொட்டி செய்பவர்கள் தேசாபிமானம் இல்லாமலிருப்பதை முன்னிட்டு ரொட்டி தின்னமுடியாமல் இருக்கிறதென்பது தெரிகிறது. அந்த தேசத்தின் பெரும்பாகத்தில் முக்கியமான உணவான ஒருவித பலகாரமும் அப்படியே. ஜூன் மாதக் கடைசியில் அந்தப் பலகாரத்தில் சாதாரணவிதமாகத்தான் செய்து விற்கவேண்டும் எனறு உத்தரவிடப்பட்டது. அந்த வகை கருப்பாக இருக்கும். ஜூன் மாதம் 15-ம் தேதியிலிருந்து மாவு, கொழுப்பு, பால் இவற்றைக்கொண்டு செய்யும் பிஸ்கோத்துகள் தடைசெய்யப்பட்டுவிட்டன. மாமிச தினுசுகளில் ஒருவிதம்கூட கிடைக்காது. பெருத்த குழப்பத்திற்குப் பிறகு மே மாதம் 7-ம் தேதி போட்ட உத்தரவில் பொதுமக்களுக்கு மாமிசம் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை காலை நேரங்களில்தான் கிடைக்குமென்றும், இறைச்சியும் அந்த தினங்களில் போஜனசாலைகளில்தான் உட்கொள்ளவேண்டுமென்று கண்டிருக்கிறது.

### ஒரு குடும்பத்திற்கு ½ பைண்டு பால்.

அதிகக் கைத்தொழிலுள்ள ஜனங்கள் நிறைந்த மிலான் நகரம் ஜாக்கிரதையாக பாவிக்கப்படுகிறது. நல்ல உணவு ஸப்ளை செய்யப்படும் நகரங்களில்

அது ஒன்று. இருந்தபோதிலும் ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு ½ பைண்டுக்குக் குறைவாகத்தான் மிலானில் பால் கொடுக்கப்படுகிறது. வெண்ணெயே கிடையாது. காலை 5 மணிக்கும், 10 மணிக்கும் கடைகளில் உணவுப்பொருள்கள் தீர்ந்துபோய்விடுகின்றன.

பிளாரன்ஸில் ரொட்டியில்லாக் கஷ்டம் நேர்ந்திருக்கிறது. ரோமில் மாமிசம் கிடைக்கிறதில்லை. அடிக்கடி வெண்ணெய் திட்டப்படி வாங்கமுடியாது.

அரசாங்கத்தாரால் உணவுப்பொருள்களை ஸப்ளை செய்வதிலோ, பங்கிட்டுக் கொடுப்பதிலோ நிர்வாகம் செய்யமுடியவில்லை என்று வியக்தமாகத் தெரிகிறது. அக்டோபர் மாதத்தில் அரசாங்கத்தில் முக்கியஸ்தரான பெர்ரி-நாஸி என்பவர் உணவுப் பிரச்னையையும் அவற்றின் விலையையும் திட்டப்படுத்தமுடியவில்லை என்றும், ஏழை ஜனங்கள் பஞ்சத்தில் அடிபடும்படி பாஸிஸ்டு கொள்கை கொண்டுபோய்விடுகிறதென்று கூக்குறல் போட்டார்.

ஸெப்டம்பர் மாத முடிவில் விற்கக்கூடிய சாமான்கள் இல்லாதபோதிலும் கடைகள் திறந்திருக்கவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டது.

15 தினங்கள் வரை இந்த நடவடிக்கைகளால் வியாபாரத்தில் மந்தம் ஏற்பட்டது. யுத்தக் கைத்தொழிலுக்கு வேண்டிய விளைபொருள்களிலும், பொது வியாபாரத்திற்குள்ள பொருள்களிலும் மிகவும் செட்டு இருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. வீட்டின் உபயோகத்திற்கு மின்சாரமும், புகையும் மிகவும் குறைக்கப்பட்டுவிட்டது. வீட்டிலாவது, ஆபீஸிலாவது தொழிற்சாலையிலாவது, மின்சாரத்தால் நெருப்பு எரிக்கக்கூடாது. சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கும் மோட்டார்காரர்களுக்குப் பெட்ரோலும், டயரும் கிடையாது. வாடகைக் கார்கள் ஜனஙகளை நாடகசாலைகளுக்காவது, சினிமாக்களுக்காவது ஏற்றிச்செல்லக்கூடாது. இரவு பத்து மணிக்குமேல் வாடகைக்கு விடக்கூடாது. பஸ்ஸுகளும், டிராம்களும் இரவு 10 மணிக்குமேல் ஓடக்கூடாது. நவம்பர் மாதம் 28-ம் தேதியில் பைஸைக்கிள் வண்டி டயர்கள் பொதுமக்களுக்கு விற்கக் கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 78—(5-வது பிரிவு).

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜனவரி ... | 17, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 18, ஞாயிற்றுக்கிழமை | திருவரங்குளம் ... | ,, | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 19, திங்கட்கிழமை ... | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | புத்தாம்பூர் ... | ,, | 6.30 |
| | 20, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | புலியூர் ... | மாலை | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |
| | 21, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | பள்ளிவாசல் ... | மாலை | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 22, வியாழக்கிழமை ... | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| | 23, வெள்ளிக்கிழமை ... | ஆதனூர் ... | ,, | 6.00 |
| | | அரமனைப்பட்டி ... | ,, | 6.30 |



### பிரஸங்கம் 79—(1-வது பிரிவு).

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜனவரி ... | 24, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 25, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| | 26, திங்கட்கிழமை ... | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 27, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | மலம்பட்டி ... | மாலை | 6.00 |
| | | பரம்பூர் ... | ,, | 6.30 |
| | 28, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | | உடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| | 29, வியாழக்கிழமை ... | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 30, வெள்ளிக்கிழமை... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | மேலூர் ... | ,, | 6.30 |

---

## புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் கிளை ஸ்தாபனங்கள்.

சரியான யுத்த சமாசாரங்கள் பரவும்பொருட்டு ஸமஸ்தானத்திலுள்ள கிராமங்களில் புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தபட்டு வருகின்றன.

அவைகளுக்கு நோட்டீஸ்கள், தேச படங்கள் இன்னும் இதர படங்கள், ஆங்கிலத்திலும், தமிழிலும் யுத்த சம்பந்தமான பல பிரசுரங்களும் அனுப்பப்படும்.

முதலாவதாக அடியில்கண்ட இடங்களில் கிளை ஆபீஸ்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

1. ராயவரம்.
2. பனையப்பட்டி.
3. காரம்பக்குடி.
4. ஆலங்குடி.
5. அன்னவாசல்.
6. கீரனூர்.

பொதுஜனங்கள் அங்குள்ளவைகளைப் பூராவாக உபயோகித்து பிரயோஜனமடைவார்கள் என்று நம்புகிறோம்.

# விளம்பரம்.

பிரிடிஷ் அரசாங்கத்தால் தயாரித்த
கியாதிபெற்ற

## "கவசம் பூண்ட மோட்டார்கள்."

என்ற

**யுத்த சம்பந்தமான பிலிம்**

தமிழில்

**புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்**

**ஜனவரி௴ 26-ம் தேதி முதல் 29-ம் தேதி முடிய காண்பிக்கப்படும்.**

**புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் இதை ஜனங்களுக்குச் சிபார்சு செய்கிறது.**

Sri Brihadamba State Press, Pudukkottai, 2,500—17-1-42.

69404

புதுக்கோட்டை ஸமஸ்தான
யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஜனவரி௴ 24௳ [ந. 79

பிரஸங்கம் LXXIX.

## இந்தியாவின் யுத்த முஸ்தீப்பு.

### இரண்டு வருஷங்களில் அபிவிருத்தி.

### வரும்காலத்திலும் அதிக முன்னேற்றமடையும்.

நிச்சயமாக யுத்தமென்பது ஒரு அக்கிரமமான செய்கைதான். இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதமே கிடையாது. இருந்தாலும் இதைவிட அதிகக் கஷ்ட நிலைகளும் உலகில் ஏற்படுகின்றன. உதாரணமாக, பிறர் அமுல்படுத்தும் சட்டதிட்டங்களுக்கு அடங்கியோ, வெறும் ஆட்டு மந்தைகள்போல் கட்டுப்பட்டோ இருப்பதுதான். இந்த சந்தர்ப்பங்களில் பிறரின் அபிப்பிராயப்படிதான் ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களை ஏற்படுத்திக்கொள்ளுவதும், கடவுளைப் பிரார்த்திப்பதும், (கடவுளை ஸ்மரிக்காமலே இருப்பதோ) பயிற்சி பெறுவதும் சம்பவிக்கின்றன. இது ஒரு கஷ்டநிலையல்லவா? முக்கியமாக யுத்தம் நடத்துவதை எடுத்துக்கொண்டால், யுத்தத்திற்குரிய சாமான்களும், உணவுப்பொருள்களும், மற்றும் ஏராளமான இதர வஸ்துக்களும் தேவை. இந்தியாவில் யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் இச்சாமான்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. ஏனென்றால், இந்தியாவின் தற்காப்பைத் தயாரித்தபோது உள்நாட்டுக் காபந்திற்குப் போதுமான அளவுதான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வடமேற்கு எல்லைப்புறப் பிரதேசம் வரைதான் தற்காப்புமுறை பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய சத்துருக்களையோ, நவீன முறைகளில் தயாரிக்கப்பட்ட யந்திரப்படைகளையோ எதிர்த்து நிற்கத் தயாராக இல்லையென்றே சொல்லிவிடலாம். (பிரிடனும் அவ்விதம்தான் இருந்தது. ஆனால், அதைக்கொண்டு நாம் திருப்தியடைந்துவிடககூடாது.)

இருந்தாலும் பிரிடன் இந்த இரண்டு வருஷகாலமாக முன்னேற்றமடைந்து வந்ததுபோலவே இந்தியாவிலும் அபூர்வமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தியாவிற்கும் யுத்தம் நெருங்கும் என்பதை முன்னேயே எதிர்பார்த்து, அதற்காக எல்லாக் கேந்திர ஸ்தானங்களையும் பலப்படுத்தி, ஏடன், பெர்ஸியன்

ருடா, சிங்கப்பூர் முதலியவைகளையே இந்தியத் தற்காப்பிற்கு முக்கிய இடங்களாகக் கருதி அதற்கான திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுவந்தன. பல வருஷங்களாக இருந்துவந்த சந்தர்ப்பங்களை நாம் பிரயோஜனப்படுத்திக் கொள்ளாததால் ஏற்பட்ட குறைகளை ஈடுபடுத்தவேண்டியிருந்தது. ஆகவே சைனியம் நவீன முறைகளில் விருத்திசெய்யப்பட்டது. யந்திர சாதனங்கள் அளிக்கப்பட்டது. இவ்விதமாக பிரகிருதத்தில் இந்தியாவின் ராணுவத்திற்கு உச்சமான நிலை என்பது மிகையாகாது. இவ்விதமாக முன்னேற்றமடைந்ததற்கு பகவானும், ராணுவ அனுபவமுள்ளவர்களும்தான் காரணம்—ஹிட்லரைக் கூட ஒருவிதத்தில் காரணம் என்றே சொல்லலாம்.

ஏனென்றால், 1939-ல் இந்த யுத்தம் ஆரம்பமான சமயத்தில் இந்தியச் சைனியம் லார்டு கிட்சனர் செய்த சீர்திருத்தங்களோடுதான் இருந்தது. ஆனால், இந்த யுத்தம் தொடங்கி எட்டு மாதங்களுக்குள்ளாகவே உபரியாக 53,000 பேர்கள் சேர்க்கப்பட்டனர். இன்னும் அதிகமாக ஆட்களைச் சேர்க்கத் திட்டம் போடப்பட்டு, காரியாம்சையில் சரியாகக் கவனிக்கப்பட்டும்வந்தது. இவ்விதம் சேர்ந்தவர்களைத் தயார் செய்வதற்கு பல பெரும் தடைகள் இருந்தன. புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு, பயிற்சி கொடுப்பதற்குத் தகுந்த அனுபவமுள்ள உபாத்தியாயர்களைக் கண்டுபிடிப்பது ஒரு அசாத்தியமான காரியமாயிற்று. இருந்தாலும் முதல் வருஷ முடிவில் 1,00,000 பேர்கள் தயாரிக்கப்பட்டனர். முதலில் போட்டதிட்டபடி 1941 முடிவிற்குள் 5,00,000 பேர்களைத் தயாரித்தால் போதுமென நினைக்கப்பட்டது. ஆனால், பயிற்சி மிகவும் தீவிரமாகக்கொடுக்கப்பட்டதால் ஒரு வருஷத்திற்குள் 10,00,000 பேர்கள் சேர்ந்துவிட்டனர். மாதம் 50,000 வீதம் ரெக்ரூட் செய்யப்படுகிறது. இதில் 2,00,000-பேர்கள் வெளிநாடுகளில் ஏற்கனவேயே சண்டைகளில் ஈடுபட்டு அகண்ட யுத்தரங்கங்களில் முதல்தரமாக சண்டை செய்துவருவதாகக் கேள்விப்படுகிறோம்.

இந்த யுத்த நிமித்தம் சில முதுமையான கொள்கைகளும் சந்தேகங்களும் கைவிடப்பட்டன. உதாரணமாக சைனியத்தில் சில ஜாதியினருக்குத்தான் இடமிருப்பதாயும், மற்றவர்கள் தள்ளுபடி செய்யப்படுவதாயும் நினைத்தது தவறுகிவிட்டது. சைனியத்தில் யாருக்கு வேண்டுமென்றாலும் பிரவேசம் உண்டு. இந்திய உள்நாட்டுப் படையை கோட்டைப் பாதுகாப்பு, உள்நாட்டுத் தற்காப்பு வேலைகளில் ஈடுபடுத்தி சரியான சைனியத்தை வெளிநாட்டிற்கு சண்டைக்கு அனுப்பப்பட்டது. இவர்களுக்கு அதற்கேற்ற லக்ஷியங்கள் அமைக்கப்பட்டன. புதிதாக அமைக்கப்பட்ட சைனியத்தில் டொரியர் என்பதுதான் முக்கியமானது. நமது ராஜதானியிலும் மதராஸ் பிரிவைப் புதுப்பித்து உள்நாட்டுத் தற்காப்புப் படையுடன் அமைக்கப்பட்டதென்பதைப் பார்க்க அதிக சந்தோஷமாக இருக்கிறது.

புதிதாகச் சேர்க்கப்பட்ட ரெக்ரூட்டுகளுக்குப் பயிற்சி கொடுக்க பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு சீக்கிரத்தில் சண்டைக்கு லாயக்காகவும் தயாரிக்கப்பட்டனர். ஆனால் யுத்த சமயமானதால் சமாதான காலங்களைப்போல் சாவகாசமாகப் பயிற்சி கொடுக்கமுடியவில்லை. இந்திய ராணுவக் கல்லூரியில் இதற்குமுன் 200 மாணுக்கர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு வந்ததில் இப்பொழுது 600 மாணுக்கர்களுக்குப் பாடம் கற்பிக்கப்பட்டது. லாஹூரில் ஒரு ஆரம்பக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு ரெக்ரூட்டுகளில் சரீர திடமோ இதர தேர்ச்சியோ இல்லாதவர்களுக்குப் போதுமானபடி பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஸமஸ்தானங்களிலிருந்து வரும் பையன்களுக்காக இந்தூர் ஸமஸ்தானத்திலும் இதுபோலவே ஒரு பள்ளிக்கூடமும் ஆரம்பிக்கப்பட்டது. சமீபத்தில் இங்கு விஜயம் செய்த Lt.-Col. ஹார்வி மூலமாக பொதுமக்களுக்கு சைனியத்தில் சேரவிருக்கும் உத்ஸாகமும், சேர்ந்தபிறகு அவர்களுக்குள்ள பூர்ணமான பயிற்சியும் ஆஸ்தையும் தெரிந்துகொண்டோம்.



மற்றொரு மாறுதல் மிகவும் கவனிக்கத்தக்கது. அதாவது இந்தியர்களுக்கும் மற்ற இனத்தினருக்கும் உள்ள பேதம் பூரா ஒழிக்கப்பட்டது. இந்தியச் சைனியத்தின் எல்லாப்பிரிவுகளிலிருந்தும் உயர்தர ராணுவ வேலைகளுக்கு ஆட்கள் எடுக்கப்படுவார்கள். இந்தியர்களும் பிரிடிஷ் துருப்புகளும் சேர்ந்து பயிற்சி பெற்று சண்டையில் ஈடுபடுவதால் பரஸ்பரம் ஒருவித தகராறுமில்லாமல் திட்டப்படி சண்டை செய்கின்றனர்.

இந்தியச் சைனியத்திற்கு உண்மையாகவே அதிக கீர்த்தி இருக்கிறது. ஏற்கனவே உள்ள லஸ்வாரி, ஸோப்ரான், மாண்டலே முதலிய உள்நாட்டுப் புகழுடன், ஆர்மென்டைர்ஸ், லாபாஸ்ஸி, பெஸ்டுபெர்டு, வெர்டுன், எகிப்து, இராக் முதலிய வெளிநாட்டுச் சண்டைகளிலும் கீர்த்திவாய்ந்திருக்கிறது. மேலும் பார்டியா, பெங்காஸி, ஸிடிபரானி, கெரென், டாமாஸ்கஸ் முதலிய சண்டைகளிலும் முதல்தரமாக வெற்றிபெற்றிருக்கின்றன. சரித்திரத்தில் நிலைத்திருக்கக் கூடிய இன்னும் அதிகமான வெற்றிகளை அவர்கள் இந்த யுத்தம் முடிவதற்குள்ளும் பெறுவார்களென்பதில் சந்தேகமேயில்லை.

மற்றவர்களைக் காட்டிலும் இந்தியச் சிப்பாய்களுக்கு தைரியமும், விசுவாஸமும் அதிகம். இந்தியர்களுக்குள்ள வீரத்தனமும், தியாக புத்தியும் சரித்திர மூலமாக நமக்குத் தெரியும். ஆர்க்காட்டு முற்றுகையின்போது ஸப்ளை சாமான்கள் குறைந்ததும், மதராஸ் சிப்பாய்கள் தாங்கள் வெறும் கஞ்சியையே குடித்துக்கொண்டு கூட இருக்கும் பிரிடிஷ் சிப்பாய்களுக்கு, அரிசி முதலிய தானியங்களைக் கொடுத்து உதவினார்கள். இது ஸர் பிலிப் ஸிட்னி என்பவர் தான் அவஸ்தைப்படும்போது பக்கத்தில் கிடக்கும் சிப்பாய்களுக்குத் தண்ணீரைக் கொடுத்து உதவியதாகச் சொல்லுவதைக் காட்டிலும் மேலானது. இப்பொழுதும் இந்தியர்கள் போர்க்களத்திலும் மரணத்தை லக்ஷியம் செய்யாது சண்டை செய்கிறார்கள். சமீபத்தில் நான் ஸிம்லாவிற்குச் சென்றபோது யுத்த விஷயங்களை அறிந்த ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது இந்தியச் சிப்பாய்கள் இறப்பதைப்பற்றிக் கொஞ்சமும் சிந்திக்காமல் சண்டை செய்வது பிரிடிஷ் ஆபீஸர்களுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது என்றார். பல்லைக் கடித்துக் கொண்டு எப்படியாவது செத்தால் போதுமென்று நினைத்து அவர்கள் அப்படிச் செய்யவில்லை. ஆனால், இறப்பது என்பது சகஜமாக உயிரை விடுவதுதான். இதைப்பற்றிக் கவலையே வேண்டியதில்லையென்றே அவர்கள் நினைக்கிறார்கள். இவ்விதம் அவர் சொன்னது அதிகத் திருப்தியை அளித்தாலும் வேறொன்றும் சொல்லமாட்டாமல் “அது ஆச்சரியமல்லவா?” என்றேன். “இல்லவே இல்லை. பல வருஷங்களாகக் கற்றுவந்த வேதாந்தத்தின் பயனாகும்” என்று அவர் உரைத்தார்.

இவ்விதம் அவர் கூறியதுதான் சரியான உண்மை. பகவத் கீதையின் தத்துவம் அவர்கள் ரத்தத்தில் ஊன்றிப்போயிருக்கிறது. பகவத் கீதையில் இறத்தலைப்பற்றி விசாரம்செய்து இறத்தல் என்பது யாது? “இச்சரீரத்திலிருந்து உயிர் மற்றொரு சரீரத்தை அடைவது”; அதுகூட இல்லை, பழைய வஸ்திரத்தை எடுத்துவிட்டு வேறு வஸ்திரத்தை அணிந்துகொள்ளுவதற்குச் சமமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**கப்பற்படை.** இங்கிலாந்திலுள்ள ஒரு கப்பல் கல்லூரியின் சுவற்றில் “கப்பற்படையால் செய்ய முடியாதது ஒன்றுமே இல்லை” என்று எழுதப்பட்டிருக்கிறது. இது உண்மைதான். பிரிடிஷ் சரித்திரத்தைப் பார்த்தால் இச்சொல் உண்மையென்றே ஊர்ஜிதமாகத் தெரியும். ஆனால், இந்தியக் கப்பற்படையும், இம்மாதிரியான கௌரவத்தைக் கூடிய சீக்கிரத்தில் அடையுமென்றே தைரியமாகச் சொல்லலாம். இதுவரை இந்தியக் கப்பற்படையைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. அது அதிகச் சிறியதானதால், அது செய்யும் உதவியும் மறைவாகவேதானிருக்கும். இனிமேல்

அது விருத்தியடைந்துவிடும். 1612-ம் வருஷத்திலிருந்து இந்தியக் கப்பற் படைக்கு நிச்சயமான கீர்த்தி இருக்கிறதென்பதே சிலருக்குத் தெரியாது. 187 முதல் தனியாகவே இந்தியக் கப்பல் இலாகா இருக்கிறது. சென்ற யுத்தத்தின் பின்னர் இந்தியக் கப்பற்படையை அபிவிருத்தி செய்வதற்கான பிரச்னைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. லார்டு ராலின்ஸன் கமிட்டி இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்து சில சீர்திருத்தங்களையும் சிபார்சு செய்தது. ஆனால் 1934-ம் வருஷம் வரை நடவடிக்கைகள் ஒன்றும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவ் வருஷத்தில்தான் தேவையான சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்தியக் கப்பற் படை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த யுத்தம் ஆரம்பிக்கும்வரையிலும் இந்தியக் கப்பற்படையை சில இடங்களின் தற்காப்பிற்காகவே அமைக்கப்பட்டும் இருந்தது. ஆனால் 1939 முதல் விசேஷமான அலுவல்களில் அக்கறை எடுத்துக் கொண்டுவருகிறது. அதில் வேலைசெய்ய ஏராளமான ஆட்கள் சேர்க்கப்பட்டனர் புதிதாகக் கப்பல்களும் கட்டப்பட்டன. கடல்களைக் காவல்புரிவது, எதிரி நீர் மூழ்கிகளைத் தடுப்பது, முதலிய தீவிர வேலைகளைச் செய்து ஏடன், பெர்ஷியன் குடா வரையிலும் ஈடுபட்டுவருகின்றன. முஸோலினியின் அபிஸீனிய சாம் ராஜ்யம் அழிவதற்கு இந்தியக் கப்பற்படை அதிகமாக உதவிற்று. மஸஸாவா துறைமுகத்தில் முதல் முதலாக இந்தியக் கப்பல்தான் பிரவேசித்தது. இதைப் போல, எட்டியுள்ள கடல்களிலும் இந்தியக் கப்பற்படை மெச்சத் தகுந்த விதமாக நடந்துகொண்டதற்கு மற்றும் சில உதாரணங்கள் இருக்கின்றன 1941 மார்ச்சு மாதத்தில், பெர்பாராவை மறுபடி ஆக்கிரமிப்பதற்கு உதவி செய்தன. "நேத்ரவதி" "பார்வதி" என்ற இரண்டு கப்பல்கள் பிரிடிஷ் ஸோமாலிலாந்தைப் பிடிப்பதற்கு உதவின. எரிட்ரியச் சண்டையிலும் விசேஷ மாக ஈடுபட்டன. "கிளைவ்" என்ற கப்பல் இதில் அதிகப் பெயர் வாங் கிற்று. இக்கப்பலில் ஒரு புதுக்கோட்டை வாஸியும் இருந்து சண்டை செய்து பிறகு உயிரை இழந்தான். இரான் சண்டையின்போது இந்தியக் கப்பற் படையின் உதவியைக்கொண்டுதான் துருப்புகளுக்கு சாமான்கள் அனுப்ப பட்டன. அபடன், பண்டர் ஷா பூர் முதலியவைகளையும் பிடிக்க சண்டை செய் தது. முக்கியமாக அச்சமயத்தில் "லீலாவதி" "லாரன்ஸ்" என்ற கப்பல்கள் ஈடுபட்டன.

இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் சேதம் மிகக்குறைவு என்பதைக்கொண்டே இந்தியக் கப்பற்படையிலுள்ள மாலுமிகளின் தேர்ச்சி, ஆஸ்தை, கடல் பிரயாணத்தில் ஊக்கம் முதலியவைகளை நிச்சயம் செய்துவிடலாம். இதுவரை இவர்கள் தைரியமாக நின்று சண்டைகளைச் செய்திருப்பதால், இனிமேலும் அதிக நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் உபயோகமாக இருப்பார்கள் என்பதும் நிச்சயம்.

யுத்தம் ஆரம்பமானது முதல் அதிக வேகமாகவே அபிவிருத்தியடைந்து வருகிறது. கடற்கரைக்காவலுக்காக வேகமாகச் செல்லும் மோட்டார் படகு களும், இதர கப்பல்களும் இந்தியத் தளங்களிலேயே கட்டப்படுகின்றன. உதா ரணமாக "திருவாங்கூர்" "பரோடா" என்ற கப்பல்கள் கட்டப்பட்டன. அது போன்ற சில யுத்தக் கப்பல்களும் இப்பொழுதும் கட்டப்பட்டுவருகின்றன. புதிதாக கொச்சியிலும், விசாகப்பட்டணத்திலும் கப்பல் தளங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இங்கிருந்தும் மதராஸ், கராச்சி, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களிலிருந்தும் எதிரி நீர்மூழ்கிகளைத் தடுப்பது, சுரங்கவெடிகளை அகற்றுவது முதலிய காரியங்கள் செய்யப்படுகின்றன.

இந்தியக் கப்பற்படைக்கு விசேஷமாகப் புதிய ஆட்களைப் பிடிப்பதால் அவர் களுக்கு பயிற்சி ஸ்தலங்களும் அவசியமாகிவிட்டது. 1940-ம் வருஷத்திலேயே கராச்சிக்கு அருகில் மனோராவில் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பமாயிற்று. தரையில் சில பயிற்சி பெற்று பிறகு தைரியம் வரும்வரை கப்பல்களிலும் பயிற்சி



கொடுக்கப்படுகிறது. பீரங்கி உபயோகம், செய்கை காட்டுவது முதலியவைகளுக்காகவும் பள்ளிக்கூடங்கள் புதிதாக ஏற்பட்டன. இவைகள் மூலம் சைனியத்தின் அங்கங்களில் ஆயிரக்கணக்காக இஞ்ஜினியர்களும், கப்பலோட்டிகளும், இடிகுண்டுக் கப்பல் உபயோகிக்கிறவர்களும் குமாஸ்தாக்களும் பயிற்சி அடைந்து கப்பல் தளங்களில் நேரில் ஆஜராகி உடனேயே கப்பலில் சேர்ந்துவிடுகின்றனர்.

யுத்தத்தில் வியாபாரக் கப்பல்களும் ஈடுபட்டிருக்கின்றன. ஏனென்றால் யுத்தத்திற்காக இறக்குமதி சாமான்கள் அதிகமாவதால் அவைகளைத் தூக்கிக் கொண்டு கொஞ்சமும் சேதமன்னியில் இந்தியக் கப்பல்கள் சேர்ந்திருக்கின்றன. இதனால் இந்தியத் துறைமுகங்களையும் காபந்து செய்ய வேண்டி வந்தது. இந்தத் துறைமுகங்களில் புதிய முறைகளால், காந்த சுரங்கவெடிகள் கப்பல்களில் தாக்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இப்புதிய முறையால் கப்பல்களுக்கு சேதமேற்படாமல் செய்ய முடியும். இதற்குத் தேவையான விசேஷ கம்பிகளை இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிறது. 1941-ம் மாரிகாலத்திற்கு முன்னமேயே இந்திய தளங்களில் 263 கப்பல்களுக்கு இந்த ஏற்பாடு செய்யப் பட்டது. 168 கப்பல்களில் தற்காப்பிற்காக யுத்த சாமான்களும், கடல் சுரங்கங்களை அகற்றக்கூடிய கருவியை 106 கப்பல்களுக்கும் வைக்கப்பட்டது. மேலும் இந்தியர்களடங்கிய ஒரு ஸ்தாபனமும் அமைக்க அனுமதிக்கப்பட்டு விசாகப்பட்டணத்திற்கு அருகில் கப்பல் கட்டும் வசதிகளுடன் ஸிந்தியா கப்பல் கம்பெனிக்குக் ஒரு இடம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இங்கிருந்து இவ் வருஷத்தில் ஒரு கப்பலை முதலில் மிதக்கவிட முடியுமென்றும் சொல்லுகிறார்கள்.

**விமான பலம்.** நான் ஏற்கனவே சொன்னபிரகாரம், தற்காப்பு முறைகளை ஒருங்குபடுத்துவதற்குள் ஒரு தலைமுறையாகிவிட்டது. மற்ற நாடுகள் மிகவும் கண்ணியமான போக்கில் யுத்தம் புரிவதில் தேர்ச்சியடைந்திருக்கின்றன. இந்தியாவிலோ யுத்தத்தின் நானாவித முறைகளிலும் சண்டை பயிலுவதற்கு திடீரென்று ஆரம்பமாயிருக்கிறது. இந்தியர்கள் எல்லாத் துறைகளிலும் முயற்சி எடுத்துக்கொள்ளுகிறார்கள். இந்தியச் சைனியம் ராணுவ முறையில் படையெடுக்கச் செய்வதற்கும், நீந்துவதற்கும், விமானங்களில் ஏறி பறப்பதற்கும் ஒரே தடவையில் இவையாவும் கற்றுக்கொண்டு வருகிறது.

1940-ம் வருஷத்தில் இந்தியாவில் விமான உற்பத்திக்கு ஆரம்பமாயிற்று. ஒவ்வொன்றும் மூன்று தடவைகள் பறந்து செல்லக்கூடிய 4 விமானப்பகுதிகள் 1942-ம் வருஷம் மார்ச்சு மாதத்திற்குள் தயார் செய்வதற்கு முதலில் ஏற்பாடா யிற்று. அதற்குப் போதுமான அளவு விமானங்களும், தேர்ச்சிபெற்ற போத னாசாரியர்களும் மிகவும் குறைபட்டதினால் மேற்சொல்லியபடி முன்னேற்றமடை வதற்கு முடியவில்லை. இந்தக் கஷ்டங்கள் எல்லாம் நிவர்த்தியாகிவிட்டன. வெகு சீக்கிரத்தில் நமக்கு 10 விமானப்பகுதிகள் தயாராகிவிடும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. 1940-ம் வருஷத்தில் 24 இந்திய விமானிகள் பிரிடனுக்கு பிரிடிஷ் விமானப்படையில் வேலைக்கு அனுப்பப்பட்டார்கள். யுத்தம் ஆரம்பித்ததுதான் தாமஸம், உடனே விமானிகளாக பயிற்சிபெறவும், தரை போதகாசிரியர்களாகத் தயாராகவும் அநேகர் முன்வந்தனர். அதில் போட்டியும் ஏற்பட்டது. யுத்தத் திற்காக இந்திய ரிஸர்வ் விமானப்படை ஒன்று தயாராகிறது இப்பொழுது லாகூர், அம்பாலா, பீகம்பெட், ஜோட்பூர் முதலிய இடங்களில் விமானப் பயிற்சி சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கு புதிதான ஆட்களைச் சேர்த்து விமானத்தி லிருந்து கீழுள்ள சாமான்களைக் குறி பார்ப்பதற்குவேண்டிய கணக்குகள், விமானங்களில் ஏறிச்செல்வது, விமான யந்திரங்களைப் பழுதுபார்ப்பது, முதலியவைகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. விமானங்களில் செல்வதற்கு வேண்டிய மார்க்கங்கள் லாகூரில் கற்றுக்கொடுக்கப்படுகிறது. மேலும் புதிதாய் சேர்ந்த விமானிகளுக்கு அரசாங்கத்துக் குறிய நிர்வாகம், சட்டம், யுத்த

முஸ்தீப்பு இவைகளைப்பற்றியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. கடைசியில் அவர்களுக்கு விமானங்களில் ஏறி பழகுவதற்கு அம்பாலாவிலுள்ள உயர்தர விமானப் பயிற்சிசாலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தியாவில் விமான உற்பத்தி விஷயமாக இப்பொழுதுதான் ஆரம்பமாயிற்று. 1941-ம் வருஷத்தில் பெங்களூரில் பைடர் விமானம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த வருஷ முடிவிற்குள் ஒரு நாளைக்கு ஒரு விமானமாக உற்பத்தி செய்வதற்கு அந்த தொழிற்சாலையில் ஏற்பாடாயிருக்கிறது. விமானங்களுக்கும் உபயோகப்படும் முதல்தரமான சாராயத்தை இந்தியாவிலிருந்தே தயார் படுத்த உதவி தொழிற்சாலைகள் சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படும்.

**யுத்த தளவாடங்களும் அவைகளை ஸப்ளை செய்வதும்.** இந்தியாவில் யுத்த தளவாட உற்பத்தி சாலைகள் மிகவும் குறைவு. ஆனால் இப்பொழுது இங்கு பீரங்கிகள், குண்டுகள், ஏராளமாக உற்பத்தியாகின்றன. மேலும் பெரிய பீரங்கிகள், சட்டி பீரங்கிகள், யந்திர பீரங்கிகள், பீரங்கிகள் ஏற்றிச்செல்லும் இரும்பு வண்டிகள் முதலியவைகள் தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன. யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் எவ்வளவு பீரங்கிகள் உற்பத்திசெய்ய முடிந்ததோ அதைவிட எட்டுமடங்கு அதிகமாக இப்பொழுது தயாரிக்கப்படுகிறது. சாதாரண காலங்களில் உள்ளதைவிட 24 மடங்கு அதிகமாக குண்டுகளும் செய்யப்படுகின்றன. அதே மாதிரியாக முன்னைவிட கைத்துப்பாக்கிகள், லேசான யந்திர பீரங்கிகள் இவைகள் ஐந்துமடங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகளைத்தவிர சிறிய ஆயுதங்கள், வெடிமருந்து ஒரு மாதத்திற்கு அநேக லக்ஷம் பவுண்டு நிறையளவு தயாராகிறது.

மோட்டார் தயாரிக்கும் தொழிற்சாலை வெகுதீவிரமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது. பீரங்கிகள் ஏற்றிச்செல்லும் வண்டிகளைத்தவிர பாக்கி ராணுவங்களை ஏற்றிச்செல்லும் வண்டிகளுக்கு வேண்டிய சாமான்கள் இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. கவசம் பூண்ட வண்டிகளுக்கு தேவையான மாதிரி நல்ல கனமான இரும்பு கவசங்கள் டாட்டா இரும்பு, எஃகு தொழிற்சாலையில் தயாராகின்றன. அதனால் மற்ற தேசங்களில் கவசம் பூண்டவண்டிகள் உற்பத்தி செய்வதைவிட இந்தியர்கள் இந்தியத் தொழிற்சாலைகளில் அதிக நேர்த்தியாக தயாரிக்கின்றனர் என்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். மேலும் டாட்டா தொழிற்சாலையில் விமானத்தின் ஒவ்வொருபாகத்தையும் தனித்தனியே உற்பத்தி செய்ய தனித்தொழிற்சாலை ஒன்று ஏற்பாடாகியிருக்கிறது. அதற்கு தகுதியான எஃகு தகடுகள் அந்த தொழிற்சாலையில் உற்பத்தியாகின்றன.

மேலும் இந்தியாவில் ஏராளமான யந்திர சாமான்கள், மின்சார சாமான்கள் தயாராகின்றன. அவைகளில் ட்ரான்ஸ்பார்மர் (Transformer) லோ டென்ஷன் இன்ஸுலேடர் (Low Tension Insulator) முதலிய யந்திர சாமான்கள் ஏராளமாகத் தயாரிக்கப்படுகின்றன.

ஆடைகள், கூடாரங்கள், கம்பளங்கள், சேணங்கள் இன்னும் போர் வீரர்களுக்குத் தேவையான யுத்த சாமான்கள் இந்தியாவில் ஏராளமாகத் தயார் செய்யப்படுகின்றன. அவ்வளவைப்போல் இதுவரையிலும் தயாரிக்கவேயில்லை. 1941-ம் வருஷத்திலிருந்து சாமான்களை வைக்க பெட்டிகள், வெடிமருந்துப் பெட்டிகள், ரயில் வண்டிக்கு வேண்டிய விட்டங்கள், இன்னும் தேவையான இதர மரசாமான்கள், சுமார் 5,00,000 டன்கள் நிறையுள்ளவை தயாரிக்கப்பட்டன. யுத்த ஆரம்பத்திற்கு முன்னால் போரில் ஈடுபட்டிருக்கும் சைனியங்களுக்காக நாம் 25 சதவிகிதம வைத்தியத்திற்கு வேண்டிய சாமான்கள் தயாரித்து வந்தோம். இப்பொழுது சுமார் 60 சதவிகிதம் தயாராகிறது.



மேற்சொல்லியதிலிருந்து இந்தியாவின் கைத்தொழில்கள் வரவர பிரமாதமாக அபிவிருத்தியடைந்து வருகிறது. இவ்வித கைத்தொழில்கள் ஆரம்பகாலத்தில் சிதறுண்டு மிகவும் க்ஷீணித்திருந்தன. இப்பொழுது இந்தத்துறைகளில் அதிகமாக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இந்தியா, பிரிடன், ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, தென் ஆபிரிக்கா இன்னும் பல தேசங்களிலிருந்து பல பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு கிழக்கு பாகத்திய ஸப்ளை சங்கம் (Eastern Group Supply Council) என்று பெயர். இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் இச்சங்கம்தான் முக்கிய காரணம். இச்சங்கம் சர்வதேச ஐக்கிய இயக்கத்திலேயே ஒரு பாடத்தைக் கற்பித்து யுத்தத்திற்குப் பின்னும் இருக்கும்படி செய்திருக்கிறது. "யுத்தம் யாவருக்கும் கெடுதலை விளைவித்தாலும், யுத்தத்திலிருந்து சிலருக்கு நன்மை ஏற்படும்". இந்த யுத்தமதான் இந்தியாவில் தொழிற்சாலை வேலைகளை அதிகப்படுத்த உதவி செய்கிறது என்றே சொல்லலாம். அதற்கு முக்கியமாக வேண்டிய எல்லாப் பொருள்களையும் இங்கேயே தயாரிக்க வேண்டிய சாதனங்கள் ஏற்பட்டுவிடும். இப்பொழுது நடந்துவரும் விதமாக கைத்தொழில்கள் அதிக சீக்கிரமாக அபிவிருத்தியடைவதால் சமூகத்தில் பிரகிருதம் காணப்படும் ஏற்றக் குறைவுகள் மறையும். வாழ்க்கையிலேயே இந்தியருக்குப் புதிதான தோற்றமும், சப்பந்தமும் ஏற்படும். பெவின் மந்திரியின் விருப்பப்படி இந்தியாவிலிருந்து பயிற்சி பெறச் சென்ற இந்தியப் பையன்கள் இவ்விஷயத்தை அனுபவத்திற்குக் கொண்டுவந்து விட்டனர்.

இப்பொழுது நாம் யுத்தத்தில் ஈடுபட்டு இரண்டு வருஷங்கள் ஆகின்றன. அநேக தடவைகளில் இந்தியாவுக்கு பயமும், பீதியும் ஏற்பட்டன; அவைகளை எல்லாம் மனவுறுதியுடன் நிராகரித்து தைரியமாக நம் வீரர்கள் போர் செய்தார்கள். தர்மத்திற்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட்டு தங்களுடைய போர் அதர்மத்தை ஒழிப்பதற்காகத்தான் என்றும் முடிவில் வெற்றி கிடைக்கும் என்றும் முழு நம்பிக்கையுடன் யுத்தம் புரிகிறார்கள். இதுவரையில் எவ்வளவோ சேதங்கள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. அந்த நஷ்டங்கள் யாவும் ஈடுசெய்யப்பட்டன. எப்படியிருந்தாலும் இனிமேல் தலைக்கிளப்ப முடியாதபடி யாதொரு ராணுவத் தோல்வியும் ஏற்பட்டுவிடவில்லை. இதற்கு மாறாக எதிரி போட்ட திட்டங்கள் யாவும் நிலைகுலைய அடிக்கப்பட்டு, அவன் தந்திரங்கள் யாவும் பயனற்றுப் போய்விட்டன. இப்பொழுது சிற்சில சண்டைகளில் அவன் வெற்றியடைவது போல் தோன்றினாலும், இந்த யுத்த முடிவில் அவனுக்கு ஒரு பெருந்தோல்வி ஏற்பட்டுவிடும் என்றே சொல்லவேண்டும். இந்த யுத்தம் ஆரம்பித்து இரண்டு வருஷத்திற்குப் பிறகு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமையிலிருந்து மேற்சொல்லிய முடிவு நிச்சயமாக ஏற்பட்டுவிடும் என்று திண்ணமாகச் சொல்லலாம். ஜப்பானியர்கள் முன்னேறிவருவதால் இப்பொழுது நாம் மலேயாவில் ரொம்பவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறது வாஸ்தவம்தான். ஆனால் ஜப்பான் முன்னேறினாலும் வெகு எளிதில் தடுக்கப்பட்டுவிடும். இன்னும் கொஞ்சகாலத்திற்கெல்லாம் மேற்கே எவ்விதம் ருஷ்யாவில் பிரமாதமாய் யுத்தம் புரிந்த ஜெர்மானியர்கள் இப்பொழுது விரட்டியடிக்கப்பட்டு வந்த வழியே திரும்பவும் துரத்தியடிக்கப்படுகிறார்களோ, அதேமாதிரி இந்த கிழக்கு பாகத்திலும் ஜப்பானியர்கள் மீண்டும் தங்கள் நாட்டிற்குத் திரும்பவும் விரட்டியடிக்கப்படுவார்கள் என்பது திண்ணம். தென் ஆபிரிக்காவைச் சார்ந்த ஒரு பெண் ஆசிரியரின் மொழிகளை மிஸ்ட்டர் விக்ஹாம் ஸ்டீட் என்பவர் சமீபத்தில் மேல்கோளாக கொடுத்தவிதமாக "சென்ற காலத்தைப்பற்றி அனுபவம் வரும் காலத்திற்கு ஒரு உதவியாகும்." அதுபோலவே வருங்காலத்தைப்பற்றி அவர் சொல்லும்போது "முயற்சியையும், பலனையும் அடைவதற்கான மார்க்கத்தை நாம் பின்பற்றியிருப்பதாயும், அவ்வித லக்ஷியங்களை அடைந்தபிறகு இனி நாம் பின் நோக்கவேண்டியதில்லை என்றும், ஆனால் எந்தெந்த சந்தர்ப்பங்களில் மனிதவர்க்கம் ஸ்வதந்திரத்தை அடைந்தது என்பதைக் காணவே பின் நோக்கிப்பார்த்தால் போதுமென்றும்" சொன்னார்.

# வார யுத்தச் செய்திகள்.

**17—1—42-லிருந்து 24—1—42-வரை.**

**ருஷ்யா.**—ருஷ்யாவில் பிரிடிஷ் ஸ்தானிகராயிருந்த ஸர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் தனது வேலையை சமீபத்தில் விட்டுச்செல்லும் போது சொன்னவிதமாக "முன்னேறித்தாக்குவதை ஜெர்மானியர் விட்டுவிட்டனர்" "தற்காப்புச் சண்டை" செய்வதாக ஹிட்லர் சொல்லுவது பின்னோக்கி ஓடுவதுதான். மாரிகாலமும் கடுமையாக இருப்பதாக அவனே சொல்லிவருகிறான். படைத்தலைமையை அவன் வகிக்க ஆரம்பித்ததுமுதல் 8 இடங்களில் ஜெர்மன் சேனை அலைக்கப்பட்டிருக் கிறது. கோடைகாலத்தில் ஜெர்மானியர் தாக்கி முன்சென்றதுபோலவே, ருஷ்யர் கள் கடும் மாரிகாலத்தில் ஜூதக்கு எதிர்ப்புகள் செய்து ஜெர்மானியரை விரட்டி வருகின்றனர். இதற்கு பலகாரணங்கள் இருக்கின்றன. (1) போர்முனைக்கு கொண்டுவரப்படும் ருஷ்யச் சைனியங்கள் புதிதாக இருக்கின்றன. ஜெர்மன் சைனியம் ஏற்கனவே சண்டை செய்து ஓய்ந்து தளர்ந்துவிட்டன. (2) ருஷ்யர் களின் ஏற்பாடு மேலானதாக இருக்கிறது. (3) போக்குவரவு சாமான்களை எடுத்து வர யந்திரங்களுக்குப் பதிலாக ருஷ்யக் குதிரைப்படை உபயோகமாக இருக்கிறது. (4) ஏற்கனவே பழுதுபட்ட இருப்புப்பாதைகளை எதிரிகள் பின்வாங்கப்போன உடனேயே சாமர்த்தியமுள்ள ருஷ்ய இஞ்ஜினியர்கள் செப்பனிட்டு விடு கின்றனர்.

சமீபத்தில் போலந்தில் நடந்தவைகளைப் பார்த்தாலே ஜெர்மன் சைனியங் கள்படும் அவஸ்தை தெரியவரும். போலந்து ஒரு பெரும் ஆஸ்பத்திரிபோல் ஆகி விட்டது. போலீஷ்காரர்களின் உதவிக்கு அமெரிக்க செஞ்சிலுவை கோஷ்டி யால் அனுப்பிக்கப்பட்ட மருந்து சாமான்களை ஜெர்மானியர் கொள்ளையடித்து தங்கள் இடங்களுக்குக் கொண்டுபோய்விட்டனர்.

20 ஜெர்மன் சேனைத் தலைவர்களுக்கு அதிகமாகவே நோயடைந்தோ, அல்லது இறந்தோ விட்டனர். இது ஒரு ஆச்சரியமாகவே காணப்படுகிறது. ஏனெனில் ஜெர்மன் படைகளும் பின்வாங்கிக்கொண்டே போகும்போது சேனைத் தலைவர்களும் ஒவ்வொருவனுகக் காலியாவது விசேஷம்தான். குடேரியன் என்ப வனுக்கு கபவாத ஜ்வரத்திற்காக வைத்தியம் நடக்கிறது. ஹிருதய ஆசயத்தில் ஏதோ தொந்திரவிற்காக பிராவிட்ஸ் சிகிச்சை செய்யப்படுகிறான். வலிப்பு நோயால் ரீஷினௌ இறந்தான். தன் வீட்டிலேயே பாக் கைதி செய்யப் பட்டான். கீலீஸ்ட் என்பவனைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. இவனை ஒரு விதமாகத் தீர்த்திருப்பார்கள்.

பூராப் போர்முனையிலும் ருஷ்யர்களின் குறுக்கு எதிர்ப்புகள் பலிதமாகி வருகின்றன. வெளிப்புறங்களிலிருந்து லெனின்கிராட்டிற்கு ஸப்ளையும் யுத்தச் சாமான்களும் சுலபமாகவே போகின்றன. மொஜெய்ஸ்க் ருஷ்யர் வசமான பிறகு மாஸ்கோவிற்கு ஒருவித பயமும் இல்லை. மொஜெய்ஸ்க்கில் கடும் யுத்தம் நடந்த பிறகே ருஷ்யர்கள் பிடித்துக்கொண்டனர். இதற்கு 13 மைல் தென்கிழக்கில் உள்ள வரீயியா என்ற பட்டணம் வரையிலும் ருஷ்யர்கள் முன்னேறியிருக்கின்றனர். கார்கவில் எதிரி தற்காப்பு அலைக்கப்பட்டு, அஸாவ் கடலில் இருக்கும் டாகன் ராக் பட்டணத்தின் சமீபத்தில் வந்துவிட்டனர். கிரிமியாவில் மறுபடியும் தியடோஸியாவை ருஷ்யர்கள் பிடித்தனர். சேலக்கும் பிடிபட்டு பெரிகாப்பை நோக்கி வருகின்றனர்.

மொஜெய்ஸ்க் ருஷ்யர் வசமானது ஜெர்மானியருக்கு ஒரு பெரும் தோல்வி தான். இருந்தாலும் டைம்ஸ் பத்திரிகை சொல்லும் விதமாக மாஸ்கோ முனையே ஜெர்மானியருக்கு பாதகமாகி விட்டது என்று சொல்லமுடியாது. ஆனால் வரும் சிலவாரங்களில் ருஷ்யா மாரிகாலத்தை பயன் படுத்திக்கொண்டு எதிரிகளைப்பூரா எதிர்த்துப் போராடுவார்கள்.



**லிபியா.**—இவ்வாரம் ஞாயிற்றுக்கிழமை ஹல்பாயா நமது வசமாகிவிட்டது. அங்கிருந்த ஜெர்மன் அதிகாரியான பாக் என்பவனுடன் 5,526 கைதிகள் பிடி பட்டனர். ஹல்பாயா வசமானதால் ஸிரெனைகா பூராவும் நமது வசப்பட்டதோடு ஜெர்மானியர் பிரமாதமானவர்கள் என்ற கதையும் போய்விட்டது. ஸிடி எல் பரானியிலிருந்து நமக்கு மேற்கே போகவும் சுலபமாக பாதை திறக்கப்பட்டது.

சண்டை வேண்டாமென்று நினைத்தே ரோமல் ஸிர்ட்டிகுடாவை நோக்கி பின்வாங்கி வருகிறான். சாம்ராஜ்யப்படைகள் துரத்துகின்றன. ஸிஸிலி தீவிலுள்ள கடானியா, கமிஸோ, ஸிராகூஸ் முதலிய தளங்கள் விமானமூலம் தாக்கப்பட்டன.

இதுவரை யுத்தம் ஆரம்பித்ததுமுதல் மால்டாவில் 1,300 தடவை எதிரி விமானத் தாக்குதல்கள் நடந்ததில் டிஸம்பர் முதல் 300 படையெடுப்புகள் செய்யப்பட்டன.

**தூரக்கிழக்கு.**—இப்பிரதேசத்திலிருந்து வரும் செய்திகள் அதிருப்திகரமாகவே இருக்கின்றன. தென் பர்மாவில் டவாய் என்னும் இடம் எதிரி வசமாகிவிட்டது. இதில் தகரம், துங்கிஸ்தன் சுரங்கங்களும் துறைமுகமும், விமான தளமும் இருக் கின்றன. இப்போது எதிரி வசமாகிவிட்டன. ஸயாம் படைகளும், ஜப்பானியப் படைகளும் பாலன் என்ற இடத்தில் பர்மா எல்லையைத் தாண்டி மாயாவாடி— கவ்கரக் ரஸ்தாவில் சண்டை செய்கின்றன. இது மோல்மீனுக்குப்போகும் பாதை. இப்பிரதேசத்தில் சண்டைசெய்ய முடியாத போனுலும் அதிகமாக சைனியங்களைச் சேமித்துக்கொள்ள முடியும். பாலானில் ஸயாம் துருப்புகள் அவஸ்தைப் படுவதாகப் பிரஸ்தாபம்.

இப்படி இருந்தாலும் (1) பர்மா ரஸ்தாவில் அமெரிக்க விமானப்படை 100 ஜப்பானிய விமானங்களை நாசம் செய்துவிட்டன. (2) மெஷாட்டிலுள்ள தாய்விமான நிலயத்தை பிரிடிஷ் விமானப்படை தாக்கியது.

**மலேயாவில்.**—கெக்ரி ஸெம்பிளான் என்ற இடத்தில் ஆஸ்திரேலியத் துருப்பு கள் ஜப்பானியருடன் கைகலந்து 800 முதல் 1,000 வரையிலுள்ள ஜப்பானியரைக் கொன்றனர். மூவார் நதியின் மேற்குக் கரையில் நிலைத்துக்கொண்டு ஜப்பானியர் பெரும் சண்டைக்குத் தயார் செய்கின்றனர். இந்த இடத்தைத் தற்காப்புசெய்ய பிரிடிஷ், அமெரிக்க, இந்தியத் துருப்புகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன, நமது படைகள் பலமாக எதிர்த்து வருவதாகவே அறிவிக்கப்படுகிறது. (1) விமான எண்ணிக்கை சமமாகிவிட்டது; ஜெர்களுஸ், மூவார், கோலாலம்பூர் பேரில் பிரிடிஷ் விமானப்படை தாக்கிவருகிறது; சுங்கி-படானியிலுள்ள ஜப்பானிய விமான நிலயத்தை அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின. (2) மூவாரை ஆஸ்தி ரேலியர் பலப்படுத்தியிருக்கின்றனர்; எதிரிக்குப் பின்புறமாக சீனர்கள் மறைந்து தாக்குகின்றனர்; ஜோஹோரில் செய்யும் எதிரி முஸ்திப்பு தடுக்கப்படுகிறது. (3) கடலில் ஜப்பானியர் தற்போது பழமையான கப்பல்களையே உபயோ கித்துவருகின்றனர். ஜப்பானியக் கப்பற்படையின் பெரும் பாகத்தை மறைத்து வைத்துக்கொண்டு பிரிடிஷ், அமெரிக்கக் கப்பற்படையுடன் சண்டை நேரும் போது உபயோகப்படுத்த நினைத்திருக்கின்றனர். டோகியோவிற்கு அருகிலேயே மூன்று ஜப்பானிய சாமான் கப்பல்களை அமெரிக்க நீர்மூழ்கிகள் மூழ்கடித்து விட்டன. மேலும் மலாக்காவிற்கு சமீபமாக மூன்று 30,000 டன் யுத்தக் கப்பல்கள் வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. இவை பிரிடிஷ், அல்லது அமெரிக்கக் கப்பல்களாக இருக்கலாம்.

**டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளில்.**—(மொலுகஸ்) அம்பாய்னு, (தெற்கு போர்னியோ) பாலிக்பாபன், (சுமத்ரா) மெடாரா, ஸபாங் இடங்களை எதிரி தாக்கியிருக்கிறான். அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் (வடகிழக்கு ஸெலிபிஸ்) மெனடோவைத் தாக்கின. இது இப்பொழுது ஜப்பானியர் வசமிருக்கிறது. மினஹாஸாவையும் பிடித்துக்கொண்டனர்.

**பிலிப்பைன்ஸிலிருந்து**—நற்செய்திகள் வருகின்றன. படான் தீபகர்ப்பத்தில் மாக் ஆர்தர் ஜப்பானியரைத் தடுத்துவருகிறான். ஜாலோவிற்கு அருகில் ஜப்பானிய சஞ்சாரியையும், எண்ணெய்க் கப்பலையும் அமெரிக்க பாம்பர் விமானங்கள் மூழ்கடித்திருக்கின்றன.

**சைனுவில்.**—(மங்கோலியா) ஹோனுன், ஹீபா, ஸுயியான் என்ற இடங்களில் ஜப்பானியா தோற்றுவருகின்றனர். ஷாங்ஷாவிலிருந்து ஜப்பானியத் துருப்புகள் தோற்று யோஷௌவை நோக்கி ஓடுகின்றன. தென் சைனுவில் காண்டனிலிருந்து வடக்கே சென்ற ஜப்பானியப் படைகள் யாங்ட்ஸி நதியை நோக்கி ஓடுகின்றன. குவான்டங்கிற்கு அருகில் இரண்டு ஜப்பானிய மோட்டார் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

**பஸிபிக்கில்.**—ஜப்பானியர் வசமிருக்கும் கரோலைன் தீவை பிரிடிஷ் விமானப் படை தாக்கியது. (நியூகினி) ராபௌல், மடாங்க், ஸலமாவு, புலோலோ என்ற இடங்களில் ஜப்பானியர் குண்டுகள் போட்டனர். கவிங் (பிஸ்மார்க் ஆர்ச்பிலாகோ) விலும் குண்டு போடப்பட்டது. ஆஸ்திரேலிய விமான மந்திரி A. S. டிராக்போர்டு, நியூகினியில் ஜப்பானியர் இறங்குவது ஆஸ்திரேலியாவை பயமுறுத்தவே தான் என்பதை எதிர்பார்த்திருக்கிறார்.

ஜப்பானிய நீர்மூழ்கிகளும் ஹட்டாராஸ் முனையிலிருந்து நியூ பவுண்ட்லாந்து வரையிலும் சஞ்சரித்து வருகின்றன. நியூபவுண்ட்லாந்திற்கு அருகிலேயே ஜெர்மன் யூ-படகுகளும் பார்க்கப்பட்டன.

**ஸர்வ அமெரிக்க** நாடுகளின் ஒற்றுமைக் கூட்டம் ரயோடிஜெனிரோவில் மீண்டும் கூடிற்று. இதில் 21 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்தனர். இவைகளில் 10 நாடுகள் ஏற்கனவேயே அச்சு நாடுகளுடன் சண்டையிட்டு வருகின்றன. மேலும் மூன்று நாடுகள் ஷில்லியுடன் செப்பு உப்பு (Copper Nitrate) விலைத் தகராறினால் அரசியல் சம்பந்தத்தை விட்டுவிட்டது. மிகவும் தயக்கமாக இருந்த அர்ஜென்டைனு வியாழனுக்குள் முடிவுக்கு வருவதாகச் சொல்லிவிட்டது. இந்நாடுகள் யாவும் அச்சு நாடுகளுடன் சம்பந்தத்தை முறிக்க சம்மதித்ததாகவே தகவல் கிடைத்திருக்கிறது. அர்ஜென்டைனு அரசியல் முறையிலும், ஷில்லி சட்டப்படியும் இவ்விதம் செய்தன.

**மிஸ்ட்டர் சர்ச்சில்** பிளாரிடாவில் ஒருவாரம் ரஜா அனுபவித்துவிட்டு பெர்விக் பறக்கும் படகில் 3,287 மைல் தூரத்தைக்கடந்து பர்முடாவிலிருந்து பிலைமௌத்திற்கு 17-ம் தேதி வந்து சேர்ந்தார். மணிக்கு 200 மைல் வேகத்தில் தானும் ஓட்டிவந்தார். வரும்போது மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தி நல்வரவு மொழிகளை அனுப்பினார்.

**அரசியல்.**—ஜெனரல் அலன் பிளமிங் ஹார்ட்லி இந்தியாவின் சேனைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்க்கு பதிலாக ஸர் ஆர்ச்பால்டு கிளார்க்கர்; பிரிடிஷ் ஸ்தானீகராக ருஷ்யாவில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**எதிரிக்கு ஏரான விமான நஷ்டம்.**—கீழே குறிக்கப்பட்டிருக்கும் கணக்கைப் பார்த்தால், பிரிடிஷ் விமானப் படையும், அச்சுநாட்டு படையும் சண்டை



போட்ட சமயத்தில் நேர்ந்த நஷ்டம் தெரியவரும். ஆனால் அச்சுநாட்டுக் கப்பல் நஷ்டம் கொடுக்கப்படவில்லை. 439 விமான ஓட்டிகள் காப்பாற்றப்பட்டனர்:—

| | அச்சு நாடுகள். | பிரிடிஷ் விமானப்படை. |
|---|---|---|
| 1. பிரிடன் பேரிலும் சுற்றிலும் | 3,692 | 887 |
| 2. ஐரோப்பாவில் ... | 940 | 1,875 |
| 3. மத்தியக்கிழக்கில் ... | 2,875 | 711 |
| 4. மேற்குப்போர்முனையில் ... | 957 | 379 |
| 5. ஸ்காண்டிநேவியாவில் ... | 56 | 55 |
| 6. கடலில் ... ... | 39 | 54 |
| 7. ருஷ்யாவில் ... ... | 15 | 1 |
| மொத்தம் ... | 8,574 | 3,962 |

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **12—1—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | மோட்டார் படைகள்.—எல் அகீலா (El Agheila)வுக்குக் கிழக்கில். | | | |
| | லக்ஷியங்கள்.—ஹால்பாயா (Halfaya). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | | |
| | விமான நிலயம்.—கடேனியா (Catania). | | 4 விமானங்கள். | |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | | 1 விமானம். | 4 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **மலேயா (Malaya).** | | | |
| | ரயில்வே கட்டடங்களும், இன்னும் இதர கட்டடங்களும்.—ஸிங்கோரா (Singora). | தீக்கள் கிளம்பின. | | |
| | **தாய்லாந்து (Thailand).** | | | |
| | விமான நிலயம்.—ஸயாம் (Siam). | 2 விமானங்கள் சேதமாயின. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 13—1—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya). | | | |
| | விரோதி ஸ்தானங்கள், கோட்டைகள் மோட்டார் போக்குவரத்து.—ஹால்பாயா (Halfaya). | | | |
| | விரோதி மோட்டார் வண்டிகளின் கூட்டம்.—எல் அகிலாவு (El Agheila)க்கு மேற்கில். | தீக்களும், வெடிகளும் கிளம்பின. | | |
| | துறைமுகப் பிரதேசம், ரயில்வே ஸ்டேஷன்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | விரோதி ஸப்ளைக் கப்பல்.—மத்திய தரைக்கடலுக்கு மத்தியில். | மூழ்கடிக்கப் பட்டது. | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 22 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | தாய்லாந்து (Thailand). | | | |
| | ஜப்பானியர்கள் ஆக்கிரமித்த பாகங்கள்.—தாய்லாந்தி (Thailand)ல். | | | |
| | நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (Netherlands East Indies). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.—டாரகனு (Tarakan)க்கு அருகாமையில். | | | |
| 14—1—42. (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள், கப்பல் தங்குமிடங்கள்.—ஹாம்பர்க் (Hamburg) எம்டன் (Emden). | | | |
| | லிபியா (Libya). | | | |
| | பீரங்கிகளை நிறுத்தும் மேடைகள், வெடிமருந்து கிடங்குகள், போக்குவரத்து மோட்டார் வண்டிகள்.—ஹால்பாயா (Halfaya). | | | |
| | விமானச் சண்டைகள்.—எல் அகிலா (El Agheila) பிரதேசத்தில். | அநேக விமானங்கள் சேதமாயின. | நஷ்டமில்லை. | 2 விமானங்கள். |
| | ராணுவ லக்ஷியங்கள்.—டோப்ருக் (Tobruk) பிரதேசத்தில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 14—1—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | கிழக்குப்போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 3 விமானங்கள். | 14 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | ஸ்வெட்டன்ஹாம் துறைமுகம்.—(Swettenham). | | | |
| | தாய்லாந்து (Thailand). | | | |
| | வேவு பார்த்தல்.—விரோதிக்குச் சொந்தமான பிரதேசங்களில். | | | |
| 15—1—42. (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பல்தளம்—எம்டன் (Emden). | | | |
| | லிபியா (Libya). | | | |
| | பீரங்கிகள் ஏற்றிவைக்கும் மேடைகள், போக்குவரத்து மோட்டார்கள்.—ஹால்பாயா (Halfaya). | | | |
| | விமானப்போர்.—டொப்ருக் (Tobruk) பெங்காஸி (Benghazi). | | | 2 விமானங்கள். |
| | ராணுவ லக்ஷியங்கள்.—எல் அகிலா (El Agheila), ஸர்டி (Sirte), ட்ரிபோலி (Tripoli). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | ஒரு நாசகாரியால் துணைபுரியப்பட்ட விரோதிக்குச் சொந்தமான சாமான் கப்பல் மத்தியதரைக்கடலி (Mediterranean)ன் மத்திய பாகத்தில். | மூழ்கடிக்கப் பட்டது. | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப்போர், விமான நிலயத்திலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 14 விமானங்கள். | 45 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—தாய்லாந்து (Thailand)—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—தாய்லாந்து (Thailand.) | | | |
| | பஸிபிக் (Pacific). | | | |
| | கரோலின் (Caroline) தீவுகள் | | 1 விமானம். | |
| 16—1—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிட்டிஷ் விமானங்களால்.) | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **16—1—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **லிபியா (Libya).** | | | |
| விரோதி ஸ்தானங்கள், பீரங்கிகள் ஏற்றி வைக்தும் மேடைகள்.—எல் அகீலா (El Agheila) பிரதேசத்தில். | | | |
| விமானப்போர்.—டோப்ருக் (Tobruk) | | 1 விமானம். | |
| **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 29 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| விரோதிகளின் போக்குவரத்து.—கெமாஸ்டாம்பின் (Gemas Tampin) ரஸ்தா. | | | |
| **தாய்லாந்து (Thailand).** | | | |
| விமான நிலயம்.—தாய்லாந்து (Thailand). | | | |
| **17—1—42.** (சனிக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| இரவில்.—கப்பற்படை தளம்—எம்டன் (Emden). கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest.) | | 3 விமானங்கள் | |
| **லிபியா (Libya).** | | | |
| விரோதிக்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள்.—நொபிலியா (Nofilia) வுக்கும், எல் அகீலா (El Agheila) வுக்கும் செல்லும் ரஸ்தாவில். விரோதிக்குச் சொந்தமான போக்குவரத்து மோட்டார் வண்டிகள்.—ஸர்டி (Sirte)க்குக் கிழக்கிலும், மேற்கிலும் செல்லும் ரஸ்தாக்களில். துறைமுகம், ரயில்வே ஸ்டேஷன்.—ட்ரிபோலி (Tripoli). **மத்தியதரைக்கடல் (Mediterranean).** இரண்டு நாஸகாரிகளால் அணைபுரியப்பட்ட ஒரு எண்ணெய்க் கப்பல்.—மத்தியதரைக்கடலி (Mediterranean)ன் மத்தியபாகத்தில். | அநேக வண்டிகள் சேதமாயின. | 1 விமானம். | |
| **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 3 விமானங்கள். | 15 விமானங்கள். |



| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **17—1—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **தூரக்கிழக்கு—பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| ஜப்பானிய ஸ்தானங்கள்.—மனிலாவு (Manila)க்கு வடமேற்கில். | | | |
| **மலேயா (Malaya).** | | | |
| விரோதிகளுக்குப் பின்புறத்தில்.—மூவார் (Muar) பிரதேசத்தில். | | | |
| **18—1—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா (Libya)** | | | |
| விரோதி ஸ்தானங்கள்.—பீரங்கிகள் ஏற்றிவைக்தும் மேடைகள்—எல் அகீலா (El Agheila) பிரதேசத்தில். | | | |
| **ஸிஸிலி (Sicily).** | | | |
| விமான நிலயம்.—கடேனியா (Catania). | | | |
| விமான நிலயம்.—காமிஸோ (Comiso). | | | |
| **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| ஜெர்மன் டாங்கிகள், மோட்டார்கள், வெடிமருந்து கிடங்குகள்.—போர்முனை எங்கும். | 8 டாங்கிகள், 550 மோட்டார்கள், 335 வண்டிகள். | | |
| **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| விமான நிலயம்.—ஸுங்கி படானி (Sungei Patani). **ஸெலிபஸ் (Celebes).** விரோதி பறக்தும் இடம்.—மெனடோ (Menado). | | 2 விமானங்கள். | 9 விமானங்கள். |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|
| **13—1—42.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| பிற்பகல்.—ஓரிடம்—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ஒருவரும் இறக்கவில்லை; ஆனால் சிறிதுசேதம். | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **13—1—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்)—தொடர்ச்சி. | | | |
| | ஒரு கடற்கரைப் பட்டணம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | ... சிறிது சேதம். | 2 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.). | | | |
| | பாலிக் பாபன் (Balic Papan). | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | சிங்கப்பூர் (Singapore) | ... பொதுமக்கள் கொல்லப் பட்டனர். | | |
| **14—1—42.** (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவலில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—பிலிப்பைன்ஸ் (Philippines)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கோட்டைகள்.—காரிஜிடார் (Corrigidor) தீவு. | | 2 விமானங்கள். | |
| | மலேயா (Malaya). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| **15—1—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவு.—வடகிழக்குக் கடற்கரை இங்கிலாந்து (England). | சொற்பச் சேதம். | 1 விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.) | | | |
| | அம்போனியா (Ambonia) மோலுக்காத் தீவுகள். | | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | பஸிபிக் (Pacific). | | | |
| | ரபால் (Rabaul) (நியூகினி). | | | |
| **16—1—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல்—(Mediterranean). | | | |
| | மால்டா—(Malta). | | 1 விமானம். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—1—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | பர்மா (Burma). | | | |
| | ஒரு நகரம் தென் பர்மா (Burma). | | | |
| **17—1—42.** (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவு.—தென்மேற்கு இங்கிலாந்து (England). | | | |
| | ஓரிடம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | ஸெலிபிஸ் (Celebes). | | | |
| | விமான நிலயம்.—மெடாரா (Madara) | | | |
| | துறைமுகம்.—அம்பாய்னு (Amboina) | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow) | ... | 7 விமானங்கள். | |
| **18—1—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவும்.—ஓரிடம்—தென்மேற்கு இங்கிலாந்து (England) | சேதமில்லை. | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow) | | | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மலேயா.—(Malaya). | | | |
| | சிங்கப்பூர்.—(Singapore). | | | |
| | நியூகினி (New Guinea). | | | |
| | ரபால் (Rabaul). | | | |
| **19—1—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவு.—இரண்டு இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (Anglia) | சிலர் கொல்லப் பட்டனர். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா.—(Malta) | | | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பர்மா (Burma). | | | |
| | மோல்மீன் (Moulmein), | | | |

# யுத்தக் குறிப்புகள்.

**மந்திரவாதி.** தேசங்களின் சரித்திரங்களைப் பார்த்தால் பல தலைவர்கள் மாயாவித்தனமான செய்கைகள் செய்தே மேன்மை அடைந்திருக்கிறார்கள் என்று தெரியும். ஹிட்லரும் அப்பேர்ப்பட்டவன்தான். இவனுக்குமுன் சமீபகாலத்தில் ருஷ்யாவில் இருந்தவன் ராஸ்புடின் என்பவன். இப்பேர்ப்பட்டவர்கள் முதன்மையடைவதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் பொது ஜனங்கள் இத்தலைவர்கள் சொல்லுவது யாவற்றையும் நம்பி வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பதுதான். இப்படியேதான் மாந்திரீகன் காண்பிப்பதையெல்லாம் மாயா உலகம் என்று அறியாமல் உண்மை என்று நம்பப்படுகிறது. ராஸ்புடின் என்பவன் ருஷ்யாவில் முன்பு இருந்த அரசாங்கத்தினரையும், பிரபுக்களையும் ஏமாற்றினான். ஹிட்லர், ஜெர்மன் வாலிபர்களுக்கு மந்திரம்போட்டு கைக்குள் போட்டுக்கொண்டான். ஆனால் வெற்றி என்னும் மந்திரக்கோல் இருந்தால்தான் இத்தலைவர்கள் செய்யும் காரியங்கள் பலிக்கும். இப்பொழுது ஹிட்லர் ராணுவத்தின் ஸர்வாதிகாரம் பெற்றும், ஆபிரிக்காவிலும், ருஷ்யாவிலும் தோற்றுவருவதால் இவன் ஜம்பம் இனி சாயாது.

ராணுவத்தின் ஸர்வாதிகாரம்பெற்ற சமயத்தில் ஹிட்லர் பாக்கியிருக்கும் மாரிகாலத்தில் ருஷ்யப் போர்முனையில் நிலைத்துவிடுவதாக சத்தியம் செய்திருக்கிறான். (ஒருக்கால் மற்ற இடங்களில் வெற்றிகளால் ஈடு செய்யலாம் என்று நினைத்தான்போலும்). ஆனால் அவனுடைய புகழே மங்கிவருகிறது. மந்திரக்கோலை மறுபடி மாற்றிக்கொள்ளவேண்டியதுதான். இவனுடைய நோக்கத்தை அனுசரித்துத்தான் யாவரும் இனி ஹிட்லர் என்ன செய்யப்போகிறானோ! என்றும் பேசிக்கொள்ளுகின்றனர். "இவ்விதமாக ஹிட்லர் தந்திரங்களெல்லாம் மாயாவித்தனமாக இருப்பதால், அடுத்தபடியாக என்ன செய்வான் என்று பகுத்தறிவால் நம்மால் காணக்கூடவில்லை."

வி வி வி வி வி வி வி

**அடுத்தபடி என்ன?** இதுவரை ஹிட்லர் செய்திருக்கும் காரியங்களைக் கவனித்தால், பிறர் அடைய முடியாததை அவர் சாதித்திருப்பதாகவே காணப்படும். அதிகத் துணிகரமாக முன்னேறி வெற்றிகளை அடைந்து, ஜெர்மன் பொதுமக்களுடைய வெகுமானத்தையும் பெற்றிருக்கிறான். மற்றும் சில நாடுகளும் இவனைக்கண்டு பயந்துகிடக்கின்றன. இப்படி பயப்படாமல் இருந்தால், இவனுடைய கொள்கைகளை இந்நாடுகள் எதிர்த்திருக்கும். மேலும், ஹிட்லர் என்பவன் பொய்க்கால் குதிரை மாதிரி, இவனை எளிதில் முறியடித்து விடலாமென்ற எண்ணம் வெட்டவெளிச்சமாக யாவருக்கும் ஏற்படுவதற்குள், அடுத்தபடியாக எங்கேயாவது தாக்கி பெறும் வெற்றியடையப் பார்ப்பான். இப்படி ஏதாவது செய்தால்தான் ஜெர்மன் மக்களுக்குத் திருப்தியளிக்கும். ஸர்வசாதாரணமாக பிரிடிஷ்காரர்கள் தனிச் சண்டைகளில் தோற்றாலும் யுத்தத்தின் முடிவான வெற்றியை அடைகிறார்கள். ஜெர்மானியர்களோ தடபுடலாக ஆரம்ப வெற்றிகளையடைந்தாலும் முடிவாகத் தோற்றுத்தான் போவார்கள்!

ஆகவே நான்கு விஷயங்களை ஜெர்மானியர் ஏற்பாடு செய்யலாம். இவை தனியாகவும், சேர்ந்தும் நேரலாம்.

1. உள் நாட்டில் பலர் ஜோஸ்யம் சொல்லுவதுபோல் பிரிடன்மேல் பெரிய படையெடுப்பு ஏற்படலாம்.

2. ஸ்பெயினையும், போர்ச்சுகலையும் பிடித்துக்கொண்டு இதாலியோடு சேர்க்கப்படலாம்.



3. வட ஆபிரிக்காவிலிருக்கும் ஜெர்மனிக்கு பாதகமான நிலையை சரிப்படுத்த பிரெஞ்சுக்காரர்களை அதட்டி பைஸர்டா, ஓரான் முதலிய துறைமுகங்களையும், அவர்கள் கப்பற்படையையும் சரண்படுத்தும்படி செய்யலாம்.

4. மறுபடி காகஸஸ், இரான் இவைகளைப் பிடிக்க பெர்ஸியன்குடா, இந்தியா முதலியவைகளை லக்ஷியங்களாகக் கொள்ளலாம். இவையெல்லாம் ஜெர்மானியர் போட்டுள்ள திட்டங்கள்தான். ஆனால்......

முதலாவதைக்குறித்து பிரிடிஷ்காரர்களுக்கு இவ்விஷயம் நன்றாகத்தெரியும். பிரிடனை ஏமாற்றிப் பிடிக்கமுடியாது. அப்படிப் பிடிப்பதானால் வட கடலிலும், அட்லாண்டிக் துறைமுகங்களிலும் எதிரித் துருப்புக்களை இறக்கவேண்டும். இவ்விதம் சீக்கிரத்தில் செய்யவே முடியாது.

இரண்டாவதாக, ஜெர்மன் படைகள் பிரனீஸ் மலைகளுக்கு அருகில் வந்ததாகவே தெரியவில்லை. ஸ்பெயினின் தலைவனான பிராங்கோவோ, தொழிற்சாலைகள் அதிகம்கொண்ட ஸ்பெயினோ, அங்கிருக்கும் படையினரோ நாஸி சொல்படி நடக்கிறவர்கள் அல்ல.

நான்காவதாக ஜெர்மானியர் அடிமேலடியாக வைத்துக்கொண்டு முன்னேறுவதைத் தடுக்க ருஷ்யர்கள் கிரிமியாவைத் திரும்பப் பிடிக்கப்பார்க்கிறார்கள். ஆகவே இந்த மார்க்கமாக முடியாமல், வேறு வழியாக காகஸஸைப் பிடிக்க ஜெர்மானியர் முயலவேண்டும். ஒருக்கால் துருக்கிமூலமாகச் செல்லலாம். ஆனால் ஆக்கிரமணம் செய்யும் யாவரையும் துருக்கி எதிர்த்துப் போராடும்!

வி வி வி வி வி வி வி

**பாழும் விஷி.** மூன்றாவதான விஷயம் சம்பவிக்க பல ஹேஷ்யங்களிருப்பதால், தனியே பிரஸ்தாபிக்கப்படுகிறது. இவ்விதம் சொல்லுவதற்குச் சாதகமாக இரண்டு மூன்று விஷயங்கள் சம்பவித்திருக்கின்றன.

1. சுமார் ஒருமாத காலமாக மால்டா தீவு விமானமூலம் ஜெர்மானியர்களால் தாக்கப்பட்டுவருகிறது. இத்தீவு பிரிடிஷ் வசமிருப்பது ஜெர்மானியருக்கு பெரும் இடைஞ்சலாக இருக்கிறது.

2. பிரான்ஸில் ஜெர்மானியர்களுக்குச் சாதகமாக இருக்கும் கக்ஷிக்கு புஷியூ என்பவன் தலைமைவகித்து வருகிறான். டார்லான் பிரிடிஷ்காரர்களையும், அமெரிக்கர்களையும் வெறுத்துவருவதோடு, அவன் பிரத்தியேகமாகவே அதிக ஆசையுள்ளவன். நாஸிகளுடன் ஒத்துழைப்பவர்களோடு சேர்ந்துகொண்டால் தனக்கு பிரதான்யம் குறையுமென்றும் நினைத்துவருகிறான். அப்படியிருந்தும் புஷியூவுடனும், டி பிரியானுடனும் உறவுகொண்டாடிவருகிறான். நாஸிகள் சொல்படி நடந்துகொண்டு, பிரெஞ்சுக் கப்பற்படையில் இருந்த 41 பிரெஞ்சுத் தலைவர்களை கலகக்காரர்கள் என்று சொல்லி வேலையிலிருந்து நீக்கிவிட்டான். சமயம் வாய்த்தபோது விஷி பிரெஞ்சுப்படைகளை ஜெர்மானியர் வசம் ஒப்படைக்கவும் தயாராக இருக்கிறான்.

3. பிடேனின் செல்வாக்கும், நடத்தையும் அநேகமாக மங்கிவிட்டதால், வேலையிலிருந்தே போய்விடுவானோ என்ற சந்தேகம் இருக்கிறது. (ஆனால் அவன் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒன்றுதான்). கிரமமாக நாஸிகளுக்கு உட்படுவதை இவன் தடுத்துவந்தாலும் எல்லா ஏற்பாடும் கையெழுத்தாகி இவன் சக்தியை மீறிவிட்டன!

ஆகவே விஷி அரசாங்கக்கூட்டத்திலுள்ளவர்கள், ஜெர்மானியரும், இதாலியரும் கொடுக்கும் லஞ்சங்களுக்கு உட்படாமலிருக்க முடியாது. ஏனென்றால் பஷியவம் லவாலும் சேர்ந்து நடத்தும் பத்திரிகைகளும், பாங்கிகளும், தொழிற்

சாலேகளும் திட்டப்படுத்தப் பட்டிருப்பதைப்பார்த்தால் பிடேனைத்தள்ளி நாஸிகளுக்கு உட்பட்டு விடுமென்றே தோன்றுகிறது.

(குறிப்பு.—இச்சந்தர்ப்பத்திற்கு அனுகுணமாக ஜனவரி 19-ம்தேதி "மெயில்" பேபரில் பிரசுரிக்கப்பட்ட ஸ்டீபன் கிங்ஹால்* என்பவரின் கடிதத்தைப் படிக்கவும்).

வி வி வி வி வி வி வி

**விமான ஒற்றுமையும் மேன்மையும்.** அச்சு நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் விமானங்களின் கணக்கை ரகசியமாக விசாரித்துத் தெரிந்துகொண்டு அமெரிக்க உற்பத்தி அதிகாரிகள் பிரசுரித்திருக்கின்றனர்.

எல்லா விதமான விமான வகையிலும் மாதம் ஜெர்மனியில் உண்டுபண்ணக் கூடியது 2,250, இதாலியில் 600, ஜப்பானில் 850; ஆக 3,700. இத்துடன் ஆக்கிரமித்த நாடுகளில் ஏதோ 300 செய்யப்படுகின்றனவாம்; ஆக 4,000 தான். நேசதேசங்களின் கணக்கு மிகரகசியமானது. இருந்தாலும், பிரிடன், அமெரிக்கா, ருஷ்யத் தொழிற்சாலைகளில் முதல் தரமான விமானங்களே அச்சு நாட்டு மொத்தக் கணக்கைக்காட்டிலும் அதிகமானது. மேலும் ஜப்பானுக்குச் சொந்தமானவைகளையும் இதர அச்சு நாட்டு விமானங்களையும் சேர்த்தால் பிரிடிஷ் விமானப்படையின் தற்போதய எண்ணிக்கை குறைவாகவேதான் இருக்கும். ஆனால் சமீபத்தில் மிஸ்டர் ரூஸ்வெல்டு கொடுத்த உற்பத்திக் கணக்கைப் பார்த்தால் பிரிடன், ருஷ்ய விமானங்களைச் சேர்க்காமலே அமெரிக்க விமானங்கள் மாத்திரம் அச்சுநாட்டு மொத்தத்தைக் காட்டிலும் அதிகமாகிறது.

வி வி வி வி வி வி வி

**சரியான திட்டங்கள்!** ஹிட்லரைப்பற்றி எவ்வளவு தூஷணைகள் செய்தாலும் மனக்கோட்டை கட்டுவதில் இவனுக்கு சமானம் ஒருவரும் ஆக முடியாது. 1941-ம் வருஷத்தில் நடந்தவைகளைப் பார்த்தால், எவ்வளவோ தோல்வி யடைந்தாலும் அச்சு நாடுகள் போட்ட திட்டங்கள் மாத்திரம் பிரமாதமானவைதான்.

அவ்வருஷத்திற்கு ஹிட்லர் போட்ட திட்டம் இப்பொழுதுதான் வெளியே வருகின்றன. பால்கன் நாடுகள் வழியே வெற்றியுடன் செல்லலாமென்றும், துருக்கியை அடக்கிவிடலாமென்றும், லிபியாவில் தான் நிலைத்துக்கொண்டு எகிப்தையும் மத்தியக்கிழக்கு நாடுகளையும் பிடித்து விடலாமென்றும் நினைத்திருந்தான்.

பிறகு ருஷ்யாவை வியாபித்து, டான், கிரிமியா, காகஸஸ் பிரதேசங்களின் இயற்கை வசதிகளைக் கொள்ளையடித்து ஜெர்மன் ராணுவத்தை பலப்படுத்தி விடலாமென்றும் உத்தேசித்திருந்தான்.

அதே சமயத்தில் ஜப்பானையும் யுத்தத்தில் ஈடுபடுத்தி பிரிடனையும் அமெரிக்காவையும் மற்றொரு பாகத்தில் கவனத்தை செலுத்தும்படி செய்து விடவும் யத்தனித்தான்.

இவையாவும் சரியான உத்தேசங்கள் தான்—ஆனால் பாவம், எல்லாம் பலிக்கவில்லை! அவ்விதம் ஜெர்மன் திட்டம் பலிக்காததற்கான காரணங்களைச் சொல்லுகிறோம்.

ருஷ்யாவை நினைத்த சமயத்தில் தாக்க விடாதபடி கிரேக்கர்களும், யூகோஸ்லாவியர்களும் வீரத்தனமாக ஜெர்மானியரை எதிர்த்து நின்று பால்கன் தீபகற்பத்தை பிடிக்க முடியாமல் செய்துவிட்டனர்.

தோற்றுப்போனாலும் பிரிடிஷ்படைகள் கிரீஸிலும், கிரீட்டிலும் தைரியமாக எதிர்த்து நின்று எதிரியைத் தயங்கச் செய்ததால் இராக், இரான், ஸிரியாவில் ஜெர்மன் சூழ்ச்சிகளை அடக்க முடிந்தது.



மூன்றாவதாக ருஷ்யர்கள் ஆச்சரிய மளிக்கும்படி எதிர்த்து நின்று ஜெர்மன் படைகள் ருஷ்யாவில் மாரிகாலத்தில் அவஸ்தைப்படும்படி செய்துவிட்டனர்.

கடைசியாக ஜப்பான், தாக்குதலை கொஞ்சம் தாமதமாக ஆரம்பித்திருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஸ்வப்னம் கலைந்தது.** ஜப்பானியரின் செய்கை தருணம் மீறியது என்று சொல்ல முடியாத போனாலும், ஹிட்லருக்கோ ஜப்பானுக்கோ ஒரு சாதகமும் இல்லை. ஏனென்றால் நேசநாடுகளுக்கு ஒரு கெடுதியும் ஏற்படவில்லை, கவலையும் அதிகம் இல்லை, நேசநாடுகளின் ஏற்பாடுகளுக்குத் தடையும் அதிகம் நேரவில்லை. அச்சு நாடுகள் போட்ட திட்டமே இரண்டு விதமாகப் பிரிந்திருக்கிறது. அதில் ஒன்றான ஜெர்மன் திட்டத்தை 26 நேச நாடுகள் ஒன்று சேர்ந்து இவ்வருஷத்திலேயே முறிப்பதெனத் தீர்மானித்திருக்கின்றன. இதைப்பற்றி ஸர்வதேச வியவகாரங்களை நன்கு அறிந்தவரான மிஸ்டர் விக்காம் ஸ்டீட் உள்ளபடி சமீபத்தில் ஒலிபரப்பினர். "1942-லோ அல்லது 1943-லோ ஜெர்மன் திட்டங்கள் யாவும் அழிக்கப்படும். 1942-லேயே ஜப்பானியரின் உத்தேசங்களும் குலைய ஆரம்பித்துவிடும். அமெரிக்கா, பிரிடன், சைனா, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் யாவும் ஒன்று சேர்ந்து ஜப்பானுக்குத் தகுந்தயாதிரி பிரச்னைகளைக் கையாண்டு ஜப்பானியர் அழியும்படி செய்யப்படும்."

வி வி வி வி வி வி வி

**யுத்த அறிக்கை நிலயங்கள் மீண்டும் ஸ்தாபிக்கப் படுகின்றன.** இச்சமஸ்தான வாசிகளுக்கு யுத்தத்தைப்பற்றி ஏற்படும் உத்ஸாகத்திற்கும் அக்கரைக்கும் தக்கவாறு பல ஸ்தாபனங்கள் இருக்க வேண்டுமென்று நினைத்து புதுக்கோட்டை தர்பாரவர்கள் சுற்றுப் பக்கங்களில் ஆறு கிளை ஆபீஸ்களை ஸ்தாபித்திருக்கின்றனர். அங்கங்கே கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டு பிரஸங்கங்களும் செய்யப்படுகின்றன. அந்த ஆபீஸ்களிலும் யுத்த சம்பந்தமான புஸ்தகங்களும், படங்களும் வைக்கப் பட்டிருக்கின்றன.

சமீபத்தில் ஸமஸ்தானத்திற்கு விஜயம் செய்த ஒரு பிரமுகர் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் ஜனங்கள் இந்நிலைமைகளில்கூட காண்பிக்கும், அக்கரை ஒற்றுமை மிகவும் பாராட்டத்தக்கவை என்றார். மேலும் தினம் நடக்கும் விசேஷ சம்பவங்களை அரசாங்கத்தார் பொதுமக்களுக்குத் தெரிவிக்க அவர்களுடன் கலந்து வருவதே மேலான விஷயமென்றும், அதனால் ஜனங்களுக்கு ராஜ விசுவாஸம் மனப்பூர்வமான உதவி முதலியவை உண்டாகி நம்பிக்கையும் தைரியமும் ஏற்படுமென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

---

## தூரக்கிழக்கிலுள்ள தளகர்த்தர்களைப் பற்றிய சரித்திரம்.
## தளகர்த்தர் வேவலை நாஸிகள் கௌரவிக்கிறார்கள்.
## பர்மாவுக்கு புது உயர்தர ராணுவ உத்தியோகஸ்தர்.
## ஸர் ஹென்றி பௌனல் என்பவரின் விசேஷ அனுபவம்.

லண்டன் "டெய்லி மெயில்" பத்திரிகையின் பத்திராதிபர் ஸிட்னி ஹார்னிப்ளோ சமீபத்தில் பி. பி. ஸி. யில் ஒலிபரப்பியது:—

ஒருவனுக்கு பிரிடிஷ் சைனியத்தில் சேர்ந்து வாழ்நாள் பூராவும் சுத்த போர்வீரனாக இருந்து நல்லமதிப்பும், கீர்த்தியும் பெறவிரும்பினால் கிழக்கில் அநேக வருஷங்கள் சைனியத்தில் தேர்ச்சி பெறவேண்டும். இப்பொழுது ஜப்

பான் புதிய போர்முனை ஒன்று உண்டாக்கியிருப்பதால் நம்முடைய சைனியங்களில் அநேகம் கிழக்குப் பக்கத்தில் ராணுவ தேர்ச்சி அடைந்ததினால் தான் நமக்கு அதிக சாதகமாக இருக்கிறது.

ஜப்பானுடன் இப்பொழுது நடக்கும் சண்டையில் எதை, எதை சமாளிக்க வேண்டியிருக்குமோ அந்த நிலைமையிலேயே ராணுவ வாழ்க்கையில் அநேக வருஷங்கள் நேர்முகமான பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அந்த மூவர்களே இந்தப் புதிய யுத்தத்தில் பிரதான தலைவர்கள்

இப்பொழுது அந்தத் தலைவர்கள் யார், யார் என்று பார்ப்போம். வேவல் பௌனல், ஹட்டன் ஆகிய இந்த மூன்று வீரர்கள் தான்.

வேவலை முதலில் எடுத்துக்கொள்ளுவோம். இந்த யுத்த ஆரம்பகாலத்திலேயே வேவல் தன் சாமர்த்தியத்தைப் பூராவாகவும் காண்பித்துவிட்டார். அதனால் யுத்தப் ரொம்ப மும்மரமாக நடக்கும் போர்முனையில் அவர் தலைமை உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டார். லிபியாவில் முதன் முதலில் பிரிடிஷ் சைனியம் முன்னேறி வந்தது. இவர் அடைந்த மகத்தான வெற்றிகளில் தான் அந்த சமயத்தில் வேறு ஒரு தலைவனும், வேவல் மாதிரி அவ்வளவு தீரச்செயலைக் காண்பித்து மனிதர்களுடைய மனதைக் கவரவில்லை என்றே சொல்லலாம். அந்த சமயத்தில் வேவல் என்பவரை கொண்டாடாதவர் ஒருவருமில்லை. அவர் தன் சாமர்த்தியத்தை நிலைநிறுத்தியிருக்கிறார்.

சென்ற ஜூலை மாதத்தில் அவரைத் திடீரென்று மத்தியக்கிழக்குப் போர்முனையிலிருந்து இந்தியாவிலுள்ள விஷயங்களைக் கவனிப்பதற்கு மாற்றப்பட்டார். அதில் திடீரென்று நமக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. அப்பொழுது சரிதான் இதுவரை அவர் ஐந்து படையெடுப்புகளில் வெற்றியடைந்து வந்திருக்கிறார் இப்பொழுது அவருக்கு ஓய்வு கொடுக்க வேண்டியது அவசியம் தான் என்றும் அவரை மாற்றியதும் தீர்க்காலோசனையின் பேரில் தான் என்றும் நாம் எண்ணி வந்தோம். இப்பொழுது தான் அவரை இங்கு மாற்றியதின் முக்யத்துவம் புலப்படுகிறது.

ஜெனரல் வேவல் என்பவருக்கு இப்பொழுது வயது 58. இதற்குள் யுத்தத்தில் மஹா நிபுணர் என்று பேர் வாங்கிவிட்டார். ஹிட்லரின் தளகர்த்தரான கீடெல் என்பவரே ,அவரை எல்லா தளகர்த்தர்களையும் விட மஹா புத்திமான் என்று சொல்லுகிறார்.

வேவலைப் பார்த்தால் எல்லாக் காரியத்தையும் சாதிக்க வல்லமையுள்ளவராகக் காணப்படுகிறார். அவருடைய இரு உதடுகளும் நெருங்கி அழகு வாய்ந்தவைகள், அவர் கண்கள் மிகவும் கூர்மையானவை; நீண்ட பெரிய மூக்கு, 'காரிய வெற்றியடைந்தவனுக்கு இருப்பதுபோலுள்ள புன்னகை புரியும் ஒருவாய் இவ் லெக்ஷணங்கள் அவர் பெரிய பதவி வகிப்பதைக் குறிக்கிறது. அவர் ஒற்றை மூக்குக் கண்ணாடி மட்டில் அணிந்திருக்கிறார். அதை அவர் வெறும் ஜம்பத்திற்கு மட்டில் அணிந்திருக்கிறார் என்று கருதக்கூடாது. சென்ற யுத்தத்தில் பிரான்ஸில் அவர் யுத்தம் புரியும் பொழுது அவர் ஒரு கண்ணை இழக்க நேரிட்டது. அதனால் தான் அவர் அந்தக் கண்ணுக்கு மட்டில் கண்ணாடி போட்டிருக்கிறார்.

அவர் இருக்கும் இடத்தில் போய் பார்த்தால் உனக்கே ஒரு வித ஆச்சரியம் தோன்றும். அவர் ஷர்ட் மட்டிலும் போட்டுக்கொண்டு வேலை செய்வார். இன்னும் அவர் பேசுவதைக் கேட்கக்கேட்க அதிக ஆனந்தத்தைக் கொடுக்கும். ஏனென்றால் அவர் வெகு அழகாக பேசும் திறமை வாய்ந்தவர். அவருடைய புஸ்தகங்களைப் படித்திருக்கலாம். அவர் புஸ்தகங்கள் எழுதுவதில் முதல்தரமானவர். அவருடைய முக்கிய பிரபல சிநேகிதரான அல்லன்பீ எழுதிய திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த அபூர்வமான கதைகளில் ஒன்றை அவருக்குக் கொடுத்தார்.



## கடும சமபரதாயததைத் தழுவுவதில்லை.

வின்செஸ்டரில் அவர் பள்ளியில் படிக்கும்பொழுது பொம்மை சிப்பாய்களை வைத்துக்கொண்டு விளையாடுவதில் அவருக்கு அதிக ஆசை. முதன் முதலில் அவர் போயர் யுத்தத்தில் கலந்து போர்புரிந்தார். அதிலிருந்து தொடர்ச்சியாய் அநேக பெரிய சம்பவங்கள் நேரிட்டன. அவர் இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தில் சைனியத்தை நடத்திவந்திருக்கிறார். பிறகு பிரான்ஸில் வேலைசெய்தார். அதன் பிறகு காகஸஸிலிருக்கும் ருஷ்யச் சைனியத்திற்கு உதவியாய்ச் சென்ற ராணுவப் பகுதியில் இவர் ஒருவராக அனுப்பப்பட்டார். அதன் பிறகு எகிப்தின் உதவிப்படைப்பகுதியில் சேர்ந்து கொண்டார். அதன் பிறகுதான் இவருக்கு அலன்பியுடன் சிநேகம் ஏற்பட்டது.

சம்பிரதாயப்படி இல்லாமல் தன்னிஷ்டப்படி நடப்பதில், வேவலுக்கு கொஞ்சமும் பயம் கிடையாது. அவருக்கு புதிய அபிப்பிராயங்களில் நம்பிக்கை உண்டு. திருட்டுத்தனமாக அபகரித்தல், சுவரேறிக் குதித்து திருடுதல், குறி பார்த்து சுடுவது ஆகிய இவ்வளவு சாமர்த்தியமும் ஒரு சிப்பாய்க்கு இருக்க வேண்டும் என்பது அவர் அபிப்பிராயம். லாபம் வருமோ வராதோ ஒன்றையும் கவனியாமல் அதிகப் பணத்தை செலவு செய்யும் சூதாடியின் தைரியத்தைப் போல ஒரு சேனைத் தலைவனுக்கு வேண்டும். சாதாரணமாக சாமர்த்தியம் வாய்ந்த ஒரு சிறு தளகர்த்தனும், வயதில் முதுமையான ஒரு பெரிய தளகர்த்தனையும் தோற்கடித்து விடலாம்.

யந்திரப்படையை அவர் முழுமனதுடன் ஆதரித்துவந்தார். பிரிடிஷ் விமானப்படையில் ஒரு உத்தியோகஸ்தர் ஆறுமாத காலமாவது பயிற்சி பெற்றாலொழிய அவருக்கு உயர்ந்த பதவி கொடுக்கக்கூடாது என்பதுதான் அவருடைய அபிப்பிராயம்.

"நாம் இப்பொழுது ரொம்ப தைரியமாக எதிர்த்து நிற்கிறோம். என்ன நடந்தாலும் சரி, நம் தலைவர்கள் இவ்வுலகைவிட்டுப் போய்விடலாம். ஆனால் எப்படியிருந்தாலும் பிரிடிஷ் சாம்ராஜ்யம் ஒரு பொழுதும் அழியாது" என்று அவர் அடிக்கடி சொல்லுகிறார். இதிலிருந்து வேவலின் குணங்கள் நன்றாகத் தெரிகின்றன.

## உப தளகர்த்தர் ஹட்டன்.

இதுவரை இந்தியாவில் ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு தலைமை வகித்த, தாமஸ் J. ஹட்டன் என்பவரை இப்பொழுது அரசியல் விஷயமாக பர்மாவிலுள்ள 'சைனியங்களை நடத்தும் பிரதம தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த யுத்தம் ஆரம்பமானது முதல், இந்தியாவில் சைனிய உத்தியோகஸ்தர்களுடைய கூட்டம் ஒன்று ஏற்பட்டதில் அதில் அதிகப் பேர் போன உத்தியோகஸ்தர்களில் ஒருவராக ஹட்டன் என்பவர் விளங்கினார்.

ஹட்டன் என்பவர் நடுத்தரமான வயதுள்ளவர்தான். இப்பொழுது அவருக்கு வயது 51. 1909-ம் வருஷத்தில் அவர் பிரிடிஷ் பீரங்கிப்படையில் சேர்ந்தார். சென்ற யுத்தத்தில் மூன்று தடவைகளில் காயமடைந்தார். யுத்தத்தில் பெரும் கீர்த்தி பெற்று அதற்காக நல்ல பட்டங்களும், பதக்கங்களும் பெற்றிருக்கிறார்.

சாதாரணமாக ஒரு தளகர்த்தன் போர்க்களத்தில் தன்னுடைய மனைவியுடன் இருப்பது வழக்கமில்லை. ஆனால் தளகர்த்தர் ஹட்டன் மட்டில் தன் மனைவியுடன் இருக்கிறார். அவள் ஸ்காத்லாந்து தேசத்து இளம்பிராயமுள்ள ஒரு டாக்டர். அவர்கள் ஸைபீரியாவில் சந்தித்துக்கொண்டார்கள். அவருடைய மனைவி இன்னும் வைத்தியத்தொழிலை விடாமல் நடத்திவருகிறார். சுமார்

இரண்டு வருஷத்திற்கு முன்புதான் அவர் லண்டனை விட்டு இந்தியாவிலிருக்கும் தன் புருஷனைக் காண்பதற்கு வந்தார். இங்கு ஒரு பெரிய ஆஸ்பத்திரியை நிர்வகிப்பதில் தலைமை ஸ்தானத்தை வகிக்கிறார்.

தளகர்த்தர் ஹட்டன், சென்ற யுத்தத்திற்கும் இப்போதுள்ள யுத்தத்திற்கும் இடையிலுள்ள சமாதான காலத்திற்குள் உத்தியோகத்தில் உயர்வு ஸ்தானங்கள் அடிக்கடி கிடைத்துவந்தன. 1927-ம் வருஷத்தில் அவர் மேஜராக நியமிக்கப்பட்டார். மறுபடியும் 1930-ம் வருஷத்தில் அவர் பெரிய ராணுவ உத்தியோகஸ்தராக உயர்த்தப்பட்டார். 1938 மறுபடியும் அவருக்கு மேஜர் ஜெனரல் பதவியும் கிடைத்தது. இந்த இரண்டு வருஷத்திற்குமுன் முதல், இந்த யுத்தம் ஆரம்பித்த வருஷம்வரையில் அவர் பாலஸ்தீனத்தில் இருந்துவந்தார். சண்டை தொடங்கிய பிற்பாடு இந்தியாவுக்கு வந்துவிட்டார்.

## ஸர் ஹென்ரி பௌனல்.

தூரக்கிழக்கில் நமது புது பிரதம தளகர்த்தர் (Commander-in-chief) ஸர் ஹென்ரி பௌனல் என்பவரைப்பற்றித் தெரிந்துகொள்ளுவோம். அவர் வெகு நாட்களுக்கு முந்தியே ஜப்பானில் இருந்திருக்கிறார். அதாவது மூன்றுமாதக் குழந்தையாக இருக்கும்பொழுது அவருடைய தாயார் அங்கு எடுத்துச் சென்றாள். அவருடைய தகப்பனார் ஜப்பானிலுள்ள முக்கியமான இருப்புப்பாதைகளைப் போட்டவர்.

சிறு குழந்தையாக இருக்கும்பொழுதே அவருக்கு ஜப்பானிய பாஷையும், இங்கிலீஷ் பாஷையும் பேசுவதற்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. இப்பொழுது அந்த ஜப்பான் தேசத்துடன் யுத்தம்புரிய முகான்மையாய் இருக்கிறார்.

இவர் இளம்பிராத்திலேயே சைனியத்திற்கு தலைமை வகித்தார். இப்பொழுது அவருக்கு வயது 54 தான். பிரிடிஷ் சைனியத்தில் அவர் மிகவும் பெரிய கீர்த்தி வாய்ந்தவர். அவருச்கு எல்லாவிதமான ராணுவ அனுபவமும் உண்டு. அநேகமாக ஒவ்வொரு தடவையிலும், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருக்கு பல வருஷங்களுக்குமுன் முதலே பெரிய உத்தியோகஸ்தர்களாக இருந்தவர்களுக்கும் மேலே, உயர்வான ஸ்தானத்தை வகிக்கிறார்.

அவர் ஒரு புத்தி கூர்மையுள்ளவர். முன்ஜாக்கிரதை அவரிடத்தில் உண்டு. அவருடைய கண்கள் வெகு அழகாகவும், பளிச்சென்று பிரகாசமாகவும் இருக்கும். அவர் எந்த விஷயத்திலும் தீர்க்காலோசனை செய்பவர். அவர் லண்டன் நகரவாசியும்கூட. அவர் வாழ்நாட்கள் பெரும்பாலும் அங்கு இருந்ததில்லை. மொத்தத்தில் அவருக்கு பீரங்கிப்படையில் 30 வருஷத்திய அனுபோகம் உண்டு.

## அவர் இளமைப் பருவம்.

சிறுவயதில் அவர் ஜப்பானிலிருந்து இங்கிலாந்திற்குக் கொண்டுவரப்பட்டார். அவர் ரக்பி என்னுமிடத்திலுள்ள பிரக்யாதிபெற்ற பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றார். அதற்குப் பிறகு வுல்விச் என்னுமிடத்திலுள்ள ராணுவ கலாசாலைக்கு அனுப்பப்பட்டார். இவர் சேர்ந்த வருஷத்தில் முதல் 15 பையன்களில் இவர் ஒருவர்.

அவர் முதன் முதலில் லக்னௌவிலிருந்த பிரிடிஷார் பீரங்கிப் பட்டாளத்தில் சேனாபதி பிரதிநிதியாக கீழ்பதவிக்கு நியமிக்கப்பட்டார். எட்டு வருஷ காலமாக இங்கிலாந்திலும், இந்தியாவிலுமாக அவர் பீரங்கிப்படையில் உத்தியோகம் வகித்துவந்தார். பிறகு யுத்தம் ஆரம்பித்தது. அப்பொழுது அவர் பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் சண்டையில் ஈடுபட்டு பிரசித்திபெற்ற கிரமமான உழைப்புத் தொகுதியைச் சேர்ந்தவர் என்ற பட்டமும் (D. S. O.) ராணுவச் சிலுவை பதக்கமும் இன்னும் பரிசுகளையும் பெற்றார். இரண்டு



வருஷம் மிகவும் கடுமையாக யுத்தம் நடந்ததில் பிரான்ஸில் அவர் பீரங்கிப் பட்டாளத்திற்குத் தலைமை வகித்தார். பிறகு சண்டைக்கு அப்புறம் இங்கிலாந்தில் அநேக ஸ்தானங்களை வகித்தார். பிறகு கிழக்கு பாகங்களுக்கு மறுபடியும் வடமேற்கு எல்லைப்புறத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு 1930-ம் வருஷத்தில் நடந்த சம்பவங்களில் கலந்துகொண்டார். அவைகள் முடிந்த பிற்பாடு பழயபடியும் அவர் சொந்த நாடான இங்கிலாந்துக்குச் சென்றார். சிப்பாய்களின் வாழ்க்கையில் இவ்வித பெரும்பதவிகள் ஒரு மனிதனுக்கு, அதுவும் இளம்பிராயம் உள்ளவனுக்கு கிடைப்பதென்றால் மிகவும் பாராட்டத்தக்க விஷயம். ஸர் ஹென்றி பௌனல் இப்பொழுது மிகவும் கஷ்டமானதும், மகத்தான வேலையை செய்வதற்கு ஈடுபட்டிருக்கிறார்.

(இந்த ஒலிபரப்பிற்குப் பிறகு தளகர்த்தர் வேவல் என்பவர் தென்மேற்கு பஸிபிக் பிரதேசங்களுக்கு பிரதம ராணுவத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குக் கீழ் அடுத்தபடியாக பௌனல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்).

---

## யுத்த நிலைமையைப்பற்றி டாக்டர் பினிஸ் பரிசிலனை செய்கிறார்.

## பொதுவாக ஒரு போர்முனை ஏற்படவேண்டும்.

## இதாலியை மட்டில் முதலில் ஏன்தாக்கவேண்டும்?

## ஜெர்மனியை யுத்தரங்கத்தில் தோல்வியடையச் செய்யவேண்டும்.

"மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையில் ஜெக்கோஸ்லாவியாவின் ஜனாதிபதி, டாக்டர் எட்வேர்ட் பினிஸ் எழுதுவது:—

டிஸம்பர்மீ 7-ம் தேதி யுனைடெட் ஸ்டேட்ஸையும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையும் ஜப்பான் எதிர்த்தது. உடனே இந்த இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் இறங்கியது. அரசியல் பாகத்திலும், ராணுவ பாகத்திலும், இந்த யுத்தத்தில் உன்னதமான சம்பவம் இதுதான். இப்பொழுது அச்சு நாடுகள் வெற்றிபெறுவதும், அதனால் நேசதேசங்களுக்கு ஆரம்பத்தில் தோல்வியும், நஷ்டமும் ஏற்படுவதில் நமக்கு மனதில் சஞ்சலம் ஏற்படுகிறது. இருந்தாலும் அவைகள் எல்லாம் தாத்காலிகமான வெற்றிகள்தான். என் அபிப்பிராயத்தில் துரிதமாகவும், திண்ணமாகவும், யுத்தத்தில் ஜயம் பெற வேண்டி நமது முயற்சியையும், பிரயாசையையும், பூராவும் எடுத்துக்கொள்ளாமல் போனால் அது ஸ்பத்தியக்காரத்தனமாகவோ, குற்றச் செய்கையாகவோ முடியும். ஆனபோதிலும் யுத்தத்தின் முடிவு நமது பலத்தைக் குறித்திருக்கிறது. மேலும், மேலும் இந்த யுத்த வளர்ச்சிக்கு பின்வரும் விஷயங்கள் முக்கியமாக கவனிக்கப்படவேண்டியவை.

(1) ருஷ்யப் போர்முனையில் ஜெர்மனியின் தோல்வியானது ராணுவத்திலும் மட்டுமல்ல, சன்மார்க்கத்திலும், ஆத்மீகத்திலும் பெரும் மாறுதல்கள் ஏற்படுத்திவிடும். அதிலிருந்து ஜெர்மனி தலை தூக்கமுடியாது. 1941-ம் வருஷம், நவம்பர் மாதம் 15-ம் தேதியில் கிழக்குப்போர்முனையில் 10,75 000 ஜெர்மன் போர்வீரர் கொல்லப்பட்டனர் என்று தளகர்த்தர் வான் பிராசிட்ஸ் ஒப்புக்கொண்டார்.

அதாவது இன்னும் 30,00,000 பேர்கள் இறந்ததைக் காட்டுகிறது. அதே சமயத்தில் ராணுவ இலாகாவிலும், இராஜீய போக்கிலும் இனிமேல் யுத்தத்தில ஜெர்மனி ஜயமடைய முடியாதென்று சொன்னார். மேலும் இங்கிலீஷ்காரர்களுடைய இராஜ்ய தவறுதல்கள் ஜெர்மனிக்கு அனுகூலமாக இருக்கும் பக்ஷத்

தில், ஜெர்மனி சமாதானம் செய்துகொள்வது அவசியமென்றும், சாத்தியமாகும் என்றும் சொன்னார். ஆகையால் அவரை விலக்கினதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது.

ராணுவ ரீதியாக பார்க்குமிடத்திலும், ஹிட்லர் ஜெர்மன் சைனியங்களுக்கு தலைமை வகித்ததிலிருந்தே, இறுதியில் அவனுக்குத் தோல்விநேரும் என்பதில் சந்தேகமில்லை. அதற்குள் ஹிட்லர் கொரோமாகவும், பரபரப்பாகவும், ஆக்ரோஷத்துடனும், பித்துப்பிடித்தும், ராணுவ நடவடிக்கைகளோ, இராஜீய நடவடிக்கைகளோ, எடுத்துக்கொள்ளத் துணிவானென்று எனக்குத்தோன்றுகிறது. ஆகையால் இராஜீயப் போக்கிலும், ராணுவ நிலைமையிலும், எத்துறையிலும் அதிஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம்.

(2) 1941-ம் வருஷம் கோடைகாலத்திற்குள், ஜெர்மனியின் வெற்றிகள் ராணுவ அதிகாரியான ஹிட்லரின் கீழுள்ள ஜெர்மனிக்கும் ஜெர்மன் சாம்ராஜ்யத்திற்கும் உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்தவில்லை. உள்நாட்டில் பிரிவுகள ஏற்பட்டு நாஸிக்கக்ஷி இந்த யுத்தத்தை ஆரம்பித்தது. நாஸிக்கக்ஷி ஒத்துமையாக இருந்தாலும், ராணுவ யந்திரம் ஜனங்களை ஒருமைப்படுத்துவதற்கு வல்லமை வாய்ந்திருந்தாலும், அவ்வரசாங்கம் பிளவு பட்ட நிலைமையில்தான் இருக்கிறது. நாஸிக்கக்ஷிக்கும், ஜெர்மன் சைனியங்களுக்கும் அநேக அபிப்பிராய பேதங்கள் உண்டு; அதேமாதிரியாக பழைய பிரஷ்யா (Prussia) ராணுவ நோக்கங்கள் கொண்ட தலைவர்களுக்கும், நவீன பான்ஸர் படைப்பகுதிகளுக்கு தலைவர்களாக இருக்கும் நாஸிக்கக்ஷியினருக்கும் அபிப்பிராய பேதங்கள் பல உண்டு. இப்பொழுது ஜெர்மன் அரசாங்கத்தில் உள்ளூர பூராவாகக் கெட்டு போய்விட்டது. அதன் அரசாங்கமுறை தப்பிவிட்டது. அதனால் அது பலமான அரசாங்கமல்ல. அதன் பொருளாதார நிலைமையோ முழுவதும் கெட்டுப்போய்விட்டது. பொதுவாக ஜெர்மன் மக்களின் நன்னடத்தையும் ஜனசங்கமும், அடிபாதாளத்தில் விழும் நிலைமையில் இருக்கிறது. இந்த யுத்தத்தில் ஜெர்மனிக்கு தோல்வி ஏற்பட்டவுடன மேற்சொன்னவையின் உண்மை நன்கு விளங்கும். ஆனால் இதிலிருந்து ஜெர்மனி தன்னந்தானாகவே அழிந்துவிடுமென்று எதிர்பார்ப்பது மிகவும் பிசகு என்ற மிஸ்டர் சர்ச்சிலின் அபிப்பிராயத்தை நானும் ஆமோதிக்கிறேன். போர்முனைகளில்தான் ஜெர்மனியைத் தோற்கடிக்கவேண்டும்.

(3) லிபியாவில் பிரிடிஷாரின் வெற்றி அதன் ஆதிக்கத்தையும், கௌரவத்தையும் அதிகப்படுத்தியதுமல்லாமல் சமீபக்கிழக்கு நாடுகளில் அதன் ராணுவத்தின் உயர்வையும் நிலைநாட்டுகிறது. இது வரையில் நடத்தி வந்த மாதிரியாகவே இவ்வெற்றிக்குப்பிறகும் யுத்தம் புரிவது மிக்க அவசியம். அச்சுநாடுகளில் ரொம்ப பலஹீனமான நாடு இதாலிதான். அதனால் சரியான ராணுவ தந்திரமுறைப்படி, இடைவிடாமல் அந்நாட்டை தாக்கித் தொலைக்கவேண்டும். அதுதான் அச்சுநாடுகளில் முதன் முதலாகத் தோல்வியடையும்.

(4) ஜப்பான் இன்னும் சில வாரங்களோ, மாதங்களோ வெற்றிக்குமேல் வெற்றிகள் அடைந்து வரலாம். நேச நாடுகள் இதைப்பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான் இவ்யுத்தம் வெவ்வேறு இடங்களில நடந்தாலும், மொத்தத்தில் ஒரே யுத்தம்தான். முக்கியமாக ஐரோப்பா கண்டத்தில்தான் யுத்தம் நடக்கும். அதன முடிவும் அக்கண்டத்தில்தான் ஏற்படும். ஜெர்மனியின் தோல்வியுடன், அச்சுநாடுகளும் அழிந்துவிடும்.

(5) மார்ஷல் பெடேன் ஆக்ஷியின்கீழுள்ள பிரான்ஸிலும், ஸ்பெயினிலும், ஜெர்மனி செய்து வரும் நடவடிக்கைகள், மர்மமான விஷயமாகவே இருக்கிறது. ஆனால் யுனைடெட் ஸ்டேட்ஸ், ஸோவியத் ஐக்கிய நாடுகள், கிரேட் பிரிடன் இன்னும் மற்றநேசதேசங்கள் ஒன்று சேர்ந்து ராணுவ விஷயத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டு பொதுவான போர்முனை ஒன்றை ஏற்படுத்தி, பொதுவான கொள்கையுடன் நடந்தால் ஜயம் கிடைத்து இந்தப்பக்கத்தில் ஏற்படக்கூடிய அபாயம் முடிவாக நிவர்த்திக்கப்படும்



யுத்தத்தின் தற்கால நிலைமையை இவ்விதமாக விவரித்தால் முடிவு நமக்கு அனுகூலமாக இருக்கிறது. நேசதேச வல்லரசுகளும், மற்ற நேசதேசங்களும் கூடிய சீக்கிரத்தில் பொதுவாக இருந்து யுத்தத்தை நடத்த மனப்பூர்வமான ஒப்பந்தம் செய்துகொள்வார்கள் என்றும், வரும் காலத்தில் சமாதானத்துடன் இருப்பதற்கு வேண்டிய முக்கிய விஷயங்களில் ஒப்பந்தம் செய்துகொள்வார்கள் என்றும், யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும், பொதுவாகவும் ஐக்கியபத்தியத்துடனும் நடப்பதாக பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொள்வார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

---

## லுப்ட்வாபியின் பலம் க்ஷீணித்துவருகிறது. அநேக போர்முனைகளில் ஈடுபட முடியவில்லை. விமான தினுசுகள் ரொம்ப ஸ்வல்பம். ருஷ்யாவில் இன்னும் கடுமையான யுத்தம் நடைபெறும்.

'டெய்லி டெலகிராப்' பத்திரிகையின் ஆகாயபல நிருபர் எழுதியது :—

கோயரிங்கின் தலைமையின் கீழுள்ள லுப்ட்வாபியின் உதவியைக்கொண்டு, ஹிட்லர் இவ்வுலகத்தையே நடுநடுங்கும்படிசெய்ய முயற்சித்தார். அவ்விமானப் படையின் மகிமை இப்பொழுது க்ஷீணித்துவருகிறது. அப்பகுதியிலிருந்த அநேக விமானங்கள் சேதமாயின. அதற்கு ஜெர்மன் தொழிற்சாலைகளிலும், ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளிலும் ஏராளமாக விமானங்கள் உற்பத்தி செய்தும்கூட அவைகளுக்கு ஈடு செய்யமுடியவில்லை. இப்போது வேலை செய்யும் விமானப் பகுதிகள் ஏற்கனவேயுள்ள பகுதிகளுக்கு மிகவும் குறைவு.

ஜெர்மன் விமானப்படையின் மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் ஜெர்மனிக்குத் திரும்பி வந்திருக்கிறது. சிதறுண்ட பகுதிகளை ஒருங்குபடுத்தவும், கெட்டுப்போன யந்திரங்களைப் பழுதுபார்க்கவும் ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. மற்றொரு மூன்றில் ஒரு பகுதி, ருஷ்யப் போர்முனையில் ஈடுபட்டிருக்கிறது என்று உண்மையான தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால் ருஷ்ய விமானங்கள், எதிரிகளின் விமானங்களைக் காட்டிலும் இரண்டு பங்கு அதிகம். இதற்குக் காரணம், ஏராளமான ஜெர்மன் விமானங்கள் இந்த யுத்தத்தில் சேதமடைந்தன. குறைவாக மதிப்பிட்டுச் சொன்னாலும்கூட சென்ற ஆறு மாதங்களுக்குள் 8,000 விமானங்களுக்குமேல் சேதமாயின. பாக்கியுள்ளவை, அதாவது ஐந்தில் ஒரு பகுதி ஐரோப்பாவின் மேற்குக் கடற்கரை ஓரமாக நார்வேயிலிருந்து வட பிரான்ஸ் வரை உள்ள பிரதேசங்களில் ஆங்காங்கு பரவியிருக்கிறது. அதில் 400, 500 பைடர் விமானங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியின்பேரிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலிருக்கும் முக்கியமான லக்ஷியங்களின்பேரிலும், பிரிடிஷ் பாம்பர் விமானப்படை வந்து தாக்காமலிருக்கும்படி பாதுகாத்துவருகிறது. மீதியுள்ளவை, சுமார் 7-ல் ஒரு பாகம் மத்தியதரைக் கடலிலிருந்துகொண்டு, ஆபிரிக்காவில் ராமலின் தலைமையின்கீழுள்ள சைனியங்களுக்கு உதவிசெய்தும், அங்கு செல்லும் நேசதேசக் கப்பல்களுக்கு இடையூறுகள் விளைவித்தும் வருகிறது.

ஜெர்மன் தரைப்படை எப்பொழுதும் ஆகாய விமானப்படையிலிருந்து பெருத்த உதவியை அடையக்கூடுமென்ற நம்பிக்கையின்பேரில் தயாரிக்கப்பட்டிருக்கிறதாக நடைமுறையிலிருந்து தெரியவருகிறது. ஆகையால் ஐரோப்பாவில் தாக்குதலை ஆரம்பிக்க ஜெர்மனியின தன்மை லுப்ட்வாபியின் தற்கால நிலைமையைப்பொறுத்தது என்று வியக்தமாகத் தெரிகிறது. ஜெர்மன் தொழிற்சாலை

களில் நல்ல அனுபவம் வாய்ந்த தொழிலாளிகளைச் சேகரிக்க முடியவில்லை. அதனால் ஜெர்மன் விமானப்படை பலத்தில் முதல் வரிசையிலிருந்து தாக்கத் தேவையான விமானங்களைத் தயாரிக்கப் போதுமான திறமைவாய்ந்த மனிதர்களைச் சேகரிப்பதில் ஜெர்மனி பெருத்த கஷ்டம் அடைந்துவருகிறது. இப்பொழுது தயாரித்துவரும் விமானங்கள் மாதிரி அநேகம் ஒரே சமயத்தில் செய்யமுடியவில்லை. ஜெர்மனிக்கு அப்போதுள்ள விமான தினுசுகளை வைத்துக்கொண்டும், இன்னும் வரும் காலத்தில் தேவைக்குத் தக்கபடி அபிவிருத்திசெய்து கொள்ளலாம் என்றும், அதைக்கொண்டு யுத்தத்தை ஜயித்துவிடலாம் என்றும் நம்பிக்கையுடன் யுத்தத்தை ஆரம்பித்துவிட்டது. அநேக காரியங்களுக்குச் சாதகமாக அவைகள் கட்டப்படவில்லை. லுப்ட்வாபியைச் சேர்ந்த ஒவ்வொரு விமானமும் ஒரு நாளில் குறிப்பிட்ட எல்லா அலுவல்களையும் செய்துமுடிக்கும் வல்லமை கொண்டது. விரோதிக் கப்பல்களைத் தாக்குவதற்கும், பட்டணங்கள், துறைமுகங்கள், கப்பற்துறைகள் இவைகளைத் தகர்க்கவும், சாமான்களை வெளியிடங்களுக்கு ஸப்ளை செய்யவும் உபயோகமாயிருந்தன. ஆனால், நாலு எஞ்ஜின்கள்கொண்ட பிரிடிஷ் பாம்பர் விமானம் வெடிகுண்டுகளை வீசி அதிக சேதத்தை விளைவிக்கும் மாதிரி, ஜெர்மன் விமானம் அமைக்கப்படவில்லை. அதில் நாலு எஞ்ஜின்களைப் புதிதாக அமைப்பதும் முடியாத காரியம். அதனால் பிரிடிஷ் விமானப் படையைப்போல், ஜெர்மன் விமானப்படை அதிகம் பலம் வாய்ந்தவையல்ல. இந்தக் கெடுதலைச் சீர்திருத்துவதற்கு ஜெர்மனியால் முடியும் என்று நம்புவதற்கு இடமில்லை.

இவ்விதம் விமானப்படையின் பலம் குறைந்துவரும் நிலைமையில் ஜெர்மனி அதிக ராணுவபலம் வாய்ந்த ருஷ்யாவுடன் யுத்தம்புரிகிறது. அதில் ஜெர்மனிக்கு மிகவும் கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுதுதான் மாரிகாலம் மிகவும் கடுமையாக ஆரம்பித்திருக்கிறது. மாரிகால எதிர்ப்புக்கு லாயக்காக ஜெர்மானியர்களுக்கு நல்ல ஆடைகள் கிடையாது. ஆனால், ருஷ்யர்களுக்கு சீதோஷ்ண நிலைக்குத் தகுந்த ஆடைகளும், மற்ற உபகரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், மேலும் புது சைனியங்கள் களைப்படைந்த படைகளுக்கு ஓய்வுகொடுப்பதற்காக வந்துசேருகின்றனர். இதெல்லாம் பார்க்க மாரிகாலத்தில் தங்குமிடங்களில் ஜெர்மானியர்கள் சாஸ்வதமாக ஊன்றிவிடாமல் தடுப்பதற்குவேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஜெர்மன் பிரதிநிதி தாங்கள் ஜயிக்கலாம் என்பதற்கு அறிகுறிகள் இருப்பதாக சமீபத்தில் சொல்லியிருக்கிறார். இன்னும் சிலர் லுப்ட்வாபிக்கு ஏற்பட்டிருக்கும் விபத்துக்களை அறிந்துகொண்டிருக்கிறார்கள். ருஷ்யர்களுக்கு எதிராக இருப்பில் உள்ளவைகள் எல்லாம் உயயோகப்படுத்தப்பட்டதென்றும் ஒரே நாளில் திரும்பத் தாக்குதலுக்கு அடிக்கடி வரவேண்டியிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

ஒவ்வொரு தேசமும் தான் உற்பத்தி செய்யும் விமானங்களின் எண்ணிக்கையை வெளியிடாமல் இருந்துவந்தாலும்கூட, அச்சுநாடுகளின் விமான உற்பத்தியைக்காட்டிலும் நேசதேசங்களின் விமான உற்பத்தி அதிகமாகயிருக்கிறது உண்மைதான். இப்பொழுது மேற்சொல்லிய வித்தியாசம் இன்னும் அதிகமாகி நேசநாடுகளுக்கு சாதகமாக இருக்கக்கூடும். இந்த யுத்தத்தில் இருதிறப்பிலும் நல்ல தளகர்த்தர்கள் இருந்தாலும்கூட சைனியமும், யுத்த தளவாட உற்பத்தியும்தான் அதிகமாக இருக்கவேண்டும். 1,50,00,00,000 ஜனங்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய வல்லமை நேசதேசங்களுக்கு இருக்கிறது. ஆனால் அச்சுநாடுகளில் 30,00,00,000 ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களில் அநேகர் தங்கள் அரசர்களுக்கு எதிராகவும் கிளம்புகிறார்கள். பொருளாதார முற்றுகையும் பிரிடிஷ் விமானப் படையெடுப்புகளும் ஒன்று சேர்ந்ததினால் சென்ற வஸந்த காலத்தில் ஜெர்மனி யுத்ததளவாடங்கள் எவ்வளவு அதிகமாகச் செய்ய முடிந்ததோ, அதைவிட மிகவும் குறைவாகத்தான் இப்பொழுது அது செய்ய முடிகிறது.



## நாஸி ஆக்கிரமித்த ஐரோப்பாவில் எலும்புருக்கி ஜ்வரம் அதிக நாசத்தை விளைவிக்கிறது.

## போலிஷ் யூதர்கள் வாஸஸ்தலங்களில் ஆரம்பமாயிற்று.

## நாஸியர் உண்டாக்கிய நிலைமையால் ஏற்பட்டது.

(ஒரு வைத்திய பரிசோதகர் எழுதியது.)

ஜெர்மானியர்கள் இரண்டு வருஷங்களாக நடத்திவந்த அட்டூழியங்களுக்கு இப்பொழுது அவைகளுக்குத் தகுந்த பலன்களை அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் இந்த இரண்டு வருஷங்களாகவே போலந்து தேசத்தை நசுக்கி போலிஷ்காரர்களை அடியோடு அழித்துவிடப் பிரயத்தனப்பட்டுவருகிறார்கள்.

தேசத்திற்குள்ளேயே யூதர்களைக் கொடுமையாக நடத்தியதுபோல் ஜனத்தொகையில் வேறு எந்த ஜாதியாரையும் நடத்தவில்லை. அவர்களை போலிஷ் யூதர்கள் வசிக்கும் பாகங்களில் ஆடுமாடுகளைப்போல் கும்பல் கும்பலாக அடைத்துவைத்தனர். அவர்களுக்கு ஆகாராதிகளும் கிடையாது. அவர்கள் வேலைசெய்து சுயமாக சம்பாதித்துச் சாப்பிடுவதற்கும் அவர்களுக்கு வசதிகள் கிடையாது. அதே தேசத்திலிருக்கும் யூதர்களல்லாதவர்களுக்குக் கொடுக்கப்படும் கொஞ்சம் உணவுப்பொருள்களும்கூட யூதர்களுக்குக் கிடைக்காது. அவர்களுக்குத் துணிமணிகளும், விறகு முதலியவைகளும் கொடுப்பதில்லை. ஜெர்மனியின் ஆதரவிலிருக்கும் "கிராக்யூர் ஸீட்டிங்" பத்திரிகையில் "1941-ம் ௵ மார்ச்சு மாதம்வரை 60,000 யூதர்கள் கிராக்கௌவிலிருந்து காலிசெய்யப்பட்டனர். பொதுவாக அரசாங்கத்திலிருக்கும் ஜில்லாக்களில் தனியாக வசிக்க ஏற்பாடாகியிருக்கிறது. நகரத்திலேயே வசிக்கும் யூதர்கள் பாட்கார்ஸ் (Podgorze) என்னும் ஒரு தனிப்பட்ட பாகத்தில் வசிக்கிறார்கள். மேலும் அந்த ஜில்லாவைவிட்டு வெளியே போவதற்கு அங்குள்ள அதிகாரிகளின் அனுமதி தேவை. அந்த பாகங்களில் ஜனநெருக்கம் அதிகமாயிருப்பதால், சித்தம் தடுமாற்றம் ஏற்பட்டவர்களும், வியாதியஸ்தர்களும்தான் அங்கு அதிகமாகக் காணப்படுகிறார்கள். அதனால் எங்கு கண்டாலும் கடும் நோய் பரவுகிறது" என்று கண்டிருக்கிறது.

## நோய் அநேக இடங்களுக்கு அதிவேகமாய்ப் பரவுகிறது.

இப்பொழுது, ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவில் டைபஸ் (Typhus) என்னும் எலும்புருக்கி ஜ்வரம் பரவி வருகிறது. போலந்திலும், யூக்ரேனிலும், பால்டிக் நாடுகளிலும் அது ஏகமாகப் பரவி யிருக்கிறது. அது போலிஷ் யூதர்கள் வசிக்குமிடங்களில்தான் முதன்முதலில் ஆரம்பமாயிற்று என்று ஜெர்மானியர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இந்த விஷயம் அக்டோபர் மாதத்தில் அரசாங்க வைத்திய இலாகா கவுன்ஸில் கூட்டத்தில், வார்ஸா ஜில்லாவில் டைபஸ் என்னும் ஒருவித ஜ்வரம் வழக்கம்போலல்லாமல் இப்பொழுது ஜனங்களை அதிகமாகப் பீடித்திருக்கிறதென்றும், முக்கியமாக யூதர்கள் வாஸஸ்தலங்களிலிருந்துதான் பரவியிருக்கிறதென்றும் டாக்டர் பூயர்மேன் என்பவர் சொன்னார். மேலும் போலந்திலுள்ள டாக்டர்களால் அந்நோயைத் தவிர்ப்பதற்கு ஒன்றும் முடியவில்லை. அதனால், "பிளேக் கட்டடங்கள்" ஸ்தாபிப்பதும், நோய் பீடித்தவர்கள் வீடுகளைக் காலிசெய்வதும் முதலிய ஏற்பாடுகளை ஜெர்மன் அரசாங்கம் செய்யவேண்டியிருக்கிறது என்றும் சொன்னார்.

## அதற்காக எடுத்துக்கொண்ட வைத்திய முறைகள் பயன்படவில்லை.

பிறர் நலங்கருதும் உத்தேசத்தைக்கொண்டு இவ்வித முறைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஜெர்மன் மக்களுக்கும், முக்கியமாக ஜெர்மன் சைனியங் களுக்கும் நோய் பரவாமல் தடுப்பதற்காகத்தான அவை எடுத்துக்கொள்ளப பட்டன. அவசரமாக, முற்றிலும் அபிவிருத்திபடையாமல் எடுத்துக்கொள்ளும் தடுக்குமுறைகள்போல் இவைகளும பயன் தராமல் போய்விட்டது. ஜெர்மானியர் தாங்கள் பிடித்த நாடுகளின் நிலைமையை மிகவும் கேவலமான நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டபடியால் இந்நோயும் வரவர அதிகமாகப் பரவிற்று.

டான்ஸிகர் வார்போஸ்டர் பத்திரிகையில் நவம்பர் மாதத்தில் ஜனங்கள் கோயினு ஜில்லா தலைநகரங்களில் கூட்டம் போடக்கூடாதென்றும், ஜ்வரம் ஏற் பட்டாலும், பேன்கள் காணப்பட்டாலும் உடனே தெரியக்கொடுக்கவேண்டு மென்றும் விளம்பரப்படுத்தியிருந்தது. டிஸம்பர் மாதத்திற்குள் ஜெர்மானியர்கள் பெரிய அபாயத்தை வெளிப்படையாக ஒப்புக்கொண்டுவிட்டார்கள். போலந்தி லுள்ள ஜில்லாக்கள் முன் எச்சரிக்கையுடன் தனிமையாக விட்டுவைக்கப்பட்டன. மேலும், ஜெர்மன் உத்தியோகஸ்தர்களுக்கும், அங்கு குடியேறுகிறவர்களுக்கும் டைபஸ் என்னும் ஜ்வரம் கோடைகாலத்தைப்போல் மாரிகாலத்திலும் பரவியிருக் கிறதாக அறிவிக்கப்பட்டது. பொதுஸ்தலங்களுக்குப் போகக்கூடாதென்றும், பொது வண்டிகளில் பிரயாணம் செய்யக்கூடாதென்றும், போலிஷ் நகரவாஸி களுடன் நெருங்கிப் பழகக்கூடாதென்றும், இன்னும் தங்கள் பாதுகாப்புக்காக எடுத்துக்கொள்ளவேண்டிய முறைகள் அடங்கிய ஜாபிதாவும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

## ஜெர்மானியர்களை யூத வைத்தியர்கள் சிகிச்சை செய்கிறார்கள்.

மேலே சொன்ன ஏற்பாடுகளுடன் வார்ஸா நகரத்திலுள்ள ஜெர்மன் ஆஸ்பத்திரிகளில் இதற்குமுன் வேலை செய்துவந்த டாக்டர்கள், நர்ஸ்கள், சுகாதார உத்தியோகஸ்தர்கள், இவர்களுக்குத் திரும்பவும் வேலை கொடுக்கப்பட்டன. யூக்ரேன் பிரதேசத்தில் ஜெர்மன் ஆக்கிரமித்த நாடுகளில், அபாயகரமான வியாதிகள் எங்கும் பரவினதால் அங்குள்ள பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுவிட்டன. இங்குள்ள ஜனங்களும், பால்டிக் நாடுகள், போலந்தின் வடகிழக்கு பாகங்கள், இவைகளில் உள்ள ஜனங்களும் ஜெர்மனிக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப் படுவதில்லை இத்தேசங்களிலிருந்துவரும் ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும், ராணுவ உத்தியோகஸ்தர்களும் தொத்துவியாதி பரவாமல் விலக்கிவைக்கப் படுகிறார்கள்.

ருஷ்யா ஓரமாயுள்ள பிராந்தியங்களில் ஜெர்மானியர்கள் மாரிகாலத்தில் தங்க ஏற்படுத்திக்கொண்டிருக்கும் இடங்களில் வண்டியில் பிரயாணம் செய்யும் பகுதிகள் வெகு மும்மரமாக வேலை செய்கின்றன. இந்நோய்க்குப் பயந்து கிழக்குப் போர்முனையிலிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், போர்வீரர்களுக்கும் கொடுத்திருந்த ரஜா ரத்துசெய்யப்பட்டது.

## ஜெர்மானியர்கள் தப்பித்துக்கொள்ள வழியில்லை.

ஜெர்மானியர்களின் பிரயத்தனங்களுக்கும் மீறி ஐரோப்பிய நாடுகளில் இக் கொடும் நோய் வியாபிக்கிறது பக் (Bug) நதிக்கரையில் வைக்கப்பட்டுள்ள ருமேனியத் துருப்புகளில் அநேகருக்கு இந்நாய் பரவிற்று. மேற்கு ஐரோப்பா விலுள்ள ஜனங்களுக்கு வியாதிகளை சமாளித்துக்கொள்ள சக்தியில்லாததால் காசநோய், வேக்காளம் முதலிய நோய்கள் அவர்களை மரிக்கச்செய்கின்றன. இந்த ஜ்வரமும் சேர்ந்தால் ஜெர்மானியர்கள் பிழைப்பதற்கும் வழியில்லை.



## பிறர் நகைக்கக்கூடியமென்னவென்பது தெரியாததால் ஜெர்மானியர் கொடூரச்செய்கைகளைச் செய்கின்றனர்.

ஜெர்மன் பத்திரிகைகளிலிருந்து சில சமாசாரங்கள் எடுக்கப்பட்டு 1941 நவம்பர்மீ வெளிவந்த "உலக விமர்சனம்" என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. இவ்விஷயங்கள் ஜர்மானியர்களின் இயற்கை குணங்களை உள்ளபடி தெரியப்படுத்துகின்றன. அவைகளைக்கண்டு சிரிப்பதா? அல்லது கவலைப்படுவதா?

## ஒரு தடவை முத்தமிட்டதற்கு ஐம்பது நாட்கள் தண்டனை.

புருஷனை இழந்த, முப்பத்திரண்டு வயதுள்ள ஒரு ஸ்திரீ கீல் பட்டணத்தில் வசித்து வந்தாள். இவள் புருஷன் ஒரு சிப்பாயாக இருந்தான். இவள் ஒரு நாள் தன் சிநேகிதர்களைப்பார்க்க கிராமாந்தரத்திற்குச் சென்றாள். சிநேகிதர் களுடைய தோட்டத்தில், பெரிய உத்தியோகம் வகித்த ஒரு பிரெஞ்சுக்காரர் கைதி யாகி வேலைசெய்து கொண்டிருந்தார். தன்னை மூன்று தடவை முத்தமிடும்படி அவருக்கு அனுமதித்தாள். ஆனால் இவ்விதம் செய்வது அங்கே நிந்திக்கப்படு வதோடு குற்றமும் ஆகுமென்று சிநேகிதர்கள் எச்சரிக்கை செய்ததையும் இவள் கேட்கவில்லை. ஆகவே யோசனை இலலாமல் நடந்து கொண்டதற்காக ஐந்து மாதம் ஜெயிலில் அடைக்கப்பட்டாள்.

—போடன்ஸீநன்ட்ஷே.

## தர்மம்—நாஸிகளின் கொள்கைப்படி.

போலந்து கன்னிமாடத்துத் தலைமை மாது தனது வசமிருப்பவர்களுக்குத் தேவையானதைக்காட்டிலும் அதிகமான மாமிசத்தையும் வெண்ணெயையும் வாங்கிக்கொண்டாள். இது ஒரு குற்றம். மீதியுள்ளதை போலிஷ்காரர்களுக் கும், மதக்கன்னிகைகளுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும் பிரித்துக்கொடுத்தாள். இது இரண்டாவது குற்றம். ஜெர்மானியர்களைப்பற்றி பொய்யான விஷயங்களைக் கண்டு தலைமை கன்னிமாடத்திற்கு போலீஷ் பாஷையில் ஒரு கடிதமும் எழுதினாள். இதுவும் ஒரு குற்றம். ஆகவே அவள் பனிரண்டு வருஷம் கடுங் காவல் விதிக்கப்பட்டாள்.

—ஆஸ்ட்டியூட்சர் பியோபஷ்டர்.

## கால்பந்தாட்டத்தைப்பார்ப்பது கௌரவமில்லை.

யுத்தக் கைதிகள் யாவரும் நமது விரோதிகள் என்பதைக்குறித்துச் சொல் லும்படி ஒரு வருத்தக்க சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. யுத்தக் கைதிகளுடன் அதிகமாக நெருங்கிப்பழகக்கூடாது. அவர்கள் சார்பாக மிக அக்கறை இருப் பதாகவே காண்பிக்ககூடாது. சமீபத்தில் ஒரு நாள் கீல் பட்டணத்திலிருந்த பிரெஞ்சு, பெல்ஜியன் கைதிகள் கால் பந்தாட்டம் ஆடினார்கள். இது ஒரு குற்ற மும் இல்லை. ஆனால் பல ஜெர்மானியர்கள் இந்த ஆட்டம் நடக்கும் இடத்தில் சுற்றி நின்றுகொண்டு ஜயித்த கக்ஷியை அதிகமாகக் கொண்டாடினார்கள். அறியாத்தனமாக இவ்விதம் செய்திருந்தாலும் இது ஜெர்மானியரின் கௌரவத் திற்கு கெடுதலானதால் இனிமேல இம்மாதிரி செய்யக்கூடாது.

—கீலர் நியூகஷி நாஷ்ரிஷ்டன்.

---

# சைனியமும் தலைவனும்.

(நியூஸ்டேட்ஸ்மென் அண்டு நேஷன் என்ற பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

கீழே சொல்லப்பட்டிருக்கும் கதை ருஷ்யச் சேனையிலிருந்து வெளிவந்த ரிபோர்ட்டிலிருந்து கிடைத்திருக்கிறது. கிரமென்சுக் பட்டணத்தைச்சுற்றி

சண்டை நடந்தபோது ஒரு ஜெர்மன் அதிகா
சுமார் 50-வயது இருக்கும். சண்டையில் காயமடைந்து ரத்தம் சிந்தியதால் சரீரம் மெலினமாகக் காணப்பட்டது. இடது கையின் ஆள்காட்டி விரல் நறுக்கப்பட்டிருந்தது. பிடிபட்டு பல மணி நேரமாகியும், அதிகமாகத் தளர்ந்து போனதால கேட்கும் கேள்விகளுக்கு அவரால் பதில் சொல்லமுடியவில்லை. சைனியங்களுக்குப் பின்னுள்ள ஒரு கிராமச் சாவடியில் இவரை ஒரு ருஷ்ய ஆபீஸர் எடுத்துச் சென்று சில கேள்விகளைக்கேட்டார்.

பொறுமையுடன் அவரைச் சிலகேள்விகள் கேட்டு கீழேகண்ட சில தகவல்கள் கிடைத்தன. தொழில் என்ன என்பதற்கு மியூனிச்சில் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் என்றான். 1928 முதல் நாஸிக்கக்ஷியில் இருந்து வருகிறானாம். எதற்காக சண்டை செய்கிறாய என்று கேட்டதற்கு கழுத்தைச் சளிக்கிச்கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். பிறகு ருஷ்ய ஆபீஸர் சுருட்டுகள் கொடுத்ததை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டானாம். அந்த அறையின் கோடியில் ஒரு மேஜைக்கு அருகில் உட்காரவைத்து காகிதமும் பென்ஸிலும் கொடுத்து அவன் புத்தியை ஸ்வாதீனப்படுத்த முயற்சி செய்யப்பட்டது. "உனக்கு ஏதாவது புத்தியில் தோன்றினால் இதில் எழுது" என்றும் சொல்லப்பட்டது.

தனியாக விட்டவுடனே காகிதத்தில் சில உருண்டைகளும், உருவங்களும் போட்ட பிறகு எழுத ஆரம்பித்தான். ருஷ்ய அதிகாரி திரும்பிவந்து காகிதத்தைப் பார்த்ததும் "ஜயிக்கப்பட்டு தோற்கப்பட்டது" என்ற தலையங்கத்தின் கீழ் நடுங்கிய எழுத்துகளால் "உலகம் பூரா ஜயித்தாலும் தனது பிராணனை இழந்தால் ஒருவனுக்கு என்ன லாபம்" என்று இருந்தது.

அதன் கீழ் இரட்டை இரட்டையாக அகராதியில் மொழி பெயர்க்கப்பட்டது போல் சில வார்த்தைகள் இருந்தன :—

| | | |
|---|---|---|
| சமாதானம் | ... | காட்டுமிராண்டித்தனம். |
| அமைதி | ... | சைனிய வாழ்கை. |
| மரியாதை | ... | வெறுப்பு. |
| ஸோப்பு | ... | நாற்றமுள்ள சாமான்கள். |
| ரத்தம் | ... | சீ. |
| ஸ்வதந்திரம் | ... | பலாத்காரம். |
| பயிற்சி | ... | ஊழல். |
| ஸ்வாதந்திரியம் | ... | சிப்பாய். |
| நகைப்பு | ... | உக்கிரமாக இருப்பது. |
| உல்லாஸம் | ... | கடும் யுத்தம். |
| ஆத்மதுஷ்டி | ... | விடாமல் முற்றுகையிடுவது. |
| பக்தி | ... | மிருகத்தனமும் கோபமும். |
| நிதானம் | ... | பாசாங்காக தலையகட்டுவது. |
| அனுபவம் | ... | துக்கம். |
| மனிதன் | ... | மிருகம். |
| இயற்கை | ... | சக்தியுள்ளது. |
| உயிர் | ... | இறப்பு. |

இக்கடிதத்தை ருஷ்ய ஆபீஸரிடம் கொடுக்கும் போது "நான் பயித்தியக்காரனல்லவா?" என்று அவன் சொன்னதன் பேரில், ருஷ்ய ஆபீஸர் அதைப் படித்துவிட்டு "இல்லை, நீர் நல்ல புத்தியைப் பெறும் மார்க்கத்திற்கு வந்துவிட்டீர்" என்றாராம்.



## தத்தில் பிரவேசித்ததினால்
## ஐரோப்பாவில் உண்டாகக்கூடிய பயன்கள்.
## ஜெர்மனியின் உள்நாட்டின் நிலைமை.
## இதாலியின் நிலைமை.
## ஜயிக்கப்பட்ட ஜனங்களின் மனோபாவம்.

விண்டிலி பிரேஸர் சமீபத்தில் பி. பி. ஸியில் ஒலிபரப்பியது :—

இந்த இரண்டாவது உலக யுத்தத்தில் மூன்றாவது மாரிகாலத்தை அனுபவிக்கும் சாதாரண ஜெர்மன் என்று நீ எண்ணிக்கொள். இப்பொழுது உன்னுடைய தேசத்திற்கும், பொதுவாக பூரா உலகத்திற்கும் இவ்யுத்தத்தின் போக்கைப்பற்றி நீ என்ன நினைப்பாய்? சென்ற 10 நாட்களுக்குள் உன் நாட்டிற்கு ஒரு புதிய நேசதேசம் சேர்ந்திருக்கிறது. ஒரு புதிய விரோதி நாடும் தோன்றியிருக்கிறது. உன் சார்பில் ஜப்பான் இருக்கிறது; அமெரிக்கா உனக்கு எதிரியாக இருக்கிறது. இதன் பயன் என்ன?

சரிதான், இந்தப் பிரச்னைக்கு இவ்வளவு சீக்கிரத்தில் திண்ணமான பதில் அளிப்பது முடியாது. ஆனால் ஒரு சாதாரண ஜெர்மன் மனதில் தன் தேசத்துடன் அமெரிக்கா போர் தொடங்கியிருக்கிறதென்று கேட்ட மாத்திரத்தில் எவ்வித எண்ணங்கள் தோன்றுகின்றன என்பதை நம்மால் யூகித்துச் சொல்ல முடியும்.

தன் நாட்டைத் தற்காப்பு செய்து கொள்வதற்காகத்தான் ஜெர்மனி யுத்தம் புரிவதாக ஒவ்வொரு ஜெர்மானியனும் நம்புவதை முதலில் நீ ஞாபகத்தில் வைத்துக்கொள். ஏனென்றால் இவ்விதமான பிரசாரம் அநேக தடவைகளில் அவன் காதுகளை செவிடுபடும்படி செய்திருக்கிறது. மேலும் யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் முதல் ஜெர்மன் பிரசார மந்திரி, டாக்டர் கோயபல்ஸ் ஜெர்மனிக்கு நாலாபக்கங்களிலிருந்து பயமுறுத்தல்கள் ஏற்பட்டுவருகின்றன என்றும், அது அதிசீக்கிரத்தில் படையெடுக்கப்படும் என்றும், அப்பொழுது ஜெர்மனி தற்காப்பு செய்துகொள்ள யுத்தம் போட்டுத்தான் ஆக வேண்டும் என்றும் பலவாராக எங்கும் பிரசாரம் செய்து வந்தான். இவ்வித பிரசாரத்தில் அவன் வெற்றியடைந்தான் என்றே சொல்லவேண்டும்.

### மன அதிருப்தி.

பி. பி. ஸி. ஒலிபரப்பில் கேட்டு வரும் ஜெர்மானியர்களுக்கு எதிர் கக்ஷியின் விவரங்கள் தெரியவரும். இந்த இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனி ரொம்ப சாப்திகமாக இருந்துகொண்டு யுத்தத்திற்கு முயற்சிக்கவில்லை என்பதில் அவர்கள் சந்தேகம் கொண்டிருப்பார்கள். இருந்தாலும் ஹிட்லர் சமாதானத்தை எப்பொழுதும் நாடுவான் என்றும், அவன் கௌரவம் வாய்ந்தவனென்றும், அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை இன்னும் பூராவாக அற்றுப் போய்விடவில்லை. அதனால் இப்பொழுது அமெரிக்கா வேண்டுமென்றே ஜெர்மனியின்பேரில் படையெடுக்கப் பார்க்கிறது என்றும், அதற்காக ஜெர்மனி தற்காப்பு செய்து கொள்வதற்காகத்தான் எதிர்த்துப் போராட வேண்டியது அவசியமென்றும், ஹிட்லர் அவர்களுக்குச் சொல்லும் பக்ஷத்தில், அதை அவர்களால் நிராகரிக்க முடியாது. இவ்விதம் உலகத்திலேயே பலமும், செல்வாக்கும் வாய்ந்த மூன்று தேசங்களுடன் யுத்தம் புரிந்து ஹிட்லர் தங்களுக்கு வெற்றியளிப்பார் என்று இன்னும் நம்பியிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அவனிடத்தில் பூர்ண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் சமீப காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களிலிருந்து ஜெர்மன் பொது மக்களுக்கு ஆழ்ந்த சஞ்சலம் ஏற்பட்டிருப்பதில் சந்தேகமில்லை.

பல மாதங்களாகவே யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜெர்மனிக்கு எதிர் தரப்பில் தான் எந்த நிமிஷத்திலும் சேர்ந்து விடுவதாக ஜெர்மானியர்களுக்கு எச்சரிக்கை

செய்துவந்தது உண்மை. சென்ற கோடை காலத்தில் அமெரிக்கா ஜெர்மனிக்கு எதிராக சண்டையிடும் என்ற எண்ணம் ஜெர்மனிக்கு பயத்தையும், பீதியையும் விளைவித்தது. ஆனால் இதற்குள் கூர் மழுங்கிப் போய் சர்வ சாதாரணமாகிவிட்டது. இதனால் எப்படியேனும் நடக்கட்டும் என்று சும்மா இருந்துவிட்டார்கள். ஆனால் இரண்டு விஷயங்களைத் தவிர்க்கவோ, மறைக்கவோ அவர்களால் முடியவில்லை.

## ஒரு உவமானம்.

சென்ற யுத்தத்தில் 1917-ம் வருஷத்தில் அமெரிக்கா யுத்தத்தில் புகுந்து ஜெர்மனி நடத்தி வந்த சமாதான பேச்சை முறித்து, கெய்ஸரின் முடிவான தோல்வி நிச்சயம் என்று ஸ்ர்ஜிதப்படுத்தியது நமக்கு ஞாபகத்திற்கு வருகிறது. 1917-ம் வருஷத்தில் நடந்ததற்கும், இப்பொழுது நடப்பதற்கும் உள்ள சமத்துவத்தை ஒரு ஜெர்மானியன்கூட தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. இதாலியும் ஜப்பானும் தன் நேச தேசங்களாகவும், பிரான்ஸ் தனக்கு நேசமான நடுநிலை நாடாகவும் இருப்பதில் வித்தியாசம் இருப்பதாக ஜெர்மானியர்கள் தங்களைத்தானே சமாதானம் செய்துகொள்ள முயலலாம்.

அமெரிக்காவும், ஐக்கிய நாடுகளும் மிக்க பலம் வாய்ந்தவை என்றும், வற்றாத செல்வம் படைத்தவை என்றும், ஒரு சாதாரண ஜெர்மன் எண்ணி இருக்கிறான். அதனால் இந்த யுத்தத்தில் அமெரிக்கா இறங்கியதிலிருந்து ஜெர்மனிக்கு வெற்றி ஏற்பட வெகு தாமதப்படும் என்று அவர்கள் மனதில் பட்டு இருக்கும். ஒரு சமயம் ஜெர்மனிக்கு வெற்றி என்பதே கிடைக்காமல் போய் விடுமோ என்று இப்பொழுது அவர்களுக்குத் தோன்றினாலும் தோன்றலாம்.

ஆனால் அவ்விதமான மனக்கலக்கம் சொற்ப காலம் தான். நிர்மலமான ஆகாயத்தில் ஒரு கையளவு மேகம் பரவினால் எப்படியோ அப்படி அவன் மனதில் தோன்றும். இப்பொழுது ஜெர்மனியின் பொது மக்களின் அபிப்பிராயம் மனத்தளர்ச்சியும், அலக்ஷியமுமாக இருக்கிறது. ஆனால் இன்னும் தோற்றுப் போனதாகயில்லை. இன்னும் அமெரிக்கா ஜெர்மனியுடன் சண்டை செய்த பிற்பட்டுத்தான் உண்மையில் ஜெர்மனியிலிருப்பவர்கள் ஹிட்லருக்கும், நாஸி கக்ஷிக்கும் எதிராகக் கிளம்புவார்கள்.

## இதாலியின் நிலைமை.

மேற்சொல்லிய விஷயங்களால் ஜெர்மானியைக் காட்டிலும் இதாலியில் அதிக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. யுத்தம் எந்த பக்கம் சாதகமாக முடிந்தாலும் இதாலியின் நிலைமை நம்பிக்கையற்றதாக இருக்கிறது. ஏனென்றால் முஸோலினியை விலக்கி விடுவதற்குக்கூடிய நிலைமைக்கு அவர்கள் இன்னும் வரவில்லை. அப்படிச் செய்ய நினைத்தால் ஜெர்மனியின் ரகசிய போலீஸ் அவர்கள் தேசத்தில் செலுத்தி வரும் அதிகாரம் இன்னும் அதிகரிக்கும். ஆனால் வட ஆபிரிக்காவில் பிரிடிஷார் அடைந்து வரும் ஜயமும் இதாலியில் இருக்கும் சிறிய குழப்பமும் அதிகரித்து இதாலியை பஸ்பமாக்கிவிடும்.

மேலும் இதாலியர்கள் சார்பாக பார்க்கையில், அவர்களின் எதிரியாக யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்தத்தில் பிரவேசித்தது. ரோம், மைலான், நேபிள்ஸ் நகரவாசிகளுக்கும், நியூயார்க்கிலுள்ள அவர்களின் சிநேகித பந்துக்களுக்கும் உள்ள பாந்தத்வம் நிச்சயமாகத் துக்கத்தைக் கொடுக்கக்கூடும். அமெரிக்காவுக்கு, எதிரியாக இருந்துகொண்டு வெறுப்புண்டாக்க பாஸிஸ்டுக் கக்ஷியால் முடியுமோ என்று நான் சந்தேகிக்கிறேன். நாஸிகள்தான் உண்மையில் எதிரிகள். முஸோலினி அவர்களின் பொம்மை. அவர்கள் சொல்படி ஆடிவருகிறான். இதை இதாலியர்கள் தெரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஐரோப்பா கண்டத்திலிருக்கும் இதர தேசத்தினர்களின் நிலைமை என்ன? இப்பொழுது நடந்த சம்பவங்களைக்கொண்டு சொல்லுவதற்கு முடியாமல்



போனாலும், யூகித்து அதைப்பற்றி நம்மால் சொல்லமுடியும். ஆனால் அதில் ஒன்று, இரண்டு சங்கதிகள் அநேகமாக சரியாக இருக்கும். ஐரோப்பாவில் ஜெர்மன் ஆக்கிரமித்த நாடுகளும், ஜெர்மனியில் நடுநிலைமை வகிக்கும் ஐரோப்பாவிலுள்ள நாடுகளும் ஜெர்மனி இறுதியில் தோற்றுவிடுமென்று எண்ணிவருவதாக நாம் நிச்சயமாகச் சொல்லலாம்.

## மதில்மேல் இருப்போர்கள்.

ஹிட்லர் ஐரோப்பாவிலுள்ள ஜனத்தொகையில் ஒரு சிறு பாகத்திற்கு மட்டில் தலைமை வகிக்கிறான். ஐரோப்பா கண்டத்திலுள்ள பெரும்பாலோர் நாஸிகளை வெறுக்கிறார்கள். அவர்களின் நிலைமை எவ்விதம்?

அந்த ஜனங்கள் இருவகைப்படும். ஒன்று நேசதேசத்தார்கள் ஜயிக்க வேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள். மற்றவர்கள் ஒரு பக்கத்திலும் சேராமல் வலுத்த கக்ஷியில் சேரலாம் என்று எண்ணியிருப்பவர்கள். இந்தக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் நேசதேசங்கள் வெற்றியடைவதற்குக் கோருகிறவர்கள். அவர்கள் அவ்விதம் வெளிப்படையாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. அதற்காக ஒரு உதவியும் செய்கிறதுமில்லை. ஏனென்றால், ஜெர்மனி ஒரு சமயம் ஜயம் அடைந்துவிட்டால் அவர்களுக்குக் கெடுதல் நேரிடுமோ என்று பயந்து இருக்கிறார்கள். ஐரோப்பா பூராவும் பெரும் பதவியில் இருப்பவர்களை அம்மாதிரி எண்ணம் உள்ளவர்களை நீ பார்க்கக்கூடும்.

ஆனால் அவர்கள் முக்கியமாய் இருக்குமிடம் ஜெர்மனி எல்லையின் மேற்கேயும், தென்மேற்கிலும்தான். அவர்களுக்கு, நேசதேசத்தார்கள் ஜயிப்பார்கள் என்று சொல்லுவதற்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை. அவ்விதம் நம்புவதற்கும் போதுமான தைரியமும் ஏற்படவில்லை.

## நம்பிக்கை புனருத்தாரணம்.

சண்டை நீடிப்பதிலிருந்து அவர்களின் மனோபாவம் என்ன? அதனால் அவர்களுக்கு புதிய நம்பிக்கைகள் ஏற்படுகின்றன. ஜெர்மானியர்கள் தோற்று விடுவார்கள் என்ற நம்பிக்கை இன்னும் அவர்களுக்கு உண்டாகவில்லை. ஆனால் நாஸிகள் நிச்சயமாக ஜயிப்பார்கள் என்று அவர்கள் நம்பிவிடமாட்டார்கள். ருஷ்யாவில் திடீரென்று கேடான நிலைமை ஏற்பட்டாலும், தூரக்கிழக்கில் இப்பொழுதுள்ள அபாயகரமான நிலைமை இன்னும் நீடித்திருந்தாலுமே தவிர, வலுத்த கக்ஷியில் சேரலாம் என்று எண்ணியிருந்தவர்களும்கூட, நேசதேசத்தார்கள் ஜயிக்கவேண்டுமென்ற முழு விருப்பமுள்ளவர்களின் கக்ஷியில் சேர்ந்து விடுவார்கள்.

இவர்கள் நேசதேசங்கள் வெற்றியடையக் கோருகிறார்கள். என்றைக்காயினும் ஒரு நாளில் அவ்வித வெற்றிகிடைக்கும் என்று நம்பியிருக்கிறார்கள். அதற்காகத் தங்களால் முடிந்தவரையில் உதவி செய்யவும் தயாராகயிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் வசித்து வருகிறார்கள். முக்கியமாக பிரான்ஸில் அநேகர் இருக்கின்றனர். ஜெர்மனியிலும், இதாலியிலும் ஆங்காங்கு சிற்சில இடங்களில் மட்டில் சில தைரியமுள்ளவர்கள் இருக்கிறார்கள்.

## யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்தத்தில் புகுதல்.

அவர்களுடைய மனோபாவம் ரொம்பவும் திட்டமாயிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. இவர்களுக்குவேண்டிய உதவியை, பிரிடிஷ் சாம்ராஜ்யங்களைக் காட்டிலும் ஸ்வதந்திரமும், நம்பிக்கையும் உள்ள தேசம் அமெரிக்காதான் கொடுக்கும் என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. யுத்தத்தில் அமெரிக்கா அவர்கள் பக்கம் சேர்ந்ததில் முடிவில் வெற்றிகிடைக்குமோ என்று அவர்களுக்

கிருந்த கொஞ்ச சந்தேகமும் போய்விட்டது. சென்ற வாரத்தின் முதல் பாகத்தில் அமெரிக்கா பஸிபிக் சமுத்திரத்தில் யுத்தத்தில் ஈடுபட்டு ஐரோப்பாவில் உள்ள சிநேகித நாடுகளுக்கு உதவிசெய்ய முடியாமல்போய்விடுமோ என்று பயந்திருந்தார்கள். ஜனாதிபதி ரூஸ்வெல்ட், "இந்த யுத்தம் ஒன்றே தவிர இரண்டல்ல" என்று தன் சிநேகிதர்களுக்குச் சொன்ன பிற்பாடுதான் அவர்களுக்கிருந்த கவலை போய்விட்டது. மேலும் அமெரிக்காவும், ஜெர்மனியுடன் யுத்தம்புரிய முன் வந்ததும், அவர்களுக்கிருந்த கொஞ்ச சந்தேகமும் நிவர்த்தியாகிவிட்டது.

இப்பொழுது ஐரோப்பா கண்டத்திலிருக்கும் லக்ஷக்கணக்கான நம் சிநேகிதர்கள் தங்களை இனி நிராகரிக்கமாட்டார்கள் என்று தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாதக்கணக்காகவும், வருஷக்கணக்காகவும் பலவந்தத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கவேண்டியிருக்கும். ஆனால் அவைகளை சகித்துக்கொண்டு வெறுக்கத்தக்க எதிரிகளைத் துரத்திவிடுவதற்கு புத்துயிர்பெற்ற பலமும், மன உறுதியும் ஏற்படக்கூடிய நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

---

## ஜெர்மன் திட்டங்களை எவ்விதம் ஜப்பான் குலைத்துவிட்டது.

## ருஷ்யாபேரில் யுத்தம் நடத்தவில்லை.

## ஜப்பானுக்கு எதிராக, ஆசியா கண்டத்தில் ஜப்பான் தலைமை வகிக்க முடியாதபடி நாஸிகள் செய்த சூழ்ச்சிகள்.

"டெய்லி டெலகிராப் பத்திரிகைக்கு" H. A. ஸ்டேண்டிஷ் என்பவர் டிஸம்பர் மாதம் 31-ம் தேதியில் கேபிள் மூலம் அனுப்பிய செய்தி :—

இந்த யுத்த ஆரம்பகாலத்தில் ஷாங்கே, ஹாங்காங்கு முதலிய இடங்களிலிருந்து, சிங்கப்பூர் வழியாக சில பிரிடிஷ்காரர்கள் வந்தார்கள். அவர்கள் அந்த தேசங்களில் பெரிய ஸ்தானங்களை வகித்து வந்தவர்கள். அவர்கள் தங்கள் அனுபவங்களைச் சொன்னார்கள். அவர்கள் சொல்வதை எல்லாம் ஒன்றாய் சேர்த்துப்பார்த்தால், டிஸம்பர் மாதம் 7-ம் தேதியில் ஜப்பான் திடீரென்று மின்னல்மாதிரி தாக்க ஆரம்பித்ததற்கும், ருஷ்யாவுடன் ஜெர்மனி யுத்தம் புரியும்பொழுது அத்துடன் சேர்ந்து ஜப்பானும் சண்டைசெய்வதற்கும், இன்னும் நாஸி திட்டங்களுக்கு ஒத்துழைமையாக உழைப்பதற்கும், ஜப்பானை வம்பில் இழுத்துவிடுவதற்கும், ஜெர்மனி செய்துவந்த சூழ்ச்சிகள் தெரியவருகிறது.

சென்ற ஜூன் மாதத்தில் ருஷ்யாவை ஜெர்மனி படையெடுக்க ஆரம்பித்தது முதல் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. அது முதற்கொண்டு ஜப்பானை யுத்தத்தில் ஈடுபடும்படி மிகவும் தீவிரமாகப் பிரயத்தனப்பட்டது. திடீரென்று ஜெனரல் டோஜோ ஜப்பானுக்கு பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிலிருந்து நாஸிகள் பிரசார நிபுணர்களையும், தந்திரசாலிகளையும், தூரக்கிழக்குப் பிரதேசங்களுக்கு அனுப்பினார்கள். அமெரிக்காவில் ஐந்தாம்படை சூழ்ச்சிகள் செய்து வந்ததற்காக விரட்டப்பட்ட காப்டன் வைடுமேன் (Widemann)என்பவன் ஜெர்மன் பிரசாரங்களுக்குத் தலைமை வகித்து அவர்களைத் தூண்டிவந்தான் அவன் புதல்வன்தான் ஆட் என்பவன். அவனுக்கு வயது 18. அவன் ஜெர்மன் தூதராக நியமிக்கப்பட்டு தகப்பனாருடன் தூரக்கிழக்கில் முக்கியமான இடங்களின் டோகியோ, நான்கிங், ஷாங்கே, பாங்காக், டீன்ஸ்டின், ஸெய்கோன் இவைகளை வெகு ஜல்தியில் பார்வையிட்டுவிட்டு, தூரக்கிழக்கில் ஆங்காங்கு ஐந்தாம் படையினர்களையும் பிரசாரர்களையும் வேலைகளைத் தீவிரமாக செய்துவர முயர்சித்தான்.



## ஆவலுடன் இருக்கும் ஜெர்மானியர்கள்.

இவ்விதமாக நாஸிகள் மிகவும் ஜாக்கிரதையுடன் திட்டங்கள் போட்டனர். அவைகள் நிறைவேறுவதற்கு மிகவும் ஆவலாய் இருந்தார்கள். ருஷ்யாவில் யுத்தப்போக்கு அவர்களுக்கு வரவர மோசமாகப்போய் கொண்டிருந்தது. இவ் விஷயங்கள் ஜப்பானியத் தலைவர்களுக்குத் தெரியாவண்ணம் மறைத்து வைக்கப்பட்டன. இவ்விதம் ருஷ்யாவில் வெற்றிபெற முடியாமல்போனால் ஜெர்மன் பொதுமக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுவிடும். அத்துடன் அதன் கௌரவமும் அடியோடு போய்விடும். இதற்காகத்தான் ஜப்பானும் இதனுடன் சேர்ந்துகொண்டு திடீரென்று ருஷ்யாவைத் தாக்கினால்தான் வெற்றியடைய முடியும் என்ற நோக்கத்துடன் ஜெர்மனி ஜப்பானைத் தூண்டிற்று. ஜெர்மனிக்கு ருஷ்யப் போர்முனையில் தோல்வி ஏற்படும் வரை, ஜப்பானுக்கு என்ன சம்பவங்கள் நேர்ந்தது என்பதைப்பற்றி ஜெர்மனி யாதொரு அக்கரையும் செலுத்தவில்லை. ஜெர்மன் தோல்வியை நவம்பர் மாதத்திற்குப் பிறகு ஜெர்மன் பொது மக்களுக்கு மறைத்து வைக்க முடியவில்லை. அதனால் மறு பக்கத்திலிருந்து ருஷ்யர்களுடைய கவனத்தைக் கவரும்படி திடீரென்று ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. அதற்காக ஜப்பானியர்கள் மஞ்சூரியாவிலிருந்தும், கப்பற்படை தளங்களிலிருந்தும், இன்னும் தூரக்கிழக்கிலுள்ள பலமுக்கியமான இடங்களிலிருந்தும் ருஷ்யாவை நாலா பக்கங்களிலும் மின்னலைப்போல் தாக்குவதற்கு ஏற்பாடாயிற்று. அந்தப்படி திட்டப் பிரகாரம் நடத்துவதற்கும் ஏற்பாடாயிற்று.

## ஜப்பான் ஏமாற்றிவிட்டது.

ஜப்பான், ஹாங்காங், பேர்ல் துறைமுகம், பிலிப்பைன்ஸ் தீவுகள், மலேயா, தாய்லாந்து, இவைகளை யுத்தம் ஆரம்பிக்கப்போவதாகத் தெரியப்படுத்துவதற்கு சில மணிகள் முன்னாலேயே திடீரென்று தாக்கிற்று.

ஆனால் ஏற்கனவே போடப்பட்டுள்ள திட்டப்படி அது ருஷ்யாவைத் தாக்கவில்லை. ஜப்பானியர்களுக்குப் பின்னால் இருந்துகொண்டு லிபியாவிலும், ருஷ்யாவிலும், சண்டைகள் செய்யும்படி வற்புறுத்தி வந்த நாஸிகளுக்கு வெகு கோபம் வந்துவிட்டது. பாங்காக்கில் ஜெர்மன் ரகசியப் போலீஸை நடத்தி வரும் ஆட் என்பவர் தன் கோபத்தை வெளிப்படுத்தியும் காண்பித்தார். ருஷ்யாவில், ஜெர்மனிக்கு நேர்ந்த தோல்வி ஹிட்லர் தன் மக்களிடம் மன்னிப்புக் கேட்கும்படியாகிவிட்டது. ருஷ்யாவை எதிர்த்ததில் ஜப்பானியர்களின் சாமர்த்தியத்தைப்பற்றி பலவாராகச் சொல்லவேண்டும் என்று எண்ணியிருந்ததை அவர் வெளியிடவில்லை.

யுத்தம் ஆரம்பித்தவுடன், ஷாங்கே, ஹாங்காங் இந்த இடங்களில் நடந்த சம்பாஷணைகளிலிருந்து ருஷ்யாவைத் தாக்குவதற்கு ஜப்பான் பயப்படுகிறது என்று தாங்கள் தெரிந்து கொண்டதாக எனக்குச் சொன்னார்கள். ருஷ்யாவுடன் சண்டை செய்வதைத் தவிர்ப்பதற்கு ஜப்பான் எல்லா வழிகளிலும் பிரயத்தனப்பட்டது.

## ஜப்பானை பலமில்லாமல் செய்வதற்குப் போட்ட திட்டங்கள்.

அதனால் ஜப்பானியத் துருப்புகளைக்கொண்டு தனக்கு உபயோகப்படுத்திக் கொள்ள ஜெர்மனி செய்த உபாயங்கள் பலிக்கவில்லை. ஜெர்மனி யுத்தத்தில் ஜயிக்க நேர்ந்தால், மேற்சொல்லிய உபாயத்தால் பஸிபிக் சமுத்திரத்தில் ஜப்பானுக்கு இருக்கும் ஆதிக்கத்தை பலஹீனப்படுத்திவிட்டு, யுத்தத்தில் அதற்குக்கிடைக்கும் வெற்றிகளில் பங்கு எடுத்துக்கொள்ள முடியாதபடி செய்யப்படும் என்று எனக்குச்சொன்னார்கள். ஏற்கனவே சுயநலத்திற்காக ஜப்பானிடம் ஜெர்மனி வைத்திருக்கும் நேசத்தை பெரும்போக்காகக் கருதுவதாக உள்ள அபிப்பிராயத்திற்குப் போதுமான அத்தாக்ஷி இருக்கிறது.

சென்ற இரண்டு மாதங்களுக்குள் தூரக்கிழக்கில் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கும் பெரிய ஜெர்மன் கைத்தொழில் சங்கங்களும், வியாபார சங்கங்களும் பிரசாரம் செய்வது ஷாங்கேயில்போய் ஆக்கிரமிப்பது, இந்த திட்டங்களைக் காரணமாகக்கொண்டு நிபுணர்களையும், பிரதிநிதிகளையும் பிரெஞ்சு குடியேற்ற நாடான இந்தோ-சைனாவை பெருத்த ஜெர்மன் வியாபார ஸ்தலமாக தயாரிக்க வேண்டி அனுப்பியிருக்கின்றன. இந்தோ-சைனாவிலுள்ள ஏராளமான பொருளாதாரங்களை உபயோகிக்கவேண்டிய நோக்கத்துடன் பெரிய யந்திர சாலைகளும் தொழிற்சாலைகளும் உண்டாக்க திட்டங்கள் தயாராக இருப்பதாக நம்பப்படுகிறது.

## நாஸிகள் வாங்-சிங்-வீ அரசாட்சியை விரும்புகிறார்கள்.

மேலும் நான்கிங்கில் வாங்-சிங்-வீன் பொம்மை அரசாங்கத்தாரை ஜெர்மானியர்கள் சிநேகிதம் செய்துகொண்டு மீன்ஸிடினுள்ள வியாபார வாழ்க்கையிலும், அரசியல் முறையிலும் புகுந்துகொண்டிருக்கிறார்கள். ஜப்பானுக்கு எதிராக சீனா-ஜெர்மன் போர்முனை ஏற்படும் என்ற நம்பிக்கையை ஜெர்மானியர்கள் இழக்கவில்லையென்று எனக்கு அறிவிக்கப்படுகிறது. சைனாவில் அநேக இடங்களில் ஜெர்மன் பிரதிநிதிகள் ஜப்பானியர்களை தங்கள் காரியத்திற்காக உபயோகித்து வருவதாக வெளிப்படையாகப்பேசி வருகிறார்கள். டீன்ஸ்டினில் ஜப்பானியர்களின் பிரயத்தனங்களுக்கு எதிராக ஜெர்மானியர்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதில், ஜப்பானியர்களுக்கும், நாஸி பிரதிநிதிகளுக்கும் வருத்தம் ஏற்பட்டுவிட்டது.

தூரக்கிழக்கில் நடக்கும் குழப்பங்களின் மர்மம் தெரிந்தவர்கள், ஜப்பான் நடத்தும் சண்டைக்கு ஜெர்மனி காரண பூதமில்லையென்றும், ஜப்பான் ஜயித்தாலும்சரி, தோற்றாலும்சரி, வரும் காலத்தில் ஜப்பானை அச்சுநாடுகளின் சமமான கூட்டாளியாக விட்டு வைப்பதில்லை என்றும் தீர்மானித்திருப்பதாக நம்புகிறார்கள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 79—(1-வது பிரிவு).

1942—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜனவரி ... | 24, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 25, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| | 26, திங்கட்கிழமை ... | பெருங்களூர் ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 27, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | மலம்பட்டி ... | மாலை | 6.00 |
| | | பரம்பூர் ... | ,, | 6.30 |
| | 28, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | | உடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| | 29, வியாழக்கிழமை ... | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 30, வெள்ளிக்கிழமை... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | மேலூர் ... | ,, | 6.30 |



### பிரஸங்கம் 80—(2-வது பிரிவு).

1942—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜனவரி ... | 31, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| பிப்ரவரி ... | 2, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 3, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | கொடும்பாளூர் ... | மாலை | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |
| | 4, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | வெங்களூர் ... | மாலை | 6.00 |
| | | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| | 5, வியாழக்கிழமை .. | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 6, வெள்ளிக்கிழமை... | மலைக்குடிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | தொலையானூர் ... | ,, | 6.30 |

---

## புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் கிளை ஸ்தாபனங்கள்.

---

சரியான யுத்த சமாசாரங்கள் பரவும்பொருட்டு ஸமஸ்தானத்திலுள்ள கிராமங்களில் புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தபட்டு வருகின்றன.

அவைகளுக்கு நோட்டீஸ்கள், தேச படங்கள் இன்னும் இதர படங்கள், ஆங்கிலத்திலும், தமிழிலும் யுத்த சம்பந்தமான பல பிரசுரங்களும் அனுப்பப்படும்.

முதலாவதாக அடியில்கண்ட இடங்களில் கிளை ஆபீஸ்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

1. ராயவரம்.
2. பனையப்பட்டி.
3. காரம்பக்குடி.
4. ஆலங்குடி.
5. அன்னவாசல்.
6. கீரனூர்.

பொதுஜனங்கள் அங்குள்ளவைகளைப் பூராவாக உபயோகித்து பிரயோஜனமடைவார்கள் என்று நம்புகிறோம்.

## விளம்பரம்.

பிரிடிஷ் அரசாங்கத்தால் தயாரித்த
கியாதிபெற்ற

# "கவசம் பூண்ட மோட்டார்கள்."

என்ற

**யுத்த சம்பந்தமான பிலிம்**

தமிழில்

**புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்**

**ஜனவரிமீ 26-ம் தேதி முதல் 29-ம் தேதி முடிய காண்பிக்கப்படும்.**

**புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் இதை ஜனங்களுக்குச் சிபார்சு செய்கிறது.**

Sri Brihadamba State Press, Pudukkottai, 2,500—24-1-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஜனவரிமீ 31உ [ந. 80

பிரஸங்கம் LXXX.

## புது வருஷத்திய யுத்த விமர்சனம்.

(பிரிடன் பேசுகிறது).

"[வெர்னன் பார்ட்லெட் என்பவரைப்பற்றி முன் அறிவிப்பு வேண்டியதில்லை. அவர் மஹா பிரபலமானவர். மிஸ்ட்டர் பார்ட்லெட் என்பவரே வருங்காலத்தைப் பற்றி மிகவும் சாதகமாக முடியுமென்று எதிர்பார்க்கும்பொழுது நாமும் நம்பிக்கையுடன் இருக்கலாம்."—பத்திராதிபர்].

மணிலா நகரம் இழக்கப்பட்ட பிறகும், ஜப்பானியர் வெகு தீவிரமாக சிங்கப்பூரை நோக்கி, மலேயா வழியாக முன்னேறி வருவதிலிருந்தும் எல்லோரும் மனவருத்தம் அடைந்துவருகிறார்கள். எப்படியிருந்தபோதிலும் 1942-ம் வருஷம், முதல்வாரத்திய ஆரம்பம் முதற்கொண்டே நேசதேசத்தார்களுக்கு அனுகூலமாகவே இருந்துவருகிறதென்று நான் சொல்லுவேன். பிரிடிஷ்காரர்களுக்கும் அல்லது அமெரிக்கர்களுக்கும் சொந்தமாயிருந்த சில பிரதேசங்கள் இப்பொழுது ஜப்பானியர்கள் வசமாய்விட்டன என்று கேட்கும்பொழுது நமக்கு அகௌரவமும், மனக்கிலேசமும் ஏற்படுகிறது. இப்பொழுது நம்மள்வசம் இருந்த விலையுயர்ந்த ரப்பர் தோட்டங்கள், எண்ணெய்க் கிணறுகள், கப்பற்தளங்களும், விமான தளங்களும் யாவும் தாத்காலியமாக இழக்க நேர்ந்துவிட்டது. அதைக்காட்டிலும் இன்னும் அபாயகரமானது நமது சைனியபலம், ஆங்காங்கு மிகவும் சிதறுண்டதுதான்.

சென்றயுத்தத்தில் முடமானதிலிருந்து, சைனியத்தை விட்டுவிலகியதும், நான் பத்திரிகைகளுக்கு எழுதிவருகிறேன். அயல்நாட்டு விஷயங்களைப்பற்றி எவ்வளவு சமாசாரம் சேகரிக்கக்கூடுமோ அவற்றைச் சேகரித்து, செய்தி ஸ்தாபனத்திற்கு அனுப்பினேன். மேற்குப் போர்முனைக்கு முதல்தரமான தலைமை தளகர்த்தர் யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற தீர்மானத்திற்கு வருவதற்கு காலதாமதத்தைக் குறித்து, நான் சந்தித்த நேசதேசத்து ராஜீய வாதிகளும், நடுநிலைமை ராஜீய வாதிகளும், வாரா வாரமாக முணுமுணுத்து வந்தது எப்பொழுதும் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. 1918-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஜெர்மனி பெரிய தாக்குதல் செய்த பிறகுதான் பிரிடிஷ், பிரெஞ்சு, அமெரிக்கா, இதாலி, பெல்ஜியம் இந்த அரசாங்கங்கள் மார்ஷல் போக் என்ற ஒருவரைத் தலைமையாக்க ஒப்புக்கொண்டன. அமெரிக்கா யுத்தத்தில் புகுந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே, தென்மேற்கு பஸிபிக் யுத்தப் போர்முனைக்கு

தலைவரைக் குறித்து முடிவுக்கு வந்தது வியக்கத்தக்க விஷயம். இன்னும் மற்ற யுத்த அரங்கமான அட்லாண்டிக் மத்தியதரைக்கடல் இவைகளுக்கும் சீக்கிரம் ஏற்பாடாகிவிடும்.

சைனாவிலும், அதற்கு அடுத்தாற்போலுள்ள 'தேசங்களிலும் சியாங்-கை-ஷேக் பிரதம தளகர்த்தராக நியமிக்கப்பட்டது மிகவும் முக்கியமான சம்பவம் என்றே சொல்லவேண்டும். "மிகவும் பலமான வெற்றிகளெல்லாம் காலாட் படைகளின் உதவியால்தான்" என்று ஒரு சமயம் அவர் எழுதியுள்ளார். ஜப்பானியர்கள் சைனாவை எதிர்க்கத் தொடங்கியது முதல், இப்பூவுலகிலுள்ள ஜனங்களில் சுமார் கால்பாகமான சீனர்களை ஒருங்குபடுத்தி அவர்களுக்குள் ஐக்கியபத்தியம் ஏற்படுத்துவதில் அவர் தீவிரமான முயற்சிகளை எடுத்துக்கொண்டார். மேற்சொல்லியவிதமாக நல்ல பலமான வெற்றிகளை அடையும்பொழுதெல்லாம், அவர் எப்பொழுதும் தரைப்படையின் உதவியையே நாடினார். ஆனால், சியாங்-கை-ஷேக் இதைக்காட்டிலும் 'இன்னும் முக்கியமான காரியத்தை சாதித்திருக்கிறார். அவர் ராணுவத்தில் சேர்ந்து, சிப்பாய்களாய் இருப்பதில் ஏற்கனவே இருந்த ஏழ்மைத்தனத்தை நீக்கி அதற்கு கௌரவத்தைக் கொடுத்தார். ஒரு நாள் சாயங்காலம் ஹாங்கோவில் விருந்து உண்ணும்பொழுது, சொன்னால் நம்ப முடியாத அவ்வளவு அழகுள்ள என் பக்கத்துவீட்டு சீனப்பெண்மணி காலை பூராவும் கை வெடிகுண்டு எறிய பழக்கிக்கொண்டதால் முன் கை விரைப்பாகப் போய்விட்டது என்று சொன்னது இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அது நாலு வருஷங்களுக்கு முன், ஆனால் இப்பொழுது நாம் எல்லோரும் இங்கிலாந்தில் இருந்துகொண்டு, ஸ்திரீகளுக்குத் துப்பாக்கிகளை உபயோகப்படுத்துவதற்குக் கற்றுக்கொடுக்கலாமா என்று விவாதம் செய்துவருகிறோம். அதே மாதிரியாக நாலு வருஷங்களுக்கு முன் தளகர்த்தர் சியாங்-கை-ஷேக் கொரில்லா (Guerilla) அல்லது தூக்கு தூக்காக சண்டைபோடுவது என்ற யுத்த முறையை அப்பியசித்து வந்திருக்கிறார். தற்காலம் அந்த யுத்தப் பயிற்சியினால்தான் ஜெர்மன் சைனியங்களுக்குப் பின்னால் இருந்துகொண்டு, ருஷ்யர்கள் வெற்றிகரமாக யுத்தம் புரிந்து வருகிறார்கள். இந்தப் புதிய தளகர்த்தரின் கீழுள்ள சீனர்கள் நவீன யுத்தமுறைகளை நன்றாகப் பயிற்சி செய்துகொண்டு, தாய்லாந்திலும், இந்தோ-சைனாவிலும் உள்ள ஜப்பானியர்களுக்கு எதிராக நிற்கின்றனர். நிற்க தாய்லாந்து என்றால் "சுயேச்சை மக்கள் வசிக்குமிடம்" என்று பொருள்படும். இப்பொழுது அது ஜப்பானியர்கள் வசமாகிவிட்டபடியால் அதன் பழைய பெயரான ஸயாம் என்று இனிமேல்சொல்லிவருவோம். ஜப்பானியர்களுக்கு மலேயாவில் ஏற்பட்ட வெற்றிகளைமுன்னிட்டு அதிக பயன் அடைந்துவருகிறார்கள். ஏனென்றால், வெள்ளைக்காரர்கள் தாய்லாந்திலுள்ளவர்களுக்கும், கீழ் நாட்டிலுள்ளவர்களுக்கும் வித்தியாசம் பாராட்டுகிறதில்லை. ஆனால் இது காரணத்தினால் ஜப்பானியர்கள் தங்கள் சைனியங்களை நுழைந்து செல்லும்படி செய்வதற்கும், உளவு பார்த்துக்கொள்ளுவதற்கும் உபயோகமாக்கிப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

ஸயாமிலிருக்கும் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்குப் பத்துசதவிகிதம் சீனர்கள். இந்தோ-சைனாவில் அநேகமாக ஐந்து லக்ஷம் சீனர்கள் வசிக்கிறார்கள். அதனால் பாங்காக், ஹானோய் இவ்விடங்களிலுள்ள ஒவ்வொரு தெருவிலும் எத்தனை பேர்கள் தளகர்த்தர் சியாங்-கை-ஷேக் என்பவரின் ஏஜெண்டுகளுக்கு அனுதாபம் காட்டியும், ரகசியமாக உதவியும் செய்கிறார்கள் என்று அங்கிருக்கும் எவ்வளவு பெரிய நிபுணராலும் சொல்ல இயலாது. பர்மா ரஸ்தாவும், சிங்கப்பூர் துறைமுகமும் பிரிடிஷார், அமெரிக்கர்களின் உபயோகத்திற்குமட்டில் இருந்தால், அவைகளின் வழியாக அவ்விரு தேசங்களும் சியாங்-கை-ஷேக் என்பவரின் ஏராளமான சைனியத்திற்கு வேண்டிய யுத்த தளவாடங்களை அனுப்புவதற்கு முடியும். அவ்வுதவியைக்கொண்டு சீனர்கள், சைனாவில் பெருத்தவெற்றிகளை அடைவதுமட்டுமல்லாமல் அநேக சீனத்துருப்புகளை பர்மாவில் இறக்குவது வெகு எளிதில் நடந்துவிடும். பர்மாவில் சீனர்கள் வந்திறங்கியதும், முதலாவதாக ஸயாமிலிருந்து சிங்கப்பூருக்குச் செல்லும் ஜப்பானியப் போக்குவரத்துகளைத் துண்டித்து, அடுத்தபடியாக முக்கிய கப்பற்படைத்தளமான சிங்கப்பூருக்கு அருகாமையில் பயங்கரமாக முன்னேறிவரும் ஜப்பானியர்களை அழித்துவிடுவதற்குவேண்டிய முயற்சிகளில்



கலந்துகொள்ளுவார்கள். மேலும், தளகர்த்தர் சியாங்-கை-ஷேக் என்பவரை பிரதம தளகர்த்தராகத் தேர்ந்தெடுத்ததே மிகவும் சாமர்த்தியம் என்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஏனென்றால், நாலு வருஷங்களுக்கு மேலேயே ஜப்பானியத் தாக்குதல்களை சீனர்கள் வெகு சாமர்த்தியத்துடன் தடுத்துவந்திருக்கிறார்கள். அவ்விதம் அவர்களைத் தடுத்திராமல் விட்டுவைத்தால், இப்பொழுது ஜப்பானியர்கள் முன்னிலும் அதிகம் பலமுள்ளவர்களாக இருந்திருப்பார்கள் என்றே சொல்லவேண்டும். இப்பொழுது அவர்கள் வசம் தகரம், ரப்பர், எண்ணெய் முதலிய புது சாமான்கள் ஏராளமாக இருக்கின்றன. அதனால்தான் தளகர்த்தர் டோஜோ சைனாவிலிருக்கும் தன்னுடைய துருப்புகளைத் தருவித்து, தென்மேற்கு பஸிபிக்கில் தான் அடைந்த வெற்றிகளுக்குமேல் உபரியாக வெற்றிகள் அடைவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யவே நோக்கம் கொண்டிருக்கிறார். அதனால்தான் சைனாவுடன் சீனர்களுக்கு சாதகமாகவே அவர் சமாதானப் பேச்சை விட்டிருக்கிறார் என்பதில் ஆச்சரியம் இல்லை. சீனர்களின் தலைவரான சியாங்-கை-ஷேக் என்பவருக்குப் பதிலாக, அவரைவிட மனோதிடத்தில் குறைவான எந்தத் தலைவனும் அவ்வித சமாதானத்திற்கு ஒப்புக்கொண்டிருப்பான் என்பதில் சந்தேகமில்லை.

இதுவரையில் தூரக்கிழக்கில் மனதிற்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய கெட்ட செய்திகளையே கேட்டுவந்தபோதிலும், புதுவருஷம் நேசதேசத்தார்களுக்கு நல்லவிதமாக பிறந்திருக்கிறது என்று நான் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், இப்பொழுது நேசதேச ராணுவங்களுக்குள் ஒரு தலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும், சென்ற வாரத்தில் அட்லாண்டிக் சாஸனம் மறுபடியும் புதிப்பிக்கப்பட்டிருக்கிறது. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் முப்பத்திரண்டு அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து கையொப்பம் இட்டன. ஏற்கனவேயே வாஷிங்டனில் கூடிய மகாநாட்டில், தங்கள் திரவிய சாதனம், யுத்த தளவாடங்கள் இவைகளை இந்த யுத்தத்தில் பொதுவாக உபயோகப்படுத்திக்கொண்டு, ஹிட்லரைத் தோற்கடிக்கவும், தனியாக ஒரு தேசத்திற்கு மட்டில் எதிரியுடன் சமாதானம் செய்துகொள்ளுவதில்லை என்றும், 26 அரசாங்கங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஜெர்மனியிலிருந்துவந்த ஒலிபரப்பில், வாஷிங்டன் ஒப்பந்தம் "ஒரு கிருத்திரமமான பிரகடனம்" என்று வந்திருக்கிறது. அது "வளர்ச்சித் தடைபெற்ற பிரசாரம்" என்று மற்றொரு ஜெர்மன் செய்தி கூறுகிறது. ஜப்பானியர்கள் "இது ஒரு முட்டாள்தனமான முயற்சி" என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவ்வொப்பந்தம் வளர்ச்சியடையாத பிரசாரம் என்று நாம் வைத்துக்கொண்டாலும்கூட, இந்த ஒரே தலைமுறைக்குள் இரண்டாவது தடவையாக ஜெர்மானியர்கள் உலகத்தார்களின் அபிப்பிராயத்திற்கு நேர்விரோதமாக நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை அது அவர்களுக்கு ஞாபகமூட்டுகிறது. அவர்களின் நடவடிக்கை பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாக இருக்கிறது என்பதுமட்டுமல்ல. மூன்று மாதங்களுக்கு முன் அதாவது, நான் ருஷ்யாவிலிருந்து திரும்பிவந்ததும் நான் இரண்டு ஜோஸியங்களைச் சொல்லத் துணிவுகொண்டேன். ஒன்று, மாஸ்கோ நகரத்தை எதிரிகள் ஒருபொழுதும் கைப்பற்ற முடியாது. மற்றொன்று, மிஸ்டர் ஸ்டாலின் எவ்வளவு காலம் யுத்தம் புரிய நோக்கம்கொண்டிருக்கிறாரோ அவ்வளவுகாலம் வரை ருஷ்ய மக்களும் அவருடன் சேர்ந்து யுத்தம் புரியத் தயாராகயிருக்கின்றனர் என்பதுதான். மிஸ்டர் ஈடனும், அவருடன்கூட மாஸ்கோவிற்குச் சென்றிருந்தவர்களும், ஐரோப்பாவிலுள்ள எந்த அரசியல் நிபுணரைக் காட்டிலும் மிஸ்டர் ஸ்டாலின் என்பவர் உண்மை நிலைமை அறிந்து காரியாம்சையில் ஈடுபடுபவர் என்று அறிந்துகொண்டிருக்கிறார்கள். அவருக்கு ஜப்பானியர்களை எவ்வளவுதூரம் நம்புவது என்று நன்றாய்த் தெரியும். மேலும், இப்பொழுது வரப்போகும் மாதங்களில் ஸோவியத் துருப்புகள், ஜெர்மானியர்கள் சென்ற வருஷம் ருஷ்யாவில் முன்னேறி வந்ததுபோல் அல்லாமல், இப்பொழுது அவர்களுக்கு வெற்றியடைய சந்தர்ப்பம் வாய்க்காமல் செய்துவிடுவார்கள் என்றும் தெரிந்துகொண்டிருக்கிறார். அதற்காக அவர் அநேக துருப்புகளைத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி, மாரிகாலத்திற்குள் ஏராளமாக யுத்த தளவாடங்களைத் தயாரித்துக்கொண்டு, வஸந்தகாலத்தில் எதிரிகளை எதிர்க்க யக்கம் பரிய ஏற்பாடு செய்துவருகிறார்.

ஹிட்லர் மாரிகாலத்தில் ருஷ்யாவில் தன் துருப்புகள் அநேகமாக சண்டையிட வேண்டியிருக்காது என்று எண்ணியிருந்ததற்குத் தகுந்த முகாந்திரங்களை மிஸ்டர் ஈடன் மாஸ்கோவிற்கு பார்வையிடச் சென்று திரும்பிவருகையில் கண்டறிந்திருக்கிறார். ருஷ்யத் துருப்புகளுக்குப் போதுமானபடி அடுக்கடுக்காக கம்பளங்கள் கொடுக்கப்பட்டன. அவைகளை அணிந்ததும் அவர்கள் மயிரடர்ந்த வடதுருவ கரடிகளைப்போல் காணப்பட்டார்கள். அந்தக் கடுமையான குளிர் காலத்திலும் அவர்கள் ஆயுத மேந்தி யுத்தத்திற்குத் தயாராயிருந்தார்கள். அத்தேசத்தில் உரைந்த பனி காலத்திலும் அவர்கள் சகித்துக்கொண்டு நிர்வகிக்க முடிகிறது. ஆனால் ஜெர்மன் துருப்புகளுக்கு குளிருக்கேற்ற ஆடைகள் கிடையாது. அவர்கள் யுத்தமில்லாமல் அக்குளிர் நிலையைமட்டில் சகித்துக்கொள்ள முடியுமோ என்றுகூட சில நிபுணர்கள் சந்தேகம்கொள்ள ஆரம்பித்தனர். இக்குளிர் காலம் துருப்புகளுக்கு எவ்விதம் பெரிய பாதிப்பு ஏற்பட்டதோ அதேமாதிரியாக யந்திரங்களும் பாதிக்கப்பட்டன. மாரிகாலத்திற்குத் தகுந்தாற்போல் குளிர் பாதிக்காமல் இருக்கும்படி யந்திரங்களுக்குத் தற்காப்பு முறைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மோட்டார்களில் உள்ள யந்திரங்கள் எப்பொழுதும்போல் உஷ்ணத்தை வெளிவிடாமல் வைத்துக்கொள்ள முடியவில்லை. அவைகளிலுள்ள பெட்ரோல் எண்ணெயும் உரைந்துவிடுகிறது. அதனால்தான் எவ்வளவோ ஆயிரக்கணக்கான வண்டிகள் ரஸ்தாக்கள் பக்கமாக நிறுத்திவைக்கப்பட்டன. ஜெர்மானியர்கள் அவைகளை விட்டுவிட்டுப்போய்விட்டதனால் அவர்பின்வாங்குகிறார்களே ஒழிய சிர்குலைந்தோடவில்லை என்றும் ருஷ்யர்கள் முன் எச்சரிக்கையுடன் சொல்லுகிறார்கள். ஆனால் கலுகாவிலும், இன்னும் மற்ற இடங்களிலும் அவர்கள் ஜெர்மானியர்களுடன் வெற்றிகரமாக போர்புரிந்தனர். மேலும் மேற்கு ருஷ்யாவிலிருந்து யூரால் மலைச்சாரல்கள், அல்லது காகேஸஸ் மலைச்சாரல்கள் இவைகளுக்கு தொழிற்சாலைகள் மாற்றப்பட்டிருந்தன. அவைகளிலிருந்து எதிர்பார்க்காதபடி அவ்வளவு சீக்கிரத்தில் யுத்த சாமான்கள் தயாராகிவருகின்றன. மாரிகாலத்தில் ருஷ்ய சாமான்களின் உற்பத்தி அதிகமென்றும், அதே சமயத்தில் ஜெர்மன் சாமான்கள் அதிகமாக உற்பத்தி செய்யமுடியாதென்றும் மிஸ்டர் ஸ்டேலின் தெரிந்து கொண்டுவிட்டார்.

இவ்விதம் ருஷ்யாவில் யுத்த நிலைமை இருக்கும் பக்ஷத்தில் நாமும், ஹிட்லரும் அவரவர்கள் திட்டங்களை மாற்றிக்கொள்ள நேரிடும். அடுத்த வஸந்த காலத்தில் நாஸிகள் அவர்கள் பெரும்பான்மையான முயற்சிகளினால் ருஷ்ய பலத்தை அழிக்கவேண்டும் என்று எத்தனிக்கிறார்கள். மேலும் ருஷ்யாவின் பெரிய சைனியம் பெர்லினைத் தாக்கிவருவதற்கு இடையே நூற்றுக்கணக்கான மைல்கள் இருக்கின்றன. ஆனபோதிலும் ருஷ்யச் சைனியம் பெரியதாக இருப்பதால் சில ஜெர்மன் படைப் பகுதிகளாவது இடையே இருக்கும்படி செய்யாமல் வேறு இடத்தைத்தாக்க ஜெர்மானியர்கள் போகத் துணியமாட்டார்கள். கடைசியில் அவர்கள் அப்போர்முனையை விட்டுவிட்டுப்போகும்பொழுது வேறெங்கே யாவது தாக்கலாம். அமெரிக்கர்கள் பிரிடிஷாருக்கு உதவிபுரியுமுன் பிரிடனைத் தாக்குவதான எண்ணங்கள் பலிக்காது. ஆனால் இந்த ஆசை அவர்களுக்கு அதிகமாகத்தான் இருந்திருக்கும்.

ருஷ்யர்கள் பலமாக எதிர்த்து நிர்ப்பதால் நாஸிகளால் மத்தியதரைக் கடலிலும் இந்த மாரிகாலத்தில் போர்புரிய இயலாது. இப்பொழுது ருஷ்யாவில் அவர்கள் அடைந்துவரும் தோல்விகளினால் ஜெர்மன் ஆக்கிரமித்த நாடுகளில் எங்கும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுவிடும். அதனால் ஆங்காங்கு அவர்கள் வைத்திருக்கும் காவற்படைகளைக் குறைப்பதற்கு முடியாமல் போய்விடும். ஆகையால் லிபியாவில் தளகர்த்தர் ரோமல் விடாமல் கடும்போர் செய்து வந்தாலும்கூட அவனுக்கு உதவிப்படைகள் அனுப்புவது வெகு கஷ்டமாயிருக்கும். மேலும் ஹிட்லர் பிரெஞ்சுக் கப்பற்படைகளின் ஆதிக்கத்தை முதலில் அடைந்தாலொழிய ஆபிரிக்காவின் பலபாகங்களில் யுத்தம் புரிவது மிகவும் சிரமமாய்விடும். ஆனால் அவன் அவ்விதம் செய்யமுடிந்தால் லிபியா யுத்தம் வெகுகாலம்வரை நீடிக்கும். அங்கு நிர்வகிப்பதில் பிரிடிஷாருக்கு அதிகச் செலவு நேரிடும். மேலும் மத்தியதரைக்கடலிலிருக்கும் கப்பற்படையை பஸிபிக் பாகத்திற்கு மாற்றுவதற்கு இன்னும் பல நாட்கள் பிடிக்கும்.



மறுபடியும் தளகர்த்தர் பிடேன் என்பவரின் பிரச்னையைப்பற்றி கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அவன் இப்பொழுது வெகுசீக்கிரத்தில் இரண்டில் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யவேண்டும். அதாவது முதலில் சரண்புகவேண்டும், அத்துடன் பிரெஞ்சுக் கப்பற்படையை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடவேண்டும். அல்லது இதற்குவிரோதமாக எதிர்த்துநிற்க எத்தனிக்க வேண்டும். அவ்விதம் அவன் எதிர்க்க முன்வந்தால் உடனே அவன் ராஜ்யத்தில் எங்கும் ஜெர்மன் ராணுவம் ஆக்கிரமித்துவிடும். . பிரெஞ்சுக்காரர்களின் அபிப்பிராயத்தை ஆராய்ந்து பார்த்தால், எந்தத் தீர்மானமும் ஹிட்லருக்கு மனசஞ்சலத்தைக் கொடுக்கும்.

அதனால் ஒரு சமயம் ஆஸ்திரேலியர்களும், ஸூயஸ் கால்வாய்க்குக் கிழக்கேயுள்ள பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ளவர்களும் அவர்களுக்கு இதற்கு முன் நேரிடக்கூடிய அபாயத்தை சிறியதாக பிரிடிஷார்கள் எண்ணியிருந்ததை தவறு என்று நினைக்கிறார்கள். இருந்தபோதிலும் ஹிட்லர் முன் இவ்வித பிரச்னைகள் இருக்கும்பொழுதே பிரிடிஷார் மத்தியதரைகடல், அட்லாண்டிக் ஆகிய இவ்விரண்டு போர்முனைகளிலுள்ள துருப்புகளைப் பஸிபிக்கிற்கு தைரியமாக மாற்றியிருப்பது கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதுதான். பிரிடிஷ் தீவுகளின்பேரில் ஹிட்லர் படையெடுப்பான் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் மத்தியதரைக்கடலில் நடந்துவரும் சம்பவங்களிலிருந்து நமக்கு வெற்றி கிடைக்கக்கூடியது சாத்தியமாகயிருக்கிறது. ஆதலால் ருஷ்யர்களுடன் ஒன்று சேர்ந்து கிழக்கு ஐரோப்பா போர்முனையில் அச்சுநாடுகளையும் அச்சுநாடுகளைச் சேர்ந்த ஐரோப்பா தேசங்களையும் தாக்கினால் அவர்கள் ஈடெழும்பாமல் போய் விடுவார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. யுத்த நிலைமையைப்பற்றி முடிவாக சற்று யோசித்துப் பார்ப்போம். இதற்கு முன் அச்சுநாடுகள் பற்பல வெற்றிகள் அடைந்துவந்தன. ஏனென்றால் அவர்களுக்குப் போர்வீரர்களும், யுத்த தளவாடங்களும் ஏராளமாக இருந்தன. படிப்படியாக நாமும் ஐரோப்பாவில் ருஷ்யர்களுடனும், ஆசியாவில் சீனர்களுடனும் சேர்ந்துகொண்டு இருப்பதால் இப்பொழுது நமக்கு மனிதபலமும், ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன. நம்முடைய யுத்த தளவாடங்களைக் கூடிய சீக்கிரத்தில் அதிகரிக்கச்செய்வது எவ்விதம். அவற்றை நல்லபயன்தரும் விதமாக பங்கிட்டுக்கொடுப்பது எவ்விதம் இது எனக்குத்தெரியாது. ஆனால் இத்தகைய முடிவுகளைக்கண்டு பிடிக்கக்கூடிய. மனிதர்களின்மேல் நான் பொருமைப்படமாட்டேன்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 24—1—42-லிருந்து 30—1—42-வரை.

ருஷ்யா.—ருஷ்ய வெற்றிகளைப்பற்றி மேலும் தகவல் கிடைக்கின்றன. ருஷ்யச் சைனியங்கள் புதிதாக்கப்பட்டு, அந்தரங்கமான வலுவுடன் இருந்து சண்டைசெய்வதால், அவைகளின் வேகம் கொஞ்சமும் குறையாமல் ஏழு வாரங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டது முதல் பெரும் குறுக்கு எதிர்ப்புகள் நடந்துகொண்டே இருக்கின்றன. 5,000 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள பிரதேசம் எதிரி கையிலிருந்து பிடுங்கப்பட்டது. இவ்வாரத்தில் உவரோவோ, டப்னோ, ஆண்டிரியாப்போல், டோரோபெட்ஸ், ஐபட்நாயாட்வினு பிடிபட்டன. ரிஜெவ் ருஷ்யர்களால் சூழ்ந்துகொள்ளப்பட்டது. லெனின்கிராட், ஸ்மாலென்ஸ்க்கிற்கு இடையிலுள்ள எதிரி வகுப்புகள் துளைக்கப்பட்டன. இப்படியே வடக்கே கோலம் வரையிலும், தெற்கே டோரோபா வரையிலும் முன்னேறித் தாக்குகின்றன. லெனின்கிராட் யூக்ரேன் இருப்புப் பாதையை நாஸிகளின் போக்குவரவிற்கு ஜீவநாடியாகயிருந்ததில், ருஷ்யர்கள் 70 மைல் அகலத்திற்குத் துளைத்தனர். ரிஜெவ்-வெலிகியே பாதையிலுள்ள நிலிடோவோ பிடிபட்டது. இவ்விதம் வெற்றிகரமான ருஷ்யச் சைனியம் ஸ்மாலென்ஸ்க்கை நோக்கிப்போகின்றன. மாரிகாலம் முடிய ஸ்மொலென்ஸ்கில் நிலைக்கலாம் என்று நாஸிகள் நினைத்ததற்கு

மாருக அப்பட்டணத்தில் அவர்களால் எதிர்த்து நிற்கமுடியுமா என்பதே சந்தேகமாகிவிட்டது.

**லிபியா.**—லிபியப் போர்முனையில் பிரிடிஷ் படைகள் ஜடபாயாவிற்குக் கிழக்கே வாபஸ்பெற்று எல்-அகீலாவிலிருந்து மிஸுரஸ்வரை ஆதாரமாகக்கொண்டு சண்டை செய்கின்றன. இது 150மைல் வடகிழக்கில் இருக்கின்றன. சிலநாட்களுக்கு முன் ஜெனரல் ரோமல் மெர்ஸாபிரேகாவுக்குக் கிழக்கேவந்து வேவுபார்த்தான். ஒருக்கால் சாம்ராஜ்யப்படைகளுடைய ஸ்தானங்களை நெருங்கிப் பார்ப்பதற்கோ அல்லது ஜெர்மன் படைகளைத்தடுக்க அவர்கள் செய்யும் படையெடுப்பு முயற்சியைத் தடுக்கவோ அம்மாதிரி செய்யலாம். அதன் பயனாக ஜடபாயா—ஆண்டிலாட்—ஸௌனு முக்கோணத்தில் பெரியதொரு சண்டை நடந்தது. மிஸுரஸ் வரையிலும் எதிரிப்படைகள் வந்திருக்கின்றன. இது நேரான சண்டையில்லாதபோதிலும், ஆங்காங்குள்ள இடங்களை அவரவர்கள் பிடித்துக்கொள்ள முயற்சி செய்ததேயாகும். கப்பல் சண்டையில் வேகம், மறுகுதல் மூலமாக ஜயத்தையடையப் பார்ப்பதுபோலவே காணப்பட்டது. ஜெனரல் ரோமல் படைக்குச் சிறிது உதவி வந்திருக்கிறது. விமான ஆதிக்கம்கொண்டு ஆச்சின்லக் எதிரிகளின் முழுபலத்தையும் முறிக்கவே தீர்மானம்கொண்டிருக்கிறார்.

**தூரக்கிழக்கு.**—தூரக்கிழக்கு நிலையை பின்வருமாறு நிர்ணயிக்கலாம் :—

**பர்மா.**—ரெங்கூன்மீது குண்டுவீச்சுகள் நேர்ந்தாலும் சேதம் அதிகமில்லை. எதிரிக்கு நஷ்டம் கடுமை. உதாரணமாக ஒருநாள் படையெடுப்பில் 7 பாம்பர்கள், 9 பைடர்களடங்கிய ஜப்பானியப் படையெடுப்பில் 7 விமானங்கள் நாசமாயின. அமெரிக்க (A. V. G.) விமானங்களும், பிரிடிஷ் விமானப்படையும் மறைமுகமாகவே இருந்து சண்டைசெய்கின்றன. சீனப்படைகள் யூனன், ஸயாம் எல்லைப் பிரதேசங்களை வசப்படுத்திக்கொண்டன. பிரிடிஷ் விமானப்படை பாங்காக்கின் மேல் குண்டு வீசின.

மெர்குவி காலிசெய்யப்பட்டது. மோல்மீன் நம் ராணுவ அதிகாரிகளிடம் இருக்கிறது.

ஜெனரல் வேவல் ரங்கூனுக்கு வந்து அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

**மலேயா.**—மேற்கே (பட்டி பஹாத்) என்ற இடத்தை எதிரி பிடித்துக் கொண்டான். (கிழக்கே) எண்டவ் என்ற இடத்திலும் இறங்கியிருக்கின்றனர். க்ளுவாங் (மேற்கே) ஸெஸ்காராங் இடங்களில் சண்டை நடக்கிறது. 26-ம் தேதி வாம்பைர் என்ற ஆஸ்திரேலியக் கப்பலும், தானட் என்ற பிரிடிஷ் கப்பலும் எண்டவ்விற்கு சமீபத்தில் ஜப்பானிய சஞ்சாரி ஒன்றையும், 3 நாசகாரிகளையும் பார்த்து ஒரு நாசகாரியை அமுக்கின. மற்றொன்று சேதமாயிற்று. தானட்டும் தானாக மூழ்கிவிட்டது.

**டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகள்:**—இவ்வாரத்தில் மக்காஸ்கர் ஜலசந்தியில் 100 சண்டைக் கப்பல்களடங்கிய ஜப்பானியக் கப்பல்கூட்டம் ஒன்று அழிக்கப்பட்டது. இக்கூட்டம் பாலிக் பாபன் என்ற இடத்தில் முன்னேற முயற்சித்தன. இந்த இடம் டச்சு போர்னியோவில் உள்ள ஒரு எண்ணெய் பிரதேசம். நேசதேசக் கப்பல், விமானப்படை அமெரிக்க நாசகாரிகளுடன் சேர்ந்து எதிரிக் கப்பல்களை பல பிடித்துவிட்டன. எதிரிகளுக்கு 11 கப்பல்கள் நஷ்டம்; 6 மூழ்கடிக்கப்பட்டன, 11 சேதமாயின. இதில் ஒரு சண்டைக் கப்பலும் சேர்ந்திருக்கிறது. சமீபத்தில் கிடைத்த ரேடியோ செய்தி மூலம் மொத்தநஷ்டம் 46 கப்பல் என்று தெரிகிறது. ஜப்பானியர் 4 சாமான் கப்பல்களின் சேதத்தைமாத்திரம் சொல்லுகின்றனர். இன்னும் இந்த சண்டை நடந்து கொண்டிருக்கிறது.

**பிலிப்பைன்ஸ்.**—பாடன் தீபகர்ப்பத்தின் மேற்கே ஸுபிக்குடாவில் ஜப்பானியப்படைகள் இறங்கின. மெக் ஆர்தரின் படைகள் வலது பக்கத்தில் கடுமையாகத் தாக்குகின்றனர். அங்குள்ள முஸ்லீம் வாசிகளுக்கு அதிகமான உதவி அளிக்கப்பட்டு வருகிறது. கத்திகளை உபயோகிப்பதில் இவர்கள் சாமர்த்தியமுள்ளவர்கள்.



சைனா.—காண்டன்-கௌலூன் ரயில்வேய்க்குக் கிழக்கே 13 மைல் தூரத்திலுள்ள டம்ஷூயியை சீனப்படைகள் திரும்பப்பிடித்தன. கௌலூனிலிருந்து 22 மைல் தூரத்திற்கு விரட்டி லுங்கன், பின்ஷௌ இடங்களையும் பிடித்தனர்.

இந்தோ-சைனாவிலுள்ள ஹனாயில் சீனர்கள் குண்டுகள் வீசி ஜப்பானியருக்கு ஆச்சரியத்தை விளைவித்தனர். எதிரிக்கு 75 விமானங்கள் சேதம்.

**பஸிபிக் பிரதேசங்களிலுள்ள** ஜப்பானியப் படைகள் நியூ பிரிடன் தீவிலுள்ள ரபாலில் இறங்கின.

ஒரு அமெரிக்க நீர்மூழ்கி, விமானமேற்றும் ஜப்பானியக் கப்பலைத்தாக்கியது. மற்றொரு அமெரிக்க மோட்டார் படகு 5,000 டன் இடையுள்ள எதிரிக் கப்பலை ஸுபிக்குடாவில் மூழ்கடித்தது.

எதிரிகளால் வங்காளக்குடாவில் இரண்டு வியாபாரக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இதற்கு ஒருவித எச்சரிக்கையும் எதிரி கொடுக்கவில்லை. இதில் இந்தியர்கள் ஒருவரும் சேதமாகவில்லை.

**அமெரிக்கா ஒற்றுமைக்கூட்டம்** ஒன்று 21 நாடுகள் சேர்ந்து ரயோடிஜெனீரோவில் கூடி அச்சுநாடுகளுடன் சம்பந்தத்தை விட்டுவிடுவதாகத் தீர்மானித்தன. முதலாவதாக இந்த நாடுகளில் ஏதாவது ஒன்றின்மேல் நாஸிகள் ஆக்கிரமணம் செய்தால் யாவும் சண்டையில் ஈடுபட்டதாக ஆகுமென்றும் இரண்டாவதாக ஒன்றுக்கொன்றுள்ள ஒற்றுமையைக் காப்பாற்றிக்கொள்ளவும், மூன்றாவதாக உள்நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு அடங்கி, அந்தந்த நாடுகளின் நிலைமைக்குத் தக்கவாறு அச்சுநாடுகளான ஜெர்மனி, ஜப்பான், இதாலி நாடுகளுடன் சேரக்கூடாதென்றும், தீர்மானித்தன. ஜப்பான் அமெரிக்க நாடுகள்பேரில் சண்டை தொடுத்ததாலும், ஜெர்மனி, இதாலியும் அமெரிக்கா பேரில் சண்டை தொடுத்தாலும் இவ்விதம் செய்யப்படும். நான்காவதாக மறுபடி சமாதானம் செய்வதானால் யாவருடைய அனுமதியும் கோரவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பொருளாதாரக் கமிட்டியும் இதே விதமாக அச்சுநாட்டுச் சம்பந்தத்தை முறிக்க நிச்சயித்துவிட்டது.

இங்கே ஏற்பட்ட அரசியல் கமிஷனும் அட்லாண்டிக் சாஸனத்தை அனுசரித்தே "ரயோ" சாஸனத்தை ஏற்படுத்திக்கொண்டன.

பாராகுவே, உருகுவே, பிரஸீல், பொலீவியா, அரசியல் சம்பந்தத்தை முறித்துவிட்டன.

**சேர்ந்த செய்கை.**—பிரிடிஷ், அமெரிக்க யுத்த சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஸர் ஜான் டில் பிரிடிஷ் பிரதிநிதியாயும், அமெரிக்காவை ஜெனரல் மார்ஷலும் சம்பந்தப்படுத்துவார்கள். இதன் பயனாக இரு நாடுகளின் விளைபொருள்கள், யுத்த சாமான்கள், கப்பல் முதலியவைகளில் ஒற்றுமை ஸ்தாபிக்கப்பட்டது.

**அமெரிக்கத் துருப்புகள்** வட அயர்லாந்தில் வந்து இறங்கியிருக்கின்றன. இந்த யுத்தத்தில் இதுதான் முதல்தடவையாக அமெரிக்கத் துருப்புகள் ஐரோப்பாவிற்கு வந்தது. இவைகளை ஸர் ஆர்ச்பால்டு ஸின்கிளேர் வரவேற்றபோது "பத்திரமாக இவைகள் இறங்கியதிலிருந்தே உலக யுத்தத்தில் ஒரு மாறுதலும், ஹிட்லருக்குக் கெடுதியையும் தெரியப்படுத்துகின்றன. ஜப்பானிய மந்திரியும் இதன் பலனை மறக்க முடியாது. இங்கிருந்துகொண்டு நீங்கள் பொதுவான எதிரியை எதிர்க்கலாம். எங்களுடன் சேர்ந்து நீங்கள் எதிரி நாட்டிலேயே சென்று சண்டையை நடத்தி ஆக்கிரமணத்திற்குள்ளானவர்களை விடுவிக்க முடியும்; ஆகவே பிரிடனைக் காப்பாற்றவும் எதிரியை எதிர்க்கவும் ஆக இரண்டு பிரயோஜனத்திற்காக இப்படைகள் வந்திருக்கின்றன."

அமெரிக்க ஜனாதிபதியும் தற்சமயம் 8 அல்லது 10 அமெரிக்க பாதுகாப்புப் படைகள் அமெரிக்காவிற்கு வெளியே இருக்கிறதாக அறிவித்தார்.

**அமெரிக்கத் திட்டப்படி.**—இவ்வருஷத்தில் சென்ற 18 மாதங்களாக செய்ததைவிட மூன்று மடங்கு அதிகயான விமானங்களும் டாங்கிகளும் செய்து 1939-க்கு முன் ஹிட்லர் வசமுள்ளவைகளுக்குச் சமமாகச் செய்யப்படும். டாங்கிகள் மூன்று மடங்கும், பீரங்கிகள் ஐந்து மடங்கும், விமானங்கள் ஏராளமாயும் செய்யப்படும். அமெரிக்கச் சைனியத்தில் 6 மடங்கு அருப்பும், 32 மடங்கு யுத்தசாமான்களும் செய்யப்படும்.

அமெரிக்க சபைக்கு 17,722,565,474 டாலர்கள் கொடுக்கப்பட்டன. இதன் மூலம் அமெரிக்கக் கப்பற்படை முதலியவைகளைச் சரிப்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறது. வாரத்தில் ஏழு நாட்களில் 24 மணி நேரமும் வேலைசெய்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி 9,50,000 டன் சண்டைக் கப்பல்களும், 500 சிறு கப்பல்களும், 1,799 பலவகைப்பட்ட கப்பல்களும் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மந்திரி சபைக்கு 12,556,672,474 டாலர்கள் சைனிய விருத்திக்குக் கொடுக்கப்பட்டது. 23,000 விமானங்களும், 10,000 மனிதர்களும் சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**கப்பல்.**—புதன்கிழமை, நவேமார் என்ற ஸ்பெயின் கப்பல் எதிரி யூ-படகால் மூழ்கடிக்கப்பட்டு, பிரிடிஷ்காரர்கள்பேரில் பழி சாற்றப்பட்டது.

31,000 டன் இடையுள்ள பர்ஹாம் என்ற பிரிடிஷ் கப்பல் எதிரிகளால் மூழ்கடிக்கப்பட்டது.

**நம்பிக்கைத் தீர்மானம்.**—காமன்ஸ் சபையில் இத்தீர்மானத்தைக் கோரும்போது மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்னதாவது:—

"மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு நாம் பின்கண்ட நிலையைச் சமாளிக்க வேண்டிவந்தது. ஜெர்மானியர் ருஷ்யாவில் முன்னேறிவந்தனர். வீரத்தனமாக ருஷ்யர்கள் தடுத்துவந்தனர். லெனின்கிராட், மாஸ்கோ, ரோஸ்டவ் முதலியவை எதிரிவசமாகும்போல் காணப்பட்டு, மாரிகாலத்தில் நிலைத்துவிடுவார்கள் என்றும் காணப்பட்டது. எங்கே அதுபோய் முடியுமென்று சொல்லமுடியாதுபோலும் இருந்தது. ஆனால் இப்போ வேறுவிதமாக மாறி ருஷ்யர்கள் சார்பாக வெற்றி கிடைத்துவருகிறது.

"ஸிரெனைகா திரும்பப் பிடிக்கப்பட்டு அதை நிலை நிறுத்திக்கொள்ளவேண்டி இருக்கிறது. ரோமலின் படைகள் பூரா அழிக்கப்படவில்லை. ஆனால் மூன்றில் இரண்டு பங்கு எதிரிகள் அழிந்திருக்கின்றனர்.

"ரோம்ல் அடைந்த நஷ்டத்துடன் மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கப்பற்படையும், நீர்மூழ்கிகளும் சேர்ந்து எதிரிகளின் படை ஏராளமாக நாசம் செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற சில நாட்களாக பலவித வெற்றிகள் அடையப்பட்டன.

"இது வெற்றியானாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, வெற்றியென்றுதான் இவைகளை நாம் சொல்லவேண்டும். மிகவும் லாபகரமான விஷயம்தான். (சிரிப்பு).

"ஏதோ அதிகமான நஷ்டத்திற்கு உட்பட்டதாகவே காணப்படும். ஆனால் யாவரும் ஒன்று சேர்ந்திருந்தால், கடைசிவரை சண்டை செய்தால், முன்பு இருந்ததைவிட அதிகமான வெற்றிபெறமுடியும்.

"அடுத்தபடியாக 26 நாடுகள் ஒன்று சேர்ந்து இருக்கின்றன. இதில் கிரேட் பிரிடன், சாம்ராஜ்யம், அமெரிக்கா, ருஷ்யா, சைனு, டச்சு நாடுகள் முதலிய நாடுகள் முக்கியம்.

"இவைகளின் லக்ஷியம் ஹிட்லரையும், அவன் லக்ஷியங்களையும் ஒழிக்க ஏற்பாடு செய்வதுதான். கடைசியான நாஸிப்பூண்டு ஒழியும்வரை நாம் சண்டை செய்வோம்.

"ஜப்பானுக்கு விரோதமாக நாம் சண்டைசெய்து, ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, டச்சு நாடுகள், மலேயா, இந்தியா முதலியவைகளைக் காப்பாற்ற முயற்சிப்போம்.



"பொதுவாக யுத்த சாமான்கள், விளைபொருள்கள், கப்பல்களைச் சேகரம் செய்து சண்டைசெய்ய திட்டம் போடப்பட்டது.

"கடலிலும் பொதுவான கப்பல்களை விருத்திசெய்துவருவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அமெரிக்கத் திட்டங்களும் 100-லிருந்து 160-விகிதம் வரை விருத்தி செய்யப்பட்டது. இது முடிவடைந்தால் 1943-ல் பெரிய சைனியங்களைக்கொண்டு, மூன்று, நான்கு மடங்குகள் விருத்தி செய்யப்பட்டு சண்டையில் ஈடுபடுவோம்,

"அதைப்போலவே 1943-ல் ஆஸ்திரேலியா, இந்தியா, டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களில் சரியாக நின்று சண்டை செய்வோம்.

"ஜப்பானை மாத்திரம் தோற்கடித்தால் ஹிட்லர் தோற்றுப்போனதாக ஆகாது. ஆனால் ஹிட்லர் தோற்றுப்போனால் நேசநாடுகள்யாவும் ஒன்று சேர்ந்து ஜப்பானை சுலபமாகத் தோற்கடிக்க முடியும்.

"இதனால் பஸிபிக் யுத்தத்தைக் கவனிக்காமல் இருக்கிறோமென்று இல்லை. காமன்ஸ் சபையில் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது. 464 பேர்கள் சாதகமாயும், ஒருவர் பாதகமாயும் வோட் செய்தனர்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **19—1—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya) | | | |
| | 'விரோதி மோட்டார் போக்குவரத்து.—எல் அகிலா (El-Agheila) பிரதேசத்தில்." | | | |
| | ஸிஸிலி (Sicily). | | | |
| | விமான நிலயம்.—காமிஸோ (Comiso), கடேனியா (Catania). | அநேக விமானங்கள் தீப்பற்றின. | | |
| | கிழக்குப்போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள் விமானச் சண்டைகள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 5 விமானங்கள். | 16 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்.—மூவார் (Muar) பிரதேசத்தில். | | | 1 பைடர் விமானம். |
| | படகுகள்.—மூவார் (Muar) நதி முகத்துவாரத்தில். | அநேகம் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| | விமான நிலயம்.—கோலாலம்பூர் (Kualalumpur). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **19—1—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தாய்லாந்து (Thailand).** | | | |
| | விமான நிலயம்.—மெஷாட் (Meshod). | | | 2 விமானம். |
| | **பஸிபிக் (Pacific).** | | | |
| | ஜப்பானிய சஞ்சாரி, எண்ணெய்க் கப்பல். — ஜோலோ (Jolo)விலிருந்து 100 மைல் தூரத்தில். | ஒரு பெரிய சஞ்சாரி மூழ்கடிக்கப் பட்டது; எண்ணெய்க் கப்பல் தீப்பற்றியது. | | |
| **20—1—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்.)** | | | |
| | இரவில்.—கப்பற் படைதளம்.-எம்டன் (Emden). | பெருந்தீக்கள் மூட்டப் பட்டன. | 4 விமானங்கள். | |
| | **லிபியா (Libya).** | | | |
| | சைனிய வாஸஸ்தலங்கள்—ஹோம்ஸ் (Homs). | | | |
| | மோட்டார் லாரிகள்.—சமுத்திரக்கரை ரஸ்தாவில். | | | |
| | மோட்டார் வண்டிகள்.—ஸுயாரா (Zuara). | | | 1 விமானம். |
| | துறைமுகம், கடல் விமானதளம்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | **கிரீஸ் (Greece).** | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—ஸலாமிஸ் (Salamis). | | | |
| | **கிரீட் (Crete).** | | | |
| | ஹெராக்கிலியான் (Heraklion). | | | |
| | பாட்ராஸ் (Patras), காரின்த் (Corinth) குடாக்கடலில். | | | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்.—போர்முனை முழுவதிலும். | | 1 விமானம். | 7 விமானங்கள் |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விரோதிகள் ஆக்கிரமித்த விமான நிலயங்கள்.-மலேயா (Malaya)வில். | | | |
| | விமானங்கள், விமானம் தங்குமிடங்கள், விமான நிலயங்கள்.—க்வாண்டன் (Kuantan). | | | |
| | விமான நிலயம்.—கோலாலம்பூர் (Kualalumpur). | | 1 விமானம். | |
| | **பர்மா (தாய்லாந்து எல்லைப்புறம்).** | | | |
| | விமான நிலயம்.-ரோகேங் (Rohaing). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **21—1—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—அநேக ராணுவ லக்ஷியங்கள் தொழிற்சாலைகள் உள்பட, சைனியங்களின் துடிசைகள், சாமான்வண்டி.—வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—துறைமுகங்கள்.— ப்ரெமன் (Bremen), எம்டன் (Emden). | | | |
| | விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland). | | | |
| | கப்பல் துறைகள்.—பொலாயின் (Boulogne). | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி மோட்டார் வண்டிகள்—மற்ற லக்ஷியங்கள்-எல் அகிலா (El-Agheila), ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்.—போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 23 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்கா, ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்து.—பாரிட் புலாங் (Parit Bulong)குக்கு வடக்கில். | அநேக வண்டிகள் சேதமாயின. | | |
| | **பஸிபிக் (Pacific).** | | | |
| | வேவுபார்த்தல்.-தென்மேற்கு பஸிபிக் பிரதேசத்தில். | | | |
| **22—1—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—மன்ஸ்டர் (Munster). | பெருந்தீக்கள் மூட்டப் பட்டன. | | |
| | விரோதி விமான நிலயங்கள்.-ஹாலந்து (Holland). | | | |
| | கப்பல் துறைகள்.-டன்கர்க் (Dunkrik). | | | |
| | வெடிகண்ணிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | விரோதி விமான நிலயம்.-வட பிரான்ஸ் (France). | | | |
| | ஒரு ஸப்ளைக் கப்பல்.—பிரிஸியன் (Frisian) தீவுகளுக்கு அருகாமையில். | கப்பல் தாக்கப் பட்டது. | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி மோட்டார் படைகளின் கூட்டங்கள்.—வேடி பாரெஜ் (Wadi Faregh)க்கு வடக்கில். | | | |
| | விமானச் சண்டைகள்.—லிபியா (Libya)வில். | | 2 விமானங்கள். | 3 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **22—1—42.** | (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | லிபியா (Libya)—தொடர்ச்சி. | | | |
| | துறைமுகம் அங்கு தங்கியிருக்கும் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli). | 1 சண்டைக் கப்பல் தீப்பற்றியது. வலது பக்கம் கப்பல் அமுக்கப்பட்டது. | 1 விமானம். | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமான நிலயந்திலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்.—போர் அரங்கம் முழுவதிலும். | | 8 விமானங்கள். | 23 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—யாங்பெங்க் (Yong peng) பிரதேசத்தில். | | | 1 பைடர் விமானம். |
| | ஸராவாக் (Sarawak)—பஸிபிக் (Pacific)—நெதர்லாந்து கிழக்கிந்திய தீவுகள் (N. E. I.) | | | |
| | குச்சிங்(Kuching)—(ஸராவாக்கின் தலை நகரம்). | | | |
| | விரோதிக் கப்பல்கள், யுத்தக் கப்பல்கள்.—மக்காஸர் (Macassor) ஜல சந்தி. | 1. யுத்தக் கப்பல் 2. சஞ்சாரிகள் தாக்கப்பட்டன. | | |
| **23—1—42.** | (வெள்ளிக்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya). | | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | வெடிமருந்து கிடங்குகள், கட்டடங்கள், இன்னும் இதர லக்ஷியங்கள்.—பூராட் எல் ஹஸன் (Buerat Al Hsun). | | | |
| | விரோதி மோட்டார் பகுதிகள்.—ஸர்டி (Sirte)க்கு அருகாமையில். | | 1 விமானம். | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்.—கிழக்குப் போர்முனை எங்கும். | | 6 விமானங்கள். | 11 விமானங்கள். |
| | விரோதி ஸ்தானங்கள், போக்குவரத்து.—போர்முனைக்குப் பின்னால். | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகள், போக்குவரத்து.—லாபிஸ் (Labis)க்குத் தெற்கில். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—1—42.** | (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | பஸிபிக் (Pacific) | | | |
| | விரோதித் துணைக்கப்பல்.—மக்காஸர் (Macassor) ஜல சந்தி. | 2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. | | |
| | ஜப்பானியக் கப்பல் கூட்டங்கள்.—போர்னியோ (Borneo)விலுள்ள பேலிக் பேப்பன் (Balik Papan). | 2 கப்பல்களும், 1 நாசகாரியும், நன்றாகத் தாக்கப்பட்டன. | | |
| | இந்தோ-சைனு (Indo China). | | | |
| | விமான நிலயங்கள்.—இந்தோ-சைனு (Indo China)வில். | | | |
| **24—1—42.** | (சனிக்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும் நடந்தவைக்கு தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya). | | | |
| | விரோதி மோட்டார்களின் கூட்டங்களும், டாங்கிகளும்.—எல்காரா (Elgara). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஜடபாயா—ஸௌவுனு—மோஸஸ் (Jadabaya—Saunnu—Msus) பிரதேசங்களில். | | | 3 விமானங்கள்; அநேகம் சேதமாயின. |
| | லக்ஷியங்கள், கட்டடங்கள் சைனிய இருப்பிடங்கள், மோட்டார் வண்டிகள் உள்படவும்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | ஸிஸிலி (Sicily). | | | |
| | விமான நிலயங்கள்.—காமிஸோ (Comiso). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | ஒரு பெரிய விரோதித் துணைக்கப்பல்.—மத்தியத்தரைக்கடலின் மத்திய பாகத்தில். | யுத்தக்கப்பலும், சஞ்சாரியும் தாக்கப்பட்டன. ஒரு பெரிய கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—விமானச் சண்டைகள்.—போர்முனை முழுவதிலும். | | 11 விமானங்கள். | 39 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—தாய்லாந்து (Thailand)—(அமெரிக்கா, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், கப்பல் துறைகள்.—பாங்காக் (Bangok). | | | |
| | இந்தோ-சைனு (Indo China). | | | |
| | ஹானேய் (Honai). | | | |
| | மலேயா (Malaya). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—லாபிஸ்(Labis). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 25—1—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya).** | | | |
| | விரோதி மோட்டார் படைகளும், கவசம் பூண்ட பகுதிகளும்.—ஜடபாயாவிற்கும் அண்டிலாட்டிற்கும் (Jadabaya and Antelat) இடையில். | | | 3 விமானங்கள். |
| | மோட்டார் போக்குவரத்து.—நொபிலியா (Nofilia) விலிருந்து பில்லனோரம் (Phillaenorum) வரையுள்ள ரஸ்தாவில். | அநேக வண்டிகள் சேதமாயின. | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—ஜடபாயா (Jadabaya), எல் அகிலா (El Agheila). | | 1 விமானம். | |
| | **கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 20 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—பாடு பாஹாட் (Batu Pahat). | | | |
| | விமான நிலயம்.—கோலாலம்பூர் (Kualalumpur). | | | |
| | **பஸிபிக் (Pacific).** | | | |
| | விரோதி துணைக்கப்பல்.—மக்காஸார் (Macassor) ஜலசந்திக்கு அருகாமையில். | அநேக சரக்கு சாரிகள் தாக்கப்பட்டன; கப்பல் மூழ்கடிக்கப்பட்டன. | | |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 20—1—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | சொற்பச் சேதம். | 3 விமானங்கள். | 2 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| —1—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்.** | | | |
| | பாடான் (Batan) தீபகற்பத்திலிருக்கும் தரைப்படைகளுக்குப் பாதுகாப்பு. | | 3 விமானங்கள். | |
| | **நியூகினி (New Guinea).** | | | |
| | ராபால் (Rabaul) | 3 விமானங்கள்; இன்னும் அநேகம் சேதமாயின. | | |
| —1—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவிலலை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—மெர்ஸிங் (Mersing). | | | |
| | **போர்னியோ (Borneo)—நெதர்லந்து கிழக்கிந்திய தீவுகள் (N. E. I.)** | | | |
| | விமான நிலயம்.—போர்னியோ (Borneo). | | | |
| 2—1—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்.—கிழக்கிலும், தென்கிழக்குக் கடற்கரையிலும். | சேதமுமில்லை; ஒருவரும் கொல்லப்படவில்லை. | 1 பாம்பர் விமானம். | |
| | **மத்தியதகைக்கடல் (Mediterranean).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | 8 விமானங்கள்; 4 விமானங்கள் சேதம். | |
| | **பர்மா (Burma).** | | | |
| | ரெங்கூன் (Rangoon). | | | |
| | மோல்மீன் (Moulmein). | | | |
| | **சுமத்திரா (Sumatra)—நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.)** | | | |
| | கப்பல்கள்.—வட சுமத்திரா (Sumatra)வின் கடற்கரைக்கு அருகாமையில். | | | |
| 23—1—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia)-வில் ஒரு கடற்கரை நகரம். | அநேக வீடுகள் சேதமாயின. | | |
| | இரவில்.—விமான நடமாட்டமே இல்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—1—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | 1 பாம்பர் விமானமும், 1 பைடர் விமானமும். | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரங்கூன் (Rangoon). | | 21 விமானங்கள்; இன்னும் அநேகம் சேதமாயின. | |
| | சுமத்திரா (Sumatra)—நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.) | | | |
| | விமான நிலயம்.—பெலாம்பாங் (Pelambang). | | | |
| **24—1—42.** (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரங்கூன் (Rangoon). | | 7 பாம்பர் விமானங்களும்; 9 பைடர் விமானங்களும்; இன்னும் அநேகம் சேதமாயின. | |
| | மலேயா (Malaya). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | டச்சுக் கிழக்கிந்திய தீவுகள் (Dutch East Indies). | | | |
| | ஸமாரிண்டா (Samarinda). | | | |
| **25—1—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கடற்கரைப் பிரதேசங்கள்—இங்கிலாந்தி (England)ன் தென் மேற்கில். | சில வீடுகள் சேதமாயின. | 1 விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ஜோஹோர் (Johore). | விரட்டப் பட்டன. | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **25—1—42.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.) | | | |
| | அம்பாயினு (Amboina), ஸொராங் (Sorong), நாம்லியா (Namlea). | | | |
| **26—1—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஐயர்லாந்தின் வடபாகம். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.) | | | |
| | விமான நிலயம்.—சற்றியுள்ள பிராந்தியங்களில். | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**சரியான மனப்பான்மை.** நேசதேசங்களின் சேர்க்கையில் 26 நாடுகள் சேர்ந்திருக்கின்றன. இவ்விதம் பஹிரங்கமாக நாடுகள் சேர்ந்து பலம்பெற்றிருப்பதைக் காணும்போது அச்சுநாடுகளின் பிரசாரம் மும்மரப்பட்டு இவ்வொற்றுமையைக் கலைக்க ஏற்பாடு செய்யலாம். இதில் சேர்ந்த நாடுகள் யாவும் ஜனநாயகத்தைப் பின்பற்றி சுயேச்சையாக இருக்கக்கூடியவைகள். கக்ஷி அரசாங்கத்தை ஒழித்து ஒரு இனத்தைக்கொண்டு அரசு நடத்தும் நாஸிகளைப்போலல்ல. ஆகவே அச்சுநாடுகளுக்கு பொறாமை ஏற்படலாம்.

ஜெர்மனி, இதாலி, ஜப்பான் முதலிய அரசாங்கத்தினர் நேசதேசங்களின் யுத்த முயற்சியைக் கலைத்துவிட ஏற்பாடுசெய்வார்கள். உதாரணமாக ருஷ்யாவில் ஜெர்மானியர் ஸ்மொலன்ஸ்க்கைவிட்டு ஓடுவதை மறந்து சிங்கப்பூருக்கு அருகில் ஜப்பானியர் பெரும் வெற்றிகளைப் பாருங்கள் என்பார்கள். அட்லாண்டிக்கில் ஜெர்மானியரின் முயற்சி பலிக்காதபோனாலும் பஸிபிக்கில் பிரிடிஷ், அமெரிக்கர்களின் நிலையைப் பாருங்கள் என்று சொல்லலாம். லிபியாவின் கதியை மறந்து ஆஸ்திரேலியாவிற்கு அருகிலுள்ள பயத்தைப் பாருங்கள் என்று அவர்கள் அடையும தோல்விகளை மறக்கும்படி சொல்லிவருவார்கள். சீனர்கள், ஆஸ்திரேலியர்கள், பிலிப்பைன் வாசிகள் இவர்களை கவனியாது பிரிடன், அமெரிக்கா, ருஷ்யாவையே கவனிப்பதாகப் இவ்விதமாகத் தூபம்போட்டு, பிரசாரம் செய்யலாம். இந்தியாவைக் கவனிக்காமல் இருப்பதாகக்கூட அவர்கள் சொல்லுவார்கள்.

இவ்விதம் பிரசாரம் செய்வது சுலபம்தான். விஷயங்களை அறியாமல், பிரசாரம் என்னவென்று தெரியாமல் சண்டை நடக்கும் ஆபத்தான இடங்களில் இருப்பவர்களுக்கு இதுபடலாம். ஆனால் ருஸ்வெல்டு ஜப்பானிய யுத்தம்

ஆரம்பமானவுடன் சொன்னதுபோலவே இந்த யுத்தத்தைப்பற்றி பூராவாக எடுத்துக்கொண்டு மனதைத் தேறுதல் செய்துகொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம்.

மேலும் இவ்விதம் உலகத்திற்கே கலக்கத்தை உண்டுபண்ணி யாவரையும் தூண்டிவிட்டு சண்டையைப் பின்னிருந்து நடத்தும் முக்கிய எதிரி யாரென்று தெரிந்துகொள்ளவேண்டாமா. ஜெர்மனி தோற்றால் இதாலியால் தனியே சமாளிக்க முடியுமா? ஜப்பான் மாத்திரம் தனியே அமெரிக்கா, பிரிடிஷ், சீன, டச்சுப் படைகளை எதிர்த்து நிற்க முடியுமா? ஐரோப்பாவிலும் மத்தியதரைக் கடலிலும் ஜெர்மானியருக்கு எதிராக கடுமையான சண்டையை நடத்திவரும் தருணத்தில் அதை நிறுத்திவிட்டு அங்கிருக்கும் சைனியத்தைப் பிரித்து ஜப்பானியரைத் தடுக்க அனுப்பினால் மறுபடி ஜெர்மன் படைகளை பலப்படுத்திக் கொண்டு, வரும் வஸந்த காலத்தில் மறுபடி சண்டையை ஆரம்பித்துவிடுவார்கள்.

வி வி வி வி வி வி வி

**நாடுகள் ஒன்றுசேர்ந்து சொல்லுவதை நம்புங்கள்.** நல்லவேளையாக நேசநாடுகளின் யுத்த முயற்சி சாமர்த்தியமுள்ளவர்களால் கையாளப் பட்டு வருகிறது. பொதுமக்கள் ஒன்றும் அறியாமல் போடும் இரைச்சலுக்கு இணங்காமல் பிரிடிஷ் மந்திரி சபை நிலை நின்றிருக்கிறது. மேலும் அமெரிக்காவிலும் இதைப்போலவே ஒழுங்கான தீர்மானம் உண்டாகியிருக்கிறது. உதாரணமாக ஐரோப்பாவின் மேற்கு ஒரு போர் முனையை ஆரம்பிக்க, எகிப்தில் ஜெர்மானியரைத் தடுக்க வைத்துக்கொண்டிருக்கும் படைகளை அழைத்து இருந்தால் இப்போது வடஆபிரிக்காவில் அடையும் வெற்றி கிட்டியிருக்காது. அமெரிக்காவும், பிரிடனும் ருஷ்யாவிற்கு இரட்டிப்பு மடங்கான உதவியனுப்பாமல் இருந்தால் இப்போது உடுக்கத் துணியும் தின்பதற்கு உணவும் கிடைக்காமல் ஜெர்மானியர் பயந்து ஓடுவார்களா? மாஸ்கோ, லெனின் கிராட், ரோஸ்டவ் முதலிய பட்டணங்கள்தான் பத்திரமாக இருந்திருக்குமா?

ஆகவே இந்த பளுவை யுத்தத்தை முன்னிருந்து நடத்துவோருக்கே விட்டுவிடுவோம். (1940-ல் பிரிடனின் பாதுகாப்பிற்குத் தேவையானபோது எகிப்திற்குச் சாமான்கள் அனுப்பாததையும் கவனிக்கவேண்டியதுதான்). தாத்காலிகமான தடைகள் இருக்கத்தானிருக்கும். எங்கே தாக்குவது என்பதும் அவர்களுக்குத்தான் தெரியும். ஹிட்லர் ராணுவத்தின் ஸர்வாதிகாரம் பெற்றாலும் அவனுடைய கௌரவத்திற்கும், மனிதர்களுக்கும் சாமான்களுக்கும்தான் கெடுதி ஏற்படும்.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவும்?** "தனது சைனியம் களைத்து அடிவாங்கி மேலும் தோற்றுவரும் இச்சமயத்தில் ஹிட்லருக்கு சில திருப்தி ஏற்படலாம், அதாவது இந்தியாவை நேசதேசங்கள் சரியாக காபந்து செய்துவருவதை ஜப்பானியர் தடுக்க முயற்சிப்பதுதான்." ஹிட்லர் தான் முக்கிய எதிரி என்று சமீபத்தில் கர்னல் நாக்ஸ் சொன்னதை தாறுமாறாக அர்த்தம்பண்ணி "இந்தியாவையே கவனிக்கமாட்டார்கள்" என்றும் தூரக் கிழக்கில் பிரிடிஷ்காரர்களின் சைனியத்திற்கு அதிக நஷ்டத்தை விளைவித்துக் கொள்ளாமலிருக்க ஜெர்மானியருடன்தான் சண்டை செய்வார்களென்றும் அச்சு நாடுகள் சொல்லிவருகிறார்கள்.

அதுபோகட்டும்!! வேவல், ஆச்சின்லக், ஹட்டன், சயாங்-கை-ஷேக், பிரெட் போன்றவர்கள் சாதாரண அசாமிகளல்ல. "சிங்கப்பூரை கடைசிவரைக் காப்பாற்றுவோம்" என்று சர்ச்சில் சொன்னதும் வீண்வார்த்தையல்ல. தூரக் கிழக்கில் நேசதேசங்கள் பலம்பெற்று 35 சதவிகிதம் ஜப்பானிய விமானங்கள் வீழ்த்தப்படுகின்றன. ஆனால் திடீரென்று ஒரே நாளில் எதிரியை முறியடிக்க முடியாது. எதிர்நோக்கி சண்டைசெய்து எதிரியை முறிக்கும் வரையிலும் தூரக்கிழக்கிலுள்ள இடங்களைக் காப்பாற்றவேதான் நினைத்திருக்கின்றனர்.



இவ்வித நிலைமையில் இந்தியா தனது வேலைகளைச் சரியாகச்செய்து, அரசாங்கத்தாருடன் ஒத்துழைத்து, அவர்கள் சொல்படி நடக்கவேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். அப்படி தைரியமாக நடந்துகொண்டால் அதன் தியாகத்திற்குத் தக்கவாறு வெற்றிபெற்றவுடனே கௌரவத்தை அடையலாம்.

வி வி வி வி வி வி வி

**இருபது குடியரசு நாடுகள்.** ரயோடிஜெனிரோவில் சமீபத்தில் கூடிய கூட்டத்தின் பயனாக அடைந்த ஒற்றுமையை யாவரும் கவனித்திருக்கலாம். மந்திரவாதி தலைப்பாகையை தூக்கி அதிலிருந்து அணிலை வெளிவிடுவதுபோல மிஸ்ட்டர் கார்டல் ஹல்தான் இதற்குக் காரணம். இதில் சேர்ந்த 20 குடியரசு நாடுகளும் அச்சுநாடுகளுடன் தனியே நின்று சண்டைசெய்ய விரும்பவில்லை. அது எப்படியானாலும் தேச அமைப்பிலும், தொழிற்சாலை நடத்துவதிலும், இதரவிதமான அபிப்பிராயங்களிலும் ஒன்றுக்கொன்று வித்யாசம் இருந்தாலும் ஒரே விதமாக அச்சுநாடுகளுக்குத் தடையாக ஒன்றுசேர்ந்திருப்பதுதான விசேஷம்.

மெக்ஸிகோ வடஅமெரிக்காவில் இருக்கிறது. கரிப்பியன் கடலில் 3 மத்திய அமெரிக்காவில் 6 நாடுகளும், பாக்கி 10 தென் அமெரிக்காவிலும் இருக்கின்றன. அர்ஜென்டைனாவில் ஜெர்மானியருக்கு அதிகமான அக்கரைகள் இருக்கின்றன. சில்லியின் அரசாங்கமும், ராணுவம், கப்பற்படையும் ஜெர்மானியர்களால்தான் பழக்கப்பட்டன. பெருவிலும், பிரஸீலிலும் ஜப்பானியருக்கும் ஜெர்மானியருக்கும் அதிக சம்பந்தமிருக்கிறது. மெக்ஸிகோ, சில்லியில் ஜப்பானியருக்குச் சொந்தமான இடங்களும் இருந்தன. இந்நாடுகள் யாவுக்கும் ஒரே கடற்கரைதான். உலகத்திற்குத் தேவையான ஏராளமான சாமான்களை உண்டுபண்ணுகின்றன. தற்சமயம் இங்கேயுள்ள துறைமுகங்கள் வழியே நடத்தும் வியாபாரத்தைப்பற்றிதான் முக்கியமாக கவனிக்கவேண்டியிருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**நடுநிலைமையும் யுத்தத்தில் ஈடுபடாமலிருப்பதும்.** இக்காலத்திய பையன்கள் யாவருக்கும் நார்வே, ஹாலந்து, பிரான்ஸ் முதலியவைகளை ஜெர்மானியர் ஆக்கிரமித்ததால் ஏற்பட்டது என்னவென்பது தெரியும். அட்லாண்டிக்குப் பக்கத்திலுள்ள எல்லாவிதமான துறைமுகங்களை வியாபித்துக்கொண்டு சிறு கப்பல்கள் முதல் சண்டைக்கப்பல்கள் வரை பழுதுபார்த்துக்கட்டவும் எண்ணெய் நிரப்பிக்கொள்ளக்கூடிய வசதிகள் ஜெர்மானியரால் அடையப்பட்டன.

ஆனால் அச்சமயம் அமெரிக்கா யுத்தத்திலீடுபடவில்லை. இப்பொழுதோ அமெரிக்கா யுத்தத்திலிறங்கிவிட்டது. ஆகவே ரியோ, மாண்டிவிடியோ, வால்பரெய்ஸோ, காலோ, கன்லெப்ஷன், லிமா, முதலியனவும் கொலம்பியா, வெனிஜூலா, கோஸ்டாரிகா, நிகராகுவா, ஹோண்டுராஸ் முதலியவைகளிலும் அச்சுநாட்டு ஐந்தாம்படையான, ரகசிய பிரசார கோஷ்டியினர் வேலை செய்து வருகின்றனர். ஆனால் நடுநிலை நாடுகள் என்றே இவைகள் சொல்லி வந்தன.

உண்மைதான். ரகசிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு நடுநிலைமை என்று சொல்லிக்கொள்ளுவது ஒரு உபாயம்தான். நடுநிலைமை என்று சொல்லுவது இந்த இரண்டு வருஷங்களாக பலிக்காமலிருக்கிறது. ஒரு தெருவு எரிந்து கொண்டிருந்தால் தீக்கும், தீ யணைக்கிறவர்களுக்குமிடையில் நாம் நின்றுகொண்டு நடுநிலைமை வகிப்பதாகச் சொல்லுவது வீண்வார்த்தைதான். இப்பொழுது மிஸ்ட்டர் கார்டல் ஹல் 20 குடியரசு நாடுகளை யுத்தத்தில் ஈடுபடுத்தாமலே அச்சு நாடுகளின் சம்பந்தத்தைக் கெடுத்துவிடும்படி செய்திருக்கிறார்.

அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டாலும் இதர நாடுகள் ஈடுபடவில்லை என்று சொல்லிவிட்டன. இருந்தாலும் முடிவாக அமெரிக்கக் கப்பல்கள் எல்லாத் துறைமுகங்களையும் உபயோகித்துக்கொள்ளலாம். தென் அமெரிக்கத் துறைமுகங்

களையும் உபயோகிக்கலாம். ஆனால் அச்சுநாடுகள் அவ்விதம் செய்யமுடியாது. (அமெரிக்காவிலேயே இருக்கும் கனடாவிற்கும் இதுபோன்ற சௌகரியங்கள் உண்டா என்பது தெரியவில்லை. ஆனால் அதற்குக் கொடுக்காவிட்டால் பல இடைஞ்சல் ஏற்படும்).

இவ்விதமாக எதிரிகளுடன் சம்பந்தத்தை முறித்துக்கொண்டதால் எதிரிகளுக்கு பல தொந்தரவு விளைந்திருக்கிறது. தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, இடங்களிலுள்ள ஜெர்மன் இதாலிய ஜப்பானியப் பிரஜைகளை எதிரிகளாக பாவிக்கப்பட்டு, அவர்கள் ஒரு விதமான வியாபாரம் முதலியன செய்யக்கூடாது. விரோதிக் கப்பல்களோ விமானங்களோ, இரண்டு அமெரிக்க நாடுகளிலும் வந்து போகக்கூடாது.

இந்த ஏற்பாடு மிகவும் முக்கியமானது. மத்திய அமெரிக்கா, கரிபியன் ஜனநாயகங்கள் பனமாவைப் பத்திரப்படுத்தி இரண்டு சமுத்திரங்களிலும் அமெரிக்கக் கப்பற்படை போகும்படி செய்துவிட்டன.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யாபேரில் அதிகக் கவனம்.** கடந்த ஐந்து மாதகாலமாக ருஷ்யாவில் விடாமல் முன்னேறிய ஹிட்லரின் சைனியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபிறகு, இப்போது அவர்கள் திரும்பி ஓடுவதை நம்பமுடியாதுதான். உண்மையை நம்பாமலும் அதிகமான விஷயங்களை எதிர்பார்ப்பதும் சகஜம்தான். ராணுவ வியாக்கியானம் செய்கிறவர்கள்கூட திடமாக ஒன்றும் சொல்லாமல் சண்டையில் ஒரு மாறுதல் ஏற்படுமென்று மாத்திரம் சொல்லிவந்தனர். முதலில் தீவிரமான குறுக்குத்தாக்குதல்கள் என்றனர். பிறகு பிரமாதமான குறுக்கு எதிர்ப்புகள் என்றனர். ஆகவே ஜெர்மானியர் பின்னோக்கி ஓடும் சமயத்தில் ருஷ்யர்கள் செய்வது உண்மையென்றே தெரிய வந்தது.

சமீபத்தில் மூன்று வாரங்களாக ருஷ்யச் சைனியம் அடையும் தொடர்ந்த வெற்றிகளால் உலகமே ஆச்சரியப்படுகிறது. இப்போது யாவரும் ருஷ்யச் சண்டை எதிரிகளைத் தொலைக்கிறது என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். பிரகிருத நிலைமையைப்பார்த்தால் ஒன்று ருஷ்யர்கள் அழியவேண்டும் அல்லது ஜெர்மானியர்களின் ராணுவம் முறியவேண்டும்.

இருந்தாலும் ருஷ்யர்கள், முடிவான வெற்றியைப்பற்றி தற்சமயம் ஒன்றும் சொல்லவில்லை. இப்பொழுது ஜெர்மானியர் பின்வாங்குவதால் பூராவாக ஜெர்மானியர் முறிந்துவிட்டதாகவும் சொல்லவில்லை. எதிரிகளும் தடுத்துப் பார்க்கின்றனர். அவர்கள் வசத்திலும் ஏராளமான சாமான்கள் இருக்கின்றன. ருஷ்யாவில் போக்குவரத்து சாதனம் அதிகரித்துவிட்டது. ஆகவே வியாக்கியானக்காரர்கள் பலவாரங்களாக நடந்த விவரங்களை கவனிக்கச் சொல்லுகின்றனர்.

(i) டிமோஷென்கோ தெற்கே யுத்தத்தை நடத்துகிறான். அவனுக்கு அதிகமான உதவியில்லாமலேயே சண்டை செய்கிறான்.

(ii) இதைப்போல் நடுபாகத்திலும் தேர்ச்சிபெற்று பழக்கமான துருப்புகள் மத்திய பாகத்தில் சண்டை செய்கின்றன.

(iii) தவளை தத்துவதுபோல் ஒன்றன்பின் மத்திய பாகத்திலும் கிழக்கிலும் உள்ள தொழிற்சாலைகளைத் திட்டப்படி ஒழுங்குபடுத்துவதற்காக ஸ்டாலின் போட்ட திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

(4) பிரிடிஷ் அமெரிக்க யந்திரப்படையும், விமானங்களும், பீரங்கிகளும் ஏராளமாக சமயத்திற்கு வந்து சேருகின்றன.

(5) சைபிரியா மஞ்சுகோவிலுள்ள ருஷ்யச் சைனியங்கள் இன்னும் அழியாமல் இருந்து ஜப்பானியரைத் தடுக்கத் தயாராக இருக்கிறது.

**ஸர் ஸ்டாப் போர்டு கிரிப்ஸ் 1, 2, 5, விஷயங்களுக்குப் பதில் சொல்லும் விதமாக 90,00,000 முதல் தரமான ருஷ்யப் படைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். இது ஹிட்லருக்கு கொஞ்சம் வேதனையைச் செய்யும்.**



**சிப்பாய்த் தலைவன்.** ஹிட்லர் தலைமை வகித்தது முதல் எல்லா இடங்களிலும் ஜெர்மன் சைனியம் பின்வாங்கின. ஒரு பெரும் பிழையை ஹிட்லர் செய்தான். டிஸம்பர் மாதத்திலேயே ஜெர்மன் படைகள் பின் வாங்கியபோது வான் பிராஷட்ஸ் என்ற ராணுவத் தலைவர் "வேண்டாம் நமக்கு ருஷ்யச் சண்டை. திரும்புவோம்" என்றான். அவனை ஒழித்துவிடு என்று ஹிட்லர் உத்தரவிட்டான். மொஜெயிஸ்க்கில் எப்படியாவது ஒரு ஜெர்மன் சைனியத்தை நிறுத்திவை என்றான். அதன் பயனைப் பார்ப்போம். இரண்டு மாதங்களுக்கு முன்பு மொஜெயிஸ்க்கிலிருந்துகொண்டு இரண்டு பிரிவாக ஜெர்மன் சைனியம் கினின், டுலா வழியாக மாஸ்கோவைச் சூழ்ந்துகொண்டன. இந்த இரண்டு பிரிவும் கத்திரிக்கப்பட்டன. ருஷ்யர்கள் தடுப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமலிருந்தால் இவை இரண்டும் கலைந்து போக வேண்டியதுதான். ஹிட்லரைத் திருப்தி செய்ய மொஜெயிஸ்க்கிலுள்ள படை மாத்திரம் நின்றது. இருந்தாலும் ஜெர்மன் சைனியத்தின் நிலைமாறிவிட்டது. கலினின், ஸ்டாரிட்ஸா ர்ஷெவ் மூலமாகவும், கலூகா வழியேயும் ஸ்மொலென்ஸ்க்கை ருஷ்யர்கள் எதிர்க்கின்றனர். மொஜெயிஸ்க்கிலிருந்து வெளிக்கிளம்பின ஜெர்மன் படைகள் ருஷ்யர்களால் சூழ்ந்து கொள்ளும் தருவாயில் இருக்கின்றன.

கலூகாவிற்கும் ர்ஷெவ்விற்கும் இடையில் 100 மைல்கள் இருக்கின்றன. இருந்தாலும் ருஷ்யர்கள் தந்திரமாக லக்ஷியங்களை அமைத்துவருகின்றனர். மாஸ்கோவிலிருந்து மேற்கே நான்கு இருப்புப் பாதைகள் இருக்கின்றன :—

(1) ர்ஷெவ் வழியே ரீகாவை நோக்கி மேற்கேயும்,

(2) வியாஸ்மா வழியே தென்மேற்கில் ஸ்மொலென்ஸ்க்கை நோக்கியும்,

(3) தென்மேற்கே பிரயான்ஸ்க்கு வழியே கீவ் வரையிலும்,

(4) டுலா ஓரெல் வழியே கார்கவ் கிரிமியாவை நோக்கித் தெற்கேயும்,

ஸ்மொலென்ஸ்க்கில் ஒரு யுத்த முனை இருந்தால் பலவிதத்திலும் போக்குவரவு சாதகம் இருப்பதால் மிகவும் சாதகமாக இருக்கும்.

ருஷ்யர்கள் படை வலது பக்கமாக வந்து ர்ஷெவ்வைத் தாக்கிவிட்டது.

இடது பக்கமாக வரும் படை மாஸ்கோ பிரயான்ஸ்க் இருப்புப் பாதையைக் கடந்து மாஸ்கோ-ஸ்மொலென்ஸ்க் பாதையை நோக்கிப் போகிறது.

நேசநாடுகள் இவைகளைப் பிடித்துக்கொண்டால் கார்கவ் வரையில் போக முடியும். இங்கேயும் கிரோவ், லியுடினோவோ என்ற பட்டணங்களைப் பிடித்து விட்டன.

இருந்தாலும் நாம் அதிக உத்ஸாகம் கொள்ளவேண்டாம். உண்மையில் இந்த இடத்திற்கும் அடுத்து மேற்கேயுள்ள மார்க்கத்திற்கும் 170 மைல்கள் இருக்கின்றன.

---

# எதற்காக நாம் சண்டையிடுகிறோம்.

---

(ஜனவரி மாதம் 27-ம் தேதி வந்த மெயில் பத்திரிகையில் ஜப்பானியரைக் குறித்து எழுதியிருந்த தலை அங்கத்தைப் படிக்கவேண்டியது அவசியம்.)

இந்தியாவிலும், இன்னும் கிழக்கிலுள்ள மற்ற தேசங்களிலும் எதிரிகளின் ரகசியப் பிரசாரம் ஐந்தாம்படை திறமையாக வேலைசெய்கிறது. முக்கியமாக படிப்பில்லாதவர்களிடமும், ராஜீய விஷயத்தில் அதிருப்தி கொண்டவர்களிடமும் தீவிரமாக ஐந்தாம்படை வேலைசெய்கிறது. அதன் நோக்கம் என்னவென்றால் ஜப்பானியர்கள் நடத்தையை மொழுகி மூடத்தான் இம்மாதிரி செய்யப் படுகிறது. ஜப்பானியர்கள் இந்தியர்களின்மேல் பிரியமுள்ள ஜாதியார் என்றும், அவர்கள் செய்யும் யுத்தம் நல்ல எண்ணத்துடன் செய்யப்படுகிறதென்றும், அதற்காக

துரைத்தனத்தை நடத்த பக்ஷமுள்ள நிபுணர்களை நியமிப்பதற்காக தேசங்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறதென்றும், இவ்விதம் நியமிக்கப்பட்டவர்களுக்கு பிரிடிஷார் ஒரு பொருட்டில்லை என்றும் ஐந்தாம் படையைக்கொண்டு பொய் பிரசாரம் செய்கிறார்கள்.

சென்ற இரண்டு வருஷங்களாக ஜெர்மானியர்களைப் பற்றி நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். பிரசித்திபெற்ற ஜெர்மன் ஒருவனே, ஜப்பானியனைக் கிழக்கிந்திய ஜெர்மானியர்கள் என்று எண்ணவேண்டுமென்று சொன்னான். மெயில் பத்திரிக்கையில் வந்த எச்சரிக்கையில் விபரமாகச்சொல்வது நலமென்று நமக்குத் தோன்றுகிறது.

மெயில் பத்திரிகைக்கு எங்கிருந்து அந்த சங்கதிகள் கிடைத்ததோ அந்த இடத்திலிருந்து எனக்கும் செய்தி கிடைத்திருக்கிறது. 1937-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் சீன நிருபர் மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகைகு எழுதியனுப்பியதிலிருந்து எடுத்து இருக்கும் கீழ்கண்ட குறிப்புகள் நம்பத்தகுந்தவை.

இதைப்படித்துப் பார்த்தபிறகு யாராவது ஜப்பானியர்களுடன் சிநேகம் வைத்துக்கொள்ள விரும்புவார்களானால் அது நமக்கு பிரமிப்பைக் கட்டாயம் உண்டாக்கும் !!

## சீனாவில் ஜப்பானின் பயங்கர ஆட்சி.

1937-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 13-ம் தேதி ஷாங்கேயின் சீன தற்காப்பை ஜப்பானிய சைனியம் அழித்த ஒரு மாதத்திற்கு பிறகு நான்கிங்கில் (சீனத் தலைநகர்) ஜப்பானியத் துருப்புகள் நுழைந்தன. ஷாங்கேயுக்கும் நான்கிங்கும் இடையில் 200 மைல் தூரம் இருக்கிறது. இந்த சம்பவம் நவீன காலத்தில் ராணுவவெற்றிகளில் மகத்தானதாக தேச சரித்திரத்தில் எழுதப்படக்கூடியது. ஆனால் இந்த வெற்றியின் கௌரவம் ஜப்பானிய துருப்புகள் தாங்கள் ஆக்கிரமித்த நகரங்களில் நடந்துகொண்ட தன்மையால் குறைந்துபோய் விட்டது. நான்கிங் நகரத்தில் ஜப்பானிய சைனியம் நெருங்கினபோது அவர்களின் விமானங்கள் "நல்ல ஜனங்களைப் பாதுகாக்கவும், அமைதியாக அவர்கள் வசிக்கவும், அவர்களுடைய சொத்து, சுகங்களை அவர்கள் அனுபவிக்கவும், ஜப்பானிய துருப்புகள் முடிந்தவரை பிரயாசை எடுத்துக்கொள்ளுவதாக" கண்டெழுதியிருக்கும் பத்திரிகைகளை பறக்கவிட்டன.

டிஸம்பர் மாதம் 10 தேதியில் தளகர்த்தர் டான் ஸெண்ட்சிக் என்பவரை நகரத்தை விட்டுவிடும்படி ஜப்பானியத் துருப்புகளின் தளகர்த்தரான இவான் மத்ஸுயி சொன்னான். "எதிர்ப்பவர்களுக்கு இறக்கமன்றியும் கொடுமையாகவும், அவன் இருந்த போதிலும் சண்டையிடாதவர்களிடமும், ஜப்பானிடம் விரோதப் பான்மை காட்டாமல் இருக்கும் சீனத் துருப்புகளிடமும் ஜப்பானிய துருப்புகள் பக்ஷமாகவும், தயாளமாகவும் இருப்பதாக" அறிவித்தான். இந்த உறுதி மொழிக்குத்தக்கபடி எவ்வாறு ஜப்பான் சைனியம் நடந்து வந்தது என்பது இதில் கண்ட விஷயத்திலிருந்து தெரியவரும். நான்கிங்கில் பிரவேசித்த உடன் காலத்தில் நடந்த சம்பவங்களின் சுருக்கம், டிஸம்பர் மாதம் 15ம் தேதியில் நான்கிங்கில் அந்நிய நாட்டு ஜாதியினரின் சங்கத்தில் சேர்ந்தவரும், நடுநிலைமையான மனப்பான்மை உள்ளவரும் பெருமை வாய்ந்தவருமான ஒரு நபர் ஷாங்கேயிலுள்ள தன் சிநேகிதர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

## அடக்க முடியாத தொந்தரவுகள்.

"நான்கிங்கில் அநேக ஜனங்கள் ஜப்பானியத் துருப்புகள் நுழைந்தவுடன் யுத்த நிலைமையால் உண்டாகக்கூடிய தளர்ச்சி முடிவாகும் என்றும், வெடி குண்டுகளின் அபாயம் தவிர்க்கப்படும் என்றும், தங்களுக்குச்சாதகம் ஏற்படும் என்றும் வெளிப்படையாகச் சொன்னார்கள். குறைந்த பக்ஷம் ஒழுங்கற்ற சீனத்துருப்புகள் நகரங்களில் அநேக இடங்களில் பெருத்தசேதம் விளைவிக்காமல் சென்றபோதிலும் அவர்களிடம் இருந்த பயம் நீங்கிற்று.

"ஆனால் இன்னும் இரண்டு நாட்களில் அங்கிருந்த நிலைமை அடிக்கடி கொலைகள் அதிகம் ஏற்பட்டபடியால் கெட்டழிந்துபோய்விட்டது. மேலும் தேசம் பூராவும், நினைத்தபோதெல்லாம் கொள்ளையிடப்பட்டது. பொது



மக்கள் வீடுகளிலும் தொந்தரவுகள் அநேகம் ஏற்பட்டு ஸ்திரீகளுக்கும் அபாய சம்பவங்கள் ஏற்பட்டன. அங்குள்ள நகரங்களில் போய் பார்த்து வரச்சென்ற அந்நிய நாட்டினர், தெருக்களெல்லாம் பொதுமக்களின உடல்கள் கொலையுண்டு கிடப்பதைப் பார்த்ததாகச் சொல்லுகிறார்கள். நேற்று, நான்கிங்கின் மத்தியபாகத்தில் நகரத்தில் ஒரு பிளாக்குக்கு ஒரு பொதுமக்களின் சவம் வீதம் இருந்ததாகக் கணக்கிடப்பட்டது."

"ஜப்பானியர்கள் சைனா தேசத்திற்குள் நுழைந்த டிஸம்பர் 13-ம் தேதியின் பிற்பகலிலும், சாயந்திரத்திலும், துப்பாக்கிகளால் சுடப்பட்டும், துப்பாக்கியில் சொருகும் குத்துவாளால் குத்தப்பட்டும் இறந்த பொதுமக்களின் சதவிகிதம் அதிகம். பயத்தாலாவது, ஆவேசத்துடனாவது அங்கிருந்து வெளியில் ஓடுகிறவர்கள் கொல்லப்பட்டனர். தெருக்களில் அல்லது சந்துகளில் சாயந்திர வேளைகளில் யாரேனும் ஒருவன் அங்கு வேவுபார்க்கும் சிப்பாய்களால் பிடிக்கப்பட்டால் அந்த இடத்திலேயே சுடப்படுவான். இந்தக்கொடுமை சட்டப்படி மன்னிக்கக்கூடிய அளவுக்குமேல் இருந்தது. இந்தமாதிரி அக்கிரமம் அபாயமில்லாத பிராந்தியத்திலும் மட்டிலும் அல்ல, மற்ற எங்கும் நடைபெற்றது. அந்நிய நாட்டினர்களென்ன நல்ல கண்ணியம் வாய்ந்த சீனர்களும் இவ்விதசெய்கைகள் யாவையும் நேரில் பார்த்திருக்கின்றனர். துப்பாக்கிமுனைகளால் ஏற்பட்ட காயங்களைப் பார்க்கையில் எவ்வளவு முரட்டுத்தனமாக எதிரிகள் ஆயுதங்களை உபயோகித்திருக்கின்றனர் என்று நன்றாய்த் தெரியவரும்.

"சீனர்களில் பொருக்கியெடுக்கப்பட்டு ஜப்பானியர்கள் தயாரித்த ஒரு சீனச் சைனியப் பகுதியிலுள்ள ஒவ்வொருவரும் கட்டப்பட்டு, சுடப்பட்டனர். ஏனென்றால் அந்த வீரர்கள் ஏற்கனவே தங்கள் ஆயுதங்களை வைத்துவிட்டும் ராணுவ உடுப்புகளையும் கழட்டிக் கொடுத்துவிட்டும் வேலையிலிருந்து விலகி இருந்தார்கள். இது வரையில் ஜப்பானியர்கள் வசம் யுத்தக் கைதிகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த சில பகுதிகளும், கொள்ளைப்பொருள்களையும், ஆயுத முஸ்தீப்புகளையும், தூக்கிச் செ[illegible] பொருக்கப்படும் சில மனிதர்களும்தான் இருக்கிறார்கள். ஓடி ஒளிந்திருந்த இடத்திலிருக்கும் ஒரு கட்டடத்திலிருந்து ஜப்பானிய சிப்பாய்களின் நிர்ப்பந்தத்தின்பேரில் அவ்விடத்திய போலீஸார் 400 பேர்களைப் பொருக்கி ஐம்பது, ஐம்பது பேர்களாக பிணைத்து துப்பாக்கி வீரர்களுக்கு மத்தியிலும், பீரங்கிப்படை வீரர்களுக்கு நடுவிலும் நடத்திச் செல்லப்பட்டார்கள். பார்த்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் சொல்லப்பட்ட சமாதானத்திலிருந்து அவர்கள் கதி என்னவென்று நிச்சந்தேகமாக விளங்கிற்று.

## சாங்கோ பாங்கமான கொலை.

"பிரதானமான வீதிகளில் சீனத் துருப்புகள் உணவுபொருள்கள் வைத்திருக்கும் கடைகளிலிருந்து ஜன்னல்கள் வழியாக சாமான்களை எறிந்தும், சூரையிட்டும் வந்தன. இன்னும் பெரிய உத்தியோகஸ்தர்களுக்குத் தெரியும்படியாகவே ஒரு கடை பாக்கியில்லாமல் கொள்ளையடிக்கப்பட்டது. இவ்விதம் கொள்ளையடித்த பொருள்களைத் தூக்கிச் செல்ல ஜப்பானியத் துருப்புகள் இன்னும் சில வேலையாட்களை அமர்த்திக் கொள்ளவேண்டியிருந்தது. முதன் முதலாக அவர்கள் கொள்ளையடித்த பொருள்கள் உணவுப்பொருள்களே. அதற்குப்பிறகு தான் மற்ற பிரயோஜனமுள்ள விலை உயர்ந்த சாமான்களும் கொள்ளையடிக்கப்பட்டன. நகரம் பூராவும் லக்ஷக்கணக்கான சொந்தவீடுகள், அவைகளில் ஜனங்கள் வசித்தாலும் சரி, வசிக்காவிட்டாலும் சரி பெரிதாய் இருந்தாலும்சரி, சிறியதாய் இருந்தாலும் சரி, சீனர்களுடையதாக இருந்தாலும் சரி, அந்நியர்களுடையதாக இருந்தாலும் சரி, பாரபக்ஷமில்லாமல் கொள்ளையடிக்கப்பட்டன.

சிப்பாய்கள் முகாம்களிலும், தங்குமிடங்களிலும் தப்பிப் பிழைத்து ஒளிந்து இருக்கும் நபர்களைப் பரிசோதனை செய்யும் பொழுது, அவர்கள் வசமுள்ள ரொக்கத்தையும் விலையுயர்ந்த சாமான்களையும் பறித்துக்கொண்டார்கள். ஸர்வ கலாசாலையைச் சேர்ந்த ஆஸ்பத்திரி சிப்பந்திகளிடமிருந்த ரொக்கம், அவர்களில் கைகளில் கட்டியிருந்த கடியாரங்கள், அவர்கள் தங்குவதற்காக கட்டப்பட்டிருந்த இடங்களில் இருந்த நர்ஸுகளுடைய

சொத்து, சுகங்கள் எல்லாவற்றையும் பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்டன. அவர்கள் கட்டடங்களோ அமெரிக்கர்களைச் சேர்ந்தது. கொள்ளையடிக்கப்பட்ட மற்ற கட்டடங்கள்போல் அந்தந்த அது ஸ்தாபனத்தின் தோரணைப் படி அந்நிய நாட்டுக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. மோட்டார்களில் இருந்த கொடிகளைக் கிழித்து எறிந்துவிட்டு மோட்டார்கார்களையும், இதர சொத்துக்களையும் கைப்பற்றிவிட்டார்கள்.

## ஸ்திரீகளைத் தாக்குதல்.

"ஸ்திரீகளுக்கு அவர்கள் இடையூறுகளை விளைவித்து, அவர்களுடைய கற்பையும் அழிக்க எத்தனித்தார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. இதைப்பற்றி சர்ச்சை செய்வதற்கு போதுமான அவகாசம் இல்லை. கீழே குறிப்பிடும் சில திருஷ்டாந்தங்களிலிருந்து அங்குள்ள நிலைமையை நன்றாகத் தெரிந்து கொள்ள முடியும். நமது அந்நிய நாட்டு சிநேகிதரின் வீட்டிற்கருகாமையில் இதற்கு முதல் நாள்தான் நாலு பெண்களை சிப்பாய்கள் பலாத்காரமாக அபகரித்துக் கொண்டு வைத்திருந்தார்கள். பொது மக்கள் காலி செய்யப்பட்ட நகரத்தின் ஒரு பக்கத்தில் புதிதாக ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர் வந்திருந்தார். அவருடைய ஜாகையில் எட்டு யௌவன ஸ்திரீகளைக் காவல் செய்யப்பட்டிருப்பதை அங்குசென்ற அந்நிய நாட்டினர் நேரில் பார்த்தார்கள்.

"இவ்விதமான அட்டூழியங்கள் அங்கு நடைபெற்றன. இப்பொழுது இங்கு சொல்ல இயலாது. இவைகளைப்பற்றி சீன உத்தியோகஸ்தர்கள் விஸ்தரித்துச்சொல்லி அக்கிரமக்காரர்களுடன் சண்டைசெய்யவேண்டும் என்று பிரசங்கங்கள் செய்ததைப் பார்த்தாலேயே நமக்கு அருவெறுப்பு ஏற்படுகிறது."

சைனாவில் பூராவாழ்நாளையும் கழித்த ஒரு அந்நியநாட்டினர் நான்கிங்கிலிருந்து விரிவான விவரங்கள் சிலவற்றை எழுதி ஷாங்கேயிலுள்ள அவருடைய சிநேகிதர்களுக்கு அனுப்பி வைத்தார். அவர் சம்பந்தமான குறிப்புகளை மட்டில் எடுத்துவிட்டு மற்றபடி எல்லா விவரங்களையும் கண்டு அவர் எழுதிய கடிதத்தைக் கீழே குறிப்பிடுகிறோம்:—

## குற்றச் செய்கைகளும், அட்டூழியங்களும்.

நான்கிங், சைனா.
கிருஸ்துமஸ் வாரம், 1937.

இப்பொழுது நான் எழுதப்போவது மனதிற்கு அருவெறுப்பான கதையைப் பற்றி சொல்லப்போகிறேன். அது மிகவும் ஆபாசமாக இருப்பதால் அதைப் படிப்பதற்கே உங்களுக்கு பொறுமை வேண்டும். இங்கு இவ்விதமான குற்றச்செய்கைகளும், அட்டூழியங்களும் நடந்ததென்றால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். இந்தக்கதை ஒரு முரட்டுக் கூட்டத்தார் தங்குதடையன்னியில் அமைதியாகவும், பக்ஷமாகவும் சட்டத்துக்குட்பட்டு நடக்கும் ஜனங்களை ஹிம்ஸித்து தங்கள் மனம் போன போக்குப்படி செய்ததும், செய்து வருகிறதுமான அட்டூழியங்களைக் குறித்தது.

## எங்கும் குழப்பம்.

இங்கு 10 நாட்கள்வரையிலும் ஒரே குழப்பம்தான். இதை பூவுலக நகரம் என்றே சொல்லவேண்டும். என்னுடைய உயிருக்கு பெருத்த ஆபத்து வந்துவிட்டதாக நான் சொல்ல வரவில்லை. ஜப்பானிய சிப்பாய்கள் நன்றாகக் குடித்துவிட்டு ஸ்திரீகளை கற்பழித்து இன்னும் அநேக கெட்ட காரியங்களைச் செய்தார்கள். அவர்களை அந்த சமயத்தில் தடுப்பது பெரிய ஆபத்துத்தான். ஏனென்றால் எதிரி உடனே தடுப்பவனின் மாரில் துப்பாக்கியில் சொருகியிருக்கும் குத்துவாளால் குத்தவோ, அல்லது அவன் தலைக்கு நேராகக் கைதுப்பாக்கியை நீட்டி சுட எத்தனிப்பான்.

"சென்ற பத்து நாட்களில் நடந்த சம்பவங்களைப்பற்றி மிகவும் விரிவாய் எடுத்துரைப்பது முடியாத காரியம். முக்கியமாக செய்திகளின் உண்மை வெளி உலகங்களுக்கு பரவும்பொழுது அதன் வீரியமும் பரபரப்பும் போய் சாதாரணச்செய்தி மாதிரி கருதப்பட்டுவிடும்." விஷயங்கள் இவ்விதமாக இருக்க ஜப்பானியர்கள் வெளிநாடுகளில் நான்கிங் நகரத்தில் ஏற்கனவே கொள்ளையடிக்கப்பட்டு, யாவும் கொளுத்தப்பட்டு இருந்த ஸ்திதியில் அக்கிரமங்களை ஒழித்து தர்மத்தையும், நியாயத்தையும் நிலைநிறுத்தியிருப்பதாகச்சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவ்விதம் செய்த தங்கள் துருப்புகளை சீனர்கள் உத்ஸாகம் கொண்டு கொடிகளுடன் நகரத்திற்குள் வரவேற்றினார்கள், என்றும் பிரஸ்தாபித்தார்கள்.



எப்படியிருந்தாலும் இக்காலத்தில் இங்கு நடந்த முக்கியமான சம்பவங்களில் சிலவற்றைப்பற்றி என் குறிப்புப் புஸ்தகத்தில் குறித்திருப்பதை இங்கு விவரிக்கிறேன். ஏனெனில் அவை என் சிநேகிதர்கள் சிலருக்காவது நான் எழுதியிருக்கும் சம்பவங்களைப் பற்றிப் படிக்க ஆசை தோன்றலாம். நானும் இந்த துக்ககரமான நாட்களில் நடந்தவைகளுக்கு அழிவுபடாத பதிவு ஏற்படுத்திவைப்பதில் திருப்தியடைவேன்.

## கூட்டங்கூட்டமாகக் கொலைசெய்வது.

டிஸம்பர், 15-ல்:—தலைநகருக்கருகாமையிலுள்ள எங்களுடைய ஒரு முகாமிலிருந்து 1,300 பேர்களைச் சுடுவதற்காக எதிரி சைனியம் கூட்டிச்சென்றனர். அக்கூட்டத்தில் இதற்கு முன் சைனியத்தில் சேவை செய்த போர் வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் விட்டுவிடப்படுவார்கள் என்றும், அவர்கள் உயிருக்கு அபாயமில்லை என்றும் ஒரு உத்தியோகஸ்தர் அன்று சாயந்திரமே உறுதிமொழிகூறினார். எதிரிகள் அவர்களை என்ன செய்யப்போவதாக இருந்தார்கள் என்று வெகு எளிதில் தெரிந்துவிட்டது.

அவர்கள் வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டு, துப்பாக்கியில் சொருகியிருக்கும் குத்துவாள்களுடன் சிப்பாய்கள் அவர்களை 100, 100 பேர்களாக சேர்த்துக்கட்டினார்கள். தொப்பியணிந்தவர்களுடைய தலைகளிலிருந்து தொப்பிகளை மிகவும் கேவலமாகவும் முரட்டுத்தனமாகக் கிழித்து கீழே பிடுங்கி எறிந்துவிட்டார்கள். பிறகு அவர்களைக் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அந்தக் கூட்டத்தில் விம்மி அழும் சப்தம்கூட கேட்கவில்லை. நாங்களும் கல்நெஞ்சுடன் பார்த்துவந்தோம். தெற்கே காண்டனிலிருந்து பூராவும் நடந்து வந்த நாலு வாலிபர்களும் அவர்கள் வசமிருந்த ஆயுதங்களை மனமில்லாமல் இதற்கு முந்தின தினம் என்னிடம் கொடுத்துவிட்டார்கள். அல்லது வடக்கேயிருந்து வந்திருக்கும் நெட்டையான, முரட்டு ராணுவ உத்தியோகஸ்தர் கொண்டிருந்த முடிவான தீர்மானத்தை வெளியிட்டதிலிருந்து, எனக்குக்குழப்பம் உண்டாகி வருகிறதா?

ஜப்பானியர்கள் அவர்கள் உயிரை வாங்காமல் விட்டுவிடுவார்கள் என்று நான் தைரியம் சொன்னது எவ்வளவு முட்டாள்தனம்! முதன் முதலில் எதிரிகள் உறுதிமொழி சொன்னதும், அவர்கள் நிச்சயமாக சொன்ன சொல்லைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பியிருந்தோம். அவர்கள் வந்ததும், சமாதானமும், நீதியும் நிலைநிறுத்தப்படும் என்றும் எண்ணினோம். நவீன உலகத்தில் இவ்வித அட்டூழியங்களும், முரட்டுச் செய்கைகளும் ஜப்பானியர்கள் செய்வார்கள் என்று நாங்கள் சொப்பனத்தில் கூட எண்ணவில்லை. இந்நாகரீக உலகத்தில் இது மாதிரி எங்கும் நடந்ததில்லை. இன்னும் வருங்காலத்தில் எவ்வித அக்கிரமங்கள் நடக்குமோ தெரியவில்லை.

## ஸ்திரீகள் பலாத்காரமாக எடுத்துச் செல்லப்பட்டனர்.

16-ம் தேதி காலையில் ஸ்திரீகளைக் கற்பழித்த செய்திகள் அநேகம் வெளிவந்தன. எங்களுக்குத் தெரிந்த ஒரு 100 ஸ்திரீகள் இருக்கும் சிப்பாய்களால் பலாத்காரமாகப் பிடிக்கப்பட்டனர். அதில் ஏழு ஸ்திரீகள் ஸர்வகலாசாலை புஸ்தகாலயத்தில் இருந்தவர்கள். ஆனால் அவரவர்கள் வீடுகளில் கற்பழிந்த ஸ்திரீகள் எவ்வளவோ. அநேகம் நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் தெருக்களில் அடைந்து தற்காப்புச் செய்துகொள்ளுவதற்கு இடங்களைத்தேடித் திரிந்தார்கள். முனிஸிபல் கமிஷனர் ரிக்ஸ் அங்கு சிற்றுண்டி சாப்பிடும் வேளையில் ஓடிவந்தார். ஜப்பானியர்கள் சட்டம் போதிக்கப்படும் கலாசாலையில் உள்ளவர்களையும், நியாயஸ்தலத்தில் உள்ளவர்களையும் கைப்பற்றிக்கொண்டார்கள் என்று கூக்குரலிட்டார். அவர்களுக்கு என்ன கதி நேரிடும் என்று நாங்கள் அப்பொழுதே ஊகித்துக்கொண்டோம்.

எங்களுடைய போலீஸ்காரர்களில் ஐம்பது பேர்கள் பிடிக்கப்பட்டார்கள். அவ்விதம் செய்வது அக்கிரமம் என்று ரிக்ஸ் என்பவர் தடுத்துச்சொன்னதும், ஜப்பானிய சிப்பாய்கள் அவரைக்கேவலமாக நடத்தினார்கள். மேலும் இரண்டு தடவை ஒரு உத்தியோகஸ்தரால் குத்தப்பட்டார். சரண் புகுந்தவர்கள்

பரிசோதிக்கப்பட்டனர். அவர்களிடம் பணம், அல்லது ஏதாவது அவர்கள் அணிந்திருந்த விலையுயர்ந்த சாமான்கள் யாவும் பலவந்தமாகப் பிடுங்கிக் கொள்ளப்பட்டன. அவர்கள் படுக்கைகளும்கூட கொண்டுபோகப்பட்டன. நாங்கள் உத்தியோகஸ்தர்களாகச் சேர்ந்து நாலுமணிக்கு கூட்டம் கூடிய போது, எங்களுக்கு அருகாமையில் சீனர்கள் சுடப்படும் சப்தம் எங்களுக்குக் கேட்டது. அப்பொழுது சொல்ல முடியாத பயமும் பீதியும் எங்கும் குடிகொண்டது. சரண்புகுந்த ஏழை ஜனங்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமாயிருந்தது. எங்களுக்கு அலைகள் திடுக்கிடும் சம்பவங்களாகத் தோன்றின.

குறிப்பு புஸ்தகத்தில் எழுதியிருந்தபடியே மேலும் சொல்லலானார்:—

## கொள்ளை, கொலை, கற்பழித்தல்.

வெள்ளிக்கிழமை, டிஸம்பர் 17:—கொள்ளை, கொலை, கற்பழித்தல் ஆகிய இவ்வித அட்டூழியங்கள் விடாமல் நடந்துவந்தன. சுமாராகக் கணக்கிட்டுப்பார்த்தால் முந்தின நாள் இரவிலும் மறுநாள்காலையிலும் ஒரு 1,000 ஸ்திரீகளுக்குமேலேயே பலவந்தமாக கற்பழிக்கப்பட்டார்கள். ஐயோ பாவம்! ஒரு ஸ்திரீ அன்றுமட்டில் 37-தடவைகள் கற்பழிக்கப்பட்டாள். மற்றொரு ஸ்திரீயின் ஐந்து மாதத்திய இளம் குழந்தை இறந்தது. எதிரி முரட்டாத்மாவாக இருந்ததால் அவன் அந்த ஸ்திரீயைக் கற்பழிக்கும் பொழுது அந்த குழந்தையைக் கத்த விடாமல் செய்ய அதன் நெஞ்சை அமுக்கி, மூச்சுவிடாமல் செய்து, கொன்றுவிட்டான். இவ்வித அக்கிரமத்தைத்தடுக்க எத்தனித்தால், துப்பாக்கியிலிருக்கும் குத்துவாளால் குத்தப்படுவான்.

அங்குள்ள ஆஸ்பத்திரிகளில் ஜப்பானியர்களுடைய அக்கிரமச் செய்கைகளால் காயமடைந்தவர்கள் ஏராளமாகக் கொண்டுவரப்பட்டனர். நாங்கள் இருக்கும் இடத்திற்கு எதிராக மிஸ் ட்வீனம், மிஸஸ் சென் இவர்கள் இருந்தார்கள். அவர்களிடம் முழங்காலிட்டுக் கொண்டு தப்பி பிழைத்துவந்திருக்கும் 20 ஸ்திரீகள் ஆதரவு கேட்டுக்கொண்டு இருந்தார்கள்.

என்னைப்போல் கொஞ்சம் பிரெஞ்சு பாஷை பேசத்தெரிந்த சிப்பாய் அங்கே போர்வீரர்கள் ஒளித்துவைக்கப்பட்டிருப்பதாகவும், பார்க்க வேண்டும் என்றும் வற்புறுத்தினான். அங்கு சுமாராக ஐம்பது பேர்கள் வீட்டிலுள்ளவர்களும், அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த மற்ற நபர்களும் இருக்கிறார்களே தவிர அங்கு வேறு ஒரு மனிதனும் இல்லை என்று சாதித்தேன். அதற்கு அவன் அதை நம்பவில்லை என்றும் அந்த எண்ணிக்கைக்கு மேலிருப்பவர்களைச் சுட்டுவிடுவதாகவும் சொன்னான்.

பிறகு அவன் ஸ்திரீகள் உள்பட வெளியேற வேண்டுமென்று கேட்டான். மிஸ் வாட்ரீன் மறுதளித்த பொழுதுபலாத்காரமாக அவளைக்காருக்குள் பிடித்துத் தள்ளினான். பிறகு அவன் வேறு எண்ணங்கொண்டு ஸ்திரீகளை இருக்கச் சொல்லிவிட்டு எங்களைப் போகச் சொன்னான். ஆனால் எங்களில் ஒருவரைத் தங்கியிருக்கும்படி செய்ய வற்புறுத்தினோம் அதற்கு அவன் அனுமதிக்கவில்லை. மொத்தத்தில் எங்களை விடுவிப்பதற்குமுன் எங்களை ஒரு மணி நேரம் நிற்கும்படி செய்துவிட்டான். மறுநாள் இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து பனிரெண்டு பெண்களை இந்தக் கொள்ளைக்கூட்டத்தார் தூக்கிப்போனதாகத் தெரியவந்தது.

## மேற்கொண்ட அக்கிரமங்கள்.

சனிக்கிழமை டிஸம்பர் 18.—அந்தப் பிராந்தியத்தில் ஒரு பகுதிக்கு அடுத்தார்போல் வசிப்பவரும், எங்களுடன் சாப்பிட்டுவருபவருமான ரிக்ஸ் என்பவர் காலை போஜனம் செய்யும்பொழுது. சில விஷயங்கள் அறிவித்தார். எங்களுடன் போஜனம் செய்தபொழுது இரண்டு ஸ்திரீகள், ஒருவள் அந்த சங்கத்தின் காரியதரிசியின் சகோதரி அவர் வீட்டில் கற்பழிக்கப்பட்டதாகச் சொன்னார். ஐந்து வயதுள்ள ஒரு பையனை ஐந்துதடவை துப்பாக்கியில் சொருகும் குத்துவாளால் குத்தப்பட்டும், ஒரு குத்து வயற்றில் குத்தப்பட்டும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டதாக வில்ஸன் அறிவித்தார். ஒரு மனிதனுக்கு துப்பாக்கியிலிருக்கும் குத்துவாளால் 18 காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஒரு ஸ்திரீக்கு அவள் முகத்தில் 17 வெட்டுகளும் கால்களில் அநேக காயங்களும் இருந்தன. 400 முதல் 500 வரை பயமடைந்த ஸ்திரீகள் எங்கள் ஜாகைக்குள் வந்து புகுந்து



சுற்றுமதிலுக்குள் பகலைக் கழித்து, வெட்டவெளியில் இராக் காலத்தையும் கழித்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை, டிஸம்பர் 19.—நாள் பூராவும் அநியாயம். அநேக பெருந்தீக்கள் போர் வீரர்களால் மூட்டப்பட்டு இன்று பூராவும் வியாபிக்கின்றன. இன்னும் அநேக தீக்கள் மூட்டப்போவதாகவும் சொல்லப்படுகிறது. சில வீடுகளில் ஒரு நாளில் 5 முதல் 10 தடவைகள் புகுந்து ஏழை ஜனங்களிடமிருந்தசாமான்களைக் கொள்ளையடித்தும், ஸ்திரீகளைக் கற்பழித்தும் விட்டார்கள். ஒரு வித காரணமும் அன்னியில் அநேகர் கொலை செய்யப்பட்டனர். சுகாதார இலாகாவைச் சேர்ந்த 7 பேர்களில் 6 பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள். 7-வது நபர் இந்தக் கதையைச் சொல்ல காயத்துடன் தப்பிப் பிழைத்து ஓடி வந்துவிட்டார்.

இன்று சாயங்காலம் வெளியே சென்றிருந்த டாக்டர் பிராடி வீட்டிற்குள் நாங்கள் புகுந்து, அங்கே ஸ்திரீகளின் கற்பை அழிக்க வந்த நாலு பேர்களை விரட்டித் துரத்திவிட்டு, அங்கிருந்து எல்லா ஸ்திரீகளையும் கலா சாலைக்குக் கொண்டுவந்தோம்.

## கொடுமையும் பலாத்காரமும்.

டிஸம்பர் 20உ, திங்கட்கிழமை.—கொடுமையும் பலாத்காரமும் தடுக்கப்படாமல் நடக்கின்றன. பட்டணத்தில் எல்லா வகுப்பினரும் தீக்கிரையாக்கப்படுகின்றனர்.

## துப்பாக்கிப் படையின் வேலை.

டிஸம்பர் 22உ, புதன்கிழமை.—இன்று காலை 5 மணிக்கு இப்படை ஈடுபட்டு இருந்தது. 100 குண்டு சப்தம் வரை எண்ணினேன். இரவில் ஸர்வ கலா சாலையில் இரண்டு தடவை புகுரப்பட்டது. வாசலில் உள்ள போலீஸ்காரன் துப்பாக்கியை நீட்டி பயமுறுத்தப்பட்டான். கதவு திறக்கப்பட்டது. சமீபத்தில் ஜப்பானியரால் நியமிக்கப்பட்ட போலீஸ் காவல்காரர்கள் தூங்கிவிட்டார்கள்.

புதிதாக வந்த ஜப்பானியப் போலீஸ் படையினர் ஜனவரி 1-ம் தேதிக்குள் அமைதி ஸ்தாபிப்பதாக வாக்களித்தனர். மோட்டார்கார்களும் டிரக்குகளும் வேண்டுமென்றனர். ஸ்பெர்லிங்குடன் நான் சென்றபோது 50 பிணங்கள் குட்டைகளில் மிதந்துகொண்டிருந்தன. யாவரும் பொதுமக்கள். அவர்கள் கைகால்கள் கட்டப்பட்டிருந்தன. ஒருவன் தலையும் நருக்கப்பட்டிருந்தது.

Y. M. C. A. குமாஸ்தாவின் தகப்பனாரை ஒரு சிப்பாய் கத்தியை நீட்டி குடி மயக்கத்தில் பயமுறுத்திக் கொண்டிருந்தான். தாயார் பயந்து நடுநடுங்கிக்கொண்டிருந்தாள். கி, டானியல் வீடுகளிலிருந்து ஓடின சிப்பாய்களைத் துரத்திக்கொண்டு ஓடினோம். முள் கம்பி வேலியைத்தாண்டி ஓடிவிட்டனர்.

## உயிரோடு கூட்டமாக எரிக்கப்படுகின்றனர்.

டிஸம்பர் 23, வியாழக்கிழமை.—எங்கள் கூடாரத்திலிருந்து 70 பேர்களை அழைத்துச்சென்று கொன்றுவிட்டனர். ஒரு ஒழுங்கும் கிடையாது. சந்தேகப்பட்டதை யெல்லாம் சிப்பாய்கள் ஒழித்துவிடுகின்றனர். ஈவிரக்கம் இல்லாமல் செய்கிறவன் சிப்பாய்தான். அவன் வந்தால் கொலைதான். ரிக்ஷாக்காரர்களும், கூலியாட்களும், தச்சுவேலை முதலிய தொழிலாளிகள்தான் முதலில் பிடிக்கப்படுவது.

மத்தியானம் தலைமைஸ்தானத்திற்கு ஒரு மனிதனை அழைத்துச்சென்றேன். இவன் தலை பொசுங்கிக் கிடந்தது. கண், காது, மூக்கு போயிருந்தன. ஆஸ்பத்திரிக்கு என்னுடைய மோட்டாரில் அழைத்துச்சென்றேன். அங்கேயே இறந்துவிட்டான். அவன் சொன்ன கதைப்படி அவனோடு ஒரு 100 பேர்கள் கட்டப்பட்டு பெட்ரோல் ஊற்றி தீவைக்கப்பட்டதாம். இவன் ஓரமாக இருந்ததால் தலையில் விழுந்ததாம்.

இதைப்போலவே இன்னொருவன் பூராவாக எரிந்துவந்து அவனும் இறந்தான். முதலில் இவர்கள்பேரில் யந்திர பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. டிராம்டவருக்கு எதிரில் எனது வீட்டிற்கு அருகாமையில் மற்றொருவனைப் பார்த்தேன். இவன் தலை, கால் முதலியன காயப்பட்டிருந்தன. நம்ப முடியாத அட்டூழியங்கள்.

## கிறிஸ்துமஸ் தினம்.

கிறிஸ்துமஸ் தினம்.—சிநேகதோஷ்ண நிலைதான் சரியாகக் காணப்பட்டது. கிராமத் தலைவர்கள் பயிற்சி பள்ளிக்கூடத்திலிருந்த அமெரிக்கக் கொடி கீழே வீழ்த்தப்பட்டது. பைபிள் உபாத்தியாயர் பயிற்சிசாலையில் ஏழு சிப்

பாய்கள் இரவில் புகுந்து ஸ்திரீகளை மானபங்கம் செய்தனர். 12 வயதுள்ள ஒரு பெண்ணை மூன்று சிப்பாய்களும், 13 வயதுள்ள மற்றொரு பெண்ணையும் துன்புறுத்தினர். நாங்கள் உதவிக்கு சமயத்தில் போகமுடியவில்லை. கத்திக்குத்துகளும் ஏற்பட்டன. ஜப்பானியர் வந்தது முதல் ஆஸ்பத்திரியில் 240 பேர்கள் கொடூரத்தால் அவஸ்தைப்படுவதாக வில்ஸன் சொன்னான்.

ஸர்வ கலாசாலையில் சைனியத்திற்குப் பதிவு செய்யப்பட்டது. அச்சமயத்தில் முன்பு சிப்பாய்களாக இருந்தால் அவர்கள் எழுந்திருக்கலாம் என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கு இதர தொழில் கற்றுக்கொடுப்பதாயும் சொல்லப்பட்டது. 240 பேர்கள் எழுந்திருந்தனர். கூட்டமாகக் கூட்டி அவர்கள் வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர். அதில் ஒரு கூட்டத்தினர் யந்திர பீரங்கிகளால் தாக்கப்பட்டனர். மற்றொரு கூட்டத்தினர் கத்திப் பழக்கம் கற்றுக்கொடுக்கப்பட்டனர். இவ்விவரத்தை இருவர் தப்பிவந்துதெரியப்படுத்தினார்கள்.

இவ்விதமாக நான் கொடுத்துள்ள ஜப்பானியரின் அமைதிக் குறைவு, கொடுமை முதலியவைகளின் கணக்கு அதிகமாகிக்கொண்டே போகும். எங்களுக்குத் தெரியாதது இன்னும் எவ்வளவோ. 13 வயதுள்ள பையன் ஒருவனை ஜப்பானியர் அழைத்து, திருப்திகரமாக அவன் வேலை செய்யவில்லையென்று சொல்லி அவனை இரும்புத் தடிகளால் அடித்தனர்.

ஒரு மோட்டாரில் மூன்று பேர்கள் ஸர்வ கலாசாலைக்கு நேற்றிரவு வந்து மூன்று ஸ்திரீகளை மானபங்கம்செய்து ஒருத்தியை தூக்கிச்சென்றனர். பைபிள் உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடத்தை பலதடவை கொள்ளையடித்து 20 பெண்களை மானபங்கம் செய்தனர்.

ஷாங்காயில் வெளிவரும் ஜப்பானியரின் நிசி நிசி என்ற பத்திரிகையின் இரண்டு பிரதிகளைப் பார்வையிட்டோம். அதில் டிஸம்பர் 28-ம் தேதியே சாமான்கள் ஸ்டோர்கள் அமைக்கப்பட்ட பின் எல்லாம் அமைதியாக நடக்கிறது என்று காணப்பட்டிருந்தது. ஜப்பானியர் வீடில்லாமல் திரியும் ஏழை மக்களுக்கு உணவு கொடுப்பதாயும் பட்டணத்தில் சீனக்கொள்ளைக்காரர்கள் விரட்டப்பட்டதாயும் சொன்னார்கள். இதைப்பார்த்ததும் எங்களுக்குச் சிரிப்புதான் வந்தது.

ஜப்பானியர்மேல் குறை சொல்ல வேண்டுமென்று நான் இதை எழுதவில்லை. ஆனால் மொத்தமாக ஆக்கிரமணத்திற்காக சண்டைசெய்தால் மிருகத்தனமாகத் தானிருக்கும். இதைப்போல் 1932-ல் ஷாங்காயில் நடந்த சண்டையிலும் ஜப்பானியப்படை கிருஸ்துவர்களின் கொள்கைகளைக் கொஞ்சமும் அறிந்துகொள்ளாமல் செய்தனர். இப்போதும், மிருகத்தனமாக கிழக்கே இவர்கள் செய்வதுபோல மேற்கு நாடுகளுக்கும்இது பரவச் செய்யுமாதலால் அதன் உண்மைகளை நான் சொன்னேன்.

# தைரியமுள்ளவன் தனது அபிப்பிராயங்களை வாய்விட்டுச் சொல்லுகிறான்.

## மன்ஸ்டர் நகரில் ரகஸியப் போலீஸின் அட்டூழியம்.

(நியூ ஸ்டேட்ஸ்மன் அண்டு நேஷன் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது)

ஜெர்மனியில் வெஸ்டுபேலியா ஜில்லாவிலுள்ள மன்ஸ்டர் நகரில் ஸெயிண்டு லாம்பர்டு மாதாகோவிலில் ஜூலை 13உ கிளெமன்ஸ் அகஸ்ட் என்று பெயருள்ள மதகுரு ஒரு மத உபந்யாஸம் செய்தார். அவர் உபந்யாசம் ஆரம்பிப்பதற்கு முன்னாடி தான் பிரிடிஷ் விமானப்படை மன்ஸ்டர் நகரில் குண்டுகளை வீசின. அச்சமயம் அவஸ்தைப்பட்டவர்களுக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டு அவ்வித விமானப்படையெடுப்புகளிலிருந்து அறிந்து கொள்ள வேண்டிய மதசம்பந்தமான பாடங்களைப் பற்றிச்சொன்னார்.

“படையெடுப்புகளிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியவைகளைப் பற்றி இன்று உங்களுக்குச் சொல்லுவதாக நினைத்திருந்தேன். ஆனால் அந்த உத்தேசம் நின்றுவிட்டது. ஏனென்றால் அதை விடக் கடுமையான சம்பவம் இவ்



வாரத்தின் கடைசியில் நிகழ்ந்து யாவருக்கும் கலக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அதைப்பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியிருக்கிறது.

“வெளிநாட்டு விரோதியும் அவனது ராணுவமும் நமக்கு விளைவித்த சேதங்களிலிருந்து நாம் மீளுவதற்குள்ளாகவே, நேற்று அதாவது 1941 ஜூலை 12உ, உள்நாட்டிலிருக்கும் ரகஸியப் போலீஸ்காரர்கள் இப்பட்டணத்திலிருக்கும் இரண்டு மதஸ்தாபனக் கட்டடங்களை ஸர்க்கார்வசம் செய்துவிட்டனர். அதில் ஒன்று ஸெண்டுமேரிங் என்பது வீஸிலர் தெருவிலும், மற்றொன்று இக்நேஷியஸ் என்பது, கோனிங் தெருவிலும் இருக்கின்றன. அங்கிருந்த மதாசாரியார்களையும் இதர மத சகோதரர்களையும் தாமதிக்காமல் வெஸ்ட்பேலியா, ரைன்லாந்து ஜில்லாக்களையே விட்டுச்செல்லும்படி துரத்தினர். இதுபோல் ஸ்டீன்போர்டு தெருவிலிருக்கும் கன்னிமாட பெண்களின் சொத்தை பறிமுதல் செய்து மாலை 6-மணிக்குள் நகரை விட்டு வெளியேரும்படி துரத்தப்பட்டனர். இங்கிருந்த சொத்து வடக்கு வெஸ்டு பேலியா ஜில்லாவில் காலீடங்கிற்கு கொடுக்கப்பட்டது.

“ஆகவே, ஆஸ்திரியா, தெற்கு ஜெர்மனி, போலந்து, லக்ஸம்பர்க், லோரென் முதலிய இடங்களில் ஜெர்மானியர் மதஸ்தாபனங்களைக் கொடுத்த மாதிரி வெஸ்டுபேலியாவிலும் செய்துவிட்டனர். இனிமேலும் ஒவ்வொன்றாக மீதியுள்ளவைகளும் ரகஸியப் போலீஸாரால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்குள்ளவர்கள் தெருக்களில் குற்றம் செய்த அடிமைகளைப் போல் துரத்தியடிக்கப்படுவார்கள்.

“இப்படிச் செய்வதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், ராஜ்ய சம்பந்தமான காரணத்திற்காக என்று பதில் சொல்லுகிறார்கள்! வேறுகாரணம் ஒன்றும் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. இவ்வித ஸ்தாபனங்களில் உள்ளோர் குற்றம் சாட்டப்பட்டு நியாய ஸ்தலங்களில் விசாரணை செய்து தண்டிக்கப்பட்டவர்களல்ல. அப்படி ஏதாவது குற்றம் இருந்து தண்டித்தால் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் ஒருபாவமும் அறியாதவர்கள்கூட தண்டிக்கப்பட வேண்டுமா?

“குற்றமற்ற, கௌரவமுள்ள ஜெர்மானியர்கள் ரகஸியப் போலீஸாரால் ஜெயிலில் அடைக்கப்படுவதை சமீபத்திலும் நாம் பார்த்திருக்கிறோம். தங்களைப் பற்றி குற்றமில்லையென்று தெரிவித்துக்கொள்ளக்கூட சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதில்லை. பொதுமக்களுக்கு உள்ள ஸ்வதந்திரம் பிடுங்கப்பட்டு சொந்த நாட்டிலிருந்து துரத்தப்பட்டு பல இடங்களில் ஜெயிலில் அடைக்கப்படுகிறார்கள். சமீபத்தில் சிலவாரங்களில் மாதாகோவில் நிர்வாக சங்கத்தினர் இருவர் வீடுகளிலிருந்து இழுக்கப்பட்டு வெளிநாடுகளுக்குத் துரத்தப்பட்டு அங்கேயே வசிக்கும்படி செய்யப்பட்டனர்.

“மத விஷயங்களை கவனிக்கும் மந்திரியிடம் முன்சொன்ன செய்திகளைக் குறித்து கண்டித்து அனுப்பிய தகவல்களுக்கு நாளதுவரை பதில் கிடையாது. எனக்கு கிடைத்தவரையில் இவ்வளவுதான்; மதக்குருக்கள் பேரில் ஒருவித குற்றமும்இல்லை. இருந்தாலும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

“ஏன் நான் மதத்திற்குத் தலைவனாக இருந்துகொண்டு அரசாங்கத் தாருக்கு விரோதமாக நடக்கவேண்டி வந்ததென்றால், கடந்த இரண்டுவருஷங்களில் மதச் சங்கத்தில் நான்கு இடங்கள் காலியானதற்கு நியமனத்தில் மூன்றுபேர்களை அரசாங்கத்தார் ஒப்புக்கொள்ளவில்லை. 1929-ம் வருஷத்தில் பிரஷ்யாவின் சட்டப்படி மத விஷயங்களில் அரசாங்கத்தார் தலை கொடுப்பது கூடாது. இருந்தாலும் நான் இரண்டுபேர்களின் நியமனத்தை ஊர்ஜிதம் செய்தேன். நான் சட்டத்திற்கு விரோதமாக நடந்துகொண்டால் என்னை விசாரணை செய்யட்டும். யாரானாலும் ஜெர்மன் ரகஸியப் போலீஸ்காரர்களுக்குள் அகப்பட்டுக்கொண்டால் வேறுகதி கிடையாது. இந்த அனுபவம் நமக்குள் எத்தனையோ பேருக்கு இருந்திருக்கிறது. உதாரணமாக மத உபதேசகரான பிரீட்ச் என்பவர் ஒருவித விசாரணையன்னியிலும் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளார்.

“நாம் உண்மையாக மனச்சாக்ஷிக்கு விரோதமாக நடக்காமல் இருக்கலாம், தேசாபிமானம் பெற்றிருக்கலாம், ஒரு குற்றமும் செய்யாமல் இருக்கலாம். ஒரு நாளில் நம்முடைய ஸ்வதந்திரத்தைப்பிடுங்கி ஜெயிலில் அடைத்துவிடுவார்கள்.

"இவ்விதம் இன்றைக்கோ, நாளைக்கோ எனக்கே நேரலாம், பிறகு என்னால் பஹிரங்கமாகப் பேசமுடியாததால் இப்பொழுதே பேசிவிடுகிறேன். இந்த மாதிரி நாம் இருக்கக்கூடாது. பகவானின் கோபத்திற்குள்ளாகி நாடு பாழாகிவிடும்.

"சமூகத்திலும் ஒழுங்குமுறையிலும், மனிதனுக்கு, ஒரு ஸ்வதந்திரமும், பிறரின் அக்கிரமச் சட்டங்களை மறுப்பதும் கூடப்பிறந்த குணம். அதிகமாக ஜனங்கள் ஸ்வதந்திரத்தைக் கோரினால் சட்டப்படி கட்டுப்படுத்த அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் சட்டங்களை மீறியவர்களிடத்திலேயேதான் அரசாங்கத்தார் அதிகாரம் செலுத்தலாம். கடவுள் கொடுத்துள்ள நிலைமையை மீறி அரசாங்கத்தார் நடந்து குற்றமற்றவர்களைத் தண்டித்தால், அரசாங்கத்தின் நிலையையே கெடுத்துக்கொள்ளுவதாகும்.

"எவ்வளவோ ஜெர்மானியர்கள், போலீஸ்காரர்களுக்குள் அகப்பட்டுக் கொண்டும் ஜெயில்களில் அகப்பட்டுக்கொண்டும் திண்டாடுகிறார்கள். ஏராளமான ஜெர்மானியர்கள் தங்கள் சொந்த ஊர்களிலிருந்து துரத்தப்பட்டு ஒருவித விசாரணையில்லாமலேயே தண்டிக்கப்படுகிறார்கள். அதிகமான ஜெர்மானியர்கள் நியாய ஸ்தலங்களில் குற்றமில்லையென்று கண்டுபிடிக்கப்பட்டும், தண்டனைகாலம் தீர்ந்தபிறகும், மறுபடி ரகசியப்போலீஸாரால் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில் செய்துகொண்டிருக்கும் இடங்களிலிருந்து பலபேர்கள் விரட்டப்பட்டிருக்கின்றனர். இவ்விதமானவர்களின் பெயர் விவரங்களைப்பற்றி நான் இன்று பிரஸ்தாபிக்கவில்லை. இருந்தாலும் சென்ற யுத்தத்தில் ஜெர்மனிக்காக உயிரையே தியாகம் செய்வதுபோல் ஈடுபட்டு நீர்மூழ்கிக் கப்பல்களுக்குத் தலைமை வகித்தவரும் மத ஸ்தாபனத்தைச் சேர்ந்தவருமான ஒருவரின் ஸ்வதந்திரங்கள் தற்சமயம் பிடுங்கப்பட்டு இருப்பது உங்கள் யாவருக்கும் தெரியும். கிருஸ்து மதக் கொள்கைகளில் அதிக நம்பிக்கையும் தைரியமும் கொண்ட இவரிடத்தில் நமக்கு அதிக கௌரவ புத்தி ஏற்படுகிறது.

"ஆகவே நான் கோருவது என்னவென்று உங்களுக்குத் தெரியும். இந்தப் பிரிவு, அந்தப்பிரிவு என்பதைப்பற்றியில்லாமல் எல்லா கிருஸ்துவர்களை முன்னிட்டும் நான் சொல்லுகிறேன். மனிதனுக்கும், நம்முடைய தேசத்திற்கும், மதத்திற்கும் அடிப்படையாகவுள்ள விஷயங்களைப்பற்றித்தான் நான் சொல்லுகிறேன்.

"நியாயம் என்பதுதான் மனிதர்களுக்குப் பொதுவாக வேண்டியது. அதுவே இப்பொழுது போய்விட்டதால் நாம் கவலையுற்று இருக்கிறோம். எல்லா வர்க்கத்தினருக்கும் நியாயமான தர்மம் வேண்டியதுதான். அப்பேர்ப்பட்ட தர்மம் மறுக்கப்படுகிறது. மதஸ்தாபனங்களின் ஸ்வதந்திரம் போய்விட்டதென்றாவது, மனிதனுக்குள்ள கௌரவம் போய்விட்டதென்றாவது நாம் அதிகம் கவலைப்படவில்லை. இவ்விதம் கஷ்டத்திற்குள்ளானவர்கள் நமது பிரீதிக்கு இடமானவர்கள். அவர்கள் இருந்த நாட்டைப்பற்றி நாம் அதிகம் கவலைப்படுகிறோம். ஒரு வீட்டின் அஸ்திவாரம் ஆட்டம்கொடுத்துப்போனால் வீட்டின் நிலை பத்திரம் என்று எவ்வாறு சொல்லமுடியும். சமூகத்திற்கு அடிப்படையான தர்ம நியாய ஸ்வதந்திரத்தில் கையைவைத்தால் சமூகம் எவ்வாறு நிலைக்கும்.

"நான் இப்பதவியை அடையும்போது ஏற்றுக்கொண்ட சத்தியமான பொறுப்பின்படி கடவுளுக்கும், அரசாங்கத்தினருக்கும் முன்பாக சமூகத்தின் ஒழுங்குமுறை கெடாமல் பார்த்துக்கொண்டு அரசாங்கமும் கெட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியவனாக இருக்கிறேன். அதனால்தான் பஹிரங்கமாக இவ்விதம் சொல்லுகிறேன்.

"யுத்த சமயத்தில் உள்நாட்டு அரசாங்கத்தைப் பற்றி நான் குறை சொல்லுவது தவறென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இதற்குக் காரணம் நானல்ல. யுத்த சமயத்தை கவனியாது எதிரிகள் கடுமையாக விமானங்களிலிருந்து தாக்கியதால் ஜனங்களுக்கு ஏற்படும் தொந்தரவுக்கிடையில் ஒரு குற்றமும் அறியாத ஜனங்களை விசாரணை முதலியவை இல்லாமல் தண்டனைக்கு உட்படுத்தும் அரசாங்கத்தார்தான் காரணம்.

இவ்விதம் நமது சகோதர சகோதரிகளின் சொத்துக்களைப் பிடுங்கி, தெருக்களில் துரத்தியடிக்கும் இந்த ரகசியப்போலீஸ்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஜெர்மன் அதிகாரத்தையே தொலைத்துவிடுவார்கள். தராதரம் தெரியாமல்



நடந்துகொண்டு அரசாங்கத்திலுள்ள நம்பிக்கையையே அழித்துவிடுவார்கள் போலிருக்கிறது. ஆகவே ஜெர்மன் மக்களை உத்தேசித்தும், நியாயமான சட்டங்களை உத்தேசித்தும், நான் சொல்லுவது, இப்படியே போனால் உள்நாட்டு அரசாங்கத்தின் அமைதி, ஒற்றுமை முறிந்து விடும். ஆகவே கௌரவமுள்ள ஜெர்மன் பிரஜையென்ற ஹோதாவிலும், கிருஸ்து மதத்தின் பிரதிநிதி யென்ற முறையிலும், கதோலிக் குருவென்பதாலும் உறக்கக் கதருகிறேன். தர்மம் வேண்டும். இந்த சப்தம் செவிடன் காது சங்குபோலாகி ஒழுங்கான அரசாங்கமுறை ஸ்தாபிக்கப்படாவிட்டால், எவ்வளவு பாடுபட்டு வீரர்கள் தைரியமாகச் சண்டைசெய்து வெற்றி பெற்றாலும் உள்நாட்டு அரசாங்கத்தின் கெடுதியால் யாவும் பாழாகிவிடும்.

"கஷ்டத்திலுள்ள யாவரின் க்ஷேமத்தை முன்னிட்டு கடவுளைப் பிரார்த்திப்போம். நாட்டை விட்டுத்துரத்தப்பட்ட பாதிரிகளின் க்ஷேமத்தைக் கோருவோம். மன்ஸ்டர் நகரின் முன்னேற்றத்தை விரும்புவோம். இவையாவற்றையும் கடவுள் காப்பாற்றட்டும். ஜெர்மன் மக்களுக்காகவும் தலைவர்களுக்காகவும் கடவுளை வணங்குவோம்.

---

# ஐரோப்பா : சிறைச்சாலை.

---

**நாஸிகளிடம் அனுதாபம் உள்ளவர்கள் யார்?**

மதப்பிரசாரம் செய்கிற குருமார்கள் இங்கிலீஷ்காரர்களிடம் அனுதாபம் காட்டுகின்றனர். ஏனென்றால் ஆத்ம ரக்ஷகத்தைக் காட்டிலும் ராஜீய வியவகாரம் அதிக லாபத்தை அளிக்கிறது. மதப்பிரசாரம் செய்கிற குருமார்கள் ஸர்வாதிபத்தியத்தை வெறுக்கிறார்கள். ஆனால் மாதாகோவில் தான் ஸர்வாதிகாரியாக இருப்பதை விரும்புகிறார்கள். பெண் துறவியும் இங்கிலீஷ்காரர்கள் சார்பாக இருக்கிறார்கள். ஏனென்றால் நேர்த்தியான ஜனங்கள் பிளமிஷ் அல்லது ஜெர்மன் பாஷையைப்பேச விரும்பமாட்டார்களாதலால், அத்துறவிகளுக்கும் நேர்த்தியான ஜனங்களின் சமூகம்தான் விருப்பம். இங்கிலாந்தின் பாதுகாப்பின் கீழுள்ள பாலஸ்தீனத்தில் ஏசுகிருஸ்து வசித்துவந்தார் என்பதையும், சிலவழிகளில் கிருஸ்துவும் இங்கிலீஷ்காரர் என்பதை மறக்காதே. கைத்தொழில் உள்ளவர்கள் இங்கிலீஷ்காரர்களை விரும்புவார்கள். ஏனெனில் நாஸிக்கக்ஷிக் கொள்கைப்படி ஒவ்வொருவருக்கும் என்ன பாத்தியமோ அவ்வளவுதான் கிடைக்கும். ஆனால் கைத்தொழில் உள்ளவர்களும் அதைக்காட்டிலும் அதிகம் அடைய விரும்புகிறார்கள். தொழிலாளிக்கும் இங்கிலீஷ்காரர்பேரில் அனுதாபம் தான். ஏனென்றால் அவனுக்குப்போதிய உணவுப்பொருள்களும் கிடையாது. மேலும் அவன் அவ்விதக் குறைவு யாரால் ஏற்பட்டது என்பதைப்பற்றி யோசித்துப் பார்ப்பதுமில்லை. அவன் பொதுவுடமைக் கொள்கையைப்பற்றியே செல்வந்தர்களுடைய நிலைமையில் தான் வரலாமென்று எதிர்பார்க்கிறான். வியாபாரிகளுக்கு இங்கிலீஷ்காரர்களிடம் அனுதாபம் உண்டு. ஏனென்றால் அவர்களுக்குப் பணம் கொடுக்கிறவர்கள் அடிமைகளும், அதிகாரம் வாய்ந்தவர்களும், யூதர்களுமாக இருக்கிறார்கள். கோழைத்தனமான வியாபாரிகளோ பிறர் ரத்தத்தை உறிஞ்சி சிரப்பாக இருக்கிறார்கள். பிரிடிஷ் விமானப்படை மோட்டார்கள் வருவதைக் கேட்டமாத்திரத்திலேயே வியாபாரிகள் மனதில் சிற்றின்பத்தில் புரளலாமென்ற எண்ணம் உதித்து தொளிலாளிகளின் குழந்தைகளும் சந்தோஷமடைவார்கள் என்று நினைக்கிறார்கள். நேஷனல் சோஷலிஸ்ட் பத்திரிகை, பெல்ஜியம்.

**அவள் கேட்கமாட்டாள்.**

அகஸ்டா பால்கராட் என்பவளின் புருஷன் K. P. D.-யில் சேர்ந்தவன். அவள் விடாமல் அடிக்கடி விரோதிகளின் ஒலிபரப்பைக் கேட்டு வந்ததற்காக ஐந்து வருஷம் கடுங்காவல் தண்டனை அவளுக்கு விதிக்கப்பட்டது. எதிரி ஒலிபரப்பிலேயே கேட்பதில் ஈடுபட்டிருந்த அவளுக்கு ஜெர்மனி ருஷ்யாபேரில் போர் துடங்கினதை டாக்டர் கோயபல்ஸ் ஒலிபரப்பியதைக் கேட்காமல் போய்விட்டாள். அப்படி போர் தொடங்கியதை மற்ற ஜனங்கள் சொன்னபொழுது அவளுக்கு முற்றிலும் திகைப்பு உண்டாகிவிட்டது.

கோன்ஸ் பர்கர், ஆல்ஜிமேன் ஜீடங்,

**ஸ்பெயினைப்பற்றிய அறிவிப்பு.** "ஸ்பெயின் தேசத்தில் சங்கீதம் இல்லாமல் இருப்பது, ஆதென்ஸ் நகரில் ஆர்தைகள் இல்லாமல் இருப்பதுபோலவும், மூனிச்சில் பீர், பாரிஸில் ஸ்திரீகள் இல்லாமலிருப்பதுபோலவும் இருக்கும்" என்று ஒரு பெரிய ஸ்பெயின் தேசத்து ராஜதந்திரியும், ஆசிரியருமான ஒருவர் எழுதியுள்ளார். இப்பொழுது ஸ்பெயின் தேசத்தில் சங்கீதம் என்பதே கிடையாது. நீஸ்பெயினிலுள்ள நகரங்கள் கிராமங்கள் இவைகள் வழியாக அநேக நாட்கள் பிரயாணம் செய்து பார்த்தாலும் மாட்ரிட் பார்ஸிலோனு, ஸரகோஸா அல்லது ஸெவில்லி முதலிய இடங்களிலுள்ள அநேக சிற்றுண்டிசாலைகளிலும் நுழைந்து பார்த்தாலும்கூட, சங்கீதம் என்பதே கண்டுபிடிப்பது வெகு துர்லபம். ஏனென்றால் ஸ்பெயின் தேசம் அசர்ந்து போய்விட்டது. அதற்கு எக்சுமும் பிடித்துவிட்டது.

மூன்று அவுன்ஸ் நிறையுள்ள ரொட்டித்துண்டுக்குக்காக கையில் சீட்டுடன் ஜனங்கள் வரிசை வரிசையாக ஏராளமாகக் காத்துக்கொண்டிருப்பார்கள். அந்த ரொட்டியும் சாப்பிடுவதற்கு ருசியற்றதாக இருக்கும். ஏனென்றால் அதில் 30 சதவிகிதம்தான் கோதுமை மா இருக்கிறது. ஆலிவ் எண்ணெய், சர்க்கரை, இறைச்சி இவைகளும்கூட பங்கு விகிதப்படிதான் ஜனங்களுக்கு ஸப்ளை செய்யப்படுகின்றன. இதை அமெரிக்கர்கள் நம்பமாட்டார்கள். ஒவ்வொருவனுக்கும் மூன்று பிடி சர்க்கரையும், ஒரு அவுன்ஸ் இறைச்சியும் ஒரு வாரத்திற்குக் கொடுக்கப்படும். மீன், பன்றி மாமிசம், உருளைக்கிழங்கு இவைகளுக்கு வீதம் கிடையாது. ஆனால் அநேக வாரங்களில் மார்க்கெட்டில் உருளைக்கிழங்கும், மீனும் வரவே வராது. வாலென்ஸியா, கார்ட்டாஜீனு, மலாகா இத்தேசங்களில் முட்டைகள், பால், வெண்ணெய் இவைகள் சென்ற நாலு மாதங்களாகவே விற்பனைக்கு வரவில்லை. மோலினுவுக்கும் குடாலாஜாராவுக்கும் நடுவிலுள்ள ஒரு ஊரில் ஒரு குடியானப் பெண்ணை, "ஏன் உன்னிடத்தில் முட்டைகள் இல்லை?" என்று கேட்டேன். அதற்கு அவள், "சிப்பாய்கள் எங்கள் கோழிக் குஞ்சுகள், யாவையும் சாப்பிட்டுவிட்டால், எங்கிருந்து முட்டைகள் வரும்" என்று வேடிக்கையாக பதில் அளித்தாள். மெர்டியாவில் ஒரு காபி கிளப்பில் நுழைந்து உருளைக்கிழங்கும் முட்டையும் சேர்ந்து செய்யப்பட்ட ஆகாரத்தைப் பரிமாறும்படி கேட்டபொழுது "இன்று உருளைக்கிழங்கும், முட்டையும் இல்லாமல் செய்யப்படுகிற தின்பண்டம்தான் இருக்கிறது" என்று உணவு பரிமாறுகிறவன் சொல்லிவிட்டான். சில பிராந்தியங்களில் உதாரணமாக டாலிடோவுக்குத் தெற்கே நாய்களும், பூனைகளும் இல்லாமலிருப்பதைப் பார்க்கலாம். பசிமேலிட்ட ஜனங்கள் அவைகளைத் தின்றுவிட்டார்கள். நாய் இறைச்சியினுல் பெரும் வியாதிகள் பரவுவதால் 30,000 நாய்களுக்குமேல் இருந்ததைக் கொன்றுவிடும்படி ஸர்க்காரில் முடிவாக உத்தரவிட்டார்கள்.

ஒரு நாள் பார்ஸிலோனு போசனைசாலையில் என் கையில் விஷயம் எழுதின கடிதம் சொருகப்பட்டது. அதைச் செய்தவன் நான் திரும்பி பார்ப்பதற்குள் மறைந்துவிட்டான். அதில் எழுதியிருந்ததாவது:—

| | |
|---|---|
| ஸ்பெயின் வாஸிகள் ... ... | 2,60,00,000 |
| அவர்களில் ஆண்கள் ... ... | 1,30,00,000 |
| அவர்களில் ஜெயிலில் இருப்பவர்கள் ... | 10,00,000 |
| போலீஸ்காரர்கள் சுமாராக ... ... | 10,00,000 |
| பிரபுக்கள் சுமாராக ... ... | 10,00,000 |
| ராணுவ வேலைகளில் இருப்பவர்கள் சுமாராக | 10,00,000 |
| பாக்கிப்பேர் வேலையில்லாதவர்களும், பிச்சையெடுப்பவர்களும்; அவர்களின் எண்ணிக்கை ... | 90,00,000 |

ஆனல் ஸ்பெயின் வேலையில் அமர்த்தியிருப்பவர்கள்:—

| | |
|---|---|
| ஜெர்மன் பிரதிநிதிகளும், நிபுணர்களும் ... | 1,00,000 |
| இதாலிய பிரதிநிதிகள் ... ... | 40,000 |
| ஜெர்மன் தொழிலாளிகள் ... ... | 25,000 |
| இதாலிய தொழிலாளிகள் ... ... | 44,000 |

**அமெரிக்கா மேந்தறிப் பத்திரிகையில் ஹான்ஸ்ஹாபி எழுதியது.**



# நேரில் பார்த்தவர் கொடுத்த விவரம்.

## எண்ணெய் இல்லாவிடில் யூக்ரேனுல் ஹிட்லருக்கு பிரயோஜனமில்லை.

## ருஷ்யாவிற்கு ஏன் உதவி அனுப்பவேண்டும்.

## மறுபடி எதிர்த்துவர எதிரிக்குள்ள வலுவு.

பிலிப் ஜார்டன் என்பவர் எழுதியது.

(கூபிஷெவிலிருந்து "நியூஸ் கிரானிகள்" பத்திரிகைக்கு கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

ஆறு மாதங்களுக்கு முன்பு, அதாவது ருஷ்ய யுத்தம் ஆரம்பித்து மூன்று வாரங்களுக்குப் பிறகு—நான் ருஷ்யாவிற்குச் சென்றேன். லெனின்கிராட், மாஸ்கோ பட்டணங்களுக்கு ஆபத்து நெருங்கிவிட்டதாகவே வெளிநாடுகளிலிருந்த யாவரும் பயந்தனர். ஆனல் ருஷ்யர்கள் முகமலர்ச்சியுடன், கொஞ்சமும் தைரியம் இழக்காமல், யுத்தத்தில் ஈடுபட்டதுமுதல் ஒரேவிதமாக நின்று சண்டை செய்துவந்தனர்.

ருஷ்யாவில் 4,00,000 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள அதிகமான பாகத்தை ஜெர்மானியர் பிடித்துக்கொண்டனர். ஆனல் ஸஹாரா பாலைவனத்தைப் பிடித்திருந்தாலும் கொஞ்சம் சாதகமாக இருந்திருக்கும். ருஷ்யப் பிரதேசத்தால் ஒரு சாதகமும் ஏற்படவில்லை.

## ஜெர்மானியர் கண்டது.

சென்ற இடத்தில் எதிர்கொண்டு அழைப்பார்கள் என்று ஜெர்மானியர் நினைத்ததிற்கு பதிலாக அங்கேயெல்லாம் இவர்களுக்குக் கொஞ்சமும் சாதகம் ஏற்படாமல் யாவற்றையும் ருஷ்யர்கள் அழித்துவிட்டனர். யூக்ரேனின் ஏராள விளைபொருள்களை அபகரிக்கலாமென்று நினைத்ததற்கு மாறாக யாவும் சாம்பலாகக்கிடந்தன.

மறுபடி இங்கே தொழில் ஆரம்பிக்க எண்ணெய் வேண்டும். ராணுவங்களுக்குப் போதமான எண்ணெய் இருக்கிறதே தவிர தொழிற்சாலை முதலிய ஸ்தாபனங்களுக்குப் போதுமான அளவு ஜெர்மானியர் வசமில்லவே இல்லை.

## குடியல்காரனுக்குத் தண்ணீரைப் போல்.

ஆகவே காகஸஸ் பெட்ரோல் கிடைக்காதவரையில் யூக்ரேனுல் ஒரு பிரயோஜனமுமில்லை. எண்ணெய் வண்டிகளுக்குப்பதிலாக குதிரைகளை உபயோகிக்க ஹிட்லர் வசம் குதிரைகளுமில்லை. கொள்ளையடித்த பொருள்களை ஏற்றிச் செல்லவும் போதுமான சாதனங்கள் இல்லை. மேலும் யூக்ரேனில் ஹிட்லருக்கு விரோதமான கக்ஷியும் அதிகமாக வேலைசெய்கிறது.

இருந்தாலும், ஜெர்மனிக்குச் சாதகமான சில அம்சங்களும் இருக்கின்றன. ருஷ்யாவிற்கு அதிகமான தொழிற்சாலைப் பிரதேசங்கள் நஷ்டமடைந்தன. இவைகளை ஈடுசெய்ய அமானுஷமாகப்பாடுபட்டாலும் இதுவரை ஏராளமாக நஷ்டம் நேர்ந்திருக்கிறது.

## இன்னும் ஜெர்மனி அழிக்கப்படவில்லை.

ஆகவே நேசதேசங்களுக்குக் கொடுத்துவரும் உதவியை நிறுத்தாமல் செய்ய வேண்டும். பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் சாமான்கள் உதவி கொடுக்கப்படவேண்டுமென்பதற்கு மற்றுமொரு காரணமிருக்கிறது. அதாவது:—

அமெரிக்காவில் மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்னவிதமாக ஜெர்மனியின் 'சக்தி குறைந்திருக்கிறதே தவிர பூராவாக முறிபடவில்லை. காரியத்தில் உண்மையில் ருஷ்யர்கள் நடத்திக்காண்பிப்பவர்களாதலால் "ஒருக்கால்" என்ற பதத்தையே மறந்து நிச்சயமாக ஜெர்மானியரை முறியடித்துவிடுவார்கள். இந்த மாரி காலத்தில் முடிந்தவரை ஜெர்மானியரைத் துரத்தியடித்தாலும், பின்னுடியும்

ருஷ்யச் சைனியம் மறுபடி உலகத்தார் ஆச்சரியப்படும்படி நடந்துகொள்ளும். (சரியான ஜோஸ்யம்தான் பத்திராதிபர்). ஏனென்றால் வஸந்தகாலம் வந்தவுடன் எதிரி தனது முழுபலத்துடன் அடிக்கப்பார்ப்பான்.

### புது ருஷ்யச் சைனியம்.

இதை உத்தேசித்துத்தான் இரவும் பகலும் ருஷ்யச் சைனியம் புதிப்பிக்கப்பட்டும் பயிற்சிபெற்றும் வருகிறது. இவர்களுக்குப் பூராவான பயிற்சிகொடுத்து சண்டைசெய்துகொண்டும் இருக்கின்றனர். ஜெர்மன் சைனியம் குறைந்து வரவர ருஷ்யச் சைனியம் பலம்பெற்று வருகிறது. அவ்வளவுதான் இப்பொழுது நான் சொல்ல முடியும்.

ருஷ்யர்கள் கொஞ்சமும் முணுமுணுக்காமல் எதிர்பார்த்தவிதமாக தியாகம் செய்யத் தயாராக முன்வந்திருக்கின்றனர். பல ருஷ்யர்கள் எதிரிகள் வசமிருந்து தப்பி அலைந்து திரிந்தாலும் யுத்தத்தில் அலுப்படையவில்லை. வால்டேர் என்பவரின் உபதேசத்தைப்போல் ருஷ்யர்களுக்கு அனாவசியமாக சண்டையில் நோக்கமே கிடையாது. "எங்களைத் தனியே விட்டுவிடுங்கள். எங்கள் இஷ்டப்படி நாங்கள் நடந்துகொள்ளவேண்டும்" என்பதுதான் ருஷ்யர்களின் கொள்கை. ஆனால் இவ்விதம் நடந்துகொள்வது அசாத்தியமானவுடனே முழுமனதுடன் யுத்தத்தில் இறங்கி, பிரிடிஷார்கள் நடப்பதுபோல் ஈடுபட்டிருக்கின்றனர்.

### வெற்றியில் நம்பிக்கை.

இந்த ஆறுமாத காலத்தில் ருஷ்யச் சைனியத்தை போர்களத்திலும் மற்ற இடங்களிலும் போய்ப்பார்த்ததிலிருந்து ருஷ்யர்களுக்கு முடிவான வெற்றி பெறுவோமென்ற நம்பிக்கை குறையவே இல்லை. அதற்காக ஏற்படும் துன்பங்களை அவர்கள் லக்ஷியம் செய்யவில்லை. நான் தெரிந்துகொண்டமட்டில் ருஷ்யச் சைனியம்தான் சரியாக முஸ்தீப்புபெற்று நடத்தப்படுகிறது. ருஷ்ய விமானப்படை பிரிடிஷ் விமானப்படைக்குச் சமமாக இருக்கிறது.

மேலும் இந்த ஆறுமாதங்களில் பிரிடிஷ் பிரதிநிதி ருஷ்யாவில் அதிகப் பொறுப்புடனும் அகம்பாவம் முதலிய தோஷங்களில்லாமலும் நடந்துகொண்டதிற்கு ருஷ்யர்கள் மிகவும் நன்றிபாராட்டுகிறார்கள்.

---

## யுத்த தளவாடங்கள் குவியல் குவியலாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

---

### அமெரிக்க முறைகள் எங்கும்வெற்றி பெறுவதற்கான திட்டம் பரவிவருகிறது.

எட்வர்ட் மான்ட்கமரி எழுதியது.

இவ்வாரத்தில் யுத்தத்தில் அமெரிக்கப் படைகள் ஈடுபட்டு நடந்த சம்பவங்களைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்காத சமயத்திலும், ஆனால் கிடைத்தமட்டில் திருப்திகரமாயில்லாத சமயத்திலும், ஜனாதிபதி மிகவும் உத்ஸாகத்தை அளிக்கும்படியான சில தகவல்களை அமெரிக்கச் சபைக்கு அறிவித்தார். பெரும் பெரும் எழுத்துக்களால், பச்சை மசியால் அமெரிக்கர்கள் மகத்தான காரியத்தில் ஈடுபட்டிருப்பதைப்பற்றி பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. இந்த வருஷம் அங்கு 60,000 விமானங்கள் உற்பத்திசெய்யப்படும்; அடுத்த வருஷத்தில் 1,25,000 விமானங்கள் உற்பத்தியாகும். 80,00,000 டன் நிறையுள்ள கப்பல்கள் இந்த வருஷத்திற்குள் கட்ட ஏற்பாடு செய்யப்படும். அடுத்த வருஷத்தில் இன்னும் அதிகமாக அதாவது ஒரு கோடி டன் நிறையுள்ள கப்பல்கள் செய்யப்படும். அதே மாதிரி இந்த வருஷத்தில் 45,000 டாங்கிகளும், அடுத்த வருஷத்தில் இன்னும் உபரியாக 75,000 டாங்கிகளும் உற்பத்தி செய்யப்படும்.



மேலும் இந்த வருஷத்தில் 20,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளும், அதற்கடுத்த வருஷத்தில் 35,000மும் செய்து முடிக்கப்படும்.

ஜெர்மன் விமான உற்பத்தி, அடுத்த வருஷத்திய அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் விமானங்களின் எண்ணிக்கைக்குப் பாதிக்குமேல் இராது என்று ஜனாதிபதி உத்தேசமாகச் சொன்னார். யுனைடெட் ஸ்டேட்ஸ் நீங்கலாக இவ்வுலகத்திலுள்ள எந்த தேசத்திலும் வருஷத்திற்கு 60,000 விமானங்கள் செய்யப்படும் என்பதே சந்தேகம். எப்படியிருந்தாலும் இந்த எண்ணிக்கையின் இரட்டிப்பு பங்கு விமானங்களை 1943-ல் உற்பத்தி செய்யும்படி யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள தொழிற்சாலை அதிகாரிகளை ஜனாதிபதி தூண்டிவருகிறார்.

### ஏராளமான எண்ணிக்கையாயிருந்தாலும், அவைகளை உற்பத்தி செய்வதற்கு முடியும்.

கப்பல்கள், டாங்கிகள், விமானங்கள் இவைகளின் உற்பத்தியில் அபிவிருத்திக்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் போட்ட திட்டங்கள் சாதாரணமாக இவ்வெண்ணிக்கையைக் கேட்டமாத்திரத்தில் ஒருவனுக்குப் பிரமிப்பு தட்டும். அவ்வித மலைப்புக்குக் காரணம் சென்ற மாதத்தில் இருந்த விமான உற்பத்தியைப் பார்த்துவிட்டதினால்தான். சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்தான் அங்கே மாதத்திற்கு 2,000 விமானங்களுக்கு குறைவாகவே தயார்செய்ய முடிந்தது. அப்படியிருக்க ஜனாதிபதி போட்ட திட்டமானது 5,000 விமானங்களை அடுத்த வருஷத்திற்குள் செய்வதற்குச் சாத்தியப்படுமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

இவ்விதம் ஏராளமாக திடீரென்று சாமான் உற்பத்திசெய்வது அமெரிக்காவுக்கு மட்டில்தான்முடியும். அங்கு படிப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியடைவது என்பது கிடையாது. இவ்விதமாக ஏராளமாக சாமான்களை உற்பத்தி செய்ய திட்டம் போடப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த சாமான் ஆடோமோபைல் கார் என்று வைத்துக்கொள்வோம். தொழிற்சாலையில் எவ்வளவு வேண்டும் என்று கேட்கப்படுகிறது. அதற்கு 10,00,000 கார்கள் தேவை என்று பதில் வந்தவுடனேயே, உற்பத்திசெய்யும் நிபுணர்கள் வேலைக்கு இறங்குகின்றனர். திட்டங்கள் போடப்பட்டு, பிளான்கள் தயாரிக்கப்படுகின்றன. அவைகளை ஆமோதித்தவுடன், யந்திரங்கள் அநேகம் பூட்டப்படுகின்றன. ஒரு நாளில் செய்யக்கூடிய அளவை நிர்தாரணம் செய்யப்படுகிறது. தொழிற்சாலைகளில் ஆயுதங்கள் சேகரிக்கப்படுகின்றன; விளைபொருள் சாமான்களும் சேகரிக்கப்படுகின்றன. இதெல்லாம் கொஞ்சநாட்கள் பிடிக்கும். இவைகளெல்லாம் தயாராகி யந்திரங்கள் ஒரு நாளையில் எவ்வளவு சாமான் உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டம் போட்ட பிரகாரம், அந்தளவு வரும் வரை வேலை தொடங்குவதில்லை. இவையெல்லாம் தயாரானவுடன் அல்லும் பகலுமாக தொழிற்சாலைகள் வேலைசெய்ய ஆரம்பிக்கின்றன. ஒரு நாளில் ஒரு கார்கூட செய்யமுடியாத நிலைமையில் இருந்ததுபோய் இப்பொழுது நாளைக்கு 3,000 கார்கள் செய்யப்படுகின்றன.

### ஏராள உற்பத்தி.

யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகள் அடுத்துவரும் சில மாதங்களில் ஆயுதங்கள், சாமான்கள் தயாரிப்பதை முடித்துக்கொண்டு, வெகு தீவிரமாக சாமான்களை செய்துமுடிக்க வேலை துவக்கப்படும். யுனைடெட் ஸ்டேட்ஸில் இங்கு, அங்கு, எங்கும் பெரிய பெரிய தொழிற்சாலைகளில் ஆயுத முஸ்தீப்பு தயாரிக்க 1940-ம் வருஷம் கோடை காலத்தில் திட்டம் போடப்பட்டு இப்பொழுது அவைகளை நாம் மனதில் நினைக்கமுடியாத அளவு உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கிறோம். தொழிற்சாலைகள் வேலைக்கு ஆரம்பமானதும் யுத்த தளவாடங்கள் யாவும் ஏராளமாக உற்பத்தியாகும். சாதாரணமாகவும், படிப்படியாகவும் அதிகரிப்பதில்லை. ஆனால் ஒரே தடவையில் குவியல், குவியலாக சாமான்கள் செய்யப்படும். அதனால் ஜனாதிபதி போட்ட திட்டங்கள் நமக்கு முதலில் பிரமிப்பைக் கொடுக்கும் என்று எண்ணினாலும் அவை யாவும் இப்பொழுது அமெரிக்கத் தொழிற்சாலைகள் செய்துமுடிக்கும் என்பது நிச்சயம்.

## ஏன் சாமான்களின் எண்ணிக்கையை வெளியிடவேண்டும்.

ஒரு தேசத்து ராணுவ முஸ்தீப்புகளும், யுத்த தளவாடங்களும் இவைகளைப் பற்றி ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய வெளியிடக்கூடாது. ஏன் ஜனாதிபதி ஜெர்மானியர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் அமெரிக்காவில் சாமான்கள் எவ்வளவு உற்பத்தியாகின்றன என்ற விஷயம் தெரிந்துகொள்ளும்படி அனுமதித்தார்?.

அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. இவர் சொல்லும் எண்ணிக்கையுள்ள சாமான்கள் அடுத்துவரும் இரண்டு வருஷங்களுக்குள் செய்து முடிக்கப்பட்டால், ஜெர்மானியர்களும, ஜப்பானியர்களுக்கு இந்த ரகசியம் தெரிந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி, பரவாயில்லை. ஏனென்றால் அமெரிக்கா மாதிரி அவ்விரண்டு நாடுகளும் ஏராளமாக சாமான்கள் திடீரென்று செய்துமுடிக்க சக்தி வாய்ந்தவை அல்ல. இது மட்டிலுமல்ல, அமெரிக்காவின் விரோதிகள் பலஹீன முள்ளவர்கள் என்றும், அவர்களால் செய்யமுடியாது என்றும், அவர்கள் இறுதியில் தோல்வியடைவார்கள் என்றும் ஜனாதிபதி தெரிந்துகொண்டிருக்கிறார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 80—(2-வது பிரிவு).

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஜனவரி ... | 31, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| பிப்ரவரி ... | 2, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 3, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | கொடும்பாளூர் ... | மாலை | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |
| | 4, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | வெங்களூர் ... | மாலை | 6.00 |
| | | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| | 5, வியாழக்கிழமை .. | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 6, வெள்ளிக்கிழமை... | மலைக்குடிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | தொலையானூர் ... | ,, | 6.30 |

பிரஸங்கம் 81—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| | 7, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 9, திங்கட்கிழமை ... | கரம்பக்குடி ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு ... | ,, | 6.30 |
| | 10, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | ஆலங்குடி ... | மாலை | 6.00 |
| | | வடகாடு ... | ,, | 6.30 |
| | 11, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 12, வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | எம்பல் ... | ,, | 6.30 |
| | 15, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி ... | ,, | 6.30 |
| | | ஆலூர் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 2,500—31-1-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் பிப்ரவரி மீ 7உ [நெ. 81

## ஒரு சந்தர்ப்பம்.

நாளையதினம் நமது ஸமஸ்தானத்திற்கு மாட்சிமை தங்கிய மதராஸ் கவர்னர் அவர்கள் விஜயம் செய்கிறார். சாதாரண முறையில் (informal) நியமங்களதிகமில்லாமல் யுத்த முயற்சியை முன்னிட்டே அவர் வருகிறார்.

அவருக்குச் செய்யப்படும் வரவேர்ப்பில் கொஞ்சமும் குறையில்லாமல், மாட்சி தங்கிய நமது மன்னர்பிரானும், தர்பாரவர்களும், ஸமஸ்தான வாசிகளும் பூர்ண மனதுடன் வரவேற்கிறார்கள். அன்று சிறிது காலம் இங்கே தங்கும்படி நேர்ந்தது நமக்கு ஒரு கௌரவம்தான். மற்ற இடங்களில் செய்யவேண்டிய யுத்த சம்பந்தமான சுற்றுப்பிரயாணத்திற்கு இடையில், இங்குவந்து நமது யுத்த முயற்சியையும் பார்த்து சந்தோஷமடைந்து, நம்மை உத்ஸாகப்படுத்தவே அவர் வருகிறார்.

ஆகவே ஆதித்யம் செய்வதில் பரம்பரையாகப் பெயர்பெற்ற நமது ஸமஸ்தான வாசிகள் தங்களது மனமார்ந்த விசுவாஸத்தைக் காண்பித்து அவரது சொற்பொழிவுகளைக் கேட்கவரவேண்டும். அவர் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறார். இம்மாகாண வாசிகளுக்குத் தேவையான விஷயங்களில் அதிகம் தயவுகாட்டிவருகிறார். யுத்த முயற்சியிலும் அதிகம் ஈடுபட்டவர்.

நாளை டவுன்ஹால் கூட்டத்தில் அவர் சொல்லப்போகும் விஷயங்கள் முக்கியமாக இச்சமஸ்தான வாசிகள் கேட்டு அதன்படி நடக்கவேண்டியதாகவேதான் இருக்குமென்று நினைக்கிறோம். ராஜவிசுவாஸம், தைரியம், தினம் செய்யவேண்டிய வேலைகளில் விடாமல் ஈடுபடுவது முதலியவைகளைப்பற்றி அவர் உபந்யாசம் செய்வார். அக்கரையில்லாத வீண்வார்த்தைகளைப் பேசுவது, பொய் வதந்திகளைப் பரவச்செய்வது, கலவரமடைவது முதலியன கூடாதென்று விசேஷமாக வற்புறுத்துவார். சொத்துக்களையும், பணத்தையும் வீணாகக் கட்டிப்போட்டு வைக்காமல் கவர்ன்மெண்ட் பத்திரங்களை வாங்கிக்கொண்டோ, யுத்தத்திற்குக் கடன் கொடுத்தோ வருவதுதான் உசிதமென்றும், அப்படி செய்வது தேசாபிமானத்தைக் காண்பிப்பதாகுமென்றும் சொல்லுவார். பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும், நேசதேசங்களுக்கும் முடிவான வெற்றி கிடைப்பது நிச்சயமென்பதை நன்றாக விலக்கிக்காட்டி அதற்காக ஸ்வதந்திரத்தை விரும்பும் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த உதவி செய்யவேண்டுமென்றும் அறிவிப்பார்.

நாம் எதிர்பார்ப்பதைவிட அதிகமாகவே அவர் தெரியப்படுத்துவார். மேலும் யுத்தத்தில் ஹிட்லரின் கொடுமைகளை அகற்றி மனித வர்க்கத்தைக் காப்பாற்ற பெரும் தியாகம் செய்த தலைவராகவே இவர் இருப்பதால் இந்த ஸமஸ்தான மக்களுக்கு, சாம்ராஜ்யத்திலேயே ஒரு பெரும் பதவியை வகிக்கும் இப்பெரிய மனிதருடன் நெருங்கிய சம்பந்தம் ஏற்படும்.

பிரஸங்கம் LXXXI.

## லண்டனிலிருக்கும் நேசதேச அரசாங்கங்கள் உதவும் விதம்.

## பிரிடனுக்கு ஒவ்வொரு போர்முனையிலும் உதவி அளிக்கப் படுகிறது.

## ருஷ்யாவிற்குப் போலந்திலிருந்தும், ஸெகோஸ்லாவியாவிலிருந்தும் உதவி அனுப்பப்படுகிறது.

## டொப்ரூக் பாதுகாப்பிற்கு கிரீஸ் தேசக் கப்பல்கள் எவ்வாறு உதவின.

*பிலிப் J. நோயல் பேக்கர் (M. P.) என்பவர் சமீபத்தில் பி. பி. ஸி. யில் ஒலிபரப்பியது*

ஒரு வருஷத்திற்கு முன் இங்கிலாந்தில் ஒரு கதை வழங்கி வந்தது. அதாவது
பிரான்ஸ் தேசத்தை ஜெர்மானியர்கள் ஆக்கிரமித்த உடன் அங்குள்ள பிரிடிஷ்
காரர்கள் யாவரும் இங்கிலாந்துக்கு வந்துவிட்டார்கள். செர்பர்க்கிலிருந்து இவ்
விதம் பிரிடிஷ் துருப்புகளை ஏற்றி கடைசி கப்பலும் வந்தவுடன் ஒருவயது
முதிர்ந்த பிரிடிஷ்காரர் பின்வரும் வாக்கியங்களைச் சொன்னதாக ஒரு பிரஸ்தாபம்
உண்டு. "ஐரோப்பாவிலுள்ள நம் நேசநாடுகள் யாவும் எதிரிகளால் பிடிக்கப்
பட்டன. பிரான்ஸ் தான் எஞ்சியிருந்த நேசநாடு. அதுவும் போய்விட்டது.
இனிமேல் நம் தேசத்தைப் பாதுகாக்க மட்டில் நாம் சண்டையிடவேண்டும்."
என்று அவர் சொன்னார். பல கஷ்டங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாய் வந்து
கொண்டிருந்த அந்த சமயத்தில் நாம் தனியாயிருந்து யுத்தம் புரிவதுதான்
நல்லது என்று நாம் எண்ணினோம். தனியாகத்தான் சண்டை செய்யவேண்டும்
என்ற நம்பிக்கை இருந்ததினால்தான் நாங்கள். முழுமுயற்சியையும் காண்பிப்ப
தற்கு முடிந்தது. ஆனால் நாம் தனியாகவே கடைசிவரையில் இருந்து
விடவில்லை.

1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரான்ஸ் விழுந்தது. அது முதற்
கொண்டே நம் திரப்பில் நேசதேசத்தார்கள் உதவிபுரிந்து வந்திருக்கிறார்கள்.
அவர்கள் தைரியமாக இந்த யுத்தத்தில் பலவழிகளிலும் நமக்கு உதவி செய்தி
ருக்கிறார்கள். இன்னும் அவர்களுடைய பலத்தைக்கொண்டு நாம தோற்கடிக்கப்
படாமல் இன்னும் சமாளித்துக்கொண்டு வருகிறோம். இந்த நேசதேசத்தார்
கள் எதிரிகள் ஜயித்த தேசங்களிலிருந்து வந்திருக்கும் ஸ்வதந்திரமுள்ள
பிரதிநிதிகள்.

### சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஜனநாயகக் கொள்கைப்படிக்கும் உள்ள அரசாங்கங்கள்.

இப்பொழுது எதிரி கைப்பற்றிக்கொண்ட ஐரோப்பிய தேசங்களிலிருந்து
எட்டு அரசாங்கங்கள் பிரிடனில் அமைந்திருக்கின்றன. இதை விட தளகர்த்
தர் 'டிகாலியின் தலைமையின் கீழுள்ள ஸ்வதந்திர பிரெஞ்சுக் கக்ஷியினர் வேறு
இருக்கிறார்கள். மேற்கண்ட அரசாங்கங்கள் அந்தந்த தேசங்களுடைய சட்டப்
படிக்கும், கிரமமாயும் அமைந்துள்ள அரசாங்கங்கள்தான்.

அவர்கள் தங்கள் நாடுகளை விட்டுவந்தார்கள். ஏனெனில் ஹாலந்து ராணி
வில்ஹெல்மினா விவரித்தபடி நாஸிகள் படையெடுத்ததினால் அவளும, அவள்
மந்திரிகளும் ஹாலந்தில் சுயேச்சையாகவும், சட்டப்படிக்கும், தங்களுக்குள்ள
அதிகாரத்தை செலுத்த முடியாது என்ற காரணத்தினால்தான். ஆகையால்
எதிரி கைப்பற்றிக்கொண்ட மற்ற தேசங்களின் அரசர்கள்போல் அவளும, அவள்
மந்திரிகளும் அரசாங்கத்தின் தலைமை ஸ்தானத்தை அயல் நாட்டில வைத்துக்
கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அவ்வித தீர்மானமான முடிவுக்கு
வந்தனர்.

லண்டனில் முறைப்படி ஏற்படுத்தப்பட்ட அரசாங்க இலாகாக்கள் அவை
களுக்கிருக்கின்றன:- அதாவது அவர்களுடைய பொதுஜன வேலை ஸ்தாபனங்கள்



அவர்களுடைய சொந்த நியாய ஸ்தலங்கள் அங்கு இருக்கின்றன. தேச
சேவைக்கு அந்தந்த தேச ஜனங்களைக் கட்டாயப்படுத்தித் திரட்ட அதிகாரமும்
அவர்களிடமும் இருக்கிறது. நவீன அரசாங்கத்தின் துரைத்தனத்தை அவர்
களுடைய சொந்த ஊரில் இருந்தால் எப்படி வழக்கப்படிக்கும், சட்டப்படிக்கும்
மந்திரிகள் சபையில் கூடி நடத்துவார்களோ அம்மாதிரி இங்கும் நடத்தப்
படுகின்றன.

அவைகள் கிரமமாகவும், நியாயமாகவும் ஏற்பட்ட அரசாங்கங்கள் மட்டு
மல்ல ஜனநாயக அரசாங்கங்களாகவும் இருக்கின்றன. சிலவை ஜனப்பிரதிநிதிகள்
கூடிய சபையினுடைய அதிகாரம் பெற்றுத்தான் அரசாங்கத்தை நடத்தக்கூடும்.
அதற்கு நார்வே அரசாங்கம் ஒரு உதாரணம். நாஸிகள் ஜனப்பிரதிநிதி சபை
களையே ராணுவ லக்ஷியங்களாகக் கருதி வெடிகுண்டுகள் போடுகிறார்கள்.
நார்வேயில் எங்கு பார்த்தாலும் வெடிகுண்டுகள் விழுந்தபொழுது, ஜனப்பிரதி
நிதி சபைகூடி யுத்த காலம்வரை மன்னரும், அரசாங்கமும் நார்வேயிலும்,
அவசியமிருந்தால் வெளியூர்களிலும் இருந்து அவர்களுக்குள்ள அதிகாரத்தைச்
செலுத்தும்படி ஏகமனதாக ஒப்புக்கொண்டது.

### மகத்தான உதவிகள்.

இங்குள்ள அநேக அரசாங்கங்கள் தேசிய சபைகளை ஸ்தாபித்திருக்கின்றன.
அவைகளில் வெவ்வேறு கக்ஷிகளின் தலைவர்களும் மெம்பர்கள். அங்கு அரசாங்
கங்களின் நடவடிக்கைகள் குணதோஷ விமர்சனம் செய்யப்படும். பொது
விஷயங்கள் சுயேச்சையாகவும், ஜனநாயகக் கோட்பாட்டுப் படிக்கும் சர்ச்சை
செய்யப்படும்.

"மந்திரி சபைகள், அரசாங்க இலாகாக்கள் நியாய ஸ்தலங்கள், தேசீய
சபைகள் இவைகளெல்லாம் அங்கு இருப்பதாக எழுதினால் படிப்பதற்கு நேர்த்தி
யாகத்தான் தோன்றும். ஆனால் நடவடிக்கையில் அங்கு அவைகள் என்ன
செய்யக்கூடும்" என்று நீங்கள் கேட்கக்கூடும். அயல்நாட்டில் வந்திருக்கும்
அரசாங்கங்கள் தேசங்களே இல்லாமல் என்ன துரைத்தனம் நடத்தக்கூடும்
என்றும் நீங்கள் கேட்கலாம். கோயபல்ஸ் அவைகளைச் சொல்லுகிறபடி "ஆட்டு
மந்தைகளாக" இல்லையா என்றும் கேள்வி பிறக்கும்.

இல்லை. அவைகள் அம்மாதிரி அல்ல. டச்சு அரசாங்கம் கிழக்கு, மேற்கு
தேசாந்தரங்களில் அதன் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த 60,00,000 ஜனங்களுட
னும் ஏராளமான இயற்கைப்பொருள்களுடனும் அரசாக்ஷி செய்துவருகிறது.
பெல்ஜியன் அரசாங்கம், மத்திய ஆபிரிக்காவிலுள்ள அதன் ஸாம்ராஜ்யத்தைச்
சேர்ந்த நாடுகளை ஆண்டு வருகிறது. பிரான்ஸைப்போல் மொத்தத்தில் ஏழு
மடங்கு விஸ்தீர்ணமுள்ள பிரெஞ்சு குடியேற்ற நாடுகளை தளகர்த்தர் டிகாலி
ஆண்டு வருகிறார்.

இந்த யுத்தத்தில் சகல ஸாதனங்களையும், சரியான வழியில் உபயோகிக்கும்
தேசம்தான் ஜயமடைய முடியும். ஆகையால் மூலப்பொருள்கள் எந்த தேசங்
களிடம் அதிகம் இருக்கின்றதோ அவைகளுக்குச் சாதகமாகத்தான் யுத்தம்
முடிவுக்கு வரலாம். ஆகையால் நேசதேசத்தார்கள் சார்பாக இந்தக் குடியேற்ற
பிராந்தியங்கள் எவ்வளவு மகத்தான உதவி செய்துவருகின்றன என்பதை
ஊகித்துப் பார்ப்போம்.

டச்சு அரசாங்கத்திற்கு வியாபாரக் கப்பல்கள் மிக அதிகம். நார்வே அரசாங்
கத்திற்கு 40,00,000 டன்கள் மொத்த நிறையுள்ள வியாபாரக் கப்பல்களும்,
கிரேக்க அரசாங்கத்திற்குச் சுமாராக 10,00,000 டன்கள் நிறையுள்ள கப்பல்
களும் இருக்கின்றன.

ஒரு வருஷத்திற்கு முன் நம்முடைய ஸ்வதந்திரத்திற்கு ஒரு பெருத்த அபா
யம் இருந்தது என்னவென்றால் கடல் மார்க்கமாய் வரும் ஸப்ளைகளை அழிக்க
ஹிட்லரின் நீர்மூழ்கிக் கப்பல்களும், விமானங்களும் எதிர்த்துத் தாக்க வந்தது
தான். ஹிட்லரிடமிருந்து தப்பி ஆகாய விமானத்திலிருந்து வந்து இறங்கிய

னுடால்ப் ஹெஸ் சொன்னதிலிருந்து பொருளாதார முற்றுகைபோட்டு நம்மைப் பட்டினியால் அழித்துவிடலாமென்று ஹிட்லர் உண்மையாக நம்பியிருந்ததாக நமக்குத்தெரிய வந்தது.

நேசதேசத்தார்கள், கிரேக்கியர்களாலும், டச்சுக்காரர்களாலும், நார்வே தேசத்தார்களாலும், செலுத்தப்படும் ஏராளமான டன் நிறையுள்ள கப்பல்களை நமக்கு உதவிசெய்ய அனுப்பியிருக்கின்றனர். தினசரி அந்நமாலுமிகளுக்கு கடலில் ஏற்படும் அபாயங்களை நாம் ஞாபகப்படுத்திக்கொண்டால், அவர்கள் நமக்கு செய்துவரும் சேவை மகத்தானது என்று தெரியவரும்.

## முற்றிலும் பயிற்சிபெற்ற படைப்பகுதிகள்.

இந்த அரசாங்கங்களுக்கு அவர்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய ஆயுதம்பூண்ட படைகள் அநேகம் இருக்கின்றன. சென்ற சில வாரங்களாக பஸிபிக் யுத்தத்தில் டச்சுக் கடற்படை செய்துவரும் அரிய போரைக் குறித்து புகழ்ச்சியாக நாம் பேசிவருகிறோம். அட்லாண்டிக் சமுத்திரத்திலும், வடகடலிலும், எல்லாவற்றைக் காட்டிலும் மத்தியதரைக்கடலிலும், நமது நேச தேசத்தார்களின் யுத்தக் கப்பல்கள் அபூர்வமான வேலைகள் செய்திருக்கின்றன. அப்படி மொத்தத்தில் 187 கப்பல்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று பிரெஞ்சு யுத்தக் கப்பல், மூன்று க்ரூயிஸர்கள், 27 நாசகாரிகள், அநேக நீர்மூழ்கிகள் இருக்கின்றன. 14,000 பேர்கள் அவைகளில் வேலைசெய்து வருகிறார்கள்.

அவர்களின் போர் சாதனங்களின் எண்ணிக்கையைக் குறித்து வெளிப்படுத்துவது பொதுமக்களின் பாதுகாப்புக்கு விரோதம். அவர்களுக்குள் நேசதேசத்தார்களின் சார்பில் போரிட முற்றிலும் பயிற்சி பெற்ற அநேக படைப்பகுதிகள் அடங்கி இருக்கின்றன. ஸோவியத் ஐக்கிய அரசாங்கம் போலந்துக்காரர்களையும், ஜெக்கியர்களையும் திரட்டி புதிய படைகளைச் சேர்க்கிறார்கள். வசந்தகாலத்தில் ருஷ்யர்களுக்கு உதவியாக அந்த உதவிப்படைகள் தயாராகிவிடும்.

நம் உதவிக்கு வரக்கூடிய நேசதேசத்தார்களின் விமானப்படைப்பகுதிகள் எவ்வளவு இருக்கின்றன என்று சொல்லுவதும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு விரோதம்தான். ஆனால் ஒவ்வொரு போர்முனையிலும் அவர்கள் நம்முடன் சேர்ந்து போர்புரிந்து வருகிறார்கள். பிரிடனை நாஸிகள் விமானங்களால் தாக்கின பொழுது ஜெக்கிய பைடர் விமானப்படைப் பகுதி ஒன்று ஐம்பது தடவைகள் வெற்றியடைந்திருக்கிறது.

ஒரே நாளில் நாலு மெஷர்ஷ்மிட் விமானங்களைச் சுட்டுவீழ்த்திய வீரனை பெல்ஜியன் விமானியும், சமீபத்தில் ஒரு மாதத்திற்கு முன் இறந்துவிட்டார்.

## ஒரு சரியான உதாரணம்.

போர் எங்கு கடினமாக இருக்கிறதோ அங்கு சென்று யுத்தம் புரிய தங்களை அனுப்பும்படி நமது நேசதேசத்தார்கள் கேட்டுக் கொள்ளுகிறார்கள். இந்த யுத்தத்தில் ஒன்பது மாத முற்றுகையிலிருந்து டொப்ருக்கைப் பாதுகாத்த விஷயம் காவியம் போன்ற ஒருகதை. முற்றுகை முடிந்தவுடன் பார்க்க அங்கிருந்த படைகளில் போலிஷ் படைப்பகுதிகளும், ஜெக்கியப்படைப் பகுதிகளும் இருந்திருக்கின்றன.

அவைகளுக்கு உதவி அளிக்க ஸ்வதந்திரப் பிரெஞ்சு பாம்பர் விமானப்படை முக்கியமான வேலைசெய்தது. இந்த ஒன்பதுமாத முற்றுகையிலும் கிரீஸ் தேசத்து சிறிய வியாபாரக் கப்பல்களும், யுத்தக் கப்பல்களும், அச்சுநாடுகளின் பீரங்கி குண்டுகளுக்கு இடையேயும், ஆகாய விமானத் தாக்குதல்களுக்கு நடுவேயும், உணவும், யுத்தப்பொருள்களும் தைரியமாகக் கொண்டுசென்று, டொப்ருக் பாதுகாப்பைத் துயர்ந்து நடத்தும்படி உதவிசெய்திருக்கின்றன.

நம் நேசதேசத்தார்களின் தைரியமோ அபாரமானது. போலிஷ்காரர்களைக் குறித்த ஒருகதையைச் சொல்லுவதற்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஒரு



நாள் நமது பைடர் விமானப்படைத் தலைவர் கடற்கரைப் பாதுகாப்புப் படைத் தலைவருக்கு இங்கிலீஷ் கால்வாயில் ஒரு நீர்மூழ்கிக் கப்பலை நமது பைடர்கள் தாக்குவதாக டெலிபோன் மூலம் செய்தி அறிவித்தார். அதற்கு கடற்கரைப் பாதுகாப்பு விமானப்படைத் தலைவர் "அது நமது நீர்மூழ்கிக் கப்பல், அதைத் தாக்காமல் பைடர் விமானங்களைத் திரும்பி வரச்சொல்லுங்கள்" என்று பதிலளித்தார்.

"அதற்கு பைடர் விமானப்படைப் பகுதித் தலைவர் அவர்கள் போலிஷ் பைடர் விமானப்படையைச் சேர்ந்தவர்கள். அவைகளைத் திருப்ப அழைப்பது முடியாத காரியம்," என்றார்.

கடற்கரைப் பாதுகாப்புப் படைத்தலைவர் மறுபடியும் "இங்கிலீஷ் கால்வாயிலுள்ளது போலிஷ் படையைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பல்தான். அது சரியான காரியமில்லையே!" என்று பதிலளித்தார். இதிலிருந்து நேசதேசத்தினர்கள் நம்முடன் ஒத்துழைக்கிற விஷயம் தெளிவாகத் தெரிகிறது.

## மற்றொரு சேவை.

நமது நேசதேசத்தார்கள் புரியும் சேவை மற்றொன்று இருக்கிறது. ஐரோப்பாவில் ஜயிக்கப்பட்ட நாடுகளில் உணர்ச்சி குறையாமல் நமது நேசதேசத்தார்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நார்வேக்காரர்களுக்கு ஒவ்வொரு குடி, குடித்தனத்துக்கும் பழக்கமுள்ளவரும், நல்லமதிப்புப்பெற்று தலைமை வகித்து வந்திருக்கிறவரும் இங்கிருந்து ஒலிபரப்பி வருகிறார். இங்கிருந்து ஸ்வதந்திரப் பிரெஞ்சுக்காரர்களும் ஒலிபரப்புகிறார்கள். ஒரு வருஷத்திற்கு முன் பிரான்ஸில இவர்களின் பெயர்களே தெரிந்திருக்காது. ஆனால் இப்பொழுதோ அவர்கள் தேசத்தார்களுக்கும், அவர்கள் தேசத்தார்களின் சார்பாகவும் ஒலிபரப்பி வருகிறார்கள்.

இப்பொழுது நேசதேசத்தார்களின் சபையைக்கூட்டி அந்த அரசாங்கங்களுடன் ஒத்து நடவடிக்கை நடத்த ஏற்பாடு செய்ய ஆரம்பித்திருக்கிறோம். இந்த கோரயுத்தத்தின் முடிவிற்குப் பிறகு வரும்காலத்தில் எப்படியிருக்க வேண்டும் என்பதை நாமும், அவ்வரசாங்கங்களும் யோசனை செய்துகொண்டிருக்கிறோம். உலகம் சுபீக்ஷமாகவும், அமைதியாகவும் இருக்க திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கு பிரிடனில் ஜனநாயகத்தை ஒழுங்குப்படுத்தி, அதன் முறைகளையும் சீர்படுத்தி உண்மையில் ஜனநாயகம் ஏற்படும்படி நாம் இப்பொழுது பாடுபடுகிறோம்.

நாம் நம்முடைய சௌகரியங்களை மாத்திரம் கவனிக்கவில்லை. ஐரோப்பாவிலுள்ள நாடுகளுடன் சேர்ந்து சௌகரியங்கள் அடைய சிந்தனை செய்கிறோம். ஐரோப்பிய நாடுகளில் இப்பொழுது நகரங்களிலும்; போர்முனைகளிலும் ஒருவருக்கொருவர் கொலை செய்துகொள்ளுவதை வெறுக்கிறோம். ஆனால் ஐரோப்பாவில் கலை, சங்கீதம், விஞ்ஞான சாஸ்திரம், கல்வி, பொதுஜன வேலை அபிவிருத்தி, ஜனநாயக ஸ்வதந்திரம், தேசத்தார்களின் முன்னேற்றம் இவைகள் ஏற்படும்படி விரும்புகிறோம். இப்பொழுது இம்மாதிரியான புதிய ஐரோப்பா பிரிடனிலிருந்து தயாராகி வருகிறது.

---

# வார யுத்தச் செய்திகள்.

### 31—1—42-லிருந்து 6—2—42-வரை.

**ருஷ்யா.**—ருஷ்யாவில் ஜெர்மானியர்கள் அடைந்துவரும் தோல்விகளுக்கு அவர்கள் பல காரணங்கள் சொல்லிவருகின்றனர். அதில் இதுதான் மிகவும் வியப்பைத்தாக்கூடியது. அதாவது ருஷ்யர்களுக்கு நாஸிகள் மந்திரம்போட்டு

மயக்கி கொஞ்சம் கொஞ்சமாக காந்த ஊசி இரும்புத்துண்டை இழுப்பதுபோல இழுத்துக்கொண்டே வருகிறார்களாம். இதற்குக் காரணம் பெரும் மந்திரவாதியான ஹிட்லர் சைனியத்தின் தலைமை வகிக்க ஆரம்பித்ததின் பயனாக இருக்கலாம்

இரண்டு மாதங்களாக நாஸிகள் தொடர்ந்து பின்வாங்கிக்கொண்டே சென்று மாரிகாலத்தில் தங்கியிருக்க இடங்களை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஜெர்மானியர் பின்வாங்கிச் சென்றபோது யாவற்றையும் பாழாக்கிவிட்டனர். அந்த இடங்களை எல்லாம் ருஷ்யர்கள் கடுமையாகச் சண்டைசெய்தே பிடுங்கி வருகின்றனர்.

'எதிரி இன்னும் பூராவாகத் தோற்கடிக்கப்படவில்லை. பிரமாதமான ஏற்பாடுகள் செய்துகொண்டு வசந்தகாலத்தில் காகஸஸை நோக்கிப் படையெடுக்கப்போவதாயும் சொல்லப்படுகிறது. ஆகவே டானட்ஸ் பிரதேசத்தில் ருஷ்ய வீரன் மார்ஷல் டிமோஷென்கோ முன்னேறிச்செல்வது மிகவும் முக்கியமானது. அஸாவ் கடலில் டாகன்ராக்கிற்கு 100-மைல் மேற்கே பெரிஸ்டோரிக்கை ருஷ்யர்கள் பிடித்ததும் விசேஷம்தான். டானட்ஸ் குடாவிலிருந்து மாஸ்கோவிற்குச் செல்லும் இருப்புப்பாதை மறுபடி ருஷ்யர்களால் ஸ்தாபிக்கப்பட்டு கார்க்கவ்விற்கு 80-மைல் சமீபத்திலும், நீப்ரோபெட்ரோவ்ஸ்கிற்கு 40மைல் சமீபத்திலும் ருஷ்ய சைனியங்கள் முன்னேறிவிட்டன.' பின்னால் சொல்லப்பட்டது ஒரு தொழிற்சாலை ஸ்தலம். வடக்கேயும் வியாஸ்மாவை நோக்கி ருஷ்யப் படைகள் போகின்றன. சீக்கிரத்தில் இதை அடைந்தால் 1,00,000 ஜெர்மன் துருப்புகள் பிடிபடும். கிரிமியாவில் பியோடோஸியாவை நாஸிகள் பிடித்தனர். ஸெபாஸ்டோபூலில் அவ்வளவு சிரமம் ஏற்படாமல் சிறிய சண்டைகளே நடைபெறுகின்றன. இங்கே எதிரிகளின் பலமும் குறைந்து வருகிறதாகவே அறிவிக்கப்படுகிறது.

**லிபியா.**—எதிரிக்குப் புதிதாக வந்த உதவியின் காரணமாக சாம்ராஜ்யப் படைகள் கொஞ்சம் தாத்காலிகமாக பெங்காஸியை விட்டுவிட நேர்ந்திருக்கிறது. மேலும் பார்ஸா, ஜெபல், அகோடார், மராவா, எல் அபெயர் வழியாக வந்து டெர்னாவையும் பிடித்ததாகப் பிரஸ்தாபம். இருந்தாலும் முடிவான சண்டை நேருக்குநேர் ஏற்படவில்லை. இதில் பின்பாகத்தில் இந்தியப்படை தைரியமாக நின்று சண்டை செய்திருக்கிறது. உதாரணமாக இந்திய 7-வது படை பெங்காஸியைச் சூழ்ந்திருந்து எதிரிகளின் அணியைத் துளைத்துக்கொண்டு வந்துவிட்டன. எதிரிக்கு அதிகச்சேதம். 200-மைல்கள் பாலைவனத்தில் நடந்து இப்போது பத்திரமான இடத்திற்கு வந்துவிட்டது. இவ்விதமாக 11, 4, 29 இந்தியப்படை வெற்றிகரமான குறுக்கு எதிர்ப்புகள் செய்தும் மோஸஸ், ஜெபல் அக்டார் என்ற இடத்தில் நன்றாக சண்டை செய்தன.

**தூரக்கிழக்கு.**—சமயம் வாய்த்தபொழுது ஜப்பான் முன்னேறித்தாக்கி வந்தாலும், அதன் அபாரமான நோக்கங்களின் முறிவு சீக்கிரத்திலேயே ஏற்படும். இவ்வாரத்தில் மார்ஷல், ஜில்பர்டு தீவுகளில் அமெரிக்கப் பஸிபிக் கப்பற்படை தாக்கிய நற்செய்தி கிடைத்திருக்கிறது. இந்தத் தீவுகள் ஜப்பானியர் வசமுள்ளவைகள்தான். இந்த சமயத்தில் பல எதிரிக் கப்பல்கள் சேதமாயின. இவ்விதம் அமெரிக்கர்கள் தாக்கியதின் முடிவான பயன் தெரியாதபோனாலும் இதனால் ஏற்படக்கூடிய பலன் வியக்தமானது. அமெரிக்கக் கப்பற்படை பஸிபிக்கிற்கு வந்துவிட்டது. அமெரிக்கக் கப்பல் தலைவர் அட்மிரல் செஸ்டர் நிமிட்ஸ் 'ஒவ்வொரு அமெரிக்கரும், ஒவ்வொரு கப்பலும் ஈடுபட்டு எதிரியை முறிக்கத் தயாராக இருக்கின்றன' என்றார்.

**மற்றும் உத்சாகத்தைக் கொடுக்கக்கூடிய அடையாளங்களும் இருக்கின்றன. மெக்ஆர்தர் பிலிப்பைன்ஸில் எதிர்த்து நிற்பதும், எதிரிக் கப்பல்கள் மூழ்குவதும், ஜோஹூர் பிரதேசத்தில் எதிரியடைந்த நஷ்டமும், சீனர்கள் பெறும் வெற்றியடைந்து வருவதும் சாதகமான அம்சங்கள். சீனர்கள் எதிரியை பலமாக எதிர்க்கத் தயாராக இருப்பதாயும் தெரிகிறது.**

மற்றும் பல இடங்களில் நிலைமை இவ்விதம் இருக்கிறது:—

**மலேயா.**—ஜோஹூர் சண்டை முடிந்து சிங்கப்பூர் முற்றுகை ஆரம்பமாகிற்று. இதுவரை இரண்டு மாதகாலமாக மலேயாவில் தைரியமாக எதிரியைத் தடுத்து படைகள் இத்தீவிற்கு வந்திருக்கின்றன. இங்கேயுள்ள ஜோஹூர் பாலம் உடைக்கப்பட்டிருக்கிறது. விமான மூலம் எதிரி கடுமையாகத் தாக்கி வருகிறான். இருந்தாலும் பெரிய பீரங்கிகள் மூலமாக எதிரிச் சைனியம் தாக்கப்படுகிறது. மலேயாவின் தெற்கே எதிரிப் படைகளை சேமித்துவருவதாகச் சொல்லப்படுகிறது. ஸர் ஹென்ரி பௌனல் "பிரகிருத நிலையில் சிங்கப்பூருக்கு மேலும் நமக்கு உதவிவரும் வரையில் எதிரியைத் தடுத்து நிற்கவேண்டும்" என்றார். 'நேசதேசப்படைகள் வந்துகொண்டிருக்கின்றன' என்று ஆஸ்திரேலிய யுத்த மந்திரி அறிவித்து:—

"எதிரியை எவ்வளவு காலம் தடுத்து வந்தாலும் அதற்குள் புதிதாக உதவிப்படையும், யுத்த சாமான்களும் வந்து எதிரியைத் தாக்குவது எளிதாகும்.

"பெரும் படைகள் மார்க்கத்தில் இருக்கின்றன. உங்களைத் தனியாக விட்டுவிடமாட்டார்கள். நேசதேசங்களின் உதவி பூராவாக உங்களுக்குவரும்" என்றார்.

**பர்மா.**—மோல்மினை நமது படைகள் காலிசெய்து மார்டபன் பட்டணத்தை அடைந்திருக்கின்றன. இது ஸால்வின் நதியின் மேற்கே இருக்கிறது. இந்நதியைக் கடந்து படைகளை அனுப்பியதாக ஜப்பானியர் சொல்லுவது ஊர்ஜிதமாகவில்லை. ஆனால் இந்நதி முகத்துவாரத்தில் இருக்கும் தீவில் ஜப்பானியர் இறங்க முயன்றதை நேசப்படைகள் தடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

விமான மூலம் பர்மாவிலுள்ள இரண்டு விமான தளங்கள் தாக்கப்பட்டன. ரெங்கூனும் தாக்கப்பட்டது. ஆனால் சேதம் அதிகம் இல்லை. ரெங்கூன் துறைமுகத்தில் 1,000 டன் சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகிறது. 3வது தான் இரவில் முதல் தடவையாகத் தாக்கப்பட்டது.

மிஸ்ட்டர் சர்ச்சில், பர்மாவிற்கும், சைனாவிற்கும் உதவிவருவதாக உறுதி கொடுத்திருக்கிறார். பர்மா ரஸ்தாவைப்பிடிக்க ஜப்பானியர் முயலுவதை சீனர்கள் தடுப்பார்கள்.

**டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள்.**—அம்பாய்னா தனியே ஒதுக்கப்பட்டது. மேற்கு போர்னியோவின் தலைநகரான பாண்டியானக் எதிரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. டிமோர் தீவில் ஸேமியோ, கியோபாங்கும், ஜாவாவில், ஸோமோபயா, மிலாங், மடியோயின், மகியாங், ரோம்பாங்கும், ஸெலிபிஸ் தீவும் விமான மூலம் எதிரிகளால் தாக்கப்பட்டது. மக்காஸ்ஸர் ஜலசந்தியில் 9 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. பாலிக்பாபனுக்கு அருகில் திங்கட்கிழமை இரண்டு ஜப்பானியப் போக்குவரவுக் கப்பல்கள் அமெரிக்க விமானங்களால் மூழ்கடிக்கப்பட்டன.

**பிலிப்பைன்ஸ்.**—பாடன் தீபகர்ப்பத்தை மெக் ஆர்தர் மிகவும் சாமர்த்தியமாகத் தற்காப்பு செய்துவருகிறார். சரண் அடையும்படி ஜப்பானியர் கோரியதை மறுத்துவிட்டு ஜப்பானியரின் தாக்குதல்களை பூரா பலத்துடன் எதிர்க்கிறார். இந்தத் தீபகர்ப்பத்தின் மேற்கே ஒருவித பயமில்லாமல் செய்து மேலும் ஜப்பானியர்கள் இறங்குவதைத் தடுத்தாய்விட்டது.

**பஸிபிக் மத்தியிலுள்ள** நியூகினியில் புலோலோ, ஸாலாமுவா, மெர்ஸிபி துறைமுகம் முதலியவை பேரில் ஜப்பானிய விமானங்கள் குண்டுகள் வீசின.

**சைனா.**—தூரக்கிழக்குத் தற்காப்பில் விசேஷமாக ஈடுபட்டிருக்கிறது. சாங்ஷாவில் ஏற்கனவேயே ஜப்பானியருக்கு பலத்த சேதம் விளைவித்திருக்கிறது. போக்லோவிலிருந்து துரத்தப்பட்டு ஜப்பானியர்கள் கான்டனை நோக்கி ஓடுகின்றனர். டாங்டோவா, ஷர்டவ் என்ற இடங்கள் பிடிபட்டதால் கான்டன் ஹாங்காங்கிற்கு இடையில் ஜப்பானியப் போக்குவரவு தடைபட்டுவிட்டது. ஈஸ்ட் நதியின் இருபக்கங்களிலும் எதிரிகளை வெற்றிகரமாக சீனர்கள் தாக்குகின்றனர்.

**மூன்று சொற்பொழிவுகள்.**—ஜனவரி 30-ம் தேதியன்று ஜனதிபதி ரூஸ்வெல்டிற்கு ஷஷ்டி யப்தபூர்த்தி நிகழ்ந்தது. இதை பூரா அமெரிக்காவும், உலகமும் சரியான கொண்டாட்ட தினமென்று கருதின. ஏனென்றுல் இவர் நேசதேசஙகளின் சார்பாகவும், மனித வர்க்கத்தின் க்ஷேமத்தை முன்னிட்டும் அறிய தொண்டுபுரிந்திருக்கிருர். அன்று அமெரிக்காவில் நடந்த 1,200 நடனக் கச்சேரி, சிற்றுண்டிவிழாக்கள் முதலியவைகளின் வருமானத்தை சண்டையால் முடமான குழந்தைகளின் சிகிச்சைக்கு பிரத்யேகமாக்கப்பட்டது. உலகத்திற்கு அவர் அன்று ஒலிபரப்பியபோது ஜனநாயகத்திலும், வரும் காலத்தில் வெற்றி கிடைக்குமென்றும் தனக்குள்ள நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தினுர். 'நிச்சயம் வெற்றி பெறப்போகிருேம்' என்ற உறுதிமொழியையும் கொடுத்தார்.

அதேதினத்தில் பெர்லினில் ஹிட்லர் நீண்டதொரு பிரசங்கம் செய்தான். அன்று ஹிட்லர் அதிகாரம் வகித்த ஒன்பதாவது வருஷதினமாம். அச்சுநாட்டினர் மிகவும் ஏழைக்கூட்டத்தினர் என்று சொல்லி நேசநாடுகளின் எண்ணிக்கை ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டான். தான்தான் ஜெர்மனியின் முதல் சிப்பாய் என்றும், தற்சமயம் ஏராளமான யுத்த சாமான்கள் தேவையென்றும்சொன்னுன். இந்த யுத்தம் இவ்வருஷத்திற்குள் முடியாதென்றும் அபிப்பிராயப்படுகிருன்.

இதாலிய பாஸிஸ்டு ராணுவ அமைப்பின் 19-வது வருஷக்கொண்டாட்டத்தின்போது முஸோலினி பேசினுன். இதுவும் இவ்வாரத்தில்தான் நடந்தது.

ஆபிரிக்கா, ஸ்பெயின், கிரீஸ், ருஷ்யா முதலியவைகளில் ஈடுபட்டு வெற்றியடைந்த இதாலியப்படைகளை அதிகம் போற்றினுன். ஆனுல் இந்த வெற்றிகளின் பயனுக இதாலிக்குச் சொந்தமான ஆபிரிக்காவை இழக்க நேர்ந்துவிட்டது. ஹிட்லருக்கு உட்பட்டு கிரீஸை வைத்துக்கொண்டிருக்கிருன். ருஷ்யாவில் ஜெர்மன் படைக்குக் கூடப்போய்க்கொண்டு சண்டையில் ஈடுபடாமல் தண்ட ஆளாகவே இருக்கிருன்.

**பிரிடிஷ், ருஷ்ய, பாரஸீக ஒப்பந்தம்** ஒன்று ஜனவரி 9உ டெஹ்ரானில் கையெழுத்தாயிற்று. இதில் 9 நிபந்தனைகள் இருக்கின்றன. அட்லாண்டிக் சாஸனத்தை அநுசரித்தது. பெர்ஸியாவை இதர நாடுகள் ஆக்கிரமிக்காமல் நேசநாடுகள் பார்த்துக்கொள்ள சம்மதித்திருக்கின்றன. ராணுவ ஆக்கிரமமில்லாமல் யுத்தம் முடியும்வரையிலும் அதன்பிறகு ஆறு மாதங்களுக்கும் நேசப்படைகளை இங்கே வைத்துக்கொண்டு அவர்களே அதன் செலவுகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

**பிரிடிஷ் எதியோபிய உடன்பாடு.**—இவ்வித உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டிருக்கிறது என்று பிப்ரவரி 3உ காமன்ஸ் சபையில் வெளிநாட்டு மந்திரி ஈடன் அறிவித்தார். இது கிரேட் பிரிடனுக்கும் அபிஸீனிய சக்ரவர்த்திக்கும் ஏற்பட்டு இருக்கிறது. அபிஸீனியாவில் அடிமை வியாபாரத்தை ஒழித்து அங்கே பிரிடிஷாரின் உதவியால் சைனியத்தையும் நியாயாதிகாரத்தையும் சீர்படுத்த சம்மதித்திருக்கிருர். அபிஸீனியச் சக்கரவர்த்திக்கு கிரேட் பிரிடன் 15,00,000 பவுன் முதல் தடவை கடன் கொடுத்து பிறகு கொஞ்சம் குறைத்து 5,00,000 பவுனும், அதற்கு அடுத்து 2,50,000 பவுனும் கொடுக்க சம்மதித்திருக்கிறது. அபிஸீனியா வெளிநாடுகளின் உதவியையே எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் தன்நாட்டு வரவுசெலவை திட்டப்படுத்திக்கொள்ளவே இம்மாதிரி செய்யப்படுகிறது. ஒரு பிரிடிஷ் சைனியம் அங்கே வைத்துக்கொள்ளப்படும்.

**விஷி மேற்கு ஆபிரிக்கா.**—விஷி மேற்கு ஆபிரிக்காவின் ஐவரி கடற்கரையிலுள்ள பான்டாகுவின் அரசனுன கோயாடியோ அடியோமானி என்பவர் ஸ்வதந்திரப் பிரெஞ்சுக் கக்ஷியைப் பின்பற்றியிருக்கிருர். இப்பிரதேசத்தில் இவர் ஒரு பெரும் தலைவர். இதுவரை இது விஷி அரசாங்கத்திற்கு உட்பட்டிருந்தது.

**ஒரு தினத்தின் பிரிடனின் யுத்தச் செலவு** 95 லக்ஷம் பவுனுக்கு அதிகரித்துவிட்டது.



## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 26—1—42. (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்— வட பிரான்ஸ் (France). | | 2 விமானங்கள். | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்— ஹனேவர் (Hanover), எம்டன் (Emden). | | | |
| | இன்னும் சில இடங்கள்.—ஜெர்மனி (Germany)யின் வடமேற்கு பாகத்தில். | | 3 விமானங்கள். | |
| | கப்பல் துறைகள்.—ப்ரெஸ்ட் (Brest). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிகளின் டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள், மோட்டார்படைப் பகுதிகள்.—மோஸஸ் (Msus), ஆண்டிலாட் (Antelat), ஜெடபாயா (Jedabaya) பிரதேசங்களில். | அநேக வண்டிகள் பூராவும் அழிக்கப்பட்டன; ஏராளமாகத் தீ மூட்டப்பட்டன. | | |
| | விரோதி மோட்டார் போக்குவரத்து.—ஜெடபாயா (Jedabaya), எல் அகிலா (El Agheila) பிரதேசங்களில். | | | |
| | மோட்டார் லாரிகள், கம்பியில்லாத் தந்தி ஸ்தாபனம்.—ஹோம்ஸ் (Homs)க் கருகாமையில். | | | |
| | ஸிஸிலி (Sicily)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானம் தங்குமிடங்கள், விமானம் பறப்பதற்கு உதவும் இடம்.—கடேனியா (Catania). | | | |
| | கட்டடங்கள், விமானம் தங்குமிடங்கள்.—காமிஸோ (Comiso). | | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 20 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோட்டார் லாரிகள்.— காக்காரிக்— மியாவாடி (Kawkareik— Myawaddi) ரஸ்தாவில். | எதிரிகளுக்குச் சொந்தமான லாரிகள் யந்திர பீரங்கிகளால் தாக்கப்பட்டன. | | |
| | மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு விரோதித் துணைக்கப்பல்.—என்டோ (Endau)வுக்கு அருகாமையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **27—1—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள்.–ப்ரெஸ்ட் (Brest), பொலாயின் (Boulogne). | நஷ்டமில்லை. | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி மோட்டார்கள்.— மோஸஸ் ஆண்டிலாட் (Msus—Antelat), மோஸஸ்–ஷெலிடிமா (Msus–Sheledima) பிரதேசங்களில். | அநேக வண்டிகள் சேதமாயின. | | |
| | விரோதிகளுக்குச் சொந்தமான ரஸ்தா, சகாயத்துடன்வரும் சாமான் வண்டிகள்.—ஸர்டி (Sirte)க்கு மேற்கில். | | | |
| | கப்பல்கள்.–ட்ரிபோலி (Tripoli)துறைமுகத்தில். | | | |
| | **ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.–ஸிஸிலி (Sicily) யிலிருக்கும் காமிஸோ (Comiso), அகஸ்டா (Augusta) என்ற இடங்களிலுள்ள விமான நிலயங்களில். | | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 7 விமானங்கள். | 29 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)**—(அமெரிக்கா, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான ஒரு விமான நிலயம்.—க்வாண்டன் (Kuantan). | பலத்த சேதம். | | |
| | **தாய்லாந்து (Thailand)**—(அமெரிக்கா, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பாங்காக் (Bangkok) ... | பெருந்தீக்கள் கிளம்பின. | | |
| | **பஸிபிக் (Pacific)**—(அமெரிக்கா, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.– மக்காஸர் (Macassar) ஜலசந்தியில். | ஒரு போக்குவரத்துக் கப்பல் மூழ்கடிக்கப் பட்டது; மற்றொன்று தீப் பற்றியது; ஒரு சஞ்சாரி தாக்கப் பட்டது. | | |
| **28—1—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்.— மன்ஸ்டர் (Munster). | | | |
| | கப்பல் துறைகள்.—பொலாயின் (Boulogne), ராட்டர்டாம் (Rotterdam). | | | |
| | விமான யுத்தரங்கம்.–ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgiam), வட பிரான்ஸ் (France). | | 6 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **28—1—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள்.—பெங்காஸி (Benghazi)க்குத் தெற்கேயும், ஷெலிடிமா (Sheledima) பிரதேசத்திலும். | 50 லாரிகள் சேதமாயின. | | |
| | மோட்டார் போக்குவரத்து, ராணுவக் கட்டடங்கள்.—ட்ரிபோலி (Tripoli)க்குக் கிழக்கில். | | | |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 27 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கோலாலம்போர் (Kualalumpur). | விரட்டப் பட்டன; குண்டுகள் போடப் படவில்லை. | | |
| | **நியூகினியா (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்.—ராபால் (Rabaul). | ஒரு கப்பல் நேராகத் தாக்கப்பட்டது. | | |
| | **பஸிபிக் (Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துணைக்கப்பல்கள்.— மக்காஸார்(Macassar) ஜலசந்தியில். | ஒரு கப்பல் மூழ்கடிக்கப் பட்டது; மற்றொன்று தீப்பற்றியது. | | |
| | **தாய்லாந்து (Thailand)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல் துறைகள்.—பாங்காக் (Bangkok). | இன்னும் சில வைகளில் தீக்கள் மூட்டப் பட்டன. | | |
| **29—1—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—தொழிற்சாலை—வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—விமான நடமாட்டங்களுக்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி மோட்டார்களின் பகுதிகள்— ஜடபாயா (Jadabaya). | | | |
| | விரோதி மோட்டார் படைகள், போக்குவரத்துகள், தோட்டங்கள், சைனிய வாஸஸ்தலங்கள்—ட்ரிபோலி (Tripoli)க்கும் பூரட் எல் ஹாஸனு (Buerat El Hsun)க்கும் இடையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **29—1—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு நாசகாரியால் துணைபுரியப்பட்ட விரோதிக்குச் சொந்தமான ஒரு எண்ணெய்க் கப்பல்—மத்தியதரைக் கடலி(Mediterranean)ன் மத்தியில். | | | |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போரரங்கம் முழுவதிலும். | | 4 விமானங்கள். | 18 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான யந்திரப் படைகள்.—பாட்டு பாஹாட் (Batu Pahat)க்கருகாமையில் | | | |
| **30—1—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான ஸப்ளை மார்க்கங்கள்.—ஸர்டி (Sirte)யிலிருந்து ராஸல் ஆலி (Rasel Aali). | | | |
| | மோட்டார் போக்குவரத்து, முகாம்கள் ஜடபாயா (Jadabaya)விலிருந்து எல் அகீலா (El Agheila) வரையிலும். | தீக்களும், வெடிகளும் கிளம்பின. | | |
| | துறைமுகம், கப்பல்கள்—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | மோட்டார் போக்குவரத்து, சைனிய வாஸஸ்தலங்கள்—மிஸுராடா (Misurata) வுக்கும் ஸ்லிட்டனு (Zliten)க்கும் மத்தியில். | | | |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போரரங்கம் முழுவதிலும். | | 5 விமானங்கள். | 20 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்—ஆக்கிரமித்த மலேயா(Malaya)வில். | | | |
| **31—1—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest), லெஹாவர் (Lehavre) ஸெண்ட் நாஸேர் (St. Nazaire). | | 4 விமானங்கள். | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **—1—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விரோதி மோட்டார் படைப்பகுதிகள்—கெமின்ஸ் (Ghemines), பெங்காஸி (Benghazi) ரஸ்தாவிலும், எல் ஹாருபா (El Kharruba) மோஸஸ் (Msus) பிரதேசங்களிலும். | | | |
| | துறைமுகம், மோட்டார் வியாபார ஸ்தலம்—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | விரோதிகளைச் சேர்ந்த யுத்தக் கப்பல்கள்—பூரட் எல் ஹாஸன் (Buerat El Hsun), | | நஷ்டமில்லை. | |
| | **கிழக்குப்போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 2 விமானங்கள். | 7 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—(Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான யந்திரப் படைகள், மோட்டார்கள்—தெற்கு மலேயா (Malaya)வில் | | | |
| | **பஸிபிக் (Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.—மக்காஸர் (Macassar) ஜலசந்தி. | | | |
| **—2—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோட்டார் படைப் பகுதிகள், எண்ணெய் ஏற்றிச்செல்லும் வண்டிகள்.—ஸர்டி (Sirte) ராஸெல் ஆட்லி (Rasel Adli) மருயா (Marua) இப் பிரதேசங்களில் செல்லும் ரஸ்தாக்களில். | அநேக வண்டிகள் சேதமாயின; விரோதிகளில் அநேகர் கொல்லப்பட்டனர். | | |
| | விரோதிக்குச் சொந்தமான ரஸ்தாவில் துணைப்படையுடன் கூடிய சாமான் போக்குவரத்து.—பூரட் எல் ஹாஸன் (Bueart El Hsun), ட்ரிபோலி (Tripoli). | | | |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 3 விமானங்கள். | 11 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 1—2—42. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதியின் உதவிப் படைகள்—ஜோஹூர் (Johore), பாஹ்ரு (Bahru) பிரதேசத்தில். | | | |
| | விமான தளங்கள்—கோலாலம்பூர் (Kualalumpur), க்வான்டன் (Kuantan). | | | 9 விமானங்கள். |
| | நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.) | | | |
| | விரோதிக் கப்பல்கள்—பாலிக்பாபன் (Balick Papan) துறைமுகத்தில். | | 1 பாம்பர் விமானம். | 9 பைடர் விமானங்கள். |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 27—1—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 4 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரெங்கூன் (Rangoon). | சொற்பச்சேதம். | | |
| | மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| 28—1—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | 1 விமானம் |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 2 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | 1 விமானம். | |
| | பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரெங்கூன் (Rangoon). | | 7 விமானங்கள்; இன்னும் 6 விமானங்களும் இருக்கும். | |
| 29—1—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—ஸ்காத்லாந்தி (Scotland)ன் வடகிழக்குக் கடற் | சொற்பச் சேதம்; சிலர் | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 29—1—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரெங்கூன் (Rangoon). | | 12 விமானங்கள். | |
| 30—1—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| 31—1—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | காலை.—ஒரு இடம்—ஐயர்லாந்தி (Ireland)-ன் வட பாகம். | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரெங்கூன் (Rangoon). | | | |
| | நியூகினியா (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பூலோலோ (Bulolo). | | | |
| | ஸலமாயுஆ (Salamaua). | | | |
| 1—2—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இரண்டு இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia)வில். | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றுமில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்) | | | |
| | டிமோர் (Timor). | | | |
| | அம்பாயினு (Amboina). | | | |
| 2—2—42. (திங்கட்கிழமை): | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக்கரை. | | | 1 விமானம். |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | பர்மா—(Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—ரெங்கூன் (Rangoon). | | | |
| | நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | போஸோ (Poso), ஸெலிபிஸ் (Celebes). | | | |
| | பாங்கா (Banka). | | | |

# யுத்தக் குறிப்புகள்.

---

**தினம் ஒரு கப்பல்.**

ஜப்பானியர்களுக்கு தினம் ஒரு கப்பல் வீத நாசமாகிறது. ஜனவரி 30-ம் தேதியோ முடிவாகிற ஆறுவார காலத்தில் ஜப்பானிய டாங்கிகளும், பிரயாணிகளேற்று கப்பல்களும் ஸப்ளைக் கப்பல்களும் ஆக 48 கப்பல்கள் அமெரிக்கர்களாலும் டச்சு காரர்களாலும் அமுக்கப்பட்டதாக நிச்சயமான தகவல்கள் கிடைத்திருக்கின்றன மேலும் 46 ஜப்பானியக் கப்பல்கள்வரை மக்காஸர் ஜலசந்தியில் அமெரிக்க கப்பற்படையாலும் விமானங்களாலும் அழிக்கப்பட்டன. ஆகவே முன் வார திய 3,00,000-டன் கப்பல் நஷ்டத்துடன் இதையும் சேர்த்துக்கொண்டா ஜப்பானுக்கு அதிகக் கவலையைத்தான் செய்யும். ஏனென்றால் அதன் சைனிய இச்சமயம் சைனா, பிலிப்பைன்ஸ், மலேயா, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், பார்மோஸா, ஹைனன், கோரெஸ், மஞ்சுகோ, இந்தோ-சைனா ஆக பல இட களில் பிரிந்திருப்பதால் கப்பல்களின் நஷ்டம் அதிகம் பாதிக்கும். இந்த யுத்தத் தின் ஆரம்பகாலத்தில் ஜப்பானிடம் 60-லக்ஷம் டன் வியாபாரக் கப்பல்களிரு தன. அதில் ஆறுவார காலத்தில் 5-லக்ஷம் (?) டன் நஷ்டமாயிற்று என்றால் அது ஒரு பெரிய விஷயந்தான். ஏனென்றால் இந்த நஷ்டத்தை அவர்களால் சீக்கிரத்தில் ஈடுபடுத்த முடியாது. (அமெரிக்காவின் கப்பல் இலாகாத்தலைவர்) லாண்டு என்பவர் "அமெரிக்காவிற்கு 120-லக்ஷம் டன்கள் அமெரிக்காவின் உபயோகத்திலும், பிரிடனுக்குச் சொந்தமாயிருந்த 210-லக்ஷம் டன்களில் 40-லக்ஷம் டன்கள்தான் குறைந்திருக்கிறது. மீதி உபயோகப்பட்டு வருகிறது என்று" சமீபத்தில் சொன்னது ஜப்பானியருக்குத் தூக்கிவாரிப்போடும்.

வி வி வி வி வி வி வி

**டோஜோவின் ஸாமோபாயம்.**

ருஷ்யாவில் அடைந்துவரும் தோல்விகளை மறைப்பதற்காக, நேசதேசங்களை ஜப்பானி யர்கள் எதிர்த்துத் தாக்குவதைப் பிரதானமாக வைத்துக்கொண்டு, ஜெர்மானியர் ஜப்பானியர்களைத் தப்பு ஸ்தோத்திரம் செய்கின்றனர். சமீபத்தில் டோஜோ செய்த பிரசங்கத்தினால் மனம் தளர்ந்திருக்கும் ஜப்பானியர்களை ஜெர்மானியர் ஒலிபரப்புகள் மூலமாக, உத்ஸாகப்படுத்தவே நினைக்கின்றனர். ஏனென்றால் டோஜோவின் மொழிகளைப் பார்த்தால் அவர் அதிக தைரியமாக நின்று பேசிய தாகக் காணப்படவில்லை. அவ்விதம் அவர் பேசியதை இங்கே சிலவற்றைக் கொடுக்கிறோம். சிறு வெற்றிகளைப்பெற்று அதிகம் ஆடம்பரம் செய்யும் அச்சு நாட்டு வழக்கத்தை ஒட்டியேதான் டோஜோவும் பேசியிருக்கிறான். ஆனால் முடிவான வெற்றியடையும் படியான நம்பிக்கை ஜப்பானியர்களுக்கு இருக்கிற தாக அவர் பேச்சிலிருந்து கிடைக்கவில்லை. டோஜோ பேசியது:—

**பிலிப்பைன்ஸ்.**

"இனிமேல், ஜப்பானின் உண்மையான நோக்கங்களைப் பிலிப்பைன்ஸ் வாசிகள் அறிந்து ஜப்பானியர்களுடன் ஒத்துழைக்கவேண்டும். கிழக்கு ஆசியாவில் ஜப்பானியர்கள் ஸ்தாபிப்பதாகச் சொல்லும் பொது க்ஷேம திட்டத்திற்கு உதவவேண்டும். அப்படி உதவினால் பிலிப்பைன்ஸுக்கு ஸ்வதந்திரம் அளிக்கப்படும்."

**பர்மா.**

"ஜப்பானியருக்கு பிலிப்பைன்ஸைப்பற்றியுள்ள அபிப்பிராயம் போலவேதான் பர்மாவைப்பற்றியும் ஏற்பட்டிருக்கிறது."

**டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளும் ஆஸ்திரேலியாவும்.**

"ஜப்பானை எதிர்த்து நிற்கும் மனப்பான்மையையே இனிமேலும் கொண்டிருந்தால் இந்நாடுகள் விஷயத்தில் கொஞ்சமும் தயவு காட்டாமல் நசுக்கப்படும். ஆனால் ஜப்பானுடைய உட்கருத்துகளை அறிந்து ஒரு சமாதானத்திற்கு வந்து ஜப்பானுடன் ஒத்துழைக்க சம்மதித்தால், இந்நாடு



களுக்கு உதவி புரிந்து அவைகளின் க்ஷேமத்திற்காகவும் பாடுபட முடியும்" (இந்த மொழிகளை ஜெர்மனியிலும், இதாலியிலும், விஷி பிரான்ஸிலும் யாவரும் ஆமோதித்துக் கொண்டாடினார்கள்.)

**சைனா.**

"சுங்கிங் அரசாங்கம் இன்னும் வீணாக நம்மை எதிர்த்து நிற்கிறது."

இதுவரை கண்டுள்ள டோஜோவின் மொழிகளில் ஒன்றும் பாதகம் இல்லை. ஆனால் மேலும் அவர்சொல்லிய சிலவற்றைப் பார்ப்போம்:—

"உலகத்திலேயே அமெரிக்காவும், பிரிடிஷ் சாம்ராஜ்யமும்தான், பணத்தையும் அதிகாரத்தையும் பெரிதாகக் நினைத்து பெருமை கொண்டிருக்கின்றன. இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் அதிகமான தோல்வியடைந்திருந்தாலும் இனி மேல் அந்நாடுகள் கடுமையாகச்சண்டை செய்யுமென்று நினைக்க ஹேது விருக்கிறது. ஆகவே இனி பல இடங்களிலும் ஏற்படக்கூடிய கஷ்ட நிலைகளுக்குத் தக்கவாறு ஜப்பான் தயாராகவேண்டும். இந்த யுத்தமும் இன்னும் நெடுநாள் நீடித்தே நடக்கும்."

(டோஜோவின் வாசகமும், ஜோஸ்யங்களும் வியக்தமாக ஒற்றையும் தெரிவிக்கவில்லை). அடுத்தபடியாக ஜப்பானியர்களுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்திருக்கிறான். ஜப்பான் ஏற்கனவே பத்து வருஷகாலமாக சண்டையிலீடு பட்டு அவஸ்தைப்பட்டதுபோக இன்னும் யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்று சொன்னான்.

"இன்னும் பொதுமக்கள் யுத்தத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும். நமது தேசமக்கள் யாவரும் பலம்பெற்று வெற்றியடையும்வரை சண்டை செய்யவேண்டும். எதிரிகளை பயந்து சரண் அடையும்படி செய்ய முயற்சிக்க வேண்டும்" என்று ஜப்பானிய மக்களுக்கு அறிவித்தான்.

கடைசியாக டாக்டர் கோயபல்ஸ் கொடுத்த அபிப்பிராயத்தை அங்கீகரித்து "நமக்கு உதவியாக இருந்துவரும் இதாலி, ஜெர்மனி முதலியோரைப்பற்றி திருப்தி கொள்ளுகிறோம். புது திட்டத்தை ஸ்தாபிக்க இவர்கள் ஜப்பானுடன் கூட இருந்து பிரயத்தனப்பட்டு வெற்றியடைந்து வருகிறார்கள்." என்றான்.

(இந்த சந்தர்ப்பத்தில் ருஷ்யாவில் ஜெர்மானியரின் நிலைமையையும், மத்திய தரைக்கடலில் இதாலியரின் அவஸ்தையையும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான்).

வி வி வி வி வி வி வி

**சிங்கப்பூர்.**

"ஜப்பானியப் படைகள், கடல், தரை, ஆகாயங்களில் முன்னேறி பிரிடிஷ், அமெரிக்கப் படைகளின் தந்திரங்கள் எல்லாம் பலிக்காமல் திடீரென்று தாக்கி வருகின்றன." இவ்விதமாக தெற்கு சீனக்கடலில் ஜப்பானியர் தாக்காலிகமான ஆரம்ப வெற்றிகள் பெறுவதற்கான காரணத்தை லார்டு டிரென்சர்டு என்பவர் சொல்லுகிறார். இதோடு மலேயாவில் ஒன்றன்பின் ஒன்றாக விமான தளங்களைக் கைப்பற்றி, துருப்புகளை அனுப்பி ஜோஹூர் பாலம்வரை முன்னேறி வருவதற்கும் காரணத்தைச் சொன்னார்.

ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நமது ஜனங்கள் இதைத்தெரிந்து கொண்டு திருப்திகொள்ளலாம். மேலும் லார்டு டிரென்சர்டு கொடுத்த அபிப்பிராயத்தைச் சொல்லுகிறோம்.

சமீபத்தில் ஒரு உபந்யாஸத்தில் நாம் சொன்னதுபோல, லிபியாவிலிருந்து ஜெர்மன், இதாலியப் படைகள் பின்வாங்குவதற்கும், மாஸ்கோ, லெனின்கிராட், ரோஸ்டவ்விலிருந்து ஜெர்மானியர் திரும்பிப்போவதற்கும், அஜெடபியாவிலிருந்தும், வட மலேயாவிலிருந்தும் பிரிடிஷ்காரர்கள் படைகளை அழைத்துச் செல்லுவதற்கும் காரணம் எதிரிகளுக்குள்ள விமானபலம்தான். இரண்டு பெரும் நாடுகள் உலக யுத்தத்தில் ஈடுபட்டு, சமமான விமான பலத்துடன் இருந்து

சண்டைசெய்யும்போது ஓரிடத்திலிருந்து மற்றொரு போர்முனையைப் பலப்படுத்த விமானங்களை எடுத்துச் சென்றால், முதல் இடத்தில் கொஞ்சம் கெடுதி ஏற்படத்தான் ஏற்படும்.

மலேயாவிலுள்ள விமான தளங்களில் பைடர்களும், பாம்பர் விமானங்களும் இருந்தால், ஜப்பானியப் போக்குவரவைக் கெடுத்து, நமது படைகளைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால், 53,000 சதுர மைல் உள்ள அப்பாகத்தில், பிரிடிஷ் விமானப்படையின் ஏகதேச பாகத்தைக்கொண்டு சண்டையை நடத்துவது அசாத்தியமாகிறது. ஏனென்றால் பிரிடிஷ் விமானப்படை கீழ்கண்ட இடங்களில் இருந்துகொண்டு தீவிர வேலைகளைச் செய்துவருகிறது.

ருஷ்யாவில் ஈடுபட்ட ஜெர்மன் சைனியங்களுக்கு அனுப்பும் ஸப்ளைகளை வடகடலில் தடுத்துவருகிறது.

அட்லாண்டிக்கில் நம் கப்பல்களுக்கு துணைபுரிந்துவருகிறது.

பிரிடனையும், பிரிடிஷ் விமான தளங்களையும் தற்காப்பு செய்கிறது.

ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலைகளையும், இருப்புப் பாதைகளையும், ரஸ்தாக்களையும், வாய்க்கால்களையும் விடாமல் மும்மரமாகத் தாக்கிவருகிறது.

கெய்ரோ முதல் பெங்காஸி வரையிலும், ஸிஸிலி கால்வாயிலும் விமான பலத்தை நிலைநிறுத்திவருகிறது. (ருஷ்யாவிலிருந்த ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படையை ஜெர்மானியர் மேற்கே கொண்டுவந்திருப்பதால், பிரிடிஷ் விமானப்படை தற்சமயம் விமானுதிக்கத்தைத் திரும்ப அடையவேண்டியதாக இருக்கிறது).

கடைசியாக ஸிரியா, பாலஸ்தீனம், இராக், இரான் முதலியவைகளையும் காபந்து செய்கிறது.

இவ்விதமாக பல இடங்களில் யுத்தம் நடந்துவந்தபோதிலும் யுத்தத்தை ஒன்றாக பாவிக்கவேண்டும். எதிரிகளுக்கும், நமக்கும் சமமான விமான பலம் இருந்தால் மாத்திரம் போதாது. அமெரிக்காவின் யுத்த முயற்சி அதிகமாகிக் கொண்டேபோவதால், நேசதேசங்களின் பலம் அதிகமடைந்து உலகத்தின் எல்லா பாகங்களிலும் நாம் வெற்றிபெறமுடியும்.

வி வி வி வி வி வி வி

**ங்கப்பூர், மாஸ்கோ: ஒரு ஒற்றுமை.** தற்சமயம் ஏராளமான நேசதேசப் படைகள், சிங்கப்பூர் தீவுக்குள் சென்றுவிட்டன. மேலும் உதவிக்கு ஏராளமான படைகள் ந்து குவிகின்றன. ஆகவே மாஸ்கோவை நோக்கி ஜெர்மானியர் சென்றது போலவேதான் ஜப்பானியரின் கதியும் ஆகும். மேலும் ருஷ்யாவைப் போலவே லேயாவிலும், 50 மைல்களுக்குட்பட்டுத்தான் போக்குவரவு ரஸ்தாக்கள் ருக்கின்றன. ஆகையால், புதிய படைகளைப் பெறுவதற்கும், விமான எதிர்ப் க்குக் தக்கவாறு காபந்துசெய்துகொள்ளவும் முடியும். பிரிடிஷ் விமானப்படை ஜாஹூரின்மேல் பலம் பெறும்வரை இத்தீவிலுள்ளோர் எதிர்த்து நின்றால் ாதகமாகவே முடியும்.

வி வி வி வி வி வி வி

**ந்திரங்களுக்குள்ளிருக்கும் அம்சங்கள்.** மூந்திய யுத்தத்திலிருந்து ஒரு விஷயம் ஞாபகம்வருகிறது. அச்சமயம் ஜெனரல் மாட் தலைமைவகிக்க ஆரம்பித்தபிறகு ஒரு த சண்டையுமில்லாமல் சில மாதங்கள் இருந்தன. அதைப்பற்றி நமக்குக் வலையும் ஏற்பட்டது. ஆனால் வெற்றிகள் கிடைத்தபிறகே அவரது சாமர்த் யம் பலப்பட்டது. எல்லா லாபங்களும் கிடைக்கும்வரை ஓரிடத்திலிருந்து லப்படுத்திக்கொண்ட பிறகுதான் அடுத்த பாகத்தை நோக்கிப்போவார்.



இவரைப்போலவே சாமர்த்தியம்வாய்ந்த ஒருவர் கிழக்கிலிருக்கும் நமது படைகளை நடத்திவருகிறார். இவர்தான் வேவல். யுத்தமானது கடலிலும், தரையிலும் வெகுதூரம் நடப்பதால் கொஞ்சம் சிரமமேற்படுகிறது.

இங்கிலையைப்பற்றி ஜனவரி 22உ மிஸ்டர் ஆலிவர் ஸ்டேவர்டு ஒரு ஒலிபரப்புச்செய்தார். அதை இங்கே கொடுக்கிறோம் :—

"பொதுமக்கள் ஆவலுடன் ஒரு பாகத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தி வரும்போது, யுத்த ஸப்ளைகள் வேறே இடத்தில் ஈடுபட்டிருக்கும். இதுவே இந்த நவீன யுத்தத்தின் ஒரு தந்திரமாகும். ஜெனரல் வேவலும் இதைப்பற்றி எழுதியுள்ளார்........

"பஸிபிக்கில் இருக்கும் நமது அதிகாரிகள் போட்டிருக்கும் திட்டங்கள் மிகவும் ரகசியமானவை. அங்கே நிலை அதிகமாகக் கெட்டுவிடாமல் இருக்க வேணுமென்றால் ஸப்ளைகள் துரிதமாக்கப்படவேண்டும்.

"வேவலைப்பற்றி ஒரு விஷயம். லிபியாவில் எதிரிக்கு எப்பொழுது இடம் கொடுக்கவேண்டுமென்று அவருக்குத்தான் தெரியும். இதாலியரிடமிருந்து பிடித்த இடத்தை மூர்க்கத்தனமாக வைத்துக்கொள்ள முயற்சி செய்தால், விமான தளங்களிலுள்ள யுத்த சாமான்களை அப்புறப்படுத்த முயற்சிப்பதற்குள் எல்லாம் பாழாகிவிடும். விமான பலமும் தொலைந்திருக்கும். ஆனால் சரியான சந்தர்ப்பத்தில் பின்வாங்கியதால், சந்தர்ப்பம் வாய்த்தபோது ஜெனரல் ஆகின்லக்கிற்கு முன்னேற உதவிகொடுக்க முடிந்தது.

"இந்த லிபியாவின் நிலைமையைப்போலவே பஸிபிக்கிலும் இருக்கிறதாகச் சொல்லலாம். ஒரு சமயம் ஓரிடத்திலேயே எதிரியைத் தடுக்கக்கூடிய சந்தப்பம் வரும். இதைத் தீர்மானிப்பதற்குத் தகுந்த ஸப்ளைகள் வேண்டும். இங்கே, அங்கே என்று இந்த யுத்தத்தில் யாராலும் சொல்லமுடியாது. வேவல் எழுதியுள்ள வியாசங்களைப் பார்த்தால், ஸப்ளைகளுக்கும் யுத்தத்திற்குமுள்ள சம்பந்தத்தை நன்றாக அவர் அறிந்திருக்கிறார் என்று தெரியவரும்".

வி வி வி வி வி வி வி

**புதுக்கோட்டைக்கு ஏற்பட்டிருக்கும் பெருமை.** நாளையதினம் மாட்சிமை தங்கிய மதராஸ் கவர்னர் அவர்கள் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்கிறார். அவருக்குத் தகுந்த விதமாக வரவேர்ப்பு செய்யப்படும். மற்றவர்களைக் காட்டிலும் இந்நிலபத்திலிருப் பவர்களால் மிகவும் அதிகமாக மனமார்ந்தபடி வரவேர்ப்பு செய்யப்படும். இந்நிலையத்திலிருப்பவர்களைப்போல மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களும், யுத்தப்பிரசார வேலையில் ஆழ்ந்தவிதமாக ஈடுபட்டிருக்கிறார். அப்பேர்ப்பட்டவர் நமது ஸமஸ்தானத்திற்கு வரும் சமயத்தில் நிலயத்திற்கும் விஜயம்செய்ய சம்மதித்தது நமக்கு ஒரு பெரும கௌரவம்தான்.

---

## யுத்தத்தில் ஏற்படும் மாறுதல்.

## தைரியம் கொள்ளுவதற்கான நல்ல காரணங்கள்.

யார்க்ஷயர் போஸ்ட் பத்திரிகையின் ராணுவ நிருபர், பலமுனைகளில் உள்ள யுத்த நிலைமையை ஜனவரி 20உ எழுதியனுப்பியுள்ளார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள்.—பிரகிருதத்தில் இருக்கும் பலத்தை 1942-43-ல் இரட்டிப்பு மடங்காகச் செய்யவும், 1943-44-ல் மறுபடி இரட்டிப்பு மடங்காகச் செய்யவும் திட்டங்கள் ஏற்பாடாகி வருகின்றன.

அட்லாண்டிக்.— இப்பாகத்தில் ஜெர்மன் பலம் குறைந்துவிட்டது. நஷ்டமில்லாமல் சாமான்கள் பத்திரமாக வந்துகொண்டே இருக்கின்றன.

ஜெர்மனி.—எல்லாவிதமான யுத்த சாமான்களும் குறைந்துவிட்டன. ரிஸர்வ் படைகள் எல்லாம் போர்முனைக்கு வந்துவிட்டன. லுப்ட்வாபியின் விமானப்படையின் வலுவும் குறைந்துகொண்டே வருகிறது. ருஷ்ய யுத்தத்தில் அடைந்த நஷ்டங்களாலும், உணவு முதலிய பலசாமான்கள் குறைந்து வருவதாலும் பொதுமக்களிடையே அமைதிக்குறைவு ஏற்பட்டிருக்கிறது.

ஆக்கிரமித்த நாடுகள்.—சேமித்து வைத்திருந்த பொருள்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டன. இனிமேல் அங்கே ஒன்றும் கிடைக்காது. தொழிற்சாலையில் சாமான் உற்பத்தி குறைந்துவிட்டது. ஜெர்மானியருக்கு எதிராக ரகசிய சூழ்ச்சிதான் விருத்தியாகிறது. ஸெர்பியர்கள் நிறைந்த ஸைனியம் ஒன்று ஏற்பட்டாகி போலந்தில் ஜெர்மானியரைப் பின்னால் மறைந்து தாக்குகின்றனர். மற்ற ஸைனியங்களும் வரவரத் தயாராகிவருகின்றன.

ருஷ்யா.—ஜெர்மன்' விமானபலம் கடுமையான தோல்வியடைந்தது. பழைய ஜெர்மன் ஸைனியம் தொலைக்கப்பட்டது. பழைய ருஷ்யச் ஸைனியத்திற்குப் பதிலாக புது ஸைனியம் தயார் செய்யப்பட்டது. பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா சேர்ந்து ஒரு ஸைனியத்தைத் தயார் செய்திருக்கின்றன. நான்காவது ஸைனியம் ஒன்று ஐரோப்பாவின் மத்தியபாகத்தில் தயாராகின்றன. மாரி காலத்தில் எதிரிக்குப் பாதகமான சண்டை செய்யப்படுகிறது. பிப்ரவரி மாதத்தில் கடும் தாக்குதல்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

மத்தியதரைக்கடல்.—வட ஆபிரிக்கா உள்பட எல்லா இடமும் நமது வசத்தில் வந்துகொண்டிருக்கின்றன.

மத்தியக்கிழக்கு.—ஸூயஸ் கால்வாய் முதல் இந்தியா வரையிலும் துருக்கி, காகஸஸ் வழியாக உள்ள இடத்தில் சாம்ராஜ்யப்படைகள் பலம் பெற்றிருக்கின்றன. எல்லா யுத்தத் தொழிற்சாலைகளும் பூரா வேலைசெய்து இங்கேயுள்ள ஸைனியங்களுக்கு உதவிசெய்கின்றன.

மலேயா.—தாய்லாந்திலிருந்து ஜோஹூருக்கு ஜப்பானியர் முன்னேறுவதால் சிங்கப்பூருக்கு யுத்தம் பரவிவருகிறது. இதற்காக நமது படைகள் வந்துசேருகின்றன. பஸிபிக்கில் ஜப்பானிய வெற்றிகளும் பூர்ணமாகவில்லை.

சைனா.—ஜப்பானியர்களை சீனர்கள் பலமாகத் தாக்கிவருகின்றனர். பர்மா ரஸ்தா வழியாக சீனப்படைகள் வந்து தாய்லாந்தில் எதிரியைத் தாக்குகின்றன. பர்மா பூரா சண்டையிலீடுபட்டிருக்கிறது.

பஸிபிக்.—பிலிப்பைன்ஸ் படைகளை இன்னும் ஜப்பானியர் பூராவாக ஜயிக்கவில்லை. இதனால் டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளில் ஜப்பானியர் இறங்க முடியவில்லை. சிங்கப்பூரைச் சுற்றிலும் உள்ள பிரதேசத்தில் எளிதில் எதிரிகள் புகுமுடியாது. இதைத் தடுக்க நேசதேசங்கள் தீர்மானித்திருக்கின்றன. அமெரிக்க நீர்மூழ்கிகள் ஜப்பானியக் கடற்கரையோரமாக வந்திருக்கின்றன. தெற்கு சைனாக்கடலில் டச்சு விமானங்கள் எதிரியைத் தடுக்கின்றன. மஞ்சுகோ, சைனா, இந்தோ-சைனா, தாய்லாந்து, மலேயா, பிலிப்பைன்ஸ் ஆக ஆறு இடங்களில் ஜப்பானியப் படைகள் பிரிந்திருந்தாலும். கடலாதிக்கமில்லாதவரையில் அவர்கள் . எண்ணம் பயன்படாது.

பொதுவான குறிப்பு.—மாஸ்கோ பிடிபட்டு ருஷ்யா தோற்கடிக்கப்படும் என்று எண்ணி ஜப்பான் இந்தச் சண்டையை ஆரம்பித்திருக்கிறது. அதில் ஜப்பான் ஏமாந்தது மத்தியக்கிழக்கைத் தற்காப்பு செய்ய பிரிடிஷ் உதவியையும், இந்தியாவின் முயற்சியைமேற்கேயும் அனுப்பவேண்டும். பஸிபிக்கில் அங்குள்ள படைகளே ஜப்பானைத் தடுக்கும்.

ஹிட்லர் தோற்றுவரும் இச்சண்டையில் இதுதான் நிலைமை. நேசதேசப் படைகளின் பலம் விருத்தியானவுடனே மலேயச் சண்டை நமக்கு வெற்றிகரமாக ஆகும்.



# வெட்டுக்கிளிகள்.

அச்சு நாடுகள் கிழக்கிலும், மேற்கிலும் ஸ்தாபிப்பதாகச் சொல்லும் புது திட்டத்திலுள்ள குறைகளை இங்கே பிரசுரிக்கிறோம்.

(இது நியூ ஸ்டேஸ்மென் அண்டு நேஷன் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது—பத்திராதிபர்).

கிரீஸில் உட்புகுந்து ஆக்கிரமித்து வந்த அச்சுநாட்டுத் துருப்புகளுக்கு கிரேக்கர்கள் "வெட்டுக்கிளிகள்" என்று ஒரு பெயர் வைத்தனர். ஆனால் நாஸிகளுக்கு இம்மாதிரி பெயர் வைப்பதென்பது பொதுவாக எல்லா இடங்களிலும் இருந்திருக்கிறது. உதாரணமாக லக்ஸம்பர்க்கில் உள்ளவர்கள் நாஸிகளின் கொள்கைகளையும் முறையையும் கண்டு (Verinder Banditen, V. D. B.,) கொள்ளைக்கூட்டக்காரர்கள் என்று பெயர் வைத்தனர். கறையானைப்போல் ஆக்கிரமித்த நாடுகளை அழிப்பதால் வெட்டுக்கிளிகள் அல்லது கொள்ளைக்கூட்டக்காரர்கள் என்று பெயர் மிகவும் பொருத்தமானதுதான். ஏனென்றால் கொள்ளையிடுவதில் அச்சுநாட்டுத் துருப்புகள் அதிகம் பெயர் வாங்கிவிட்டன. பிரஸ்ஸெல்ஸில் மே மாதத்தில் ஒரு நாள் காலையில் 8-மணிக்கு உட்புகுந்து பிற்பகல் மூன்று மணிக்குள் அங்கு வியாபார ஸ்தலங்களிலிருந்த சாமான்களை மூட்டைகட்டி ராணுவ மோட்டார்களில் ஏற்றி ஜெர்மனிக்கு அனுப்பிவிட்டனர். ஜெர்மானியரின் கண் பட்டது பஸ்பம்தான். ஒன்றையும் விட்டுவிட்டுப்போவதில்லை. கலாசாலைப் புஸ்தகாலயங்களிலுள்ள எழுத்துப் பிரதி புஸ்தகங்களையும், கோவில்களிலுள்ள படங்களையும், ஆபரணங்கள், பட்டாடை முதலியவைகளையும் கொள்ளையடித்துவிடுவார்கள். விட்ஸ்டாவோஸ் என்ற இடத்திலுள்ள முப்பட்டத்தை (Triptych) அபகரித்தனர், சைனாவில் ஒரு பட்டணத்தில் உட்புகுரும்படைகளுக்குத் தலைமை வகித்த ஒரு ஜப்பானிய ஜெனரல் சீனக் குடும்பங்களுக்குச் சொந்தமான எல்லாவிதமான நேர்த்தியான சிற்பச் சித்திரங்களையும் கொண்டுவந்தான். உடனேயே ஜப்பானுக்கு அவை யாவற்றையும் தனக்கு மேலதிகாரிகள் விருப்பப்படி அனுப்பிவிட்டான்.

## நிரந்தரமான தாரித்திரியம்.

முன் சொன்னவிதமாகக் கொள்ளையடிப்பதென்பது முன்னேற்றமடைந்த

சிலநாடுகளுக்கு அதிக வேதனையைச் செய்யும். இருந்தாலும் இதை ஒரு சிறு விஷயமாகத் தள்ளிவிடலாம். இதைவிடப் பெரிய அகாதமான செய்கை என்னவென்றால் நாடுகளின் விளைபொருள்கள், சாமான்கள், உணவு, பிராணிகள் முதலியவைகளை அபகரிப்பதுதான். இப்படிச் செய்வதால் ஆக்கிரமித்த நாடுகளின் சொத்து நஷ்டப்படுவதோடு, பட்டினி, பஞ்சம் ஏற்படும். உதாரணமாக கிரீஸிலிருந்து எல்லாவித உணவுப்பொருள்களும் பிடுங்கப்பட்டதால், தற்சமயம் கிரேக்க ஜனங்கள் தினம் ¼ பவுண்டு பார்லி ரொட்டியைத்தான் தின்கவேண்டியிருக்கிறது. இது இருந்தும் இல்லாததும் ஒன்றுதான். பிரான்ஸ், பெல்ஜியத்தில்கூட வேண்டிய அளவிற்குப் பாதி உணவுதான் கொடுக்கப்படுகிறது. நார்வேயில் கிடைக்கக்கூடிய மாமிசம் பூராவையும் ஜெர்மன் துருப்புகள் பெற்றுவருகின்றன. அந்நாட்டினருக்குக் கொஞ்சம்கூட கிடைக்கவில்லை. சமீபத்தில் நார்வேயிலுள்ள விரிப்புகள் யாவற்றையும் பிடுங்கிக்கொண்டு நார்வேஜியர்கள் குளிரில் விரைக்கும்படி செய்யப்பட்டனர். போலாந்து பூராவும் பட்டினியால் அவஸ்தைப்பட்டு, வார்ஸாவில் மாத்திரம் யூதர்கள் வருஷத்திற்கு பத்து சதவிகிதம் இறக்கினர்.

## நாணயச் செலாவணித் தந்திரம்.

இவ்விதமாக பல நாடுகளிலிருந்து கொள்ளையடித்துக்கொண்டு போவதுதான் நாஸிகள் செய்துவரும் ஆக்கிரமணத்தின் ஒரு தன்மையாகும். பகிரங்கமாகக் கொள்ளையடிப்பதே ஒரு தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள நாணயச் செலாவணியை ஜெர்மனிக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டுவிட்டனர். இதனால் சாமான்களை நயமாக வாங்கிக் கொண்டு ஜெர்மனிக்கு அனுப்பமுடிந்தது. பெல்ஜியன் பிராங் நாணயத்தை ஜெர்மன் மார்க் ஒன்றுக்கு 12·50 வீதம் திட்டம் செய்யப்பட்டது. ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து ஒவ்

வொரு ஜெர்மன் சிப்பாயும் தினம் 10 பவுண்டு இடையுள்ள சாமான்களை அனுப்பலாம். பெல்ஜியத்தில் 10 லக்ஷம் துருப்புகள் இருப்பதால் ஜெர்மனிக்கு அதிகமான லாபம் அடைய முடிகிறது. நார்வேயிலிருந்து எல்லா உலோகச் சாமான்களை அபகரித்து அதற்குப் பதிலாக நிலக்கரி முதலியவைகளை அனுப்பி ஜெர்மனியின் யுத்த முயற்சிக்கான சாமான்கள்தான் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள நார்வே தொழிற்சாலைகள் நிலக்கரி முதலிய இதர சாமான்கள் இல்லாததால் வேலை செய்யவில்லை.

## தொழில் ஏற்றம்.

ஜெர்மனி பணம் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களிலெல்லாம் சாமான்களே கொடுத்து மீதப்பணத்திற்குச் சீட்டு மூலமாகக் கொடுக்கப்பட்டு வருவதால் இதர பாங்கிகளெல்லாம் ஜெர்மன் ரீச் பாங்கிக்குக் கடன்படுகின்றன. இதர தேசவேலைக்காரர்கள் ஜெர்மனியில் இருந்து தொழில்செய்து அடைந்த மிச்சப்பணத்தைத் திரும்ப தங்கள் குடும்பங்களுக்கு அனுப்பவேண்டுமானால் ஜெர்மன் ரீச்பாங்கியில் கொடுத்துவிடவேண்டும். அதை அவர்கள் பேருக்கு வரவுவைத்துக்கொள்ளப்படும். அவர்கள் ஊர் பாங்கிகள் கொடுக்க முடிந்தால் கொடுக்கலாம். ஆங்காங்கு ஆக்கிரமணத்திற்குப்போகும் ஜெர்மன் சைனியங்களின் செலவை அந்த நாடுகள் தான் பொறுத்துக் கொள்ள வேண்டும். இந்தச்செலவு அபாரமாக ஆகிறது. செலவுபோக மீதமுள்ள பணத்தை ஜெர்மானியர்கள் தொழில் சம்பாதிப்பதற்கு எடுத்துக்கொண்டு விடுகின்றனர். எல்லா வேலைகளிலும் மொத்தொகையில் 51 சதவிகிதம் ஜெர்மானியருக்கு விட்டுவிடவேண்டும். யூதர்களுக்கும் இதரர்களுக்கும் சொந்தமானவைகளை ஜெர்மன் காரியதரிசிகள் கேட்டபோது கொடுத்துவிடவேண்டும். சமூகத்தில் அதிகமாகமுன்னேற்றமடைந்த நாடுகளெல்லாம் இவ்வாறு இந்த ஜெர்மன் வெட்டுக்கிளிகளால் பழாக்கப்படுவதுதான் விபரீதமானது. ஸ்கோடா தொழிற்சாலை ஜெர்மனியின் ஹெர்மன் கோரிங் தொழிற்சாலையோடு பிணைக்கப்படுத்தப்பட்டது. பெல்ஜியன் யுத்த சாமான் தொழிற்சாலை ஜெர்மன் சைனியத்திற்குச் சாமான்கள் செய்யவேண்டும். ஆனால் இம்மாதிரி ஒப்புக்கொண்டு 15 லக்ஷம் காலியான துப்பாக்கிக் குண்டுகளைச் செய்து கொடுத்ததாம். இதுதான் மனதிற்கு ஏற்படும் திருப்தி. செக், போலிஷ் காடுகளை அழித்து மறுபடி பயிரிடுவதற்கு முடியாமல் செய்யப்படுகிறது. மத்திய பிரான்ஸ், கிரீஸ், முதலியவைகளிலுள்ள தொழிற்சாலைகள் மாத்திரம் தனியே விட்டுவைக்கப்பட்டன. ஏனென்றால் ஜெர்மனியில் ரூர் பிரதேசங்களில் சென்று பிரிடிஷ் விமானப் படை சேதம் விளைவிக்கிறதாம். ஆகவே ஜெர்மனி போலந்திலிருந்து சில சாமான்களைப் பெறுகிறது. 1940 ஜனவரியில் கோயரிங் ஒரு உத்தரவு போட்டு போலாந்து தொழிற்சாலையைத் தற்சமயம் கெடுக்கவில்லை என்றான்.

## ஜப்பானும் பின்பற்றுகிறது.

தூரக்கிழக்கிலும் ஜப்பான், ஜெர்மன் பழக்க வழக்கங்களைச் சரியாகப் பின்பற்றுகிறது. சீனர்கள் நாட்டைவிட்டு ஓடும்போது 'பூ தகன' முறையில் அழிக்காமல் சென்ற சீனத் தொழிற்சாலைகளை ஜப்பானியர் கைப்பற்றினர். சீனாவில் உள்ள பருத்தி பயிரிடுவதை ஜப்பானியரே வைத்துக்கொண்டனர். ஆனால் அந்தக் குடியானவர்களுக்கு விலை சரியாகக் கொடுக்காததால், உணவுப்பொருள்களைப் பயிரிடவேண்டியிருக்கிறது. ஜப்பானியர் ஐந்துவிதமான செலவாணியைப் பரவச் செய்திருக்கின்றனர். ஆனால் பிரிடன், அமெரிக்கா முதலிய நாடுகள் பழைய நாணய மாற்றத்தையே அனுசரிப்பதால், ஜப்பானியரின் திருட்டு நாணயத்திற்கு மதிப்பு இல்லை.

## மதமும், படிப்பும்.

ஆக்கிரமித்த நாடுகளில் ஜெர்மன் அரசாக்ஷியை யாவரும் மீறக்கூடாது. அது எல்லாவித இனத்தாருக்கும் அன்வயிக்கும். அரசியல், நியாயம், பொதுமக்கள் ஸ்வதந்திரம் யாவும் பிடுங்கப்படும். உதாரணமாக பெல்ஜியத்தில் 2,672 நகர சபைகள் கலைக்கப்பட்டு 3,000 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். போலாந்தில் செய்ததைப் போல் இதர இடங்களில் நியாயசபைகள் கலைக்கப்படும். அல்லது நார்வேயில் செய்ததுபோல அவர்களாகவே வேலையிலிருந்து விலகவேண்டியதுதான். அரசியல் சம்பந்தமான குற்றங்களை ஜெர்மன் நியாயஸ்தலங்களில் விசாரிக்கப்படும். போலாந்தில் பாதி மதாசாரியர்கள் ஜெயிலில் அடைபட்டுள்ளனர். எல்லா மதஸ்தாபனங்களும் அபகரிக்கப்பட்டன. 'லக்ஸம்பர்கில் ஒரு மணி அவகாசத்திற்குள் மத சந்நியாசிகளும், மதப்பெண்களும் விரட்டப்பட்டனர்.' அல்ஸாஸ்—லோரேனில் செய்ததுபோல பொதுமக்களையும் மதப்பற்றுதலுக்காகத் துன்புறுத்தப்படும். கிரீஸ், யூகோஸ்லாவியா முதலிய நாடுகளில் குருமார்கள் கொலை செய்யப்பட்டு கோவில்கள் இடிக்கப்பட்டன. மாணக்கர்களும் தொழிற்சாலை வேலைக்காரர்களும்தான் அதிகம் பாதிக்கப்படுவது. ஐரோப்பாவிலுள்ள பல்கலைக் கழகங்களெல்லாம் சந்தர்ப்பம், ஜனநாயகம் முதலியவைகளுக்குத் தகுந்தவிதமாக இருந்தவையெல்லாம் பாழாயின. 1940 நவம்பர் கொலைக்குப்பின் ஸெக்கோஸ்லாவியாவில் சர்வ கலாசாலைகள் அழிந்தன. 230 போலிஷ் உபாத்தியாயர்கள் ஜெயிலில் அடைபட்டுள்ளனர். நார்வேயிலும், கிரீஸிலும், உபாத்தியாயர்கள் தாங்களாகவே வேலையை விட்டுச் சென்றதால் கலாசாலைகள் நின்றுவிட்டன. லக்ஸம்பர்க்கிலும், அல்ஸாஸிலும் சிறுவர்கள் ஜெர்மன் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அங்கேயும் பலாத்காரமாக நாஸிகள் கொள்கைப்படிதான் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். மீதியுள்ளவர்கள் ஜெர்மன் ரஸ்தாக்களில வேலை செய்கின்றனர். பிரான்ஸைத் தவிர இதர பாகங்களில் யுவர்கள் இயக்கமே அழிக்கப்பட்டது. (Sécondary) மத்தியதரப் படிப்பு போய்விட்டது. சில இடங்களில் நாஸிப் புஸ்தகங்கள் மாத்திரம் வைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு உபாத்தியாயர்கள் ஜெர்மனியில் பயிலவண்டும். ஆக்கிரமித்த பிரான்ஸிலும் ஜெர்மானியர் சொல்லும் புஸ்தகங்களைத்தான் படிக்கலாம். சிறுவர்களுக்குப் பொதுவான பயிற்சி இல்லாமல் ஏதோ தந்திரமான வழியிலேயே கற்பிக்கப்படுகிறது. படிக்கும் நேரம் கொஞ்சம் தான்; சரீரக் கஸரத்துகளும், நாஸிப் பாட்டுகள் பாடவும்தான் போது சரியாக இருக்கும். ஜப்பானும் படிப்பு விஷயத்தை பாதித்துவருகிறது. பொருக்கி எடுத்து, பள்ளிக்கூடங்கள், மத ஸ்தாபனங்கள் முதலியவைகளை அழிக்கிறது. ஆனால் சீனர்கள் உள்நாட்டிற்கு ஓடி பழையபடி. சொஞ்சம் படிப்பை வைத்துக் கொண்டிருக்கின்றனர். நான்கிங், பெகிங் கலாசாலைகள் போனவுடனே, மாணக்கர்களுக்குத்தான் அதிகம் தீங்கு விளைந்தது.



## தொழிலின் விமோசனம்.

மற்றவர்களைக் காட்டிலும் வேலைக்காரர்கள் அதிகம் அவஸ்தைப்படுகின்றனர். தொழில் சங்கங்கள் எடுக்கப்பட்டன. நாஸிகளின் கூட்டங்களில் சேர விரும்பாதவர்கள் அதிக லாபம் அடைய முடியாது. வேலையில்லாதவர்களுக்கு இன்ஷியோரன்ஸ் சீட்டுகளும், சாப்பாட்டுச் சீட்டுகளும் மறுக்கப்படும். வரவர வேலையில்லாத ஆட்கள் தான் அதிகரித்து வருகிறது. விவாகமாகாதவர்களையும், குழந்தையில்லாதவர்களையும் முதலாளிகள் வேலையிலிருந்து விலக்கவேண்டும். மேற்கு பாகத்தில் இம்மாதிரி பலாத்காரம் செய்து ஜெர்மனிக்கு அனுப்பப்படுகின்றனர். 14 வயது முதல் 60 வயது வரை போலாந்தில் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் கட்டாய வேலை செய்யவேண்டும்.

போலிஷ் யுத்தக் கைதிகளும் ஜெர்மன் வயல்களில் வேலை செய்கின்றனர். இவ்விதம் இதர நாடுகளிலிருந்து வந்து வேலைசெய்யும் ஆட்களுக்கு வேறு விதமான நிபந்தனைகள்தான். முதலாளிகள் வேலையாட்களைத் தயவாக நடத்தினால் அவர்களும் ஜெயிலுக்குப் போக வேண்டியதுதான். அநேகமாக பிரிடிஷ் விமானத் தாக்குதல்கள் ஏற்படும் இடத்தில்தான் வேலைசெய்யவேண்டும். பெல்ஜியர்கள் கொடுக்கும் கணக்குப்படி 6,000 முதல் 2,00,000 பேர் வரையில் ஜெர்மனியில் கொல்லப்பட்டனர்.

## வஞ்சனை திட்டம்.

சைனாவில் தொழிலாளிகளைத் துன்பப்படுத்த ஜப்பானியர் கஞ்ஜா முதலிய கொடியவஸ்துக்களைக்கொடுக்கின்றனர். பெகின், ஷாங்காயில் கஞ்ஜாக் காடுகள் அசாத்தியம். முடிந்தவரை இதையும், இன்னும் இதர லாகிரி வஸ்துக்களையும்உண்டு பண்ணுகின்றனர். வின்பென்னில் நடந்த ஒரு பொதுக்கொண்டாட்டத்தில் (ஹூக்கா) கஞ்ஜாப் புகைகுடிக்கும் கருவியை சீனர்களுக்கு வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது. இது சீன—ஜப்பானிய ஒற்றுமையைக் குறிக்கிறதாம். இதுவரை எந்த அர

சாங்கத்தாரும் மருந்து கொடுத்துக் கொல்லும் கொடிய செய்கை செய்ததில்லை.

ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள ஜெர்மன் அதிகாரிகள் லஞ்சம் வாங்கி வருவதாகவும், சாமர்த்தியம் இல்லாதவர்களாயும் இருக்கின்றனர். ஆகவே ஜனங்களுக்கிடையில் சதா சச்சரவுகள் ஏற்படுகின்றன. இவ்விதம் நடப்பதற்குக் காரணமாயிருப்பவர்களைப்பற்றி தெரிந்து கொள்ளுவதற்கு ஆச்சரியமாகத் தானிருக்கும். இதைப் போலவே ஜப்பானியரைப்பற்றி லஞ்சம் வாங்குவது முதலிய கதைகள் சீனர்கள் மூலம் கிடைக்கின்றன.

### நாம் மேற்சொல்லியவை உண்மையே.

இவ்வித அறிக்கைகள் யாவும் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து நேச தேசங்களின் பிரதிநிதிகள் மூலம் கிடைத்திருக்கின்றன. இப்பிரதிநிதிகள் லண்டனில் அமைந்துள்ள சர்வதேசக் கூட்டத்தின் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். இச்சங்கம் மாதம் ஒரு முறைகூடி சர்வ தேச சங்கத்தின் ஒப்பந்தங்களை ஸ்தாபிக்க முயலுகின்றது. இதில் இரண்டு விஷயங்கள் மிகவும் பிரதானமானவை. இவ்வொப்பந்தங்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் பிரத்யேகமாக அமைக்கப்பட்டு அச்சுநாடுகளின் திட்டங்களை எதிர்க்கின்றனர். ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளை பங்கப்படுத்தப்படும். மேல்படிப்பிற்குள்ள முறைகள் ஏற்படுத்தப்படும். கிழக்கு மேற்கு முதலிய பிரதேசங்களின் தன்மையில் ஒரு வித்தியாசமும் கிடையாது. அடுத்தபடியாக, ஆக்கிரமித்த நாடுகளில் நாஸிகளை எதிர்த்து செய்யப்படும் ரகசிய சூழ்ச்சிகளைக்கொண்டு நாஸி திட்டங்கள் பிரியமானவை இல்லையென்றும் தெரிகிறது. புது திட்டம், பொதுக்ஷேமத் திட்டம் முதலிய அச்சுநாடுகளின் முறைகளைக்கொண்டு ஏராளப் பிரதேசங்களைப்பிடித்து, ஸ்வதந்திர வியாபாரம், மேன்மையான ஜீவனம் முதலியவைகளை ஸ்தாபித்துவிடலாமென்று நினைத்தது பலிக்காமல் அந்தந்த நாடுகள் நாஸி ஆதிக்கத்தை எதிர்க்கின்றன. அச்சுநாட்டுக் கொள்கைப்படி ஆக்கிரமணம் என்றால் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் சாதகமாக திட்டங்களைப்போட்டுக்கொண்டு அந்தந்த நாடுகளைக் கொள்ளையடிப்பதுதான்.

அச்சுநாடுகள் பேரில் வெறுப்புத்தான் அதிகப்படுகிறது. நார்வேயிலுள்ள குவிஸ்லிங்கைப் போன்ற அதிகார ஆசைகொண்ட சிலரைத் தவிர வேறே ஒருவரும் அச்சுநாட்டு புது திட்டத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை. தான் ஜயித்த நாடுகளிலிருந்து கிடைக்கும் லாபங்களை கொடுப்பதாக ஜனங்களுக்குச்சொல்லி ஹிட்லர் அதிகாரத்தை நிலைநிறுத்த முயலலாம். ஆனால் யாவருக்கும் கவலையையும் மனக்குறைவையும் தான் உண்டாக்கியிருக்கிறான். இதுதான் நாஸிகள் செய்துவரும் பெரும்பிழை. ஏனென்றால், இம்மாதிரியான வெறுப்புநாளுக்குநாள் பலமடைந்து நாஸிகளை வேரோடு அழிக்க காரணமாகிவிடும்.

---

## ஜெர்மனியில் உள்ளவர்களின் மனப்பான்மை.
## பொதுஜனங்களின் அபிப்பிராயம் பொருட்டாகாது.
## போர்வீரர்களும், தொழிலாளிகளும்தான் பிரதானமானவர்கள்.
## தோற்கடிக்கப்படுவார்கள் என்ற எண்ணம் இன்னும் உதிக்கவில்லை.

ஜெர்மனியின் உள்நாட்டு பிரசாரத்தில் கோயபல்ஸ் எடுத்துக்கொண்டிருக்கும், முயற்சியைக் குறித்தும், ஜெர்மானியர்களின் ஊக்கமும், உணர்ச்சியும் அழியாமலிருக்கும்படி தடுக்க ஜெர்மன் ரகசியப் போலீஸ் எடுத்துக்கொண்ட விஸ்தாரமான முறைகளைப்பற்றியும், "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையின் அரசியல் நிருபர் எழுதுகிறார். இந்த அரசாங்கத்தின் வெற்றியானது, தேசத்தார்களுடன் சேர்ந்ததல்ல என்று சொல்லப்படும் பொதுவுடைமைக் கக்ஷியைச் சேர்ந்த ஜனங்கள் அனுதாபம் காட்டுகிறார்களா, அல்லது வெறுப்புத்தான் கொள்ளுகிறார்களா என்பதிலிருந்து சொல்வதற்கில்லை. ஆனால் போர்க்களத்திலிருக்கும் வீரர்களுக்கும், உள்நாட்டிலிருக்கும் தொழிலாளிகளுக்கும், இந்தக் கக்ஷியினரின் நடவடிக்கையினால் நம்பிக்கை குறையாமல் இருக்கச்செய்வதைப் பெருத்த காரியமாகக் கவனிக்கப்படுகிறது. இந்தக் கக்ஷியை ஆதரிப்பவர்களே ராஜீயப் போக்கைத் தீர்மானிக்க காரணபூதர்கள். மற்றவர்கள் அடுத்தபடியாயுள்ளவர்கள்தான். தற்கால நிலையில் அவர்களுக்கு அதிருப்தி இருந்தபோதிலும் வேறுவிதமாகச் செய்ய சக்தியில்லாமல் இந்தவழியிலேயே அவர்கள் போக வேண்டியிருக்கிறது. சென்ற யுத்தத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் இப்பொழுதும் கிளம்பி திடுக்கிடச்செய்யும் துருப்புகளுக்குள் குழப்பம் உண்டாக்கி விடுவார்கள் என்றாவது அல்லது குடியரசு வேண்டுமென்று சொல்லுகிற 40,00,000 பேர்களும், காதலிக் கிருஸ்துவர்களும் ஏகமனதுடன் கிளம்பி இப்பொழுது நடக்கும் நடவடிக்கைகளை மாற்றிவிடுவார்கள் என்றாவது எண்ணுவதைப்போல் பெருத்த தவறு வேறில்லை.



பலமான அரசியல் பற்றுதலோ, மத அனுதாபமோ ஒருவிதத்திலும் இல்லாமல் இருப்பவர்கள்தான் ஸர்வாதிகாரத்வத்துக்குப் பெரிய ஆஸ்தி. அவர்கள் ஜனநாயகத்தைக் கீழே இழுக்கக்கூடியவர்கள். ஸர்வாதிகாரத்வமுள்ள அரசாக்ஷி அவர்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் வெறுப்பு இருந்தாலும் அதற்காக கலகம் செய்து தடுக்க முடியாது. அப்படி வெறுப்பு ஏற்படுவதிலிருந்தே ஸர்வாதிகாரத்வம் நிலைத்திருப்பதற்கு காரணமாகும் என்று சொல்லலாம்.

யுத்தத்தில் அருவருப்பும், யுத்தத்தின் முடிவைப்பற்றி சந்தேகமும் ஜெர்மனி தரப்பில் சேர்ந்தவர்களுக்கு இவை எவ்வளவுதூரம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வது அசாத்தியம். கிழக்குப்போர்முனையில் ஈடுபட்ட ஜெர்மன் போர்வீரர்களுக்கு இனி வெற்றி நிச்சயமாக கிடைக்குமென்பதில் நம்பிக்கையில்லாமல் போனபோதிலும், அவர்கள் உபயோகிக்கும் கருவிகள் ஜயிக்கமுடியாதென்று அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தபோதிலும், பொது நிலைமையில் எவ்வாறு மாறுதல் ஏற்படும் என்று சொல்வது கடினம். ஆனால் மீண்டும் ராணுவ வெற்றிகள் பலமாக ஏற்பட்டால்தான் ஜெர்மன் சைனியங்களுக்கு முந்தியுள்ள உத்சாகமும், நம்பிக்கையும் ஏற்படும் என்று சொல்லலாம். அவர்கள் ஹிட்லர் அரசாக்ஷியில் ஒழுங்குமுறைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் பிடிவாதமாக சண்டைபோட்டு இறுதியில் வெற்றி பெருவதற்கு நம்பியும் வருகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குள்ள தேசப்பற்றுதலினால் தோல்வியை அவர்கள் பாராட்டவில்லை. ஆனால் எதிரிகளுக்குத் தோல்வி ஏற்படுவதற்கு அறிகுறிகள் ஏற்பட்டுவிட்டன. தேசிய பொதுவுடைமைக் கக்ஷியிலும் இந்நிலைமை ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அவர்கள் கொண்டிருக்கும் ஆவலினால் உண்டாயிருக்கும் பைத்தியக்காரத்தனம் இன்னும் எஞ்சியிருக்கிறது. பல வருஷங்களுக்கு முன் அவர்களுக்கு அதிகமாகவும், முடிவான வெற்றியும் கிடைக்குமென்ற நம்பிக்கையிருந்தாலும், இப்பொழுது ஏற்கனவே கிடைத்த வெற்றிகளை நம்பியே அவர்கள் இருந்து வருகிறார்கள்.

அவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் மிகவும் ஸ்வல்பம்தான். ஆனால் அதை அப்படியே விட்டுவிட்டால், அதிலிருந்து விளையக்கூடிய சம்பவங்கள் விரோதமாக இருக்கும். கடினமான சொற்களும், கடினமான விஷயங்களும், அறிவில்லாத மனிதர்களுக்குக்கூட தெரியப்படுத்தும். பெரிய இடங்களில் இப்பொழுதுள்ள நிலைமை திண்ணமான உருவைக் கொடுத்திருக்கிறது. சமீபத்தில் ஒரு உத்தியோகஸ்தரை வேலையிலிருந்து விலக்கினதும், ஹிட்லர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையும், ஜெர்மன் ரகசியப் போலீஸ் பிரதானமாக வந்திருப்பதும் படைத்தலைவர்களுக்கும், ராஜீயத் தலைவர்களுக்கும், தகராறு ஏற்பட்டிருக்கிறதைத் தெளிவாகக் காட்டுகின்றன. ருஷ்யப் படையெடுப்பில் நேர்ந்த ராஜீயத் தவறுதலினாலும், ராணுவத் தோல்வியினாலும், அது உண்டாயிருப்பதில் சந்தேகமில்லை. இதில் நேரக்கூடியதை உணர்ந்து தூரதிருஷ்டியுள்ளப் படைத்தலைவர்கள் ஜெர்மன் ராணுவ அதிகாரம் எப்படியானபோதிலும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள கவலையுடன் இருக்கிறார்கள்.

## தெற்கு சீனக்கடலின் ஆதிக்கத்திற்காக யுத்தம்.

## பஸிபிக்கில் புதிய தந்திரம்.

## சிங்கப்பூரிலிருந்து டார்வினுக்குச் செல்லும் வழியை காபந்துசெய்வதின் அவசியம்.

## ஜப்பானை அதன் கப்பற்படையைக்கொண்டே தோல்வி அடையச் செய்வது.

சிங்கப்பூரிலிருந்து அநேக வருஷங்களாக பத்திரமான போக்குவரத்துகள் நடந்துவந்ததை அடிப்படையாகக்கொண்டு, பஸிபிக் யுத்தப் பிரச்னை நமக்குப் பூர்ண வெற்றியைக் கொடுக்குமென்றும் நாம் கொண்டிருந்த நம்பிக்கை இப்பொழுது போய்விட்டது என்று யார்க்ஷையர் போஸ்ட் பத்திரிகையின் ராணுவ நிருபர் ஜனவரி மாதம், 16-ம் தேதி பத்திரிகையில் குறிப்பிடுகிறார். முக்கோண வடிவத்தின் இடது பக்கத்திலுள்ள மர்மஸ்தானங்களான ஹாங்காங், இந்தோசைனா, பிலிப்பைன்ஸ் தீவுகள் இவைகள் யாவும் எதிரிகள் வசமிருக்கின்றன. ஆனால் வலது பக்கத்திய ஜாவாவும், டார்வினும் எதிர்த்து நிற்கின்றன. போக்குவரத்துப் பாதைகளை எதிரிகள் ஆக்கிரமித்துக்கொண்டார்கள். ஆதலால் அவர்கள் சமுத்திரத்தின் வழியாக ஏற்பட்டிருக்கும் மார்க்கங்களை வசப்படுத்திக் கொண்டபடியால், பர்மா பேரிலும், மலேயா பேரிலும், தரை மார்க்கமாக யுத்தம் தொடங்குவதற்கு முடிந்தது. ஆகையால் பஸிபிக்கில் ஏற்பட்ட பிரச்னை தெற்கு சீனக்கடலின் ஆதிக்கம் பெறப் போடப்படும் யுத்தமாகமுடிந்தது. அந்தக் கடலின் மார்க்கத்தைக்கொண்டு விரோதி தான் பிடித்த தீவுகளைக் காபந்துசெய்து கொள்ளவும், தாய்லாந்து, மலேயா முதலிய இடங்களிலிருக்கும் சைனியங்களைப் பயன்தரக்கூடிய விதமாக வைத்துக்கொள்ளவும் முடியும்.

கடற்கரை அதாவது சீனா பஸிபிக் போர்முனையில் மேற்குப் புறத்தில் சைனாவின் சமுத்திரக்கரையின் ஓரமாக ஜப்பானைச் சுற்றியுள்ள தீவுகளைப் பின் அணியாகவும் பிலிப்பைன் தீவுகளை முன் அணியாகவும் வைத்துக்கொண்டு போர் நடத்திவருகிறது. மேற்குக் கடற்கரை மார்க்கத்தைத் துண்டிப்பதாய் இருந்தால் ஜப்பானுடைய தந்திரத்தை அடியோடு தொலைப்பதுபோலாகும். அதனால் அவ்விதம் நேராமல் இருப்பதைத்தடுக்க அங்கு கடற்படை ஒன்றை வைத்திருக்கிறது. யுத்தக் கோட்பாட்டுப்படி அது கடல் யுத்தந்தான். ஏனென்றால் விமானபலம் அழிவை உண்டாக்குமே தவிர ஜயித்தவைகளைப் பத்திரமாக வைத்துக்கொள்ள முடியாது. குடைப் படையும், அதன் சாதனங்களும் கொஞ்ச தூரம்தான் செல்லமுடியும். ஆதலால் விமானபலம் உபயோகப்படக்கூடிய விதமாக இருக்கவேண்டுமானால், கப்பற்படையின் உதவியைக்கொண்டு அவைகளைத் தூக்கிச் செல்லவேண்டும்.

பஸிபிக்கின் மர்மஸ்தானத்தைப் பார்க்கையில் மலாகா ஜலசந்தியிலிருந்து டிமோர் தீவு வரை, டச்சு நாடுகளிலிருக்கும் பெரிய தொடர்பாரை வியாபித்திருக்கிறது. அது இயற்கை தளமாகவும், ஒரு கொத்தளமாகவும் இருக்கிறது. அம்மார்க்கத்தைப் பாதுகாப்பதினால், சிங்கப்பூர், வட ஆஸ்திரேலியா இந்து மகா சமுத்திரம் இவைகளைத் தற்காப்புசெய்துகொள்ள வெகுஎளிது. அதனால் நம்முடைய பஸிபிக் போர்முனை சிங்கப்பூரிலிருந்து டார்வின் வரையிலும் வியாபித்திருக்கிறது. இவை இரண்டையும் நம்முடைய வசத்தில் வைத்துக் கொள்வோமானால், ஜப்பானியர்கள் முன்னேறுவது தடைபட்டுவிடும். அதன் பலமாக அதன் கடல் ஆதிக்கமும் முடங்கிப்போய்விடும். ஜப்பானியக் கப்பற்படையைத் தோற்கடிக்கச்செய்தால் தரைப்படைகள் துண்டாக்கப்பட்டு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரக்கூடும். ஜப்பானிய விமானப்படை தனியாக இருந்து யுத்தத்தை நடத்த அவ்வளவு சக்திவாய்ந்தவை அல்ல. அப்படி நடத்துவதற்கு ஜெர்மன் லுப்ட்வாபியைப்போலொத்த மற்றொரு விமானப்படை அவசியமாக இருக்கும். ஆனால் அவ்வளவு பலமான விமானங்களை இப்பொழுது ஜப்பானால் உற்பத்திசெய்யவும் முடியாது. அவர்கள் உற்பத்திசெய்வதும் இப்பொழுதுள்ளதைக்காட்டிலும் 2,000 விமானங்களுக்குமேல் அதிகரிக்கச் செய்வதற்கு முடியாது. விரோதிகளின் தரைப்படை, விமானப்படை இவைகள்



வெற்றிகளைக் கொடுத்துவந்தபோதிலும், பஸிபிக் யுத்தத்தின் முடிவும், கப்பற்படை பலத்தைப் பொருத்தது. ஏனென்றால் ஜப்பான் புதிதாக வெற்றியடைந்த நாடுகளுக்கு கடலாதிக்கம்தான் தேவையாக இருக்கிறது.

இப்பொழுது பஸிபிக் சமுத்திரத்திலுள்ள நிலைமை எப்படியிருக்கிறதென்றால், சிங்கப்பூரின் தற்காப்புக்குச் சாதகமாயுள்ள பிராந்தியங்களில் நாலு படைகள் போரிட்டுக்கொண்டிருக்கின்றன. வீரத்தன்மை பொருந்திய தளகர்த்தர் மெக் ஆர்தரின் தலைமையின் கீழுள்ள அமெரிக்கத் துருப்புகளும், பிலிப்பைன்ஸ் துருப்புகளும், கிழக்கிந்தியத் தீவுகளைத் தாக்குவதற்கு முன்னேறிவரும் ஜப்பானிய துருப்புகளைத் தடுத்து, பிலிப்பைன்ஸ் போர்முனையில் பெருந்த சேதம் விளைவித்து வருகின்றனர். டச்சுக்காரர்கள் ஜப்பானியர்களை எதிர்த்து போர்னியோவிலும், ஜாவாக்கிலும் தீவிரமாகப் போர்புரிந்து எதிரிகளைச் சிங்கப்பூருக்கு அருகாமையில் வரவிடாமல் தடுத்துவருகிறார்கள். பர்மா ரஸ்தாவை அடைத்துவிடாமல் சீனர்களும், நாமும் போர்செய்து வருகிறோம். தெற்கு மலேயா தற்காப்புப் போர்முனைக்கு பிரிடிஷ்காரர்கள் திரும்பவும் முன்னேறி வருகிறார்கள். சிங்கப்பூர் நிலைமை கேவலமாக இருப்பதைக் குறித்து ஒருவரும் குறைவாக எண்ணிக்கொண்டு இருக்கவில்லை. அப்படியேதாவது கெடுதல்கள் நேர்ந்துவிட்டாலும், தாய்லாந்து நடுநிலைமையாக இருந்ததை கௌரவத்துடன் பாராட்டி வந்த பிரிடிஷ் அரசாங்கத்தின் தன்மையால் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையைத் திரும்பவும் முன்போல் அமைத்துக்கொள்ள பெருத்த பலம் உதவிக்கு வருகிறது. இந்த விஷயம் நம் யாவருக்கும் திருப்திகரமாக இருக்கும்.

---

## பார்மோஸா வாசிகளை ஜப்பானியர் நிர்மூலமாக்குகின்றனர்.

## 2,94,000 கொரியர்கள் சாட்டையடி வாங்குகின்றனர்.

## தாய்லாந்தில் பலாத்காரம் அதிகரிக்கிறது.

"ஆசியா, ஆசியா வாசிகளுக்கே" என்று ஜப்பான் சொல்லுவது வீண் புரளியென்று ஜப்பானின் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்ட ஆசியா வாசிகள் நினைக்கின்றனர். ஐரோப்பாவில் எல்லா நாடுகளையும் கொள்ளையிடும் நாஸிக்கொள்ளைக்கூட்டத்தினர் கிழக்கே கொடுமை ஆட்சி புரியும் ஜப்பானியரை சரியான தோழர்களாக பாவிக்கின்றனர். ஐரோப்பிய வாசிகளுக்கு ஜப்பானியரைக்கண்டால் அதிகவெறுப்பு. இருந்தாலும் நாஸிகளின் உதவியை ஜப்பானிய யுத்த அதிகாரிகள் சமயத்திற்கேற்றவாறு உபயோகித்துக்கொள்ளுகின்றனர். ஜப்பானியரின் தேசாக்கிரமணமும் ஆதிக்கமும் நாஸிகளின் முறைகளை அனுசரித்தே இருக்கின்றன. இருந்தாலும் நாஸிகளுக்குக்கூட ஜப்பானியர் இரண்டு மூன்று கொடிய தந்திரங்களைக் கற்பிக்கலாம்.

### கொடுமையைத் தெரிவிக்க ஆள் இல்லை.

பார்மோஸாவில் ஜப்பானியரின் கொடியதிட்டங்களைப் பார்த்தால்போலந்தில் ஜெர்மானியர் நடத்திவரும் காட்டுமிராண்டி ஆட்சியையே ஒத்து இருக்கிறதென்று தெரியவரும். தங்களை வேறுவிதமாகக் காப்பாற்றிக்கொள்ள முடியாத பார்மோஸா வாசிகள் ஆடுமாடுகள் அடைக்கப்படும் கிடைகளில் அடைக்கப்படுகின்றனர். இவர்களைச்சுற்றி மின்சார சம்பந்தமுள்ள முள் கம்பி வேலிதானிருக்கிறது. இவர்களுக்கு நேர்ந்ததைத் தெரியப்படுத்த ஒருவரும் மிஞ்சிவரவில்லை. யாவரும் அழிந்துவிட்டனர் என்றே சொல்லலாம்.

இதைப்போலவே 1905-ம் வருஷத்தில் கொரியாவை ஜப்பானியர் வசப்படுத்திக்கொண்டு அதன் புராதன கலைப் பயிற்சியையும், நாகரீகத்தையும் ஜப்பானியர் அழித்தனர். இவ்விதம் கொடிய தொழில் புரியும் ஜப்பானியர்கள் கபடமற்ற தன்மை, அதிகமான பிரியம், எல்லையில்லாத தயவு, முதலிய குணங்களைக் காண்பிப்பதாக வாயினால் சொல்லுகின்றனர். அதில் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

1939-ம் வருஷத்தில் கொரியர்கள் "சம அந்தஸ்து முதலிவைகள்" வேண்டுமென்று கேட்டதற்கு ஜப்பானிய கவர்னர் "அவ்வித எண்ணங்களே உண்டாகக்

கூடாது என்று எச்சரிக்கை செய்தார்.'' ஒரு குற்றமும் இல்லாதவர்களைத் தண்டிப்பதென்பதை ஜெர்மானியரிடமிருந்துதான் ஜப்பானியர் கற்றுக்கொண்டனர். வயது முதிர்ந்தவர்களை உதைத்து அடிப்பதைப் பற்றியும் ஸ்திரீகளின் கூந்தலைப் பிடித்து இழுத்து சாட்டையடி அடித்த விவரத்தையும் ஜப்பான் கிராணிகள் என்ற பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. ஜப்பானியர் கொடுத்துள்ள விவரப்படி 1913-க்கும் 1918-க்கும் இடையில் 2,94,000 கொரியர்களை ஜப்பானியப் போலீஸ்காரர்கள் சாட்டையால் அடித்ததாகச் சொல்லப்படுகிறது.

## புத்த சந்யாசி மடம் தாக்கப்பட்டது.

கொரிய பொதுமக்கள் பேரில் உள்ள வெறுப்பைப்போலவேதான் அவர்கள் மதத்தின் பேரிலும் ஜப்பானியருக்கு வெறுப்பு. புத்தக்கோவில்களுக்கு தாங்கள் வந்தனம் செலுத்துவதாக கபடமான வார்த்தைகள் கூறி ஸயாம் வாசிகளை உத்ஸாகப்படுத்துகின்றனர் "சீன யுத்தம்'' ஆரம்பமானவுடன் ஜப்பானியர் ஒரு கொடும் காரியத்தைச் செய்தனர். அதாவது பீபிங்கிற்கு அருகில் ஒரு புத்த சந்யாசி மடத்தைக் கொள்ளையடித்து அங்குள்ள கன்னிகளை மானபங்கம் செய்தனர். ஒரு கன்னி கொல்லப்பட்டாள். மூன்றுபேர்கள் தாங்களாகவே இருந்தனர். கொரியாவிலுள்ள கோவில் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் ஒரு வியாபார ஹோட்டல் கட்டப்பட்டது.

தாய்லாந்திலும் சாமமான உபாயத்தைக்கொண்டு ஆக்கிரமித்து, வரவர கடுமையான திட்டங்கள் ஏற்படுத்தி ஸயாமியர்களை அடிமைகளாக்கி ஜப்பானுக்காகத் தொழில் புரியச்செய்கின்றனர்.

## மஞ்சூரியாவில் ஜப்பானிய திட்டம்.

மஞ்சூரியாவைப் பிடித்ததாகத்தான் ஜப்பான் இறுமாப்புகொண்டிருக்கிறது. ஆனால் இங்கே உள்ளவர்கள் காட்டுமிராண்டி ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டனர். சமாதானம், மேன்மை முதலியவைகளை ஸ்தாபிக்கமுடியாமல் அவர்களை அடக்கி ஆளுவதும் சிரமாகிவிட்டது. மஞ்சூரியர்களைத் துண்டு துண்டாகக்கூட்டி அரசாங்கத்தாருக்கு விருப்பமான இடங்களில் வசிக்கும்படி செய்யப்பட்டனர். ஏதாவது முணுமுணுத்தால் உயிரோடு கொளுத்தப்பட்டனர். கணக்கிலடங்காத அட்டூழியங்களில் இது ஒன்று உதாரணமாகக்கொடுக்கப்பட்டது.

ஜப்பானியரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து சமீபத்தில் வந்த ஒரு சீனர் பின்வருமாறு சொன்னர்;—''கொடுமை, கொள்ளை முதலியவைகளைச் செய்வதாக ஜப்பானியரைப்பற்றி சொல்லுவதெல்லாம் வீண் பிரசாரம் என்று. நான் நினைத்ததுண்டு. ஆனல் இன்று அவர்கள் செய்வதைப் பார்த்தால் மனிதர்கள் நினைப்பதைக் காட்டிலும் ஜப்பானியர்கள் கெட்ட ஸ்பாவமுள்ளவர்களாக இருக்கின்றனர்.''

ஜப்பானுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் நினைக்க முடியாத விதமாகவெல்லாம் கொடிய ஆட்சி புரிகின்றனர். ஜெர்மானியரின் உதவியால் இன்னும் நாடுகளை ஆக்கிரமித்துக்கொண்டு இவ்விதமே இருந்துவர ஜப்பான் நினைக்கிறது

---

# நோட்டீஸ்.

தெற்குப் பிராந்திய ரெக்ரூட்டிங் ஆபீஸர் (Recruiting officer) கர்னல் F. C. வால் (ஹெட் ஆபீஸ், பங்களூர்) பிப்ரவரி மாதம் 20உ புதுக்கோட்டைக்கு வருவார். சைனியத்தைச் சேர்ந்த பலவிதமான தொழிலாளிகளையும், படித்த குமாஸ்தாக்களையும், ஸ்டோர் சிப்பந்திகளையும் பழக்குவதற்காகப் பொறுக்கி எடுக்கப்போகிருர். அபேக்ஷகர்கள் பிப்ரவரி மாதம் 21-ம் தேதியன்று புதுக்கோட்டை டவுனிலிருக்கும் ரெஸிடென்ஸி (Residency) கட்டடத்தில் இவரை பேட்டி காணலாம்.



# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

### பிரஸங்கம் 81—(3-வது பிரிவு).

1942—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| பிப்ரவரி ... | 7, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 9, திங்கட்கிழமை ... | கரம்பக்குடி ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு ... | ,, | 6.30 |
| | 10, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | ஆலங்குடி ... | மாலை | 6.00 |
| | | வடகாடு ... | ,, | 6.30 |
| | 11. புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 12, வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |
| | 15, ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி ... | ,, | 6.00 |
| | | ஆவூர் ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 82—(4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 16, திங்கட்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 17, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | வடவாளம் ... | மாலை | 6.00 |
| | மழையூர் ... | ,, | 6.30 |
| 18, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | காரையூர் ... | மாலை | 6.00 |
| | கீழத்தானியம் ... | ,, | 6.30 |
| 19, வியாழக்கிழமை .. | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 20, வெள்ளிக்கிழமை ... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | கிள்ளனூர் ... | ,, | 6.30 |

புதுக்கோட்டையின்

கீர்த்தியை நிலைநாட்டவும்!!

ஸமஸ்தான

யுத்த நிதியை அதிகப்படுத்தவும்

பிப்ரவரிமீ 13உ முதல் 20உ வரை

# வெற்றி வாரம்

ஒன்று

ஸமஸ்தானம் முழுவதும் கொண்டாடப்படும்.

அப்பொழுது

மாட்சி தங்கிய நமது மன்னர்பிரானின்

உருவமமைக்கப்பட்ட

◎ பதக்கங்களும்

◎ பொத்தான்களும்

◎ சிறு பாவட்டாக்களும்

விற்கப்படும்.

இவைகளை ஏராளமாக வாங்குங்கள்!!

**வாங்கி வெற்றிபெற உதவுங்கள்.**

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—7-2-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் வருஷம் பிப்ரவரிமீ 14உ [நெ. 82

பிரஸங்கம் LXXXII.

## அகில ஆசியா கொள்கை.

**அகில ஆசியா கொள்கை.** அச்சுநாட்டினர் ஐரோப்பிய நாடுகளை ஒன்று சேர்ப்பதாகச் சொல்லுவதைப்போல் ஆசியா நாடுகளையும் ஒன்று சேர்ப்பதாகச் சொல்லுகின்றனர். அதாவது ஈவிரக்கமில்லாமல் யுத்தம் செய்து ஆசியாவை அடிமையாக்கி ஸர்வதேசக் கொள்ளைத் தொழில் புரிந்து நாடுகளைப் பிடிப்பதுதான் அவர்கள் நோக்கம். இதுவே ஜப்பான் கொண்டுள்ள நினைப்பு. அயோக்கியத்தனத்தில் ஜெர்மானியர்களைவிட ஜப்பானியர் கொஞ்சம் மேல்போனவர்களாகவே காணப்படுகின்றனர். உட்கருத்துகளை மறைத்து வைத்துக்கொண்டு தேனொழுகும்படியான வார்த்தைகளைச் சொல்லுவது ஜப்பானியரின் தொழில். அதற்கு சில உதாரணங்களைப் பார்த்தால் நன்றாகத் தெரியவரும். அகில ஆசியாக் கொள்கையைப்பற்றி ஜப்பானியர்களுக்குள்ள அபிப்பிராயங்களை கவனிப்போம்

ஜப்பானிய மேஜர் ஜெனரல் டோய்ஹாரா சொல்லுவதாவது :—

"ஆசியா, ஆசியா வாசிகளுக்குத்தான் என்று சொல்லும் அபிப்பிராயப்படி ஆசியாவை ஆசியா வாசிகளைக் கொண்டுதான் தற்காப்புச் செய்யவேண்டும்".

நின்கெய்டோ என்ற ஜப்பானிய பொது சமாசாரமறிந்தவன் சொல்லுவதாவது :—

"150 வருஷங்களுக்கு அதிகமாகவே ஆசியா வாசிகள் வெள்ளையர்களின் கொடுங்கோலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ருஷ்யாவை ஜப்பான் தோற்கடித்த பிறகு ஆசியா வாசிகள் விழித்துக்கொண்டு பிரிடிஷாரின் கொடுங்கோல், கொலைமுதலியவைகளை நிராகரிக்க முன்வந்துவிட்டார்கள்".

**தர்ம சிந்தனை.** ஜப்பானில் தற்சமயம் அதிகாரம்பெற்றிருக்கும் யுத்தவெறி கொண்டவர்கள் கொண்டுள்ள தர்ம சிந்தனை இதுதான். பூரா ஆசியாவையும் தங்களது ஆளுகைக்கு உட்படுத்திக்கொண்டு, நாஸிகளுடன் உலகத்தையே பங்குபோட்டுக்கொள்ள ...னைத்துவருகின்றனர். இதுதான் அவர்களுடைய தர்ம சிந்தனை. வடக்கு ...சேனையில் ஜப்பானிய சைனியத்திற்குத் தலைமை வகிக்கும் மேஜர் ஜெனரல் ...டாடு இந்த யுத்தம், ஜாதி, மதம் முதலியவைகளை ஸ்தாபிப்பதற்காகவும், உலகத்திலேயே அதிக எண்ணிக்கையுள்ள ஆசியா வாசிகளை வெள்ளையர்களின் ...க்கிரமணத்திலிருந்து விடுவிக்கவும்' புரியப்படுவதாகச் சொன்னான்.

**பரோபதேசமும் அனுஷ்டானமும்.** ஆனால் ஜப்பானியர் வாயால் அவ்விதம் சொல்லுகிறார்களே தவிர அவர்கள் செய்வதைப் பார்த்தால் ஒருவித தெய்வத்தனமும் அதில் இருப்பதாகக் காணப்படவில்லை. எந்த ஜாதியாரையும் விடுவிக்கவும் இல்லை. வெள்ளையர்களின் ஆக்கிரமணத்திலிருந்து விடுவித்து கருப்பு மனிதர்களுக்கு ஸ்வதந்திரம் அளிப்பதாக வாய்மொழிகளால் சொல்லிக்கொண்டு யாவரையும் சிறைப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். உதாரணமாக சைனாவுடன் ஜப்பான் செய்யும் சண்டையை மத ஸ்வதந்திரத்திற்காகச் செய்வதாகச் சொல்லமுடியாது. அயலானைக் கொலை செய்வது என்ற நோக்கம்தான். இவ்விதமாக சைனாவின் பாதிபாகத்தை விழுங்கிவிட்டது. இந்தோ-சைனா, தாய்லாந்து முதலியவைகளையும் சாப்பிட்டு வருகிறது. கள்ளத்தனமாக மலேயாவிலும், பர்மாவிலும் புகுந்துவருகிறது. இங்குள்ளவர்கள் யாவரும் ஆசியா வாசிகள்தான். ஜப்பானுடன் ரத்த சம்பந்தம் உள்ளவர்கள் என்றே சொல்லலாம். அவர்களைக் கொலை செய்வது ஆசியா வாசிகளுக்கு ஸ்வதந்திரமளிப்பதாக ஆகாது.

**ஷின்டோ அபிப்பிராயம் (பிதிரு தெய்வ உபாஸனை).** ஆகவே இது ஜப்பானியர் சொல்லிக்கொள்ளும் விதமாக கிழக்கு நாடுகளின் நாகரிகத்தைத் திட்டப்படுத்துவதற்காகப் புரியப்படும் சண்டையுமில்லை. ஏனென்றால் ஜப்பானியர்கள் புத்தமதக் கொள்கைகளைத் தலைகீழாகத் தள்ளிவிட்டு பொய் தெய்வங்களை ஆராதனம் செய்யும் அநாகரிகமான ஷின்டோ மதக் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றனர்.

**ஷின்டோ கோள்கை யாது?** இந்த ஷின்டோ மதம் அரசாங்க முறையில் ஒரு தனிப்பட்ட மதமாகாது. ஆரம்ப காலத்தில் இதன்படி மிகவும் புராதனமாக ஒழுங்கில்லாத தெய்வ ஆராதனை செய்யப்பட்டுவந்தது. ஜப்பானிய வேதாந்திகள் ராஜீய லக்ஷியங்களுக்காகப் இதைப்பின்பற்றிவந்தனர். பிறகு இவர்கள் மத கர்வமடைந்து, தேசாபிமானமுள்ளவர்களென்று தங்களைச் சொல்லிக்கொண்டனர். ஜப்பான் தான் தெய்வலோகமாம். ஜப்பானியர் கடவுள் புத்திரர்களாம். ஜப்பானிய அரசன் நேரே சூரிய பகவானுடைய அம்சத்துடன் அவதரித்தவனாம்.

“ஷின்டோ கொள்கைகளை (அமதேராஸு-ஓ-மி-காமி) சூரிய பகவான் திட்டம் செய்திருக்கிறார். இவைகளின்படி ஜப்பானியர்கள் பொதுவாக வாழ்க்கையை பூர்ண லக்ஷணங்களுடன் அமைத்துக்கொள்ளவேண்டும். முதலில் இதை ஜிம்மு என்ற ஜப்பானியச் சக்ரவர்த்தி ஜப்பானிய நாடுகளில் பரவச்செய்தார்” என்று டானகா, காடோ முதலியவர்கள் சொல்லுகின்றனர்.

டாக்டா டானகா சொல்லுகிறான்.—“ஷின்டோ கொள்கையில் ஜப்பானிய அரசாங்கம் மதம், ஒழுக்கம் முதலியவைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அரசியல் கொள்கைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. மதத்தைப்பற்றி மிகவும் கொஞ்சம் தான். கண்மூடித்தனமான பூஜைசெய்து பிதிருலோகத்திலுள்ளவர்களை அழைத்து அவர்களிடமிருந்து வரன்களைப் பெறுவதும் எதிரிகளை த்வம்சம் செய்யும்படி கோருவதும்தான் மதம். நியாய ஒழுக்கத்தைப்பற்றி ஒன்றுமே கிடையாது.” டாக்டர் காடோவின் அபிப்பிராயத்தைப் பார்த்தால் ஜப்பானியர்களின் உட்கருத்து நன்கு விளங்கும் “மதப்பற்றுதலை உண்டுபண்ணி, அரசியல் பலத்தை விருத்திசெய்து, ‘தேச சேவை’ செய்யும்படி யாவரையும் தூண்டி ஸமஸ்தான ஸ்தாபனங்களைக் காப்பாற்றுவதில் ஷின்டோ மதம் மிகவும் முக்கியமானது.”

**புதிய ஷின்டோ கோள்கை.** 1868-ம் வருஷத்திற்குப் பிறகு ஜப்பானில் இக்கொள்கை புதிதாக ஸ்தாபிக்கப்பட்டது. 17-வது, 18-வது நூற்றாண்டுகளில், கல்வி, வேதாந்தம் முதலிய இயக்கங்களுக்காக முதலில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் வரவர அரசியல் தோற்றத்தையடைந்தது. ஜப்பானிய அரசன் தெய்வ சிருஷ்டி என்பது முதலாவதான கொள்கை. இவர்கள் சொல்லுவதுபோல ஜிம்மு என்பவன் முதலில் அரசியல்



சந்ததியை ஸ்தாபித்தவன் அல்ல. இப்படி ஒருவன் இருந்தானென்றும் அவனுடைய சந்ததியார் இப்பொழுது இருப்பதாக ஜப்பானியர்களாகக் கட்டிவிட்ட பொய்க்கதை. கிருஸ்து பிறப்பதற்குமுன் 11-2-660 (B. C.) இவன் பட்டத்திற்கு வந்ததாகச் சொல்லுவதும் பொய். ஆனால் ஏதோ ஜப்பானிய ஜாதி மிகப்பழமையானது என்றும், ராஜ சந்ததியும் அப்பேர்ப்பட்டதென்று யாவரும் நம்பவேண்டுமென்று ஜப்பானியத் தலைவர்களாகச் செய்த ஏற்பாடுதான்.

**ஜப்பானிய க்ஷத்திரியர்கள்.** ஆகவே புதிய ஷின்டோ கொள்கை என்பது ஜப்பானிய ஜாதியை உயர்த்திக் கொள்ளச் செய்த ஏற்பாடுதான். ஆனால் ஜப்பானிய க்ஷத்திரிய ஜாதியார்தான் அதிகம் பலம் பெற்றனர். செய்துவரும் ஆக்கிரமணங்களுக்கு ஒரு வகையில் சமாதானமும் சொல்லிவந்தனர். இருந்தாலும் இன்னது செய்வது என்று தெரியாமல் க்ஷத்திரிய உணர்ச்சி கொண்டவர்கள், பொருளாதாரம், தொழில்விருத்தி முதலியவைகளில் கவனத்தைச் செலுத்திவந்தனர். இந்த வழிகளில் முன்னேற்றமடைந்ததும் தேசாக்கிரமண ஆசை மறுபடி கிளம்பிற்று.

**புதுத்தலைவர்கள்.** ஜப்பானியரின் நவீன சித்தாந்தங்களைப் போதித்தவர் 80 வயதுள்ள மிட்ஸுரிடோயோம. இவன் பெரும் கொள்ளைக்கூட்டக்காரன். ‘Black Dragon’ ‘Black Ocean’ என்ற சங்கங்களின் ஸர்வாதிகாரம்பெற்ற தலைவன். அகில ஆசியாவை ஒற்றுமைப்படுத்துவதை முக்கிய லக்ஷியமாகக் கொண்டவன். இவனுடைய சிஷ்யர்கள் பாஸிஸ்டு கக்ஷியைப் பூரா தழுவுகிறவர்கள். அதில் ஒருவன் பாரன்ஹிரோனுமா என்பவன். பெரிய பணக்காரன். 1916-ம் வருஷத்திலேயே இவன் பிலிப்பைன்ஸுக்கு ஸ்வதந்திரம் தர விரும்புவதாயும் கொரியா, சைனா, பார்மோஸா முதலியவைகளை ஆக்கிரமிக்கப் போவதாயும் தெரியப்படுத்தினான்.

இக்கூட்டத்தைச் சேர்ந்த மற்றொருவன் ரியோஹியை உசிதா. இவன் 1879-ம் வருஷத்தில் பிளாக்டிராகன் சங்கத்தை ஸ்தாபித்தான். 1931 ஸெப்டம்பர் 18-ல் நடந்த முகடன் சம்பவத்திற்கு இவன்தான் பிரதம காரணம். மஞ்சுகோவைத்தனியே ஸ்தாபித்ததும் இவன்தான்.

**நாஸி வழிகள்.** ஜப்பானிலுள்ள எல்லா சங்கங்களுக்கும் எதிரியை எதிர்த்து அடிப்பது என்ற அசட்டு தைரியம் பழக்கமாகயிருந்தது. இச்சங்கங்களின் அங்கத்தினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி சச்சரவுகளை உண்டுபண்ண ஏற்பாடு செய்யப்படும். சண்டை ஆரம்பிப்பதற்குமுன் பிரசாரம், ரகசியச் சூழ்ச்சி முதலியவைகளும் செய்யப்படும். ஹிரோனுமாவிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்கி அரசாங்கத்தைப் பலாத்காரமாக ஸ்தாபித்துக்கொண்ட இவ்வித கூட்டத்தினர் சீக்கிரத்தில் தூரக்கிழக்கில் யுத்தத்தைப் பரவச்செய்தனர். தனது பிரதிநிதிகள் சமாதானத்தைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும்போது பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியதில் இருந்தே இவர்களின் நியாயத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

ஜப்பானில் உள்ள பள்ளிக்கூடங்களிலும், உயர்தர கலாசாலைகளிலும், ராணுவ போதனைகளிலும், ஜப்பானியருக்கு உலகாக்கிரமணம் செய்வது இயற்கையான குணமென்று கற்றுக்கொடுக்கப்படுகிறது. பொதுஜனங்களுக்கு அரசாங்கத்தில் செல்வாக்குக் கிடையாது. ஜப்பானிய அரசியல் சபைபோன்ற ஸ்தாபனங்களில் தேர்தல் செய்யப்படுவதாக பேருக்கு மாத்திரம் சொல்லப்படும். ஜப்பானியத் தொழிற்சாலைகளில் மானிய முறையில் (Feudal) வேலை வாங்கப்படுகிறது.

**ஜாதி கர்வம்.** தங்களை உயர்வாக நினைத்துக்கொண்டு ஜப்பானியர் பிரகிருத முறைகளை அமுல்படுத்திக்கொண்டு வருகின்றனர். சமூகத்தில் கடவுள் பிள்ளைகள் என்ற ஜப்பானியர்கள் முதலானவர்களாம். அடுத்தது மஞ்சள், வெள்ளை ஜாதியார்கள். இவர்கள் காட்டுமிராண்டிகளாம். கடைசியாக கொரும்பர்கள்; அதாவது இந்தியர்கள், சிலோன் வாசிகள், நீக்ரோக்கள் முதலிய கருப்பு ஜாதியார்.

ஆசியாவின் பெரிய கௌரவம் என்னவென்றால் உலகத்திலுள்ள மதங்களான கிருஸ்து மதம், ஹிந்து மதம், புத்த மதம், முகமதிய மதம் எல்லாம் இங்கே உண்டானதுதான். ஆனால் ஷின்டோ மதமும் உண்டானதாக வெட்கத்துடன் சொல்லவேண்டியிருக்கிறது. தேசத்திற்கு முக்கியங்களான தெய்வத்தன்மை நியாய மார்க்கம் முதலியன ஷின்டோ மதத்தில் கிடையாது.

1924-ல் அமெரிக்காவினுள் வரக்கூடியவர்களைப்பற்றி சட்டம் போட்ட போது ஜப்பானியர்கள் கீழ்பட்ட ஜாதியாரெனத் தள்ளப்பட்டனர். அதைக் கண்டு ஜப்பானிய ராணுவத் தலைவர்கள் கோபம்கொண்டு ஜனங்களுக்கும் கோபத்தை உண்டாக்கி இந்த ஆக்கிரமண யுத்தத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதாவது:—“ஜப்பானியர்கள் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றனர். ஷின்ஜா (துரோகம் கொள்ளுவது) புருஷா (பழிவாங்குவது) முதலிய நியாய (!) மார்க்கங்களைக் கொண்டவர்கள். இக்குணங்கள் ஒவ்வொரு ஜப்பானியனுக்கும் உண்டு. எந்த எந்த விதமாகவெல்லாம் தோற்றம் கொண்டிருந்தாலும் இக்குணங்கள் ஜப்பானியரை விட்டுப்போகா.”

அமெரிக்காவிற்குள்ள பொறுப்பு. ஜப்பான் ஆதிக்கம் பெற்றால் மனிதனுக்கும், ஸ்வதந்திரத்திற்கும், மதத்திற்கும் தீங்கு உண்டாகும். ஆகவே அமெரிக்கா முதலிய நேசநாடுகள் ஒன்று சேர்ந்து ஐரோப்பாவில் நாஜித்தீங்கை ஒழிப்பதற்கு ஈடுபட்டிருக்கின்றனர். ஜப்பானிலும் 75 வருஷகாலமாக பயித்தியம் கொண்ட ஜப்பானியர்களால் விருத்திசெய்யப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தையும் வேரோடு களைந்து எறியத் தீர்மானித்திருக்கின்றனர்.

## வார யுத்தச் செய்திகள்.

### 7—2—42-லிருந்து 13—2—42-வரை.

தூரக்கிழக்கு.—ஆரம்ப காலங்களில் செய்த மின்னல் படையெடுப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு ஜப்பானியர்கள் முக்கியமாயுள்ள இடங்களில் வெற்றி பெற முடிந்தவரை முயற்சியெடுத்துக்கொண்டுவருகின்றனர். சென்ற யுத்தத்தில் ஐப்ரஸ்ஸிலும், இந்த யுத்தத்தில் டன்கர்க்கிலும் நேசதேசங்களுக்கு இருந்த நிலைமையைப் போலவே தற்சமயமும் இருந்துவருகிறது முன்பு ஐப்ட்ரஸ், டன்கர்க், ஐரோப்பாவை காப்பாற்றியதைப்போல சிங்கப்பூரும், ஸால்வீன் நதியும், நேசநாடுகளைக் காப்பாற்றும். அதாவது எதிரிகளை முடிந்தவரை தடைசெய்யும்.

மலேயா.—ஜோஹூருக்கு அருகிலுள்ள பாலான் உபினித்தீவை ஜப்பானியர் ஆக்கிரமித்துக்கொண்டபிறகு சிங்கப்பூரிலும் இறங்கியிருக்கின்றனர். முக்கியமாக ஸுங்கி மான்டைக்கும், ஸுங்கி கிராஞ்ஜிக்கும் இடையில் இறங்கி சிங்கப்பூர் பட்டணத்தை நோக்கிப்போகின்றனர். இடைவிடாமல் விமானங்கள் மூலமாக குண்டுகள் போட்டு பீரங்கிகளாலும் சுடுகின்றனர். நேசப்படைகள் தைரியமாக எதிர்த்துநிற்கின்றன. டெங்காவையும், கிரஞ்ஜியையும் எதிரி பிடித்ததாகச் சொல்லுவது உண்மையானால் சிங்கப்பூர் பட்டணத்திற்கு ஜலக் கஷ்டம் நேர்ந்திருக்கும். நிலைமை மிக அபாயமாகக் காணப்படுகிறது.

பர்மா.—மார்டாபனை எதிரி பிடித்தனர். பான் பட்டணத்தையும் எதிரி கடுமையாகத் தாக்கிவருகிறான். ஸால்வீன் நதியைத் தாண்டிவிட்டதாக எதிரி சொல்லுவது இன்னும் ஊர்ஜிதமாகவில்லை.

தினம் ரெங்கூனில் குண்டுவீச்சு நடந்துவருவதில் வெள்ளிக்கிழமை மிகக் கடுமையாக இருந்தது. முக்கியமாக விமான தளம்தான் தாக்கப்பட்டது. இருந்தாலும் ஜாஸ்தியான சேதம் ஏற்படவில்லை. 6வ நடந்த விமானப் படையெடுப்பில் எதிரி விமானங்களில் 30-ல் 10 வீழ்த்தப்பட்டது. இதுவரை ரெங்கூனிலே மாத்திரம் 100 எதிரி விமானங்கள் வீழ்த்தப்பட்டதாக A. V. G.



3வ விசேஷமாகக் கொண்டாடிற்று. இரண்டாம் தடவையாக பர்மாவிற்கு வந்து வேவல் நிலைமை திருப்திகரமாக இருப்பதாக அறிவித்தார்.

டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகள்.—ஜாவா தீவில் தான் ஜப்பானிய ஆர்ப்பாட்டம் அதிகமாக இருக்கிறது. (ஸெலிபஸ்) மாக்காஸ்ஸரையும், (தென் போர்னியோ) பென்ஜெர்மாஸ்ஸின் பட்டணங்களை வளைத்துக்கொண்டு (வடமேற்கு போர்னியோ) பான்டியானக்கிலும் அதிக முஸ்திப்பு செய்வதைப் பார்த்தால் படேவியாவையும், ஸௌரபாயாவையும் எதிரிகள் ஒரே சமயத்தில் தாக்கலாமென்று தோன்றுகிறது. ஸௌரபாயா' வென்பது ஜாவாவின் பிரதான நகரம். ஸமரின்டாவை எதிரி வியாபித்துக்கொண்டு ஸமராங், மடிஓயின், மெகலாங், ஸோலோ, டெகால், மலாங் முதலிய ஜாவாவிலுள்ள பட்டணங்களை விமான மூலம் தாக்கியிருக்கிறான். பாலியும் தாக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ்.—இடைவிடாமல் கடுமையான தாக்குதல்கள் ஏற்பட்டு தற்சமயம் கொஞ்சம் ஓய்ந்திருக்கிறது. டாம், மில்ஸ், ஹூகஸ், பிராங்க் மணிலாவிற்கு அருகிலுள்ள பட்டணங்களும் கடுமையாகத் தாக்கப்பட்டன. லிங்கயம் பிரதேசத்தில் புதிய எதிரிப்படைகள் வந்திருக்கின்றன.

சைனா.—கான்டனில் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகள் செய்து வைஷௌ, போக்லோ பட்டணங்களைத் திரும்பப்பிடித்திருக்கின்றனர்.

மத்திய பஸிபிக் தீவுகள்.—(நியூ பிரிடன்) காஸ்மாடாபில் எதிரி நுழைந்திருக்கிறான்.

நியூஸீலாந்திலுள்ள வெல்லிங்டன் துறைமுகத்திற்கு அமெரிக்கப் புதுக் கப்பற்படைகள் வந்திறங்கியிருப்பதாகப் பிரஸ்தாபம்.

ருஷ்யா.—இங்கிருந்து விசேஷச் செய்திகள் இல்லை. ஏதோ சில கிராமங்களைப் பிடித்ததாக ருஷ்யர்கள் சொல்லுகின்றனர். முடிவைச் சொல்லாமல், ஜெர்மானியர்கள் ஏதோ குறுக்கு எதிர்ப்புகள் செய்தார்களாம். சில விஷயங்கள்தான் நிச்சயமாகக் கிடைக்கின்றன. முதலாவதாக பத்திரமான சில இடங்களுக்கு ஜெர்மானியர் வந்துகொண்டிருக்கின்றனர். இன்னும் இங்குமங்கும் ஓடிக்கொண்டுதானிருக்கிறார்கள். இரண்டாவதாக ஒருக்கால் ஓரிடத்தில் நின்றுகொண்டு ருஷ்யர்களை வந்தது வரட்டுமென்று தாக்கலாம். மூன்றாவதாக ஜெர்மானியர் எதிர்ப்புக் கொஞ்சம் வலுத்தே வருகிறது. கடும் யுத்தம் நேர இன்னும் கொஞ்சம் நாட்கள் பிடிக்கும். கார்கவ், கலினின் பட்டணங்களை நோக்கி ருஷ்யர்கள் முன்னேறித் தாக்குகின்றனர் லெனின்கிராட்டில் திடீரென்று தோன்றினார்கள். ரீஜெவ் பட்டணத்தை சூழ்ந்துகொண்டனர்.

லிபியா.—லிபியாவிலிருந்து மிகக் குறைவான செய்திதானிருக்கிறது. இப்பொழுது சைனியங்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன. மறு எதிர்ப்புகளுக்கு இருபக்கத்தினரும் முஸ்தீப்பு செய்துகொள்ளுகின்றனர். பொம்பா ஓ குடாவில் எதிரி தடுக்கப்பட்டான். கஸாலா நமது வசம் இருக்கிறது. பெங்காஸி, பெர்கா, (கிரீஸ்) ஸலாமீஸ் விமானமூலம் தாக்கப்பட்டன.

அடுத்த சண்டைக்கு ஸப்ளை அடைவதுதான் பெரிய பிரச்னையாக இருக்கிறது. எதிரிகளைவிட சாம்ராஜ்யப் படைகள் ஸப்ளை வரக்கூடிய மார்க்கத்திற்கு அருகில் இருக்கின்றன. ஸப்ளைகளுக்கு பிரிடிஷ் விமானப்படையும், கப்பல் படையும் சிரமமில்லாமல் உதவிபுரிந்து வருகின்றன. எதிரிக்கு அதிக சிரமம். ஆறுமாத காலமாகக் கிடைத்த கணக்குகளைப் பார்த்தால் மூன்றில் ஒரு பங்கு இழக்கிறான். இந்த நஷ்டத்தை இதாலியர்கள் ஈடுசெய்ய முடியவில்லை.

பிரான்ஸும் ஸ்பெயினும் ரகசியமாக எதிரிக்கு சாமான்களையனுப்ப உதவுவதாகத் தெரிகிறது. டூனிஸ், மொராகோ வழியாக பிரெஞ்சுக் கப்பல்களில் லாரிகள், மோட்டார்கள், எண்ணெய், விமான எண்ணெய், கோதுமை, தானியம், முதலியன வருகின்றன. பிரிடிஷ், அமெரிக்க அரசாங்கங்கள் இதை சீக்கிரத்தில் ஒருவிதமாக பைஸல் செய்வார்கள்.

**சீன தளகர்த்தரின் விஜயம்.**—மார்ஷெல் சயாங்கை ஷெக் 9௨ நியூ டெல்ஹிக்கு வந்திருக்கிருர். இந்திய அரசாங்கத்தாருடனும், சைனியத் தலைவர்களுடனும் தூரக்கிழக்குத் தற்காப்பைப் பற்றிய பிரச்னைகளைச் சர்ச்சைச் செய்வார். மேன்மை தங்கிய வைஸிராய் நேரில் இவரை வரவேற்ருர். அரசியல் விருந்தும், ராஜ மரியாதையும் செய்யப்பட்டது. மிஸ்டர் சர்ச்சில் அமெரிக்காவிற்குச் சென்றதையும், ருஷ்யாவிற்கு ஈடன் சென்றதையும் இதற்கு ஒப்பிடலாம். இதனுல் விசேஷ முடிவுகளும் ஏற்படலாம். இந்தியாவிலிருந்து சீனுவிற்கு தரை மார்க்கமாக சைனிய உதவிகள் அனுப்ப முடியுமாதலால் இந்தியாவின் கிழக்குத் தற்காப்பு ஸ்தலமென்றே சைனுவைச் சொல்லலாம்.

**பஸிபிக் யுத்தக் கவுன்ஸில்** லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதில் தூரக்கிழக்கிலுள்ள அவசர நெருக்கடியை உத்தேசித்து செவ்வாய்க்கிழமை ஒரு கூட்டம் நடைபெற்றது. நேசநாடுகளின் கூட்டமான அமெரிக்கா, பிரிடன், டச்சு நாடுகள், ஆஸ்திரேலியா முதலியவைகளின் நிலைமையைப்பற்றி சர்ச்சை செய்யும். பிரிடன் அமெரிக்கா கலந்து செய்துகொண்ட ஏற்பாடுகளுக்கு இடைஞ்சலன்னியில் மற்ற நேசநாடுகளான டச்சு நாடுகள், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இந்தியா முதலியவைகளையும் கலந்து ஆலோசிக்கப்படும். தற்சமயம் ஸர். ஏர்ல் பேஜ் ஆஸ்திரேலியாவுக்காக வருவார். இந்தியாவுக்காகவும் ஒரு பிரதிநிதி வருவார்.

**சைனியத் தலைமைக்காரர்களின்** கூட்டம் ஒன்று அமெரிக்கா, பிரிடன் இவைகளுக்காக யுத்த முயற்சியை முன்னிட்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் சாமான்களின் உற்பத்தியைப் பற்றியும், இதர நாடுகளுக்கு அனுப்புவதைப் பற்றியும் தீர்மானிக்கப்படும். இதற்கு டச்சுக்கிழக்கிந்திய நாடுகளும், ஆஸ்திரேலியாவும், நியூஸிலாந்தும் பிரதிநிதிகளை அனுப்பும்.

**உற்பத்தி மந்திரி சபை** ஏற்படுத்தப்பட்டு ஸப்ளை, விமான இலாகா, கப்பல் ஸப்ளைகள் முதலியவைகளைப் பற்றியும் கலந்துகொள்ளும். இப்புதிய பதவிக்கு லார்டு பீவர் புருக் நியமிக்கப்பட்டிருக்கிருர். யுத்த மந்திரி சபையிலும் இவருக்கு ஏற்கனவேயுள்ள ஸ்தானமும் உண்டு. இவரை விட வேறு தகுந்த பேர்வழிகள் இல்லை. மிஸ்டர் சர்ச்சில் சொல்லும் விதமாக ஜனதிபதி ருஸ்வெல்டிற்கு நம்பிக்கை வைக்கக்கூடியவராயும், அமெரிக்காவில் சாமான் உற்பத்திசெய்வதில் ஈடுபட்ட தலைவர்களுடன் அதிக நெருக்கமான சம்பந்தமுள்ளவராயும் இருக்கிருர். அமெரிக்காவிற்கும் ருஷ்யாவிற்கும் பல முறைகளில் சென்றிருக்கிருர். சாமான் உற்பத்தி, ஸப்ளை முதலியவைகளின் பிரச்னைகளைத் திட்டப்படுத்துவதற்கு வேண்டிய சாமர்த்தியமும் வாய்ந்தவர்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **2—2—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—துணைபுரியப்பட்ட ஒரு என்வொய்க் கப்பல்—பிரிடானியா (Britanny)க் கடற்கரைக்கருகாமையில். | | 2 விமானங்கள். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—பெர்க்கா (Berka). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **2—2—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **இடாலி (Italy)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல் துறைகள், அணிவகுத்துமிடங்கள்.—நேபிள்ஸ் (Naples). | | | |
| | துறைமுக மேடைகள்.—பலர்மோ (Palermo). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு பெரிய வியாபாரக் கப்பல்.—மத்தியதரைக்கடலி(Mediterranean)ன் மத்திய பாகத்தில். | | | |
| | **கிழக்குப் போர்முனை (Eastern Front)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் அரங்கம் முழுவதிலும். | | 6 விமானங்கள். | 21 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸப்ளைகள், மோட்டார் வண்டிகள்.—ஜோஹுர் (Johore) பாஹ்ரு (Bahru) பிரதேசம். | | | |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பற்படையால் துணைபுரியப்பட்ட அநேக படகுகள்.—பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகளுக்கு அருகாமையில். | | அநேகம் மூழ்கடிக்கப்பட்டன. | |
| **3—2—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும் ஏற்பட்ட விமான நடமாட்டங்களுக்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோட்டார் படைப்பதிகள்.—டெர்னு (Derna), கார்மூஸா (Carmusa) பிரதேசங்களில். | அநேக வண்டிகள் சேதமாயின. | | |
| | போக்குவரத்துகள்.—பெங்காஸி (Benghazi), பார்ஸ் (Barce), பெம்னு (Bemna) பிரதேசங்களில். | | | |
| | **கிழக்குப்போர்முனை (Eastern Front)**—(ருஷ்ய விமானங்களால்) | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 45 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—மலேயா (Malaya)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்): | | | |
| | விரோதி உதவிப்படைகள், மோட்டார் லாரிகள் ஜோஹுர் (Johore) பாஹ்ரு (Bahru) பிரதேசம். | | | |
| | **பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு இடம்.—மார்டாபானு(Martaban)க்குத் தெற்கில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 3—2—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | நியூகினியா (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராபால் (Rabaul). | | | |
| 4—2—42. (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | போக்குவரத்து மோட்டார்கள் தங்கு மிடம்.—ட்ரிபோலிக் (Tripoli) கருகாமையில். | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | போக்குவரத்து.—ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | நஷ்டமில்லை. | |
| | ஸிஸிலி (Sicily)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | சாமான் ஏற்றிச்செல்லும் ரயில் வண்டிப் பாலம்.—காரினி (Carini)க் கருகாமையில். | | | |
| | கிழக்குப் போர்முனை (Eastern Front)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | | 38 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | விரோதித் துருப்புக்கள், மற்ற லக்ஷியங்கள்.—ஜோஹூர் (Johore), பாஹ்ரு (Bahru) பிரதேசங்களில். | | | |
| 5—2—42. (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest). | | 1 விமானம். | |
| | விமான எதிர்ப்பு.—வடகடலில். | | 1 விமானம். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி மோட்டார் படைப்பகுதிகள், துணைப்படைகள்.—டெர்னா (Derna). கார்மூஸா (Carmusa), பிரதேசங்களில் க்ளோவன்னி—பெர்டா—டெர்னா (Glovanni-Berta-Derna) ரஸ்தாவில். | அநேகவண்டிகள்; எண்ணெய் ஏற்றிச் செல்லும் வண்டிகள் சேதமாயின. | | |
| | துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான நிலயங்கள்.—பெர்க்கா (Berka). | | | |
| | துறைமுகம், மோட்டார் போக்குவரத்துள்ள தோட்டம்.—ட்ரிபோலி (Tripoli). | பெருந்தீக்கள் கிளம்பின. | நஷ்டமில்லை. | |
| | கிழக்குப் போர்முனை (Eastern Front)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 6 விமானங்கள். | 46 விமானங்கள். |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை வெடிப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 5—2—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—ஜோஹூர் பாஹ்ரு (Johore-Bahru) பிரதேசங்களில். | | | |
| | பஸிபிக் (Pacific)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக் கப்பல்கள்.—மக்காஸர் (Macassar) ஜலசந்தி. | | | |
| 6—2—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலிலும் இரவிலும் ஏற்பட்ட விமான நடமாட்டங்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோட்டார்கள்.—லாம்லுடா (Lamluda) ஜில்லா. | அநேகம் தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| | விரோதி மோட்டார் படைப்பகுதிகள்.—ஜடபாயா (Jadabaya) பிரதேசத்தில். | | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | கிழக்குப் போர்முனை (Eastern Front)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்த அரங்கம் முழுவதிலும். | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிப் படைப்பகுதிகள், ஸப்ளைகள்.—ஜோஹூர்—பாஹ்ரு (Johore—Bahru) பிரதேசத்தில். | | | |
| | போர்னியோ (Borneo N. E. I.)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | போக்குவரத்துக் கப்பல்.—போர்னியோ (Borneo)வுக்கருகாமையில். | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—ஸால்வீன் (Salween) போர்முனை. | | | |
| 7—2—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விமான எதிர்ப்பு.—வடகடலில். | | 3 விமானங்கள். | அநேக விமானங்கள் சேதமாயின. |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள், விரோதி தரைப் படை, முன் அணியிலுள்ள படைப் பகுதிகள்.—யுத்தப் பிரதேசம். | அநேக மோட்டார்கள் சேதமாயின. | | |
| | தெருக்களில் நகர்ந்து செல்லும் படைகள்.—ஸ்லோண்டா (Slonta), மார்டுபா (Martuba), எல் டிமிமி (El-Tmimi) பிரதேசம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 7—2—42. (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான நிலயம்.—பெர்க்கா (Berka). | தீக்கள் கிளம்பின. | | |
| | கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli) துறைமுகம். | | | |
| | கிரீஸ் (Greece)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | யுத்தக் கப்பல்கள் நிற்கும் துறைகள்.—ஸலாமீஸ் (Salamis). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரண்டு விரோதி வியாபாரக் கப்பல்கள்.—மத்தியதரைக்கடலு (Mediterranean)க்கு மத்தியில். | | 6 விமானங்கள். | |
| | கிழக்குப் போர்முனை (Eastern Front)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 12 விமானங்கள். | 17 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு (Far East)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி பீரங்கி ஸ்தானங்கள், மற்ற லக்ஷியங்கள்.-ஜோஹூர் (Johore) பிரதேசத்தில் | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்.—மணிலா (Manila)குடாக் கடலுக் கருகாமையில். | | | |
| 8—2—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). விமான நடமாட்டங்களுக்குத் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | 3 விமானங்கள். |
| | விமான நிலயம்.—டெர்னு (Derna). | | | 2 விமானங்கள். |
| | யுத்த பிரதேசத்தில். | | | 1 விமானம். |
| | கிரீஸ் (Greece)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ரஸாயன சாலைகள்.—பிரேஸ் (Piraeus). | | | |
| | எண்ணெய் சேமிக்கும் கிடங்குகள்.—ட்ரேபட் ஸொனு (Drapet Sona). | | | |
| | கிழக்குப்போர்முனை (Eastern Front)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 3 விமானங்கள். | 5 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு மலேயா (Malaya)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிப் படைப் பகுதிகள், உதவிப் படைகள்.—ஜோஹூர் (Johore) பாஹ்ரு (Bahru) பிரதேசம். | | | |
| | பர்மா (Burma)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகள்.—மார்டுபா (Martuba) போர்முனையில். | | | |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 3—2—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow)விற்கு அருகாமையில். | | 9 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு-டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.)-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டச்சுக் கடற்படை தளம்.—ஸௌரபாயா (Sourabaya). | | | |
| | விமான நிலயங்கள்.—ஸௌரபாயா (Sourabaya), மலாங் (Malang) மாடிஓயன் (Madioen). | | | |
| | மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| 4—2—42. (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ருஷ்யாவி (Russia)ற்கு அருகாமையில். | | 5 விமானங்கள். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | சொற்பச் சேதம். | |
| | பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரங்கூன் (Rangoon). | | | |
| | டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கப்பற்படை தளம்.—ஸௌரபாயா (Sourabaya) உள் நாட்டிலுள்ள அநேக கிராமங்கள். | | | |
| 5—2—42. (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). தகவல் ஒன்றும கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா—(Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow)விற்கருகாமையில். | | 9 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.)-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கப்பற்படை தளம்.—ஸௌரபாயா (Sourabaya). | | | |
| | மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | 2 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **6—2—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கரையில். | சொற்பச் சேதம். | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 7 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரங்கூன் (Rangoon). | | 10 விமானங்கள். | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | துருப்பு ஸ்தானங்கள்.—பாடான் (Batan). | | | |
| **7—2—42.** (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| **8—2—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா—(Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள்—(N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கப்பற்படை தளம்.—ஸௌரபாயா (Sourabaya) முன்டோக் (Muntok), பாங்கா (Banka)வில். | | | |
| **9—2—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | தூரக்கிழக்கு—மலேயா (Malaya)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ரங்கூன் (Rangoon) | | | |



# யுத்தக் குறிப்புகள்.

**ஓர் ஞாபகதினம்.** சென்ற ஞாயிற்றுக்கிழமை நமது ஸமஸ்தானத்திற்கு மாட்சிமை தங்கிய மதராஸ் கவர்னர் அவர்கள் விஜயம் செய்தார். அந்நாளை முக்கியமாக புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு நன்னாள் என்றே சொல்லவேண்டும். அன்று பிற்பகலில் ஸ்வல்ப அவகாசத்திற்குள் பலவிஷயங்களைக் கவனிக்க வேண்டியிருந்தும், இந்நிலயத்திற்கும் விஜயம் செய்தார். நிலயம் செய்துவரும் வேலைகளையும் பார்வையிட்டு அதிகம் பாராட்டினார். இதை இந்நிலயத்திற்கு ஒரு தனி கௌரவம் என்றே சொல்லவேண்டும். அன்று சாயங்காலம் டவுன் ஹாலில் பொதுமக்களுக்கு ஒரு பிரசங்கமும் செய்தார். புதுக்கோட்டை வாசிகள் இதுவரை அப்பேர்ப்பட்ட உணர்ச்சி கொடுக்கக்கூடிய சொற்பொழிவைக் கேட்டிருக்க முடியாதென்றே சொல்லலாம். இவ்விதமாக இந்நிலயம் செய்து வரும் யுத்த முயற்சியில் மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களும் கலந்துகொண்டு, யுத்த சம்பந்தமாக அவர் செய்த சொற்பொழிவுகளுக்கு நாம் நம்முடைய மனமார்ந்த வந்தனத்தை சமர்ப்பித்துக்கொள்ளுகிறோம்.

அன்று டவுன் ஹாலில் நடந்த சொற்பொழிவுகள் யாவும் இப்பத்திரிகையில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

வி வி வி வி வி வி வி

**உபசார வார்த்தை.** இதுவரை இந்நிலயத்திற்குத் தலைமை வகித்து இவ்வறிக்கைக்குப் பத்திராதிபராய் இருந்தவர் காப்டன் G. T. B. ஹார்வி; அவர் சென்னை பிரசார இலாகா டைரக்டராக மேல் பதவிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அதற்காக நாம் அவரை மிகவும் பாராட்டுகிறோம். இவ்விதமாக இவர் சென்னைக்குச் சென்றிருப்பதைப்பற்றி சென்னை ராஜதானிக்கே ஒரு பெரும் லாபம் என்று மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் அபிப்பிராயப்பட்டார். ஆனால் அவர் ஸ்தானத்தை சரியாக வகிப்பதற்கு இங்கு தகுந்தவர்கள் இல்லையென்றே சொல்லலாம். இவர் தலைமை வகிக்கும் சக்தியும், கல்பனா சக்தியும் வாய்ந்தவர். இதற்கு இந்நிலயமே ஒரு திருஷ்டாந்தம். இந்த இரண்டு வருஷ காலமாகவே அதை சரியான முறையில் நடத்தி, அதன் மெம்பர்களுக்கு யோசனை கூறியும், அவர்களுடன் ஒத்துழைத்தும் வந்திருக்கிறார். இதுவரை நடந்துவந்த முறையில் இனிமேலும் உண்மையாகவும், திறமையாகவும், உத்ஸாகத்துடனும் நடத்துவது தான் நாம் அவருக்குச் செய்யக்கூடிய வெகுமானமாகும்.

வி வி வி வி வி வி வி

**யுத்தக் குறிப்புகள்.** இந்த இரண்டு வருஷ காலமாக இப்பத்திரிகையில் யுத்தக் குறிப்புகள் என்ற தலையங்கத்துடன் அவர் வியாஸங்கள் எழுதிவந்தார். எல்லா சம்பவங்களையும் தீர கவனித்து, தீர்க்க திருஷ்டியுடன், விருவிருப்பான நடையில் எழுதப்பட்டிருந்ததால் இவ்வறிக்கையில் இதையே விசேஷப்பகுதி என்று சொல்லவேண்டும். மேலும் தொடர்ந்த விதமாக யுத்தத்தைப்பற்றி ஒருவித அபிப்பிராயத்தையும் இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடிந்தது.

வி வி வி வி வி வி வி

**சீன நண்பர்கள்.** தற்சமயம் மார்ஷல் ஷியாங் கை ஷெக் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். சீனர்களைக் கேவலம் நமது அயலார்களாக மட்டும் நினைக்கக்கூடாது. ஆசியாவிலுள்ள பக்குவமடைந்த ஞானத்தில் ஒருபங்குள்ளவர்கள் என்றே அவர்களைக் கருதவேண்டும். முன்பு சீன சன்யாசிகள் மலைபடர்ந்த பிரதேசங்களைத் தாண்டி இந்திய தத்துவங்களைத் தெரிந்துகொள்ள ஆவலாக வந்தது நமக்குத்தெரியும். ஆசியா கண்டத்திற்கு, சீனாவும் இந்தியாவுமே சரியான பிரதிநிதிகளென்று சொல்லவேண்டும். ஜப்பானுக்கு இவ்வித கௌரவம் கிடைக்காது. ஏனென்றால் அது, ஐரோப்பாவிலுள்ள அச்சுநாடுகளுக்கு இயற்கையான கொடுங்கோல்,

கொள்ளை முதலிய தன்மைகளைப் பின்பற்றியிருக்கிறது. தாங்கள் இந்தியர்களுக்கு சமமான குணமுள்ளவர்களென்று ஜப்பானியர்கள் இந்தியர்களுடன் உறவாடுவது முதலிய வீண் பிரசாரம் செய்துவருகின்றனர். ஜப்பானியர்களை இந்தியர்களுக்கு நண்பர்கள் என்று நினைத்தால் அது பரம முட்டாள்தனம்தான்.

சைனா பண்டை காலத்து பெருமையை மாத்திரம் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. நவீன காலத்தில் சைனாவிலிருந்து இந்தியாகூட கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன. பகைவர்களை எதிர்ப்பது, பொறுமை, ஸ்வதந்திரத்தில் விருப்பம் இவைகளுக்கு சைனா ஒரு அரிய உதாரணம். நாலரை வருஷங்களாக கொடுமையான விரோதிக்கு எதிரே சைனா தனிமையில் நின்று போரிட்டு வந்திருக்கிறது. அதன் தலைநகரத்தில் எதிரிகள் கொடுமையாக வெடிகுண்டுகள் போட்டுத் தாக்கினாலும் அவர்கள் கலக்கமடையவில்லை. 1940-ம் வருஷம் கோடைகாலத்திலும், சரத் காலத்திலும் பிரிடன் எப்படி எதிரியைப் பொருட்படுத்தாமல் இருந்ததோ அப்படியே சைனாவும் இருந்துவந்திருக்கிறது. மேலும் எப்படி தற்காப்பு செய்துகொள்ளுவது என்பதிலும், வெடிகுண்டுகளிலிருந்து எப்படி தப்புவது என்பதிலும் இப்பொழுது சீனர்கள் நிபுணர்களாகி விட்டார்கள். சுங்கிங்கில் உள்ள ஒவ்வொருவரும் அந்த தலைநகரைச் சுற்றிலுமுள்ள குன்றுகளில் தனக்குத்தானே ஒரு குகை செய்துகொண்டிருக்கிறார்கள். விமானத் தாக்குதல்கள் ஏற்படும் காலத்தில் அமைதியாக அந்த குகைகளில் போய் பதுங்கி இருந்துவிட்டு தாக்குதல் முடிந்தபிறகு பத்திரமாக வெளியே வந்துவிடுகிறார்கள். சமுத்திரக்கரையோரத்திலுள்ள பிராந்தியங்களைத் தாக்கியவுடன் அங்குள்ள தொழிற்சாலைகளை உள்நாட்டிற்கு எடுத்துச்சென்றார்கள். மலை, காடு வழியாக பர்மா ரஸ்தாவையும் ஏற்படுத்தினார்கள். சீனர்கள் இப்பொழுதும் அதிகரிக்கும் வீரத்தனத்துடன் போரிடுகிறார்கள். அவர்களிடம் ஆயுதங்கள் அதிகம் இல்லை. ஆனால் நேசதேசத்தார்கள் ஸப்ளை செய்யும் ஆயுதங்களைக்கொண்டு கூடியசீக்கிரம் எதிரிகளை வெளியே துரத்திவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

வி வி வி வி வி வி வி

**பழய விளக்குகளுக்குப் புது விளக்குகள்.** அச்சு நாடுகள், யார் இருக்கவேண்டும் யார் இருக்கவேண்டாம் என்பதைக் குறித்தும் பொது க்ஷேமம் ராம ராஜ்யம் இவற்றைப்பற்றியும் பிரசாரம் செய்துவரும் இந்த சமயத்தில் மந்திரி சபையில் மிஸ்டர் அமெரி பழமையான மேன்மை என்னவென்பதை விளக்கிக் காட்டினார். பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கு க்ஷேமம் எது என்பதைச் சொன்னார். அதாவது குன்றாக இருந்த இடம் ஹாங்காங் நகரமாக மாற்றப்பட்டது. சதுப்பு நிலமாக இருந்த பிரதேசம் சிங்கப்பூர் பட்டணமாகவும் மலேயா சகதி நிலத்தில் கைத்தொழில், வியாபாரம் அபிவிருத்தியடையும்படிக்கும செய்யப்பட்டது. நாலா திசையிலுமுள்ளவர்கள் வந்து சேர்ந்து அவரவர்கள் பழய வழக்கங்களை எல்லாம் மாற்றிக்கொண்டு சமாதானத்துடனும், ஸ்வதந்திரமாக வசிப்பதும்தான் பொதுக்ஷேமம் என்று கூறினார்.

அச்சுநாடுகள் ஸ்தாபிப்பதாகச்சொல்லும் புதிய திட்டத்தைப்பற்றி மால்டோவ் வாராவாரம் சொல்லிவருகிறார். ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பா நாடுகள் பூராவும் அச்சுநாடுகளின் கொடுமை தாங்காது கதறுகின்றன. இப்பொழுதுதான் அபிஸீனியா மீட்கப்பட்டிருக்கிறது. கொரியா அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. இத்துடன் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள தேசங்கள் நேசதேசத்தார்களுடன் ஒத்துழைப்பதை ஒப்பிட்டுப்பார்த்தால் எது நன்மையளிக்கக்கூடியது என்பது தெரியும். ஆஸ்திரேலியர்கள், இந்தியர்கள், நியூஸீலாந்துக்காரர்கள் எல்லோரும் சமதளத்தில் நின்றுகொண்டு பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் எங்கெங்கே யுத்தம் நடக்கிறதோ ஆங்காங்கு தற்காப்பு செய்கிறார்கள். ஆசியாவில் ஆசியாக்காரர்கள் தான் இருக்கவேண்டும் என்று எதிரிகள் சொல்லுவதைப் பார்த்தால் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள ஒரு ஏற்பாடு செய்வதாகக் காணப்படலாம். ஆனால் அதன் தாத்பரியத்தை ஊன்றிப்பார்த்தால் பல நாடுகள் ஒன்று சேர்ந்து முயற்சியெடுக்கும் இச்சமயத்தில் இவ்வித வார்த்தை அர்த்தமில்லாதது என்றே சொல்லலாம். ஐரோப்பா ஐரோப்பியர்களுக்குத்தான்



என்று ஜெர்மனி சொல்லிவந்தது எப்படியாயிற்று என்று நமக்குத் தெரியும். கிரீஸில் பசிப்பிணி, போலந்தில் கொலை, பிரான்ஸில் பழிக்குப் பழி, ஹாலந்தில் தடிஅடி, ஸெகோஸ்லோவியாவில் பத்துக்கொருவனுக்கு சிக்ஷை, யூகோஸ்லாவியாவில் பாச்சல் விமானத் தாக்குதல், ருஷ்யாவில் அட்டூழியம், ஜெர்மன் ரகசியப் போலீஸாரும் நிர்ப்பந்த வேலையும் எங்கு பார்த்தாலும் பரவி இருக்கிறது. இதுபோல் 'ஆசியாக்காரர்களுக்கு ஆசியா' என்றால் கொரியா நாடு அடிமையாக்கப்படும்; மஞ்சூரியா கைப்பற்றப்படும்; சீனா விழுங்கப்படும்; மலேயாவில் மசூதிகள் வெடிகுண்டுகளால் நாசமாக்கப்படும்; ரெங்கூனில் பொதுமக்கள் வெடிகுண்டுகளால் சேதமாக்கப்படுவார்கள். இதுதான் ஜப்பானியரின் புதுதிட்டம்.

வி வி வி வி வி வி வி

**பொறுமை இன்மை.** ருஷ்யாவில் மாரிகாலத்தில் ஸர் ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் அதிககாலம் தங்கி இருந்ததில் அவருக்கு வழக்கமாயுள்ள பொறுமையும், மனோ உறுதியும் போய் விட்டதாக அவர் சமீபத்தில் செய்த சொற்பொழிவுகளிலிருந்து தெரிகிறது. சரத் காலத்தில் ருஷ்யாவை ஜெர்மானியர்கள் தாக்குவார்கள் என்று சொல்லுவது பிரிடிஷ்காரர்களை எச்சரிக்கை செய்தது போலாகும். அவ்விதம் அபாயத்தைக் குறித்து எச்சரிக்கை செய்வதினால் முன்கூட்டியே தற்காப்புக்குத் தயார்செய்து கொள்வதற்கு எளிதாகும். ஆனால் ருஷ்யா மும்மரமாக எதிரிகளுடன் யுத்தம் செய்துவருகிறபொழுது, பிரிடன் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறதாக அவர் சொல்லிவிட்டார். ஆனால் உண்மையில் பிரிடன் அல்லும் பகலுமாக சமுத்திரம், தரை, ஆகாயம், இவைகளிலிருந்துகொண்டு தன்னைத் தற்காப்பு செய்துகொள்ள அட்லாண்டிக்கிலும் மத்தியதரைக்கடலில் ஜெர்மனி, ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்கள் இவைகளின் பேரிலும், லிபியாவிலும், தூரக்கிழக்கிலும் எதிரிகளுடன் யுத்தம் புரிந்துவருகிறது. சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது எதிரிகளைத் துரத்தியடித்தும், மற்றும் சில இடங்களில் எதிரிகளைத் திகைக்கும்படி செய்தும் வருகிறது.

அடுத்தபடியாக பிரிடன் அதிகமாக யுத்தப் பொருள்களை உற்பத்திசெய்யவில்லை என்றும் சொல்லப்படுகிறது. இதில் கொஞ்சமும் உண்மையில்லை. சிற்சில சமயங்களில் சாமான் உற்பத்தியில் தடங்கல் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் யுனைடெட் ஸ்டேட்ஸின் உற்பத்தியை ஒத்தே இங்கும் தகுந்த அளவு நடைபெறுகிறது. அதனால் பிரிடனைப்பற்றி இவ்விதம் சொல்வது சரியல்ல. யுத்த தளவாடங்களை மற்ற சாமான்களைப்போல 100 சதவிகிதம் சமாதான காலத்தில் உற்பத்தி செய்வது முடியாத காரியம். யுத்தத்திற்கு முன் சமாதான காலத்திற்குள்ள திட்டங்கள் போடப்பட்டிருந்தன. அதிலிருந்து யுத்த காலத்திற்கு வேண்டிய ஆயுதங்கள் முதலியவை ஏராளமாக திடீரென்று உற்பத்திசெய்வது எளிதான காரியம் அல்ல. மேலும் 'தினம் 24 மணிகள் வீதம், வாரம் ஏழு நாட்களிலும் வேலை செய்யுங்கள். நாட்டிலுள்ள ஸ்திரீகள் யாவரையும் வேலைக்காரர்களாக அமர்த்துங்கள்,' என்று சொல்லுகிறார்கள். இதனால் வீண் சேதம்தான் ஏற்படும். அதிக மணிநேரம் தொடர்ந்து ஈடுபட்டிருந்தால், சாமான்களின் நேர்த்தி குன்றிவிடும். எவ்வளவு பழக்கம் பெற்றாலும் ஸ்திரீகளைக்கொண்டு நுட்பமான வேலைகளைச்செய்ய முடியவில்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆகையால் பொறுமையுடன் போதுமான அவகாசம் எடுத்துக் கொண்டு விமானம் முதலிய சாமான்கள் செய்யப்பட்டால் தான் எதிரிகளைத் தோற்கடிக்கமுடியும்.

வி வி வி வி வி வி வி

**நிலைமை நெருக்கடியானது; ஆனால் ஆபத்தில்லை.** சிங்கப்பூரில் நிலைமை மிகவும் கடுமையாகத்தான் இருக்கிறது. இதைக்கொண்டு தூரக் கிழக்குப்பிரதேசங்களைப்பற்றி நாம் அதிகக் கவலை வைக்கவேண்டியதில்லை. ஏனென்றால் வேவல், காலத்தைக் கைக்கொள்ளவே பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறார். இப்பொழுது அமெரிக்கக் கப்பற்படைகள் நியூஸீலாந்துக் கடற்கரைக்கு வந்துசேர்ந்துவிட்டன. இதற்குமுன் வந்த கப்பற்

படைகள் மக்காஸர் ஜலசந்தியிலும், டோகியோகுடாவிலும் எதிரிகளைத் தடுத்து சாமர்த்தியத்தை கிலைநாட்டிவருகின்றன. பர்மாவில் சீனர்கள் சைனியங்களைச் சேகரம்செய்கின்றனர். பிரிடிஷ் கப்பற்படை யுத்தத்திற்குத் தயாராகிக் கொண்டு வருகிறது. ஆஸ்திரேலியா தற்காப்பை பலப்படுத்திவருகிறது. பிலிப்பைன்ஸில் மாக் ஆர்தரும், டச்சுத்தீவுகளில் டச்சுக்காரர்களும் எதிரிகளின் திட்டத்தைத் தடுத்து காலத்தைக் கைக்கொண்டு வருகிறார்கள்.

இதர இடங்களில் ஜப்பானுடைய நிலைமை கெட்டுத்தான் வருகிறது. "யுத்தம் இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது" என்று நோபுகி கிஷி, ஜப்பானிய வியாபார மந்திரி செவ்வாய்க்கிழமை சொல்லியிருக்கிறான். ஆனால் வருங்காலத்தைப் பார்த்தால் ஜப்பானுக்கு ஆபத்துத்தான் விளையும்போல்தானிருக்கிறது. ஏனென்றால் ஜப்பான் பரபரப்பாக இருக்கிறது. தனக்குள்ள ஸப்ளைகளும் சாமான்களும் குறைவாக இருப்பதாலும், இதர நாடுகளிலிருந்து இக்குறைவை ஈடுசெய்ய முடியாததாலும், ஜப்பான் காரியங்களைத் துரிதமாகச்செய்து வருகிறது. ஜப்பானுடைய சைனியம், கடற்படை, விமானப்படை இவைகளை விருத்திசெய்ய முடியாது. பிரகிருதம் அடைந்துவரும் நஷ்டங்களையும் ஈடு செய்ய முடியாது.

அதிகப் பேராசைகொண்டு பல 1,000 மைல்கள் எட்டியுள்ள பிரதேசங்களில் ஜப்பான் வெறிபிடித்தவிதமாக ஆக்கிரமித்துவருகிறது. கொரியா, சைனா, இந்தோ-சைனா, தாய்லாந்து முதலிய நாடுகளைப்பிடித்தது போதாதென்று பர்மா, மலேயா, டச்சுத் தீவுகள், பிலிப்பைன்ஸ், நியூ கினி முதலிய நாடுகளையும் கைப்பற்ற நினைக்கிறது. இப்படிச் செய்ய நினைப்பது வீண் பைத்தியக்காரத்தனமாகவே முடியும். ஏனென்றால் நேசநாடுகள் பலம்பெற்று ஜப்பானை முறியடிப்பதற்கான காலம் சமீபித்துவிட்டது என்று சொல்லுவதற்கான சின்னங்கள் தோன்றிவருகின்றன.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தானத்திற்கு மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் விஜயம் செய்த சந்தர்ப்பத்தில் டவுன் ஹாலில் நடந்த

# சொற்பொழிவுகள்.

---

### மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள்.

(மதுரை மெயில் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்களின் அழைப்பிற்கு இணங்கி புதுக்கோட்டைக்கு வருவதற்கு தனக்கு அதிகமான சந்தோஷமிருப்பதாகத் தெரிவித்தார். இச்சமஸ்தான வாசிகளைக்கண்டு அவர்கள் முன்பாக ஒரு சொற்பொழிவு செய்வதற்குத் தனக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததைப்பற்றியும் உள்ள சந்தோஷத்தைத் தெரிவித்தார்.

ஜப்பான் யுத்தத்தைப் பற்றியும், அதனால் இந்தியாவிற்குள்ள உண்மையான ஆபத்துகள், வதந்திகளால் ஏற்படும் பயம் முதலியவைகளைப்பற்றியும் அவர் அறிவித்தார். சில வாரங்களாக கலவரமும் வீண் பயமும் இருந்து வருவதாகவும் அவ்விதமாக ஏற்படுவதற்கு ஒருவித காரணமும் இல்லையென்றும் சொன்னார். ஆசியா, மலேயா, பர்மா, இந்தியா முதலிய நாடுகளின் அமைப்பை கவனித்தால் இந்தியா மீது ஜப்பானியப் படையெடுப்பு ஏற்படக்கூடிய பயம் தற்சமயம் மிகக் குறைவு. இருந்தாலும் கலவரம் அதிகம் ஏற்பட்டு ஜனங்கள் அதனால் பயமடைந்து வேலைகளை விட்டும் நகரங்களை விட்டும் வீணாக ஒரு காரணமும் அன்னியில் பணங்களைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வித கலவரம் பொய்வதந்திகளால்தான் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் வதந்திகளுக்கு கண், கால்வைத்து அதை மற்றவர்களுக்குச் சொல்லி அதை யாவரும் நம்புகிறார்கள். இதில் யாதொரு உண்மையான ஆதாரமும் இல்லை. அவைகளை ஒருவரும் நம்பவேண்டாமென்று சொன்னார். அப்பட யாராவது, வதந்திகளைப் பரவச் செய்கிறவர்களைக் கண்டால் உடனே சண்டிக் வேண்டும். ஆரம்பிக்கும் ஸ்தலத்தை அதிகாரிகளிடம் தெரிவிக்கவும் வேண்டும்.



### ஜப்பானியக் கொடுமைகள்.

ஐந்தாம் படையினரால் கிளப்பப்பட்ட வதந்திகளில் ஒன்று: ஐப்பானியர்களுக்கு இந்தியாவில் யாதொருவிதமான ஆசையும் கிடையாதென்றும், இந்தியர்களுக்கு ஜப்பானியர்கள் சகோதரர்களென்றும், இந்தியர்களுக்கு ஒருவித தீங்கும் செய்யமாட்டார்களென்றும், அமெரிக்கர்களையும் ஐரோப்பியர்களையும் விரட்டவே பிரயத்தனப்படுகிறார்களென்றும் கட்டிவிடப்பட்டிருக்கிறது. இதை ஜனங்களும் வாஸ்தவம் என்றும் நம்பியிருக்கிறார்கள். ஆனால் 4½ வருஷ காலமாக சைனாவில் நடந்ததைக் கவனிக்கும்படி மேன்மை தங்கிய கவர்னரவர்கள் கேட்டுக்கொண்டார். சீனர்களும் ஆசிய வாசிகள்தான். அவர்களை ஜப்பானியர்கள் கொலைசெய்து கொள்ளையடிக்கவில்லையா? தற்சமயம் ஆசியா வாசிகள் இருக்கும் இடங்களான பர்மா, மலேயா, பிலிப்பைன்ஸில்தான் ஜப்பான் யுத்தம் நடத்துகிறது. ரெங்கூனில் 20,000 அடி உயரத்திலிருந்து போடும் குண்டுகள் ஐரோப்பியர்கள் வசிக்கும் இடத்தில் மாத்திரம் விழாது, பர்மியர்கள், இந்தியர்கள் ஐரோப்பியர்கள் வசிக்கும் இடங்களில் கலந்துதான் விழும். ஆகவே இவ்வதந்தி ஆதாரமற்றதுதான்.

இந்தியர்களுக்குத் தீங்கு விளைவிக்கமாட்டார்களென்று யாராவது நினைத்தால் அது மிகவும் தப்பான எண்ணமாகும். சைனா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேயா நாடுகளில் ஜப்பானியர் செய்யும் அட்டூழியங்கள் ஒவ்வொரு இந்தியனுக்கும் தெரியும். அதாவது நாட்டை ஆக்கிரமித்துக்கொண்டு கொள்ளையடிப்பதுதான். மேலும் இந்திய அரசியல் பிரச்னைகளைப்பற்றி ஜப்பானுக்கு ஒருவித அக்கரையும் கிடையாது. இந்த நாட்டுடன் உறவு கொண்டாடுவதாக ஜப்பான் சொல்லும் கபட வார்த்தைகளை ஒருக்காலும் நம்பக்கூடாது. ஆகவே இவ்வதந்தி ஆதாரமற்றதுதான்.

மேலும் இந்த யுத்தத்தை ஜப்பானுடன் மாத்திரம் புரியப்படுவதாக இந்தியாவில் நினைக்கின்றனர். இந்த யுத்தம் உலக யுத்தம். தூரக்கிழக்கில் நடப்பது ஒரு ஏகதேசமான பாகம்தான். மலேயா, பிலிப்பைன்ஸில் ஜப்பானியர் அடைந்து வரும் வெற்றிகளைக்கண்டு நாம் மனம் தளரவேண்டியதேயில்லை. ஒருவித எச்சரிக்கையும் இல்லாமல், சமாதானப்பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கும்போது கபடமான யுத்தத்தால் ஜப்பான் வெற்றியடைந்துவருகிறதே தவிர வேறொன்றும் இல்லை. நமது உண்மையான எதிரி ஜெர்மனிதான். அச்சுநாட்டுக் கொள்கைகளுக்கு ஜெர்மனிதான் மூலாதாரம். ஜெர்மனி தோற்றால் இதாலியும், ஜப்பானும் தானே விழுந்துவிடும்.

ஒரு வருஷம், அல்லது ஆறு மாதங்களுக்கு முன்பு ஜெர்மனிக்கு இருந்த பலத்தைப் பிரக்ருத நிலைமைக்கு ஒப்பிட்டுப்பார்த்தால், ஜெர்மனியின் பலம் குறைந்திருக்கிறதாகவே மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் கருதினார். ருஷ்யாவை ஜெர்மனி எதிர்த்தபொழுதே அதற்கு முடிவான காலம் வந்துவிட்டதென்றும், அமெரிக்க நாடுகளை ஜப்பான் தாக்கியபொழுது ஜப்பானுக்கு அழிவு காலம் வந்தது என்று யாவருக்கும் தெரிந்ததுதான். ருஷ்யாவைத் தாக்கிய பொழுது, தொடர்ந்து வெற்றிகள் கிடைக்குமென்று ஜெர்மானியர்கள் நினைத்தபடி இல்லாமல் எண்ணங்கள் முறிந்து அதிக நஷ்டத்துடன் பின்நோக்கியும் ஓட வேண்டியிருக்கிறது.

ஆகவே இந்த யுத்தம் அதிகநாள் நீடித்து நடக்க வேண்டிவந்தாலும் நேசதேசங்களுக்கு வெற்றிகிடைப்பது என்பது நிச்சயம். காலம் நேசதேசங்களின் சார்பாக இருக்கிறது. அவர்கள் வசமுள்ள ஏராளமான பொருள்களை ஜெர்மனிக்குச் பாதகமாக நேசதேசங்கள் உபயோகித்துக் கொள்ள முடியும். சீக்கிரத்திலேயே எதிர்ப்புச் சண்டைகளை ஆரம்பித்து ஜெர்மனி செய்த பிழைகளுக்கு சரியான பாடம் கற்பிக்கப்படும். 25 வருஷங்களுக்கு ஒருமுறையாக ஏராளமான ஜனங்களுக்குக் கஷ்டத்தை விளைவித்து இனி சண்டைகளைச் செய்ய முடியாதபடி ஜெர்மனி தோற்கடிக்கப்படும்.

## ஜனாப் கான் பஹதூர் P. கலபுலலா ஸாஹப.

மேன்மை தங்கிய கவர்னர் அவர்களே,

என் சார்பாகவும், ஸமஸ்தான வாசிகளின் சார்பாகவும் தங்களை இங்கே மிக அன்புடன் நான் வரவேற்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சொற்பொழிவு செய்வதற்குத் தாங்கள் சம்மதித்ததற்கு மனமார்ந்த வந்தனமளிக்கிறேன்.

2. இந்தியாவில் 11 மாகாணங்களிருப்பதில் யுத்த முயற்சி விஷயத்தில் சென்னை மாகாணம் முதல் ஸ்தானத்தை வகித்து கௌரவம் அடைவதற்கு தாங்கள்தான் காரணமாக இருக்கிறீர்கள். மேலும் அகில இந்திய சைனியத்தில் சென்னை மாகாண வாசிகளுக்கும் ஸ்தானங்களைப் பிரத்யேகமாக அமைத்ததற்குத் தங்களுக்கு இம்மாகாண வாசிகள் அதிகம் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

3. இந்த சந்தர்ப்பத்தில், யுத்த நிலைமையைப் பற்றியும், இந்தியர்களின் கடமையைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஹிட்லர் என்ற கொடிய அரக்கனுடைய பேராசையாலும், அஹம்பாவத்தாலும், 2½ வருஷகாலமாக ஐரோப்பா பூராவாக யுத்த நெருப்பு பரவி எரிந்து வருகிறது. ஐரோப்பிய நாடுகள்யாவும் ஒன்றன்பின் ஒன்றாக அவனுடைய ராணுவத்திற்கு வசமடைந்தன. ஐரோப்பிய வாசிகள் யாவரும் அடிமைகளாகி சொல்ல முடியாத தொந்தரவுகளுக்குள்ளாகியிருக்கின்றனர். இதோடு நிற்காமல் ருஷ்யா பேரிலும் பாய்ந்து கைப்பற்ற நினைத்தான். ஆனால் அது பலிக்காமல் அவனது புகழும், அதிகாரமும் மங்க ஆரம்பித்துவிட்டன. ருஷ்ய யுத்தத்தை அதிகமான ஆடம்பரங்களுடன் 1,800-மைல் நீளத்திற்கு ஓர் போர்முனையைச் செய்துகொண்டு ஆரம்பம் செய்தான். ஆனால் அதிகமாகத் தோல்விபெற்று நின்றுவிட்டான். இரண்டு மாதகாலமாக ருஷ்யர்கள் எதிர்த்து ஜெர்மானியரை ஒவ்வொரு பாகத்திலும் விரட்டிவிட்டனர். ஜெர்மானியர்களுக்கு ஏராள மனிதர்களும் சாமான்களும் நஷ்டம்.

4. இவ்விதமாக ருஷ்யாவில் ஜெர்மானியர் தோல்வியடைந்து வருவதால் ஹிட்லருடையவும், அவனுடைய சகாக்களுடையவும் முடிவான தோல்வியை யாவரும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் ஹிட்லருடைய கொடுமையை ஜப்பான் கையாண்டு கிழக்கிலுள்ள நாடுகளை அழித்துவருகிறது. ஜப்பான் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிவருகிறது. அதற்குக் கொஞ்சமும் தடையேற்படவில்லை. ஆரம்ப வெற்றிகளையும் அடைந்துவருகிறது. ஆனால் சீக்கிரத்தில் அதற்கு ஒரு முடிவு ஏற்பட்டு ஜப்பான் குலைய ஆரம்பித்துவிடும். கிரேட் பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் ஏராளமான உதவிப்படைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. இவைகளைக்கொண்டு நேசநாடுகள் முன்னேறித்தாக்கும்போது ஜப்பான் தோற்று அவஸ்தைப்பட வேண்டியிருக்கும். தற்சமயம் ஜப்பான் ஆக்கிரமித்துக் கொண்டுவரும் நாடுகளில் இந்தியர்களுக்குப் பலவிதமான நெருங்கிய சம்பந்தங்களும், அக்கறைகளும் இருக்கின்றன. நாம் அதற்காக அதைரியப்படத் தேவையில்லை. இதுவரை நமது சரித்திரமே உன்னத நிலையிலிருந்திருக்கிறது. வருங்காலத்திலும் எவ்வளவோ விஷயங்களைச் சாதிக்கப்போகிறோம். அதற்கான நம்பிக்கையும் இருக்கிறது. ஆகவே தேசத்திற்குரிய குணமுள்ளவர்களாக நாம் நடந்துகொண்டு ஜப்பானியரின் முன்னேற்றத்தைத் தைரியமாயும், தியாகம் செய்யும் சிந்தனையுடனும் நின்று எதிர்க்க வேண்டும். இவ்விதம் ருஷ்யாவும், சைனாவும் நடந்துகொண்டிருப்பதைத் திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு நேசநாடுகளின் வெற்றிக்காக நம்மால் முடிந்தவரை முயற்சியெடுத்துக்கொள்ளவேண்டும். எவ்விதமான உதவிசெய்தாலும் அது நமக்காகச் செய்யப்பட்டதாகத்தான் ஆகும். பிரிடனின் சார்பாக மட்டும் செய்ததாக ஆகாது. ஏனென்றால் நம்முடைய வருங்காலம் பிரிடன் யுத்தத்தில் வெற்றிபெறுவதைப் பொருத்தேயிருக்கிறது. அப்படி பிரிடன் வெற்றிபெறாவிட்டால் 200 வருஷங்களுக்குமுன் இந்தியா பட்ட அவஸ்தைகளை மறுபடிபட்டு, அடைந்த முன்னேற்றத்தை இழக்கநேரிடும். ஆகவே இந்த உலக யுத்தம் வெற்றிகரமாக முடிவடையவேண்டி யாவரும் கூடுமானவரை முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



## Mr. K. நாகராஜ அய்யர்.

## இந்திய ஸமஸ்தானங்களும், யுத்தமும்.

யுத்தத்தால் பிரிடிஷ் இந்தியா எவ்வாறு பாதிக்கப்படுமோ அவ்விதமே இந்திய ஸமஸ்தானங்களுக்கும் ஏற்படும். ஏனென்றால் எவ்விதம் பிரிடிஷ் இந்தியா பிரிடனுடன் ராஜவிசுவாசத்துடனும், நேசப்பான்மையுடனும் இருந்து வருகிறதோ அதை ஒத்து இந்திய ஸமஸ்தானங்களும் பிரிடனுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. பிரிடன் இந்த யுத்தத்தில் வெற்றியடைந்தால், பிரிடிஷ் இந்தியாவுக்கு மட்டிலுமல்ல, இந்திய ஸமஸ்தானங்களுக்கும் வெற்றிகிடைத்த மாதிரிதான். அதைப்போலவே பிரிடன் தோல்வியடைந்தால் பிரிடிஷ் இந்தியாவுக்கு நேரும் கதிதான் இந்திய ஸமஸ்தானங்களுக்கும் நேரிடும்.

இந்திய ஸமஸ்தான மன்னர்கள் தங்களுடைய உண்மை நிலையை ஏற்கனவேயே அறிந்துகொண்டிருக்கிறார்கள். யுத்தம் ஆரம்பித்தவுடனேயே அவர்கள் மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியின் உபயோகத்திற்கு தங்கள் வசமுள்ள யுத்த சாதனங்கள் யாவையும் கொடுத்தார்கள். அவர்கள் ஆதாயம், செலவை கவனியாமலும், பின்னால் நேரிடக்கூடும் பயன்களைப் பொருட்படுத்தாமலும், யுத்தத்தில் சேர்ந்துகொண்டனர். அவ்விதம் அவர்கள் நடந்துகொண்டதே அவர்களின் வீரத்தனத்தின் உன்னத நிலையைக் காட்டுகிறது. அவர்கள் வெரும் பேச்சுடன் நின்றுவிடவில்லை. உடனே அவர்கள் விரிவான திட்டங்கள்போட்டு பலவாறான யுத்த முயற்சிகளை எடுத்துக்கொண்டு, அவரவர்கள் இயன்ற அளவு துருப்புகள், யுத்ததளவாடங்கள், பணம் முதலியவைகளை அனுப்பிவைத்தார்கள். இந்தியாவில் வடக்கேயுள்ள காஷ்மீர் ஸமஸ்தான முதல், தெற்குக் கடைசியிலுள்ள புதுக்கோட்டை ஸமஸ்தானம் வரை ஒவ்வொரு ஸமஸ்தானமும் தனித்தனியே யுத்தத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்துவந்திருக்கிறது. காஷ்மீர் அரசாங்கம் நன்றாகத் தேற்சிபெற்ற ஒரு பீரங்கிப்படையை அனுப்பிற்று. அது எரிட்ரியாவில் நடந்த சண்டையில் மகத்தான வெற்றிகளையடைந்து புகழும் கீர்த்தியையும் பெற்றது. கெரன் நகரத்தையும் பிற்பட்டு டெமாஸ்கஸ்ஸையும் கைப்பற்றுவதில் ஈடுபட்டிருந்தன. ஹைதராபாத் விமானப்படைப் பகுதியையும் அவற்றின் வீரச் செயல்களையும் நாம் கேட்டு மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம். இந்த ஸமஸ்தானத்திலுள்ள நாமும் யுத்தத்திற்கு உதவி செய்வதில் யாரையும் பின்வாங்கவில்லை. சுமார் இரண்டு வருஷங்களுக்குமுன் இதே மண்டபத்தில் கூடியிருந்த பொதுக் கூட்டத்தில் நமது மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள், இந்த யுத்தத்தில் ஜயிக்க நம்மால் இயன்ற அளவு யுத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டு நாம் ஒத்துழைக்கவேண்டும் என்று நமக்குச் சொன்னார். அது முதற்கொண்டு நாமும் நம்மால் முடிந்த அளவு செய்துகொண்டு வருகிறோம்.

இப்பொழுது எனக்குக் கொடுக்கப்பட்ட அவகாசத்திற்குள் இந்தியாவிலுள்ள முக்கிய ஸமஸ்தானங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப்பற்றி இங்கு விவரிப்பது முடியாத காரியம். இந்திய சுதேச மன்னர்கள் தங்கள் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கு இப்பொழுது ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்க முன் வந்திருப்பதைப் போல் இதற்குமுன் தேச சரித்திரத்தில் இல்லை என்பதை நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். இவ்விதம் சுதேச ஸமஸ்தானங்கள் சேர்ந்திருப்பது ஒரு மகத்தான காக்ஷி. இந்த யுத்தத்தில் அவைகள் பெருத்த முயற்சிகளை எடுத்துக்கொண்டு அனுப்பிய உதவிப்படைகள் மேற்கே வெகு தூலைக்கு அப்பாலுள்ள இராக், இரான், லிபியாவிலும், கிழக்கே பர்மா, மலேயா முதலிய போர்முனைகளிலும் சரித்திர பிரசித்திபெற்ற மகத்தான வீரச்செயல்களைக்காட்டி வருகிறார்கள்.

இப்பொழுது யுத்தம் நம் நாட்டை நெருங்குகிறது. பர்மாவிலும், மலேயாவிலும் நடக்கும் இக்கோர யுத்தத்தில் ஆயிரக்கணக்கான புதுக்கோட்டை வாசிகள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் படும் சிரமத்திற்காக நாம் பரிதாபப்படுகிறோம். இருந்தபோதிலும் நாம் அதற்காக அதைரியப்படக் கூடாது. யுத்தத்தில் நடக்கும் சம்பவங்களைத் தனித்தனியே பார்ப்பது கூடாது. மொத்தத்தில் நாம் வெற்றிகரமாக நடத்திவந்திருக்கிறோமா என்றுதான் கவனிக்க

வேண்டும். மேலும் ஒரு போர்முனையில் நமக்கு வெற்றிகிடைக்கும். ஆனால் மற்றொன்றில் தோல்வியும் கிடைக்கும். அவை எல்லாம் ஏற்படுவது சகஜம் தான். இந்த யுத்தமே நமது பொறுமையைச் சோதனை செய்யக்கூடியதாக இருக்கிறது. ஆனால் நேசதேசத்தார்களுக்கு இருக்கும் படைபலம், ஆயுத பலம், பொருள்பலம் சகஜமாக எதிரியைச் சோர்வடையச் செய்யும் என்பதை நாம் மறுதளிக்க முடியாது. ஏனென்றால் இதற்குமுன் நடந்த சம்பவங்கள் நமக்கு வழிகாட்டிகள். டங்கர்க் படையெடுப்புக்குப் பிறகு பிரிடனின நிலைமையையும், ருஷ்யாவில் நாம் பயந்ததற்கு மாறாக நேசதேசத்தார்கள் இப்பொழுது அடைந்துவரும் வெற்றியையும் கவனித்தால், ஜப்பானும் வந்தவழியே துரத்தியடிக்கப்படும் என்று நம்புவதற்குப் போதுமான காரணம் இருக்கிறது. வெகு நாட்களுக்குமுன் இந்தியாவில் நடந்த சம்பவம் ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அதில் உயர்வான கருத்து அடங்கியிருக்கிறது முகமத் பின் டோக்ளக் அரசாண்டு வரும் காலத்தில் இந்தியாவில் நிஸாமுதீன் ஆலியா என்ற ஒரு முகம்திய சன்யாசி இருந்தார். அரசனுடைய கொடுமையான செயல்களையும் அட்டூழியங்களையும் வெறுத்து, அவர் அடிக்கடி கண்டனம் செய்துவந்தார். இவ் விஷயம் டோக்ளக்குக்குத் தெரிந்தது. அவரைத் தண்டிக்க உத்தேசங்கொண்டு தான் வங்காளத்தில் படையெடுத்து வந்ததை நிறுத்திவிட்டு மீண்டும் டெல்ஹிக்கு அதிவேகமாக வந்தான். இதையறிந்த சன்யாசியின் சிஷ்யர்கள் இன்னும் அவகாசமிருக்கும் பொழுதே அரசனின் கோபத்திற்காளாகாமல தப்பித்துக் கொள்ளும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால் அவர் கொஞ்சமும் கலங்கவில்லை. ஆனால் அவர் சிஷ்யர்களுக்கு "டெல்லிதூர் ஆஸத்" டெல்ஹி இன்னும் வெகுதுலையிலிருக்கிறது "என்றுமட்டில் சொல்லிவந்தார். டோக்ளக் டெல்ஹிக்குச் சமீபத்தில் நெருங்கி வந்துகொண்டிருந்தான். இதைக்கண்டு பயந்திருந்த தன் சிஷ்யர்களுக்கு மீண்டும் அதேபதிலையே சன்யாசி சொல்லிவந்தார். கடைசியாக அரசன் டெல்ஹிக்கு 10 மைலுக்கருகாமையில் வந்துவிட்டான். அப்பொழுது கூட சன்யாசி "டில்லி ஹனோஸ்தூர் ஆஸ்த்" (இன்னும் டெல்ஹி வெகு தூலையில் இருக்கிறது) என்று தைரியமாகச் சொன்னான். அதே சமயத்தில் டோக்ளக் தன்னுடைய கூடாரத்தில் குடிவெறியினால் புரண்டுகொண்டிருக்கும்பொழுது மதம் பிடித்த யானை ஒன்று கட்டை யறுத்துக்கொண்டு, கூடாரத்தைப் பிடுங்கிக் கீழே தள்ளிற்று. அதிலிருந்த அரசனும் கொல்லப்பட்டான். அதனால் சன்நியாசியின் வாக்கியங்கள் பொய்யாகவில்லை. தெய்வம் நின்று கொல்லும். ஆனால் அக்கிரமம் செய்கிறவர்களை நிச்சயம் கொல்லும். நாம் நியாயமாகவும், சன்மார்க்கமாகவும் நடந்துவந்தால் நிச்சயமாக இறுதியில் வெற்றியடைவோம். இப்பொழுது எதிரிகள் அடைந்துவரும் வெற்றிகள் கொஞ்ச காலத்திற்குத்தான் நிலைத்திருக்கும். மேற்சொல்லிய திருஷ்டாந்தத்தைக்கொண்டு நாம் மனப்பூர்வமாய் தெய்வ பக்தியுடன் இருப்போமேயானால் டெல்ஹி மாத்திரமல்ல, கல்கத்தா, மதராஸ் பாம்பே இவையாவும் எதிரிகளால் அணுக முடியாது. இத்துடன் 1939-ம் வருஷம் கிருஸ்துமஸ் விழாவின்போது நமது மாகனிமை தங்கிய ஆறும் ஜார்ஜ் சக்ரவர்த்தி நமக்கு ஊக்கத்தை அளிக்கக்கூடிய ஒரு செய்தி ஒலிபரப்பியதை நாம் எந்நாளும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். "தெய்வத்தினிடத்தில் பாரத்தை வைத்துவிட்டு நாம் நமது கடமைகளைச் செய்வோம். மற்ற உதவிகளைக் காட்டிலும் தெய்வ சகாயம்தான் மிகவும் வல்லமையுள்ளது. கடைசியில் கடவுள் சகாயத்தால் நிச்சயம் வெற்றிகிடைக்கும்".

---

### Mr. N. சேதுராம அய்யர்.

இன்றைக்கு சரியாக 43 வருஷங்களுக்கு முன்னால், அதாவது 1899-ம் வருஷம் பிப்ரவரிமீ தத்தில், அக்காலத்தில் மதராஸ் கவர்னராகயிருந்த மேன்மை தங்கிய ஆர்தர் ஹாவ்லக்கு அவர்கள் இந்த டவுன் ஹால் கட்டுவதற்கு அஸ்திவாரங்கள் நாட்டியதின் பிரயோஜனம் இன்றே பூர்த்தியானதென்று நான் சொன்னால் அது கொஞ்சமும் மிகையாகாது. ஏனென்றால், அதற்கு பின் இந்தக் கட்டடத்திற்கு முதல் முதலில்வந்து நம்மை கௌரவப்படுத்தியது, நமது மதராஸ் கவர்னர் மேன்மை தங்கிய ஸர் ஆர்தர் ஹோப் அவர்களேயாகும். அன்னார் இன்று இந்த



கூட்டத்திற்கு மிகவும் சிறப்பாகவும், அழகாகவும் தலைமைவகித்து அறியதோர் சொற்பொழிவு செய்ததற்கு நாம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

சாதாரணமாகவே புதுக்கோட்டை வாசிகளாகிய நாம் மிகவும் ராஜவிசுவாஸம் படைத்த பிரஜைகள். ராஜவிசுவாஸம், ராஜ பக்தி என்பது நமது ரத்தங்களிலேயே ஊன்றி நிற்கின்றது. இத்துடன் நாம் ஸமஸ்தம் நமது இளைய மன்னரின் ஆக்ஞையை தலைமேல் கொண்டிருக்கிறோமல்லவா? இந்த கோர யுத்தத் துவக்க காலத்திலும், பின்னிட்டு 1940-ம் வருஷம் ஜுலைமீ 16உயிலும் இதே மண்டபத்தில் தன் பிரஜைகளை ஒன்றுகூட்டி, கண்டிப்பான விதமாய் நமது மன்னர்பிரான் அவர்கள் விடுத்த கட்டளையை நாம் என்றென்றும் மறக்க முடியுமா? பிரிடிஷாரின் இந்தப்போர் நமது போரென்றும், பிரிடிஷாரின் எதிரிகள் நமது எதிரிகளென்றும், பிரிடிஷாருக்கு இந்த யுத்தம் எவ்விதமும் ஜயிக்க நாம் உடல், பொருள், ஆவி மூன்றையுமே வேண்டுமென்றாலும் தியாகம் செய்து ஒத்துழைக்க வேண்டுமென்றும், யாராவதொருவன் சுயநலம் பாராட்டியோ, ஐந்தாம் படையின் சூழ்ச்சிக்குட்பட்டோ அல்லது வேறு எக்காரணத்தாலோ எதிரியின் சார்பாக எள்ளளவேனும் நடந்து கொள்ளுவானானால், அவன் நம்முடைய விரோதியென்றும், சொன்ன கட்டளைகள் இன்னமும் நமது காதுகளில் தொனித்துக் கொண்டிருக்கின்றன. இதை அனுசரித்தே நாங்கள் யுத்த முயற்சியிலீடுபட்டிருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

---

## ஜெர்மனியின் போலி ரேடியோ நிலயங்கள்.

பகிரங்கமாக நாஸிகள் செய்யும் பிரசாரத்தை முன்னிட்டு ஜெர்மனியில் சில ஒலிபரப்புகள் செய்யப்படுகின்றன. ஆனாலும் இவைகளைத் தவிரவும் நாஸிகளின் சப்தம் கேட்கப்படுகின்றது. உண்மையில் இந்த சப்தம் எது என்பதை யாவரும் அறிந்தும் இருக்கலாம். நாஸிகள் தங்களது அயலார்களைத் தாக்கும்போது சைனியம், விமானப் படை முதலியவைகளோடு மட்டும் சண்டை செய்வதில்லை. அந்த நாட்டு அரசாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் சண்டையைக் கிளப்பி அரசாங்கத்தை எதிர்க்கும்படி தூண்டுவார்கள். இதுவும் நாஸிகளின் ஒரு யுத்தமுறை.

### போலி ரேடியோ நிலயம்.

இந்த சந்தர்ப்பத்தில் போலியான ஒரு ரேடியோ நிலயம் ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் நாஸிகள் பேசுவார்கள். உதாரணமாக யூகோஸ்லாவியாவை நாஸிகள் தாக்குவதற்குமுன் "அந்நாட்டிலுள்ள க்ரோஷியர்கள் ஸ்வதந்திர நிலயம்" என்ற பெயருடன் ஒரு நிலயம் ஏற்பட்டது. இராக்கில் கலகம் ஆரம்பமானபொழுது "ஸ்வதந்திர அராபியர்களின் மொழி" என்று ஒரு நிலயம் கேட்கப்பட்டது. ருஷ்ய யுத்தம் ஆரம்பமானவுடனே பல நிலயங்கள் ஏற்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. ஒன்று "தேசாபிமானமுள்ள ருஷ்யர்கள்" என்றும், மற்றொன்று "பழைய கார்டு" என்று ஸ்டாலினுக்கு எதிராகவும் இம்மாதிரி பல கிளம்பின. இந்தியாவுக்காக "ரேடியோ ஹிமாலயா" என்ற பெயருடன் ஒரு நாஸி நிலயம் கேட்கப்படுகிறது. இதன் மூலமாக பிரிடிஷ்காரர்களைத் தாக்கி ஹிந்துஸ்தானியில் விஷயங்கள் அறிவிக்கப்படுகின்றன. இது ஜுலை 1-ம் தேதி கேட்கப்பட்டது. அதற்குப் பிறகு ஒன்றும் இதைப்பற்றி தெரியவில்லை. ஆனால் அச்சமயத்தில் அங்கே ஒலிபரப்புகிறவருக்கு ஜுரம்புலியாதி வந்திருக்கிறதாகவும் சொல்லப் பட்டது. அவருக்குப் பிறகு வேறு ஒருவரும் கிடைக்கவில்லை போலும். "எகிப்தின் ஸ்வதந்திரக் குரல்" என்று எகிப்திற்காகவும் ஒரு நிலயம் இருக்கிறதாகத்தெரிகிறது. இதைப்போல் இன்னும் எவ்வளவோ இருக்கும்.

### மாறுருவம்.

எல்லாப்போலி நிலயங்களிலும் நாஸிகள் மாறுருவத்துடனேயேதான் தோன்றுகின்றனர். எந்த நாட்டைப்பற்றி ஒலிபரப்பப்படுகிறதோ அந்த நாட்டைச் சேர்ந்தவனாகவே தங்களையும் பாவித்துக்கொள்ளுகின்றனர். இப்படிச் செய்தாலும் இயற்கை குணம் போகவில்லை. பிரிடனுக்கு ஒலிபரப்பும் நிலயம் தன்னை N. B. B. S. என்று

சொல்லிக்கொண்டு "லாக் லாமண்டு" என்ற கிராமபோன் இசைத்தட்டையும், முடிவில் "கடவுள் அரசனைக்காப்பாற்றுவாராக" என்ற மங்களத்தையும் பாடுகிறது. ஜெர்மனியை நமது சத்துரு என்றும் சொல்லிக்கொள்ளுகிறது. ஒரு சமயத்தில் அதில் பேசியவர் உண்மையை நன்கு துலக்கிவிட்டார். ஜெர்மனியில் இங்கிலீஷ் பாஷையில்செய்யப்படும் ஒலிபரப்புகளைப் பூரா நம்பவேண்டாமென்று சொல்லப்பட்டது. ஏனென்றால் "இவை நம்பக்கூடியவைகளாக இருந்தாலும் ஜெர்மனியின் க்ஷேமத்தை முன்னிட்டே இப்படி செய்யப்படுவதாயும், பிரிட்டிஷ்காரர்களின் நன்மைகளை ஜெர்மனி அதிகம் பொருட்படுத்தாதென்றும், அதற்குப் பதிலாக பிரிட்டனுடைய நன்மையை உத்தேசித்து ஜெர்மனியுடன் உடனே சமாதானம் செய்து கொள்ளுவதை தான் விரும்புவதாகவும்" சொன்னான். இதனால் அவனுடைய நிஜ ஸ்வரூபம் வெளிவந்து விட்டது.

## சாகசமும் உண்மையும்.

நாஸிகள் பலவிதமான ரகசிய ஏற்பாடுகளைச் செய்து இவ்வித போலி நிலயங்களெல்லாம் உண்மையானவை என்று காண்பிக்க முயலுகின்றனர். இவைகள் மிகவும் சிறிதாயும், புதிதாயும் இருப்பதால் பல இடைஞ்சல்கள் தங்களுக்கு இருப்பதாக அறிவிக்கின்றன. இவைகளைப் போலீஸார் கண்டுபிடித்துவிடுவார்களோ என்றும் பயந்து கொண்டிருக்கின்றனவாம். உதாரணமாக N. B. B. S. என்ற நிலயத்தில் பிரிட்டனுக்காகச் செய்யும் ரேடியோ ஒலிபரப்பில் "பி. பி. ஸி.க்குள்ள ஸாதனங்கள் எங்களுக்கு உண்மையாகவே கிடையாது சிறு கருவிகளைக் கொண்டுதான் ஒலிபரப்பப்படுகிறது" என்று சொல்லிற்று. மற்றொரு தடவை விசைகள் வேலை செய்யாத தருணத்தை வைத்துக் கொண்டு செய்தி அறிவிப்பவன், "கருவிகள் தானாக நின்றுவிட்டன, எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நாங்கள் குறுகிய சந்தர்ப்பங்களில் விமானப் படையெடுப்பு பயத்திற்கு இடையில் கஷ்டப்பட்டு வருகிறோம். இதிலிருந்தே நாங்கள் நாஸி ஆட்கள் இல்லையென்று தெரியவரும், எங்களுக்கு டாக்டர் கோயபல்ஸின் உதவியும் இருந்தால் இவ்விதக் கஷ்டங்களே நேர்ந்திருக்காது" என்று சொன்னான். ஆனால் அந்த நிலயத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் பெரிய நிலயத்திலிருந்து வருவதுபோலவே தானிருக்கிறது. ஆகவே போலீஸாருக்குப் பயந்து இருக்கமுடியாது.

## 'மிஸ்டர் கிளிப்போர்டு ஏட்ஸ்'.

சில சமயங்களில் இந்நிலயங்கள் தங்களை மறைத்துக்கொள்ளச் செய்யும் ஏற்பாடுகள் மிகவும் விசித்திரமாகக் காணப்படுகின்றன. சென்ற வருஷம் ஸெப்டம்பர் மாதத்திலும் இவ்வருஷம் மே மாதத்திலும் பிரிட்டன்பேரில் செய்யப்பட்ட ஜெர்மன் விமானப் படையெடுப்புச் சந்தர்ப்பங்களில் N.B.B.S. என்ற போலி நிலயத்திலிருந்தும் மிகவும் பரிதாபகரமான செய்திகள் சொல்லப்பட்டன. அதன் வேலைக்காரர்கள் குண்டுகளால் அதிகம் காயமடைந்ததாயும் சொல்லப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு முன்பு வேறு விதமாகத் தகவல்கள் சொல்லப்பட்டன. தாங்கள் இருக்கும் இடத்தை பி. பி. ஸி. நிலயக்காரர்கள் கண்டுபிடிக்க முயற்சியெடுத்துக்கொண்டார்களாம். மிஸ்டர் கிளிப்போர்டு ஏட்ஸ் என்பவனை இதற்காக பி. பி. ஸி. யில் இருந்து அனுப்பியிருப்பதாகவும் கற்பனை செய்தது. "பி. பி. ஸி. ஆபீஸிலிருந்து மிஸ்டர் கிளிப்போர்டு ஏட்ஸ் என்பனை நியமித்திருக்கிறார்கள். இந்நிலயத்தைக் கண்டுபிடிக்கக்கூடிய கருவிகள் கொண்ட 14 மோட்டாரும் இருக்கின்றன. இப்படி வந்த மோட்டார் ஒன்றைப் பரிசோதனை செய்தோம். அதிலிருந்த கருவிகள் 'எங்களுக்கு உபயோகமாக இருந்தன" என்றும் சொல்லப்பட்டது. மிஸ்டர் கிளிப்போர்டைப்பற்றி அவர்கள் சொன்ன கதையைக் கேட்பதற்கு விநோதமாக இருந்தது. பிறகு கொஞ்ச நாட்கள் இவனைப்பற்றி ஒன்றுமே பிரஸ்தாபிக்காமலிருந்துவிட்டு ஆகஸ்டு 11-ம் தேதி "மிஸ்டர் கிளிப்போர்டு ஏட்ஸ் இப்போது வேறு உத்தியோகத்திற்கு மாற்றப்பட்டான். இனிமேல் எங்களைக் கண்டுபிடிக்கும் வேலை அவனுக்குக் கிடையாது" என்று சொல்லப்பட்டது.

## குட்டு வெளிப்பட்டது.

இதிலிருந்து இப்போலி நிலயக்காரர்களைக் கட்டுக்கதை ஆசிரியர்களின் தந்திரம் உள்ளவர்களென்று கண்டு கொள்ளலாம். ஆனால் சிறிய விஷயங்



களில் மாட்டிக்கொள்ளுகின்றனர். உதாரணமாக மே 4-ம் தேதி பிரிட்டன் கோடைகாலத்திற்குத் தகுந்த மணிகளுக்கு மாற்றிக்கொண்டது. இந்த நுட்பத்தை தெரிந்துகொள்ளாமல் பிரிட்டனில் இருப்பதாகச் சொல்லிக்கொண்ட நான்கு போலி நிலயங்களும் ஜெர்மன் மணிப்படிக்கே ஒலிபரப்புகளைச் செய்துவந்தன. 'ஸ்வதந்திர எகிப்து ஒலி' என்று சொல்லிவந்த நிலயத்திலும் இவ்விதப் பிசகு செய்தது. ஸெப்டம்பர் 16-ம் தேதி எகிப்தில் மாரிகால மணிக்கு ஏற்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்ளாமல் மத்திய ஐரோப்பிய மணியான ஜெர்மன் மணிக்கணக்குப்படியேதான் ஒலிபரப்புச் செய்துவந்தது. இவ்வித நிலையை மறந்து தன்னை பிரிட்டிஷ் அதிகாரிகள் கண்டுபிடிக்கப் பார்க்கிறதாக மாத்திரம் குறை சொல்லிக்கொண்டது.

## பொய்கள்.

நாஸிகள் தான் இவ்விதமாக ஜெர்மன் ரேடியோ நிலயங்களில் போலியான அறிவிப்புகளைச் செய்கிறார்கள் என்று நாம் சொல்லலாம். அதைப்போல் அவர்கள் பிரசார திட்டங்களில் இருக்கக்கூடியவைகளையும்பற்றி நாம் சொல்லலாம். அவர்கள் சொல்லக்கூடியது எல்லாம் தப்பான பிரசாரமாகவேதானிருக்கும். முழுப்பொய்களையும் பாதிப் பொய்களையும் சொல்லி சம்பந்தப்பட்ட நாட்டில் கலகத்தை மூட்டியோ அல்லது யுத்த முயற்சியைத் தடுத்தோ குழப்பத்தைச் செய்யும்.

## கோயபல்ஸின் வழிதான்.

ஆகவே இந்நிலயங்களின் மொத்த வேலைகளைப் பார்த்தால் டாக்டர் கோயபல்ஸ் ஜெர்மனியிலிருந்து நடத்தும் பிரசார வேலையை ஒட்டியேதான் இவைகளும் இருப்பதாகச் சொல்ல வேண்டும். உதாரணமாக ஜெர்மன் நிலயங்களுக்கும் போலி நிலயங்களுக்கும் உள்ள ஒற்றுமையை கவனித்தாலே தெரியவரும். ப்ரெமன் ஹாம்பர்க்கிலிருந்து பிரிட்டனைப் படையெடுத்துவிடுவதாக இங்கிலீஷ் செய்திகள் சொல்லப்பட்ட சமயத்தில் போலி நிலயங்களும் அதை அனுசரித்து ஏதோ பிரிட்டன்மேல் படையெடுப்பு நேரப்போவதாயும் பாங்கிகளிலிருந்து பணங்களை வாங்கிக்கொண்டு, வேலைகளை விட்டு விட்டு கிராமங்களை நோக்கி ஓடிவிடும்படி ஒலிபரப்பின. இவ்விதம் செய்து நாட்டில் கலகத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணவே நினைத்தன.

இன்னும் சில சமயங்களில் நாஸி நிலயங்களில் சொல்லப்படும் சமாசாரங்களைச் சற்று மாற்றிக்கொண்டு மற்றவைகளை அப்படியே சொல்லிவந்தன. உதாரணமாக ஸெப்டம்பர் 26-ம் தேதி ஜெர்மானியர் அறிவித்த செய்திகளை அப்படி வைத்துக்கொண்டு இங்கிலீஷ் பாஷையில் இப்போலி நியங்கள் அறிவித்தன.

## அசப்பியமான சொற்கள்.

பிரிட்டனைப்பற்றி நான்கு போலி நிலயங்கள் செய்திகள் அறிவிக்கின்றன. ஒன்று பொதுமக்களுக்கு இடையே காணப்படும் மனக்குறைகளைப்பற்றி அதிகம் சொல்லி ஹிட்லர் வந்தால் எல்லாம் சௌகரியமாக இருக்கும் என்றும் சர்ச்சிலை விரட்டிவிட்டு ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொள்ளும்படி சொல்லுகிறது. மற்ற மூன்றும் அரசாங்கத்தை எதிர்க்கக் கூடிய கக்ஷிக்காரர்களின் சார்பாக இருந்து பேசுகிறது. இதில் ஒன்று சாதாரண வேலைக்காரனைப்பற்றிச் சொல்லிவருகிறது. இந்த சந்தர்ப்பத்தில் அதில் பேசும் வார்த்தைகளை காதால் கேட்கமுடியாது. வாயால் சொல்லக்கூடாது. அவ்வளவு அசப்பியமாக இருக்கிறது.

ஸ்காத்லாந்திலுள்ள சாதாரண தொழில்காரர்களுக்கு சில விஷயங்களை ஒரு போலி நிலயம் அறிவிக்கிறது. இந்த இரண்டு நிலயங்களிலும் சொல்லப்படும் விஷயத்திலுள்ள தாருமாறுகள் ஸ்காத்லாந்தினருக்கு நன்கு தெரியும். ஸ்காத்லாந்திற்குச் சொல்லப்படும் விஷயங்களில் விசேஷ புத்தி கூர்மை இருக்கிறது. ஆனால் பாஷை ரொம்ப மோசம்.

## கபடமும், தெய்வ நிந்தனையும்.

நான்காவதான போலி நிலயம் தனக்கு 'கிருஸ்துவ சமாதான இயக்கம்' என்று பெயர் வைத்துக்கொண்டது. இங்கிலாந்தில் எல்லாவிதமான மதக் கூட்டக்காரர்களுக்கும் இடம் இருப்பதால் நாஸிகளும் தங்கள் பெயரை மதத்திற்கு அனுகுணமாக அமைத்துக் கொண்டனர். இந்த அங்கத்துடன் ஒலிபரப்பும்போது 1940 நவம்பர் 30உ ஜெர்மனியிலிருந்து வட அமெரிக்கா

விற்கு வந்தனோபசாரம் கூறியவனுடைய குரலைப் போலவே காணப்பட்டது. அந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் சமாதானத்திற்காக கடவுள் வாழ்த்துகளும், ஹிட்லரைத் தடுக்காமல் இருக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. இவ்விதமாக அவர்கள் செய்யும் கபடங்களையும் தெய்வ நிந்தனைகளையும் வாயால் சொல்லி முடியாது.

---

# பிரிடன் பேசுகிறது.

---

*பிராங் ஓவன் என்பவர் (B. B. C.-யில் பேசியது).*

## நமக்கு மறைமுகமாக உதவும் நேசநாடு.

லண்டனிலுள்ள ஈவினிங் ஸ்டாண்டர்டு என்ற பத்திரிகைக்கு இவர் பத்திராதிபர். அப்பத்திரிகையில் "நமக்கு மறைமுகமாக இருந்து உதவும் நாடு" என்ற தொடரில் பல வியாசங்கள் அதில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. அவ்விதம் உதவும் நாடு சைனாதான். இம்மாதிரியான வியாசங்கள் பிரசுரமான பிறகு சைனாவின் மேன்மை, மேல்பாப்பினால் ஏற்படக்கூடிய சௌகரியங்கள், சீனர்களின் மஹிமை முதலியன நன்கு யாவருக்கும் தெரிய வந்தது. சீனர்களின் நாகரீகம் 4,000 வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்டு, கொஞ்சமும் மாறுபாடடையாமல் தனிப்பட்ட தேசமாகவே இருந்து வருகிறது. சுமார் ஆறுமாதங்களுக்கு முன்பு ருஷ்யாவைப்பற்றி பரிசீலனை செய்தபோது சைனாவைப்பற்றியும், விஷயங்களைப் பிரசுரிக்கவேண்டுமென்று ஒரு அவா உண்டாயிற்று. முக்கியமாக சீனத்தலைவனான சயாங்கை ஷெக் என்பவரைப் பற்றிதான் அதிக விவரங்கள் அறிய விரும்பினார்கள். இவர் எப்பேர்ப்பட்டவர்? இதுவரை எங்கிருந்தார்? இவரால் 40,00,00,000 சீன ஜனங்களுக்கு எவ்வாறு தலைமை வகிக்கமுடிந்தது. மேலும் இவரைப்பற்றிபத்திரிகைகளில் அதிகம் பிரசுரிக்காததற்குக் காரணம் என்னவென்றும் பொதுஜனங்கள் கேட்டார்கள். ஆனால் உண்மையாதெனில் இவரைப்பற்றி அதிக விவரங்கள் கொடுத்த சமயத்தில், பொதுமக்கள் அதிக கவனம் செலுத்தவில்லை. சுமார் 15 வருஷகாலமாக சீன யுத்தத் தலைவர்களின் சைனிய நடமாட்டத்தைப்பற்றிய கதைகளை நான் படித்திருக்கிறேன். ஒரு சீன தளகர்த்தர், சீனக்கோட்டைச் சுவற்றிற்கு தெற்கேயும் சைனியங்களை நடத்திச் சென்றான், மறுபடி அவனே வடக்கு நோக்கியும் சென்றான். இதெல்லாம் ஒரு பெரிய விஷயமாகக் காணப்படவில்லை. O. M. கிரீன் என்பவர் சீனர்களைப்பற்றி சில மாதங்களுக்கு முன்பு சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார். அவர் சொன்னதாவது: "சைனாவில் ஸ்திரீகள் பூரா அங்கியையும், புருஷர்கள் சல்லடத்தையும் அணிந்துகொள்ளுகின்றனர். சீனர்கள் யாவரையாவது பார்த்தால், மரியாதை செய்வதற்காக தங்கள் கைகளையே குலுக்கிக்கொள்ளுகின்றனர். தேயிலை முதலியவை சாப்பிடும்போது திண்ணத்தின்மேல் தட்டை வைப்பதும் வழக்கம். வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திலும், மேலிருந்து கீழும் எழுதுகின்றனர். புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்திலிருந்து ஆரம்பித்தும் எழுதப்படுகிறது. சீனாவில் மாரிகாலத்தில் புல் சாம்பல் நிறமாயும், கோடையில் பசுமையாயும் இருக்கும், என்று உலகத்தில் ஐந்தில் ஒரு பங்குள்ள சீனர்களைப்பற்றி சாதாரணமான ஒரு அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## சைனாவின் கஷ்டம். ஜப்பானின் கொடுமைகள்.

ஆனால், சீனர்கள் 20 வருஷகாலமாகச் சண்டைசெய்துவருகின்றனர் என்றும், எல்லாவிதமான யந்திரப்படைகள், விமானங்கள், டாங்கிகளைக் கொண்டு ஜப்பானியர்கள் சீனாவை முதலில் ஆக்கிரமித்துக்கொண்டு பிறகு உலகத்தையே விழுங்க முயற்சித்து வருகிறார்கள் என்றும் நமக்குத் தெரியும். ஷாங்காயில் சீனர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் கடும் யுத்தம் நடந்தது. அந்த கடும் சண்டையைக் கேட்டபோது லண்டனிலேயே சண்டை நடந்தமாதிரி காணப்பட்டது. சீனாவின் மேற்கே புதிதாக சீனர்கள்



அமைத்துக்கொண்டுள்ள சுங்கிங் பட்டணத்தையும் மிகக் கடுமையாக ஜப்பானியர்கள் குண்டுகளை வீசி பாழாக்கினர். 1937 டிஸம்பரில் நான்கிங் பட்டணத்தில் ஜப்பானியர் செய்த கொலை, கொள்ளை முதலியவைகளைப்பற்றி செய்திகள் கிடைத்தன. இவைகளை நேரில் பார்த்த ஒரு அமெரிக்க வியாபாரி விவரங்களைக் கொடுத்தார்: "ஜப்பானியர்கள் மனிதப் பிசாசுகளைப்போல் நடந்துகொண்டார்கள். நகரின் மேற்கு வாசலை உடைத்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து ஆயிரக்கணக்கான ஜனங்களை வெட்டித் தள்ளினார்கள். அச்சமயத்தில் நகரினுள்ளிருந்து வெளியே வண்டிகள் வரும்போது பிணக்குவியல்களின்பேரிலேறி வரவேண்டியிருந்தது. சண்டையில் பிடிபட்ட யுத்தக் கைதிகளைக் கூட்டமாக ஜப்பானியர் கொலைசெய்தனர். உயிரோடு சீன ஸ்திரீ புருஷர்களைக் குறியாக வைத்துக்கொண்டு ஜப்பானியர் கத்திப் பழக்கம் பழகிவந்தனர். இவ்வளவும் சுமார் 4 வருஷங்களுக்கு முன்பு, அதாவது ஹிட்லர் ஐரோப்பாவில் இம்மாதிரி செய்ய ஆரம்பித்ததிற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடைபெற்றன. இவ்வளவு ஹிம்சைக்குமேல் வீடு வாசலில்லாமல் திரியும் 3,00,00,000 சீனர்களுக்கு பஞ்சம், ரத்தக்கடுப்பு, ஜுரம், காலரா முதலியனவும் வந்து பாதித்தன. இவ்விதம் கஷ்டப்படுகிறவர்களின் பரிதாப நிலைக்கு உதவுவதற்கு பணங்களை வசூல்செய்தோம். நாங்களும் அதிகமாகக் கொடுத்தோம். 1,50,00,000 டாலர்கள் வசூலாயின. இதைக்கொண்டு பலருக்கு உதவியளிக்கப்பட்டது. இருந்தாலும் 20,00,000 பேர்கள் இறந்தனர். இதுதான் சீனாவில் ஜப்பானியர் செய்த நன்மை.

## 1931-முதல் சண்டை.

ஆகவே நாம் இப்போது செய்யும் சண்டையை சைனா முன்னாடியே ஆரம்பித்து நடத்திக்கொண்டு வருகிறதென்பதையே அநேகம்பேர்கள் தெரிந்துகொள்ளவில்லை. இப்போது நடக்கும் யுத்தம் 1931 ஸெப்டம்பரிலேயே ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லலாம். ஏனென்றால், அவ்வமயம்தான் மஞ்சூரியாவை நோக்கி ஜப்பானியர் பெரும் எதிர்ப்பைச் செய்தனர். அந்த சமயங்களில் அமெரிக்க ஐக்கியநாட்டுக் காரியதரிசியான மிஸ்டர் ஸ்டிம்ஸன் பெரும் சிரமம் எடுத்துக்கொண்டு சர்வதேசச் சங்கத்தின்மூலமாக ஜப்பானின் ஆக்கிரமணத்தைத் தடுக்க முயற்சித்தார். 'அப்படிச் செய்யாவிட்டால் பெரும் சண்டைகள் நிகழும் என்றும் அபிப்பிராயப்பட்டார். இவ்விதம் இவர் சொன்னபடி செய்யாதது ஒரு தவறாயிற்று.

## சயாங் கை ஷெக்.

இவ்விதம் ஜப்பானின் அதிக்கிரமத்தைத் தடுத்துப்போராடியவர் சாங்கை ஷெக்தான். இவர் பெரிய போர் வீரன். ராஜதந்திரங்களையும் நன்குணர்ந்தவர். எதிரியைத் தடுக்க சைனாவில் ஒற்றுமை ஸ்தாபித்தார். சைனாவில் பலவிதமான தலைவர்கள் இருந்தபோதிலும் பொதுவான எதிரியைக் கண்டு அவனைத் தடுக்க யாவரும் ஒற்றுமைபெறும்படி சயாங்கை ஷெக் பாடுபட்டார்.

## பத்து வருஷ அவகாசம் தேவை.

1932-ல் சயாங்கை ஷெக் தனக்கு பத்து வருஷ அவகாசம் கொடுத்தால் பலம் ஏற்படுத்துவதாகக் கூறினார். ஆனால் 5 வருஷகாலம்தான் கிடைத்தது. அதற்குள்ளாகவே சைனா பலம்பெற்று வருவதைக்கண்டு இப்படியே விட்டுவிட்டால் சைனாவைக் கண்டுபிடிக்க முடியாது என்று பயந்து ஜப்பான் சைனாவோடு சண்டைதொடுக்க நினைத்தது. இருந்தாலும் சைனிய பலத்தை சயாங்கை ஷெக் விருத்திசெய்தே வந்தார். அந்த சமயத்தில் சைனாவில் வடக்கிலும் ஷாங்கேயிலும், காண்டனிலும் ஜப்பானியப் படைகள் நுழைந்தன. சயாங் கை ஷெக்கின் தலைமையில் சீனர்கள் தைரியமாக நின்று சண்டைசெய்தனர். அந்த சமயத்தில்தான் பிரதேசத்தை சிறிது எதிரிக்கு விட்டுக்கொடுத்தாலும் எதிரியின் கால திட்டத்தை முறித்து தான் பலப்படுத்திக் கொள்ளுவது என்ற முறையை சயாங்கை ஷெக் கையாண்டுவந்தார். முடிந்தவரை எதிரியை யுத்தகளத்தில் எதிர்த்து பிறகு கொஞ்சம் பின்வாங்குவார். ஜப்பானியர்களைப்போல் சமமான சைனியத்தைக் கொண்டிருந்தார். ஆனால் 150 விமானங்களும், சில டாங்கிகளும்தான் இருந்தன. பீரங்கிப்படை மிகக்குறைவு.

### பிரதேச மாற்றம்.

எதிரிகளை எதிர்த்துத் தற்காப்பு செய்துகொண்டிருக்கும்போதே சைனாவின் மேற்கே தேசாபிமானமுள்ள பல சீனர்கள் சென்றனர். தொழிற்சாலைகளும், கலாசாலைகளும் மேற்குப் பக்கத்திற்கு மாற்றப்பட்டன. அப்படிச் செய்யாமலிருந்தால் ஜப்பானியருடைய வசப்பட்டு ஜீவனத்தையும், உயிரையும் இழக்கநேரிடுமென்று சீனர்கள் தெரிந்துகொண்டனர். சில ஏழை சீனக் குடியானவர்களின் குடிசைகளும் தோட்டங்களும் அழிந்துபோனதால் வேறு வழியில்லாமல் திண்டாட வேண்டியதாயிற்று. இவர்களும் சிலர் மேற்கேதான் போகவேண்டிவந்தது. இப்படி நாட்டைவிட்டுப்போகும் ஜனங்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமாகவே தானிருக்கும். 400 தொழிற்சாலைகளின் சாமான்களையும், உலகத் தொழிற்சாலை சாமான்களையும் மருந்து பருத்தி, மாவு, பேபர், இரும்பு, எஃகு, நிலக்கரி சுரங்கம் முதலிய தொழிற்சாலைகளை அப்புறப்படுத்தினார்கள். இவ்விதமாகச் சுமந்துசென்ற சாமான்கள் 1,20,000-டன் சுமையிருக்கும். இவைகளை மனிதர்களே சுமந்துசென்றனர். 3,000 மைல் தூரத்திற்கு அப்பால் இவையாவும் தூக்கிச் செல்லப்பட்டன.

### பெரும் தியாகம்.

வெகுநாட்கள் வரையில் யெல்லோ (மஞ்சள்) நதியினால் பல சாதகங்களும் பாதகங்களும் ஏற்பட்டதாகச் சீனர்கள் கருதிவந்தனர். இந்நதியின் உதவியால் நிலங்களைப் பயிரிடமுடிந்தது. ஆனால் சில வருஷங்களுக்கு ஒரு முறை இந்நதி உடைத்துக்கொண்டு ஆடு,மாடு, வீடு முதலியவைகளை அழித்துவிடும். ஆகவே சீனாவிற்கு உண்டாகும் கவலை இந்நதியில்தான் உண்டாயிற்று என்று சொல்லப்பட்டது. நான்கு வருஷங்களுக்கு முன்பு சீனர்கள் தாங்களாகவே இந்நதியை உடைத்துவிட்டனர். இந்நதியால் உண்டான லாபங்கள் கெட்டுவிட்டன. எவ்வளவோ பேர்கள் மாண்டனர். பசியால் எவ்வளவோ பேர்கள் பாதிக்கப்பட்டனர். இப்படிச் செய்வதால் ஜப்பானியரின் முன்னேற்றம் தடைபட்டது. இதைப் போல ஹாலந்தில் 400 வருஷங்களுக்கு முன்பு ஸ்பானியர்கள் உட்புகுரும் சந்தர்ப்பத்தில் கடலை வெட்டி தண்ணீரை நாட்டினுள் பிரவஹித்து ஸ்பானியர்கள் அவஸ்தைப்படும்படியாயிற்று. நாஸிகளுக்கு நீபர் அணையால் ஏற்படும் சௌகரியங்கள் கிடைக்காமல் ருஷ்யர்களும் நீபர் அணையை உடைத்துவிட்டனர். சீனர்களின் யுக்திதான் மற்றவர்களாலும் பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்விதமாகச் செய்ததால் ஜப்பானியரின் முன்னேற்றம் தடைப்பட்டது. அச்சமயத்தில் சயாங் கை ஷெக் சீனப் படைகளை பத்திரமாக மேற்கே அழைத்துச் சென்றான். அங்கே மறுபடி பயிற்சி கொடுத்து சண்டைக்குத் தயாராகச் செய்யப்பட்டன.

### பர்மா ரஸ்தா.

மேற்கு சைனாவிலிருந்து அதிகப் பிரயாசையின் பேரில் 1,000-மைல் நீளத்தில் மலைகளைக் குடைந்து, காடுகளை அழித்து பர்மா ரஸ்தாவைப் போட்டனர். இதன் வழியாக தொழிற்சாலை சாமான்களையும், சைனிய உதவிகளையும் பெற்றனர். கேந்திரஸ்தானமான சாங்ஷா பட்டணத்தையும் சீனர்கள் பிடித்து 60,000 ஜப்பானியரைக் கொன்றனர். இதுவே சீனர்களின் தைரியத்திற்கு ஒரு அடையாளம். இப்பொழுது காண்டன் பட்டணத்தை நோக்கியும் சீனர்கள் படையெடுத்து வருகின்றனர். சீனப் படையில் 30.00,000 பேர்கள் இருக்கின்றனர். 3,00,00,000 பேர்கள் உபரியாகத் தயாராக இருக்கின்றனர். தங்களுடைய ஸ்வதந்திரத்திற்காகவும், நேசநாடுகளின் ஸ்வதந்திரத்திற்கும் சீனர்கள் சண்டைசெய்து வருகின்றனர். இதுதான் அவர்கள் மறைமுகமாக நமக்குச் செய்யும் உதவி. அவர்களைப்பற்றி நாம் ஒன்றும் தெரிந்துகொள்ளாமல்இருக்கக் கூடாது. மனோ வாக், காயங்களால் நம்மால் முடிந்த உதவியை அவர்களுக்கு நாம் செய்யவேண்டும்.

---



## ஜப்பானும், இஸ்லாமும்.

---

### மலேயாவிலுள்ள மசூதிகளின்பேரில் குண்டுகள் போடப்பட்டன.

### முஸ்லிம் கலாசாலை பாழாக்கப்பட்டது.

### முஸ்லிம்களை லஞ்சம் கொடுத்து வசப்படுத்த முயற்சித்தது பலிக்கவில்லை.

ஜோஸப் கால்மர் (எழுதியது).

மலேயா நாடுகளுக்குத் தலைநகரான கோலாலம்பூரில் 1941 டிஸம்பர் 26உ ஜப்பானிய விமானங்கள் குண்டுகளைப் போட்டன. அன்று வெள்ளிக்கிழமை; அது முகமதியர்களுக்குத் தொழும் தினமாகையால் ஓய்வு எடுத்துக்கொண்டு கடவுளைத் தொழுவது வழக்கம். அன்று ஜப்பானிய விமானங்கள் போட்ட குண்டு ஒரு மசூதி பேரில் விழுந்தது. இந்திய, மலேய முகமதியர்கள் அதில் நிரம்பியிருந்து தொழுதுகொண்டிருந்தனர். குண்டு விழுந்த காரணத்தால் சிலர் கொல்லப்பட்டனர். மற்றும் சிலர் காயமடைந்தனர். இவ்விதம் அந்த மசூதி பேரில் ஜப்பானியர் குண்டு போட்டதை ஏதோ அகஸ்மாத்தாக விழுந்ததாகச் சொல்லமுடியாது. வேணுமென்றே குண்டுகள்போட்டு பொதுமக்களுக்குப் பீதியை விளைவிப்பது என்பது ஜப்பானிய யுத்த முறையில் சேர்ந்ததுதான்.

இதற்கு மற்றும் ஒரு உதாரணம் இருக்கிறது. டச்சு போர்னியோவில் பாண்டியானக் என்ற இடத்தில் குண்டு வீசும்போது ஜப்பானியர்கள் துறைமுகத்திலிருந்த கப்பல்களைத் தாக்குவதற்குப் பதிலாக சீனர்கள் வசிக்குமிடத்தைப் பார்த்து குண்டுகள் போட்டனர். சீனர்கள் இருந்த தெருவுகளில் ஜப்பானிய யந்திர பீரங்கிகளையும் பிரயோகித்துத் தாக்கினர். இவ்விதமாக பொதுமக்களுக்கு இடையில் பயத்தை விளைவித்து பாதுகாப்புச் செய்து கொள்ளாமல் தடுப்பதுதான் ஜப்பானியரின் முக்கிய கருத்து.

இதுதான் மலேயாவிலேயே ஒரு பெரிய மசூதி. இதில் குண்டு தற்செயலாக விழுந்ததாக ஜப்பானியர்கள் சொல்லுகின்றனர். ஆனால் ஜெர்மானியரைப்போல ஜப்பானியருக்கும் மத விஷயங்களில் அசட்டையான புத்தி இருக்கிறதென்று பின்பு தெரியவந்தது.

### வேத புஸ்தகங்கள் தெருக்களில் எறியப்பட்டன.

மலேயாவில் டிரன்கானு என்று ஒரு ஸமஸ்தானம் இருக்கிறது. கோலாலம்பூரை ஜப்பானியர் தாக்கியதற்கு நாலு நாட்களுக்குப் பிறகு டிரன்கானுவிலிருந்து சிங்கப்பூருக்கு சிலர் தப்பி ஓடிவந்தனர். இவர்கள் ஜப்பானியரின் சில அக்கிரமச் செய்கைகளைச் சொன்னார்கள். அதாவது முஸ்லீம் குருமார்களுக்கு பாடம் போதிக்கும் ஒரு கலாசாலையினுட்புகுந்து குரான் முதலிய வேதப் புஸ்தகங்களை வெளியே எறிந்தனராம். அங்குள்ள பூஜாக் கிருஹத்தில் ஜப்பானிய விக்ரஹங்களையும் ஸ்தாபித்தார்களாம்.

ஜப்பானுக்குத் தலைநகரமான டோகியோவிலிருந்து ஒலிபரப்புகள் மூலம் மலேயாவிலும் இதர பிரதேசங்களிலும் உள்ள முஸ்லீம்களையும் அவர்களுடைய மசூதிகளையும் பிரத்யேகமாக கௌரவிக்கப்படும் என்று ஜப்பானியர்கள் வாயால் சொல்லிவந்தனர். ஆனால் அப்படி சொல்லிக்கொண்டிருக்கும்போதே பினாங்கிலுள்ள மசூதிபேரில் குண்டுகள் விழுந்தன. ஆகவே ஜப்பானியரின் பொய்ப் பிரசாரத்திற்கு இணங்காமல் மலேயாவிலுள்ள முகமதியர்கள் ஜப்பானியர்களை எதிர்த்தது சரிதான்.

அதிகமாகக் காயமடைந்தவர்களுக்குள்ளே செலுத்த திடமானவர்களுடைய ரத்தத்தைக் கொடுக்க யாவரும் தயாராக இருந்தனர். இந்த ரத்தத்தை ஜப்

பெட்டிகளில் அடைத்துவைத்து தேவையானபோது உபயோகம் செய்யப்படும். இவ்விதம் ரத்தம் கொடுப்பது என்பது மத விரோதமில்லை என்று முகமதிய குருவும் பிரசித்தமாக அறிவித்தார். ஆயிரக்கணக்கான முஸ்லீம்களுடைய ரத்தம் எடுத்து யுத்தத்தில் ஈடுபட்டு அதிகக் காயமடைந்த துருப்புகளுக்குக் கொடுத்து மலேயாவை ஜப்பானியரிடமிருந்துமீட்ட் பலர் முன்வந்தனர்.

## ஜப்பானியருக்கும் முஸ்லிம்களுக்குமுள்ள பாந்தவ்யம்.

இதே சமயத்தில் ஜெருஸலத்தில் முன்பு இஸ்லாம் மதாசாரியராக இருந்த ஹொஜ் அமின் எல் ஹூஸ்ஸேனி ஜப்பானிய விஷயங்களை ஜெர்மனிக்கு அறிவிக்கும் நிருபரிடம் சில செய்திகளை அனுப்பினார். இவர் ஹிட்லரின் பிரசார ஏஜெண்டாக சமீபத்தில் நியமிக்கப்பட்டார். முஸ்லீம்களை விடுவிக்கவே ஜப்பானியப் படையெடுப்பு துவக்கப்பட்டிருப்பதாக இவர் சொன்னார். மேலும் பிரிடிஷ்சாரர்களுக்கு அறியாத வண்ணமாக முஸ்லீம்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் நெருங்கிய பாந்தவ்யம் ஏற்பட்டிருப்பதாகவும் இவர் கருதினார். இவ்வித சம்பந்தத்தை ஏதோ அரசியல் முறையில் ஏற்பட்டதாக நாம் கருதலாமே தவிர பல இடங்களில் பிரம்மாண்டமாக நடக்கும் இந்த யுத்த நிலையில் இது மிகவும் அற்பமான விஷயமென்று நாம் இதைத் தள்ளிவிடலாம்.

இந்த சம்பந்தங்கள் உண்மையில் ஏற்பட்டவையல்ல. இவைகளை பலாத்காரமாக ஸ்தாபித்து வருகின்றனர். சமார் ஏழு வருஷங்களுக்குமுன்பு இபன்ஸாட் சலீப், ஸாடி அரேபியாவிற்கு அரசனாக ஆகலாம் போல் காணப்பட்டது. அச்சமயம் அதாவது 1934, அக்டோபரில் ஜப்பான் ஜெட்டாவிற்கு ஏஜெண்டுகளை அனுப்பி பருத்தி முதலியவைகளை விற்பதற்கு ஏற்பாடு செய்தது. சந்தர்ப்பம் சரியாக இல்லாததால் அச்சமயம் நிரந்தரமான சம்பந்தம் ஏற்படவில்லை. சம்பந்தம் ஏற்படாததற்கு மற்றொரு காரணம் உண்டு. தேசாக்கிரமணம் என்ற தனது நோக்கத்திற்கு ஏற்றவாறுதான், இஸ்லாம் கொள்கையை ஜப்பான் பின்பற்றுகிறது. இது பலிக்கவில்லை. ஸிங்கியாங்கிலுள்ள முஸ்லீம்களைப் பணம்கொடுத்து ஏமாற்றி தனக்குச் சாதகமாகச் செய்ய முயன்றது பலிக்கவில்லை. ஏனென்றால் இப்பிரதேசத்தின் வழியாக ருஷ்யச் சாமான்கள் சுங்கிங்கிற்கு சீனர்களின் உதவிக்கு வருவதைத் தடுக்கவே ஜப்பான் பிரயத்னப்பட்டுப் பார்த்தது. முஸ்லீம்கள் ஜப்பான் வசப்படவில்லை.

## முஸ்லிம் தளகர்த்தரின் எதிர்ப்பு.

1931-ல் மஞ்சூரியாவை ஜப்பானியர் படையெடுத்தபோது சீனப்படைக்கு மா ஷான்--ஷான் என்ற ஒரு முஸ்லீம் தலைமை வகித்து ஜப்பானியரை எதிர்த்து வந்தான். பிறகு ஜப்பானியர் இவனையே யுத்த மந்திரியாக நியமித்தனர். ஆனால் மா ஜப்பானியத் துப்பாக்கி முதலியவைகளை தனது ஆட்களுக்குக் கொடுத்துத் தயார்செய்துகொள்ளும் வரை இப்பதவியை வகித்து பிறகு தனது ஆட்களுடன் ருஷ்யாவிற்குள் சென்றுவிட்டான்.

ஸிங்கியங்கிலுள்ள முஸ்லீம்களுக்குத் தகுந்தவிதமாகப் பிரசாரம் செய்ய அயோக்யனான அப்துல் ஹாய் என்பவனை ஜப்பானியர் நியமித்தனர். இவன் ருஷ்ய-துருக்கிஸ்தானிலிருந்து வந்தவன். முன்னமேயே வெள்ளை ருஷ்யா (White Russia)-விலுள்ள சிலரைக் கூட்டிக்கொண்டு ருஷ்ய அரசாங்கத்திலிருந்து மஞ்சூரியாவிலுள்ள ஹார்பினுக்கு ஓடிவந்தவன். இப்பேர்ப்பட்டவன் டோகியோவிற்கு வந்து மொஸின்பெக் என்பவனை உதவிக்கு வைத்துக்கொண்டு 1934-ம் வருஷம் நவம்பர் மீ 20உடல் இஸ்லாம் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி கோப் பட்டணத்தில் ஒரு சிறு மசூதியையும் கட்ட ஆரம்பம் செய்தான். ஆனால் இவ்விருவர்களும் சீன-துருக்கிஸ்தானில் ஜப்பான் பேரில் மனக்குறைவு கொண்டுள்ள முஸ்லீம்களுக்கு ஆயுதங்கள் அனுப்புவதிலேயே முக்கியமாக ஈடுபட்டு இருந்தனர். 1934-க்குப் பிறகு இச்சாமான்கள் திபேத் வரையிலும் வந்து சேர்ந்தன. மேலும் சீன-துருக்கிஸ்தானுக்கு 30 முதல் 100-லக்ஷம்வரை டாலர்களும் அனுப்பப்பட்டது. சீன யுத்தம் ஆரம்பமானவுடன் இப்பணம் இன்னும் அதிகமாக்கப்பட்டது. ஸிங்கியங் கவர்னராயிருந்த ஷென் ஷிட்-ஸ் என்பவன் ருஷ்யாவிலிருந்து சுங்கிங்கிற்கு யுத்த சாமான்கள் வராமல் தடுப்பான் என்று இச்சமயங்களிலெல்லாம் ஜப்பானியர் நினைத்தனர். ஏனென்றால் இந்த கவர்னர் ஜப்பானிய ராணுவ கலாசாலையில் தேர்ச்சி பெற்றவனும். ஆனால் இந்த சந்தர்ப்பத்திலும் ஜப்பானியர் ஏமாந்துபோயினர். ஷென் ஷிட்ஸ் என்பவன் ஜெனரல் சயாங் கை ஷெக்கின் அந்தரங்கமான நண்பன். ஆகவே ஜப்பானியர் தந்திரம் பலிக்கவில்லை.

கன்ஸு, நிங்ஸியா என்ற சீன மாகாணங்களுக்கும் ஜப்பானிய ஏஜெண்டுகள் அனுப்பப்பட்டனர். முஸ்லீம்களுள்ள தென்கிழக்கு ஆசியா பாகங்களுக்கும் அனுப்பி ரகசிய சூழ்ச்சிகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. சீன யுத்தம் ஆரம்பமானவுடனே ஆங்காங்குள்ள முகமதியர்கள் ஜப்பானுக்குச் சாதகமாக வருவார்கள் என்றும் நினைத்தனர். உண்மையில் சீனாவுக்குச் சாதகமாக முகமதியர்கள் நின்று ஜப்பானியரை எதிர்த்தனர்.

---

## விமான நிலயங்களையும் தற்காப்புச் செய்யவேண்டும். பிரிடிஷ் விமானப்படைச் சைனியத்தின் அலுவல்கள். விமானப்படையின் வேலை சுலபமாயிற்று. இதைக்கொண்டு எல்லாவித காபந்தும் செய்யமுடியாது.

**(Liet. Gen. Sir.** டக்ளஸ் பிரௌன்ரிக் எழுதியது).

இந்த யுத்தம் மூன்று ஸ்தலங்களில் நடந்துவருவதில் விமான ஆதிக்கத்தை இழந்த நாடும், விமானபலமே இல்லாத நாடும் பின்வாங்கி வரவேண்டியதாக இருக்கிறது. இவ்விஷயத்தை சென்ற வாரத்திலேயே நான் யுத்த விமர்சனம் செய்தபோது வற்புறுத்தியிருக்கிறேன். இவ்வாரத்திலேயே அது சம்பந்தமான விஷயத்தைப்பற்றியே சொல்லுகிறேன். அதாவது விமான ஆதிக்கம் பெறுவதானால் முதலாவதாக விமான நிலயங்களின் தற்காப்பை மிகவும் அவசியமாகச் செய்யவேண்டும். இது விஷயத்தைப்பற்றி முடிவான அபிப்பிராயம் சிலருக்குத் தெரியாமலேயே இருக்கிறது. ஆனால் விமானப்படையின் தனிப்பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு இவ்வலுவல்களை சுலபமாகவே செய்துவருகின்றன.

பீரங்கிகளிலிருந்து குண்டுகள் வெளியே கிளம்பி லக்ஷியங்களைத் தாக்குவது நமக்குத் தெரியும். அதைப் போலவே வெடிகுண்டு விமானங்கள் விமான நிலயங்களிலிருந்து கிளம்பிச் செல்லுகின்றன. பீரங்கிகளைப் பத்திரமான ஸ்தானத்தில் அமைத்திருந்தால் சுலபமாகத் தேவையான சமயத்தில் நாம் சுட முடியும். அதைப்போலு விமான நிலயங்களுக்குச் சமீபத்திலும் தூரத்திலும் காபந்து செய்யவேண்டும். விமான நிலயங்களுக்கு அருகில் துருப்புகள் நிறுத்தப்பட்டிருக்கும். இவர்கள் வசத்தில் விமான எதிர்ப்பு ஆயுதங்களும், யந்திர பீரங்கிகளும், மற்றும் சுலபமாக உபயோகிக்கக்கூடிய ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இவைகளைக் கொண்டு ரகசிய சூழ்ச்சிக்காரர்களையும், இதர எதிரிகளையும் தாக்க முடியும். இதைப்போல் விமான நிலயத்திற்கு சற்று அப்பாலும் காபந்து செய்யப்படவேண்டும். இது இரண்டு வகையாகச் செய்யப்படும். அந்த தூரத்தில் பைடர் விமானங்களும் வெடிகுண்டு விமானங்களும் வைக்கப்பட்டிருக்கும். பைடர் விமானங்களைக்கொண்டு விமான நிலயத்திற்கு சமீபித்துவரும் எதிரி விமானங்களை எதிர்த்துச் சண்டைசெய்யவேண்டும். வெடிகுண்டு அல்லது பாம்பர் விமானங்களை எடுத்துச்சென்று, எதிரி நாட்டிலேயே தாக்கி எதிரி விமானங்கள் அங்கிருந்து வெளிக்கிளம்ப முடியாமல் செய்யவேண்டும்.

### சமீபத் தற்காப்பு.

பிரிடிஷ் விமானப்படையைச் சார்ந்த சைனியம் சமீபத்தற்காப்பில் ஈடுபட்டிருக்கும். இச்சைனியத்தவர்கள் அந்தந்த நிலயங்களிலுள்ள அதிகாரிகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டும். இவர்களை மாத்திரம் கொண்டு நிலயத்தில்

எதிரி குண்டுகள் விழாமல் செய்யமுடியாது. ஆனால் இவர்கள் வசமுள்ள உபகரணங்களை உபயோகித்து, எதிரியைக் கொஞ்சம் தடைசெய்யலாம். உதாரணமாக மலேயாவிலுள்ள ஒவ்வொரு நிலயத்திலும் இவ்விதமான தனிப்பகுதிகள் இருந்தாலும் எதிரிக்குக் கொஞ்சம் தடை ஏற்பட்டிருக்குமே தவிர பூரா தடுத்திருக்க முடியாது.

இவ்வித தனிப்பகுதிகளை பழையகாலத்து பீரங்கிப்படைகளுக்கே ஒப்பிடலாம். பீரங்கி ஸ்தானங்கள் சரியாகக் காபந்து செய்யப்பட்டால்தான் உபயோகப்படும். விமான நிலயங்களில் எதிரி குண்டுகள் விழாமல் செய்யவேண்டுமானால் நாமும் ஆகாயத்தில் விமானங்களால் அவனைத் தடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். எதிரி நாட்டிற்கே சென்று அவனுடைய நிலயங்களைப் பார்த்து நாம் குண்டுகள் வீசி அவனுக்கு நஷ்டத்தை விளைவிக்கலாம். (இம்முறை மிகவும் வெற்றிகரமாகவே ஜெனரல் ஆசின்லக் கையாண்டார்). அல்லது பைடர் விமானங்களால் எதிரி விமானங்களைத் தாக்கலாம். இப்படிச் செய்தால் எதிரி விமானங்கள் நமது நிலயத்திற்கு அருகிலேயே வரமுடியாது. (இது பிரிடன்மேல் நடந்த சண்டையில் செய்யப்பட்டது). மலேயாவில் உள்ள விமான நிலயங்களுக்குச் சுற்றிலும் எதிரிகள் சூழ்ந்துவிட்டதால் எளிதில் அவர்கள் வசமாயின. வட ஆபிரிக்காவில் ஸிரெனைகாவில் நமது படைகள் இம்மாதிரியே செய்து எதிரி நிலயங்களைக் கைப்பற்றிக்கொண்டன.

## பீரங்கி தளங்கள்.

ஆகவே விமான நிலயங்களை நெடும் தூரம் சுடக்கூடிய பீரங்கிகள் அமைக்கப்பட்ட இடத்திற்குச் சமமாக நினைத்துக்கொண்டால் ஒருவித சிரமமன்னியில் தற்காப்பை அமைக்கலாம். இவ்வித பீரங்கி ஸ்தானங்கள் வெகுதூரம் முன்னாடியே அமைந்திருந்தால் சீக்கிரத்தில் எதிரி வரமுடியாமல் தடுத்துவிடலாம். கோடாபாருவில் இவ்வாறு செய்யப்பட்டது.

இவ்விதமான படையைக்கொண்டு எல்லாவிதமான விமானதளத்தற்காப்புகளையும் செய்துவிட முடியாது. ஆனால் விமானப்படையின் வேலைகளைச் சுலபமாக செய்யமுடிந்தது எதிரிகள் ரகசியமாயும், விமானக் குடைகள் மூலமாயும் வந்துவிட முடியாது. விமானாதிக்கம்தான் வெற்றிக்கு முக்கிய சாதனம். இதற்காக விமான தளங்களை நன்றாகக் காபந்து செய்யவேண்டும். மேலும் எதிரி விமான தளங்களையும் தாக்கிக் கெடுக்கவேண்டும். எதிரிகளின் தளம் கெடுதலையடைந்தாலும் எளிதில் பழுதுபார்த்து உபயோகிக்க முடியுமாதலால் எதிரி நாட்டிலும் சண்டையைத் தொடுக்கவேண்டும். இப்பாடத்தை நாம் கிரீட்டில் கற்றுக்கொண்டோம். லிபியாவில் இவ்விதமாகச் செய்துதான் வெற்றியடைந்தோம்.

---

## தூரக்கிழக்குப் பிரதேசங்களில் உற்பத்தியாகும் பொருள்கள்.

## இப்பொருள்கள் உற்பத்தியாகும் பிரதேசங்களை எதிரிகள் பிடித்துக்கொண்டதால் நேசதேசங்கள் எவ்வாறு பாதிக்கப்படும்.

## அவ்வாறு நஷ்டமேற்பட்டதை எவ்வாறு ஈடுசெய்யலாம்.

இப்பொழுது தூரக்கிழக்கில் ஜப்பானுக்கு ஏற்பட்ட வெற்றிகளினால் மலேயா, இந்தோ-சைனா, ஸயாம் இந்த ஊர்களிலிருந்து ரப்பரும், வெள்ளீயமும், புருனே, ஸராவாக், டாரகான், இவைகளிலிருந்து எண்ணெயும், பிலிப்பைன்ஸிலிருந்து க்ரோம் தோலும், பர்மாவிலுள்ள டாவாயிலிருந்து டங்ஸ்டனும் (Tungstan) இந்தோ-சைனாவிலிருந்து நிலக்கரி (Anthracite)யும், பிலிப்பைன்ஸ், மலேயா இவ்வூர்களிலிருந்து இரும்பு உருக்கும், மாங்கனீசும் (Manganese) கிடைத்திருக்கின்றன. இன்னும் இந்தோ-சைனாவிலிருந்தும், ஸயாமிலிருந்தும், ஏராளமாக அரிசி ஜப்பானுக்குக் கிடைத்திருக்கின்றது. இத்தகைய நஷ்டங்களினால் நேசதேசங்கள் எவ்வாறு பாதிக்கப்படும் என்று கீழே சுருக்கமாகக் குறிப்பிடுவோம்



(a) ரப்பர்.—1940-ம் வருஷத்தில் தற்சமயம் ஜப்பான் ஆக்கிரமித்த பிரதேசங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ரப்பர் டன் நிறைக்கணக்கிலும், உலகம் பூராவும் ஏற்றுமதியாவதில் இதன் சதவிகிதமும் அடியில் கண்டிருக்கிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலேயா ... | 5,40,417 | டன்கள் | உலக உற்பத்தியில். | 38·9 | சதவிகிதம். |
| இந்தோ-சைனா | 64,437 | ,, | ,, | 4·6 | ,, |
| ஸயாம் ... | 43,940 | ,, | ,, | 3·2 | ,, |
| ஸராவாக்கும் வடபோர்னியோவும். | 52,789 | ,, | ,, | 3·8 | ,, |

மேற்சொன்ன இடங்களிலிருந்து ரப்பர் வருவது நின்றுவிட்டதால், 1941-ம் வருஷத்தில் நம்முடைய தேவைக்குத் தகுந்தபடி நாம் எதிர்பார்த்த இறக்குமதியில் நமக்கு 1,30,000 டன்கள் குறைந்துபோயிற்று. ஆனால் இவ்விதம் ஏற்பட்ட குறைவை கழிவுபட்ட ரப்பரைப் புதிப்பித்துத் தயாரிக்கப்படும் ரப்பரை அதிகமாக உபயோகப்படுத்தவதாலும், அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் (U. S. A.) முறையில் ரப்பர் தயாரிப்பதை அபிவிருத்தி செய்வதாலும், வெகு சிரமமன்னியில் ஈடுசெய்துவிடலாம்.

ஜப்பானியர்கள் சுமத்திராவையும், போர்னியோவில் பாக்கியுள்ள பிரதேசங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டுவிட்டால், அப்பொழுதுதான் நிலைமை மிகவும் கெட்டுவிடும். 1940-ம் வருஷத்தில் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளில் ரப்பர் உற்பத்தி 5,36,740-டன்கள். அதில் 80 சதவிகிதம் சுமத்திராவிலிருந்தும், போர்னியோவிலிருந்தும் வந்தது. மீதியுள்ள 20 சதவிகிதம் ஜாவாவிலிருந்து வந்தது. 38·6 சதவிகிதம் உபரியாக நஷ்டம் ஏற்படுவதினால் நேசதேசங்களுக்கு வேண்டிய தேவைக்கு 6,70,000-டன்கள் குறைந்துபோகும். மேலே சொன்ன 1941-ம் வருஷ திட்டப்படி பார்த்தால் 8,00,000-டன்கள் குறைந்துபோகும்.

இவ்விதம் ஏற்படும் குறைவை கீழே குறிப்பிடும் வழிகளால் ஈடுசெய்துவிடலாம். ரப்பரை சிக்கனமாக உபயோகப்படுத்துவது முதலாவது வழி. யுத்தத்திற்குமுன் ஐரோப்பாவில் எவ்வளவு ரப்பர் உபயோகப்படுத்தப்பட்டு வந்ததோ அந்த அளவில் பாதிதான் இப்பொழுது ஜெர்மானியரின் ஆக்கிரமிப்பிலிருக்கும் ஐரோப்பாவில் உபயோகிக்கப்பட்டுவருகிறது. பழைய ரப்பரை புதிப்பித்து அதிகமாக உபயோகப்படுத்துவது இரண்டாவது முறை. உதாரணமாக யுனைடெட் ஸ்டேட்ஸ் மோட்டார் வண்டிகளில் இருக்கும் டயர்களையும், ட்யூப்களை (tubes)யும் புதுப்பித்தாலே மொத்தத்தில் (சுமாராக ஒரு வருஷ உற்பத்தி அல்லது) 10,00,000 டன் நிறையுள்ள ரப்பர் இருக்கும். யுனைடெட் ஸ்டேட்ஸில் ரஸாயன முறையில் ரப்பர் தயாரிப்பதை வருஷத்திற்கு 4,00,000-டன்கள் ரப்ப கிடைக்கும்படியாக தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வது மூன்றாவது வழி ஆனால் புதிதாக யந்திரங்களை ஸ்தாபித்து ரப்பர் உற்பத்திசெய்ய ஆரம்பிப்பதற்கு பதினெட்டு மாதங்கள் செல்லும். நாலாவதாக கொஞ்சம் கொஞ்சம் விளையு பிரதேசங்களில் இப்பொழுதே அதிகம் விளையும்படி அபிவிருத்தி செய்வதுதான்

(b) வெள்ளீயம்.—1940-ம் வருஷத்தில் ஏற்பட்ட உற்பத்தியை டன் நிறைக்கணக்கிலும், உலகம் பூராவும் ஏற்றுமதியாவதில் சதவிகிதத்திலும் அடியில் கண்டிருக்கிறது :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸயாம் ... | 17,447 | டன்கள். | உலக உற்பத்தியில். | 7·3 | சதவிகிதம். |
| இந்தோ-சைனா | 1,560 | ,, | ,, | 0·7 | ,, |
| மலேயா ... | 85,384 | ,, | ,, | 35·9 | ,, |

இத்துடன் ஜப்பானில் உற்பத்தியாகும் அளவு உள்பட மொத்த உலக உற்பத்தியில் 45 சதவிகிதம் போக பாக்கி 55 சதவிகிதம் நேசநாடுகளுக்குச் சேரும் உலகத்தில் உற்பத்தியாகும் மொத்தத்தை 2,40,000-டன்கள் இதுவரையில் உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு சமீபத்தில் நேசநாடுகள் உபயோகப்படுத்திக் கொண்டுவந்தன. ஜப்பானின் வெற்றியினால் இந்த ஐட்டத்தில் ஏற்படு குறைவையும் வெகுஎளிதில் ஈடுசெய்துவிடலாம்.

ஜப்பானியர்கள் டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகள், பங்கா தீவு, சிங்கப்பூருக்குத் தெற்கேயுள்ள பெலிடாங் லிங்கேப் இவைகளில் வியாபித்துக்கொண்டால் உபரியாக 44,563 டன்கள் அல்லது உலக உற்பத்தியில் 18·7 சதவிகிதம் நேசநாடுகளுக்குக் கிடைக்காமல் போய்விடும். முதலாவதாக இதில் ஏற்படும் குறைவை நைஜீரியா பெல்ஜியர்களுக்குச் சொந்தமான காங்கோ, பொலிவியா, ஆஸ்திரேலியா, காரன்வால் இன்னும் மற்ற இடங்களில் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதின் மூலம் ஈடுசெய்து கொள்ளலாம். அடுத்தபடியாக சிக்கனமாக உபயோகப்படுத்துவது, அல்லது அதற்குப்பதிலாக வேறு எந்த சாமானையாவது உபயோகப்படுத்துவது, மேலும் கழிக்கப்பட்ட பொருள்களை மீண்டும் கைப்பற்றி புதிப்பித்துக்கொள்ளுவது, இவ்வழிகளால் ஈடுசெய்துகொள்ளலாம். மூன்றாவதாக யுனைடெட் ஸ்டேட்ஸில் இப்பொழுது கைவசமுள்ள, அதாவது 1,00,000-டன்களுக்கு அதிகமாகவே இருப்பதாக மதிக்கப்படும் வெள்ளீயத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுவது.

(c) எண்ணெய்.—1940-ம் வருஷத்தில் ப்ருனே, ஸராவாக், டாரகான் இவ்விடங்களிலிருந்து 16,00,000-டன்கள் அல்லது உலக உற்பத்தியில் 0·5 சதவிகிதம் எண்ணெய் கிடைத்தது. ஜப்பான் ஆக்கிரமிப்பதற்கு முன்னால் நம்மால் எண்ணெய்க் கிணறுகள் சேதமாக்கப்பட்டுவிட்டன. அதனால் கொஞ்சகாலம் வரை முழுஉற்பத்தியையும் எதிரிகள் அடையமுடியாது. போர்னியோவிலுள்ள பாலிக்பாபன், சுமத்திரா, ஜாவா இவைகளையும் அங்குள்ள எண்ணெய் சுத்தம் செய்யும் சாதனங்களுடன் ஜப்பான் கைப்பற்றிக்கொண்டாலும், முக்கியமாக பாலம்பாங்கிலுள்ளவைகளைக் கைப்பற்றிக்கொண்டால் உயர்தர பெட்ரோல் பஸிபிக் பிராந்தியத்தில் நேசதேசத்தார்களுக்குக் கிடைக்காமல் போய்விடும். ஆனால் ஜப்பானுக்கோ 88,71,000-டன்கள் அல்லது உலக உற்பத்தியில் 3·1 சதவிகிதம் லாபமாகும்.

(d) மற்ற முக்கியமான நஷ்டங்கள் பிலிப்பைன்ஸில் தயார் செய்யக் கூடிய க்ரோம் தோல். சமீபத்தில் அது அதிகரித்திருந்தாலும்கூட, யுத்தத்திற்கு முன் உள்ள உலக உற்பத்தியில் 3-முதல் 5-வரை சதவிகிதம் நேசதேசத்தார்களுக்கு நஷ்டம் ஏற்படலாம். உலக உற்பத்தியில் சுமார் 8 சதவிகிதமிருக்கும் டாவாயிலுள்ள டங்ஸ்டனும் (Tungstan) கிடைக்காமல் போய்விடும்.

(e) ஜப்பானியர்கள் ஜாவாவைப் படித்துக் கொண்டால் அங்கிருந்து ஸப்ளையாகும் உலக உற்பத்தியில் 90 சதவிகிதம் சுரப்பட்டை (Quinine) அவர்கள் வசமாய்விடும்.

---

## கடல் யுத்தத்தின் கோட்பாடுகள்.
## ஏராளமாக பிரதேசங்கள் நஷ்டமடைவது பிரமாதமல்ல.
## ஆனால் கடல் ஆதிக்கம் தான் முக்கியம்.
## கப்பற்படைகளை ஒன்று சேர்த்துவைப்பதின் அவசியம்.

(H. C. பெர்ரேபி என்பவர் எழுதியது).

இப்பொழுது ஜப்பான் மலேயாவிலும், பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் பிரமாதமாக யுத்தம் புரிந்துவருகிறது. இவ்விரு போர்முனைகளிலும் அது யுத்தம் செய்வதற்குக் காரணம் என்னவென்றால், நேசதேசங்களுக்குச் சொந்தமான கப்பற்படை தளங்களான சிங்கப்பூர், காவைட் என்பவைகளைப் பிடித்துக் கொண்டு, அவைகளை நேசதேசங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளாமல் செய்வது தான். ஜப்பான் யுத்தத்தில் இறங்கிய காலத்தில் ஜப்பானுடைய யுத்த தந்திரம் என்னவென்று நமக்குத் தெளிவாகத் தெரியாவிட்டாலும், இப்பொழுது தெளிவாகிக்கொண்டுவருகிறது. அது தற்காப்பு யுத்த தந்திரம்தான். அதன் எதிரிகளுக்குச் சொந்தமான கப்பற்படைகளை வெவ்வேறு இடங்களில் பிரிப்பதற்கு உத்தேசங்கொண்டு, ஜப்பானியர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கு வெகுதூலையில் இருக்கும் எதிரிகளுக்குச் சொந்தமான பிரதேசங்களைத் தாக்க ஆரம்பித்தார்கள்.



வெளிப்பார்வைக்கு ஜப்பானின் இந்த யுத்த தந்திரம் பலனளிக்கும் என்று தோன்றிற்று. ஆனால் அது திட்டம்போட்டபடி நடக்கவொட்டாமல் நேசநாடுகள் செய்துவிட்டன. அதன் சூழ்ச்சியில் நேசநாடுகள் அகப்பட்டுக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களுடைய பிரதேசங்களை எச்செலவிலும் காப்பாற்றிக்கொள்ள முற்சிப்பார்கள் என்ற ஜப்பானியரின் எண்ணத்தில் மண் விழுந்தது.

## யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜப்பானின் சூழ்ச்சியில் அகப்பட்டுக்கொள்ளவில்லை.

யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள யுத்தத்தில் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஜப்பானிய சூழ்ச்சிகளுக்கு மசியமாட்டார்கள். இதுவரை நாம் அமெரிக்காவுக்குச் சொந்தமான பஸிபிக் கப்பற்படையாவது, அதன் சில பகுதிகளாவது ஹாவாயிலிருந்து, குவாமுக்காவது அல்லது மணிலாவுக்காவது, அல்லது தெற்கு சைனாக் கடலுக்குள்ளாவது பிரவேசித்து ஜப்பானியர்கள் கடல் மார்க்கமாகச் செய்துவரும் படையெடுப்புகளைத் தாக்கி தோல்வியடையச் செய்ததாக தகவல் ஒன்றும் கேள்விப்படவில்லை. அவ்விதமிருந்தால் தினசரி பத்திரிகைகளில் அமெரிக்கர்களின் வெற்றிகளைப்பற்றி பெரும், பெரும் கொட்டை எழுத்துக்களால் தலையங்கங்கள் போடப்பட்டிருப்பதை நாம் பார்த்திருப்போம்.

ஆனால் அம்மாதிரி செய்வது சரியான யுத்த தந்திரமல்ல. பிலிப்பைன்ஸைப்போலுள்ள தீவுகள் விஸ்தீர்ணத்தில் ஒரு பெரிய கப்பற்படையைவிட பெரியதாய்த்தானிருக்கும். தீவுகள் நம்மள் வசமிருப்பது உண்மையில் சாதகம் தான். ஆனால் அவைகள் மட்டில் இருப்பது யுத்தத்தில் நமக்குப் போதாது. வெரும் தீவுகளும் துறைமுகங்களும் இருந்தால் மட்டில் கடல் ஆதிக்கம் பெறுவது முடியாது. கடல் ஆதிக்கத்திற்குத் தீவுகள், துறைமுகங்கள், கப்பற்படை தளங்களாகவும், கடற்படைக்குவேண்டிய சாமான் சேகரிக்கும் இடங்களாகவும் உபயோகப்படுகின்றன. கடல்போரில் நமக்குச் சொந்தமான சில தீவுகள் பிடிபடுவது நமக்கு மிகவும் சிரமத்தைக் கொடுக்கலாமே தவிர, அதனால் நமக்கு தோல்வி ஏற்பட்டுவிடாது.

## இம்மாதிரி சாம்ராஜ்யத்திலுள்ள ஒரு பிரேதசத்தை நாம் இழப்பதால் என்னவிளையும் என்பதற்கு ஒரு உதாரணம்.

உதாரணமாக சில பிரதேசங்களை எதிரிகள் கைப்பற்றிக்கொண்டுவிட்டால், நேசதேசத்தார்களுக்கு என்னனென்ன கெடுதல்கள் சம்பவிக்கும் என்று பார்ப்போம். நேசதேசங்களுக்குச் சொந்தமான மலேயா, சுமத்ரா பூராவையும் ஜப்பானியர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு மலாகா ஜலசந்தியின் இருபக்கங்களும் எதிரிகள் வசமாய்விட்டதாக நாம் எண்ணிக்கொள்ளுவோம். நேசநாடுகளுக்கு பனாமா கால்வாய் அல்லது ஸூயஸ் கால்வாய் எவ்வளவு முக்கியமாக இருக்கின்றனவோ அதைப்போலவே மலாகா ஜலசந்தியும் அதிக முக்யத்வம் வாய்ந்திருக்கிறது. அதன் ஆதிக்கம்போய்விட்டால் நேசதேசக் கப்பற்படைகள் தெற்கு நோக்கித்தான் பின்வாங்கவேண்டும். இந்து மஹா சமுத்திரத்தில் ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் நுழைந்து, அங்கிருந்து கடற்சண்டைகள் துவக்கப்படும். இராக்கிலிருந்து, லிபியா வரையிலுள்ள மத்தியக் கிழக்குப் பிரதேசங்களில் நேசதேசங்களுக்குப் போக்குவரத்துகள் தடுக்கப்பட்டு விடும். மத்தியக் கிழக்கிலுள்ள நேசதேச சைனியங்களுக்கு எவ்வளவு யுத்தப்பொருள்கள் கடல் மார்க்கமாக நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா இவைகளிலிருந்தும் போய்க்கொண்டிருக்கின்றன என்ற விஷயம் அவைகள் சம்பந்தப்பட்ட நாடுகளுக்குமட்டில்தான் தெரியுமேயல்லாது மற்ற நாடுகளுக்கு இவைகள் பெரும்பாலும் தெரியாது. மலாகா ஜலசந்தியின் ஆதிக்கம் எதிரிகள்வசம் போய்விட்டால், மேற்சொல்லிய போக்குவரத்துக்கு அநேக இடையூறுகள் ஏற்பட்டுவிடும். ஜலசந்தியின் இரு பக்கங்களிலுமுள்ள பிரதேசங்களை ஜப்பானியர்கள் வியாபித்துக்கொண்டதினால் மட்டில் அவ்வித அபாயம் ஏற்படக்கூடும் என்று சொல்லமுடியாது. ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் ஜலசந்திவழியாக வரமுடிந்தால் அபாயத்தை விளைவிக்கக் கூடும்.

## விளைபொருள்கள் மட்டிலும் அல்ல.

தெற்கு சைனக்கடலிலுள்ள பல பிரதேசங்களில் ஜப்பானியர்கள் தரைச் சண்டைகள் போட்டு, அங்குள்ள ரப்பர், தகரம், எண்ணெய் முதலிய பொருள்களை அபகரிக்க நோக்கம் கொண்டிருப்பதாக, அநேகமாக நாம் எண்ணக்கூடும். ஆனால் ஜப்பானியர்களின் முக்கியமான எண்ணம் இவைகள் அல்ல. இந்த யுத்தத்தில் ஜப்பான் தோல்வியடையாமல் இருக்க வேண்டுமேயாகில் அது தூரக்கிழக்கின் கடலாதிக்கத்தைப் பெறவேண்டும். அதிலிருந்து அது தலைமை வகிப்பதை எதிர்த்து வரும் நேசதேசங்களின் கப்பற்படைகளுடன் தீவிரமாக் யுத்தம் புரிய வேண்டும். மேற்சொல்லிய விதமாக ஜப்பான் எதிர்த்து நிற்க முடியாமல் போனால், இப்பொழுது அவர்கள் பிடித்திருக்கும் பிரதேசங்களில் ஒரு அங்குலம் விஸ்தீர்ணமுள்ள இடங்கூட பாக்கியில்லாமல் யாவும் ஆதிஸ்வாந்தார்களுக்கே மறுபடியும் திரும்பி வந்துவிடும். இந்த ரகசியத்தைத் தெரிந்துகொண்டுதான், ஜப்பானியப் படைகள் தாக்கக்கூடிய இடங்களான கடற்கரைப் பிரதேசங்களைக் காபந்து செய்துகொள்வதற்காக நேசதேசத்தார்களை ஆங்காங்கு தங்கள் கப்பற்படைகளைப் பிரித்துவைக்கும்படி செய்வதற்கு ஜப்பானிய யுத்த அதிகாரிகள் முயற்சிக்கிறார்கள்.

## அமெரிக்கக் கப்பற்படையின் அலுவல்கள்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படை இலாகா அம்மாதிரி ஒன்றும் நடக்காது என்று தெளிவாக வெளியிட்டது, யுத்தம் 3,000 மைல்களுக்கப்பால் நடந்தபோதிலும், ஜப்பானியக் கப்பற்படைகளைத் தோற்கடிப்பதற்கு முக்கியவழி உயிர் நிலையாயுள்ள, மலாகா ஜலசந்தியை தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளுவதுதான். நேசதேசத்தார்களுக்குச் சொந்தமான கடற்கரை பிரதேசங்களில் வந்திருக்கும் ஜப்பானியத் துருப்புகளுக்கு மூலபலமாயுள்ள ஜப்பானியக் கப்பற்படையை அழித்துவிட்டால், ஒரு மரத்தின் அடிமரம் வெட்டுப்பட்டவுடன் எவ்விதம் அதன் கிளைகள் வாடிப்போய் விட்டு விடுகின்றனவோ, அதைப்போலவே ஆங்காங்குள்ள ஜப்பானியத் துருப்புகள் தானே அழிந்து விடவேண்டியதுதான். ஏனென்றால் ஜப்பானியத் தரைப்படைகள் தூரதேசங்களில் செய்துவரும் யுத்தங்களில் அவர்களுக்கு ஜப்பானியக் கப்பற்படைதான் முக்கியமாக உதவியளித்து வருகிறது. தற்சமயம் ஜப்பானியர்கள் கிழக்கு சமுத்திரத்தில் தங்கள் இஷ்டப்படி அமுல் செலுத்தும் விதமாகத் தோன்றுகின்றனர். ஆனால் அது வெளித்தோற்றம்தான். எப்படி இரண்டு மாதங்களுக்குமுன் லெனின்கிராட், மாஸ்கோ இந்நகரங்களுக்கு அருகாமையிலிருந்த ஜெர்மானியத் துருப்புகள் படையெடுப்பில் ஜயமடையக்கூடிய உன்னத நிலைமையில் இருப்பதாகத் தோன்றினார்களோ, அம்மாதிரிதான் இப்பொழுது ஜப்பானியர்கள் தோன்றுகிறார்கள். தென்மேற்கு பஸிபிக்கில் இனி வரப்போகும் பெரிய வெற்றிகள் சரித்திரப் பிரசித்தி அடையப் போகின்றன.

---

## நோட்டீஸ்.

தெற்குப் பிராந்திய ரெக்ரூட்டிங் ஆபீஸர் (Recruiting officer) கர்னல் F. C. வால் (ஹெட் ஆபீஸ், பங்களூர்) பிப்ரவரி மாதம் 20வ புதுக்கோட்டைக்கு வருவார். சைனியத்தைச் சேர்ந்த பலவிதமான தொழிலாளிகளையும், படித்த குமாஸ்தாக்களையும், ஸ்டோர் சிப்பந்திகளையும் பழக்குவதற்காகப் பொறுக்கி எடுக்கப்போகிறார். அபேக்ஷகர்கள் பிப்ரவரி மாதம் 21-ம் தேதியன்று புதுக்கோட்டை டவுனிலிருக்கும் ரெஸிடென்ஸி (Residency) கட்டடத்தில் இவரை பேட்டி காணலாம்.



## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 82—(4-வது பிரிவு).

| 1942— | | | | மணி. |
| --- | --- | --- | --- | --- |
| பிப்ரவரி ... | 16, திங்கட்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலே | 6 30 |
| | 17, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலே | 10.15 |
| | | வடவாளம் ... | மாலே | 6.00 |
| | | மழையூர் ... | ,, | 6.30 |
| | 18, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலே | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலே ... | ,, | 10.15 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | காரையூர் ... | மாலே | 6.00 |
| | | கீழத்தானியம் ... | ,, | 6.30 |
| | 19, வியாழக்கிழமை .. | நார்த்தாமலே ... | ,, | 6.00 |
| | | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| | 20, வெள்ளிக்கிழமை... | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | | கிள்ளனூர் ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 83—(5-வது பிரிவு).

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| | 21, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலே | 6.30 |
| | 22, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | | திருவரங்குளம் ... | ,, | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 23, திங்கட்கிழமை ... | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 6.30 |
| | 24, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலே | 10.15 |
| | | பள்ளிவாசல் ... | மாலே | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 25, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலே | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலே ... | ,, | 10.15 |
| | | குளவாய்ப்பட்டி ... | மாலே | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| | 26, வியாழக்கிழமை ... | ஆதனூர் ... | ,, | 6.00 |
| | | அரமனைப்பட்டி ... | ,, | 6.30 |
| | 27, வெள்ளிக்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் ... | ,, | 6.30 |

புதுக்கோட்டையின்

கீர்த்தியை நிலைநாட்டவும்!!.

ஸமஸ்தான

யுத்த நிதியை அதிகப்படுத்தவும்

பிப்ரவரி௴ 13௳ முதல் 20௳ வரை

# வெற்றி வாரம்

ஒன்று

ஸமஸ்தானம் முழுவதும் கொண்டாடப்படும்.

அப்பொழுது

மாட்சி தங்கிய நமது மன்னர்பிரானின்

உருவமமைக்கப்பட்ட

◎ பதக்கங்களும்

◎ பொத்தான்களும்

◎ சிறு பாவட்டாக்களும்

விற்கப்படும்.

இவைகளை ஏராளமாக வாங்குங்கள்!!

**வாங்கி வெற்றிபெற உதவுங்கள்.**

Sri Brihadamba State Press, Pudukkottai.: 2,500—15-2-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலையம்.

பிரசுரம்] 1942-௵ பிப்ரவரி௴ 21௳ [ந. 83

பிரஸங்கம் LXXXIII.

## ருஷ்யர்களின் முன்னேற்பாடுகளும் ராணுவ தந்திரங்களும்.

(Illustrated weekly of India பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டு சற்று மாற்றப்பட்டிருக்கிறது).

**ஸ்டாலின்.** ஸோவியத் ஐக்கிய நாடுகளின் விஸ்தீர்ணம் 82,50,000 சதுர மைல். இவைகளின் ஜனத்தொகை 18,00,00,000. இவர்கள் யாவருக்கும் தலைமை வகித்து வருகிறவர் ஜோஸப் ஸ்டாலின். சிவப்பு மதில் சுவர்களால் சூழப்பட்ட கிரம்லின் அரண்மனையிலிருந்துகொண்டு இவர் அரசாங்கத்தை நடத்திவருகிறார். மனிதனுக்குரிய கல்பனாசக்தி சீரப் பிரயாசை முதலியவைகள் பொருந்தியவர். யுத்தம் வரப்போவதை ஆலோசித்து அதற்குத் தகுந்த முன்னேற்பாடுகள் செய்துவந்தார். மேலும் ருஷ்ய ஜெர்மன் யுத்தம் ஆரம்பமாகி எட்டுமாத அவகாசத்திற்குள் ஸ்டாலினுடைய மேற்பார்வையில் ஈடுபட்டு வரும் கப்பற்படை, சைனியம், விமானப் படை முதலியவைகளின் தலைவர்கள் ஸைபீரியாவிலும் பாழாகக்கிடந்த தூரதரப் பிரதேசங்களிலும், டானெட்ஸ், யூக்ரேன், மாஸ்கோ முதலிய இடங்களிலும், ஓய்வில்லாமல் வேலை செய்துவரும் தொழிற்சாலைகளிலிருந்து, புதிதாகவும், பிரமிக்கத்தக்கவுமான யுத்த சாதனங்களைக் கண்டுபிடித்து வருகின்றனர். சென்ற யுத்தம் நான்கு வருஷகாலம் நடந்தும் பிரகிருதம் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் உண்டாகவில்லை.

**சைனிய விருத்தி.** ஐரோப்பாவில் ஜெர்மனியும், ருஷ்யாவும் இரண்டு பெரிய வல்லரசுகள். இவ்விரு நாடுகளுக்கும் நடக்கும் சண்டையைப்பற்றி பல விஷயங்கள் வெளிநாடுகளுக்கு அறிவிக்கப்படவில்லை. முக்கியமாக ருஷ்யர்கள் நடத்திவரும் யுத்தத்தைப்பற்றி ஆரம்பகாலங்களில் அதிகக்கவனம் செலுத்தப்படவில்லை.

ருஷ்யு செஞ் சைனியத்தைக் கலகக்காரர்கள் நிறைந்த நெல்லிக்காய் மூட்டை என்றும் விமானக் குடைப்படையை ஏதோ பொம்மை விளையாட்டென்றும் கருதினதுண்டு.

ருஷ்யாவில் பொருளாதார சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஐந்து வருஷ திட்டங்களைப்பற்றி யாவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் ஐந்து வருஷ திட்டப்படி செய்யப்பட்ட ராணுவ முன்னேற்றங்களைப்பற்றி ஒரு ரகசியமும் வெளிப்படவில்லை. இப்பொழுது ஐரோப்பா, ஆசியா பாகங்களில் யுத்தத் தீ பரவிய பிறகே ருஷ்யர்களின் ராணுவ சாமர்த்தியம் அறியப்படுகிறது. என்னகெட்ட நிலைமை வந்தாலும் ருஷ்யச் சைனியத்திற்கு இரண்டு பெரும் தற்காப்பு ஸ்தலங்கள் இருக்கின்றன. ஒன்று யூரல் மலைச்சாரல், மற்றொன்று துருக்கிஸ்தானுக்கு வடக்கிலும் காஸ்பியன் கடலுக்கப்பாலுமுள்ள பிரதேசம். இந்த இரண்டு இடங்களிலிருந்து கொண்டு எவ்வளவு வருஷங்களானாலும் களைக்காமல் எதிரிகளுடன் ருஷ்யர்கள் சண்டை செய்யமுடியும். இதையே லக்ஷியமாகக்கொண்டு ஜெர்மன் சண்டைக்காக ருஷ்யர்கள் தயார்செய்துகொண்டு வந்தனர். ஜெர்மன் படைகள் முதலில் ஏழுபகுதிகள் இருந்ததில் ஹிட்லர் 21 பகுதிகளாகவும் மறுபடி 63 பகுதிகளாகவும் விருத்தி செய்து கிழக்குப் பிரஷ்யாவில், அதாவது ருஷ்யாவிற்குச் சமீபத்திலேயே சேகரம் செய்துவைத்ததைப்பற்றி ருஷ்யர்கள் கவலைப்படவில்லை. ஆனால் ஜெர்மன் கவசமணிந்த யந்திரப்படை தயாரான உடனேயே ருஷ்யாவில் டாங்கிகளும், கவசமணிந்த படையும் தயார் செய்யப்பட்டது.

**ஐந்து வருஷ திட்டங்கள்.** 1937-ம் வருஷத்தில் 30-வயதுக்குட்பட்ட வாலிபர்களைச் சேர்த்து 300 பிரிவுகள் கொண்ட ஒரு பெரும் சைனியத்தைத் திரட்டுவதென ஜெர்மானியர் ஆரம்பித்தனர். ஒவ்வொரு வகுப்பிலும் 5,00,000 பேர்கள் கொண்ட 9 வகுப்புகள் ராணுவ சேவைக்கு அழைக்கவும் பட்டனர். ஆனால் 1943-ம் வருஷத்திற்குள் இது பூர்த்தியாகாது. ருஷ்யாவிலும் சைனியம் சேகரிக்க ஐந்து வருஷ திட்டம் ஆரம்பமாயிற்று. 1936 முதல் 1940-வரையிலுள்ள ஐந்து வருஷத்திற்குள் ஒரு சைனியம் தயார் செய்து ஜெர்மனியும், ஜப்பானும் ருஷ்யாவைத் தாக்கினால் அவர்களைத் தடுப்பதென நினைத்திருந்தனர். 1941-முதல் 1945-வரையிலுள்ள 5 வருஷகாலத்தில் மற்றொரு சைனியத்தைத் தயார்செய்து, இவ்விரண்டு சைனியங்களைக்கொண்டு ஒரு போர்முனையில் (ஜப்பானையாவது, ஜெர்மனியையாவது) எதிர்த்து நாட்டையும் தற்காப்பு செய்துகொள்ளமுடியும். இத்திட்டப்படி 1946-க்குப் பிற்பாடுதான் ஒரே சமயத்தில் இரு போர்முனைகளிலும் (ஜெர்மனியையும் ஜப்பானையும்) எதிரிகளை எதிர்த்துப் போர் செய்ய முடியும்.

**1939-ல் ருஷ்யா நேசதேசங்களுடன் ஏன் சேரவில்லை.** ஜெர்மனியைத் தாக்குவதற்கு ஸெக்கோஸ்லாவியாவிலுள்ள பிரஸ்பர்கை அடைந்து, அங்கிருந்துகொண்டு ருஷ்யர்கள் ஜெர்மனியைத் தாக்க நினைத்தது உண்மைதான். இதைத் தெரிந்துகொண்டு அதைத் துரிதமாகத் தடுக்க ஜெர்மானியர் முயற்சி எடுத்து வந்தனர். இவ்விஷயம் பிரிடனுக்கும் தெரியும். சண்டையில்லாமலேயே ஜெர்மனி ஸெக்கோஸ்லாவியாவை வசப்படுத்திக்கொண்டனர். அச்சமயத்தில் ருஷ்யாவின் முன்னேற்றத்தை அரசியல் நிபுணர்கள் விரும்பவில்லை. அதனால்தான் ஜெர்மனியின் செய்கையைத் தடுக்கவில்லை. ஆனால் போலந்தை ஜெர்மனி தாக்கியபோது சண்டைசெய்ய வேண்டிய அவசியத்தை அதே நிபுணர்கள் உணர்ந்தனர்.

1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் யுத்தம் ஆரம்பித்தபோது ருஷ்யர்களும் தங்கள் பக்கம் சேருவார்களென்று பிரிடிஷ்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் எதிர் பார்த்தனர். ஆனால் ஜெர்மன் சைனியம், பான்ஸர்படை, லுப்ட்வாபி முதலியவைகளின் உண்மையான பலத்தைப்பற்றி ருஷ்யர்களுக்குத் தெரியுமாதலாலும், எதிரியை எதிர்க்க, விமான மூலமாகக்கூட நேசநாடுகள் உதவியனுப்ப



முடியாதென்று நினைத்தும் ருஷ்யர்கள் தனியே இருந்துவிட்டனர். சரியான ஒத்தாசை செய்ய முடியாததால்தான் போலந்து வீழ்ந்தது.

**பிரகிருத யுத்தத்திற்குத் தயார் செய்ய அவகாசம் ஏற்பட்டது.** ஹிட்லருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பயனாக ஸ்டாலினுக்கு அதிக அவகாசம் கிடைத்தது. அப்பொழுது பின்லாந்தின் ஒரு பாகத்தை வியாபித்துக்கொண்டு லெனின்கிராட்டிற்கு வடக்கே ஒரு பாதுகாப்பு ஸ்தலமாக அமைத்தார். அதேவிதமாக ருஷ்யாவின் தெற்கே பெஸரேபியாவை காபந்து ஸ்தலமாகச் செய்தார். காஸ்பியன் பிரதேசத்திலும் தற்காப்பு வேலைகளும், யுத்த சாமான்களைச் சேகரிப்பதும் அபரிமிதமாகச் செய்யப்பட்டன. இப்படி முன்னேற்பாடுகள் செய்ததால்தான ருஷ்யாவிற்குத் தற்போது அதிக சாதகமாக இருக்கிறது. பிரான்ஸ் யுத்தத்தின்போது எதிர்பார்த்ததிற்கு அதிகமாகவே நாஸித் தலைவர்கள் வெற்றியடைந்தனர். இரண்டு மணி நேரம் பாயச்சல் விமானத் தாக்குதல் செய்தவுடனேயே பிரெஞ்சுக்காரர்கள் சண்டையை விட்டுவிட்டுப் போவார்களென்று ஜெர்மானியர் எதிர்பார்க்கவில்லை. ஸோம் லாவேர் நதிகளையும் தாண்டி பிரெஞ்சுக்காரர்கள் ஓடிவிட்டாலும் தாங்களை மறுபடி எதிர்த்துத் தாக்குவார்களென்று ஜெர்மானியர் நினைத்தனர். இமமாதிரி நினைத்து, பிரான்ஸிலேயே படைகளை வைத்துக்கொண்டு பிரிடன் பேரில் படையெடுப்பைச் செய்யாமலிருந்தது ஒரு பெரும் தவறாகிவிட்டது. பிரான்ஸின் உதவிக்குச் சென்ற சைனியத்தையும், உத்தியோகஸ்தர்களையும் பிரிடன் டங்கர்க் வழியே மீட்டிக்கொண்டு வந்துவிட்டது.

**புதிய சைனியப் பகுதிகள்.** இந்த சந்தர்ப்பத்தில் பிரான்ஸ், பிரிடன் இவைகளுடைய படைகளை எதிர்த்து நிற்க ஜெர்மனியால் முடியவில்லையென்றும், பூரண முஸ்திப்பு பெறுவதற்குள் ஜெர்மனி யுத்தத்தில் ஈடுபட்டுவிட்டதென்றும் ஸ்டாலின் அறிந்துகொண்டார். இந்த இரண்டு வருஷ அந்தராளத்தில் ருஷ்யா யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தயார் செய்தது. 25 வயதுக்குட்பட்டவர்களைச் சேர்த்து 200 பிரிவுகள் கொண்ட சைனியம் சேகரம் செய்யப்பட்டது. 1 கோடி ரிசர்வ் படையும் தயாராயிற்று. மட்டமான சைனியத்தைக்கொண்டே பின்னிஷ் யுத்தத்தில் உலகம் எதிர்பார்த்தபடி ஜயம் பெற்றது.

**ருஷ்யப் போக்குவரவு ஸாதனங்கள்.** ருஷ்யாவில் போதுமான இருப்புப் பாதைகள் கிடையாது. பிரான்ஸிலுள்ள நீளம் தான் ருஷ்யா பூராவும் இருப்புப்பாதைகள் இருக்கின்றன. கற்கள் நிறைந்த பிரதேசம் அதிகம் இல்லாததாலும் ரஸ்தாக்களும் போடமுடியவில்லை. போடப்பட்ட ரஸ்தாக்களும் பனிக்கட்டிகள் விழுந்து கெட்டுவிடுகின்றன. ஆகவே பல இடங்களில் பிரிந்திருக்கும் சைனியங்களுக்கு ஸப்ளை அனுப்பும் பிரச்னை கடுமையாகவே காணப்பட்டது.

**ஸ்டாலின் கால்வாய்.** ஆனால் இப்பிரச்னையை ஒரு ஐரோப்பிய இஞ்ஜினியர் சுலபமாக சாதித்துவிட்டார். காஸ்பியன் கடலிலிருந்து ருஷ்யாவின் மேற்கு பாகம் வரை பல கால்வாய்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இக்கால்வாய்கள் வெட்டிக்கட்டி முடிப்பதற்கும் ஸ்டாலின் ஐந்து வருஷ திட்டத்தையே கைக்கொண்டார். முதலாவதாக ஸ்டாலின் கால்வாயை கட்டி முடிக்கப்பட்டது. இதனால் ருஷ்யர்களுக்கு ஏற்படும் அனுகூலங்கள் மிகவும் ரகசியமாகவே இருந்தன.

லெனின்கிராட்டிலிருந்து வெண்கடலுக்கு இக்கால்வாய் வெட்டப்பட்டது. லெடோகா, ஒனிகா ஏரிகள் வழியாகச்செல்லும் 7,000 டன் நிறையுள்ள நடுத்திரமான யுத்தக் கப்பல்கள் செல்லும்படி முதலில் ஆழமாக்கப்பட்டு பிறகு 35,000 டன் உள்ள சண்டைக் கப்பல்களின் போக்குவரத்திற்கு சௌகரியமாகவும் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இவ்விதம் செய்வதற்குப் போதுமான அவகாசம் கிடைக்கவில்லை. அதற்குள் யுத்தம் ஆரம்பமாகிவிட்டது.

**டான்-வால்கா கால்வாய்.** இக்கால்வாயைப் பற்றிய திட்டம் யாவருக்கும் ஆச்சரியத்தையே உண்டாக்கியது. அஸாவ் கடலில் விழும் டான் நதியும், காஸ்பியன் கடலில் விழும் வால்கா நதியும் நெருங்கி ஓடும் இடத்தில் இக்கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. ஸ்டாலின்மேல் பார்வையில் ருஷ்ய இஞ்ஜினியர்கள் 60 மைல் விஸ்தாரமுள்ள இப்பிரதேசத்தில் இக்கால்வாய் வெட்டப்பட்டது. இந்த இடத்தில் டான் நதி வால்கா நதியைவிட 25 மீட்டர்கள் உயரத்தில் போவதால் இரண்டு மடைகள் கட்டப்பட்டு சுலபமாகவே இந்த இரு நதிகளும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ருஷ்யாவிலுள்ள இதர கால்வாய்களெல்லாம் வால்கா நதியிலிருந்து வெட்டப்பட்டவைதான். இந்நதி மற்ற நதிகளைப் போல் மலைகளில் உற்பத்தியாகாமல், வால்டாய் மலைகளுக்கு அடுத்துள்ள சதுப்பு நிலங்களில் உற்பத்தியாகி பாம்புபோல் வளைந்து ருஷ்யாவின் மேற்கு பாகம் பூரா பாய்ந்து காஸ்பியன் கடலில் சங்கமமாகிறது. இதன் நீளம் 2,400-மைல் இருந்ததில் பல கால்வாய்கள்மூலம் விருத்தி செய்யப்பட்டிருக்கிறது. வால்டாய் மலையும் லெனின்கிராட்டும் இக்கால்வாய் மூலம் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிறகு ஸ்டாலின் கால்வாயோடும் பிணைக்கப்பட்டிருப்பதால் பால்டிக் அல்லது வெண் கடலிலிருந்து கருங்கடல்வரை நீர்மூழ்கிகளும், நாசகாரிகளும், சிறு கப்பல்களும், யுத்த சாமான்களை ஏற்றிக்கொண்டுவர சௌகரியமாக இருக்கிறது.

**அஸாவ் அணை.** கருங்கடலுக்கும் அஸாவ் கடலுக்கும் ஒரு குறுகிய ஜலசந்தி வழியாகப் போக்குவரவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் ஓர் குறுகிய அணை கட்டப்பட்டது. அதன் உதவியால் அஸாவ் கடலின் நீர்மட்டத்தை அதிகப்படுத்தி பெருங் கப்பல்கள் தங்குவதற்கான வசதி செய்யப்பட்டது. மேலும் பெரிகாப் பூசந்தி வழியாக கிரிமியாவுக்கு ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டிருக்கிறது. ஆக ஒடெஸ்ஸா வரை ஜல மார்க்கமாகவே செல்லமுடியும். ஒடெஸ்ஸா டான்யூப் நதி முகத்வாரத்திற்கு எதிரில் இருக்கிறது. டான்யூப் நதி வழியாக 3,000 டன் படகுகளில், அதாவது 50 வண்டிகள் கொண்ட 6 டிரயின் வண்டிகளில் ஏற்றிச் செல்லக்கூடிய சாமான்கள், இப்படகுகளின் வழியாக அனுப்பமுடியும். இவ்விதமாகப் போக்குவரவு சாதனங்கள் விருத்தி செய்யப்பட்டு ருஷ்ய சைனியங்களுக்கு ஸப்ளை அனுப்பும் பிரச்னை தீர்க்கப்பட்டது. ஆனால் ஒடெஸ்ஸாவிற்கு அருகிலுள்ள பிரதேசம் ஜெர்மானியர் வசமிருப்பதால் அந்த சாதகங்களை அது அடைந்திருக்கிறது.

**100-டன் டாங்கிகள்.** ருஷ்ய ஜெர்மன் யுத்தம் ஆரம்பமானபோது ருஷ்யாவில் பெரும் டாங்கிப் படை சித்தமாக இருந்தது. 100 டன் டாங்கிகளை ஏராளமாக ருஷ்யா உண்டுபண்ணிற்று. யுத்தரங்கத்தில் ஜெர்மானியரை விரட்டியடித்த 72 டன் பிரெஞ்சு டாங்கிகளைக் காட்டிலும் இவை மேலானவை. இவைகளைக் கண்டு ஜெர்மானியர் பீதியடைந்து ஓடுகின்றனர். போரில் ஈடுபடாமல் எவ்வளவோ டாங்கிகள் இருக்கின்றன. இவைகள் எதிரிகளைத் தாக்கி சண்டைசெய்யும் காட்சி மிக நேர்த்தியாக இருக்கும்.

**விமான உற்பத்தி.** ருஷ்யர்கள் I-18 என்ற பைடர் விமானங்களைப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவை மணிக்கு 400 மைல் வேகம் செல்லும். அவை பீரங்கிகளும், யந்திர பீரங்கிகளும் கொண்டவை. பிரிடிஷ் ஸ்பிட் பைர் விமானங்களுக்குச் சமமானவை. ஓப்ட்வாபி பண்டகளைத் தவிடுபொடியாகக் கொளுத்திஎரித்துவிடும். இவைகளுக்கு உதவியாக கனமான பாம்பர்களும் இருக்கின்றன. இவை டி. பி. (D. B.) பாம்பர் இவை மணிக்கு 260 மைல் வீதம் செல்லும். இராக் காலங்களில் எதிரி நகரங்களைத் தாக்குவதற்கு உபயோகமானவை.

**ருஷ்யாவின் புதிய பீரங்கிகள்.** சமீபத்தில் ருஷ்யாவில் தயாரிக்கப்பட்ட பைடர் விமானங்களுக்குப் புது விதமான பீரங்கிகள் சேர்க்கப்பட்டிருந்தன. இவைகளால் தாக்கப்பட்டு ஜெர்மன் டாங்கிகள் ரஸ்தாக்களில் சிதறிக்கிடந்தன.



மேலும் அதிகச் சக்தி வாய்ந்த ஸ்டார் மோவிக் பாய்ச்சல் பாம்பர்களும் ருஷ்யாவில் இருக்கின்றன. லார்டு பீவர்புருக் மாஸ்கோவிலிருந்து வரும் பொழுது இவைகளைப்பற்றி விசேஷமாக மெச்சிப் பேசினார். ஜெர்மானியர்கள் வெறியுள்ள இடிகுண்டுகள் (Mad Tarpedo) என்று பெயர்வைத்தனர். உண்மையில் தாங்களாகவே செல்லக்கூடிய வெடிகுண்டுகளே கிடையாது. ஸ்டார் மோவிக் விமானங்கள் டாங்கிகளைத் தாக்கி சின்னா பின்னப் படுத்த லாயக்கான குண்டுகளை உபயோகப்படுத்துவதாக நவம்பர் மாதத்தில் மாஸ்கோ ரேடியோ கூறிற்று.

பிரிடிஷ் விமானங்களிலும், பெல்ஏரா கோப்ரா என்ற அமெரிக்க விமானங்களிலும் இருக்கும் பீரங்கிகளுக்குச் சமமாக ஸ்டார் மோவிக் விமானங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க விமானங்களில் 37 m. m. பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தரையில் விமானங்களைச் சுடுவதற்கு ஏற்பட்ட பீரங்கிகளைக் காட்டிலும் கொஞ்சம் சிறியவைகளாக இருக்கும். ருஷ்யர்களும் ஸ்டார் மோவிக் விமானங்களின் சக்கரங்களுக்கு இடையே பெரிய பீரங்கிகளையும், வெடிகுண்டுகளையும் வைத்திருக்கிறார்கள். டாங்கிகளைத் தாக்குவதற்கான குண்டுகள் அதிக சப்தத்துடன் வெளிக்கிளம்பும். மிகவும் வேகமாகவும் தனது பலத்துடனும் வந்து நாசம் செய்யும்.

**L 760 விமானங்கள்.** இதைத் தவிர ருஷ்ய விமானப் படையில் L 760—ஆறு மோட்டார் உள்ள விமானங்களும் இருக்கின்றன. இதுவே உலகத்தில் உள்ள பெரிய விமானத்தை விட 2 அடி சிறியது. 1,864 மைல் தூரம் செல்லும். மணிக்கு 186 மைல் வேகமும் செல்லும். வெடிகுண்டுகள் போட உபயோகப்படுத்தும் சமயத்தில், பத்து பேர்கள் செல்லுவார்கள். இதிலுள்ள வெடிகுண்டுகளின் எண்ணிக்கை ரகசியமாக இருக்கும். குடை விமானக்காரர்களை ஏற்றிச் செல்ல வேண்டுமானால் 64 பேர்கள் இதில் செல்லலாம். இதிலுள்ள ஹிஸ்பானோ-ஸுயிஸா இன்ஜின்கள் 6,600 H. P. குதிரை சக்தியுள்ளது. இதன் சிறகுகள் 210 அடி அகலம், கனம் 1,03,000 பவுண்டு இடை.

**பனிக்கட்டி உடைப்பவை.** பனிக்கட்டிகளை உடைக்கக்கூடிய கப்பல்கள் ருஷ்யாவில் இருக்கின்றன. ஆர்கேஞ்சல் துறைமுகத்திற்கு அருகிலுள்ள கடல் மார்க்கங்களிலுள்ள பனிக்கட்டிகளை உடைத்து அமெரிக்காவிலிருந்து வரும் ஸப்ளை சாமான்கள் சுலபமாக ருஷ்யாவிற்குள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வ்ளாடிவாஸ்டாக் துறைமுகத்தைக் காட்டிலும் ஆர்க்கேஞ்சல் அதிகமாக உபயோகப்பட்டுவந்தது. பனிக்கட்டி உடைக்கும் கப்பல்கள் 12 இருக்கின்றன. இதில் மூன்று நான்கு கப்பல்கள் 12,000-டன் எடையுள்ளவை. ருஷ்யாவிற்குள் வரும் ஸப்ளைகளைத் தடுக்க ஹிட்லர் என்ன ஏற்பாடு செய்தாலும் பலிக்காது.

**வியப்பை அளிக்கும் நீர்மூழ்கிகள்.** வ்ளாடிவாஸ்டாக்கில் 50 நீர்மூழ்கிகளுக்குக் குறையாமல் ஒரு நீர்மூழ்கிப்படையும், பல யுத்த விமானப் பகுதிகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இப்பட்டணத்தைச் சுற்றி பனிக்கட்டிகள் இருக்குமாதலால் அகண்ட கடலுக்கு வரவேண்டுமானால் நீர்மூழ்கிகள் 20 மைல் தூரத்திற்கு பனிக்கட்டிகளுக்கு அடியில்தான் வரவேண்டும். இதற்கேற்றவாறு இவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணமாயிருந்த ஸ்டாலின் சாமர்த்தியத்தை என்னவென்பது, ஜூல்ஸ் வெர்னின் சாமர்த்தியத்தைக் காட்டிலும் மேலானது. அமெரிக்க ரஸாயனசாஸ்திரிகளின் கற்பனைகளுக்குச் சமமானது.

வ்ளாடிவாஸ்டாக்கை இவ்விதம் பலப்படுத்தியதால் டாரன்டோவில் இதாலியருக்கு நேர்ந்த கதி தங்களுக்கும் நேருமோவென்று ஜப்பானியர் அஞ்சுகின்றனர். வ்ளாடிவாஸ்டாக்கிற்குச் சமீபத்தில் விமான மூலம் தாக்கக்கூடிய தூரத்தில் தீக்குச்சி மரங்கள் நிறைந்த ஜப்பானியப் பட்டணங்கள் இருக்கின்றனவாகையால் ப்ரெமன், ஹாம்பர்க், கீல் முதலிய ஜெர்மன் பட்டணங்கள்

அழிந்த விதமாக அழிந்துவிடுமோ என்றும் ஜப்பானியர்கள் பயப்படுகின்றனர். மேலும் ஜப்பானிய விமானங்கள் ஜெர்மன் லுப்ட்வாபியைப்போல் போதுமான சக்தி வாய்ந்தவையுமில்லை.

**கப்பற்படை.** ருஷ்யக் கால்வாய் அமைப்புகளுக்குத் தக்கவாறு ருஷ்யக் கப்பற்படையை அமைப்பது என்று லெனின் ஏற்பாடு செய்தான். ஸ்டாலின் இந்நோக்கத்தை விருத்தி செய்து கப்பற்படையை மூன்று பாகமாக்கி பால்டிக், அட்லாண்டிக், கருங்கடல் இவைகளில் ஈடுபடுவதற்கு நிறுத்தியிருக்கிறார். ருஷ்ய அட்லாண்டிக் கப்பற்படை மெர்மான்ஸ்கில் வைக்கப்பட்டது. ஸ்டாலின் கால்வாய் வால்கா டான் கால்வாய் இவைகள் மூலமாக இம்மூன்று இடங்களிலுள்ள கப்பற்படையும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியும். பாஸ்பரஸ் டார்டனல்ஸ் இவைகளின் வழியாக ஸ்டாலின் போக்குவரவு வைத்துக்கொள்ளவில்லை.

பால்டிக்கில் ஜெர்மன் சண்டைக் கப்பல் (டர்பிட்)களுக்கு ஈடுசெய்யக்கூடிய சண்டைக் கப்பல்கள் இல்லாதபோதிலும் 23,000 டன்னுள்ள இரண்டு பழைய கப்பல்களும், 2,900 டன் எடையுள்ள ஆறு நாசகாரிகளும், 1,800 டன்னில் 12-ம், 15 பழைய நாசகாரிகளும், 12 டார்பிடோ படகுகளும் இருக்கின்றன. இதுவரை அங்கு கப்பற் சண்டையே நேரவில்லை.

**வ்ளாடிவாஸ்டாக்.** வ்ளாடிவாஸ்டாக் என்ற பதத்திற்கு கிழ்த் திசை நாடுகளில் பலம் பெற்றது என்று பொருள். இப்பொருளை ஸ்டாலின் ஊர்ஜிதப்படுத்தினார். இப்பட்டிணம் ஒரு பலமான கோட்டை அச்சு நாட்டின் மூன்றாவது அங்கத்தினரான ஜப்பானை அதிகம் பயமுறுத்தும்படியாகவும் பலப்படுத்தப்பட்டு வந்தது. பனிப்பாங்கான ஆர்க்டிக் கடலில் ஸப்ளை மார்க்கங்களை அடைவதற்காக ருஷ்ய இன்ஜினியர்களாலும், ரஸாயன சாஸ்திரிகளாலும் அமைத்ததுபோலவே, வ்ளாடிவாஸ்டாக் வழியே தரை மார்க்கமாக வரக்கூடிய ஸப்ளை மார்க்கத்தையும் ஸ்டாலின் விருத்தி செய்தார்.

மெர்மான்ஸ்க்கிலிருந்து வ்ளாடிவாஸ்டாக்குக்குக் கப்பல்கள் திட்டப்படி போய்க்கொண்டிருக்கின்றன. இவ்வழி அட்லாண்டிக் கடலின் அகலத்தைப்போல் மூன்று மடங்கு விஸ்தீரணமானது. இக்கப்பல்களில் இரும்பு, எஃகு, சாமான்கள், வேலைக்காரர்கள் முதலியவைகள் அனுப்பப்பட்டு வ்ளாடிவாஸ்டாக்கின் தற்காப்பு பலப்படுத்தப்படுகிறது. ஹூஸெளரி, அமூர் என்ற நதிகளுக்கு இடையிலுள்ள கழி முகத்தில் வ்ளாடிவாஸ்டாக் துறைமுகம் கட்டப்பட்டது. அமெரிக்காவிலிருந்து வ்ளாடிவாஸ்டாக்குக்கு வரும் சாமான்களை இந்நதிகள் மூலமாக உள்நாட்டிற்கு, எடுத்துச் செல்லமுடியும்.

**யூரல் மலைச்சாரலில் தொழில் அபிவிருத்தி.** காஸ்பியன் கடலுக்கும் யூரல் கடலுக்கும் அப்பால் சீன எல்லைப்புறம் வரையில் புதிய ருஷ்யத் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரதேசத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் நிரம்பியிருக்கின்றன. இவைகளில் ஆயிக்கணக்கான வேலைக்காரர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். முதல் தரமான போக்குவரவு சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இரானோடும், இந்தியாவோடும் நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்த ஸ்டாலின் பிரயத்தனப்பட்டுக் கொண்டுவருகிறார். ஏராளமான சாமான்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும். ஜெர்மானியர்களும் உலகமும் எதிர் பார்ப்பதைக் காட்டிலும் அதிகமாகவே யுத்த சாமான்களை ருஷ்யர்கள் தயாரிக்கிறார்கள். மாஸ்கோ, ரோஸ்டாவ் முதலிய பட்டணங்களிலிருந்த தொழிற்சாலைகளெல்லாம் அப்படியே இங்கு மாற்றப்பட்டன. எல்லாவிதமான சாமான்களும் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு வரப்பட்டு, இங்கு வந்த பிறகு அமைதியோடும், ஒற்றுமையுடனும் முன்போலவே இருந்துவருவது ஆச்சரியமான விஷயம்.



# வார யுத்தச் செய்திகள்.

## 14—2—42-லிருந்து 20—2—42-வரை.

**இரண்டு சம்பவங்கள்** இவ்வாரத்தில் நிகழ்ந்திருக்கின்றன. ஒன்று சிங்கப்பூர் எதிரிவசமானதும், மற்றொன்று ப்ரெஸ்ட் (Brest) துறைமுகத்திலிருந்து ஜெர்மன் சண்டைக்கப்பல்கள் நழுவிச்சென்றதும்.

**சிங்கப்பூர்** கடும் சண்டை நேர்ந்தபிறகு ஞாயிற்றுக்கிழமை எதிரிவசமடைந்தது. ஏராளமான எதிரிகளை எதிர்த்து பிரிடிஷ்காரர்களும், ஆஸ்திரேலியர்களும், இந்தியர்களும் தைரியமாக சண்டை செய்தனர். ஒரு அங்குல இடத்தை யாவது சல்லிசாக விட்டுவிடவில்லை. கடைசி சமயங்களில் எதிரிகளுடன் கைகலந்த சண்டையும் செய்தார்கள். இச்சமயத்தில் நடந்த சண்டையைப் பார்க்கும்போது சிங்கப்பூரை விடாமல் காப்பாற்றலாம் போலும் காணப்பட்டது. ஆனால், விமானங்களும், பீரங்கிகளும், போக்குவரவு உதவியும் தேவைக்குத் தக்கவாறு கிடைக்கவில்லை. உணவு, தண்ணீர் வரும் ஸப்ளை மார்க்கங்களை எதிரி தடுத்துவிட்டான். பலம்பாங்கை எதிரி பிடித்துக்கொண்டதும் சிங்கப்பூரை விட்டு கடல் மார்க்கமாகப் போகவும் முடியவில்லை. ஆகையால்தான் சரணடையவேண்டி வந்தது. பூ தகன முறையில் ஏராள சாமான்களை அழித்தும், எதிரி வசத்திலும் சில சாமான்கள் சிக்கிக்கொண்டன. தூரக்கிழக்கில நடந்த மற்ற சம்பவங்கள் கீழே காணப்பட்டிருக்கின்றன.

**பர்மா.**—மலேயா சண்டை முடிவடைந்தது. பர்மா யுத்தம் ஆரம்பமாயிருக்கிறது. ஏற்கனவேயே பர்மாவில் இரண்டு ஜப்பானியப் பகுதிகள் வந்திருக்கின்றன. மேலும் அதிகமான துருப்புகளை கொண்டுவந்து சேர்த்திருக்கின்றனர். ஹெய்யாங்கிலும் (இந்தோ-சைனா) 30,000-துருப்புகளைச் சேகரம் செய்திருக்கின்றனர். ஆறு நாட்களில் 60-மைல்கள் முன்னேறினர். மார்டபானைப் பிடித்து, பான் பட்டணத்திற்கு அருகில் ஸால்வீன் நதியைக்கடந்து தாடன் நகரை நோக்கிப் போகின்றனர். இது ஒரு ரயில்வே ஸ்தலம். நேசநாட்டுத் துருப்புகள் பீலின் நதிப்பக்கமாக, ரங்கூன் மாண்டலே ரஸ்தாவில் பெகு நகருக்கு 50-மைல் தூரத்திலிருக்கின்றனர்.

**நெதர்லாந்து கிழக்கிந்திய நாடுகள்.**-சுமத்ராவில் எதிரி கடும் தாக்குதல்கள் செய்து பெலம்பான் பட்டணத்தையும் பிடித்திருக்கிறான். இது ஒரு எண்ணெய் கிடைக்கும் ஸ்தலம். இப்பட்டணம் எதிரிவசமானதால் அருகிலுள்ள பாங்கா தீவிற்கு பயம் அதிகரிக்கும். இதையும் பிடித்துக்கொண்டால் சிங்கப்பூரைச் சுற்றிக்கொள்ள எதிரிசெய்த பிரயத்தனம் பூர்த்தியாகிவிடும். பிரிடிஷ் அமெரிக்க, டச்சு நாடுகள் இவைகளின் விமானங்கள் பாங்கா ஜலசந்தியிலிருந்த ஜப்பானியக் கப்பற்படையைத் தாக்கி 5-போக்குவரவு கப்பல்களையும் 2 சிறு சண்டைக் கப்பல்களையும் தாக்கின.

பலம்பாங்கைக் காலிசெய்யும்போது 500-முதல் 650-லக்ஷம் பவுன்வரை பொருமான சொத்துக்களை எதிரி வசமாகாமல் டச்சுக்காரர்கள் அழித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மலேயாவிற்குக் கிழக்கிலுள்ள அனம்பாஸ் தீவுகளையும் எதிரி ஆக்கிரமித்துக்கொண்டான்.

**பிலிப்பைன்ஸ் தீவுகள்.**—பாடன் தீபகர்ப்பத்தில் கடும் யுத்தம் இன்னும் நடந்துவருகிறது.

**ஆஸ்திரேலியாவிற்கு அருகிலுள்ள ஆசியா.**—பாபுவாவின் தெற்குக்கரையில் ஜப்பானிய விமானங்கள் வேவு பார்த்து, டிமோர் கடலுக்கு பக்கத்தில் சில கப்பல்களையும் தாக்கின. டார்வின் துறைமுகத்திலும் எதிரிகளால் குண்டுகள் போடப்பட்டன.

**சைனா.**—மெங்செங், கோயாங் நகரங்களை சீனர்கள் திரும்பப்பிடித்து செகியங், அன்ஹுவை, கியாங்ஸி பிரதேசங்களில் சில வெற்றிகளும் அடைந்தனர்.

**அமெரிக்கா.**—அருபா, (டச்சு மேற்கு இந்தியத் தீவுகள்) வில்லன்ஸ்டாட் (குரகவோ) இவ்விரண்டையும் அச்சு நாட்டினர் தாக்கினர். அமெரிக்கா கண்டப் பக்கத்தில் இதுவே முதல் தாக்குதலாகும். ஜெர்மன் நீர்மூழ்கிகள் தாக்கிய தாகத்தான் சொல்லப்படுகிறது. 4-எண்ணெய்க் கப்பல்களும், எண்ணெய் சுத்தி செய்யும் இன்ஜின்களும் தாக்கப்பட்டு 2 எண்ணெய்க் கப்பல்கள் சேதமாயின.

**ஜெர்மன் சண்டைக் கப்பல்கள் தப்பின.**—இதுவே இவ்வாரத்திய இரண்டாவது விசேஷ சம்பவமாகும். ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்னௌ, பிரின்ஸ் யூஜன் இம் மூன்று கப்பல்களும் பிரெஸ்ட் துறைமுகத்தில் ஒரு வருஷகாலமாக ஒளிந்து கிடந்தன. பிரிடிஷ் விமானப்படையால் அடிக்கடி இவைகள் தாக்கப்பட்டன. வியாழக்கிழமை அங்கிருந்து நழுவி இங்கிலீஷ் கால்வாய் வழியாக வடக்கே போக யத்தனித்தன. பிரிடிஷ் தீவுகளைச்சுற்றிப் போவதானால் அதிகதொலை பிடிக்கும் என்று இவ்வழியாகச் சென்றன. இவைகளைப் பார்த்ததும், டோவர் கடற்கரைப் பாதுகாப்பு விமானங்களும், பிரிடிஷ் கடற்படையும், பிரிடிஷ் விமானப் படையும் ஒன்று சேர்ந்து தாக்கி இரண்டு குண்டுகளும் போட்டன. ஆனால், பிரெஞ்சுக் கடற்கரை வழியாக ஒதுங்கிக்கொண்டு 100 விமானங்களால் மறைத்துக்கொண்டு புகையைக் கிளப்பின. பீரங்கிக் குண்டுகளையும் போட்டுவிட்டுத் தப்பின. அக்கப்பல்கள் அதிகம் பழுதடைந்தன. இன்னும் கொஞ்சம் நாட்களுக்கு இவைகளை உபயோகிக்க முடியாது.

பிரிடிஷ் கப்பற்படை அதிகாரிகள் இதைப்பற்றி ஒரு சாதகமென்றே நினைக்கின்றனர். ஏனென்றால் பிரெஸ்டில் இக்கப்பல்கள் தங்கியிருந்தபோது கிழக்குப் பக்கமாயும் அட்லாண்டிக் பக்கத்திலும் போக்குவரவு மார்க்கங்களுக்கு இருந்த ஒரு பயம் இப்போது நீங்கிவிட்டது.

இக்கப்பல்கள் தப்பி ஓடிய விவரங்களைப்பற்றி ரகசியமாக ஒரு விசாரணை செய்யப்படும்.

**ருஷ்யா.**—ஒரு தற்காப்பு ஸ்தலத்திற்கு ஜெர்மானியர் வந்து அங்கிருந்து கொண்டு எதிர்க்கப் பார்க்கிறார்கள். பிரகிருதம் அவர்கள் இருக்கும் இடங்கள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. இத்தந்திரங்களை நன்கு உணர்ந்த ருஷ்யர்கள் பலமுனைகளில் ஜெர்மன் அணிகளைத் துளைத்தெறிந்தனர். பழைய போலாந்து எல்லைக்கு 72 மைல் தூரத்திற்கு நெருங்கி ருஷ்யர்கள் வந்துவிட்டார்கள். கார்கவ்வை விட்டுவிட்டு ஜெர்மானியர் போக யத்தனிக்கிறதாகப் பிரஸ்தாபம்.

**லிபியா.**—எதிரி மறுபடி தாக்குவதற்கு ஏற்பாடு செய்துவருகிறான். நேசதேசப்படைகள் எல் கஸாலா, டிமிமி, மெகிலி பிரதேசங்களில் முன்னேறித் தாக்குகின்றன. டிமிமிக்கும் மெகிலிக்கும் இடையிலிருந்த 30 எதிரி பாய்ச்சல் விமானங்களைத் தாக்கி அவைகளைப் பூரா அழித்து விட்டதென்றே சொல்லாம். இதன் பயனாக தனது படைகளை ரோமல் எல் கஸாலாவிலிருந்து மேற்கு நோக்கி அழைத்துச் செல்லுகிறான். மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கடல்படை விமானங்கள் இதாலிய சண்டைக் கப்பல்களைத் தாக்கி இரண்டு சிறு சண்டைக் கப்பல்களையும், ஒரு நாசகாரியும் கவிழ்த்தன.

**'புதுதிட்டத்தின்' கீழ் கிரேக்கர்கள்.**—பசிப்பிணி அதிகம் ஏற்பட்டு கிரேக்கர்கள் படும் அவஸ்தையைப்பற்றிய கதைகள் கிடைத்திருக்கின்றன. பிப்பிரவரி மாதத்தின் முதல் பாதியில் தினம் 500 கிரேக்கர்கள் பசியால் இறந்தார்களாம். ஏற்கனவேயுள்ள கிரேக்க ஜெனரல்களும், மாலுமிகளும், பணக்காரர்களும் உணவுக்காக அவஸ்தைப்படுகின்றனர். குழந்தைகள் பூமியைத்தோண்டி, உருளைக் கிழங்கு விதைகளையும், மரப்பட்டை, வேர் முதலியவைகளையும் தின்கிறார்கள். மேலும், இவர்களுக்கு உணவு கொண்டுவந்த துருக்கிக் கப்பல் குர்டுலுஸ் நாசமானதும் அதிகக் கஷ்டமேற்பட்டது.

**சைனா தினம்.**—சயாங்கை ஷேக்கும், அவர் மனைவியும் இந்தியாவிற்கு வந்ததற்காக மார்ச்சு 2உ சைனா தினம் கொண்டாடப்படும். யுத்தத்திற்காக பொருள் சேகரம் செய்துவரும் மேன்மை தங்கிய வைஸ்ராய் நிதியிலிருந்து சீனர்களின் யுத்த உதவிக்கும் கொடுக்கப்படும்.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **9—2—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள்-ப்ரெஸ்ட் (Brest). | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica)-வில் எதிரி வசமுள்ள பிரதேசங்கள். | | | |
| | மார்டுபா (Martuba)-வில் விமான மிறங்குமிடத்திலுள்ள ஓர் விமானம். | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—தீவுகள்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | யுத்தக் கப்பல்களை பழுதுபார்க்கும் தொழிற்சாலைகள், பண்டக சாலைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் தங்குமிடங்கள்—கிரீட் (Crete), டொடிகானீஸ் (Dodecanese). | | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | தரையிலுள்ள விமானங்கள் விமானச் சண்டைகள்-யுத்தரங்கமுழுவதிலும். | | | 4 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | விரோதி ஸ்தானங்கள், விமானமிறங்குமிடங்கள்—மேற்கு சிங்கப்பூரி (Singapore)ல். | | | |
| | நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக் கப்பல்கள்—நியூ கினி (New-Guinea)-யின் கிழக்குக்கரைக்கு அருகாமையில். | | | |
| **10—2—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany), ப்ரெமன் (Bremen) உள்பட. கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest). | | நஷ்டமில்லை. | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—டெர்னு (Derna), மார்டுபா (Martuba) பிரதேசங்கள். | | | |
| | கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—ஹெராக்ளியான் (Heraklion). | | | |
| | கிழக்குப்போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்தரங்கம் முழுவதிலும். | | 8 விமானங்கள். | 12 விமானங் ... |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 10—2—42. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக் கூட்டங்கள்—மார்டபான் (Martaban) பிரதேசம். | | | |
| | தாய்லாந்து (Thailand)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக் கூட்டங்கள்—செங்கிரே (Chengrai). | | | |
| 11—2—42. (புதன்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—லக்ஷியங்கள்—மான் ஹீம் (Menheim). கப்பல் துறைகள்—ப்ரெஸ்ட் (Brest), லெஹாவர் (Lehavre). விரோதி விமான நிலயங்கள்—ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | 2 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடம்—மார்டுபா (Martuba). | | | |
| | துறைமுகம்—ட்ரிபோலி (Tripoli). | | | |
| | ஸிஸிலி (Sicily)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்-கடேனியா (Catania). | | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 17 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு-பஸிபிக் (Pacific)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானங்களை ஏற்றிச்செல்லும் ஒரு ஜப்பானியக் கப்பல்—போனி (Boni) குடாவில். | கப்பல் தீப் பற்றியது. | | 4 விமானங்கள். |
| | பர்மா (Burma)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி சைனியங்கள்—மோல்மின் (Moulmein), ஸால்வீன் (Salween) நதிக்கரையில். | | | |
| 12—2—42. (வியாழக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஜெர்மன் யுத்தக் கப்பல்கள்- இங்கிலீஷ் கால்வாய் (English channel). | எல்லாக் கப்பல்களும் தாக்கப்பட்டன. | | |
| | இரவில்.—வெடி குண்டுகள் விழுந்ததைப் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானப்போர்—மாட்ரு (Matruh) பிரதேசம். | | | 1 விமானம். |
| | துறைமுகப் பிரதேசங்கள், கப்பல்கள்—ட்ரிபோலி (Tripoli). | பெருந் தீக்கள் மூட்டபபட்டன. | | |
| | கிரீஸ் (Greece)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல் துறைகள்-ஸலாமிஸ் (Salamis). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 12—2—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்—ஹெராக்ளியான் (Heraklion). | | | |
| | ஸிஸிலி (Sicily)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கடேனியா (Catania). | | 6 விமானங்கள். | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 7 விமானங்கள். | 16 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி போக்குவரத்துகள்.—மார்டாபான் (Martaban) பிரதேசத்தில். | | | |
| | சிங்கப்பூர் (Singapore)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய ஸ்தானங்கள்.—சிங்கப்பூர் தீவில். | | | |
| 13—2—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கொலோன் (Cologne) ஆச்சன் (Aachen) (ஜெர்மனியில்). | | | |
| | கப்பல் துறைகள்.—லெஹாவர் (Lehavre). | | | |
| | விமான நிலயம்.–ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | நஷ்டமில்லை. | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸ்தானங்கள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு வியாபாரக் கப்பல்.—மத்தியதரைக் கடலின் (Mediterranean) மத்திய பாகத்தில். | மூழ்கடிக்கப் பட்டது. | | |
| | ஸிஸிலி (Sicily)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.—கடேனியா (Catania), ஜெர்பினி (Gherbini). | | | |
| | கிரீட் (Crete)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ஹெராக்ளியான் (Heraklion). | | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 11 விமானங்கள். |
| | தூரக்கிழக்குப் நியூ பிரிடன்—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்.–கஸாமாட்டா (Gasamata). | | | |
| | பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகளின் கூட்டங்கள்—பான் (Pann) பிரதேசம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **14—2—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ரைன்லாந்து (Rhineland). | | | |
| | மற்ற லக்ஷியங்கள்.—ரைன்லாந்தில் (Rhineland). | | | |
| | கப்பல் துறைகள்.—லெஹாவர் (Lehavre). டங்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்டு (Ostend). | | | |
| | விரோதி விமான நிலயங்கள்.—ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | 2 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்.—ஆக்ரோமா (Acroma) பிரதேசத்தில். | | நஷ்டமில்லை. | 20 விமானங்கள். |
| | துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான நிலயம்.—பெர்க்கா (Berka). | | | |
| | **ஸிஸிலி (Sicily)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.—கடேனியா (Catania), காமிஸோ (Comiso), ஜெர்பினி (Gherbini). | | | |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 5 விமானங்கள். | 7 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய யுத்த தளவாடங்கள் சேமித்த இடங்கள்.—பான் (Pan), மார்டாபான் (Martaban) பிரதேசங்களில். | | | |
| | **சுமத்திரா (Sumatra)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் போக்குவரத்துகள்.—சுமத்திராவு (Sumatra)க் கருகாமையில். | | | |
| **15—2—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | இரவில்.—கப்பல் துறைகள் ஸெண்ட் நாஸேர் (St. Nazaire). | | | |
| | ஒரு விரோதி ஸப்ளைக் கப்பல்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக் கருகாமையில். | | நஷ்டமில்லை. | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | ஒரு விரோதிப் படை வகுப்பு.—கேடல் அன்மார் (Gaddel Anmar), பிராந்தியம். | | | |
| | **கிழக்குப் போர்முனை**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—யுத்தரங்கம் முழுவதிலும். | | 7 விமானங்கள். | 11 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி வசமுள்ள ஸ்தானங்கள்.—பான் (Pann) பிரதேசம். | | | |



## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **10—2—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—சிங்கப்பூர் (Singapore)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் வசமுள்ள ஸ்தானங்கள்.—மேற்கு சிங்கப்பூர் (Singapore). | | | |
| | **டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் (D. E. I.)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.—வட சுமத்திரா (Sumatra). | | | |
| **11—2—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—மேர்ஸிஸைட் (Mersyside). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தாடான் (Thaton). | | | |
| | **நியூ கினியா (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ஸாமரேய் (Samaraie). | | | |
| | **சிங்கப்பூர் (Singapore)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—சிங்கப்பூர் (Singapore). | | | |
| **12—2—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow) | ... | 2 விமானங்கள். | |
| | **லிபியா Libya**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | டோப்ருக் (Tobruck) | ... இன்னும் அநேகம் சேதமாயின. | 4 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் துருப்புகள்—மார்டாபன் (Martaban) பிராந்தியம். | | | |
| **13—2—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதிஞல் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 13—2—42. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா, (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் போக்குவரத்துகள்—மார்டாபன் (Martaban) பிரதேசம். | | | |
| | சுமத்திரா (Sumatra)—(N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | எண்ணெய் கிடைக்கும் பிரதேசம்—பெனும்பாங் (Penambang). | | | |
| 14—2—42. (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் (D. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்—வட சுமத்திரா (Sumatra). | | | |
| 15—2—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி(England)ன் வடகிழக்குக் கடற்கரை. | மிகவும் சொற்ப சேதம். | 1 விமானம். | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்—மத்தியதரைக்கடலி (Mediterranean)ன் மத்தியபாகத்தில். | | 2 விமானங்கள். | |
| | மால்டா (Malta). | | 2 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | சிங்கப்பூர் (Singapore). | | | |
| | பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் துருப்புகள்—மார்டாபன் (Martaban) பிரதேசத்தில். | | | |
| 16—2—42. (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—டிமோர் (Timor)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | நேசதேசக் கப்பல்கள்—டிமோர் (Timor) கடலில் | சேதமொன்று மில்லை | | |

# யுத்தக் குறிப்புகள்.

**சிங்கப்பூர்.** சிங்கப்பூரில் ஏற்பட்ட நஷ்டங்களைக் குறைத்துச் சொல்லுவதில் பிரயோஜனமில்லை. அவ் விதம் குறைத்துச் சொன்னாலும், அதைக்கண்டு அதிகக் கலவரமடைந்தாலும் தவருகும். சுருங்கச் சொல்லில் சிங்கப்பூரை இழந்ததால் அதிக நஷ்டமென்பதில் சந்தேகமில்லை.

வி வி வி வி வி வி வி

**அபாயம்.** பர்மா, இந்தியா, ஆஸ்திரேலியா, மத்தியக் கிழக்கு நாடுகளான இரான் முதலியவைகள், ஆபிரிக்கா முதலிய நாடுகளுக்கெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக ஆபத்து வருவதாகக் காணப்படலாம். ஆனல் ஒரே சமயத்தில் இந்த நாடுகளுக்கெல்லாம் ஆபத்தில்லை. ஜப்பான் தன்நாட்டையும், ஏற்கனவே பிடித்துள்ள நாடுகளையும் காபாந்து செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. மேலும் டச்சு நாடுகளையும் பிலிப்பைன்ஸையும் கைவசப்படுத்த நினைத்திருக்கிறது.

இருந்தாலும் எதிரியின் உட்கருத்து இன்னும் வியக்தமாகத் தெரியவில்லை. வ்ளாடிவாஸ்டாக்கிலிருந்து ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் துறைமுகம் வரை படையெடுப்புகள் செய்துவருகிருன். இது வீண் பயமுறுத்தலானலும், எதிரியைப் பயித்தியம் பிடித்தவனென்று எண்ணிவிடக்கூடாது.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவிற்கு அருகிலும்.** இந்தியாவிற்கு அருகில் ஆபத்து நெருங்கிவருகிறது. வங்காளக் குடாக் கடலில் எதிரிக் கப்பல்களின் நடமாட்டம் இருப்பதாக நியூ டெல்ஹியில் ராணுவத் தலைவர் அறிவித்திருக்கிருர். கடல் மூலமாகப் படையெடுத்து இந்தியாவிற்கு எதிரி வரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறதாகவே சொல்லலாம்.

வி வி வி வி வி வி வி

**நமது கடமை.** இச்சமயத்தில் நமது கடமை ஒன்றுதான்; அதாவது இந்தியர்களுக்குள்ள ஆபத்தைத் தெரிந்துகொண்டு இந்த நிலைக்குத் தக்கவாறு,தலை குனியாமல், தைரியம், பயம் முதலியவைகளில்லாமல் இருக்கவேண்டும். பயந்தாங்குள்ளிகள் தான் கலவரமடைவார்கள். நாம் தைரியத்தை இழந்தால் எதிரிக்கு அனுகூலமாய் முடியும். அப்படிச் செய்யாமல் தைரியமென்ற கவசமணிந்து, நம்பிக்கையிழக்காமல் இருந்து நமது முன்னேர்கள் செய்த விதமாக நடந்துகொள்ளவேண்டும். மிஸ்ட்டர் சர்ச்சில் தனது நாட்டு மக்களுக்குச் சொன்னதை நாமும் ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். “மனதில் பயம் வைத்துக் கலவரமடைவது என்பதுதான் பெரிய தவறு, பெரிய குற்றம். இது நமக்கு வெற்றி வருவதைத் தடுத்துவிடும். இக்குற்றத்தை செய்தவனையும், மற்ருேருக்கு உண்டுபண்ணினவனையும் கல்லைக்கட்டி கடலில் அமுக்கிவிடவேண்டும்.”

வி வி வி வி வி வி வி

**நாம் பின்வாங்கமாட்டோம்.** முடிவான வெற்றி நமக்குக் கிடைப்பதென்பது மாத்திரம் நிச்சயம். அதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

1. தற்சமயம் ஜப்பானுக்குக் கடலாதிக்கம் இருக்கிறதாகக் காணப்படலாம். ஆனல் நேசநாடுகளான ருஷ்யா, அமெரிக்கா, பிரிடன் மற்றநாடுகள் ஒன்று சேர்ந்து தாக்கும்போது ஜப்பானுல் சமாளிக்க முடியாது.

2. ஜப்பானுடைய முழுபலமும் இதர அச்சுநாடுகளின் வலுவைப் பொருத்திருக்கிறது. ஜெர்மனி வீழ்ந்தால் ஜப்பானும் குலைந்துவிடும். ஜெர்மனியைத்

தோற்கடித்த பிறகு நேசநாடுகள் ஜப்பானையும் முறியடித்துவிடுவார்கள். இதற்குக் கொஞ்ச காலம் பிடிக்கலாம். ஆனால் காலம் என்பது நேசநாடுகளின் சார்பாகவே இருக்கிறது.

3. மேலும், கொஞ்சநாள்வரை முன்னேறிக் கொண்டிருந்தாலும், தற்சமயம் ஜெர்மன் படைகள் ருஷ்யாவில் திணறிக்கொண்டிருக்கின்றன. ஜெர்மன் படைகளை ஒருவராலும் எதிர்க்கமுடியாது என்ற கதை போய்விட்டது. எதிரி தோல்வியடைந்து மேற்கு நோக்கி ஓடுகிறான். இவ்வருஷம் முடிவடைவதற்குள் ஜெர்மனியைப் பூரா தோற்கடித்துவிடுவதாக ஸ்டாலின் உறுதி கொடுத்திருக்கிறார்.

4. கடைசியாக யுத்தத்திற்கு வேண்டிய சாமான்களை நேசநாடுகள், முக்கியமாக பிரிட்டனும் அமெரிக்காவும் ஏராளமாக உண்டுபண்ணுகின்றன. யூரல் மலைச் சாரலிலும், காக்கஸ் பிரதேசத்திலும், அமெரிக்காவிலும், கனடாவிலும், தென் ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் புதிய சைனியங்கள் தயார் செய்யப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**பிறர்மேல் பழிசாட்ட வேண்டாம்.** முன் சொன்னவைகளை நாம் தீர ஆலோசித்துக் கொண்டு தைரியம் கொள்ளுவோம். பிறர் மேல் குற்றம் சாட்ட வேண்டாம். பிறரைக் குற்றம் சாட்டுவதும், கீழே விழுந்தாலும் மீசையில் மண் இல்லை என்பதும், பிறருக்கு உபதேசம் செய்வதும், பாதி ஆற்றில் இருந்துகொண்டு வண்டி வாடகையைக் கொடுக்கும்படி பயமுறுத்துவதும் சுலபம்தான். ஆனால் நாம் இவ்விதமாக நடந்து கொள்ளக்கூடாது. ஒருதடவை தவறிவிட்டால் மறுமுறை தவறாமல் இருக்கும்படி நடந்துகொள்ள வேண்டும். குட்டுப்பட்டு நாமே அனுபவத்தைப் பெறுவோம். உலகத்தில் தவறுதல் இல்லாதவர்களே கிடையாது. யானைக்கும் அடி சறுக்கும். கஷ்டங்களுக்கிடையில் தைரியம் கொண்டு, மனம் தளராமல் எதிரிகளைத் தடுத்து, நாமும், உலகமும் சுகமாக இருக்கப் பாடுபடுவோம்.

வி வி வி வி வி வி வி

**பிரமமே வேண்டாம்.** செப்பிடு வித்தைக் காண்பித்து ஜயம்பெறுவதாகக் காண்பிக்க முடியாது. சரீரப் பிரயாசை, ஒற்றுமை முதலியவையிருந்தால்தான் வெற்றிபெற முடியும். இந்தியாவிலிருக்கும் நாம் யுத்த முயற்சிக்குத் தகுந்த விதமாக முயற்சியெடுத்துக் கொண்டு சண்டையில் ஈடுபடவேண்டும். எவ்விதமான உதவி செய்யக்கூடுமோ அவ்விதமெல்லாம் செய்யத்தான்வேண்டும்.

வி வி வி வி வி வி வி

**வெற்றி நிச்சயம்.** சூரியன் உதயமாவதற்குமுன் அதிக இருளாக இருக்குமென்று சொல்லப்படுகிறது. உதாரணமாக ஸெயிண்ட் ஹெலினாவில் நெபோலியனை அடைத்ததற்கு முன்னால் ஆல்டர் லிட்ஸ் என்ற இடத்தில் பிரிடிஷார் தோற்றனர். ஆகவே பல சண்டைகளில் தோற்றாலும் ஒருபோதும் முடிவான வெற்றியை அவர்கள் இழந்ததில்லை.

வி வி வி வி வி வி வி வி வி வி

**முஸ்லீம் கலைகளுக்கு ஆபத்து.** டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கு யுத்தம் பரவிய பிறகு முஸ்லீம் கலைகளுக்கு அதிக ஆபத்து என்பதை மறக்கக்கூடாது. டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளில் முஸ்லீம்கள் தான் அதிகம். இவர்கள் தங்கள் மத அனுஷ்டானங்களை விடாமல் தழுவுகிறவர்கள். வருஷா வருஷம் மெக்காவுக்குப் போகும் முகமதிய யாத்ரீகர்களில் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து ஐந்தில் ஒருபங்கு போய்வருகிறார்கள். பூமத்திய ரேகை பிராந்தியங்களில் வசிக்கும் இவர்கள் இஸ்லாம் மதத்தின் உணர்ச்சியை ஊர்ஜிதம் செய்யும் தன்மையும், தீர்க்காலோசனையும் பொருந்தியவர்கள். இப்பாகத்தில் கி. பி. 1300 முதல்கொண்டே இஸ்லாம் மதம் பரவி வருகிறது. முகமதிய மதாசாரியர்கள் தென் இந்தியாவிலிருந்து முகமதிய வியாபாரிகளுடன் சுமத்திரா தீவுகளுக்குச் சென்றார்கள். இங்கிருந்து ஜாவா,



போர்னியோ, மலேயா, பிலிப்பைன்ஸ் தீவுகள், ஸெலிபஸ் தீவுகள் முதலியவைகளில் இம்மதத்தைப் பரவச்செய்தார்கள். ஜாவாவில் 10-க்கு 9 பேர் முஸ்லீம்கள். இப்போது ஜப்பானியர்கள் ஜாவாவில் புகுந்து இவர்களை அழிக்க நினைக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி வி வி வி

**பால்கன் நாடுகளில் குழப்பம்.** பால்கன் நாடுகளில் ஹிட்லர் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. வசந்த காலத்தில் துருப்புகளை அனுப்பும்படி ஹங்கேரியை ஹிட்லர் தாஜாசெய்கிறான். ரிப்பன்டிராப், கயானோ, கிடல் முதலியோர் புதாபெஸ்டுக்கு வந்தது இதற்காகத்தான். ஹங்கேரிய மந்திரி சபையின் பிரஸிடெண்டு ராஸெளடினஜி ஸாம தான பேத தண்டங்களால் ஜெர்மானியரால் பயமுறுத்தப்படுகிறான். ஸ்டீபன் ஹார்த்தி என்பவனுக்கு மேல்பதவி கொடுப்பதாகவும் ஜெர்மனியில் சொல்லப்படுகிறது. ஆனால் டிரான்ஸல்வேனியாவில் இன்னும் பாக்கியாயுள்ள ஹங்கேரி பிரதேசத்தையும் கொடுத்தால்தான் யுத்த சாமான்கள் கொடுப்பதாக ஹங்கேரி சொல்லிவிட்டது. ஆனால் இதுவும் மற்ற நாடுகளைப்போல் அவஸ்தைப்பட வேண்டியே வரும்.

இரண்டாம் தடவையாக வியன்னாவில் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி ருமேனியா டிரான்ஸல்வேனியாவில் சிறிது பாகத்தை ஹங்கேரிக்குக் கொடுத்துவிட்டது. மீதியுள்ளதையும் ஹங்கேரி கேட்கிறது. ஆனால் ருமேனிய பிரஸிடெண்டு ஜெனரல் அன்டோனெஸ்க்கு இதைப் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டான். ஏனென்றால் ஏற்கனவே விட்டுக்கொடுத்த டிரான்ஸல்வேனியா பாகத்தை ஈடுசெய்வதற்காக ருஷ்யாவிடமிருந்து பெஸ்ஸரேபியாவை வாங்க யோசித்துக்கொண்டிருக்கிறான். பிறகு நீஸ்டர் நதிக்கு அப்பாலுள்ள ருஷ்ய நாடுகளைப் பிடிக்கவும் எண்ணம் கொண்டிருந்தான். ஆனால் அது இனிமுடியாது. ஏனென்றால் ஜெர்மானியருக்கு இங்கும் கிரிமியாவிலும் தோல்வி ஏற்பட்டுவிட்டது. ஆகவே வசந்த காலச் சண்டைக்கு துருப்புகள் வேண்டுமென்று அன்டோனெஸ்குவை ஹிட்லர் கேட்டதற்குதான் ஏற்கனவேயே அனுப்பிய 2,00,000 ருமேனியர்கள் இறந்து விட்டதாகப் பதில் சொன்னான். (இனி அனுப்ப முடியாது என்பது கருத்து). நீஸ்டர் நதிக்கு அப்பாலுள்ள நாடுகள் கிடைக்காததோடு டிரான்ஸல்வேனியாவிலுள்ள பாகமும் போய்விடும். ருமேனிய அதிபதியான அன்டோனெஸ்குவிற்கு அதிகக் கோபம் வந்திருக்கிறது. மெர்ஸிடஸ் மோட்டாரை இவனுக்குப் பரிசாகக் கொடுத்து இவனைத் திருப்தி செய்ய ஹிட்லர் பார்க்கிறான். அதுவும் பலிக்காது.

வி வி வி வி வி வி வி வி வி வி

**விஷியும், ஸ்பெயினும்.** விஷி பிரான்ஸ் நடந்துகொள்ளுவது மிகவும் இளப்பமாகக் காணப்படுகிறது. ஜெர்மன் யுத்தப் பொருள்களைப் பிரெஞ்சுக்காரர்கள் வாங்கி, ஆபிரிக்காவிலிருக்கும் தளகர்த்தர் ரோமலுக்கு அனுப்புவதாக ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பாரிஸிலிருக்கும் விஷி ஸர்க்காரின் தூதன் கவுண்டு டி பிரினான், டுனிஸிலுள்ள இருப்புப்பாதைகள் மிகவும் குறுகலாயிருப்பதால் அதன் வழியாக துருப்புகள், யுத்தப் பொருள்கள் முதலியவைகளை அனுப்புவது முடியாது என்று சொல்லுகிறான். ஆனால் உண்மையில் விஷி அரசாங்கம்தான், மோட்டார்களையும், லாரிகளையும், இதர சாமான்களையும் லிபியாவுக்கு வாங்கி அனுப்புகிறது. வட ஆபிரிக்காவில் ரோமல் செய்யும் பொருளாதார வேலையின் பயனாக பிரெஞ்சுப் பிரதேசத்தில்தான் சாமான்கள் சேகரம் செய்யப்படுகின்றன. ஸ்பெயின் தலைவனான பிராங்கோவும், இதாலியும் 1940-ல் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி பிஸர்டா முதலிய துறைமுகங்களை உபயோகிக்கமுடியாது. ஆனால் இப்போது மற்ற இடங்களுக்கு ஸப்ளை அனுப்ப உபயோகப்படுகின்றன.

ஆகவே மறைமுகமாக சமான்கள் அனுப்பும் தொழிலில் ஸ்பெயினுக்கும் ஒரு கையுண்டு. மார்ஷல் பிடேன் ஸ்பெயினுக்கு வந்ததிற்கும் இதுதான் காரணம். மொராக்கோவில் உள்ள பிரெஞ்சுப் படைத் தலைவன் ஜெனரல் நௌஜெஸ்ஸும், ஸ்பெயின் கவர்னர் ஆர்காஸ்ஸும் கலந்து பேசியதும் இதற்காகத்தான். மேலும் டாங்கியர்ஸ்ஸில் கலகங்களுக்கு நாஸிகள் காரணமாயிருந்தனர்.

 இவைகளுக்கு சில உதாரணங்கள்.

1. ஸெய்கோனிலுள்ள நிசி நிசி என்ற ஜப்பானியப் பத்திரிகையில் ஸர் ஆர்ச்பால்டு வேவல், பஸிபிக்கில் நிலைமை மோசமாக இருப்பதால் தனது பதவியை ராஜீநாமாச் செய்திருக்கிறார். மேலும் இவனுக்குப் பதிலாக ஸர் ராபர்ட் புருக் பாபம் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இவ்வேலையை ஒப்புக்கொள்ள பிரிடனிலிருந்து புறப்பட்டுவிட்டார். (பிரெஞ்சு பாஷையில் இதாலிய ஒலி பரப்பு, ஜனவரி 9).

2. "மலேயா நாட்டு கவர்னர் ஸர் ஷெண்டன் தாமஸ் சிங்கப்பூரில் இருந்து கல்கத்தாவிற்குப் போய் ரேடியோ மூலம் சிங்கப்பூரிலுள்ளோருக்கு நாட்டைத் தற்காப்பு செய்யும்படி ஒலிபரப்பினார்". (இங்கிலீஷில் ஜப்பானிய செய்தி, ஜனவரி 13, 1942.)

3. பிலிப்பைன்ஸில் தோல்வியடைந்த மெக் ஆர்தர், 2,057 டன்னுள்ள அமெரிக்க ஆஸ்பத்திரி கப்பல் மக்டன் என்றதை அறியாமல் தாக்கி ஆஸ்திரேலியாவுக்கு ஓடிவிட்டான். (இங்கிலீஷில் ஜப்பானிய செய்தி, ஜனவரி 17, 1942).

இவை யாவும் முழுப்பொய்களாதலால் இவைகளுக்கு வேறு பதில் தேவையில்லை.

---

## "போர் செய்யமுடியாமல் முடங்கிக் கிடக்கின்றன."

## "ஷார்ன் ஹார்ஸ்ட்" "நிஸ்நௌ" இரண்டு ஜெர்மன் யுத்தக் கப்பல்களும், ப்ரெஸ்ட் துறைமுகத்திலேயே அடைபட்டிருக்கின்றன.

## ப்ரெஸ்ட் துறைமுகத்தில் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதல்கள்.

(விமானப்படைத் தலைவர் L. V. பிரேஸர் எழுதியது).

[இவ்வாரத்தில் ப்ரெஸ்டு துறைமுகத்தைவிட்டு மேற்சொல்லிய கப்பல்கள் தப்பி ஓடிவிட்டதால் கீழே கண்ட வியாசத்திலிருந்து அவை அங்கு தங்கியிருந்தபொழுது நடந்த விஷயங்கள் தெரியவரும்—பத்திராதிபர்.]

ஜெர்மன் பெரிய யுத்தக் கப்பல்களான ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்நௌ என்பவை தங்கியிருக்கும் ப்ரெஸ்ட் துறைமுகத்தை பிரிடிஷ் விமானங்கள் மீண்டும் மீண்டும் தாக்கின. ஒரே ஒரு தடவையில் அவை பிரிடிஷ் பாம்ப்ர் விமானங்களிடம் அகப்பட்டுக்கொள்ளாமல் அட்லாண்டிக் சமுத்திரத்தில் தப்பி ஓடிவந்து யுனைடெட் ஸ்டேஸ்ஸிலிருந்து பிரிடனுக்குச் செல்லும் ஸப்ளை மார்க்கங்களைத் தண்டிக்க எத்தனிக்கையில் 20 வியாபாரக் கப்பல்களை மூழ்கடித்தன.

மீண்டும் அவை ப்ரெஸ்ட் துறைமுகத்திற்குச் சென்று ஒளிந்துகொண்டது முதற்கொண்டு மறுபடியும் அவைகள் அட்லாண்டிக்கில் செல்லும் நேசதேசத் துணைக்கப்பல்களுக்கு சேதம் விளைவிக்கமுடியாமல் செய்யவேண்டுமென்று பிரிடிஷ் விமானப்படை அவைகளை அடிக்கடி தாக்கிவந்தது. அது இதுவரையில் எதிரி யுத்தக் கப்பல்களை வெளியில் விடாமல் வெற்றிகரமாகவே முற்றுகை போட்டுவந்தது. 1941-ம் வருஷம் மார்ச்சு 30-ம் தேதியன்று அக்கப்பல்கள் ப்ரெஸ்ட் துறைமுகத்திலேயே முதல் தடவை வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. அதுமுதற்கொண்டு 1942-ம் வருஷம் ஜனவரி 26-ம் தேதிவரை அவைகளில் ஒன்று மட்டில்தான் தப்பி ஓடிவந்துவிட்டது. அதாவது 1941 ஜூலையில் 'ஷார்ன்ஹார்ஸ்ட்' என்ற யுத்தக் கப்பல்மட்டில் பிரெஞ்சுக் கடற்கரையில் இன்னும் தெற்கே தள்ளியுள்ள லாபாலிஸ் துறைமுகத்திற்குச் சென்று சொற்ப நாட்களுக்குள் திரும்பி வந்துவிட்டது. ஏனென்றால் நாலு இன்ஜின்கள் கொண்ட பிரிடிஷ்



பாம்பர் விமானங்கள் பகல் காலத்திலேயே அக்கப்பலைத்தாக்கி மறுபடியும் ப்ரெஸ்ட் துறைமுகத்திற்கே துரத்தி அடித்துவிட்டன. அதற்குப்பிறகு அது வெளிக்கிளம்பவேயில்லை.

### மூன்றாவது கப்பல்.

சேதமடைந்த யுத்தக் கப்பல்கள் தங்கும் ப்ரெஸ்ட் துறைமுகத்தில் மேலே குறிப்பிட்ட இரண்டு கப்பல்களுடனும் பிரின்ஸ் யூஜென் என்ற கப்பலும் சேர்ந்து கொண்டது. பிஸ்மார்க் கப்பலுக்குத் துணையாக இந்தக் கப்பலும் அட்லாண்டிக் சமுத்திரத்தில் வியாபாரக் கப்பல்களின்மீது நடந்த தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தது. பிஸ்மார்க் கப்பல் தாக்கப்பட்டபொழுது அது மூழ்கினதுபோல் இதற்கு அந்தகதி நேராமல் தப்பி ஓடிற்று. ஆனால் இந்தக் கப்பலும் பலமாகத் தாக்கப்பட்டு, சேதமடைந்து ப்ரெஸ்ட் துறைமுகத்தில் ஓடி ஒளிந்து கொண்டிருந்தது.

இதர யுத்தக்கப்பல்கள் எவ்விதம் கப்பல் துறையிலிருக்கும் யுத்தக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடிக்கமுடியாதோ அதைப்போலவே பாம்பர் விமானங்களாலும், முடியவில்லை. ஆனால் கப்பற்படைகள் நுழையக்கூடாத இடங்களில் பாம்பர் விமானங்கள் தாக்க சாதகம் இருக்கிறது. கப்பற்படை தளத்தைத் தாக்குவதற்கு நுழைய எத்தனிக்கும் எந்தக்கப்பலையும் கரையிலுள்ள பீரங்கிகள் மூழ்கடிக்கலாம். ஆனால் பாம்பர்களோ அந்தக் கப்பற்தளத்தைத் தாக்கலாம். ஆனால் ஜலமில்லாத (Dry dock) கப்பல் துறைகளில் தங்கியிருக்கும் யுத்தக் கப்பல்களை இடிகுண்டுகளால், ஆகாயத்திலிருந்தாவது அல்லது வேறு கப்பலைக் கொண்டாவது தாக்க முடியாது. மேலும் தாழ்ந்த மட்டத்திலிருந்து வெடிகுண்டுகளை அவைகளின்மேல் போட்டு சேதம் விளைவிக்க முடியாது. ஏனென்றால் அந்தக் கப்பல்களின்மேல் போட்டிருக்கும் தகடுகளைத் துளைக்கக்கூடிய சக்தி அவ்விதம் எறியப்பட்ட வெடிகுண்டுகளுக்கு ஏற்படாது. ஆகையால் பிரிடிஷ் விமானப் படையினால் ஒருவிதமான தாக்குதல்தான் செய்ய முடிகிறது. பலமான கவசத்தைத் துளைக்கக்கூடிய கனமான வெடிகுண்டுகளை வெகு உயரத்திலிருந்து அவைகள் போடுகின்றன. அநேக வெடிகுண்டுகள் குறிதவறிப்போய் விடும். ஆனால் ஒன்றாவது நேராக அக்கப்பல் மேல்விழும். அவ்விதம் விழுந்து சேதம் ஏற்பட்டால் அதைப் பழுது பார்ப்பதற்கு குறைந்த பக்ஷம் ஒரு மாதமாவது பிடிக்கும். அப்படி சேதமடைந்ததைப் பழுது பார்ப்பதற்குள் பாம்பர்கள் மறுபடியும் தாக்க வந்துவிடும்.

### பலமான கவசம்பூண்ட கப்பல்களின் அடித்தட்டுகள்.

ஷார்ன் ஹார்ஸ்ட், நீஸ்நௌ என்ற யுத்தக் கப்பல்களில் பீரங்கிகளின் கனத்தைக் குறைத்து கவசத் தகடுகளின் கனத்தை அதிகரித்துச் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் வைக்கப்பட்டிருக்கும் பெரிய பீரங்கிகளின் வாய்களின் அகலம் 11 அங்குலம்தான். ஆனால் ஜெர்மன் கப்பற்படையிலுள்ள வேறு எந்தக் கப்பலின் அடித்தட்டைக் காட்டிலும் இக்கப்பல்களின் அடித்தட்டுகள் கனமான தகடுகளால் செய்யப்பட்டிருக்கின்றன. டிஸம்பர் மாதம் 18-ம் தேதி நடந்த தாக்குதலில் அவைகளுக்குச் சேதம் விளைவித்திருப்பதை பாம்பர்களிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைப் பார்த்தால் தெரியவரும். அந்தத் தாக்குதல் பிரிடிஷ் விமானப்படையின் ஸ்டர்லிங்கிஸ், ஹாலிபாக்ஸ், மான்செஸ்டர்ஸ் என்ற மூன்று வகை கனமான வெடி விமானங்களால் பகற் காலத்தில் ஏற்பட்டது. போட்டோக்களைப் பார்த்ததில் நீஸ்நௌ கப்பலின் பின்பக்கத்தின் வலது பாகத்திற்கும் அது தங்கியிருந்த கப்பல்துறைப்பக்கத்திற்கும் நடுவே கனத்த கவசத்தையும் துளைத்துச் செல்லக்கூடிய வெடிகுண்டு ஒன்று விழுந்ததாகக் காணப்பட்டது. கப்பலுக்கும், கப்பல்துறையின் ஒரு பக்கத்துக்கும் நடுவில் 20 அல்லது 30 அடி தூரம்தான் இருக்கும். இந்த குறுகின இடத்தில் வெடிகுண்டு வெடித்தால் மிகுந்த சேதத்தை உண்டாக்கும். கப்பலைச் செலுத்தக்கூடிய கருவிக்கும், கப்பலைத் தள்ளிச்செல்லும் துடுப்புகளுக்கும் அவைகளைத் தாங்கிச்செல்லும் யந்திரத்திற்கும், சேதம் உண்டாக்கியிருக்கலாம். வெடிகுண்டுகளின் துணுக்குகள் கப்பலின் பக்கத்தில் துளைத்துச் சென்றிருக்கலாம். இதே மாதிரி ஷார்ன்

ஹார்ஸ்ட் கப்பலுக்கும் அதற்குச் சமீபமாயுள்ள கப்பல் துறைக்கும் இடையே வெடிகுண்டு விழுந்து இதே மாதிரி சேதம் உண்டாயிற்று. அந்த புகைப்படங்களைப் பார்த்தால் கப்பலுக்கு அருகில் அநேக வெடிகுண்டுகள் போடப்பட்டது தெரியவரும். கப்பல் துறைகளுக்கு சேதம் விளைவித்து கப்பல்களைப் பழுதுபார்க்காமல் காலதாமதம் ஏற்பட சம்பாவிதம் இருந்திருக்கிறது.

## தாக்குதலில் உள்ள கஷ்டங்கள்.

வெகு உயரத்திலிருந்து அந்தத் தாக்குதல்கள் பகல் காலத்திலும், இராக்காலத்திலும் ஏற்பட்ட போதிலும்கூட அதிக தைரியமும் மனவுறுதியும் வேண்டும். ஜெர்மனியிலுள்ள எந்த நகரத்தைப்போல் ப்ரெஸ்ட் துறைமுகமும் பலமாகத் தற்காப்பு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பெரிய யுத்தக்கப்பல்களை ஜெர்மானியர்கள் அதிக முக்கியமாக கருதுகிறார்கள். டிஸம்பர் 18-ம் தேதியில் அதிக பலம் வாய்ந்த பாம்பர்கள் நேரே திரளாக பறந்து சென்றன. அவைகளைத் தாக்க பைடர்களும், தரை பீரங்கிகளும் மும்மரமாக ஈடுபட்டிருந்தன. பைடர் நாலா பக்கங்களிலிருந்தும் வந்து தாக்கின. ஸ்டாலிங் பகுதிகளை நடத்திச் சென்ற படைப்பகுதி தலைவர் ஷார்ன் ஹார்ஸ்ட், நீஸெள இவைகளிலிருந்த கப்பல் துறைகளுக்கு நேரே உயர வந்து சேர்ந்தார். அவர் அந்த இடத்திலிருந்து தன் லக்ஷியத்தைக் குறிபார்த்த பிறகு 500 அடி கீழே வந்து நிறுத்திக்கொண்டு வெடிகுண்டுகளை வீசும்படி உத்தரவிட்டார். பிறகு திரும்பிப்போகும்பொழுது விமானங்களிலிருந்து போட்ட வெடிகுண்டுகள் ஒன்று பக்கத்திலும், இரண்டு கப்பல் துறைகளிலும் மற்றொன்று அதற்கப்பாலும் விழுந்ததைப் பார்த்தார்.

எதிரியின் கப்பல்களை அவைகளின் துறைமுகத்திலேயே தங்கியிருக்கும்படி செய்தது கப்பற்படை இலாகாவுக்கு பெரிய வெற்றி என்றே சொல்லவேண்டும். ப்ரெஸ்ட் துறைமுகத்திலிருந்து யுத்தக் கப்பல்களை வெளியே செல்லவிடாமல் சுமார் ஒரு வருஷம் வரையில் அடைத்து வைத்திருந்தது பிரிடிஷ் விமானப் படை ஒரு வருஷம் செய்த அரியதொரு வேலை. அது அநேக வியாபாரத் துணைக் கப்பல்களுக்கு உதவி செய்திருக்கிறது. வேறு கடல்களில் போய் வேலை செய்யும்படி பிரிடிஷ் கப்பற்படையின் பிரதானமான கப்பல்களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறது. ருஷ்யப் போர்முனைக்கும் மற்றுமுள்ள போர்முனைகளுக்கும் ஜெர்மானியர்கள் விரும்பின பைடர் விமானப்படைப் பகுதிகளைப் போக விடாமல் தடைசெய்துவிட்டது. இன்னும் நூற்றுக்கணக்கான தரை விமான எதிர்ப்பு பீரங்கிகள் வருவதற்கும் முடியாமல் செய்துவிட்டது.

---

## பஸிபிக் நிலைமையைப் பற்றிய முக்கிய விஷயங்கள்.

## நேசதேசக் கப்பற்படைகள் அங்கு திரும்பவும் ஆதிக்கம் பெறவேண்டும்.

## மூன்று பெரிய ஜனநாயகங்கள் செய்யவேண்டிய முக்கியமான வேலைகள்.

(ராபர்ட் பிரேஸர் என்பவர் சமீபத்தில் பி. பி. ஸி.-யில் பேசியது).

இப்பொழுது தென்மேற்கு பஸிபிக் போர்முனையில் பிரமிக்கத்தக்க சம்பவங்கள் நடப்பதாகத் தினசரிப் பத்திரிகைகளில் நாம் பார்க்கிறோம். அவைகள் தினமும் மாறிக்கொண்டே வருகின்றன. இவைகளுக்குக் காரணபூதமாயுள்ள சில முக்கிய விஷயங்களை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். அவ்விஷயங்கள் எப்பொழுதும் மாறுதலை. அவைகளைக் கொண்டுதான் ஒவ்வொரு நாளிலும் ஏற்படும் சம்பவங்களைப்பற்றி நாம் கவனிக்கவேண்டும்.

முதலாவதாக, தென்மேற்கு பஸிபிக் சமுத்திரத்தில் நேசநாடுகள் ஆதிக்கம் பெற வேண்டுமேயானால், அங்கு அவர்களின் கப்பற்படைகளைப் பலப்படுத்த வேண்டுமே தவிர வேறு வழியால் முடியாது. இரண்டாவதாக, பஸிபிக்கில்



ஏதோ ஒரு இடத்தில் நமது நேசதேசங்களின் கப்பற்படை தயாராகயிருந்து வருகிறது. அது ஏதோ ஒரு இடத்தில் எந்த சமயத்திலாவது யுத்தத்தில் கலந்துகொண்டு, எதிரிகளுக்குத் துன்பத்தை விளைவிக்கும் என்பதை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அதுதான் பஸிபிக் யுத்தத்தில் மிகவும் முக்கியமான கடல் போராக இருக்கும். அவ்வித சந்தர்ப்பமும் வெகு சீக்கிரத்திலேயே ஏற்படலாம். பஸிபிக்கின் நிலைமையைப்பற்றிய முக்கிய விஷயங்கள் இவைதான். அவைகளை ஒவ்வொன்றாய் பரிசீலனை செய்வோம்.

## ஜப்பானிய வெற்றிகளுக்குக் காரணம்.

நேசதேசங்கள் தங்கள் கப்பற்படைகளைப் பலப்படுத்துவதைப்பற்றி முதலில் எடுத்துக்கொள்ளுவோம். இப்பொழுது தென்மேற்கு பஸிபிக் போர்முனையில் ஜப்பானியர்களுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைப்பது, ஜப்பானியக் கப்பற்படையின் பலத்தினால்தான்.

மலேயா, பிலிப்பைன்ஸ், ஸராவாக், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளில் சிலவை இவைகளில், ஜப்பானியத் துருப்புகள் பெரிய வெற்றிகள் அடைந்து வருகின்றன. ஆங்காங்கு இருக்கும் படைகள் யாவும் ஜப்பானிலிருந்து கடல் மார்க்கமாக வந்த சைனியங்கள்தான்.

மலேயா, பிலிப்பைன்ஸ், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களுக்கு ஜப்பானியத் துருப்புகள் கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான டாங்கிகள், பீரங்கிகள் முதலிய யுத்த தளவாடங்கள் யாவும் கப்பற்படையால் துணைபுரியப்பட்டு ஏற்றிச் செல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதம் எதிரித் துருப்புகளால் குறிப்பிட்ட இடங்களுக்குக் குறித்த நேரத்திற்குள் போய்ச் சேருவதற்கு முடிந்தது. ஏராளமாக எதிரிகள் திடீரென்று தாக்குவதால், அவர்களை எதிர்த்து நிற்பதற்கு அங்குள்ளவர்களால் முடியவில்லை.

இந்த யுத்தத்திற்குமுன் தென்மேற்கு பஸிபிக் பிராந்தியத்தில் ஜப்பானியத் துருப்புகள் கடற்படையின் உதவியைக்கொண்டு இம்மாதிரி தரைப்போர்களை நடத்துவது முடியாத காரியம் என்று எண்ணியிருந்தோம். அதற்குக் காரணம் என்னவென்றால், அங்குள்ள நேசதேசக் கப்பற்படைகள், தென்மேற்கு பஸிபிக் சமுத்திரத்தின் வழியாக வரும் ஜப்பானிய போக்குவரத்துகளைத் தடுத்துவிடும் என்பதுதான்.

இப்படி நாம் நினைத்ததெல்லாம் பகல் கனவாகவே முடிந்தது. தற்போது கொஞ்ச காலமாக ஜப்பானியப் போக்குவரத்துகள் சரியாக நடந்துகொண்டிருக்கின்றன. இவ்விதப் போக்குவரத்துகள் இடையூறன்னியில் இருக்கும் வரையில்தான் ஜப்பானிய வெளிநாடுகளுக்குச் செல்லும் தரைப்படைகளுக்கு வேண்டிய ஸப்ளைகள் வந்துகொண்டிருக்கும். எவ்விதம் அநேக கிளைகளுள்ள ஒரு அடி மரத்தை வெட்டிவிட்டால், அதன் விசாலமாயுள்ள கிளைகள் தானாகப் பட்டுப் போய்விடுகின்றனவோ அதைப்போலவே ஜப்பானியப் போக்குவரத்துகளுக்கு ஆதாரமாயுள்ள அதன் கப்பற்படையைத் தோற்கடித்துவிட்டால், ஆங்காங்குள்ள ஜப்பானிய உதவிப்படைகள் யாவும் வெகுஎளிதில் முறியடிக்கப்படும். அவ்விதம் செய்வதற்கு நேசதேசத்தார்கள், முதன் முதலில் பஸிபிக்கில் தங்கள் கப்பற்படைகளை மிகவும் பலப்படுத்திக்கொண்டு, பஸிபிக் சமுத்திரத்தின் ஆதிக்கத்தைப்பெறவேண்டும். ஏனென்றால், கப்பற்படையின் உதவியைக்கொண்டுதான் எதிரிகளின் போக்குவரத்துகளைத் துண்டித்துவிடமுடியும்.

## பஸிபிக் சமுத்திரத்தின் பரம ரகசியங்கள்.

இப்பொழுது இரண்டாவது விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். பஸிபிக் சமுத்திரத்தில் வெளிக்குத் தெரியப்படுத்தக்கூடாத ஏதோ ஒரு இடத்தில் நேசதேசக் கப்பற்படை ஒன்று இருக்கிறது. அதற்கு ஆதாரமாயுள்ளதும், அதில் பெரும் பாகமும் அமெரிக்க பஸிபிக் கப்பற்படைதான். இந்தக் கப்பற்படை

எந்த இடத்தில் இருக்கிறது என்பதைப்பற்றி நமக்கு ஒரு தகவலும் தெரியாது. அதைப்பற்றி சமாசாரம் இல்லாமலிருப்பதைக் குறித்து, சிலர்களுக்கு மனக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. நமக்கு நேசதேசக் கப்பற்படையின் இருப்பிடம் தெரியவில்லை. அதைப்போலவே ஜப்பானியக் கப்பற்படையின் இருப்பிடமும் நமக்குத் தெரியவில்லை.

நமக்கு ஜப்பானியக் கடற்படையின் சிறிய பகுதிகளும், கப்பற்படையைச் சேர்ந்த சில பெரிய யுத்தக் கப்பல்களும் எங்கேயிருக்கின்றனவென்று தெரியும். ஜப்பானியக் கப்பற்படையில் தளகர்த்தர் 'யமமோட்டோ' என்பவரின் அதிகாரத்திற்குட்பட்ட 8 நவீன யுத்தக் கப்பல்கள்தான் இருக்கின்றன. எப்படி நமக்கு அமெரிக்கக் கப்பற்படை இருக்குமிடம் தெரியவில்லையோ, அதைப்போலவே இந்த ஜப்பானியக் கப்பல்களும் அவைகளுக்குத் துணையாயுள்ள க்ரூயிஸர்களும் தற்சமயம் எங்கு இருக்கின்றனவென்று நமக்குத் தெரியாது. அவைதான் பஸிபிக் சமுத்திரத்தின் இரண்டு முக்கிய ரகசியங்கள். ஒரு கப்பற்படைக்கு மற்றொரு கப்பற்படை இருக்குமிடம் தெரிந்தால், அத்துடன் ஒரு யுத்தக் கப்பல் உபரியாக இருப்பதுபோல் அதன் பலம் அதிகரிக்கச் செய்யும்.

நேசதேசக் கப்பற்படை பஸிபிக் சமுத்திரத்தில் எங்கு பார்த்தாலும் தற்காப்பு நடவடிக்கைகள் செய்துகொள்ளுவதற்காகத் தன் பகுதிகளைத் துண்டு துண்டாகப் பிரித்து அனுப்பவேண்டுமென்று ஜப்பானிய அரசாங்கம் விரும்புகிறது. அவ்விதம் அவைகளின் கப்பற்படை கலைந்துபோய்விட்டால், எந்தப் போர் முனையில் கப்பற்படை பிரவேசித்தால், யுத்தம் நேசதேசத்தார்களுக்கு வெற்றிகரமாக முடியுமோ அந்த இடத்தில் ஒன்று சேர்ந்து, எதிரியின் கடற்படையைத் தோற்கடிக்க முடியாமல் போய்விடும்.

இவ்வித உத்தேசத்தைக்கொண்டு ஜப்பானியர்கள், அமெரிக்கக் கப்பற்படைக்கு பொறி ஒன்று வைக்கப்பார்த்தார்கள். கலிபோர்னியாவைத் தற்காப்பு செய்துகொள்ளுவதற்கும், மணிலாவில் நடந்த போருக்கு உதவியாகவும் அல்லது வேக்தீவுகள், குவாம் இவைகளைப் பாதுகாக்கவும் அமெரிக்கக் கப்பற்படை போகுமென்று ஜப்பானியர்கள் எண்ணினார்கள். ஆனால் அந்த பொறிக்குள் அமெரிக்கக் கப்பற்படை அகப்பட்டுக்கொள்ளவில்லை.

## யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படையின் வேலை.

யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படை இலாகாவின் பிரகடனங்களிலிருந்து, யுனைடெட் ஸ்டேட்ஸின் பஸிபிக் கப்பற்படை 1,000 மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களில் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துவைக்கமாட்டாது என்று தெரிகிறது. ஜப்பானியக் கப்பற்படையின் முக்கியமான பகுதியுடன் சண்டையிட்டு ஜப்பானின் கடல் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டுமென்பதே அதனுடைய முக்கியமான வேலை. தரையில் போர்நடக்கும் இடத்திற்கு ஜப்பான் கப்பற்படை பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தபோதிலும், ஜப்பான் செய்துவரும் போரில் ஜப்பானியக் கப்பற்படைதான் இன்னும் முக்கியமான ஆதாரமாக இருந்துவருகிறது. அந்தக் கப்பற்படையின் உதவி அழிபட்டுப்போனால், அதன் பிரயத்தனங்கள் யாவும் பாழாய்ப்போய்விடும்.

தற்சமயம் மேற்கு பஸிபிக் சமுத்திரத்தில் ஜப்பானியக் கப்பற்படைதான் கடல் ஆதிக்கம் கொண்டிருப்பதாகத் தோன்றும். அதனிஷ்டப்படி குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று, அதன் சக்தியை ஸ்தாபிக்க முடியுமென்று நமக்குத் தோன்றுகிறது. அம்மாதிரி இருப்பது சிறிது காலத்திற்குத்தான். இதைப் போல் இதற்குமுன் ஜெர்மன் சைனியம், கிழக்கு ஐரோப்பா முனையில் துயர்ந்து முன்னேறிச் செல்வது ஸ்திரமாயிருக்குமென்று எண்ணியிருந்தோம். அம்மாதிரி அதற்குச் சிறிதுகாலம்தான் செய்யமுடிந்தது. அதைப்போலவே ஜெர்மன் விமானப்படையின் பலம், மேற்கு ஐரோப்பிய போர்முனையில் ஸ்திரமாயிருக்குமென்று ஒரு சமயத்தில் தோன்றியது. பிரிடன் பேரில் நடந்த விமான யுத்தத்தில் பிரிடிஷ் விமானப்படைக்குக் கிடைத்த வெற்றியினால், ஜெர்மன் விமானப்படையின் பலம் இப்பொழுது குன்றிவிட்டது.



இப்பொழுது பஸிபிக்கில் நடந்த கப்பல் யுத்தத்தில் முதல் அத்தியாயம்தான் முடிந்திருக்கிறது. இனிமேல் அங்கு நடக்கப்போகும் கடல் யுத்தத்தில் நமக்கு வெற்றி நிச்சயம்.

## நேசதேசத்தார்களின் முக்கிய வேலைகள்.

மேற்சொல்லிய விதமாக பஸிபிக்கில் நேசதேசத்தார்களுக்கு ஏற்பட்டுள்ள யுத்த சாதனங்களையும், வட ஆபிரிக்காவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் நேசதேசத்தார்கள், அடைந்துவரும் வெற்றிகளையும், கிழக்கு ஐரோப்பாவில் ருஷ்யர்கள் முன்னேறிச் செல்லுவது குறைவுபடாமல் இருப்பதையும் பார்க்க 1942-ம் வருஷம் முற்பாதியில் நேசதேசத்தார்களின் தலைவர்கள் செய்யவேண்டிய முக்கியமான வேலைகள் என்னவென்பது தெரியவரும். ஜெர்மன் சைனியத்தை முறியடிக்கவேண்டியதுதான் ருஷ்யாவின் முக்கியமான கடமை. ஏனென்றால், ஜெர்மன் சைனியத்தை ருஷ்யப் போர்முனையில்தான் நேசநாடுகள் தரைச் சண்டையில் தோற்கடிக்க முடியும். அமெரிக்காவோ பஸிபிக் சமுத்திரத்தில் ஜப்பானின் கடல் ஆதிக்கத்தை அழிக்கவேண்டும். பிரிடனுக்கோ ஜெர்மனிபேரில் நடத்திவந்த விமான எதிர்ப்புகளைக் குறைவுபடாமல் நடத்திவந்தும், ஜெர்மன் விமானங்கள் திரும்பத் தாக்குவதையும் தடுத்துவரவேண்டும். மேலும் அது பொருளாதார முற்றுகைபோட்டு வருவதையும் விடாமல் நடத்திவந்தும், மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில், நேசதேச சைனியங்களின் பலத்தை அதிகரிக்கச் செய்வதுதான். இவைகள் யாவும் சுலபமான காரியங்களல்ல. மேற்சொல்லிய வேலைகளை நேசநாடுகள் வெற்றிகரமாகச் செய்துவந்தால், யுத்தம் பெரும்பாலும் நேசதேசத்தினர்களுக்கு அனுகூலமாகவே முடியும்.

---

## அட்லாண்டிக் யுத்தம் முன்போல முக்கியமானது தான்.

## கப்பல் போக்குவரவைக் காபந்து செய்ய வேண்டியதின் அவசியம்.

## தூரக்கிழக்கிற்கு விமான உதவி.

(Liet-Gen. ஸர் டக்ளஸ் பிரௌன்ரிக் எழுதியது.)

அமெரிக்கர்களுக்குச் சொந்தமான பேர்ல் துறைமுகத்தை டிஸம்பர் 7உ ஜப்பான் தாக்கி அதனால் பஸிபிக்கில் யுத்தம் வந்ததிலிருந்து யாவரும் தூரக் கிழக்கிலேயே அதிக கவனத்தைச் செலுத்திவருகின்றனர். இதனால் அட்லாண்டிக் யுத்தத்தின் முக்கியத்துவம் குறையவில்லை. ஒரு வருஷத்திற்கு முன் எப்படி காபந்து செய்யப்பட்டு வந்ததோ அதேவிதமாக இப்போதும் செய்யப்படுகிறது. ஏனென்றால் அட்லாண்டிக்கிலிருந்து முஸ்திப்புக்களை வேறு இடங்களுக்கு அனுப்பி விட்டால் உடனே அங்கு நிலைமை கெட்டுவிடும். பிரிடனுக்கும் அமெரிக்காவிற்குமுள்ள போக்குவரவு தடைபடாமலிருந்து, அமெரிக்க, பிரிடிஷ் தொழிற்சாலைகள் யுத்த சாமான்களைச் செய்துவந்தால்தான் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று தடைபட்டுவிட்டால் வேறு எந்த இடங்களில் வெற்றி பெற்றாலும், ஹிட்லரையும், அவன் முறைகளையும் முறிக்க முடியாது.

பஸிபிக்கில் பிரகிருதம் உள்ள நிலைமையைக் கவனித்தால் எல்லாம் கொஞ்சம் பாதகமாகவே காணப்படலாம். ஹாங்காங் எதிரி வசமடைந்தது. மலேயாவை அநேகமாக எதிரி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறான்; ஆஸ்திரேலியாவிலும் படையெடுப்பு ஏற்படும் போலிருப்பதால் ஆஸ்திரேலியர்கள் தங்கள் நாட்டைக் காபந்துசெய்து கொள்ளுவதுடன் வேறு உதவியையும் கேட்கிறார்கள். இவைகளுக்காக மற்ற இடங்களிலுள்ள பந்தோபஸ்தை இங்கே அனுப்பக்கூடாது. அப்படி அனுப்பினால் எல்லா இடங்களிலும் பலக்குறைவு ஏற்படும். நேசதேசப் படைகளைப் பல இடங்களுக்குப் பிரிப்பதுதான் ஜப்பானின் நோக்கமாக இருக்கிறத்

ஜெர்மானியர்களைத் துரத்தியடித்துக்கொண்டு ருஷ்யர்கள் நேசதேசங்களுக்குச் சாதகமாக சண்டைசெய்கின்றனர். அட்லாண்டிக்கிலும், மத்தியதரைக் கடலிலும் பிரிடிஷ் கப்பற்படைச் சைனியங்களுக்கு அனுப்பும் சாமான்ஸப்ளைகளைக் காபந்து செய்கிறது. விஷிக்குச் சொந்தமான ஆபிரிக்கத் துறைமுகங்களையும், கப்பற்படையையும் ஜெர்மனி ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளாமலும் பார்த்துவருகிறது. மத்தியதரைக்கடலில் நமது கப்பற்படை போதுமானபடி பலம் பெறவில்லை. அதனால் தான் ஆபிரிக்காவிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு உதவி போகிறது.

ஆனால் தூரக்கிழக்கிற்கு எவ்வித உதவி அனுப்ப முடியும் என்று கேட்கலாம். 1940-ல் விமான பலம் பெற்றிருந்ததால்தான் பிரிடன் எதிரி வசமாகாமல் தப்பியது. விமான பலத்தைக்கொண்டே மலேயாவும் பிடிக்கப்படும். சமீபத்தில் கிடைத்த சில தகவல்களிலிருந்து பஸிபிக் யுத்தத்தில் சில மாறுதல் ஏற்பட்டிருப்பதாகவே தெரிகிறது. ஜப்பானியருக்குச் சேதம் அதிகமாகிக் கொண்டேவருகிறது. தூரக்கிழக்கிற்கு விமான உதவிதான் சீக்கிரத்தில் அனுப்ப முடியும். ஏனென்றால் இவைகளுக்கு அதிக ஆட்கள் தேவையில்லை. மேலும் டாங்கி முதலியவைகளைக் காட்டிலும் குறைந்த அவகாசத்தில் விமானங்களைச் செய்யமுடியும். மேலும் சிறிய பகுதிகளைக்கொண்டே விமானமூலம் தாக்க முடியும். ஐரோப்பாவில் ருஷ்ய யுத்தம் ஆரம்பமாகி ருஷ்யச் சைனியமும் முன்னேறி எதிரியை தாக்க ஆரம்பித்தவரை நாம் பலவித ராணுவத் தற்காப்புகளைச் செய்துவந்தோம். தூரக்கிழக்கிலும் அம்மாதிரி தற்காப்பைச் செய்யவேண்டும்.

---

## ஜப்பானியர்கள் எண்ணியபடி நடக்கவில்லை.
## நினைத்த இடங்களுக்கு அவர்களால் செல்ல முடியவில்லை.
## கடல் ஆதிக்கத்தைப் பெறுவதற்கான யுத்தம்.
## இந்து மஹா சமுத்திரத்தில் செல்லும் வியாபாரக் கப்பல்களை எதிர்ப்பதற்கு ஜப்பான் போட்டதிட்டங்கள்.

(H. C. பெராபி எழுதியது.)

அமெரிக்க, டச்சுக் கப்பற்படைகளும், விமானப்படைகளும் ஒன்றுசேர்ந்து கொண்டு மெக்காஸர் ஜலசந்தியில்வந்த ஜப்பானியத் துணைக் கப்பல்களைத் தொடர்ந்து தாக்கி எதிரிகளுக்குப் பெருத்த நஷ்டத்தை விளைவித்தன. மேலும் கப்பற்படைத் தலைவர் ஹார்ட் என்பவர் தெற்குச் சைனா கடல்களில் பல இடங்களிலிருந்த ஜப்பானியக் கப்பற்படைப் பகுதிகளைத் தேடிப்பிடித்து, அவைகளைத் தாக்கி ஜப்பானியப் போக்குவரத்துக் கப்பல்களையும், யுத்தக் கப்பல்களையும் ஏராளமாக மூழ்கடித்துவிட்டார்.

வெகு துணிச்சலுடன் சண்டைசெய்து சில வெற்றிகள் அடைந்ததற்காக வீண்டம்பம் அடித்துவரும் ஜப்பானியர்களுக்கு இத்தோல்விகள் பயத்தை விளைவித்திருக்கவேண்டும். ஏற்கனவேயே சைனாவில் ஜப்பானியர்கள் யுத்தம் புரிந்து தோல்வியடைந்து வருகின்றனர். அவர்கள் அத்துடன் நிற்காமல் இவ்வுலகத்திலேயே பெரிய பலம் வாய்ந்த கப்பற்படைகளைக்கொண்ட பிரிடனையும், அமெரிக்காவையும் எதிர்த்து 4,000-மைல் விஸ்தாரமுள்ள கடல்போரில் ஈடுபட்டிருக்கின்றனர். பிரிடன், ஐரோப்பா கண்டத்தில் ஏற்பட்ட யுத்தங்களில் ஈடுபட்டிருக்குமென்றும், ஆசியா கண்டத்தில் ஏற்படும் சம்பவங்களில் ஈடுபடாது என்றும் ஜப்பான் ஒருக்கால் எதிர்பார்த்து இருக்கலாம். ஆனால், ஏராளமா யுத்தக் கப்பல்கள் முதலிய உபகரணங்கள்கொண்ட யுனைடெட் ஸ்டேட்ஸின் மிக்க பலமான கப்பற்படையை எதிர்த்து நிற்பதற்குக் காரணம் என்னவென்று புலப்படவில்லை.



மேலும் தங்களை, டச்சுக்கிழக்கிந்தியக் கப்பற்படைப் பகுதியும், அதற்குச் சாதகமாயுள்ள விமானப்படைப் பகுதியும் எதிர்க்குமென்று எதிரிகள் எதிர்பார்க்காமல் இருந்தால் அது பெரும் தவறாகும். டச்சுக்காரர்கள் தங்கள் நாடுகளைக் காப்பாற்றிக்கொள்ள 16-வது நூற்றாண்டு முதல் எவ்வளவோ சண்டைகள் செய்திருக்கின்றனர். இப்போதும் அவர்கள ஜப்பானியரைத் தகுந்தவிதமாகத் தடுத்துவருகின்றனர்.

தூரக்கிழக்கு யுத்தம் ஆரம்பமான முதல் நான்கு வாரங்களில் ஜப்பானியருக்கு 2-பழைய சண்டைக்கப்பல்களும், 3-சஞ்சாரிகளும், 9-நாசகாரிகளும், 5-நீர்மூழ்கிகளும், 31-சாமான் கப்பல்களும் நஷ்டமாயின. இதைத்தவிர 3 சஞ்சாரிகளும், வெளிநாடுகளுக்குச் சென்ற பல உதவிக்கப்பல்களும் இடிகுண்டுகளாலும், வெடிகுண்டுகளாலும் தாக்கப்பட்டன. மெக்காஸர் ஜலசந்தியில்நேர்ந்த சண்டையிலும் பல ஜப்பானியக் கப்பல்கள் நஷ்டமாயின. நேசநாடுகளுடன் நேர்ந்த சண்டையில் இவ்வளவும் ஜப்பான் அடைந்த நஷ்டம். நேசநாடுகளின் திட்டங்கள் அதிகம் ஆக, ஆக, இன்னும் அதிகமான நஷ்டம்தான் ஜப்பானுக்கு நேரும்.

கடலில் 4,000-மைல்களுக்கு அப்பால் பல இடங்களில் புரியும் சண்டையின் ஆரம்ப காலத்தில் ஜப்பானுக்கு ஏற்பட்ட இந்த நஷ்டங்களைப் பார்த்தால் ஜப்பானுடைய நடமாட்டத்திற்கு அதிகத்தடை ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால், தெற்கு சீனக்கடலில் ஜப்பானுடைய முயற்சி பூராவும் தடைபடவில்லை. மேலும் ஏதாவது தடபுடலாக ஜப்பானியர் முன்னேறப்பார்த்தால், அவர்கள் தயாரிக்கும் சாமான்கள்யாவும் வெகு சீக்கிரத்தில் பழுதாவதுபோல், அவர்களும் பெரிய தாக்குதல்களை எதிர்த்து நிற்கமுடியாது. சுமார் எட்டு, பத்து இடங்களில் ஜப்பான் தனது துருப்புகளை இறக்கியதால் சுலபமாக ஜப்பான் தன் இஷ்டப்படி நடமாட்டம் செய்யமுடியுமென்றே யாவரும் எண்ணலாம். ஆனால், உண்மை அப்படியல்ல. கடலின் ஆதிக்கத்தையும் அடைந்து, அப்பிரதேசத்தில் நடமாட்டம் செய்வதும் ஜப்பானுக்கு இப்போது தகராறாக இருக்கிறது.

பொதுவாக வெளிநாடுகளுக்குச் சைனியங்களை அனுப்பினால், எதிரிகளின் படை கடலில் இருக்கும்போது, உதவியனுப்புவது சிரமசாத்தியமாகும். ஆபிரிக்க நாடுகளை இதாலி இழந்ததிற்கு இதுவே காரணம். ஜப்பானுடைய கதியும் அவ்விதமே ஆகப்போகிறது. இந்து மகா சமுத்திரத்திலுள்ள வியாபாரக் கப்பல்களை ஜப்பான் தாக்கப்பார்க்கிறது. இந்த நோக்கத்துடன் பினாங்கையும் ஸ்வெட்டன்ஹாம் துறைமுகத்தையும் ஜப்பான் வசப்படுத்திக்கொண்டிருக்கிறது. ரெங்கூனையும் அதற்காகவே தாக்கிவருகிறது. கொழும்புவிலுள்ள டிரின்கமலியையும் கைவசப்படுத்தவும் நினைத்திருக்கலாம். இக்காலத்தில் நீர்மூழ்கிகளைக்கொண்டே வியாபாரக் கப்பல்கள் தாக்கப்படுகின்றன. அந்த நீர்மூழ்கிகள் 18-வது நூற்றாண்டில் உபயோகப்படுத்தப்பட்ட கொள்ளைக் கப்பல்களைக் காட்டிலும் அதிகத் தந்திரம் வாய்ந்தவை. இந்து மகா சமுத்திரத்தில் வியாபாரக் கப்பல்கள் சேதமானால் நேசநாடுகளுக்கு அதிகக்கெடுதி ஏற்படும். ஆகவே, கிழக்கிந்தியத் தீவுகளை அதிகம் தற்காப்பு செய்யவேண்டியிருக்கிறது. அமெரிக்கக் கப்பற்படை அழியாமல் இருக்கும்வரை ஜப்பான் ஆதிக்கம் பெறமுடியாது. இங்குமங்கும் ஏதாவது சிற்சில தடவைகளில் மலாகா ஜலசந்தியைத் தாண்டி விமானமூலம் மற்ற இடங்களை ஜப்பானியரால் தாக்கமுடியும். ஆனால், நேசநாடுகள் ஒன்றுசேர்ந்து இந்து மகா சமுத்திரப் போக்குவரவிற்கு தடையேற்படாமல் ஜப்பானைத் தடுக்கமுடிந்தவரை முயற்சி யெடுத்துக்கொண்டு வருகின்றன.

---

## யுத்த விளக்கம்.

## தூரக்கிழக்கில் நேசநாடுகளின் ஒற்றுமை.

## ருஷ்யாவில் இருப்புப்பாதைகளைக் கைப்பற்றச் செய்யப்படும் சண்டை.

## ரோமலின் தந்திரம்.

(மேஜர் ஜெனரல் ஸர் சார்லஸ் க்வின் எழுதியது.)

தூரக்கிழக்கில் புதிய புதிய இடங்களை ஜப்பானியர் தாக்கி வருகின்றனர். துணைக்கப்பல்களைப் பல பக்கங்களில் ஜப்பானியர் அனுப்பும்போது நேசதேச விமானங்களாலும், நீர்மூழ்கிகளாலும், மற்ற சிறு கப்பல்களாலும், மக்காஸ்ஸர் ஜலசந்தியில் தாக்கப்பட்டன. பஸிபிக்கில் கடலாதிக்கம் பெறுவது முக்கியமாக இருந்தாலும், விமானமூலம் ஜப்பானியரைத் தாக்குவதுதான் சுலபம். அமெரிக்க, பிரிடிஷ் உயர்தர விமானங்கள் வந்ததும், ஜப்பானுக்கு அதிகத் தீங்கு உண்டாக்கப்படும்.

பிலிப்பைன்ஸில் மாக் ஆர்தரும் மலேயாவில் ஆஸ்திரேலியர்களும் எதிர்த்து நின்று ஜப்பானியரின் முன்னேற்றத்தைத் தடுத்திருக்கின்றனர். பர்மாவுக்குச் சீனப்படை வந்திருப்பதும், இந்தோ-சைனா, தாய்லாந்து முதலிய இடங்களிலுள்ள ஜப்பானிய விமான தளங்களைத் தாக்கியதும், டச்சுக்காரர்கள் செய்துவரும் அரிய வேலைகளும் நேசதேசங்கள் செய்துவரும் தற்காப்பு பயன் பெற்றுவருகிறதென்று தெரியப்படுத்துகின்றன.

ரிஷெவ்விற்கும் வால்டாய் மலைகளுக்கும் இடையில் ருஷ்யர்கள் பெரும் எதிர்ப்பு செய்து லெனில்கிராட்-கீவ் இருப்புப் பாதையை நோக்கிப் போகின்றனர். மற்ற போர்முனைகளிலும் எதிரிகளைக் கடுமையாகத் தாக்கியிருக்கின்றனர். முக்கியமான பட்டணங்களைப் பிடித்து எதிரிகளின் ஏராளமான சாமான்களுக்கும், ஆட்களுக்கும் சேதம் விளைவித்திருக்கின்றனர். இதனால் ரிஷெவ்விற்குப் போகும் இருப்புப்பாதை துண்டிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரதேசத்தை மிகவும் முக்கியமாக எதிரிகள் கருதியிருந்ததை அவர்களாகவே விடவேண்டிவந்தது. வியாஸ்மாவிற்கு அருகிலும் ருஷ்யர்கள் வந்ததால் ரிஷெவ்விற்கும் ஆபத்துத்தான். இதைப் பிடித்தால் வடகிழக்கிலிருந்து ஸ்மொலென்ஸ்க்குச் சுலபமாகப் போகலாம்.

மாரிகால நிலைகளில் போக்குவரத்துகளை ஜெர்மானியர் ரயில் வண்டிகள் மூலமாகத்தான் அனுப்ப முடியும். ஆனால் ருஷ்யக் குதிரைப்படை இவைகளுக்குக் கொஞ்ச தூரத்திலிருந்து கொண்டே எதிர்க்கும். ருஷ்யர்களுக்கு ஸப்ளைகளும் கெட்டுப்போகவில்லை. இதனால்தான் ஜெர்மானியர்களை ருஷ்யர்கள் சூழ்ந்து கொண்டு எதிர்க்க முடிகிறது. வெலிகியீ லூகியிலுள்ள இருப்புப் பாதையையும் ருஷ்யர்கள் பிடித்தால் ஜெர்மானியர் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஜெர்மன் துருப்புகளை மாற்ற முடியாது. ஸப்ளைகளைப் பெறவும் முடியாது. ஜெர்மானியர் வசத்தில் அதிகமாக இருப்புப்பாதைகள் இல்லாததால் விமானத் தாக்குதல்களால் அவர்களுக்கும் அதிக நஷ்டம் நேருகிறது. பின் பந்தோபஸ்து செய்துகொண்டு மெதுவாக ஜெர்மானியர்கள் பின் வாங்குகின்றனர். தெற்குப் பக்கத்திலும் கார்கவ்வில் அதிக நஷ்டம் ஏற்படுவதை ஜெர்மன் அறிக்கைகளே ஒப்புக்கொள்ளுகின்றனர்.

வடக்கே லெனின்கிராட்டைச் சுற்றியிருக்கும் ஜெர்மானியரைத் தடுத்து வருகின்றனர். மேலும் தாக்கி ஜெர்மானியரைக் கலைக்க ஏற்பாடு செய்யப்படும். இவ்விதமாக இல்மன் ஏரிவரை முன்னேறி கோலம் பட்டணத்தையும் ருஷ்யர்கள் பிடித்துவிட்டால் ஜெர்மன் போக்குவரவு குலைந்துவிடும்.



லிபியாவிலுள்ள நிலைமை குழப்பமாகக் காணப்படுகிறது. கடைசியாகச் செய்த ரோமலின் குறுக்கு எதிர்ப்புகளின் நோக்கம் தெரியவில்லை. மேலும் கடுமையான நிலைமைகளில் துணிச்சலாக முன்னேறவே நினைத்திருக்கிறான். ஸிரெனைகா பூராப் பிடிக்கவோ, அல்லது ஜெனரல் ரிட்சியின் சைனியத்தைத் தோற்கடிக்கவோ பார்க்கலாம். மேலும் ரோமலுக்கு உதவி வந்துகொண்டிருப்பது மாத்திரம் வியக்தமாக இருக்கிறது. முடிவான வெற்றியடைவதற்குள் அவனுடைய படைகளுக்கு ஆபத்துதான் ஏற்படும். ஹல்பாயா கணவாய் திறக்கப்பட்டபிறகு ஜெனரல் ரிட்சியின் படைகளுக்கு உதவி அதிகம் கிடைக்கிறது. இவ்வளவு நாட்கள் இந்த டாங்கி யுத்தத்தின் முடிவு தெரியாமலிருக்கிறது என்பது ஒரு ஆச்சரியம்தான்.

வடக்கு அயர்லாந்தில் அமெரிக்கத் துருப்புகள் வந்திருக்கிற விஷயம் மிகவும் முக்கியமானது. அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டு ஏழு வாரங்களுக்கும் பிறகு அமெரிக்கத் துருப்புகள் வந்திருப்பது மிஸ்டர் சர்ச்சிலும் ஜனாதிபதி ரூஸ்வெல்டும் கலந்துகொண்டு செய்யும் திட்டங்களுக்கு முதலாவது சட்டமாகும்.

---

# பெரும் படையினர்.

---

"சண்டையில் ஜயிப்பதும் தோற்பதும் அதில் ஈடுபட்டிருக்கும் நாடுகளின் தைரியத்தைப் பொருத்து இருக்கிறது" என்று மார்ஷல் போக் சொன்னார். இவர் அதிகம் தைரியம் வாய்ந்தவர். யுத்த தந்திரங்களைப்பற்றி நன்றாக ஆலோசிக்கும் தன்மையுள்ளவர். இப்பேர்ப்பட்டவர் முன்சொல்லிய அபிப்பிராயத்தைக் கொடுத்திருப்பதால், சண்டையில் ஆயுத உதவியினால் எதிரி கொண்டுள்ள நாடுகளை எதிர்ப்பது பிரயோஜனமில்லையென்று சொன்னதாக ஆகாது. உண்மையில் எந்த நாட்டு ஜனங்களுக்கு தீவிரமான உணர்ச்சியும் தைரியமும் குறையாமல் இருக்கிறதோ அந்த நாடு யுத்தகளத்தில் தோற்றதினால் பாதகமில்லை. ஏனென்றால் மறுபடி முஸ்தீப்பு செய்துகொண்டு பெரிய எதிரிகளை எதிர்த்து சண்டை செய்யக்கூடிய வல்லமை ஏற்பட்டுவிடும்.

உதாரணமாக பிரெஞ்சு மக்களுக்கு நிஜமான தைரியம் இருக்கும் பக்ஷத்தில் இந்தோ-சைனாவை ஜப்பானியர் வசத்தில் ஒப்படைத்திருக்கமாட்டார்கள். இந்தோ-சைனாவை சுலபமாக ஜப்பானியர் அடைந்ததின் பயனாக மேலும் கொள்ளை, ஆக்கிரமணம் முதலியன செய்வதற்கு ஜப்பானியருக்குப் பெரிய சாதகமாயிற்று. அதேவிதமாக சைனாவின் தலைவரான சயாங் கை ஷெக்கிற்கும் சீனர்களுக்கும் உள்ள தைரியம் குன்றாமல் இருப்பதால்தான் ஜப்பானியரின் ஆக்கிரமண ஆசை தடைபட்டிருக்கிறது. இவ்வித உணர்ச்சியுடன் சீனர்கள் நான்கு வருஷ காலமாக ஜப்பானியருடன் சண்டைசெய்து, பின்னோக்கி ஓடும்படிக்கும் செய்து இருக்கின்றனர். கூடிய சீக்கிரத்தில் ஜப்பான் தனக்குச் சொந்தமான நாட்டை அடைந்து அங்கிருந்து தலைகிளம்ப முடியாமலும் செய்யப்படும்.

இது இவ்விதமிருக்க மார்ஷல் போக் சொல்லிய அபிப்பிராயத்திற்கு மாறாக ஜெர்மானியர்கள் சொல்லிவருகின்றனர். "தெய்வம்தான் நேசநாடுகள் பக்கத்தில் இருக்கிறது" என்று டாக்டர் கோயபல்ஸ் சொல்லுகிறான். மிருகத்தன்மை பொருந்திய ஜெர்மானியர்களால் பிரிடன்பேரில் செய்யப்பட்ட கடும் படையெடுப்பு பலிக்காத சமயத்தில் கோயபல்ஸ் இவ்விதம் சொன்னான். இப்பொழுது

அப்படிச் சொல்லவில்லை. ஏனென்றால் ஏராளமான எண்ணிக்கை பொருந்திய ருஷ்யச் சைனியம் முறிபடாமல் தைரியமாகச் சண்டை செய்து வருவதால் ஜெர்மானியருக்குத் தோல்வி ஏற்பட்டுவருகிறது. ஆகவே ருஷ்யர்களுக்கு தெய்வ உதவியிருப்பதோடு சைனிய வலுவும் இருக்கிறதை அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது.

உணர்ச்சிதான் முக்கியமானது என்பதைப்பற்றி சயாங் கை ஷேக்கின் மனைவியும் சொல்லியிருக்கிறாள் :—"தெய்வ உதவியோடுமட்டுமில்லாமல் ஒவ்வொரு உதவியும் நேசநாடுகளுக்கு இருக்கின்றன". பலவானே நியாயமானவன் என்ற அசட்டுக் கொள்கையை வைத்துக்கொண்டு ஜெர்மானியர் ஏமாற்றமடைந்து வந்தனர். ஆனால் இவள் அவ்வித கொள்கையைக்கண்டு ஏமாறவில்லை. நியாய மார்க்கம் என்னவென்பதைச் சரியாகத் தெரிந்துகொண்டால் இதர உதவிகள் தானே வரும். அவைகளை நாம் வைத்துக்கொண்டு, கண்மூடித்தனமாயும், சுயநலம் கருதியும் சண்டை செய்யும் நாடுகளை முறியடித்துவிடலாம். இவ்விஷயம் சயாங் கை ஷேக்கின் மனைவி நன்கு அறிந்திருக்கிறாள். மேலும், மனித வர்க்கமென்பது எவ்வளவோ காலமாக இருந்துவந்திருக்கிறது. இனிமேலும் இருக்கப்போகிறது. ஆகவே நமது வாழ்க்கையை நமது நன்மைக்குத் தக்கவாறு அமைத்துக்கொள்ளவேண்டுமானால் நாம் தைரியத்தை இழக்கக்கூடாது. ஆயுதங்கள் தானேகிடைக்கும். இதற்கு சைனாவே ஒரு திருஷ்டாந்தமாகும். ஜாதிக் கொள்கைகளுக்காகவோ, எளியாரைத் துன்பப்படுத்தவோ, வாழ்க்கையில் முக்கியமாக காணப்படுபவைகளை அழிக்கவோ சீனர்கள் சண்டை செய்யவில்லை. மிருகத்தன்மை பொருந்திய ஜப்பானியர்களுடைய வசமாகாமல் தங்கள் வீடு வாசல்களையும், நாட்டையும், ஆசியாவையும், உலகத்தையும் காப்பாற்றிவருகின்றனர். கடவுளும் சீனர்கள் சார்பாக இருந்துவருகிறார். உலகில் நாலில் ஐந்து பங்கு அவர்களுக்குஉதவி செய்கிறது.

நிச்சயம் வெற்றி பெறுவோம். அந்த நிச்சயத்துடன் நாம் இருக்கிறோம். சைனாவின் தலைவர்கள் இந்தியாவுக்கு வந்ததிலிருந்து நாம் இதை ஊர்ஜிதமாகத் தெரிந்துகொள்ளலாம்.

---

# இந்திய ஸ்திரீகளுக்கு சயாங் கை ஷேக்கின் மனைவி செய்த பிரேரணை.

---

## இந்தியாவுக்கு அருகில் யுத்தம்.

யுத்தம் இந்தியாவுக்கு சமீபத்தில் வந்துவிட்டது. கல்கத்தாவிலிருந்து டெல்ஹிக்கு வரும்போது இடையிலுள்ள அழகான இடங்களையும், செழிப்பான நிலவளம் பொருந்திய பிரதேசங்களையும் நான் பார்த்தபோது இந்தியாவிற்கு ஒருவித கஷ்டமும் வரக்கூடாதென்றே நினைத்தேன். சைனா படும் அவஸ்தை போதுமானது.

ஆனால் வந்திருக்கும் யுத்த ஆபத்திலிருந்து தப்ப நீங்கள் சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டும். தற்காப்பு செய்துகொள்ளுவதற்கு நீங்களாகவே தயார் செய்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான் வெகுகாலம் நீடித்து நிலைத்திருக்க முடியும்.



## நடப்பை கவனிப்பது.

முதலாவதாக நீங்கள் நடப்பு சம்பவங்களைத் தெரிந்துகொண்டு அதற்கேற்றவாறு நடந்துகொள்ளவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வளவோ 1,000 வருஷங்களாக பரம்பரையாக நாம் அடைந்துவரும் முதன்மையான வேதாந்த முறைகளின் பழக்கங்களின் பயனாக இந்தியர்களும், சீனர்களும் சந்தர்பத்திற்கு ஏற்றவாறு நடக்கும் தன்மை பொருந்தியவர்களாக இருக்கிறார்கள். மனப்பால் குடித்துக்கொண்டிருக்கவில்லை.

பூராக் கொடுமை நிறைந்த ஜப்பானியர்களை எதிர்த்து நீங்கள் சண்டை செய்யவேண்டியிருக்கிறது. கடந்த ஐந்து வருஷ காலமாக, ஜப்பானியர்களின் சுபாவத்தையும், சைனாவில் அவர்கள் செய்துவந்த கொடுமைகளையும்பற்றி நான் பலதடவைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நான் அவ்விதம் சொன்னவைகளையெல்லாம் ஜப்பானுக்கு எதிராக செய்யப்படும் வீண் பிரசாரம் என்று மேல் நாட்டிலுள்ளோர் கருதினார்கள். இப்பொழுது சிங்கப்பூர், மனிலா முதலிய இடங்களில் ஜப்பானியர் செய்யும் கொடுமைகளைப் பார்த்த பிறகுதான் நான் சொன்னவை யுத்தப் பிரசாரமில்லை, நடப்பு சம்பவங்கள் என்று உலகமே தெரிந்துகொண்டது.

## ஜப்பானியக் கொடுமை.

1932-ல் சைனாவும், ஜப்பானும் சில நிபந்தனைகளின் பேரில் ஒரு உடன்படிக்கை செய்துகொள்வதெனத் தீர்மானித்திருந்தன. இவ்விதம் தீர்மானிக்கப்பட்ட தினத்தன்றே இரவில் செபை (Chapei) நகரத்தை ஜப்பானியர்கள் விமானங்களால் தாக்கி பல்லாயிரம் மக்களைக் கொன்றனர். இப்போது நடக்கும் பஸிபிக் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னாடி ஜப்பானியப் பிரதிநிதியும் (குருஸூவும்) அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும்போது ஒருவித எச்சரிக்கையும் கொடுக்காமல் அமெரிக்காவுக்குச் சொந்தமான பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கினார்கள்.

ஆகவே ஸர்வ தேச வியவகாரங்களில் இம்மாதிரியான கள்ளத்தனமான கொடுமை முறைகளைக் கையாண்டுவரும் ஜப்பானை ஒருக்காலும் நம்பக்கூடாது. இந்தியாவுக்கு வெகுசமீபத்தில் வந்துவிட்டார்கள். சீனாவையும், பர்மாவையும் ஏற்கனவே தாக்கி வருகின்றனர். 'இந்தியர்களை விடுவிக்கவே நாங்கள் வருகிறோம்' என்று வாயால் மாத்திரம் சொல்லுவார்கள். அது மிகவும் பொய். இந்தியாவிற்கு வந்தால் என்ன நேருமென்பது யார் அறிவார்கள்; நிச்சயம் தீங்குதான் விளையும்.

உதாரணமாக நான்கிங் பட்டணத்தில் நடந்ததைச் சொல்லுகிறேன். சீன சைனியம் அப்பட்டணத்திலிருந்து கழட்டிக்கொண்டபிறகு ஜப்பானியர் பட்டணத்தில் பிரவேசித்து, சீனர்களைக் கையோடு கைகட்டி பட்டணத்தைவிட்டு அகலும்படி செய்து, அடித்து, ஈட்டிகளால் குத்தி பலவித தொந்தரவுகள் செய்தனர். பிறகு கொஞ்சநாள் கிரமித்து குத்திக்கொள்ளுவது என்ற சிரமம் கூட இல்லாமல் உயிருடன் புதைத்துக்கொன்றனர்.

## ஜப்பானியரின் காட்டுமிராண்டித் தனம்.

சீனக்குழந்தைகளை ஜப்பானியர் ஹிம்சித்த விதத்தைச் சொல்லுகிறேன். உயிருடன் குழந்தைகளைப் பிடித்து, அவர்கள் ரத்தத்தை எடுத்து சண்டையில் ஈடுபட்டு காயமடைந்த ஜப்பானியர்களின் உடம்பில் செலுத்தப்பட்டது. படகுகளில் குழந்தைகளை ஏற்றிச்சென்று சீனதேசத்திற்குத் துரோகம் நினைக்கும்படி பழக்கப்படுத்தினார்கள். ஜப்பானியர்களால் பழக்கப்பட்டு எங்களுக்கு விரோதமாக உளவு பார்க்கும் பல சிறுவர்களையும் நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம். 1932-ல் மஞ்சூரியாவை வசப்படுத்திக்கொண்ட பிறகு ஜப்பானியர் இவ்வித வேலையில் அதிகம் ஈடுபட்டிருந்தனர்.

ஒரு பட்டணத்தைக் கைப்பற்றிய பிறகு அங்குள்ள பொருள்களைக் கொள்ளையடிப்பதோடு மட்டுமல்லாமல், அந்நகரவாசிகளையும் கொல்ல முயற்சிக்கின்றனர். அப்படி யாராவது சிலர் தப்பினால் அவர்களைப் பிடித்து ஜப்பானியர்களுக்காக தொழில்செய்ய அமர்த்தப்படுகிறார்கள். இவர்களுக்குக் கூலியாக கஞ்சா முதலிய மயக்க வஸ்துக்கள் கொடுக்கப்படுகின்றன. நிச்சயமாக் ஜப்பானியர்கள் கொடுமை வாய்ந்தவர்கள். மனிதத்தன்மையே இல்லாதவர்கள்.

## இந்திய ஸ்திரீகளுக்கு ஒரு வேண்டுகோள்,

முதலில் ஜப்பானியர்களைத் திருப்தி செய்வதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்துவந்தோம். ஏனென்றால் சண்டைக்குத் தயார் செய்வதற்கு எங்களுக்கு அவகாசம் தேவையாயிருந்தது. ஆனால் எதிரியின் கொடுமைகள் தாங்கமாட்டாமல் பூர்ண முஸ்தீப்பு இல்லாத சமயத்திலேயே சண்டைசெய்ய வேண்டிவந்தது. அச்சமயத்தில் யுத்தம் செய்து இறப்பு முதலிய கஷ்டங்களை, அனுபவிக்க நாங்கள் தயாராக இல்லாமலிருந்தால் சத்துரு வசம் அடிமையாகி மிகவும் ஹீனமான நிலைமை வந்திருக்கும்.

நேசதேசங்களோடு சைனாவும் சேர்ந்திருக்கிறது. இப்பேர்ப்பட்ட கௌரவம் கிடைத்ததற்குக் காரணமாக ஆயுத உதவி அதிகமில்லாமல் எதிரிகளுடன் சண்டை செய்தோம். உள்நாட்டிற்குள் சைனியங்களை அழைத்துச் செல்லும்போது எதிரிவசமாகாமல் அங்காங்குள்ள பொருள்களை எல்லாம் அழித்துவிட்டோம். வயல்களை எரித்தோம். வீடுகளை இடித்தோம். சொத்துக்களையும் அழித்தோம். இவ்விதம் செய்வதற்கான தைரியத்தைக் கொண்டிருந்தால்தான் தேசத்தைக் காப்பாற்ற முடியும். பிராணனை இழப்பதற்கும் சித்தமாயிருக்க வேண்டும்.

சைனா-ஜப்பான் யுத்தம் ஆரம்பமானவுடனே நாட்டிலுள்ள சீன ஸ்திரீகள் யாவரும் ஒன்றுசேர்ந்து ஒரு சங்கத்தை ஸ்தாபித்தோம். ஒவ்வொரு மாகாணத்திலும், ஒவ்வொரு ஜில்லாவிலும் இதன் கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

யுத்தத்திற்கு உதவுவதற்காக குறிப்பான திட்டங்களைப்போட்டு அதன்படி நடந்துவந்தோம். ஆயிரக்கணக்கான ஸ்திரீகளைப் பழக்கி நாட்டின் ஒவ்வொரு பாகத்திற்கும் சென்று யுத்தத்தைப்பற்றி பிரசாரம் செய்தோம்.

## யுத்த முயற்சிக்கு உதவி.

இந்தியாவில் பலருக்கு இப்பொழுது நடந்துவரும் யுத்தத்தைப்பற்றி தெரியாமலிருக்கும். அவர்களுக்கு நாம் விஷயங்களைத் தெரியப்படுத்துவது மிக அவசியம். சைனாவில் யுத்த முயற்சியில் ஈடுபடுவதற்கு பள்ளிக்கூடங்களில் வாசித்துக்கொண்டிருந்த பெண்கள் தாங்களாகவே வந்தனர். ஏனென்றால் தேசத்திற்கு ஆபத்து வந்திருக்கும் சமயத்தில் படிப்பு ஓடாது என்று அவர்கள் சொன்னார்கள். நானே பல ஸ்திரீகளைப் பழக்கியிருக்கிறேன். இவ்விதமான பழக்கம்பெற்று சைனியங்களுக்குப் பின்னால் இருந்துகொண்டு பொதுமக்களுக்கும், சைனியத்திற்கும் வைத்திய உதவி செய்துவந்தனர்.

முரட்டு சுபாபமுள்ள சிப்பாய்களுக்கு ஆஸ்பத்திரிகளில் பெண்கள் எவ்வாறு சிகிச்சை செய்யமுடியும் என்றும், யார் ஸ்திரீகளைக் காப்பாற்றுவார்கள் என்றும் சிலர்கேட்டனர். ஆனால் இப்பெண்கள் அந்தந்த ஸ்தலங்களுக்குச் சென்றதும் உத்தியோகஸ்தர்களுக்குள்ள மரியாதை இவர்களுக்குச் செய்யப்படுகிறது. மேலும் ஸ்திரீதொண்டர்களும், நர்ஸ்களும் தேவையாக இருப்பதாக எங்களுக்கு தந்திமேல் தந்தி வந்துகொண்டிருக்கிறது. இந்த ஸ்திரீகள் வைத்திய உதவி செய்வதோடு, காயமடைந்து ஆஸ்பத்திரியிலிருக்கும் சிப்பாய்களுக்கு அதிக உத்ஸாகத்தையும், தேசாபிமான உணர்ச்சியையும் உண்டுபண்ணுகிறார்கள்.



## சைனாவின் உணர்ச்சி.

சைனா எல்லா சீனர்களுக்கும் சொந்தமானது என்ற எண்ணம் பரவிவருகிறது. எல்லா சீனர்களும் ஒன்று சேர்ந்திருக்கின்றார்கள். எங்களுக்கு நிச்சயம் வெற்றிகிடைக்கும். ஒரு முயற்சியில் பலன் கிடைக்கும்போல் காணப்பட்டால் அதற்கான சிரமங்களை எடுத்துக்கொள்ளவேண்டும். சைனாவில் அவ்வித சிரமங்களை அங்கீகரித்து முயற்சி எடுத்துக்கொள்ளக் கூடியவர்கள் இருக்கின்றனர். இவ்வித முயற்சியை எவ்வளவோ சீன வீரர்கள் இதற்கு முன்பும் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். இவ்விஷயத்தில் இந்தியாவும், சைனாவும் ஒன்றுதான். சைனாவில் தேசாபிமானிகளுக்குக் குறைவேயில்லை. தேசாபிமானமுள்ள வீரர்களும், பொதுமக்களும் தேசத்திற்காக உயிர் துறந்திருக்கின்றனர். வரும் காலத்தில் மேன்மையைப் பெறுவதற்காக நாங்களும் அப்படியே செய்யத் தயாராக இருக்கிறோம். சீனப்பழமொழி ஒன்று "முடிவைப்பற்றி விசாரிக்காதே, முயற்சியையே கவனி" என்று கூறுகிறது. இதன்படிதான் நாங்கள் நடந்துவருகிறோம். நாங்கள் செய்யும் காரியங்களின் பலன் பூராவையும் நாங்களே அடையமுடியாது. ஆனால் அடுத்து வரும் சந்ததியார்கள் நிச்சயம் அடைவார்கள். நம்முடைய முன்னோர்கள் பட்டுவந்த சிரமங்களின் பயன்களை நாம் அனுபவித்து சந்தோஷம் அடையும் விதமாக, நாமும் முகமலர்ச்சியுடன் பாடுபட்டால் அவைகளால் ஏற்படும் சௌகரியங்களை நமது மக்கள் அடைவார்கள்."

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— பிரஸங்கம் 83—(5-வது பிரிவு).

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| பிப்ரவரி ... | 21, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 22, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | ,, | 5.30 |
| | | திருவரங்குளம் ... | ,, | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 23, திங்கட்கிழமை ... | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 6.30 |
| | 24, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பள்ளிவாசல் ... | மாலை | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 25, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | குளவாய்ப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| | 26, வியாழக்கிழமை ... | ஆதனூர் ... | ,, | 6.00 |
| | | அரமனைப்பட்டி ... | ,, | 6.30 |
| | 27, வெள்ளிக்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் ... | ,, | 6.30 |

பிரஸங்கம் 84—(1-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| | 28, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| மார்ச்சு ... | 1, ஞாயிற்றுக்கிழமை | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| | 2, திங்கட்கிழமை ... | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பரம்பூர் ... | ,, | 6.30 |
| | 4, புதன்கிழமை ... | உடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| | 5, வியாழக்கிழமை ... | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 6, வெள்ளிக்கிழமை... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | மேலூர் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—21-2-42.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ பிப்ரவரி ௴ 28௳ [ந. 84

பிரஸங்கம் LXXXIV.

## பிலிப்பைன்ஸ் தீவுகள்.

**முன்னுரை.** பஸிபிக் சமுத்திரத்திலுள்ள பிலிப்பைன்ஸ் தீவுகளில் பாடன் தீபகற்பத்தில் அமெரிக்க தளகர்த்தர் மெக் ஆர்தர் ஜப்பானியச் சைனியங்கள் தன்னை அணுகாதபடி தைரியமாக எதிர்த்துவரும் இந்த சந்தர்ப்பத்தில் யாவரும் இப்பிரதேசத்தையே அதிகமாகக் கவனித்துவருகின்றனர். ஆகவே நாம் இத்தீவுகளைப்பற்றி சில விவரங்களைக் கொடுப்பது பொருத்தமாகும். இத்தீவு வாசிகள், அதிக முன்னேற்றமடைந்து, அமைதியான வாழ்க்கையிலீடுபட்டவர்கள். இப்பொழுது நடக்கும் பஸிபிக் யுத்தத்தைப்பற்றி ஒரு சரித்திரம் எழுதுவதானல் ஜப்பானியர் கையாண்டுவரும் கொடுமைகளைப்பற்றி நிச்சயம் எழுதப்படும். அதைப்போல் பிலிப்பைன்ஸ் வாசிகள் பிரமாதமான தைரியத்துடன் ஜப்பானியர்களைத் தடுத்துவருவதைப்பற்றியும் நிச்சயம் அச்சரித்திரத்தில் சொல்லப்படும். பிலிப்பைன்ஸ் வாசிகளுக்கு இது ஒரு தனி கௌரவமென்றே சொல்லவேண்டும்.

இவ்வித தேசத்தைப்பற்றியும், அங்கு வசிப்பவர்களைப்பற்றியும் சில முக்கிய விவரங்கள் கொடுக்கப்படுகின்றன :—

**பல தீவுகளின் கூட்டம்.** ஓரிடத்தில் யுத்தம் நடந்தால் அந்த இடத்தின் இயற்கை அமைப்பு முதலியவைகளைப் பற்றி தெரிந்துகொள்ளுவது அவசியமாகும். தேவாஸுர யுத்தம்போல் பூராஉலகையும் கவர்ந்துவரும் தற்போது நடக்கும் யுத்தத்தில் ஆங்காங்கு சண்டை நடக்கும் பிரதேசங்களைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளுவது அத்யாவசியமாகும். பிலிப்பைன்ஸ் என்பது பஸிபிக் சமுத்திரத்தில் ஒரு தீவுகணம். 5-ம் நூற்றாண்டுக்கும் 15-வது நூற்றாண்டுக்கும் இடையிலுள்ள காலத்தில் இத்தீவுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவையாவும் தற்போது அமெரிக்காவிற்குச் சொந்தமானவை.

அவைகளைப்பற்றி நன்றாக ஆராய்ச்சி செய்தபிறகு தான் இத்தீவுக் கூட்டத்தில் 7,083 சிறு தீவுகள் இருக்கிற விவரம் தெரியவந்தது. லூஸான் என்பது தான் மிகப்பெரிய தீவு. இதன் விஸ்தீரணம், 40,814 சதுரமைல். எல்லாத்தீவுகளுக்கும் தலைநகரான மணிலா லூஸான் தீவில் இருக்கிறது. மின்டானே, ஸமார், நீக்ரோஸ், பலவான், பனேய், மின்டாரோ, லேய்டி, செபு, போஹோல்

மாஸ்படி, என்ற 10 தீவுகள் இருக்கின்றன. ஒவ்வொன்றின் விஸ்தீரணம் 1,000 சதுரமைல். ஒரு சதுரமைல் விஸ்தீரணமுள்ள 450 சிறு தீவுகளிருக்கின்றன. மற்றும் 2,500 தீவுகளுக்குப் பெயர் மாத்திரமே குறிக்கப்பட்டிருக்கிறது.

**பஸிபிக் சமுத்திரம்.** உலகிலேயே பஸிபிக் சமுத்திரம்தான் மிகப் பெரியது; ஆழமும் அதிகம்; பூலோகப் பரப்பில் பாதியுள்ளது; அட்லாண்டிக் சமுத்திரத்தைப்போல் இரட்டிப்புமடங்கு விஸ்திரணமுள்ளது. 1521-ம் வருஷத்தில் மகல்லன் என்பவன் இத்தீவுகளைக் கண்டுபிடித்து கடலுக்கு பஸிபிக்—சாந்த சமுத்திரம் என்று பெயரிட்டான். ஆனால் இப்போது ஜப்பானியர் கடுமையான யுத்தரங்கமாகச் செய்துவிட்டார்கள்.

**தீவு வாசிகள்.** பிலிப்பைன்ஸ் வாசிகளைப்பற்றி புராதனமாகவே ஒரு சரித்திரம் இருக்கிறது. 40 வகைப் பட்ட மனித இனமும், 80 ஜாதியாரும் ஒன்று சேர்ந்த வர்க்கத்தினராவார்கள். ஹிந்துக்களுடைய சம்பந்தமும் அதிகம் காணப்படுகிறது. இத்தீவுகளுடன் 10-வது 13-வது நூற்றாண்டுகளில் ஹிந்து வியாபாரிகளின் போக்குவரவு ஏற்பட்டிருப்பதாகவும் சீனர்களிடமிருந்து விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

பிலிப்பைன்ஸ் வாசிகள் பூராவுக்கும், முக்கியமாக வடக்கு பாகத்தில் வசிக்கிறவர்களுக்கு, ஸ்பானியர்கள், சீனர்கள். இவர்களுடைய சம்பந்தம் அதிகம் இருந்திருக்கிறது. தீவுகளுடைய மத்திய பாகங்களில், கருப்பு ஜாதியார்கள், காட்டுமிறாண்டிகள்தான் வசிப்பது. மொத்தத்தில் 20 தனி ஜாதியார்கள் இவ்விடங்களுக்கு வந்திருக்கிறார்கள். கடைசியாக வந்தது மோரோ முஸ்லீம்கள்.

இவர்களில் 90 சதவிகிதம் கதோலிக் மதத்தைப் பின்பற்றுகின்றனர். இவ்வித பழக்கம் 17-வது நூற்றாண்டில் ஸ்பானியர்கள் வந்ததுமுதல் ஏற்பட்டிருக்கிறது.

சீனர்களும் பலர் இருக்கின்றனர். சில்லறை வியாபாரம், முதலியவை சீனர்கள் வசத்தில் இருக்கிறது. 1926 முதல் 1935 வரை வருஷத்திற்கு 8,000 பேர் விதம் சீனர்கள் வந்திருக்கிறார்கள்.

டவாவோ மாகாணத்தில் சமீப வருஷங்களில் ஜப்பானியர்களும் உட்புகுந்திருக்கிறார்கள். இது மின்டானோ தீவின் தென்கிழக்கில் இருக்கிறது. டவாவோவில் மாத்திரம் 1939-ல் 18,000 பேர்கள் வந்தார்கள். நாடு பூராவிலும் இப்போது 30,000 பேர்கள் இருக்கிறார்கள். சுமார் 10,000 பிலிப்பைன்ஸ் வேலைக்காரர்களை ஜப்பானியர்கள் வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மீன்பிடிக்கும் தொழில் இங்குள்ள ஜப்பானியர்கள் வசத்தில் இருக்கிறது. இங்கு இருந்துகொண்டு கப்பல் போக்குவரவு முதலிய விஷயங்களைக் கற்றுக்கொண்டு பிலிப்பைன்ஸ் வாசிகளுக்கு பாதகமாகவே இப்போது உபயோகித்து வருகின்றனர். சுரங்க வேலைகளிலும் ஜப்பானியர் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவித கலவரமும் செய்யாமல் பாதுகாக்கப்பட்டிருந்தது.

**வியாபாரமும் கைத்தொழிலும்.** விவசாயம் இவர்களுக்கு முக்கிய தொழில். நாட்டின் வருமானத்தில் 56 சதவிகிதம் விவசாயத்திலிருந்து கிடைக்கிறது. அரிசி அதிகமாகப் பயிரிடப்பட்டு ஆகாரத்திற்காகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. இங்கிருந்து சர்க்கரை, புகையிலை, சணல், தேங்காய், தேக்கு, தங்கம், சித்திரத்தையல்வேலை செய்யப்பட்ட துணிகள் முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சர்க்கரை சுத்தப்படுத்துவதும், சணல் நூற்பதும், ஸிமெண்டு செய்வதும், சிகரெட்டுத் தயார் செய்வதும்தான் முக்கிய கைத்தொழில்கள். இவைகளின் ஜனத்தொகை 1936-ல் எடுத்த ஜனகணிதப்படி 1,47,31,371. இப்பொழுது இன்னும் 160 லக்ஷம் பேர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.



**சரித்திரம்.** "பூகோள சாஸ்திரமும், சம்பவங்களைக் குறிக்கும் கால அட்டவணையும் சூரிய சந்திரர்களைப்போலுள்ளவை; சரித்திரத்திற்கே இரண்டு கண்கள்" என்று கப்பற்படைச் சரித்திரக்காரர் ரிச்சர்டு ஹாக்லூயிட் சொன்னார். இவ்விரண்டு விஷயங்களையும் வைத்துக்கொண்டு பல வருஷங்களாக முன்னேற்றமடைந்து வந்த இந்த ஜனங்களைப்பற்றியும் அவர்களுக்குள்ள சட்டதிட்டங்களையும் கவனிப்போம்.

இதுவரை தேச அமைப்பை கவனித்தோம். பிலிப்பைன்ஸ் சரித்திரம் 16-வது நூற்றாண்டு முதல்தான் தொடர்ந்து கிடைத்திருக்கிறது. 1519-ம் வருஷத்தில் பெர்டினண்டு மெகல்லன் என்ற போர்ச்சுகீஸ்காரர் ஸ்பெயின் தேசத்திலிருந்து புறப்பட்டு அட்லாண்டிக் கடலைக் கடந்து தூரக்கிழக்கிற்குப் போவதற்காக ஐந்து கப்பல்களுடன் புறப்பட்டான். ஒரு வருஷகாலம் பலவித கஷ்டங்களை அனுபவித்து மெகல்லன் ஜலசந்தியைக் கண்டுபிடித்தான். இடையில் இரண்டு கப்பல்கள் சேதமாயின. பிறகு பஸிபிக் சமுத்திரத்தை அடைந்து கடைசியாக பிலிப்பைன்ஸைக் கண்டுபிடித்தான். இவனோடு கூடவந்த பிரயாணிகள், பக்குவமாகாத ரொட்டியையும், பாடம் செய்யப்பட்ட தோலையும், எலிகளையும் தின்கவேண்டிவந்தது. மெகல்லன் பிலிப்பைன்ஸில் இறந்துவிட்டான். சிறிது காலம் கிரமித்து "விக்டோரியா" என்ற கப்பல் ஸ்பெயின் தேசத்தை அடைந்தது. இவ்விதம் 'மெகல்லன் செய்த சுற்றுப்பிரயாணத்தின் பயனாக பூமி உருண்டையானது என்று முதல் முதலில் கண்டு பிடிக்கப்பட்டது.

**ஸ்பானியர்களின் வருகை.** இதற்கு சுமார் 50 வருஷங்களுக்குப் பிறகு, அதாவது 1565-ல் இத்தீவுகளைக் கண்டுபிடிக்க ஸ்பெயின் அதிக அக்கரை எடுத்துக்கொண்டு பல கப்பல்களை அனுப்பிற்று. அச்சமயம் ஸ்பெயினில் அரசராயிருந்த இரண்டாவது பிலிப்பின் பெயரே இத்தீவுகளுக்கு வைக்கப்பட்டது. 1572-ல் ஜூன் மாதத்தில் மணிலா நகரம் ஸ்தாபிக்கப்பட்டது. ஐந்து வருஷங்கள் கழித்து, அதாவது இங்கிலாந்தில் எலிஸபெத் என்ற ராணி அரசாளும் சமயத்தில் ஸர் பிரான்ஸிஸ் டிரேக் என்பவர் இத்தீவுகளுக்கு விஜயம் செய்தார். அதே சமயத்தில் போர்ச்சுகீஸ்காரர்களும் சில முயற்சிகள் எடுத்துக்கொண்டனர். ஆனால் 1580-ல் ஸ்பெயினும் போர்ச்சுகலும் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அம்முயற்சிகள் நின்றுவிட்டன.

1762-ல் ஐரோப்பாவில் ஏழு வருஷச்சண்டை நடக்கும்போது பிலிப்பைன்ஸுக்கு, பிரிடிஷ் கப்பற்படை ஒன்று வந்து மணிலாவைக் கைப்பற்றியது. ஆனால் 1766-ல் ஐரோப்பாவில் செய்துகொண்ட பாரிஸ் உடன்படிக்கையின் பிரகாரம் மணிலா திரும்பவும் ஸ்பெயின் தேசத்திற்கே கொடுக்கப்பட்டது. 1766 முதல் ஸ்பெயினுக்கும் மணிலாவிற்கும் வியாபாரப் போக்குவரவு ஏற்பட்டு வந்தது. 1785 முதல் பிலிப்பைன்ஸில் இருந்த ராயல் கம்பெனிக்காரர்கள் வியாபாரம் நடத்திவந்தனர். 1809-ல் ஒரு இங்கிலீஷ் கம்பெனியும் மணிலாவில் ஏற்பட அனுமதிக்கப்பட்டது. 1837 முதல் எல்லா நாடுகளோடும் வியாபார சம்பந்தம் உண்டாயிற்று.

**ஐரோப்பாவுடன் சம்பந்தம்; தேசிய இயக்கங்கள்.** 1869-ல் ஸூயஸ் கால்வாய் வெட்டப்பட்ட பிறகு நிலைமை இன்னும் விருத்தியடைந்தது. பிலிப்பைன்ஸ் வாலிபர்கள், கிடைத்த சௌகரியங்களைக்கொண்டு, ஸ்பெயின் முதலிய நாடுகளுக்கு உயர்தரப் படிப்புக்காகப் போய்வந்தனர். "லா எஸ்பெரன்ஸா" "லா ஸாலிடாரிடாட்" என்ற இரண்டு பத்திரிகைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த சந்தர்ப்பங்களில் தேசாபிமானம் அதிகம் ஏற்பட்டு கலகங்கள் உண்டாயின. ரீஜல் என்பவன் "பிலிப்பைன்ஸ் வாலிபர் சங்கம்" ஒன்றை ஆரம்பித்து தேசீயக் கக்ஷிக்குத் தலைவனானான். இதன் கிளைகளை ஹாங்காங்கிலும், மணிலாவிலும் 'ஏற்படுத்தினான். ஆனால் 1896-ல் இவனை அரசாங்கத்தினர் பிடித்து தண்டித்தார்கள். இதற்குள்ளாக "பூஜிக்கத் தகுந்த மேலான சங்கம்" என்று மற்றொன்று கிளம்பியது.

**அமெரிக்கா கைவசப்படுத்திற்று.**

1898-ல் அமெரிக்காவிற்கும் ஸ்பெயினுக்கும் ஏற்பட்ட சண்டையின் பயனாக சில மாறுதல்கள் நிகழ்ந்தன. அதே சமயத்தில் பிலிப்பைன்ஸ் வாசிகளும் தங்களுடைய ஸ்வதந்திரத்தை ஸ்தாபித்துக்கொண்டனர். எமிலிஸ் அகினால்டோ என்பவனின் கீழ் ஒரு குடியரசும் ஏற்பாடாயிற்று. ஆனால் அமெரிக்கர்களும், மற்றும் ஜெனரல் மெரிட்டின் கீழிருந்த சில பிலிப்பைன்ஸ் துருப்புகளும் சேர்ந்து மணிலாவைப் பிடித்துவிட்டன. உடனே பாரிஸில் செய்துகொண்ட சமாதானத்தின் பயனாக பிலிப்பைன்ஸ் அமெரிக்கர்கள் வசமாயிற்று. அகினால்டோ அமெரிக்கர்களின் ஆட்சியை விரும்பாததால் கொஞ்சம் சண்டை செய்தான். ஆனால் 1902-ம் வருஷ ஏப்ரல் மாதத்தில் பிலிப்பைன்ஸ் வாசிகள் யாவரும் சரண் அடைந்தனர்.

**அரசாங்க முன்னேற்றம்.**

1902 ஜூலை மாதத்தில் மிஸ்டர் டாப்ட் என்ற முதல் அமெரிக்க கவர்னர் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு ஜனநாயக ஆட்சியை அனுசரித்து சில அரசியல் ஸ்தாபனங்களை ஏற்படுத்தினான். மேல் சபை, சட்ட சபை என்று இரண்டு ஜனபிரதிநிதி சபைகளை ஏற்படுத்தினான். ஆனால் பிறகு 24 அங்கத்தினர் கொண்ட சட்ட சபையும், 91 பேர்களடங்கிய பிரதிநிதி சபையும், ஒரு மந்திரி சபையும் உண்டாயின. 1923-ல் இந்த மந்திரி சபை கலைக்கப்பட்டது. 1927-ல் தாம்ஸன் என்பவர் செய்த ரிபோர்ட்டின்படி ஜனங்களுக்கு அதிக ஸ்வதந்திரம் கொடுக்கப்பட்டது.

இப்பொழுது இத்தீவுகளுக்கு குடியரசு நாட்டு அந்தஸ்து இருக்கிறது. ஜனப்பிரதிநிதியும் 120 பேர்களடங்கிய ஒரு சபையும் உண்டு. இந்த சபைக்கு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் செய்யப்படும். இப்பொழுது பிலிப்பைன்ஸ் ஜனப்பிரதிநிதி கூஸான் என்பவன். 1946-ல் பூரா ஸ்வதந்திரம் கொடுக்க ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. இங்கே அமெரிக்க மேலதிகாரி பால்வோர்ஸ் மெக்நட் என்பவர் இருக்கிறார். 1937-ல் பிராங்க் மர்பிக்குப் பிறகு இவர் இப்பதவிக்கு வந்திருக்கிறார். பிராங்க் மர்பி காலத்தில் கவர்னர் ஜெனரல் என்ற பெயருக்குப் பதிலாக ஹை கமிஷனர் என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

**அமெரிக்கர்களின் உறுதி மொழிகள்.**

அமெரிக்க அரசாங்கத்திற்கும், பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பார்ப்போம். முதன் முதலில் அவ்விரு நாடுகளும் ஒன்றுக்கொன்று விரோதமாக இருந்தன. காலக்கிரமத்தில் தான் அவைகளுக்குள் சிநேகித பாவம் ஏற்பட்டது. 20-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அமெரிக்க ஜனாதிபதி மாக்கின்லி பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு டாப்ட் சீர்திருத்த கோஷ்டியை அனுப்பித்து 'பிலிப்பைன்ஸ் வாசிகளுக்கு சந்தோஷத்தையும், அமைதியையும், சுபிக்ஷத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு அரசாங்கத்தை அமைக்கும்படியாகவும் அப்புதிய அரசாங்கம் அமெரிக்கர்களுக்கு மாத்திரம் திருப்தியாக இருந்தால் போதாதென்றும் எச்சரிக்கை செய்தார். 1913-ம் வருஷத்தில் ஜனாதிபதி மக்கின்லி பிலிப்பைன்ஸ் வாசிகளுக்கு ஒரு அறிக்கையும் அனுப்பினார் :—

"நாங்கள் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு ஸ்வதந்திரம் கொடுக்கவேண்டுமென்ற நோக்கம் கொண்டதாக இருக்கிறது. அதற்காக எல்லா முயற்சியும் எடுத்துவருகிறோம்" இவ்வறிக்கையை பிலிப்பைன்ஸ் வாசிகளுக்கு தளகர்த்தர் ஹாரிஸன் தெரியப்படுத்தினார். பிறகு 1916, 1923, 1927, 1934 முதலிய வருஷங்களில் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. இவைகளால் அந்த அரசாங்கத்திற்கு முன்னைவிட அதிக ஸ்வதந்திரம் ஏற்பட்டது சமீபத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு அறிக்கை அனுப்பினார் :—"பிலிப்பைன்ஸ் வாசிகளுக்கு ஸ்வதந்திரம் கொடுத்து, போதுமான பாதுகாப்பும் அளிக்கிறேன். அதற்காக அமெரிக்கத் துருப்புகளையும் இன்னும் ஏராளமாக யுத்த தளவாடங்களையும் ஒத்தாசைக்கு அனுப்புகிறேன்". என்று உறுதிகொடுத்தார்."



அமெரிக்கர்கள் கொண்டுள்ள ஜனநாயகக் கொள்கைப்படிக்கு சாம்ராஜ்யங்களைச் சேகரம்செய்து கொள்ளக்கூடாது. பிலிப்பைன்ஸ் தீவுகளை அமெரிக்க நாடுகளுக்குட்பட்டவைகளாக வைத்துக்கொண்டால், எல்லா நாடுகளும் ஸ்வதந்திரம் பெறவேண்டுமென்ற, ஜனநாயகக் கொள்கைக்கு விரோதமானதாகும் என்று அமெரிக்கப் பொதுமக்கள் எண்ணினார்கள். பிலிப்பைனஸில் கிடைக்கும் சர்க்கரையும், புகையிலையும் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுவதால் பிலிப்பைன்ஸ் வியாபாரிகளுக்கு ஏராள லாபம் கிடைக்கிறது. ஆனால் பிலிப்பைன்ஸுக்கு ஸ்வதந்திரம் கொடுக்கப்பட்டால் பிலிப்பைன்ஸின் விளைபொருள்களை அமெரிக்காவில் மற்ற நாடுகளின் சரக்குகளைப் போலத்தான் கருதப்படும். விசேஷ சாதகங்கள் காண்பிக்கப்படமாட்டா. ஆகையால் நல்ல வியாபாரம் கெட்டுப்போகும். மேலும், இந்தத் தீவுகளின் தற்காப்புப் பிரச்னை முக்கியமானது. இப்பொழுது பிலிப்பைன்ஸின் தற்காப்புக்காக யுனைடெட் ஸ்டேட்ஸ் தானாக அதிகச் செலவு செய்து வருகிறது. அந்தத் தீவுகளிலிருந்து கிடைக்கும் வருமானம், விளைபொருள்களை அபிவிருத்தி செய்வதற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே பிலிப்பைன்ஸுக்கு ஸ்வதந்திரம் கொடுத்துவிட்டால் அதன் தற்காப்புக்காக அந்தத் தீவுகளின் வருமானத்திலிருந்து செலவு செய்ய வேண்டி வரும். ஆனால் பிரகிருத நிலையில் பிலிப்பைன்ஸ் தீவுகளின் பாதுகாப்பைக் குறித்து அமெரிக்கா தான் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதை ஒரு வருஷத்திற்கு முன்னால் கூஸானே சொல்லியிருக்கிறார்.

**பிலிப்பைன்ஸ் வாசிகள் சண்டை செய்யும் திறம்.**

இப்பொழுது பிலிப்பைன்ஸ் மிகவும் தீவிரமாக எதிரிகளுடன் யுத்தம் புரிந்து வருவதில் இருந்தே, அதன் தற்காப்பு முறைகள் பலமானவை என்று நமக்குத் தெரியவருகிறது. 1939-ம் வருஷத்தில், இந்த யுத்தம் ஆரம்பித்தது முதற்கொண்டு, பஸிபிக் சமுத்திரத்திலும் யுத்தம் பரவினால் பிலிப்பைன்ஸ் தீவுகளும் ஈடுபடவேண்டியிருக்குமென்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் சமீப காலம்வரை இங்கே யுத்தம் சம்பவிக்கவில்லை. ஜப்பான் வஞ்சனையான முன்னேற்பாடுகளுடன், யுத்த நிபந்தனைகளை மீறி அக்கிரமமாக திடீரென்று 1941-ம் வருஷ டிஸம்பர் 7உ மணிலா, பேர்ல் துறைமுகம், ஹோனோலூலு, ஹாங்காங், சிங்கப்பூர் முதலியவைகளைத் தாக்கிற்று. உடனே பிலிப்பைன்ஸும் யுத்தத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று. அச்சமயத்தில் அமெரிக்காவும், பிலிப்பைன்ஸும், யுத்தத்திற்குத் தயாராக இல்லை. மணிலா நகரம் மிகவும் கடுமையாக வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. இதைச் சேர்ந்த சில தீவுகளையும் ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். "மிண்டானோ தீவிலுள்ள டவாவோ நிலைமையைப்பற்றி விவரம் தெரியாமல் இருந்தது" மணிலாவில் சதாகாலமும் விமான எதிர்ப்புகள் ஏற்படும் என்று எதிர்பார்த்து அந்நகரத்தை விட்டு டிஸம்பர் மாதம் 26-ம் தேதியில் அமெரிக்கர்கள் காலி செய்துவிட்டனர்; அப்படி அமெரிக்கர்கள் வெளியேறியும் ஈவிரெக்கமில்லாத ஜப்பானியர்கள் நகரமெங்கிலும் வெடிகுண்டுகளைப் போட்டு கடுமையான சேதத்தை விளைவித்தனர். ஆக 1942-ம் வருஷம் ஜனவரி 2-ல் மணிலா ஜப்பானியர்கள் வசமாயிற்று. அத்துடன் மணிலாவுக்கு தென்மேற்கேயுள்ள காவைட்டையும் எதிரிகள் பிடித்துக் கொண்டார்கள். இந்த இடத்தில் 95 லக்ஷம் டாலர் செலவுசெய்து ஒரு கப்பற்தளம் கட்டப்பட்டிருக்கிறது. இதை எதிரிகள் பிடித்துக்கொண்டார்கள்.

**பிலிப்பைன்ஸ் தீவுகளின் தற்காப்புகள்.**

மணிலா விழுந்தும் கொஞ்சமும் தைரியத்தை இழக்காமல் ஜப்பானிய எதிர்ப்பை பிலிப்பைன்ஸ் வாசிகள் தடுத்து வருகிறார்கள். முக்கியமாக பாடன் தீபகற்பத்திலும் லூஸான் தீவுகளிலும், அமெரிக்க, பிலிப்பைன்ஸ் துருப்புகள் முக்கிய இடங்களைத் தங்களுடைய ஸ்வாதீனத்திலேயே வைத்துக்கொண்டிருக்கின்றன. காரிஜிடார் தீவில், மில்ஸ் என்ற கோட்டையையும், மற்றும் சிறு தீவுகளில் ஹூகஸ், ட்ரம், பிராங்க் என்ற கோட்டைகளையும் கட்டிக்கொண்டு அவைகளிலிருந்து எதிரியின் முற்றுகையைத் தடுத்துவருகிறார்கள். இவ்வித தற்காப்புக்குத் தகுந்தவிதமாக காரிஜிடார் தீவு அமைந்திருக்கிறது. அது மலைப்பிரதேசம். கடல்மட்டத்திற்கு 600 அடி உயரத்தில் இருக்கிறது.

அங்கு ஏராளமாக காடுகள் இருக்கின்றன. இக்காடுகளின் உதவியால் அங்கு வைக்கப்பட்டுள்ள, சிறு பீரங்கிகள் விமான எதிர்ப்பு பீரங்கிகள், ஆராய்ச்சி விளக்குகளுக்கு சாதகமாயுள்ள பாட்ரிகள், 12 அங்குல பீரங்கிகள், அகண்ட சுரங்கப் பாதைகள் இவை யாவும் எதிரிகளுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கின்றன. கோட்டைகளுக்கு அடி பாகத்தில் துருப்புகள் தங்குவதற்கு வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் நீண்டகாலம் முற்றுகை ஏற்பட்டாலும்கூட, அதற்குத் தேவையான ஏராளமாக எண்ணெய், உணவு, ஜல வசதி, வைத்திய உதவி, யுத்த தளவாடங்கள் இவை யாவும் சேமிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற சில நாட்களுக்குமுன் அத்தீவுக் கூட்டங்களின் மத்தியிலுள்ள மெஸ்பேடி தீவு ஜப்பானியத் துருப்புகளால் வியாபிக்கப்பட்டது. அப்படியிருந்தும் பாடன் தீபகற்பத்தில் இருந்துகொண்டு தளகர்த்தர் மாக் ஆர்தரின் தலைமையின்கீழுள்ள அமெரிக்கத் துருப்புகளும், பிலிப்பைன்ஸ் துருப்புகளும் ஜப்பானியர்களைப் பலமாக எதிர்த்து நிற்கின்றன. இது மிகவும் ஆச்சரியப்படத்தக்க விஷயம். இச்சமயத்தில் மறைவான ஓர் இடத்தில் இருந்துகொண்டு கூஸான், அரசியல் விஷயங்களை கவனித்து வருகிறார்.

**இகராட் ஜாதியார்.** பிலிப்பைன்ஸில் ஜப்பானியரை இகராட் ஜாதியார்தான் மிகவும் கடுமையாகத் தடுத்து வருவதாக ஜெனரல் மெக் ஆர்தர் செய்தி அனுப்பியிருக்கிறார். மெக் ஆர்தர் சொல்லுவதாவது:—"பல இடங்களில் யுத்தம் நடக்கும்போது, வீரத்தனமாகவும், தைரியமாகவும் எவ்வளவோ பேர்கள் சண்டைசெய்வதைப் பார்த்திருக்கிறேன். யுத்த சமயத்தில் மனதில் நினைத்துக்கொண்டிருந்ததைக் காரியாம்சையிலும் பலர் நடத்திக் காண்பித்திருக்கிறார்கள். ஆனால் இகராட் ஜாதியாரைப் போல நான் ஒருவரையும் பார்த்ததில்லை. அவர்களுடைய துணிச்சலான செய்கைகளைப்பார்த்தால் மூச்சுவிடுவதைக்கூட நாம் நிறுத்திவிடுவோம்."

மேலும், இவர்களைப்பற்றி ஒரு கதையிருக்கிறது:—

"இகராட் ஜாதியார் கிருஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களல்ல. லூஸான் தீவில் பாக்ஸ்டாச் மலைப்பிரதேசத்தில் வசிக்கிறவர்கள்; சுறுசுறுப்பானவர்கள்; அமைதியையே விரும்புகிறவர்கள். ஆனால் அஞ்சா நெஞ்சம்படைத்தவர்கள்.

"பிப்ரவரி 20உ இகராட் கூட்டத்தார் உள்ள இடத்தில் ஜப்பானியர் தாக்கினார்கள். கொஞ்சமும் பின்வாங்காமல் ஏராளமான ஜப்பானியர்களை அழித்தனர்.

"உடனே நிலைமையைச் சமாளிப்பதற்காக டாங்கிகளையும், இகராட் காலாட் படைகளையும் எடுத்துக்கொண்டு குறுக்கு எதிர்ப்புகள் செய்யும்படி உத்தரவிடப் பட்டது.

"ஆனால் அந்த இடம் பூரா மூங்கில்காடுகள் அடர்ந்திருப்பதால், டாங்கிகள் உட்செல்ல முடியவில்லை. டங்கிகள் பேரில் இகராட் ஜாதியார் ஏறிக்கொண்டு, வழிகளைத் தேடிப்பிடித்துக்கொண்டு டாங்கிகளை நடத்திச் சென்றனர்.

"சண்டை இரைச்சலுக்கு நடுவில் இவர்களுடைய சப்தம்தான் மேலாகக் காணப்பட்டது. துப்பாக்கிகளை எடுத்து இவர்கள் எதிரிகளைச் சுட்டார்கள்.

"சண்டை முடிந்தது. சில டாங்கிகளும், இகராட்களும்தான் மிச்சம். 20-வது ஜப்பானியக் காலாட்படை பூராவாக அழிக்கப்பட்டது."

**கூஸான்.** சமீபகாலத்திற்குள் பல சீர்திருத்தங்கள் செய்து பிலிப்பைன்ஸை அதிக முன்னேற்றமடையும்படி செய்தவர் டான் மான்யுல் லூயி கூஸான். இவர் மலேயா நாட்டிலிருந்து வந்தவர். அதிக சாமர்த்தியம் வாய்ந்தவர். இவர் லூஸான் தீவில் பிறந்தார். அதிக தேசாபிமானமுள்ளவர். பிலிப்பைன்ஸ் சைனியத்தில் முதலில் சேர்ந்து ஸ்பெயினுக்கு எதிராகவும், பிறகு அமெரிக்காவிற்கு எதிராகவும் சண்டைகள் செய்திருக்கிறார். அதன் பிறகு அவர் சட்ட நிர்மாண சபையில் மெம்பராக இருந்தார். அதிலிருந்து இப்பொழுது அவர் அந்நாட்டின் பிரஸிடெண்டு பதவியையும் அடைந்திருக்கிறார். சமீபத்தில்தான் அவர் இரண்டாவது முறையாகவும் பிரஸிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். "ரகசிய சூழ்ச்சிகள் ஏற்படாமல் தடுக்கவும், தொழிலாளிகள் வேலை நிறுத்தம் முதலியவைகளைச் செய்யாமலும், அவசியமான சாமான்களின் உற்பத்திக்கு நகரவாசிகளைச் சேர்க்கவும் அவசரச் சட்டங்களைச் செய்வதற்கு" அவருக்கு பூரா அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. "இங்குள்ள பிரஜைகள் ராஜவிசுவாசத்துடன் இருக்கிறார்கள். அமெரிக்காவின் சுகதுக்கங்களில் ஈடுபட்டு அவ்வரசாங்கத்துடன் கடைசி வரையில் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறார்கள். இந்த நாடு ஸ்வதந்திரம் அடைய வேண்டுமென்று நீங்கள் கொண்டிருக்கும் எண்ணத்திற்காக அவர்கள் நன்றி பாராட்டுகிறார்கள்," என்று ஜனப்பிரதிநிதி கூஸான் 1941, டிஸம்பர் 13-ல் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்குத் தந்திமூலம் செய்தி அறிவித்தார்.



---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 21—2—42-லிருந்து 27—2—42-வரை.

---

**தூரக்கிழக்கு.** ரெங்கூன், பாலி, டிமோர் முதலிய இடங்களைப் பிடிப்பதற்காக எதிரிகள் சண்டை செய்து வருகிறார்கள். ரெங்கூனைப் பிடித்து பர்மா ரஸ்தாவைத் துண்டிப்பதும், பாலியையும் டிமோரையும் பிடித்து, ஜாவாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் நேசதேசங்களின் உதவி போகவிடாமல் செய்வதும் எதிரிகளின் நோக்கமாக இருக்கிறது.

இவ்வாரத்தில் பாலிக்கு அருகில் ஒரு பெரும் கப்பற்சண்டை நிகழ்ந்தது. அதில் டச்சு, அமெரிக்கக் கப்பல்களும், விமானங்களும் ஈடுபட்டு எதிரிக்கு ஏராள நஷ்டத்தை விளைவித்தன. எதிரிக்கு ஒரு சிறு சண்டைக் கப்பலும், 2 நாசகாரிகளும், 4 சாதா கப்பல்களும் நஷ்டம். 5 சிறு சண்டைக் கப்பல்களும், 2 நாசகாரிகளும் 15 சாதா கப்பல்களும் சேதமாயின.

சிட்டாங் நதிக்கரையில் ரெங்கூனுக்காக சண்டை பிரமாதமாக நடக்கிறது. சிட்டாங் நதி ஒன்று தான் எதிரிக்குத் தடையாக இருக்கிறது. மாண்டலே, மய்மியோ என்ற நகரங்கள் மீதும் எதிரி குண்டுப் பிரயோகம் செய்தான். சீனப்படைகள் தாய்லாந்தில் புகுந்திருப்பதால் ரெங்கூனிலுள்ள நேசப் படைகளுக்குக் கொஞ்சம் சாதகம். மலேயாவில் சீனர்கள் எதிரிகளைப் பின்பக்கம் தாக்கி வருகிறார்கள். ரெங்கூனில் 27 ஜப்பானிய விமானங்கள் புதன்கிழமை நாசம் செய்யப்பட்டன.

ரெங்கூன் துறைமுகத்தில் போக்குவரவு ஏற்படாமல் மூடப்பட்டது. அதற்குப் பதிலாக சுங்கிங்கிலிருந்து செங்கடல் வழியாக பாடங்கிற்குப்போகும் ரஸ்தா வழியாக சீனாவிற்கு சாமான்கள் போக்குவரவு செய்யமுடியும். இது திபேத்தின் எல்லைப்புறத்தில் இருக்கிறது. அங்கிருந்து வடகிழக்கு அஸ்ஸாமிலுள்ள ஸாடியா நகரத்திற்கும் அங்கிருந்து கல்கத்தாவிற்கும் போக்குவரவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்புதிய ரஸ்தா 400 மைல் நீளமாகிறது. இதற்குச் சமீபத்தில் ஜப்பானியக் கப்பல்கள் எட்டிப்பார்க்கவே முடியாது. 10,00,00 பேர்கள் ஈடுபட்டு இந்த ரஸ்தாவைச் செப்பனிட்டுவருகிறார்கள்.

(போர்ச்சுகீஸ்) டெலி என்ற இடத்திலும், (டச்சு) கோய்பாங் என்ற இடத்திலும் ஜப்பானியர் பிரவேசித்திருக்கிறார்கள். போர்ச்சுகீஸ் சைனியம் டிமோர் தீவுக்கு வந்துகொண்டிருக்கிறது. போர்ச்சுகீஸ் படைகள் வந்து சேர்ந்ததும் பிரிட்டிஷ்காரர்கள், தங்கள் படைகளை டிமோரை விட்டு அகற்றிக்கொண்டு

போவதாகச் சொன்ன வார்த்தைகளை ஜப்பானியர் தங்களுக்குத் தெரியாதென்று பொய் சொல்லுகிறார்கள். போர்ச்சுகீஸ் பிரதம மந்திரி டாக்டர் ஸலாஸார் ஜப்பானின் நடவடிக்கைகளைக் கண்டித்துப் பேசியிருக்கிறார். பிரிடிஷ்காரர்களின் நோக்கத்தையும் அதிகம் பாராட்டியிருக்கிறார்.

பாடன் தீபகற்பச் சண்டை ஒரேவிதமாக இருக்கிறது. திடீரென்று மெக் ஆர்தரின் படைகள் முன்னேறிச் சில இடங்களைக் கைப்பற்றின.

டார்வின் துறைமுகத்தில் இரண்டாம் தடவையாக எதிரிகளால் குண்டுகள் போடப்பட்டன. மோரெஸ்பி, பாபுவா என்ற இடத்திலும் குண்டுகள் விழுந்தன. மக்காஸ்ஸர் ஜலசந்தியில் மறுபடி 3 ஜப்பானியக் கப்பல்கள் அமுக்கப்பட்டன.

கான்டன்-ஹாங்காங் ரயில்வே ரஸ்தாவில் ரஷாபிங் என்ற ஒரு முக்கிய இடத்தை சீனர்கள் பிடித்தனர். பெரியா குடாவில் எதிரி யூ படகு ஒன்று புகுந்து (டிரினிடாட்) இரண்டு கப்பல்களை மூழ்கடித்தன. அருபா, குரகோலா டிரினிடாட், பிரிடிஷ் கயானா என்ற இடங்களில் எதிரி நீர்மூழ்கிகளின் தாக்குதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

செவ்வாய்க்கிழமை முதல் தடவையாக அமெரிக்கா கண்டத்தில் கலிபோர்னியாவில் எதிரி நீர்மூழ்கித் தாக்குதல்கள் ஏற்பட்டன. அன்று ரேடியோ மூலம் ஜனாதிபதி ரூஸ்வெல்டு பேசியபோது "இது ஒரு ஏமாற்றம் தான் அமெரிக்கர்கள் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு இது ஒரு காரணம் என்று சொல்ல வேண்டும்" என்றார்.

**ருஷ்யா.** லெனின்கிராட், கார்கவ், ஸ்மொலென்ஸ்க், கிரிமியா முதலிய எல்லா முக்கிய இடங்களிலும் சண்டை அதிகரித்தே வருகிறது. ஸ்மொலென்ஸ்க்கை நோக்கி ருஷ்யர்கள் முன்னேறி டோரோகோபுஷ் என்ற இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். ரிஷெவ்விற்கு 14 மைல் தூரத்திலுள்ள பனிரோவையும் பிடித்தார்கள். கார்கவ், ஓரல் முனைகளிலும் ருஷ்யப்படைகள் முன்னேறின. யூக்ரேனில் குறுக்கு எதிர்ப்பும்போது 2,250 ருஷ்யர்கள் கொல்லப்பட்டனர். செவ்வாய்க்கிழமை ஸ்டாராரூஸா என்ற இடத்தில் இல்மன் ஏரிக்கு அருகில் ஜெர்மன் 16-வது சைனியம் சூழ்ந்துகொள்ளப்பட்டது. 96,000 ஜெர்மானியர்கள் சூழ்ந்து கொள்ளப்பட்டனர். இது ஹிட்லருக்குப் பிரத்யேகமான தோல்வியென்றே சொல்லவேண்டும். ஏனெனில் இங்கு சமாளித்து வரும்படி தனது படைகளுக்குச் சொல்லிவந்தபடி நடக்கவில்லை.

வந்தது வரட்டுமென்று நினைத்து ஹிட்லர் ரிஸர்வ் டாங்கிகளையெல்லாம் உபயோகித்து வருகிறான். சிறுகிராமங்களில் எதிரி புகுந்து பொதுமக்களையும் யுத்தக் கைதிகளையும் ஹிம்சித்து வருகிறான்.

ருஷ்ய செஞ் சைனியத்தின் 24-வது வருஷக் கொண்டாட்டத்தின்போது ஸ்டாலின் பேசினார். "லெனின்கிராட்டின் வாயிலிருந்து எதிரியை விரட்டியடிப்போம். வெள்ளை ருஷ்யாவையும் யூக்ரேனையும், கிரிமியாவையும், எதிரி வசமிருந்து மீட்டுவோம். ஜெர்மன் சைனியம் முன்போல் பலம் பெற்றிருக்கவில்லை. டிக்வினிலும், ரோஸ்டவ்விலும், கிரிமியாவிலும் மாஸ்கோவிலும் எதிரிகளைத் தோற்கடித்திருக்கிறோம். மாஸ்கோ, டூலா பிரதேசங்களிலிருந்து எதிரிகளை விரட்டியாச்சுது. பல நகரங்களையும், கிராமங்களையும் நாம் விடுவித்திருக்கிறோம்."

இதே சந்தர்ப்பத்தில் லண்டனில் ஸர் ஹியூ டால்டன் பேசும்போது:— "வசந்த காலத்தில் ஜெர்மானியர்களால் பெரும் எதிர்ப்பு செய்யமுடியாது, ருஷ்யர்கள்தான் செய்யப்போகிறார்கள். ருஷ்யப்படைகள் ஜெர்மனியின் உள்நாட்டிலும் சென்று சண்டை செய்யப்போகின்றன.

**லிபியா.** சென்ற வாரத்தில் அறிவித்தபடி முன்னேறிய ஸ்தலங்களிலிருந்து ரோமல் தனது படைகளைப் பின்வாங்கிக்கொண்டிருக்கிறான். சிறு சண்டைகளைத் தவிர வேறொன்றும் விசேஷமாக இல்லை. தென்மேற்கே மஸூஸ் வரையில் நமது படைகள் காவல்புரிந்து வந்தன. திங்கட்கிழமை டிமிமிக்குத் தென்மேற்கிலும்



தெற்கிலும் எதிரிகளுடன் சண்டை செய்தன. மார்போவிலுள்ள எதிரி விமானத் தளங்களை பிரிடிஷ் விமானப்படை ஞாயிற்றுக்கிழமை தாக்கிற்று. மணல்புயல் அடித்ததால் தரையிலும், விமானத்திலும் சண்டைசெய்ய முடியவில்லை.

**புதிய யுத்த மந்திரி சபை, மந்திரிகளின் மாறுதல்.** ஒன்பது பேர்களிலிருந்து ஏழு பேர்களுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் புதிதாகச் சேர்ந்திருக்கிறார். இதுவரை அதில் மெம்பராயிருந்த லார்டு பீவர் புரூக் அமெரிக்காவிற்குச் செல்லுகிறார். மிஸ்டர் ஆர்தர் கிரீன்வுட்டும், ஸர் கிங்ஸ்லிவுட்டும் சபையைவிட்டு அகன்றனர்.

பார்லிமெண்டு சபையில் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தலைமை வகிப்பார். குடியரசுநாட்டு மந்திரியும் யுத்த மந்திரிசபையில் சேர்க்கப்படுவார். மிஸ்டர் லிடில்டன் சாமான் உற்பத்தி மந்திரியானார்.

**சாமான் உற்பத்தியை ஜெர்மானியர் துரிதப்படுத்துகிறார்கள்.** வசந்த காலத்தில் முன்னேறித் தாக்குவதற்காகவேண்டிய யுத்த சாமான்களைச் செய்ய கடும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தினம் 16 மணி நேரத்திலிருந்து இன்னும் அதிக நேரம் வேலை செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறது. "ஜெர்மனி மிஞ்சியிருக்க வேண்டியதை முன்னிட்டே இவ்விதம் செய்யவேண்டு"மென்று வேலைக்காரர்களுக்குச் சொல்லப்படுகிறது. அயல்நாட்டினரையும், இளைஞர்களையும் வேலைக்கு அமர்த்தப்படுகிறது. 17-வயதுள்ளவர்கள் ராணுவ சேவைக்கு அழைக்கப்படுகின்றனர்.

**உருகுவே.** ஜனப்பிரதிநிதி பால்டோமீர் உருகுவே சபையைக் கலைத்துவிட்டார். புதிய தேர்தல்களையும் நிறுத்திவைத்திருக்கிறார். தனி நபர்களைக்கொண்டு நிர்வாக வேலையை நடத்திவருகிறார். ஹாரி ரிஷ்டா கக்ஷியினர் நேசநாடுகளுக்கு உதவக்கூடாது என்று சொல்லிவருவதைத் தடுக்கவே இம்மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**ஆங்கில-அமெரிக்கப் புது ஒப்பந்தம்.** குத்தகைக் கடன் மசோதாப்படிக்கு கையெழுத்தாகியிருக்கிறது. இதன்படி இருநாடுகளும் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளுவதை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டிருக்கின்றன. மேலும், மற்ற நாடுகளுக்கு இதில் சேருவதற்கு இடமிருக்கிறது. உலகம் பூரா பொருளாதார சம்பந்தத்தை ஸ்தாபித்துக்கொண்டு பண்டங்களை மாற்றிக்கொள்ளுவது, விலைக்கு வாங்கிக்கொள்ளுவது முதலியவைகளைச் செய்துகொள்ளலாம். இதைப்பற்றி டைம்ஸ் பத்திரிகை கூறுவதாவது:—"இருநாடுகளும் ஒன்று சேர்ந்து செய்துகொண்ட பொருளாதாரத் திட்டங்களின்படி உலகத்திற்கே ஒரு பெரும் சாதகம். தங்களுடைய சுயநலங்களைக் கவனியாமல், பிறருடைய க்ஷேமத்தையும் கருதுவது என்பது ஒரு விசேஷம். இதனால், சண்டையில் ஈடுபட்ட நேசநாடுகளுக்கு ஒரு சாதகம் ஏற்படுவதோடு நடுநிலைமை வகிக்கும் நாடுகளுக்கும் ஒரு திருப்தி ஏற்படும். நேசநாடுகள் வெற்றிபெற்றவுடன் பொருளாதார விஷயத்தில் குழப்பம் ஏற்படாமலும், வேலையில்லாத் திண்டாட்டமில்லாமலும் செய்ய முடியும்".

———

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசகளின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—2—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **பகலில்.— விரோதித் துணைக்கப்பல் கூட்டம்.**—*பிஸ்கே* (Biscay)*குடாவில்.* | *2 கப்பல்கள் தாக்கப்பட்டன; 1 சேதமாயிற்று.* | 1 *விமானம்.* | |
| | **இரவில்.—துறைமுகங்கள்**--*வடமேற்கு ஜெர்மனி* (Germany). | | | |
| | **விரோதி விமான தளங்கள்.**—*ஹாலந்து* (Holland) *பிரெஞ்சு* (French)*க் கடற்கரைக்கருகாமையிலுள்ள கப்பல்கள்.* | 1 *கப்பலுக்குச் சேதம்.* | 1 *விமானம்.* | |
| | **லிபியா(Libya)**—(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **துறைமுகம், டோரலி (Toralli) சைனிய வாசஸ்தலங்கள்.**—*பெங்காஸி* (Benghazi). | *பெருந் தீக்கள் மூட்டப்பட்டன.* | | |
| | **துறைமுகம், ரயில்வே ஸ்டேஷன்**—*ட்ரிபோலி* (Tripoli). | | | |
| | **கிழக்குப் போர்முனை**—(*ருஷ்ய விமானங்களால்*). | | | |
| | **விமான நிலயங்களிலுள்ள விமானங்கள் விமானச் சண்டைகள்.**—*போர்முனை முழுவதிலும்.* | | 10 *விமானங்கள்.* | 23 *விமானங்கள்.* |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **வேவுபார்த்தல்.**—*விரோதிப் பிரதேசத்தில்.* | | | |
| **17—2—42.** (செவ்வாய்க்கிழமை) | | | | |
| | **ஜெர்மனியும் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(*பிரிடிஷ் விமானங்கள்ால்*). | | | |
| | **பகலில்.—விரோதி துணைப்படை**— *நார்வீஜியன்* (Norwegian), *கடற்கரைக் கருகாமையில்.* | *2 கப்பல்கள் தாக்கப்பட்டன.* | | |
| | **விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்.**—*டச்சு* (Dutch)*க் கடற்கரைக் கருகாமையில்.* | | *நஷ்டமில்லை.* | |
| | **இ்ரவில்.—லக்ஷியங்கள்**—*வடமேற்கு ஜெர்மனி* (Germany). | | *நஷ்டமில்லை.* | |
| | **லிபியா (Libya)**—(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **விமான எதிர்ப்புகள்.**—*டிமிமி* (Timimi)*யிலிருந்து மெச்சிலி* (Mecheli)*க்குச் செல்லும் பொதுராஸ்தாவின் தென்புறம்.* | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **17—2—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கிழக்குப்போர்முனை**—(*ருஷ்ய விமானங்களால்*) | | | |
| | **விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்**—*யுத்தரங்கம் முழுவதிலும்.* | | 9 *விமானங்கள்.* | 35 *விமானங்கள்.* |
| | **சுமந்திரா (Sumatra) (N. E. I.)**—(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **விரோதிக்குச் சொந்தமான விமான நிலயம்.**—*பாலம் பாங்* (Palembang). | | | |
| | **விரோதிக் கப்பல்கள்.**—*பாங்கா* (Banka) *கடற்கரைக்கருகாமையில்.* | *1 துருப்புகள் ஏற்றிச்செல்லும் கப்பல், 2 படகுகள் மூழ்கடிக்கப்பட்டது.* | | 2 *விமானங்கள்.* |
| **18—2—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **பகலில்.—தொழிற்சாலைகள், ரயில் வண்டிகள் ஆராய்ச்சி தீபஸ்தாபனங்கள்**—*ஆக்கிரமித்த பிரான்ஸ்* (France). | | | |
| | **இரவில்.—வெடி கண்ணிகள் போடுவது**—*விரோதி சமுத்திரங்களில்.* | | | |
| | **லிபியா (Libya)**—(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **விரோதிக்குச் சொந்தமான லாரிகள், துருப்புகள் இருக்கும் ஸ்தானங்கள்**—*டிமிமி* (Timimi)*க்கும், மெச்சிலி* (Mecheli)*க்கும் தெற்கில்.* | | | |
| | **கிழக்குப்போர்முனை**—(*ருஷ்ய விமானங்களால்*). | | | |
| | **விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்**—*யுத்தப் பிரதேசமெங்கும்.* | | 8 *விமானங்கள்.* | 16 *விமானங்கள்.* |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(*அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **விரோதித் துருப்புகளிருக்கும் ஸ்தானங்கள்**—*மோல்மின்* (Moulmein) *பிரதேசத்தில்.* | | | |
| | **தாய்லாந்து (Thailand)**—(*அமெரிக்கா, பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **விமான நிலயம்**—*தாய்லாந்து* (Thailand). | | | |
| **19—2—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்**—*ரூர்* (Ruhr) *பிரதேசத்தில்.* | | *நஷ்டமில்லை.* | |
| | **லிபியா Libya**—(*பிரிடிஷ் விமானங்களால்*). | | | |
| | **விரோதி விமான நிலயங்கள், துருப்புகள் தங்குமிடங்கள்.**—*டிமிமி* (Timimi)-*க்கும், மெச்சிலி* (Mecheli)-*க்கும் தெற்கில்.* | | | |
| | **பெங்காஸி (Benghazi).** | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 19—2—42. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள் விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை எங்கும் | | 12 விமானங்கள். | 31 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—விரோதி பிரதேசங்களில். | | | |
| | ஜாவா (Java) (N. E. I.)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக் கப்பல்கள், யுத்தக் கப்பல்கள்—பேலி (Bali) க் கருகாமையில் | 1 சஞ்சாரி மூழ்கடிக்கப்பட்டது; 5 சஞ்சாரிகள், 2 நாசகாரிகள் சேதமாயின. | | |
| 20—2—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | | | |
| | இரண்டு தொழிற்சாலைகள், ஒரு இ. படகு (E boat), வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | விரோதி ஸ்தானங்கள், கவசம் பூண்ட வண்டிகள், போக்குவரத்து மோட்டார்கள், விமான நிலயங்கள்-யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்) | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை எங்கும். | | 3 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—பேலி (Bali) (N. E. I.)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | யுத்தக் கப்பல்களால் துணை புரியப்பட்ட 'விரோதி போக்குவரத்துக் கப்பல்கள் பேலி (Bali) க்கருகாமையில். | | | |
| | விரோதி வியாபாரக் கப்பல்கள்.—ம்யூஸி (Musi) நதியில். | | | |
| | தாய்லாந்து (Thailand)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—தாய்லாந்தி (Thailand)ல். | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 21—2—42. (சனிக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—ரைன்லாந்து (Rhineland) மேற்கு ஜெர்மனியில் வேறு பிரதேசத்திலும். | | | |
| | வெடி கண்ணிகள் பாவுவது—விரோதிக்குச் சொந்தமான சமுத்திரங்களில். | | 3 விமானங்கள். | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மறைமுகமாக செய்யப்படும் தரைச் சண்டைகள்—லிபியா (Libya). | | | |
| | விரோதித் துருப்புகள், மோட்டார் லாரிகள்—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 22 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய ஸ்தானங்கள்.—பிலின் (Bilin) ஸிடாங் (Sittang) நதிகளுக்கு இடையேயுள்ள பிரதேசத்தில். | | | |
| 22—2—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடம்—மார்டுபா (Martuba). | | | |
| | கிழக்குப் போர்முனை—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும். | | 12 விமானங்கள். | 28 விமானங்கள். |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானிய ஸ்தானங்கள்.—பீலின் (Bilin) நதிக்கரையில். | | | |
| | பேலி (Bali)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்) (N. E. I.) | | | |
| | ஜப்பான் கைப்பற்றிய விமான நிலயம்.—டென்பஸார் (Denpasar). | | | |

# விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **17—2—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஸ்காத்லாந்தி (Scotland)ன் கிழக்குக்கடற்கரையில் ஒரு இடம். | ஒருவனுக்கு மட்டில் காயம்; வேறு சேதமில்லை. | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow) விற்கு சமீபம். | | 2 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—பிலிப்பைன்ஸ் (Philippines)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தப்பி ஓடியவர்களின் கூட்டம்.—காப்காஸென் (Cabcasen). | | | |
| **18—2—42.** (புதன்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஒரு இடம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia) கடற்கரையில். | | 1 பாம்பர் விமானம். | |
| | தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம். | | | |
| | நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகள் (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டை.—சுமத்திரா (Sumatra). | | 4 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—ஜாவா (Java)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | ஸௌரபாயா (Sourabaya). | | 5 விமானங்கள். | |
| | டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான டிமோர் (Timor)-(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கோயிபாண்டு (Koepand). | | | |
| **19—2—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia) வில் ஒரு இடம். | | 1 பாம்பர் விமானம். | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow) விற்குச் சமீபத்தில். | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் (Darwin) துறைமுகம். | | | |
| | சுமத்திரா (Sumatra), ஜாவா (Java) (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | படேவியா (Batavia), ஸௌரபாயா (Sourabaya). | | | |
| **20—2—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |



| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **20—2—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மான்டலே (Mandalay). | | | |
| | தூரக்கிழக்கு—ஜாவா (Java), (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள்.—பியூடன் ஸார்க் (Buitenzorg), பாண்டோங் (Bandoeng) இவைகளுக்கருகாமையில். | | 1 விமானம்; இன்னும் அநேகம் சேதமாயின. | |
| **21—2—42.** (சனிக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஒரு பட்டணம்—இங்கிலாந்தி (England)ன் கிழக்குக் கடற்கரையில். | சொற்பச் சேதம். | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | 3 விமானங்கள். | |
| | தூரக்கிழக்கு—ஜாவா (Java), (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள் ஜாவா (Java). | | | |
| | பிலிப்பைன்ஸ் (Philippines)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | அமெரிக்கத் துருப்புகளின் ஸ்தானங்கள்.—படான் (Bataan) தீபகற்பத்தில். | | | |
| **22—2—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | 2 விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன; விமானங்களுக்குச் சேதம். | | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow). | | | |
| | தூரக்கிழக்கு—ஜாவா (Java) (N. E. I.)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—பாண்டோயிங் (Bandoeng). | | 5 விமானங்கள். | 2 விமானங்கள். |
| **23—2—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) ... | | 2 விமானங்கள். | |
| | ருஷ்யா (Russia)—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மாஸ்கோ (Moscow) ... | | 1 விமானம். | |
| | தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—ஸிட்டாங் (Sittang) நதிக்கரையில். | | | |
| | நியூ கினியா (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—நியூ கினியா (New Guinea). | | | |

# யுத்தக் குறிப்புகள்.

**சிங்கப்பூர் விழுந்த காரணம்.** சிங்கப்பூர் எதிரிவசமான தகவல் கிடைத்து சில நாட்கள் ஆகிவிட்டன. இனிமேல் அங்கிருந்த நிலைமையைப்பற்றி பரிசீலனை செய்வோம்.

சிங்கப்பூர் எதிரிவசமாகாமல் ஒருவராலும் தடுத்திருக்க முடியாது. கடல் மார்க்கமாக எதிரி வராமல் செய்வதற்காக பலமான தற்காப்பு செய்துவைக்கப்பட்டிருந்தது. ஆனால் தரைவழியாக படையெடுப்பு நேர்ந்தது. அயலார்களுடன் எவ்வளவோ சிநேகமாக நாம் இருக்கவேண்டுமென்று பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கும்போது விஷி அரசாங்கம் இந்தோ-சைனாவை ஜப்பானுக்கு மிகக் கேவலமாக ஒப்படைத்துவிட்டது. மேலும் தாய்லாந்தும் எதிரிகளுக்கு இடம் கொடுத்தது. இதனால் சிங்கப்பூருக்கு எதிரி சுலபமாக வந்துவிட்டான். மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த பிரின்ஸ்-ஆப்-வேல்ஸ், ரிபல்ஸ் என்ற நம்முடைய இரண்டு பெரிய கப்பல்களும் அமுக்கப்பட்டன. மூன்றுவதாக பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கியதால் அங்கிருந்து அமெரிக்க உதவி வரமுடியாமல் போய்விட்டது. நான்காவதாக சிங்கப்பூருக்கும் மற்ற இடங்களுக்கும் அதிக தூரமிருப்பதால் தேவையான உதவியை அனுப்பமுடியவில்லை. கடைசியாக (மலேயாவில்) ஜோஹூரும், (டச்சு போர்னியோவில்) பாண்டியானக்கையும் ஜப்பானியர் பிடித்துக்கொண்டு அங்குள்ள விமான தளங்களையும் பிடித்துக் கொண்டார்கள். ஆக இந்த நிலைமைகளில் சிங்கப்பூர் எதிரி வசமடைந்தது.

வி வி வி வி வி வி வி

**ஜாவா யுத்தம்.** சிங்கப்பூர் எதிரிவசமானாலும் நிலைமை கெட்டுவிடவில்லை. சிங்கப்பூரில் சண்டை நடந்துகொண்டிருக்கும்போதே வேவல் ஜாவா தீவின் தற்காப்புக்காக பல ஏற்பாடுகளைச் செய்தார். ஜப்பானியர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கவும், மறுபடி ஜாவாவிலிருந்து எதிரி நாட்டில் படையெடுப்பு செய்யவும் தயார் செய்தார்.

வி வி வி வி வி வி வி

**புதுவிதமான யுத்தம்.** "இந்த யுத்தமே புதுவிதமாக நடத்தப்படுகிறது. ஒவ்வொரு கண்டத்திலும், ஒவ்வொரு தீவிலும், கடலிலும் நடக்கிறது. உலகத்தையே கவரும்படியாக யுத்தம் நடந்துவருகிறது" என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அறிவித்தார். இதுவரை பெரும் தற்காப்பு என்று நினைத்திருந்த கடல்வெளிகளெல்லாம் யுத்தரங்கமாகிவிட்டது. ஆனால் ஆங்காங்கு நம்மால் அனுப்பப்படும் ஸப்ளைகள் கெட்டுவிடாமல் போய்ச் சேருவதால் நமக்கு கடல் ஸ்வாதீனம் இன்னும் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் எதிரியைத் தாக்கவேண்டும். மேலும் சிறிய பிரதேசங்களை விட்டுக்கொடுக்கவேண்டிவந்தாலும் பாதகமில்லை. இது தான் புதிய தந்திரம்.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானிய வெற்றிகளின் மின்னல் தோற்றம்.** மேலும் ஜப்பான் தற்சமயம் அடைந்துவரும் வெற்றிகளெல்லாம் மின்னல் போல் தோன்றி மறையக்கூடியவைகளே. ஒரு தடவை ஆரம்பத்தில் வெற்றியடைய முடியுமே தவிர அடிக்கடி ஜப்பான் தனது கொடுமைகளைத் திரும்பச்செய்ய முடியாது. தற்சமயம் ஜப்பான் 3,000 மைல் கிழக்கு மேற்கிலும், 4,000 மைல் தெற்கு வடக்கிலும் ஆக 12,000,000 சதுர மைலுக்கு விஸ்தாரமான தரை, கடல் முதலிய பாகங்களில் சண்டைசெய்து வருகிறது. பிரிடன், அமெரிக்கா, கிழக்கிந்தியத் தீவுகள், இந்தியா முதலிய நாடுகளை எதிர்த்து சண்டை செய்யவேண்டியிருப்பதால் ஜப்பானுக்கு இனி கஷ்டம் அதிகரித்துத்தான்வரும். ஆக்கிரமித்த நாடுகள் உள்பட ஜெர்மனிக்கு 800 லக்ஷம் படைகளும், ஒருவித உதவியுமில்லாமல் ஜப்பானுக்கு 700 லக்ஷம்



பேருமதான் இருக்கிறார்கள். ஜப்பானும் ஜெர்மனியும் ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்ளவும் முடியாது. அதோடு ஜெர்மனி ஏற்படுத்திக்கொண்டிருப்பதுபோல் 3 மடங்கு அதிகமாக போர்முனையை ஜப்பான் விருத்தி செய்துகொண்டிருக்கிறது. அவ்வளவு முஸ்தீப்புகொண்டிருந்தாலும் ஜெர்மனியை ருஷ்யா மாத்திரம் ஏக தேசத்தில் விரட்டியடிக்கிறதென்றால் ஜப்பானுடைய கதி என்னவாகுமென்று யோசித்துப்பாருங்கள். மக்காஸர், ஜில்பர்டு, மார்ஷல் முதலிய தீவுகளில் ஜப்பானுக்கு நேர்ந்த தோல்வியைக்கொண்டே கடைசியாக தோல்வி ஜப்பானுக்கு நேருவது நிச்சயம் என்று தெரிந்துகொள்ளலாம். இதுவரை ஜப்பானுக்கு 100 கப்பல்கள் நஷ்டம். இதில் சண்டைக்கப்பல்களும், நாசகாரிகளும் வியாபாரக் கப்பல்களும் அடங்கியிருக்கின்றன. இதேமாதிரி இனிமேல் நஷ்டமடைந்தே போனால் ஜப்பானால் தாங்கமுடியாது.

வி வி வி வி வி வி வி

**வெற்றிக்கு அதிக சமீபத்தில் நாம் இருக்கிறோம்.** இரண்டு வருஷங்களுக்குமுன் இருந்ததைக் காட்டிலும் தற்சமயம் நேசநாடுகளுக்கு வெற்றி கிடைப்பதற்கான சின்னங்கள் அதிகமாக இருக்கின்றன.

1940ல் பிரிடன் மாத்திரம் தனியே எதிரிகளுடன் சண்டைசெய்ய வேண்டிவந்தது. ருஷ்யா ஜெர்மனியுடன் உறவு கொண்டாடிக்கொண்டிருந்தது. அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடாமலும் இருந்தது. இப்போதோவெனில் யுத்த சாமான்கள் ஏராளமாகத் தயாராகிவிட்டன. ருஷ்யாவும் அமெரிக்காவும் ஜெர்மனிக்கு எதிராக சண்டையில் ஈடுபட்டுவிட்டார்கள். 1940-ல் இருந்த நிலைமையைப் பார்த்து ஹிட்லர் தனக்கு வெற்றி கிட்டியதாகவே எண்ணினார். 1941-ல் கொஞ்சம் சந்தேகம் தட்டியது. ஆனால் 1942-ல் ஆரம்பம்முதல் பயம் பிடித்துத்திரிகிறான். ரிஸர்வ் படைகளையெல்லாம் சண்டைக்கு அனுப்பும்படி அவனுக்கு கெட்ட நிலைமை நேர்ந்திருக்கிறது. 1940-ல் தலை தப்புவது தம்பிரான் புண்ணியமென்று பிரிடன் நினைத்தது. இப்போது இறுதியான வெற்றி பெறவே தீர்மானித்து சண்டையை நடத்திவருகிறது.

வி வி வி வி வி வி வி

**சென்ற யுத்தத்திலிருந்து கற்ற பாடம்.** செவ்வாய்க்கிழமை பார்லிமெண்டு சபை முன்பாக மிஸ்டர் சர்ச்சில் பேசியபோது சென்ற யுத்தத்தில் நடந்த சில சம்பவங்களைப் பற்றிச் சொல்லி; பிரகிருத யுத்தத்திலும் நமக்கு முடிவான வெற்றி கிடைப்பது நிச்சயம் என்று சொன்னார்.

"யுத்தத்தின் போக்கைக் கண்டு நாம் பீதியடைய வேண்டியதே இல்லை. இப்பொழுது நமக்குக் கொஞ்சகாலம் நல்லதாக இல்லை. இதிலிருந்து மீளுவதற்காக நாம் இப்பொழுது நேரும் சிரமங்களைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

"இதுவரை நடந்த பழைய யுத்தங்களெல்லாம் தனிச் சண்டைகளைக் கொண்டே தீர்மானிக்கப்பட்டன. சண்டை ரீதிகள் அவ்வளவு முக்கியமாக இல்லை. தற்சமயத்தில் யுத்தத்தின் ரீதி அல்லது போக்குத்தான் முக்கியம். தனிச் சண்டைகளில் ஜயம் பெறாமலே, முடிவான வெற்றியை நாம் அடையமுடியும். ஜெர்மானியர்களை வந்தவழியேவிரட்டியடிக்கும்வரை சண்டை செய்யத் தேவை இல்லை. அதற்குமுன்னமேயே வெற்றி நமக்குக் கிடைக்கும்.

"தங்களுடைய எல்லையைத் தாண்டி ஜெர்மானியர்கள் வெகுதூரம் வந்தாலும், ஆக்கிரமித்த நாடுகளில் அவர்கள் அதிகாரம் கொடிகட்டிப் பறந்தாலும் ஜெர்மன் சைனியங்கள் வெற்றியுடன் மேலேறிக் கொண்டே போனாலும், இன்னும் கொஞ்ச நாட்களில் முடிவான தோல்வி பெறுவார்கள், இதற்காக பிரிடிஷ் சைனியம் ஜெர்மனியின் தலைநகரில் புகுர வேண்டிய அவசியமில்லை நம் நாடுகளில் இருந்து சண்டை செய்தாலே போதுமானது".

**நாம் அடைந்துவரும் வெற்றிகளை மறக்கக்கூடாது.** காப்டன் H. D. R. மார்கஸன் பார்லிமெண்டு சபையில் பேசும்போது நாம் பெற்றுவரும் முன்னேற்றங்களைப் பற்றித் தெரியப்படுத்தினார். அதிகக் கஷ்டமடைந்து வந்தாலும் இடையிடையே இருக்கும் சாதகாசங்களைப்பற்றி நினைப்பது சரியாகும். உதாரணமாக ஆபிரிக்காவிலிருந்து 2,80,000 இதாலியர்கள் இறந்தும் கைதிசெய்யப்பட்டும் இருக்கின்றனர். இவ்வளவு பேர்களும் அம்மாதிரி செய்யப்படாமலிருந்தால் என்ன நேர்ந்திருக்குமென்று பாருங்கள்.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவுக்கும் பொது க்ஷேமம்.** நாஸி திட்டங்களைப் பின்பற்றுகிற ஜப்பானியர்கள், பர்மாவை பர்மியர்களுக்கே கொடுத்துவிடுவதாயும், ஆஸ்திரேலியர்களுடன் சகோதரபாவம் கொண்டாடுவதாயும், இந்தியர்களுக்குப் பொது க்ஷேமத்தைக் கொடுப்பதாயும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவதை டெயிலி டெலகிராப் பத்திரிகை, ஓநாய் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டிருப்பதற்கு ஒப்பிடுகிறது. இந்தியாவுக்குப் பொது க்ஷேமத்தைத்தருவதாக ஏமாற்றிவிடமுடியாது. இந்தியர்கள் இதைக்கண்டு மயங்கிவிடமாட்டார்கள்.

வி வி வி வி வி வி வி

**மதச்சேட்டை.** பொது க்ஷேமத்தைப்பற்றிச் சொல்லுவதோடுமட்டும் இல்லாமல் பொதுவான மதப்பற்றுதலிருப்பதாயும் ஜப்பான் சொல்லி ஏமாற்றப் பார்க்கிறது.

ஸயாமும் ஜப்பானும் ஒரு புத்தக்கோவிலில் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டதை ஜப்பானுடைய உட்கருத்துக்கு ஒரு திருஷ்டாந்தமாக நாம் வைத்துக்கொள்ளவேண்டுமென்று ஜப்பான் சொல்லுகிறது. மேலும் 1941-ம் வருஷம் மே மாதத்தில் வெஸாக் கொண்டாட்டத்தை ஸிலோன், ஸயாம், இந்தோ-சைனா முதலிய நாடுகளில் கொண்டாடுவதைப் போலவே ஜப்பானும் கொண்டாடிற்று. ஜப்பானுக்கு மதப்பற்றுதலதிகம் இருப்பதாகக் காண்பிக்கவே இப்படி செய்தது. இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கதை ஞாபகம் வருகிறது. வயது முதிர்ந்த புலி ஒன்று, தன்னால் ஆகாரம் தேடிச் சாப்பிடமுடியாததால் குளத்தில் முழங்கால் ஆழத்தில் சேற்றில் இரண்டு தங்க வளைகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அக்கம் பக்கத்தில்போகிறவர்களுக்கு தனக்கு ஏதோ தர்மசிந்தனையிருப்பதாகவும் அவ்வளைகளைக் காண்பித்து பெற்றுப் போகும்படி சொல்லிக்கொண்டும் இருந்தது. இதற்கு ஏமார்ந்து யாராவது வந்தால் சேற்றில் மாட்டிக் கொள்ளவேண்டியது தான். அப்பொழுது கொன்றுவிடலாமென்று நினைத்திருந்தது. புலிக்கு தர்ம சிந்தனை இருப்பது போலவே தான் ஜப்பானுக்கும் மதப்பற்றுதல். புத்தமதத்தை அடியோடுதள்ளிவிட்டு ஷின்டோ மதத்தை ஜப்பான் கையாண்டுவருகிறது. ஜெர்மனியில் ஹிட்லரைக் கும்பிடவேண்டும் என்று சொல்லுவது போலவே ஜப்பானியச் சக்ரவர்த்தியையும் உயர்வாகச் சொல்லப்படுகிறது. "புத்த மதத்தை இதரர்களுடைய நிர்பந்தத்திலிருந்து விடுவிப்பதாகச் சொல்லுகிறதே தவிர, இப்படிச் சொல்லி நாடுகளை கைவசப்படுத்துவதே தான் நோக்கம் கொண்டிருக்கிறது.

உதாரணமாக புத்த மதம் நன்றாகப் பரவியிருக்கும் சைனாவை ஜப்பான் தாக்கிக்கொண்டேயிருக்கிறது. ஜப்பான் கையாளும் மதப்படி கொலைகள் தான் செய்யப்படுகின்றன.

வி வி வி வி வி வி வி

**எதிர்ப்புச் சண்டைகள் சீக்கிரத்திலேயே நேரும்.** நேசநாடுகள் ஒன்று சேர்ந்து எதிர்க்கக்கூடிய சந்தர்ப்பம் சீக்கிரத்திலேயே ஏற்படும். அதைப்பற்றி சில அபிப்பிராயங்களைப் பார்ப்போம்.—

**மிஸ்டர் ஸ்டிம்ஸன்** "அமெரிக்க யுத்த மந்திரி, நாட்டின் தற்காப்பைத் திட்டப்படுத்த வேண்டுமானால், நமது படைகளை ஒன்று சேர்த்து எதிரிப்படைகளை முன்னேறித்தாக்க வேண்டும்.



பலவந்தமாகச் சண்டை செய்தால்தான் யுத்தத்தில் முன்அணியிலிருந்து எதிரிகளுடன் போர் புரியமுடியும். இப்படிச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை சீக்கிரத்தில் அடைவோம்."

**டாக்டர் வான் மூக்.** டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளின் Liet. கவர்னர் ஜெனரல்:—"யுத்தம் நெருங்கி வரும் வரை காத்துக்கொண்டிருந்து, பிறகு சண்டை செய்யமுடியாமல் பின்வாங்குவது நமக்குத் தீங்கை விளைவிக்கும். ஆகவே முன்னேறிச் சண்டை செய்யவேண்டும்."

**ஸிட்னி டெலிகிராப் பத்திரிகை.** வான் மூக் சொல்லியதை ஆஸ்திரேலியர்கள் நன்றாக உணர்ந்துகொண்டார்கள். தற்காப்பைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்காமல் எதிரியைத் தேடிப்பிடித்துத் தாக்கவேண்டும்.

**வாஷிங்டன் செய்தி.** எதிரியை விடாமல் நாம் முதலில் முன்னேறித் தாக்குவதால் அட்லாண்டிக்கில் சில நன்மைகள் ஏற்பட்டுவருகின்றன.

**ஜனாதிபதி ரூஸ்வெல்டு.** இனிமேல் நாம் பலவந்தமாக முன்னேறிச் சண்டை செய்வோம். கடைசிச் சண்டைகளை நாமே செய்து, எதிரியை முறியடித்து சாமாதானத்தை வழங்குவோம்.

வி வி வி வி வி வி வி

**ரியோம் விசாரணை.** டலடியர், புளூம், காமலின் இவர்களைப்பற்றிய விசாரணை நடந்து வருகிறது. இதிலிருந்து ஜெர்மனி பிரான்ஸைப் படையெடுத்த சமயத்தில் பிரான்ஸ் யுத்தத்திற்குத் தயாரில்லாத விஷயம் தெரியவருகிறது. யுத்தம் ஆரம்பிக்கும்போது பிரான்ஸில் நவீனமான விமானங்கள் ஒன்றுகூட இல்லை. யுத்த சாமான்களும் போதுமான அளவு இல்லை. தொழிற்சாலை வேலைப்பாடும் சரியாக இல்லை. தொழிலாளிகள் வாரத்தில் செய்யவேண்டிய மணிக்கணக்கை ப்ளூம் திட்டப்படுத்தியபடி செய்ய முடியவில்லை. பியரி என்பவன் விமான முஸ்தீப்பை கவனிக்கவில்லை. ஸ்பெயினுக்குக் கடனாக சிலவற்றைக் கொடுத்துவிட்டான். ஜாகோவெட் என்பவன் தொழில் சங்கங்களின் வேலைகளைச் சரியாகக் கவனிக்கவில்லை. இப்படிச் சொல்லிக் கொண்டுபோனால் பிரான்ஸின் ஊழல்தான் வெளியாகும்.

வி வி வி வி வி வி வி

**நாஸிகளும் முஸ்லிம் நாடுகளும்.** முஸ்லீம்களை நாஸிகள் ஏமாற்றிய காலமெல்லாம் போய்விட்டது. இனிமேல் முஸ்லீம்கள் நாஸிகளை சிநேகிதர்களென்று கருதமாட்டார்கள். பிரான்ஸ், போலந்து, ருஷ்யா முதலிய நாடுகளிலுள்ள அராபியர்களைக் கொலைசெய்து முகமதிய கோரிகளைப் பாழாக்கியதிலிருந்தே நாஸிகளின் கள்ளத்தனம் வெளியாகிவிட்டது. அராபியர்களைப்பற்றி ரகசியமாக நாஸிப் போலீஸ்காரர்கள் ஒரு லிஸ்டு தயாரித்தார்கள். இவர்கள் யாவரும் தேசாபிமானமுள்ள அராபியர்கள். ஆக்கிரமித்த பிரான்ஸிலிருந்து தனிப்பட்ட பிரான்ஸுக்குப்போக இவர்கள் அனுமதிக்கப்படவில்லை. சமீபத்தில் பாரிஸில் ஒரு அல்ஜீரிய அராபியர் நாஸிகளால் சுடப்பட்டார்.

வி வி வி வி வி வி வி

**ஒரு நல்ல சந்தர்ப்பம்.** ரெக்ரூட்டிங் ஆபீஸர் (Recruiting officer) கர்மல் F. C. வால் (ஹெட் ஆபீஸ், பெங்களூர்) சமீபத்தில் இச்சமஸ்தானத்திற்குவந்து சைனியத்தைச் சேர்ந்த பலவிதமான தொழிலாளிகளையும், மெகானிக்குகளையும், குமாஸ்தாக்களையும் பொறுக்கியெடுக்கிறார். இச்சமஸ்தானத்தில் வாலிபர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். ஏனென்றால் தற்போது அவர்களுக்கு உயர்ந்த சம்பளத்தில் வேலை கிடைப்பதோடு, மேலும் மேலும் விருத்தியடையலாம். தங்கள் தாய் நாட்டையும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையும காப்பாற்றுவதற்காக யுத்தத்தில் ஈடுபட்ட

விஷயத்தில் ஒரு திருப்தியும் கொள்ளலாம். பம்பாயிலும், கராச்சியிலும் 15-17 வயதுள்ளவர்களுக்கு கப்பல் இலாகாப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. இதனால் நல்ல வேலைகளைப் பெறலாம். இந்த யுத்தம் ஆரம்பித்தது முதல் இந்தியக் கப்பற்படை 6 தடவை விருத்திசெய்யப்பட்டிருக்கிறது. மஸ்ஸாவா ஜல சந்தியில் ஹிந்துஸ்தான் என்ற கப்பல் முதல் முதலாக வெற்றிகரமாய் பிரவேசித்தது. இந்தியக் கப்பற்படையினர் எதிரிகளின் 3 பெரும் கப்பல்களையும், 5 உதவிக்கப்பல்களையும் 29 வியாபாரக் கப்பல்களையும் பிடித்தனர். இதைத்தவிர அட்லாண்டிக் யுத்தத்திலும் மத்தியதரைக்கடல் யுத்தத்திலும் அதிகம் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும் சென்ற வருஷத்தில் 50 சதவிகிதம் கப்பல் உத்தியோகஸ்தர்களையும் அதிகப்படுத்தியிருக்கிறது. கப்பற்படைப் பள்ளிக்கூடத்தில் சேருகிறவர்களுக்கு நல்ல சௌகரியங்கள் கிடைக்கின்றன.

---

## ஜப்பானின் கடல் மார்க்கமாய் வரும் ஸப்ளைகள்.

## மக்காஸர் ஜலசந்தியில் விரோதிகளுக்கு ஏற்பட்ட பலத்த நஷ்டம்.

## தென்மேற்கு பஸிபிக்கில் நேசதேசத்தார்களுடைய யுத்த தந்திரம்.

## மத்தியதரைக்கடலில் நேசதேசத்தார்களின் நிலைமை.

(உபதலைவர் தாமஸ் வுட்ராப் சமீபத்தில் பி. பி. ஸி.-யில் பேசியது).

ஜப்பானின் யுத்த தந்திரம் எப்படியிருந்தாலும், இப்பொழுது தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள அநேக கப்பற்படை தளங்களையும், விமான தளங்களையும் உடனே கைப்பற்றிக்கொள்ள எத்தனிக்கிறது. மேலும் சிங்கப்பூரிலிருந்து ஸாலமன்ஸ் வரையிலுள்ள எல்லாத் தீவுகளிலும் விமானபலம் பெறுவதற்கு உத்தேசிக்கிறது. இவ்விதம் வஞ்சகமாகக் கைப்பற்றும் வழக்கத்தை வெகு வருஷங்களாகவே நடத்திவந்திருக்கிறது. சென்ற யுத்தம் முதற்கொண்டு ஜப்பான், ஸர்வதேச சங்கத்தின் விதிகளுக்கு மீறி, கரோலின், மார்ஷல் தீவுகளிலும் கடல் விமான தளங்களை ஏற்படுத்தி அவைகளைப் பலப்படுத்தியும் வந்திருக்கிறது. தென்மேற்கு பஸிபிக்கில் ஜப்பான் தற்சமயம் ஆதிக்கம் பெற்றிருக்கிறது. அதனால் அதற்கு அப்பிராந்தியத்திலுள்ள ஆயிரக்கணக்கான தீவுகளில் ஏதேனும் ஒன்றை திடீரென்று தாக்குவது அதை நாம் காபந்து செய்வதைக் காட்டிலும் சுலபமான காரியம்தான். "ஜப்பான் ஏராளமான சைனியத்துடன் ஏதேனும் நன்றாக பாதுகாக்கப்படாத ஒரு லக்ஷியத்தைக் குறித்து திடீரென்று தாக்கி அதைக் கைப்பற்றிக்கொள்வது சுலபம்" என்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லியிருக்கிறார்.

மேற்சொல்லிய விதமாகத்தான் தற்சமயம் ஜப்பான் செய்துவருகிறது. கப்பற்படை பலத்தைக்கொண்டு அது சென்றவிடமெல்லாம் வெற்றியடைந்து வருகிறது. அதற்குக் கடலாதிக்கம் போய்விட்டால், இப்பொழுது அது நடத்தி வரும் முயற்சிகள் யாவும் பாழாய்விடும். ஏனென்றால் அதன் மின்னல்படையெடுப்புகள் யாவும் கப்பற்படையின் உதவியினால் தான் நடந்துவருகிறது. அதன் கடல் போக்குவரத்துகள் இதுவரை எதிர்க்கப்படவில்லை.

ஜப்பான் நடுவிலிருந்துகொண்டு 2,500 மைலுக்கு அப்பால் வட்டக்கொடாக 4,000 மைல் சுற்றளவுக்கு போர் நடத்தி வருகிறது. ஜப்பானிலிருந்து இம்மாதிரி சண்டை போடும் இடங்களுக்கு மணிக்கு 15-நாட் (knot) வீதம் செல்லும் கப்பல் கூட்டத்திற்கு ஒரு வாரம் பிடிக்கும்.



ஜப்பான் சமாதான காலத்திலேயே அதிவேகமாகச் செல்லும் சாமான் கப்பல்களையும், எண்ணெய்க் கப்பல்களையும் ஏராளமாகத் தயாரித்தது. சமாதான காலத்திலும் நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் அவைகளை உபயோகப்படுத்தி வந்தது. அதற்குக் காரணம் இப்போதுதான் தெரிகிறது. ஏனென்றால் யுத்த காலத்தில் அதிவேகமாகச் செல்லும் வியாபாரக் கப்பல்கள் தான் அதிக உபயோகமாக இருக்கும். சாதாரணமாக சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல்களின் வேகம் மிகவும் குறைவு. அவை அட்லாண்டிக் சமுத்திரத்தில் சீதோஷ்ண நிலை நன்றாக இருந்தாலும்கூட மெதுவாகத்தான் செல்லமுடியும். அதனால்தான் இவைகள் யுத்த காலத்திற்கு லாயக்கில்லை.

## எதிரியை சோர்வடையச் செய்வது.

தற்சமயம் முன்னேறித் தாக்குகிறவர்களுக்குத்தான் காலமாக இருக்கிறது. சமீபகாலமாக மக்காஸ்ஸர் ஜலசந்தியில் ஜப்பான் பலத்த நஷ்டத்தை அடைந்து வருகிறது. இந்த ஜலசந்தி போர்னியோவுக்கும், தேசபடத்தில் நக்ஷத்திர மீன்போல் காணப்படும் ஸெலிபஸ் தீவுக்கும் இடையே சுமார் 120 மைல் அகலத்திலும் 600 மைல் நீளத்திலும் மிகவும் குறுகலாகச் செல்லுகிறது. பிலிப்பைன்ஸிலிருந்து ஜாவாவுக்குவர இதுதான் குறுக்கு வழி.

மேற்சொல்லிய வெற்றியைப்போல, ஜப்பான் பேரில் இன்னும் சில வெற்றிகளை நாம் அடைந்தால் அது இப்பொழுது நிலத்திலும் கடலிலும் தாக்கி வருவது இனி முடியாமல் போய்விடும். இந்த சமயத்தில் அதற்கு விமான பலம் அதிகம் இல்லை. அதற்குக் கடலாதிக்கம் இருக்கும்வரையில் மக்காஸர் ஜல சந்தியைப்போலுள்ள, குறுகிய இடங்களில் தான் அதன் கப்பற்படையைத் தாக்கவேண்டும். தென்மேற்கு பஸிபிக்கில் நாம் நல்ல பலமான கப்பற்படையும், விமானப்படையும் ஒன்று சேர்க்கும் வரை சிறு கப்பற்படை, விமானங்கள், நீர்மூழ்கிகள் இவைகளைக்கொண்டு ஜப்பானை மேற்சொல்லிய விதமாகத் தாக்கி அதன் பலத்தைக் குறைக்கவேண்டும்.

இவ்விதம் தாக்குதல்களினால் எதிரியின் போக்குவரத்துகளை முழுவதும் துண்டிக்கமுடியாது, ஆனால் எதிரிக்குப் பெருத்த சேதம் ஏற்படும். ஆனால் பூராவும் தடைபட்டுவிடாது. ஏனெனில் தாக்கப்பட்ட கப்பல்களில் ஒரு பாகமாவது தப்பி வந்து விடுகிறது. இப்பொழுது ஜப்பானின் ஆதிக்கம் பரவப் பரவ ஜப்பானின் கப்பல்களைக்கண்ட இடங்களில் மூழ்கடிப்பது அதிகப் பயனளிக்கும். ஜப்பான் சைனியம் போய் தாக்கி தங்கள் கொடியை பறக்கவிடுவதினால் மட்டும் ஜப்பானுடைய ஆக்கிரமிப்பு வெற்றிகரமாக முடிந்துவிடாது. அதற்கு மேலும் மேலும் யுத்த சாமான்கள் வந்துகொண்டே இருக்கவேண்டும்.

## கப்பற்படை தளங்களைக் கைப்பற்றப் போட்டி.

ஆக்கிரமித்த நாடுகளை ஜப்பான் தற்காப்புடன் வைத்துக்கொள்ள அதற்கு யுத்தப் பொருள்களும் வெடிமருந்தும் ஆங்காங்கு அனுப்பப்படவேண்டும். அதற்காக ஜப்பானிலிருந்து 2,500 மைலுக்கு அப்பாலிருக்கும் இந்த இடங்களுக்கு சாமான்களுடன் கப்பல் கூட்டங்கள் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருக்க வேண்டும். 20 வருஷமாகத் தயார் செய்திருந்த நாட்டிற்குக்கூட இவ்விதம் செய்வது சாத்தியமில்லாத காரியம்.

ஜப்பான் கைப்பற்றியிருக்கும் கப்பற்படை தளங்களில் சிலவற்றிற்கு ஜப்பானிலிருந்து கப்பல் கூட்டங்கள் யுத்தப் பொருள்களை ஏற்றி வரும் பொழுது, நேசதேசத்தார்கள் போதுமான கப்பற்படைகளைத் திரட்டிக்கொண்டு தாக்கினால் ஜப்பான் கைப்பற்றியிருக்கும் கப்பற்படை தளங்களுக்கு ஆபத்தான நிலைமை உண்டாகிவிடும். ஜப்பானியக் கப்பற்படையே அழிக்கப்பட்டால் ஜப்பானுக்கே ஆபத்து வந்துவிடும். கடல் மார்க்கமாக வெகுதூரத்தில் இருக்கும் கப்பற்படை தளங்களுக்கு ஸப்ளைகள் கொண்டுபோக முடியாதபடி தடைபட்டுவிடும்.

அதனால் ஜப்பானும் அத்தளங்களை ஒவ்வொன்றாக இழக்க நேரிடும். இந்த ஆக்கிரமிப்பும் ஒழியும். ஜப்பான் ஒரு தீவு. அந்நாட்டின் முக்கியபலம் அதன் கப்பற்படைதான். அதனால் அவர்கள் நேருக்கு நேர் கடல் யுத்தம் செய்ய முன்வர மாட்டார்கள். முக்கியமான இடங்களைக் கைப்பற்றிக்கொள்ள அவர்கள் நான் முந்தி, நீ முந்தி என்று பார்க்கிறார்கள். சுலபமாகக் கைப்பற்றக் கூடியவையாவும் கொஞ்ச காலம்தான். இவ்விதம் சுலபமாக வெற்றிகளைப் பெற முடியுமென்று ஜப்பானுக்குத் தெரியும். அதுவரையில் எவ்வளவு கைப்பற்ற முடியுமோ அவ்வளவைக் கைப்பற்றவும், எவ்வளவு சேதம் விளைவிக்க முடியுமோ அவ்வளவை விளைவிக்கவும் பார்க்கிறது.

அதனால் நேசநாடுகள் கப்பற்படை, விமானப்படை, தரைப்படை இவைகளை ஒன்று சேர்த்துப் பலப்படுத்திக்கொள்ளும் வரை எதிரிகளின் எதிர்ப்பை தங்களால் முடிந்த வரையில் சமாளித்து வரவேண்டும். மேலும் விமானப்படை, சொற்ப கப்பற்படை இவைகளைக்கொண்டு நேசதேசத்தார்கள் வெற்றிகரமாக சமாளித்து வருகிறார்கள்.

## மத்தியதரைக்கடலின் நிலைமை.

மத்தியதரைக்கடலின் கப்பற்படையின் நிலைமைக்கும், பஸிபிக் சமுத்திரத்தில் நடந்த சம்பவங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது. ஏனென்றால் மத்தியதரைக் கடலில் இதாலியக் கப்பற்படைகள் சண்டை செய்யாமல் இருந்தபோதிலும் அவை அங்கு இருப்பதே நமது கப்பற்படைக்கு ஆபத்து. அதற்காக வேறு இடத்தில் சண்டைகளுக்கு அனுப்ப முடியாமல் நமது கப்பற்படைகளை பெரும்பாலும் மத்தியதரைக் கடலிலேயே வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் மத்தியதரைக்கடலில் உள்ள பிரச்னை தென்மேற்கு பஸிபிக்கில் உள்ள நிலைமையைப்போல அவ்வளவு சிக்கலில்லை. மத்தியதரைக்கடலில் இரண்டு கோடிகளில் நமது கப்பற்படை அலெக்ஸாண்டிரியாவிலும், ஜிப்ரால்டரிலும் இருக்கிறது. இவைகள் ஒன்றுக்கொன்று 2,000 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. இவ்விரு தளங்களுக்கும் மத்தியில் இதாலியக் கப்பற்படை இருந்துவருகிறது.

வட ஆபிரிக்காவில் நடக்கும் யுத்தத்திற்கு நமது சைனியத்திற்கும் நாமும், அச்சுநாடுகளின் சைனியத்திற்கு இதாலியக் கப்பற்படையும் ஸப்ளைகள் அனுப்ப வேண்டியிருக்கிறது. அதற்கு நம்மைக் காட்டிலும் எதிரிக்கு மிகுந்த சாதகம் இருக்கிறது. ஏனென்றால் தெற்கு இதாலியிலிருந்தாவது, ஸிஸிலியிலிருந்தாவது ட்ரிபோலிக்கு எதிரிகள் ஸப்ளைகள் கொண்டுபோக கடல்மார்க்கம்தான் குறுக்கு வழி. எதிரி தன் ஸப்ளைக் கப்பல்களை 36-மணி நேரத்திற்குள் விரைவாக ஓட்டிச் சென்றுவிடலாம். மேலும் எதிரியின் ஸப்ளைக் கப்பல்கள் புறப்பட்ட உடனேயே அந்தத் தகவலை வேவுபார்க்கும் விமானங்கள் நமக்குத் தெரியக்கொடுத்தாலும் கூட, நமது கப்பற்படை விரைந்து ஓடிவந்து எதிரிக் கப்பல்·கூட்டத்தை தடுப்பதற்கு முன்னமேயே, அவை ட்ரிபோலிக்கு பத்திரமாகப் போய்ச்சேர்ந்து விடக்கூடும்.

பஸிபிக்கில் ஜப்பானியர்கள் எப்படி ஸப்ளைகள் கொண்டுபோகிறார்களோ அதைப்போலவே அச்சுநாடுகளும் ஸப்ளைகளை பத்திரமாகக்கொண்டு சேர்த்து விடுகின்றன. அதனால் வட ஆபிரிக்காவிலிருக்கும் ரோமலுக்குச்செல்லும் ஸப்ளைகளில், நம்முடைய நீர்மூழ்கிகளும், விமானங்களும் எவ்வளவு சேதத்தை விளைவித்தாலும்கூட, கொஞ்சமாவது அவனிடம் போய்ச்சேர்ந்து விடுகிறது. உதாரணமாக ஆபிரிக்காவிலிருக்கும் எதிரிக்கு 10 டாங்கிகள் அனுப்பப்படுவதாய் இருந்தால் சுமார் 7 டாங்கிகளாவது போய் சேருகின்றன.

பஸிபிக்கிலும், மத்தியதரைக்கடலிலும் எதிரிகளுக்கு கடல் மார்க்கமாகத்தான் ஸப்ளைகள் அனுப்பவேண்டுமாதலால், அவைகள் நமது கப்பற்படையினால் தாக்க ஹேதுவாயிருக்கும். எதிரி ஸப்ளைகளுக்கு நாம் சேதம் விளைவிப்பது வரவர அதிகரித்துவருகிறது. அதனால் நேசதேசத்தார்களின் பலம் இன்னும் அதிகரித்தால் கடலில் எதிரிகளுக்கு மிகுந்த சேதமுண்டாகி, அச்சுநாடுகளின் யுத்தப் பிரயத்தனமும் குன்றிவிடும்.



## வருங்காலத்திற்குறிய தோற்றம்.

## மக்காஸர் ஜலசந்தியிலும் மார்ஷல் தீவுகளிலும் சண்டை.

## எதிரி நடமாட்டங்களிலிருந்து ஊகிக்கப்பட்டவை.

(H. C. பெர்ராபி எழுதியது.)

ஜப்பானியப்படைகள் முதல்தடவையாக, மக்காஸர் ஜலசந்தியிலும், மார்ஷல் தீவுகளிலும் தோற்கடிக்கப்பட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. எட்டு வாரங்களாக ஜப்பானியர் நடத்திவரும் சண்டையில் முன்சொன்ன இரண்டு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் திட்டப்படி வெற்றி பெற்றுவருவதாகவே தான் காணப்படுகிறது. இனிமேல் மற்ற இடங்களிலும் ஜப்பானியருக்குப் பலவித இடைஞ்சல்கள் ஏற்படுமென்று தெரிகிறது.

யுத்தம் வந்தால் ஆரம்ப காலங்களில் ஜப்பான் அதிக வெற்றிகள் அடையும் என்று யாவரும் எதிர்பார்த்ததுதான். அமெரிக்கக் கப்பல் அதிகாரிகளும் எதிர் பார்த்து 20 வருஷ காலமாக எடுத்துச் சொல்லிக்கொண்டும் வந்திருக்கிறார்கள். ஏனென்றால் அமெரிக்கக் கப்பற்படை பிலிப்பைன்ஸிலும், குவாம் தீவிலும், வேக் தீவிலும், பிரிந்திருந்தது. எந்த நாடும் பஸிபிக்கில் அதிகமான கப்பற் தளங்களை வைத்துக்கொள்ளக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்ட நாலு அரசு ஒப்பந்தத்தின் பயனாக இந்த மூன்று இடங்களை மாத்திரம் அமெரிக்கர்கள் கைவசப்படுத்தி வைத்துக்கொண்டார்கள். வேறு இடங்களில் கப்பற்படையை வைத்துக்கொள்ள முடியவில்லை.

இந்த யுத்தத்தில் முதல் தடவையாக மக்காஸர் ஜலசந்தியில் ஜப்பானியத் துணைக்கப்பல் கூட்டம் ஒன்று தாக்கப்பட்டது. இக்கப்பல் கூட்டம் கள்ளத்தனமாக ஜாவா தீவை ஆக்கிரமிப்பதற்காகச் சென்றுகொண்டிருந்தது. சிங்கப்பூரை எதிரி முற்றுகை போட்டபிறகு நேசநாடுகளின் கப்பற்படைகள் ஜாவாவிலுள்ள ஸௌரபாயாவைக் கப்பற் தளமாக உபயோகிக்கவேண்டிவந்தது. இங்கு இருக்கும் நேசதேசக் கப்பல்களை முறியடிக்கவே அந்த ஜப்பானியக் கப்பல்கூட்டம் வந்துகொண்டிருந்தது. ஆனால் அதன் எண்ணம் பலிக்காமல் எல்லா ஜப்பானியக் கப்பல்களும் தாக்கப்பட்டன.

## எதிரிப் படைகள் பின்வாங்கின.

மலேயாவின் கிழக்கில் ஒரு ஜப்பானியச் சண்டைக் கப்பலும். 3 நாசகாரிகளும் இரண்டு பிரிடிஷ் நாசகாரிகளால் தாக்கப்பட்டன. இந்த இரு பிரிடிஷ் நாசகாரிகளும் குறைந்த சக்திவாய்ந்திருந்த போதிலும் வெற்றிகரமாகத்தாக்கின. இந்த சந்தர்ப்பத்தில் கொஞ்சம் ஜப்பானியக் கப்பல்கள் நாசமானாலும் இந்த சம்பவம் முக்கியமானது என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் ஜப்பானியத் திட்டங்களுக்குத் தடையேற்பட்டு வருகிறது என்பது வியக்தமாகத் தெரிகிறது. இதைத் தவிர மற்ற இடங்களிலும் ஜப்பானிய நாசகாரிகளும், சஞ்சாரிகளும் நாசமாகிறதற்கு ஈடுசெய்ய கப்பல்களை அதிகப்படுத்தும் பிரச்னையும் ஜப்பானியர்களுக்கு ஏற்பட்டுவருகிறது.

மூன்றாவது இடத்தில் ஜப்பானியக் கப்பற்படை தோல்வியடைந்தது மார்ஷல் தீவுகளில்தான். இங்கு வைக்கப்பட்டிருந்த ஜப்பானியக் கப்பற்படையை அமெரிக்க பஸிபிக் கப்பற்படை தாக்கிற்று. இப்படிச் செய்து மெதுவாக ஜப்பானிய பெரிய கப்பற்படையைத் தாக்கலாமென்று அமெரிக்க அட்மிரல் நிமிட்ஸ் நினைத்தான். ஆனால் ஜப்பானியக் கப்பல்கள் அங்கே வரவில்லை. ஜப்பானியர் செய்து வைத்திருந்த யந்திரங்களையும், துருப்புகளையும் மாத்திரம் தாக்கின. இதிலிருந்து ஜப்பானியர் கடலாதிக்கத்தையடையவில்லையென்று தெரிகிறது. பார்மோஸாவிலிருந்து போர்னியோ வரையிலும் ஜப்பானிய ராணுவங்களை அனுப்பியதால், ஜப்பானியர் கடலாதிக்கத்தையடைந்துவிட்டார்களோ என்று நினைக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அப்படி இல்லை.

## ஜப்பானியரின் திட்டம் தவறுகிறது.

புதிதாக உதவிபெறுவதானால் அதிக காலம் பிடிக்கும். ஏனென்றால் ஜப்பானியர்கள் சண்டை செய்யும் இடங்கள் கடலில் பலதூரம் பிரிந்திருக்கின்றன. பேர்ல் துறைமுகத்திலிருந்து பிஜி (Fizi) தீவுகள் 2,700-மைல் தூரத்திலும் பிஜியிலிருந்து ஜாவா 3,000-மைல் தூரத்திலும் இருக்கிறது. நடுப்பாதையில் எண்ணெய் போட்டுக்கொள்ளும் அவகாசத்தைத் தவிர கப்பல்கள் வந்து சேருவதற்கு மூன்று முதல் நான்கு வாரங்கள் பிடிக்கும். இதை உத்தேசித்து டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளை கூடிய சீக்கிரத்தில் கைப்பற்ற ஜப்பானியர் நினைத்தனர். ஆனால் அமெரிக்கக் கப்பற்படை ஜப்பானியர்களைத் தாக்கிவருவதால் ஜப்பானிய திட்டங்களெல்லாம் பலிக்காது. மறுபடி வேறு ஏதாவது ஏற்பாடுசெய்து கொண்டுதான் யுத்தத்தை நடத்தவேண்டிவரும்.

---

# பிரிடன் பேசுகிறது.

---

## நமக்கு ஹிட்லர் ஒருவித கெடுதலும் செய்யமுடியாது.

## ஜெர்மனியில் பஹிரங்கமாகப் பேசுவதற்குத் தடை.

(B. B. பிரீஸ்டிலி பி. பி. ஸி. யில் பேசியது).

### ஜெர்மனியில் பொதுஜனங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் தடை.

அச்சுநாட்டிலுள்ள ஜனங்கள் சொந்தமாக ஒருவித அபிப்பிராயத்தையும் ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது. அதன்படி நடக்கவும்கூடாது. ஆனால் அரசாங்கத்தார் சொல்படிதான் நடக்கவேண்டும். முக்கியமாக ஜெர்மனியில் இந்த நிர்ப்பந்தம் ரொம்ப ஜாஸ்தி. ஹிட்லர் ஒருவன் சொல்லுகிறபடி மற்ற யாவரும் ஆடவேண்டும். மற்றவர்கள் யாவருக்கும் கட்டுப்பாடுகள் ஜாஸ்தி. அரசாங்க முறைகளைப்பற்றி ஒருவரும் குற்றம்குறை சொல்லக்கூடாது. அப்படி யாராவது சொன்னால் தண்டிக்கப்படுவார்கள். அச்சுநாடுகளில் உள்ள பத்திரிகைகள் யாவும் அரசாங்கத்தின் இஷ்டப்படிதான் சமாசாரங்களைப் பிரசுரிக்கவேண்டும். பொதுவாக யுத்த சமயத்தில் ராணுவ சம்பந்தமான சமாசாரங்களையே பத்திரிகைகள் அச்சிடக்கூடாது என்று சொல்லுவது சகஜம். எதிரிக்கு நுட்பங்கள் தெரியாமலிருக்கும் பொருட்டே இவ்விதம் செய்யப்படுகிறது. ஆனால் அச்சுநாடுகளில் இந்த நிபந்தனை மிகவும் அதிகம். அரசாங்கத் தலைமை அதிகாரிகள் சைனியங்களை அடக்கி வைத்துக்கொண்டு தங்கள் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளுவதுபோல் பத்திரிகைகளையும் அரசாங்கத்தினர் அடக்கி வைத்துக்கொண்டிருக்கின்றனர். பத்திரிகைகளை இவ்விதமாக கட்டுப்படுத்திய பிறகு பொதுமக்களும் அரசாங்கத்தைப்பற்றி குறை சொல்லக்கூடாது. எவ்வளவு தைரியம் பெற்றவனானாலும் பஹிரங்கமாகப் பேசமுடியாது. ஆகவே அரசாங்கத்தார் செய்வதெல்லாம் சரிதானென்றும், அது சரியானாலும் பிசகானாலும் மற்றவர்கள் கொண்டாட வேண்டியதாயும் ஆகிவிட்டது.

### ஜனப்பிரதிநிதி சபைகளுக்கு அக்கரைக் குறைவு.

ஜனநாயக ஆட்சிகளில் இவ்வாறு இருக்கமுடியாது. மந்திரிகளுக்கும் ஜனங்களுக்கும் நேருக்குநேர் சம்பந்தம் சில சமயங்களில்தான் ஏற்படும். அந்த சமயங்களில் மந்திரிகளுக்கு அதிகத் தொந்தரவாகத்தானிருக்கும். ஏனென்றால் அரசாங்க வேலைகள் எவ்வளவு அதிகம் இருந்தாலும் அவ்வப்போது பொது ஜனங்களுக்கு முன்பாக ஆஜராகி அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் பதில் கூறவேண்டும். ஆனால் பொதுஜனங்கள் கேட்கும் எல்லாக்கேள்விகளுக்கும் பதிலுரைத்தால் அதிக தீங்கு விளைந்தாலும் விளையும். பொதுமக்கள் விடமாட்டார்கள். இதுதான் ஜனநாயகத்தின் தன்மை. ஒரு ஆபத்தான நிலையில் பத்திரிகைகள் ஒரு பீதியைக் கிளப்பி பொதுமக்களுக்குக்



கலக்கத்தைச் செய்துவிடும். இதற்கு அரசாங்கத்தார் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டால் எதிரிக்குச் சாதகமாகப் போய்முடியும். ஆகவே மௌனம் சாதித்துவிடுவார்கள். இவ்வித நிலைமைகள் அரசாங்கத்தை நடத்துவோருக்கு ஏற்படுவது சகஜம். பத்திரிகை ஸ்வதந்திரத்தை ஒழித்தால் கூட நலமாகுமென்றும் நினைப்பார்கள். ஆனால் அவ்விதம் செய்வதில்லை. மேலும் பத்திரிகைகளில் பிரசுரமாகும் சில வியாசங்களும், சட்ட சபைகளில் கேட்கப்படும் கேள்விகளும் சில சமயங்களில் சைனியத் தலைவர்களுக்கு அதிக இடைஞ்சலைச் செய்யும்படியாகவும் இருக்கின்றன. அதற்காக ஜனநாயகத்தினால் ஏற்பட்ட ஸ்வதந்திரத்தைப் பிடுங்கிவிட்டால் நலமாகும் என்றும், அச்சுநாட்டில் இவ்வித கஷ்டங்கள் இல்லாமல் அரசாங்கத்தாரின் இஷ்டப்படி நடந்துகொள்ளுவது ஒரு சிலாக்கியமான அம்சம் என்றும் நமது ராணுவத் தலைவர்கள் நினைத்ததுண்டு. இதைத்தவிர பிரிடனில் சில கூட்டத்தினர் இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக சில பத்திரிகைகளும் இருக்கின்றன. இவர்கள், பிரிடனில் பொதுமக்களின் குறைகூவல் அதிகமிருப்பதாயும், அது கோளாறு, இது தவறு என்று அரசாங்கத்தை நிந்திப்பது அதிகமிருப்பதாயும், சொல்லியிருக்கிறார்கள். பொதுஜனங்கள் வாயை மூடிக்கொண்டு, அக்கரைகளை அரசாங்கத்தாருக்கே ஏன் விட்டுவிடக்கூடாது. நாம் அம்மாதிரி இருப்பதில்லை. ‘காரிய காரணங்களை விசாரிக்காதே’ என்று பொதுமக்களைப்பார்த்து ஜனநாயக ஆட்சியுள்ள நாடுகளில் தலைவர்கள் ஒருநாளும் சொல்லமாட்டார்கள். ஏனென்றால் இவ்வித ஸ்வதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ளவேதான் நாம் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக நினைத்துவருகிறோம். இதுவரை, பொதுமக்களுக்குள்ள ஸ்வதந்திரத்தால் மந்திரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் ஏற்படும் சிரமங்களைச் சொன்னேன். பத்திரிகைகள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஸ்வதந்திரத்தை கொஞ்சம் விஸ்தாரப்படுத்திக் கொண்டு பொறுப்பில்லாமல் பேசிவருகின்றன. இவர்கள் கேட்கும்கேள்விகளுக்கு மந்திரிகள் பதில் சொல்லும்படி ஏற்படுகிறது. அதனால் அவர்களுக்கு அதிக சிரமமும் காலதாமதமும் ஏற்படுகிறது. அப்படி சிரமத்தைப் பாராட்டாமல் பதில் சொன்னால் அது எதிரிக்குச் சாதகமாக இருக்கும். ஆனால் ஜனங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யாமல் யுத்தத்தை நடத்துவதும் ஜனநாயக ஆட்சியின் கொள்கைகளைத் தழுவுவதாக ஆகாது. ஜனங்களும் அரசாங்கத்தின் முறைகளைக் கண்டிக்க வேண்டியதும் அவசியம் தான்.

### பத்திரிகை ஸ்வதந்திரத்தினாலும் பார்லிமெண்ட் சபையினாலும் ஏற்படக்கூடிய நன்மைகள்.

இதுவரை பத்திரிகை ஸ்வதந்திரத்தினால் ஏற்படக்கூடிய குறைகளை எடுத்துச் சொன்னேன். ஆனால் இவ்வளவும் சில சந்தர்ப்பத்தில் நன்மையையே செய்யும். வருங்காலத்திலும் போகப்போக ஒரு சாதகமான அம்சமென்றே சொல்லலாம். ஜெர்மனியிலும், ஜப்பானிலும் திடீரென்று பொதுஜனங்களின் ஸ்வதந்திரங்களைப் பிடுங்குவது அரசாங்கத்தாருக்கு சுலபம். ஏனென்றால் அரசாங்கம் ராணுவ அதிகாரிகள் வசத்தில் இருக்கிறது. அங்குள்ள ராணுவ அதிகாரிகளுக்கு உட்பட்டுத்தான் மற்றவர்கள் இருக்கவேண்டும். மேலும் அரசியல் திட்டங்கள் எல்லாம் ரகசியமானவை. அவைகளைப்பற்றி பொதுவாக ஒருவித சர்ச்சையும் செய்யக்கூடாது. இவ்வித பந்தோபஸ்துடன் தங்களுக்கு இஷ்டமான திட்டங்களைப் போட்டுக்கொண்டு ராணுவ அதிகாரிகள் சண்டையை நடத்திய காரணத்தினால்தான் ஆரம்பத்தில் சில வெற்றிகளையும் அச்சுநாட்டினர் அடைந்தார்கள். தாராதரமில்லாத கொடுமை முதலியவைகளும் அவர்களால் கையாளப்படுகின்றன. இவ்வளவு அதிகாரங்களையும் அரசாங்கத்தாருக்கு நாம் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். அதனால் ஏற்படும் கெடுதி மிகஜாஸ்தி. அரசாங்கத்தினர் செய்யும் தவறுதல்களைத் திருத்திக் கொள்ள சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். இரண்டாவதாக யுத்தத்திற்காக மந்திரிகள் தன்னிஷ்டப்படி ஆட்களைப் பொருக்கியெடுத்தாலும் அதிக சாமர்த்தியம் இல்லாதவர்களையும் சேர்த்திருக்கலாம். யுத்தத்தில் சேராதம் பொதுமக்களில் சிலர் யுத்தம் நடக்கும் பிரதேசத்தைக் குறித்து சரி

யான தகவல்களைத் தெரிந்துகொண்டவர்களாகவே இருப்பார்கள். இவர்களுக்குத் தங்கள் அபிப்பிராயங்களை வெளியே சொல்லுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். இவ்விதம் பஹிரங்கமாக விஷயங்களைப் பிரகடனம் செய்யாமல் போனால் தனித்தனியான பகுதிகளில், அரசாங்கத்தாருடன் நெருங்கிப் பழகமுடியாமல், யுத்த சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு விஷயமே ஒன்றும் தெரியாமல் மூடர்களாகிவிடுவார்கள். சிறு தவறுதல்கள் நேராமல் அரசாங்கத்தினர் பார்த்துக்கொண்டாலும் முக்கிய விஷயங்களில் தவறிவிடலாம். ஆனால் பிரிடிஷ் மக்கள் முக்கிய விஷயங்களில் தவறுதல் ஏற்படாமல் பார்த்துக்கொண்டு வருகின்றனர். நாஸிகளின் பிரசாரமெல்லாம் சரியான பழக்கமுள்ளவர்களால் நடத்தப்பட்டு வருகிறதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் எனக்கு அவ்வளவு பழக்கமில்லாத போனாலும் நாஸிப் பிரசாரத்தில் காணப்படும் தவறுதல்களை என்னால் எடுத்துக்காண்பிக்க முடியும். பொதுஜன அபிப்பிராயங்களைச் செவிகொடுத்துக் கேளாமல் ராணுவ அதிகாரிகள் இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் மேலும் மேலும் அதிகமான ஆபத்தான நிலைகளுக்குட்பட்டு தோல்வியடையும்படி நேரலாம். தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ள, வீண் பொருமைகொண்டு ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொல்லவேண்டி வரும். ஜனநாயகத்தின் தலைமை வகித்து யுத்தத்தை நடத்துகிறவன் இப்படியெல்லாம் இருக்கமுடியாது. பொதுஜனங்களின் வார்த்தைக்கு மதிப்புக்கொடுத்து நடந்துகொண்டால் தலைவிரி கோலமாக இல்லாமல் திட்டப்படி காரியங்களைச் செய்யமுடியும்.

### ஹிட்லரின் வார்த்தைகள்.

ஆனால் ஹிட்லர் சொல்லிவரும் வார்த்தைகளைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அவனுக்குட்பட்டு எவ்வளவோ ஜனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்களைப்போல் நானும் ஒருவனாக ஆக விரும்பவில்லை. ஏதோ ஹிட்லரின் மனதில் தோன்றுவதுதான் சரியானதென்றும், அதன்படி மற்றவர்கள் நடக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. அவன் சொல்லுவதை அவனாலேயே நிரூபிக்கமுடியாதபோது அவன் சொல்லுவதை நாம் எவ்விதம் அங்கீகரிக்க முடியும். ரகசியப் போலீஸ்காரர்களை ஏவத்துப் பொதுஜனங்களை எவ்வளவு நிர்ப்பந்தப்படுத்தினாலும் கொடுங்கோல் செலுத்துபவன் பொதுமக்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ள முடியாது. ஆனால் ஜனநாயகத்தின் தலைவன் தெரிந்துகொள்ளலாம். பொதுஜனங்களின் விருப்பப்படிதான் ஜனநாயகத் தலைவன் நடந்துகொள்ள முடியும். பொதுஜனங்களை அடக்க அடக்க கொடுங்கோல் மன்னர்களின் அழிவு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும். ஏனென்றால் கொடுங்கோல் அரசர்களுக்கு முன்பாக தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களைச் சொல்லாமல், பொதுமக்கள் தனிமையில் விரோதத்தையே விருத்தி செய்துகொள்ளுகிறார்கள். உதாரணமாக ஹிட்லர் ஒரு பிசகு செய்தால் ஒருவரும் அவனிடம் போய் தைரியமாகத் தெரியப்படுத்தமாட்டார்கள். அவனுக்குப் பக்கத்தில் நெருங்கிப் பழகுகிறவர்கள் மாத்திரம் தப்பு ஸ்தோத்திரம் செய்து காலத்தைக் கழித்து வருவார்கள். ஆகவே தனது மக்கள் தனக்கு உதவி செய்வதாயும், சைனியம் பிரியமாகச் சண்டைசெய்து வருவதாயும் ஹிட்லர் நினைத்து ஏமார்ந்து போவான். அப்படியாராவது அரசாங்கத்தை எதிர்த்தால் அவர்களை உடனே கொலை செய்துவிடுவான். ஆனால் இப்படிச் செய்வது முடிவில் அரசாங்கத்திற்குத் தீங்கைத்தான் விளைவிக்கும். முதலில் போட்ட திட்டங்களின்படி யுத்தத்தை நடத்தி சீக்கிரத்தில் அதிக வெற்றிகள் அடைந்து, ஒவ்வொரு நாடாக ஜயித்துக்கொண்டு வரும்போது எல்லாம் சாதகமாகத்தான் காணப்படும். ஏனென்றால் ஜயித்த நாடுகளிலிருந்து கொள்ளைப் பொருள்கள் ஏராளமாகக் கிடைப்பதால் ஒவ்வொரு நாளும் மிகவும் சந்தோஷமாகவே காணப்படும். அந்த சமயத்தில் அரசாங்கத்தார் செய்வது சரியா, இல்லையா என்று யோசிக்கவே சந்தர்ப்பம் இருக்காது.

### திட்டங்கள் தவறினால்.

ஆனால் போட்ட திட்டங்கள் தவறிவிட்டாலும், வெற்றிகள் அடைய முடியாதபோனாலும், ஜனங்களுக்கு அரசாங்கத்தினிடத்தில் சந்தேகம் தட்டிவிடும். தைரியம் குன்றிவிடும். தோல்வியடைவதற்கு மனம் வராது. ஆனால் எல்லாம் திட்டப்படி இருக்கிறதாக மட்டில் அரசாங்கத்தார் சொல்லி வருவார்கள். தாங்கள் செய்த தவறுதல்களை அரசாங்கத்தார் வெளிப்படையாகச் சொல்லவும் மாட்டார்கள். கஷ்ட நிலைமை வந்திருப்பதாகமட்டில் சூசனை செய்யப்படும். இன்ன மாதிரியான தவறு ஏற்பட்டிருக்கிறதென்று சர்ச்சை செய்யவே பொதுமக்களுக்குத் தெரியாமல் போய்விடும். அப்போதுதான் ஜனநாயக ஆட்சியிலுள்ளவர்களைக் காட்டிலும் தாழ்ந்த நிலைமை வந்திருப்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளுவார்கள். ஏனென்றால் தக்க சமயங்களில் அரசாங்கத்தாருக்குத் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்லியும், அரசாங்கத்தாரிடமிருந்து யுத்த நிலைமைகளைத் தெரிந்துகொள்ளுவதாலும் ஜனநாயகத்திலுள்ளோருக்குக் கவலையே கிடையாது. ஆகவே அச்சுநாட்டுத் திட்டங்களின்படி வரவர பொதுமக்களின் உதவி மட்டுப்படும். தோல்வியேற்பட்டால் அரசாங்கத்தை பொதுஜனங்கள் நிச்சயம் எதிர்ப்பார்கள். ஜனங்களுக்கும் ஆபத்து ஏற்படும். ஏனென்றால் அதுவரையில் ஒருவித சௌகரியங்களும், ஸ்வதந்திரமும் இல்லாமல் கட்டுப்பட்டுக்கிடந்ததால் கலவரம் ஏற்படுவதற்குக் காரணம் உண்டு. ஆகவே பொதுஜனங்களின் ஸ்வதந்திரத்தைப் பிடுங்கிவிட்டால் இவ்வளவு கஷ்டங்களும் நேரும். வெற்றி கிடைக்கும் வரையில் சுகம்தான். பிற்பாடு எல்லாம் தலைகீழாக மாறிவிடும். பொதுஜனங்களைப் பாடுபடும்படிக்கும் பட்டினி கிடந்து அரசாங்கத்தாருக்காக பிராணனைக்கூட விடும்படிக்கும் சொல்லும்போது, தங்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லுவதற்கு பொதுமக்களுக்குச் சந்தர்ப்பம் இல்லாவிட்டால் அதிகக் கெடுதியல்லவா. இனிமேல் ஹிட்லர் இவ்வாறெல்லாம் நடந்துகொள்ள முடியாது.



---

## நேசதேசத்தார்களின் திட்டங்களின் அபிவிருத்தியில் நான்கு கட்டங்கள்.

## பிரான்ஸ் தோல்வியடைந்ததிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம்.

## பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள நேசதேச நாடுகளுக்குள் ஏற்பட்ட ஐக்கிய பத்தியம்.

## வாஷிங்டன் ஒப்பந்தங்களின் கருத்து என்ன?

(ராபர்ட் பிரேஸர் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது).

சென்ற டிஸம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்தே இந்த உலக யுத்தம் ஒரு புதிய பிரதேசத்திலும் பரவிற்று. அப்பொழுதே பஸிபிக் சமுத்திரத்தில் ஏற்படக்கூடிய யுத்தத்தை நடத்துவதற்கு புதிய யுத்த சபை ஒன்றை ஸ்தாபிக்க வேண்டியதின் அவசியம் தெரியவந்தது.

சர்ச்சில் இந்த உத்தேசத்தைக்கொண்டே யுனைடெட் ஸ்டேட்ஸின் ஜனாதிபதியுடன் கலந்து புதிய யுத்த சபை ஒன்றை நிர்மாணிக்கவே அமெரிக்காவுக்குச் சென்றார். யுத்தத்தை நடத்த நேசதேசத்தார்கள் பரஸ்பரம் ஒத்துழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சில இடங்களில் செய்வதற்கு ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் ஒப்புக்கொண்டார்கள். அத்தகைய ஏற்பாடுகளை இன்னும் பல இடங்களில் செய்யலாம் என்றும் யோஜித்திருக்கிறார்கள். ஆனால் போலந்திலுள்ள ஒரு விமான நிலயத்தில் ஜெர்மானியர்கள் முதல் வெடிகுண்டு போட்டதின் பயனாக இவ்வுலக யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து நேசதேசத்தார்கள் சேர்ந்து திட்டங்கள் போட ஆரம்பமாகி அபிவிருத்தியடைந்து வந்திருக்கின்றன.

இவ்விதம் நேசதேசத்தார்களின் யுத்த ஒத்துழைப்பு அபிவிருத்தியை நான்கு கட்டங்களாகப் பிரித்துச் சொல்லலாம். யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து 1940-ம் வருஷ ஜூன் மாதம் வரை அதின் முதல் பாகம். அப்பொழுது அமெரிக்கா,

ருஷ்யா, சைனா இவை பிரிடனுக்கு நேசநாடுகளாக ஆகவில்லை. அப்பொழுது பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்குப் பிரான்ஸ் மட்டில்தான் நேசநாடாக இருந்தது. அது சமயம் ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரர்களும் மட்டும் சேர்ந்து ஒத்துழைத்து திட்டம் போட்டார்கள். அந்தக்காலத்தை நாம் பிரெஞ்சுக்காரர்கள் ஒத்துழைத்த காலம் என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

## முதல் கட்டம்—பிரான்ஸில் யுத்தம்.

இந்தக் காலத்தில் கிரேட் பிரிடனும், பிரான்ஸூம் சேர்ந்துகொண்டு ஒத்துழைத்தன. போரரங்கத்தில் இவ்விரு நேசதேசப்படைகளுக்கும் பிரதம தளகர்த்தராக இருந்தவர் ஒரு பிரெஞ்சுக்காரர். யுத்தம் ஆரம்பித்து பத்து வாரங்களுக்குள் நேசதேசங்களின் பிரதம யுத்த சபை பிரான்ஸிலும் பிரிடனிலும் உள்ள பொருளாதாரங்களை யுத்தத்திற்கு உபயோகப்படுத்தும்படி ஏற்பாடுகள் செய்துவிட்டது. இப்பொழுது வாஷிங்டனில் ஏற்பட்ட ஒப்பந்தம் அப்பொழுதும் தங்கள் தங்களுடைய யுத்த தளவாடங்கள், கப்பல்கள் மற்றுமுள்ள விளைவு பொருள்கள் இவையாவையும் ஒன்று சேர்த்து உபயோகித்துக் கொள்வதாக பிரான்ஸூம் பிரிடனும் ஒப்பந்தம் செய்துகொண்டன.

இவ்விதம் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு டிஸம்பர் மாத நடுவில் இரண்டு சாம்ராஜ்யங்களுக்கும் ஒரே விதமான நாணயம் செலாமணி ஆகக்கூடிய ஏற்பாடுகளும், கடன் கொடுத்து, கடன் வாங்கிக்கொள்வதற்கு ஏற்பாடுகளும் செய்து கொள்ளப்பட்டன. இதற்குச் சில மாதங்கள் கிரமித்து கைத்தொழில் சம்பந்தமாக ஒப்பந்தமும் ஏற்பட்டது.

இவ்விருதேசங்களும் சேர்ந்து ஒத்துழைப்பதற்கு மேற்சொல்லிய ஏற்பாடுகளின் உன்னத நிலை ஜூன் மாதம் 16-ம் தேதியில் ஏற்பட்டது. இரு தேசத்தார்களும் ஒரே தேசத்தார்போல் பாவித்துக்கொண்டு பொதுவான ராணுவ ஸ்தாபனங்கள், அயல் நாட்டுக் கொள்கையிலும், பொருளாதாரக் கொள்கையிலும் பொது ஸ்தாபனங்கள், இருதேசத்திலும் இருதேசத்தார்களுக்கும் சம உரிமை, ஒரே யுத்த சபை இவைகளையும் அமைத்துக்கொண்டு யுத்தத்தை நடத்துவோம் என்று பிரிடிஷ்காரர்கள் பிரெஞ்சுக்காரர்களை அப்பொழுது அழைத்தார்கள். இத்தகைய ஏற்பாடுகள் எல்லாம் சரித்திரப் பிரசித்திபெற்றதாக இருந்தும் ஒரு விதபயனும் கொடுக்கவில்லை. இதிலிருந்து வெறும் திட்டங்களை ஏற்படுத்துவது மட்டில் பிரயோசனத்தைக் கொடுக்காது என்று தெரிந்துவிட்டது.

இவற்றினால் நாம் தெரிந்துகொள்ளக் கூடியது என்னவென்றால் பொதுவாக சபைகளைக்கூட்டி, திட்டங்கள் போடுவதாய் மட்டிலிருந்தால் ஒரு பயனும் கிடைக்காது. தைரியத்திலும், மனப்பூர்வமான எண்ணத்திலும், மன உறுதி கொள்வதிலும் இருதேசத்தார்களுக்கும் ஒற்றுமை ஏற்பட்டிருந்தால்தான் ஆலோசனை சபைகளிலும், கமிட்டிகளிலும் பயன்தரக்கூடிய விதமாக ஒற்றுமையை உண்டாக்கமுடியும். கடிதாசியில் மட்டில் ஒற்றுமை என்று எழுதிக்கொண்டால் போதாது. மனப்பூர்வமாக ஒற்றுமை இருக்கவேண்டும்.

## இரண்டாவது கட்டம்—அட்லாண்டிக் யுத்தம்.

பிரான்ஸ் தோற்கடிக்கப்பட்டதிலிருந்து நேசதேசத்தார்களின் யுத்த திட்டங்களில் இரண்டாவது கட்டம் ஆரம்பமாயிற்று. அது 1940-ஆம் ஜூன் முதல் ருஷ்யா யுத்தத்தில் சேர்ந்த 1941-ஆம் ஜூன் வரை நீடித்திருந்தது. இந்தக் காலத்தில் தான் அட்லாண்டிக்கில் யுத்தம் நடந்தது. இந்த வருஷத்தில் நேசதேசத்தார்களின் பிரதானமான நோக்கம் பிரிடனை அசைக்க முடியாத கோட்டையாக வைத்துத் தற்காப்பு செய்வதற்காகத்தான். அந்த காலத்தில் பிரிடன் பேரில் யுத்தமும், அட்லாண்டிக் சமுத்திரத்தில் யுத்தமும் ஏற்பட்டன.

இது மட்டுமல்ல. இதுவரை நடுநிலைமை வகித்துவந்த அமெரிக்கா தேசம் குத்தகைக் கடன் மசோதாப்படி பிரிடனுக்கு யுத்த தளவாடங்கள் அனுப்ப ஆரம்பித்தது. அத்துடன் அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள கப்பற்படை தளங்களை அமெரிக்கா கைவசப்படுத்திக்கொண்டது. அங்கிருந்து அவைகளைத் தாக்காமல்



அமெரிக்கக் கப்பற்படை சாமான் கப்பல்களைப் பாதுகாத்துவந்தது. அந்தக் காலத்தில் பிரிடன் தற்காப்பு செய்ததில் வெற்றியடைந்தது. அந்தக் காலத்தில் யுத்த சூழ்ச்சியில் சிக்கலான பிரச்னைகள் ஒன்றும் ஏற்படவில்லை. அதனால் இந்த சந்தர்ப்பத்தில் யுத்தம் நடத்த திட்டம் போட்டதில் நூதன முறைகளைக்கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் நேரிடவில்லை.

அப்பொழுது இன்னும் சில சம்பவங்களும் ஏற்பட்டன. 1941ம்-ஆம் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் பிரதிநிதியாக பிரிடனிலுள்ள விஷயங்களைக் கவனிக்க லண்டன் நகருக்கு மிஸ்ட்டர் ஹாப்கின்ஸ் வந்தார். அதே சமயத்தில் அவர் விஜயம் செய்ததின் பயனாக அமெரிக்காவிலிருந்து பிரிடனுக்கு ஸப்ளைகள் அனுப்புவதற்கு வட அமெரிக்காவில் அதேமாதத்தில் ஒருசபை அமைக்கப்பட்டது. பிற்பட்டு மார்ச்சு மாதத்தில் அமெரிக்கா பிரிடனுக்குக் கப்பல்கள், உணவு பொருள்கள் அனுப்புவது சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை அறிந்துவர இரண்டு பிரிடிஷ் தூதுகோஷ்டிகள் யுனைடெட் ஸ்டேட்ஸூக்கு அனுப்பப்பட்டன. அதேசமயத்தில் பிரிடனுக்கு அமெரிக்காவிலிருந்து யுத்தப்பொருள்கள் ஸப்ளை செய்வதைப்பற்றி விவரங்கள் தெரிந்துபோக, ஜனாதிபதி ரூஸ்வெல்டின் பிரதிநிதியாக மிஸ்ட்டர் ஹாரிமன் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். அமெரிக்கா நம்முடன் நேசநாடாக சேராததினால் பெரிய நிர்வாக யுத்தக் கமிட்டிகள் அப்பொழுது ஏற்பட சம்பாவிதமில்லை.

## ருஷ்யாவிற்கு உதவி—ருஷ்ய யுத்தம்.

ருஷ்யாவின் பேரில் ஜெர்மனி 1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில் படையெடுத்தது. அப்பொழுதுதான் நேசதேசத்தார்களின் திட்டத்தில் மூன்றாவது கட்டம் ஆரம்பம். ருஷ்யா யுத்தம் ஆரம்பித்த தினத்திலேயே கிரேட் பிரிடன் ருஷ்யாவிற்கு தன்னால் முடிந்த உதவியைச் செய்வதாக வாக்குறுதி செய்தது. அதற்கு மறுநாளே அமெரிக்கா உதவி செய்வதாக வாக்குறுதி செய்தது. அதற்கும் மறுநாள் பிரிடிஷ் குடியேற்ற நாடுகளும் தாங்களும் உதவி செய்வதற்கு ஒப்புக்கொண்டன. அதே தினத்தில் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் மாஸ்கோவிற்கு ராணுவ தூதுகோஷ்டி ஒன்றையும், யுத்தப் பொருள்கள் அனுப்பும் விஷயமாக மற்றொரு தூதுகோஷ்டியையும் அனுப்புவதாக அறிவித்தது.

பிற்பட்டு ஜூலைக் கடாசியில் அமெரிக்கப் பிரதிநிதி ஹாப்கின்ஸூம், ஸ்டாலினும், மாஸ்கோவில் சந்தித்து யுத்தத்தில் ருஷ்யாவுக்கு அமெரிக்கா உதவியளிப்பதைப் பற்றி கலந்து பேசிக்கொண்டார்கள். அதன் பயனாக ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி இருதேசத்தார்களுக்கும் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. பிற்பட்டு அந்த மாதத்திலேயே வியாபார சம்பந்தமாகவும், பொருளாதார சம்பந்தமாகவும், கிரேட் பிரிடனும், ருஷ்யாவும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டன. அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் ஸ்டாலின், ஹாரிமான், பீவர் புருக் இவர்கள் மூவரும் மாஸ்கோவில் கூடி, யுத்தப் பொருள்கள் ருஷ்யாவுக்கு அனுப்பும் விஷயமாக சம்பாஷித்தார்கள். அதன் பயனாக குத்தகைக் கடன் நிபந்தனைகள்படி ருஷ்யாவிற்கு யுத்தப் பொருள்கள் அனுப்புவதாக பிரிடனும், அமெரிக்காவும் ஒத்துக்கொண்டன.

இந்த மூன்று கட்டங்களிலும், பிரான்ஸிலும், பிற்பட்டு அட்லாண்டிக் சமுத்திரத்திலும், ருஷ்யாவிலும் யுத்தம் ஏற்பட்டபொழுது பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள எல்லா நாடுகளும் இந்த யுத்தத்தில் பிரிடனுடன் பூர்ணமாக ஒத்துழைத்தன. அவைகள் கடாசி வரையில் ஒத்துழைப்பார்கள். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகள் ஒத்துழைப்பதற்கு வழக்கமாக உள்ள முறைகள் கையாளப்பட்டன. அத்துடன் 1941-ம் வருஷம் வசந்த காலத்தில் ஆஸ்திரேலியா பிரதம மந்திரியும், கோடை காலத்தில் நியூஸீலாந்து பிரதம மந்திரியும், ஆகஸ்டு மாதத்தில் கனடாவின் மந்திரியும் இங்கிலாந்துக்கு வந்தார்கள். யுத்த சபையின் கூட்டங்களிலும் அவர்கள் வந்திருந்தார்கள்.

## நாலாவது கட்டம்—புதிய உலக அமைப்பு திட்டங்கள்.

1941-ம் வருஷம் டிஸம்பர் மாதம் முதல் இந்த திட்டத்தில் நாலாவது கட்டம் ஆரம்பம். அது முதல் யுத்தம் உலக யுத்தமாக ஆகிவிட்டது. இந்த

யுத்தம் முடிந்த பிறகு உலகத்தார்கள் வரும் காலத்தில் என்ன விதமாக இருக்க வேண்டுமென்ற பிரச்னை ஏற்படுவதினாலும், யுத்தம் உலகம் பூராவும் வியாபித்திருப்பதாலும் இதை 'உலக யுத்தம்' என்று சொல்லப்படுகிறது. ஆதலால் இப்பொழுது போட்டிருக்கும் திட்டத்திற்கு 'உலக அமைப்பு திட்டம்' என்பதைத் தவிர வேறுபேர் சொல்லமுடியாது. மிஸ்டர் ஈடன், ருஷ்யத் தலைவர் ஸ்டாலினை மாஸ்கோவில் சந்தித்தார். தளகர்த்தர் வேவல் சுங்கிங்கில் தளகர்த்தர் சியாங்கை ஷேக்கை சந்தித்தார். அதே சமயத்தில் மிஸ்டர் சர்ச்சிலும் அமெரிக்கா ஜனாதிபதியுடன் முக்கிய விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்ய வாஷிங்டனுக்குச் சென்றார்.

இந்த மூன்று முக்கிய சந்திப்புகளினால் தென்மேற்கு பஸிபிக் பிராந்தியத்தில் நேசதேசப்படைகள், எல்லாவற்றிற்கும் ஸர்வ ராணுவ அதிகாரியாக தளகர்த்தர் வேவல் நியமிக்கப்பட்டார். அடுத்த படியாக யுனைடெட் ஸ்டேட்ஸின் அதிகாரத்தின் கீழ் ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து பிராந்தியத்தை வைக்கப்பட்டது. அப்பிராந்தியத்திலிருக்கும் ஸர்வதேச சைனியங்களுக்குப்பொதுவாகத் தலைவர்கள் வாஷிங்டனில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது சமயம் பஸிபிக் யுத்த சபை ஒன்றை ஏற்படுத்த எத்தனம் நடந்தது. யுத்த மந்திரி சபையில் குடியேற்ற நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் அனுப்பிக்கவும் ஏற்பாடாயிற்று. யுத்தத்திற்காக வெடிமருந்து கப்பல்கள், யுத்தப்பொருள்கள் இவை சம்பந்தமாக மூன்று பொது இலாகாக்கள் ஏற்படுத்தப்பட்டன, வாஷிங்டனில் இவ்விதம் ஏற்பட்ட புதிதான திட்டங்களினால் உலகம் பூராவும் ஐக்கிய பத்தியம் ஏற்பட்டது. அதனால் நேசதேசத்தார்கள் ஒன்று சேர்ந்து யுத்தத்தில் ஜயம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்வார்கள்.

இவ்விதம் நேசதேசங்களுக்குள் ஏற்பட்ட ஐக்கிய பத்தியம் இந்த யுத்தம் ஆரம்பகாலம் முதற்கொண்டே இருந்துவந்தது. ஆனால் வாஷிங்டனில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் முடிவைக் காட்டமாட்டா. இன்னும் ஏற்படக்கூடியது பல இருக்கின்றன. ஒவ்வொரு தடவையிலும் யுத்தப்போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குத் தகுந்தபடி யுத்த சபையில் மாறுதலும் யுத்த முறையில் நடந்து வந்திருக்கின்றன. இவ்யுத்தத்தில் முடிவான வெற்றி ஏற்பட்ட தினத்திலும் திட்டங்கள்போடுவதை நிறுத்தாமல், அதற்கு மேல் உலக அமைதி ஏற்படுவதற்கும் நாம் திட்டங்கள் போடவேண்டிருக்கும்.

---

# அமெரிக்க பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

## 1942-ம் வருஷத்தில் சாமான்களின் உற்பத்தி.

நியூ யார்க் டைம்ஸ், ஜனவரி 23.—உற்பத்தி இலாகா அறிவித்ததாவது:— "இந்த யுத்தத்தில் பிரான்ஸ் விழுந்த பிறகு 18 மாதகாலத்தில் தயாரிக்கப்பட்ட யுத்த தளவாடங்களைக் காட்டிலும் மூன்றுபங்கு அதிகமாக 1942-ம் வருஷத்தில் மாத்திரம் தயார் செய்ய முடியும். மேலும் 1939-ம் வருஷத்தில் யுத்தம் ஆரம்பிக்கும் வரை ஜெர்மனியில் எவ்வளவு டாங்கிகள், விமானங்கள் தயாரிக்கப்பட்டனவோ அவ்வளவு 1942-ல் மட்டில் நம்மால் தயாரிக்கமுடியும். யுத்தத்தின் வருஷச் செலவு 2 லக்ஷம் கோடி டாலரிலிருந்து 20 லக்ஷம் கோடிக்கு அதிகரித்துவிட்டது. டாங்கிகளும், இதர வண்டிகளும் ஒரு வருஷத்திற்கு முன்னிருந்ததைவிட மூன்று மடங்குக்கு அதிகமாவே உற்பத்தி செய்யப்படுகின்றன. எல்லாவிதமான பிரங்கிகளும் ஐந்து மடங்கதிகமாகவும், யுத்த தளவாடங்கள் ஒன்பது மடங்கதிகமாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. பிரிடனும் அமெரிக்காவும் தயாரிக்கும் சண்டை விமானங்கள் அச்சுநாடுகளின் உற்பத்தியைக் காட்டிலும் அதிகரித்துவிடும். இவைகளுக்குச் சாதகமாக நமது உற்பத்தியை அதிகரிக்கப் போதுமான யந்திர ஸாதனங்கள் நமது வசத்தில இருக்கின்றன. இவைகளைக் கொண்டு உலகத்தில் எல்லா பாகத்திலும் விமான ஆதிக்கத்தைப் பெற்றுவிடலாம். 1942-ம் வருஷ ஆரம்பத்தில் அமெரிக்கக் கப்பற்படை,



தனியாக நின்று யுத்தம் செய்ய வல்லமை வாய்ந்திருந்தது. அட்லாண்டிக்கில் ஜெர்மனியுடனும், பஸிபிக்கில் ஜப்பானுடனும், மத்தியதரைக்கடலில் இதாலியுடனும் சண்டைபோட்டு வந்தது. மேலும் அமெரிக்கா பக்கமே எட்டிப்பார்க்காதபடி ஜப்பானிய யுத்தக் கப்பல்களைத் தடுத்தும் வந்தது. மத்திய தென் அமெரிக்காவின் கிழக்குப் பக்கத்திலுள்ள துறைமுகங்களுக்குப் போகக்கூடிய கடல் மார்க்கங்களில் ஜெர்மன் கப்பல்களின் தொந்திரவில்லாமலும் செய்தன.

## ஜப்பானுக்கு வசப்பட்டவர்களைத் தூண்டிவிடுதல்.

வாஷிங்டன் போஸ்ட், ஜனவரி 22.—ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகளிலுள்ளவர்களை ஒன்று சேர்த்து ஜெர்மனிக்கு எதிராக நிற்கும்படி நேசதேசத்தார்கள் தூண்டிவிட்ட விஷயம் யாவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் கொரியாவில் சுமார் 2,50,00,000 பேர்களை ஜப்பானியர்கள் அக்கிரமமாக நடத்தியதற்காக, ஜப்பானிய சாம்ராஜ்யத்தில் கொரியர்களை ஜப்பானியர்களுக்கு எதிர்த்து நிற்கும்படி தூண்டப்பட்ட விஷயம் அநேகமாக ஒருவருக்கும் தெரிந்திருக்காது. ஏதோ ஒரு நாளில் அவர்கள் கிளம்பி தங்கள் எதிரிகளைத் தாக்குவார்கள். ஜப்பானிலுள்ள கொரியர்கள் மட்டிலுமல்ல கொரியாவிலுள்ள மற்ற கொரியர்களும் ஜப்பானுக்கு எதிராக ஐந்தாம் படையினர்களாக ஆகிவிடலாம். ஆகவே கொரியா தீபகற்பம் வரும்காலத்தில் முக்கியத்துவம் பெற்றுவிடும். ஸ்வதந்திரத்திற்காக போராட்டத்தில் அவர்கள் அதிகப் பங்கு எடுத்துக்கொண்டு, அதில் வெற்றியடைவதற்காக தங்கள் உயிரை இழக்கத் தயாராகவும் இருக்கிறார்கள். ஜப்பானிய அரசாங்கத்திற்கு விரோதமாக ரகசிய சூழ்ச்சி செய்யவும் ஈடுபடுவார்கள். மேலும் அவர்களுக்கு ஆயுதங்களையும் கொடுத்துவிட்டால் எதிரி ஆக்கிரமித்த யூகோஸ்லாவியாவில் ஸெர்பியர்கள் செய்ததுபோல், அவர்கள் பின்புறமாக இருந்துகொண்டு எதிரிகளுடன் சண்டையும் புரிவார்கள்.

## கப்பற்படையைக்கொண்டு வெற்றியடையலாம்.

"ஜர்னல் ஆப் காமேர்ஸ்", என்ற பத்திரிகையில் கப்பற்படைத் தலைவர் லாவ்ரீட் எழுதுகிறார், ஜனவரி 19.—யுத்தக் கருவிகளை உற்பத்தி செய்ய அமெரிக்கா தயாராகிவிட்டது. அத்துடன் நாமும் கப்பற்படை ஆதிக்கம் கொண்டவர்களாக ஆகிறோம். இத்துறையில் திகைப்பு அடையக்கூடிய மாறுதல்கள் அநேகம் ஏற்பட்டு வருகிறது. அமெரிக்கா இப்பொழுது நல்ல தினுசுகளாக கோடிக் கணக்கான டன் நிறையுள்ள கப்பல்களைக் கட்டிவருகிறது. அவைகளை நடத்திச் செல்ல பயிற்சி பெற்ற மாலுமிகளும் தயாரித்திருக்கிறது.

அவைகளில் நேசதேசத்தார்களுக்கு உதவிக்காக வேண்டிய, டாங்கிகள், பீரங்கிகள், உணவுப்பொருள்கள் எல்லாவித யுத்தப் பொருள்கள் இவற்றை ஏற்றி அனுப்புகிறது. அடிமையாகாமலும், அவமானமடையாமலும், உயிர்ச் சேதம் நேராமலும் தடைசெய்ய எந்த ஜனங்கள் சண்டை செய்கிறதோ அவைகளுக்கு ஸப்ளைகள் அனுப்புகிறது. 1938-ம் வருஷமுதல் வரவர அதிகரிக்கும் ஊக்கத்துடன் அமெரிக்காவில் கப்பல்கட்டும் கைத்தொழிலும், கப்பற்படை பலமும் எந்த சமயத்திலும் நேரிடக்கூடிய போருக்குத் தயாராகி வந்திருக்கின்றன. 10,000-டன் நிறையுள்ள எஃகு கப்பல்களாய் இருந்தாலும், அஸ்திவாரம் போட்ட மூன்றாவது மாதத்தில் அவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. ஸ்வதந்திரக் கப்பற்படையைச் சேர்ந்த கப்பல்கள், அவைகளின் எல்லைப்புறங்களுக்குத் தேவையான முக்கிய பொருள்களைக்கொண்டுபோய் கொடுத்துவருகின்றன. ஆக்கிரமித்த தேசத்தார்களுக்கு எதிராகத் தற்காப்பு செய்யக் கப்பல்கள் தான் முக்கியமான கருவிகள். அதற்காக ஏராளமான கப்பல்கள் கட்டுவதற்கு இவ்வுலகத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒன்று தான் செய்ய முடியும். கப்பல்களைக் கொண்டு இந்தப் போரை ஜயித்து விடலாம்.

## ஐயர்லாந்தில் அமெரிக்கத் துருப்புகள்.

நியூ யார் டைம்ஸ் பத்திரிகையில் ஆனி மக்கார்மிக் எழுதியது.—ஜனவரி மாதம் 29-ம் தேதி ஐரோப்பாவில் சண்டை செய்ய அமெரிக்காவிலிருந்து முதல் பட்டாளம் வந்தது பிரிடிஷாருக்கு உத்சாகத்தைக் கொடுக்கிறது. சர்ச்சில் அமெரிக்

காவிற்கு போய் வந்ததற்கு அவருக்குப் பெருமையைக் கொடுக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களில் உள்ளவர்களுக்கு தைரியத்தை ஊட்டுகிறது. ருஷ்யாவிற்கு ஏற்பட்ட நம்பிக்கையைப் பலப்படுத்துகிறது. ஆனால் அந்த பட்டாளம் வந்ததற்கு முக்கிய காரணம் இந்த யுத்தம் ஒரு பொழுதும் முடியப் போகிறதில்லை என்றும் எப்பொழுதும் அதிகரித்துவரும் நேசதேசத்தார்களுடன் ஜர்மனிக்கு சண்டை செய்யவேண்டிய அவசியம் நேரிட்டிருக்கிறதென்றும் ஜர்மானியர்களுக்குக் காட்டுவதற்காகத்தான். மின்னஸோடா, வடக்கு டகோடா இவைகளிலிருந்து வந்திருக்கும் போர்வீரர்களுக்கு அவர்களுக்கு எங்கே கொண்டு செல்லப்படுகிறார்கள் என்று தெரியாது. ஆனால் எதற்காக அவர்கள் பிரயாணஞ் செய்கிறார்கள் என்பது தெரியும். "ஹிட்லருடன் எப்பொழுது போர் செய்யப் போகிறோம்," என்று முதல் கேள்வியாகக் கேட்கிறார்கள்.

## அமெரிக்கர்களின் நோக்கத்தை வெளிப்படையாகக் காட்டுகிறார்கள்.

"மியாமி ஹெரால்ட் பத்திரிகை" ஜனவரி 27-ம் உ அமெரிக்காவிலிருந்து சண்டை செய்ய பட்டாளம் ஐயர்லாந்தில் வந்து இறங்கினதாகச் சொல்லக் கேட்டதும், இந்த யுத்தத்தில் அமெரிக்கா எவ்வளவு வேகமாக பங்கு எடுத்து கொள்ளுகிறது என்பது புலப்படுகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸ் வெறும் பேச்சோடு நின்றுவிடவில்லை. அமெரிக்கக் கைத்தொழில் எல்லாவற்றையும் உற்பத்தி செய்யும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. நாம் தொழிற்சாலைகளிலிருந்து வேலை செய்கிறோம். கப்பல் கட்டும் துறைகளிலிருந்து வேலை செய்கிறோம். நமது மனிதர் பலம் பூராவும் பொருக்கிச் சேர்க்கிறோம். பணத்தை நாம் பொருட்படுத்தவில்லை. இந்த இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்காவிலிருந்து சண்டை செய்ய வந்த படையின் முக்கிய நோக்கம் எதுவாய் இருந்தபோதிலும், ஹிட்லர் ஆக்ஷியை அடியோடு அழித்துவிட நாம் கொண்டிருக்கும் கொள்கை இதன் மூலம் வெளியாகிறது.

## பாதிரிகளும், நாஸிக் கொள்கையும்.

கதோலிக் நியூஸ் பத்திரிகை, ஜனவரி 24.—ஜெர்மனியில் நாஸிக் கக்ஷியினர் சுமார் பத்து வருஷங்களாக அமுல் செலுத்திவருகிறார்கள். யுனைடெட் ஸ்டேட்ஸிலோ ஒரு கக்ஷியினர் ஒரு வருஷத்தில் சிலமாதங்களுக்குக்கூட அதிகாரம் செலுத்தமுடியாமல் போய்விடும். இருந்தாலும் பழைய ஜெர்மன் அரசாங்கத்தில் 24,000 பாதிரிகள் இருந்தார்கள். ஆனால் நாஸிக் கக்ஷியில் அனுதாபம் காட்டுகிறவர்கள் 100-க்குக் குறைவாக இருக்கும்.

## விமான என்ஜின்கள் உற்பத்தி.

நியூ யார்க் வேர்ல்ட் டெலிகிராம், பத்திரிகைக்கு கிளாப்பர் எழுதியது.—சென்ற அக்டோபர் மாதத்தில் மட்டில் இங்கிலாந்து பூராவிலும் எவ்வளவு விமான என்ஜின்கள் செய்யப்பட்டதோ அவ்வளவு விமானங்கள் பிராட் அண்டு விட்னி தொழிற்சாலை ஒன்றுமட்டில் உற்பத்தி செய்யமுடியும். இந்தத் தொழிற்சாலையில் செய்யப்படும் என்ஜின்கள் ஜெர்மனி பூராவிலும் செய்யப்படுவதைப் போல பாதியிருக்கும். இவ்விதம் ஏராளமாக விமான என்ஜின்கள் உற்பத்தி செய்யும் யந்திரசாலை அங்கு மற்றொன்று இருக்கிறது. அதற்கு ரைட் (wright) யந்திரசாலை என்று பெயர். இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுவதைப்போல் பாதிமடங்கு அலிஸன் தொழிற்சாலையில் தயாராகிறது. போர்டு தொழிற்சாலையில் இந்தத் தயாரிப்பு அதிகரிக்கிறது. இந்த வருஷக் கடைசியில் பியூக், செவர்லட் தொழிற்சாலைகளிலும் இம்மாதிரி உற்பத்தியாகிவிடும். இங்கிலாந்தில் உற்பத்தி செய்ததுபோல் இரண்டுபங்கும், கிட்டத்தட்ட ஜெர்மனியைப்போல் ஒரு பங்கும் தயார்செய்தும் இந்த வருஷக் கடைசியில் விமான என்ஜின்கள் ஏராளமாகத் தாயாரிக்கப்படும். சாமான்களின் எண்ணிக்கை அதிகமாவதுடன் என்ஜின்கள் மட்டமானதல்ல. உலகத்திலேயே ஒன்றுக்கும் நிகரில்லாத பலமால புதுமாதிரி விமான என்ஜின் தயாரிக்கப்பட்டிருக்கிறது.



## இந்திய மாலுமிகளும், யுத்தமும்.

### எல்லா யுத்தப் போரரங்கங்களிலும் அவர்கள் செய்த வேலை.

(மிஸ்டர் S. லால் C. I. E., I. C. S. பி. பி. ஸி. யில் ஒலிபரப்பியது).

இந்திய மாலுமிகளைப்பற்றியும், அவர்கள் செய்துவரும் அரிய சேவையைப் பற்றியும் இங்கு சொல்லுவோம். பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களில் வேலை செய்யும் மாலுமிகளில் நாலில் ஒருபங்கு இந்தியர்கள். யுத்த முயற்சியில் இந்தியா தன்னுடைய மாலுமிகளைக் கொண்டு அரிய சேவை செய்துவருகிறது.

கப்பற்படை பலம்கொண்ட நேசதேசத்தார்கள் தரைப்படை பலம்கொண்ட ஜெர்மனியுடன் போரிடுகிறார்கள். அதனால் தரை யுத்தத்தில் ஹிட்லர் அடைந்துவரும் வெற்றிகளைத் தடுக்க முடியவில்லை. ஆனால் சமுத்திரக்கரை ஓரமாக ஹிட்லர் வரும்பொழுது அவனை சமுத்திரத்தைத் தாண்டவிடாமல் பிரிடிஷ் கப்பற்படை தடுத்து வருகிறது. ஜெர்மன் கப்பற்படை நேருக்கு நேர் சண்டைக்கு வந்தால் யுத்தம் சீக்கிரம் முடிவு பெற்றுவிடும் ஆனால் அவன் நேருக்குநேர் சண்டையிட துணியவில்லை. பிரிடிஷ் கடலாதிக்கம் யுத்தக் கப்பல்கள் அடங்கியது மட்டுமல்ல, கிரேட் பிரிடனுக்கு உணவுப் பொருள்கள், இன்னும் விளைவு பொருள்கள் ஏற்றிக்கொண்டு வரக்கூடிய தன்மையும், வெகுதூரத்திலுள்ள போரரங்கங்களுக்கு துருப்புகளும், யுத்த தளவாடங்களும் அனுப்பக்கூடிய தன்மை வாய்ந்திருக்கிறது.

அதனால் பிரிடனுக்கு எதிரிகளின் எதிர்ப்புகளை சமாளித்து, மீண்டும் அவர்களைத் தாக்கக்கூடிய பலம், அதன் வியாபாரக் கப்பற்படை பலத்தைப் பொறுத்திருக்கிறது. ஆக்கிரமித்த நாடுகளிலிருந்த கப்பற்படை தளங்களிலிருந்து கொண்டு நீர்மூழ்கிக் கப்பல்களைக்கொண்டும், வெகுதூரம் சென்று வெடிகுண்டுகள் வீசக்கூடிய பாம்பர்களைக் கொண்டும், பிரிடிஷ் நேசதேச வியாபாரக் கப்பற்படைகளை ஹிட்லர் தாக்கி வருகிறான். அப்படித்தாக்கினால் பிரிடிஷ் சாம்ராஜ்ய யுத்தப் பிரயத்தனத்தை நிஷ்பிரயோஜனமாகச் செய்து விடலாம் என்று எண்ணுகிறான். கப்பற்படையினால் எல்லாக் கப்பல்களுக்கும் பூரண பாதுகாப்பு அளிக்கமுடியாது என்பது தெரிந்த விஷயம். அதனால்தான் சேதம் அதிகமாக இருக்கிறது. இருந்தபோதிலும் இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையே பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களும் அவற்றின் வேலையைச் செய்துவருகின்றன.

நமது இந்திய மாலுமிகள் ஒவ்வொரு போரரங்கத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அநேகர் கனடாவிலிருந்தும், யுனைடெட் ஸ்டேஸிலிருந்தும் முக்கியமான ஸப்ளைகள் கொண்டுவரும் கப்பல்களில் இருக்கிறார்கள். அட்லாண்டிக், பஸிபிக், இந்து மஹா சமுத்திரம், மத்தியதரைக்கடல் இவைகளில் செல்லும் கப்பல்களிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். மால்டாவின் மீது கடுமையான தாக்குதல்கள் நடந்தபோது அந்தத் தீவிலும் சிலர் இருந்தார்கள். கிரீஸில் நடந்த தாக்குதலிலும் சிலர் ஈடுபட்டிருந்தனர்.

---

## இந்தியர்களுக்கு மார்ஷல் சயாங் கை ஷெக் செய்துகொண்ட வேண்டுகோள்.

### நடுநிலைமை வகிக்க முடியாது; தாமதிக்க இடமில்லை.

"சைனாவிலும், இந்தியாவிலும் மட்டில் உலகத்திலுள்ள ஜனத்தொகையில் பாதியிருக்கிறது. இவ்விரு நாடுகளின் பொது எல்லை 3000 K. M. கிலோமீடர்கள் இருக்கிறது. 2,000 வருஷகாலமாக இந்த இருநாடுகளுக்கும் பரஸ்பரம் ஏற்பட்ட சம்பந்தத்தில் ஒருவித தகராறும் ஏற்பட்டதில்லை. உலகத்தில் வேறு எந்த நாடுகளுக்கும் இவ்விதம் அமைதியான சம்பந்தம் அயல்நாடுகளுடன் இருந்ததேயில்லை.

"இந்தியர்களும் சீனர்களும் எப்போதும் சாமாதானத்தையே தான் கோருவார்கள். இரு நாட்டினருக்கும் ஒரேவிதமான அக்கரைகள் இருப்ப

தோடு லக்ஷியமும் ஒன்றுதான். ஆகவே ஆக்கிரமண ஆசைகொண்ட நாடுகளை முறியடிப்பதற்கான முயற்சியை இருநாடுகளும் எடுத்துக்கொள்ளவேண்டும்."

### தர்ம மார்க்கம்.

"மேலும் இந்த இருநாட்டினருக்கும் பொதுவாக தர்மத்தையும், நியாயத்தையும் நிலைநாட்டுவதற்காகத் தியாகம் செய்யும் உணர்ச்சி உண்டு. இவ்வித உணர்ச்சியை தற்போதும்கொண்டு மனித வர்க்கத்தின் க்ஷேமத்திற்காகப் பாடுபட வேண்டும். சைனு ஜப்பானை எதிர்த்து நிற்பதற்கும், நேசநாடுகளுடன் சேர்ந்து கொள்ளுவதற்கும் இவ்வுணர்ச்சிதான் காரணம். தன்னுடைய சுயநலத்திற்காக மட்டில் சைனு பாடுபடவில்லை. உலகத்தின் நன்மையை உத்தேசித்தே இவ்விதம் செய்துவருகிறது.

"தற்போது உலகமே இரண்டு பிரிவாகப் பிரிந்திருக்கிறது. அதில் ஒன்று ஆக்கிரமண ஆசை கொண்டிருக்கிறது. மற்றொன்று அதைத் தடுக்கிறது. நாம் யாவரும் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்களாதலால் ஆக்கிரமண ஆசைகொண்ட நாடுகளை எதிர்த்துப் போராடவேண்டும்.

"இந்தத் தருணத்தில் நடுநிலைமை வகிப்பதாகச் சொல்லவே முடியாது. முன்சொன்ன இரண்டு கக்ஷிகளில் பின்னல் சொல்லப்பட்ட கக்ஷியில் உடனே யாவரும் சேரவேண்டும். நம்நாட்டிற்கு இன்னும் சண்டை வரவில்லையே. எங்கேயோ தான் நடக்கிறது என்று நினைக்கும் சந்தர்ப்பம் இது அல்ல. உலகம் பூராவும் பரவி விட்டது."

### சாதகமான மாறுதல்.

ஆகவே நேசநாடுகளுடன் சேருவதானல் எல்லா ஆக்கிரமண நாடுகளுக்கும் எதிராக இருப்பதாகத்தான் ஆகும். பஸிபிக்கில் யுத்தம் ஏற்பட்ட பிறகு இவ்விஷயம் அதிகம் ஊர்ஜிதமாயிற்று.

"இந்த யுத்தமே ஸ்வதந்திரத்தை விரும்பிய நாடுகளுக்கும் மற்றவர்களை அடிமைகளாக்க நினைக்கும் நாடுகளுக்கும் நடக்கிறது. ஆகவே நேசநாடுகள் ஜயம் பெருவிட்டால் இன்னும் 100 வருஷங்கள் வரை உலகத்தில் தொந்தரவும் கஷ்டங்களும் குறையாது."

### ஜப்பானியர்களின் கொடுமை.

"ஜப்பானியர்கள் செய்துவரும் கொடுமைகளுக்கு எல்லையே கிடையாது. இவைகளுக்கு உதாரணமாக பார்மோஸா வாசிகளும் கொரியர்களும் படும் கஷ்டங்களைப் பார்த்துக் கொள்ளலாம். நான்கிங் பட்டணத்தில் ஜப்பானியர் புகுந்து ஒரு வாரத்திற்குள் 2,00,000 பேர்களைக் கொலைசெய்தார்கள்.

"சென்ற ஐந்து வருஷ காலமாக ஸ்வதந்திர சைனுவில் தினம் குண்டுகளைப் போட்டு ஏராளமான பேர்களைக் கொலை செய்து வருகிறுர்கள். படையெடுக்கும் இடங்களிலெல்லாம் ஜப்பானியத் துருப்புகள் ஸ்திரீகளையும், குழந்தைகளையும் மற்றவர்களையும் தாக்கி கொலை செய்கிறுர்கள். விசேஷமாக படித்தவர்களையும் ஜப்பானியர் அதிகம் துன்புறுத்துகின்றனர்.

"இதோடு மட்டுமல்லாமல் விசித்திரமானகலைகளடங்கினதும், சரித்திர முக்கியத்துவம் பெற்ற சாமான்களும் உள்ள கோவில்களை ஜப்பானியர் இடித்துப் பாழாக்குகின்றனர். ஆங்காங்குள்ள தொழிற்சாலை சாமான்களையும், ஆடுமாடுகளையும் திருடிச்செல்லுகின்றனர். ஜப்பானியருக்குட்பட்ட இடங்களிலெல்லாம் மானபங்கம், கொலை, கொள்ளை முதலியவை அடிக்கடி நேருகின்றன.

"மேலும் கஞ்சா கிடங்குகளையும், சூதாட்ட ஸ்தலங்களையும் ஜப்பானிய அரசாங்கத்தார்களே நடத்தி ஜனங்களுடைய பொருளை அபகரிக்க யத்தனிக்கின்றனர். இவையாவும் ஜப்பானியர்கள் கையாண்டுவரும் தனிமுறைகள். நான் தற்போது சொன்னவையாவும் நேரில் பார்த்து அறிவிக்கப்பட்டவையாதலால் உண்மையானவைதான்."



## பிரஸ் நோட்.

---

### உள்நாட்டு யுத்த சாமான் ஸப்ளைகளின் அபிவிருத்தி.

### புத்திசாலித்தனமாக இந்தியர்கள் சாமான்களை உற்பத்தி செய்ய இதுவே தருணம்.

### வருங்காலத்தில் புது கல்பனைகளுக்கும் புது யந்திரங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் தேவை.

யுத்த சாமான்களின் ஸப்ளையை அபிவிருத்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியின் தலைமை காரியாலயத்தில் சென்ற நான்கு மாத காலத்தில் இந்தியாவிலேயே சுமார் 100 புதிய சாமான்களை உற்பத்தி செய்வதற்கான யோசனைகள் கிடைத்திருக்கின்றன. அதில் ஏழு அபிப்பிராயங்கள் இந்தியாவிலேயே ஏற்றுக்கொள்ளப்படும் போலிருக்கிறது. ஒன்பது அபிப்பிராயங்கள் மேலும் பரிசிலனை செய்வதற்காக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஆக 100-க்கு 14 அபிப்பிராயங்களைப் பிரயோசனப்படுத்தியது ஒரு திருப்திகரமான விஷயம். ஏனென்றுல் பிரிடனிலுள்ளோர் அனுப்பிய அபிப்பிராயங்களில் 100-க்கு $\frac{1}{4}$ சத விகிதம்தான் ஸப்ளை மந்திரியால் ஏற்கப்பட்டது.

சைனியம், கப்பற்படை, விமானப்படை முதலியவ்வகளை அபிவிருத்தி செய்வதற்கும், உள்நாட்டு விளைவுபொருள்களையே உபயோகித்து யுத்த சாமான்களைச் செய்ய லாயக்கான அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ளவும் இக்கமிட்டி சில மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது.

யுத்தம் இந்தியாவிற்கு வரவர இந்தியாவில் கிடைக்கும் பொருள்கள் யாவற்றையும் சேகரம் செய்யவேண்டியதின் அவசியம் முன்பை விட அதிகமாகி விட்டது. ஆனல் போகப்போக இப்பொருள்கள் இன்னும் குறையுமாதலால் அக்குறைவை ஈடுசெய்வதற்காக, வேறு பொருள்களைக்கொண்டும், புதிய முறைகளாலும் சாமான்களைச் செய்வதற்கு லாயக்காக ஒவ்வொருவருடைய யோசனையையும் தெரியப்படுத்தினுல் மிகவும் சாதகமாக இருக்கும்.

எல்லாவிதமான அபிப்பிராயங்களையும் மேற்படி கமிட்டிக்கு அனுப்பலாம். மேலும் ரஸாயனம், தொழிற்சாலை, இவை சம்பந்தமான விமர்சன போர்ட்டின் டைரக்டரான ஸர் S. S. பாத்நகர் மேற்படி கமிட்டியுடன் ஒத்துழைத்துவருகிறுர். யுத்த முயற்சியை முன்னிட்டு, தங்களுடைய அனுபவத்தால், புதிய முறைகளையும் சாமானகளையும் கண்டுபிடிக்கிறவர்களுக்குத் தேவையான உதவியளிக்கப்படும்.

---

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தி

## பிரஸங்க நிகழ்ச்சி முறை.

69404

### பிரஸங்கம் 84—(1-வது பிரிவு).

1942—

| | | | | மணி. |
|---|---|---|---|---|
| பிப்ரவரி | ...28, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6 30 |
| மார்ச்சு | ... 1, ஞாயிற்றுக்கிழமை | பூவரசகுடி ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் ... | ,, | 6.30 |
| | 2, திங்கட்கிழமை ... | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பரம்பூர் ... | ,, | 6.30 |
| | 4, புதன்கிழமை ... | உடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |
| | 5, வியாழக்கிழமை .. | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 6, வெள்ளிக்கிழமை... | திருமயம் ... | ,, | 6.00 |
| | | மேலூர் ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 85—(2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச்சு | ... 7, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 8, ஞாயிற்றுக்கிழமை. | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 9, திங்கட்கிழமை ... | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| | 10, செவ்வாய்க்கிழமை | நல்லூர் ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 11, புதன்கிழமை ... | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 12, வியாழக்கிழமை ... | வெங்களூர் ... | ,, | 6.00 |
| | | கோனபட்டு ... | ,, | 6.30 |
| | 13, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | விராலிமலை ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—28-2-42.